162050
JL
Sm211,N09 PL
N09+1

பிரியமும் சிரத்தையும் குன்றாமல் ஊக்கத்துடன் முயற்சி செய்வார்களானால் அவர்களாலாகிய இச்சங்கம் என்ன தீர்மானஞ் செய்தாலும் அதை யாரும் நிராகரிக்க முடியாது.

இவ்வித முயற்சியால் ஏற்படுத்தப்பட்ட தென் இந்தியா உபாத்தியாயர் சங்கத்திற்கு இல்லை ஒரு கிளைபோல் ஆயிருக்கிறது. எப்படியாவது தான்மாத்திரம் நடத்திவந்த கான்பரன்ஸ் முதலியவிஷயங்களை மற்ற ஜில்லா சங்கங்களும் சேர்ந்து தங்கள் பிரதிநிதிகள் மூலமாய் நடத்த ஏற்பட்டால் தனக்கு மிக்க சிரமபரிகாரம் ஆகும் என்ற விருப்பத்தினால்தான் அது இந்தப்புது தென் இந்தியா டீசர்ஸ் யூனியனை ஏற்படுத்தப் பாடுபட்டது.

இப்புது சங்கம் ஏற்பட்டதோடு உபாத்தியாயர்கள் விருப்பங்கள் எல்லாம் உடனே கைகூடுமென்று எண்ணக்கூடாது. ஒவ்வொரு சங்கமும் எவ்வளவுக்கு எவ்வளவு சிரமம் வகித்து ஏற்பட்ட காரியங்களைச் செய்கிறதோ அவ்வளவுக்கு செல்வாக்குள்ளதும் காரியசித்தி பெறுகிறதும் ஆகும். ஆனதால் உபாத்தியாயர்கள் ஆங்காங்கு ஏற்பட்ட சங்கங்களில் உழைத்தும், படிப்பு போதிக்கும் வழிகளை சீர்திருத்தியும், மற்றப்படி தாங்கள் எவ்விதமாய் முன்னிலைக்கு வரலாமோ அப்படி முயன்றும், இவ்விதங்களில் தாங்கள் செய்தவிஷயங்களை எல்லாரும் அறியும்படி வருஷாந்திர கான்பரன்ஸில் பிரசுரப்படுத்தியும், இம்முயற்சிகளால் தாங்கள் வகித்த தொழிலை செய்யமுன்னிலும் அதிகதிறமை உடையவர்களென்று எல்லாருக்கும் வெளிப்படும்படி காட்டினால்தான் அவர்களிடத்தில் மதிப்பும் கௌரவமும் உண்டாகும். இவ்வுபாத்தியாயர்களைபற்றிய விஷயங்களில் அவர்கள் அபிப்பிராயங்களை அந்தந்த உபாத்தியாயர் சங்கங்கள் மூலமாயும், தென் இந்தியா டீசர்ஸ் யூனியன் மூலமாயும் மே[illegible]ன்டியவர்கள் அறிந்து கொள்ளமுயல்வார்கள்.

உபாத்தியாயர்கள் சங்கங்கள் அதிக செல்வாக்கில்லாததற்கு சிலகாரணங்கள் உண்டு. உபாத்தியாயர் தொழில் வகித்தவர்களில் சிலர் கவர்ன்மெண்டு உபாத்தியாயர்கள், சிலர் பாதிரிமார்கள் அல்லது பாதிரிமார்கள் ஏற்படுத்திய ஸ்கூல்களில் இருப்பவர்கள். மற்றவர்கள் இந்தியர்கள் ஏற்படுத்திவரும் ஸ்கூல்களில் இருப்பவர்கள். இம்மூவகையாருள் சிலர் உயர்ந்த சம்பளக்காரர்கள், சிலர் தாழ்ந்தசம்பளக்காரர்கள். இத்தனைபேரும் ஏகோபித்து உபாத்தியாயமார் சங்கத்தை சேர்கிறது அசாத்தியம். இத்தனைபெயருக்கும் உபாத்தியாயமார்கள் பொது விஷயங்களில் சிரத்தை இருக்க எதிர்பார்க்கத்தக்கதும் அல்ல.

உயர்தரப்படிப்பு சொல்லிக்கொடுப்பவரும், உயர்ந்த சம்பளம் வாங்குகிறவர்களும் சீமையிலிருந்து மேதைகளென்று கியாதியோடு வந்தவர்களும் இந்த அற்பமான இந்திய உபாத்தியாயர்கள் கூட்டத்தைசேர்வதால் தங்களுக்கு என்ன பிரயோஜனம் உண்டாகப்போகிறதென்று ஒதுங்கிநிற்கலாம். கவர்ன்மெண்டு வகுப்பைசேர்ந்தவர்கள் தங்கள் சம்பளமாவது பென்ஷனாவது இச்சங்கங்களால் ஜாஸ்தியாகப் போகிறதா; சமயாசமயங்களில் தங்களில் உயர்ந்த உத்தியோகஸ்தரைப் பார்த்து அவர்களுக்குத்தக்க மரியாதையை பண்ணி தங்கள் ஸ்திதியை மேன்மைப் படுத்திக் கொள்ளலாம் என்று ஒதுங்கிநிற்பார்கள். பாதிரிமார் உபாத்தியாயர்களும் இப்படி எண்ணக்கூடும். ஆகவே நிசமாய் பொதுவிஷயங்களில் சிரத்தை உடையவர்கள் கொஞ்சமாய் இருப்பார்கள். இவர்களை நிராகரிக்கக்கூடாது என்று சங்கத்தார்கள் முயற்சியால் காட்டினால் மற்றவர்களும் நாளாவர்த்தியில் வந்து சேர்வார்கள்.

தென் இந்தியா டீசர்ஸ் யூனியனும், உபாத்தியாயர் சங்கங்களும் ஏற்றுக்கொண்டவேலை மிக்க விடாமுயற்சியால் ஆகத்தக்கது. இவ் விடாமுயற்சியும் மன எழுச்சியும் ஊ[illegible]க்கத்தி உபாத்தியாயர்களுக்கு இல்லாமல் [illegible] உண்டென்று தங்கள் செயலால் காட்டித்தார் மெச்ச செய்துகொள்வார்களென் திண்ணம்.

கெ. பி. ராமநாதன்.

## Mr. J. N. TATA.
## ஸ்ரீ ஜே. ந. டாடா.

பம்பாய் மாகாணத்திலே இளமைப் பருவத்தில் பரம ஏழைகளாயிருந்து தங்கள் சொந்த உழைப்பு காரணமாகவும், விடாமுயற்சி காரணமாகவும் தலையெடுத்து முன்னுக்குவந்து செல்வவான்கள் ஆனவர்கள் எவ்வளவோ பேர் உண்டு. அவர்களில் காலஞ்சென்றுவிட்ட ஸ்ரீ ஜேம்ஸட்ஜி நஸ்ஸர்வான்ஜி டாடா ஒருவர். அவர் ஏழைக்குடும்பத்தில் பிறந்து தம்முடைய உழைப்பாலும், ஊக்கத்தாலும் கோடீசுவரன் ஆனவர். அவருடைய திவ்விய சரித்திரத்தை வாசித்துப் பார்ப்பவர்களுக்கு அவர்கள் பிழைப்பதற்கு வழியாகக்கூடிய உழைப்பும், ஊக்கமும், விடாமுயற்சியும் படியக்கூடுமாகையால் "**பிழைக்கும் வழி**" யெனப் பெயரிடப்பட்டிருக்கும் இந்த புதிய பத்திரிகையின் முதல் சஞ்சிகையிலேயே அவருடைய சரித்திரத்தைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறோம். காலம் சென்றுவிட்ட ஜேம்ஸட்ஜி நஸ்ஸர் வான்ஜி டாடா பம்பாய் மாகாணத்தைச்சேர்ந்த கூர்ச்சர நாட்டிலே பார்ஸிகள் வந்து குடியேறிய பழைமையான ஊர்களில் ஒன்றாகிய **நவஸாரியில்** ஒரு புரோகித குடும்பத்தில் 1839-ம் வருஷத்தில் பிறந்தவர். அவருடைய தகப்பனாருக்கு **நஸ்ஸர்வான்ஜி** ரதன்ஜி டாடாவென்று பேர். அவர் அந்த ஊர்ப்புரோகிதர். அந்தஊர் அக்கினி கோவில் கைங்கரிய வேலையொன்றும் அவருக்கிருந்தது. இந்த இரண்டு வேலைகளும் அவர் தமது புத்தியை உபயோகித்துப் பெருங்காரியங்கள் செய்வதற்கு தகுந்த [illegible]ாயிருக்கவில்லை. அதனால் அவர் நாம் இவ்வூரிலேயே கிடந்து திண்டாடிப் பிரயோசனமில்லை யென்று **நவஸாரியை** விட்டு பம்பாய் வந்து சேர்ந்தார். தன்னைப் பெற்ற தகப்பன் பம்பாய்க்கு வந்துவிடவே அவரோடுகூட நமது ஜம்ஸட்ஜியும் பம்பாய் வந்து சேர்ந்துபோனார். அப்போது அவருக்கு வயது பதின்மூன்று. அந்தவயதில் அவர் என்ன செய்ய முடியும்? அது வாசிக்கும் பருவமாயிருந்தபடியால் நமது ஜேம்ஸட்ஜி ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்ந்து வாசித்துக்கொண்டிருந்தார். இப்படி 3-வருஷகாலம் கழிந்தது. அதற்குப் பிறகு 1855-ம் வருஷத்தில் அவர் பம்பாய் எல்பின்ஸ்டன் காலேஜில் போய்ச் சேர்ந்தார். நமது ஜேம்ஸட்ஜி பம்பாய் எல்பின்ஸ்டன் காலேஜில் 4-வருஷ காலம் போல படித்தார். யூனிவர்ஸிடி பரீட்சைகள் எதிலும் அவர் தேறவில்லை. இதற்குள்ளாக அவருடைய தகப்பன் ரதன்ஜி செய்து வந்த வியாபாரம் பலத்துப்போனபடியாலும் அவர் உதவிக்கு ஒருவருமில்லாமல் ஒண்டியாய் வேலை செய்துகொண்டிருந்தபடியாலும் தம்முடைய தகப்பன் செய்து வந்த வர்த்தகத் தொழிலில் நமது டாடாவும் அமர்ந்தார். ஆனால் அவர் பம்பாயிலேயே இருப்பாயிருக்கச் சரிப்படவில்லை. தாங்கள் செய்து வந்த தொழில் சம்பந்தமாய் மிஸ்டர் டாடா சீன தேசத்திற்குப் போய் வரும்படி நேர்ந்தது. நேரவே, "நாம் இந்தியாவுக்குக் கிழக்கே எவ்வளவோ மைல் தூரத்துக்கு அப்பாலிருக்கும் சீன தேசத்திற்குப் போய்வரவாவது" என்று மிஸ்டர் டாடா அதைரியப்படவேயில்லை. அந்ததேசத்துக்கு அவர் புறப்பட்டுப்போயே தீர்த்தார். சீனாவுக்கு புறப்பட்டுப்போகும்போது அவருக்கு வயது 20 அல்லது 21-க்குமேல் இல்லை. அவ்வூரிலேயே அவர் 4-வருஷகாலமிருந்தார். அதற்குள்ளாக அந்தக் கீழ்த்திசை நாட்டில் தங்கள் வியாபாரம் வெகுதூரம் பலப்படுவதற்குப் போடவேண்டிய அஸ்திவாரத்தை வெகு பலமாய்ப்



போட்டுவிட்டார். மிஸ்டர் டாடாவைப்பற்றிய விசேஷம் என்னவென்றால் அவர் வெளியிலே புறப்பட்டால் தம்முடைய கண்ணையும் காதையும் பொத்திக்கொண்டு போகிறவரில்லை. பல விஷயங்களையும் கவனிப்பார். அவர்தம்முடைய டைரியில் பதிவுசெய்து வைத்திருக்கும் விஷயங்களைக்கோர்வையாய்ச் சேர்த்து அச்சிட்டு வெளியிடமட்டும் ஒருவர் ஏற்படுவாரானால் எவ்வளவோ அருமையான விஷயங்கள் வெளிக்குவருமென்பது அவருடன் நெருங்கப் பழகியவர்களுடைய அபிப்பிராயம். 1863-ம் வருஷம் மிஸ்டர் டாடா சீன தேசத்திலிருந்து திரும்பினார். அது முதல் இரண்டு வருஷகாலம் அவர் பம்பாயைவிட்டு வெளியேறவில்லை. 1865-ம் வருஷத்தில் அவர் இங்கிலண்டுக்குப் பிரயாணமானார். அதுதான் முதல் தடவை. அவர் அந்த நாட்டுக்குப் போனது வேறு எந்த நோக்கத்தோடும் இல்லை. அங்கே இந்தியன் பாங்கு ஒன்று ஸ்தாபிக்கலாம் என்று போனார். ஆனால் அந்த உத்தேசம் நிறைவேறுவதற்கு வழியில்லாமல் போய்விட்டது. ஏனென்றால் பம்பாயில் அவர் தகப்பனார் செய்துவந்த வியாபாரம் படுத்துக்கொண்டது. வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டு கஷ்டங்கள் நேர்ந்த போதும் அவர் தமது மனோதைரியத்தைக் கைவிடவில்லை. ஒருபொழுதும் அந்தப்பேச்சையே அவரைப்பற்றிச் சொல்ல முடிந்தது கிடையாது. வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டு விட்டது என்ற செய்தியைக்கேட்டதும் மனம் கலங்கிப்போகாமல் சமயத்துக்குத் தக்க நடவடிக்கைகளை நடத்தி அங்கே தொடங்கினதும் தொடங்காததுமாயிருந்த வேலைகளையெல்லாம் ஒதுங்க வைத்துக்கொண்டும் அந்நாட்டிலே தம்மிடத்தில் யாருக்கும் ஒருவித மதிப்பு உண்டாகும்படி செய்துவிட்டும் பம்பாய் வந்துசேர்ந்தார். இங்கே வந்து பார்த்தாலோ அவர் குடும்பமிருந்த கேவலஸ்திதியைச் சொல்லி முடியாது. அது மிகவும் சீர்கெட்டுப்போயிருந்தது. இருந்த ஐவேசியெல்லாம் போய்விட்டது. அப்போதுகூட அவர் கவலை மேலிட்டு அதைரியப்பட்டுப் போகவில்லை. சில கண்டிராக்ட்கள் எடுத்து லாபம் சம்பாதித்து தத்தளித்துக் கொண்டிருந்த தமது குடும்பத்தை மறுபடியும் நிலை நிறுத்தினார். அதுமுதல் மிஸ்டர் டாடாவுக்கு அதிருஷ்டகாலம் திரும்பிவிட்டதாய்ச் சொல்லவேண்டும். அவர்கையால் தொட்டமண்ணும் பொன்னாகத்தலைப்பட்டது. முதல் முதல் வெகு நாளாய் தரிசாய்க்கிடந்த பூமியொன்றை தர்க்காஸ்தில் எடுத்து அதை வெட்டித்திருத்தினார். அது கைகூடியே வந்தது. அதற்குப் பிறகு பெரிய ஆலைகள் வைத்து தொழில் நடத்தும் முயற்சியில் தலையிட்டார். ஒரு எண்ணெய் ஆலையை நெசவுத்தொழில் நடத்துவதற்கு உதவும்படியான ஆலையாகமாற்றி அதற்கு அலெக்ஸாண்டிரா ஆலை வேலைகள் என்று பெயரிட்டார். அது லாபம் கொடுத்துக்கொண்டுதான் இருந்தது. ஆனால் கொஞ்சகாலத்துக்கெல்லாம் அந்த ஆலைக்கு நல்ல விலை வந்தபடியால் ஒருவருக்கு விற்றுப்போட்டார். ஆலை வைத்துத் தொழில் நடத்துவதில் அவருக்கு பிரியமில்லாமல் அவர் அப்படி செய்துவிடவில்லை. **அலெக்ஸாண்டிரா** ஆலையைவைத்து நடத்த ஆரம்பித்தபிறகுதான் இங்கிலண்டுசென்று அங்கே லங்காஷயர் மாகாணத்தில் ஆலை வேலைகள்நடத்துவதில் அநுசரிக்கப்படும் முறைகளை இந்த நாட்டுக்கு ஏற்றபடி மாற்ற கற்றுவரவேண்டும் என்ற ஆத்திரம் அவருக்கு அதிகமாய் ஏற்பட்டது. அதுபற்றி அவர் இங்கிலாண்டிலேயே அந்த பயிற்சியை அடைய நிச்சயித்து 1872-ம் வருஷம்

படியும் இங்கிலண்டுக்குப் புறப்பட்டுப் போனார். இந்த இரண்டாந்தடவையும் அவர் அங்கே அதிகமாய் தாமதிக்கவில்லை. அவருடைய ஜீவிய சரித்திரத்தில் நாம் குறிப்பிடக்கூடிய அடுத்தவிஷயம் அவர் நாகப்பூரில் **எம்ப்ரெஸ் மில்ஸ்** என்ற தொழில் ஆலையொன்றை ஸ்தாபித்தது தான். அவர் இந்த இந்திய நாடெங்கும் சுற்றி எந்த ஊரில் அதை ஸ்தாபிக்கலாம் என்றுபார்த்து கடைசியாக நாகப்பூர்தான் அதற்குத் தகுந்த இடம் என்று தீர்மானித்தார். அவர் அவ்வளவு ஆலோசனையின் மேல் அந்த ஆலையை ஸ்தாபித்தது வீண்போகவில்லை. அது பெருத்த லாபத்தைக்கொடுக்க ஆரம்பித்தது. இந்தியத் தொழில் ஆலைகளில் **எம்ப்ரெஸ் மில்ஸ்** அதற்கு மிஞ்சிய ஆலையேவேறெங்கும் இல்லையென பேரெடுத்துவிட்டது. அந்த தொழில் யந்திர ஆலையை அவர் ஏக தேசத்தில் ஏற்படுத்திவிடவுமில்லை. தக்க பங்குக்காரர்களைச் சேர்த்துக்கொண்டுதான் ஏற்படுத்தினார். அவர்களுக்கு கொள்ளை லாபங் கிடைத்தது. இந்தமாதிரி முயற்சிகளை நடத்துவதில் மிஸ்டர் டாடா பங்குக்காரர்களின் க்ஷேமலாபத்தை தம்முடைய க்ஷேமலாபத்தைவிட அதிகமாய்க் கருதி வந்தார். கூட்டுத்தொழில் செய்கிற இந்தியர்களில் பெரும்பாலாரிடத்தில் இந்த விசேஷ குணமிருப்பதில்லை. இதுமட்டுமேயல்ல. தம்முடைய தொழிலில் தாம் க்ஷேமத்தை யடைவது தம் கீழ்வேலை செய்கிறவர்களின் க்ஷேமத்தைப் பொறுத்திருக்கிறதென்பதையும் அவர் எப்போதும் ஞாபகத்தில் வைத்திருந்தார். அதாவது அவர் வேலையாட்கள் வயிற்றில் அடிப்பதே கிடையாது. தக்கபடி கூலிகொடுத்து அவர்களிடம் வேலை வாங்குவதே அவருடைய பிறவிக்குணமாயிருந்து வந்தது. தம்மைப்போலவே பணம் போட்டிருக்கும் பங்குக்காரர்களின் க்ஷேமலாபத்தை தம்முடைய க்ஷேமலாபத்திலும் பெரிதாகவும் வேலையாட்களின் க்ஷேமமே தம்முடைய தொழில் விருத்திக்கு மூலகாரணமாகவும் நினைத்து அவர் தொழில் நடத்தி வந்தமட்டில் அவருக்கு லாபம் கிடைக்கவும் அவர் எடுத்த முயற்சிகள் கைகூடவும் கேட்கவா வேண்டும்? அவர் ஆரம்பித்த தொழில்களில் எதுவும் பழுது போனதே கிடையாது. அவருடைய தொழில் முயற்சிகளில் மிகப் பெரிது மத்திய மாகாணங்களில் எங்கேபார்த்தாலும் அகப்படுகிற இரும்புச் சுரங்கத் தொழில் முயற்சிதான். அந்த மாகாணங்களில் உள்ள இரும்புச் சுரங்கங்களில் அகப்படும் இரும்பைப்போல் திறமான இரும்பு அகப்படக்கூடிய தேசங்கள் இந்த பூமண்டலத்தில் அதிகமாயில்லையென்பதே பலபேருடைய அபிப்பிராயம். அந்தச் சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கப்படும் கலப்படமாயுள்ள இரும்பை நிலக்கரியை உபயோகித்து உருக்கி ஜர்மனி நாட்டாரும், அமெரிக நாட்டாரும் சுத்தப்படுத்திவரும் ரகசியத்தை மிஸ்டர் டாடா எப்படியோ கண்டு பிடித்தார். அவர் கண்டுபிடித்த முறைதான் இப்போது மத்தியமாகாண இரும்புச் சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுச்கப்படும் கலப்பட இருப்பை சுத்தப்படுத்த அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த நாட்டில் இரும்புச் சுரங்கத் தொழில் வரவர பிரபலத்தையடையுமானால் அதற்கு மிஸ்டர் டாடாவையே நாம் காரண புருஷர் என்று சொல்லவேண்டும். சுருங்கச் சொல்வோமானால் ஒரு தொழிலைச்செய்ய ஆரம்பித்தால் அதனை கடைசிவரையும் செய்து நிறைவேற்றி நிலை நிறுத்துவதற்கு வேண்டிய ஊக்கம், உழைப்பு, மனந்தளராத விடாமுயற்சி, புத்திகூர்மை, சமயத்துக்குத்தக்க யோசனைபோன்ற சிறந்த குணங்கள் அவரிடம்



விசேஷமாயிருந்தன. அவர் எந்தத் தொழிலைச் செய்தாலும் அதைப் பிறர் செய்கிறமாதிரியே தாமும் செய்கிற வழக்கமில்லை. புதுமாதிரி முறைகளைக் கண்டுபிடிப்பதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்து ஏதாவது ஒரு புதுமாதிரியைக் கண்டுபிடித்தே தீர்வார். எந்தத்தொழில்முயற்சியையும் முற்படுத்துவதில் அவர் விசேஷ சாமர்த்தியக்காரர். தாம் செய்யும்தொழிலில் தமக்கும் தம்மோடு சேர்ந்தபங்குக்காரர்களுக்கும் லாபம்கிடைப்பது ஒன்றில் மட்டும் ஞாபகமாயிராமல் அந்தத்தொழில்வரவர விருத்தியடையும்படியான வழிகளைத் தேடுவதிலும் அந்தத்தொழிலைச்செய்து பிழைக்கும் வேலைக்காரர்களுக்கு அவர்கள் க்ஷேமத்தை யடையும்படியான வழியைக் காட்டிக்கொடுப்பதிலும் அவர் ஞாபகமாயிருந்து வந்தார். இப்படிப்பட்ட அபூர்வகுணங்களெல்லாம் மிஸ்டர் டாடாவுக்குப் பொருந்தியிருந்தது பெரிதில்லை. அவர் இந்த குணங்களெல்லாம் நன்றாய் பிரகாசிக்கும்படி தருமசிந்தையும் மேலிட்டவராயிருந்தார். தருமசிந்தையென்றால் அற்ப சொற்பமான தருமசிந்தையல்ல. இந்த நாட்டு வாசிகளின் கல்விப் பெருக்கத்துக்காக அவர் லட்சக்கணக்காய் மூலதனம் வைத்திருக்கிறார். அவர் செய்து விட்டுப் போயிருக்கும் தருமங்களுக்கெல்லாம் சிகரம் வைத்ததுபோலிருக்கும் பெரிய தருமம் டாடா "ரிஸர்ச் இன்ஸ்டிடியூட்" என்னும் சாஸ்திர ஆராய்ச்சிச்சாலை தருமந்தான். அந்ததரும வகைக்காக அவர் ரூ. 30 லட்சம் மூலதனம் எழுதிவைத்தார். அந்த ஆராய்ச்சிச்சாலை இப்போதுபங்களூரில் ஸ்தாபிக்கப்பட்டுவருகிறது. மிஸ்டர் டாடாவின் சரித்திரத்தில் எடுத்துச்சொல்லவேண்டிய முக்கிய அம்சங்களை அநேகமாய் இந்த வியாசத்தில் நாம் குறிப்பிட்டுவிட்டோம். நாம்குறிப்பிடாதசில்லறைஅமிசங்களும்சில இருக்கின்றன. அவைகளையும் குறிப்பிட இந்த வியாசம் இடம் தராதாகையால் "**பிழைக்கும் வழி**" யென்ற இந்தப்பத்திரிகையை வாங்கிவாசிப்பவர்கள் தாங்கள் பிழைக்கும் வழியைத் தேடுவதில் மிஸ்டர் டாடாவின் உழைப்பையும், ஊக்கத்தையும், விடாமுயற்சியையும், பின்பற்றி தாங்கள் செய்யும்தொழில் முயற்சிகளில் காரியசித்தியை யடையப்பார்ப்பார்களானால் அதனையே நாம் மிஸ்டர் ஜேம்ஸட்ஜி நஸ்ஸர்வான்ஜி டாடாவின் ஜீவியசரித்திரத்தின் முக்கிய அம்சங்களை இங்கு எடுத்து எழுதியதனால் விளைந்த பெருத்த நன்மையாகக்கருதுவோம் என்ற கட்டுரையுடன் இந்த வியாசத்தை முடிக்கின்றோம்.

மிஸ்டர் ஜேம்ஸட்ஜி நஸ்ஸர் வான்ஜி டாடா 1904-ம் வருஷம் மேமாதம் 19-ந்தேதி ஜர்மனி நாட்டிலுள்ள **நாஹீம்** என்றஊரில் காலஞ்சென்றார்.

டி. எஸ். கோதண்டராமன்.

——:o:——

## TOBACCO.

## புகையிலை.

**முன்னுரை**:—நமது இந்தியாவில் புகையிலை நெடுங்காலமாயுள்ளது அல்ல. வர்ஜீனியா தேசத்திலிருந்து இங்குகொண்டுவரப்பட்டதாகத்தெரிகிறது. இது நம்முடைய ஜனங்களால் பெரும்பாலும் உபயோகப்படுத்தப்பட்டுவருகிறது. ஜனங்கள் இதை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக உபயோகித்துவருகிறார்களோ அதற்கு ஏற்றபடி இதுவும் பயிர் செய்தல்வேண்டும். அல்லாமலும் இது இங்கிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பா, ஆபிரிக்கா முதலிய இடங்களுக்கு ஏராளமாய் அனுப்பப்படுகிறது. ஐரோப்பியர், ஆபிரிக்கர், இங்கி

லீஷ்க்காரர், சீனர், ஜபானியர் முதலிய பல தேசத்தார்களும் இதைக் கையாண்டுவருகிறார்கள். நமது சென்னை இராஜதானியில் இது விசேஷமாயுள்ளது. நமது இந்தியாவின் மற்ற இடங்களிலும் ஐரோப்பா, அமெரிக்கா, முதலிய இடங்களிலும் பயிரிடப்பட்டுவருகிறது. மற்ற இடங்களில் பயிராகும் புகையிலையைப் பார்க்கிலும் நமது சென்னை இராஜதானியில் தஞ்சாவூர், திருச்சினப்பள்ளியாகிய இரண்டு ஜில்லாக்களில் பயிரிடப்படும் புகையிலை மிகச்சிறந்தது. இவ்விடங்களில் உற்பத்தியாகும் புகையிலையைவிட வேதாரண்ணியம், சிவகாசி முதலிய இடங்களில் உண்டாவது அதிக மேன்மை பெற்றது. இந்தக் காரணம் பற்றியே இது வெளிநாடுகளுக்கு ஏராளமாய் ஏற்றுமதியாகிறது.

நாகப்பட்டணத்துக்கு அடுத்த வேதாரண்ணியத்திலும், கும்பகோணத்துக்கு அடுத்த சுவாமிமலையிலும், சீர்காழி தாலூக்கா வேட்டங்குடி, நடுத்திட்டு முதலிய இடங்களிலும் புகையிலையை பின்வருமாறு சாகுபடி செய்கிறார்கள்.

**பூமி**:—வெண்மணற்பாங்கான பூமி மிக்க உரித்தானது. சற்றுக் களிப்புள்ள பூமியிலும் பயிர் செய்யலாம். புஞ்சை பெருத்த இடங்களே மிகச் சிறந்தன. கடற்கரை ஓரமாயுள்ள மணற்பாங்கான புஞ்சையிலும் பயிரிடலாம்.

**விதை விதைத்தல்**:—பூமியை நன்றாய் மூன்றடி ஆழம் கொத்திவாங்கி அதிலுள்ள அருகன்வேர், இதர புல் பூண்டு முதலியவைகளை நன்றாய் ஆய்ந்தெடுத்து அப்புறப்படுத்திவிட்டு நாலு அடி அகலம் ஆறுஅடி நீளம் உள்ள பாத்தியாகக் கட்டவேண்டியது. அதன்மேல் மடித்த மாட்டெரு, ஆட்டெரு, தழையெரு முதலியவைகளைக் கொண்டுவந்து பாத்தியொன்றுக்கு ஆறு மரக்கால் எரு வீதம் போட்டு இரண்டொரு நாள்கழித்து மறுபடியும் செவ்வையாய்க்கொத்தவேண்டும். மறுபடியும் மூன்று நாள் கழித்து நன்றாய்க் கொத்திவாங்கி விதையை விதைத்து அதன் மேல் பக்கத்திலுள்ள மணலை வாரி விதை தெரியாமல் போடவேண்டும். பிறகு வைக்கோலினால் மூட்டம்போட்டு விதை ஒன்றோடொன்று சேராமல் மெதுவாகத் தண்ணீர் விடவேண்டும். இந்தமாதிரி காலை மாலை மூன்று நாளும் பிறகு தினம் ஒரு தடவையுமாக தண்ணீர் ஊற்றிக்கொண்டுவரவேண்டும். ஐந்தாவது நாள் முளை கிளம்பும். முளை கிளம்பினவுடன் மூட்டத்தையெடுத்துவிட்டுத் தண்ணீர் வெகு ஜாக்கிரதையாக ஊற்றிக்கொண்டு வரவேண்டும். பதினைந்து நாள் கழித்துபிறகு இரண்டு நாளைக்கொருதடவை தண்ணீர் விடலாம். ஒரு மாதத்திற்குமேல் ஒன்றரை மாதத்திற்குள் புகையிலைக் கன்றுகளைப் பிடுங்கி வேரிலுள்ள மணல் போக தண்ணீரில் கழுவியெடுத்துக்கொள்ளவேண்டும்.

**பயிர் செய்தல்**:—இது பயிர்செய்வதற்கு 100 குழி நிலம் எடுத்துக்கொள்ளுவோம். இது பயிர் செய்வதற்கு இரண்டு மாதத்திற்குமுன்னமே செவ்வையாக உழுது புற்பூண்டுகளை நீக்கி ஆடு மாடுகளைக் கிடைகட்டவேண்டும். புகையிலைக்கன்றுகள் வைப்பதற்கு பத்து நாள் முன் மறுபடியும் நன்றாக உழுது முன்போல் புல் பூண்டு முதலியவைகளை யெடுக்கவேண்டும். மடித்த ஆட்டெரு, மாட்டெரு, தழையெரு, வண்டல் முதலியவைகளைக் கொண்டுவந்து போடவேண்டும். விதை விதைத்தற்குச் செய்நேர்த்திக்குச் சொன்னது போல மூன்றடி யாழம் கொத்தி ஆறடி அகலம் நிலத்தில் நீளமாக பாத்தி கட்டவேண்டும். ஒன்றரை யடிக்கு ஒரு குழி வீதம் ஒழுங்



காய்க் குழி போட்டு குழியொன்றுக்கு ஒரு கன்று வீதம் மாலை வேளையில் வைத்து தண்ணீர் விடவேண்டும். மறுநாள் காலையில் சூரியன் உதயமாகிறதற்குமுன் தழைகொண்டுவந்து கன்றுகள் வெயிலில் வாடாமல் தழை செருகவேண்டும். கன்றுகள் தரிக்கும் வரையில் காலை மாலை தண்ணீர் விடவேண்டும். கன்றுகள் தரித்த பிறகு களையெடுத்து முன் சொருகின தழை முதலியவைகளை நீக்கி முன் சொன்னபடி நாலு அடி அகலம் ஆறு அடி நீளம் பாத்தி கட்டி மூன்று நாளைக் கொருமுறை தண்ணீர் இறைத்துக்கொண்டு வரவேண்டும். இவ்வாறு இரண்டுமாதம் கழிந்த பிறகு நாலு நாளைக்கொருதரம் தண்ணீரிறைத்து வரவேண்டும். இச் செடிகள் நன்றாய் வளர்ந்து செடியொன்றுக்கு ஆறு இலை முதல் பத்து இலை வரையில் வைத்து அந்த செடியின் தலையையொடித்து மற்றச் சிறு கிளைகளையும் நீக்கிவிடவேண்டும். இதற்குக் கொழுந்து மாறுகிறதென்று பெயர் வழங்குகிறது. இலை நன்றாய் முத்தின பிறகு நடுத் தண்டுடனே செடியை வெட்டிவிடவேண்டும். இப்பயிருக்கு தண்ணீர் குறைவில்லாமல் இறைத்து வரவேண்டும். இலை முத்தின பிறகு வெட்டுகிற வரையில் மழை கூடாது. மழை பெய்தால் பயிருக்குச் சேதமுண்டாகும். இந்தப் பயிரைச் சிலர் ஆடி மாதங்களிலும் பயிரிடுவார்கள்.

**பாடஞ்செய்தல்**:—இவ்வாறு வெட்டின செடியைத் தலைகீழாக நிலத்தில் போடவேண்டும். இம்மாதிரி இரண்டு மூன்றுநாள் பகலில் வெயிலில் போடாமல், இராத்திரியில் தனித்தனியாகக் காற்று ஓடும்படி செய்ய வேண்டியது. பிறகு காற்றில்லாத இடத்தில் கொண்டுபோய் தலைகீழாக உயரத்தூக்கிக் கட்டவேண்டும். இதுகளெல்லாம் சற்றுக் காய்ந்த பிறகு அவைகளை காம்புடன் எடுத்து அடியும் நுனியும் சேருமாதிரி ஓர் அறையின் மூலையில் போட்டு வரகு வைக்கோலை மேலே போட்டுக் காற்று உள்ளே போகாமல் மேலே பாரம் வைக்கவேண்டும். இது சூட்டினால் வெந்து பக்குவமாக ஒரு வாரஞ் செல்லும். பிறகு அவை யாவையும் எடுத்து மறுபடியும் சிறிது பொழுது உயரக் கட்டி வைக்கவேண்டும். பிறகு இவைகளை எடுத்து நாற்பது இலைகள் வீதம் ஒருகத்தையாகக் கட்டி விற்பனைக்குத் தயாராகச் செய்ய வேண்டும். சிலர் உப்பு போட்டும் பாடஞ்செய்கிறார்கள். இதன் கருத்து என்னவென்றால் நெடுநாளிருக்கு மென்பதுதான்.

**சிலவு**:—இந்தப்பயிர் செய்வதற்கு ஆறுமாத காலம் போதுமானது. இந்த ஆறு மாதத்திற்கும் ஒரு ஆள் சம்பளம் மீ ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வீதம் முப்பது ரூபாயாகும். எரு தண்ணீர் இறைப்பு முதலிய சில்லறைச் சிலவுகள் இருபது ரூபாய்க்கு மேலாகாது. ஆக ரூபாய் ஐம்பது தான் ஆகும். இதைப் பார்க்கிலும் சற்று ஏறக்குறைய சிலவானாலும் ஆகலாம்.

**வருமானம்**:—நூறு குழிக்குக் குறைந்தது ரூ. 150க்கு புகையிலை விற்கும். சிலவு ரூ. 50 போக பாக்கி ரூ. 100 கிடைக்கும். இந்த வருமானத்தை உத்தேசித்தால் அதிக நிலம் சாகுபடி செய்வோர்களுக்கு தக்க பலன் கிடைக்குமென்று நாம் சொல்ல வேண்டுவதில்லை.

**உபயோகம்**:—இதை ஜனங்கள் மூன்று விதமாக உபயோகிக்கிறார்கள். அவையாவன:— (1) வெற்றிலைப் பாக்குடன் போடுதல் (2) சுருட்டு (3) பொடி.

1. **வெற்றிலைப்பாக்குடன் போடுதல்**:—வெற்றிலைப் பாக்கு போட்டுக் கொண்ட பிறகு

புகையிலையில் கொஞ்சம் கிள்ளி போட்டுக்கொண்டும் அதை வாயில் நெடுநேரம் வைத்துக்கொண்டும் எச்சிலை விழுங்காமல் துப்பிக்கொண்டும் அநேகர் உபயோகித்து வருகிறார்கள். சிலர் பல் வலிக்கு அநுகூலத்தை அறிந்து உபயோகித்து வருகிறார்கள். இவர்களின் பேரில் குற்றஞ் சொல்ல நியாயமில்லை. பிராமணர் முதல் நீசர் வரையில் உபயோகித்து வருகிறார்கள். இதை உபயோகித்து வருகிறவர்கள் அதி காலையில் பல் தேய்க்குமுன் வெற்றிலைப்பாக்கு புகையிலை போட்டுக் கொள்ளுகிறார்கள். அல்லாமலும் இது பழக்க மென்றே சொல்ல வேண்டும். 'தொட்டில் பழக்கம் சுடு காடு மட்டும்' என்னும் பழமொழிப்படி துர்ச்சகவாசத்தால் பாலியத்தில் இந்த பழக்கத்தைச் செய்து பின்னால் கெட்ட வழக்கம் என்பதை அறிந்தும் விடமுடியாமல் தவிக்கிறவர்கள் அநேகர். புகையிலையை உபயோகிக்கிறவர்கள் மாதம் ஒரு முறை அகத்திக்கீரையை சேர்த்துக்கொண்டு வருவது நலம் என்று சொல்லுகிறார்கள். அதனால் புகையிலை போடுதல் உஷ்ணம் என்று தெரிகிறது. புகையிலை, காம்பு, இரண்டும் போட்டுக்கொள்ளுகிறதற்கு உதவுகிறது.

2. **சுருட்டு** :—இது பெரும்பாலும் ஐரோப்பியர், மகமதியர், இங்கிலீஷ்காரர் முதலியவர்களால் உபயோகபடுத்தப்பட்டு வருகிறது. இந்தக் காரணத்தால் வெளி நாடுகளுக்கு ஏராளமாய் ஏற்றப்படுகிறது. சிங்கப்பூர், பினங்கு, அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஆபிரிக்கா முதலிய இடங்களுக்கு சுருட்டுக்குப் பெயர்போன திருச்சினாப்பள்ளியிலிருந்து அனுப்பப்படுகிறது. இதனால் நமது நாட்டு ஜனங்களுக்கு தக்க லாபம். இதில் இலை மட்டும் உதவுகிறது.

3. **பொடி** :—இது நமது இந்தியாவில் இந்துக்கள், மகமதியர்கள் முதலிய ஜாதியாரால் பெரும்பாலும் உபயோகப்படுத்தப்பட்டுவருகிறது. இதை உபயோகிப்பதனால்மூளைக்குகெடுதலுண்டாகி பீனிசம் முதலிய வியாதிகளுக்கு இடமானபோதிலும் பழக்க மிகுதியால் நீக்குவது கஷ்டம். நெடுந்தூரத்திலிருந்துவரும்ஒரு பிராமணன் தன் எதிர்ப்பட்ட நீசன் ஒருவனை பொடி இருக்கிறதா வென்று கேட்டதாகக் கதை ஒன்று இந்தநாட்டில்வழங்கி வருகிறது. இதில் இலை, காம்பு இரண்டும் உதவுகிறது.

**இம்மூன்று வித உபயோகத்தின் கெடுதி** :—புகையிலையை, இலையாகவோ, சுருட்டாகவோ, பொடியாகவோ உபயோகிக்கிறவர்கள் சிறிது பொழுது போடுகிற சமயத்தில் அவை இல்லாவிட்டால் பித்துகொண்டவர்கள் போல் ஏங்கி விழிக்கிறார்கள். இந்தப் பழக்கம் கெடுதல் என்று தெரிந்தும் நீக்க முடியாததாயிருக்கிறது.

**இலையின் வைத்திய உபயோகம்** :—பல்வலியை நீக்கும் குணம் உண்டு. வாயுவைக் கண்டிக்கும் தன்மை உடையது. மலத்தைப் பிரிக்கும் சக்தியுள்ளது. சிரங்குகளுக்கு மேலே போட்டால் சீழ் முதலிய துர் நீர்களை நீக்கும் குணம் உள்ளது.

**விதை எடுக்கும் விதம்** :—இரண்டு மூன்று செடியை கொழுந்துமாறுமல் வைத்திருந்தால் பூத்து விதை யுண்டாகும். அந்த விதையை எடுத்து வெயிலில் காயவைத்து எடுத்து பத்திரமாக காப்பாற்றவேண்டும். 100-குழி நிலத்திற்கு ஐந்து தோலா எடை போதுமானது.

**குறிப்பு**:—ஐரோப்பா தேசத்தில் நமது நாட்டுப்புகையிலையை அதிக விரும்பமாக வாங்குகிறதில்லையென்று அறிகிறோம். காரணம் என்னவென்றால் நாம் செய்யும் பக்குவம் நல்லதல்லவாம். பக்குவப்படுத்தும் போது உஷ்ணம் குளிர்ச்சி இயற்கையாய்க் கொடுப்பது போதாமல் இயந்திர மூலமாகக் கொடுத்து செய்தால் நல்ல விலைக்கு விற்குமாம். இதை பரிக்ஷித்து செய்யவேண்டும்.

பு. து. ரத்தினம் பிள்ளை.



## THE KING EMPEROR'S MESSAGE.

## நமது சக்கிரவர்த்தியின் செய்தி.

1908. ம் ௵ நவம்பர்மாதம் சென்னையில் ஒருசம்வத்ஸர உற்சவம்நடந்தது. இந்தியாவின் அரசாட்சி "கீழ் இந்தியா கம்பெனியாரிடம்" இருந்து காலம்சென்ற விக்டோரியா மகாராணி யவர்களின் ஆளுகைக்கு உட்பட்டு ஐம்பது வருஷம் பூர்த்தியானதை முன்னிட்டு இந்த உற்சவத்தை இந்தியாபிரஜைகள் வெகு விமரிசையுடனும் விசுவாசத்துடனும் நடத்தினார்கள்.

அந்தக்காலத்தில் நமது மேலான திருமனசினால் சக்கிரவர்த்தியவர்கள் இந்தியா மன்னர், சார்பூமன்னர், பிரஜைகள் இவர்களுக்கு எழுதி அனுப்பின தஸ்துவேஜியில் அவர் நம்மீது கொண்ட அன்பையும் நமக்காக செய்யும் சீர் திருத்தங்களையும் தெரிவித்திருக்கிறார். "எவ்வித மானுட ஆளுகைக்கும் எக்காலத்திலும் எவ்விடத்திலும் சம்பவிக்கும் சங்கடங்கள் நாளுக்குநாள் தோன்றியிருக்கின்றன. அவைகளை "பிரிடிஷ்" அரசாட்சியைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் உழைப்பு தைரியம் பொறுமை இவைகளுடன் ஆழ்ந்த ஆலோசனையுடனும் எக்காலத்தும் வழுவுறாததும் சலியாததுமான தீர்மானத்தோடும் நின்று எதிர்த்திருக்கிறார்கள். தவறுகள் நேர்ந்தகாலத்தில் அவைகளைத் திருத்தும் பொருட்டு என்னுடைய துரைத்தன காரியகர்த்தர்கள் சிறிதும் கஷ்டம் பாராமல் தன்மறுப்பு காட்டிப் பாடுபட்டிருக்கிறார்கள் : அக்கிரமங்கள் நிகழ்ந்திருப்பதாக நிரூபிக்கப்பட்ட காலத்தில், அவைகளைப் பரிகரிப்பதற்காக ஆற்றலுடன் உழைத்திருக்கிறார்கள்."

பிளேக் வியாதி மகாமாரி முதலிய கொடிய வியாதிகளால் பலஜனங்கள் வருஷந்தோறும் இறப்பதை அவர் மனதில் கொண்டு அந்தவியாதிகள்வராமல் தடுப்பதற்கும், வந்தகாலத்தில் ஜனங்களுக்கு உதவிசெய்வதற்கும்என்ன என்ன ஏற்பாடுகள் மனுஷ யத்தனத்தில் செய்யக்கூடுமோ அவைகளைச் செய்திருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்.

மாட்சிமைதங்கிய அவருடையதாயார் விக்டோரியா மஹாராணியாருக்கு எப்போதும் இந்துதேசஜனங்களிடத்தில் பேரன்பு உண்டு. அந்த அன்புகாரணமாக நடந்த அநேக ஏற்பாடுகளின் பெருமையைப் பார்க்கும் போது அவைகளை விடச்சிறந்த ஏற்பாடுகள் வேறில்லையென்று தெரியவரும் என்று சொல்லுகிறார்.

சார்புமன்னர்களுடைய விசுவாசமும் ஜனங்களுக்கு ஆங்கிலேய அரசாக்ஷியில் உள்ளபக்தியும் அறிந்து இந்த நாட்டின் தேசாசாரத்திற்குத்தக்கபடி சட்டங்கள் ஏற்படுத்தி எல்லோரையும் சமமாய் நடத்திவரும் பரிபாலன தருமத்தைப் பற்றித்தெரிவித்து, பிறகு சிலர் இராஜாங்க துவேஷங்கொண்டு நியாயவிரோதமாய்ச் சதியோசனைகள் செய்தாலும் அந்தக் காரணத்தினால் தாம் ஜனங்களுக்குச் செய்யும் சீர்திருத்தங்கள் நிறுத்தப்படா வென்றும் உறுதியாய்வாக்கு கொடுத்திருக்கிறார். இப்படிப்பட்ட உற்சவ காலங்களில் குற்றவாளிகளைக் கூட கருணையோடும்பார்த்து தண்டிக்கப்பட்டவர்களின் சிக்ஷையை குறிப்பிட்ட அளவுப்படி ரத்துசெய்யவேண்டு மென்றும் ஆக்கியாபித்திருக்கிறார். இதன் உண்மையை அறிந்து மன்னிக்கப்பட்டகுற்றவாளிகள் நல்லவழியில்நடக்கவேண்டு மென்பது சக்கிரவர்த்தியவர்களின் திருமனதாம்.

ஜாதிமத பேதமில்லாமல் கல்வி ஒழுக்கம் முதலிய நற்குணங்களைப் பார்த்தே உத்தியோகம் கொடுத்து வருவதையும், ஜாதி ஆசா

ரம் மதஆசாரங்களில் பிரவேசிக்காமல் பிரஜைகள் இஷ்டப்படியே பரிபாலிக்கும் சகஜத்தையுந் தெரிவித்து, நமது தேசத்தார் இப்போது மேன்மேலும் கேட்கும் சமத்துவத்தைக்கொடுப்பதில் அவருக்கு உள்ளமனப்பூர்வமான இஷ்டத்தை தெரிவித்து, அதனால் "தற்காலத்திலுள்ள பரிபாலனஅதிகாரத்துக்கும் சக்திக்கும் வலிவுண்டாமேயன்றி குறையாது" என்று சொல்லியிருக்கிறார்.

இந்திய சேனையின் சௌரியம் விசுவாசம் இவைகளைமனதில் கொண்டு அவர்களுக்கு புதுவருஷமுதல் சம்பளத்தை உயர்த்தப் போவதையும் தெரிவித்துத் தமது புத்திரர் வேல்ஸ் இளவரசர் சமீபத்தில் இந்தியாவுக்கு வந்து விட்டுப்போய், நம்மிடத்தில் கொண்ட அன்பையும் குறித்து எழுதி, தமதுசெங்கோலில் அனைவரும் திருப்தியாக வாழ்வதற்கு கடவுளின் மேலான கருணையைப் பிரார்த்திப்பதாய்ச் சொல்லிசெய்தி முடித்திருக்கிறார்.

---

## EXTRACT.

### THE GROWTH OF TOWNS
### நகரங்களாவது எப்படி?

இப்போது நகரங்களென்று பெயர்வகித்துப் பிரபலமாக இருக்கிற பட்டணங்களெல்லாம், உண்டாகும்போதே இவ்விதமாகிவிடவில்லை. ஆனால் எப்படியாயிற்றென்றால், சில குடிகள் நாட்டில் வசித்துவந்த இக்கிராமங்களில் ரஸ்தா வசதி முதலியன உண்டாகி, அதன் பிறகு சிறு சிறு கடைகளேற்பட்டு, அவைகள் பெரிய கடைகளாக மாறி, அதன் பிறகு மண்டிகள் என்று பெயர் பெற்றிருந்தும், அத்துடன் வியாபாரிகள் பலர் வந்து தங்கள் வியாபாரங்களை அவ்விடங்களிலேயே தங்கி அநேக விடங்களிலிருந்து சரக்குகளை தருவித்துக் கிடங்குகளைக் கட்டியதாலும், வாரங்கள்தோறும் சந்தைகளேற்பட்டு சுற்றுக்கிராமத்திய ஜனங்கள் கொள்வன கொடுப்பன செய்து போவதாலும், இவ்விதம் வியாபாரங்கள் பலப்பட்டபின் அவைகளின் பந்தோபஸ்துக்கு அநேகம் நியாயஸ்தலங்களேற்பட்டதாலும், அவைகளில் உத்தியோகக் கூட்டத்தார் பலர் வந்து குவிந்ததாலும், அத்துடன் சிறு பள்ளிக்கூடங்களேற்பட்டு நாளுக்கு நாள் பிரபலமடைந்து உயர்ந்த வகுப்புப் பள்ளிக்கூடங்களாகியபின் பிள்ளைகள் ஏராளமாக வந்துசேர உபாத்தியாயர்களின் கூட்டம் அதிகப்பட்டுப் போனதாலும், பெரிய பெரிய கச்சேரிகளேற்பட்டதினால் வக்கீல்களின் எண்ணிக்கை அளவிறந்து போனதாலும், இவர்களிடம் பலவிதவேலைகள் செய்வதற்கென்று ஏழைகள் பலர் நாட்டுப்புறங்களிலிருந்து வந்து தங்கியதாலும், பலதொழிலாளிகளின் விருத்தி ஏற்பட்டதாலும், இவர்களின் சுகபோக வசதிகளுக்குப் பலவிதமான வஸ்துக்கள் பலவிடங்களிலிருந்து வரவழைக்கப்பட்டு அவைகளை அலங்காரமாக வைக்க பாரிபாரியான கட்டடங்களைக் கட்டி வேலைக்காரர்களை ஏதேஷ்டமாக ஏற்படுத்தி, அவர்கள் தங்க பல வீடுகளையும் உண்டாக்கியதாலும், இன்னும் அநேக அச்சாபீசுகள், வர்த்தமானப்பத்திரிகைகளின் ஆபீசுகள், அநேக யந்திர சாலைகள், பல பிரிவான நியாயஸ்தலங்கள், பெருத்த உத்தியோகத்திலிருப்பவர்கள் ஒருவருடனும் சேராமலும், பார்க்கப்பிடியாமலும் வசிப்பதற்கு ஏற்படுத்திக் கொண்டிருக்கும் விஸ்தாரமான பங்களாக்கள், துறைமுகச் சுங்கச் சாவடிகள், இருப்புப்பாதை, வண்டிப் பேட்டைகள், அவைகளுக்குக் கணக்கு கோஷ்பாரா செய்யும் கச்சேரிகள், பல நாடுகளுக்கும் வர்த்தக சம்பந்தமாக நாணயமாற்றம் செய்யும் லேவாதேவிக் கூட்டங்கள், துவிபாஷிகளென்னும் தரகர்களின் கூட்டங்கள் இன்னுமநேகம் அம்சங்களையும் வகிப்பதால் நாட்டுப்புறங்களாயிருந்த இடங்கள் நகரங்களாக விஸ்தாரமாய்விட்டன. இவ்விதமாவதற்கு முதற்காரணம் வியாபாரந்தான். அதன்பிறகே ஒவ்வொன்றாய்ச் சேர்ந்து பட்டணங்களாகின்றன. ஆகையால் வியாபாரங்களே சகலமானவைகளையும் சேர்க்கும் சிறப்புள்ளன. இவை குறைந்தால்தான் எல்லாம் க்ஷீணிக்கும்.



## AGRICULTURAL NOTES.
## விவசாயக் குறிப்புகள்.

INTEREST IN AGRICULTURE.

**விவசாயத்தில் சிரத்தை.**—விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்காக கொஞ்சகாலமாய் அநேக ஜில்லாக்களில் "அக்ரிகல்சரல் அஸோஸியேஷன்" என்ற விவசாய சங்கங்களும் இவைகளுக்கு மேலாக "ஸென்டரல் அக்ரிகல்சரல் கமிட்டி" என்ற ஒரு சபையும் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஜில்லா விவசாய சங்கங்களிலும் உத்தியோகஸ்தர்களும் இங்கிலீஷ் படித்தவர்களும் மெம்பர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள். விசேஷமாய் விவசாயிகள் இவைகளில் மெம்பர்களாகச் சேர்ந்து இந்தவிஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொள்ளவில்லை. இதற்கு என்ன செய்யலாம் என்று யோஜிக்க ஸென்டரல் அக்ரிகல்சரல் கமிட்டியார் சமீபத்தில் கூடினார்கள். மிராசுதார்களுக்கும் விவசாயிகளுக்கும் என்ன தேவை, தண்ணீர்பாய்ச்சல், எரு, இவைகளில் அவர்களுக்கு உள்ள கஷ்டங்கள் என்ன, ஆடு, மாடு தேவையா, விதைதேவையா, அல்லது புதுமாதிரியான கலப்பைமுதலான கருவிகள் தேவையா, அல்லது அவர்களுக்கு சாகுபடி அபிவிருத்தி விஷயத்தில் என்ன விதமான உதவி வேண்டும் என்பவைகளை ஒவ்வொருடிஸ்திரிகட்டு அக்ரிகல்சரல் அஸோஸியேஷன் மெம்பர்களும் கூடுமானவரையில் நேரிலாவது அல்லது பெரிய குடித்தனக்காரர்களுக்கு எழுதியாவது அடிக்கடி விசாரிக்க வேண்டுமாய், ஜில்லா அக்ரிகல்சரல் அஸோஸியேஷன்களை கேட்டுக்கொள்ளுகிறதென்றும், அந்தந்த ஜில்லாவில் இன்ன விதமான விவசாய சோதனைநடக்கப்போகிறது என்று வருஷத்திற்கு ஒரு ஜாப்தா தயாரித்து அனுப்பும்படி டிஸ்திரிகட்டு விவசாயசங்கங்களை கேட்டுக்கொள்ளுகிறதென்றும் தீர்மானித்தார்கள். பருத்திசாகுபடிசோதனை விஷயமாய் கோவில்பட்டியிலும், கரும்பு சாகுபடி சோதனை விஷயமாய் தாலிபரம்பா, பாலூர், ஸாமல்கோட்டை, இந்தஇடங்களிலும், நிலக்கடலை விஷயமாய் பாலூரிலும் கவர்ன்மெண்டு பண்ணைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த சோதனைப் பண்ணைகளில் கற்றுக்கொள்ள சில குடித்தனக்காரர்களை டிஸ்திரிகட்டு சங்கங்கள் அனுப்ப வேண்டுமென்றும், கால் நடைகளுக்கும், பயிர்களுக்கும் வியாதி நேரிட்டால் அதை உடனுக்குடனே தெரிவிக்கவேண்டும் என்றும் ஜில்லா அக்ரிகல்சரல் சபையாரை கேட்டுக்கொள்ள வேண்டியதென்றும், மெலே சொல்லியபடி கவர்ன்மெண்டு பண்ணைகளில் கற்றுக்கொள்ள அனுப்பப்படுகிறவர்களுடைய செலவுக்குக் கொஞ்சம்சகாயம் செய்யும்படி அகிரிகல்சரல் டைரெக்டரை கேட்டுக் கொள்ள வேண்டும் என்றும் மேற்படி கூட்டத்தில் தீர்மானித்தார்கள்.

AGRICULTURAL ASSOCIATIONS.

**விவசாய சங்கங்கள்.**—இந்த விவஸாய சங்கங்களில் சேர்ந்து சிரத்தை எடுத்துக்கொள்வது எல்லாருக்கும்நலம். விவசாயிகள் அவரவர்கள் கஷ்ட நிஷ்டூரங்களை வெளியிட்டு ஸர்க்கார் அதிகாரிகளிடத்திலும் இன்னும் மற்ற விதமாகவும் சுளுவாய் ஸாதகம் பெற்றுக்கொள்ளலாம். இதல்லாமல் இன்னும் ஒரு காரணம் உண்டு. இப்பொழுது சென்னை ராஜதானியிலும் இன்னும் இதர ராஜதானிகளிலும் சட்ட நிர்ணய சபைகள் இருக்கின்றன. அவைகளில் முனிஸிபாலிடி மெம்பர்களாலும் லோகல்பண்டு போர்டு மெம்பர்களாலும் நியமிக்கப்பட்ட சில பிரதிநிதிகள் அந்தச்சட்ட நிர்ணய சபைகளில் மெம்பர்களாயிருக்கிறார்கள். இந்தச் சபைகளில் மேல் சொன்னபடி நியமிக்கப்பட்டவர்கள் போதாதென்றும், அதனால் சட்ட நிர்ணய சபையில் மெம்பர்களைஜாஸ்திப்படுத்தி அதில்விவசாயிகள், வியாபாரிகள், மகமதியர்போன்ற ஒவ்வொரு பெருங் கூட்டத்தார்களிலும் பிரதிநிதிகள் இருக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டில் தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் இந்த பிரதிநிதிகளை எப்படி நியமனம்செய்கிறதென்பது கவர்ன்மெண்டாருக்குத் தெரியவில்லை; இதற்கு ஒருவழி ஏற்படும்வரையில் அந்தந்தக் கூட்டத்தார்களில் கவர்ன்மெண்டாருக்கு யார் முக்கியஸ்தர் என்று தோன்றுகிறதோ அவர்களை நியமனம் செய்யப்போகிறார்கள்; இப்பொழுது இருக்கிற ஸ்திதியில் அவர்களைக் குற்றஞ்சொல்ல வழியில்லை. விவசாயிகள் அங்கங்கே சங்கங்கள் ஏற்படுத்தி இந்தச் சங்கங்களெல்லாம் ஒன்று சேர்ந்து ஒத்து சட்ட நிர்ணய சபைக்கு விவசாயப் பிரதிநிதி ஒருவரை நியமித்தால் கவர்ன்மெண்டார் அவரை ஒப்புக்கொள்வதில் யாதொரு ஆக்ஷேபனையும் இராது. ஆதலால் மேற்சொல்லிய விவசாய சங்கங்களில் சேர்ந்து சிரத்தை எடுத்துக்கொண்டு சட்ட நிர்ணய சபைக்கு பிரதிநிதிகள் அனுப்பவேண்டிய ஏற்பாடுகளைப்பண்ண முயற்சி செய்யவேண்டும்.

# TRADE NOTES.
## வியாபாரக் குறிப்புகள்.

### The Trade of India.

**இந்தியாவின் வியாபாரம்.**—இந்தியாவில் நடக்கும் வியாபார விஷயமாய் கவர்ன்மெண்டார் அநேக கணக்குகள் வைத்திருக்கிறார்கள். அவைகளில் இந்தியாவுக்கும் இதர தேசங்களுக்கும் நடக்கும் வியாபாரத்தைப் பற்றிய கணக்கு முக்கியமானது. இது மாஸாமாஸம் ஒருதடவை பிரசுரமாகின்றது. இதோடு கூட பன்னிரண்டு மாஸத்திய கணக்குகளையும் ஒன்றாகச் சேர்த்து வருஷக்கணக்கும் ஒன்று பிரசுரம் செய்யப்பட்டுவருகிறது. இந்த வருஷக்கணக்கானது ஏப்ரல் முதற்தேதிதொடங்கி மார்ச்சுமீ 31உ வரையிலுள்ள விஷயங்கள் அடங்கினதாயிருக்கும். இந்தக் கணக்கை பெரிய ஐரோப்பிய வர்த்தகர்களும், தேசத்தின் நிலைமை எப்படியிருக்கிறதென்று அறிய ஆவலுள்ளவர்களும், விசேஷமாய் வாங்கிப் பார்ப்பது வழக்கம். இப்படிப்பார்த்ததில் 1907-08ம் வருஷத்தில் நூற்றறுபத்திரண்டுகோடி அறுபத்தெட்டு லக்ஷம் பெறுமான இறக்குமதியும், நூற்றுஎண்பத்திரண்டு கோடி அறுபத்து மூன்று லக்ஷம் பெறுமான ஏற்றுமதியும் ஆகமொத்தம் முன்னூற்று நாற்பத்தைந்து கோடி முப்பத்தோர் லக்ஷம் பெறுமான வியாபாரம் நடந்திருப்பதாக வெளியாகிறது. இது 1906-07ம் வருஷத்திய வியாபாரத்தைப் பார்க்கிலும் இருபத்தேழு கோடி ஐம்பத்திரண்டு லக்ஷம் ஜாஸ்தி. பொதுவாய் இந்த ஜாஸ்தி முழுமையும் இறக்குமதி அதிகமேயென்று சொல்லி விடலாம். மேற்சொன்ன வியாபாரத்தின் மொத்தத்தொகை பார்வைக்குப் பெரிதாயிருந்தாலும் ஜனங்களின்பேரில் ஈவித்தால் சொற்பமென்றுதெளிவாய்த் தெரியும். இந்தியாவில் முப்பது கோடி ஜனங்கள் இருக்கிறார்கள். முந்நூற்று நாற்பத்தைந்து கோடியை இவர்களுக்குக் கொடுத்தால் பேருக்கு பதினொன்றரை ரூபாய் வீதம் வரும். இங்கிலாந்துதேசத்தின் வியாபாரத்தை மேற்சொன்ன மாதிரி ஈவித்துப்பார்த்தால் ஆள்ஒன்றுக்கு சுமார் முன்னூற்று முப்பத்தி ஏழரை ரூபாய்வீதம் ஆகிறது. இங்கிலீஷ்க்காரர்வியாபாரத்திறமை எங்கே, நாம் எங்கே. நன்றாய்யோசித்துப் பார்க்கவேண்டும். இதனால் நாம் வியாபாரத்தில் எவ்வளவோ தேறவேணுமென்று ஏற்படுகிறதல்லவா?

### The English Merchants.

**ஆங்கிலேய வர்த்தகர்கள்.**—மேலெழுதிய குறிப்பில் இங்கிலீஷ்க்காரர்கள் வியாபாரத்தில் நிபுணர்கள் என்று சொன்னோம். அவர்கள் அப்படியிருக்க அநேக காரணங்கள் உண்டு. அவர்கள் பரம்பரையாய் திரைகடலோடி திரவியம் தேடிய வியாபாரிகள். அதல்லாமல் இங்கிலாந்து வியாபாரிகளிடத்தில் ஒருவித ஐக்கியமித்திரம் உண்டு. வியாபாரிகளுக்குப் பொது நன்மையான விஷயங்களில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். இன்றைக்கு ஒருவனுக்கு ஆபத்து வந்தால் நாளைக்கு தனக்கும் வரக்கூடுமென்பது அவர்களுக்குத் தெரியும். எப்பொழுதும் வியாபாரத்தை நிலை நிறுத்தவேணும் என்ற ஊக்கம் உள்ளவர்கள். வியாபார நிலைமையை ஆராய்வதிலும், அதற்கு வேண்டிய புஸ்தகங்களோ, சமாசாரங்களோ, இவைகளைத் தேடுவதிலும், அவர்களுடைய வாடிக்கைக்காரர்களுக்கு வேண்டிய சாதனங்களைச் செய்வதிலும், தங்கள் வியாபாரத்திற்கு ஆகாத சட்டங்களையாவது ரூல்களையாவது கவர்ன்மெண்டார் ஏற்படுத்துங்காலத்தில் அவைகளைப் பற்றி முறையிட்டு அப்படி ஏற்படுத்தாமல் தடுப்பதிலும், அவர்களில் ஒருவருக்கு மற்றொருவரோடாவது அல்லது அன்னியர்களோடாவது விவாதம் வந்தால் கோர்ட்டுக்குப்போகாமல் மத்தியஸ்தர்களைக் கொண்டு விவாதத்தை பைசல் செய்துகொள்ளுவதிலும், வியாபார வழக்கங்களில் சந்தேகம் நேர்ந்தால் தீர்த்துக் கொள்ளுவதிலும், வியாபார முறைமையையும் கௌரவத்தையும் வகிப்பதிலும், மிகஒற்றுமையுள்ளவர்கள். இப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் அவர்கள் ஒன்று கூடி அங்கங்கே "சேம்பர் ஆப் காமர்ஸ்" என்னும் வர்த்தகச் சங்கங்களை ஏற்படுத்தி செய்கிறார்கள்.

### Wanted Indian Chambers of Commerce.

**இந்திய வர்த்தக சங்கங்கள் தேவை :**—ஆங்கிலேயவர்த்தகர்களைப் போல இந்தியாவர்த்தகர்களும் ஒன்றுகூடி வர்த்தக சங்கங்கள் ஏற்படுத்தி வியாபாரிகளின் பொதுநன்மையைத் தேடுவார்களானால் நமது தேசத்துவியாபாரமும் ஓங்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. இதன் விஷயமாய் விவசாயக் குறிப்புகளின் கீழ் "விவசாய சங்கங்கள்" என்று நாம் எழுதியிருப்பதை வாசிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். அதில் சொல்லியபடி இந்தியவியாபாரிகளின் பிரதிநிதி ஒருவரை கவர்ன்மெண்டார் சென்னை சட்ட நிர்ணய சபையில் நியமிக்கப் போகிறார்கள். மேற்சொன்னபடி வர்த்தகர்கள் அங்கங்கே சங்கங்களாகச் சேர்ந்து பிரதிநிதியை நியமிக்கும் பக்ஷத்தில் அந்த பிரதிநிதியையே கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டுவிடுவார்கள். இதனால் வியாபாரத்திற்கு ஒரு பெரிய கௌரவம் ஏற்படுவதோடுகூட எவ்வளவோ நன்மையும் உண்டாகும்.



# INDUSTRIAL NOTES.
## கைத்தொழில் குறிப்புகள்.

### Oil Mill for Bombay.

**பம்பாயில் ஓர் எண்ணெய் ஆலை.**—நாலு லக்ஷ ரூபாய் முதல்வைத்து பம்பாயில் ஒரு எண்ணெய் ஆலை ஏற்படுத்தப்போகிறார்கள். இந்தியாவில் எண்ணெய் அகப்படக்கூடிய கொட்டைகளை எல்லாம், அங்கே வாங்கி வைத்து எண்ணெய், புண்ணாக்கு, உற்பத்தி செய்யப்போகிறார்களாம். துவக்கத்தில் பருத்திக்கொட்டையிலிருந்து எண்ணெயும் புண்ணாக்கும் உற்பத்திசெய்ய ஆரம்பிக்கிறார்கள். இவைகள் விசேஷமாய் வியாபாரமாகும் என்று எண்ணுகிறார்கள்.

### Match Making.

**தீக்குச்சி செய்தல்.**—தீக்குச்சி செய்வதற்குத் தகுந்த மரங்கள் இத்தேசத்தில் இன்னவை இருக்கின்றனவென்றும், தீப்பெட்டி செய்யும் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு அனுகூலமான இடங்கள் இன்னவையென்றும், அதற்கான மரங்கள் எந்தக் காடுகளில் இருக்கின்றனவென்றும் இந்தியா பாரெஸ்ட்டு இலாக்கா அதிகாரிகள் விசாரித்து ஆராய்ந்து விவரமாய்த் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் சில மாதங்களில் அவர்கள் இவ்விஷயங்களையெல்லாம் ஒரு ரிப்போர்ட்டாக வெளியிடுவார்களென்று நம்புகிறோம்.

### Best Method of Preserving Eggs.

**முட்டைகள் கெடாமற் செய்தல்.**—பொதுவாய் ஈரமும் காற்றும் பட்டால் எந்த பதார்த்தமும் கெட்டுப்போய்விடும். முட்டைக்கு ஓடு இருந்தாலும் அந்த ஓட்டில் சிறு துவாரங்கள் இருக்கின்றன. ஆகையால் அந்த ஓட்டைகள் வழியாய் காற்று போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருக்கிறது. அதனால் முட்டைகள் கெட்டுப்போகின்றன. கெடாமல் இருக்கவேணுமானால் புது முட்டைகளின் மேல் பன்றிக்கொழுப்பை பூசி ஒரு முட்டையின்மேல் மற்றொரு முட்டை படாமல் வைத்தால் எவ்வளவு நாளானாலும் முட்டைகள் பதம் கெட்டுப்போகாதென்று ஒரு நிபுணர் சொல்லுகிறார். இரண்டு அணாவுக்குப் பன்றிக்கொழுப்பு வாங்கினால் நூறு முட்டைகளுக்குப் பூசலாமாம்.

### Exhibitions.

**பொருள் காட்சிகள்.**—எட்டியாபுரத்து ஜமீந்தாரவர்கள் முயற்சியால் திருநெல்வேலி ஜில்லாகோயில்பட்டியில் அடுத்தமார்ச்சுமாதம் 15ம் தேதி, அதாவது பங்குனி மாதம் 2-ம் தேதியில் விவசாய பொருள்கள் முதலிய நமதுதேசத்திலுள்ளதெல்லாம் காட்டப்படும். பயிர் எப்படிச் செய்யவேண்டியதென்பதைப்பற்றியும் தொழில்கள் எப்படி தெரிந்துக்கொள்ளலாம் என்பதைப்பற்றியும் பிரஸங்கங்களும் நடக்கும். கடைசியில் அங்கே கொண்டுவந்த ஆடு மாடுகள் விற்பனைக்காக சந்தையொன்றுகூடுவார்கள். யாரும் தங்கள் சாமான்களையும், பயிருக்கு உபயோகமான கருவிகளையும் கொண்டுபோய்க் காட்டலாம். ஆடுமாடுகள் தங்குவதற்கு இனாமாய்இடம், வைக்கோல், தண்ணீர்முதலியவை கொடுப்பார்கள். இதேமாதிரி கும்பகோணத்திலும் பிப்ரவரிமீ 25உ முதல் மகாமகம் பத்து நாளும் ஒரு பொருள்காட்சி நடக்கப்போகிறது.

### The Madras Aluminium Industry.

**சென்னையில் அலூமினியம் வேலை.**—இந்த தேசத்தில் அலூமினியப் பாத்திரங்கள் செய்வது பயன்படுமென்று காட்டுவதற்காக கவர்ன்மெண்டார் சென்னையிலுள்ள சித்திரகலாசாலையில் இந்த வேலையை ஆரம்பித்தார்கள். மூன்றரை வருஷகாலம் சாமான்கள் செய்து பார்த்ததில், அதற்குச் செலவிட்ட பணத்தை அரைவட்டிக்குக்கடன் வாங்கியிருந்தால் நஷ்டம் வந்திருக்குமென்று கண்டார்கள். கடன் வாங்காமல் பத்துப்பேர் சேர்ந்து பங்குகள் போட்டுக்கொண்டு கம்பெனியாக்கி வேலை செய்திருந்தால் பங்குக்காரர்களுக்கு வருஷத்துக்கு நூற்றுக்கு நான்கு ரூபாய்கூட வட்டி கிடைப்பது கஷ்டமாயிருந்திருக்கும். தனியே ஒரு முதலாளி இந்த வியாபாரத்தை நடத்துவதும் பத்துப்பேர் சேர்ந்து நடத்துவதும் லாபகரமாகாதென்று இதனால் தெரிகிறது. ஆனால் இந்தத் தொழிலை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்று எண்ணங்கொண்டு துரைத்தனத்தார் வட்டிக்கணக்குப் பார்க்காமல் மிகுந்த பணம் செலவிட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட செலவுகள் வியாபாரிகள் செய்யமாட்டார்கள். ஆதலால் வியாபாரிகளுக்கு வட்டிகட்டி வரக்கூடும். இப்போது சில கம்பெனிகள் ஏற்பட்டு இந்த வியாபாரம் செய்து வருகிறார்கள்.

# ECONOMICS.

# பொருளாதாரம்.

THE WAY TO PROSPER.

**பிழைக்கும் வழி.**—"பிழைக்கும் வழி" உழைக்கப் பழகுவதே. உழைப்பாவது மனதும் தேகமும் வேலை செய்வதாகும். மனதின்வேலை நினைத்தல்; மனம் நினைத்த காரியங்களைக் கை கால்கள் செய்து நிறைவேற்றும். ஆதலால், சரியான உழைப்புக்கு முக்கியமான காரணம் சரியான நினைவு. நமக்கும் மற்றவர்களுக்கும் உபயோகமானது எது, எது செய்தால் பயன்படும், எந்தக்காரியத்தினால் நமக்குலாபம் அதிகமாய்க்கிடைக்கும் என்று யோசித்துத் தீர்மானிப்பதே சரியான நினைவு. "தெய்வத்தாலாகா தெனினும் முயற்சி தன்மெய்வருந்தக் கூலிதரும்."

FARMERS MUST BORROW.

**ரயத்துக்கள் கடன் வாங்குவது அவசியம்.**—அநேக வருஷங்களாய் ஆங்கில துரைத்தனத்தார் விவஸாயிகளின் நிலைமையைவிசாரித்துஅவர்களுக்கு நன்மை செய்ய ஆவல் கொண்டு அதற்காக ஸர் ப்ரடெரிக் நிக்கல்ஸன் என்னும் ஒரு பெரிய அதிகாரியை நியமித்தார்கள். அவர் அனேக ஆண்டுகள் கஷ்டப்பட்டு அங்கங்கேயுள்ள கனவான்களையும், மிராசுதார்களையும், மற்றுமுள்ள அநுபவசாலிகளையும் கலந்து பேசி அவர்களுடைய அபிப்பிராயங்களை எழுதிவாங்கிப் பார்த்தார். எப்படிப் பார்த்தலும் எங்கே பார்த்தாலும் விவசாயிகளெல்லாரும் கடன் வாங்கியே காரியங்களை நடத்த வேண்டியது அவசியமாயிருக்கிறதென்றும், முக்கியமாய்ச் சிறிய பண்ணைக்காரர்கள் கடன் வாங்காமல் தீராதென்றும் தெரியவருகிறது. அவர்கள் ஒரு சமயத்தில் இல்லாவிடில் மற்றொரு சமயத்திலாவதுகடன்வாங்குவது அவசியமாகின்றது. ஸாதாரண "ரயத்து" கடன் வாங்குவது வழக்கமாய் ஏற்பட்டிருக்கின்றது.

WHY BORROW?

**கடன் வாங்குவதேன்?**—நிலத்தைச் சீர்திருத்தி அபிவிருத்திசெய்வதற்காக ரயத்துக்கள் கடன்வாங்குவது அருமை. ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கிற சட்டங்களின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் உண்டாகும் கஷ்டத்தினாலும் வைதிக லௌகிக ஆசார வியவஹார வழக்கங்களின் நிர்ப்பந்தத்தினாலும், வெள்ளாண்மைக்கு வேண்டிய இயற்கை யநுகூலங்களின் லோபத்தினால் விளைவு குறைவதனாலும், சரக்குகளைச் சுலபமாய் விற்பதற்கு ஏற்ற சந்தைகள் முதலான வியாபார ஸ்தலங்களுக்கு வெகு தூரத்தில் வசிப்பதனாலும், இன்னும் இவைபோன்ற காரணங்களினாலும் ரயத்துக்கள் கடன் வாங்கவேண்டி வருகின்றதென்று நமது துரைத்தனத்தார் நெடுநாளாக ஆய்ந்து ஒய்ந்து பார்த்துக் கண்டிருக்கிறார்கள்.

THE RATE OF INTEREST.

**வட்டி வாசி.**—இப்பொழுது தர்மவட்டி என்பது மாசம் ஒன்றுக்கு நூற்றுக்கு ஒரு ரூபாய். குறைந்த வட்டி என்பது முக்கால் ரூபாய். அதிக வட்டி என்பது ஒன்றரை ரூபாய். ஒருரூபாய் அல்லது ஒன்றரை ரூபாய் வட்டிகொடுத்துப் பணம்வாங்கி, அதைக் கொண்டு நிலத்தைச் செவ்வைப்படுத்திக் கொண்டாலும் வருகிற அதிகலாபத்தை வட்டி விழுங்கி விடும். அந்தப் பணத்தை வேறு காரியங்களுக்கு உபயோகப்படுத்தி விட்டால் குடிமூழ்கிப்போம். தரித்திரம் தலைநீட்ட வொட்டாது. வட்டி நூற்றுக்கு அரைரூபாய் ஆகுமானால் கடன் வாங்குகிறவன் ருணத்தைத் தீர்த்துச் சுகமடையலாம்.

REMEDY FOR INDEBTEDNESS.

**ருண விமோசன மார்க்கம்.**—ஸரஸமாய்க் கடன் கொடுப்பதற்காகப் "பாங்கி" கள் முதலானவைகளை ஏற்படுத்துவதனால் ரயத்துக்களுக்கு உள்ள கடன் தொந்தரவு பூர்த்தியாய் நிவர்த்தி ஆகாது. ஆனால் வேறு ஸாதனங்களினால் ருணபாதை நிவர்த்தியாகும். அவையாவன:- 1. அனாவசியமாய் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பிரதி பந்தங்களை நீக்குதல்; 2. கலியாணத்தில் செலவுகளை மட்டுப் படுத்துதல். லௌகிக காரியங்களிலும் ஆசார வியவஹாரங்களிலும் மற்றுமுள்ள வழக்கங்களிலும் சீர் திருத்தம் செய்தல்; 3. கிஸ்து வசூல் செய்யும் பத்ததிகளையும், ரெவின்யூ வியவஹார ஒழுங்குகளையும் ஸாத்தியமானவரையில் கஷ்டமுண்டாக்காத விதமாய் அமைத்தல்; 4. அங்கங்கே சந்தை கூட்டுதல்; 5. நல்ல கல்விப் பயிற்சி; 6. விவஸாய முறைகளையும் கைத்தொழில்களையும் திருத்தி அபிவிருத்தி செய்தல், - முதலியனவாம்.



# THE TEXTILE INDUSTRY.

# நெசவு தொழில்.

TO FIND OUT WOOLLEN CLOTH.

**கம்பளி என்று கண்டு பிடித்தல்.**—நமது தேசத்தில் குளிர் காலத்தில் ஜனங்கள் கம்பளி ஒன்று இருந்தால் நல்லதென்று வாங்கப்போகிறார்கள். ஒரு கடைக்குப்போய்க் கம்பளிகளைப் பார்த்து கடைக்காரருடன் பேரம் பேசி குறைந்த விலையில் ஒரு கம்பளி வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறார்கள். தமக்குள் தாம் வெகுசாமர்த்தியமாய் ஸரஸ விலைக்கு நல்ல கம்பளி வாங்கிவிட்டதாய் எண்ணுகிறார்கள். இவர்கள் தெரியாமையினாலேயே இப்படி எண்ணுவார்கள்.

உண்மையாய் நல்ல கம்பளியாய் இருந்தால் விலை அதிகம் கொடுத்தே வாங்கவேண்டியதாயிருக்கும். அப்படி வாங்கிய கம்பளி பார்ப்பதற்கு நன்றாய் இருப்பதோடு உடையும் தாளும். கீழே போட்டுக் கொண்டாலும் மேலே சட்டை தைத்துப் போட்டுக் கொண்டாலும் கெடாமலும் மேனி குறையாமலும் இருக்கும். கொஞ்சம் நாள் பழகினாலும் தட்டிக் கொட்டி வைத்துவிட்டுப் பிறகு எடுத்துப் போட்டுக் கொண்டாலும் எப்போதும்போலவே இருக்கும்.

சில கம்பளிச் சட்டைகள் இரண்டொரு நாளைக்கெல்லாம் மேனி குறைந்துபோம். அவைகளைப் போட்டுக்கொண்டாலும் குளிர் தாங்குவதில்லை. எவ்வளவுக் கெவ்வளவு விலை குறைகிறதோ அவ்வளவுக் கவ்வளவு, கம்பளிநூல் கொஞ்சமாகவும், பஞ்சு நூல் அதிகமாகவும், கலந்திருக்கும். வியாபாரத்தின் உண்மை தெரிந்தவர்களுக்கே இது தெரியும். விலை ஸரஸமென்று அநேகர் வாங்குவதால் கடைகளில் பெரும்பாலும் பருத்திநூல் கலந்த கம்பளிகளே அதிகம் இருக்கும். வியாபாரம் இதில்தான் அதிகமாய் நடக்கும். இதில் முக்கால்வாசி பருத்தி நூலோடு, நல்ல கம்பளி நெய்வதில் சிந்திப்போகிற, கம்பளித் துண்டு துணுக்கையும் பழைய கம்பளி நூலையும் சேர்த்து நெய்வார்கள். ஆதலால் நல்ல கம்பளி வாங்க பிரியமிருப்பவர்கள் அடியில் கண்ட பரீக்ஷையை முன்னாடிசெய்து பிறகு வாங்கவேணும்.

கம்பளிப் போர்வையில் ஒரு நூலை எடுத்து அதன் முறுக்கை உடைத்துப் பிரித்துப் பார்க்க வேணும். பிரிக்கும்போது துண்டுதுண்டாய் அறுந்துபோனால் அதில் கழிபட்ட பழய மயிர் இருக்கிறதென்று ஊகிக்கலாம். அப்படி இல்லாமல் நீளமாய் எடுபட்டால் புதிய நூலால் செய்யப்பட்ட உடை என்று எண்ணலாம். இதனால் அந்தஉடை பருத்தி நூலால் நெய்யப் பட்டது என்றாவது கம்பளி நூலால் நெய்யப்பட்டது என்றாவது சொல்ல முடியாது. அதை கண்டு பிடிக்க வேறு ஒரு பரிக்ஷை செய்ய வேணும். அதாவது ஒரு நெருப்புக் குச்சியைக் கொளுத்தி நூலின் முனையில் பிடிக்க வேணும். பிடித்ததும் எரிந்தால் பருத்தி போன்ற நூலென்று எண்ண வேணும். கருகினால் மயிராலான நூலென்று அறியலாம்.

இதுவே தக்கபரீக்ஷை. மின்னுவதெல்லாம் பொன்னென்று மோசம் போகாமல், அதிக பணங் கொடுத்தாலும், நல்ல பொருளைப் பார்த்து வாங்கி உபயோகிப்பதே நல்லதாகும். வருஷா வருஷம் கம்பளி என்று பேர் ஒன்று தவிர வேறு உபயோக மில்லாத பொருளை வாங்குவதைவிட நல்ல கம்பளி ஒன்று வாங்கி அநேக வருஷங்களுக்கு கெடாமல் வைத்துக் கொள்ளலாம். இதில் எது அதிகச் செட்டு என்று அவரவர்களே யோசித்துக் கொள்ள வேணும்.

WEAVING BY GIRLS.

**பெண்கள் துணி நெய்தல்.**—லண்டனிலிருந்து எழுதிய ஒரு கடிதத்தில் ஹாவல்துரை யென்பவர் இந்தியாவில் சிறுபெண்களும், பிள்ளைகளும் நெசவு தொழிலை யிலேசாகச் செய்யலாம் எனச்சொல்லுகிறார். ஆஸாம் தேசத்தில் கல்யாணகாலத்தில் ஒரு பெண் கட்டிக் கொள்ளும் துணிகளெல்லாம் அவளே தன்கையால் நெய்துகொள்ளும் வழக்கம் இன்று கூட உள்ளதாம். கைக்கு சுறுசுறுப்பும், மனதுக்கு ஊக்கமும், வேலைநயமும் சுளுவாய் ஐந்து ஆறு வயது பிள்ளைகள்கூட கற்றுக் கொள்ளலாம்.

SHRINKING OF WOLLEN GARMENTS.

**கம்பளி சட்டைகள் சுருங்குவது.**—கம்பளிச்சட்டைகள் தைக்கும்பொழுது சரியான அளவாய் தைத்தாலும் கொஞ்சம் நாளானவுடன் சுருங்கி விடுகிறது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அப்படிச் சுருங்குவது சரியாய் சலவை செய்யாததால் என்று நாம் எண்ணுகிறோம் அது சரியான காரணமல்லவாம். சுருங்குவதும் சுருங்காததும் உடுப்பவர்களின் வியர்வையைப்பொறுத்ததாம்.

## THE GROCERY TRADE.
## பலசரக்கு வியாபாரம்

THE GROCERY TRADE.

**பலசரக்கு வியாபாரம்.**—சில்லரை பலசரக்குக் கடைவைத்திருப்பவர்கள் விசேஷ முதலாளிகளாயிருக்கமாட்டார்கள். அப்படிப் பட்ட கடைகளுக்கு பெரும்முதலும் தேவை யில்லை. சில்லரைக் கடை வியாபாரத்தில் லாபம் சம்பாதிப்பது முழுவதும் ஒரு கையால் வாங்கிமற்றொரு கையால் விற்று விடுவதாலேயே. சொற்ப முதலை எவ்வளவு புரட்டலாமோ அவ்வளவு தடவையும் புரட்டி விடவேணும். ஆகையால் கையில் சரக்கு ஜாஸ்தியாய் நின்றால் லாபம் குறையும். கையில் ஜாஸ்தி சரக்கு தங்காமலிருப்பதற்கு ஏற்பாடு செய்ய, இவ்வளவுதான் குறிப்பிட்ட காலத்தில் ஒரு கடையில் செலவாகிறதென்று அறிந்துக் கொள்ள வேணும். இது கணக்குவைத்திருந்தால் நன்றாய்த் தெரியும். ஆனால் சில்லரைப் பலசரக்கு வியாபாரிகள் கணக்கு வைப்பது அரிது. அநுபோகத்தினால் தெரிந்துகொள்ளுவார்கள். ஒரு கடையில் சாமான்கள் விற்பனையாவது சுற்றி யிருக்கும் ஜனசங்கையையும் வாடிக்கையாய் வாங்குகிறவர்களின் ஸ்திதியையும் ஆசார விவகாரங்களையும் அந்தந்த மாஸத்தில் வரும் பண்டிகை முதலியவைகளையும் பொறுத்தது. இவைகளை எல்லாம் யோசனைசெய்தே சில்லரை கடைக்காரர்கள் அவரவர்களுக்கு வேடிக்கைய சரக்குகளை அப்போதைக்கப்போது சேகரித்து வைத்துக் கொள்ளவேணும்.

SELLING LINES.

**விற்கும் சரக்குகள்.**—சென்னப்பட்டணம் முத்தியாலுபேட்டை எராலு செட்டிவீதி இருபத்தாராம் நம்பர் கட்டடத்தில் ஜெனரல் ஸ்டோர்ஸ் என்று ஒரு கடை சுமார் நாலு மாதமாய் நடந்து வருகிறது. ஐந்து ரூ. வீதம் பங்கு வைத்து சுமார் இரண்டாயிர ரூபாயைக் கொண்டு வியாபாரம் நடத்திவருகிறார்கள். இந்த ஸ்டோரின் கணக்கைப் பார்த்ததில் அனேக விஷயங்கள் தெளிவாய்த் தெரிகின்றன. ஒன்று என்ன வென்றால், அரிசி, நெய், துவரைப்பருப்பு, பூராசர்க்கரை, புளி, கடுகு உளுத்தம்பருப்பு, பயற்றம்பருப்பு, கொத்தமல்லி அல்லது தனியா, மிளகு, சீரகம், பெருங்காயம், மிளகாய்வற்றல், ஆஸ்கா சர்க்கரை, பட்டணம்பாக்கு, கடலைப் பருப்பு, காப்பிக்கொட்டை முதல்தரம், இரண்டாம் தரம், பெரியரவை, நல்லெண்ணெய், முந்திரிப் பருப்பு, உப்பு இவைகள் தினம் விற்பனையாயிருக்கின்றன. அஸல் பூரா சர்க்கரையும், காபிக் கொட்டையும், முந்திரிப்பருப்பும், பெரிய ரவையும் தினந்தோறும் வியாபாரமாவதைக் கொண்டு இந்த ஸ்டோரில் தக்க மனிதர்கள் வாங்குகிறார்களென்று ஊகிக்கலாம்.

நாட்டுச்சர்க்கரை, வாஷிங்குசோப், சிகைக்காய், வெந்தயம், இடிபூராசர்க்கரை, வெல்லம், ஏலக்காய், திராக்ஷை, புழுங்கலரிசி, சின்னரவை, மாவு, விளக்கெண்ணெய், கற்கண்டு இவைகள் மாதத்தில் இருபது நாளுக்குமேல் விற்பனையாயிருக்கின்றன. கரிமஞ்சள், சவ்வரிசி, ரங்கூன்மெழுகுவத்தி, இலவங்கம், வெள்ளைப்பூண்டு, சுக்கு, ஜாதிக்காய், வால்மிளகு, மஞ்சள், வாதுமைக்கொட்டை, கொப்பரைத் தேங்காய், கோதுமை, பயறு இவைகள் மாதத்தில் பத்து நாளுக்குமேல் விற்றிருக்கின்றன. இந்த ஸ்டோரில் இவைகளையெல்லாம் பார்த்து விற்பனைக்குத்தக்கபடி சாமான்களை சேகரிக்கிறார்கள்.

CASHEW NUTS.

**முந்திரிக்கொட்டை.**—1907 ம் வருஷத்தில் இந்தியாவி லிருந்து இரண்டு லக்ஷ ரூபாய்க்கு மேல் விலையுள்ள 8507 அந்தர் வெளி தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. பம்பாயிலிருந்து 199,662 ரூபாய் விலையுள்ள 8201 அந்தரும் மிச்சம் சென்னை யிலிருந்தும் அனுப்பப்பட்டிருக்கிறது. தூத்துக்குடி, தள்ளிக்கோட்டை, கொச்சி, காரச்சி, பம்பாய் இந்தத்துறைமுகங்களின் வழியாய் பிரான்ஸ் இங்கிலாந்து இவைகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

JAPAN'S CAMPHOR TRADE.

**ஜப்பான் கருப்பூர வியாபாரம்.**—இதுவரையில் கருப்பூரம் ஜப்பான் தேசத்திலேயே உற்பத்திசெய்து வந்தார்கள். ஜப்பானியர்களுக்கு அது நல்ல வியாபாரமாயிருந்தது. இப்போது ஜெர்மனிதேசத்து கருப்பூரமும், வில்லைகருப்பூரம், கருப்பூரம் போல் தோன்றும் "மோனல்" என்ற வஸ்து இவைகள் எல்லாம் கடைகளில் விற்பனைக்கு வந்துவிடவே, ஜப்பான் தேசத்து வியாபாரம் கொஞ்சம் மட்டுப்பட்டிருக்கிறதாம்.



## REVENUE NOTES.
## ரெவெனியூ குறிப்புகள்.

WATER RATES.

**தண்ணீர்த் தீர்வை.**—1865-ம் வருஷத்திய 7-வது மதிராஸ் தண்ணீர்த் தீர்வை ஆக்டை சேர்ப்படுத்திய 1900-ம் வருஷத்திய மதிராஸ் 5-வது ஆக்டின் முதலாவது செக்ஷன்படி ஏதேனும் ஒரு நிலத்திற்கு சர்க்கார் ஆசரா அல்லது பாசனத்திலிருந்து உத்தரவன்னியில் தண்ணீர் பாய்ச்சப்பட்டால் அதற்கு ஏற்படுத்தப்படவேண்டிய தண்ணீர்த் தீர்வையை அடியில் கண்ட பிரகாரம் வசூல் செய்யவேணுமாய் கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள். அதைச் சார்ந்த விதிகளாவன:

ஒரு சர்க்கார் ஆசராவில் இருந்தாவது அல்லது பாசனத்தில் இருந்தாவது ஏதேனும் ஒரு நிலத்திற்கு உத்தரவன்னியில் தண்ணீர்ப்பாய்ச்சப்பட்டது என்பதற்கு விவரம்:

(a) தண்ணீர் பாய்ச்ச அனுமதி கொடுக்க சர்க்காரால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தருடைய அனுமதி அன்னியில் குறிப்பிட்ட நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சுதல்.

(b) அப்படி அனுமதி கொடுக்க வேண்டிய உத்தியோகஸ்தருடைய உத்தரவை மீறி பாய்ச்சுதல்.

(c) இன்ன நிலத்திற்கு இன்ன பாசனத்திலிருந்து அல்லது இன்ன நிபந்தனைக்கு உள்பட்டுத்தான் தண்ணீர் பாய்ச்சவேண்டியதென்று ஏற்பட்ட வழக்கம் அல்லது விதியை மீறி தண்ணீர் பாய்ச்சுதல்.

2. அப்படி மீறி ஏதேனும் ஒரு நிலத்திற்குத்தண்ணீர்கொண்டுபோனது முதல் தடவையானால் சாதாரணமாய் அந்தநிலத்திற்கு ஏற்படுத்தக்கூடிய தண்ணீர்த் தீர்வைக்கு இரண்டு பங்கு வரி ஏற்படுத்தப்படும்.

3. அப்படி மீறி எடுத்துக்கொண்டது இரண்டாம் தடவையானால் சாதாரணமாய் அந்த நிலத்திற்கு ஏற்படுத்தவேண்டிய தண்ணீர்த் தீர்வையைப் போல் ஐந்து மடங்கு தீர்வை விதிக்கப்படும்.

4. மூன்றாவது அல்லது அதற்கு மேல்பட்ட தடவைகளானால் சாதாரணமாய் அந்த நிலத்திற்கு எவ்வளவு தண்ணீர்த் தீர்வை ஏற்படுத்தவேண்டியதோ அதைப்போல் பத்து மடங்கு தீர்வை ஏற்படுத்தவேண்டியது.

5. உத்தரவன்னியில் நஞ்சை நிலத்திற்கு ஜலம் எடுத்துக்கொள்ளப்பட்டால் சாதாரணமாய் செலுத்தப்படவேண்டிய தண்ணீர்த் தீர்வை யென்ற வார்த்தைகளுக்குப் பதிலாய் இந்தவிதியின் தாத்பரியத்துக்காக அந்த நிலத்திற்கு ஏற்படுத்தப்பட்ட நஞ்சைத் தீர்வை என்று அர்த்தம் கொள்ளவேண்டியது.

ஆனால் (1) ஒவ்வொருதடவையிலும் அதே நிலத்திற்கு அதே பேர்வழியால் அனுமதியன்னியில் நீர் பாய்ச்சப்பட்டால் மாத்திரம் மேற்சொல்லிய 3, 4 ரூல்படி தண்டம் தண்ணீர்த் தீர்வை போடப்படும். (2) இந்த ரூல்களின் பிரகாரம் ஏற்படுத்தக்கூடிய தண்டம் தண்ணீர்த் தீர்வையை கலெக்டர் அவர்கள் யுக்தம்போல் கொஞ்சம் தள்ளி வஜா செய்யலாம். (3) அப்படி ஏற்படுத்தப்படும் மொத்தம் தண்ணீர்த் தீர்வையானது அதே நிலத்திற்கு ஏற்பட்டிருக்கும் நிலத்தீர்வைக்கு இருபத்தைந்து பங்குக்கு மேற்படக் கூடாது.

விசேஷக் குறிப்பு:—மேலே சொல்லப்பட்ட விதிகள் கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர் ஜில்லாக்களின் டெல்டா நிலங்களுக்கும், பெரியார், ரிஷிகுல்யா, கர்னூல், கடப்பா கால்வாய் பாசன நிலங்களுக்கும், நெல்லூர் ஜில்லாவிலிருக்கிற பொன்னலூர், ஆஜிபுரம் ஏரிகளின் கீழ்ப்பாசன நிலங்களுக்கும் சம்பந்தப்படமாட்டா.

REMISSIONS.

**தீர்வை வஜா.**—திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் தீர்வை ஜாஸ்தி ரெமிஷன், சாவிவஜா, தரிசுவஜாவுக்கு (1) முசிரி, குளித்தலை தாலூகாக்களின் நீராரம்பம் பாகங்களில் இரண்டாம் போகம் பயிர்களுக்கு மார்ச்சுமீ 31உ (2) பெரம்பலூர் தாலூகாவில் இரண்டாம் போகம் பயிர்களுக்கு பிப்ரவரிமீ கடைசி தேதி. (3) எல்லா முதல்போகம்பயிர்களுக்கும மேலே கண்டது நீங்கலான மற்ற இரண்டாம் போகம்பயிர்களுக்கும் - ஜனவரிமீ 31உ ஆகிய இந்த 3 வாயிதாக்களுக்குள் ரயத்துக்கள் மனுக்கொடுத்துக் கொள்ள வேண்டுமாம்.

செங்கற்பட்டு ஜில்லாவில்

(1) முதல் போககாலத்தில் தரிசு, சாவி, அழிவு இவைகளுக்கு, பிப்ரவரிமீ 15உ, (2) இரண்டாம் போக காலத்தில் சாவி, அழிவு இவைகளுக்கு ஏப்ரல்மீ 15உ, மேற்படி தேதிகளுக்கு முன்னதாய் வஜாமனு கொடுத்துக்கொள்ள வேண்டுமாம்.

சேலம் ஜில்லாவில்

நஞ்சைத் தரிசுவஜா, நஞ்சையில் புஞ்சைப்பயிர் வஜா இவைகளுக்கு டிசம்பர்மீ 31உக்கு மேலும், மற்ற சாவிவஜா, மகசூல் கம்மிவஜா, இவைகளுக்கு ஜனவரிமீ 31உக்கு மேலும், மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்று கலெக்டரால் உத்திரவுசெய்யப் பட்டிருக்கிறது.

## LEGAL NOTES.
## சட்டக் குறிப்புகள்.

**Right of Residence in Family House.**

**குடும்ப வீட்டில் குடியிருக்கும் பாத்தியதை.**—ஒரு ஹிந்து விதவை ஜீவனாம்சத்துக்காக ஒரு வழக்கு கொண்டு வந்தாள். அவளுக்கு மற்ற விஷயங்கள் தீர்ப்பானதோடு அவள் ஆயிஸ—பரியந்தம் ஒரு வீட்டில்குடியிருக்கலாம் என்றும் தீர்ப்பாயிற்று. இப்படி குடியிருக்க ஏற்பட்ட பாத்தியதையை ஒருவன் அவளுக்கு கொடுக்கவேண்டிய தொகைக்காக ஜப்தி செய்தான். அப்படி ஜப்தி செய்யலாமா என்பது விவகாரம். அந்தப் பாத்தியதை ஜப்தி செய்ய லாயக்கில்லை என்று ஜில்லா ஜட்ஜி தீர்மானம். இதன் மேல் சென்னபட்டணம் ஹைகோர்ட்டார் என்ன சொன்னார்களென்றால், ஒரு விதவை அவளுடைய புருஷன் குடும்ப வீட்டில் குடியிருக்க பாத்தியதை உண்டு. ஆனால் அவள் இன்ன வீட்டில்தான் இருப்பேன் என்று சொல்லக்கூடாது. சாதாரணமாய் அவள் அவளுடைய புருஷன் குடும்பத்தாரோடு குடியிருப்பாளானால் அவர்கள் அவளுக்கு குடியிருக்க தகுந்த ஏற்பாடு செய்தால் அதை அவள் ஒப்புக்கொள்ளவேண்டியது. இப்படி குடியிருக்கும் பாத்தியதை அவளுக்கு மட்டும் உரியதே அல்லாமல் அந்நியருக்குக் கிடையாது. அந்த பாத்தியதையை பிறத்தியார் வாங்கி ஒரு குடும்ப வீட்டில் புகுந்து தொந்திரவு கொடுக்கலாம் என்பது இந்து லாவின் கருத்தல்ல. ஆகையால் அந்த பாத்தியதையை ஜப்தி செய்யக்கூடாதென்றும் ஜில்லா ஜட்ஜி செய்த தீர்மானம் சரியென்றும் தீர்மானித்தார்கள்.

**Right to take water.**

**தண்ணீர் கொண்டுபோக பாத்தியதை.**—இது விஷயமாய் 1905-ம் வருஷத்திய 951வது நம்பருள்ள இரண்டாவது அப்பீலில் சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டில் ஒரு தீர்மானம் சமீபத்தில் செய்யப்பட்டது. ஒருவர் கவரன்மெண்டு ஆசராவில் உள்ள தண்ணீரை அவர்களிடத்தில் வாங்கி மற்றொருவர் நிலத்திலுள்ள கால்வாய் வழியாய் தன்நிலத்திற்குக் கொண்டுபோய்க் கொண்டிருந்தார். இந்தக்கால்வாயை மற்றொரு நிலக்காரன் தூர்க்க, வியாச்சியம் நடந்து ஹைகோர்ட்டிற்கு வந்தது. ஆசராவில் தண்ணீர் இல்லாமையாலாவது அல்லது கவரன்மெண்டார் உத்திரவு கொடுக்காமையாலாவது நிலத்திற்குத் தண்ணீர் கொண்டுபோய்க் கொண்டிருந்தவன் அப்படிக்கொண்டுபோகாமல்போனாலும் அவனுக்கு தண்ணீர் கொண்டுபோகும் பாத்தியதை போய்விடாதென்றும் ஆகையால் அந்த வாய்க்கால் சரிவர தண்ணீர் பாயும்படியான ஸ்திதியில் வைக்கப்பட வேண்டுமென்றும் ஜட்ஜிகள் தீர்மானித்தார்கள்.

**Sale.**

**கிரயம்.**—முடிவாக சரியான கிரயமாவதற்குப் பெறுமானமாக கொடுக்குந் தொகை பெற்றுக்கொண்டதற்கு ஏற்பட்ட பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப் படாமற்போனால் கோர்ட்டில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**Mortgage.**

**பெந்தகம்.**—கடன் தீருகிற வரையிலும் அந்தக் கடனுக்காக ஸ்தாவர சொத்தைக் கடன் கொடுத்தவனுடைய வசம் ஒப்புவித்தபொழுது இதற்குச்சாட்சியமாக எழுதப்பட்ட பத்திரம் குத்தகைப்பத்திரமல்ல, பெந்தகப் பத்திரமாகும். கடன் தொகை ரூ. 100-க்குட்பட்டிருந்தால் ரிஜிஸ்டர் செய்வது இஷ்டத்தைப் பொறுத்தது, கட்டாயமில்லை.

**Earnest Money.**

**கிரயத்திற்கு அச்சாரத் தொகை.**—கிரயம் பேசி முடிந்தவுடன் கிரயம் செய்துகொள்ளுகிறவன் 100 ரூபாய்க்கு மேற்பட்ட தொகையை கிரயத்தொகையில் ஈடு செய்துகொள்வதாக அட்வான்ஸ் கொடுத்து அதற்குக் கிரயமாகப் போகுஞ் சொத்தை ஜாமீனாக்கி ஒரு பத்திரம் பிறந்தால் அப்பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டும்.

**Conditional Sale.**

**நிபந்தனைக் குட்பட்ட கிரயம்.**—ஒரு காரியம் நடக்கும்பொழுது கிரயம் பூர்த்தியாகிவிடுவதாகக் கண்டிருக்கும் ஒரு பத்திரம் பிறந்தால் அது ஒரு ஸ்தாவர சொத்தில் ஒரு பாத்தியத்தை உண்டுபண்ணுகிறது. ஆகையால் அது கட்டாயமாய் ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டும். அதன்படி ஒரு குறித்த நாளில் திரும்பத் தொகை செலுத்தப்பட வேண்டிய தாகையால் ரிஜிஸ்டர் செய்யவேண்டியதில்லை. அது கோர்ட்டில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படும். இவ்வாறு இரண்டு பக்கத்திலும் பொருத்த முள்ளது.




அருமையான புஸ்தகம்!
ஆர்டர் செய்யுங்கள்!

மஹாமகம்
அதின் மகிமை.

பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒரு முறை கும்பகோணத்தில் கொண்டாடப்படும் ஒரு பெரிய உற்சவமாகும். இந்த மகோற்சவத்தைப்பற்றி கும்பகோணத்து ஸ்தலபுராணத்திலிருந்து வெகு அற்புதமாய் தெளிவான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. மஹா மகத்து மகிமையைக் காட்டும் கதைகளும், மஹா மகத்தாத்தில் நடக்கும் தெப்போற்சவ படமும் ஸ்ரீ கும்பேசுவரர் கோவிலின் உருவமைப்படமும் நல்ல மழமழப்பான காகிதத்தில் பளபளப்புடன் அச்சிட்டு இந்தப்புத்தகத்தில் பிரகாசிக்கின்றன. நூல் படிக்கப்படிக்க பரம சந்தோஷம் உண்டாக்கும், பக்தியைப் பெருக்கும், சற்கதி கிடைக்கும், தீவினை அகலும், தோஷம் விலகும், சிறுவர், சிறுமியர், யௌவனர், வார்த்திகர் முதலான எல்லோரிடமும் இருக்கவேண்டிய அருமையான புஸ்தகமாகும் இது. மஹா மகத்துக்குப் போவோர் கையில் அவசியம் இருக்கத்தக்கது.

விலை தபாற்கூலி யுள்பட அணா 6.

வி. எஸ். நரசிம்ம சாஸ்திரி,
நெ. 148. பெரிய தெருவு,
திருவல்லிக்கேணி, சென்னப்பட்டணம்.

V. S. NARASIMHA SASTRI,
6. 18, *Big Street, Triplicane, MADRAS.*

## EDUCATIONAL NOTES.
## வித்தியாவிஷயக் குறிப்புகள்.

THE SOUTH INDIAN TEACHERS' UNION.

**தென் இந்தியா உபாத்தியாயர் சங்கம்.**—இந்தச் சங்கத்தின் முதல் வருஷத்திய மீட்டிங்கு சென்ற டிசம்பர் மீ 22, 23௳ களில் சென்னப்பட்டணம் வெஸ்லி காலேஜில் நடந்தது. இதில் நம்முடைய மாகாண கவர்ன்மெண்டில் கௌன்ஸிலில் மெம்பராகிய கனம் ஹாமிக் துரை யவர்கள் உபாத்தியாயர்களுடைய தொழிலின் மேன்மையையும், அவர்கள் ஸ்திதியை செம்மை படுத்தும் வகையையும் பற்றிப் பேசினார். பிறகு பென்ஷனில்லாத ஸெகண்டரி ஸ்கூல் உபாத்தியாயர்களுக்கும் ஐரோப்பிய ஸ்கூல் உபாத்தியாயர்களுக்கும் அவர்கள் வேலையை விடும்பொழுது மொத்தமாய் ஒரு தொகை கொடுத்தனுப்பவேண்டுமென்றும், அப்படி கொடுக்க ஒரு பண்டு ஏற்படுத்தி, அதற்கு மேலேசொன்ன உபாத்தியாயர்களும்ஸ்கூல் மானேஜர்களும் சம்பளத்தில் ஒருவீதம் கட்டாயமாய் செலுத்த வேண்டுமென்றும், தீர்மானித்தார்கள். இதோடுகூட நம்முடைய கவர்ன்மெண்டார் பிரைமரி ஸ்கூல் படிப்பை விருத்தி செய்யும்படி லோகல் பண்டுகளையும் முனிஸிபாலிடிகளையும் போதிக்கவேண்டுமென்றும், கவர்ன்மெண்டாரே சில இடங்களில் இலவசமாய் படிப்புச் சொல்லிக் கொடுக்க பிரைமரி ஸ்கூல்கள் ஏற்படுத்தவேணுமென்றும், தீர்மானங்கள் செய்யப்பட்டன. இப்பொழுது மெட்ரிகுலேஷனுக்குப் போகும் பையன்கள் அவர்கள் சொந்த பாஷையில் ஒரு வாசகம் எழுதி அதில் 100க்கு 50 மார்க்கு வாங்கவேண்டும். தற்காலத்தில் சுதேச பாஷைகளில் தகுந்த புஸ்தகங்கள் இல்லாமையால் அவ்வளவு உயர்ந்த மார்க்கு வாங்க முடியாதென்றும் ஆகையால் அந்த மார்க்கை 100க்கு 35 என்று குறைக்கவேண்டுமென்றும் கான்பரன்சில் தீர்மானித்தார்கள்.

DEGREES IN AGRICULTURE.

**விவசாயப் பட்டங்கள்.**—கோயமுத்தூர் அக்ரிகல்சரல் காலேஜில் படிக்கும் மாணாக்கர்கள் தங்கள் காலேஜின் தலைவர் மூலமாகப் போர்டாபீசுக்கு ஒரு விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறார்கள். இவர்களைப் போல பஞ்சாப் மாகாணத்தில் படிப்பவர்களுக்கு அந்த கவர்ன்மெண்டார் பட்டங் கொடுத்து பிறகு அவர்களை பி. எ. பரீக்ஷையில் தேறியவர்களுக்குச் சமமாக நடத்தி உத்தியோகம் கொடுத்துவருகிறார்கள். சென்னையில்மட்டில் இப்படிப்பட்டபட்டம் விவசாயத்தில்தேறியவர்களுக்கு இதுவரையில்கொடுக்கவில்லை. அந்தக்குறைவினால் விவசாய காலேஜில் படிப்பவர்களுக்கு மதிப்பு இல்லாமற் போகிறதென்றும், பி. எ. பரீக்ஷையைவிட, விவசாய விஷயப்பரீக்ஷை, கடினமானதென்றுஞ் சொல்லி தங்களுக்கும் பட்டங்கொடுத்து தங்கள்கோரிக்கையை நிறைவேற்ற வேணுமென்று வேண்டிக்கொண்டிருக்கிறார்கள்.

EDUCATION IN THE MADRAS PRESIDENCY.

**சென்னை ராஜதானியில் படிப்பு**:—நம்முடைய ராஜதானியில் 24,000 ஸ்கூல்களுக்குமேல் இருக்கின்றன. அதில் $1\frac{1}{2}$ லக்ஷம் மாணாக்கர்களுக்கு மேல் வாசிக்கிறார்கள். இதற்காக கோடி ரூபாய்க்கு மேல் சிலவு ஆனதாகத் தெரிகிறது. ஸ்கூலில் வாசிக்கிற பிராயமுள்ளவர்களில் 100க்கு 31பையன்களுக்கு மேலும் பெண்களில் ஏறக்குறைய 6 பேரும் வாசிக்கிறார்கள். சென்னப்பட்டணத்தை மட்டும் எடுத்துப்பார்த்தால் 100க்கு 86 மாணாக்கர்கள் படிப்பதாகத் தெரிகிறது. படிப்புக்காக சிலவான பணத்தை ராஜதானியிலுள்ள ஜனங்களின் பேரில் ஈவித்தால் தலைக்கு $4\frac{1}{2}$ அணா ஆகிறது.

## BOOKS RECEIVED.
## புத்தக வரவு

சென்னை கணேஷ் கம்பனியாரிடத்திலிருந்து :—

**இந்திய தேசாபிமானிகள் சரித்திரம்.**—இத்தலைப் பெயர் சூட்டி, நம் பாரத தேசத்திற்காக சுய நலத்தை நாடாத பக்த சிகாமணிகளில், பன்னிருவர் ஜீவிய சரிதையை எளிய நடையில் வரைந்து ஷையார் படங்களுடன் தொகுத்துளது.

**அனுமான் சிங்கு.**—துப்பு அறியும் பல சிறிய கதைகளடங்கிய அற்புத நாவல்.

**காமாக்ஷி.**—ஆசார சீர்திருத்தத்தைப் புகட்டும் சிறந்த தமிழ் நாட்டின் கதை.

**தமயந்தி.**—ஒரு நவீன நாடகம்.

**ஆனந்தமடம்.**—பங்கிம் சந்தரரால் அருளப்பட்ட வந்தே மாதரம் என்னும் தேசமாதாவின் வந்தனோபசாரத்தைப்புகட்டும் இனிய நூல்.

**சந்திரசேகரன்.**—ஷை. யாரால் இயற்றப்பட்டுள்ள மற்றொரு நூல். இது தேச பக்தியைப் புகட்டும்.

ஜி. ஏ. நடேசன் கம்பெனியாரிடமிருந்து :—

**மஹாமகம்.**—அதன் மகிமை. கும்பகோணத்து ஸ்தல புராணமும், மஹாமகத்தின் மகிமையும் அடங்கியது. விலை 0-4-0.

**விவசாயபோதினி.**—அ. சேதுரீமய்யர் அவர்களால் எழுதப்பட்டது. போர்டு பயிண்டு. 1-4-0.




# புஸ்தகங்கள்!

### மகாபாரதம் சாந்தி பர்வம்

கும்பகோணம் பிரம்ம ஸ்ரீ பாரத சாமாசாரியாரவர்களால்;

எளிய தமிழ் நடையில் மொழிபெயர்க்கப்பட்டு, பிழையறப்பரிசோதித்து நல்ல காகிதத்தில் பெரிய எழுத்தில் அச்சிட்டு காலிகோவில் நன்றாய்ப் பயிண்ட் செய்திருக்கிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| தயாராயிருக்கும் 1-ம் பாகம் .. | ரூ. | 2 | 0 | 0 |
| அச்சிலிருக்கிற 2-ம் பாகம் .. | ,, | 2 | 0 | 0 |
| இரண்டாம் பாகத்துக்கும் சேர்த்து முன்பணம் அனுப்புகிறவர்களுக்கு | ,, | 3 | 0 | 0 |

பாரதத்தில் இப்பர்வமானது பலவகைப்பட்ட தருமங்களையும் உபாக்கியானங்களையும் தெரிவிக்கும் ஸாரமான பகுதியென்பதும் அவற்றைத் தெரிந்து கொள்ளுதல் இரு பாலார்க்கும் பெரும் பயனை விளைவிக்குமென்பதும் யாவரும் அறிந்த விஷயங்கள். வடமொழிப் பயிற்சி யில்லாதவர்கள் மேற் கூறியவற்றைத் தெரிந்துகொள்ளுதற்கு இம்மொழி பெயர்ப்பைப் போன்ற சிறந்த கருவி வேறேயில்லை யென்பது திண்ணம்.

### ஸ்ரீமத் வால்மீகி ராமாயண வசனம்.

பண்டித நடேச சாஸ்திரியாரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, நன்றாய்ப் பார்வையிடப்பட்டு, பிழையறப் பரிசோதித்துப் பதிப்பிக்கப்பட்டது.

ஸ்திரீகளும் சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்து கொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ்வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது. இப்பதிப்பு இதன் ஆதி கிரந்தத்தின் கௌரவத்திற்கும் மகிமைக்கும் தக்கவாறு கனமான உயர்ந்த காகிதத்தில் பெரிய எழுத்தில் பிழையறப் பரிசோதித்து, அச்சிட்டு அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது.

**தயாராயிருக்கும் காண்டங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| பால காண்டம் .. .. | ரூ. | 1 | 12 | 0 |
| அயோத்தியா காண்டம் .. | ,, | 3 | 0 | 0 |
| ஆரணிய காண்டம் .. .. | ,, | 1 | 12 | 0 |
| கிஷ்கிந்தா காண்டம் .. .. | ,, | 1 | 12 | 0 |
| 4 காண்டமும் சேர்த்து வாங்கினால் | ,, | 7 | 4 | 0 |

மற்றய காண்டங்கள் விரைவாய் அச்சிடப்பட்டு வருகின்றன. சீக்கிரம் வெளிவரும்.

# புஸ்தகங்கள்!!

**இதர தமிழ்ப் புத்தகங்கள்.**

நன்றாய்ப் பார்வையிட்டு நல்ல காகிதத்தில் தெளிவாய் அச்சிட்ட சிறந்த பதிப்பு

### மூவர் தேவாரம்.

பண் முறை 1044 பக்கம் ரூபா 3.

இப்பதிப்பில் (1) சம்பந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவர்களின் சரித்திரக் குறிப்பும், (2) தேவார வரலாறும், (3) தேவாரப்பண அட்டவணையும், (4) தேவாரப் பாடல் பெற்ற ஸ்தல அகராதியும், (5) தேவாரஸ்தலங்களுள்ள நாடுகளின் விபரமும், (6) அட்டவீரட்டானங்களைக் குறிப்பிக்கும் செய்யுளும், (7) தேவாரப் பொதுப் பாடல்களின் பக்க அட்டவணையும், (8) தேவார வைப்பு ஸ்தல அட்டவணையும், (9) காரைக்காலம்மையார் அருளிச் செய்த மூத்த திருப்பதிகமும் நூதனமாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன.

### நாலாயிர திவ்யப் பிரபந்தம்

**640 பக்கம், ரூபா 3—0—0.**

இப்பதிப்பு (1) ஆழ்வார்களின் கால வைபவக்குறிப்பும். (2) ஆழ்வார்கள் அருளிச் செய்த பிரபந்தங்களின் அட்டவணையும், (3) ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திவ்விய தேசங்களின் அட்டவணையும், (4) அந்த தேசங்களின் வைபவக் குறிப்பும், (5) பாசுரங்களின் முதலடி அகராதியும் (6) பாடபேதக் குறிப்புகளும் சேர்த்து பலபிரதிகளுடன் ஒத்திட்டுபார்த்து, நன்றாய் அச்சிடப்பெற்றுளது.

### மனுதர்ம சாஸ்திரம்.

2747 கிரந்த சுலோகங்களும் அவைகளின் தமிழ் மொழி பெயர்ப்பும் 560 பக்கம், ரூபா 2 4 0.

ஸ்திரீ புருஷ சாமுத்ரிகாலட்சணம் ரூபா 1 0 0.

### வேதாந்த விஷயமான புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| வாசுதேவ மனனம் .. .. | 1 | 0 | 0 |
| சிவபோகசாரம் & சிவஞானவிளக்கம் .. | 0 | 2 | 0 |
| சுகர் கைவல்லியம் .. .. | 0 | 2 | 0 |
| வைராக்கிய சதகம் .. .. | 0 | 2 | 0 |
| ஜன்மாந்திரம் .. .. .. | 0 | 2 | 0 |
| வள்ளாலர் சாஸ்திரம் .. .. | 1 | 8 | 0 |
| மகாராஜா துறவு .. .. | 0 | 6 | 0 |
| தாயுமானவர் பாடல் .. .. | 0 | 12 | 0 |
| வேதாந்த போதினி .. .. | 0 | 8 | 0 |
| பட்டணத்தார் பாடல் .. .. | 0 | 2 | 0 |
| குறள் .. .. .. | 0 | 4 | 0 |

**V. KALYANARAMA IYER & Co.,**

**Booksellers, 10, Esplanade, MADRAS.**

**வி. கல்யாணராமய்யர் அண்டு கோ.,**

புக்ஸெல்லர்ஸ், 10, எஸ்பௌனேட், மதராஸ்.

## SCIENTIFIC NOTES.
## சாஸ்திரீயக் குறிப்புகள்.

—:o:—

A Chemical Club at Calcutta.

**கல்கத்தாவில் ஒரு ரஸாயன சபை.**—கல்கத்தாவில் இப்போது புதிதாக ஓர் ரஸாயன சபை ஏற்பட்டிருக்கிறது. அதில் எழுபது ரஸாயனசாஸ்திரிகள் சேர்ந்திருக்கிறார்கள். டாக்டர். பி. கே. ராய் என்பவர் இச்சபையில் முக்கியஸ்தர்.

The Usefulness of the Fly.

**ஈக்களின் உபயோகம்.**—சிலர் ஈக்கள் அதிகதொந்தரவு உண்டுபண்ணுகிற ஜெந்துக்களென்று எண்ணுகிறார்கள். பிளேக்வியாதி ஈக்களாலேயே ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பரவுகிறது என்பது சிலர்கொள்கை. ஆனால் ஈக்கள் சாதாரணமாய் காற்றில் உள்ள அநேக விஷவஸ்துக்களையும் அசுத்தத்தையும் போக்குகின்றனவென்று ஒரு இடாலி தேசத்து டாக்டர்சொல்லுகிறார். எங்கே அதிக ஈக்கள் இல்லையோ, அங்கேவியாதி அதிகம் நிரம்பியிருக்கின்றதாம். ஆகவே இயற்கையில் மனிதன் சரீரஸௌக்கியத்திற்கே, ஈக்கள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன என்று கொள்ள வேண்டியிருக்கிறது.

The Dazzling of Light.

**கண் கூசுதல்.**—சூரியனைப் பார்த்தால் மிகவும் கண் கூசுகின்றது. ஏனென்றால் அதன் வெளிச்சம் கடுமையாயிருப்பதோடு கூட அளவற்றதாயும் இருக்கிறது. அநேக நட்சத்திரங்கள் சூரியனைப் போல் பிரகாசமுள்ளவைகள் தான். ஆயினும் அவைகளை ராத்திரி மட்டும் பார்க்கலாம். அப்படி எவ்வளவு நாழிகை பார்த்தாலும் கண் கூசுவதில்லை. ஏனென்றால் அவைகள் வெகு தூரத்தில் இருப்பதால் அவைகளிடத்திலிருந்து வரும் வெளிச்சம் பரிமாணத்தில் குறைந்திருக்கிறது. ஆகையால் கண்ணுக்குத் தொந்தரவு கொடுப்பதில்லை. சூரியனையே ஒரு சிறு துவாரத்தின் வழியாவது அல்லது புகை ஏற்றிய கண்ணாடியின் வழியாவது பார்த்தால் கண் கூசுகிறதில்லை. சூரியனுடைய ஜோதி உள்ளதுபோல் இருந்தாலும் சிறிய துவாரம் வழியாய் வருவதாலும் புகையடைந்த கண்ணாடியால் வருவதாலும் அந்த காந்தியின் பரிமாணம் குறைந்து விடுகிறது. அதனால்தான் கண் கூசாமல் பார்க்கப்படுகிறது. ஆகையால் ஒரு விளக்கின் ஒளி கண்ணுக்கு கூசுவதும் கூசாததும் அதன் காந்தியின் அளவைப் பொறுத்தது. அதனால்தான் அவரவர்கள் கண்ணுக்கு வேண்டிய வெளிச்சத்தின் பிரமாணத்துக்குத் தக்கபடி வெள்ளைச் சிம்னியோ, நீலசிம்னியோ, கெரொஸின் விளக்குகளுக்கு போடுகிறார்கள்.

Artificial Sapphires.

**உற்பத்தி செய்யப்பட்ட நீலக்கல்.**—உலகத்தில் கெம்பு, பச்சை, முதலியவைகள் இயற்கையாய் பூமியில் அகப்படுகின்றன. கொஞ்ச காலமாய் சில ரஸாயன சாஸ்திரிகள் அசல் கெம்பைப்போல் சூது கெம்புகளை செய்து அவைகள் வியாபாரமாவது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இது வரையில் நீலக்கல் மட்டும் அவர்களால் செய்ய முடியாமல் இருந்தது. இப்பொழுது அதுவும் ஸாத்தியமாகி விட்டதாம்.

பிரான்ஸ் தேசத்தில் எம். பாரிஸ் என்னும் ஒரு சிறு வயதுள்ள ரஸாயன சாஸ்திரி சில வஸ்துக்களோடு உலோகங்களைச் சேர்த்து உருக்கி நீலக்கல் செய்து விட்டாராம். அந்த நிலக்கல்லுக்கும் அஸல் நீலக்கல்லுக்கும் வித்தியாசம் கண்டு பிடிப்பது சிரமமாம்.

The usefulness of chemistry.

**ரஸாயன சாஸ்திரத்தின் உபயோகம்.**—"பீட்" என்னும் ஒருவகைக்கிழங்கிலிருந்து ஜர்மனி, ஆஸ்டிரியா முதலிய தேசங்களில் சர்க்கரை எடுத்து அது ஏராளமாய் இந்தியாவுக்கு வருவது அநேகருக்குத் தெரிந்திருக்கலாம். இந்தக்கிழங்கிலிருந்து சர்க்கரை எடுப்பது இப்பொழுது உலகத்தில் ஒருபெரிய கைத்தொழிலாக இருக்கிறது. 1905-ம் வருஷத்தில் உலகத்தில் சுமார் 582 லக்ஷம் பாரத்திற்குமேல் சர்க்கரை செய்யப்பட்டதாகவும் அதில் 313லக்ஷம் பாரம் சர்க்கரை மேற்சொல்லிய பீட் கிழங்கிலிருந்து எடுக்கப்பட்டதாகவும் கணக்கிட்டிருக்கிறார்கள். 1836-ம் வருஷத்தில் சுமார் 80 பாரம் கிழங்கைப் போட்டு $4\frac{1}{2}$பாரம் சர்க்கரை செய்துவந்தார்கள். இந்த கிழங்குகளைப் பொறுக்கிப்பரிசோதித்துப் பார்த்து பயிர்செய்வதனால் $4\frac{1}{2}$ பாரம் சர்க்கரை செய்ய $33\frac{1}{2}$ பாரம் கிழங்குபோதுமென்று 1894-ம் வருஷத்திலேயே கண்டுபிடித்தார்கள். இப்பொழுது இன்னும் கிழங்கை குறைத்துப் போட்டாலும் போதுமாம். ஆகையால் விவஸாய பொருள் விளைவிப்பதற்கு ரஸாயன சாஸ்திரம் தெரிந்தால் மிக நல்லதென்று ஏற்படுகிறது.




## வந்தே மாதரம்.

1. மிகவும் மேலான பெங்களூர் சால்வை $58\frac{1}{2}'' \times 112\frac{1}{2}$ 1-இ 4—8—0
2. உயர்ந்த கான்பூர் சால்வை $56'' \times 110''$ 1-இ .. 4—6—0
3. நேர்த்தியான தாரிவால் சால்வை $54'' \times 108''$ 1-இ 4—4—0
4. நிகரற்ற வெள்ளை காசி சால்வை $48'' \times 100''$ 1-இ .. 2--14—0
5. கெடிதமான சிறந்த வெள்ளை துப்பட்டாக்கள் 1இ 0—10—0முதல் 1—8—0 வரையில்.
6. அதி நேர்த்தியும் மேலுமான கம்பளி பனியன் 1-இ .. 2—8—0
7. வெள்ளை சாதா ட்வில் ஷர்டுகள் 1ம் தரம் 1 டஜன் .. 12—0—0
8. வெள்ளை சாதா ட்வில் ஷர்டுகள் 2.ம் தரம் 1 டஜன். .. 11—4—0
9. வெள்ளை சாதா ட்வில் ஷர்டுகள் 3.ம் தரம் 1 டஜன். .. 10—8—0
10. கோடு போட்ட நீலக்கோடு ட்வில் ஷர்டு. 1 டஜன். .. 12—0—0

ஒவ்வொரு ஆர்டருக்கும் காலண்டர் இனாம்.

**சுதேச வஸ்து வர்த்தகசாலை,**

1\. 199, தங்கசாலை வீதி, சென்னை.

SARASVATHY & Co.,

153, Mint Street, Madras.

## இதின் பெயர் பிரசன்டன்ஸ் வாட்சு.

நிக்கல் சில்வர் சுவிஸ்மேய்டு வாட்சு, ஓபன் கேசு, கிலஸ் பேடண்டு வாட்சு, கம்பன் ஸேஷன்ஸ், பியாஸின்ஸ் அதிக வளைவு ஆகவும் 5-வருஷம் காரண்டியாகவுமிருக்கும். வி. பி. சார்ஜு உள்பட விலை ரூபா 5—0—0. இந்த வாட்சு வரும் மார்ச்சுமாதம் 31-ந்தேதிக் குள்ளாக 1,500 வாட்சுகள் விக்கிரயம் ஆகிறதற்குள்ளாகத் தெரிவித்துக் கொள்பவருக்கு அடியில் கண்ட சாமான்கள் 10-ம் விலையில்லாமல் இனாமாக அனுப்பப்படும்.

கனவான்களே, உடனே எழுதி அனுப்பவும்.

**இனாம் சாமான் விபரம்.**

சுகந்த மூக்குத்தூள் புட்டி 1, ஜர்மன் பொடி டப்பி 1, படுக்கை அறை விளக்கு 1, ஷோக்கு மோதிரம் 1, கடியாரச் சங்கிலி 1, ஊசி வைக்கும் பெட்டி 1, கண்ணாடி 1, ஹேர் ஸ்பிரிங்கு 1, முகம் பார்க்கும் கண்ணாடி 1, மூக்குக் கண்ணாடி 1.

**சரஸ்வதி அண்டு கோ,** 153, தங்கசாலை வீதி,

4\. மதராஸ்.

**அதிக சகாயம்!** **புதிய சரக்குகள்!!**

## காசிப் பட்டு பீதாம்பரங்கள்.

**நேரான நெசவுகாரர்களிடமிருந்து:**

| | |
|---|---|
| பட்டு சேலைகள், | ஜரிகையினால் பூவேலைகள் செய்ததும், |
| ரவிக்கைகள், | சாதாவானதும், |
| துப்பட்டாக்கள், | வெண்பட்டு வேஷ்டிகளும், |
| சால்வைகள், | அங்கவஸ்திரங்களும், |
| பஸ்கானு அல்லது பிள்ளை வேஷ்டிகள், | சவுக்கங்களும் |
| பலவித நிறங்களில் ஜரிகை போட்டது, | உடுப்புத் துணிகளுக்கு வேண்டிய தினுசுகளும், |

நாங்கள் நேராக நெசவுகாரரிடமிருந்தே மிகவும் சகாய விலைக்கு அனுப்புகிறோம். விலை ஜாபிதா இனாமாக அனுப்பப்படும்.

**மானேஜர்,**

**பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.**

Manager, SILK PITAMBER Co.,

13\. *Benares City.*

**THE SWADESHI WAREHOUSE,**

**MADRAS.**

சரிகையிலும் பட்டுக்கரையிலும் துப்பட்டாக்கள், தோவத்திகள், புடவை, ரவிக்கை, மல் பீஸ்கள், லாங்கிளாத், டுவில் முதலியன பல விடங்களினின்றும் வந்துகொண்டிருக்கின்றன. தினுசுகளை நேரில் பார்வையிட்டு பொறுக்கி யெடுப்பதுடன் விலை அதிக நயமாக கொடுக்கப்படும். நேரில் வந்து பார்த்தால் எல்லாம் விளங்கும்.

சோப்பு தினுசுகள், தலை மயிர் தைலங்கள், வாசனை தினுசுகள் முதலிய சுதேசி சாமான்கள் ஏராளமாக யிருக்கின்றன.

சந்திரமாளதித் தைலம், பிளோரல்ஆயில் என்கிற சிறந்த தைலங்கள் கைவச மிருக்கின்றன. மிக நேர்த்தியானவை.

## சுதேசி வேர்ஹவுஸ்.

8\. 1, தம்பு செட்டி வீதி, மதிராஸ்.

## MEDICAL NOTES.
## வைத்திய குறிப்புகள்.

SALT TREATMENT OF CHOLERA.

**உப்பு விஷபேதிக்கு மருந்தாவது.**—விஷபேதி அநேகஇடங்களில் பலசமயங்களில் வந்து விசேஷ ஜனங்கள் மடிந்துபோகிறார்கள். வியாதிகண்டபிறகு வைத்தியம் செய்வதைவிட அதுவாராமல் தடுத்துக் கொள்ள சிலவழிகள் உண்டு. கல்கத்தாவில்பேதி கண்டவர்கள் உப்பு ஜலத்தைக் குடித்து சொஸ்தமாயிருக்கிறார்களாம்.

மைசூர் பக்கங்களில் உப்பு விற்கும் உப்புக்குறவர்களுக்கு, பேதிவிசேஷமாய்க் காண்பதில்லையாம். அப்படிக்கண்டால் அவர்கள் நிறைய உப்புப்போட்ட தண்ணீரில் வெற்றிலையைப் போட்டுக்காய்ச்சி அந்த கஷாயத்தைக் கொடுத்து சொஸ்தப்படுத்திக் கொள்ளுகிறார்களாம். சாதாரணமாய்ப் போட்டுக் கொள்ளும் உப்பைவிட இரண்டுமூன்று பங்கு உப்புச்சேர்த்துக் கொண்டுவருவதால் இந்த வியாதிவாராமல் தடுத்துக் கொள்ளலாமெனச் சொல்லுகிறார்கள்.

DISPOSAL OF DRAINAGE WATER.

**சாக்கடை ஜலத்தின் விநியோகம்.**—கிராமாந்தரங்களில் சாக்கடை ஜலமானது வீட்டின் பின்சுவரையொட்டியுள்ளதோர் குழியில்விழுவது வழக்கம். அது நல்லதன்று. அப்படிச் செய்வதனால் சாக்கடை ஜலம் தேங்கி அழுகிக் காற்றையும் பூமி ஜலத்தையும் அசுத்தப்படுத்தும். சாக்கடை நீர் கொல்லையிலுள்ள மரம் செடிகளுக்குப் பாயும்படி செய்தால் அது வேர்களில் ஊறி மரஞ் செடிகளைச் செழிப்பிக்கும். அதுவும் சுத்தியாகும்.

PRESERVING THE TEETH AND GUMS.

**பற்களையும் ஈறுகளையும் பாதுகாத்தல்.**—அநேகம்பேர் தம் பற்களை இழப்பதற்கு முக்கியமான காரணம், பல்லை நன்றாய்த் தேய்க்காததேயென்றும், மற்றெதையும் விட இதுவே பெரிய காரணமென்றும் தந்த வைத்திய சாஸ்திரியொருவர் சொல்லுகிறார். பற்கள் நன்றாயிருக்க வேண்டுமானால் சாப்பாட்டுக்குப் பிறகு ஒவ்வொரு வேளையும் அவைகளைச் சுத்தப்படுத்த வேண்டும்; தூங்கப் போவதற்கு முன்னும் சுத்தப்படுத்தவேண்டும். காலையிலும் சாயங்காலத்திலும் கொஞ்சம் உப்புப்போட்ட ஜலத்தைக்கொண்டு குழப்பிக் கொப்புளிப்பது நல்லபத்தியம். இதனால் ஈறுகள் கெடாமலிருக்கும். ஈறுகள் கெடாமலிருந்தால் பற்கள்கெடாமலிருக்கும். பல் தேய்ப்பது அநேகர் நினைக்கிறபடி ஒரு கோடிமுதல் மற்றொரு கோடிவரையில் நீளமாய்த்தேய்ப்பதன்று; மேலுங்கீழுமாய்த் தேய்க்கவேண்டும். மேல் வரிசைப் பல்லை ஈறு இருக்கும் அடியிலிருந்து கீழ் நோக்கித் தேய்க்கவேண்டும்; கீழ் வரிசைப் பற்களை அடியிலிருந்து மேல் நோக்கித் தேய்க்கவேண்டும். இது அல்லாமல், பல்லின் உட்புறத்தை முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். ஏனென்றால், அந்நியபதார்த்தங்கள் அடையக்கூடிய இடம் அதுவே. பற்களின் இடையிலுள்ள சந்துகளில் தங்கி யிருக்கக்கூடிய அழுக்கு முதலிய பதார்த்தங்களைத் துடைத்தெறிவதற்காக மிருதுவான பஞ்சு கொஞ்சம் வைத்துக் கொள்ளவேண்டும். அது மருந்துக்கடைகளில் கிடைக்கும். பல்தேய்க்கும் 'புருஷ்' கெட்டியாயிருக்கக் கூடாது. துவளாத குச்சிகள் தந்தத்தைக் கீறக்கூடும், ஈறுகளைக் கெடுக்கக்கூடும். நல்ல உத்தமமான பற் குச்சிகளையே உபயோகிக்கவேண்டும். 'ஆஸிட்' என்னும் புளிப்புகளை உபயோகிப்பதனால் பற்கள் மெத்தனவாகும், சொத்தைப்படும்.

SUGAR CANE VINEGAR.

**கரும்புக் காடி.**—இது ஹஸ்தி ஜுரங்களைப் போன்ற நாள்பட்ட காய்ச்சலை தணிக்குமாம். ஒருவருக்கு அடிக்கடி ஜுரம் அடித்து தேகமெல்லாம் இரத்தம் குறைந்து எலும்பெடுத்திருக்கையில் கரும்புக் காடியை பழுக்கக் காயவைத்த தட்டையான ஒரு இரும்புத் துண்டத்தில் ஊற்றி அந்த ஆவியைப் பிடித்தாராம். இப்படி இரண்டுபோது செய்ய அவருக்கு சென்ற பதிமூன்றுவருஷகாலமாய் ஜுரம் வராமல் சௌக்கியமாயிருப்பதாக தெரிய வருகிறது.

STRAINING THE EYE.

**கண் உறுத்துப் பார்த்தல்.**—தூர்ப்பலம் மேலிட்டுப் பசிதீவனம் இல்லாமற்போவதும், இரப்பை கொதிப்பெடுத்துக் குமட்டுவதும் வாந்திசெய்வதும் கண் உறுத்தும்படியாய்க் கஷ்டப்பட்டுப்பார்ப்பதனால் உண்டாகும் துன்பங்களென்று இப்பொழுது கண்டறிந்திருக்கிறார்கள். தகுந்த மூக்குக்கண்ணாடிகளை உபயோகிப்பதனால் அந்த வியாதிகளை நிவர்த்தி செய்யலாம்.



ENCOURAGE GOODS MANUFACTURED IN INDIA.

# S. VAIDYA & Co.,

*HEAD OFFICE: GEORGE TOWN, MADRAS, E.*
*BRANCHES: KUMBAKONAM AND TINNEVELLY.*

General Merchants, Commission Agents and Wholesale dealers in Indian made goods, and Sole Agents in Southern India for the Alembic Chemical Works Co. Ltd.,
(BOMBAY AND BARODA)
AND FOR THE
R. Y. Kambles' Umbrella and Candle Stand Factory, Poona.

**விலை சகாயமானது!** **கவனியுங்கள்!!**
**கவனியுங்கள்!** **மேன்மையானது!!**

பேடண்டு மருந்துகள், அத்தர்கள், லவண்டர், உடிகோலான், பிரசித்தி பெற்ற குளிர்ச்சி தரக்கூடிய **கூந்தல் தைலங்கள்**, பல்பொடி, ஷர்பத்துகள், **பன்னீர்கள்**, காலரா முதலிய தொத்து வியாதிகளை நிறுத்தக்கூடிய பினயில், கார்பாலிக் பௌடர்கள், பிரெஞ்சு பாலீஷ், பூட்ஸ் பாலீஷ், சுத்தி செய்யப்பட்ட ஆமணக்கெண்ணெய், சோப்புகள், மெழுகுவத்தி, ஷை **பித்தளை ஸ்டாண்டுகள்**, கெட்டிக் **குடைகள்**, நெருப்புப் பெட்டிகள், ஸ்டீல் டிரங்குகள், ஷை கைப்பெட்டிகள் முதலிய பலவித சாமான்களும் எங்களிடம் கிடைக்கும்.

**எஸ். வைத்தியா அண்டு கம்பெனி,**
319, தம்பு செட்டி வீதி, மதிராஸ்.

11.

**GANESH & Co., Thambu Chetty Street, Madras.**

# தேசாபிமானிகள் சரித்திரம்.

விலை அணா 12,

இந்திய தேசத்திற்காக சுயநலத்தை நாடாது தொண்டு புரியும் பக்தசிகாமணிகளில், பன்னிரு மகான்களின் ஜீவிய சரிதையை, இனிய செந்தமிழில் வரைந்து நல்ல கடிதத்தில் சிறந்த எழுத்தில் பதிப்பித்து, அவர்களின் உருவப்படத்துடன் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

## அமலாதித்யன்.

'ஹாம்லெத்' யென்னும் நாடகத்தை அநுசரித்து ம-ா-ா-ஸ்ரீ பி. சம்பந்தமுதலியாரால் இயற்றப்பட்டது. விலை ரூ. 1-0-0.

**இதர தமிழ்ப் புத்தகங்கள்.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதிகெட்ட மனைவி | ... 1 | 0 | 0 | போஜ சரித்திரம் | ... 1 | 8 | 0 |
| தலையணி மந்திரோபதேசம் | ... 0 | 8 | 0 | மனோகரன் | ... 0 | 12 | 0 |
| ஆனந்த மடம் | ... 0 | 7 | 0 | சாரங்கதாரா | ... 0 | 12 | 0 |
| சந்திரசேகரன் | ... 0 | 8 | 0 | காமாட்சி | ... 0 | 8 | 0 |
| அநுமான்வலிங் | ... 0 | 12 | 0 | இரண்டு நண்பர்கள் | ... 0 | 12 | 0 |
| | | | | மகா மகம் அதன் மகிமை | ... 0 | 4 | 0 |

5. **கணேஷ் கம்பெனி**, தம்பு செட்டி தெரு, சென்னை.

# PAGE FOR GIRLS.

## பெண்களுக்கான பக்கம்.

EXTRAVAGANCE IN MARRIAGE.

**விவாகாதிகளில் வீண் சிலவு.**—சென்னையில் சென்ற டிசம்பர் மாதத்தில் கூடிய பாரத மஹில பரிஷத்சபையில் கூடலூர் ஸ்ரீமதி.ருக்மணியம்மாள், விவாகாதி வீண் சிலவைப்பற்றி உபந்நியாஸம் செய்தார்கள்.

"வளவனாயினும் அளவறிந்தழித்துண்" என்பதைச்சிந்தியாமல் நம்மவர் விவாக காலங்களிலும் மற்ற சுபாசுப காலங்களிலும் கை கொள்ளாதபடி மிதமிஞ்சி வாரி வாரி வீண் சிலவு செய்து பின் இருக்க இடமில்லாமலும் உடுக்கத் துணியில்லாமலும் உண்ணச்சோறு இல்லாமலும் பரதேசியாய்ப் போவதை நாம் நேரில் எங்கும் பார்க்கிறோம். இப்படி வீண் சிலவு செய்வதற்குக் காரணம் என்னவென்று விசாரித்தால். சாஸ்திரத்திற் சொல்லாவிட்டாலும் முன்னோர்கள் இப்படிச்செய்திருப்பதால் நாமும் அதையே அனுஷ்டிக்க வேண்டும் என்று சிலர் செய்கிறார்கள். மற்றவர்கள் பெருமையையும் டாம்பீகத்தையும் உத்தேசித்து வீண்சிலவு செய்கிறார்கள். முன்னோர்கள் செய்தபடியே நாமும் செய்வோம் என்பதற்கு முன் இருந்த காலம் போல் இப்போது இருக்கிறதா? இல்லையே. சமய உசிதமாய் காலத்தை அனுசரித்து நடவாமலும் முன் பின் யோசனை இல்லாமலும் கண்டது காக்ஷி என்றதையே மேன்மையாகக் கொண்டு வீணாக தாளமேளத்திலும் மத்தாப்புத் தீவட்டிகளிலும் எதிர் ஜாமீனிலும் ஏராளமாய்ச்சிலவிடுகிறார்கள். இது யாருக்குப் பிரீதி? இப்படி வீண் சிலவு செய்து லக்ஷாதிகாரி என்ற பதவியை விட்டு பிக்ஷாதிகாரியாய் பிச்சை யெடுக்க வழி தெரியாமலும், மனம் துணியாமலும் வீணாய்ப் பரிதபிக்கிறார்கள். இப்படி வீண் சிலவு செய்கிறதை நிறுத்தி அந்தப் பணத்தை தனக்காவது தன் பெண் பிள்ளைகளுக்காவது ஐவேசியாக வைத்துக் கொண்டால் எவ்வளவு நலம்.

குடித்தன ஸ்திரீகள் இது விஷயத்தில் தைரியமாய் கொஞ்சம் சிரமம் எடுத்துக் கொள்ளுவார்களானால் எத்தனை குடித்தனங்களுக்கோ க்ஷேமம் உண்டாகும்.

FEEDING THE CHILD.

**குழந்தைக்கு சாதம் ஊட்டுதல்.**—சிறு குழந்தைகள் காலா காலத்தில் சாப்பிடாமலும், சாப்பிடும் காலங்களில் போராட்டம் செய்வதும் நாம் எல்லோரும் பார்த்திருக்கிறோம். பொறுமையுள்ள தாயாராயிருந்தால் குழந்தைகளை சாப்பிடச்செய்ய நல்ல வார்த்தைகளைச்சொல்லுவாள். தோ தோ என்று நாயைக்கூப்பிட்டுக் காட்டுவாள். அப்பா பிடி, அம்மாள்பிடி, தாத்தாபிடி என்றுசொல்லுவாள். தன்குழந்தைக்கு எதன்பேரில் ஆசையோ அதை எடுத்துச் சொல்லியோ, காட்டியோ, குழந்தையின்பிடிவாதத்தை மறக்கடித்து சாதத்தை ஊட்டிவிடுவாள். பொறுமையில்லாத தாயானால் போராடும் குழந்தையின் முதுகில்ஒரு அடிகொடுத்து அழ அது திறந்தவாயில் சாதத்தைத் திணித்து விழுங்காவிட்டால் இன்னும் வேண்டியமட்டும் அடித்து குழந்தையை சாப்பிடும்படி செய்வாள். அப்படி இல்லாவிட்டால் சிலதாய்கள் குழந்தையின்பேரைச்சொல்லி "பூச்சாண்டி புடிச்சுக்கோ" என்றும் "பூனை கடி" என்றும் சொல்லி குழந்தைகளை பயமுறுத்தி சாதத்தை ஊட்டுவாள். இப்படிக்குழந்தைகளை அடித்துப் பயமுறுத்திச் சாதம்போடுவதில் கொஞ்சங்கூட பிரயோஜனமில்லை. அப்படிப் போட்ட சாதம் ஜீரணம் ஆகாது. உடம்பிலும் ஒட்டாது. இதை பிரத்தியக்ஷமாகப் பார்த்திருக்கிறார்கள்.

DISCOVERIES ABOUT DIGESTION.

**ஜீர்ணத்தைப்பற்றி புதிதாய்க் கண்டறிந்த விஷயங்கள்.**—"எக்ஸ்-ரே" என்னும் ஜோதிஸ் கிரணத்தைக் கொண்டு சிலநாளைக்குமுன் செய்த பரீக்ஷைகளில் சில விசித்திரமான விஷயங்கள் வெளியாயிருக்கின்றன. சில ஆஹாரங்களை ஜீர்ணிப்பதற்கு இத்தனைநேரம் வேண்டியிருக்கிறதென்று அந்த எக்ஸ்-ரேயினால் தெரிந்துகொள்வதற்காகுமென்று டாக்டர் வால்ட்டர் கானன் என்பவர் சொல்லுகிறார். ஜீர்ணம் கிரமமாயும் நன்றாயும் ஆகவேண்டுமானால் அது நடந்து வருகையில் இருக்கிற மனதின் தன்மையைப் பொறுத்திருக்கிறதென்று அந்த டாக்டர் சில பிராணிகளைப்பரீக்ஷித்துப்பார்த்துச் சொல்லுகிறார். இப்படி ஒரு பிராணியைப் பரீக்ஷித்துப்பார்க்கையில் அதைப்பயமுறுத்தினாலும் அல்லது அதற்கு ஏதாவது போராட்டம் நேர்ந்தாலும் அதன் வயிற்றில் ஜீர்ணகாரியம் கிரமமாய் நடக்காமல் நின்றுபோகிறதாம். இப்படி எக்ஸ்-ரேயைக்கொண்டு தெளிவாய்க் காணலாம். மனிதனுக்கும் இதேகதியே. அதிகமாய்க் கோபதாபங்கள் கொண்டவனுக்கும் திகிலடைந்தவனுக்கும் ஆஹாரம் ஜீர்ணமாகாமல் வெகுநேரம் இரைக் குடலில் தங்கியிருக்கிறதென்று கண்டறிந்திருக்கிறார்கள்.




சுதேச இந்தியன்
காபிப் பொடி கம்பெனி.

நம்முடைய இந்தியன் காபிப்பொடி மிக உயர்ந்தது. மற்றெல்லாவற்றிலும் சிறந்தது. மனதிற்கு திருப்தியை விளைவிக்கக்கூடியது. நம்மைத்தவிர இதில்பிரசித்திபெற்றவர்இல்லை.

I-ம் தரம் இந்தியன் மொச்ச காபி
I பவுன் டஜன் I-க்கு ரூபா 12 0 0
2-ம் தரம் மஞ்சள் லேபில் காபி
I பவுன் டஜன் I-க்கு ,, 9 0 0
3-ம் தரம் நீர்க்காவி லேபில் காபி
I பவுன் டஜன் I-க்கு ,, 7 8 0

ஒரு பவுன், அரைபவுன், கால்பவுனாக டப்பிகளில் தெரிந்தவர்களைக்கொண்டு பாக் செய்திருக்கிறது.

முக்கியமான ஸ்டேஷன்களில் தகுந்த ஏஜண்டுகள் தேவை.

வியாபாரிகளுக்கு தகுந்த கமிஷன் கொடுக்கப்படும். மற்ற விவரங்களை அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
இந்தியன் காபிப்பொடி கம்பெனி,
3. 9/17, லிங்கி செட்டித் தெரு, மதுராஸ்.

S. SANJEEVI BROTHERS,
GEORGETOWN, MADRAS.

அநேக துணி தினுசுகள்.

| | |
|---|---|
| கோயம்பத்தூர், | வாசனை எண்ணெய்கள், |
| கள்ளிக்கோட்டை, | கடுதாசு, |
| பெங்களூர் (செக்ஸ்), | பென்சல்கள், |
| தூளிவலை. (Hammock), | பயிர்த் தொழிலுக்கு வேண்டிய சாமான்கள், |
| பனியன் ஷர்டுகள் (டிவில், லாங்கலாத்), | இரப்பரினால் செய்யப்பட்ட முத்திரைகள், |
| கெடியாரம், | ஜர்மன் வெள்ளியினால் செய்யப்பட்ட நகைகள், |
| அல்யூமினியப் பாத்திரங்கள், | ஆயுர்வேத மருந்துகள், |
| வெங்கலப்பாத்திரங்கள், | பள்ளிக்கூடத்திற்கும் இதர வேதாந்த புத்தகங்கள், |
| விளக்குகள், | கவர்மெண்டு புத்தகங்கள், |
| சிம்மிணி, | |
| மெழுக்கு வத்தி, | |
| சோப்புகள், | |
| வாசனை தினுசுகள், | |

மேற்கண்ட சாமான் நம்மிடம் கிடைக்கும்.

டாக்டர் பி. கெ. ஸென் என்பவரால் செய்யப்பட்ட முதல்தரமான **சுகந்த மூக்குத்தூள்** விலை அணா. 4.

2. **எஸ். சஞ்சீவி பிரதர்ஸ், ஜார்ஜ் டவுன், மதராஸ்**

# இராமாயண வினா விடை.

## இரண்டாம் பதிப்பு.

சப்த காண்டங்களும், இராமாயணத்தின் உட்பொருளும் அடங்கியன. விஸ்தரித்தும் ஒழுங்குபடுத்தியும் எழுதப்பட்டிருக்கிறது. யாவராலும் மிகவும் அருமையான புத்தகமென சிலாகிக்கப்படுகிறது. அநேக பள்ளிக்கூடங்களில் மத ஸம்பந்தப்பட்ட பாடப்புத்தகமாகவும் வைக்கப்பட்டிருக்கிறது. விலை அணா 12.

## ஸ்ரீ மஹா பாரத வினா விடை.

முதல் பாகம்—இதில் ஆதி, ஸபா, ஆரண்ய, விராட, உத்தியோக பர்வங்கள் அடங்கியன. விஷயங்கள் ஒன்றும் குறையாதபடி மிகவும் இனிய செந்தமிழ் நடையில் சிறுவர், சிறுமிகள்கூடப் படித்துத் தெரிந்துகொள்ளக்கூடிய வண்ணம் எழுதப்பட்டுள்ளது. விலை அணா 12.

## ஆரியமத உபாக்கியானம்.

இதில் இதிஹாஸம், புராணம் முதலானவைகளிலிருந்து எடுத்தெழுதிய 50 இனிய கதைகள் கொண்டது. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு நீதியை நன்கு விளக்குகிறது. இப்புத்தகமும் அநேக பாடசாலைகளில் பாடப்புத்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது. விலை அணா 2.

## கிரிஸெல்டா அல்லது பொறுமையுள்ள மனைவி.

இப்புத்தகம் பெண்பாலார் அவசியம் வாசிக்கக்கூடிய புத்தகங்களில் ஒன்று. இப்புத்தகத்தில் ஒரு பெண் தன் கணவனிடம் நடந்து கொள்ளுதலில் மிகவும் சிலாகிக்கத்தக்க மாதிரியை நன்கு விளக்கிக் காட்டியிருக்கிறது. விலை அணா 3.

9. ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மைலாப்பூர், மதராஸ்.

# PAGE FOR BOYS.

## பையன்களுக்கான பக்கம்

PAPER PULP.

**கடுதாசி செய்வதற்கான மசியல்.**—கடுதாசி செய்ய மரத்தின் நார் முக்கியமாய் வேண்டியது. மரங்கள் விசேஷமாய் இல்லாத விடத்தில் மூங்கில் பட்டையையும், தோலையும் உபயோகப் படுத்துகிறார்களாம். கருப்பஞ் சக்கை கூட கடுதாசி செய்ய உபயோகப்படுகிறதாம்.

THE SHAPE OF THE EARTH.

**பூமியின் வடிவு.**—நாம் வசிக்கும் பூமியை ஒரு கிரகம் என்று சொல்வார்கள். கிரகங்கள் அநேகம் இருக்கின்றன. ஆயினும் அவைகளில் முக்கியமானவை ஒன்பதாம். பூமியின் வடிவம் தட்டையானதென்று பலநாள் வரையில் ஜனங்கள் எண்ணி வந்தார்கள். அப்படி யெண்ணுவது தவறென்று பிறகு அநேக திருஷ்டாந்தங்களால் தெரியவந்தது.

நாம் கடற்கரையில் நின்றுகொண்டு ஆகாயம் நிர்மலமாய் இருக்கும்போது கண்ணுக் கெட்டிய வரையில் பார்ப்போமானால், நமது கண்ணுக்கு சுமார் எட்டு அல்லது ஒன்பது மைல் தூரம்தான் தெரியவரும். அதற்குமேல் தெரியாது. பூமி தட்டையாயிருக்கும் பக்ஷத்தில் இன்னம் வெகு தூரம் தெரியவேண்டும். இதல்லாமல், சமுத்திரத்தில் வெகு தூரத்தில் ஒரு கப்பல் வரும்போது அதன் கீழ்ப் பாகம் நமது கண்ணுக்குத் தெரியாது, கொடி மரத்தின் உச்சிமாத்திரம் முதலில் தெரியும். பிறகு கப்பல் கரைக்கு சமீபத்தில் வரவர கொஞ்சங் கொஞ்சமாய்க் கப்பலின் கீழ்ப்பாகங்கள் தெரியவரும். இந்த அத்தாட்சிகளால் பூமி தட்டையான வடிவுடையதல்லவென்று தெரிந்து கொள்ளலாம்.

பூமி உருண்டை வடிவமுடையது. ஆனால் பந்து போன்ற உருட்சியுடையதல்ல. முட்டை போன்ற கோள வடிவமுள்ளது. பூமியைக் குறித்துச்சொல்லும் சாஸ்திரத்திற்குப் பூகோள சாஸ்திரம் என்று பெயர்.

BIRTHRATE AMONG RATS.

**எலி குஞ்சு பொரித்தல்.**—ஒரு எலி ஒரு வருஷத்தில் எண்ணூறு குஞ்சுகள் போடுகிறதாம்.

THE MOTION OF THE EARTH.

**பூமியின் சலனம்.**—பூமிக்கு வெளிச்சமும் உஷ்ணமும் தருவது சூரியன். ஆதி காலத்தில், பூமி ஒரே இடத்தில் நிற்பதாகவும், மற்ற கிரகங்கள் பூமியைச் சுற்றி வருவதாகவும், நினைத்து வந்தார்கள். பிறகு அநேக திருஷ்டாந்தங்களால் பூமியே சூரியனைச் சுற்றி வருவதாயும், சூரியன் சலன மில்லாத கிரகம் என்றும் தெரியவந்தது. நாம் ரெயிலில் ஏறிப் போகும்போது வெகு வேகமாய்ப் போவது ரெயில் வண்டியல்லவா? ஆயினும் பக்கத்தில் இருக்கும் நிலங்கள், மரங்கள் எல்லாம் ஓடிக்கொண்டே இருப்பதாக நமது கண்ணுக்குக் காணப்படுகின்றன. உண்மையில் நிலமும் மரமும் அசைவற்று இருக்கின்றன. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போவது புகைவண்டியே யொழிய மரமும் செடியும், போகவில்லை. அதுபோலவே நாம் பூமியில் இருக்கும்போது கண்ணுக்குச் சூரியன் காலையில் கிழக்கில் உதிப்பதுபோலவும், பிறகு பொழுது ஆக ஆக உச்சிக்கு வந்து மாலையில் மேற்கில் அஸ்தமிக்கின்றது போலவுங் காணப்படுகிறது. உண்மையில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போய்க்கொண்டிருப்பது பூமியேயொழிய சூரியனல்ல.

இப்படிச்சுற்றுகிற பூமி சூரியனை ஒருதடவை சுற்றி வர முன்னூற்றறுபத்தைந்து நாள், ஐந்து மணி, நாற்பத்தெட்டு மினிட், நாற்பத்தொன்பது செகண்டு, பிடிக்கின்றது. இதையே ஒரு வருஷம் என்று சொல்லுகிறார்கள். ஆகவே வருஷத்திற்கொரு முறை சூரியனைப் பூமி வலம் வருகிறது.

THE DAY.

**நாள்.**—பூமியானது வண்டிச் சக்கரம் தன்னைத்தான் சுற்றி வருவதுபோல, தன் சுற்றளவை ஒரு தரம் அளந்து விடுகிறது. இப்படி அநேகம் சுற்றளவு செய்து சூரியனைச் சுற்றி வருகிறது. தனது பரிமாணச் சுற்றளவை முடிக்க பூமிக்கு இருபத்துநான்கு மணி பிடிக்கின்றது. இதையே ஒரு நாள் என்று சொல்லுகிறார்கள்.

SCORPIONS.

**தேள்கள்.**—தேள் குஞ்சுபொரிக்கும்போது முதுகு வெடித்து இறந்து போகிறதாம். தாய் இறப்பதனால் குஞ்சுகள் ஆகாரத்திற்கு வழியில்லாமல் தாயைத் தின்று பிழைக்கின்றனவாம்.



இதை கவனியுங்கள்! இதை கவனியுங்கள்!!

**சுதேசி லோட்டஸ் சோப் என்பது என்ன?**

கடைத் தெருவுகளில் எங்கும் அகப்படுகிறது. இந்தியா முழுதும் இது பிரசித்தமானது. மிக சுத்தமானது. மிக சரசமாகக் கிடைக்கக்கூடியது.

**லோட்டஸ் வாஷர்**—சோப் என்பது இந்தியா முழுதும் ஒவ்வொரு வீடுகளிலும் துணி துவைத்துக்கொள்வதற்காகவும் திரேகத்தை சுத்தி செய்துகொள்வதற்காகவும், ரொம்பவும் உபயோகப்படக்கூடியது.

**லோட்டஸ் சோப்:**—என்பது மருந்து மூலியமாகச் செய்யப்பட்டதல்ல. எதற்காக சகலவித கொழுப்பு முதலானதுகள் கலந்த சோப்புகளை உபயோகிக்கிறதினால் திரேகத்திற்கு வியாதிகள் சம்பவிக்கும்.

இது சஞ்சீவி கிழங்கு மூலிகைகளால் செய்ததே தவிர மாமிசங்களால் செய்யப்பட்டதல்ல. இதை ஒரு தடவை வாங்கி உபயோகிப்பீராகில் இதன் குணம் தெரியவரும்.

இந்த சோப்பை எல்லோரும் உபயோகப்படுத்தும்படி சுலப விலைக்கு விற்கப்படுகிறது. பம்பாயில் விற்கிற விலை பிரகாரம் இவ்விடத்திலும் விற்கப்படும். வியாபாரிகளுக்கு நல்ல கமிஷன்களும் கொடுக்கப்படும். மற்ற விஷயங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு யெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

**மானேஜர், எம்பிரஸ் ஆப் இண்டியா டைரி கம்பெனி,**

12. 30, ஏகாம்பர ஈஸ்வர அக்கிரஹாரம், சௌக்கார்பேட்டை, மதராஸ்.

மிகவும் அருமையான **தமிழ் நாவல்கள்.**

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஜடாவல்லவர் : கிராம முனிசீபின் சரித்திரம் | 0 | 8 |
| விக்டோரியா மகாராணியார் சரித்திரம் 27-சித்திரப்படங்களோடு .. | 1 | 0 |
| சிவாஜிரௌவினூரு : அற்புத சரித்திரம் .. | 0 | 8 |
| புத்தரது திவ்ய சரித்திரம் .. | 0 | 8 |
| பார்வதி கலியாணம் .. | 0 | 4 |
| ஞானம்பாள் திவ்ய சரித்திரம் .. | 0 | 6 |
| ரத்னவிமானம் ஓர் நாடகம் .. | 0 | 12 |
| தாருக் காசுவம் .. | 0 | 14 |
| பிரதாப முதலியார் சரித்திரம் .. | 1 | 0 |
| இரண்டு நண்பர்கள் .. | 0 | 12 |
| சத்ருத்ஜித் .. | 0 | 12 |
| மனோஹரன் .. | 0 | 12 |
| கள்வர் தலைவன் .. | 0 | 8 |
| சாரங்கதரன் .. | 0 | 8 |
| யயாதி .. | 0 | 8 |
| வேதாள உலோகம் .. | 0 | 8 |
| காலவரிஷி .. | 0 | 8 |
| விவேகாநந்த விஜயம் .. | 1 | 4 |
| சந்திரசேகரன் ஓர் புதிய நாவல் .. | 0 | 8 |
| ஆனந்த் மடம். ஷை .. | 0 | 8 |
| போஜசரித்திரம் படத்துடன் .. | 1 | 8 |
| சாரதாம்பாள் சரித்திரம் .. | 0 | 8 |
| புருஷோத்தமன் சரித்திரம் .. | 0 | 10 |
| பன்னிரு நீதிக் கதைகள் .. | 0 | 12 |
| லீலா அல்லது மங்கைபுர மாணிக்கம் .. | 0 | 12 |
| பரிமளா .. | 0 | 10 |
| கம்பராமாயணம் வசனம் 2-வாலியம் காலிகோ பயின்டு .. | 4 | 0 |
| ஷை செய்யுள் 2-வாலியம் .. | 6 | 0 |
| தாயுமான ஸ்வாமிபாடல் .. | 1 | 0 |
| வேறு பதிப்பு .. | 0 | 12 |
| பட்டணத்தார் சரித்திரமும் புராணமும் .. | 1 | 8 |
| திருவிளையாடல் புராணம் .. | 1 | 8 |
| ஷை திக் பேபர் .. | 2 | 0 |
| அகஸ்தியர் தேவாரம் .. | 0 | 4 |
| நாலடியார் மூலமும் உரையும் .. | 1 | 2 |
| விநோதரஸமஞ்சரி .. | 1 | 2 |
| ப்ரபுலிங்க லீலை வசனம் .. | 0 | 12 |
| பிரபோத சந்திரோதய வசனம் .. | 1 | 0 |
| பகவத்கீதை .. | 1 | 4 |
| வேறு பதிப்பு .. | 0 | 10 |
| மஹாமஹம். .. | 0 | 4 |

15. **மானேஜர், லக்ஷ்மீவிலாச புத்தகசாலை, திருவல்லிக்கேணி, மதராஸ்.**

# INDIAN NEWS.

## இந்தியநாட்டு சமாசாரங்கள்.

THE DECEMBER CONFERENCES.

**டிசம்பர் மாதத்தில் நடந்தசபைகள்.**—சென்ற டிசம்பர் மாதக்கடைசியில் சென்னபட்டணத்தில் அநேக கூட்டங்களும் ஆலோசனைசபைகளும் கூடின. ஒவ்வொரு கூட்டத்திலும் வெகுதூரத்திலிருந்து வந்த பிரதிநிதிகளாகிய கனவான்களெல்லாரும் கூடி நமக்கு அதிக அவசியமாக வேண்டிய சாதனங்களைப்பற்றிப் பேசி தீர்மானங்கள் செய்தார்கள். ராஜாங்க சீர்திருத்த சபை என்ன, ஆசார சீர்திருத்த சபை என்ன, கைத்தொழில் அபிவிருத்தி சபை என்ன, இந்திய ஸ்திரீகளின் சபை என்ன, இவைகளோடு ஆப்காரி இலாகாவினுல் ஜனங்களுக்கு நேரிடும் கெடுதிகளை நிவர்த்திசெய்ய முயலும் 'டெம்பரன்ஸ் கான்பரன்ஸ்' என்று சொல்லப்பட்ட சபை என்ன, எந்த ஜாதியாயிருந்தாலும் ஆத்மா பரிசுத்தமானதென்ற கொள்கையைக் கொண்டு கீழ்த்தா ஜாதியாரைக் கஷ்டப்படும்படி வைக்காமல் கல்வி கற்பித்து நல்ல பதவிக்குக் கொண்டுவர வேண்டுமென்று "தியஸ்டிக் கான்பரன்ஸ்" என்ற சபை என்ன, உபாத்தியாயர் கூட்டமென்ன, அடையாற்றில் வேதாந்த விசாரணை செய்யும் 'தியஸாபிகல்' கான்பரன்ஸ் என்ன, பீபிள்ஸ் பார்க்கு வேடிக்கைகள் என்ன, பொருட்காட்சி என்ன, சென்ற டிசம்பர் மாத கடைசியில் சென்னப் பட்டணத்தில் ஏக சந்தடியாயிருந்தது.

THE INDIAN NATIONAL CONGRESS.

**இந்தியன் நாஷனல் காங்கிரஸ்.**—இப்படிக்கூடிய கூட்டங்களில் மிகப்பெரிதும், இதோடு இருபத்து நான்கு வருஷங்களாய் நடந்து வருவதுமான "இந்தியன் நாஷனல் காங்கிரஸ்" என்ற ரஜாங்க சீர்திருத்த சங்கத்தில், திருவாங்கூர் திவானுக இருந்த திவான் பகதூர் கிருஷ்ணசாமிராவ் அவர்கள், வந்த பிரதிநிதிகளுக்குத் தக்க உபசாரம்செய்து, நாளதுவரையில் இந்திய அரசாட்சியில் உள்ள குற்றம் குறைபாடுகளையும் அவற்றைச் சீர்திருத்தம் செய்ய நமது சக்கிரவர்த்தியின் "ஸெகரிடெரி ஆப் ஸ்டேட்" என்று சொல்லப்பட்ட இந்திய காரியதரிசியும் கவர்னர் ஜனரல் அவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சியையும் எடுத்துப்பேசினுர். பிறகு, கல்கத்தாவில் பிரபல வக்கீலான டாக்டர் ராஷ் பிஹாரி கோஷ் என்பவர் அக்கிராஸனம் வகித்து, காங்கிரஸ் சபையாரின் நோக்கம் முதலியவற்றை எடுத்துச் சொல்லித் தமது அக்கிராசன ஸ்தானத்திலிருந்துச் சக்கிரவர்த்தியவர்களுக்கு நமது நன்றியையும் பக்தி விசுவாஸத்தையும் தெரிவிக்குந் தீர்மானத்தை முடித்தவுடன் இன்னும் பலபேர் பல தீர்மானங்களைப்பற்றிப் பேசினுர்கள்.

THE INDIAN NATIONAL SOCIAL CONFERENCE.

**இந்தியன் நாஷனல் ஸோஷியல் கான்பரன்ஸ்.**—இந்த நாட்டில் பொது ஜனங்கள் தமது பிரஜாலக்ஷணங்களில் தக்க உரிமையைக் கொண்டு சௌக்கியமடைய முக்கியசாதனமாகவுள்ளது தன்முயற்சி என்றும், அப்படிப்பட்ட முயற்சியால், நம்மவர்கள் கலியாணம், ஸ்திரீவித்தை, ஜாதிபேதம், மதபேதம், கப்பல் பிரயாணம், முதலிய விஷயங்களில் தக்க கவனம் எடுத்துக் கொண்டு காலதேசவர்த்தமானங்களுக்குத் தக்கபடி யனுசரித்துத் தம்மை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்ற கருத்தோடு வருஷா வருஷம் கூடும் "இந்தியன்ஸோஷல் கான்பரன்ஸ்" என்று சொல்லப்பட்ட ஆசார சீர்திருத்த சபையொன்றும் கூடிற்று. செட்டில்மெண்டு இலாகாவில் டிப்டிகமிஷனராயிருந்த ம-ள-ள-ஸ்ரீ ராவ் பகதூர் ஆதிநாராயண அய்யரவர்கள் இந்தக்கூட்டத்திற்கு வந்தபிரதிநிதிகளை உபசரித்தழைத்தார். சென்னை ஹைகோர்டு ஜட்ஜியாகிய ம-ள-ள-ஸ்ரீ சங்கர நாயரவர்கள் அக்கிராஸனம் வகித்துப் பொது ஜனங்கள், வடக்கே கஞ்சம் விசாகபட்டணம் முதலிய ஜில்லாக்களிலும், மலையாளத்திலும் செய்துவரும் சிலபழக்கவழக்கச்சீர்திருத்தங்களைப்பாராட்டிச்சொல்லி, நமது கல்யாணச்சடங்குகளில் என்ன என்ன திருத்தங்கள் காலத்துக்கும் நமது எதிர்கால நோக்கத்திற்குந் தகுந்தபடி செய்து கொள்ளலா மென்பதைப் பற்றியும் விவரமாய்ப் பிரசங்கம் செய்தார்.

THE INDIAN INDUSTRIAL CONFERENCE.

**கைத்தொழில் அபிவிருத்திசபை.**—நான்கு வருஷகாலமாய் "இண்டஸ்டிரியல் கான்பரன்ஸ்" என்று இந்தியாவிலுள்ள விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலியவைகளை அபிவிருத்தி செய்வதற்காக ஒரு மகாசபை கூடி வருகிறது. முதல் வருஷத்து சபை காசியிலும், இரண்டாவது சபை கல்கத்தாவிலும், மூன்றுவது சபை சூரத் நகரத்திலும், நான்காவது சபை சென்னப்பட்டணத்திலும் கூடிற்று. அந்தச்சபையின் நோக்கத்தையே கொண்ட நமது பத்திரிகையின் அடுத்த சஞ்சிகையில் அந்தக் கூட்டத்தில் நடந்த தீர்மானங்களை எல்லாம் எடுத்துச் சொல்லுவோம்.




**P. S. Sastri Artist and Photographer,**

**CARNATIC STUDIO, Mount Road, Madras.**

SPECIALITIES. { SCHOOL GROUPS. FAMILY GROUPS. BROMIDE ENLARGEMENTS.

**பொட்டகிராப் படங்கள்.**

பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளையும் குடும்பங்களையும் பொட்டகிராப் படம் பிடிப்பதிலும் சிரியபடங்களை பெரிதாக்கிக்கொடுப்பதிலும் நிபுணர்.

பி. எஸ். சாஸ்திரி,
பொட்டகிராப் பிடிப்பவர், கர்நாடிக் ஸ்டுடியோ,
மவுண்ட் ரோட், மதராஸ்

14.

கிலிடியன் என்பவருடைய சர்வ சம்மதமான மருந்துகள்

**புரொபெஸர் டி. கெ. கஜ்ஜார்,**

**மருந்துசாவடியில் கிடைக்கும், கிர்காம், பாம்பே,**

கெஜ்ஜார் பண்டிதர் யுக்தி ஸித்தமான மருந்து.

எம். ஏ. பி. எஸ். ஸி. இ. எஸ். எஸ். பட்டம்பெற்ற டி. கே. கஜ்ஜார் பண்டிதர் இந்தியாவில் வைத்தியத்தில் பிரசித்தி பெற்றவர். அவருடைய மருந்துகள் நாள்பட்ட ஜுரங்களையும் மற்ற வியாதிகளையும் குணப்படுத்தும். அவருடைய மருந்துகள் பரோடா ராஜ்ஜியத்திலும் பம்பாய் ராஜதானியிலுள்ள ஆஸ்பத்திரிகளிலும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| **ஜுர மருந்து**—எல்லா ஜுரத்தையும் போக்கும் .. .. .. .. .. | 0 | 8 | 0 |
| **ஜுரத்துளி**—ஷை ஜுரமருந்தின் சாரம் .. .. .. .. | 0 | 4 | 0 |
| **பூச்சி மருந்து**—பிளேக், காலரா இவை போன்ற எல்லா தொத்து வியாதிகளை வராமல் தடுப்பது | 0 | 8 | 0 |
| **மலேரியா மருந்து**—மலேரியா ஜுரத்துக்கும் இன்னும் மற்ற பிளாக்வாட்டர், ஜங்கிள் ஜுரங்களுக்கும் கைகண்ட ஔஷதம் .. .. .. .. | 0 | 8 | 0 |
| **இரத்த சுத்தி மருந்து**—இரத்தத்தை சுத்திகரிப்பதில் இதற்கு நிகரான மருந்துவேறில்லை. சூலைபோன்ற வியாதிகளுக்கு அநுபவ சித்தமானது .. .. .. | 1 | 0 | 0 |
| **பிளேக் மருந்து**—பிளேக் என்னும் வியாதியை முழுதுமே போக்கடிக்கத் தகுந்தது. பிளேக் கண்ட அநேகர் இதனுல் குணமடைந்திருக்கிறுர்கள் .. .. .. | 0 | 8 | 0 |

**மானேஜர், எம்பிரஸ் ஆப் இண்டியா டைரி கம்பெனி,**
30, ஏகாம்பர ஈஸ்வர அக்கிரஹாரம், சௌகார்பேட்டை, மதராஸ்.

12.

## FOREIGN NEWS.

## இதரநாட்டு சமாசாரங்கள்.

**Earthquake at Messina.**

**மெஸ்ஸினாவில் பூகம்பம்.**—இடலி தேசத்திற்கு தெற்கேயுள்ள ஸிஸிலித் தீவில் மெஸ்ஸீனா என்று ஒரு பட்டணம் இருந்தது. 1783-ம் வருஷத்தில் ஒரு பூகம்பம் நேரிட்டு அந்தப்பட்டணம் நாசமாய்ப் போய் விட்டது. பிறகு பட்டணம் ஏற்பட்டு அநேக கைத்தொழில்கள் உண்டாகி பட்டணம் செழித்திருந்தது. இந்தப் பட்டணத்தில் சென்ற டிசம்பர் மாதம் 28உ ஒரு பெரிய பூகம்பம் உண்டாகி அநேகம் கட்டடங்கள் இடிந்து விழுந்து வெகு பொருள் சேதமும் இரண்டு லக்ஷத்திற்கு மேல் உயிர்ச்சேதமும் நேர்ந்திருக்கிறது. இந்த ஆபத்துக்குத் தப்பிப் பிழைத்த ஜனங்களுடைய உதவிக்காக உலகத்தில் நாகரிகமுள்ள கவர்ன்மெண்டார்களும் கனவான்களும், தனவான்களும், அவர்களால் கூடிய உதவியைச் செய்து வருகிறார்கள். நம்முடைய சென்னை ராஜதானியிலும் ஒரு பண்டு ஏற்பட்டுப் பணம் வசூல் ஆகிக்கொண்டிருக்கிறது. இடலி தேசத்து ராஜாவும் ராணியும் மெஸ்ஸீனாவுக்குப் போய் ஜனங்களுக்கு வேண்டிய உதவியைச் செய்தார்களாம். அந்த ஊருக்குப் போய் அக்கொடும் காக்ஷியைப் பார்த்தபோலீஸ்காரர்களிலும் சிப்பாய்களிலும் அநேகர் பொறிகலங்கிச் சித்தப் பிரமை கொண்டு விட்டார்களாம். அவ்விடத்தில் தப்பிப் பிழைத்தவர்களில் அநேகர் புத்தி கலங்கி பைத்தியம்கொண்டவர்கள் போலிருக்கிறார்கள். சிலருக்கு தங்கள் பேரே ஞாபகமில்லை. சிலருக்கு தாங்கள் தப்பிப் பிழைத்த விதம் இன்னதென்று தெரியவில்லை. கருங்கல்களினாலும் செங்கல் சுண்ணாம்புகளினாலும் கட்டப்பட்ட மாட மாளிகைகளும் வீடுகளும் இடிந்து கிடக்க மத்தியில் ஐந்து ஒட்டு கட்டடங்கள் மாத்திரம் பழுது படாமல் இருக்கின்றனவாம். இவைகள், உருக்குத் தகடுகளின் மத்தியில் சிமெண்டு சுண்ணாம்பை நிறப்பி கட்டப் பட்டதனால் இடிந்து விழவில்லையாம். இப்படி கட்டப்பட்ட கட்டடங்கள் வளைவையும் அசைவையும் கொடுக்குமே ஒழிய இடிந்து விழாவாம்.

**Charities in the United States.**

**யுனைடெட் ஸ்டேட்ஸில் தர்மம்.**—யுனைடெட் ஸ்டேட்ஸ் என்னும் தேசத்தில் சென்ற பன்னிரண்டு மாதங்களில் தர்ம ஐவேஜிக்கு இருபத்து எழு கோடியே இருபத்து எட்டு லக்ஷம் ரூபாய் வரையில் சேர்ந்திருக்கிறதாம். இதில் மிஸ்டர் கார்னிகீ என்பவர் கொடுத்தது இரண்டு கோடியே இருபத்து மூன்று லக்ஷம்; மிஸ்டர் ராக்பெல்லர் கொடுத்தது ஐம்பத்து எட்டு லக்ஷம்; மிஸடர் ஸேஜ் என்பவர் கொடுத்தது நாற்பத்து ஆறேமுக்கால் லக்ஷம். இப்படியாக வித்தியா விஷயமாய் சுமார் பதினொரு கோடியும் இதர தர்மங்களுக்கு பன்னிரண்டு கோடியும் சேர்ந்ததாம்.

**A Railway Between Egypt and India.**

**ஈஜிப்டுக்கும் இந்தியாவுக்கும் ஒரு ரெயில்.**—ஈஜிப்ட் தேசத்திலுள்ள 'போர்ட் ஸெட்' என்னும் பட்டணத்திலிருந்து வடக்கு அராபியா, தென் பர்ஷியா மூலமாய் இந்தியாவின் வடமேற்கு மூலைக்கு ஒரு ரெயில் போடலாம் என்று 'பிளாக்' என்பவர் ஒருவர் சொல்லுகிறார். இதற்கு இரண்டாயிரத்து நானூறு லக்ஷம் ரூபாய் செலவாகுமாம். இந்த வழி ஏற்பட்டால் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு எட்டு நாளில் வரலாமாம்.

**United South Africa.**

**ஐக்கிய தென் ஆபிரிகா.**—வெகு காலமாய் தென் ஆபிரிக்காவில் ஆங்கிலேய கவர்ன்மெண்டாருக்கு சில மாகாணங்கள் உண்டு. கொஞ்ச வருஷங்களுக்கு முன் ஆபிரிக்காவில் உள்ள "போயர்" என்னும் சில வேறு ராஜ்யத்து ஜனங்களுக்கும் ஆங்கிலேய கவர்ன்மெண்டாருக்கும் சண்டை வந்து ஆங்கிலேயர்கள் ஜயித்து போயர்களுடைய ராஜ்யத்தைப் பிடித்துக் கொண்டார்கள். ஆயினும் ஆங்கிலேய கவர்ன்மெண்டார் தங்களுக்கு உள்பட்ட தேசம் என்று சொல்லுவதற்கு வேண்டிய மேன்பார்வையை மட்டில் வைத்துக்கொண்டு ஜயித்த ராஜ்யத்தை அங்குள்ளவர்களே ஆண்டு கொள்ளும்படி ஏற்பாடு செய்துவிட்டார்கள். இந்த ராஜ்யமும் ஏற்கனவே இருந்த மாகாணங்களும் ஒன்றாய்ச் சேர்ந்து ஒரே ராஜ்யமாயிருக்கவேண்டுமென்று எண்ணிச் சில பிரதிநிதிகள் ஏற்பட்டு அவர்களெல்லாரும் சம்மதித்துவிட்டார்களாம்.




## கவிராஜ் பி. எல். சேன் அண்டு கோ.,

**ஆதி ஆயுர்வேத ஔஷதசாலை, கல்கத்தா.**

(10) உலகப் பிரசித்திபெற்ற ஷை கம்பெனி மருந்துகளும், திருவாங்கூர் தந்த விக்ரகங்களும் அடியில் கண்ட விலாசதாரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

☞ வேண்டுபவர்களுக்கு கியாட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

**ஏஜண்டு: பி. சேனாபதி ஐயர்,** மலையாளம் வைத்தியர், 331, தம்பு செட்டி தெரு, சென்னை.

Agent: P. SENAPATHY IYER, MALAYALAM PHYSICIAN, *331, Thambu Chetty Street, MADRAS.*


# Classified Commercial Directory.

## வியாபார பகுதி விலாசங்கள்.

:o:

It is not all business that will bear expenditure in advertising. A good deal depends on the nature of the business. It is however absolutely essential that every businessman, whether he be manufacturer, wholesale or retail dealer, should let others know that he is in a particular line of business, so that if any person has need for his services, he may write to him direct. In this view in the advertisemented, classified Commercial Directory should be very useful for all businessmen; for manufacturers and wholesale dealers who may wish to find custom with retail merchants; for retail merchants who should know the various sources of supply of the goods required for their shop instead of depending on one wholesale supplier alone thus, paying, it may be, higher prices.

The fee for each entry either in English or in Tamil is Rs. 2 or 4 shillings per annum payable in advance.


### PENCIL MANUFACTURER.

பென்சில் செய்கிறவர்கள்.

K. P. RAMASAMY IYER,
15, Solayappa Mudali Street,
*KUMBAKONAM.*

### SILK MERCHANTS.

பட்டு வியாபாரிகள்.

**பட்டு பீதாம்பர கம்பேனி,**
காசி (பனாரிஸ்).

# SEASON, CROPS AND PRICES.

# காலஸ்திதி, பயிர்கள், அகவிலை.

SESAMUM CROP.

**எள்ளு மகசூல்.**—மதிராஸ் ராஜதானியிலுள்ள ஜமீன்தாரிவகையரா நீங்கலாக மற்ற அயன்கிராமங்களில் சென்ற 1908-ம் வருஷம் டிசம்பர் மாதத்தோடு 441,000 ஏகராவில் எள்ளு சாகுபடியாகி இருக்கிறதாம். இது அதற்கு முந்தின வருஷத்தில் இதே மாஸத்திலிருந்ததைப் பார்க்கிலும் 40,000 ஏகரா ஜாஸ்திசாகுபடி என்று தெரிகிறது. ஆனாலும் சென்ற ஐந்து வருஷத்துசராசரி சாகுபடிக்கு இதுகொஞ்சம் கம்மிதான். இந்த 441,000 ஏகர்சாகுபடியில் சுமார் லக்ஷத்து அறுபத்து நாலாயிரத்து ஐந்நூறு பாரம் எள்ளு விளையும் என்று மதிக்கப்படுகிறது. அயன்கிராமங்கள் இல்லாத மற்ற கிராமங்களில் 1907-ம் வருஷத்தில் 31400 ஏகர் சாகுபடியானதாகவும், 1908-ல் 41500 ஏகர்சாகுபடி செய்யபட்டிருக்கிறதாகவும் தெரிகிறது. இதில் 17400 பாரம் எள்ளுவிளையும் என்று மதிக்கப்படுகிறது. ஆகையால் இப்போதிருக்கிற ஸ்திதியில் நம்முடைய ராஜதானியில் சுமார் லக்ஷத்து எண்பத்தீராயிரம் பாரம் எள்ளு விளையக்கூடுமு என்று எதிர்பார்க்கலாம். கணக்கு அகப்பட்டவரையில் 1908-ம் வருஷத்தில் இந்தியா முழுவதிலும் நாற்பத்தைந்து லக்ஷம் பதினோராயிரம் ஏகரில் எள்ளு சாகுபடியாயிருக்கிறதாகவும் அதில் சுமார் பதினேழுலக்ஷத்து நாற்பத்து மூவாயிரம் பாரம் எள்ளு கிடைக்கக்கூடு மென்றும் தெரிகிறது. முந்தினவருஷத்தில் இந்தியாமுழுவதிலும் நாற்பத்துநாலு லக்ஷத்து நாற்பத்து ஏழாயிரம் ஏகராவில் சாகுபடியாகி சுமார் ஒன்பதரை லக்ஷம் பாரம் எள்ளு அருவடையாயிருக்கலாம்.

GROUND-NUT CROP.

**மணிலாக்கொட்டை.**—இந்த வருஷத்தில் இந்தியாவில் மணிலாக்கொட்டை நன்றாய் விளைந்திருக்கிறதாம். சென்னப்பட்டணம், பம்பாய், பர்மா, இன்னும் மற்ற இடங்கள் எல்லாவற்றையும்சேர்த்து பார்த்தால் சுமார் இருபது லக்ஷம் பாரம் அருவடையாகக் கூட்டுமாம். இந்த விஷயத்தைப் பற்றி அடுத்த சஞ்சிகையில் விஸ்தாரமாய்ச் சொல்லுவோம்.

HIGH PRICES.

**உயர்ந்த அகவிலை.**—கொஞ்ச வருஷங்களாய் இந்தியா முழுவதிலும் அகவிலைகளெல்லாம் தூக்கிவிற்கின்றன. முக்கியமாய் அரிசியின் விலை ஜாஸ்தியாகிக்கொண்டே வருகிறது. இப்படிப்பட்ட உயர்ந்த அகவிலைகளின் காரணம் விளைவின் குறைவு என்று சொல்லக் கூடவில்லை. கொஞ்ச வருஷங்களுக்கு முன் செல்வாக்கு நாணய விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட சட்டத்தின் பயனென்று அநேகர் சொல்லுகிறார்கள். இந்த அகவிலையைப்பற்றி கவர்ன்மெண்டார் விசாரிக்க வேண்டு மென்று சென்ற டிசம்பர் மாதத்தில் நடந்த இந்தியன் நாஷணல்காங்கிரஸ் என்னும் மகாசபைக்கு வந்திருந்த பிரதிநிதிகள் எல்லாரும் கூடிப் பேசினார்கள். இந்த விஷயமாய் இந்தியா கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டி ஏற்படுத்தப் போகிறதாகத் தெறிகிறது. இது மிகவும் சிக்கலான விஷயமானதால் இங்கிலாந்திலிருக்கும் சில நிபுணர்களும் கூடி இதை விசாரிக்கப் போகிறார்கள்.

PIECE-GOODS AND YARN.

**துணிகளும் நூலும்.**—சென்னப்பட்டணத்தில் சென்ற பதினைந்து நாளாய்ச் சீமைச் சரக்குகளில் விசேஷ வியாபாரமில்லை. எப்பொழுதும் பொங்கலுக்குப் பிறகு அப்படித்தான் இருப்பது வழக்கம். கடைக்காரர்கள் கையில் சரக்கு ஜாஸ்தியாயிருப்பதாலும் அவர்கள் விற்கஆவலுள்ளவர்களாயிருப்பதாலும் விலைகள் கொஞ்சம் தணிவாகவே இருப்பதாகத் தெரிகிறது. கடைக்காரர்கள் உயர்ந்த விலைக்குவாங்கிய சரக்குகளை விற்றுவிடுவது நலம்என்று யோசிக்கிறதாகவும் தெரிகிறது. சீமை விலைகள் ஒரே மாதிரியாக இருக்கின்றனவாம். ஆயினும் பருத்தியின் விலை அதிகமாய் ஏறுவதும் இறங்குவதுமாயிருப்பதால் இப்பொழுதுள்ள நிலவரம் நிற்கும் என்று சொல்ல முடியாதாம்.

METALS.

**உலோகங்கள்.**—இரும்புகளின் விலை ஒரே மாதிரியாய் இருக்கிறதென்று சொல்லலாம். பித்தளைத் தகடுகளில் வியாபாரம் மட்டாயிருக்கிறதாம். சீமையில் விலை குறைந்திருப்பதால் சென்னபட்டணத்திலும் பாரம் ஒன்றுக்கு ரூ. 205-206க்கு இறங்கிவிட்டதாகத் தெரியவருகிறது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
31 MAR 1909

பிழைக்கும்வழிக்கு அனுபந்தம்.

Supplement to Practical Life.



RAO BAHADUR R. N. MUDHOLKAR.

ராவ் பகதூர் ஆர். என். மதோல்கர்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி, 10, எஸ்பிளனேட், மதா

G. A. VAIDYARAMAN & Co., 10, Esplanade, Madras.

[Stamp:] ... REGISTRAR ... 31 MAR 1909 ... MADRAS.

# பிழைக்கும் வழி

# PRACTICAL LIFE

ஜி. ஏ. வைத்தியராமன், பி.ஏ.
பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B.A.
EDITOR.

புஸ்தகம் I. Vol. I. | கீலக௵ மாசி௴—FEBRUARY 1909. | ஸஞ்சிகை 2. No. 2.

## EDUCATION AND LIVELIHOOD.

BY

RAO BAHADUR M. RANGACHARIAR, M.A.

## படிப்பும் பிழைப்பும்.

படிப்புக்கும் பிழைப்புக்கும் இருக்கும் சம்பந்தத்தை அறிந்துகொள்வது மிகவும் உபயோகமாயிருக்கும். பூர்வகாலத்தில் இந்த தேசத்தில் படித்தவர்கள் படிப்பையே பயிற்சி செய்துகொண்டு வரவேண்டியதென்று ஒரு விதமான நிர்பந்தம் இருப்பதாய் எண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆகையால்தான் படிப்பை முக்கியமாய் கவனித்துவந்த பிராம்மணர்கள் பிழைப்பைத் தேடும் வழியில் அதிக முயற்சி செய்தவர்களாகத் தெரியவில்லை. இதரர்கள் பிழைப்பு வழியில் செய்துவந்த முயற்சியினால் கிடைத்த தனலாபத்தைக்கொண்டே தாங்களும் வாழ்ந்து வந்தார்கள். இக்காலத்தில் படித்தவர்களெல்லாம் படிப்புப்பயிற்சிக்காகவே முயலவேண்டும் என்னும் நிர்பந்தம் யாதொன்றும் இல்லை. படித்தவர்களில் ஒருவரும் படிப்புப்பயிற்சிக்காக முயலக்கூடாது என்பது இதன் கருத்தன்று. படிப்புப்பயிற்சிக்காகவே படித்தவர்களில் சிலர் முயலவேண்டியது இப்பொழுதும் ஆவசியகந்தான். படிப்புப்பயிற்சியினால் அநேக வழிகளில் பிழைப்புக்கு உதவி உண்டாகுமென்பது இக்காலத்தில் விளங்கி வரும் நவீன நாகரிகத்தினால் வெகு விதத்தில் தெரியவருகிறது. ஆனால் படித்தவர்கள் எல்லாரும் வித்தையின் அபிவிருத்திக்கே முயலத் தக்க ஸாமர்த்திய முள்ளவராய் இல்லையென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. படிப்பவர்களில் ஆயிரத்தில் ஒருவன்தான் பண்டிதனாகக்கூடியவன் என்பது பழையநாளிலிருந்து இத்தேசத்தில் பிரசித்தமாய்த் தெரிந்திருக்கிறது. இப்படிப் பண்டிதரானவர்களெல்லாம் வித்தையையும் ஞானத்தையும் மேல் மேல் விருத்தியடையும்படி செய்ய சக்தியுள்ளவர்களாய் இருக்கமாட்டார்கள். பண்டிதர்களில் கூட ஏதோ சிலருக்குத்தான் இவ்விதமான சக்தி இருக்கும். இதைக்கொண்டு ஸாமாந்ய ஜனங்களுக்கு படிப்பே வேண்டியதில்லை என்று சொல்ல முடியாது. படிப்பினால் புத்திக்குத் தெளிவும் கூர்மையும் உண்டாகும் என்பது யாருக்குத் தான் தெரியாது? மேலும், படிப்பினால் மனுஷியர்களுடைய குணங்களின் சீர்திருத்தமும் உண்டாகும். இவ்வாறு ஏற்படக்கூடிய புத்தியின் தெளிவும் கூர்மையும், குணங்களின் சீர்திருத்தமும், பிழைப்புக்கு ஸகாயஞ்செய்யும்

என்பதில் சந்தேகத்துக்கு இடமேயில்லை. எத்தொழிலைக்கொண்டு ஒருவன் பிழைக்கவேண்டியதாயிருந்தாலும் அவன் புத்திமானாயும் குணசாலியாயும் இருந்தால் எப்படி. தன்னுடையவும் தன்னைச்சேர்ந்தவர்களுடையவும் பிழைப்புக்கும் அபிவிருத்திக்கும் வேண்டிய ஸாதனங்களை அடையலாமோ அப்படியே அவன்புத்திமானாயும் குணசாலியாயும் இல்லாவிட்டால் அவைகளைப்பெற்றுக்கொள்ள முடியாது. தனதான்யாதி ரூபத்தில் இருக்கும் செல்வத்தை உண்டாக்கி, அதைமேல்மேல் விருத்திசெய்து, ஜனங்களிடம் பொதுவாகப் பரவச்செய்யும் தொழில்களெல்லாம் பூர்வகால சம்பிரதாயத்தை அநுஸரித்தே இப்பொழுது நடந்துவருகிறதில்லை. புதுப்புதிதான யந்திரங்களும் புதுப்புதிதான பதார்த்தங்களும் அநேகங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவைகளெல்லாம் வெகு விசித்திரமான மார்க்கங்களிலே பிழைப்புக்குவேண்டிய செல்வத்தை உண்டாக்கிக்கொடுக்கும் தொழில்களில் மிகவும் அதிகமாய் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இக்காரணத்தைக் கொண்டே மேற்கைச் சேர்ந்த ஐரோப்பியர்களும் அமெரிக்காக்காரர்களும் தொழிலுக்கு வேண்டிய ஸாதனங்களுடன் மூளையையும் கலந்தாலொழிய யாதொரு தேசத்திலும் பிரஜைகளிடத்தில் செல்வப்பயிற்சி ஆகாதென்று சொல்லுகிறார்கள். பிழைப்பு வழிகளை கிரமமாய் அறிந்து கொள்வதற்கும், அந்தந்த வழியில் தக்க ஸாதனங்களைப் பெற்றுக்கொள்வதற்கும், இவைகளைக்கொண்டு செல்வப்பயிற்சிக்கும், தக்கபடி முயல்வதற்கும், எல்லாருக்கும் படிப்பின் ஸகாயம் வேண்டியதுதான். படிப்பையே முக்கிய ஆதாரமாக கொண்டிருக்கும் சில பிழைப்பு வழிகள் உண்டு. வக்கீல்களும், ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களும், எல்லாவிதமான படிப்புகளைச் சொல்லிக்கொடுக்கும் உபாத்தியாயர்களும், வித்தியாவான்களான வைத்தியர்களும், தர்மோபதேசம் சொல்லும் ஆசாரியர்களும், இவ்விதமான கல்வி வழிகளைக்கொண்டு பிழைப்பவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் இவ்விதமான கல்வித்தொழில்கள் கணக்கில் அதிகமாய் இருக்கமுடியாது. தேகத்தினாலும், புத்தியினாலும், இதரவிதமான காரியங்களைச் செய்து அவைகளினால் புதுப்புதிதாயும் உபயுக்தமாயும் இருக்கும் வஸ்து விசேஷங்களை உண்டாக்கிச் செல்வத்தை வளரச்செய்யும் தொழில்கள்தான் மனுஷியருடைய ஜீவனவாழ்வில் அதிகமாய் இருக்கின்றன. இவ்விதமான தொழில்களுக்கு வேண்டிய படிப்பைப்பற்றி உள்ள விஷயங்களை ஆராய்ந்து அறிந்து கொள்ளவேண்டியது பிழைக்கும் வழிக்கு ஒரு பேருதவியாயிருக்கும். இதைப்பற்றி இன்னொரு தடவை விசாரிப்போம்.

ம. ரங்காசார்யா.

---

## WELL SINKING.

BY

THE EDITOR.

## கிணறு வெட்டுதல்.

எந்த ஆற்றுப்பாய்ச்சலானாலும் சரி, எவ்வளவு மழை பெய்யும் இடமாயிருந்தாலும் சரி, விவசாயிகளுக்கு காலா காலத்தில் வேண்டிய அளவில் ஜலம் கிடைக்குமென்று சொல்வது முடியாது. திருநெல்வேலி, தஞ்சாவூர்ஜில்லாக்கள் நல்ல ஆற்றுப்பாய்ச்சலும் நீர்வளமுமுள்ள பிரதேசங்கள்தானே? அப்படியிருந்தும் இந்த வருஷத்தில் தண்ணீர் தட்டிப்போய் விவசாயிகளுக்கு எவ்வளவு நஷ்டம் நேரிட்டிருக்கிறது? இப்படிக்கு இரண்டு வருஷம் தட்டினால் பஞ்சத்துக்குக் கேட்பானேன்? தவிர, அநேக



இடங்களில் இருபோக நஞ்சைசாகுபடிக்கு வேண்டிய ஜலம் இருக்கும் என்பது நிச்சயமில்லாததால் அநேக நிலங்களில் ஒரு போகமே போடப்பட்டு வருகிறது. இரு போக நிலங்களும் கோடை காலத்தில் தரிசாகவே இருக்கின்றன. இந்தநிலங்களுக்கெல்லாம் தண்ணீர் அகப்படுமானால் வருஷம்முழுவதும்சாகுபடி ஆகுமென்பதற்கு ஸந்தேகமில்லை. இவைகளை எல்லாம் உத்தேசித்தால் விவசாயிகள் கூடியவரையில் கிணறுகளை வெட்டி ஜல ஆசராக்களை ஏற்படுத்திக் கொள்வது நலமென்று தோன்றுகிறது. சில இடங்களில் 10 அடி வெட்டினால் ஜலம் அகப்படும். இன்னும் சில இடங்களில் 20, 30 அடிகள் வெட்ட வேண்டியதாயிருக்கும். அநேக இடங்களில் வெட்டிக் கொண்டே போனால் ஜலம் அகப்படும். ஆனால் அப்படிச்செய்வதற்கு விசேஷ செலவாகும். அதோடுகூட, ஆழமாக வெட்டினாலும் தண்ணீர் அகப்படுமென்பது நிச்சயமில்லாததாலும் அநேக இடங்களில் கிணறு வெட்டுவதில்லை. ஓரிடத்தில் கீழே நீர் சுரக்கும் சுரக்காது என்ற விஷயத்தை தெரிந்துக்கொள்வது கடினமாகும். அப்படித் தெரிந்துக் கொண்டால் கிணறு வெட்டுவதற்கு முன்னால் ஊற்றுச் சுரக்கும் இடத்தில் பணத்தைச் செலவழித்து சுரக்காத இடங்களில் வீணாக செலவழிக்காமல் நிறுத்திவிடலாம்.

கிணறுவெட்டும் விஷயத்தில் விவசாயிகளுக்கு ஒத்தாசை செய்யவேண்டுமென்று 1900-௵த்தில் நியமிக்கப்பட்ட "இரிகேஷன்கமிஷன்" என்னும் கமிட்டியார் அநேக சிபார்சுகள் கவரன்மெண்டாருக்கு செய்தார்கள். தண்ணீர் அகப்படும் அகப்படாதென்பதைக்கண்டுபிடிக்க நிலத்தைவெட்டிப்பார்க்காமல், ஒருவித ஆயுதங்களை நிலத்தில் இருத்திப்பார்த்தால் தெரியும். இந்த ஆயுதங்களை கவரன்மெண்டார் வாங்கி கிணறு வெட்டவேண்டுவோர்களுடைய நிலத்தில் இருத்திப்பார்த்து ஜலம் அகப்படும் அகப்படாதென்று சொன்னால் கிணறு வெட்ட உத்தேசிப்பவர்கள் நஷ்டப்படமாட்டார்களென்று மேற்சொன்ன கமிட்டியார் கவரன்மெண்டுக்கு எழுதினார்கள். இதை அநுசரித்து மதராஸ் கவர்ன்மெண்டார் 1906-ம் வருஷத்தில் வேண்டிய ஆயுதங்களை வாங்கி, ஒரு டிப்டிகலெக்டரையும் அவருக்கு வேண்டிய மேஸ்திரி முதலிய சிப்பந்திகளையும் நியமித்துக்கொடுத்து, செங்கற்பட்டு ஜில்லாவில் திருவள்ளூர், பொன்னேரி தாலுக்காக்களில் கிணறு வெட்ட வேணு மென்ற ஆவலுள்ள கிருஷிகர்களுக்கு ஜலம் அகப்படும் அகப்படாதென்பதைக் கண்டுபிடித்து கொடுக்கும்படி அனுப்பினார்கள். இப்படிக்கு சென்ற ஏப்ரல் மாதம் வரையில் 259 இடங்களில் இருத்திப் பார்த்தார்களாம். பாதிக்குமேல் அதாவது 129 இடங்களில் ஜலம் அகப்படவில்லையாம். அகப்பட்ட இடங்களில் சராசரியில் $42\frac{1}{2}$ அடிக்கு கீழ் ஜலமிருந்தது. அநேக இடங்களில் 50 அடிக்குள் ஜலம் அகப்பட்டுவிட்டதாம்.

பாதிக்கு மேற்பட்ட இடங்களில் ஜலம் அகப்படவில்லை யென்று மேலேசொன்னோம். அவ்விடங்களில் இருத்திப்பார்க்கசெலவழித்த பணம் முழுவதும் வீண்தானே? சுளுவாய் தண்ணீர் அகப்படும் அகப்படாதென்பதைக் கண்டறிய ஏதாவது ஒரு சுலபமான கருவி ஏற்படுமானால் கிணறு வெட்டுவதற்கு எவ்வளவோ ஸாதகமாகும்.

இப்போது இங்கிலாந்தில் லிவர்பூல் நகரத்தில் ப்ரன்ஸ்விக் தெருவில் டப்ளியூ. மான்ஸ்பீல்டு கும்பெனியார் ஒருவகை காந்த ஊசி கண்டுபிடித்திருக்கிறார்களாம். இதன் உதவி

யால் எவரும் நீர் ஊற்று சுரக்கும் இடங்களைத் தாமே அறிந்துக்கொள்ளலாமாம்.

நிலத்திலிருந்து வாயு மண்டலத்திற்கு எப்போதும் காந்த ஓட்டம் ஒன்று இருக்கிறது. எந்த இடத்தில் கீழே நீர்சுரப்பு இருக்கிறதோ அங்கே அந்தக் காந்த ஓட்டம் அதிகமாயிருக்கிறதென்று தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, மேற்சொன்ன காந்த ஊசியை கீழே நட்டுவைத்த மாத்திரத்தில் கீழே நீர்ச் சுரப்பு இருந்தால் அது அசையும். சுரப்பு இல்லாவிட்டால் அசையாமல் நிற்கும். பூமிக்குக்கீழே ஆயிரம் அடிவரையில் உள்ள சுரப்பை இது சுளுவாய்த் தெரிவிக்குமாம். மரம் அடர்ந்த இடமா யிருந்தாலாவது இருப்புக் கட்டிடங்கள் சமீபத்திலிருந்தாலாவது அந்தக் காந்த ஊசி செவ்வையாய் வேலைசெய்வதில்லையாம். காற்று மழையில் வேலைசெய்யாது. சாதாரணமான மற்ற தினங்களில் காலை 8 மணிக்கு மேல் 12 மணி வரையிலும், மாலை 2 மணிக்கு மேல் 5 மணி வரையிலும், இது நீர்ச்சுரப்பை நன்றாய்த் தெரிவிக்குமென்று சொல்லுகிறார்கள்.

இந்தக்காந்த ஊசியின்விலை இவ்வளவென்று தெரியவில்லை. இதைப்பற்றி எழுதிய கடிதத்திற்கு பதில் வந்ததும் பத்திரிகையில் தெரிவிப்போம். சொற்ப விலையா யிருக்கும் பக்ஷத்தில் கிணறு வெட்ட யோசிப்பவர்களே வாங்கிக்கொள்ளலாம். அப்படி இல்லாவிட்டால் கவரன்மெண்டார் வாங்கி விவசாயிகளுக்கு உதவி செய்யலாம். இதைப்பற்றி மதராஸ் கவரன்மெண்டார் தக்க விசாரணை செய்வார்களென்று நம்புகிறோம்.

பத்திராதிபர்.

## INVESTMENTS IN RAILWAYS

BY

C. RAMASWAMI AIYANGAR, B.A.

## ரெயிலில் ஆஸ்தியாகப் போடும் பணம்

நம்முடைய இந்தியா தேசமானது மற்ற தேசங்களைப்போல, ஐச்வர்ய மடையாமலிருக்கிறதென்பது ஸர்வ ஜனங்களுக்கும் தெரிந்த விஷயம். அதற்கு முக்கியமான காரணம் நம்முடைய தேசத்தார் பெரும்பாலும் விவசாயத்திலேயே ஊன்றினவர்களாய், வர்த்தகத்திலும், சுதேச கைத்தொழில்களிலும், அவர்களுடைய ஊக்கத்தைச் செலுத்தாமல் இருப்பதுதான். நாம் உடுக்கும் ஆடைகளுக்கும், எழுதும் காகிதங்களுக்கும், ஏறும் ரயிலுக்கும், இதரர்களை நம்பி நாம் கடைத்தேறும் வழி தெரியாமல், வெகு காலம் கழித்து விட்டோம். இப்பொழுது, சில காலமாய், சுதேச வஸ்துக்களை விருத்தி செய்யவேண்டுமென்று, நம்முடைய தேசத்தார்கள், சிரமப்படுகிறார்கள். சுதேசத்துணி நெய்வதிலும், இதரவஸ்துக்களை உள்ளூரிலேயே செய்வதிலும், முயற்சி கொண்டு அதற்கு வேண்டிய ஸாதனங்களை சேகரித்து வருகிறார்கள். இன்னும், நாம் கவனிக்காத விஷயம் ஒன்று இருக்கிறது. அதாவது, நம்முடையமுதலைக்கொண்டு, இந்தியா தேசத்தில், இருப்புப்பாதைகள் போடுவது. இப்பொழுது நம்முடைய தேசத்திலிருக்கும் அநேக இருப்புப்பாதைகள் ஐரோப்பியர்கள் பணம் கொண்டுபோடப்பட்டிருக்கின்றன. அதிலிருந்து வரும் லாபமெல்லாம் அவர்களுக்கே போகின்றது. இவ்விதமாய் முயற்சி செய்வது லாபமான விஷயமென்று நாம் இப்பொழுது காட்டுவோம்.

இந்தியாவில், 1853ம். வருஷத்தில், இருபது மயில் இருப்புப்பாதை தான் இருந்தது.



இப்பொழுது சுமார், முப்பதினாயிரம் மயிலுக்கு மேலாய் விட்டது. இவைகளுக்காக பிடித்த செலவு தொகை ஏறக்குறைய நாற்பது கோடி ரூபாய். இந்தத் தொகையில் கொஞ்ச பாகம், கவரன்மெண்டாராலும், மற்றது, இங்கிலாந்திலிருக்கும் தனவான்களால் ஏற்படுத்தப்பட்ட கம்பெனிகளாலும், போடப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு இதிலிருந்து அரை வட்டி தேறுகிறது. சென்ற எட்டு வருஷங்களாக, கவரன்மெண்டாருக்கு, இருப்புப்பாதைகளிலிருந்து நஷ்டமே கிடையாது. 1907ம். வருஷத்தில், இவர்களுக்கு 383 லக்ஷம் ரூபாய் லாபம் கிடைத்தது.

இப்படிப்பட்ட ஆஸ்தியை விட நமக்கு வேறென்ன உலகிலிருக்கின்றது? இந்திய தேசத்தார்களுடைய பணம் கொஞ்சமேனும், இந்த மார்க்கத்தில் உபயோகிக்கப்படவில்லை. சுதேசிகளில் ஒருவராவது, இதன் மகிமையை ஊன்றியோசிக்கிறதில்லை.

ஆனால் சில வருஷங்களாக இந்த விஷயத்தில் சென்னைகவரன்மெண்டார், நமக்கு மிக்க உதவி செய்திருக்கிறார்கள். அது அடியில் சொல்லப்பட்ட தஞ்சாவூர் டிஸ்திரிக்ட் இருப்புப்பாதையின் சரித்திரத்தைப் படித்தால் தெரியும்.

தஞ்சாவூர் ஜில்லாவில் ரூபாய்க்கு ஒரு அணா ரோட்வரி சட்டப்படி ஏற்பட்டிருந்தது. ஆனால் இதில் முக்காலணாத்தான் வசூலாகிவந்தது. 1878-ம். வருஷம், கலெக்டராக இருந்த எச். எஸ். தாமஸ் துரையவர்கள் பாக்கி நின்ற காலணாவை வசூல் செய்து, அதை இருப்புப்பாதைகளுக்கு உபயோகிக்க வேண்டுமென்று கவரன்மெண்டாருக்கு எழுதி, அவர்கள் அனுமதியையும் பெற்றுக்கொண்டார். இந்த வரியினால் சேர்ந்த தொகையைக்கொண்டு தஞ்சாவூர் ஜில்லாவில், மாயவரத்திலிருந்து, முத்துப்பேட்டை வரையில் 54 மயில் நீளமுள்ள இருப்புப்பாதை போடலாமென்று 1882ம் வருஷம் கலெக்டராக இருந்த எச். இ. ஸ்டோக்ஸ் துரையவர்கள், சென்னை கவரன்மெண்டாரை உத்திரவு கேட்டார். மேற்சொன்னபடி, ரோட் வரியில் நின்ற பணம் பதின்மூன்று லக்ஷம். அது ரெயில் போடுவதற்குப்போதாததனால், சென்னைகவரன்மெண்டார், பன்னிரண்டு லக்ஷம், கடன் கொடுத்து, வேலையை முடித்தார்கள். இது இப்பொழுது, தென் இந்தியா ரெயில்வே கம்பெனியாரால், மானேஜ் செய்யப்பட்டு வருகிறது. லாபத்தை கவரன்மெண்டாரும், டிஸ்திரிக்ட் போர்டாரும், பாகித்து வந்தார்கள் டிஸ்திரிக்ட் போர்டாருக்கு, வந்த லாபம், வருஷத்தில் ஒரு லக்ஷம் ரூபாய்க்கு அதிகரித்தபடியால், இந்த வியாபாரத்தில் லாபமிருப்பதைக்கண்டு, அவர்கள் முத்துப்பேட்டையிலிருந்து, அரந்தாங்கி வரையில் நாற்பத்தொன்பது மயில் நீளமுள்ள இருப்புப்பாதை இன்னும் போடலாமென்று, அதற்காக மறுபடியும், இருபது லக்ஷம், கடன் வாங்குவதற்கு, கவரன்மெண்டார் உத்திரவு பெற்று, 1901ம் வருஷம் கடன் பத்திரிகையையும் பிரசுரம் செய்தார்கள். ஐரோப்பியர்கள் மட்டும், ஆறு லக்ஷம் ரூபாய் கடன் கொடுத்தார்கள். நம்முடைய தேச கனவான்களோ இதன் லாபத்தை அறியாமல், ஒரு பைசாகூட இதற்கு கொடுக்க முன்வரவில்லை. ஜனங்களிடத்திலிருந்து, இந்த இருப்புப் பாதைக்கு வேண்டிய இருபது லக்ஷம் ரூபாயை டிஸ்திரிக்ட் போர்ட்டார்சேர்க்க முடியாததனால், மதிராஸ் கவரன்மெண்டார், தாங்களே கடன்கொடுத்து இந்தப் பாதையை முடித்து வைத்தார்கள். கடன் முதலுக்காக கொஞ்சம் தொகை கொடுப்பது தவிர வருஷந்தோறும், நூற்றுக்கு நாலு வட்

டியையும் டிஸ்திரிக்ட் போர்டார் செலுத்திக் கொண்டுவருகிறார்கள். இந்த 103 மைல் ரெயில் முழுவதும் டிஸ்திரிக்ட் போர்டாருடைய சொந்த ஆஸ்தியாய்விட்டது.

இந்தப் பாதையில் செலவு செய்யப்பட்டிருக்கிற அசல் தொகை ரூபாய் நாற்பத்தேழு லக்ஷம் எண்பத்து ஆறாயிரத்து ஐநூற்று ஐம்பத்து நாலு, (47,86,554). வருஷத்தில் வரவு ரூபாய் ஆறு லக்ஷம் முப்பத்து மூவாயிரத்து நூற்றெண்பத்தொன்று (633,181). வருஷந் தோறும் கவரன்மெண்டாருக்கு கடனுக்காகச் செலுத்த வேண்டிய தொகையும், சிப்பந்தி, முதலிய மற்ற செலவுகளும் போக, மிகுதி லாபம்—இரண்டு லக்ஷம் எண்பத்தாறாயிரத்து நூற்றறுபத்தொன்பது, (2,86,169), அதாவது, அரைவட்டி தேறுகிறது. இவர்களுக்கு, இந்த ரெயில்வேயிலிருந்து இதுவரையில் சுமார் 13 லக்ஷம், லாபம் சேர்ந்திருக்கிறது. இந்தப் பணத்தைக் கொண்டு, இன்னும், நீடாமங்கலம் முதல், மன்னார்குடி வரையிலும், திருத்துறைபூண்டிமுதல் வேதாரண்யம் வரையிலும், இருப்புப்பாதை போடுவதற்கு, ஏற்பாடு செய்கிறார்கள். இதுவும், சீக்கிரம் முடியும்.

தஞ்சாவூர் ஜில்லாவைப் பார்த்துக்கொண்டு திருநெல்வேலி, மதுரை, சேலம், கோயமுத்தூர், குண்டூர், டிஸ்ட்ரிகட் போர்டார்கள் அவரவர்கள் ஜில்லாவில் ரெயில் போடஎத்தனிக்கிறார்கள். எல்லாருக்கும், ஏககாலத்தில் கவரன்மெண்டார் உதவிசெய்வது அசாத்தியம். இவ்வித காரியங்களுக்கு நம்மிடத்தில் பணமில்லை என்று சொல்வது சரியல்ல. நகையாக நம்முடைய தேசத்தில் எண்ணூறு (800) கோடிக்கு மேலிருப்பதாக கர்ஸன் பிரபு கணக்கிட்டார். மதிராஸ் பாங்கி, ஸேவிங்ஸ் பாங்கி, ஐரோப்பியர்களுள் ஏற்படுத்தப்பட்ட பாங்கிகளிலும், சொற்ப வட்டிக்காக அநேக தனவான்கள் தங்கள் பணத்தைக் கட்டி இருக்கிறார்கள். மைனர் ஜமீன்தார்கள் பணம் கோர்ட் ஆப் வார்ட்ஸி லிருப்பதும் தெரிந்தவிஷயம். தேவகோட்டை செட்டிமார்கள் தனிகர்களென்றும் பிரஸித்தம். பணமிருக்கின்றது. அதை இவ்வழியில் உபயோகிக்கும் மனிதர்கள்தான் இல்லை. அந்தந்தஜில்லாவிலிருக்கும் தனவான்கள், தங்கள் பணத்தை இவ்வித லாபகரமான காரியங்களில் உபயோகித்தால், தாங்கள் நன்மை அடைவதும் தவிர, நம்முடைய தேசமும், சீக்கிரத்தில் நல்லஸ்திதியை அடையும் என்பதற்குச்சந்தேகமில்லை. இது சுதேசியின்காரியம். வீண்வாதம் பேசி, நாளைக்கழியாமல், கூடிய அளவுநன்மை செய்யமுயல்பவன்தான் இந்தியாவின் க்ஷேமத்தை கோருகிறவனாவான். அவனே, தானும் தன் தேசத்தாரும் **"பிழைக்கும் வழியை"** அறிந்தவன்.

வி. ராமஸ்வாமி அய்யங்கார்.

—:o:—

## REFORM OF INDIAN AGRICULTURE.

BY

C. S. MAHADEVA PILLAI.

## இந்திய விவசாயத் திருத்தம்.

இந்தியாவில் விவசாயிகளின் தொகையும் பயிரிடப்பட்ட நிலங்களின் விஸ்தீரணமும் 19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்ததைவிட அநேக மடங்கு ஜாஸ்திப்பட்டிருந்தாலும், நாகரிக மடைந்த மற்றதேசத்து விவசாயிகளைப்போல இந்திய விவசாயிகள் நவீன முறைகளை அனுசரிக்காததற்கு அவர்களின் ஊக்கமின்மையும் தரித்திரமுமே காரணங்களென்று சொல்லலாம். நம்மவர்களில் அநேகர் நம்முடையமுன்னோர்கள் அனுசரித்துவந்த முறைகள் குற்றம் சொல்லக்கூடியவைகளல்ல



என்று சொல்லலாம், ஆனால் அவர்கள் செய்துவந்த விவசாயமானது பூமி ஸாரம் நிரம்ப உள்ள அந்தக் காலத்திற்குத் தகுதியானதே ஒழிய நிலஸாரம் பூராவையும் கிரகிக்கக்கூடிய மணிலாக்கொட்டை போன்ற எண்ணெய் வித்துகள் பயிரிடப்பட்டு அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் இந்தக் காலத்திற்குத் தகுதியானதல்ல. ஆகையால் இந்தியாவில் பயிரிடுவோர்கள் நவீன முறைகளை அனுசரிப்பார்களானால் இந்தியாவின் பொருளாதார நிலைமை பலப்படுமென்பது நிச்சயம்.

நிலஸாரத்தைவிருத்திபண்ணுவதற்கு உரம் அவசியமாயினும், இந்தியாவில் இயற்கையாய் கிடைக்கக்கூடிய உரத்தில் பெரும்பாகம் வியர்த்தமாக்கப் படுகிறது. இந்தியாவிலிருந்து 1907-1908-ம் வருஷத்தில் ஏற்றுமதியான மணிலாக்கொட்டை சுமார் $13\frac{1}{2}$ லட்சம் பாரத்துக்கு மேலாகிறதென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அந்த வருஷத்தில் ஏற்றுமதியான பிண்ணாக்கென்னும் உரமும் சற்றேறக்குறைய $13\frac{1}{2}$ லட்சம் பாரமாகிறது. நன்றாய் நசுக்கப்பட்டுப் பூரா எண்ணெயும் எடுக்கப்படாமல் ஏற்றுமதியாகும் பிண்ணாக்கை ஐரோப்பிய வியாபாரிகள் விலைக்கு வாங்கிச் சென்று அதிலிருக்கும் எண்ணெயை எடுத்து விட்டு மிகுந்த கழிவை தங்கள் தேசங்களில் உள்ள நிலங்களுக்கு உரமாகும்படி செய்கிறார்கள். கல்கத்தாவில் நடந்தேறிய இந்தியக் கைத்தொழில் சங்கத்தின் இரண்டாவது கூட்டத்தில் "எண்ணெய் வித்தையும் பிண்ணாக்கையும் ஒரு தேசத்திலிருந்து ஏற்றுமதி செய்வது அந்த தேசத்தின் நிலவளத்தை ஏற்றுமதிசெய்ததாகும்" என்று டாக்டர் வொயெல்க்கர் சொன்னதாக பரோடா மகாராஜா குறிப்பிட்டுச் சொன்னார். தவிர நம்முடைய நாட்டில் அகப்படக்கூடிய உரத்தில் விசேஷ சத்துள்ள மாட்டின் சாணத்தை விறகிற்கு பதிலாக முட்டை தட்டி உபயோகிக்கிறார்கள். அப்படி இல்லாமல் உரத்திற்கு என்று சாணத்தை சேகரித்து வைப்பவர்களின் உரக்குழிகள் வெயில் காற்று மழை இவைகள் சாதாரணமாய்ப் படக்கூடிய இடத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன ; ஆகையால் நிலத்தின் சாரத்தை விருத்திபண்ணக்கூடிய "நைட்ரோஜன்" என்னும் வாயுவானது அந்த உரக்குழிகளில் சேகரித்து வைத்திருக்கும் உரத்திலில்லாமல் போய்விடுகிறது. இப்படியெல்லாம் வியர்த்தமாகும் உரங்களைப் பரிபாலனம் செய்து நமது நிலங்களில் உபயோகித்தால் நிலவளம் ஜாஸ்திப்பட்டு ஜாஸ்தியான பலனடைவதற்குச் சாதகமாகும். நம்முடைய தேசத்தில் தழை எருவிடுகிறவர்கள் சொற்பம். அமெரிக்காவில் "யுனைடெட் ஸ்டேட்ஸ்" என்று சொல்லப்பட்ட ஐக்கிய நாட்டின்விவசாயம் முன்னேறி நிற்பதற்குப்பலகாரணங்கள் உண்டு. அவற்றில் ஒன்று தழையெருவிடுதல்என்று சொல்லலாம். நிலத்தில் "பாக்டீரியா" என்னும் கிருமிகள் இருப்பதாகவும் நிலத்தை உழுத பிற்பாடு அக்கிருமிகள் பூமியின் மேல் வந்து, பயிரைச் செழிப்பாக வளரச்செய்யும் நைட்ரோஜனை அருந்துகிறதென்றும் அப்படி அருந்திய நைட்ரோஜனைப்பயிர்கள் வேர்கள் மூலமாய் ஏற்றுச்செழிப்பாய் வளருகின்றனவென்றும் அமெரிக்கர்கள்கண்டுபிடித்திருக்கிறார்கள். அமெரிக்காவில் உள்ள ஒரு சோதனைக் கழனியில் ஒரு நெல் கொள்ளக்கூடிய இடத்தில் கோடிக்கணக்காய் பாக்டீரியா கிருமிகளிருந்ததாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. சில நிலங்களில் மிகவும் குறைந்திருப்பதாயும் அதாவது நூற்றுக்கணக்காய்க்கூட இல்லாதிருப்பதாயும் கண்டு பிடித்திருக்கிறார்கள். பாக்டீரியா கிருமிகள் குறையக்குறைய நில

ஸாரமும் குறையும். ஆகையால் அக்கிருமிகளை விருத்திபண்ண முயலுவது ஒவ்வொரு விவசாயியின் கடமையாயிருக்கிறது. கொழுஞ்சி, காணம் (கொள்ளு), கடலை, துவரை, பயறு, உளுந்து, சணல், எள், இவைகளைப் போன்ற வித்துக்களை விதைத்து அவைகள் பூவாயிருக்கும்பொழுது நிலத்தில் மக்கும்படி செய்வதால் அந்நிலத்திலுள்ள பாக்டீரியா ஜாஸ்திப்பட்டு நிலத்தின் ஸாரம் அதிகப்படும். இவ்விதம் நிலஸாரம் அதிகப்பட்டால் பூமியானது சரியான மகசூலைக் கொடுத்து நிலக்காரர்கள் பெரும் லாபத்தை அடைவார்கள்.

இந்திய விவசாயிகள் தம் முன்னோர்கள் பயிரிட்டு வந்த தானியங்களைப் பயிரிட்டு வருகிறார்களே யொழிய காலத்திற்குத் தக்கபடி லாபந் தரக்கூடிய பயிர்களைப் பயிரிட்டுப் பலனடைந்ததாயில்லை. உதாரணமாக, மணிலாக் கொட்டையானது முப்பது வருஷங்களுக்கு முன்வரையிலும், எவ்வளவோ தேவையாயிருந்தும் அதனால் லாபம் ஜாஸ்தி யுண்டென்று அறிந்திருந்தும் நம்மவர்களால் போதுமான அளவு கையாளப் படாமலிருந்து வந்தது. ஆனால் தற்சமயத்தில் திருப்திகரமான அளவு சென்னை பம்பாய் மாகாணங்களில் மணிலாக் கொட்டை பயிர் செய்யப் படுகிறது. மற்றத் தானியங்கள் பயிரிடப் பட்டிருக்கும் நிலங்களில் மழைகுறைவாயுள்ள சமயங்களில் வேறு தண்ணீர் வசதியில்லாததால் மிகவும் சொற்ப மகசூலே கைக்குக்கிட்டுகிறது. மழையில்லாத இச்சமயங்களில் இரண்டு மாதகாலத்திற்குள் பலன்கொடுக்கக் கூடியதும் அதிக மழை வேண்டாததுமான அறுபதாங்குறுவை, உளுந்து, போன்ற தானியங்களையும், சொற்ப மழையினாலும் பனியினாலும் மகசூல் கொடுக்கக் கூடியபனிப்பயறு போன்ற தானியங்களையும் பயிர் செய்து லாப மடையலாம்.

வி. எஸ். மகாதேவபிள்ளை.

## THE CO-OPERATIVE MOVEMENT.

## கூட்டுறவு எழுச்சி.

1904-ம் வருஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் ஒரு ஆக்டு செய்தார்கள். அது அவ்வருஷத்திய 10-வது ஆக்டாகும் அதன் பெயர் ஐக்கிய நாணயச்சங்கங்களின் சட்டம் என்பதே. ஜனங்களுக்குள் ஐக்கியமித்திரம் உண்டாகி செட்டாய்ப் பணங்களைச்சேர்த்து, அவர்களில் ஒருவருக்கு ஒருவர் ஒத்தாசை செய்து, கடனாளிகளை விடுவித்து எல்லாரும் ஸௌக்கியமடைய வேண்டும் என்பதே அந்தச் சட்டத்தின் கருத்தாம். இதற்கு இசைய கவர்ன்மெண்டாரும் ஸல்லிசு வட்டிக்கு கடன் கொடுத்துவாங்கிக்கொண்டும், இச்சங்கங்களை மேல்பார்த்து சீர்திருத்தம் செய்யத் தகுந்த உத்தியோகஸ்தர்களை நியமித்தும், மற்றும் பலவித சகாயங்களைச் செய்தும் வருகிறார்கள். லார்ட் கர்ஸன் துரை கவர்னர் ஜனரலாக இருந்தபோது அவரால் செய்யப்பட்ட பல ராஜரீகமார்க்கங்களில் இது சிறந்தது. ஸர்வஜன ஸம்மதமானது. ஜனங்கள் எல்லாரும் அந்தந்த கிராமங்களில் சமுதாயக்கூட்டமாகச் சேர்ந்து பல விஷயங்களை விவகரிப்பது என்ற வழக்கமே அநேகமாய்ப் போய் விட்டதால் கவர்ன்மெண்டாருடைய முயற்சி இல்லாமல் இனி கிராமங்களில் ஜனங்கள் பொது விஷயமாகக்கூடுவது கடினமாகும். இந்தஆக்டு பிரகாரம் ஒரு சங்கம் உண்டாகும்படிக்கும் ஜனங்கள் ஒன்றுகூடி வாழும்படிக்கும் சௌகரியங்கள் ஏற்படுமாதலால் இதைச் சிறந்தது என்றுசொல்லலாம். ஜனங்களுடைய நிலைமையை விருத்தி செய்ய இப்படிப்பட்ட சங்கங்கள் அவசியம். 1904-05-ம் வருஷத்தில் 10 சங்கங்கள் இருந்தன. இப்போது 101 சங்கங்களிருக்கின்றன. இதனால் இப்படிப்பட்ட



சங்கங்களின் நன்மையை ஜனங்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்கள் என்று வெளியாகிறது. ஆனால் இந்தச் சங்கங்களின் அபிவிருத்தி விஷயத்தில் ஜனங்கள் சிரத்தை எடுத்துச் செய்ய வேண்டிய வேலைகள் எவ்வளவோ பாக்கியிருக்கின்றன.

எல்லாத் தொழில்களிலும் விவசாயத் தொழிலில் அதிக உழைப்பும், விடாமுயற்சியும் வேண்டுமென்பது யாவரும் அறிந்த விஷயம். இத்தொழிலைசரிவரச்செய்வதில் அநேக கஷ்டங்களிருக்கின்றன. கடைசியில் உழுதவன் கணக்குப்பார்த்தால் உழக்குக்கூடமிஞ்சுவதில்லை என்பது பிரஸித்தமான விஷயம். விவசாயத்தைச் சீர்திருத்த கவர்ன்மெண்டார் சோதனைப்பண்ணைகளை வைத்துப்பயிர்செய்து காட்டுகிறார்கள். பள்ளிக்கூடங்களை வைக்கிறார்கள். கிணறு வெட்டுவதற்கு முன்னால் ஜலம் அகப்படும் அகப்படாது என்பதைப் பரீக்ஷித்துப் பார்த்து நிலக்காரர்களுக்குச் சொல்லுகிறார்கள். இவைகளை எல்லாம் ஜனங்கள் கற்றுக்கொண்டாலும், அவைகளை அனுஷ்டானத்திற்குக்கொண்டுவர அவர்களிடம் முதல் இல்லாமையால் முன்னுக்கு வர முடியாமலேபோகிறது.

இதேமாதிரி, யந்திரங்களால் நெய்யப்பட்ட பிறநாட்டுத்துணிகள் நம்முடைய தேசத்தில் ஏராளமாய் வர, தொன்று தொட்டு நம்முடைய ஜனங்கள் செய்து வந்த நெசவுத் தொழிலும் மலினமடைந்துவிட்டது. இப்படி பயிர்த்தொழிலும் மற்றத்தொழில்களும் முன்னுக்கு வராததற்குக் காரணம் முக்கியமாய் பணம் கையில் இல்லாததுதான். இந்தச் சங்கடம் 1904-ம் வருஷத்திய 10-வது ஆக்டினால் ஒருவாறு நிவர்த்தியாகக் கூடுமென்று சொல்லலாம்.



ஆக்டினால் எவ்வளவு நன்மைகள் ஏற்படக் கூடியதானாலும் நமக்குள் கூட்டுறவும் ஐக்கியமும் இல்லாவிட்டால் ஒன்றும் நடவாது. இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் முன்னுக்கு வர மூன்று விஷயங்கள் அவசியம். சங்கத்தின் காரியங்களை நடத்திவர தகுந்த புத்திசாலிகள் வேண்டும். அவர்கள் உள்ளூராராகவே இருக்க வேண்டும். எல்லாரும் யோக்கியமாயும் அன்னியோன்னியமாயும் உபகாரசிந்தையுடனும் வேலைகளைச் செய்துவரவேண்டும். இப்படியே பிரான்ஸ், இட்டலி, ஜர்மனி, டென்மார்க் முதலிய தேசங்களில் ஐக்கிய நாணயச்சங்கங்கள் ஏற்பட்டு அச்சங்கத்தார்கள் விவசாயிகளுக்கு ஸல்லிசு வட்டிக்குப்பணம் கொடுத்து வருவதுமல்லாமல் தாங்களே வியாபாரமும் செய்து வருகிறார்கள்.

## THE FOURTH INDIAN INDUSTRIAL CONFERENCE.

## நான்காவது இந்தியக் கைத்தொழில் அபிவிருத்தி சபை.

நம்முடைய தேசக் கைத்தொழில்களும் வியாபாரங்களும் ஓங்குவதற்கு முக்கியமாய் இரண்டு சங்கடங்கள் இருக்கின்றன. முதலாவது, அந்நியதேசத்தார்கள் கல்விப்பயிற்சியினாலும், சாஸ்திர ஆராய்ச்சியினாலும், நூதன யந்திரங்களை உபயோகிப்பதனாலும், அவரவர்கள் கவர்ன்மெண்டார் அவரவர்களுக்குக்கொடுக்கும் உதவிகளினாலும், கைத்தொழில்களிலும், வியாபாரத்திலும் நம்மைவிட எவ்வளவோ முன்னேறிவிட்டார்கள். ஆதலால் அவர்களோடு நாம் போட்டி போட்டு வியாபாரம் செய்வது கஷ்டமாயிருக்கிறது. இரண்டாவது, நம்முடைய தேசப்பள்ளிக்கூடங்களில் சொல்

லிக்கொடுத்துவரும் படிப்பு, கைத்தொழில் வியாபாரம் முதலியவைகளைச் செய்வதற்கு அநுகூலமுள்ளதல்ல. இங்கிலீஷ் படித்தவர்கள் வியாபாரம் என்றால் பாம்புப்புற்றில் கையிடுவதுபோல் எண்ணுவதோடு கூட, அதை அகௌரவமாயும் எண்ணுகிறார்கள். இங்கிலாந்திலும் சில நூற்றாண்டுகளுக்கு முன் வியாபாரம் செய்பவர்களை ஆங்கிலேய ஜனங்களை அவ்வளவு கௌரவமாக எண்ணவில்லை. ஆயினும் வியாபாரிகள் பணத்தைச் சம்பாதித்து பெரியவர்களாகவே வியாபாரத்துக்குக் கௌரவமும் ஏற்பட்டது. இப்பொழுது சீமையில் நமது சக்கரவர்த்தியின் மந்திரிகூட ஓட்டல் வைக்கலாம். அதனால் அவரை இகழ்ச்சியாய் ஜனங்கள் பேசமாட்டார்கள். எந்தத்தொழிலானாலும் திருடாமல் பொய்சொல்லாமல் யோக்கியமாய்த் தன்பிரயாஸையால் சம்பாதிப்பதே மனுஷத்தனம் என்று நமது தேசத்தார்கள் எண்ணத் தொடங்குவார்களானால், தேசஅபிவிருத்திக்கு எவ்வளவோ செய்யலாம். வேலை செய்யாமல் வீண்பொழுது போக்கும் ஒவ்வொருவரும் வேலைசெய்யத்தொடங்கவேண்டும். வேலை செய்யும் ஒவ்வொருவரும் அதை இன்னும் அதிகப் பலன் கொடுக்கும்படி செய்வதற்கு வேண்டியவழிகளை, படிப்பு, சாஸ்திரீய ஆராய்ச்சி, ஒற்றுமை, ஊக்கம், விடாமுயற்சி ஆகிய இவைகளோடு தேடுவார்களானால் நமது தேசம், கைத்தொழில்களிலும் வியாபாரத்திலும் ஓங்கி செல்வமுள்ளதாகக் கூடியதுதான். இந்த ஸாதனங்களை ஏற்படுத்துவதற்கே இந்தியத் தொழில் அபிவிருத்தி சபை நாலு வருஷகாலமாய்க் கூடிவருகின்றது.

சென்ற டிசம்பர் மாதத்தில் கூடிய சபையில் ம-௱-௱-ஸ்ரீ திவான்பகதூர் ராஜரத்தின முதலியார் அவர்கள் அந்தக் கூட்டத்திற்குவந்த பிரதிநிதிகளை அழைத்துத்தக்க மரியாதை செய்து வெகு விமரிசையாக நமது தேசத் தொழில்களைப்பற்றிப் பேசினார். பிறகு பீரார்மாகாணத்தில் பிரபல வக்கீலான ராவ் பகதூர் ஆர். என். மதோல்கார் என்பவர் அக்கிராஸனம் வகித்துத் "திரைகடலோடியும் திரவியந்தேடு" என்ற புராதன பழமொழியை யெடுத்துச் சொல்லி நம்மவர்கள் பொருள் சம்பாதிப்பதை ஒரு புருஷார்த்தமாகக் கொண்டார்களென்று தெரிவித்து, சுவதேசி, இந்தியாவில் தற்கால தொழில் நிலைமை, விவசாயம், தண்ணீர் பாய்ச்சுதல், ரயத்துக்களுடைய சிரமங்கள், கல்வி, சகாயநிதி, செட்டில் மெண்டின் நடவடிக்கைகள், தீர்வையைத் தள்ளிக்கொடுத்தல், பருத்தி வியாபாரம், தறிநெசவு, சுரங்கங்கள், கரும்பு உற்பத்தி, எண்ணெய் வியாபாரம், எரு, தோல் பதனிடுந் தொழில், ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம், தொழிலைக் கற்றுக்கொடுக்க சாதனமாகவுள்ள கல்வி, முதலிய அநேக உபயோகமான விஷயங்களைப்பற்றி விஸ்தாரமாய்ப் பேசி நம்மவர்களுக்கு இந்து தேச அபிவிருத்தியில் விடாமுயற்சியும் ஊக்கமும் வேண்டுமென்று சொல்லி முடித்தார். பிறகு வந்திருந்த பிரதிநிதிகள் எல்லாரும் கூடி அநேக தீர்மானங்களைச் செய்தார்கள்.

இந்தியாவில் ஆங்கிலேய அரசாட்சிக்குட்பட்டு அநேக மாகாணங்கள் இருக்கின்றன. அவைகளில் உள்ள ஜனங்களின் நிலைமையும், கல்விப்பயிற்சியும், அந்தந்த மாகாணங்களின் செழிப்பும் பலவிதம். எந்த விஷயத்திலும் இவைகளுக்கெல்லாம் ஓரேவித ஏற்பாடு சரிப்படமாட்டாது. அந்தந்த மாகாணத்துக்குத் தக்கபடி ஏற்பாடுகளைச்செய்ய வேண்டும். ஆகையால் கைத்தொழில் அபிவிருத்தி விஷயமாய் ஒவ்வொரு மாகாணத்திலும் டைரக்டர் என்று சொல்லப்பட்ட ஒரு முக்கிய அதிகாரியைக் கவரன்மெண்டார் நியமிக்கவேணும். இவருக்குக்கீழாக ஒரு தொழிற் பரிசோதனை இலாகாவும் அதற்குவேண்டிய சிப்பந்திகளும் நியமிக்கப்படவேண்டும்; இந்த இலாகாவில் தொழில் அபிவிருத்தியைப் பற்றியும், தொழில் கற்றுக்கொடுப்பதைப் பற்றியும் உள்ள சகல விசாரணைகளும் நடத்தப் படவேண்டும்; கவரன்மெண்டு உத்தியோகத்தில் இல்லாத பிரமுகர்களைக்கூட்டி முக்கியமான அம்சங்களை யெல்லாம் அவர்களோடு ஆலோசித்தே செய்யவேண்டும். இப்படிக் கூடும் ஆலோசனை சபையில் பாதிக்குக் குறையாமல் இந்தியர்களையே நியமிக்கவேண்டும்.

இந்த இலாகா உத்தியோகஸ்தர்கள் இப்பொழுது இந்தியாவில் இல்லாத எந்தெந்தப் புதுத் தொழில்களைச் செய்யலாமென்பதைப் பற்றியும், ஏற்கனவே இருக்கும் தொழில்களை புது மாதிரியாகச்செய்து எப்படி அதிக லாபத்தை சம்பாதிக்கலாமென்பதைப் பற்றியும் ஜனங்களுக்குத் தெரிவிக்கவேண்டும். மேலே சொல்லிய உத்தியோகஸ்தர்கள் அவர்களே முயற்சி எடுத்துக்கொண்டு வேண்டிய பரிசோதனைகளைச் செய்து சில தேர்ந்தெடுத்த தொழில்களை அபிவிருத்தி செய்யும் வழிகளையும் எல்லாருக்கும் தெரிவிக்க வேண்டும்.

ஜனங்களுக்குத் தெரிவதற்காக, இந்த டைரக்டர் பார்வைக்குட்பட்டு கைத்தொழில் பொருள்களையும், வியாபாரப் பொருள்களையும்சேர்த்து ஒரு பொருட்காட்சிச் சாலையும், வேண்டியவர்கள் தொழில்களைப்பற்றி கேட்கும் சமாசாரங்களுக்குப் பதில் சொல்ல ஒரு தனி ஆபீசும் இருக்கவேண்டும்.

இன்ன தொழிலைச் செய்தால் லாபம் கிடைக்கும் என்பதைமட்டும் சொல்லிவிட்டால் போதாது. தெளிவில்லாத ஜனங்களுக்கு அந்தத்தொழிலைச் செய்யும்வழிகளையும் அப்படிச் செய்வதற்கு வேண்டிய தொழிற்படிப்பையும் கவரன்மெண்டார் சொல்லிக்கொடுக்கவேணும். இதற்காக பம்பாயில் இருக்கும் விக்டோரியா ஜூபிலி டெக்னிகல் இன்ஸ்டிடியூட் என்று சொல்லப்பட்ட தொழிற்கல்விச் சாலையையும், புனா நகரத்தில் உள்ள காலேஜ் ஆப் ஸையன்ஸ் என்று சொல்லப்பட்ட தொழிற் காலேஜையும், இப்போதிருப்பதைவிட அதிகமாய் விசாலப்படுத்தி அவைகள் இரண்டும் சேர்ந்து பம்பாய் ராஜதானிக்கு வேண்டிய கைத்தொழில், ரஸாயனத் தொழில்களைச் சொல்லிக்கொடுக்கத்தக்கதாய் ஏற்பாடு செய்யவேண்டும். அதே மாதிரி வங்காளத்துக்காக ஸிப்பூர் என்னும் பட்டணத்தில் இருக்கும் இஞ்சினீர் காலேஜில் தொழிலுக்கு உபயோகமாகக்கூடிய ரஸாயன சாஸ்திரத்தைக் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். சென்னப்பட்டணத்தில் இருக்கும் இஞ்சினீர் காலேஜை இன்னும் விஸ்தாரப்படுத்தி, நம்முடையராஜதானிக்கு அதை ஒரு தொழிற் கலாசாலையாக ஏற்படுத்தவேணும். வட இந்தியாவில் ஐக்கியமாகாணக்காரர்களுக்காக மேலே சொல்லியவைகளைப்போலவே கான்பூர் என்ற நகரத்திலும், பஞ்சாப், பர்மா, கீழ்வங்காளம், ஆஸ்ஸாம் என்ற இடங்களிலும், தொழிற்கலாசாலைகள் ஏற்படுத்தப் பட வேண்டும்.

கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய ஸாதனங்களைப்பற்றி மேலே சொன்னோம். தொழில்களைச்செய்து பண்டங்களை உற்பத்தி செய்வதனால்மட்டும் லாபம் கிடைத்துவிடாது. லாபமெல்லாம் அவைகளை விற்பதனாலேயே. ஆகையால் விற்பனைசெய்யும் ஸாமர்த்தியத்தையும் நமது தேசத்தார் விருத்திசெய்யவேண்டும். இதை அமெரிக்கா போன்ற தேசங்களில் மிகவும் பயிற்சிசெய்து வருகிறார்கள். இப்படி வியாபார விஷயமான கல்வி, இந்தக்காலத்தில் அதிக அவசியம்.

ஆகையால் ஒவ்வொரு மாகாண முக்கிய பட்டணத்திலும், வியாபார விஷயத்தைப்பற்றி போதிக்கும் கலாசாலை ஒன்று இருக்கவேண்டும். ஷை கலாசாலைகளில் வெளியூர்களுக்குப் போய்க்கற்றுக் கொடுக்கத்தக்க உபாத்தியாயர்களாக சிலரைத் தயார் செய்யவேண்டும். இப்போது இந்திய 'யூனிவர்ஸிடி' என்று சொல்லப்பட்ட சர்வகலாசாலைகளில், பொதுக்கல்வி, சட்டப்பரீக்ஷை, இஞ்சினீர் பரீக்ஷை, முதலியவற்றிற்குத் தகுந்த பட்டங்கள் கொடுப்பது போலவே, வியாபார விஷயங்களைப் பற்றியும் பரீட்சைகள் செய்து அதில் தேர்ந்தவர்களுக்கு பட்டங்கள் கொடுக்கவேண்டும்.

இப்படிக்குக் கைத்தொழில், வியாபாரம், தொழிற்கல்வி ஆகிய இவைகளைப்பற்றிப் பொதுவாய்ப் பேசிவந்த பிரதிநிதிகளெல்லாரும் மேலேசொல்லியபடி பல தீர்மானங்களைச்செய்தார்கள். இவைகளைத்தவிற குறிப்பிட்ட சிலவிஷயங்களைப்பற்றியும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. கூட்டுச்சேர்ந்து பணம்சேகரித்து சுலப வட்டிக்கு கடன்கொடுக்கும் 'கோவாப ரெடிவ் கிரெடிட் ஸொஸயடி' என்னும் சங்கங்களுக்கும், பயிர்செய்பவர்களுக்கும், சரஸவட்டியில் கடன் கொடுப்பதற்காக விவஸாய பாங்கிகள் வேண்டும் என்றும், இப்படிப்பட்ட பாங்கிகள் ஏற்பாடு செய்யக் கவரன்மெண்டார் உடனே தக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், அப்படி ஆரம்பிக்கும் பக்ஷத்தில் முதலாளிகளாய் இருக்கும் இந்தியர்களும் கவரன்மெண்டு நிதிகளில் தங்கள் பணத்தைச் சேர்த்து வேலை செய்யத் தயாராக நிற்பார்களென்றும், தீர்மானிக்கப்பட்டது.

இந்தியாவில்உள்ள ஆலைகளில் நெய்யப்படும் சில வகைத்துணிகளுக்குக் கவரன்மெண்டாரால் ஒரு சுங்கவரி விதிக்கப்பட்டிருக்கிறது. அந்தவரி அனாவசியமென்றும், நியாயமல்லவென்றும், ஆகையால் தாமதமில்லாமல் அதைஉடனே நீக்கிவிடவேண்டுமென்றும், தீர்மானிக்கப்பட்டது. தவிர, இப்போதிருக்கும் ரெயில்வே கூட்ஸு சார்ஜுகள் மிகவும் அதிகமாயிருக்கிறதென்று பலர் முறையிடுவதைக் கவரன்மெண்டார் கவனிக்கவேண்டுமென்றும், அந்நிய தேசத்திலிருந்து இறக்குமதியாகும் பண்டங்களோடு இந்த தேசத்துச் சரக்குகளை ஸமானமாய் விற்பதற்கு மேற்படி சார்ஜுகள் இடங்கொடுக்கின்றனவா, இல்லையா, என்று கவரன்மெண்டார் விசாரிக்க வேண்டுமென்றும், அப்படி விசாரித்து ஷை சார்ஜுகளால் எங்கங்கே பிரதிகூலங்களிருக்கின்றன என்று ஏற்படுகிறதோ, அங்கங்கே, சார்ஜுகளைக்குறைக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இது வரையில்சொன்ன விஷயங்களுக்கு ஸர்க்கார் உதவி அவசியம். ஆகையால் அவைகளை எல்லாம் கவரன்மெண்டார் கவனிக்க வேணும். தேசாபிமானிகள் செய்யவேண்டிய காரியங்களும் அநேகம் இருக்கின்றன. சுரங்கங்களை வெட்டி எடுப்பதிலும், துணிநெய்வதற்கு ஆலைகளை ஏற்படுத்துவதிலும், சர்க்கரையை உற்பத்தி செய்வதிலும், இந்திய தேசத்தில் முதலாளிகள் தங்கள் தனத்தை உபயோகிக்க வேண்டுமென்றும், ஷை விஷயங்களுக்காகக் கூட்டு வியாபாரம் செய்யப் பலர் சேர்ந்து கம்பெனிகள் ஏற்படுத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கடைசியாய் 1909-ம் வருஷத்துக்கு ராவ் பகதூர் ஆர். என். மதோல்கார் என்பவரை காரியதரிசியாகவும், வி. ஒய். சிந்தாமணி என்பவரை உபகாரியதரிசியாகவும், நியமித்து ஒரு வருஷச் செலவுக்குவேண்டிய ரூபாய் ஐந்தாயிரத்தைப் பொது ஜனங்கள் எல்லாரும் சேகரித்துக்கொடுக்க வேண்டுமென்றும் வந்த பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டார்கள்.



# THE COLLECTOR.

## கலெக்டர்.

ஒவ்வொரு ராஜதானியும் அநேகம் ஜில்லாக்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு ஜில்லாவுக்கும் கலெக்டர் என்ற பெரிய உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டிருப்பது தெரிந்த விஷயம். இந்த உத்தியோகம் முதலில்எப்பொழுது ஏற்பட்டது, கலெக்டருக்கு உள்ள அதிகாரம் என்ன, அவர் வேலை என்ன, அவருக்கு உள்ள பொறுப்பு என்ன என்று விசாரிப்போம்.

சுமார் 125 வருஷங்களுக்கு முன்னால் இந்தியாவுக்கு முதல் கவர்னர் ஜனரலாக இருந்த வாரின் ஹேஸ்டிங்ஸ் என்பவர் காலத்தில் கலெக்டர் என்ற உத்தியோகம் உண்டாயிற்று.

கலெக்டர் அந்தந்த ஜில்லாவுக்கு கவரன்மெண்டாருடைய பிரதிநிதி. இவருக்கு ஆதியில் ரிவினியூ, கிரிமினல், ஸிவில் முதலிய எல்லா விசாரணைகளும் இருந்தன. சிலகாலத்துக்குப் பிறகு ஸிவில் விசாரணைமட்டும் இவரை விட்டுபிரிக்கப்பட்டு, மற்ற ரிவினியூ, கிரிமினல், அதிகாரங்கள் இவரிடமே இருந்ததால் இவருக்கு கலெக்டர் என்றும் டிஸ்திரிகட்டு மாஜிஸ்ட்ரேட் என்றும் பெயர்.

கலெக்டரின் முக்கியமான வேலைகள் நிலஸம்பந்தமான வேலைகளே. அதாவது நிலத்தீர்வையைக் கவனிப்பது, குடிகளிடமிருந்து தீர்வையை வசூல் செய்வது, குடித்தனக்காரர்களின் நிலைமையைக் கவனித்து வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுப்பது, விவசாயம், விளைவு, விலைவாசி இவைகளைக் கணக்கிடுவது, குடிகளுக்கும் மிராசுதார்களுக்கும் நிலம், வரி, இவைகள் விஷயமாய் நேரிடுகிற விவகாரங்களைத் தீர்ப்பது, சாகுபடியை விருத்திசெய்யக் குடிகளுக்குக் கடன்கொடுத்து அவைகளை வசூல் செய்வது, ஆகிய இவைகள் கலெக்டரின் வேலைகள். மேலும், ஆப்காரி, கஸ்டம்ஸ்வரி, இன்கம்டாக்ஸ்வரி, முதலான எல்லா ஸர்க்கார் வரும்படிகளையும் இவரே கவனிக்க வேண்டும். ஸர்க்கார்ப்பணம் பந்தோபஸ்தாய் வைக்கப்படும் ஜில்லா கஜானா நடவடிக்கைகளுக்கும் இவரே ஜவாப்தாரி.

மாஜிஸ்ட்ரேட் என்ற உத்தியோக நிலைமையில் கிரிமினல் கேஸ்களை விசாரித்துஆயிரம் ரூபாய் வரையில் அபராதம் போடவும், இரண்டு வருஷம்வரையில் தண்டிக்கவும் அவருக்கு அதிகாரம் உண்டு. ஆனால் பலவேலைத் தொந்தரையால் அவர் நேரில் கேசுகளை விசாரிக்க சௌகரியப்படுகிறதில்லை. அநேகமாய் அவருக்குக் கீழ்பட்ட மாஜிஸ்ட்ரேட்டுகளே விசாரிப்பது வழக்கம். அப்படி விசாரிக்கும் மாஜிஸ்ட்ரேட்கள் சரியாய் வேலைசெய்து வருகிறார்களா என்று மேல்பார்த்து வருவதோடு அவர் ஜில்லாவில் திருட்டு, கொள்ளை, கொலை, முதலிய குற்றங்கள் நடவாமலும், கலகம் இல்லாமல் அமைதியாய் இருக்கும் படிக்கும் கவனித்துவரவேண்டியது. இதோடுகூட ஜெயில் மேல்பார்வையும் அவருக்குண்டு.

மேலே சொல்லப்பட்டவைகளைத் தவிர, ஜனங்களுடைய க்ஷேமத்துக்கு அவசியமானவைகளை கவனிக்கவேண்டியதும் அவர்கடமை. இஞ்சினீர் இலாகா, காட்டு இலாகா, ஜெயில் இலாகா என்று ஒவ்வொன்றுக்கும் பிரத்தியேகமாய் டிபார்டுமெண்டுகள் ஏற்பட்டிருந்தாலும் இவைகளின் நடவடிக்கைகளில் கலெக்டருடைய யோசனையும் ஐக்கியமும் அவசியம். அநேக மெம்பர்கள் சேர்ந்து முனிசிபாலிடி என்று பெயர் வகித்து வரி வசூல் செய்து ரஸ்தா, படிப்பு, ஆஸ்பத்திரி, ஜலவசதி முதலான விஷயங்களில் அவர்களே செலவழித்து வந்தா

லும் அவர்களை சரியான வழியில் நடத்துவிப்பது கலெக்டருடைய கடமை. இப்படியே லோகல்பண்டு விஷயங்களிலும் அவர் பிரஸிடெண்டு என்ற அதிகாரத்தை வகித்துக் கவனிக்க வேண்டியது.

ஜில்லாவில் கலகம் நேரிடாமல் பார்த்து வருவதும், அகஸ்மாத்தாய் கலகம் நேர்ந்தால் அதைத் தைரியமாய் அடக்குவதும் அவர் கடமை. கவரன்மெண்டாரால் அப்போதைக்கப்போது பிறப்பிக்கப்படும் உத்தரவுகளை ஜனங்களுக்குத்தெரிவிப்பதும்கொடியவியாதி பஞ்சம் முதலியவைகளில் குடிகள் மடியாமல் அப்போதைக்கப்போது கவனித்துக் கவரன்மெண்டாருக்குத் தெரிவித்து பரிகாரங்களைச் செய்விப்பதும் அவர் வேலையே.

இவ்வளவு வேலையையும் இருந்த இடத்திலிருந்தே செய்ய முடியுமா ? கிராமம் கிராமமாய் சவாரிபோய்க் குடிகளை நேரில் கண்டு பேசினுல் மாத்திரம் அவர்களுடைய சுகதுக்கங்களும் அவர்கள் அபிப்பிராயங்களும், அங்கங்கே நடக்கும் குற்றம் குறைகளும், நியாய அநியாயங்களும் வெளியாகும்.

மேலேசொல்லிய விஷயங்களால் கலெக்டர் ஜில்லாவில் ஸர்வாதிகாரமுள்ளவரென்றும் அவரைக்கொண்டே அங்கங்கே ஆகவேண்டிய காரியங்களை முடித்துக் கொள்ளவேண்டுமென்றும் ஏற்படுகிறது. அப்படிச் செய்யாமல் மாகாண கவரன்மெண்டாருக்கு எந்த விஷயத்தைப்பற்றியாவது நேரில் எழுதிக்கொண்டால் அவர்கள் கலெக்டரிடம் மனு செய்து அவருடைய உத்தரவைப் பெற்றுக் கொள்ள வேணுமென்று சொல்லிவிடுவார்கள். அப்படி இல்லாவிட்டால் அவரைக்கேட்டே எந்தக்காரியத்தையும் செய்வார்கள்.

---

## CULTIVATION OF LIME.

## எலுமிச்சை சாகுபடி.

---

தஞ்சாவூருக்கு அடுத்த அய்யம்பேட்டை என்னும் கிராமத்தில் எலுமிச்சை சாகுபடி செய்யும் விதத்தைப்பற்றி எஸ் சுப்பிரமணிய அய்யர் என்பவர் சுதேசமித்திரனில் அடியில் வருமாறு எழுதியிருக்கிறார்.

**பூமி** :—எலுமிச்சை சாகுபடிக்கு நல்ல வடிகாலுள்ள வண்டல் பூமி சிரேஷ்டம்.

**நாற்றங்கால்** :—பூமியை இரண்டு அடி ஆழம் கொத்தி புழுதிசெய்கிறார்கள். அதில் நன்றாய் மக்கின மாட்டு எருவை ஏராளமாகப்போட்டு மண்ணுடன் கலக்கவேண்டும். மாசி (பிப்ரவரி-மார்ச்சு) மாதத்தில் மரத்தடியில் விழுந்திருக்கும் நல்ல பழங்களை அறுத்து காயம்படாமல் எடுத்த விதைகளை கையில் ஒட்டாமலிருக்கும்படி கொஞ்சம் சாம்பலில் புரட்டி, [illegible]ன் காய்வதற்குமுன் தயார் செய்த [illegible] உற்பத்தி [illegible] அங்குலத்திற்கு ஒரு [illegible]ல் முதலாயின்றுகிறார்கள். பிறகு அந்த நாற்றங்கால்மேல், வாழைச் சருகுகளைப் போட்டு காயாமல் ஜலம் விட்டு வருகிறார்கள். களைகளை கையால் எடுத்து விடவேண்டும். கார்த்திகை மாதத்தில் கன்றுகள் சுமார் ஒரு அடி முதல் இரண்டு அடி வரையில் வளர்ந்திருக்கும். இப்போது இரண்டு அடிக்கு ஒரு கன்றாக விட்டு விட்டு நடுவிலுள்ள கன்றுகளை ஜாக்கிரதையாய்ப் பிடுங்கி இவைகளுக்காக வெட்டி எருவிட்டு தயார் செய்யப்பட்ட பூமியில் இரண்டு அடிக்கு ஒன்றாக நடுவார்கள். வெயிற்காலம் முழுவதும் செடிகள் காயாமல் ஜலம் இறைத்து வரவேண்டியது. இப்படி வள



ர்த்து மூன்றுவருஷத்திய கன்றுகளை, ஆழமாய் கொத்தி எருவிட்டு தயார் செய்த பூமியில், 15 அடிக்கு ஒரு வரிசையாகவும் ஒவ்வொரு வரிசையிலும் 15 அடிக்கு ஒரு செடியாகவும் கார்த்திகை மாதத்தில் நடுகிறார்கள். கன்றுகளுக்கும் செடிகளுக்கும் மத்தியில் கன்றுகள் மரமாகும்வரை வாழையைப் பயிர் செய்வதுண்டு. செடிகள் வைத்த மூன்றாவது வருஷம் முதல் பலன் கொடுக்க ஆரம்பிக்கின்றன.

வருஷாவருஷம் தோட்டத்தைக் கொத்தி நன்றாய் மக்கின சாணம் எருப்போட வேண்டியது. அம்மாபேட்டையில் அநேகமாய் மார்கழி மாதத்தில் கொத்தி எருவிடுகிறார்கள். ஆவணிமாதத்தில் கொத்தி எருவிட்டால் மழையினுல் எருவின் பலன் நன்றாய் புலப்படும். பிறகு மார்கழியில் ஒரு கொத்து மாத்திரம் போட்டால் புல் பூண்டு மடிவதுடன் பூமி தளர்ந்து ஈரம் காக்கும். சாணி எருவே உத்தமம். எலும்புத்தூள் பலனை விருத்தி செய்யும்.

**கவாத்து** :—செடிகளில் உலர்ந்த கிளைகளை அப்போதைக்கப்போது ஜாக்கிரதையாய் கத்தரித்துவிடவேண்டும். ஒவ்வொரு செடியிலும் பூமியிலிருந்து வரும் ஒன்று அல்லது இரண்டு பெரிய கிளைகளை மாத்திரம் விட்டு விட்டு பாக்கி உபகிளைகளை அதிகமாய் வைக்காமல் நீக்கி மேல்போகச் செய்வது உத்தமம். வெயிற்காலம் முழுவதும் ஜலம் இறைத்து செடிகளை பாதுகாத்து வரவேண்டும்.

இப்படி ஜாக்கிரதையாய்த் தோட்டத்தை ஆதரித்து வந்தால் சராசரி ஒவ்வொரு செடிக்கும் 1,000 முதல் 3,000 பழம் வரை கிடைக்கும்.

---

## THE SOWING OF PADDY.

## நெல் விதைத்தல்

---

சம்பா நெற்பயிர் செய்வதற்காக நாற்றங்கால் தயார்செய்து விதைத்து வருகிறார்கள். திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு ஏகராவிஸ்தீரணமுள்ள வயலுக்கு நாற்றுவிடவேண்டுமானுல் பட்டணம்படியால் 60 படி நெல்விதை விதைக்கிறார்கள். இதரதமிழ் ஜில்லாக்களில் ஒரு ஏகராவுக்கு பட்டணம்படி 30 முதல் 40 வரையிலுள்ள நெல்விதை விதைக்கிறார்கள். கிருஷ்ணாஜில்லாவிலே பட்டணம் படி 5 அல்லது 6 மட்டும் கொண்ட நெல் விதை விதைக்கிறார்கள். கிருஷ்ணா ஜில்லாவில் விளையும் பயிர் மற்ற தமிழ் ஜில்லாக்களில் விளையும் பயிரைப் போலவே நன்றாகவிருப்பதால், திருநெல்வேலியிலும் இதர தமிழ் ஜில்லாக்களிலும் அதிகமான நெல் விதை வீணாகப் போகிறதென்றும், இப்படி வீணாகப்போகும் அதிகவிதையை மிகுத்தால் வெகு பெயர்களுக்கு ஆகாரமாகும் என்றும் வியவசாய இலாகாத்தலைவரான மிஸ்டர் எம் இ. கூச்மான் அவர்கள் ஒரு குறிப்பெழுதியனுப்பியிருக்கிறார்.

அக்குறிப்பில் கண்டபடி கிருஷ்ணா ஜில்லாவில் மட்டும் அவ்வளவு குறைந்த நெல் விதை விதைப்பது போதுமானதாயிருப்பதற்குக் காரணமென்னவென்றால், அங்கேநாற்றங்கால்களுக்கு நன்றாக எருவிட்டிருப்பதும், விதைகளை அவ்வளவு நெருக்கமாக விதைக்காமல் தாராளமாக விதைப்பதுமே காரணமாகச் சொல்லப்படுகிறது. இப்படியிருப்பதால், நெற்பயிர் நன்றாக விருத்தியாகி வளர்கிறது. நாற்றைப்பிடுங்கி நடும்பொழுது ஒரு குழிக்கு ஒரு நெற்பயிர் விகிதமே நடுகிறார்கள்,

ஒவ்வொரு பயிரும் உரம் பெற்றதாயிருப்பதோடு நன்றாக வளருவதற்கு இடவிஸ்தீரணமுமிருப்பதால், ஒவ்வொரு நாற்றும் பலகிளைகள்விட்டு வளர்ந்து கடைசியில், பத்து நாற்றுக்களை யொன்று சேர்த்து நட்டால் அவையெல்லாம் சேர்ந்து வளர்ந்து எவ்வளவு கதிர் விடுமோ அதைவிட அதிகமாக செழித்துவளர்ந்த ஒற்றைப்பயிர் கதிர் விட்டுக் காட்டுகிறது. பத்துநாற்றுகளை ஒன்றாக நடுவதால், வேர்கள் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு, போதுமான ஆகாரமின்றி வளர்ச்சி குன்றிப்போக நேரிடுகிறது. ஒரு கால்நடை மேய்வதற்குப் போதுமான புலத்தில் பத்துக்கால்நடைகளைச் சேர்த்து மேயவிட்டால், பத்துக்கால்நடைகளும் ஆகாரம் போதாமல் இளைத்துப் போகுமே. அப்படியே 10 நாற்றுகளை ஒன்றாகச் சேர்த்து நடுவதால், பயிர் செழித்து வளர சாத்தியமின்றி விளைவு குன்றிப்போகிறது. கோயமுத்தூரிலுள்ள கவரன்மெண்டு விளைநிலத்தில், ஒரு நாற்றிலிருந்து 50 கிளைகள் விட்டிருக்க எண்ணிப்பார்த்தார்கள்.

சிதம்பரத்துக்கு சமீபத்திலுள்ள **வீரசோழகம்** என்னும் ஊரிலுள்ள ஒரு விவேகசாலியான ரயத்து இந்த உண்மையை தனக்குத் தானே பரீக்ஷித்துக் கண்டுபிடித்தார்; இப்பொழுது அவர் ஏகராவுக்கு $2\frac{1}{2}$ப்படி நெல் விதைதான் விதைக்கிறார். அப்படி குறைந்து விதைத்தும் அவருக்கு பக்கத்தாரைக் காட்டிலும் அதிகம் விளைகிறது.

ஒவ்வொரு ரயத்தும் தன் நிலத்தின் ஒரு சிறுபாகத்தில் இந்தவிதம் பரீக்ஷைசெய்து பார்க்கவேண்டும். நாற்றங்கால் தயார் செய்யும் பொழுது அதில் ஒரு பாகத்தில் நன்றாக எரு விட்டு விசாலமாக விதைவிதைத்து, ஒரு மாசத்துக்கு மேல் நாற்றை நாற்றங்காலில் விட்டு வைக்காமல், பிடுங்கி நட வேண்டும். விசாலமாக விதைத்திருப்பதால், நாற்று நன்றாகவும் செழிப்பாகவும் வளரும். ஆகையால் ஒரு மாசத்தில் நாற்றுப் பிடுங்கி நடத் தயாராயிருக்கும். நாற்றைப்பிடுங்கி நடும்பொழுது நல்ல செழிப்புநிலமாக விருந்தால் ஒரு சாண்விட்டும், புஞ்சைநிலமாயிருந்தால் அரைச் சாண்விட்டும் நாற்றை நடவேண்டும். நாற்றை நட்டு சில நாள் வரையில் வயலில் தண்ணீர் அதிகமாகக் கட்டக்கூடாது. வேறு விசேஷ ஜாக்கிரதை யொன்றும் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. முதலில் நாற்றை நட்டதும் பயிர்கள் விகாரமாய்த் தோன்றும். ஆனால் நட்ட இரண்டு மாசத்தில் ஒவ்வொரு பயிரும் கிளைகள் விட்டுத் தழைத்து நன்றாக விளையும். வயல் நெருக்கமாக வழக்கம்போல் நட்டால் எப்படி யிருக்குமோ அப்படி பச்சென்று நிறைந்து செழிப்பாகத் தோன்றும். அறுவடை காலத்தில் இப்படி விசாலமாக நடப்பட்ட நாற்றுகள் விடும் கதிர்களில் நெல்மணிகள் நிறைந்து ஒவ்வொருமணியும் செழித்துப் பருத்து வழக்கமாக நட்டால் எப்படியோ அதைவிட மகசூல் அதிகமாகக் காணும். இதை ஒவ்வொருவரும் பரீக்ஷித்தறிந்து கொண்டு பழக்கத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

விவேகசிந்தாமணி.

## மாதர் மனோரஞ்சனி.

இந்த மாதாந்தரப் பத்திரிகைக்கு இப்பொழுது 11-வது வருடம் ஆரம்பம். இதில் பெண்களுக்குரிய விஷயங்களே வெளிவரும். இதன் வருட சந்தா ரூபா 2. வேண்டுவோர் ஷி. எஸ். இராமசுவாமி ஐயர், 12, தனிகாசல பிள்ளைத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை என்று எழுதவும்.



# AGRICULTURAL NOTES.
# விவசாயக்குறிப்புகள்.

WATERING FRUIT TREES.

**பழவகை மரங்களுக்கு நீர் பாய்ச்சுதல்.**—கனிவிருக்ஷங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சவேண்டுமானால் வாய்க்காலை மரத்தைச்சுற்றி ஓரமாய்த்தோண்டக் கூடாது. நடு மத்தியான வேளையில் மேற்படி மரத்தின் நிழல் விழுவதைப்பார்த்து அந்தநிழல் ஓரமாய்த்தோண்டவேண்டும்.

SUGAR-CANE.

**கரும்பு.**—மோர்ச் தேசத்திலிருந்து ஒரு வகைக் கரும்பை கவரன்மெண்டு பாடனிஸ்டு என்னும் தாபர சாஸ்திரி கோதாவரி ஜில்லாவில் கொண்டுவந்து பயிர் செய்வித்தார். அது நாட்டுக் கரும்பைவிட பெரிதாய் இருக்கிறது; வெல்லம் ஜாஸ்தி காணுகிறது. நரிகள் அதை இலகுவாய் கடிக்கமுடியவுமில்லை. ஆகையால் அந்த ஜில்லாவில் அநேகர் நாட்டுக்கரும்பைப் பயிர்செய்வதை ஒழித்து மோர்ச் கரும்பைப் பயிர்செய்கிறார்களாம். இந்தக் கரும்பைப் பயிர்செய்ய விரும்புகிறவர்கள் திருச்சிராப்பள்ளியில் விவசாய டிப்டி டைரக்டருக்கு எழுதிக்கொள்ள வேண்டும்.

SWEET POTATOES.

**வள்ளிக்கிழங்கு.**— வள்ளிக்கிழங்கை நெடுநாள் வைத்திருக்கத்தெரியாமல் வெட்டிய வுடனே விற்றுவிடுவதால் வருமானம் ஸரியாய்க்கிடைப்பதில்லை. நெடுநாள் வைக்கவேண்டிய கிழங்கு நன்றாய் முற்றியிருக்கவேண்டும். முற்றின கிழங்குக்கு அடையாளம் என்னவென்றால் கிழங்கை அறுத்துக்காற்றுப்படவைத்தால் பால் வெளுத்திருக்கும். இளசாயிருந்தால் கிழங்கு கறுத்துப்போகும். முற்றிய கிழங்கை வெட்டியவுடனே நிலத்திலாவது கொட்டாயிலாவது காற்றாற வைக்கவேண்டும். உலர்ந்த மணலைக் கனமாய்க் கொட்டிப்பரப்பி அதன் மேல் கிழங்கை வரிசையாய் அடுக்கவேண்டும். அதன் மேல் மணலைப்போட்டு எல்லாக்கிழங்குகளும் மறையும்படி செய்து மறுவரிசை கிழங்கைப்பரப்பவேண்டும். இவ்வாறு முறையே மணலும் கிழங்கும் ஒன்றுக்குமேல் ஒன்று பரப்புவது அவசியம். அப்போது காற்றுப்படாமல் சில மாதம் கெடாமல் இருக்கும்.

HOW TO PACK LIMES.

**எலுமிச்சம் பழத்தை வெளியூருக்கு அனுப்புதல்.**—எலுமிச்சம் பழங்களை ஒன்றோடொன்று படாமல் கனத்த காகிதத்தில் சுற்றி ஒரு கூடையில் வைத்தால் வெகு நாளானாலும் பழங்கள் கெடா. தூர இடங்களுக்குப் பழங்களை அனுப்புகிறவர்கள் இதை அறிந்து நடந்தால் எவ்வளவோ லாபம் அதிகமாகும்.

PARVATHIPUR SHOW.

**பார்வதிபுரத்துப் பொருட்காக்ஷி.**—விசாகப்பட்டணம் ஜில்லா பார்வதிபுரத்தில் கால்நடைக் காட்சிச்சாலையும், விவசாயப்பொருட்காட்சிச்சாலையும், நாளது பிப்ரவரி௴ நடந்தேறியது. அங்கே சிலமிராசுதாரர்கள் தாம் பயிர்செய்த நெற்பயிர் வகைகளையும், இதர வஸ்துக்களையும் கொண்டுவந்து காண்பித்தார்கள். முக்கியமாய் ஒருவர் தமக்குக் கடலோரத்தில் உள்ள ஒரு தோட்டத்தில் மஞ்சள், இஞ்சி முதலியவைகளைப் பயிர்செய்து பார்த்ததாயும், ஷை பயிர்கள் செய்வதற்கு மணற்பாங்கான பூமியே மிகவும் சிலாக்கியமாயிருப்பதாய்த்தோன்றுகிறதென்றும் தெரிவித்தார்.

PLANTING COCOANUTS.

**தென்னம்பிள்ளைகளை நடுவது.**—தென்னந்தோப்புகள் போடுவதில் எத்தனை அடி தூரத்தில் பிள்ளைகளை வைக்கவேணும்? இது விஷயத்தில் பலபேர்கள் பலவிதமாய்ச்சொல்லுகிறார்கள். தூர தூர வைத்தால் மரங்கள் நன்றாய் காய்க்குமென்று சொல்லுகிறார்கள். அப்படிச்செய்தால் ஒவ்வொரு பிள்ளையும் நன்றாய் காய்க்கலாம். ஆனால் தோப்பின் மொத்த வரும்படி அதிகமாகுமா? அது சந்தேகம். ஸாதாரணமாய் முப்பதடிக்கு ஒரு பிள்ளை வைத்தால் நலமாம். காற்றோட்டமுள்ள நிலமாக இருந்தால் கொஞ்சம் கிட்டவும் வைக்கலாம். அநுபோகஸ்தர்கள் அடிக்கணக்குச்சொல்லாமல் வளர்ந்த மரம் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு அணிற்பிள்ளை தாண்ட முடியாத தூரத்திலிருக்க வேணுமென்று சொல்லுவார்கள். இது இரண்டு மட்டை நீளமும் அணில் தாண்டக் கூடிய தூரமும், அதாவது சுமார் ஜாதி அடியால் இருபதடியாகும். இவ்வளவு தூரத்தில் ஸாதாரணமாய் தென்னம்பிள்ளைகளைப்போடலாம்.

# TRADE NOTES.
# வியாபாரக் குறிப்புகள்.

TRADE ACCORDING TO PROVINCES.

**மாகாண வியாபாரங்கள்**—இந்தியாவில் துறைமுகங்களுள்ள மாகாணங்கள் ஆறு. அவைகளாவன:—வங்காள மாகாணம், கீழ் வங்காளமும் ஆஸாமும் சேர்ந்தடங்கிய மாகாணம், பம்பாய் ராஜதானி, சிந்து மாகாணம், சென்னை ராஜதானி, பர்மா மாகாணம். இதர தேசங்களோடு நடக்கும் வியாபாரம் முழுமையும் மேற்சொல்லிய மாகாணங்களில் உள்ள ஏதாவது ஒரு துறைமுகத்தின் வழியாகத்தான் நடக்கவேணும். இப்படிக்கு நடந்த 1907-08 ம் வருஷத்திய வியாபாரத்தில் நூற்றில் சுமார் $42\frac{1}{2}$ பாகம் வங்காள மாகாணத்தின் துறைமுகங்கள் வழியாயும், 29 பாகம் பம்பாய்ராஜதானியின் வழியாயும், 9 பாகம் சென்னை ராஜதானியின் வழியாயும், 8 பாகம் பர்மா மாகாணத்தின் வழியாயும், 9 பாகம் ஸிந்துமாகாணத்தின் வழியாயும், $1\frac{1}{2}$ பாகம் கீழ்வங்காளமும் ஆஸாமும் சேர்ந்தடங்கிய மாகாணத்தின் வழியாயும் நடந்திருக்கிறது.

CHIEF EXPORTS.

**முக்கிய ஏற்றுமதிகள்.**—சென்ற வருஷத்தில் சணல் நார், அதனால் செய்யப்பட்ட கோணிமுதலியவைகள், தேயிலை, பதனிடாத தோல்கள், அபின், அரிசி, வித்துக்கள், அரக்கு, நிலக்கரி, நீலிச்சரக்கு முதலியவைகள் விசேஷமாய் வங்காளமாகாணத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. கீழ் வங்காள மாகாணத்திலிருந்து சணல்நாரும் தேயிலையும், பம்பாய் ராஜதானியிலிருந்து பருத்தி, பருத்தியால் செய்யப்பட்ட கைத்தொழில் சரக்குகள் மால்வா அபின், எண்ணெய் வித்துக்கள், கோதுமை, ஆட்டுமயிர் முதலியவைகளும் வெளி தேசங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. ஸிந்து மாகாணத்திலிருந்து ஏற்றுமதியான சரக்குகள்—பருத்தி, தோல், ஆட்டுமயிர், வித்துக்கள், கோதுமை; சென்னைராஜதானியிலிருந்து அனுப்பப்பட்ட சரக்குகள்,—பதனிட்ட தோல், பருத்தி, காப்பிக்கொட்டை, அரிசி, எண்ணெய் வித்துக்கள்; பர்மாவின் முக்கிய ஏற்றுமதிச் சரக்குகள்—கெரொஸின் எண்ணெய், அரிசி, தேக்குமரம், பருத்தி, தோல்,

INDIAN CHAMBERS OF COMMERCE.

**இந்திய வர்த்தக சங்கங்கள்.**—வியாபாரத்தை விருத்திசெய்யவும், சட்ட நிர்ணயசபைக்கு வியாபாரிகளின் பிரதிநிதி ஒருவரை நியமிக்கவும், வியாபார சங்கங்கள் ஏற்படவேணுமென்று சென்ற ஸஞ்சிகையில் சொன்னோம். இது விஷயமாய், கனம். பி. தியாகராஜ செட்டியார், பி. அப்பன்ன செட்டியார், முதலியவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டு வேண்டிய ஏற்பாடுகளைச்செய்து வருவதாகத் தெரிகிறது. சென்னப்பட்டணம் பெரியமெட்டிலுள்ள தோல் வியாபாரிகள் எல்லாரும் சேர்ந்து தோல் வியாபாரிகள் சங்கம் ஒன்று ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரியவருகிறது. இப்படிக்கு ஒவ்வொருவித வியாபாரிகளும் அவரவர்கள் வியாபாரத்திற்கு வேண்டிய ஸாதனங்களைச் செய்துகொள்ள சங்கங்களாகக் கூடுவார்களென்று நம்புகிறோம்.

LOCATION OF SHOP.

**கடை வைக்குமிடம்.**—ஒருவன் வியாபாரம் தொடங்குவதற்குமுன் எந்த இடத்தில் கடையை வைக்கலாமென்று தீர்க்காலோசனை செய்து தகுந்த இடத்தில் வைக்கவேண்டும். தகுந்த இடம் என்றால் சரக்கு விற்கக்கூடிய இடம் என்பது. சரக்கு விற்கக்கூடிய இடம் அது போன்ற சரக்குகள் விற்குமிடங்களே. இதற்குஆட்சேபணையாய், ஏற்கனவே இருக்கும் கடைகளோடு மற்றொரு கடை வைத்தால் நஷ்டந்தான்வரும் என்று ஜனங்கள் சொல்லுவார்கள். அது தெரியாமையால்ச் சொல்வது. சாதாரண ஜனங்கள் ஒரு பண்டம் வாங்கவேணுமானால் நாலு கடைகளில் பார்த்து வாங்குவார்களே யொழிய ஒரே கடையாயிருக்குமிடத்தில் வாங்குவதில்லை. சரியோ சரியில்லையோ ஒரே கடையாயிருக்கும் கடையில் வாங்கினால் விலை அதிகங் கொடுக்க வேண்டியதாகத்தான் இருக்குமென்று வாங்கமாட்டார்கள். ஆதலால் துணிவியாபாரமானால் பல துணிக்கடைகளுள்ள இடத்திலேயும் பலசரக்கு வியாபாரமானால் அநேக பலசரக்குக்கடைகளுள்ள இடத்திலேயுமே புதுக் கடைகள் ஏற்படுத்தப்படவேணும். மேற் சொன்னது பெரிய வியாபாரங்களுக்கு மட்டும். சில்லரை வியாபாரமானால் எங்கிருந்தாலும் பாதகமில்லை.



# INDUSTRIAL NOTES.
# கைத்தொழில் குறிப்புகள்.

SURKI MORTAR.

**ஸுர்க்கி சுண்ணச்சாந்து.**—நன்றாய் வெந்த செங்கலின்பொடி ஈரச்சுண்ணாம்பை இருகச்செய்து தண்ணீர் உட்கொள்ளாமல் செய்யும் தன்மையுள்ளது. சாதாரணமாக கிளிஞ்சில் சுண்ணாம்பு ஒரு பங்கு, மணல் ஒன்றரைப்பங்கு, நன்றாய் வெந்த செங்கற்பொடியின்சலித்த தூள் ஒன்றரைப்பங்கு, இவைகளைக் கூட்டிக் கலந்தால் வலுவாய்ப் பிடித்துக்கொள்ளும் ஸுர்க்கிச் சுண்ணச்சாந்தாகும்.

SWADESHI-MOTOR-CAR.

**ஸ்வதேசிமோடார்கார்.**-வங்காளத்திலுள்ளஜெஸ்ஸுர் என்னும் பட்டணத்துக்குச் சமீபத்தில் ஒரு பொருட்காக்ஷி நடந்தது. அதில் மோடார்கார் என்று சொல்லப்பட்ட புகைவண்டி போன்ற வண்டி ஒன்று காண்பிக்கப்பட்டதாம். அந்த வண்டி நால்டங்கா ராஜாவால் செய்யப்பட்டது. அவர் யந்திரவேலைகளில் மிக கெட்டிக்காரர். புகைக்கப்பல்களுக்கு வேண்டிய யந்திரங்களையும் அவரே செய்கிறாராம்.

ANOTHER IRON WORKS FOR INDIA.

**இந்தியாவில் இன்னும் ஒரு இரும்புத்தொழிற்சாலை.**—ஏற்கனவே பம்பாயில் முக்கிய வர்த்தகர்களான தாதா கம்பெனியாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற இரும்புத்தொழிற்சாலை மிக பெரிது. அதையும்விட பெரிதாக ஒரு இரும்புச்சாலை இந்தியாவில் ஏற்படும் போலிருக்கிறது. ஆஸ்ட்ரேலியா தேசத்து ஒரு பெரிய கம்பெனியார் எஃகு செய்ய ஒரு நூதன வழி கண்டுபிடித்திருக்கிறார்கள். அநேகம் இடங்களில் தொழிற்சாலைகள் வைத்து வேலை நடத்தப் போகிறார்கள். இந்த வேலையைச் செய்வதற்காக கார்னிகீ என்னும் கோடீச்வரன் அந்தக்கம்பெனியாருக்கு ஏராளமான பொருளுதவி செய்திருக்கிறார். அந்தக் கம்பெனியார் இந்தியாவில் பார்கார் என்ற பட்டணத்துக்குச் சமீபத்தில் ஒரு தொழிற்சாலை வைக்கப்போகிறார்கள். வேண்டிய முதலுக்கு இந்தியாவிலும் 3-லக்ஷம் ரூபாய்க்கு பங்கு சேர்த்துக்கொள்ளுவார்களாம்.

THE MAHAMAKHAM EXHIBITION.

**மஹாமகப் பொருட்காக்ஷி.**—கும்பகோணத்தில் நடந்த மஹாமக உற்சவத்தில் நம் நாட்டார் பார்த்துவிருத்தியடையக்கருதி பிப்ரவரிமீ 25உ முதல் அரண்மனைத்தோட்டத்தில் எ. ஆர். சக்கரபாணிசெட்டியார் முதலானபிரமுகர்களால் அநேகவிதமான விவசாயப்பொருள்களும் கைத்தொழிற் சம்பந்தமான பொருள்களும் சேகரிக்கப்பட்டு ஒரு பெரும் காக்ஷி காட்டப்பட்டது. அந்தப் பொருட்காக்ஷிக் கமிட்டியார் வேண்டுகோளின்படி அது மகா-ள-ள-ஸ்ரீ, திவான் பஹதூர் ஆர். ரகுநாதராவ் அவர்களால் திறக்கப்பட்டது. இந்த மஹான் சர்க்காரில் பெரியஉத்தியோகங்கள் பார்த்து இப்போது பென்ஷன் வாங்கிவருகிறார். ஜனங்கள் நல்ல ஸ்திதியை அடையவேண்டும் என்று தன்னால் இயன்றமட்டும் திரிகரணசுத்தியாய் உழைத்து வருபவர். அதனால் இவரிடத்தில் கவரன்மெண்டாருக்கும் ஜனங்களுக்கும் மதிப்பு ஜாஸ்தி. இவர்மேற்சொல்லிய பொருட்காக்ஷியை திறக்கும்பொழுது நாம் எப்படி மேன்மைக்கு வரலாமென்று சில நல்ல போதனைகளைச் செய்தார். எத்தொழிலும் விருத்தியடைவதற்கு சாஸ்திர ஞானம் வேண்டும். வியாபாரம் விருத்தியடைய விவஸாயம் செழிக்கவேண்டும். இப்படி விவஸாயம் செழிக்கவேண்டுமானால் சாஸ்திர ஞானம் வேண்டும். ஆகையால் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் விவஸாயமும், பதார்த்தவிசேஷக சாஸ்திரமும் அனுபோக ஸித்தமாய்ச் சொல்லிக்கொடுக்கப்படவேண்டும். நமக்கு வேண்டியது என்ன? (1) ஆகாரம், (2) உடை, (3) சுகானுபோகம். விவஸாயத் தொழிலினால் ஆகாரமும், தோட்ட வேலையினால் பட்டு, பருத்திகளும், செடி கொடி வளர்ப்பினால் விறகு, எண்ணெய் முதலான விஷயானுபவசாமான்களும்கிடைக்கின்றன. இவ்வளவு இருப்பதோடு சாஸ்திரீய ஞானமும் சேருமானால் நமக்கு வேண்டியவைகளை எல்லாம் நாம் செய்துகொள்ளலாம் என்பதில் ஆக்ஷேபனையே கிடையாது. கிராமங்களில் சுய அரசாக்ஷியுரிமை ஏற்படுமானால் கவரன்மெண்டாருக்கு செலவில்லாமல் முக்கியமான படிப்பைக்கற்றுக் கொடுத்துவிடலாம். கிராம வேலைக்காரர்களுக்கும் தொழிலாளிகளுக்கும் கிராமத்திலேயே ஜீவனோபாயம் கிடைத்துவிடும். கிராமத்தார் கட்டுப்பாடுகளினால் விவஸாயம் அதிகரித்து கைத்தொழிலும் விருத்தியடையும்.

# ECONOMICS.
# பொருளாதாரம்.

---

ECONOMIC IMPROVEMENT.

**பொருள் அபிவிருத்தி.**—நமது தேசத்தில் விவஸாயமே முக்கியக் கைத்தொழில். ஆகையால், நமது தேசம் நல்ல ஸ்திதிக்கு வரவேண்டுமானால் விவஸாயிகள் நிலைமை ஓங்கவேண்டும். விவஸாயிகளின் நிலைமை ஓங்கவேண்டுமானால் கிராம விஷயங்கள் சரிவர நடந்துவர வேண்டும். கிராமவிஷயங்கள் சரிவர நடக்கவேண்டுமானால் கவரன்மெண்டாரும் கிராம நிர்வாகிகளும் சில அம்சங்களை நன்றாய் கவனிக்கவேண்டும். அவைகளாவன:—(1) தொழிலாளிகளுக்கு விவகாரத்துக்கு இடம் இல்லாமல் ஜீவனோபாயங்கள் செய்து கொடுக்கவேண்டும்.

(2) அவர்கள் கிராமத்திலேயே தொழிலை கற்றுக் கொள்ளும்படியான ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

(3) ஜில்லா அதிகாரிகள் மூலமாய் அத்தொழிலாளிகளுக்கு வேலைத்திறமைக்குத் தக்கபடி இனாமோ, ஸர்டிபிகேட்டோ, பட்டங்களோ கொடுத்து வரவேண்டும்.

(4) அவர்களின் நிலைமையை அமைதியாய்கவனித்துக்கொண்டேவந்து கவரன்மெண்டாருக்குத் தெரிவித்து வரவேண்டும்.

(5) கிராமத்திலுள்ள ஜனங்களுக்கு வேண்டிய நல்ல விதை, பருத்தி, பட்டு, மரம், யந்திரம் முதலான சாமான்களைத் தருவித்து கொள்முதலுக்கே கொடுத்து உபகாரம் செய்யவேண்டும்.

(6) அடிக்கடி கவரன்மெண்டு உத்தியோகஸ்தர்களிடம் போய் காத்திருக்கும்படி நேரிடாமல் பார்த்துவரவேண்டும்.

(7) ரிவினியூ வரிகளால் ஹிம்ஸைப்படாமல் பார்த்து வரவேண்டும்.

(8) பொதுப்பணங்களை எந்தக்காரியத்தை முன்னிட்டும் சர்க்கார் உத்தியோகஸ்தர் மூலமாய்ச் செலவிடக்கூடாது.

(9) முதல் இல்லாமல் சிரமப்படுகிறவர்களுக்கு முதல் கொடுத்து உதவவேண்டும்.

(10) எழுதப்படிக்கவும், கைத்தொழில், ரசாயனம், வானசாஸ்திரம் இவைகளில் வேண்டிய முக்கியமான அம்சங்களையும் சொல்லிக்கொடுக்கவேண்டும்.

(11) கொழும்பிலும் மற்ற தேசங்களிலும் இருக்கிறபடி பள்ளிக்கூடங்களுக்குச் சமீபத்தில் தோட்டங்களை வைத்துக் கற்பிக்கவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் சாஸ்திரார்த்தமான பள்ளிக்கூடம் வைக்கப்படவேண்டும்.

இவ்வளவும் நடந்தால் நாம் மேன்மையான நிலைமைக்கு வரலாம் என்பதில் சந்தேகமில்லை.

CO-OPERATIVE CREDIT SOCIETIES.

**ஐக்கியநாணயச் சங்கங்கள்.**—ஒவ்வொரு ஜில்லாவிலும் அநேக இடங்களில் "கோவாபரேடிவ் கிரெடிட் ஸொஸைடி" என்று ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஏற்பட்டு வருகின்றன. செங்கற்பட்டு ஜில்லாவிலும் சில ஏற்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாம் வருஷம் ஒருமுறை அந்த ஜில்லாவில் மகாசபையாகக்கூடிப் பேசவேண்டும் என்ற நோக்கத்துடன் முதல்முதல் பிப்ரவரிமீ 21௳ காஞ்சீபுரத்தில் கூடின. இந்தக் கூட்டத்திற்கு பல ஐக்கிய நாணயச் சங்கங்களிலிருந்து பிரதிநிதிகள் அநேகர் வந்திருந்தார்கள். இதில் மகா-ா-ா-ஸ்ரீ திவான் பகதூர் எம். ஆதிநாராயணய்யா அவர்கள் சபாநாயகராக இருந்து உபந்யாஸம் செய்தார். அதன் முக்கியக் கருத்து இந்த ஸஞ்சிகையில் கூட்டுறவு எழுச்சி என்று தலைப் பெயருள்ள வியாஸத்தில் சொல்லியதே. இந்த ஐக்கியநாணயச்சங்கங்களில் கவரன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் பங்குகள் எடுக்கவாவது டிபாஸிட்டுசெய்யவாவது கூடாதென்று இந்திய கவரன்மெண்டார் உத்தரவுசெய்திருக்கிறார்களாம். ஆனால் மாகாண கவரன்மெண்டாருக்கு யுக்தமாக தோன்றினால் அந்த உத்தரவை நிராகரித்து விடலாம். ஜனங்கள் ஒன்று கூடி நடத்தும் விஷயங்களில் கவரன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் சேருவது உசிதமல்ல என்பதுதான் இந்திய கவர்ன்மெண்டார் செய்த உத்தரவுக்குக் காரணமென்றுதோன்றுகிறது. ஆயினும், தற்காலத்தில் ஐக்கிய நாணயச்சங்கங்கள் விருத்தியடையவேண்டுமானால் கவரன்மெண்டு உத்தியோகஸ்தர்களும் டிபாஸிட்டுச்செய்வது அவசியம். இதை உத்தேசித்து இந்தியாகவரன்மெண்டார் உத்தரவு அனுகூலமுள்ளதல்ல. ஆகையால் இந்த உத்தரவை நிராகரித்துமாகாண கவரன்மெண்டார் மேற்படிச்சங்கங்களுக்கு வேண்டிய உதவியை செய்ய வேண்டுமென்று சபைக்கு வந்திருந்த பிரதிநிதிகள் எல்லாருஞ்சேர்ந்துபேசித் தீர்மானித்தார்கள்.



# THE TEXTILE INDUSTRY.
# நெசவு தொழில்.

---

COUNTS OF YARN.

**நூலின் நம்பர்.**—ஒரு ராத்தல் பருத்தியை நூலாகத் திரித்தால் திரிக்கிற மாதிரியின் பேரில் நூல் நீளும். கட்டையாய்த் திரித்தால் கொஞ்ச நீளந்தான் ஆகும். ஸன்னமாகத் திரித்தால் அதிக நீளமாகும். இந்த விதமாக ஸன்னம் ஜாஸ்தியாக ஆக நூலும் ஜாஸ்தி காணும். மெல்லிசான ஒரு துணியை எடுத்து அது என்ன நம்பர் என்று விசாரித்தால் அந்த நம்பர் பெரிதாகவே இருக்கும். முறட்டுத்துணியின் நூல் நம்பர் என்ன என்று கேட்டால் அந்த நம்பர் சிறிதாகவே இருக்கும். ஆகவே நூலின் நம்பர் ஸன்னத்தை பொறுத்தது என்று ஏற்படுகிறது. அப்படியானால் நாற்பதாவது, அறுபதாவது, நூறும் நம்பர் நூல் என்று சொல்லுகிறார்களே அதை எப்படி நிர்ணயம் செய்கிறது. வழக்கமாய் ஒவ்வொரு "ஹாங்கு" அதாவது "பூட்டு" அல்லது "சிலுப்பை" யிலும் எண்ணூற்று நாற்பது கஜம் நூலிருக்கும். இந்த நீளத்தை அளவாக வைத்துக்கொண்டு ஒரு ராத்தல் பருத்தியை நூலாகத்திரித்தால் எத்தனை எண்ணூற்று நாற்பது கஜமுள்ள சிலுப்பைகள் தேறுகின்றனவோ அத்தனை நம்பர் நூலென்று சொல்லுகிறது. ஆகையால் ஒரு ராத்தல் பருத்தியை எண்ணூற்று நாற்பது கஜமாய் திரித்தால் ஒரு சிலுப்பை நூலாகும். அதற்கு 1-நெ. நூல் என்று பேர். ஒரு ராத்தல் பருத்தியை நாலாயிரத்து இருநூறு கஜமாகத்திரித்தால் உண்டாகும் நூல் ஐந்து சிலுப்பையாகும். இதற்கு ஐந்தாம் நம்பர் நூல் என்று பேர். ஒரு ராத்தல் பருத்தியை எண்பத்துநாலாயிரம் கஜமாகதிரித்தால் எண்ணூற்று நாற்பது கஜமாக நூறு சிலுப்பைகளாகும். இதற்கு நூறும் நம்பர் நூல் என்றுபேர். ஆகையால் ஒரு ராத்தல் பருத்தியை நூலாகத்திரித்து எத்தனை நீளமாகிறதோ அதை எண்ணூற்றுநாற்பதால் வகுத்தால் வரும் ஈவு அந்த நூலின் நம்பர் என்று அறிந்து கொள்ளவேண்டியது. இப்படிவரும் ஈவுக்கு சிலுப்பை என்றும் பூட்டு என்றும் சொல்லுகிறார்கள். ஒரு ராத்தல்பருத்தி இருநூறு சிலுப்பைக்குமேல்ஆகாது. ஆகையால் இருநூறுக்கு மேல் நம்பர் நூலில்லை.

HANDLOOM WEAVING.

**கைத்தறி நெசவு.**—இந்தியாவில் முக்கியமான கைத்தொழில்களில் நெசவு ஒன்று என்றும், நமது தேசத்து தறிக்காரர்களின் நிலைமைகுறைந்து ஈனஸ்திதியை அடையாமல் பாதுகாக்கும்பொருட்டு நெசவுத்தொழிலை விருத்திசெய்ய நமது கவரன்மெண்டாரும் தேசாபிமானிகளும் செய்துவரும் முயற்சிகளைப்பற்றியும் நம்முடைய பத்திரிகையின் தைமீ சஞ்சிகையின் இரண்டாவது, மூன்றாவது பக்கங்களில் விவரித்திருக்கிறோம். யார் எவ்வளவு முயற்சி எடுத்துக்கொண்டால் தான் என்ன? பசியாயிருக்கிறவர்களுக்குப் பசியாறப் பிழைக்கும் வழியைக் காட்டலாமேயொழிய, அவர்களுக்காக வேறு ஒருவர் சாப்பிட்டு அவர்கள் பசியைப்போக்கடிக்கலாமா? கவரன்மெண்டார் அல்லது டிஸ்திரிக்ட் போர்டார் தங்கள் சொந்தச் செலவில் ஒரு நெசவு சாலையையோ அல்லது பள்ளிக்கூடத்தையோ ஸ்தாபிக்கலாம். தக்க நிபுணர்களைக்கொண்டு நெசவு தொழிலைக் கற்றுக்கொடுக்கச்செய்யலாம். தொழில் கற்றுக்கொள்ளும் காலத்தில் கொஞ்சம் சம்பளம் வேண்டுமானாலும் கொடுக்கலாம். இதற்குமேலும் செய்யக்கூடியதென்ன?

A TEXTILE SCHOOL.

**நெசவுத் தொழில்கற்பிக்க ஒரு பள்ளிக்கூடம்:—**

தஞ்சாவூர் ஜில்லா ஐயம்பேட்டை என்ற ஊரில் நெசவுகாரர்கள் ஜாஸ்தியாக இருக்கிறார்கள். அவர்களுக்கு நெசவுதொழிலில் விசை நாடாத்தறிபோன்ற நவீன விஷயங்களைக்கற்றுக் கொடுத்து அவர்களை சீர்ப்படுத்தலாமென்று அவ்விடத்தில் 1907-ம் வருஷம் மார்ச்சுமாதத்தில் டிஸ்திரிக்ட் போர்டாரால் ஒரு நெசவுப் பள்ளிக்கூடம் வைக்கப்பட்டது. இதில் தறிகாரர்களுக்கு சிரத்தை விழாததைக்கண்டு, பள்ளிக்கூடத்தில் வந்து தொழிலைக் கற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு ஸ்காலர்ஷிப்பும் கொடுக்கப்பட்டது. இதிலும் குணப்படாததைக்கண்டு அவரவர்கள் நெய்யும் துணிகளை நூல்கிரயத்தை கொடுத்துவிட்டு அவரவர்களே எடுத்துக்கொண்டுபோகலாம் என்றும் ஏற்பாடு செய்தார்கள். என்ன செய்தும் அந்த ஊரிலுள்ளவர்கள் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து நெசவு தொழிலைக்கற்றுக்கொள்ள மனமில்லாமல் இருந்தபடியால் ஷெ பள்ளிக்கூடத்தை எடுத்துவிடவேண்டுமென்று தஞ்சாவூர் டிஸ்திரிக்ட் போர்டார் தீர்மானித்துவிட்டார்கள்.

# THE GROCERY TRADE.

# பலசரக்கு வியாபாரம்.

---

KEEPING HONEY.

**தேனைக் கெடாமல் வைத்தல்.**—தேன் வைக்கப்பட்டிருக்கிற பாத்திரத்தை வீட்டின்கீழ் அறைகளில் வைக்கக்கூடாது. அப்படி வைத்தால் ஈரத்தினால் தேன் தண்ணீர் வாட்டாய்ப் போய்விடும். உஷ்ணமாயும், காற்றோட்டமுள்ளதாயும் இருக்கிற இடத்தில் வைத்தால் இளகலாயிருக்கிற தேன்கூட கெட்டியாகும்.

BISCUITS.

**பிஸ்கோத்துகள்.**—இது நமது தேசத்தில் சுலபமாய் செய்யக்கூடியது. விசேஷமான முதல் வேண்டியதில்லை. இப்படிக்கு இருந்தும் வெளிநாடுகளிலிருந்து நாம் பிஸ்கோத்துகளை ஏராளமாய் வரவழைக்கின்றோம். 1906-07ம் வருஷத்தில் இருபத்திரண்டு லக்ஷம் எழுபத்தெண்ணாயிரம் ரூ பெறுமான பிஸ்கோத்துகள் இந்தியாவில் இறக்குமதி ஆயின. அதற்கடுத்த 1907-08ம் வருஷத்திலோ இருபத்தைந்து லக்ஷம் இரண்டாயிரம் ரூ பெறுமான பிஸ்கோத்துகள் வந்திருக்கின்றன. அதாவது போனவருஷத்தில் அதற்கு முந்திய வருஷத்தைவிட சுமார் இரண்டேகால் லக்ஷத்திற்கு ஜாஸ்தியாக வந்திருக்கிறது. இதை விசேஷமாய் ஐரோப்பியர்களும், இங்கிலீஷ் படித்தவர்களும் குழந்தைகளும் தின்பார்கள். தின்பண்டமாகையால் சுசிருசியாய் செய்யவேண்டும். அழுக்குப்பிடித்தவர்கள் செய்தால் வாங்குகிறவர்கள் யோசிப்பார்கள். ஆகையால் சுத்தமாய்ச்செய்து நல்ல தகரப்பெட்டிகளில் போட்டு காற்றுப்பூராமல் பாக்செய்து அழகான லேபில்கள் போட்டு விலையையும் நஷ்டமில்லாமல் சரசமாய் சொல்ப லாபம் வைத்து அங்கங்கே ஏஜண்டுகள் ஏற்படுத்தித் தகுந்த பிரசுரங்கள் செய்தால் நமது தேசத்து பிஸ்கோத்துகள் ஏன் விற்பனையாகாது? இதுபோன்ற சில்லரைக் கைத்தொழிலிலும் வியாபாரத்திலும் தேற்சி அடைந்தால் பெரிய தொழில்களையும் வியாபாரங்களையும் செய்வதற்கு தைரியமும் உற்சாகமும் தானே வரும்.

FRAUD IN SELLING SUGAR.

**சர்க்கரை விற்பதில் மோசம்.**—முக்கியமாய் நாலு வித சர்க்கரைகள் உண்டு. அவைகளாவன:—நாட்டுச் சர்க்கரை, மணல் அல்லது அஸ்டகிராம் சர்க்கரை, இடிபூரா, அஸல்பூரா. நாட்டுச் சர்க்கரையையும் மணல்ச்சர்க்கரையையும் பார்த்தவுடனே அறிந்து கொள்ளலாம். மற்ற இரண்டு விதச் சர்க்கரைகளில் இடிபூரா இன்னது அஸல்பூரா இன்னது என்று அறிந்துகொள்வது கடினமாகும். சர்க்கரை வாங்குகிறவர்கள் ஏமாந்து போவதும் வியாபாரிகள் நல்ல லாபம் சம்பாதிப்பதும் இந்த இரண்டு வித சர்க்கரைகளில் தான். அஸல் பூரா இடி பூராவைவிட விலை உயர்ந்தது. இவைகளைப் பகுத்தறிந்துகொள்ள சில குறிகள் உண்டு. முதலாவது, அஸல்பூரா கொஞ்சம் பழுப்பு நிறமாயிருக்கும். இடிபூராவோ அநேகமாய் வெள்ளையாயிருக்கும். இரண்டாவது, அஸல்பூரா கைக்கு மிருதுவாயிருக்கும். இடிபூரா, நரநரப்பாயிருக்கும். மூன்றாவது, வாயில்போட்டால் அஸல்பூரா இடிபூராவைவிட தித்திப்பாயிருக்கும். நாலாவது, முகர்ந்து பார்த்தாலும் வாயிற் போட்டுப்பார்த்தாலும் இரண்டுக்கும் மணம் வேறாயிருக்கும். ஐந்தாவது, இரண்டு சர்க்கரைகளையும் கொஞ்ச நாளைக்கு வைத்திருந்தால் இடிபூரா உலர்ந்து கட்டிகளாவதோடுகூட நிறையில் குறைந்திருக்கும். ஆறாவது, நாட் பட்ட இடிபூராவாயிருந்தால் அதில் வெல்லஞ்சேர்ந்ததால் சளிப்புவேகம் ஒன்று வரும். அஸல்பூரா மணம் மாறாது. இந்தக்குணங்களையெல்லாம் அறிந்தவர்கள் எத்தனை பேர்கள் உண்டு. மிகவும் சொல்பமாயிருப்பார்கள். அதனால்தான் சிலகடைக்காரர்கள் வாங்குகிறவர்களுக்கு இடிபூராவை அஸல் பூரா என்று கொடுத்து இடிபூராவிலைக்கு மேலாகவும் அஸல்பூரா விலைக்குக்குறைந்ததாகவும் விற்று, தாங்கள் மலிவாய்விற்பதாகச் சொல்லி நல்ல லாபம் சம்பாதிக்கிறார்கள். இதைஅறியாமல் அநேகர் யோக்கியமாய் அதனதன் சரியான விலைக்குவிற்கும் வியாபாரிகளை அதிக விலைக்கு விற்கிறார்களென்று சொல்வார்கள். இந்த உதாரணத்தால் ஒரு வியாபாரியின் பேர்கெடுவது அவனுடைய அயோக்கியதையால் மட்டுமெல்லாமல் வாங்குகிறவர்களின் அறிவில்லாமையாலும் என்று ஏற்படுகிறதல்லவா?



# REVENUE NOTES.

# ரெவெனியூக்குறிப்புகள்.

---

WATER-RATE.

**தண்ணீர்த் தீர்வை.**—1908௵ ஆகஸ்டு௴ 10௳ யுள்ள ரெவெனியூ போர்டு புரொசீடிங்ஸ்.

5 A நிலையான உத்தரவு திருத்தம்: பட்டம் தவறி அதாவது சாதாரண சாகுபடி காலத்துக்கு பின் னீட்டு தண்ணீர் பாய்ச்சல்:—ஒரு போகப்பயிர். ஒரு போகமாக ரிஜிஸ்டர் செய்யப்பட்ட நஞ்சை நிலங்களின் சொந்தக்காரர்கள் தங்கள் ஒருபோகப் பயிரை தங்கள் இஷ்டம்போல் பசலிக்குள்ளாக எப்பவும் சாகுபடி செய்யலாம். நாட்சென்று சாகுபடி செய்தால் இரண்டாம் பயிர்ப் பருவத்தில் தண்ணீர் தட்டிப்போய் ஒருபோகம்கூட அருவடை செய்யாமல் தீர்வை செலுத்தவேண்டியதாய் இருக்கும். ஆனால் அந்த ஒருபோகப்பயிர் இரண்டு பசலிப்பயிராயிருந்து இரண்டு போக பருவத்திலுமாவது இரண்டாம் போக காலத்திலேயாவது இருக்கக்கூடாது.

2. ஒருபோக நஞ்சை நிலத்தில் இரண்டு பசலிப் பயிர்:—(i) இரண்டு பசலி பயிர்களின் வகை:—இரண்டு போகப்பயிர் அல்லது இரண்டு போகம் சாகுபடி ஆகக்கூடிய காலத்தில் ஒரே பயிராக சாகுபடி ஆகும் பயிர்கள், இரண்டு வகை ஆகும். **முதலாவது.** கரும்பு, வெற்றிலை, வாழை, மஞ்சள், கரணை. **இரண்டாவது.** சாதாரணமாய் இரண்டு நஞ்சைப் பயிர் சாகுபடியாகக் கூடிய காலத்திற்கு, அதாவது 6 மாதத்திற்கு மேற்பட்டு ஜலம்பாய வேண்டிய பயிர்கள்.

(ii) இரண்டு பசலிப்பயிருக்கு தீர்வை விவரம்:—ஒரு போக நஞ்சை நிலத்தில் இரண்டு பசலிப் பயிர் சாகுபடியானால் ஒரு போகப் பயிருக்கு ஏற்படும் செட்டில்மெண்டு தீர்வைக்குமேல் அரைபங்கு பசலி ஜாஸ்தி தீர்வையும் ஏற்படுத்தப்படும்.

குறிப்பு:— ஒரு போக நஞ்சை நிலங்களிலுள்ள தென்னைக்கும் இதர தோப்புகளுக்கும் வருஷத்தில் அநேக மாதங்களில் இரண்டு நெல்பயிர் செய்வதற்குப் போதுமான அதாவது ஆறுமாதத்திற்கு மேல் பூட்டு தண்ணீர் கொண்டு போகப்பட்டால் இரண்டு பசலிப்பயிருக்கு ஒப்பந்தம் பசலி ஜாஸ்தி தீர்வை விதிக்கப்படும்.

---

போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர் 2-வது புஸ்தகம் முதல் பக்கத்திலுள்ள 4-வது நம்பர் நிலையான உத்தரவு I. A அனுபந்தத்திலுள்ள தண்ணீர்த் தீர்வை ரேட்டுகளுக்கும் அதனடியில் இருக்கும் (1) குறிப்பிற்கும் பதிலாக அடியில் கண்டதை பர்த்தி செய்து கொள்ளவும்.

(a) ஒரு போகம் நஞ்சைப் பயிர் ஏகர் ஒன்றுக்கு முதலாவது வகுப்புப் பாசனம் ரூ 4, இரண்டாவது வகுப்புப் பாசனம் ரூ 3.

(b) இரண்டாம் போகம் நஞ்சைப்பயிர் ஏகர் ஒன்றுக்கு முதலாவது வகுப்புப் பாசனம் ரூ 2, இரண்டாவது வகுப்புப் பாசனம் ரூ 1 8 0.

(c) கரும்பு, வெற்றிலை, வாழை, மஞ்சள், கரணை, முதலாவது வகுப்புப் பாசனம் ரூ 6, இரண்டாவது வகுப்புப் பாசனம் ரூ 4 8 0.

(d) ஆறு மாதத்திற்கு மேல்பட்டு தண்ணீர் வேண்டி இருக்கும் இதரநஞ்சைப்பயிர், முதலாவது வகுப்புப்பாசனம் ரூ 6, இரண்டாவது வகுப்புப்பாசனம் ரூ 4 8 0.

(e) புஞ்சைப் பயிர் முதல் போகமானாலும் இரண்டாம் போகமானாலும் எப்போதாகிலும் தண்ணீர் பாய்ச்சப்பட்டால், முதலாவது வகுப்புப் பாசனம் ரூ 2, இரண்டாவது வகுப்புப் பாசனம் ரூ 1 8 0.

(f) அடுத்தடுத்துத் தண்ணீர் பாய்ச்சப்பட்ட புஞ்சைப்பயிர் முதல்போகம், முதலாவது வகுப்புப் பாசனம் ரூ 3, இரண்டவது வகுப்புப்பாசனம் ரூ 2-4-0.

(g) அடுத்தடுத்து தண்ணீர் பாய்ச்சப்பட்ட புஞ்சைப்பயிர் இரண்டாவதுபோகம், முதலாவதுவகுப்புப் பாசனம் ரூ 2, இரண்டாவது வகுப்புப் பாசனம் ரூ 1 8 0.

(h) நீர்பாய்ச்சப்பட்ட மூன்றும் போகம் நஞ்சையானால், முதலாவது வகுப்புப்பாசனம் ரூ 2, இரண்டாவது வகுப்புப் பாசனம் ரூ 1 8 0, ஷெ புஞ்சையானால் அடுத்தடுத்து தண்ணீர் பாய்ந்தாலும் எப்போதாகிலும்பாய்ந்தாலும், முதலாவதுவகுப்புப்பாசனம் ரூ 1, இரண்டாவதுவகுப்புப் பாசனம் அ. 12. குறிப்பு (1) தோப்பு என்ற தென்னைகளுக்கும் இதர மாங்களுக்கும் இரண்டு நெல்பயிர் அறுவடையாகக் கூடிய கால பரியந்தம் அதாவது ஆறு மாதத்திற்கு அதிகமாக தண்ணீர் பாய்ச்சப்பட்டால் (c) கிளாஸில் சேர்ந்தபயிர்களாக அதற்குள்ள தீர்வைவீதம் சார்ஜ் செய்யப்படும். அப்படிப் பாயாத பக்ஷத்தில் (a) கிளாஸில் கண்டபடி ஒரு போகம் தீர்வை வீதம் சார்ஜ் செய்யப்படும்.

# LEGAL NOTES.
# சட்டக் குறிப்புகள்.

---

BOND BY A GUARDIAN.

**கார்டியனல் எழுதிக்கொடுக்கப்பட்ட பத்திரம்.**—ஒரு மைனருடைய கார்டியன், மைனர் சொத்தைக் கட்டுப்படுத்தாமல் ஸ்வதாவாகவே கடன் பத்திரம் எழுதிக் கொடுத்தாலும் ஷை பத்திரமானது மைனரைக்கட்டுப்படுத்தும் வில்லங்கங்களை தீர்ப்பதற்கு எழுதப் பட்டிருந்தால் அந்தக் கடனுக்கு மைனர் சொத்துக்கட்டுப்படும் என்று மதராஸ் ஹைகோர்டார் ஒரு தீர்மானஞ்செய்திருக்கிறார்கள்.

CANCELLATION OF PUTTAH.

**பட்டாவை ரத்து செய்தல்.**—ரெவினியூ போர்டு 16-வது நெம்பர் ஸ்டான்டிங் ஆர்டர் பிரகாரம் ஏரி உள்வாய் நிலங்களை சாகுபடிக்கு விடுவதானல் துண்டு துண்டாகப் பிரித்து ஏலம் போட வேண்டியது. 1894-ம் வருஷத்தில் அனந்தப்பூர் ஜில்லாவில் ஒரு தாசில்தார் அப்படிச் செய்யாமல் ஏரி உள்வாய் நிலங்களை 15-வது நெம்பர் ஸ்டாண்டிங் ஆர்டர்படி மற்ற தீர்வைப்பட்ட தரிசு நிலங்களைப்போல ஒருவனுக்கு தர்காஸ்தில் ஜாரிசெய்தார். மோசம் செய்து பட்டா வாங்கப்பட்டதென்று 1904-ம் வருஷத்தில் ஷை பட்டாவை கலெக்டர் ரத்து செய்தார். இதன்மேல் பட்டாதார் வியாச்சியம் செய்தார். இந்தக் கேஸில் மோசம் ஒன்றும் நடக்கவில்லை என்று நன்றாய் ஏற்பட்டுவிட்டது. ஆயினும் போர்டார் உத்தரவுக்கு விரோதமாய் தாசில்தார் செய்தபடியால் கவர்ன்மெண்டாரை தாசில்தார் செய்தது கட்டுப்படுத்தாது என்று ஸர்க்கார் கக்ஷியில் வாதிக்கப்பட்டது. ஏரி உள்வாய் நிலங்களை சாகுபடிக்கு விட தாசில்தாருக்கு அதிகாரம் உண்டு. ஆகையால் அவரால் கொடுக்கப்பட்ட பட்டாவை கலெக்டர் ரெவெனியூ சட்டங்களின்படி ரத்து செய்தால் செய்யலாமே ஒழிய வேறு விதமாக ரத்து செய்யக்கூடாது என்று மதராஸ் ஹைகோர்டார் 1907-ம் வருஷத்து 679 நெம்பர் அப்பீலில் முடிவு செய்திருக்கிறார்கள். இந்தக்கேஸ் 1909-ம் வருஷத்து மதராஸ் லா டைம்ஸ் 5-வது புஸ்தகத்தில் 32-வது பக்கத்தில் ரிபோர்டு செய்யப்பட்டிருக்கிறது.

PROPERTY INHERITED FROM A BROTHER.

**சகோதரனிடமிருந்து கிடைத்த சொத்து.**—ஒருவனுக்கு அவனுடைய சகோதரனிடமிருந்து கிடைத்த சொத்து பிதுரார்ஜித சொத்தாகமாட்டாது. ஆகையால் அந்தச் சொத்தை அவனுடைய பிள்ளைகள் அவனோடு பாகித்துக்கொள்ள பாத்தியதையில்லை.

LETTING A HOUSE TO A PROSTITUTE.

**விபசாரிக்கு வீடு வாடகைக்கு விடல்.**—ஒரு விபசாரிக்கு விபசாரத் தொழில் நடத்துவதற்காக ஒருவர் தனக்குச் சொந்தமான வீட்டை வாடகைக்கு விட்டார். அந்த விபசாரி வாடகை கொடுக்கவில்லை. வீட்டுக்காரர் வாடகைக்காக வியாஜ்யம் செய்தார். 1872-ம் வருஷத்து 9-வது ஆக்டான கண்டிராக்டு ஆக்டு 23-வது ஸெக்ஷன்படி ஒரு உடன்படிக்கையானது துன்மார்க்கமானதாகவாவது அல்லது பொதுஜன ஒழுங்கிற்கு விரோதமானதாகவாவது இருப்பதாக கோர்டாருக்குத் தோன்றினல் அந்த உடன்படிக்கை கோர்ட்டில் ஒப்புக்கொள்ளத் தக்கதல்ல. பிரகிருத கேஸில் விபசாரத் தொழில்செய்ய வீடு வாடகைக்கு விட்டபடியால் அவளிடத்திலிருந்து வாடகை வசூல் செய்ய முடியாது என்று பம்பாய் ஹைகோர்டார் 1908-ம் வருஷத்து 271 சில்லரை நம்பரில் முடிவு செய்திருக்கிறார்கள்.

SUCCESSION.

**வாரிஸ் கிரமம்.**—ஒருவருக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் தன்பாகத்தைப் பிரித்துக்கொண்டு பிரத்தியேகமாய் இருந்து வந்தான். மற்றொருவன் தகப்பனேரோடவே இருந்து வந்தான். இப்படியிருக்கையில் அந்தத் தகப்பனருக்கு வேறு ஒருவர் கொடுக்க வேண்டியகடன் தொகை தீர்ப்பாகி பணமும் கோர்ட்டில் கட்டப்பட்டது. பணத்தைவாங்குவதற்கு முன்னல் தகப்பன் இறந்துபோய் விட்டான். கோர்ட்டில் கட்டப்பட்டிருந்த தொகை யாரிடம் கொடுக்கப்படவேண்டும் என்ற விவகாரம் உண்டாயிற்று. அது தகப்பனருடைய ஸ்வயார்ஜித சொத்தாகையால் பிள்ளைகள் இருவருக்கும் பாத்தியமுண்டு என்று ஜில்லா கோர்டார் தீர்மானித்தார். அதன் பேரில் அப்பீல் நடந்ததில் தகப்பனருடைய ஸ்வயார்ஜித சொத்தில் பாகம் பிரித்துக் கொண்டு போன பிள்ளைக்கு பாத்தியம் இல்லை என்றும் அது தகப்பனேரோடு கூடவே இருந்து வந்த பிள்ளைக்கே கிடைக்க வேண்டியதென்றும் மதராஸ் ஹைகோர்டார் 1906 ஷு 86 நெ. இரண்டாவது அப்பீலில் பைசல் செய்திருக்கிறார்கள்.



THE PRESIDENCY MANURE WORKS, LIMITED, RANIPET.

Managing Agents—PARRY & Co., MADRAS.

ராஜதானி ரஸாயந உரக்கிடங்கு, ராணிப்பேட்டை.

எங்கள் ராணிப்பேட்டை உரக்கிடங்கில் இந்நாட்டு எல்லாப் பயிர்களுக்கும் ரஸாயந சாஸ்திர முறைப்படி உரங்கள் தயாரித்து விற்பனையாகின்றன. இவ்வுரங்களில் சேர்க்கப்படுகிற ஒவ்வொரு சாமானையும் எங்கள் **ரஸாயந சோதனை சாலை** (Chemical laboratory) யில் பரிசோதித்து அந்தந்தப் பயிருக்குத்தக்க அளவு **நைட்ரஜன்** (Nitrogen) **பாஸ்பாரிக் ஆஸிட்** (Phosphoric acid) **பொடாஷ்** (Potash) இவைகளைக் கணக்கிட்டுச் சேர்க்கிறோம். ரஸாயந உரங்களின் சத்துக்கள் பெரும்பான்மையும் தண்ணீரில் கரையக்கூடியனவாகையால், போட்டவுடன் பயிருணவாகி குணத்தைக்காட்டும். இந்த உரங்களை பரீக்ஷிக்கும்பொருட்டு **பரீக்ஷைப் பண்ணை** (Experimental Farm) க்காகவும், இந்திய விவசாயிகளுக்கு இந்த உரங்களின் குணத்தை நிரூபிக்கும் பொருட்டு **நிரூபணைப் பண்ணை** (Demonstration Farm) க்காகவும் சுமார் 25 ஏகரா நிலம் கிடங்குக்குள்ளாகவே சாகுபடி செய்யப்படுகிறது. இந்த கிடங்குத் தோட்டத்தில் இந்த நாட்டுப்பயிர்களே பெரும்பான்மையும் ரஸாயந உரங்களைப்போட்டு சாகுபடிசெய்யப்படுகின்றன. இவ்விதம் ரஸாயந உரம்போட்ட பயிர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொருட்டு, தொழு எரு முதலிய நாட்டு உரங்கள் போட்டும் பயிர் செய்திருக்கிறோம். இதைப்பார்த்தவர்களுக்கு ரஸாயந உரங்களே மேலானவைகளென்று எளிதில் தெரியும். நிலத்தின்மாதிரிக்கு மண் அனுப்பினல் அம்மண்ணுகளை பரிசோதித்து தக்க உரம் கொடுக்கப்படும். பின்வரும் பயிர்களுக்கு எங்கள் கிடங்கில் **பூரா உரங்கள்** (Complete fertilisers) தயாராயிருக்கின்றன. வேறு எந்த பயிருக்கானலும், உடனே உரம் தயார்செய்து கொடுக்கப்படும். விலை முதலிய விபரங்களுக்கு மதராஸ் பாரி அண்டு கம்பெனியாருக்கு எழுதி தெரிந்துகொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| நெல் | குசும்பா | தென்னை |
| கேழ்வரகு | புகையிலை | தேயிலை |
| சோளம் | பருத்தி | காப்பிச்செடி |
| மக்காச்சோளம் | சர்க்கரைவள்ளிக்கிழங்கு | வாழை |
| கம்பு, தினை, சாமை | உருளைக்கிழங்கு | சவுக்கு |
| கரும்பு | மஞ்சள் | மா |
| மணிலாக்கொட்டை | இஞ்சி | பழவர்க்கச் செடிகள் |
| கொள்ளுமுதலிய நவ தானியங்கள் | வெங்காயம் | பூந்தோட்டம் |
| அவுரி | மிளகாய் | காய்கறி தோட்டம் |
| எள்ளு | கத்திரி | கிழங்குப்பயிர் |
| முத்துக்கொட்டை | வெற்றிலை | புல், பசுந்தாள் பயிர் |
| | மிளகு | |

மானேஜிங் ஏஜண்டு—பாரி அண்டு கம்பெனி, மதராஸ்.

## EDUCATIONAL NOTES.

## வித்தியாவிஷயக் குறிப்புகள்.

—:o:—

**Free Primary Education.**

**இனாமான கீழ்தரப்படிப்பு.**—கொஞ்ச காலத்திற்கு முந்தி இந்தியா கவர்ன்மெண்டார் பல மாகாண கவர்ன்மெண்டாருக்கு எழுதி இனாமாக கீழ்தரப் படிப்புச்சொல்லிக் கொடுக்கலாமாவென்று அவரவர்கள் கருத்தைத்தெரிவிக்கும்படி கேட்டார்கள். அதற்குப் பதில்கள் எப்படி வந்தனவென்பது நமக்குத்தெரியாது. ஆயினும், சென்னைராஜதானியில் "டைரெக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன்" என்னும் படிப்பு இலாகாவுக்கு முக்கிய அதிகாரியான டாக்டர்போர்ன் என்பவர் கீழ்தரக் கல்வி விருத்தியைப்பற்றி ஒரு ரிபோர்ட்டில் எழுதும்பொழுது 200 ஜனங்களுக்கு மேல் குடியிருப்புள்ள கிராமங்களில், சுமார் 15,000 கிராமங்களில் பள்ளிக்கூடமேயில்லையென்று சொல்லியிருக்கிறார். ஒவ்வொரு கிராமத்தில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்துவதென்றால் வருஷந்தோறும் ரூபாய் 45-லக்ஷம் வேண்டியிருக்குமாம். ஒரு கிராமத்தில் வசிக்கும் எல்லா ஆண் பெண்பிள்ளைகளுக்கும் ஒரு பள்ளிக்கூடம் போதாது. அதற்குத்தக்கபடி பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதென்றால் வருஷந்தோறும் சராசரி 150-லக்ஷத்திற்குக் குறையாமலும் 200 லக்ஷத்திற்கு மேற்படாமலும் வேண்டியிருக்குமாம். சென்னைமாகாண கவர்னராகிய ஸர் ஆர்தர் லாலியென்பவர் இதைப்பற்றி ஒரு இடத்தில் பேசுங்காலத்தில் இவ்வளவு செலவு இருப்பதால் இதற்குத் தக்க அளவு ஐவேசி வைத்துக்கொண்டுதான் ஆரம்பிக்கவேண்டுமென்றும், கீழ்தரக்கல்வியை இனாமாகச் செய்வதில் தமக்கு மனம் இருப்பினும், செலவிடப் பணம் கிடைப்பது அருமையாயிருக்குமென்றும், இந்தியா கவர்ன்மெண்டில் வரிவசூல் செலவு முதலிய விஷயங்களைப் பரிசோதித்துத் தக்கபடி நடவடிக்கைகளை நடத்துவதற்காக ஏற்பட்ட மந்திரி இவ்விஷயத்தில் எப்படி ஏற்பாடு செய்வார்களென்று தமக்குத்தெரியவில்லையென்றும் சொன்னார். இந்தக் கீழ்தரப்படிப்புக்கு வேண்டிய பணத்தைபிகுத்தத் தக்க முயற்சியெடுத்துக்கொள்வது கவர்ன்மெண்டாரின் கடமையாகும்.

**Education in Foreign Countries**

**அந்நிய தேசங்களில் படிப்பு.**—மைசூர் கவர்ன்மெண்டார் இப்போது, இந்தியா, ஜப்பான், ஐரோப்பா, அமெரிக்கா முதலியவிடங்களில், நமது தேசத்துப்பிள்ளைகள் போய்ப்படிக்கப் போதுமான சௌகரியங்களிருக்கின்றனவாவென்பதைப்பற்றி ஆலோசனை செய்து தெரிவிப்பதற்காக ஒரு கமிட்டியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தக் கமிட்டியில் படிப்பு, இஞ்சினீர், பூமி சாஸ்திரம், கைத்தொழில் முதலிய இலாகாவில் உள்ள உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள்.

**Hand-book of Agricultural Science.**

**விவசாயநூல் இரண்டாம் பாகம்.**—இது கோயமுத்தூர் எஸ். பி. நரஸிம்முலு நாயுடு அவர்களால் இயற்றப்பட்டு நமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. விலை அணா 6.

**An Educational Endowment.**

**படிப்பு விஷயத்தில் தர்மம்.**—ஐக்கிய மாகாணத்து ராஜா பர்டாப் சிங், ஸி.எஸ்.ஐ., என்பவர் காசிப் பட்டணத்தில் ஒருக்ஷத்திரிய ஹைஸ்கூல் ஏற்படுத்துவதற்காக பத்து லக்ஷம் ரூபாய் கொடுத்திருக்கிறார். இது தவிர வேண்டிய கட்டிடங்களுக்காக ஒரு லக்ஷம் கொடுக்கப்போகிறாராம். இப்படி ஏற்படுத்தப்படும் ஸ்கூலில் உபாத்தியாயர்கள் நியமிக்கப்படும்முன் அவர்கள் ஒரு மேஸ்த்ரேட்டார் முன்பாகவாவது அல்லது அந்த ஸ்கூலின் ஹெட்மாஸ்டர் முன்பாகவாவது எப்பொழுதும் ராஜபக்தி உள்ளவர்களாய் இருப்பதாக சத்தியம் செய்து கொடுக்கவேண்டியது. இதே விதமாக அந்த ஸ்கூலில் சேரும் பையன்களும் சத்தியம் செய்து கொடுக்கவேண்டியது. ஸ்கூல் பையன்கள் ராஜத்வேஷம் கொள்ளாமலும் இதர கூட்டத்தார்களை த்வேஷிக்காமலும் சோம்பேரித்தனமாய் நடக்காமலும் மரியாதை இல்லாமல் பேசாமலும் பாதுகாப்பதற்கு வேண்டிய தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமாம். இதோடு ராஜபக்தி, நன்னடக்கை, மரியாதை, இவைகள் உண்டாகும்படி ஸ்கூல் பையன்களுக்கு உபந்நியாசங்கள் செய்ய வேண்டுமாம். இதர தேசங்களுக்குப் போய்ப் படிப்பதற்கு வேண்டிய பாஷா ஞானம் உண்டாகும்படி இங்கிலீஷ் பாஷையும் சொல்லிக்கொடுக்கப்பட வேண்டுமாம்.




V. KALYANARAM IYER & Co., *Booksellers, Esplanade, MADRAS.*

—(o)—

மிக அவசியமான

## புதிய தமிழ்ச் சட்டப் புஸ்தகங்கள்.

Code of Civil Procedure.

**புது சிவில் புரோசிஜர் கோட்**

1908-ம் வருஷத்திய 5-வது ஆக்ட் 460 பக்கம்.

ரூபா 2—0—0.

Indian Limitation Act.

**புது இந்தியன் கால நிர்ணயச் சட்டம்**

1908-ம் வருஷத்திய 9-வது ஆக்ட். ரூபா 0—12—0.

ஷை இரண்டும் சேர்த்து ஒன்றாய் பயிண்டு செய்தது

ரூபா 2—4—0.

Madras Estates Land Act.

மதிராஸ் யூஸ்திதிகளின் நிலத்தைப்பற்றிய

1908-ம் வருஷத்திய 1-வது ஆக்ட். ரூபா 0—8—0.

ஷை மூன்று புஸ்தகங்களும் சேர்ந்து வாங்கினால்

ரூபா 2—8—0.

**இந்திய கைத்தொழில் முயற்சி.**

(Translation of Glyn Barlow's Industrial India)

by T. R. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், ரூ. 1—0—0.

**விவசாய போதினி.**

அ. சேதுராமையரால் இயற்றப்பட்டது.

(விவசாய முறைகளையும், பயிரிடும் வகைகளையும் பற்றியது.)

400 பக்கம் ரூ. 1—4—0.

சென்னப்பட்டணம், பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய மஹாமஹோபாத்தியாய பிரம்ஹஸ்ரீ வே. **சாமிநாதையர்** அவர்கள் பரிசோதித்துப் பதிப்பித்துள்ள காப்பியங்களும், சங்கநூல்களும்

| | ரூ. | அ. |
|---|---|---|
| **சீவகசிந்தாமணி**, நச்சினார்க்கினியருரை, இரண்டாம் பதிப்பு, பலவகை ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் .. .. .. | 6 | 0 |
| **சிலப்பதிகாரம்**, அடியார்க்கு நல்லாருரையும், பழைய அரும்பதவுரை முதலியனவும் | 5 | 8 |
| **மணிமேகலையும்**, அரும்பதவுரை முதலியனவும் .. .. .. .. | 5 | 0 |
| **பத்துப்பாட்டும்**, நச்சினார்க்கினியருரை முதலியனவும் .. .. .. | 3 | 0 |
| **புறநானூறு**, மூலமும் உரைமுதலியனவும் | 4 | 0 |
| **பதிற்றுப்பத்தும்**, பழைய உரைமுதலியனவும் | 1 | 8 |
| **ஐங்குறுநூறும்**, ஷை ஷை | 1 | 8 |
| **புறப்பொருள் வெண்பாமாலை**, மூலமும் உரையும் .. .. .. | 1 | 8 |

## புதிய நாவல்களும், நாடகங்களும்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சுந்தரி மனோகரன் .. .. | 0 | 12 |
| காமாக்ஷி .. .. .. | 0 | 8 |
| சந்திரசேகரன் .. .. .. | 0 | 8 |
| ஆநந்த மடம் .. .. .. | 0 | 8 |
| லீலாவதி சுலோசனை .. .. | 0 | 12 |
| அமலாதித்யன் (Adaptation of Shakespeare's Hamlet). .. .. .. | 1 | 0 |
| இரண்டு நண்பர்கள் .. .. | 0 | 12 |
| சத்ருஜித் .. .. .. | 0 | 12 |
| மனோகரன் .. .. .. | 0 | 12 |
| சாரங்கதரன் .. .. .. | 0 | 8 |
| யயாதி.. .. .. .. | 0 | 8 |
| வசந்திகா .. .. .. | 0 | 8 |
| கிரிசல்டா, அல்லது பொறுமையுள்ள மனைவி | 0 | 3 |
| காலவரிஷி .. .. .. | 0 | 8 |
| வேதாள உலகம் .. .. | 0 | 8 |

**வி. கல்யாணராமய்யர் அண்டு கோ.,**

**புக்ஸெல்லர்ஸ், எஸ்பிளனேட், மதராஸ்.**

# SCIENTIFIC NOTES.
# சாஸ்திரீயக் குறிப்புகள்.

CHEMICAL INDUSTRIES.

**ரஸாயன சம்பந்தமான தொழில்கள்.**— பற்பல தொழில்களைச் செய்ய பற்பலவித, புத்தியும், யுக்தியும் சாஸ்திரீய ஞானமும் வேண்டும். சில தொழில்களைச்செய்ய சாஸ்திரீய ஞானம் இல்லாமல் முடியவே முடியாது. உதாரணமாக, கண்ணுடி, பீங்கான், சிமட்டி, வர்ணப்பசை, சோப்பு, எரு, சர்க்கரை, கடிதாசு முதலான சாமான்களைச் செய்யவேணுமானல் ரஸாயன சாஸ்திரீய முறைகள் தெரியவேண்டியது அவசியம். சென்ற செப்டம்பர் மாதத்தில் நீலகிரியில் கூடின "இண்டஸ்டிரியல் கான்பரன்ஸ்" என்னும் சபையில் ரஸாயன சாஸ்திரீய சம்பந்தமான தொழில்களை அபிவிருத்தி செய்ய வேண்டியதைப் பற்றிப் பேசினர்கள். இதை நமது சென்னைகவரன்மெண்டார் ஏற்றுக்கொண்டு ரஸாயன சாஸ்திரீய தொழில்களைச்செய்விப்பதற்கு மதராஸ் ராஜதானியில் வேண்டிய சாதனங்கள் இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்தறிந்து மார்ச்சுமீ 31உக்குள் ரிபோர்ட்டு செய்யும்படி மிஸ்டர் ஏ. சாடர்டன் முதலான 8 நிபுணர்களை நியமித்திருக்கிருர்கள்.

PERMANGANATE OF POTASH.

**பேர்மாங்கனேட் உப்பு.**— "பெர்மாங்கனேட்" என்னும் உப்பைக் கரைப்பதனல், ஜலத்திலுள்ள கரிஸம்பந்தமான அழுக்குகளும் 'காலரா'க்கிருமி முதலிய சிலவிதக் கிருமிகளும் நீங்கும். இந்த உப்பில் ஓர் எள்ளளவு எடுத்து ஒரு குடம் ஜலத்தில் கரைத்தால் அந்த ஜலமெல்லாம் அழகான ரோஜா வர்ணமாய்விடும். அந்த ஜலத்தைச் சிறிதுநேரம் வைத்திருந்தால் அந்த நிறம் போய்விடும். ரோஜா நிறம் இருக்கும்பொழுது அந்த நீரைக் குடிப்பதனல் குற்றம் இல்லை. சிலவேளை எவ்வளவு 'பெர்மாங்கனேட்' போட்டாலும் ரோஜாவர்ண மாகாமல் நீர் மஞ்சள் நிறமாகும். அப்படிப்பட்ட நீரில் அழுக்கு மிகவும் அதிகமாயிருக்கிறதென்று அறிந்துகொள்ளவேண்டும். அது ரோஜா வர்ணமாகிற வரையில் 'பெர்மாங்கனேட்' உப்பைச் சேர்த்தால் நீரில் அருசி உண்டாகும். அப்பொழுது அதில் கொஞ்சம் படிக்காரத்தைக் கரைத்தால் மஞ்சள் நிறமும் அருசியும் போய் நீர் சுத்தமாகவும் ருசியாகவும் ஆகும்.

THE CHOLERA BACILLUS.

**பேதியை உண்டாக்கும் கிருமி.**—போன மாதத்திய ஸஞ்சிகையில் பேதிவந்தால் சொஸ்தப்படுத்திக் கொள்ளும் விதத்தைப்பற்றிச் சொன்னேம். அது வராமல் செய்துகொள்ளவும் முடியும். ஒவ்வொருவரும் தன் வீட்டைச்சுத்தமாய் வைத்துக் கொண்டும், வெந்நீரிலேயே வாயை அலம்பி, வெந்நீரிலேயே ஸ்நானத்தைச் செய்து, உஷ்ணமான பானங்களையே குடித்து, சூடான ஆகாரங்களையே சாப்பிட்டு வரவேண்டும். மிகுமிஞ்சி எதையும் தின்னவும் குடிக்கவும் கூடாது. வேகாத பதார்த்தங்களையும் சாப்பிடக்கூடாது. எந்தப்பழத்தையும் கொஞ்சநேரம் கொதிக்கிற தண்ணீரில் போட்டு வைத்துப் பிறகுதோலை உரித்துச்சாப்பிடவேண்டும். இவ்விதமாக அனுஷ்டித்து வருகிறவர்களிடம் பேதி வியாதி அணுகாதென்று பாரிஸ் பட்டணத்திலுள்ள ஒரு சாஸ்திரநிபுணர் சொல்லுகிருர். பேதி, "பாக்டீரியா" என்னும் ஒருவித கிருமிகளால் உண்டாவது. அந்த கிருமிகள் 140 டிக்ரிக்கு மேற்பட்ட சூட்டில் ஜீவிக்கமாட்டா. ஆகையால் ஆறின பதார்த்தங்களைத் தள்ளிவிட்டு சூடான பதார்த்தங்களையே சாப்பிட்டு வந்தால் பேதி அண்டாது.

SUGAR AS A DISINFECTANT.

**சர்க்கரை தொத்து வியாதிகளை அண்டாமல் செய்தல்.**—ஐரோப்பா கண்டத்தில் பல தேசங்களில் வியாதிக்காரர்கள் படுத்து இருக்கும் அறைகளில் சர்க்கரையை நெருப்பில் போட்டு எரிப்பது வழக்கமாம். இப்படிச் செய்வதனல் இன்னகுணம் இருக்கிறதென்று தெரியாமலே அநேக ஜனங்கள் செய்து வருகிருர்களாம். சர்க்கரையை தீயில் போட்டு எரிப்பதனல் ஒருவித ஆவி உண்டாகிறது. இந்த ஆவி தொத்து வியாதிகளுக்குக் காரணமான கெட்ட வாயுக்களை போக்கடிக்கும் சக்தியுள்ளது. இதை பிரத்தியக்ஷமாக ஒரு டாக்டர் பார்த்திருக்கிருர். அழுகிப்போன மாம்ஸமோ அல்லது முட்டையோ இருக்கும் ஒரு பாத்திரத்தில் சர்க்கரையைப் போட்டுக் கொளுத்தினல் அதிலுள்ள துர்நாற்றம் போய்விடும். சர்க்கரையைக் கொளுத்துவதால் உண்டாகும் வாயுவில், காசம், பேதி, அம்மை, இப்படிப்பட்ட வியாதிகளை விளைவிக்கும் சில கிருமிகளைப் போட்டுப் பார்த்தாராம். இந்த கிருமிகள் எல்லாம் அரை மணியில் இறந்து போய்விட்டனவாம். ஆகையால் சர்க்கரையை தீயில் போட்டு எரிப்பது நல்ல ஆரோக்கியமான வழக்கமாகும்.



இதை கவனியுங்கள் !!

இதை கவனியுங்கள் !

## சுதேசி லோட்டஸ் சோப் என்பது என்ன ?

கடைத் தெருவுகளில் எங்கும் அகப்படுகிறது. இந்தியா முழுதும் இது பிரசித்தமானது.

மிக சுத்தமானது. மிக சரசமாகக் கிடைக்கக்கூடியது.

**லோட்டஸ் வாஷர்**—சோப் என்பது இந்தியா முழுதும் ஒவ்வொரு வீடுகளிலும் துணி துவைத்துக்கொள்வதற்காகவும் திரேகத்தை சுத்தி செய்துகொள்வதற்காகவும், ரொம்பவும் உபயோகப்படக்கூடியது.

**லோட்டஸ் சோப்:**—என்பது மருந்து மூலியமாகச் செய்யப்பட்டதல்ல. எதற்காக சகலவித கொழுப்பு முதலானதுகள் கலந்த சோப்புகளை உபயோகிக்கிறதினல் திரேகத்திற்கு வியாதிகள் சம்பவிக்கும்.

இது சஞ்சீவி கிழங்கு மூலிகைகளால் செய்ததே தவிர மாமிசங்களால் செய்யப்பட்டதல்ல. இதை ஒரு தடவை வாங்கி உபயோகிப்பீராகில் இதன் குணம் தெரியவரும்.

இந்த சோப்பை எல்லோரும் உபயோகப்படுத்தும்படி சுலப விலைக்கு விற்கப்படுகிறது. பம்பாயில் விற்கிற விலை பிரகாரம் இவ்விடத்திலும் விற்கப்படும். வியாபாரிகளுக்கு நல்ல கமிஷன்களும் கொடுக்கப்படும். மற்ற விஷயங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு யெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

**மானேஜர், எம்பிரஸ் ஆப் இண்டியா டைரி கம்பெனி,**

30, ஏகாம்பர ஈஸ்வர அக்கிரஹாரம், சௌக்கார்பேட்டை, மதராஸ்.

12.

மிகவும் அருமையான **தமிழ் நாவல்கள்.**

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஜடாவல்லவர் : கிராம முனிசீபின் சரித்திரம் | 0 | 8 |
| விக்டோரியா மகாராணியார் சரித்திரம் 27- சித்திரப்படங்களோடு | 1 | 0 |
| சிவாஜிரௌவிஞரு : அற்புத சரித்திரம் | 0 | 8 |
| புத்தரது திவ்ய சரித்திரம் | 0 | 8 |
| பார்வதி கலியாணம் | 0 | 4 |
| ஞானம்பாள் திவ்ய சரித்திரம் | 0 | 6 |
| ரத்னவிமானம் ஓர் நாடகம் | 0 | 12 |
| தாருக் காசுவம் | 0 | 14 |
| பிரதாப முதலியார் சரித்திரம் | 1 | 0 |
| இரண்டு நண்பர்கள் | 0 | 12 |
| சத்ருத்ஜித் | 0 | 12 |
| மனோஹரன் | 0 | 12 |
| கள்வர் தலைவன் | 0 | 8 |
| சாரங்கதரன் | 0 | 8 |
| யயாதி | 0 | 8 |
| வேதாள உலோகம் | 0 | 8 |
| காலவரிஷி | 0 | 8 |
| விவேகாநந்த விஜயம் | 1 | 4 |
| சந்திரசேகரன் ஓர் புதிய நாவல் | 0 | 8 |
| ஆனந்த மடம் ஷை | 0 | 8 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| போஜசரித்திரம் படத்துடன் | 1 | 8 |
| சாரதாம்பாள் சரித்திரம் | 0 | 8 |
| புருஷோத்தமன் சரித்திரம் | 0 | 10 |
| பன்னிரு நீதிக் கதைகள் | 0 | 12 |
| லீலா அல்லது மங்கைபுர மாணிக்கம் | 0 | 12 |
| பரிமளா | 0 | 10 |
| கம்பராமாயணம் வசனம் 2-வாலியம் காலிகோ பயின்டு | 4 | 0 |
| ஷை செய்யுள் 2-வாலியம் | 6 | 0 |
| தாயுமான ஸ்வாமிபாடல் | 1 | 0 |
| வேறு பதிப்பு | 0 | 12 |
| பட்டணத்தார் சரித்திரமும் புராணமும் | 1 | 8 |
| திருவிளையாடல் புராணம் | 1 | 8 |
| ஷை திக் பேபர் | 2 | 0 |
| அகஸ்தியர் தேவாரம் | 0 | 4 |
| நாலடியார் மூலமும் உரையும் | 1 | 2 |
| விநோதரஸமஞ்சரி | 1 | 2 |
| ப்ரபுலிங்க லீலை வசனம் | 0 | 12 |
| பிரபோத சந்திரோதய வசனம் | 1 | 0 |
| பகவத்கீதை | 1 | 4 |
| வேறு பதிப்பு | 0 | 10 |
| மஹாமஹம் | 0 | 4 |

**மானேஜர், லக்ஷ்மீவிலாச புத்தகசாலை, திருவல்லிக்கேணி, மதராஸ்.**

## MEDICAL NOTES.

## வைத்தியக் குறிப்புகள்.

QUININE.

**கோயினு.**—கொயினுப்பொடி முறை ஜுரத்துக்கு கைகண்ட ஔஷதம். இதை எல்லா ஜனங்களும் வாங்கி உபயோகப்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு பட்டிக்காட்டு போஸ்டாபீஸிலும் சொற்ப விலைக்கு விற்கும்படி கவரன்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எவ்வளவு சௌகரியங்கள் இருந்தும் இந்தியர்களில் அநேகர் இதை வாங்குவதில்லை. வருஷம் ஒன்றுக்கு உலகத்தில் பத்து லக்ஷம் ராத்தல் கொயினு செலவாகிறது. இந்தியா தேசத்தில் ஏராளமான ஜனங்கள் இருந்தும் வருஷம் ஒன்றுக்கு 50,000 ராத்தால் தான் செலவாகிறதாம். கொயினுவை எப்படிச்சாப்பிடவேண்டுமென்று விற்கப்படும் "பொட்டலம்" ஒவ்வொன்றின் மேலேயும் அச்சிடப்பட்டிருக்கிறது. ஜுரம் இருக்கும் பொழுது சாப்பிடக்கூடாது. இல்லாத பொழுது சாப்பிடவேண்டும். சாதம் சாப்பிடுங்காலங்களில் அன்னத்வேஷமும் வாந்தியும் ஜாஸ்தியாய் இருக்கும். இவைகளைக்கண்டு ஸாதாரண ஜனங்கள் கொயினுவை சாப்பிட்டதனுல் வியாதி ஜாஸ்தியாய் விட்டது என்று சொல்லுவார்கள். கொயினுவைச் சாப்பிட்டால் மேலே சொன்ன குறிகள் இருக்கத்தான் செய்யும். அவைகளைக் கண்டு பயப்படாமல் சில நாளைக்குச் சாப்பிட்டுவந்தால் முறை ஜுரம் சொஸ்தமாகும்.

COFFEE FOR ASTHMA.

**இழுப்புக்குக் காப்பி.**—இழுப்புவந்த உடனேயே சிகித்ஸை செய்துவிட வேணும். இழுப்புக்கு காப்பியைச் சாப்பிட்டால் மிக குணமுண்டு. பால் சர்க்கரை போடாமல் சுடச்சுட கடுங்கஷாயம் போட்டு காபியை சாப்பிடவேணும். இழுப்பு வருகிறவர்கள் அநேகமாய் ஜீர்ணசக்திக் குறைவுள்ளவர்களா யிருப்பார்கள். இவர்களுக்கு பாதி வெந்ததும் வேகாததுமான ஆகாரங்களைப் போடாமல் நன்றாய்ச் சமைந்த புஷ்டியான ஆகாரங்களைப் போடவேணும். இரவில் 10-மணிக்கு படுக்கிறவழக்கமாயிருந்தால் 5-மணிக்கே சாப்பிட்டு விடவேணும். படுக்கும் பொழுது சாதம் ஜீரணமாயிருப்பது நலமாம்.

OVER-FEEDING.

**அதிகமாய்ச் சாப்பிடுவது.**—"உண்டி சுருங்குதல் பெண்டிற்கு அழகு" என்றதனுல் ஆண்மக்கள் அதிகமாய் அளவிற்கு மிஞ்சி சாப்பிடலாம் என்பது கருத்தல்ல. அளவுக்கு மிஞ்சினுல் அமுதமும் நஞ்சு என்ற வசனத்தை அநுசரித்து அளவுக்கு மிஞ்சி சாப்பிடுவதே அநேக வியாதிகளுக்குக் காரணமாகிறது என்று ஒரு டாக்டர்சொல்லுகிறார். அதிகமாய்ச் சாப்பிடுவதனுல் சிலருக்கு தேகம் ஸ்தூலிக்கும்; சிலருக்கு ஜீரணசக்தி இல்லாமல் தேகம் இளைத்து எலும்பெடுத்துப்போகும். வயஸான காலத்தில் வாயுப்பிடிப்பு, நீரிழிவு, நீர்க்கடுப்பு முதலான வியாதிகள் உண்டாகும். மிதமிஞ்சிச் சாப்பிடுவதால் வயிறு கனத்து பகலில் தூக்கம் அதிகரித்து, மூச்சு விட முடியாமல் அவஸ்தையுண்டாகும். இராத்திரி வேளையில் சரியான தூக்கம் வாராமல் தலைவலி முதலிய நோய்களுக்கும் இடமாகுமாம்.

KEROSINE-OIL FOR SNAKE-BITES.

**பாம்புகடிக்கு கெரோஸின் ஆயில்.**—பாம்புக்கடிக்கு மண்எண்ணெய் என்னும் கெரொஸின்ஆயில் நல்லமருந்தாம். பாம்புகடித்த உடனே கடித்த இடத்தை கெரொஸின்எண்ணெயில் அமிழ்த்து வைத்தால் புகை புறப்படுவதுபோல் கடித்த இடத்திலிருந்து பச்சையாக ஆவிபோல் ஒன்று வெளிப்படுமாம். இது எண்ணெயோடு சம்பந்தப்படாது. ஆனுலும் எண்ணெயில் கண்ணுக்கு நன்றாய்த் தெரியும் என்று ஒரு டாக்டர் சொல்லுகிறார்.

ONION.

**வெங்காயம்.**—வெங்காயத்திற்கு கெட்ட காற்றுக்களை கிரஹித்துக் கொள்ளும் சக்தி உண்டு. அதனுல் தான் இந்தியாவின் வடபாகங்களில் பேதி, அம்மை வியாதிகள் உண்டானுல் வீட்டு வாசல்களிலும் வழி நடைகளிலும் வெங்காயத்தை ஸரமாகக் கோர்த்து தொங்க விடுகிறார்கள். ஐரோப்பாவிலும் இதன் குணத்தைத் தெரிந்து கொண்டு மேலே சொல்லிய படியே செய்து வருகிறார்களாம்.

HEAD-ACHE AND LEMON-JUICE.

**தலைவலியும் எலுமிச்சை ரஸமும்.**—தலைவலியென்றவியாதி நரம்பைப்பற்றிய தொந்தரையாம். அது இரத்த ஓட்டச்சுருக்கினுல் உண்டாகும். ஒரு எலுமிச்சம்பழத்தை இரண்டாக நருக்கி ஒவ்வொரு பொட்டிலும் மிருதுவாகத்தேய்க்கத்தேய்க்கத் தலைவலி நிற்குமாம். தானே தேய்த்துக்கொள்ளுவதைவிட வேறு ஒருவர் மிருதுவாகத் தேய்த்தால் அதிக குணமுண்டு என்று ஒருவர் சொல்லுகிறார்.




# இராமாயண வினு விடை.

**இரண்டாம்பதிப்பு.**
ஸப்த காண்டங்களும், இராமாயணத்தின் உட்பொருளும் அடங்கியன. விஸ்தரித்தும் ஒழுங்கு படுத்தியும் எழுதப்பட்டிருக்கிறது. யாவராலும் மிகவும் அருமையான புத்தகமென சிலாகிக்கப்படுகிறது. அநேக பள்ளிக்கூடங்களில் மத ஸம்பந்தப்பட்ட பாடப்புத்தகமாகவும் வைக்கப்பட்டிருக்கிறது. விலை அணா 12.

**ஸ்ரீ மஹா பாரத வினு விடை.**
முதல் பாகம்—இதில் ஆதி, ஸபா, ஆரண்ய, விராட, உத்தியோக பர்வங்கள் அடங்கியன. விஷயங்கள் ஒன்றும் குறையாதபடி மிகவும் இனிய செந்தமிழ் நடையில் சிறுவர், சிறுமிகள்கூடப் படித்துத் தெரிந்துகொள்ளக்கூடிய வண்ணம் எழுதப்பட்டுள்ளது. விலை அணா 12.

**ஆரியமத உபாக்கியானம்.**
இதில் இதிஹாஸம், புராணம் முதலானவைகளிலிருந்து எடுத்தெழுதிய 50 இனிய கதைகள் கொண்டது. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு நீதியை நன்கு விளக்குகிறது. இப்புத்தகமும் அநேக பாடசாலைகளில் பாடப்புத்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது. விலை அணா 2.

**கிரிஸெல்டா அல்லது பொறுமையுள்ள மனைவி.**
இப்புத்தகம் பெண்பாலார் அவசியம் வாசிக்கக்கூடிய புத்தகங்களில் ஒன்று. இப்புத்தகத்தில் ஒரு பெண் தன் கணவனிடம் நடந்து கொள்ளுதலில் மிகவும் சிலாகிக்கத்தக்க மாதிரியை நன்கு விளக்கிக் காட்டியிருக்கிறது. விலை அணா 3.

9. **ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மைலாப்பூர், மதராஸ்.**

GANESH & Co., Thambu Chetty Street, Madras.

**ஆனந்தமடம்.**—தேசபக்தி புகட்டும் அரிய கதை. விலை அணா 8.
**சந்திரசேகரன்**—இந்திய மாதுகளின் மடமை, கற்பு, ஒழுக்கம், சொல்லுறுதி, தேசபக்திமுதலியவைகளையும், ஈஸ்டு இந்தியா கம்பெனியார் அரசாண்டகாலத்தில் அவர்களுடைய குணதிசயங்களையும் விளக்கிக்காட்டும் அரிய கதை. விலை அணா 8.
**அநுமான்ஸிங்**—துப்பறியும் அபூர்வ நவீனக்கதைகள். விலை அணா 12.
**காமாக்ஷி.**—ஓர் கைம்பெண்ணின் கெதி. விலை அணா 8.

**தேசாபிமானிகள் சரித்திரம். விலை அணா 12.**
இந்திய தேசத்திற்காக சுயநலத்தை நாடாது தொண்டு புரியும் பக்த சிகாமணிகளில், அடியிற் குறித்துள்ள பன்னிரு மகான்களின் ஜீவிய சரிதையை, இனிய செந்தமிழில் வரைந்து நல்ல கடிதத்தில் சிறந்த எழுத்தில் பதிப்பித்து, அவர்களின் உருவப்படத்துடன் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி | ஸ்ரீ பால கங்காதர திலகர் |
| ,, ஆனந்த மோகன் போஸ் | ,, லாலா லஜபதிராய் |
| ,, கோபால கிருஷ்ண கோக்கலே | ,, விபின சந்திர பாலர் |
| ,, சுரேந்திரநாத் பானர்ஜீ | ,, சுவாமி விவேகாநந்தர் |
| ,, ஸர் பிரோசிஷா மேட்டா | ,, மகாராஜா கைக்வார் |
| ,, டாக்டர் ராஷ் விகாரி கோஸ் | ,, ஜீ. சுப்பிரமணிய ஐயர். |

**அருமையான தமிழ்ப்புத்தகங்கள்.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தீனதயாளு | .. | 0 | 12 | 0 | போஜ சரித்திரம் | .. | 1 | 8 | 0 |
| மதிகெட்ட மனைவி | .. | 1 | 0 | 0 | வேதாள உலகம் | .. | 0 | 8 | 0 |
| ஸ்ரீமாமி கொலுவிருக்கை | .. | 0 | 8 | 0 | சத்ருஜித் | .. | 0 | 12 | 0 |
| தலையணை மந்திரோபதேசம் | .. | 0 | 8 | 0 | கள்வர் தலைவன் | .. | 0 | 8 | 0 |
| முத்திரா ராக்ஷஸம் | .. | 0 | 4 | 0 | யயாதி | .. | 0 | 8 | 0 |
| மிருச்சகடி | .. | 0 | 4 | 0 | மனோகரன் | .. | 0 | 12 | 0 |

**கணேஷ் அண்டு கம்பெனி, தம்புசெட்டித்தெரு, சென்னை.**

## PAGE FOR GIRLS.

## பெண்களுக்கான பக்கம்.

THE INDIAN LADIES' CONFERENCE.

**இந்திய ஸ்திரீகளின் சபை.**—சென்ற டிசம்பர் மாஸத்தில் சென்னப்பட்டணத்தில் ஸ்ரீமகாராணி கஜபதிராவ் அம்மாள் அக்கிராஸனம் வகித்து ஒரு பெண்பாலர் சபை நடந்தது. கல்வி, ஒழுக்கம், கடவுளைப்பற்றிய அறிவு, முதலிய நற்குணங்கள் மனிதர்களுக்கு நிரம்பி எல்லோரும் சந்தோஷமாயிருப்பதற்கு ஸ்திரீகளும் இப்போதிருக்கும் நிலைமையைப் பார்க்கிலும் கல்வியைக்கற்று உயர்ந்த பதவிக்கு வரவேண்டுமென்று பல தீர்மானங்களை இந்த கூட்டத்தில் செய்தார்கள்.

A WIDOWS' HOME.

**ஒரு விதவா கிரஹம்.**—ஹிந்து விதவைகள் புருஷன் ஆதரவு இல்லாமல் ஆகாரம் முதலிய விஷயானுபவங்கள் குறைந்து மற்றவர்கள் அவர்களைப் பார்த்தால் சகுனத்தடையாய் விட்டது என்று சொல்லும் பழிகளுக்கும் ஆளாகி கஷ்டப்படுகிறதை நாம் பார்த்து வருகிறோம். இவர்களுடைய குறையை ஒருவாறு நீக்குவது பேருபகாரமும் தருமமுமாகுமென்று எண்ணி பஞ்சாபிலுள்ள பிரம்ம சமாஜத்தார் அம்ரிட்ஸர்ப்பட்டணத்தில் ஒரு விதவாக்கிரஹம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதில் ஹிந்து விதவைகளுக்கு அவசியமான படிப்பைச் சொல்லிக்கொடுப்பதோடு கூட, தையல், மேஜோடு செய்தல், முதலான வேலைகளையும் கற்றுக்கொடுப்பார்களாம். அவரவர்களுடைய மதாசார, குலாசார அனுஷ்டானங்களுக்கு யாதொரு பங்கமும் உண்டாகாது. ஒவ்வொரு பெண்ணின் குணங்களைப்பற்றியும் முன் நடவடிக்கைகளைப் பற்றியும் நன்றாய்த் தெரிந்துகொண்டுதான் அந்த கிரஹத்தில் சேர்த்துக்கொள்வார்கள். இந்த தர்மத்திற்காக அம்ரிட்ஸர் நகரத்தில் லாலா சுந்தரதாஸ் என்பவர் தனக்குச் சொந்தமான பெரிய கட்டிடத்தை கொடுத்திருக்கிறார். பாய்கிர் பால்சிங் என்று ஒருவர் 500 ரூபாய் கொடுத்திருக்கிறாராம்.

MARRIAGEABLE AGE FOR GIRLS.

**பெண்களின் விவாக வயது.**—சென்னையில் கூடிய பாரதமகிலபரிஷத் சபையில் ஸ்ரீமதி. பண்டிதை அசலாம்பிகை அம்மாள் விவாகவயதைப் பற்றி ஒரு உபந்நியாஸம் செய்தாள். பெண்களின் விவாக காலம் வயதைப் பொருத்ததல்ல, அறிவின் தேர்ச்சியை பொருத்தது. மற்ற க்ஷத்திரிய ஜாதியரைப்போல் பிராம்மணர்களும் யுவதியான பெண்களுக்கு முன்காலங்களில் விவாகம் நடத்திவந்தார்கள். அதற்கு அவர்கள் இப்போது ருதுவாகாத பெண்களின் விவாக காலத்திலும் அனுஷ்டித்து வருகிற நாகவல்லி மந்திரமே போதுமான சாக்ஷி. சாஸ்திர சம்மதமானதை விட்டு வழக்கம் என்பதைக் கைக்கொண்டு நடத்திவருகிற பாலிய விவாகத்தினுல் உண்டாகிற பெரும் விபரீதங்களை நாம் தினந்தோறும் கண்ணால் காண்கிறோம், காதால் கேட்கிறோம். இப்படிப்பட்ட விபரீதங்கள் நேரிடாமல் யுவதியானாலும் நன்றாய் யோசித்து, நல்ல அறிவு வந்த பிறகு விவாகம் நடத்துவிப்பது மிக மேன்மை என்று சொன்னாள்.

GIFT TO THE GOSHA HOSPITAL.

**கோஷா ஆஸ்பத்திரிக்கு நன்கொடை.**—விஜய நகரம் மகாராஜா குமாரிகா சாகிபா ஏற்கனவே எவ்வளவோ தருமங்கள் செய்திருக்கிறாள். இப்போது அச்சீமாட்டி விக்டோரியா காஸ்ட் அண்ட் கோஷா ஆஸ்பத்திரிக்கு ரூபா 4,000 நன்கொடை கொடுத்திருக்கிறாள். அத்தொகையை நமது கவர்னர் பெண்சாதியாகிய லேடிலாலிக்கு அனுப்பி அதை எவ்விதமாய் உபயோகித்துக் கொண்டாலுஞ் சரியென்று சொல்லியிருக்கிறாள். அந்த ஆஸ்பத்திரியின் நிர்வாகத்துக் கென்று ஏற்பட்டிருக்கும் நிதி வெகு குறைவாயிருக்கும்போது விஜய நகரம் மகாராஜா குமாரிகா சாகிபா ரூபா 4,000 நன்கொடை கொடுத்திருப்பதைக் கேட்டுப் பொதுவாய் இந்திய மாதர்கள் அனைவரும் அச்சீமாட்டியை மனப்பூர்வமாய் வாழ்த்துவார்களென்பதில் சந்தேகமேயில்லை. இந்த கோஷா ஆஸ்பத்திரி, ஸ்திரீகளுக்கு வரும் வியாதிகளை மட்டும் சொஸ்தம் செய்வதற்காக ஏற்பட்டது. வைத்தியம் பார்த்துக் கொள்ளுகிறவர்கள் பணம் ஒன்றும் கொடுக்கவேண்டியதில்லை. தர்மிஷ்டிகள் இந்த ஆஸ்பத்திரிக்கு எவ்வளவு கொடுத்தாலும் தகும்.



S. VAIDYA & Co.,
General Merchants & Commission Agents,
319, Thambu Chetty Street, MADRAS.

புரொபஸர் T. R. கஜ்ஜார் M.A., B.S.C.F.C.S., M.S.C.I. என்பவரால் சாஸ்திர யுக்தப்படி செய்யப்பட்டுவரும் குளிர்ச்சி தரக்கூடிய

ALEMBIC HAIR OILS
அலம்பிக் கூந்தல் தைலங்கள்

எங்களிடத்தில் வழக்கமாக வாங்கிவருகிற எல்லோருக்கும், Technical Education க்காக ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படும். மற்ற விவரங்களும் நிபந்தனைகளும் தெரியவேண்டியவர்கள், இந்த பேபரைகுறிப்பிட்டு அரை அணா ஸ்டாம்புடன் அடியில் கண்ட விலாசத்துக்கு எழுதித்தெரிந்துகொள்ளலாம்.

எஸ். வைத்தியா அண்டு கம்பெனி,
319, தம்பு செட்டித் தெரு,
மதராஸ்.

P. S. Sastri Artist and Photographer,
CARNATIC STUDIO, Mount Road, Madras.

SPECIALITIES. { SCHOOL GROUPS. FAMILY GROUPS. BROMIDE ENLARGEMENTS.

பொட்டகிராப் படங்கள்.

பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளையும் குடும்பங்களையும் பொட்டகிராப் படம் பிடிப்பதிலும் சிரியபடங்களை பெரிதாக்கிக்கொடுப்பதிலும் நிபுணர்.

பி. எஸ். சாஸ்திரி,
பொட்டகிராப் பிடிப்பவர், கர்நாடிக் ஸ்டுடியோ,
மவுண்ட் ரோட், மதராஸ்.

# PAGE FOR BOYS.
## பையன்களுக்கான பக்கம்

---

ALLIGATORS IN HARNESS.

**முதலைக்குக் கடிவாளம் போட்டு சவாரி செய்தல்.**—இதுவரையில் குதிரை, கழுதை, கோவேறு கழுதை, முதலிய பிராணிகளுக்குக் கடிவாளம் முதலிய போட்டுப் பார்த்திருப் போமேயன்றி முதலைக்குக் கடிவாளம் போட்டுப் பார்த்திருக்க மாட்டோம். ஆயினும், குதிரையைப் போலவே முதலைக்கும் கடிவாளம் போட்டு சிறு வண்டியில் பூட்டி சவாரிசெய்வதற்கு உபயோகமாய் அமெரிகா தேசத்தில் ஹாட்ஸ்ப்ரிங்க்ஸ் என்ற விடத்தில், எச். ஜே. காம்ப்பெல் என்பவர் பழக்கி, சவாரி செய்து வருகிறாராம்.

HUMAN HAIR.

**மனிதர் மயிர்.**—1906ம் வருஷத்தில் ஜப்பானிலிருந்து இருநூற்று எண்பது பவுன் பெருமான மனிதர்களுடைய மயிர் ஏற்றுமதி செய்யப்பட்டதாம். சென்ற வருஷத்தில் பதினொரு மாஸத்தில் 10,421 பவுன் பெறுமானது அனுப்பப்பட்டதாம். இதை விசேஷமாய் பிரான்ஸ் தேசத்திற்கு அனுப்புகிறார்கள். இதைப் பார்த்தால் இந்த உலகத்தில் இன்னத்திற்கு விலையுண்டு இன்னத்திற்கு விலையில்லை என்று சொல்வது அசாத்திய மென்று தோன்றுகின்றது.

INDIGO.

**அவுரி.**—இதை ஐரோப்பிய முதலாளிகளே விசேஷமாய்ப் பணச் செலவு செய்து பயிர் செய்விக்கிறார்கள். வங்காளம், வடமேற்கு ஐக்கியமாகாணங்கள், பஞ்சாப், சென்னை ராஜதானியில் கிருஷ்ணாவுக்கும் வட ஆர்க்காட்டுக்கும் இடையிலுள்ள நாடு, கடப்பை ஜில்லா, கர்நூல் ஜில்லா—ஆகிய இவை முதலான இடங்களிற் பயிராகின்றது. கல்கத்தாவிலிருந்து ஏற்றுமதியாகும் நீலிமருந்து பெரும்பான்மையும் பீஹார் மாகாணத்து வடபாகத்தில் உற்பத்தியாகின்றது.

BIRTH AND DEATH RATES IN THE WORLD.

**உலகத்தின் ஜனன மரணக்கணக்கு.**—உலகத்தில் நிமிஷத்துக்கு 60 பேர்கள் இறந்துபோகிறார்களாம். தற்காலத்தில் வருஷமொன்றுக்கு 165 லக்ஷம் ஜனத்தொகை அதிகப்பட்டுக் கொண்டு வருகிறதாம்.

PROF. RAMAMURTHI'S FEATS.

**இராமமூர்த்தியவர்களின் ஆச்சரிய பலம்.**—இராமமூர்த்தி யென்பவர் நமது சென்னை ராஜதானியில் வடக்கே விசாகப்பட்டணம் ஜில்லாவில் பிறந்தவர். இவர் நமது தேசத்தில் பழமையாகவுள்ள தேக அப்பியாசங்கள், குஸ்தி, முதலியவைகளை விடாமற் செய்து ஆச்சரியமான தேகவலுவை இப்போது அடைந்திருக்கிறார். இடைவிடாமல் தேக அப்பியாசத்தில் பழகுவதால் அதிகபிரயோஜனம் உண்டு என்பதை இவருடைய வலுவினாலேயே நாம் அறியலாம். மேல் நாட்டில் அதிக அற்புதமான பலமுடைய **ஸாண்டோ** வென்பவர்கூட இவர்செய்யும் சில குஸ்திகளை இதுவரையிற் செய்ததாகத் தெரிய வில்லை. நமது தேசத்தில் நல்லகுஸ்திகள், தேக அப்பியாச வழிகள், எல்லாம் இருக்கின்றன. அவைகளைபாலிய முதல் செய்துவந்த ராமமூர்த்தி என்பவர் செய்யும் வித்தைகள் அநேகம். தமது மார்பின்மேல் ஒரு பெரிய கற்பாறையைத்தள்ளி, இருவர் அதன்மேல் சம்மட்டியால் அடித்தால் அவர் அலக்ஷியமாய் இருப்பார். அவர் மார்மேலே மனிதர் ஏறியிருக்கும் கோச் வண்டியை இழுத்தாலும் இவருக்கு சிரமம் இல்லை. அவர் புஜத்தைச்சுற்றி நெருக்கமாய்க் கட்டிய இருப்புச்சங்கிலியைத் துண்டு துண்டாய் சிதறிவிழும்படி முன்கையை மடக்கி தமது புயவலிமையை அநேக தடவைகளில் காட்டி வெகுமானம் பெற்றிருக்கிறார். இதுவரையில் செய்யாத ஆச்சரியமான வித்தையை அவர் சமீபத்தில் செய்தார். அதாவது அதிகவேகமாய் ஓடிக் கொண்டேவரும் மோடார் வண்டியை அவர் தமது கைகளால் ஒருக்ஷணத்தில் பிடித்து அசைவற்று இருக்கும்படி நிறுத்தி விட்டார். இது இந்தியர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை உண்டுபண்ணக்கூடிய விஷயம். நமது நாட்டு குஸ்திகளை ஆராய்ந்தறிந்து ஒவ்வொரு சிறு பிள்ளையும் பாலிய முதல் தேகப் பயிற்சி செய்து வலுவைசம்பாதித்துக்கொண்டால் நோயற்ற வாழ்வுடன் நெடுநாள் ஜீவித்திருக்க முடியும்.

TUSKS OF ELEPHANTS

**யானைகளின் தந்தம்.**—ஆபிரிகா கண்டத்தில் உள்ள யானைகளில் ஆண் பெண் இருவகைக்கும் தந்தங்கள் இருக்கின்றன. ஆசியா கண்டத்தில் பொதுவாய் ஆண் யானைகளுக்கு மட்டும் தந்தம் இருக்கிறது.




**அதிக சகாயம்!** **புதிய சரக்குகள்!!**

**காசிப் பட்டு பீதாம்பரங்கள்**

---

**நேரான நெசவுகாரர்களிடமிருந்து:**

பட்டு சேலைகள்,
ரவிக்கைகள்,
துப்பட்டாக்கள்,
சால்வைகள்,
பஸ்காரு அல்லது பிள்ளை வேஷ்டிகள்,
பலவித நிறங்களில் ஜரிகை போட்டது,
ஜரிகையினால் பூவேலைகள் செய்ததும்,
சாதாவானதும்,
வெண்பட்டு வேஷ்டிகளும்,
அங்கவஸ்திரங்களும்,
சவுக்கங்களும்
உடுப்புத் துணிகளுக்கு வேண்டிய தினுசுகளும்,

நாங்கள் நேராக நெசவுகாரரிடமிருந்தே மிகவும் சுகாய விலைக்கு அனுப்புகிறோம். விலை ஜாபிதா இனாமாக அனுப்பப்படும்.

**மானேஜர்,**

**பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.**

Manager, SILK PITAMBER Co.,
*Benares City.*

13.

SARASVATHY & Co.,

153, Mint Street, Madras.

**இதன் பெயர் பிரசன்டன்ஸ் வாட்சு.**

நிக்கல் சில்வர் சுவிஸ்மேய்டு வாட்சு, ஓபன் கேசு, கிலஸ் பேடன்டு வாட்சு, கம்பன் ஸேஷன்ஸ், பியாலன்ஸ் அதிக வளைவு ஆகவும் 5-வருஷம் காரண்டியாகவுமிருக்கும். வி. பி. சார்ஜூ உள்பட விலை ரூபா 5—0—0. இந்த வாட்சு வரும் மார்ச்சுமாதம் 31-ந்தேதிக் குள்ளாக 1,500 வாட்சுகள் விக்கிரயம் ஆகிறதற்குள்ளாகத் தெரிவித்துக் கொள்பவருக்கு அடியில் கண்ட சாமான்கள் 10-ம் விலையில்லாமல் இனாமாக அனுப்பப்படும்.

கனவான்களே, உடனே எழுதி அனுப்பவும்.

**இனாம் சாமான் விபரம்.**

சுகந்த மூக்குத்தூள் புட்டி 1, ஜர்மன் பொடி டப்பி 1, படுக்கை அறை விளக்கு 1, ஷோக்கு மோதிரம் 1, கடியாரச் சங்கிலி 1, ஷெடி வைக்கும் பெட்டி 1, கண்ணாடி 1, ஹேர் ஸ்பிரிங்கு 1, முகம் பார்க்கும் கண்ணாடி 1, மூக்குக் கண்ணாடி 1.

**சரஸ்வதி அண்டு கோ,** 153, தங்கசாலை வீதி,
மதராஸ்.

4.

S. MUNNAJEE RAO.

Watch & Clock Dealer & Repairer,

ESPLANADE, MADRAS.



நாங்கள் மற்ற ஷாப்புகளைக் காட்டிலும் விலை சரசமாயும், சொந்துக்களின் பெறுமானப்படியும் கொடுக்கிறோமென்கிறதற்கு உத்தரவாதம்.

**விலையில் சரசமான கைக்கெடியாரங்கள்.**

நெ. 175. ஒரு பக்கம் மூடியில்லாதது. ... ... ... ... ரூ. 6—0—0
ஷை ஏ. ஷை வெள்ளியில் ... ... ... ரூ. 10-0—0
,, 247. ஒருபக்கம் திறந்தது சாவியில்லாதது, வெள்ளியிற் செய்யப்பட்டது ரூ. 6—0—0
,, ,, பி. ஒரு பக்கம் திறந்தது. ஆனால் நல்லமாதிரி. 6 கெம்புகளையுடையது ரூ. 8—0—0
,, 248. ஒருபக்கம் திறந்தது. சாவியில்லாதது. ஜெர்மன் வெள்ளியினால் செய்யப்பட்டது. ரூ. 5—0—0
,, 249. ஆக்ஸிடைஸ்ட் ஜர்மன் வெள்ளியினால் செய்யப்பட்டது ... ரூ. 6—8—0
தங்க கிலுட்டுகொடுத்த சங்கிலி. கெடியாரச் சங்கிலிகளில் பலவித மிருக்கின்றன. விலை ரூ. 5 லிருந்து 10 ரூ. வரையிலிருக்கிறது.

**எஸ். மன்னாஜி ராவ், கெடியார ஷாப்பு, எஸ்பிளனேட், மதராஸ்**

## INDIAN NEWS.

## இந்தியநாட்டு சமாசாரங்கள்.

BONUS TO GOVERNMENT SERVANTS.

**கவான்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு நன்கொடை.**—இந்தியா தேசம் ஈஸ்டு இந்தியா கம்பனியாரிடமிருந்து காலம் சென்ற மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணியாரிடம் வந்து சென்ற நவம்பர்மாதத்திற்கு ஐம்பது வருஷம் ஆயிற்று. இந்த தேசத்தில் எல்லோரும் இதை மஹோத்ஸவமாகக் கொண்டாடினார்கள். அந்தக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு ஐம்பது ரூபாய்க்குக் குறைந்த சம்பளமுள்ள கவான்மெண்டு உத்தியோகஸ்தர்கள் எல்லாருக்கும் ஒரு வாரத்துச் சம்பளம் இனமாக கொடுக்கும்படி நமது சக்கரவர்த்தி அவர்கள் உத்தரவுசெய்து அதை எல்லோரும் வாங்கி கவான்மெண்டை வாழ்த்தினார்கள்.

FREE TICKETS.

**இனமாக டிகட்டுகள்.**—நீலகிரி ஜில்லா கூனூரில் பாஸ்டியர் இன்ஸ்டிடியூட் என்று ஒரு வைத்தியசாலை இருக்கிறது. இதில் நாய் கடித்தவர்களுக்கு சார்ஜு இல்லாமல் வைத்தியம் செய்கிறார்கள். இதில் வைத்தியம் செய்துகொள்ளப்போகும் ஏழை ஜனங்களுக்கு மதராஸ் ரயில்வே கம்பனியார் மூன்றாவது கிளாஸ் டிகட்டு இனமாக கொடுக்கிறார்கள். இந்தட் டிகட்டு நாலு மாதம் வரையில் செல்லும்.

INDO-CEYLON RAILWAY AND FERRY.

**இந்தியாவுக்கும் ஸிலோனுக்கும் ரெயில்.**—சென்னை கவான்மெண்டார் தென்னிந்தியாவிலிருந்து ஸிலோனுக்கு இருப்புப்பாதையோடு தோணிப்பாதையும் போட சம்மதிகொடுத்து விட்டார்களாதலால் தென் இந்தியா இருப்புப்பாதைக் கம்பெனியார் இனி பாம்பன் கால்வாய் நீள ஒரு தோணி வழிபோட ஆரம்பிக்கலாமென்று சொல்லப்படுகிறது. ஸிலோன் கவான்மெண்டார் தங்கள் நாட்டு இருப்புப்பாதையை மன்னார் தீவின் மேல் கோடிவரையில் கொண்டுவந்து விடுவார்கள். இந்த இருப்புத்தோணிப்பாதை ஏற்பாடு 3 வருஷ காலத்தில் முடிந்துபோகலாம்.

RIOT NEAR GUNTUR.

**குண்டூருக்குச் சமீபத்தில் கலகம்.**—குண்டூருக்குச் சமீபத்தில் கொடப்பகுண்டா என்று ஒரு க்ஷேத்திரம் இருக்கிறது. அதில் சிவராத்திரி உற்சவம் விசேஷம். அதற்கு வெகு ஜனங்கள் போவது வழக்கம். சமீபத்தில் நடந்த உற்சவத்திற்கு பந்தோபஸ்துக்காக 150 போலீஸ்காரரும் போயிருந்தார்கள். மேலும் டிவிஷன் மாஜிஸ்டிரேட், தாலுகா மாஜிஸ்டிரேட், ஸ்டேஷனரி மாஜிஸ்திரேட், ஜில்லா போலீஸ் ஸூபரின்டெண்டு ஆகிய இவர்கள் எல்லாரும் அங்கே வந்திருந்தார்கள்.

ஒரு ரெட்டி ஒரு மாட்டை கையில் பிடித்துக் கொண்டு தண்ணீர் காட்டப்போகும் போது அந்த மாடு கூட்டத்தைக்கண்டு வெருண்டதாகவும், ஒரு போலீஸ் கான்ஸ்டேபின், மாட்டை ஜனக்கூட்டத்தில் கொண்டுபோகக் கூடாதென்று தடுத்து மாட்டையும் ரெட்டியையும் அடித்தானும். அதனால் ரெட்டிக்கு கோபமுண்டாகி அவன் கான்ஸ்டேபிளை எதிர்த்து அடித்தானும். உடனே பெரும் கலகமுண்டாகி போலீஸ்காரர் சுட ஆரம்பித்தார்கள். ஜனங்கள் கல்லை விட்டெறிந்தார்கள். சூப்பரின்டெண்டு இறங்கி இருந்த ஜாகையையும் போலீஸ் ஸ்டேஷனையும் தீவைத்துக்கொளுத்திவிட்டு சூப்பரின்டெண்டையும் காயப்படும்படி, கல்லால் அடித்தார்களாம். மறுநாள் காலையில் ரிஸர்வ் போலீஸ் வரவே கலகம் அடங்கிவிட்டது. போலீஸ்க்காரரில் அநேகருக்கு வலுத்தகாயமாம். ஜனங்களில் இரண்டு பேரும் போலீஸ்க்காரர்களில் இரண்டுபேரும் இறந்துபோய்விட்டார்கள். இதைப்பற்றி விசாரணை செய்யும் பொருட்டு போர்ட் மெம்பராகிய கனம் ஹாரன் துரையை கவான்மெண்டார் அனுப்பியிருக்கிறார்கள்.

MR. CHATTERTON'S LEAVE.

**மிஸ்டர் சாட்டர்டன் துரையின் லீவு.**—கைத்தொழில் விசாரணை டிபார்டுமெண்டுக்குத் தலைவராகிய மிஸ்டர். சாட்டர்டன் துரை மார்ச்சுமீ 27உ முதல் பத்தொன்பது மாதத்திற்கு ரஜா வாங்கிக்கொண்டிருக்கிறார்.




SCREENS AND WALL MATS OF OUR OWN INVENTION.

ORNAMENTS FOR HOUSES—ADVERTISEMENTS FOR MERCHANTS—OBJECT-LESSONS FOR SCHOOLS.




எங்களால் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டு, செய்யப்பட்டு வருகிற ஸ்கிரீன்கள் அல்லது தட்டிகள்.

வீடுகளை அலங்கரிக்கவும், வர்த்தகர் தங்கள் பெயர், வியாபாரம் முதலியன இவைகளின் பேரில் எழுதி பிரசுரஞ்செய்யவும், மிருகங்கள் முதலியவை பெயின்ட்செய்த ஸ்கிரீன்கள் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குக் காண்பிக்கவும் உதவும். 48″×12″ தட்டி 1க்கு விலை. ரூ 0 10 0.

1 முறை 12 தட்டி வாங்குபவர்களுக்கு தட்டி 1க்கு 0 8 0.

கதவு, சன்னல் முதலியவைகளுக்குப் பெரிய தட்டிகள் ஆர்டரின் பேரில் செய்யப்படும்.

இன்டியன் பைன் ஆர்ட்ஸ் கம்பெனி,
ஆபீஸ்—22, வெங்கடாசல முதலி வீதி, புரசை, மதிராஸ்.

ஒர்க்ஷாப்—105, அர்மீனியன் வீதி, ஜார்ஜடவுன், மதிராஸ்.

கவிராஜ் பி. எல். சேன் அண்டு கோ.,
ஆதி ஆயுர்வேத ஔஷதசாலை, கல்கத்தா.

உலகப் பிரசித்திபெற்ற ஷை கம்பெனி மருந்துகளும், திருவாங்கூர் தந்த விக்ஹரங்களும் அடியில் கண்ட விலாசதாரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(10) வேண்டுபவர்களுக்கு கியாட்லாக் இனமாக அனுப்பப்படும்.

ஏஜண்டு: பி சேனாபதி ஐயர், மலையாளம் வைத்தியர், 331, தம்பு செட்டி தெரு, சென்னை.
Agent: P. SENAPATHY IYER, MALAYALAM PHYSICIAN, *331, Thambu Chetty Street, MADRAS.*

V. KRISHNA IYER & SONS,
Cycle Importers, Mount Road, Madras.
*Agents, Bombay Cycle Agency.*



Have the celebrated Wearwell, B.S.A., the Kaiser-I-Hind, and Royal Ensign Cycles and can also supply other High-Class Cycles of Standard makers. All sorts of Cycle Accessories, Carriage Rubber and Steel Channels to suit at very popular prices.

Cycles repaired promptly and satisfactorily at very moderate charges.

## FOREIGN NEWS.
## இதரநாட்டுச் சமாசாரங்கள்.

**The Natal Cooly.**

**நேட்டால் கூலி.**—தற்காலம் இந்தியாவிலிருந்து சென்னை ராஜதானியில் உள்ளவர்களை நெட்டால் நாட்டிற்கு கூலிகளாகப் போகின்றார்கள். தென்னிந்தியாவில் சிலர் ஆள் சேர்க்க வேண்டிய ஆபீஸ்களை அநேக இடங்களில் ஏற்படுத்தி அவைகளின் மூலமாக நம் ஏழை ஜனங்களை கூலியாளாகச் சேர்த்து சென்னை ஏஜண்டிடம் ஒப்புவித்து கூலியாளாகும் நபர் 1க்கு முப்பத்தைந்து ரூபாய் வீதம் பெருகின்றார்கள். நெட்டால் நாட்டில் கரும்பு, தேயிலை, காப்பி முதலான தோட்டங்களுக்கு கூலியாளாகப் போகும் இந்தியர்கள் அவர்கள் உடன்பாட்டின் காலம் ஐந்து வருடமும், தினசரி சுமார் 12 மணி நேரம் வரையில் கடினமான வேலைகளைச் செய்து தீரவேண்டுமாம். கஷ்டப்பட்டு வேலை செய்தும் மாதந்தோறும் கூலியாகப் பெறுந்தொகை 10-ஷில்லிங் அல்லது $7\frac{1}{2}$ ரூபாய், அதாவது தினம் நாலணை வீதம் கிடைக்கின்றது. உடன்பாட்டின் காலம் ஐந்துவருஷம் கழிந்த பிறகு பதினாறு வயதுக்கு மேற்பட்ட ஆண்பிள்ளைகள் நெட்டாலில் தங்க நேரிட்டால், வருடம் 1க்கு மூன்றுபவுன் அல்லது நாற்பத்தைந்து ரூபாய் சர்க்காருக்கு வரிகட்டித் தீரவேண்டும். தலைவரி ஒருபவுனும் சேர்ந்து வருடம் 1க்கு நான்குபவுன் அல்லது அறுபது ரூபாய் செலுத்தவேண்டும். 13 வயதுக்கு மேற்பட்ட பெண்பிள்ளைகள் வருடம் 1க்கு மூன்றுபவுன் அல்லது நாற்பத்தைந்து ரூபாய் வரிகட்டவேண்டும். இவர்களுக்கு வேலை அகப்பட்டபோதிலும் அதனால் கிடைக்கும் சம்பளம் மாதந்தோரும் அவர்களுடைய சாப்பாட்டிற்கும் குடிக்கூலிக்குமே போதாது. பெண்பிள்ளைகளுக்கு வேலை கிடைப்பதே அரிது. ஆதலால் நெட்டாலுக்கு கூலியாளாகப்போக விரும்புகிறவர்களுக்கு மேற்கண்ட விஷயங்களை யெல்லாம் எடுத்துச்சொல்லி அவர்களைப் போகாமல் தடுத்து, நம் நாட்டிலேயே எந்தத்தொழிலையாயினும் செய்து வருமாறு திட்டஞ் செய்யவேண்டியது முக்கிய கடமை என்று நெட்டாலில் உள்ள சி. இராஜகோபால் நாயுடு என்பவர் எழுதியிருக்கிறார்.

**South African Alliance.**

**தேன் ஆபிரிகா சங்கம்.**—தென் ஆபிரிகாவில் விளையும் பொருள்களும் மற்ற கைத்தொழில் சாமான்களும் சிலாக்கியமாய் இல்லை என்று அந்நாட்டு ஜனங்களே பிரியப்படுகிறதில்லை. இதற்காக, அவர்களுடைய ஸ்வதேசாபிமானத்தை விருத்தி செய்து அவர்களுக்குள்ள அருவெறுப்பை நீக்கி அவர்கள் வெளிநாட்டு ஸாமான்களை வாங்காமல் தென் ஆபிரிகா ஸாமன்களையே வாங்கி உபயோகிக்க வேண்டுமென்று ஜனங்களைப் போதித்துத் தூண்டுவதற்காக கேப்காலனியில் தென் ஆபிரிகா சங்கம் என்று ஒன்று ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சங்கத்தார் அந்த நாட்டு சாமான்களை சீர் திருத்த வேண்டிய ஏற்பாடுகளையும் செய்யப்போகிறார்கள். தவிர, தென் ஆபிரிகா வியாபாரத்தில் மற்ற நாட்டார் புகுந்து ஸ்வதேசிகளை அமிழ்த்தாததற்கு வேண்டிய ஸாதனங்களையும் தேடுவார்கள்.

**A Terrible Earthquake in Persia.**

**பேர்ஷியாவில் ஒரு விபரீத பூகம்பம்.**—பர்ஷியா தேசத்தில் மேற்குக்கோடியில் லூரிஸ்டான் என்ற மலைப்பிராந்தியமான இடத்தில் ஒரு விபரீத பூகம்பம் உண்டா[illegible]டெறிந்தா[illegible] [illegible]யது கிராமங்கள் நாசமாய்ப் போ[illegible]த ஜாகையையும் போ[illegible]ம் அல்லது ஆறுயிரம் ஜனங்[illegible]க்கொளுத்திவிட்டு குப்பு[illegible]நடைகளும், பூமியில் ஏற்பட்ட [illegible]ம்படி, கல்லால் அடித்தா[illegible]தனவாம்.

**Our Emperor's visit to Germany.**

**நமது சக்ரவர்த்தி ஜர்மனிக்கு போனார்.**—நம்முடைய சக்கரவர்த்தி சமீபத்தில்ஜர்மனி தேசத்திற்குப் போனார். அந்த தேசத்து அரசனும் அதில் தலைப்பட்டணமாகிய பர்லின் நகரத்து முனிஸிபாலிட்டியாரும் நம்முடைய அரசனுக்கு விசேஷ மரியாதைகள் செய்தார்கள். இரண்டு தேசத்தாரும் என்றனும் சண்டை சச்சரவு இல்லாமல் சிநேகமாய் ஒற்று வாழவேணு மென்பதே தன் ஆசை யென்று நமது சக்கரவர்த்தி அங்கே சொன்னாராம்.

**Lord Roseberry.**

**ரோஸ்பேரி பிரபு.**—காலஞ்சென்ற விக்டோரியா மகாராணிக்கு மந்திரியாயிருந்த ரோஸ்பெரி பிரபு ஸ்காட்லெண்டு தேசத்திலுள்ள எடின்பர்க் நகரத்து ஸேவிங்ஸ் பாங்கின் வருஷாந்தர மீடிங்கில் ஒரு பிரஸங்கம் செய்தார். ஜனங்களெல்லாம் மட்டுச் செட்டாயிருக்கவேணு மென்றும் அப்படியில்லாவிட்டால் ஒரு ராஜ்யமும் வெகுநாளிருக்காதென்றும் சொன்னார்.




MADRAS SNUFF.
மதராஸ் பொடி.




எங்களிடம் மேலான புகையிலை யிருப்பதனால் திறமான வேலைக்காரர்களைக்கொண்டு பொடி செய்வித்து விற்பனை செய்துகொண்டு வருகிறோம்.
வெளியூருக்கு அனுப்பும் பொடி செய்ததினமே அனுப்பப்படும். விலை பலம் 1க்கு ரூ. 0-1-6. சார்ஜிகள் பிரத்தியேகம்.
பந்தர் புகையிலை சுருட்டு 100க்குவிலை ரூ. 0-5-0.
ஒரு வீசைக்குமேல் பொடி வாங்கும் வியாபாரிகளுக்கு சரஸமானவிலைக்குக் கொடுக்கப்படும்.
வேண்டுபவர்களுக்கு தினிசுவாரி புகையிலையின் விலைகளும் பொடி மாதிரியும் அனுப்பப்படும்.
**என். ஸ்ரீனிவாஸய்யர் அண்டு கோ.**
93, மண்ணடித்தெருவு, மதராஸ்.

THE SWADESI WAREHOUSE,
MADRAS.

**கிஷரிலால் சவுத்திரியின் சந்திரமாலதி தைலம்.**
சுவாஸனையுள்ளது. தலை மயிர் வளரும் எண்ணெய்களில் இது நேர்த்தியானது. ரோஜா மல்லிகை இவை போன்ற புஷ்பங்களின் கலப்பு வாஸனை யுள்ளது. தலையில் போட்டு உலர்ந்த பிறகுகூட இதில் நல்லவாஸனை குறைகிறதில்லை. தளர்ச்சி யுள்ளவர்களுக்கு இது பூசின உடன் உல்லாசம் கொடுக்கும் தலைக்கு குளிர்ச்சியைக் கொடுப்பது மன்னியில் ரோகத்தை நீக்கி மயிர் வளரும்படி செய்கிறது.
யாவராலும் விரும்பத்தக்கது.
4-அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை 8 அணா.
**சுதேசி வேர்ஹவுஸ்,**
1, தம்பு செட்டி வீதி, சென்னை

T. E. C. SWAMINATHA CHETTIAR,
14, Luckmoodas Street, Madras.
*Head Office* :—KUMBAKONAM.

**சுதேச ஜவுளி!** **சரசமான விலை!**

1905-௵ பனாரஸ் பொருள் காக்ஷியில் ஜவுளிகளுக்கு வெள்ளி மெடல் கிடைத்திருக்கிறது.

1. கும்பகோணம் வெள்ளை சிகப்பு ஜவுளி தினுசு.
2. துகிலி, கொரநாடு, ஆடுதுரை ஜவுளி.
3. கல்கத்தா, பனாரஸ்பட்டு பீதாம்பரங்கள் நார்மடிகள், புதுச்சேரி, கொள்ளேகாலம் உருமாலைகள்.
4. காஞ்சீபுரம், சேலம், மதுரை, கோயம்புத்தூர் ஆரணி, புல்லம்பேட்டை, நெல்லூர் முதலிய இடங்களின் ஜவுளி தினுசுகள் மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்கப்படும்.

**தாயி. சி. சாமிநாத செட்டியார்,**
14, லக்குமதாஸ் தெரு, சென்னை.
ஹெட் ஆபீஸ் :—கும்பகோணம்.


## CLASSIFIED COMMERCIAL DIRECTORY.
## வியாபார பகுதி விலாசங்கள்.

### PENCIL MANUFACTURER.
பென்சில் செய்கிறவர்கள்.

K. P. RAMASAMY IYER,
15, Solayappa Mudali Street,
*KUMBAKONAM.*

### SILK MERCHANTS.
பட்டு வியாபாரிகள்

**பட்டு பீதாம்பர கம்பேனி,**
காசி (பனாரிஸ்).

# SEASON, CROPS AND PRICES.

# காலஸ்திதி, பயிர்கள், அகவிலை.

### High Prices and Salaried Men

**உயர்ந்த அகவிலையும் சம்பளம் வாங்குகிறவர்களும்.**—குடிகளுக்கு வழக்கப்படி நெல்லாகவே கூலியைக் கொடுத்துவந்தால் அவர்களுக்கு அகவிலை குறைந்தாலும் ஏறினாலும் பாதகமில்லை. ஆனால் கொஞ்சகாலமாய் சில இடங்களில் கூலி காசாகக் கொடுக்கப்படுகிறது. அப்படிச் சம்பாதிக்கும் காசைக்கொண்டுதான் கூலிகள் சாப்பாட்டுக்கு வேண்டிய நெல் முதலியவைகளை வாங்கவேண்டும். உயர்ந்த விலையினால் முன்போல அவ்வளவுகிடைக்காது. ஆகையால் ரொக்கக் கூலியோ சம்பளமோ வாங்குகிறவர்களுக்கு உயர்ந்த அகவிலை பிரதிகூலந்தான்.

### High prices and Mirasdars.

**உயர்ந்த அகவிலையும் மிராசுதாரர்களும்.**—போன சஞ்சிகையில் இந்தியா முழுதிலும் அகவிலை தூக்கி விற்பதாயும் முக்கியமாய் அரிசியின் விலை ஜாஸ்தியாய்க்கொண்டே வருவதாயும் சொன்னோம். அப்படி விற்பதால் மிராசுதாரர்களுக்கு சௌகரியமுண்டா, என்பதை விசாரிப்போம்; மிராசுதார்கள் அவர்களுடைய நெல் முதலிய விளைவுப் பொருள்களை விற்பதால் முன் வருஷங்களில் கிடைத்ததைவிட ஜாஸ்திப்பணம் கிடைக்கிறது. அதனால் அவர்களுக்கு உயர்ந்த அகவிலை சௌகரியமென்றுசொல்லலாம். ஆனால் விளைச்சல் முன் வருஷங்களைப் போலவே இருக்கவேணும்.

### Peice goods and Yarn.

**துணிகளும் நூலும்.**—சென்னப்பட்டணத்தில் இந்தச்சரக்குகளில் வியாபாரம் முந்தியசஞ்சிகையில் சொன்னபடியே இருக்கிறது. சீமையில் விலைகள் இன்ன விதமாகுமென்று நிச்சயமாய் சொல்லமுடியவில்லை. ஒப்பந்தம் செய்யக்கூடியஸ்திதியில் இருப்பவர்கள் கொஞ்சம் பார்த்துக் கொண்டு செய்யலாமென்றுஇருப்பதாகத்தெரிகிறது. இதுவரையில்நடந்திருக்கிற வியாபாரம் உபாயந்தான். ஆனால் விலைகள் முன்போலவே இருக்கின்றன. சீமையின் நோக்கத்தைப்பார்த்தால் விலை குறையும் போலிருக்கின்றது.

### Ground-nut Crop.

**நிலக்கடலைப் பயிர்.**—சென்னை ராஜதானியிலுள்ள அயன் கிராமங்களில் மாத்திரம் சென்ற 1908௵ டிசம்பர்மீ முடிய 681,600 ஏகராவில் நிலக்கடலை சாகுபடி ஆகி இருக்கிறது. முந்திய வருஷங்களில் இவ்வளவு சாகுபடி கிடையாது. சென்ற 1907ம் வருஷத்தை விட முக்கியமாய் தென் ஆர்க்காடு, கோயமுத்தூர், செங்கற்பட்டு, சேலம், திருச்சினாப்பள்ளி இந்த ஜில்லாக்களில்தான் சாகுபடி வெகு அதிகம். சரியான பட்டத்தில் மழை விழுந்ததனாலும், நிலக்கடலை பிரியமாய் எடுபட்டபடியாலும் அது ஜாஸ்தியாய் சாகுபடி செய்யப்பட்டது. நிலக்கடலையை ஸாதாரணமாய் ஆகஸ்டு செப்டம்பர் மாதங்களில் போடுவது வழக்கம். அப்படி சாகுபடியான பயிர்கள் நன்றாக இருக்கின்றனவாம். மொத்தத்தில் 1,084,000 பாரம் கடலை விளையலாம். அயன் கிராமங்களல்லாத மற்ற இடங்களில் 11,500 ஏகரில் கடலை சாகுபடியாயிருக்கிறது. இவைகளில் 20,000 பாரம் கிடைக்கலாம்.

### Rice crop of 1908-09

**1908-09 வருஷத்து நெல் விளைவு.**—சென்னை ராஜதானியில் சென்ற ஜனவரி மாஸம் வரையில் சர்க்கார் கிராமங்களில் அறுபத்தொருலக்ஷத்து இருபதுனாயிரம் ஏகராவில் நெல்சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. இது 1908-ம் வருஷத்தை விட கொஞ்சம் கம்மி தான். முந்திய வருஷத்தை விட கிருஷ்ணா, தென்கன்னடம், கஞ்சம், நெல்லூர் ஜில்லாக்களில் மிக ஜாஸ்தியாய் சாகுபடி செய்யப்பட்டு, அனந்தப்பூர், சேலம், திருநெல்வேலி, மலையாளம், தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி இந்த ஜில்லாக்களில் வெகு கம்மிப்பட்டிருக்கிறது. இந்தக் கம்மிக்குக் காரணம் வேண்டிய அளவில் மழை பெய்யாததுதான். பயிர்கள் நன்றாய் இருப்பதாகவும் முக்கால் வெள்ளாமை தேறும் என்றும் சொல்லப்படுகிறது. விளைவு கம்மிக்குக் காரணம் பயிர் முற்றத் தண்ணீர்இல்லையாம். இனாம் கிராமங்களுக்கு கணக்குவந்தமட்டில் மூன்றுலக்ஷத்துத் தொண்ணூற்றெண்ணாயிரம் ஏகராசாகுபடியாய் இருக்கிறது என்றும், இதில் ஆறே முக்காலலக்ஷம் பாரம் அரிசி விளையும் என்றும் சொல்லப்படுகிறது.

பிழைக்கும்வழிக்கு அனுபந்தம்
Supplement to Practical Life.



LORD MINTO, GOVERNOR-GENERAL OF INDIA.
இந்தியா கவர்னர் ஜனரலாகிய மின்டோ பிரபு.

G. A. VAIDYARAMAN & Co., 10, Esplanade, Madras.
ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி, 10, எஸ்பிளனேட், மதராஸ்.


# பிழைக்கும் வழி

# PRACTICAL LIFE

ஜி. ஏ வைத்தியராமன், பி.ஏ.
பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B.A.
EDITOR.

புஸ்தகம் I. Vol. I. | கீலக௵ பங்குனி௴—MARCH 1909. | ஸஞ்சிகை 3. No. 3.


## AGRICULTURE IN SOUTH CANARA

BY

RAO SAHIB T. RAGHAVIAH, B.A.

## தென்கன்னடத்து விவசாயம்.

தென்னிந்தியாவின் கீழ்பாகத்து ஜில்லாக்களில் உள்ளவர்கள் அத்தேசத்து மேற்கு ஜில்லாக்களின், அதிலும் முக்கியமாய் தென்கன்னட ஜில்லாவின், ஜனங்கள் செய்யும் விவசாய முறைகளில் சிலவற்றை அறிந்து அனுஷ்டிப்பார்களானால் அவர்கள் மிகுந்த பிரயோசனத்தை அடைவார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது.

அந்த முறைகளில் முதன்மையாயுள்ளது, குடியானவன் தான் பயிரிடும் நிலத்தினிடத்தேயே வசிப்பது. கீழ் ஜில்லாக்குடிகள் பயிரிடும் நிலத்தில் வசியாமல் அந்த நிலத்திற்கு வெகுதூரத்திலுள்ள குடியிருப்புகளில் வசிப்பது வழக்கமாயிருக்கிறது. மேற்கு ஜில்லாக்களிலோ ஒவ்வொரு குடியானவனும் சம்சார சகிதமாய் பயிரிடும் நிலத்திலேயே வீட்டைக் கட்டிக்கொண்டு குடியிருப்பதுமல்லாமல் தன் கால்நடைகளையும் அதிலேயே நிறுத்துவான். இந்த இரண்டு நாட்டு வழக்கங்களினால் உண்டாகும் சாதக பாதகங்களைச் சற்று கவனித்துப் பார்ப்போம். ஜனசங்கை மிகுந்த கிராமாந்தரங்களில் குடியிருப்பது சுகத்திற்குக் குறைவு என்பது நாம் எல்லோரும் அறிந்த விஷயம். அது நிற்க, ஒரு குடியானவனுடைய வயல் அவன் வீட்டிற்கு ஒரு மயில் அல்லது இரண்டு மயில் தூரத்தில் இருந்தால் அத்தியாவசியமான காலங்களில் தவிர மற்ற காலங்களில் அவன் வயலுக்குப்போவது கடினம் என்று நாம் உறுதியாய்ச் சொல்லலாம். நம்முடைய குடியானவர்களுக்கு விவேக ஹீனத்தினால் உழைப்பாளித்தனமும் குறைந்தேயிருக்கும். ஆகவே உழுங்காலம், களை எடுக்குங்காலம், ஜலம் பாய்ச்சுங்காலம், அறுப்பு அறுக்குங்காலம் முதலான ஆவசியகமான காலங்களைத் தவிர மற்ற காலங்களில் தூரத்திலுள்ள வயலைக் குடியானவன் பார்க்க முயலுவானா? உழவோ அறுப்போ அல்லதுமதிற்குக்

போன்ற மற்றெந்த விவசாய வேலையோ அது முடிந்தவுடனே குடியானவன் தன் வீட்டிற்குத் திரும்பிப் போய் அங்கே தன்னூராருடன் கூடிக் குலாவுவானே ஒழிய ஒரு க்ஷணமும் தன் நிலத்தில் காரியமில்லாமல் தங்கமாட்டான். தன் கால்நடைகளை தூரத்திலுள்ள தன் வீட்டிலோ, வீட்டிற்கடுத்த கொட்டகையிலோ கட்டிவைப்பதனால் குடியானவனுடைய நிலத்திற்கு அவைகளின் மல மூத்திரங்கள் எட்ட இடமில்லை. ஆகவே அம்மல மூத்திரங்களிலுள்ள ஸாரங்களின் பலனை அந்நிலம் இழந்து விடுகின்றது. தன் நிலத்தில் தான் குடியிராத காரணத்தினால் நிழலளிக்கும் விருக்ஷங்களையாவது பலந்தரும் மரங்களையாவது அந்நிலத்தில் வளர்ப்பதற்கு குடியானவனுக்கு அக்கரையில்லை. நிழலில்லாத காரணத்தினால் பாய்ச்சப்பட்ட ஜலம் வெகு சீக்கிரத்தில் ஆவியாய்ப்பறந்து நிலம் உலர்ந்து போகும். ஆகவே, நிலத்தில் நிற்கும் பயிருக்கு வேண்டும் ஈரம் இல்லாமல் பயிர் உலர்ந்து போகும். இதுவும் தவிர, தன் நிலத்தினிடத்தே தான் வசியாத காரணத்தினால் குடியானவனுக்கு அந்நிலத்தினிடத்தில் ஒரு வித அன்பும் சிரத்தையும் பிறக்க ஹேதுவில்லாமல் போகும்.

தான் பயிரிடும் நிலத்திலே தன் சம்சாரத்துடனும் தன் பண்ணையாள்களுடனும் கால்நடைகளுடனும் குடியிருக்கும் மற்றொரு குடியானவனுடைய விஷயத்தைச்சற்று யோசிப்போம். இவன் தன் நிலத்திலேயே ஒரு வீட்டைக் கட்டிக்கொண்டு தன்னுடைய கால்நடைகளையும் அதிலேயே நிறுத்துவான். அப்படியிருப்பதனால் தன் வீட்டைச்சுற்றி நிழல் தரும் மரங்களையும் பலவிருக்ஷங்களையும் [illegible]வன் வளர்ப்பான். தன் சவுகரியத்தின் [illegible]மானாலும் அவன் தன் வீட்டைச் சுற்றிலும் ஜலாதாரங்களைவிருத்தி செய்வான். அதனால் அவன் நிலமும் அந்த பிரயோசனத்தை அடையும். தினந்தோறும் தூங்கி எழுந்திருக்கும்போதும் அஸ்தமிக்கும்போதும் அவன் நிலத்தைப் பார்ப்பதால் அதை என்ன விதமாய் விருத்தி செய்யலாமென்னும் எண்ணம் அவன் மனதில் எப்போதும் குடிகொண்டிருக்கும். தன் கால்நடைகளுடையவும் தன் ஆள்களுடையவும் மல மூத்திரங்கள் தன் நிலத்தில் விழுவதனால் நிலம் செழிக்கும். தன்னுற்றார் உறவினர் இறந்த காலத்தில் அவர்களை அந்நிலத்தில் தஹனமோ அடக்கமோசெய்வதால் அந்த நிலத்தினிடத்தில் அந்த குடியானவனுக்கு ஓர் வித பாசம் பிறக்க இடமாகின்றது. இவ்விதமான காரணங்களினால் குடியிருக்கும் நிலமானது குடியானவனுக்கு கேவலம் பிழைப்புக்கு ஆதாரமாவதோடு அதனிடத்தில் அவனுக்கு ஒருவித பற்றுதலை உண்டாக்குவதால் அதைச் செம்மைப் படுத்தும் முயற்சியை அவன் எப்பொழுதும் விரும்பித்தேடுவான். ஆகவே எவ்வித கஷ்டங்களும் இடையூறுகளும் சம்பவித்தாலும் விஷ ஜ்வரங்களினாலும் காட்டுமிருகங்களினாலும் வதைக்கப்பட்டாலும் அக்கஷ்டங்களையெல்லாம் அனுபவித்துக்கொண்டாவது தங்கள் நிலங்களை கைவிடாது அதிலேயே வசித்து வருபவர்களை தென்கன்னட ஜில்லாவில் எளிதில் காணலாம். இதற்கு திருஷ்டாந்தமாக குடகு நாட்டின் சமீபத்திலுள்ள மலைநாட்டில் ஓர் காட்டில் தன் சிறு கமுகந்தோட்டத்தையும் தன்குடிசையின் சுவர்களையும் காட்டுயானைகள் முறித்துக்கொண்டிருக்க, தான் விஷஜ்வரத்தினாலும் பலஹீனத்தினாலும் பெருங்கஷ்டங்களைப்பட, தன் இனத்தார் குடகு ராஜ்யத்திலிருந்து தன்னை அழைக்கவர, தன் நிலத்தைவிட்டு நகராமல் அதிலேயே சாவேன்



என்று சொல்லி பிடிவாதஞ் செய்த எழுபது வயதுள்ள ஓர் கிழவியை நான் என் கண்ணால் பார்த்திருக்கிறேன்.

பற்றுதலுடன் செய்யும் வேலையே வேலை. தென் கன்னட ஜில்லாவின் வயல்களின் தோற்றத்தையும் நம்முடைய ராஜதானியின் கீழ்பாகத்து ஜில்லாக்களில் உள்ள வயல்களின் தோற்றத்தையும் ஒத்திட்டுப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும். காண்பவர் கண்குளிர்ந்து மகிழும்படியாய் தன் வயல் அழகு வாய்ந்திருக்க வேண்டுமென்பது தென்கன்னட ஜில்லாவின் குடியானவனுடைய முக்கியமான கவலை. அந்த நாட்டிலுள்ள வயல்களின் வரப்புகள் சாந்தினால் மெழுகின மேடைகளைப்போல் ஓரே சமமாயிருக்கும், ஒவ்வொரு நெல்வயலைச்சுற்றியும் அழகிய கமுகுகளும் உன்னதமான தென்னைகளும் இலைகளை வீசிநிற்கும். நெல்வயல்களுக்கு மேலுள்ள மலைச்சரிவுகளில் மா, பலா, வாழை, முந்திரி, முதலிய பலவிருக்ஷங்கள் நிறைந்துநிற்கும். இந்நாட்டில் கோவில் மதில்களிலும் கல்யாண வீடுகளிலும் மங்கையர் மாறிமாறி அடிக்கும் அழகிய செம்மண் சுண்ணாம்புப் பட்டைகளைப்போல் அந்த நாட்டிலுள்ள குடியானவர்கள் தங்கள் நிலங்களில் நிற்கும் தென்னை முதலிய மரங்களைச்சுற்றி செம்பட்டைகளையும் வெண்பட்டைகளையும் அடித்து அவைகளின் அழகை பெருகச்செய்வார்கள். இப்படிப்பட்ட தோற்றங்களும், செம்மையாகத் திருத்தப்பட்டு பச்சைப்பசேலென்று பயிர் வளர்ந்திருக்கும் கரைகளோடுங்கூடி பளிங்குபோல் தெளிந்த ஜலம் ஓடும் காட்டோடைகளும் அந்த நாட்டைப் புதிதாய் பார்க்கிறவர்களுக்கு ஓர் இந்திரலோகத்தைப் போல் எடுத்துக்காட்டும். அவ்விதத்தோற்றத்திற்கும் நம் கீழ்நாட்டுத்தோற்றத்திற்கும் உள்ள வித்தியாசம் இவ்வளவென்று சொல்லமுடியாது. அதிலும் அறுப்பு முடிந்தவுடனே நம்முடைய வயல்களைப் பார்த்தால் எவ்வளவு அங்கஹீனமாய்த்தோன்றுகிறது? கண்ணுக்கெட்டுமளவும் நிழல் என்னும் பேச்சுக்கு இடமில்லாமலும் கோணல்மாணலான சீர்திருத்தமில்லாத வரப்புகளோடுங்கூடி உலர்ந்து கிடக்கும் நம் வயல்களைப் பார்ப்பவர் கண்களும் கூசிப்போம். தப்பித்தவறி ஒரு கிணறிருந்தால் அதைச்சுற்றி இரண்டு மூன்று மரங்களைக் காணலாமே யொழிய மற்றெங்கும் பயிரிடும் வயல்களில் நிழல்தரும் மரங்களுக்கு இடமேயில்லாமலிருக்கும்.

குடியானவன் தன் வயலிலேயே வசிப்பதனால் விளையும் பிரயோசனம் மற்றொன்றுண்டு. எப்போதும் தன் விவசாயத்தின் சீர்மையை தான் உற்றுநோக்குவதால் அதன் குணாகுணங்களை எளிதில் அறிய இடமுண்டாகி தன் விவசாயத்தின் பலனை அதிகரிக்கத் தக்க உபாயங்கள் அவனுக்கு மேன்மேலும் தோன்றிக்கொண்டேயிருக்கும். ஆகவே, தென் கன்னட நாட்டின் வயல்கள் கல்லாந்தரையாயிருந்தாலும், அவைகளில் விழும் உரத்தின் ஸாரத்தை வருஷாவருஷம் பெய்யும் ஏராளமான மழை அடித்துக்கொண்டு போனாலும், அந்த வயல்களில் கிடைக்கும் மகசூல் நம்முடையநாட்டு வயல்களில் கிடைக்கும் மகசூலைவிட பன் மடங்கு அதிகமாயிருக்கின்றது. நம்முடைய நாட்டில் ஒரு குடியானவனைப் பெருத்த குடியானவன் என்று ஜனங்கள் மதிக்கவேணுமானால் அவனுக்குக் குறைந்தது 100 ஏகரா நஞ்சை நிலங்களிருக்க வேண்டும். தென் கன்னடஜில்லாவிலோ 25 ஏகரா நஞ்சை நிலங்கள் ஒரு குடியானவனுக்கிருந்தால் அவன் பெரிய "வர்க்குதாரன்" (பட்டாதாரன்) என்று சொல்லப்படுவான். இந்த வித்தியாசத்திற்குக்

காரணம் இவ்விருநாட்டு வயல்களின் மகசூல் பேதமேயாம். நம்முடைய நாட்டில் சாதாரணமாய் நஞ்சை நிலங்களில் ஒரு பசலியில் ஒரு நெற்பயிரும்ஒரு புஞ்சைப்பயிருமே விளைவது அரிதாயிருக்க, அந்த நாட்டில் நஞ்சைகளில் பசலிதோறும் இரண்டு நெற்பயிர்களும் குடித்தனக்காரனுக்குச் சாப்பாட்டிற்கு வேண்டிய காய்கறிகள், புகையிலை, கரும்பு, பாக்கு, தேங்காய், முதலிய வஸ்துக்களும், சர்க்கார் கிஸ்திக்குப்போதுமான தேங்காயும்விளைவிக்கப்படும். விவசாயத்திற்கு அனுகூலமாகும் விஷயங்களில் சிறந்ததாகிய மற்றொரு விஷயத்தை தென்கன்னடநாட்டார்கள் அறிந்துகொண்டிருக்கிறார்கள். அது என்ன என்றால் நிலத்திற்கு வேண்டிய உரத்தைத் தயார்செய்யும் விதம் அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். தழை, கால்நடைகளின் சாணி, அவைகளின் மூத்திரம் இந்த மூன்று வஸ்துக்களையும் சேர்த்து அந்த உரத்தைத் தயார்செய்கிறார்கள். இதைத்தயார் செய்வதற்காக அந்த நாட்டார் தங்கள் மாட்டுத்தொழுவின்தரைகளை, சுற்றிலுமுள்ள பூமி மட்டத்திற்கு அரையடி அல்லது ஒரு அடி தணிவாகவைப்பார்கள். இந்தப் பள்ளத்தில் தங்கள் உழவுமாடுகளையும் பால்மாடுகளையும் நிறுத்தி அவைகளிடும் மலமூத்திரங்களோடு தினந்தோறும் பச்சைத் தழைகளை மலைச்சரிவுகளிலிருந்து வெட்டிவந்து கலப்பார்கள். தொழுவில் கட்டிய மாடுகள் மிதித்துத் துவைப்பதனால் கலக்கப்படும் வஸ்துக்களின் ஸாரம் அந்தக்கலவையிலிருந்து நீங்காது. அக்கலவையை வாரத்திற்கு இரண்டுமுறை தொழுவிலிருந்து எடுத்துவெளியே குவிக்கச் சிறிது காலத்தில் அக்குவியல்கள் சிறந்த உரமாகின்றன. நம்முடைய நாட்டிலோ மாடுகளின் மூத்திரம் காற்றில் உலர்ந்து வீணாய்ப்போகிறது. அவற்றின்சாணியோ வெயிலிலும் காற்றிலும் உலர்ந்து வற்றலாய் ஸாரத்தைமுற்றிலும் இழந்து விடுகின்றது. இப்படி உலர்ந்த சாணியும் சிறிது சாம்பலும் உடைந்த ஓடுகளுமே நம்முடைய நாட்டில் நிலங்களுக்குப் போடும் உரம். இந்த உரத்திற்கும் தென்கன்னடதேசத்தில் பச்சைத்தழை, பச்சைச்சாணி, பச்சை மூத்திரம் ஆகிய மூன்றுவஸ்துக்களும் ஒருங்கே கலந்து உண்டாகும் உரத்திற்கும் உள்ள வித்தியாசம் எவ்வளவென்பதை யோசித்தால் எளிதில் அறியலாம். அத்தேசத்திலிடும் பயிர்கள் மிகுந்த மேனிகாணுவது உரத்தின் வலிவினால் என்பது திண்ணம். பயிரில் பூச்சி பிடிக்காமலிருக்கும்பொருட்டு தூவும் சாம்பலைத் தயார்செய்வதில் கூட அந்த நாட்டார் நம்முடைய நாட்டாரைக் காட்டிலும் சிறந்தவர்கள். அந்த தேசத்தார் உலர்ந்த சருகுகளைப் பொறுக்கி அவைகளைக் குவித்து அக்குவியல்கள் காற்றில் பறந்துபோகாமல் அவைகளின் மேல் மண்ணைப்போட்டு அக்குவியல்களுக்கு நெருப்பிடுவார்கள். அந்தக் குவியல்களிலுள்ள இலைகள் காற்றுக்குப்பறந்து போகாமல் எல்லாம் எரிந்து சாம்பலான பின்பு அந்தச்சாம்பலை எடுத்து நாற்றங்கால்களிலும் காய்கறிக் குழிகளிலும் பூச்சிபிடிக்காமல் தூவுவார்கள். நம்முடைய நாட்டில் சாம்பலை இந்த மாதிரி பாதுகாத்து உபயோகிப்பதில்லை.

தாம் சாகுபடி செய்யும் நிலங்களிலேயே குடியிருப்பதால் தென்கன்னட ஜில்லா ஆண் பெண் இருவகை ஜனங்களுக்கும் எல்லாரும் மெச்சத்தக்க சில நல்ல குணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளைப்பற்றி இன்னும் ஒரு ஸஞ்சிகையில் எழுதுகிறேன்.

டி. ராகவையா.



## THE WEAVING INDUSTRY

BY

K. S. VENKATRAMA AIYER, B. A.,
*Chairman, Municipal Council, Negapatam.*

## நெசவு தொழில்

இத்தொழிலைப்பற்றி பலகனவான்கள் பலமுறை வியாசங்கள் எழுதியிருந்தாலும், நம்முடைய நாட்டின் அபிவிருத்தியை உத்தேசித்து எவ்வளவு வரைந்தாலும், அவ்வளவும் வேண்டியது அவசியமென்று நினைத்தே என்னுடைய சொற்ப அனுபவத்தில் நான் தெரிந்துகொண்டதை வெளியிடத் துணிந்தேன்.

நம்முடைய நாட்டுத்தறிக்கும், விசைநாடாத் தறிக்கும், விசைத்தறி அதாவது ஹாட்டர்ஸ்லிதறி, லங்காஸ்டர்தறி முதலான தறிகளுக்கும் வித்தியாசங்கள் பல உள. அப்படிப்பட்ட வித்தியாசங்கள் நெசவில் மாத்திரம் இல்லை. நெசவுக்கு முந்தித்தயார் செய்யப்படவேண்டிய பாவு முதலானவைகளிலும், உண்டை அதாவது குறுக்குநூல் போடுவதற்குத் தயாரிக்கப்படும் தார்களிலும் அனேக வித்தியாசங்களிருக்கின்றன. ஒரு தறியைப்பூட்டி நெய்வதற்கு முந்தி அனேக பூர்வாங்கங்கள் வேண்டியிருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை:

(1) பாவு ஓடுகிறது.
(2) பாவு பசைபோடுகிறது.
(3) தார் சுற்றுகிறது.
(4) நெசவு.

**பாவு ஓடுகிறது:—** நமது நாட்டில் வழக்கமாய் தெருக்களில் கம்புகளை நட்டு சிறுவர்களும் சிறுமிகளும் கையில் உள்ள கோலினால் ஒவ்வொரு கம்பிலும் மாறிமாறி நூலைமாட்டிக் கொண்டு கம்புகள் நட்டிருக்கும் அளவு போவதையும் திரும்பிவருவதையும் நாம் பார்த்திருக்கிறோம். இப்படி ஒவ்வொரு நூலுக்கும் ஒருதடவை போய்த் திரும்பிவரவேண்டியிருக்கிறதனால் எவ்வளவு காலம் பிடிக்கிறது? ஏககாலத்தில் யந்திரமூலமாய் 200 அல்லது 300 நூல்களைச் சுற்றினால் எவ்வளவு சீக்கிரம் பாவு ஓடியாகிவிடும்? இப்படிச் செய்வதற்காக சுமார் முன்னூறு ரூபாய் விலையுள்ள சில யந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு நாகபட்டணம் நெசவு கம்பெனியிலும் சென்னப்பட்டணத்தில் கர்நாடக மில்லிலும் பக்கிங்காம் மில்லிலும் வேலை நடந்து வருகிறது. அப்படிப்பட்ட யந்திரங்களைச்செய்வது வெகு சுலபம். சாதாரணமாய்த் தெருவில் நிழலைத் தேடி பாவு ஓடவேண்டிய நீளத்துக்குக் கம்புகளை நட்டுப் பாவு ஓடுவதைவிட, சுமார் 5 கஜ நீளமும், 3 கஜ அகலமுமுள்ள ஒரு இடத்தில் இருந்துகொண்டு, ஒரேதடவையில் அங்குமிங்கும் ஓட அவசியமில்லாமல் இருந்த இடத்தில் இருந்துகொண்டு நூற்றுக்கணக்கான நூல்களை சுற்றிவருவதில் எவ்வளவு செலவு குறைவு? எவ்வளவு சீக்கிரம் வேலை முடிகிறது? கணக்கிட்டுப் பார்க்கும் காலத்தில் பழய வழக்கம்போல் பாவுஓடுவதைவிட இருபதில் ஒரு பங்கு செலவிலும் இருபதில் ஒரு பங்கு காலத்திலும் யந்திரத்தினால் பாவு ஓடிவிடலாம்.

**பாவு பசைபோடுகிறது:—** திருநாகேஸ்வரம் முதலிய இடங்களில் பாவுகண்டநீளம்தெருக்களில் பாவை இழுத்துக் கட்டி, 20 அல்லது 30 பேர்கள் கையில் கஞ்சியும் கஞ்சிதடவும் கருவியுமாய் விடியற்காலம் முதல், பதம் பார்த்து, கொஞ்சங்கொஞ்சமாய் பசை உலர்ந்துவரவர சுற்றிக்கொண்டு வருகிறதை நாம் பார்த்திருக்கிறோம். அப்படிக்கல்லாமல் யந்திரங்களில் ஓடினபாவுகளைச் சுற்றி, அரிசியால் காய்ச்சின பசை அல்லாமல் “பெரிணா”

என்று வழங்கும் உருளைக்கிழங்கில் செய்யப்பட்ட மாவினால் பசைகாய்ச்சி நெருப்புத்தணலைக் கொண்டு பசைகாயும்படி செய்ய யந்திரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒருயந்திரத்தின் விலை சுமார் நானூறு ரூ. ஷை யந்திரங்கள் வேலைசெய்ய 4 பேர்கள் போதுமானது. 20 சதுரகஜமுள்ள இடமும் போதுமானது. இவைகளைச் சென்னப்பட்டணம் கர்நாடகமில்லிலும் பக்கிங்காம் மில்லிலும் பார்க்கலாம்

**தார்சுற்றுகிறது:—**

இதில் பழக்கமுள்ளவர்கள்தான் சரியாய்ச் சுத்தமுடியும். இல்லாவிடில் நெய்யும்போது சரியாக நூல் பிரிந்துவராமல் அடிக்கடி அறுந்துபோகும். அப்படிக்கில்லாமல் ஒரே அளவாய் நாடா ஓடும்போது எளிதில் பிரிந்து வரும்படி சுற்றவேண்டியது அவசியம். ஒரே தடவையில் 12 தார்கள் சுற்றும்படி யந்திரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு யந்திரத்தின் விலை ரூ. 200. இந்த யந்திரங்களை நாகபட்டணம் நெசவு கம்பெனியிலும், சென்னப்பட்டணத்தில் மேலே சொல்லிய மில்லுகளிலும் பார்க்கலாம்.

**நெசவு:—** சாதாரணமான நாட்டுத்தறியில் வலதுகையால் நாடாவை எறியும்போது இடதுகையால் நெருக்கியும், இடதுகையால் எறியும்போது வலதுகையால்நெருக்கியும் ஒருதடவை வலதுகையாலும் ஒருதடவை இடதுகையாலும் வேலைசெய்துவருகிறார்கள். இப்படி அடிக்கடி மாற்றி வேலை செய்து வருவதனால் காலதாமதமாகிறது. சீக்கிரத்தில் வேலையாளும் களைத்துப்போகிறான். ஒரு நாளைக்கு 8 மணிநேரம் ஒருமனிதன் சோம்பல் இல்லாமல் சுறுசுறுப்புடன் வேலைசெய்தாலும் 6 முதல் 8 முழத்திற்குமேல் நெய்யமுடியாது. ஆனால் விசை நாடாத்தறியில் நெய்தால் சுமார் 12 முதல் 16 முழம் வரையில் நெய்யலாம். விசை நாடாத்தறியில் ஒரு கையால் நாடாவை எறிவதாலும் மற்றொருகையால் பலகையை நெருக்குவதாலும் நாட்டுத்தறியைவிட ஜாஸ்தியாய் நெய்யக்கூடியதாயிருக்கிறது. ஆனால் மேலே சொல்லப்பட்ட இரண்டு தறிகளாலும் நெய்பவன் வேலைசெய்து களைத்துப்போகும் சமயத்தில் நெருக்கப்படும் பலகையில் பலமேறாமல், நெசவு நெருக்கமாய் விழுவதில்லை. வேலைக்கு ஆரம்பிக்கும்போது எழைகள் நெருங்கியும்,களைத்துப்போகும்போது நெருக்கமில்லாமலும் போய்விடுகின்றன. இதற்கு திருஷ்டாந்தமாக சிலவஸ்திரங்களைப் பார்த்தால் சில இடங்களில் நெருங்கியும் சில இடங்களில் விலக்கமாகவும் காணப்படும். மேலும் சில பேர்கள் முகதலையில் அதாவது ஒரு வஸ்திரத்தை மடித்தால் எந்தபாகம் வெளியில் தெரியுமோ அந்தபாகத்தில் நெருக்கமாயும், மற்ற பாகத்தில் கலக்கமாகவும் நெய்கிறார்கள். இப்படிக்குச்செய்வதனால் எழைகள் சமமாயிருப்பதில்லை. மேலே சொல்லப்பட்ட ஹாட்டர்ஸ்லி லங்காஸ்டர் விசைத்தறிகளில் நெய்யும் பட்சத்தில் நாள் ஒன்றுக்கு சுமார் 30 முழம்வரையில் நெய்யக்கூடியதாக இருக்கிறது. மற்றத் தறிகளைப்போல கையின்பலத்தைக் கொண்டு மட்டுமல்லாமல் கால்மிதியின் பலத்தினாலும் நெய்யப் படுவதாலும் வேலை சீக்கிரம் முடிகிறது. ஒரு அங்குலத்திற்கு எவ்வளவு குறுக்கு நூல் போடவேண்டுமோ அவ்வளவு அளவு போடுவதற்கு யந்திரத்திலேயே அளவு இருப்பதால் அந்தப்படி ஒரே மாதிரியாய் நூல் நெருங்கிவரும். கைபலமிருந்தாலும் இல்லாவிட்டாலும் யந்திரமே நெருக்கிக்கொண்டுவருவதால் கைக்கு அதிகவேலையில்லை.

இவ்வளவு சவுகரியங்கள் யந்திரங்களில் ஏற்பட்டிருப்பதால் ஐரோப்பா முதலான தேசங்களில் நாள் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கான



வஸ்திரங்களை நெய்து வருகிறார்கள். யந்திரங்களை நீராவியாலும், ஆயில் இன்சின்களாலும், ஓட்டி வேலை செய்வதில் நாட்டுத்தறியை விட பத்துமடங்கு துணிகளை நெய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட சவுகரியங்களிருப்பதால்தான் இந்தியாவிலிருந்து கப்பல் வாடகையை செலுத்தி, பஞ்சை ஏற்றிக்கொண்டுபோய், மறுபடியும் கப்பல் கேழ்வு முதலான செலவிட்டு துணிகளை இந்தியாவுக்குக் கொண்டுவந்து நாட்டுத்தறியில் நெய்யப்படும் துணியின் பாதி விலைக்கு விற்று வருகிறார்கள். அப்படிப் பாதி விலைக்கு விற்றாலும் அவர்கள் ஏராளமான லாபத்துடன்தான் விற்கிறார்கள். அப்படிப் பட்ட யந்திரங்கள் இந்தியாவில் ஏற்பட்டு நெசவு வேலை நடந்தால் ஏன் சொற்ப விலைக்கு வஸ்திரங்கள் கிடைக்காது? ஆனால் நம்முடைய நாட்டு நெசவுகாரர்கள் ஏழைகளானதாலும் அதிக முதல் இல்லாதவர்களானதாலும் திவான் பகதூர் ராஜரத்தின முதலியார் அவர்களால் முதல் சஞ்சிகையில் எழுதப்பட்டிருக்கும் விசை நாடாத்தறியை வாங்கி வேலை செய்தால் போதுமானது. யந்திரத்தறிகள் வாங்க அவர்களிடம் ஐவேஜி கிடையாது. நம்முடைய நாட்டில் பெருத்த வியாபாரிகளும் மிராசுதாரர்களும் முதலாளிகளும் பலர் இருந்தாலும் அவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு கம்பெனியை ஏற்படுத்தி யந்திரங்களை வரவழைத்து வேலை செய்தால் எவ்வளவு ஏழைகளுக்கு வேலை கொடுக்கலாம்? எவ்வளவு சகாயமாய் துணிகளை விற்கலாம்? ஒருவருக்கொருவர் நம்பிக்கையும், நல்ல அபிப்பிராயமும் ஏற்பட்டாலொழிய கம்பெனிகள் முன்னுக்குவரமாட்டா. மேற்சொல்லியபடி கம்பெனிகளை ஏற்படுத்தக்கூடியவர்கள் அப்படிச் செய்யாதது மட்டும் நாட்டின் வறுமைக்குக் காரணமல்ல. வேலையாட்களின் சோம்பேறித்தனமும், படிப்பின்மையும், புதிதாய் ஏதாவது ஒருவிதமான யந்திரம் ஏற்பட்டால் அதில் வெறுப்பும், சரீரபிரயாசை யின்மையும்தான் முக்கியமான காரணங்களென்று சொல்லவேண்டியதாயிருக்கிறது.

நாகபட்டணத்தில் நெசவு கம்பெனி ஒன்று சுமார் ஒன்றரை வருஷத்திற்குமுன் ஏற்பட்டது. முதலில் விசை நாடாத்தறியில் வேலை செய்யப்பட்டது. பிறகு வேலையாட்கள் சரியாய் வேலை செய்யாமலும் வேலை வாங்கிவந்தவன் கவனக் குறைவாலும் சரியாய் வேலை நடந்து வரவில்லை. சென்ற வருஷத்தில் லாபமின்றி சொற்ப நஷ்டம் ஏற்பட்டது. அப்படி ஏற்பட்டபோதிலும் நெசவுதொழிலை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டிருப்பவரும் தர்மசிந்தையுள்ளவருமான ஸ்ரீமான் வெ. ப. பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் விடாமுயற்சியினால் ஹாட்டர்ஸ்லி யந்திரங்களில் இரண்டு வரவழைக்கப்பட்டுப் பரீட்சித்துப் பார்க்கப்பட்டன. இப்போது சுமார் 17 யந்திரங்கள் வரையிலும் பூட்டப்பட்டிருக்கின்றன. 6 யந்திரங்களில் வேலை நடந்து வருகிறது. பாக்கி யந்திரங்களுக்கும் சிறுவர்களை வேலையில் பழக்கம் செய்து வரப்படுகிறது. சென்ற வருஷத்தில் கொஞ்சம் நஷ்டம் ஏற்பட்ட காரணத்தைக் கொண்டு சிலர் கம்பெனியை மூடிவிட வேணுமென்று அபிப்பிராயம் கொண்டபோதிலும், என்னைப் போன்ற சிலர் கேட்டுக் கொண்டதின் பேரில் பிள்ளை அவர்கள் தன் கையில் இருந்து வேண்டிய முதலைக் கொடுத்தும், என்னைப் போல சிநேகிதர்களிடம் முதலை வாங்கியும் வேலையை நடத்திவருகிறார். ஆனால் யந்திரத்தில் பாவு பசைபோட சரியாய்த்தெரிந்தவர்கள் இல்லாத நிமித்தம் திருநாகேஸ்வரம் முதலான இடங்களிலிருந்து பாவு வரவழைத்து

செய்யப்பட்டு வருகிறது. கூடிய சீக்கிரத்தில் ஷை யந்திர வேலையும் விடாமுயற்சியால் நடந்தேறுமென்பதில் சந்தேகமில்லை.

கவரன்மெண்டார் கைத்தொழில் விர்த்தி செய்வதில் எவ்வளவு பிரயத்தனம் எடுத்துக் கொண்டாலும் அவர்கள் முன்வந்து செய்யத் தயாராயிருக்கும் ஒத்தாசையை கைக்கொண்டு இந்தியர்கள் முன்வாராதபட்சத்தில் கவரன் மெண்டார்தான் என்செய்வார்கள்? தஞ்சாவூர் தாலூகா அய்யம்பேட்டையில் ஏராளமான நெசவுகாரர்கள் இருப்பதை உத்தேசித்து தஞ்சாவூர் டிஸ்திரிகட்டு போர்டார் ஒரு நெசவு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தி இரண்டு வருஷமாய் விடாமுயற்சி செய்தும், பல உபாயங்களைப் பண்ணியும், ஷை பள்ளிக்கூடம் விருத்திக்கு வராததைப்பார்க்க மிகவும் அதைரியமாயிருக்கிறது. ஷை அய்யம்பேட்டையில் இருக்கும் நெசவுகாரர்களைப்போல் புத்தியீனர்கள் இருந்தால் ஆயிரக்கணக்கான தொகையை கவரன்மெண்டார் செலவழித்தால்தான் என்ன பிரயோஜனம்? அப்படிக்கில்லாமல் சிரத்தை எடுத்துக்கொண்டு சமயம் வாய்த்ததருணத்தில் கைத்தொழிலை விருத்தி செய்து வரவேண்டியது நம்முடைய கடமை.

கெ. எஸ். வெங்கட்டராமன்.

---

## AN AUTOMATIC WATER-FINDER.

## தானாய் நீர் ஊற்றைஅறிவிக்கும் கருவி.

சென்ற மாதத்து ஸஞ்சிகையில் "கிணறு வெட்டுதல்" என்ற தலைப்பெயருடன் ஒரு வியாஸம் பிரசுரிக்கப்பட்டது. அதில், ஓர் இடத்தில் வெட்டினால் ஜலம் அகப்படும் அகப்படாது என்று சுலுவாய் அறிந்து கொள்ள ஒரு காந்த ஊசி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதென்றும் அதன் விலை எவ்வளவென்று தெரிந்தவுடன் அறிவிக்கப்படுமென்றும் எழுதப்பட்டது.

இந்தக் காந்த ஊசியில் மூன்று விதங்கள் இருக்கின்றனவாம். முதல் தரம் ஊசி 200 அடி ஆழம் வரையில் ஜலம் உண்டு இல்லையென்று காட்டும். இதன் அயன் கனம் 16 ராத்தல். பெட்டி பாகிங் உள்பட 30 ராத்தல். விலை 450 ரூ. இரண்டாவது வகை ஊசி 500 அடி வரையிலுள்ள ஜலத்தைக் காட்டுமாம். இதன் அயன் கனம் 18 ராத்தலும் பெட்டியுள்பட 34 ராத்தலுமாம். விலை 750 ரூ. மூன்றாந்தர ஊசியால் 1000 அடி ஆழம்வரையில் ஜலம் இருக்கும் இல்லையென்று அறிந்துகொள்ளலாம். இதன் அயன்கனம் 24 ராத்தல். பெட்டியுள்பட 42 ராத்தல். விலை ரூ 1500. இந்த மூன்றுவகை ஊசியில் எதுவேணுமென்றாலும் சீமையிலிருந்து வர சார்ஜ் 15 ரூ ஆகும். துறைமுகவரிகள் பிரத்தியேகம். இந்த ஊசிவேணுமென்கிறவர்களுக்கு இங்கிலாந்தில் லிவர்பூல் நகரத்தில் அது செய்யும் வேலையை நீதர்சனமாக மான்ஸ்பீல்ட் கம்பெனியார் காண்பிக்கிறார்களாம். தவிர, அந்த கம்பெனியாரே கிணறு வெட்ட கண்ட்ராக்ட்டாக பேசிக்கொண்டு ஜலம் அகப்பட்டால் பணம் கொடுக்கிறது இல்லாவிட்டால் பணம் வேண்டியதில்லை என்று ஒப்பந்தம் செய்கிறார்களாம். இப்படிக்கு அவர்கள் ஒப்பந்தம் பேசி வேலை செய்வதால் அவர்கள் விற்கும் காந்த ஊசியில் பித்தலாட்டம் ஒன்றும் இருக்காது என்று யோசிக்க வேண்டியதாயிருக்கிறது. இது விஷயத்தை நமது கவரன்மெண்டார் கவனித்து சீமைக்கு ரஜாவில் போயிருக்கும் சாட்டர்டன் துரையைக்கொண்டாவது அல்லது மற்ற எவ்விதமாகவாவது தகுந்த விசாரணை செய்வார்கள் என்று நம்புகிறோம்.



## Paddy Seed Rate

BY

THE EDITOR.

## நெல்விதை விகிதம்.

சென்னை ராஜதானியில் 1317-ம் பஸலியில் சாகுபடியான நெல்பயிரைப் பற்றிய சில அம்சங்கள்.

| ஜில்லாக்கள். | நெல்சாகுபடியான ஏகரா விஸ்தீரணம். † | சுமார் 33 பட்டணம் பக்காப் படி கொண்ட மணங்கு நெல் கிரயம். § | ஒரு ஏகராவில் விதைப்புக்கு அல்லது நடுகைக்கு உபயோகிக்கும் விதை முதலும் அதன் கிரயமும். | | ஜில்லாக் களில் உபயோகிக்கும் மொத்த விதை முதலின் கிரயம். † |
|---|---|---|---|---|---|
| | | | படி. | ரூ. அ. | |
| | ரூ. | ரூ. அ. | | | ரூ. |
| கஞ்சம் | 1033000 | 5—0 | 35 | 5—5 | 5488000 |
| விசாகபட்டணம் | 1485000 | 4—9 | 25 | 3—7 | 5105000 |
| கோதாவரி | 586000 | 4-11 | 15 | 2—2 | 1245000 |
| கிருஷ்ணா | 976000 | 5—2 | 40 | 6—3 | 6039000 |
| குண்டூர் | 333000 | 5—1 | 35* | 5—6 | 1790000 |
| கர்னூல் | 57000 | 4-11 | 15 | 2—2 | 121000 |
| பெல்லாரி | 32000 | 5—6 | 55 | 8-15 | 286000 |
| அனந்தபுரம் | 93000 | 4-13 | 35* | 5—2 | 477000 |
| கடப்பை | 116000 | 4-15 | 25 | 3-12 | 435000 |
| நெல்லூர் | 347000 | 4—1 | 25 | 3—1 | 1063000 |
| செங்கற்பட்டு | 568000 | 4-11 | 20 | 2-13 | 1598000 |
| தென்னாற்காடு | 555000 | 4-13 | 25 | 3-10 | 2012000 |
| வடஆற்காடு | 424000 | 4-10 | 50 | 7—0 | 2968000 |
| சேலம் | 174000 | 5—0 | 25 | 3-13 | 663000 |
| கோயம்புத்தூர் | 112000 | 5—0 | 20 | 3—1 | 343000 |
| திருச்சினாப்பள்ளி | 266000 | 4-11 | 25 | 3—9 | 948000 |
| தஞ்சாவூர் | 1081000 | 4-12 | 50 | 7—3 | 7770000 |
| மதுரை | 550000 | 4-12 | 30 | 4—5 | 2372000 |
| திருநெல்வேலி | 393000 | 4—4 | 50 | 6—7 | 2530000 |
| மலையாளம் | 831000 | 5—0 | 55 | 8—5 | 6908000 |
| தென்கன்னடம் | 555000 | 4—5 | 30 | 3-15 | 2185000 |
| நீலகிரி | 6000 | 5-14 | 35* | 6—4 | 38000 |
| இராஜதானி மொத்தம். | 105,73,000 | | | | 523,84,000 |

குறிப்பு:—† இரண்டாவது ஆறாவது கலங்களில் சௌகரியத்தை உத்தேசித்து ஆயிரத்துக்குக் கீழ்ப்பட்ட எண்ணங்களை நீக்கியிருக்கிறது.

§ மூன்றாவது கலத்தில் கண்ட கிரயத்தொகை 1906-07, 1907-08 வருஷங்களின் சராசரி.

* நாலாவது கலத்தில் குண்டூர், அனந்தபுரம், நீலகிரி ஜில்லாக்களின் விதைமுதலளவு தெரியாததால் ராஜதானியின் மொத்த சராசரி காண்பிக்கப்பட்டிருக்கிறது,

மேலே விவரிக்கப்பட்டிருக்கிற ஸ்டேட்மெண்டில் ஒவ்வொரு ஜில்லாவிலும் விடப்பட்ட விதையின் அளவை, நமது ராஜதானி விவசாய இலாகாவில் உத்தியோகமாயுள்ள ஜெ. செல்வரங்கராஜு அவர்களால் 1905ம் வருஷத்தில் விவசாயதீபிகை என்னும் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வியாஸத்திலிருந்து எடுத்தெழுதியிருக்கிறேன். பற்பல ஜில்லாக்களில் விடப்பட்ட நெல்விதை விகிதத்தைப் பார்த்தால் வெகு ஆச்சரியமாக இருக்கிறது. ஒரு ஜில்லாவில் விடுகிறபடி மற்றொரு ஜில்லாவிலில்லை. ஒரு ஜில்லாவிலாவது ஏகர் ஒன்றுக்கு 15 பட்டணம்படிக்குக் குறைந்து விதை விடுவதாகத் தெரியவில்லை. பல்லாரி, வடஆற்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி, மலையாளம் ஆகிய இந்த ஜில்லாக்களில் 50 படியும் அதற்கு மேலும் விதை விடுகிறார்கள். தவிர, தஞ்சாவூர் ஜில்லாவில் ஏகருக்கு 50 படி விட, அடுத்த திருச்சினப்பள்ளி ஜில்லாவில் 25 படி விடுவானேன்? மதுரையில் 28 படி விட, அடுத்த திருநெல்வேலியில் 52 படி, அதாவது இரண்டு மடங்கு விதை விடுகிறார்கள். ஜில்லாவுக்கு ஜில்லா இவ்வளவு வித்தியாஸம் இருக்கக் காரணம் தெரியவில்லை.

சில வருஷங்களாக விதையை ஏராளமாக விடாமல் குறைத்து ஏகர் ஒன்றுக்குச் சுமார் இரண்டு மூன்று பட்டணம் படிகளை மட்டும் விட்டு, உண்டாகும் நாற்றை ஒற்றை அலகாக நட்டு, சிலர் வெகு லாபத்தை அடைந்து வருகிறார்கள். அவர்களில் திருநெல்வேலி, எஸ். சங்கரநாராயண அய்யர், சேர்மாதேவி. எஸ். நரசிம்மய்யர், தஞ்சாவூர் ஜில்லாவில் காளியாகுடி குப்புஸாமி அய்யர், கீரனூர் கிருஷ்ணசாமி அய்யர், ஸ்வாமிமலை வி. எஸ். ராமசந்திரய்யர் ஆகிய இந்த ஐந்து பேர்களும் எனக்குத் தெரிந்தவர்கள். இவர்களெல்லாரும் ஒற்றை அலகாய் நடுவதில் நல்ல லாபமிருக்கிறதென்று சொல்லுகிறார்கள்.

இப்படி ஒற்றை அலகு நடுவதைக்கண்டு பிடித்த விதத்தைக்கேட்டால் வெகு விநோதமாயிருக்கிறது. சாதாரணமாய் நாற்று நடுவதில் சில ஜில்லாக்களில் ஐந்தாறு "முதல்" வைத்து நடுகிறார்கள். சில ஜில்லாக்களில் பத்துப் பதினைந்து "முதல்" நடுகிறார்கள். தஞ்சாவூர் முதலிய சிலவிடங்களில் குத்துக்குத்தாய்ப் பிடி நாற்றை ஒன்றாய் நட்டு விடுகிறார்கள். சிலஜில்லாக்களில் ஒரு அடி தூரத்துக்கு ஒரு நடுகையும், சில ஜில்லாக்களில் சாணுக்கு ஒரு நடுகையும், பின்னும் சில ஜில்லாக்களில் அரை அடிக்கு ஒரு நடுகையாகவும் நடுகிறார்கள். இந்த புராதன வழக்கப்படியே சிதம்பரம் தாலூகா வீரசோழன் என்னும் கிராமத்திலுள்ள ஆபரணம் பிள்ளை என்ற ஒருவர் தன் வயல்களில் நடவு நட்டு வந்தார். சில வருஷங்களுக்கு முன் ஒரு நாள் ஒரு வயல் நட்டு மிகுந்த ஒரு முடி நாற்றை வாய்க்கால் ஓரத்தில் ஒவ்வொரு நாற்றாய் நட்டுவைத்தார். கொஞ்சநாளுக்குப் பிறகு "அவர் வயல்களைச் சுற்றிப் பார்த்த போது ஐந்தாறு நாற்றுச் சேர்த்து வைத்த நடுகை மூடு கட்டியிருப்பதைவிட ஒவ்வொரு நாற்றாய் வைத்த நடுகை அதிகமாய் மூடுகட்டிப் பத்துப் பதினைந்தாய்ப் பலுகித் தழைத்து ஓங்கிவளர்ந்திருக்கக் கண்டார். அது அவருக்குச்சற்று விநோதமாயிருந்தது. பயிர் வளர்ந்து கதிர்வாங்கி விளைவுக்கு வந்த போதும் மற்றப்பயிரைவிட இப்படி ஒவ்வொரு முதலாய் நட்டபயிர் குலைத்தாக்குடையதாயும் அவற்றின் கதிர்கள் ஒரே நீளமும் ஒரே விளைச்சலுள்ளனவாகவுமிருந்தன. இதுவும் அவருக்கு ஆச்சரியத்தை விளைவித்தது.

"அடுத்த வருஷத்தில் ஒரு செண்டு நிலத்தில் மேற்சொன்னவாறே முக்கால் அடிக்கு ஒரு



நடுகையாக ஒவ்வொரு நாற்றாய் நட்டுப் பரிக்ஷைசெய்தார். அவ்வருஷமும் அதேவிதமாக மூடுகட்டிக் குலைத்தாக்கடைந்ததுமன்றி கதிர்கள் ஏகவிளைச்சலுள்ளனவாயுமிருந்தன. மறு வருஷம் ஒரு ஏக்கர் நிலத்தில் இந்த முறையைப்பரிக்ஷித்தார். அதிலும் முன் சொன்னபடியே யிருக்கக்கண்டார். புராதன வழக்கம் போல் நட்டவயல்களில் 960 பக்காப்படி அல்லது 2,400 இராத்தல் நெல் கிடைத்திருக்க ஒவ்வொரு நாற்றாய் நட்ட வயலிலிருந்து கண்டுமுதலான நெல்லின் அளவு 2400 பக்காப்படி அல்லது 6,000 இராத்தல். இப்படி ஒரு ஏக்கர் நிலத்தில் நாற்று நடுவதற்கு அவர் நாற்று விட்ட விதை இரண்டு பக்காப்படிதானும்."

"அநேக விவசாயிகளுக்கு இரண்டுபடி நெல் வித்தினின்றுண்டாக்கப் பட்ட நாற்று ஒரு ஏக்கர் விஸ்தீரணத்தில் நடக்காணுமோ வென்ற சந்தேகம் உண்டாகலாம். ஒரு ஆழாக்கு சிறு மணி நெல்விதையை எண்ணிப் பார்த்தால் சுமார் 7,000 விதையிருக்கக்காணலாம். அதே கணக்கைவைத்துப் பார்த்தால் இரண்டுபடிக்குள் நிறைந்திருக்கும் விதையின் எண்ணம் சுமார் 1,12,000 ஆகும். ஏக்கர் ஒன்றில் 9 அங்குல தூரத்தில் ஒவ்வொரு நாற்றாய் நட வேண்டியதற்கு 77,450 முதல் வேண்டியதாயிருக்கும். ஆகவே முளைக்காத வித்துகளைத் தள்ளிப் பார்த்தால் அனேகமாக இரண்டு படி வித்திலிருந்துண்டாகும் நாற்று ஒரு ஏக்கருக்குக் காணுமென்றே எண்ணவேண்டியதாயிருக்கிறது."

விதையைச் சொற்பமாய் விட்டு உண்டாகும் நாற்றை ஒரு ஒரு அலகாய் நடுவதால் லாபமில்லை என்றே வைத்துக்கொள்ளுவோம். இது குத்துக்குத்தாய் நடுவதால் உண்டாகும் விளைச்சலுக்குக் குறைவில்லை யென்று ஏற்பட்டாலுமே போதுமானது. அதனால் இப்பொழுது ஏராளமாய் விதையாய் உபயோகிக்கப்படும் நெல்முழுவதும் லாபமாய்விடும். ஒற்றை அலகு நடுவதற்கு வேண்டிய விதையெல்லாம் ஏகருக்கு இரண்டு படி என்று சொல்லப்படுகிறது. அதாவது விதையின் செலவு வெகு அற்பமாகும்.

மேற்கண்ட ஸ்டேட்மெண்டிலிருந்து சென்னை ராஜதானியில் சுமார் ஒருகோடி ஏகராவில் நெல் சாகுபடியாகிறதாக ஏற்படுகிறது. அதற்கு இப்பொழுது உபயோகிக்கும் விதையின் கிரயம் சென்றவும் அதற்கு முந்தியவும் வருஷங்களின் சராசரி விலைப்படி ஐந்துகோடி ரூபாயாகிறது. இப்பொழுது விற்கும் விலைப்படிப் பார்த்தால் இன்னும் ஜாஸ்தியாகும். ஒற்றை அலகு நடுவது பலிதமென்று ஏற்பட்டுவிட்டால் இந்த ஐந்துகோடி ரூபாயும் விவஸாயிகளுக்கு லாபமல்லவா? அதாவது நிலக்காரர்களுக்கு என்னென்றும் ஏகர் ஒன்றுக்கு 5 ரூ. தீர்வை தள்ளிக்கொடுத்தால் போல் ஆகும். அல்லது விவஸாயத்தைச் சார்ந்திருக்கும் ஒவ்வொருவருக்கும் வருஷந்தோறும் இரண்டு ரூ. இனாம் கிடைத்தது போலாகும். ஒற்றை அலகு நட்டுப்பார்த்தவர்கள் முன்விளைவுக்குக் குறைவு இல்லை யென்று சொல்வதோடுகூட ஜாஸ்திமேனி காணுகிறது என்றும் சொல்லுகிறார்கள். விவஸாயிகளில் ஒவ்வொருவரும் அவரவர்கள் நிலத்தில் பத்துக்குழியையாகிலும் ஒற்றை அலகாய் நட்டு பரிக்ஷித்துப் பார்த்தால் அதன் உண்மை நிதர்சனமாய்த் தெரியும். பரிக்ஷித்துப் பார்த்து தைரியமடைந்தவர்கள் அவரவர் அனுபவத்தை வெளியிட்டு எல்லாரும் அறியும்படி சொல்லுவது ஜனங்களுக்கு பேருதவி செய்வதாகும்.

பத்திராதிபர்.

# THE GOVERNMENT OF INDIA.

## இந்தியா கவரன்மெண்டு.

இந்தியாவுக்கு முதல் முதல் ஆங்கிலேயர்கள் வியாபாரிகளாக வந்து "ஈஸ்டு இந்தியா கம்பெனி" என்றபேரை வகித்து வியாபாரம் செய்து வந்தார்கள். பிறகு, அவர்கள் தங்களுடைய சாமர்த்தியத்தினால் ஒன்றின்பின் ஒன்றாகநாடுகளையும் நகரங்களையும் கொஞ்சம்கொஞ்சமாக சம்பாதித்து அங்கங்கே கவர்னர்களை நியமித்து ஆண்டுவந்தார்கள். இப்படிக்கு, ஒரு கவர்னருக்கும் மற்றொரு கவர்னருக்கும் யாதொருசம்பந்தமுமில்லாமல் விவகாரங்களை நடத்தி வந்ததில் அநேக அசௌகரியங்கள் ஏற்பட்டன. ஆகையால், 1773-ம் வருஷத்தில் இந்தியாவிலுள்ள கம்பெனியாருக்கு சுவாதீனமான நாடுகளை ஆண்டுவர "வங்காள கவர்னர் ஜனரல்" என்ற ஒரு பெரிய உத்தியோகஸ்தரும் அவருடைய ஆலோசனைக்காக நான்கு மெம்பர்கள் அடங்கிய ஒரு சபையும் ஏற்படுத்தப்பட்டது. இதனால், மதராஸ், பம்பாய் ராஜதானிகளிலுள்ள கவர்னர்கள் எந்த விஷயத்திலும் வங்காள கவர்னர் ஜனரலுக்கு கீழ் அடங்கி நடக்கும்படிக்கும் ஏற்பட்டது. ஆயினும், இப்பொழுதுபோல் அந்தகாலத்தில் போக்கு வரத்திற்கு ரெயில் தபால் முதலிய சௌகரியங்கள் இல்லாததால் பேருக்கு மட்டும் கீழ்ப்பட்டதென்று சொல்லவேண்டியதைத்தவிர காரியத்தில் மதராஸ், பம்பாய் இரண்டு ராஜதானிகளின் அரசாட்சி தனியாகவே நடந்து வந்தது. 1784-ம் வருஷத்தில் ஒவ்வொரு ராஜதானிக்கும் ஒரு கவர்னரும் ராஜதானியின் சேனாதிபதியைச் சேர்த்து மூன்று ஆலோசனை சபை மெம்பர்களும் நியமிக்கப்பட்டார்கள். வரவர ராஜ்யங்கள் சேரச் சேர ஈஸ்டு இந்தியா கம்பெனியாருக்கு வர்த்தகத்தைவிட ராஜ்யபாரம் மேலிட்டது. 1833-ம் வருஷத்தில் மேற் சொல்லிய கம்பெனியார் வியாபாரம் செய்வதை நிறுத்தி அவர்கள் ஆங்கிலேய அரசனுக்காக ராஜ்ய பரிபாலனஞ் செய்யும்படி ஒரு சட்டம் சீமையில் ஏற்படுத்தப்பட்டது. அதனால் "வங்காள கவர்னர் ஜனரல்" என்னும் உத்தியோகம் போய் "இந்தியா கவர்னர் ஜனரல்" என்ற உத்தியோகம் ஒன்று ஏற்பட்டு இதை வகிப்பவருக்கு சகல அதிகாரமும் கொடுத்து அவருக்குக் கீழ்பட்டு மதராஸ் பம்பாய் ராஜதானி கவர்னர்கள் நடக்கும்படி விதிக்கப்பட்டது. 1836-ம் வருஷத்தில் இப்பொழுது ஐக்கியமகாணங்கள் என்று வழங்கும் வடமேற்கு மகாணம் கவர்னருக்கு அடுத்த படியான "லெப்டினெண்டு கவர்னர்" என்னும் உத்தியோகஸ்தருக்கு உள்ளாக்கப்பட்டது. இதேமாதிரி 1854-ம் வருஷத்தில் அதுவரையில் இந்தியா கவர்னர் ஜனரலாலேயே ஆளப்பட்டு வந்த வங்காள மாகாணமும் ஒரு லெப்டினெண்டு கவர்னர் ஆளுகைக்கு உட்படுத்தப்பட்டது. இப்படியெல்லாம் அங்கங்கே கவர்னராவது, லெப்டினெண்டு கவர்னராவது ஏற்படவே இந்தியா கவர்னர் ஜனரலுக்கு இந்தியா முழுவதும் மேன்பார்வைமட்டும் ஏற்பட்டது. இப்படி அடிக்கடி அனேகம் மாறுதல்கள் நடந்துகொண்டேவந்து கடைசியாக 1858-ம் வருஷத்தில் ஈஸ்டு இந்தியா கம்பெனியார் பார்த்து வந்த ராஜ்யம்முழுவதும் அரசியிடமே ஒப்பிக்கப்பட்டது. இதுமுதல் இந்தியாவிலுள்ள கவர்னர் ஜனரலுக்கு "வைஸராய்" என்றபெயரும் சேர்ந்தது. இவர் ராஜாவுக்குப் பிரதிநிதியாக இந்தியாவில் சகல நடவடிக்கைகளையும் நடத்த அதிகாரம் பெற்றவர். இவருக்கு வருஷம் ஒன்றுக்கு இரண்டரை லக்ஷம் ரூபாய் சம்பளம்.



வைஸராய் (கவர்னர் ஜனரல்) அதிகாரத்துக்கு இந்தியா கவரன்மெண்டு என்றும், மற்று அங்கங்கே யுள்ள மாகாண கவர்னர்களின் ஆளுகைக்கு மாகாண கவரன்மெண்டு என்றும் பெயர்.

இந்தியா கவரன்மெண்டாரின் அதிகாரம் என்னவென்றால் ஆங்கிலேய அரசாக்ஷிக்கு உட்பட்ட இந்தியாவில் ஸகல இடங்களையும் ஆண்டுவருவதும், ஸ்வதேச சிற்றரசுகளைப் பரிபாலனம் செய்துவருவதுமே.

இதரதேசத்து ராஜாங்கங்களோடு உள்ள அன்னியோன்னிய பாவ விஷயங்கள், இந்தியாவைச் சத்துருக்கள் அண்டாமல் பாதுகாத்தல், தீர்வைவிதித்தல், தேசத்தில் வழங்கிவரும் நாணயத்தைத் திட்டம் செய்தல், அவசியமான சமயங்களில் கடன்வாங்குதல், ஏற்றுமதி இறக்குமதிச்சுங்கங்களை விதித்தல், இன்னும் தபால், தந்தி, ரயில் இவைகள் சம்பந்தமான சகல நடவடிக்கைகளையும் கவர்னர் ஜனரலே அதாவது இந்தியா கவரன்மெண்டாரே நேரில் கவனிக்க வேண்டிய முக்கியமான அம்சங்களாகும்.

மகாணங்களின் பரிபாலனமும், அங்கங்கே சில்லரைத்தீர்வை விதிப்பதும் வசூலிப்பதும், ஆஸ்பத்திரிகளை வைப்பதும், மனுஷ தேக ஆரோக்கியத்துக்கு அவசியமான ஏற்பாடுகளைச் செய்வதும், வேண்டிய பாய்ச்சலாதாரங்கள், கட்டிடங்கள், ஸ்கூல்கள் இவைகளை உண்டுபண்ணுவதும் அந்தந்த மகாண கவரன்மெண்டாரின் வேலைகள். ஆனால், இவைகளில் எல்லாம் இந்தியா கவரன்மெண்டாருக்குச் சம்பந்தமில்லை என்பதில்லை. இவ்விஷயங்களை இன்ன இன்ன மாதிரியாகச் செய்யவேண்டியதென்று எடுத்துக் காட்டி அவ்விதம் நடத்தப்பட்டு வருகின்றனவா என்று மாகாண கவரன்மெண்டார் அனுப்பிவரும் வருஷாந்தர ரிபோர்ட்டைப் பார்வையிட்டு நடத்துவிப்பதும் இந்தியா கவரன்மெண்டார் வேலையாகும்.

மேலே சொன்னபடி ரயில், தபால், தந்தி முதலான விஷயங்களுக்கு இந்தியா கவரன்மெண்டார் பிரத்தியேக அதிகாரிகளை நியமித்து நேரில் பார்த்துவந்தாலும், அவ்விஷயங்களையும், விவசாயம், நீர்பாய்ச்சல், காடு, கல்வி, வைத்தியம் முதலான இலாகா வேலைகளையும் தகுந்த உத்தியோகஸ்தர்களைக் கொண்டு நடத்திவைப்பது மாகாண கவரன்மெண்டாரின் கடமையாகும். தவிர, பிரதி வருஷமும் மாகாண கவரன்மெண்டார் அவ்வருஷத்தின் வரவுசெலவு மதிப்புத் திட்டத்தைக்காட்டி ஒருகணக்குத் தயாரித்து முன்னடியே இந்தியா கவரன்மெண்டாரின் அனுமதியைப் பெறவேண்டும். இம்மதிப்புத் திட்டத்தை குறைக்கவும் அதிகப்படுத்தவும் இந்தியா கவரன்மெண்டாருக்கு அதிகாரமுண்டு. நூதனமாய் ஒரு பெரிய உத்தியோகத்தை ஏற்படுத்தவாவது, அல்லது சிறு உத்தியோகங்களாக அனேகவைகளை ஏற்படுத்தி ஜாஸ்தியாய் செலவிடவாவது மாகாண கவரன்மெண்டாருக்கு ஸ்வதாவாய் அதிகாரம் கிடையாது. இவைகளை இந்தியா கவரன்மெண்டாருடைய அனுமதிபெற்றே செய்யவேண்டும். மாகாணகவரன்மெண்டார் செய்யும் உத்தரவுகளுக்கு இந்தியா கவரன்மெண்டு அப்பீல்ஸ்தான மாகும்.

முதல் முதல் 1773-ம் வருஷத்தில் கவர்னர் ஜனரல் என்ற உத்தியோகமும் அவருடைய ஆலோசனை சபையும் ஏற்பட்டதென்று மேலே சொன்னோம். இந்த ஸபைக்கு "எக்ஸிகுடிவ்" அல்லது நிர்வாக ஸபை என்று பெயர். இதற்கு ஆரம்பத்தில் நாலு மெம்பர்களிருந்தார்கள். 1784ம் வருஷத்தில் முக்கிய சேனாதிபதியுள்பட மூன்றுபேர் மட்டும் போதும் என்று உத்தரவு பிறந்தது. 1793-ம் வருஷத்தில் கவுன்ஸிலில் அதாவது ஆலோசனை சபையில் மூன்று மெம்பர்கள் நியமிக்கப்பட்டு,

சேனாதிபதியை வேண்டுமானால் சேர்த்துக் கொள்ளலாமென்று ஏற்பாடு செய்யப்பட்டது. 1833-ம் வருஷத்தில் சட்டங்கள் செய்வதில் ஒத்தாசை செய்வதற்கு மட்டும் நாலாவது மெம்பர் ஒருவர் சேர்க்கப்பட்டு இவரும் 1853-ம் வருஷம் முதல் நிர்வாக ஸபைமெம்பராகவே ஆகிவிட்டார். 1858-ம் வருஷத்து கலகத்திற்குப் பிறகு ஸர்க்கார்ப் பண வரவு செலவு விஷயங்கள் சரிவரப் பார்த்து வர முடியாமல், 1861-ம் வருஷத்தில் தன அதிகார மெம்பர் ஒருவர் நியமிக்கப்பட்டார். 1874-ம் வருஷத்தில் இஞ்சினீர் இலாகா விஷயங்களைப் பார்த்துவர ஒரு மெம்பரும் ஏற்படுத்தப்பட்டார். ஆகவே, இப்பொழுது இந்தியா கவர்னர் ஜனரல் நிர்வாக சபையில் ஆறு மெம்பர்கள் இருக்கிறார்கள். இவர்களோடு சேனாதிபதியையும் ஒரு மெம்பராகச் சேர்த்துக்கொள்வது வழக்கம்.

மேற்சொன்ன ஆறுமெம்பர்களுக்கும் சாதாரண மெம்பர்கள் என்று பெயர். இவர்கள் நமது அரசனுடைய ஸன்னது பெற்றவர்கள். இவர்கள் ஐந்துவருஷம் வேலைபார்க்கவேண்டியது. இவர்களில் மூன்றுபேர் இந்தியாவில் சர்க்கார் வேலையில் பத்துவருஷ அனுபோகஸ்தர்களாகவும், ஒருவர் 5 வருஷத்து அனுபோகத்திற்குக் குறையாத சீமை பாரிஸ்டராகவாவது அட்வொகேட்டாகவாவது இருக்கவேண்டும். ஒவ்வொரு மெம்பருக்கும் வருஷம் ஒன்றுக்கு எண்பதினாயிரம் ரூபாய் சம்பளம். சேனாதிபதிக்கு லக்ஷரூபாய் சம்பளம்.

இதுவரையில் கவர்னர் ஜனரலுடைய நிர்வாக ஸபைக்கு இந்தியர் ஒருவரும் நியமிக்கப்பட்டதேயில்லை. இந்த மாதத்தில் வங்காளத்தில் பிரபல பாரிஸ்டரான எஸ். பி. ஸின்ஹா என்பவரை நிர்வாக ஸபையில் சட்ட மெம்பராக நமது மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தி நியமித்திருக்கிறார். அப்படி நியமித்ததானது அவரிடத்தில் பிரஜைகளுக்கு உள்ள அன்பைப் பெருகச்செய்வதோடு இதுவிஷயத்தில் சிபார்சு செய்திருக்கும் நமது கவர்னர் ஜனரலாகிய மின்ட்டோ பிரபுவினுடையவும் நமது அரசனின் இந்திய காரியதரிசியாகிய மார்லி பிரபுவினுடையவும் பெருந்தன்மையை எடுத்துக் காண்பிக்கின்றது.

## BANKS AND THEIR USE.

## பாங்கிகளும் அவைகளின் உபயோகமும்.

“ பாங்கி ” என்பது அனேகமாய் எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். அதை வட்டிக்கடை என்று சொல்லலாம். அது தனிகர்கள் அனேகர் சேர்ந்து, தங்கள் முதலைக்கொண்டும், பிரிடத்திலிருந்து “ டிபாஸிட்டு ” ரூபமாய் கடன் வாங்கி அந்தப் பணத்தைக்கொண்டும், பணம் வேண்டியவர்களுக்கு வட்டிக்குக் கொடுத்து வாங்கும் தொழில் செய்யும் இடம். ஒரு தேசத்தில் பாங்கிகள் ஏற்பட்டு அவைகள் ஜாஸ்தியாகி நன்றாய் நடத்தப்படுமானால் எல்லா ஜனங்களும் செலவர்களாகி தேசமும் செழித்து ஓங்கும். பாங்கிகளால் பல சௌகரியங்கள் உண்டு.

வியாபாரிகளும் மற்றவர்களும் தங்கள் கைவசமாக இருக்கிற ரொக்கப் பணத்தை பந்தோபஸ்தாய்ப் பாதுகாக்க வேண்டுமானால் தாங்களேநேரில் அதைக்காத்து வரவேண்டும். இல்லாவிட்டால் வீட்டிலுள்ள வேலைக்காரனிடமாவது அல்லது மற்றவர்களிடமாவது கொடுத்துப் பத்திரப்படுத்த வேண்டும். இந்த இரண்டு விதங்களிலும் ஸங்கடங்கள் இருக்கின்றன. தானே எப்போதும் பணத்தைக் கட்டிக் காத்து வருவதாயிருந்தால் அதேசிந்தையாக வேறு சுகானுபவங்களுக்கு இடமில்லாமல் போய்விடும். மற்றவர்களைக்கொண்டு பார்த்து வரச்செய்யலாம் என்றாலோ அதற்கு நம்பிக்கையுள்ளவர்களாய்க் கிடைக்கவேண்டும். அப்படிக்கிடைத்தாலும் பணம் முதலாளியின்வீட்டிலேயே இருப்பதால் அகஸ்மாத்தாய் திருட்டுப்போனாலும் சரி, நெருப்புப்பிடித்தாலும்சரி, பணத்திற்கு லோபம்வந்தால் அந்த நஷ்டம் முதலாளியதே. பாங்கில் போட்டு வைப்பதில் இந்த கஷ்டங்கள் கிடையாது. பாங்கிக்காரர்களுக்குப் பணத்தைப் பாதுகாப்பதே தொழிலாகையால் அவர்கள் மேற்சொல்லிய காரணங்களால் நஷ்டம் வாராதபடி தக்க ஏற்பாடுகளைச் செய்வார்கள். அங்கே பணத்திற்கு எவ்வித ஆபத்து நேர்ந்தாலும் அதற்கு பாங்கிக்காரர்களே ஜவாப்தாரி. பணம் தேவையானபோது பூராவுக்குமோ அல்லது வேண்டிய தொகைக்கோ ஒரு உண்டியல் அல்லது



“செக்கை” எழுதியனுப்பினால் உடனே பணம் கைக்குவந்துவிடும். தவிர, ஒருவன் தன் கையிலேயேபணத்தை வைத்துக்கொண்டிருந்தால் வட்டி நஷ்டப்படவேண்டும். அப்படி வைத்துக் கொள்ளாமல் வேண்டியபொழுது கொடுக்க வேணுமென்று பாங்கில் பணத்தை டிபாஸிட்டு செய்துவைத்தால் அதற்கு வட்டியும் கிடைக்கும்.

சிறுதொகையாயிருந்தாலும் அதை பாங்கியில் டிபாஸிட்டு செய்தால் பலதுளிபெருவெள்ளமாகி பாங்கிக்காரர்களிடமிருந்து வியாபாரிகள் கடனாகவாங்கி வியாபாரம் செய்யவும், மற்றவர்கள் தேவையானபோது வட்டம் கொடுத்தோ, அல்லது நோட்டின்பேரிலோ, இதர ஜாமீனின் பேரிலோ அல்லது அடைமானத்தின்பேரிலோ பாங்கிகளில் கடன் வாங்கிக் கொள்ளவும் ஸாதகமாயிருக்கும். வியாபாரிகள் இவ்விதமாக முதலைப் பெருக்கி வியாபாரத்தைப் பிரபலமாக்கி அதிக லாபம் அடைய பாங்கிகள் மிக உபயோகமானவை. பணமில்லாமல் வியாபாரம் நடவாது. வியாபாரம் இல்லாமல் விவசாயம் விருத்தியடையாது. ஆகையால் ஓர் இடத்தில் பாங்கி ஒன்று ஏற்பட்டால் அதனால் சுற்றுவட்டத்திலுள்ள எல்லா ஜனங்களுக்கும் நன்மையுண்டாகும்.

ஸாதாரணமாய் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் பணத்தை அனுப்ப வேண்டுமானால் ஆள்மூலமாய் அல்லது தபால் மணியார்டர் மூலமாய் அனுப்பவேண்டும். ஆள்மூலமாய் அனுப்புவதில் அதிகச் செலவு, பந்தோபஸ்துக்குறைவு முதலான பல அஸௌகரியங்கள் இருக்கின்றன. மணியார்டர் மூலமாய் அனுப்புவதிலும் தொகை பெரிதாயிருந்தால் செலவு ஜாஸ்தியாய்ப் பிடிக்கும். தவிர, நம்நாட்டில் பைசாக் கணக்கு ஏற்றுக்கொள்ளப்படுகிறதில்லை. எவ்வளவு சொற்பத்தொகையானாலும் பெருந்தொகையானாலும் அதைப் பாங்கில் செலுத்தி இன்ன ஊரில் இன்னாருக்குச் செல்லாக்க வேண்டியது என்று சொல்லிவிட்டால் ஒரு பாங்கிக்காரர் மற்றபாங்கிக்காரர்களோடு கொடுக்கல் வாங்கல் கணக்கு வைத்துக்கொண்டிருப்பதால் அவர்கள் மூலமாய் குறிப்பிட்டவரிடம் தொகையைச் செல்லாக்கிவிடுவார்கள். இதில் அதிகச்செலவு நேரிடாது. பணத்தை அங்கே செல்லாக்கக் கொஞ்சம் கமிஷனும் தபால் சார்ஜும் கொடுக்கவேண்டியதே ஒழிய மற்றக்கவலையே கிடையாது. இதோடு, வியாபாரிகள் நிலுவை வசூலித்து ஊர் ஊராய் போய்க்கொண்டிருக்கையில் அங்கங்கே வசூலாகும் தொகையை கைவசம் வைத்துக்கொள்ளாமல் அங்கங்கே உள்ள பாங்கில் கொடுத்துவிட்டால் பாங்கிக்காரர்கள் சொற்ப செலவில் முதலாளியிடம் அதைச் சேர்த்துவிடுவார்கள்.

பாங்கிகள் இருந்தால் சுலபமாய் வேண்டிய நாணயங்கள் கிடைக்கும். சில்லரை நாணயங்களோ, பெரிய நோட்டுக்களோ அல்லது சில்லரை நோட்டுக்களோ எதுவேண்டுமானாலும் தயாராக அகப்படும். கூலியாட்களுக்குப் பட்டுவாடா செய்யவேண்டியவர்களுக்கும் சில்லரை வேண்டியவர்களுக்கும் பாங்கிகள் மிகவும் சௌக்கியம்.

ஒருபாங்கில் கணக்கை ஏற்படுத்திக்கொண்டு பத்துவரவு செய்கிறவர்களுக்கு ஒரு பெரிய சௌகரியமிருக்கிறது. பிறருக்குப் பணம் கொடுக்கவேண்டிய விஷயத்திலும் பிறரிடமிருந்து பணம் வாங்கவேண்டிய விஷயத்திலும் தொகையை நேரில் எண்ணவேண்டிய ஜோலியே கிடையாது. பிறருக்குச் செல்லாக்க வேண்டிய தொகையைக் குறிப்பிட்டுச் செல்லாக்கும்படி பாங்கிக்காரர்களுக்கு எழுதிவிட்டால் அவர்கள் எவ்விடத்தில் செலுத்தவேணுமோ அங்கே செல்லாக்கி விடுவார்கள். அதேமாதிரி பிறரிடமிருந்து வரவேண்டிய தொகையை அவர்களே வாங்கிக்கணக்கில் வரவுவைத்துக்கொள்ளுவார்கள். செல்லாத நாணயத்தை வாங்கிநஷ்டம் அடைய ஹேதுவுமில்லை. பணத்தை எண்ணிக்கொடுப்பதிலும் வாங்குவதிலும் நேரத்தைவீணாய்ப் போக்காமல் அந்த நேரத்தை இதரலாபந்தரக்கூடிய வேலைகளில் செலுத்தலாம்.

பாங்கில் பத்துவரவு வைத்துக்கொண்டிருப்பது வியாபாரிகளுக்கு வெகுநலம். ஒரு வியாபாரி தன்னுடைய ராப்தாக்காரனிடம் நிலுவை வசூல் செய்யவோ அல்லது ஒருவருக்குப் பணம் செலுத்தவோ நேரில் போக

வேண்டியதில்லை. தனக்கு வர வேண்டிய தொகைக்கு உண்டியல் அனுப்பினால் அதை பாங்கிக்காரர்கள் வாயிதா தவறாமல் கவனித்து வசூலித்துவிடுவார்கள். பிறருக்குக் கொடுக்கவேண்டிய பணமானால் ஒரு "செக்கை"யோ அல்லது அறிவிப்பையோ எழுதியனுப்பிவிட்டால் அதையும் காலம் தவறாமல் செல்லாக்கி விடுவார்கள். பணம் கெடுப்படி வசூலாகாமல் போனாலாவது, அல்லது கொடுபடாமல், போனாலாவது அதன் காரணத்தைக் குறிப்பிட்டு பாங்கி உத்தியோகஸ்தர்கள் எழுதி பதில் அனுப்பிவிடுவார்கள். இது கோர்ட்டுகளில் வியாஜ்யம் ஏற்பட்டால் பணம் கொடுக்கவோ வாங்கவோ தயாராக இருந்ததை ரூபிக்க வெகு ஸாதகமான ருஜுவாகும். பாங்கில் கணக்கில்லாவிட்டால், நிலுவை வசூல்செய்ய ஆள் போய்க்கொண்டிருக்கவேணும். வேலை மெனக்கடு, வீண்செலவு.

பாங்கிகளில் பத்து வரவு வைத்துக் கொண்டிருப்பதால் ஒருவனுக்குத் தன்னுடைய யோக்கியதையை பிறர் அறியும்படியான சௌகரியங்கள் உண்டாகின்றன. தவிரவும், மற்றவர்களுக்கு சரக்குகளைக் கடனாகக் கொடுத்து வாங்குவதற்கு அவர்களுடைய யோக்கியதையைப் பற்றி தன் பாங்கிலாவது அல்லது அதன் மூலமாய் வேறு பாங்கிகளிலாவது எழுதித் தெரிந்துகொள்ளலாம். எந்த விதத்திலும் ஒருவனுடைய யோக்கியதையை பலர் அறியவும், அதனால் மேன்மையடையவும் ஸாதகமாகிறது. பாங்கில் பத்து வரவு இல்லாதவர்களுக்கு மற்றவர்களுடைய தகவல் சுலுவாய்க் கிடைக்காது.

பணத்தில் புழங்குகிற எல்லாருக்குமே சரிவரக்கணக்கு வைக்கத் தெரியாது. பாங்கில் பத்து வரவு வைத்துக்கொள்வதில் ஒருவனுக்குத் தன்னுடைய வரவு செலவு கணக்கு நன்றாய்த் தெரியும். தனக்குக்கிடைக்கும் வரும்படியை பாங்கிக்கு அனுப்பிக்கொண்டும் செலவுக்கு வேண்டும்போது பாங்கிலிருந்து வாங்கிக்கொண்டுமிருந்தால் இவ்வளவு வரவு இவ்வளவு செலவென்று எளிதில் தெரிந்துகொள்ள இடமாகும். தவிர, சில சமயங்களில் பிறருக்குச் செல்லாக்கின பணத்துக்கு ரசீது வாங்கத் தவறிப்போகலாம், அல்லது வாங்கின ரசீதை மறதியாய் எங்கேயாவது வைத்துவிடலாம். பாங்கி மூலமாய் பணத்தைச் செல்லாக்கி இருந்தால் விவகார சந்தர்ப்பங்களில் பாங்கிக்ககுகள் நல்ல ருஜுவாகும். பாங்கிலுள்ளவர்ணக்கள் பணம் செலுத்தின விஷயத்திற்கு சாக்ஷி சொல்லுவார்கள்.

பாங்கிப்பழக்கம் வைத்திருப்பவர்களுக்கு மற்றொரு சௌகரியமும் உண்டு. தாங்கள் பந்தோபஸ்தாய் வைக்கவேண்டிய நகையோ, நாணயமோ, தஸ்தவேஜியோ, பெட்டியோ, எதையானாலும் பாங்கிக்காரர்களிடம் ஒப்பிவித்து வேண்டும்போது வாபஸ் பெற்றுக்கொள்ளலாம்.

மேலே சொல்லப்பட்டவைகளைத் தவிர பாங்கிகளால் இன்னும் அனேக சௌகரியங்கள் இருக்கின்றன. பாங்கில் இன்ன மாதிரி கணக்குகள் வைக்கப்படுகிறதென்றும், அப்போதைக்கப்போது உண்டியல் விஷயமாய் ஏற்படும் சட்ட திட்டங்களையும் தெரிந்துகொள்ளலாம். பிறதேசங்களுக்குப் பணம் எப்படி அனுப்பலாம் என்பதையும் வெளியூர்களில் இன்ன இன்ன இடங்களில் பணம் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் விசாரித்துக்கொள்ளலாம்.

ஒருவன் பாங்கில்பத்து வரவு வைத்துக் கொண்டிருந்தால் பாங்கிக்காரர்கள் இடைவிடாமல் எப்பொழுதும் அவனுடைய நடத்தையைப் பற்றியும், நாணயத்தைப் பற்றியும், யோக்கியதையைப் பற்றியும் பல இடங்களில் தேறத்தெளிய விசாரித்துக்கொண்டேயிருப்பார்கள். பாங்கிக்காரர்கள் எப்பொழுதும் ஸொத்து ஜாஸ்தி இல்லாவிட்டாலும் யோக்கியர்களுக்கே கடன் கொடுத்து வாங்கிக்கொண்டு வருவார்கள். யோக்கியமாயும் நாணயமாயும் இருப்பவர்களைப் பற்றி மற்றவர்களுக்கும் சமயம் நேர்ந்தபோதெல்லாம் சொல்லுவார்கள். இதனால் வியாபாரிகள் நாணயமும் யோக்கியதையும் மேலிட்டு விருத்தியடைவார்கள். நரகத்திற்கு பயப்படாதவன்கூட தான் தின்னும் சோற்றில் மண் விழும் ஆதலால் பாங்கிக்காரர்களுக்குப் பயப்பட்டு அயோக்கியமான செய்கைகளைச் செய்யமாட்டான். இப்படி ஜனங்களுக்குள் யோக்கியதையையும் நன்னடக்கையையும் விருத்தி செய்ய பாங்கிகள் உன்னதமான கருவிகள்,



# AGRICULTURAL NOTES.
# விவசாயக் குறிப்புகள்.

A HELP IN GRAFTING.

**செடியை ஒட்டுக்கட்டுவதற்கு ஒரு உபாயம்.**—ஆறு அங்குல நீளம் அரை அங்குல அகலமுள்ள பழய பைஸிக்கிள் ரப்பர் துண்டத்தை எடுத்துக்கட்டினால் தாய்ச்செடியும் ஒட்டும் காற்றுப்படாமல் ஒன்றோடொன்று நன்றாய்ப்படிந்து விரியாமல் ஒட்டிக்கொள்ளும். ஒட்டை இறுக்கிக் கட்டுவதால் தீங்கு நேரிடாமல் செடி வளரவும் பருக்கவும் ரப்பர் இடம்கொடுக்கும். முன்போல் களிமண்ணையும் மெழுகையும் பூச வேண்டிய அவசியமில்லை.

VEGETABLES.

**காய்கறிகள்.**—சாக்கடைநீரைப் பாய்ச்சிப் பயிரிடுகிற காய்கறிகளைச் சாப்பிடுவதனால் தோஷமில்லை. ஆனால் அவைகளை நல்ல நீரில் நன்றாகக்கழுவி வேகவைத்துச் சாப்பிடவேண்டும். ஏனென்றால் அந்தக் காய்கறிகள் தோஷமற்றவைகளாயிருந்தபோதிலும் பூமியின் மேற்புறத்தில் இருக்கிற சாக்கடைநீரில் அவை பட்டிருக்கக்கூடும். அவைகளை நன்றாய் வேகவைக்காமல் சாப்பிட்டால் கேடு விளையக்கூடும்.

GROUND-NUT SEED.

**நிலக்கடலை விதை.**—இது தென்ஆற்காடு ஜில்லா நெல்லிக்குப்பத்துக்கு அடுத்த பாலூர் கவர்ன்மெண்டு பண்ணை மானேஜரிடமிருக்கிறது. வேண்டியவர்கள் அஸல் பிரகாரம் வாங்கிக் கொள்ளலாம். அங்கிருந்து கொண்டுபோகும் சார்ஜ் வாங்குகிறவர்களே கொடுக்கவேணும்.

AGRICULTURAL COLLEGE, COIMBATORE.

**கோயமுத்தூர் விவசாய காலேஜ்.**—கோயமுத்தூர் விவசாய காலேஜையும், சோதனைப் பண்ணையையும் போய்ப் பார்த்து அங்கே சீர்திருத்தவேண்டிய விஷயங்களை எடுத்துச் சொல்லும் சுதந்தரம் உள்ள கௌரவ விஸிடர்களாக அடியில்கண்ட உத்தியோக சம்பந்தமில்லாத தஞ்சாவூர் ராவ் பஹதூர். கெ. எஸ். ஸ்ரீனிவாஸபிள்ளை அவர்கள், மதுரை ஜில்லா வடகரை. வி. ராமபத்ர நாயடுகாரு முதலான 15 கனவான்களை கவர்ன்மெண்டார் நியமித்திருக்கிறார்கள்.



CASTOR-CAKE

**கொட்டைமுத்துப் பிண்ணாக்கு.**—பஞ்சாப் மாகாணத்தின் தலை நகராகிய லாகூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பஞ்சாப் எண்ணெய் யந்திர சாலை அதிகாரிகள் தங்களிடமுள்ள கொட்டைமுத்துப் பிண்ணாக்கைப் பம்பாய் மாகாணத்தின் மேல்பாகத்திலுள்ள விவசாயிகளுக்கு நான்கு வருஷத்துக்கு முன்கூட விற்றுவந்தார்கள். அந்த விவசாயிகள் அப்பிண்ணாக்கை வாங்கித் தங்களுடைய கரும்புத்தோட்டங்களுக்கு உரமாய் உபயோகித்து வந்தார்களாம். அப்புறம் பம்பாய் நாட்டிலுள்ள கரும்புத்தோட்டங்களுக்கு உரமாய் உதவும் கொட்டைமுத்துப் பிண்ணாக்கு நம்முடைய மாகாணத்திலேயேயுள்ள கரும்புத்தோட்டங்களுக்கு ஏன் உரமாய் உதவமாட்டாது பார்ப்போமென்று பஞ்சாப் எண்ணெய் யந்திர சாலைக்காரர்கள் தங்கள் மாகாணத்தைச் சேர்ந்த லாகூர் அமிருத்ஸர் இந்த இரண்டு ஜில்லாக்களிலுமுள்ள சில விவசாயிகளுக்கு அனுப்பினார்களாம். அவர்கள் அதனைத் தங்கள் கரும்புத்தோட்டங்களுக்கு உரமாய் உபயோகித்துப் பார்த்து அது நல்ல உரப்பொருள் தான் என்றுதெரிந்துகொண்டு இப்போது சில வருஷங்களாய் அக்கொட்டைமுத்துப்பிண்ணாக்கை வாங்கித் தாங்களும் உரமாய் உபயோகித்து வருகிறார்கள். வருஷத்துக்கு வருஷம் அவர்கள் அப்பிண்ணாக்கை அதிகமாகவே வாங்கி உபயோகித்து வருகிறார்களெனப்படுகிறது.

BANKU PADDY.

**பாங்கு நெல்.**—பாங்கு நெல் $4\frac{1}{2}$ மாசத்துப்பயிர். இது வெண்மையாயும் ஸன்னமாயுமிருக்கிறது. 5, 6 மாஸத்துப்பயிர் சாகுபடி செய்ய நீர் வளமில்லாத நிலங்களில் இதைப் பயிரிடலாம். இதன் விதை வேண்டியவர்கள் திருச்சினாப்பள்ளியில் விவசாய டிப்டி டைரெக்டருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

MANURING COCOANUTS.

**தென்னை மரத்துக்கு எரு.**—தென்னையின் வேரைச் சுற்றிலும் மண்ணைப்பறித்து எடுத்து மோரில் கலந்த கிராமநத்த பாழ்மண்ணைப் போட்டு மூடி நீர்பாய்ச்சினால் காய்கள் நன்றாய் காய்க்கின்றனவாம்.

# TRADE NOTES.
# வியாபாரக் குறிப்புகள்.

SOAPS.

**ஸோப்புகள்.**—இதர தேசங்களிலிருந்து இந்தியாவுக்கு வந்த ஸோப்புகளின் அளவும் அவைகளின் விலையும் சென்ற ஐந்து வருஷங்களுக்கு அடியில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

| வருஷம் | பாரம் | லக்ஷம் ரூ |
|---|---|---|
| 1903-04 | 35,392 | 26 |
| 1904-05 | 36,512 | 27 |
| 1905-06 | 41,664 | $31\frac{1}{2}$ |
| 1906-07 | 40,544 | 32 |
| 1907-08 | 48,160 | $41\frac{3}{8}$ |

இந்தக்கணக்கைப் பார்த்தால் அந்நிய தேசங்களிலிருந்து ஸோப்புகள் வருஷந்தோறும் ஜாஸ்தியாகவே வருகின்றன என்று தெளிவாய் ஏற்படுகிறது. ஸ்வதேசி, ஸ்வதேசி என்று பேசியும் வாங்குகிறவர்கள் பரதேசி ஸோப்புகளையே பெரும்பாலும் வாங்குகிறார்களென்று ஊகிக்கவேண்டியதாயிருக்கிறது. இப்படிச் செய்ய முக்கியமாய் இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது, இந்தியாவில் ஸோப்பு உபயோகிக்கிறவர்கள் பெரும்பாலும் ஐரோப்பியர்களும் "இங்கிலீஷ்" படித்து ஸம்பாதிக்கிறவர்களுமே. இவர்களெல்லாம் ஸ்வதேசி என்ற ஒரு காரணத்தைமட்டும் பாராட்டி நாட்டு ஸோப்புகளை வாங்கப்பட்டவர்களல்ல. இரண்டாவது, இந்தியாவில் பல ஸோப்புக்கம்பெனிகள் ஏற்பட்டிருந்தும் அவைகள் செய்யும் சரக்குகள் பெரும்பாலும் பார்க்க அழகில்லாமலும், நல்ல வாசனையில்லாமலும் இருப்பதோடு, ஜலம்பட்டால் "கொத கொத" வென்று ஆகிவிடுகின்றன. சில ஸோப்புகள் சுண்ணாம்பு நாற்றமே அடிக்கின்றன. இவைகளெல்லாம் நம்மவர்களுக்கு ஸோப்பு செய்வதில் ஸாமர்த்தியமில்லாததைக் காண்பிக்கின்றது. இது நிற்க, அவர்களுடைய விற்பனை செய்யும் ஸாமர்த்தியத்தைச் சற்று விசாரிப்போம். ஸோப்பு செய்யும் ஒவ்வொருவருக்கும் "பேர்ஸ்" "ஸன்லைட்" ஸோப்புகளைப்போலவே தங்களுடைய சரக்கும் விற்பனையாகவேணும் என்ற ஆவல் இருந்தும் அவர்கள் ... முதல் செய்யும் வழிகளை நம்மவர் அனுஷ்... "பேர்ஸ்" "ஸன்லைட்" கம்பெனிகளைப்போல் எந்த ஸ்வதேசி ஸோப்பு கம்பெனியார்கள் பிரசுரங்கள் செய்திருக்கிறார்கள்? பேர்ஸ், ஸன்லைட் ஸோப்புகள் வந்தகாலத்தில் எந்தப்பத்திரிகையைப் பார்த்தாலும் அவர்களுடைய பிரசுரங்கள் உண்டு. சில வருஷங்களுக்கு முன் ஸன்லைட் ஸோப்பு ஏஜெண்டு வந்து எனக்குத் தெரிந்தமட்டில் பட்டணத்திலுள்ள சின்ன ஸ்கூல்களுக்குப் போய் ஒரு கட்டி ஸோப்பை குழந்தைகளுக்கு இனாமாகக் கொடுத்துவிட்டுப்போனார். அப்படிப் பிரசுரம் செய்ததற்குச் செலவிட்ட பணத்தை லாபத்தில் எடுக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஸோப்புச் செய்வதற்கு இந்தியாவில் வேண்டிய கொழுப்பும் எண்ணெய்களும் இருக்கின்றன. அவைகளைச் சரிவர உபயோகித்து நல்ல ஸோப்புகளைச்செய்து, பிரசுரங்களுக்கு வேண்டிய செலவும் முக்கியச்செலவென்றே எண்ணி, அங்கங்கே ஏஜெண்டுகளை நியமித்து, விற்பனைசெய்தால் ஏன் ஸ்வதேசி ஸோப்புகள் விற்பனையாகமாட்டா? வேண்டிய ஸௌகரியங்கள் இருக்கின்றன. செய்யவும் விற்கவும் ஸாமர்த்தியந்தானில்லை.

ADULTERATION OF COTTON SEEDS.

**பருத்திக்கொட்டையில் கலப்பு.**— இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற பருத்திக்கொட்டையோடு கொட்டை முத்தும் கலந்திருப்பதாய் பிரதேசங்களிலுள்ள அனேகம் வியாபாரிகள் சொல்லுகிறார்கள். இது வாஸ்தவமென்று தென்படுகிறது. ஆனால் இந்தியாவில் பருத்திக் கொட்டையின் விலையையும் கொட்டைமுத்தின் விலையையும் பார்த்தால் சாதாரணமாய் கொட்டை முத்தை மனப்பூர்வமாய் கலக்கக்கூடுமென்று தோன்றவில்லை. 1908-ம் வருஷம் ஏப்பிரல் மாதம் முதல் ஒரு வருஷத்து பம்பாய் விலைகளைப்பார்த்தால் எந்த மாதத்திலும் கொட்டை முத்து விலை பாரம் ஒன்றுக்குச் சுமார் 5 ரூ. அதிகமாகவே இருந்திருக்கிறது. இதனால் பருத்திக் கொட்டையோடு கொட்டைமுத்தைக் கலப்பதில் யாதொரு லாபமும் இல்லை என்று ஏற்படுகிறது. ஆயினும் அகஸ்மாத்தாகவோ அல்லது வேறு எவ்விதமாகவோ, பருத்திக் கொட்டையோடு கொட்டை முத்துச் சேர்ந்தால் பருத்திக்கொட்டை வியாபாரம் கெட்டுப் போய்விடும் என்று சொல்லப்படுகிறது. ஆகையால் பருத்திக்கொட்டை ஏற்றுமதி செய்கிறவர்கள் இது விஷயத்தில் ஜாக்கிரதையாய் இருக்கவேணும்.



# INDUSTRIAL NOTES.
# கைத்தொழில் குறிப்புகள்.

MATCH MAKING FACTORIES.

**தீக்குச்சி செய்யும் பாக்டேரிகள்.**—கல்கத்தாவில் பிரபல வக்கீலாகவுள்ள டாக்டர் ராஷ்பிஹாரி கோஷ் என்பவர் ஒரு தீக்குச்சி செய்யும் பாக்டெரி (பண்டங்களைச்செய்யும் சாலை)யை சொந்தத்தில் நடத்துகின்றார். வருஷந்தோறும் இந்தியாவுக்கு வெளி தேசங்களிலிருந்து அறுபத்து நான்கு லக்ஷம் ரூபாய் பெறுமான தீக்குச்சிகள் வருகின்றன. வங்காளத்தில் சிராம்பூர் ஸப்டிவிஷனைச் சேர்ந்த கோன்னகர் என்றவிடத்தில் இப்போது ஒரு புதிய தீக்குச்சி செய்யும் சாலை ஏற்பட்டிருக்கிறது. ஷை சாலையை முதல் நாள் திறந்த நாஷிபூர் ராஜா ரஞ்சிட்ஸிங்கு என்பவர், அந்தச்சாலை நல்ல விருத்திக்கு வருமென்று சொன்னார். அநேக வியாபாரங்கள் சுதேசியவுணர்ச்சி யொன்றை மட்டில் ஆதாரமாகக் கொண்டு வேறு வியாபாரத் தோதில்லாததால் க்ஷீணிக்கின்றன. சிலர் அதிகலாபம் வேண்டுமென்று இச்சிக்கிறார்கள். வேறு சிலர் தாம் எடுத்துக்கொண்ட வியாபாரத்தின் வகைகள் ஒன்றையுந் தெரிந்துகொள்ளாமல் வியாபாரஞ்செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். இப்படிக்கு இல்லாமல் தோது தெரிந்து ஷை சாலை நடப்பதால் நஷ்டம் வராதென்றும், அன்னியதேசத்துச் சரக்குகளோடு எதிர்த்து விலை சரஸமாய் விற்கக்கூடுமென்றுஞ் சொன்னார். தீக்குச்சி செய்யும் வகைகளில் தேர்ந்த டப்ளியூ. ஆர். க்ருபர் என்பவர் தம்மாலான உதவிசெய்வதாக முன்வந்தாராம். அவரது உதவியும் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாம்.

THE USE OF RAT SKINS.

**எலித்தோல் உபயோகப்படுவது.**—லண்டனில், வருஷந்தோறும் ஐம்பதினாயிரம் பவுன் வரையில் எலித்தோல் வியாபாரம் நடக்கின்றதாம். எலியின் தோலால், படங்களுக்குச் சட்டம் செய்கிறார்களாம். தவிர, புஸ்தகங்கள் பைண்டு செய்யவும், பைகள் முதலியன செய்யவும் எலித்தோல் உபயோகமாகிறது. நம்மவர்களும் இந்த விஷயத்தைப் பற்றி யோசனை செய்வது பிரயோஜனமாகும்.

NEW COMPANIES IN RANGOON.

**ரங்கூனில் புதிய கம்பெனிகள்:**—"பர்மா கெமிகல் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட்" என்று ரஸாயன சாஸ்திர சம்பந்தமான தொழில்களைச் செய்வதற்காக ஒரு கம்பெனி ரங்கூனில் புதிதாய் ஸ்தாபனமாகி இருக்கிறது. இதற்கு 5 லக்ஷம் ரூபாய் முதல். பர்மாவில் அபரிமிதமாக கெரொஸின் எண்ணெய் உற்பத்தியாகிறது. அதைச் சுத்திசெய்ய கந்தகத் திராவகம் தேவை. இப்பொழுது இந்தத்திராவகம் இதர தேசங்களிலிருந்து வருஷமொன்றுக்கு சுமார் 9000-ம் பாரம் பர்மாவில் இறக்குமதி செய்யப்படுகிறது. கந்தகத்திராவகம் அபாயத்தையுண்டுபண்ணக் கூடிய வஸ்து ஆதலால் அதை பிரதேசங்களிலிருந்து வரவழைப்பதில் வெகு செலவாகிறது. ஆகையால் மேலேசொல்லிய கம்பெனியார்கள் கந்தகத் திராவகத்தை பர்மாவிலேயே செய்து அவ்விடத்திலுள்ள கெரொஸின் எண்ணெய் முதலிய கம்பெனிகளுக்கு விற்பனை செய்யப் போகிறார்கள். பர்மாவிலுள்ள கெரொஸின் எண்ணெய்க் கம்பெனிகளும் புதிய கம்பெனியில் பங்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்களாம். எல்லாவற்றையும் பார்த்தால் புதிய கம்பெனிக்கு நல்ல லாபம் கிடைக்குமென்று தோன்றுகின்றது. தவிர, கெரொஸின் எண்ணெய் இருக்கக்கூடிய இடங்களையெல்லாம் சோதித்து எண்ணெய் வியாபாரம் செய்ய ஐம்பது லக்ஷம் முதலோடு ஐக்கிய குவின்யோ எண்ணெய்க் கம்பெனி என்று ஒன்றும் ஏற்பட்டிருக்கிறதாம்.

RUBBER-TANNED LEATHER.

**ரப்பர் மூலமாய்ப் பதனிட்ட தோல்.**—லண்டன் நகரத்தில் இப்போது ரப்பர் மூலமாய்த் தோலை பதம் செய்கிறார்களாம். இப்படிச் செய்வதால் தோல் மிருதுவாயும் இலேசாயும் இருப்பதல்லாமல் ஜலம்பட்டாலும் கெடாதபடியிருக்குமாம். இப்படிப் பட்ட தோல் மோடார் வண்டி, பைஸிகல் முதலியவைகளுக்கு அதிகமாய் உபயோகப்படும்.

AN INDUSTRIAL EXPERT FOR TRAVANCORE.

**திருவாங்கூருக்கு ஒரு கைத்தொழில் நிபுணர்.**—திருவாங்கூர் கவரன்மெண்டார் தங்கள் நாட்டிலே கைத்தொழிற்பயிற்சியை விர்த்திசெய்யும்படி ஜர்மனிதேசத்திலிருந்து ஒரு கைத்தொழிலாசிரியரைக் கொண்டுவந்து அவருக்கு மாதமொன்றுக்கு ரூ. 400 ... கொடுக்கப்போகிறார்களாம்.

## ECONOMICS.
## பொருளாதாரம்.

THE CEYLON VILLAGE COMMUNITIES ORDINANCE.

**இலங்கைத்தீவில் கிராமப்பஞ்சாயத்தைப் பற்றிய சட்டம்.**—இலங்கைத் தீவில் கிராமப்பஞ்சாயத்து ஏற்பட்டு 1889-ம் வருஷம் முதல் நாளது வரையில் நடந்து வருகிறது. ஷை பஞ்சாயத்திற்கு அநேக சுவாதீனங்களும் அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை:

(1) கிராமத்தில் உள்ள குறுக்குவழிகள், பாலங்கள், மண்டபங்கள், கிணறுகள், ஊற்றுக்கள், ஸ்நானம் செய்யத்தகுந்த குளங்கள், ஓடைகள், படகுகள், கடைத்தெருவு, கசாப்புக்கடை, ஸ்மசானம், நதி முதலியவைகளின் பரிபாலனம்.

(2) சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் பள்ளிக்கூடங்கள் கட்டுதல், அவைகளுக்கு மராமத்து முதலானது செய்தல், பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காய் வருகிறார்களாவென்று பார்த்தல்.

(3) கிராம வழக்கப்படி மீன் பிடிக்கக் குத்தகை ஏற்பாடு செய்தல்.

(4) மாடு மேயும் இடங்கள், குளங்கள் முதலிய புறம்போக்கு நிலங்களைச் சரியாய்ப் பார்த்துவருதல்.

(5) தொழில்களுக்கு உபயோகமாகத்தக்க பொருள்களை விளைவிக்க வேண்டியஉதவிசெய்தல்.

(6) கால்நடைகள் உற்பத்தி செய்தல், கசாப்பு விஷயங்களில் மேல் விசாரணை செய்தல், கால்நடைகளுக்கு வியாதிவாராமல் தடுத்தல்.

(7) எல்லைக்கல், வேலி, காணிக்கல், முதலியவைகளைப் பாதுகாத்தல்.

(8) ரஸ்தா ஓரங்களில் அசுத்தி செய்பவர்களைக் கண்டித்தல்.

(9) ஜனங்கள் ஒருவருக்கொருவர் இழிவாகத்திட்டிக்கொள்ளாமல் தடுத்தல்.

(10) கள்ளிறக்க உபயோகமான கயிறு முதலியவைகளைப் பரிசோதித்து, அதையிறக்குவதில் உயிர்ச்சேதமாவது வேறுவித சரீர ஊனமாவது ஏற்படாமல் தடுத்தல்.

(11) திருட்டுத்தனமாய் வில், துப்பாக்கிகள், வலை ...வர்களைக் கண்டுபிடித்துத் தண்டித்தல்.

(12) சூதாடுதல், கோழிகளைச் சண்டைசெய்ய வைத்தல், ஜனங்கள் அதிகமாய் நடமாடும் ரஸ்தாக்களில் பந்தயத்திற்கு வண்டி ஓட்டுதல் முதலியவழக்கங்களைக் கண்டித்தல்.

(13) கிராமப்பஞ்சாயத்துக் கோர்ட்டு கூடும் இடத்தைப்பழுதுபார்த்துச்சரியாய்வைத்துக்கொள்ளுதல்.

(14) சுங்கக்கேட்டுகள் வைத்து வரிவசூல் செய்தல்.

(15) கிராமத்தில் 12 அடிக்கு மேற்படாத அகலமுடைய ரஸ்தாக்களைச் சீர்படுத்தி வைத்துக்கொள்ளுதல். ரோட் ரிப்பேர் செய்யும் விஷயத்தில் கிராமத்தாரை நிர்ப்பந்தித்து பணம் கொடுக்கும்படி சொல்லக்கூடாது; அல்லது வேலை செய்யும்படியும்சொல்லக்கூடாது. ஆனால் வருஷத்தில் பத்து தினம் அப்படிப்பட்ட ரோட்டுகளில் வேலை செய்யும்படி சொல்லலாம்.

(16) கிராமக்கால்வாய்களைப் பழுது பார்த்துச் சரியானஸ்திதியில் வைத்துக்கொள்ளல்.

(17) ஷை 1, 2, 13, 15, 16, பாராவில் கண்ட வேலைகளைச்செய்ய இன்னின்னார் இவ்வளவு நாள் வேலைசெய்ய வேண்டும் என்று தீர்மானித்து அப்படிச் செய்யும்படி கட்டாயப்படுத்துதல். ஆனால் வருஷத்தில் 10 தினவேலைக்குமேல் ஒருவரையும்வேலை செய்யும்படி நிர்ப்பந்திக்கக்கூடாது.

(18) லைஸன்ஸ் வாங்கி ஆராக்கு, பனஞ்சாறு, பதனி, முதலியன விற்பவர்கள் ஷை போதைகொடுக்கும் வஸ்துக்களை எந்த முகாந்தரத்தைக் கொண்டும் ஸ்திரீகளுக்கு விற்பனைசெய்யக் கூடாதென்று கட்டாயப்படுத்துதல்.

(19) பயிர் செய்தல், கிராமக்குளங்களைப் பழுது பார்த்தல், காவல்காத்தல் முதலிய விஷயங்களில் பழையமாமூல் வழக்கங்களைச்சரிவர நடத்திவருதல்.

(20) கிராம விஷயங்களாக உள்ள சகலவித விசாரணைகளையும் செய்தல்.

மேலே சொல்லிய பலவித அதிகாரங்களை பஞ்சாயத்தார்கள் செலுத்தி வருகிறார்கள். நமது தேசத்துக்கிராமங்களிலும் முன்காலத்தில் இப்படிப்பட்ட விஷயங்களை யெல்லாம் கிராமத்தார்களே பார்த்து வந்தார்கள். இப்பொழுது கொஞ்சகாலமாய் கிராமங்களில் ஒற்றுமை தவறிப்போய்ப் பயிர்செய்வதில் பல தொந்தரைகள் உண்டாகியும் கோவில் குளம் முதலிய தர்மங்கள் சரிவர நடவாமலும் குறைபட்டு வருகின்றன. மறுபடியும் ஜனங்களை ஒன்று சேர்ப்பதற்காக ஸ்வதேச கனவான்களும் கவர்ன்மெண்டாரும் ஐக்கிய நாணயச்சங்கங்கள் மூலமாயும் விவஸாயச்சங்கங்கள் மூலமாயும் முயற்சி செய்து வருகிறார்கள்.



162070

## THE TEXTILE INDUSTRY.
## நெசவு தொழில்.

THE INDIAN TEXTILE INDUSTRY

**இந்தியாவில் நெசவு தொழில்.**—சென்ற பிப்ரவரி௴ 10௳ இங்கிலாந்தில் மான்செஸ்டர் நகரத்து வர்த்தகச்சங்கத்தின் வருஷாந்தர மீட்டிங் நடந்தது. அதில் அந்தச்சங்கத்தின் அக்கிராசனாதிபதியாகிய ஆஷ்வர்த் என்பவர் இந்தியாவின் நெசவுதொழிலைப் பற்றிய சிலவிஷயங்களை எடுத்துச் சொன்னார். நமது தேசத்தில் சென்ற இரண்டுவருஷங்களில் நீராவி போன்ற சக்தியால் ஓட்டப்படும் தறிகள் ஐம்பத்து இரண்டாயிரத்து இருநூறிலிருந்து அறுபத்தையாயிரத்து எழுநூறாகி விட்டன. 1907-ம் வருஷம் ஏப்ரல் மாஸம் முதல் 1908-ம் வருஷம் மார்ச்சுமாதம் வரையில் 13 புதிய பஞ்சாலைகளும்ஏற்படுத்தப்பட்டன. இந்தவருஷத்தில் இந்தியாவிலுள்ள எல்லா மில்லுகளிலும் நெய்யப்பட்ட துணி மொத்தம் ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூறு லக்ஷம் ராத்தல். ராத்தல் ஒன்றுக்கு ஐந்துகஜம் வீதம் வைத்துக் கொண்டால் இந்தியாவில் நெய்யப்பட்டதுணி மொத்தம் தொண்ணூற்று நாலரை ...டி கஜமாகிறது. சராசரி வருஷமொன்றுக்கு ...யிலிருந்து அனுப்பப்படும் துணி இருநூற்று ...த்தைந்து கோடி கஜம். ஆகவே மொத்தம் இந்தி... செலவாகும் துணியில் நூற்றில் எழுபது ...தேசியும் முப்பது பங்கு ஸ்வதேசியுமாக ... கைத்தறியில் நெய்யப்பட்ட துணிகள் ...ல்லிய கணக்கில் சேரவில்லை.

...OLLEN UNDERWEAR.

...தோய்ப்பது.—கம்பளி உடுப்புகளைச் ...வெளுக்க வேண்டுமானால் நன்றாய் ...டுத் தேய்த்து சுடுஜலத்தில் அரை மணிநேரம் ஊறவைக்கவேண்டும். வியர்வையால் படிந்திருக்கிற சிக்குக் கரைந்து போகும்படி ஊறப்போடும் பாத்திரத்தை ஆவி வெளியேபோகாமல் நன்றாய் மூடிவைக்க வேண்டும். அரைமணிநேரமானதும் மூடியைத்திறந்து இன்னும் கறை இருக்கும்பட்சத்தில் மறுபடி ஸோப்புப்போட்டுமிருதுவான புருஷினால் தேய்க்கவும். பிறகு அந்த உடுப்பை அந்தத் தண்ணீரிலேயே மேலும் கீழுமாய் நன்றாய் அலச வேண்டும். இப்படி ஒருதடவை செய்வதில் அது சுத்தமாகாதபக்ஷத்தில் மறுபடியும் இப்படியே ஒரு தடவை செய்தால் அழுக்கு எடுபட்டுப் போய்விடும். பிறகு வெது வெதுப்பான ஜலத்தில் அலசி நிழலில் காயும்படி செங்குத்தாய் தொங்கவிடவும். கொஞ்சம் ஈரமாக இருக்கும்போது உடுப்பை நாலு பக்கமும் இழுத்துவிட்டு இஸ்திரிபோட வேண்டும். கம்பளி உடைகளை கற்களில் துவைக்கவாவது, கைகளினால் கசக்கவாவது பிழியவாவது கூடாது. மேற்சொன்னபடி செய்தால் கம்பளிச்சட்டை முதலிய உடுப்புகள் சுருங்கமாட்டா. அப்படிச் சுருங்கினாலும் உபாயமாய்ச் சுருங்கும்.

DYEING BUSINESS.

**சாயத் தொழில்:**—நல்ல சாயங்களை உற்பத்தி செய்வதும், துணிகளுக்குச் சாயந் தோய்ப்பதும் மிகவும் லாபத்தைத் தரக்கூடிய தொழில்களேயானாலும், இந்தத் தொழில்களில் பலர் கவனம் செலுத்தாதிருக்கிறார்கள். இங்கிலாந்து முதலிய விடங்களுக்குப்போய் சாயத் தொழிலைச் செம்மையாய்க் கற்ற ஸென் என்பவர் கல்கத்தாவில் வந்திருக்கிறார். சென்னப் பட்டணம் தொழில் அபிவிருத்தி சபையார் உதவிபெற்று ஜப்பான் தேசத்தில் சாயத்தொழில் முதலியவைகளைக் கற்றுவந்த நாயடு அவர்களும் மதராஸுக்கு வந்து ஆறுமாதமாய் கற்றதொழிலைச்செய்ய முதவில்லாமல் வெறுமை இருக்கிறார். தமது பொருளைத் தக்கவழியில் உபயோகப்படுத்தி லாபம் ஸம்பாதிக்க உத்தேசிப்பவர்கள் மேற்படி தொழிலைப் பற்றி பல விசாரணைகளைச் செய்து தேற்சிபெற்ற கே. பானர்ஜி, பி. எல். என்பவருக்கும் எழுதித் தெரிந்து கொள்ளலாம். இவருடையவிலாஸம், நெ. 5, ராதா பஜார் சந்து, கல்கத்தாவென்பதாம்.

A HOSIERY FACTORY.

**மேல்ஜோடு செய்யும் கம்பெனி.**—கல்கத்தாவில் மேல்ஜோடு செய்வதற்காக இரண்டு லக்ஷம் ரூபாய் முதல் வைத்து ஒரு கம்பெனி ஏற்படுத்தி யிருக்கிறார்கள். போக்ரா நவாப்பு, பாபு பூபேந்திரநாத பாஸு முதலிய பெரிய மனுஷியர்கள் இதில் பணம் செலுத்தியிருக்கிறார்கள்.

Sm211,N09 PL
N09-1

# THE GROCERY TRADE.
# பலசரக்கு வியாபாரம்.

DRIED CHILLIES.

**மிளகாய் வற்றல்.**-சென்னப்பட்டணத்தில்முக்கியமாய் பரிமிளகாய் என்றும் குண்டூர் மிளகாய் என்றும் இரண்டு வித மிளகாய்கள் உபயோகப்படுகின்றன. இவை இரண்டில் பரி மிளகாய்க்குக் காரம் குறைச்சல், உடம்புக்கு நல்லதென்று சொல்லுகிறார்கள். குண்டூர்மிளகாயை, அதிலும் புதுச்சரக்கை உபயோகித்தால், நீர்க்கடுப்பும், வயற்றுவலியும், சில வேளைகளில் வயற்றுக்கடுப்பும்உண்டாகும். ஆயினும் குண்டூர் மிளகாய்ப் பரி மிளகாயை விட வீசைக்கு சுமார் இரண்டு அணா தணிந்த விலையுள்ளதால் அனேக ஜனங்கள் குண்டூர் மிளகாயையே வாங்குவார்கள். இரண்டு மிளகாய்களின் குணங்களைத் தெரிந்த சிலர் பரி மிளகாயில் கொஞ்சமும் புது குண்டூர் மிளகாயில் கொஞ்சமும் சேர்த்துக் கலந்து உபயோகிப்பார்கள். தக்க பெரிய மனிதர்கள் வீட்டில் பரி மிளகாயைத் தவிர வேறு மிளகாயை உபயோகப்படுத்துவதே யில்லை. உடம்பு சவுக்கியமில்லாதவர்களுடைய பத்தியத்திற்கும் பரி மிளகாய்தான் உபயோகமுள்ளது. ஆனால் இந்தப் பரி மிளகாய் வருஷம் முழுவதும் அகப்படாது. சாதாரணமாய் கார்த்திகை, மார்கழி மாதத்தோடு அற்றுப்போம். மறுபடியும் வைகாசி ஆனி மாதத்தில்தான் வரும். மத்திய காலத்தில் பரி மிளகாய் கிடைப்பது அரிது. ஏதோ ஒரு கடையில்தான் கிடைக்கும். இதர கடைகளில் பரி மிளகாய் வேணுமென்று கேட்டால் வந்த வியாபாரத்தை விடக்கூடாதென்ற ஆவலுள்ள சில கடைக்காரர்கள் ஒரு உபாயம் செய்வது வழக்கம். புது குண்டூர் மிளகாயை வேண்டிய அளவில் எடுத்துக் கொஞ்சம் ஜலத்தைத் தெளித்து மக்க வைத்து நிறத்தை மாற்றி, பழய பரி மிளகாயின் விலையை விட கொஞ்சம் குறைத்தே விற்று விடுவார்கள். இப்படிக்குச் சில்லரை வியாபாரிகள் மட்டும் செய்வதில்லை. மூட்டை மூட்டையாய் சென்னப்பட்டணத்திற்குஅனுப்பும் சில வெளியூர் மிளகாய் வர்த்தகர்கள் கூட மிளகாயை நன்றாய்க் காயவைக்காமல் கொஞ்சம் ஈரத்தோடு மூட்டையில் போட்டு மக்கிய மிளகாயை பழய மிளகாயென்று சொல்லி ஜாஸ்தி விலைக்கு விற்கும்படி செய்கிறார்களாம்.

MADRAS ONION TRADE

**சென்னப்பட்டணத்து வெங்காய வியாபாரம்.**—சென்னை ராஜதானியிலிருந்து அனேக தமிழர்களும் தெலுங்கர்களும் பர்மாவிலும், மலாக்கா முதலிய தீவுகளிலும் போய்க் குடியேறியிருக்கிறார்கள். இவர்கள் உபயோகிக்கும் பண்டங்களில் வெங்காயம் ஒன்று. இப்படி இங்கிருந்து போய்க் குடியேறியவர்களுக்கு வேண்டிய வெங்காயம் கொஞ்ச அளவுதான். ஆயினும் வரவர ஸகவாஸத்தால் பர்மாவிலும் மலாக்கா முதலிய தீவுகளிலுமுள்ள ஜனங்களுக்கும் வெங்காய வாடிக்கை படிந்துவிட்டதாம். ஆகையால் அந்த இடங்களுக்குச் சில காலமாக வெங்காயம் அதிகமாய் ஏற்றுமதி செய்யப்படுகிறது. மதராஸ் ராஜதானியில் 1905-06-ம் வருஷத்தில் இருபத்தி ஏழாயிரத்து இருநூற்று எண்பத்திநாலு ஏகரில் வெங்காயம் பயிர்செய்யப்பட்டது. சென்ற அதாவது, 1907-08-ம் வருஷத்தில் நாற்பத்தி ஏழாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தெட்டு ஏகர் சாகுபடியாயிற்று. 1905-06-ம் வருஷத்தில் நாலுலக்ஷத்து எண்பத்தீராயிரத்து நூற்றுத்தொண்ணூற்று மூன்றுரூபாய்பெறுமான வெங்காயம் பர்மாவுக்கும் மலாக்கா முதலிய தீவுகளுக்கும் சென்னை ராஜதானியிலிருந்து ஏற்றுமதிசெய்யப்பட்டது. 1907-08-ம் வருஷத்தில் அனுப்பிய வெங்காயத்தின் பெறுமானம் ஏழுலக்ஷத்து ஐம்பத்து எண்ணாயிரத்து எண்ணூற்று நாற்பத்திநாலு ரூபாய். மதராஸில் வெங்காய வியாபாரம் அதிகப்படுவதை உத்தேசித்து மதராஸ் துறைமுகக்கமிட்டியார் அதற்கு பிரத்தியேக சௌகரியங்கள் செய்துவருகிறார்கள்.

COFFEE IN SOUTHERN INDIA.

**தென் இந்தியாவில் காப்பி.**—தென் இந்தியாவில் சென்ற 1907-08-ம் வருஷத்தில் இரண்டு கோடியே தொண்ணூற்றுமூன்றேகால் லக்ஷம் ராத்தல் காப்பிக் கொட்டை குத்தி எடுக்கப்பட்டதாம். இதில் இரண்டு கோடியே அறுபது லக்ஷம் ராத்தல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிவிட்டது. மீதம் முப்பத்தி மூன்றேகால் லக்ஷம் பவுன் கொட்டையும் உள்நாட்டில் செலவாகி இருக்கிறது. குடகுமாகாணத்தில் தொண்ணூற்றுநாலுலக்ஷத்து நாற்பத்தி நாலாயிரம் ராத்தலும் மைசூரில் எண்பத்தி ஒன்பது லக்ஷத்து இருபத்தி ஒன்பதினாயிரம் ராத்தலும் நீலகிரியில்நாற்பத்தி ஒன்பது லக்ஷத்து இருபத்தி ஐயாயிரம் ராத்தலும் விளைந்தது.



# REVENUE NOTES.
# ரெவெனியூக் குறிப்புகள்.

KARNAMS IN TANJORE

**தஞ்சாவூர் கர்ணங்கள்.**—சமீபத்தில் சென்னை சட்டநிர்ணய சபையின் மீடிங்கு ஒன்று நடந்தது. அதில் கனம் கிருஷ்ணன் நாயர் என்பவர் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள கர்ணங்கள் அவர்கள் சம்பளத்தை அதிகப் படுத்த வேண்டுமென்று அனுப்பிய மனுவந்ததாவென்றும் அதை அங்கீகரித்து அவர்கள் வேண்டுகோளின்படி செய்வீர்களா என்றும் கவரன்மெண்டாரைக் கேட்டார். அந்த மனுவின் பேரில் கலெக்டரும் போர்டாரும் ரிபோர்டுச்செய்வார்களாம். அதைப் பார்த்து யோசிப்போம் என்று கவரன்மெண்டார் பதில் சொன்னார்கள்.

CHARGE ON WET LANDS.

**நஞ்சை நிலங்களின் தீர்வை.**—1908-ம் ௵ செப்டம்பர் ௴ 3௳ யுள்ள ரிவினியூ போர்டு புரொஸீடிங்ஸ்.

போர்டு 6 நெம்பர் நிலையான உத்தரவின் 5-வது பாராவுக்கு பர்த்தி.

சொந்தக் கிணறுகளிலிருந்து நஞ்சை நிலங்களுக்குத்தண்ணீர் பாய்ச்சுதல்:— 13-2 நெ. ஸ்டாண்டிங் ஆர்டர்ப்படி நஞ்சைத் தீர்வை வஜா செய்யும்படியாகவாவது அல்லது 13-9 ஸ்டாண்டிங் ஆர்டர்படி புஞ்சைத்தீர்வை மாத்திரம் ஏற்படுத்தும்படியாகவாவது ஏரியில் தண்ணீர்க் குறைவு நேரிட்டு, சொந்தக் கிணற்றின் தண்ணீரின் ஆதரவினாலேயே நஞ்சை நிலத்தில் சாகுபடி செய்யப்படுகிற பயிர்களுக்கு புஞ்சைத்தீர்வை மாத்திரம் விதிக்கப்படும். இப்படிப்பட்ட நிலமையில் ஒரு போக நஞ்சையாகத் தாக்கலான நிலத்தில் சொந்தக் கிணற்று ஆதரவினாலேயே இரண்டாம் போகம் சாகுபடியானால் ஷை இரண்டாம் போகத்துக்கு தீர்வை விதிக்கக்கூடாது. இருபோக நஞ்சையாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிற நிலங்களில் இரண்டுபோகம் சாகுபடியாகி அந்த இரண்டு சாகுபடிகளில் ஏதாவது ஒன்று மேற்கண்டபடிக்கு கவரன்மெண்டு பாய்ச்சல் ஆதாரத்தின் தண்ணீர் குறைவினால் சொந்தக் கிணற்றுத் தண்ணீரைக்கொண்டு சாகுபடியாகி இருந்தால் ஷை இருபோகத்துக்கும் ஒரு நஞ்சைத் தீர்வை மாத்திரம் விதிக்கப்படும். கம்பவுண்டு நஞ்சை நிலங்களின் விஷயத்தில் வருஷம் பூராவும் ஜலாதாரத்தில் தண்ணீர்க் குறைவு இருந்தாலொழிய பூராகம்பவுண்டுத் தீர்வையும் விதிக்கப்படும்.

மேலே கண்ட கேசுகளில் ஏற்ப்படுத்தவேண்டிய தீர்வை அட்டவணை.

| | முதல் போகம். | இரண்டாம் போகம். | செலுத்தவேண்டியடி தீர்வை |
|---|---|---|---|
| ஒரு போக நஞ்சை நிலம் | போதுமான தண்ணீர் வந்திருந்தால் | போதுமான தண்ணீர் வராவிட்டால் | ஒரு நஞ்சைத் தீர்வை. |
| | போதுமான தண்ணீர் வராமலிருந்து | போதுமான தண்ணீர் வந்திருந்தால் | ஷை |
| | ஷை ஷை | போதுமான தண்ணீர் வராவிட்டால் | ஒரு புஞ்சைத் தீர்வை. |
| சாதாரண இருபோக நஞ்சை நிலம் | போதுமான தண்ணீர் வராமல் | போதுமான தண்ணீர் வராமல் | ஷை |
| | போதுமான தண்ணீர்வந்து | ஷை | ஒரு நஞ்சைத்தீர்வை (பிரத்தியேகமாய் அது உண்டானால்). இல்லாத பக்ஷத்தில் மொத்த இரண்டுபோகநஞ்சைத் தீர்வையில் மூன்றில் இரண்டு பங்கு. |
| | போதுமான தண்ணீர் வராமல் | போதுமான தண்ணீர் வந்து | ஷை ஷை |
| இரண்டுபோக கம்பவுண்டு நிலங்கள். | போதுமான தண்ணீர் வராமல் | போதுமான தண்ணீர் வந்து | பூராகம்பவுண்டு தீர்வையும் |
| | போதுமான தண்ணீர் வந்து | போதுமான தண்ணீர் வராமல் | ஷை ஷை |
| | போதுமான தண்ணீர் வராமல் | ஷை ஷை | ஒரு புஞ்சைத் தீர்வை. |

# LEGAL NOTES.

## சட்டக் குறிப்புகள்

?OWERS OF VILLAGE MUNSIFS.

**கிராம முனிஸீப்களின் அதிகாரம்.**—கிராமங்களில் ·டக்கும் அற்பத்திருட்டு, சச்சரவு முதலான சாமான் ·ரிய கேசுகளை விசாரிக்க அந்தந்த கிராமத்து முனிஸீப்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இப்படிப்பட்ட கேஸ¬களில் முனிஸீபின் அதிகாரத்துக்கு உட்பட்ட கிராமத்திலுள்ள குற்றவாளிகளையோ, சாக்ஷிகளையோ, நேரில் சொல்லியாவது அல்லது எழுத்து மூலமாய் ஸம்மன்போட்டாவது விசாரணைக்கு வரவழைக்கஅதிகாரமுண்டு. குற்றவாளிகளாவது சாக்ஷிக்காரர்களாவது அயல் கிராமங்களில் இருந்தால் இன்ன செய்கிறதென்று தெளிவாய் இல்லை. இது விஷயமாய் தஞ்சாவூர் டிஸ்டிரிகட்டு மாஜிஸ்டிரேட்டு கவரன்மெண்டை எழுதிக்கேட்டார். உள்ளூரிலிருக்கப்பட்டவர்களை வாய்மொழியாகவாவது அல்லது எழுத்து மூலமாகவாவது தருவித்து விசாரிக்க அந்தந்த கிராம முனிஸீப்புக்கு அதிகாரம் உண்டென்றும், அயலூரில் குடியிருப்பவர்களைத் தருவிக்க வேண்டுமானால் போலீஸாருக்கும் மாஜிஸ்திரேட்டுக்கும் எழுதினால் அவர்கள் சட்டப்படி செய்வார்களென்றும் கவரன்மெண்டார் பதில் சொல்லியிருக்கிறார்கள்

IRRIGATION FROM KUDIVARAM VILLAGE.

**குடிவாரம் கிராமத்திலிருந்து தண்ணீரை பாய்ச்சுதல்.**—ஒரு குடிவாரகிராமத்தின் ஏரியில் கொஞ்சம் தண்ணீர் இருந்தது. இந்தத்தண்ணீர் அந்தப்பாசனத்தின் கீழுள்ள மாமூல் நஞ்சைகளுக்கே போதாததாக இருக்கையில் மேல் வாரதார் நூதனமாக அடுத்த கிராமத்து நிலங்களுக்குத் தண்ணீரைப் பாய்ச்சினார். இப்படி பாய்ச்சுவதற்கு மேல்வாரதாருக்கு பாத்தியமில்லை என்பதாய் வழக்கு. குடிவாரகிராமத்தில் நிலபாத்தியமுள்ள குடிகளுக்கு தண்ணீருக்சொந்தம். மேல் வாரதாருக்குத்தண்ணீரில் பாத்தியம் கிடையாது என்று மதருஸ் ஹைகோர்டார் 1906 ௵ 200 நெம்பர் இரண்டாவது அப்பீலில் தீர்மானித்திருக்கிறார்கள்.

PLAYING CARDS ON A PIAL

**திண்ணையில் சீட்டாடுதல்.**—ஒரு வீட்டுத் தெருத்திண்ணையில் ஒருவர் உட்கார்ந்து மேஜைவைத்து சீட்டாடினதற்காக, வடக்கே கிருஷ்ணா ஜில்லாவில் கைக்ளூர் சப் மாஜிஸ்டிரேட், ஷை சீட்டாடியவரைத் தண்டித்து 10 ரூபாய் அபராதம் விதித்தாராம். வீட்டுத்தெருத்திண்ணை, பப்ளிக்தெருவில் இருப்பதால், அந்தத் திண்ணையில் சீட்டாடுவதை பப்ளிக்கான இடத்தில் ஆடினதாய்க் கொள்ளக்கூடா·தென்று கலெக்டர் எடுத்துக்காட்டி மதருஸ் ஹைகோர்ட்டார் உத்தரவுக்கு அனுப்பினார். இந்த அபிப்பிராயத்தை அங்கீகரித்து ஹைகோர்டாரும் மேற்படி சீட்டாடியவர் குற்றவாளியாகமாட்டாரென்று தீர்மானித்தார்கள்.

STRIDHANAM.

**ஸ்திரீதனம்.**—அனேகர்கள் தங்களுடைய மூத்த பெண்ஜாதி யிறந்துபோன பிறகு அவளுடைய ஆபரண முதலியவைகளைப் பெண்கள் முதலான வார்சுகளுக்குக்கொடாமல் தங்களுடைய இரண்டாவது பெண்சாதிக்குக் கொடுக்கிறார்கள். இது சட்டப்படி அக்கிரமமானது. அந்த நிலைமையில் அந்த ஸ்திரீதனத்திற்கு வார்சாயுள்ள பெண்கள் முதலியவர்கள் பிரியாது செய்து அந்த நகைகளையாவது அவைகளின் கிரயத்தையாவது பெற்றுக் கொள்ளலாம். அந்த நகைகள் மாற்றப்படாமல் இரண்டாவது பார்யையின் வசத்திலிருக்கும்பொழுது அவளைக்கூடப் பிரதிவாதியாகச் சேர்த்து பிரியாது செய்யவேண்டும். இந்தப் பிரியாதுக்குக் காலாவதி, முதல் பெண்சாதி இறந்துபோனதற்குப் பிறகு 3 வருஷம் வரையிலுண்டு. அந்த ஸ்திரீதனத்திற்கு வார்சுகள் மைனர்களாயிருந்தால் காலாவதி மைனாரிடி நீங்கினமுதல் 3 வருஷம் வரையிலுண்டு.

CHEWING BETEL-NUTS IN COURT

**கோர்ட்டில் தாம்பூலம் போட்டுக்கொள்ளுதல்.**—கோர்டில் சாக்ஷியம் சொல்லும்போது சாக்ஷி தாம்பூலம் போட்டுக்கொண்டால் பினல் கோடு 228-வது செக்ஷன்படி குற்றமாகும்.

---



THE PRESIDENCY MANURE WORKS, LIMITED, RANIPET.

Managing Agents—PARRY & Co., MADRAS.

ராஜதானி ரஸாயந உரக்கிடங்கு, ராணிப்பேட்டை.

எங்கள் ராணிப்பேட்டை உரக்கிடங்கில் இந்நாட்டு எல்லாப் பயிர்களுக்கும் ரஸாயந சாஸ்திர முறைப்படி உரங்கள் தயாரித்து விற்பனையாகின்றன. இவ்வுரங்களில் சேர்க்கப்படுகிற ஒவ்வொரு சாமானையும் எங்கள் **ரஸாயந சோதனை சாலை** (Chemical laboratory) யில் பரிசோதித்து அந்தந்தப் பயிருக்குத்தக்க அளவு **நைட்ரஜன்** (Nitrogen) **பாஸ்பாரிக் ஆஸிட்** (Phosphoric acid) **பொடாஷ்** (Potash) இவைகளைக் கணக்கிட்டுச் சேர்க்கிறோம். ரஸாயந உரங்களின் சத்துக்கள் பெரும்பான்மையும் தண்ணீரில் கரையக்கூடியனவாகையால், போட்டவுடன் பயிருணவாகி குணத்தைக்காட்டும். இந்த உரங்களை பரீக்ஷிக்கும்பொருட்டு **பரீக்ஷைப் பண்ணை** (Experimental Farm) க்காகவும், இந்திய விவசாயிகளுக்கு இந்த உரங்களின் குணத்தை நிரூபிக்கும் பொருட்டு **நிரூபணைப் பண்ணை** (Demonstration Farm) க்காகவும் சுமார் 25 ஏகரா நிலம் கிடங்குக்குள்ளாகவே சாகுபடி செய்யப்படுகிறது. இந்த கிடங்குத் தோட்டத்தில் இந்த நாட்டுப்பயிர்களே பெரும்பான்மையும் ரஸாயந உரங்களைப்போட்டு சாகுபடிசெய்யப்படுகின்றன. இவ்விதம் ரஸாயந உரம்போட்ட பயிர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொருட்டு, தொழு எரு முதலிய நாட்டு உரங்கள் போட்டும் பயிர் செய்திருக்கிறோம். இதைப்பார்த்தவர்களுக்கு ரஸாயந உரங்களே மேலானவைகளென்று எளிதில் தெரியும். நிலத்தின்மாதிரிக்கு மண் அனுப்பினால் அம்மண்ணுகளை பரிசோதித்து தக்க உரம் கொடுக்கப்படும். பின்வரும் பயிர்களுக்கு எங்கள் கிடங்கில் **பூரா உரங்கள்** (Complete fertilisers) தயாராயிருக்கின்றன. வேறு எந்த பயிருக்கானாலும், உடனே உரம் தயார்செய்து கொடுக்கப்படும். விலை முதலிய விபரங்களுக்கு மதராஸ் பாரி அண்டு கம்பெனியாருக்கு எழுதி தெரிந்துகொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| நெல் | குசும்பா | தென்னை |
| கேழ்வாகு | புகையிலை | தேயிலை |
| சோளம் | பருத்தி | காப்பிச்செடி |
| மக்காச்சோளம் | சர்க்கரைவள்ளிக்கிழங்கு | வாழை |
| கம்பு, தினை, சாமை | உருளைக்கிழங்கு | சவுக்கு |
| கரும்பு | மஞ்சள் | மா |
| மணிலாக்கொட்டை | இஞ்சி | பழவர்க்கச் செடிகள் |
| கொள்ளுமுதலிய நவ தானியங்கள் | வெங்காயம் | பூந்தோட்டம் |
| | மிளகாய் | காய்கரி தோட்டம் |
| அவுரி | கத்திரி | கிழங்குப்பயிர் |
| எள்ளு | வெற்றிலை | புல், பசுந்தாள் பயிர் |
| முத்துக்கொட்டை | மிளகு | |

மானேஜிங் ஏஜண்டு—பாரி அண்டு கம்பெனி, மதராஸ்.

# EDUCATIONAL NOTES.
## வித்தியாவிஷயக் குறிப்புகள்.

THE AGRICULTURAL COLLEGE.

**விவசாயப் பாடசாலை.**—ஜூன் மாதத்தில் விவசாய பாடசாலை கோயம்பத்தூரில் திறக்கப்பட்டது. சைதாப்பேட்டை விவசாயப் பாடசாலையில் மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்தது போல கோயம்பத்தூர் பாடசாலையில் கொடுக்கப்படாது. ஆனால் மாணாக்கர்கள் வசிக்கும் இடங்களுக்கும் அவர்களை படிப்பிப்பதற்கும் சட்டணம் ஒன்றும் கட்டவேண்டியதில்லை. மாணாக்கர்கள் தங்கள் சாப்பாட்டுச் செலவை தாங்களேசெய்துக்கொள்ளவேண்டியது. பிரவேசத்திற்கு அனேக விண்ணப்பங்கள் வந்தன. ஆனால், பாடசாலைத் தலைவர் 22 மாணாக்கர்களை மாத்திரம் சேர்த்துக்கொள்ளக்கூடியவரானார். இவர்களில் 14 பேர் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேர்ந்தவர்கள். மீதி 8 பேர் பாடசாலைத் தலைவருடைய நற்சாக்ஷி பத்திரிகையினால் பரீக்ஷையில் தேர்ந்தவர்களாயிருக்கவேண்டுமென்னும் விதியிலிருந்து கவர்ன்மெண்டாரால் முக்கியமாய் நீக்கிவிடப்பட்டார்கள். மாணாக்கர்களை விவசாயப் பாடசாலைக்கு பொருக்கும்போது பாடசாலைத்தலைவருடைய முக்கியக் கருத்து என்னவென்றால் பயிராளிகளுடையவும் விசேஷ நிலங்களை உடையவர்களுடையவும் பிள்ளைகளுக்குப் பண்ணையில் உயர்ந்த விவசாயத் தொழில்களைக் கற்பித்து அத்தொழில்களை தங்களுடைய நிலங்களில் உபயோகப்படுத்தும்படி செய்வது. ஒவ்வொருமாணாக்கனும் தானே நிலத்தை உழுது, விதை விதைத்து, கிருஷிகளைப்போல் ஒவ்வொருநாளும் செய்யவேண்டிய வேலைகளையெல்லாம் செய்துவரவேண்டும். அப்படிச் செய்வதனால் அவன் பிறகு தன் குடியானவர்களுக்கும் கூலிக்காரர்களுக்கும் கற்பிக்கக்கூடியவனாவான். இந்தக் காரணம்பற்றியே தேகசவுக்கியமும் பலமுமுள்ள மாணாக்கர்களை பாடசாலையில் சேர்க்கிறார்கள். மாணாக்கர்கள் வசிப்பதற்காக ஒவ்வொரு வீட்டில் ஆறு மாணாக்கர்கள் வசிக்கும்படியான பத்து வீடுகளைக் கட்டும்படி சர்க்கார் உத்தரவு செய்திருக்கிறார்கள். ஆகையால், எல்லாவித ஜாதி மாணாக்கர்களுக்கும் அவரவர்கள் தனித்தனியே வசிப்பதற்குத் தகுந்த இடமுண்டு.

ELEMENTARY EDUCATION.

**கீழ்த்தரப்படிப்பு.**—மதராஸ், நீலகிரி, இந்த இரண்டு ஜில்லாக்களைத் தவிர, மற்ற ஜில்லாக்கள் ஒவ்வொன்றும் படிப்பு இலாகா அஸிஸ்டாண்டு இனிஸ்பெக்டர் அல்லது சப்இனிஸ்பெக்டர் சார்ஜிலிருக்கவேண்டும் என்றும், அவர்களே தம் தம் ஜில்லாவின் கீழ்த்தரப்படிப்புக்கு ஜவாப்தாரியாக வேண்டுமென்றும் "டைரெக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன்" என்னும் படிப்பு இலாகாத் தலைவர் எழுதினார். அதை அங்கீகரித்து கவர்ன்மெண்டார் பரீக்ஷார்த்தமாய் சாங்கிஷன் செய்திருக்கிறார்கள். மார்ச்சு௴ முதல் இந்த ஏற்பாடு நடந்துவருகிறது.

VILLAGE SCHOOLS.

**கிராமப் பள்ளிக்கூடங்கள்.**—மைசூரில் கிராமப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தும் கிராமத்தார்களுக்கு அவைகளைக் கட்டுவதற்கு வேண்டிய, மரம், மூங்கில் முதலியவைகளைப் யாதிக் கிரயத்திற்குக் கொடுக்கும்படி, மைசூர் கவர்ன்மெண்டார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

INDUSTRIAL EDUCATION IN THE U. P.

**ஐக்கிய மாகாணத்தில் கைத்தொழில் கல்வி.**—வட இந்தியாவில் ஐக்கிய மாகாணத்தில் கைத்தொழில் கற்றுக்கொடுக்கப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த வேணுமென்று அந்த மாகாணத்து லெப்டெனண்டு கவர்னர் துரையவர்கள் இந்தியா காரியதரிசியின் அனுமதியை வேண்டி சீமைக்கு எழுதியிருக்கிறார். அதற்காக ஆரம்பத்தில் 15½ லக்ஷமும் வருஷந்தோறும் 4½ லக்ஷமும் வேண்டியிருக்குமாம்.

A TECHNICAL SCHOOL IN TINNEVELLY.

**திருநெல்வேலியில் ஒரு தொழிற்பள்ளிக்கூடம்.**—திருநெல்வேலியில் பூர்ணலிங்கம் பிள்ளை என்பவரால் ஒரு தொழிற்பள்ளிக்கூடம் வைக்கப்பட்டிருக்கிறது. இதில் விவசாயம், வியாபாரிகள் கடிதங்கள் எழுதும் விதம், கணக்குகள் வைக்கும் விதம், டயிப்புரைடிங், இவைகள் கற்றுக் கொடுக்கப்படும். அநேகம் பிள்ளைகள் இதில் சேர்ந்து படிக்கிறார்களாம். இதற்குச்செலவுக்கு வேண்டிய உதவியைச் செய்ய ஒரு ஐவேஜியுள்ள மிராசுதாரர் ஒப்புக் கொண்டிருக்கிறாராம். பள்ளிக்கூடத்திற்கு வேண்டிய கட்டிடம் சீக்கிரத்தில் ஏற்படும் என்று சொல்லப்படுகிறது.




V. KALYANARAM IYER & Co., *Booksellers, Esplanade, MADRAS.*

—(o)—

நன்றாய்ப் பார்வையிட்டு நல்லகாகிதத்தில் தெளிவாய் அச்சிட்ட சிறந்த பதிப்பு.

**மூவர் தேவாரம்-பண்முறை—1044 பக்கம், ரூபாய் 3—0—0.**

இப்பதிப்பில் (1) சம்பந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவர்களின் சரித்திரக் குறிப்பும், (2) தேவார வரலாறும், (3) தேவாரப்பண் அட்டவணையும், (4) தேவாரப் பாடல்பெற்ற ஸ்தல அகராதியும், (5) தேவார ஸ்தலங்களுள்ள நாடுகளின் விபரமும், (6) அட்டவீரட்டானங்களைக்குறிப்பிக்கும் செய்யுளும், (7) தேவாரப் பொதுப்பாடல்களின் பக்க அட்டவணையும், (8) தேவார வைப்பு ஸ்தல அட்டவணையும், (9) காரைக்காலம்மையார் அருளிச் செய்த மூத்த திருப்பதிகமும் நூதனமாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன.

**நாலாயிர திவ்யப்பிரபந்தம்—640 பக்கம் ரூபாய் 3—0—0.**

இப்பதிப்பு (1) ஆழ்வார்களின் காலவைபவக் குறிப்பும், (2) ஆழ்வார்கள் அருளிச்செய்த பிரபந்தங்களின் அட்டவணையும், (3) ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திவ்விய தேசங்களின் அட்டவணையும், (4) அந்த தேசங்களின் வைபவக்குறிப்புகளும் சேர்த்து பல பிரதிகளுடன் ஒத்திட்டுப்பார்த்து, நன்றாய் அச்சிடப்பெற்றுளது.

**வேதாந்த விஷயமான புஸ்தகங்கள்.**

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| வள்ளாலார் சாஸ்திரம் | 1 | 8 | ஜன்மாந்திரம் (அல்லது இராமதாசர் உபதேசம்) | 0 | 2 |
| வாசுதேவ மனனம் | 1 | 0 | நானு சீவவாதக்கட்டளை | 0 | 1 |
| வேதாந்த பேரதினி | 0 | 8 | மகாராஜா துறவு | 0 | 6 |
| சிவபோகசாரம் & சிவஞானவிளக்கம் | 0 | 2 | தாயுமானவர் பாடல் (காலிகோ பயிண்டிங்) | 0 | 12 |
| சுகர் கைவல்லியம் | 0 | 2 | பட்டணத்தார் பாடல் | 0 | 2 |
| வைராக்கிய சதகம் | 0 | 2 | | | |

**புதிய நாவல்களும் நாடகங்களும்.**

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| போஜ சரித்திரம் | 1 | 8 | மனோகரன் | 0 | 12 |
| சுந்தரி மனோகரன் | 0 | 12 | கள்வர் தலைவன் | 0 | 8 |
| காமாக்ஷி | 0 | 8 | சாரங்கதரன் | 0 | 8 |
| சந்திரசேகரன் | 0 | 8 | யயாதி | 0 | 8 |
| ஆநந்தமடம் | 0 | 8 | வசந்திகா | 0 | 8 |
| லீலாவதி சுலோசனா | 0 | 12 | கிரிஸில்டா, அல்லது பொருமையுள்ள மனைவி | 0 | 2 |
| இரண்டு நண்பர்கள் | 0 | 12 | காலவரிஷி | 0 | 8 |
| சத்ருஜித் | 0 | 12 | வேதாள உலகம் | 0 | 8 |

**வேறு புஸ்தகங்கள்.**

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| ஸ்திரி புருஷ சாமுத்ரிகாலக்ஷணம | 1 | 0 | **மனுதர்ம சாஸ்திரம்** 2647 கிரந்த சுலோகங்களும் அவைகளின் தமிழ் மொழிபெயர்ப்பும்—560 பக்கம் | 2 | 4 |
| குறள் (மூலம்) | 0 | 4 | | | |
| பஞ்சதந்திரம் | 0 | 4 | | | |

**வியவசாய போதினி.**—நிலம், எரு, விதை, பயிரிடும்வகை முதலிய சகல விவசாய விஷயங்களையும் பற்றியது. மிராசுதாரர்களுக்கும் மற்றவர்களுக்கும் இன்றி யமையாதது. தஞ்சாவூர் ஜில்லா, நீடாமங்கலம் அ. சேது ராமய்யர் இயற்றியது. 400 பக்கம், 80 படங்கள். ரூ. 1 4 0

**மானிட மர்மசாஸ்திரம்,**—அல்லது "சிசு உற்பத்தி சிந்தாமணி." இது யாவரும் படித்து அறியவேண்டிய அடியிற்கண்ட அரிய பெரிய விஷயங்களடங்கியது. 500 பக்கம், 190 சித்திர படங்களடங்கியது. ரூ. 5 0 0

**அடங்கிய விஷயங்கள்.**—மானிட ஜீவியத்தில் பலபருவங்கள்—இல்லற இன்பரகசியம்—ஜனனேந்திரியங்களின் அமைப்பும் அற்புதங்களும்—மாதாவின் மாக்ஷிமை—சிசு உற்பத்தி—கர்ப்பகால சுகாதாரவிதிகள்—கர்ப்பக்கால நோய்களும் பரிகாரங்களும்—மருத்துவ சாஸ்திரம்—சிசுபரிபாலனம்—மலட்டிற்கு நிவாரணம்—ஆண்மையினழிவும் அதன் மீட்சியும்—சமயோசித சஞ்சீவி.

**வி. கல்யாணராமய்யர் அண்டு கோ.,**
புக்ஸெல்லர்ஸ், எஸ்பௌநேட், மதராஸ்.

## SCIENTIFIC NOTES.
## சாஸ்திரீயக் குறிப்புகள்.

RADIUM.

**ரேடியம்.**—பிச்பிளண்டி என்பது ஒருவகைத் தாது வஸ்து இது பொஹிமியா தேசத்திலுள்ள ஜோசிம்ஸ்தால் என்ற ஊரில் சுரங்கங்களிலிருந்து எடுக்கப்படுகிறது. இந்த தாதுவிலிருந்து ரேடியம் என்ற ஓர்வகை உலோகம் உண்டுபண்ணப்படுகிறது.

46 குன்றிமணி எடையளவு ரேடியம் எடுக்க 22,400 ராத்தல் பிச்பிளண்டி என்கிற தாதுவேண்டுமாம். இதற்கு ரூ. 30,000 செலவாகும். இவ்விதமாக ஒரு ராத்தல் ரேடியம் செய்ய 5 லக்ஷம் ரூபாய் பிடிக்கும். ரேடியம் என்ற உலோகப்பொருள் பார்வைக்கு அழுக்கடைந்த சாதாரண உப்பைப்போலிருக்கும். ஆனல் இருட்டில் கொஞ்சம் பளிச்சென்று பிரகாசிக்கும். இதில் ஜோதி இருப்பதால் இதற்கு கிரணங்கள் உண்டு. அக்கிரணங்கள் மூன்று வகைப்படும்.

முதலாவதுவகை, ஒரு கெட்டிக் கடுதாசியில் ஊடுருவிச் சென்று பிரகாசிக்கக் கூடியது.

இரண்டாவதுவகை, முதலாவது வகையைவிட 100 மடங்கு சக்தியுள்ளது. இது சாதாரணமான லேசு ஈயத்தகடுகளில் நுழையும்.

மூன்ருவதுவகை, இது இரண்டாம் வகையை விட 100 மடங்கு காந்தியுள்ளது. அதாவது, முதல் வகையை விட 10,000 மடங்கு காந்தியுள்ளது. இது ஒரு அங்குலம் கனமுள்ள எஃகுத் தகடுகளில் லேசாய் ஊடுருவிப்பாய்ந்து பிரகாசிக்கும்.

இந்த ரேடியம் என்ற உலோகத்தின் கிரணங்களைப் பிடித்தால் அறுவறுப்பையும் ஹிம்ஸையையும் தரும் அநேகம் வியாதிகளை சௌக்கியப்படுத்தலாம். மேகப்பிளவை, ராஜப்பிளவை முதலான வியாதிகள் நிவாரணமாகின்றன. இந்த ரேடியம் 10 வருஷத்துக்கு முந்தி அதிக புத்திசாலியும் பிரசித்திபெற்ற ரஸாயன சாஸ்திரியுமான 'கூரி' என்ற அம்மாளால் கண்டுபிடிக்கப்பட்டது. ரேடியத்தின் காந்தி நமது சரீரத்தில் எந்தப் பாகத்தில் படுகிறதோ அந்த இடம் வெந்துபோகிறதென்று மேற்படி அம்மாளின் புருஷனை "கூரி" என்பவர் கண்டுபிடித்தார். படைமுதலிய தோலைப்பற்றிய சகல வியாதிகளும் வீக்கங்களும் நிவர்த்தியாவதாய் "வியன்ன" நகரத்திலுள்ள டாக்டர். ராபர்டு கின்பாக் என்பவர் சொல்லுகிருர்.

இன்ன வியாதிக்கு இவ்வளவு தூரத்தில் ரேடியத்தை வைத்துக் கிரணத்தைப் பிடிக்கவேண்டுமென்பதையும் அப்படி எவ்வளவு நாள்வரையில் செய்துவரவேண்டும் என்பதையும் நன்ருய் யூகித்து ஜாக்கிரதையாகச் செய்யவேண்டுமாம்.

ரேடியத்தின் ஒளி ஒருகாலத்திலும் மழுங்காது; அதன் சக்தியிலும் குறைவு உண்டாகிறதில்லை. நித்திய சஞ்சீவி என்று சொல்லப்படுகிறது.

OPERATION FOR CRIMINAL DEGENERACY.

**கெட்ட நடத்தையுள்ளவர்களுக்கு ஒரு வைத்தியம்.**—அமெரிக்கா தேசத்தில் டாக்டர் நார்த்ராப் என்பவர், கெட்ட நடத்தை யுள்ளவர்களை நல்ல வழியில் திருப்ப, மூளையை சத்திரம் வைத்து வைத்தியம் செய்கிருராம். அநேக குற்றவாளிகள் இவரால் நல்ல வழியில் திருப்பப்பட்டிருக்கிருர்களாம்.

WIRELESS TELEGRAPHY.

**கம்பியில்லாத தந்தி.**—தந்திக் கம்பிகளைப் போட்டு மின் சாரத்தின் மூலமாய்ச் சமாசாரங்கள் அனுப்புவது யாவருக்கும் தெரிந்த விஷயம். இப்போது சில காலமாக நூதனமாய்த் தந்திக்கம்பியில்லாமலே சமாசாரங்கள் அனுப்பக் கண்டுபிடித்திருக்கிருர்கள். சிலநாளைக்கு முன் இரண்டு கப்பல்கள் நடு ஸமுத்திரத்தில் ஒன்ருடொன்று தாக்கி உடைந்து முழுகிப்போகும் அபாயத்திலிருந்தபோது உடனே இந்தப் புதுத்தந்தி வழியே சமாசாரம் அனுப்பப்பட்டதாம். அந்தச் சமாசாரம் எந்தத் திசையைநோக்கி எப்படி அனுப்பப்பட்டதோ நமக்கு எண்ண முடியவில்லை. 100 மைல், அதற்குமேல் நெடுந்தூரத்திலுமுள்ள அநேகக் கப்பல்களுக்கு அந்தச் சமாசாரம் உடனே எட்டி அவைகள் மறுபடியும் அபாயத்துக்குட்பட்ட கப்பல்களிருக்கும் இடத்தை அந்தத் தந்தி மூலமாயே தெரிந்துகொண்டு அங்கு சென்று முழுகிப்போகக்கூடிய கப்பலில் உள்ளபேர்களைக் காப்பாற்றினவாம்.

A CURIOUS PLANT.

**ஒரு விநோதச் செடி.**—பிராணி குணதர்ம சாஸ்திர ஆராய்ச்சி செய்யும்பொருட்டு கொலம்பியாவுக்குப் போயிருந்து திரும்பிவந்த காப்டன் முஸ்கிரேவ் என்கிற ஒரு பண்டிதன் அப்பிராந்தியங்களில் மாமிசபக்ஷணஞ் செய்யும்படியான அபூர்வச் செடியொன்றைக் கண்டுபிடித்ததாகவும், அதற்கு மூளையும், நரம்புகளும், ஜீரணசக்தியுண்டாக்கும் கருவிகளும் மனிதருக்கிருப்பதுபோலிருக்கிறதென்பதாகவும் சொல்லுகிருர்.



**P. S. Sastri** Artist and Photographer,

CARNATIC STUDIO, Mount Road, Madras.

SPECIALITIES { SCHOOL GROUPS. FAMILY GROUPS. BROMIDE ENLARGEMENTS.

**பொட்டகிராப் படங்கள்.**

பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளையும் குடும்பங்களையும் பொட்டகிராப் படம் பிடிப்பதிலும் சிரியபடங்களை பெரிதாக்கிக்கொடுப்பதிலும் நிபுணர்.

பி. எஸ். சாஸ்திரி,

பொட்டகிராப் பிடிப்புவர், கர்நாடிக் ஸ்டுடியோ,

14. மவுண்ட் ரோட், மதராஸ்.



S. MUNNAJEE RAO.

Watch & Clock Dealer & Repairer,

ESPLANADE, MADRAS.

நாங்கள் மற்ற ஷாப்புகளைக் காட்டிலும் விலை சரசமாயும், சொத்துக்களின் பெறுமானப்படியும் கொடுக்கிறோமென்கிறதற்கு உத்தரவாதம்.

**விலையில் சரசமான கைக்கெடியாரங்கள்.**

நெ. 175. ஒரு பக்கம் மூடியில்லாதது. ... ... ... ... ரூ. 6—0—0
ஷை எ. ஷை வெள்ளியில் ... ... ... ரூ. 10—0—0
" 247. ஒருபக்கம் திறந்தது. சாவியில்லாதது, வெள்ளியிற் செய்யப்பட்டது. ரூ. 6—0—0
" " பி. ஒரு பக்கம் திறந்தது. ஆனல் நல்லமாதிரி. 6 கெம்புகளை [யுடையது. ரூ. 8—0—0
" 248. ஒருபக்கம் திறந்தது. சாவியில்லாதது. ஜெர்மன் வெள்ளியினல் [செய்யப்பட்டது. ரூ. 5—0—0
" 249. ஆக்ஸிடைஸ்ட் ஜர்மன் வெள்ளியினல் செய்யப்பட்டது ... ரூ. 6—8—0

கெடியாரச் சங்கிலிகளில் பலவித மிருக்கின்றன. தங்க கிலிட்டுகொடுத்த சங்கிலி. விலை ரூ. 5 லிருந்து 10 ரூ. வரையிலிருக்கிறது.

எஸ். மன்னஜி ராவ், கெடியார ஷாப்பு, எஸ்பிளநேட், மதராஸ்

## MEDICAL NOTES.

## வைத்தியக் குறிப்புகள்

### PROPERTIES OF BUTTER MILK.

**மோரின் குணம்.**—மோருக்கு மிகுந்த நல்ல குணங்கள் இருக்கின்றதென்று ஒரு வைத்தியர் எழுதுகிறார். நமது ரக்தக்குழாய்களில் உள்ள மண் ஸம்பந்தமான அசுத்த பதார்த்தங்கள் எல்லாவற்றையும் மோர்ப்புளிப்பானது எளிதில் கரைத்துவிடுகின்றதாம். ஆதலால் அந்தக் குழாய்கள்வழியாக ரக்தம் ஒட தேகத்தின் பூட்டுகளில் இம்மாதிரியான மண்ஸம்பந்தமான வஸ்துக்கள் தங்க இடமில்லாமலும், சதைப் பாங்கில் விஷ வஸ்துக்கள் தங்க இடமில்லாமலும் போகின்றது. மேலும், இம்மண் ஸம்பந்தமான வஸ்துக்கள் தங்குவதால் ரக்தக் குழாய்கள் தடிப்பு ஏரிப்போய் பலஹீனமாகி மனிதனுக்குக் கிழத்தனத்தை உண்டாக்கின்றதாம். ஆகையால் மோரைத் தாராளமாகச் சாப்பிட்டு வந்தால் சாதாரணமாக வரும் காலத்துக்குப் பத்து அல்லது இருபது வருஷம் பிந்தித்தான் கிழத்தனம்வரும். தேகத்தில் மிகுதியாகும் அசுத்த பதார்த்தங்கள் ஸரியாக வியர்வை, மூத்திரம், பித்தம் முதலியவைகள் ரூபமாக வெளியில் போகாமல் இருப்பதால் கீல்பிடிப்பு என்ற நோய் உண்டாகின்றது. இதற்கும் மோரே தக்க மருந்து. இது, மிகுதியாகும் உபயோகமற்ற பதார்த்தங்களை எளிதில் தேகத்தை விட்டு வெளியாகும்படி செய்கின்றது. மோர் சோற்றுப்பையை நல்ல நிலையில் வைத்துக்கொள்வதுடன் நல்ல சிவந்த ரக்தம் உண்டாவதற்கு வேண்டிய வஸ்துக்களையும் அதற்குக் கொடுக்கிறது. அப்போதைக்கு அப்போது புதிதாகக் கடைந்த மோரை பூட்டுக்களில் வலிவீக்கம் முதலியன உடையவர்கள் தாராளமாகச் சாப்பிட வேண்டும்.

### THE CURE-ALL THERMAL BATH.

**உஷ்ண ஆவிஸ்னானம்.**—சில வியாதிகளுக்குப் புகைபிடிப்பதும் நீர் ஆவியில் ஸ்னானம் செய்வதும் வழக்கமுண்டு. இவைகளைவிட உஷ்ண ஆவியில் ஸ்னானம் செய்தல், சகல வியாதிகளையும் மருந்துகளன்னியில் போக்கிவிடுமென்று சொல்லி ஒரு புஸ்தகம் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதைப்பற்றித் தெரிந்துகொள்ள பிரியமுள்ளவர்கள் சென்னப்பட்டணம் செந்தோம் விக்டோரியா ஒர்க்ஸ், கியுரால் காதோலிகன் கம்பெனியாருக்கு எழுதிக்கொள்ளலாம்.

### MEDICINAL QUALITIES OF TAMARIND.

**புளியின் வைத்திய உபயோகங்கள்.**—பர்சைப் புளியங்காயைத் தின்றால் தேகத்தில் இருக்கும் முக்கிய அங்கமாகிய பித்த ஈரலை, பித்தநீர் உண்டாக்கும்படி செய்யும். வாதநோயாளிகள் பர்சைக்காயை இடித்து சாப்பிடுவதுண்டு. நன்றாய்ப்பழுத்த புளியம்பழத்தில் கொஞ்சம் எடுத்து கட்டியின் மேலே தடவினால் கட்டி திரண்டு பழுத்து உடையும். ரணகாயங்களுக்கு புளியம்பத்துப் போடுவதுண்டு. குழந்தைகளுக்குச் சரியாய் மலப்பிரவர்த்தியாகாத பக்ஷத்தில் புளியங்கோதையாவது, அல்லது வெற்றிலைக் காம்பின் நுனியில் கொஞ்சம் புளியை வைத்தாவது ஆஸனத்தில் சொருகிவிட்டால் வயிறு உப்பியிருப்பதுவாங்கும். புளியம் ஒட்டைச் சுட்டுச்சாம்பலாக்கி வைத்துக்கொண்டு, தண்ணீரில்கரைத்து அஜீரணத்துக்குக் குடிப்பதுண்டு. தேகத்தில் எங்கேயாவது வலிக்கும் பக்ஷத்தில் புளியிலையை இடித்துக் கட்டி வைத்தால் வலிக்கு ஹிதமாயிருக்கும். புளியை நீர்க்க வெந்நீரில் கரைத்து வேண்டிய அளவு சர்க்கரை போட்டு ஆரவைத்துக் குடித்தால் ஜுரம் அடிப்பவர்களுக்கு நல்லதென்று **மூர்** என்ற டாக்டர் சொல்லுகிறார். கொஞ்சம் பாலைக்காய்ச்சி பால் பொங்கி வரும்போது இரண்டு கரண்டிமுட்டை புளியைப்போட்டு வடிகட்டி சர்க்கரை சேர்த்து சாப்பிட்டால் தேகத்துக்கு குளிர்ச்சியுண்டாகும். இந்தப் பானம் சுகபேதியாகவும் உபயோகப்படும்.

### COFFEE AND TEA.

**காப்பியும் டீயும்.**—காப்பி குடிப்பதனால் ஹ்ருதயம் வேகமாய் அடிக்கும். சுவாசம் விடுவதும் விரைவாகும். டீ குடிப்பதில் தேகத்தில் ஜாஸ்தி வியர்வை உண்டாகும். காப்பி குடிப்பதில் அவ்வளவு வியர்வை உண்டாகாது. பலஹீனர்கள் டீயைவிட காப்பி சாப்பிடுவது நலம். டீ குடித்தால் தூக்கம் சரியாய் வராது. காப்பி குடிப்பதனால் அவ்வளவுபாதகமில்லை. காப்பி குடித்தால் கஷ்டமான வேலை செய்தாலும் சிரமம் தோன்றாது. ஆகையால் வெளியில் போய்ப்பாடுபட்டு வேலை செய்பவர்களுக்கு இது மிக உபயோகப்படும். கடுமையான கஷாயம் போட்டு காப்பிகுடித்தால் பல ஹீனர்களுக்கும் இளைத்தவர்களுக்கும் தூக்கம்கெட்டுப்போய் தேகத்தில் நடுக்கல் உண்டாகும்.




## மிகவும் அருமையான தமிழ் நாவல்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஜடாவல்லவர் : கிராம முனிசீபின் சரித்திரம் | 0 | 8 |
| விக்டோரியா மகாராணியார் சரித்திரம் 27-சித்திரப்படங்களோடு | 1 | 0 |
| சிவாஜிரௌவினுரு : அற்புத சரித்திரம் | 0 | 8 |
| புத்தாது திவ்ய சரித்திரம் | 0 | 8 |
| பார்வதி கலியாணம் | 0 | 4 |
| ஞானம்பாள் திவ்ய சரித்திரம் | 0 | 6 |
| தத்னவிமானம் ஓர் நாடகம் | 0 | 12 |
| ராருக் காசுவம் | 0 | 14 |
| பிரதாப முதலியார் சரித்திரம் | 1 | 0 |
| இரண்டு நண்பர்கள் | 0 | 12 |
| சத்ருத்ஜித் | 0 | 12 |
| மனோஹரன் | 0 | 12 |
| கள்வர் தலைவன் | 0 | 8 |
| சாரங்கதரன் | 0 | 8 |
| யயாதி | 0 | 8 |
| வேதாள உலோகம் | 0 | 8 |
| காலவரிஷி | 0 | 8 |
| விவேகாநந்த விஜயம் | 1 | 4 |
| சந்திரசேகரன் ஓர் புதிய நாவல் | 0 | 8 |
| ஆனந்த மடம் ஷை | 0 | 8 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| போஜசரித்திரம் படத்துடன் | 1 | 8 |
| சாரதாம்பாள் சரித்திரம் | 0 | 8 |
| புருஷோத்தமன் சரித்திரம் | 0 | 10 |
| பன்னிரு நீதிக் கதைகள் | 0 | 12 |
| லீலா அல்லது மங்கைபுர மாணிக்கம் | 0 | 12 |
| பரிமளா | 0 | 10 |
| கம்பராமாயணம் வசனம் 2-வாலியம் காலிகோ பயின்டு | 4 | 0 |
| ,, செய்யுள் 2-வாலியம் | 6 | 0 |
| தாயுமான ஸ்வாமிபாடல் | 1 | 0 |
| வேறு பதிப்பு | 0 | 12 |
| பட்டணத்தார் சரித்திரமும் புராணமும் | 1 | 8 |
| திருவிளையாடல் புராணம் | 1 | 8 |
| ,, திக் பேபர் | 2 | 0 |
| அகஸ்தியர் தேவாரம் | 0 | 4 |
| நாலடியார் மூலமும் உரையும் | 1 | 2 |
| விநோதரஸமஞ்சரி | 1 | 2 |
| ப்ரபுலிங்க லீலை வசனம் | 0 | 12 |
| பிரபோத சந்திரோதய வசனம் | 1 | 0 |
| பகவத்கீதை | 1 | 4 |
| வேறு பதிப்பு | 0 | 10 |
| மஹாமஹம் | 0 | 4 |

மானேஜர், லக்ஷ்மீவிலாச புத்தகசாலை, திருவல்லிக்கேணி, மதராஸ்.

## SCREENS AND WALL MATS OF OUR OWN INVENTION.

ORNAMENTS FOR HOUSES—ADVERTISEMENTS FOR MERCHANTS—OBJECT-LESSONS FOR SCHOOLS.




எங்களால் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டு, செய்யப்பட்டு வருகிற ஸ்கிரீன்கள் அல்லது தட்டிகள்.

வீடுகளை அலங்கரிக்கவும், வர்த்தகர் தங்கள் பெயர், வியாபாரம் முதலியன இவைகளின் பேரில் எழுதி பிரசுரஞ்செய்யவும், மிருகங்கள் முதலியவை பெயின்ட்செய்த ஸ்கிரீன்கள் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குக் காண்பிக்கவும் உதவும். 48″×12″ தட்டி 1க்கு விலை. ரூ 0 10 0.

1 முறை 12 தட்டி வாங்குபவர்களுக்கு தட்டி 1க்கு 0 8 0.

கதவு, சன்னல் முதலியவைகளுக்குப் பெரிய தட்டிகள் ஆர்டரின் பேரில் செய்யப்படும்.

இன்டியன் பைன் ஆர்ட்ஸ் கம்பெனி,
ஆபீஸ்—22, வெங்கடாசல முதலி வீதி, புரசை, மதிராஸ்.

ஒர்க்ஷாப்—105, அர்மீனியன் வீதி, ஜார்ஜ்டவுன், மதிராஸ்.

## PAGE FOR GIRLS.

## பெண்களுக்கான பக்கம்.

---

**The Condition of Women.**

**ஸ்திரீகளின் நிலைமை.**—சென்ற பிப்பிரவரி மீ 13உ சனிக்கிழமை தினம் மிஸஸ் பெஸண்டு அம்மாள் ஓர் உபந்நியாஸம் செய்தாள்.

அதில் இந்தியாவில் அபிவிருத்தி விஷயமாய் ஸ்திரீகள் பூர்வ்காலத்தில் செய்துவந்ததைப் பற்றி வெகுவாய் பேசினுள். முன்காலத்தில் ஸ்திரீகள் பொதுக் காரியங்களையும் ஜனங்களின் அபிவிருத்தியையும் தெரிந்துகொண்டு அநேகம் ஸாதனங்களைச் செய்துவந்தார்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நல்லவழிகளைக் கற்பித்து வந்தார்கள். ஆடவர்கள் செய்யும் ஒவ்வொரு நற்காரியத்துக்கும் ஸ்திரீகளே மூலாதாரமாக இருந்தார்கள். அந்தக்காலத்தில் இந்தியா நல்லஸ்திதியில் இருந்தது. ஜனங்களும் இப்போதிருப்பதைவிட பாக்கியவான்களாக இருந்தார்கள். ஸ்திரீகள் தங்கள் கிரஹ கிருத்தியங்களையும், தங்கள் புமான்களோடு தேச அபிவிருத்தியையும் கவனித்து வந்த காலத்தில்தான் இந்தியா மேன்மைப்பட்டிருந்தது. முற்காலத்து ஸ்திரீகள் கிரஹ கிருத்தியங்களை கவனிப்பதோடு அறிவு, வித்தை, ஞானம் இவைகளில் ஆவலுள்ளவர்களாய்க் கல்வியைக் கற்றுவந்தார்கள் என்பதற்கு காந்தாரி, ஸீதை, தமயந்தி முதலியவர்களின் குணதிசயங்களே நல்ல சாக்ஷியாகும். இப்போது ஸ்திரீகளுக்கு தேசவர்த்தமானம் தெரியாமல் இருக்கிறது. இந்தவிஷயத்தில் சீர்திருத்திக் கொள்ளவேண்டிய அவசியம். தற்காலத்தில்படிப்பும் பலவழிப்பட்டிருக்க இருக்கிறது. ஒவ்வொன்றையும் ஸ்திரீகள் கற்றுணர்ந்து உபயோகமுள்ளவர்களாய் இராவிட்டால் மரப்பொம்மைக்குச் சமமாக மதிக்கப்படுவார்கள்.

ஆகையால் ஸ்திரீகளுக்கு சாஸ்திரப் படிப்போடு இங்கிலீஷ் பாஷையும் கொஞ்சம் தெரியவேண்டும். வீட்டில் குழந்தைகளுக்கு மதவிஷயத்தைக் கற்பிப்பதோடு, சரீரலக்ஷணத்தையும், அதன் அமைப்பையும், அதைப் பாதுகாக்கும் வழியையும் கற்பிக்கவேண்டும் என்றும், குழந்தைப் பருவத்தில் கலியாணம் செய்வது தேசத்துக்கு க்ஷேமக்குறைவு என்றும், அதை சீர்திருத்த ஒவ்வொருவரும் அவர்களால் ஆனமட்டில் முயலவேண்டும் என்றும், ஸங்கீதம் வரவர சீர்கெட்டு வருவதாயும் அதை விருத்திசெய்ய வேண்டும் என்றும் சொல்லிமுடித்தாள்.

**Condensed Milk.**

**பால்புட்டி.**—நமது தேசத்துக் குழந்தைகளுக்கு இப்போது பெரும்பாலும், தகரடப்பி ரூபமாய் வரும் பால்புட்டிகளை வாங்கி உபயோகப்படுத்துகிறார்கள். இந்தப்பால் தகரத்தில் நெடுநாளைக்கு வைக்கப்பட்டிருக்கலாம். அதைவாங்கி குழந்தைகளுக்குப் புகட்டுவதால் நல்ல பலன் உண்டாவென்பதை ஆராய்ந்து செய்யவேண்டும்.

சமீபத்தில் கல்கத்தாமுனிஸிபாலிடியில் உத்தியோகம் செய்யும் டாக்டர். டி. ப்ரெடரிக் பியர்ஸ் என்பவர் பால் புட்டி விஷயமாய் இந்தியா கவான்மெண்டுக்கு ஒருகடிதம் எழுதியிருக்கிறார். நமது தேசத்தில் விசேஷமாகப் பால் புட்டிகள் இறக்குமதியாகின்றன. பாலில் உள்ள வெண்ணெயை யெடுத்திருக்கிறதா இல்லையா வென்ற விஷயத்தை பால் புட்டிகளின் பேரில் எழுதியில்லை. உண்மையில் வெண்ணெயை முன்னடி யெடுத்துக் கொண்டு பிறகு நிற்கும் பாலில் வாய்க்கு ருசியாயிருப்பதற்காகச் சர்க்கரையைச் சேர்த்து தகரடப்பிகளில்போட்டு அனுப்பிவிடுகிறார்களாம். முக்கியமாய்க் குழந்தைகளுக்குஇந்தப் பால் அதிகக் கெடுதலைச் செய்யக்கூடியதாயிருக்கிறது.

கூபா என்னும் தீவில் இப்படிப்பட்ட பால் டப்பிகளின் பேரில் அவைகள் குழந்தைகளுக்கு உபயோகமாவதல்லவென்று எழுதி விற்கும்படி கட்டாயப் படுத்துகிறார்கள். தென்னுபிரிக்காவில் இப்படிப்பட்ட பால் புட்டிகளுக்கு அதிக சுங்க வரி ஏற்படுத்தி, அவைகளை யிறக்குமதியாவதைக் கண்டித்திருக்கிறார்கள். ஆகவே தகரடப்பிகளில் இருக்கும் பால் சுத்தமானதா அல்லது வெண்ணெய் நீக்கிய பாலா வென்று தெரிந்து கொள்ளமார்க்கமில்லாதவரையில் ஜனங்களுக்குக் கஷ்டமாகவே யிருக்கும். சில டப்பிகளைப் பார்த்தவுடனேயே பால் கெட்டுப்போனதென்று தெரியும். சிலடப்பிகள் மேற்பார்வைக்கு நன்றாயிருந்தாலும் உள்ளே இருக்கும் பால் கெட்டுப்போயிருக்கும். என்றையதினம் டப்பியில் பால்போடப்பட்டதென்பதை டப்பியின்பேரில் எழுதிவிட்டால், பால் புட்டி எவ்வளவு பழையதென்று தெரிந்து கொள்ளச் சாதகமாகும். குழந்தைகளுக்குத் தாயின் பாலை விட வேறு நல்ல ஆகாரம் கிடையாது. தாய்ப்பாலில்லாவிட்டால் பசுவின் பாலைப் போட்டலாம். டப்பிப்பாலெல்லாம் அதமபக்ஷந்தான்.



MAITRA & Co., Tarak Chatterjea's Lane,
*Hatkhola P. O., Calcutta.*

**க்ஷவரக்கத்தி தேவையில்லை.**

"மயித்திராவின் ஹேர்டெபிலேடரி" என்னும் கேசநாசனியை வாங்கி உபயோகியுங்கள். உடனே மயிர் உதிர்ந்துவிடும். வலி, எரிச்சல், அரிப்பு இவைகள் ஒன்றும் இராது. மற்ற கேசநாசனி மருந்துகளைப்போல் இதில் திரேகத்தைக் கெடுதி செய்யும்படியான மூலிகைகள் சேரவில்லை. ஆகையால் இதை அச்சமின்றி உபயோகிக்கலாம். இவ்விஷயத்துக்கு இதுவே சிறந்த மருந்து.

புட்டி ஒன்றுக்கு விலை அணு 6.
தபாற்கூலியுள்பட விலை அணு 10.
3. புட்டிகளின் விலை ரூ. 1.
தபாற்கூலியுள்பட விலை ரூ 1-4-0.

வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

**புலாராணி.**

இந்த பரிமள கூந்தல் தைலம் எல்லாவற்றிலும் சிறந்தது. இதில் இந்தியா தேசத்திலுள்ளவாஸனை மலர்கள் சேர்ந்திருக்கின்றன. மணம் மாறாது. சந்துஷ்டியை உண்டாக்கும். மூளையை குளிரச்செய்யும். மயிர்களை உதிராமல் வளரச்செய்யும். ஒரு புட்டி உபயோகித்துப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும்.

ஒரு புட்டியின் விலை அணு 12.
மூன்று புட்டிகளின் விலை ரூ 2.
ஒரு டஸன் ரூ 7.
தபாற்கூலி பிரத்தியேகம்.

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

மயித்திரா அண்டு கம்பெனி,
தாக் சட்டர்ஜி தெரு,
ஹாட்கோலா தபாலாபீஸ்,
கல்கத்தா.

DOYAL & SONS,
137, H. Amherst Street, *Calcutta.*



**"ஜோதி புளூட் ஹார்மோனியம்."**

இது மெஸ்ஸர்ஸ் டயால் அண்டு ஸன்ஸ் அவர்களால் விசேஷ மாதிரியாக செய்து விற்கப்பட்டுவருகிறது. அழகும் இனிமையான ஸ்வரமும், வேலைப்பாடும் அமைந்தது. நூதன ஆயுதங்களைக்கொண்டு உறுதியாக செய்யப்பட்டிருக்கிறது.

அளவு—பார்வைக்கு லக்ஷணமாயும் அடக்கமாயுமிருக்கும்.

3 Octaves 3 stops C to C (one set reed), Rs. 20, 22, 23.
,, 4 stops ,, (2 sets of reeds), Rs. 30, 35.
,, 5 stops ,, ,, Rs. 40, 45.

(1) இரண்டு வருஷத்துக்கு ஜாமீன்.
(2) விவரமான படங்கள் அடங்கிய காட்லாக்கு தேவையானவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.
(3) ஏஜண்டுகள் தேவை. மனுவின்பேரில் நிபந்தனைகள் தெரிவிக்கப்படும்.
(4) இந்த வாத்தியத்தை வாங்க விரும்புகிறவர்கள் ஒவ்வொரு ஆர்டருடன் 5-ரூபாய் முன் பணம் அனுப்பவேண்டும்.

டயால் அண்டு ஸன்ஸ்,
137, எச். அம்ஹெர்ஸ்டுதெரு,
கல்கத்தா.

## PAGE FOR BOYS.

## சிறுவர்களுக்கான பக்கம்.

LAC.

**அரக்கு**—இது ஐக்கிய மாகாணங்களில் மிர்ஸாப்பூரிலும் பஞ்சாபிலுள்ள ஹோஷியர்பூரிலும் விசேஷமாய் உண்டுபண்ணப்படுகிறது. இப்பட்டணங்களை அடுத்த காடுகளிலும் மலைக்குன்றுகளிலும் இம்மெழுகு ஜாஸ்தியாய்க் கிடைக்கிறதாம்.

THE USES OF LAC.

**அரக்கின் உபயோகங்கள்.**—ஏழைகளுக்கு வளையல், கங்கணம் செய்யவும், விளையாட்டு சாமான், கோலி, பேனா, சீல் அரக்கு, மைக்கூடு, பழங்களைப் போலவும் புஷ்பங்களைப் போலவும் அனேக விதமான வேடிக்கை சாமான்கள் செய்யவும், உபயோகப்படுகிறது. தவிர, பீங்கான் முதலான சாமான்களுக்கு மெருகு பூசவும் உபயோகமாகிறது. இன்னும் கல்லின்மேல் எழுதப் பட்டிருக்கின்றதை அச்செடுப்பதில் முக்கியமான கருவியாகிறது.

RAIN FALL.

**மழை.**—உலகத்திலுள்ள கண்டங்களில் எல்லாவற்றிலும் தென் அமெரிகாவில் அதிகமாகவும் ஆஸ்ட்ரேலியாவில் வெகுகுறைச்சலாகவும் மழைபெய்கின்றது. உலகத்தில் பலகண்டங்களின் மழையளவு. தென் அமெரிகாவில் 56 அங்குலம், ஆபிரிகாவில் 32 அங்குலம், வட அமெரிகாவில் 26 அங்குலம், ஆசியாவில் 24 அங்குலம், ஐரோப்பாவில் 23 அங்குலம், ஆஸ்ட்ரேலியாவில் 18 அங்குலம்.

A MARVELLOUS BOY.

**ஒருஆச்சரியமான பையன்.**—அமெரிக்காவில் ஐக்கிய மாகாணங்களில் மஸாசுஸெட்ஸ் என்ற ஊரில் தொழில் வித்தியாசாலை ஒன்று இருக்கிறது. இதில் பிரவேசப் பரீக்ஷையில் விசேஷமாய் 21 வயதுக்குக் குறைந்தவர்கள் தேறினது கிடையாது. ஆனால் வில்லியம் ஜே. ஸைடிஸ் என்ற 10 வயதுள்ள ஒரு பையன் இந்தப் பிரவேச பரீக்ஷையில் தேறியிருக்கிறானும். இவன் இரண்டு வயதாக இருக்கும்போதே எழுதவும் பேசவும் கற்றுக் கொண்டு விட்டானும். நாலுவயதில் நாலுபாஷையில் சீருடியாய்ப் பேசவும் படிக்கவும் கற்றுக் கொண்டுவிட்டானும்.

A PLUCKY BARBER.

**ஒரு கெட்டிக்கார அம்பட்டன்**-இங்கிலாந்து தேசத்தில் பிரஸ்டன் என்னும் பட்டணத்தில் ரிச்சர்டு ஆர்க்ரைட் என்று ஒருவர் இருந்தார். இவர் ஒரு ஏழைக் குடியிற் பிறந்தவர். இவர் தகப்பனார் பரம ஏழையாக இருந்ததால் அவர் தன்குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பமுடியவில்லை. ஆதலால் ரிச்சர்டு ஆர்க்ரைட் பள்ளிக் கூடத்திற்குப் போகாமலே தானாகக் கொஞ்சம் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. தகுந்த வயது வந்ததும் க்ஷௌரத் தொழிலைச் செய்ய ஆரம்பித்தார். அவருடைய கடை கீழ் அறையில் இருந்ததால் அவரிடம் க்ஷௌரம் செய்துகொள்ள அதிக ஜனங்கள் வரவில்லை. அதனால் வர வர அவருக்கு தரித்திரம் மேலிட்டது. இந்த ஸ்திதியில் அவருக்கு ஒரு யோஜனை தோன்றிற்று. மற்றவர்களைவிடத் தான் குறைந்த கூலிக்கு க்ஷௌரம் செய்தால் எல்லாரும் கீழ்அறையிலுள்ள தன்னிடம் வருவார்களென்று எண்ணி க்ஷௌரமொன்றுக்கு ஒரு பென்னி (அணா) என்று ஒரு நோட்டீஸ் எழுதிக் கதவில் ஒட்டினார். இதைப் பார்த்து ஜனங்கள் இவரிடம்வர ஆரம்பித்தார்கள். இதனால் மற்ற க்ஷௌரகர்களுக்கு வரும்படி குறைந்தது. உடனே அவர்களும் தாங்கள் வாங்கிவந்த சார்ஜைக் குறைத்தார்கள். இப்போது ரிச்சர்டு ஆர்க்ரைட் என்ன செய்கிறது. இன்னம் சார்ஜைக் குறைத்து க்ஷௌரமொன்றுக்கு அரைப்பென்னி (அரைஅணா) என்று நோடீஸ் ஒட்டினார். இப்படியிருந்து வருகையில் இவர் வீட்டுக்கடுத்து ஜனங்கள் பருத்திநூற்பதை கவனித்துக் கொண்டேவந்து ஒரு கடியாரம் செய்கிறவன் உதவியால் நூல்நூற்க ஒரு யந்திரத்தைச் செய்தார். இந்த யந்திரத்தால் அதிகவேலை நடக்குமென்றும், தங்கள் வரும்படி கெட்டுப்போகுமென்றும் கூலிஜனங்கள் இவருடைய யந்திரத்தை பலதடவை உடைத்தெறிந்து விட்டார்கள். இதில் எல்லாம் அவர்மனம் தளராமல் டர்பிஷயர் மாகாணத்தில் இரண்டு யந்திரங்களை ஸ்தாபித்து வேலை செய்து வந்தார். இவர் நூற்கும் நூல்களும் நெய்யும் துணிகளும் வெகு சிலாக்கியமாகவும் விலைசரஸமாகவும் இருப்பதாகப் பேரெடுத்து வியாபாரம் அதிகமாய் நடந்தது. அதனால் ரிச்சர்ட் ஆர்க்ரைட் பணக்காரராகி "நைட்" என்னும் பெரும்பட்டத்தையும் தன் அரசன் கொடுக்கப் பெற்றார்.



**அதிக சகாயம்!** **புதிய சரக்குகள்!!**

**காசிப் பட்டு பீதாம்பரங்கள்.**

**நேரான நெசவுகாரர்களிடமிருந்து :**

| | |
|---|---|
| பட்டு சேலைகள், | ஜரிகையினால் பூவேலைகள் செய்ததும், |
| ரவிக்கைகள், | சாதாவானதும், |
| துப்பட்டாக்கள், | வெண்பட்டு வேஷ்டிகளும், |
| சால்வைகள், | அங்கவஸ்திரங்களும், |
| பஸ்கானு அல்லது பிள்ளை வேஷ்டிகள், | சவுக்கங்களும் |
| பலவித நிறங்களில் ஜரிகை போட்டது, | உடுப்புத் துணிகளுக்கு வேண்டிய தினுசுகளும், |

நாங்கள் நேராக நெசவுகாரரிடமிருந்தே மிகவும் சகாய விலைக்கு அனுப்புகிறோம். விலை ஜாபிதா அரை அணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

**மானேஜர்,**

**பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.**

Manager, SILK PITAMBER Co.,

13. *Benares City.*

T. E. C. SWAMINATHA CHETTIAR,

14, Luckmoodas Street, Madras.

*Head Office* :—KUMBAKONAM.

**சுதேச ஜவுளி!** **சரசமான விலை!**

1905-௵ பனாரஸ் பொருள் காக்ஷியில் ஜவுளிகளுக்கு வெள்ளி மெடல் கிடைத்திருக்கிறது.

1. கும்பகோணம் வெள்ளை சிகப்பு ஜவுளி தினுசு.

2. துகிலி, கொரநாடு, ஆடுதுறை ஜவுளி.

3. கல்கத்தா, பனாரஸ்பட்டு பீதாம்பரங்கள் நார்மடிகள், புதுச்சேரி, கொள்ளேகாலம் உருமாலைகள்.

4. காஞ்சீபுரம், சேலம், மதுரை, கோயம்புத்தூர் ஆரணி, புல்லம்பேட்டை, நெல்லூர் முதலிய இடங்களின் ஜவுளி தினுசுகள் மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்கப்படும்.

**தா. ஈ. சி. சாமிநாத செட்டியார்,**

14, லக்குமதாஸ் தெரு, சென்னை.

ஹெட் ஆபீஸ் :—கும்பகோணம்.

THE SWADESI WAREHOUSE,

MADRAS.

கலியாண மாசங்கள் வந்துவிட்டன. அவரவர்களுக்கேற்ற சரக்குகள் கைவசமிருப்பதுடன் இல்லாதவைகளும் சொற்ப நோட்டீஸ் கொடுத்தால் வரவழைத்துக்கொடுப்போம். விலை குறைவு. இதுவே நல்ல சமயம். கவனியுங்கள்! கவனியுங்கள்!!

சரக்குகள் அப்போதைக்கப்போது வந்துகொண்டிருப்பதுடன் புதுமாதிரியாகவும், விலை குறைவாகவுமிருக்கின்றன.

விவரம் பின்வரும் விலாஸத்திற்கெழுதி தெரிந்து கொள்ளவும்.

**சுதேசி வேர்ஹவுஸ்,**

1, தம்பு செட்டி வீதி, சென்னை.

THE BENGAL CHEMICAL

AND PHARMACEUTICAL WORKS, LTD.,

*91, Upper Circular Road, Calcutta.*

எங்கள் பரிமளக் கூந்தல் எண்ணெயில் அநேக மலர்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. மகா சுத்தமானது. வேறுவிதமான வர்ணங்களைச் சேர்த்து பகட்டப்படாதது.

இதில் எத்தனையோ ஆயிரக்கணக்கான ரோஜா, மல்லிகை, தாமரை முதலிய புஷ்பவாஸனைகள் வீசும்.

வேண்டியவர்கள் அடியில் கண்ட ஏஜண்டுகளிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பி. ரெங்கய்ய செட்டி அண்டு ஸன்ஸ், எஸ்பிளநேட், மதராஸ்.

ஸ்வதேசி வேர் அவுஸ், தம்புசெட்டித் தெரு, மதராஸ்.

நாஷனல் டிரேடிங் கம்பெனி, எஸ்பிளநேட், மதராஸ்.

கே. வி. பிராமய்யா அண்டு ஸன்ஸ், மதராஸ் அல்லது ராஜமஹேந்திரம்.

என். ஆர். பகடி அண்டு கம்பெனி, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

**பங்காள ரஸாயன ஔஷதசாலை,**

91. அப்பர் ஸர்கிலர் ரோட்,

கல்கத்தா.

## INDIAN NEWS.

## இந்தியநாட்டு சமாசாரங்கள்.

RECENT EXHIBITIONS AND SHOWS.

**சமீபத்தில் நடந்த பொருட்காட்சிகள்.**—திருநெல்வேலிஜில்லா கோயில் பட்டியிலும் வடஆர்காடு ஜில்லா ஆரணியிலும் பொருட்காட்சிகள்நடந்தன. கோயில்பட்டிக் காக்ஷி எட்டியாபுரம் ஜமீன்தார் அவர்களாலும் ஆரணிக்காக்ஷி ஆரணிஜாகீர்தார் அவர்களாலும்நடத்தப்பட்டது. மேலே சொல்லிய ஜமீன்தாரிகளிலுள்ள குடிகள் பார்த்து சீர்திருத்தமடையும் பொருட்டு பலவித விவஸாயப் பெருள்கள் வந்திருந்தன. இவைகளோடு விவஸாயம், கைத்தொழில் இவைகளைப் பற்றியும் அநேக உபந்நியாஸங்களும் செய்யப்பட்டன. பெரிய ஜமீன்தார்கள் பொருட்காட்சி முதலிய விஷயங்களில் சிரத்தை எடுத்துக்கொண்டு தங்கள் தங்கள் எஸ்டேட்டுக்களையும் குடிகளையும் சீர் திருத்துவது எல்லாருக்கும் நன்மையைப் விளைவிக்கக்கூடியது.

PROGRESS OF BARODA.

**பரோடாவின் வளர்ச்சி.**—1907-08 வருஷத்தில் பரோடா ராஜ்யத்தில் 36 லக்ஷம் முதல் வைக்கப்பட்டுஒன்பது புதுக்கம்பெனிகள்ஏற்படுத்தப்பட்டன. இவைகளில் பாங்கி ஒன்று, பஞ்சாலை ஒன்று, சாயவேலைசெய்யும் பாக்டெரிகள் இரண்டு, தோல்வேலை செய்யும் கம்பெனி ஒன்று. ராஜ்யத்திலுள்ள என்னென்ன விளைபொருள்கள் என்னென்ன கைத்தொழில்களுக்கு உபயோகப்படுமென்பதை ஆராய்ந்து வருகிறார்கள். இப்படிச் செய்ததில் பருத்திக் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுக்கலாமென்று அறிந்து அதற்காக இரண்டு கம்பெனிகள் ஏற்பட்டு விட்டன. இன்னும் ஒன்றுக்கு ஏற்பாடாகிக்கொண்டிருக்கிறது.

PUNJAB AGRICULTURAL MACHINERY DEPOT.

**பஞ்சாப் விவசாயக்கருவிகள் விற்பனைசாலை.**—விவசாயத் தொழிலுக்கு வேண்டிய கருவிகளைத் தருவித்து வைத்துக்கொண்டு குடிகளுக்கு விற்றுவர பஞ்சாப் விவசாய டைரெக்டர் அந்தமாகாணகவரன்மெண்டாருடைய அனுமதிபெற்று இருக்கிறார். தருவித்துக் கைவசம் டெப்போவில் வைத்திருக்கும் யந்திரங்களை வாங்குகிறவர்களுக்கு கொள்முதலுக்கு மேல் நூற்றுக்கு $6\frac{1}{4}$ வீதம் லாபம் வைத்து விற்கப்படும். பிரத்தியேகமாய் ஆர்டரின்பேரில் தருவித்துக் கொடுக்கப்படும் கேசுகளில் நூற்றுக்கு இரண்டு வீதம் லாபம் வைத்து விற்கப்படும். மத்திய மாகாணங்களில் இந்தமாதிரியாக ஒரு டெப்போ கொஞ்சகாலமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதாம்.

THE BUDGET OF THE GOVERNMENT OF INDIA.

**இந்தியா கவரன்மெண்டாரின் வரவு செலவு திட்டம்.**—சென்ற வருஷம், இவ்வருஷம், இவற்றின் கணக்கும், வரும் வருஷத்து மதிப்புத் திட்டமும் பின்வருமாறு:—

1907—08
பவுன்.
தீர்வை வரவு—71, 003, 275.
செலவு—70, 697, 229.
மீதி— 306, 046

1908—09
மறுதிட்டம்.
பவுன்
தீர்வை வரவு—69, 628, 600,
செலவு—73, 349, 100.
குறைவு— 3, 720, 500

1909—10
மதிப்புத்திட்டம்
பவுன்
தீர்வை வரவு—73, 750, 900
செலவு—73, 520, 000
மீதி— 230, 900

இந்தக்கணக்குகளைப்பற்றி அடுத்த ஸஞ்சிகையில் விவரமாய் எழுதுவோம்.

NEW TELEGRAPH RATES.

**புதுத் தந்திச் சார்ஜுகள்.**—இந்த வருஷத் துவக்கம் முதல் இருவகைத் தந்திகள் மட்டும் உள் நாட்டில் உபயோகத்திலிருக்கின்றன. (1) சாதாரணத் தந்தி-12 வார்த்தைகளுக்கு 6 அணா. மேல்விலாசமும் இவைகளுக்குள் அடங்கும். மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கு அணா $\frac{1}{2}$. (2) அவசரத் தந்தி-12 வார்த்தைகளுக்கு ரூ. 1. மேல்விலாசமும் இவைகளுக்குள் அடங்கும். மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் அணா 2. தவிர, இதுவரையில் ஒரு தந்தி எந்த ஊருக்கு அனுப்பப்படுகிறதோ அந்த ஊரிலிருந்து வேறொரு ஊருக்குத்திருப்பியனுப்பப்படுகிற வழக்கமில்லை. இப்போது ஒரு ஊருக்கு அனுப்பப்பட்ட தந்தி அந்த ஊரிலிருந்து சொற்ப கட்டணம் கட்டப்படுமானால் வேறொரு ஊருக்கு அனுப்பப்படும் என்று புதிதாய் விதி யேற்படுத்தப்பட்டிருக்கிறது.




THE NEW WORK BY PROFESSOR EBBARD.

Price 6s. Postage 4d.

"HYGIENE AND SELF-CURE"

**A PRACTICAL GUIDE** for the Self-Treatment of Diseases and Chronic Complaints based upon modern methods of **NATURAL TREATMENT WITHOUT PHYSIC.**

*Publishers' Announcement*:

The purpose of "Hygiene and Self-Cure" is to supply the need of an authoritative work of reference on the correct methods to be used to combat disease and the many chronic complaints, so prevalent at the present time, without having recourse to drugs or physic.

The Author of "Will Power," "Life-Giving Energy," "Bedrock of Health," may be truthfully described as a Pioneer of Modern Natural Methods of Curative Treatment. We possess thousands of testimonials from grateful men and women who, having failed to obtain relief of their sufferings from other sources, received enduring benefit from Professor Ebbard's teaching and treatment.

Under the heading of the Disorder or Ailment will be found the exact means the inquirer should employ for the Self-Cure of any specific ill.

*Prospectus Post Free*:

**MODERN MEDICAL PUBLISHING CO.**
Department 1,
12 & 13 Henrietta Street, London, W.C.

CLASSIFIED COMMERCIAL DIRECTORY.

**வியாபார பகுதி விலாசங்கள்.**

COLOUR PENCIL MANUFACTURER.
கலர் பென்சில் செய்கிறவர்கள்.

K. P. RAMASAMY IYER,
15, Solayappa Mudali Street,
*KUMBAKONAM.*

SILK MERCHANTS.
பட்டு வியாபாரிகள்.

**பட்டு பீதாம்பர கம்பெனி,**
காசி (பனாரிஸ்.)

ஸ்வதேசாபிமானமே ஸ்வர்கத்தினின்றும் மானிடருக்கு மேன்மையானது.

தேசகைத்தொழில்களை விருத்திசெய்வதே தேசாபிமானத்திற்கு அடையாளம்.

**வெகு நாணயம்!** **வெகு நயம்!!**

**காலத்திற்கு ஒத்தது. இன்றியமையாதது.**

1. மேலான சுத்தவெள்ளை, பல அளவுள்ள ட்வில் ஷர்டுகள் டஜன் 1க்கு ரூ. 9-12-0, 10-8-0, 11-4-0, 12-0-0.
2. உயர்ந்த கெட்டிச்சாயம், கருப்பு, சிகப்பு, நீலம் கோடுகளுள்ள ட்வில் ஷர்டுகள் டஜன் 1க்கு ரூ. 10-8-0, 12-0-0.
3. நிகரற்ற சாயம் கெட்டி, நெருங்கிய கருப்பு, சிகப்புக் கோடுள்ள ஷர்டுகள் டஜன் 1க்கு ரூ. 9-0-0.
4. வெகு நாணயமான, கெடிதமான லாங்கிளாத்து ஷர்டுகள் டஜன் 1க்கு ரூ. 14-0-0.
5. சிறந்த லாங்கிளாத்தில் கருப்புக் கோடுள்ள ஷர்டுகள் டஜன் 1க்கு ரூ. 12-0-0.
6. நேர்த்தியான வெய்யில்கால பனியன்கள் கெட்டி, சன்னம் டஜன் 1க்கு ரூ. 4-0-0, 4-8-0, 6-8-0, 7-8-0.

**ஸ்வதேசவஸ்து வர்த்தகசாலை,**
199. தங்கசாலைத்தெருவு,
சென்னப்பட்டணம்.

THE MORN HOUSE, MADRAS.

**மன்மதகாந்தன் கதை.**

**முதற்பாகம்.**—கதைக்குள் கதையாய் 1, 10, 100 ஆகத்தொடர்ந்து அமைந்து, நாவிற்கு நயமும், காதிற்கு இன்பமும் கொடுத்து மதியை விளக்கும். 80 புத்தகங்கள்தான் இருக்கின்றன. விலை அணா 8. தபாற்கூலி வேறு. ௸ கதையின் இரண்டாம்பாகம் கூடிய சீக்கிரம் வெளிவரும்.

**மாரன் அவுஸ்,**
மண்ணடி, மதராஸ்.

## FOREIGN NEWS.

## அந்நிய நாட்டு சமாசாரங்கள்.

A. COMMISSION IN NATAL.

**நெடாலில் ஒரு கமிஷன்.**—நெடால் நாட்டில் ஒப்பந்தத்தின்மேல் வேலை செய்ய இந்தியர்களை வரவழைத்துக்கொள்ளும் வழக்கத்தை அடியோடு ஒழித்தல் மேலா, இல்லாவிட்டால், இப்போது அனுஷ்டானத்திலிருந்துவருகிற குடியேறு சட்டவிதிகளை மாற்றிவிடுவது நல்லதா, ஒப்பந்தத்தின்மேல் இந்தியக் கூலிகளை தருவிப்பதற்குப் பதிலாக தென் ஆபிரிகாவிலிருந்தாவது மத்திய ஆபிரிகாவிலிருந்தாவது கூலிவேலைசெய்யும் ஜனங்களை வரவழைத்துக்கொள்ளுவது தகுதியா, வென்று ஆலோசனை செய்து இன்னது செய்வது புத்திசாலித்தனமாகுமெனத் தெரிந்துசொல்ல ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டிருப்பதாய்த் தெரியவருகிறது. அந்தக்கமிஷன் மெம்பர்கள் மேலே சொன்ன விஷயங்களைப்பற்றித் தாங்கள் முடிவாக அனுப்பும் ரிபோர்ட்டில் இந்தியர்கள் ஒப்பந்தத்தின்மேல் கூலிவேலை செய்யத் தருவிக்கப்பட்டதில் ஆபிரிகாக் கூலிகளுக்கு வேலையகப்படாமலே போயிருக்கிறதா என்ற விஷயத்தைப்பற்றியும் அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்களாம்.

EMIGRANTS DURING THE PAST 10 YEARS.

**சென்ற பத்து வருஷங்களில் பிரதேசம்போனவர்கள்.**—சென்னை ராஜதானியிலிருந்து நெட்டாலுக்கு உடன்பாட்டின்பேரில் சென்றவர்களின் தொகையும் திரும்பிவந்தவர்களின் தொகையும் அடியில் குறிக்கப்பட்டிருக்கிறது.

| வருஷம் | போனவர்கள். ஆண் | பெண் | திரும்பிவந்தவர்களின் மொத்தம். |
|---|---|---|---|
| 1898 | 2760 | 1323 | 320 |
| 1899 | 159 | 46 | 380 |
| 1900 | 3729 | 1763 | 288 |
| 1901 | 4492 | 2084 | 371 |
| 1902 | 2784 | 1310 | 857 |
| 1903 | 1772 | 772 | 1329 |
| 1904 | 4410 | 1977 | 1104 |
| 1905 | 4426 | 2072 | 1569 |
| 1906 | 5443 | 2551 | 2386 |
| 1907 | 4049 | 1914 | 2421 |

WORK AND WAGES.

**வேலையும் கூலியும்.**—நெட்டால் நாட்டில் இந்திய கூலிகளில் புருஷர்கள் நிலக்கரிச் சுரங்கங்களிலும் தேயிலைத் தோட்டங்களிலும், கரும்புத்தோட்டங்களிலும், வேலை செய்கிறார்கள். நெட்டால் நாட்டு 1891-ம் வருஷத்து சட்டப்பிரகாரம் அவர்கள் பிரதிதினமும் ஒன்பது மணிநேரம் வேலைசெய்ய வேண்டியது. ஞாயிற்றுக்கிழமைகளிலும் நெட்டால் கவரன்மெண்டாரால் விடுமுறையாக நியமிக்கப்பட்ட நாட்களிலும் வேலை செய்யவேண்டியதில்லை. பெண்பிள்ளைகளுக்கும் சிறுவர்களுக்கும் அதிக கஷ்டமான வேலை கொடுக்காமல் அவரவர்களால் செய்யத் தகுந்த வேலையைச் செய்யச் சொல்லவேண்டுமென்பதும் சட்டம். ஆண் பிள்ளைகளின் கூலி உடன்பாட்டின் ஐந்து வருஷங்களுக்கு மாதம் ஒன்றுக்கு $7\frac{1}{2}$ ரூ. முதல் ஆரம்பித்து $10\frac{1}{2}$ ரூ. வரையில் போகும். ஸ்திரீகளுக்கு கூலி $3\frac{3}{4}$ ரூ. முதல் $5\frac{1}{4}$ ரூ. வரையில் கிடைக்கும். இதைத் தவிர இவர்களுக்குச் சாப்பாடும், குடியிருக்க இடமும் இனாமாகக்கொடுக்கப்படும். அவர்களுக்கு சீக்குவந்தால் வைத்தியர்களைக் கூட்டி காண்பித்து வேண்டிய மருந்துகளை இனாமாகவே கொடுக்கிறதும் உண்டு. முதலாவது உடன்பாட்டின் காலம் தீர்ந்து மறுபடியும் அங்கேயே உடன்பாடு செய்துகொண்டு இருந்தால் முதல் வருஷத்தில் மாதம் ஒன்றுக்கு 12 ரூ க்கும், இரண்டாவது வருஷத்தில் $12\frac{3}{4}$ ரூக்கும், மூன்றாவது வருஷத்தில் $13\frac{1}{2}$ ரூ க்கும், நான்காவது வருஷத்தில் $14\frac{1}{4}$ ரூ. க்கும், ஐந்தாவது வருஷத்திலும் மற்ற வருஷங்களிலும் 15 ரூ. க்கும் குறையாமல் கூலிகொடுக்கவேணுமென்று 1895 வருஷத்து 17-வது ஆக்டில் விதிக்கப்பட்டிருக்கிறது. உடன்பாட்டின் காலம் கழிந்தவுடன் தங்கள் சுவதேசங்களுக்குத் திரும்பிப்போக விரும்புகிறவர்களுக்கு கப்பல் சார்ஜில்லாமல் இனாம் டிக்கட்டு கொடுத்தனுப்பப்படும் என்று தெரியவருகிறது.

நெட்டாலில் இருந்து வருஷந்தோறும் ஒரு ரிபோர்ட்டு வருகிறதாம். அதில் கூலிகளை அவர்களுடைய எஜமானர்கள் எப்படி நடத்துகிறார்களென்று சொல்லப்படுகிறதாம். தவிர, திரும்பிவரும் கூலிகளையும் சரிவர நடத்தப்பட்டார்களாவென்று சென்னப்பட்டணம் கலெக்டர் விசாரித்து அப்போதைக்கப்போது கவரன்மெண்டுக்குத் தெரியப்படுத்துகிறாராம். இது விஷயத்தில் நமது கவரன்மெண்டார் கொஞ்சம் கவனம் செலுத்தி நமது தேசத்துக்கூலிகளைப் பாதுகாத்து வருவார்களென்று நம்புகிறோம்.





## ஆண், பெண், பாலர்கள் படிக்கத்தகுந்த தமிழ்ப் புத்தகங்கள்

**அந்துவைத தூய்மி பாபரக்கண்ணி** அணு 4.

**சநாதநதர்மம்.**—3-ம் பிரிவு. இது ஹைகோர்ட்டு வக்கீலும் மதுரை பிரஹ்மஞான சபை பிரஸிடெண்டுமாகிய ப. நாராயண ஐயரால் மொழி பெயர்க்கப்பட்டது. விலை ரூ 1.

**விவசாய போதினி,** விலை ரூபா 1 4 0.

**மஹா மஹோபாத்தியாய வே. சாமிநாதையரவர்கள் பதிப்பித்தவை.**

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிலப்பதிகாரம் ... ... | 5 | 8 |
| புறப்பொருள் வெண்பா மாலை... | 1 | 8 |
| திருவால வாயுடையார் திருவிளையாடற் புராணம் ... ... | 2 | 0 |
| திருக்காளத்தி நாதருலா ... | 0 | 6 |
| திருப்பூவ நாதருலா ... ... | 0 | 4 |
| சூரைமா நகர்ப்புராணம் ... | 0 | 8 |
| தியாகராஜ லீலை ... ... | 0 | 12 |
| திருவாடு துறைகோவை ... | 0 | 8 |
| மணிமேகலை மூலமும் பதவுரையும். | 5 | 0 |
| புறநானூறு மூலமும் உரையும். | 4 | 0 |
| திருப்பெருந்துறைப் புராணம்... | 1 | 0 |
| வீரவனப்புராணம் ... ... | 0 | 12 |
| ஐங்குறுநூறும் பழையவுரையும். | 1 | 8 |
| பதிற்றுப்பத்து மூலமும் ,, ... | 1 | 8 |
| பத்துப்பாட்டு ... ... | 3 | 0 |
| புத்த சரித்திரம் ... ... | 0 | 12 |
| சீர்காழிக்கோவை ... ... | 0 | 8 |

### பண்டிதர் நடேச சாஸ்திரியாரால் இயற்றப்பட்ட வால்மீகராமாயண வசனம்.

| | | | |
|---|---|---|---|
| பாலகாண்டம் | ரூ. | 0 | 12 |
| அயோத்தியாகாண்டம் | ,, | 3 | 0 |
| ஆரண்ணியகாண்டம் | ,, | 1 | 12 |
| கிஷ்கிந்தியாகாண்டம் | ,, | 1 | 2 |

**நடேச சாஸ்திரியார் கதைகள்.**

| | | | |
|---|---|---|---|
| மதி கெட்ட மனைவி | ,, | 1 | 0 |
| ஸ்ரீ மாமி கொலுவிருக்கை | ,, | 0 | 8 |
| தலையணை மந்திரோபதேசம் | ,, | 0 | 8 |
| வேணீ ஸம்ஹாரம் | ,, | 0 | 3 |
| முத்திரா ராக்ஷஸம் | ,, | 0 | 4 |
| மிருச்சகடி. ... | ,, | 0 | 4 |
| ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள் | ,, | 0 | 6 |

**வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் இயற்றியது.**

**கலாவதி.**—ஏழங்கமுள்ள ஒரு புதிய தமிழ் நாடகம். சுதந்திர யூகமுங் கற்பனைத்திறனும் வாய்ந்தது. ராப்பர் ரூ 1-8. காலிகோ ரூ 1-12.

**பாவலர் விருந்து.**—முதனூள், ஆங்காங்குச்சில புதிய கருத்துக்களடங்கிய இனிமையும், புதுமையும், வாய்ந்த பதிஞெரு சிறிய செய்யுநூல்கள் கொண்டது. விலை அணு 8.

**நாடகவியல்.**—இது 272 சூத்திரங்களடங்கிய நாடகத்தமிழிலக்கண நூல். விலை அணு 8.

**ஸ்ரீ மணியசிவனூர் சரித்திரம்.**—சைவமதத்தின் உண்மை பல தெரிவிப்பது. அணு 2

**நுபாவதி அல்லது காணமற்போன மகள்.**—கதையின்மூலமாய்ச் சிறந்தநீதிகள் பலகற்பிப்பது, ராப்பர் ரூபா 1. காலிகோ ரூ. 1-4-0

### ப. சம்பந்த முதலியாராலியற்றப்பட்ட தமிழ் நாடகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| இரண்டு நண்பர்கள் ... ... | 0 | 12 | 0 |
| இரண்டு சகோதரிகள் ... | 0 | 12 | 0 |
| வேதாள உலகம் ... ... | 0 | 8 | 0 |
| கள்வர் தலைவன் ... ... | 0 | 8 | 0 |
| சாரங்கதரன் ... ... | 0 | 8 | 0 |
| காலவரிஷி ... ... | 0 | 8 | 0 |
| யயாதி ... ... ... | 0 | 8 | 0 |
| மனோகரன் ... ... | 0 | 12 | 0 |
| சத்ருஜித் ... ... ... | 0 | 12 | 0 |
| அமலாதித்யன் ... ... | 1 | 0 | 0 |

### இனிய தமிழ் நாவல்கள்.

| | | | |
|---|---|---|---|
| இராஜாம்பாள் ... ... | 0 | 12 | 0 |
| லலிதாங்கி ... ... | 0 | 8 | 0 |
| ஸுஜாதா ... ... | 0 | 8 | 0 |
| மகாஜன மண்டலி ... ... | 0 | 10 | 0 |
| ஓர் உழவன் மகள் ... ... | 0 | 8 | 0 |
| ஜோதி மாலை ... ... | 0 | 8 | 0 |
| கமலாம்பாள் ... ... | 1 | 4 | 0 |
| குணமாலிகை ... ... | 0 | 6 | 0 |
| காதலின் வெற்றி ... ... | 0 | 9 | 0 |

### இதர புத்தகங்கள்.

**போஜ சரித்திரம்.** பதிறைு சித்திரப்படங்களடங்கிய ஒரு புதிய தமிழ் நாடகம். விலை ரூபா 1—8—0.

**தேகதத்துவ சாஸ்திரம்,** விலை ரூபா 2—8—0.

ஜி. ஏ. நடேசன் அண்டு கம்பெனி, எஸ்பிளநேட், சென்னை.
G. A. NATESAN & CO., Esplanade, Madras, E.

## SEASON, CROPS, AND PRICES.
## காலஸ்திதி, பயிர்கள், அகவிலே.

---

### A Conversation about the Price of Rice

**அரிசி விலேயைப்பற்றி சல்லாபம்.**—சென்னப் பட்டணத்தில் பி. எ. பியாஸ்செய்து ஒரு பெரிய மிராசுதாரர் கவரன்மெண்டு உத்தியோகத்தில் இருக்கிறார். அவரை ஒரு சிநேகிதர் கொஞ்ச நாள்களுக்கு முன் ஒரு நாள் ஸாயங்காலம் பேசிக்கொண்டு வருகையில் அரிசி எப்படி வாங்குகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர் தன் ஊரிலிருந்தே அரிசியை வரவழைத்து வருவதாகவும், பட்டணத்தில் பணம் கொடுத்து அரிசியை விலேக்கு வாங்கினல், ஐயோ! ஏகப்பட்ட விலேயாயிருக்கிறது என்று தோன்றுமென்றும், தான் பெரிய மிராசுதாரராகையால் அந்த எண்ணம் அவருக்குத் தோன்றக்கூடாதென்றும் பதில் சொன்னார். இந்த சல்லாபத்தைக் கொண்டு உயர்ந்த அகவிலே மிராசுதாரர்களுக்கு நல்லது என்றும் சம்பளத்தைக்கொண்டு ஜீவனம் செய்கிறவர்களுக்கு அஸௌகரிய மென்றும் அறிந்து கொள்ளலாம்.

### Lucknow Agricultural Conference.

**லக்ஞேவில் விவசாயக் கூட்டம்.**—இப்போது லக்ஞே முதலான இடங்களில் பாலும் நெய்யும் அதிகவிலேயாக விற்றுவருவதால் வெகு பேருக்குக் கஷ்டமாயிருக்கிறது. மாடுகளே அதிகமாய் வாங்கி அவைகளே போஷிக்கும் வழியைப்பற்றி யோஜிக்கவும், இதில் கவரன்மெண்டார் செய்யவேண்டிய சாதகங்களென்ன, குடிகள் செய்யவேண்டிய விஷயங்களென்ன, என்றுயோஜிக்கவும், மழைகாலம் ஆரம்பமானதும் லக்ஞேவில் ஒருகூட்டம் கூட்டப்படுமென்று அந்த மாகாண லெப்டெனெண்ட் கவர்னராகிய ஸர். ஜான். ஹியூவெட் துரை சொல்லியிருக்கிறார்.

### Piece Goods and Yarn.

**துணிகளும் நூலும்.**—சென்னப் பட்டணத்தில் சீமைச்சரக்குகளேப் பற்றிக் கேட்பவர்களே யில்லேயாம். ஜில்லாக்களிலிருந்து வியாபாரமேயில்லே. ஆகையால் சொற்பமாய்த்தான் விற்பனேயாயிருக்கிறது. ஆயினும் சீமையின் விலே குறைந்ததாகத் தெரியவில்லே.

### Ground Nut Crop.

**நிலக்கடலேப் பயிர்.**—சென்ற மாஸத்து ஸஞ்சிகையில் சென்னேராஜதானி நிலக்கடலேப் பயிரைப் பற்றி சிலவிஷயங்கள் எழுதப்பட்டன. இந்தப்பயிர் இந்தியாவில் இன்னும் சில மாகாணங்களிலும் விளேவிக்கப்படுகிறது. இதுவரையில் எவ்வளவு என்று கணக்கு இல்லாமலே இருந்தது. 1908-09-ம் வருஷமுதல் கணக்கு ஏற்பட்டுப் பிரசுரமாகிறது. அதைப்பார்த்ததில் 1907-08-ம் வருஷத்தில் இந்தியா மொத்தத்தில் எட்டுலக்ஷத்து அறுபத்தெண்ணுயிரத்து அறுநூறு ஏகராவில் நிலக்கடலே சாகுபடி செய்யப்பட்டது. பதினேந்து லக்ஷத்து எழுபத்தொன்பதினுயிரம் பாரம் நிலக்கடலே கிடைத்திருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. ஆனல் 1908-09-ம் வருஷத்தில் ஒன்பது லக்ஷத்து எண்பத்தொன்பதினுயிரம் ஏகராவில் நிலக்கடலே சாகுபடி செய்யப் பட்டிருப்பதாகவும், இதில் பத்தொன்பது லக்ஷத்து எண்பதினுயிரம் பாரம் மகசூல் கிடைக்கக் கூடுமென்றும் மதிக்கிறார்கள். நிலக்கடலே சாகுபடியில் முக்கால்வாசி சென்னே ராஜதானியில் நடக்கிறது. விளேச்சலே அனுசரித்து இதர தேசங்களுக்கு ஏற்றுமதியும் இந்த ராஜதானியிலிருந்துதான். பற்பல மாகாணங்களிலிருந்து சென்ற ஐந்து வருஷங்களில் ஏற்றுமதியின் அளவு அடியில் குறிக்கப்பட்டிருக்கிறது.

| வருஷம். | சென்னேயிலிருந்து. | பம்பாயிலிருந்து. | பர்மாவிலிருந்து. | இதர மாகாணங்களிலிருந்து. | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| 1903-04 | 1,827,243 | 91,439 | 3,079 | 221 | 1,921,982 |
| 1904-05 | 1,567,430 | 42,408 | 63,299 | 1,284 | 1,674,421 |
| 1905-06 | 1,117,037 | 149,559 | 106,578 | 1,040 | 1,374,214 |
| 1906-07 | 1,350,096 | 130,356 | 243,575 | 1,223 | 1,725,250 |
| 1907-08 | 1,218,092 | 93,553 | 212,227 | 183 | 1,524,055 |
| 1908-09 (9 மா) | 607,290 | 25,465 | 85,336 | 2,231 | 720,322 |

REGISTRAR OF CO. ... 30 JUN 1909 MADRAS.

பிழைக்கும்வழிக்கு அனுபந்தம்.

Supplement to Practical Life.



The Hon'ble Mr. S. P. Sinha.

*The First Indian Member of the Viceroy's Executive Council.*

வைஸ்ராயின் நிர்வாக ஸபையில் முதல் இந்தியன் மெம்பராகிய கனம் எஸ். பி. ஸின்ஹா.

30 NOV 1909 MADRAS


# பிழைக்கும் வழி

## PRACTICAL LIFE

ஜி. எ. வைத்தியராமன், பி.எ. பத்திராதிபர். | G. A. VaidyaRaman, B.A. Editor.

புஸ்தகம் I. Vol. I. | ஸௌமிய ஸ்ரீ சித்திரைமீ —APRIL 1909. | ஸஞ்சிகை 4. No. 4.


### பிழைக்கும் வழி.

### PRACTICAL LIFE.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், பிரஜாலக்ஷணம், வித்தியா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான ஒரு மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

**தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.**

உள் நாடுகளுக்கு.

| | ரூ. | அ. |
|---|---|---|
| வருஷம் 1க்கு | 4 | 0 |
| 6 மாதத்திற்கு | 2 | 0 |
| 3 மாதத்திற்கு | 1 | 0 |
| தனிப்பிரதி | 0 | 6 |

அந்நிய நாடுகளுக்கு.

| | ரூ. | அ. |
|---|---|---|
| வருஷம் 1க்கு | 6 | 0 |
| 6 மாதத்திற்கு | 3 | 0 |
| 3 மாதத்திற்கு | 1 | 8 |
| தனிப்பிறதி. | 0 | 8 |

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
10, எஸ்பிளனேட், மதருஸ்.

## HOW TO EARN A LIVELIHOOD.

BY

HON'BLE V. KRISHNASWAMI AIYAR, B.A., B.L.

### பிழைக்கும் வழி.

வருஷந்தோறும் நமது சென்னைராஜதானியில் சுமார் பதினாயிரம் பிள்ளைகள் மெட்ரிகுலேஷன் பரிட்சைக்கு போகிறார்கள். அவர்களில் ஸராஸரி 2,000 பிள்ளைகள் தேறுவதாக வைத்துக் கொள்ளலாம். பாக்கி 8,000 பேர்கள் தவறிப்போகிறார்கள். இவர்களில் பலர் மறுபடியும் ஒருதரமோ, இரண்டுதரமோ, அதற்கும் மேற்பட்ட தடவைகளோ, அந்தப் பரிட்சைக்குச் சென்று தேறினாலும், வருஷம் ஒன்றுக்கு இரண்டாயிரத்துக்குக் குறையாமல் இனி மெட்ரிகுலேஷன்முகம் பார்ப்பது ஸாத்யமல்லவென்று ஒழிந்து விடுகிறார்கள். இதேவிதமாய், மெட்ரிகுலேஷன் கிளாஸுக்குக் கீழ்ப்பட்ட ஐந்து வகுப்புகளில் இருந்து, மேற்செல்லமாட்டாமல் வருஷாவருஷம் படிப்பிலிருந்து நின்று விடுகிறவர்கள் உண்டு. இப்படிக்கெல்லாம் படிப்பை நிறுத்திவிடுகிறவர்களின் எண்ணை ஒன்று கூட்டிப் பார்ப்போமானால்

கேவலம் பால்ய சிட்சைக்குமேல் படிக்க ஆரம்பித்து ஒன்று முதல் ஆறுவது வகுப்புவரையில் செல்லமாட்டாமல் நின்று விடுகிறவர்கள் பதினாயிரம் இருப்பதற்குச் சந்தேகமில்லை. இப்படிப் படிப்பு நிற்பது புத்திக்குறைவு, சிரத்தைக்குறைவு, துர்நடத்தை, துஷ்டசகவாசம், பொருளில்லாமை என்ற பல காரணங்களினால் ஏற்படுகிறது. இங்கிலீஷ் படிப்பு ஏற்பட்டு, பலவருஷங்களாக அதை பிழைப்புக்கு ஆதாரமென்று கருதி, தாய் தந்தையர்கள் ஆசையுற்று தங்கள் உண்டி உடையைச் சுருக்கி திரவியம் தேடி, பிள்ளைகளை படிப்பில் தேற பிரயத்தனம் செய்து வந்தார்கள். எவ்வளவு கஷ்டப் பட்டாலும் பல பிள்ளைகள் தவறுகிறது நிச்சயம். அந்தந்த வகுப்புக்கு உரிய சம்பளமும், மற்றச் செலவுகளும் அதிகப்பட்டு வருவதால், படிப்பை நிறுத்துவது அவசியமாக முடிகிறது. இந்தப்படிப்பானது ஒரு தொழில் செய்வதற்கு ஸாதகமாக இல்லாவிட்டால், பிழைப்புக்கு வேறுமார்க்கமில்லாமல், பரம்பரைத்தொழிலைக் கல்லாமல் தவறி, பலர் கஷ்டப்படும்படி நேரிடுகிறது. சாமாந்ய கிராமத்து ஜனங்கள் தகுந்த இங்கிலீஷ் படித்து நல்ல ஸ்திதிக்கு வருவதில் இருக்கும் கஷ்டங்களை சரிவர அறியாமல் தூரத்துப் பச்சையென்று மயங்கி, பிந்தி பணச்செலவே ஒழிய பிள்ளை பிழைப்பதில்லை என்று உணர்ந்து துயரப்படுகிறார்கள். இவ்வளவுதான் ஸாத்தியம், இதற்கு மேல் லாபமொன்றும் கிட்டாது, என்று முந்தியே அவர்களுக்குப் புலப்படுமானால் செலவுக்கும் பின்வருத்தத்திற்கும் உடன்படமாட்டார்கள். இந்தவிஷயங்களை நன்றாய் அறிந்தவர்கள் இங்கிலீஷ் படிப்பில் இவ்வளவு பிரமம் வேண்டாம்; அது யாவருக்கும் பயன் தருகிறதில்லை; வேறு வழியில் முயற்சி எடுத்துக் கொண்டால் பிழைப்புண்டாகும், என்று எச்சரிக்கைசெய்தால், அதைப் பத்தியமான வார்த்தையாகக் கொள்கிறவர்களில்லை. முன்னுக்கு வந்து அகமடைந்தவர்கள் அதே வழியில் மற்றவர்கள் செல்லுவதில் அஸூயை கொண்டு பேசுகிறார்களென்று அறிவில்லாதவர்கள் எண்ணுகிறார்கள். ஒரு பிள்ளையை இங்கிலீஷ் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவதற்கு முந்தி அவனுக்கு எவ்வளவு புத்தியுண்டு? வகுப்பு ஒன்றுக்கு எவ்வளவு செலவாகும்? எவ்வளவு வருஷம் பள்ளிக்கூடத்தில் வைத்து நம்மால் நடத்த முடியும்? வேறு ஸகாயங்கள் ஏதாவது உண்டா? என்ற விஷயங்களையெல்லாம் யோஜித்து ஸரியான தீர்மானத்திற்கு வருகிறவர்கள் பெரும்பான்மை இலர். இப்படிப்பேசுவதால் படிப்பிற்கு பலர் எத்தனிக்கக்கூடாது என்பது நமது அபிப்பிராயமல்ல. மனுஷ்ய ஜன்மம் எடுத்த ஒவ்வொருவரும் பால்யசிட்சை அவசியம் பெறவேண்டியது தான். அதற்கு அதிகமாக படிப்பதானால் ஒவ்வொருவரும் தங்கள் ஸொத்துக்கும் புத்திக்கும் தகுந்த மார்க்கத்தில் புகுந்து வித்தையை அப்பியசிக்கவேண்டியதே தவிர கண்டபடி ஆடுகளுக்கொப்பாக ஒருவர் பின் மற்றொருவராய்ச் செல்வதுகொஞ்சமேனும் ஸரியல்ல. எல்லாஜனங்களும் எழுதவும் படிக்கவும் லக்கமிடவும் தெரிந்து கொள்வது அவசியமே. இதற்கு மேலாகவும் கொஞ்சம் பூகோள சாஸ்திரமும், தேச சரித்திரமும், சரீர சுகவழியும் தெரிந்துகொள்வது யாவருக்கும் நலமேயாம். இவ்வளவுவரையில் கற்ற பிறகு, எல்லோரும் பி. ஏ. பரிட்சைவரையில் செல்லுகிறவர்களைப் போல, ஒரேவித பாடங்களையும் புஸ்தகங்களையும் படிக்க முயல்வது புத்தியில்லாமை. ஆனால், மேலான பரிட்சைக்குத் தகுந்தவர்கள்போக மற்றவர்கள் கதியென்னவென்று



கேட்கலாம். பிழைப்பதற்கு ஆதாரமாக எவ்வளவோ தொழில்கள் உண்டு. அவரவருக்கு ஏற்றபடி இரண்டொரு கைத்தொழில்களை, ஒவ்வொருவரும் அவசியம் கற்றுவந்தால் ஒருவனுக்கு ஏன் பிழைப்புக்கு ஹானிவரும்? பழைய நாளில் இந்ததேசத்தில் வெகு ஜாதிகளில், தகப்பன் தொழிலைப் பிள்ளை கற்றுவரவில்லையா? அதேவிதமாய் இப்பொழுதும், கற்பதற்கு அட்டி என்ன? ஜாதிமுறை என்னும் அகங்காரத்தைவிட்டு புதிதாக இதரர் தொழிலைக் கற்பதற்கு ஆக்ஷேபம் ஏது? கைகால் உள்ளவர்கள் அவைகளை எந்தவிதத்திலாவது ஒரு தொழிலுக்குத்தயார் செய்வதில் அதிக கஷ்டம் உண்டா? ஐரோப்பா, அமெரிக்கா, முதலிய தேசங்களில் தேகசிரமப்பட்டு வேலைசெய்து ஜீவனம் சம்பாதிப்பதில், எவரும் கௌரவத் தாழ்ச்சி பாராட்டுகிறதில்லை. நமது தேசத்தில்மாத்திரம் வழக்கமென்றும் பரம்பரை தர்மமென்றும் முன்னோர்கள் சென்றவழி யென்றும் பலவித பந்தங்களுக்கு உள்ளாகி, இங்கிலீஷ்ப்படிப்பினால் ஏதோ அளவில்லாத சுகம் பெறலாமென்று பிரமமடைந்து வழிதெரியாமல், பலர் கஷ்டப்படுகிறார்கள். ஆனால் கேட்கலாம்; எவ்விடத்தில், எந்தக் கைத்தொழில்களை பிள்ளைகள் கற்கக்கூடும்? அதற்கு ராஜ்யத்தில் என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது? இதுவரையில் புஸ்தகங்கள் வாசிக்கவும், அந்த ஞானத்தைக் கொண்டு குரிச்சியில் உட்கார்ந்து வேலைசெய்யவும் கற்பித்து வருகிறார்களே அல்லாமல் கைத்தொழில் வித்தைக்குத் தகுந்த ஏற்பாடு ஒன்றும் திட்டமாகவில்லை. தச்சுவேலை, நெசவுவேலை, கொல்லுவேலை முதலிய தொழில்கள் சில விடங்களில் கற்பிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் ஒரு இடத்திலாவதுகைத்தொழில்செய்கிறவர்கள் புஸ்தகம் படிக்கவாவது புஸ்தகம் படிக்கிறவர்கள் கைத்தொழில் கற்கவாவது ஏற்பாட்டைக்காணோம். ஒவ்வொருவரும் ஐந்தாறு வயதுவரும்போதே, தான் இன்னமார்க்கம் சென்றால்தான் அதிகப் பயனடையலாம் என்று தெரியாததினால் தப்புவழியில்சென்று பின்னடி துக்கிப்பதற்கு இடமுண்டாகிறது. சுமார் பதினைந்து வயதுவரையில் எல்லாப் பிள்ளைகளும் புஸ்தகப் படிப்பிற்கும் கைத்தொழில் வேலைக்கும் தயாராவார்களானால் பிறகு அவரவர்களுடைய சக்தி விசேஷத்திற்குத் தக்கபடி வெவ்வேறு மார்க்கமாய் அவரவர் செல்லக்கூடும். ஆகையால், தேசத்தில் ஏற்பட்டிருக்கும்பள்ளிக்கூடங்கள்யாவற்றிலும், ஆறாவது வகுப்பு வரையில் ஒவ்வொரு பிள்ளையும் ஒரு தொழிலாவது கற்கும்படி விதித்து அதற்குவேண்டிய ஏற்பாட்டைச் சர்க்காரரே செய்வாராகில் ஒரு சிறுவனாவது பிழைப்புக்கு வழியின்றி கஷ்டமடையாமல் தேசம்வாழலாம். கைத்தொழில்களும் விசேஷமாய் அபிவிருத்தியடையும். தொழில்கள் விருத்தியானால் தனம்அதிகப்படும், பஞ்சம் முதலிய கஷ்டங்கள் குறைவுபடும். இவைகளை எல்லாம் நன்றாய் உணர்ந்து சென்ற வருஷத்தில் கவர்ன்மெண்டார் கூட்டிய கைத்தொழில் சங்கத்தார் இனிஎல்லாப்பள்ளிக்கூடங்களிலும்கைத்தொழிற் பயிற்சி ஏற்படுத்த வேண்டியதென்று உபதேசம் செய்தார்கள். அதை அனுசரித்து சீக்கிரத்தில் ராஜாங்கத்தார் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்கள் என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

வி. கிருஷ்ணசாமி அய்யர்.

---

"பிழைக்கும் வழி" பெயருக்குத் தக்கவாறு சங்கதிகளு மிருக்கின்றன. இதில் விவசாயம், வர்த்தகம், கைத்தொழில், கல்வி, சாஸ்திரம், வைத்தியம், சிறுவர்க்கான சமாசாரங்கள், இன்னும் பல தேச வர்த்தமானங்கள் அடங்கி யிருக்கின்றன. இப்படிப் பட்ட பத்திரிகையை யாவரும் வாசித்துவரில் பல நன்மைகளை அடையலாம்.—ஜனானுகூலன்.

## GLASS MANUFACTURE IN MADRAS

BY

THE EDITOR.

## சென்னப்பட்டணத்தில் கண்ணாடி செய்தல்.

—o—❖—o—

1907-08 வருஷத்தில் இந்தியாவில் இறக்குமதியான கண்ணாடி ஸாமான்களைப்பற்றிய சில விஷயங்கள் அடியில் குறிக்கப் பட்டிருக்கின்றன.

| கண்ணாடி வளையல்கள். | விலை பவுன். |
|---|---|
| ஆஸ்ட்ரியா ஹங்கெரி தேசத்திலிருந்து ... ... ... | 269,614 |
| ஜெர்மனி தேசத்திலிருந்து ... | 55,460 |
| சீனா தேசத்திலிருந்து ... | 6,283 |
| அந்த தேசத்து சில முக்கிய துறைமுகப் பட்டணங்களிலிருந்து ... | 39,222 |
| இதர தேசங்களிலிருந்து ... | 581 |
| | 371,160 |

| புட்டிகள். | |
|---|---|
| இங்கிலாந்திலிருந்து ... | 29,247 |
| ஜெர்மனி தேசமிருந்து ... | 9,180 |
| பினங்கு, சிங்கபூர், மலாக்கா தீவுகளிலிருந்து ... ... | 2,196 |
| இதர தேசங்களிலிருந்து ... | 1,663 |
| | 42,286 |

| கண்ணாடி பில்லைகளும் தகடுகளும். | |
|---|---|
| இங்கிலாந்திலிருந்து ... ... | 29,185 |
| பெல்ஜியமிருந்து ... ... | 63,165 |
| இதர தேசங்களிலிருந்து ... | 1,716 |
| | 94,066 |

| கண்ணாடி மணிகளும் முத்துகளும். | பவுன். |
|---|---|
| இங்கிலாந்திலிருந்து ... | 1,158 |
| ஆஸ்ட்ரியா ஹங்கெரிதேசத்திலிருந்து | 49,028 |
| பெல்ஜியம் தேசமிருந்து ... | 8,673 |
| பிரான்ஸ் தேசமிருந்து ... | 30,898 |
| ஜெர்மனி தேசமிருந்து ... | 47,627 |
| இட்டலி தேசமிருந்து ... | 32,526 |
| இதர தேசங்களிலிருந்து ... | 2,742 |
| | 172,652 |

| விளக்கு சாமான்கள். | |
|---|---|
| இங்கிலாந்திலிருந்து ... | 7,331 |
| ஆஸ்ட்ரியா ஹங்கெரி தேசமிருந்து | 18,119 |
| பெல்ஜியம் தேசமிருந்து ... | 4,771 |
| ஜெர்மனி தேசமிருந்து... ... | 26,385 |
| ஜப்பான் தேசமிருந்து ... | 2,400 |
| இதர தேசங்களிலிருந்து ... | 1,513 |
| | 60,519 |

| இதர கண்ணாடி சாமான்கள். | |
|---|---|
| இங்கிலாந்து தேசமிருந்து ... | 58,020 |
| ஆஸ்ட்ரியா ஹங்கெரியிலிருந்து ... | 26,877 |
| பெல்ஜியம் தேசமிருந்து ... | 51,269 |
| ஜர்மெனி தேசமிருந்து ... | 62,192 |
| இட்டலி தேசமிருந்து ... | 938 |
| அமெரிகா தேசமிருந்து ... | 2,339 |
| சீனா தேசமிருந்து ... ... | 584 |
| ஷை தேச சில முக்கிய துறைமுக பட்டணங்களிலிருந்து ... | 580 |
| ஜபான் தேசமிருந்து... ... | 16,898 |
| பினங்கு, சிங்கபூர் மலாக்கா தேசமிருந்து ... ... ... | 1,151 |
| இதர தேசங்களிலிருந்து ... | 1,921 |
| | 2,22,769 |
| ஆக மொத்தம் பவுன் | 9,63,452 |



1906-07 ௵த்தில் இதர தேசங்களிலிருந்து வந்த கண்ணாடி சாமான்களின் விலை 12114108 ரூபாய். அடுத்த அதாவது 1907-08ம் ௵த்தில் சுமார் 144½ லக்ஷம் ரூபாய்க்கு இவைகள் இறக்குமதியா யிருக்கின்றன. இவைகளில் கண்ணாடி வளைகள் ஒன்று. இது ஆஸ்ட்ரியா ஹங்கரி தேசங்களிலிருந்து முக்கியமாய் நமது ராஜதானிக்கு வருகிறது. தவிர, இந்தியாவில் 'புட்டி' என்று சொல்லப்படும் 'பாட்டில்கள்' ஏராளமாய் செலவழிகின்றன. மருந்துக்கும், ஸோடாவாடர் லெமனேட் முதலியவைகளுக்கும், எண்ணெய், வார்னிஷ் முதலியவைகளை வைப்பதற்கும் புட்டிகள் மிகவும் தேவை. சுமார் பத்து வருஷத்துக்குமுன் இந்தியாவில் ரூ.3,89,905 விலையுள்ள புட்டிகள் இறக்குமதியாயின. சென்ற 1908—1909 வருஷத்திலோ இந்தத் தொகை இரண்டு பங்காகிவிட்டது. இதர தேசங்களில் இருந்து கண்ணாடி ஸாமான்களை வரவழைப்பதினால் அனேகம் வழியில் உடைந்து போகின்றன. விற்பனை செய்பவர்கள் உடைந்து போன ஸாமான்களின் விலையை உடையாத ஸாமான்களின் தலையிலேயே வைத்துத் தாக்கவேண்டியதாயிருக்கிறது. நமது தேசத்திலேயே அவசியமானவைகளையாவது செய்தால் அவைகளை ஸகாயமாய் விற்கலாம்.

இந்தியாவில் அநேக இடங்களில் கண்ணாடி சாமான்கள் செய்யப்படுகின்றன. டெல்ஹி நகரத்தில் முகம் பார்க்கிற கண்ணாடிகளும், லாகூர், ஆமதாபாத் இந்த நகரங்களில் சிம்னிகளும், பாட்னா பாகல்பூர் நகரங்களில் வாசனை திரவியங்கள் வைக்கும் புட்டிகளும், பம்பாய் இராஜதானியில் தானா ஜில்லாவில் சிஞ்சினி தரபூர், பூனா ஜில்லாவில்சிவபூர், காண்டீஷ் ஜில்லாவில் நஜிராபாத் ஆகிய இவ்விடங்களில் கண்ணாடி வளைகள் செய்யப்படுகின்றன. நமது ராஜதானியில் சாதாரணமான கோப்பைகளும், புட்டிகளும், வேலூர், சேலம், திருச்சினாப்பள்ளி இந்த இடங்களில் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் 1901-ம் ௵த்தில் எடுத்த ஜனகணிதக் கணக்கு பிரகாரம் வட ஆற்காடு ஜில்லாவில் ஒருவரும், கோயமுத்தூரில் 11 பேர்களும், ஆக 12 பேர்கள்தான் மேலே சொல்லிய கோப்பைகளையும் புட்டிகளையும் செய்வதாகத் தெரியவருகிறது. கஞ்சம்ஜில்லாவில் 330 பேர்களும், விசாகபட்டணம் ஜில்லாவில் 406 பேர்களும், வட ஆற்காடு ஜில்லாவில் 286 பேர்களும், அனந்தபூர் ஜில்லாவில் 122 பேர்களும், இதர ஜில்லாக்களில் 260 பேர்களும், ஆக மொத்தம் ராஜதானி முழுவதிலும் 1,405 பேர்கள் மட்டும் நமது ராஜதானியில் கண்ணாடி வளையல்கள் செய்கிறார்களாம் இதர தேசங்களிலிருந்து நமது ராஜதானிக்குமட்டும் வரும் கண்ணாடி சாமான்களின் தொகை 1900-01 ம் ௵த்தில் 5,34,830 ரூபாயாய் இருந்து, 1907-08ம் ௵த்தில் ரூபாய் 14,08,328 ஆகியிருக்கிறது. மேலே சொல்லிய விஷயங்களினால் தகுந்த ஏற்பாட்டோடு கண்ணாடி சாமான்களைச் செய்தால் நல்ல லாபம் கிடைக்குமென்று தோன்றுகிறது.

மலையாளம் ஜில்லாவில் திருச்சூருக்குத் தெற்கே சமீபத்திலுள்ள வடிக்கிடத்து இல்லத்தைச் சேர்ந்த சிறுவயதுள்ள பணக்கார நம்பூத்ரி பிராமணரொருவர் கண்ணாடி செய்யப்படும் கல்கத்தா முதலிய இடங்களைப் போய்ப் பார்த்துப் அங்கிருந்து நிபுணர்களைதன் ஊருக்கே கொண்டுவந்து கண்ணாடி சாமான்கள் செய்யப்போகிறாராம். இதுநிற்க, சென்னப் பட்டணத்தில் வியாபாரம் செய்து வரும் ராய்சே கம்பெனியைச் சேர்ந்த ஜான் ராம்ஸே உங்கர் என்பவரும், ஏ. ஷோல் என்

பவரும்சில வருஷங்களாய் சென்னப்பட்டணத்தில் கண்ணாடி சாமான்கள்செய்யமுடியுமா முடியாதாவென்பதை அறிய பலவித சோதனைகள் என்னூர் என்னும் கிராமத்தில் செய்துவந்தார்கள். தவிர, அங்குள்ள மணல் முதலிய இயற்கைப்பொருள்களை ஐரோப்பாவுக்கு அனுப்பியும் பரீக்ஷித்துப் பார்த்தார்கள். இவைகளால் லாபம்கிடைக்கக்கூடுமென்று ஊகித்து என்னூரிலேயே சோதனைகள் செய்வதற்காக ஐரோப்பாவிலிருந்து ஒரு நிபுணரையும் வரவழைத்து இப்படிக் கெல்லாம் பரீக்ஷைசெய்ய 55,000 ரூபாய் வரையில் செலவிட்டார்களாம். இவைகளினால் நல்ல லாபத்துடன் கண்ணாடி சாமான்கள் செய்ய முடியு மென்பதை அறிந்து மேலே சொல்லிய ஐரோப்பியரையே நியமித்து கண்ணாடி சாமான்கள் செய்வதற்காக ஒரு கம்பெனி சேர்த்திருக்கிறார்கள். இந்த கம்பெனியின் முதல் 2 லக்ஷம் ரூபாய். இதில் தினம் ஒன்றுக்கு 9 முதல் 13½ பாரம் வரையில் கண்ணாடி சாமான்கள் செய்ய முடியுமாம். ஆரம்பத்தில் சோடா வாட்டர் புட்டிகளும், கண்ணாடிகல்களும், ஓடுகளும் செய்யப்போகிறார்களாம். இவைகளை யெல்லாம் சென்னப்பட்டணத்திலேயே நல்ல லாபத்தோடு விற்று விடமுடியுமாம். மேலே சொல்லப்பட்ட உங்கர், ஷோல் இரண்டு பேர்களும் இந்த விஷயத்தில் ஏற்கனவே செலவிட்ட 55,000 ரூபாய்க்காகவும் சிரமத்திற்காகவும், 80,000 ரூபாய் பெறுமான பங்குகள் எடுத்துக் கொண்டுவிட்டார்கள். பாக்கி லக்ஷத்து இருபதினாயிரம் ரூபாய், பங்கு ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் சிலருக்குள்ளேயே எடுபட்டு விட்டதாகத் தெரிகிறது.

இந்த கம்பெனியில் புகழத்தக்க முக்கியமான விஷயம் ஒன்றிருக்கிறது. நம்முடைய தேசத்திலிருந்து சிறுவர்களை இதர தேசங்களுக்கு அனுப்பித்தொழில் கற்றுவர செய்யும் வாடிக்கை கொஞ்ச நாளாய் மும்மரமாய் இருக்கிறது. தொழில் கற்க வேணுமென்ற ஆவலுள்ளவர்களெல்லாரும் இதர தேசங்களுக்குப் போகமுடியாது. ஆதலால், கூடுமானால் அந்நிய தேசங்களிலிருந்து நிபுணர்களை நமது தேசத்துக்கு வரவழைத்து இங்குள்ள புத்திசாலிகளுக்கும் ஏழைகளுக்கும் நமது நாட்டிலேயே தொழில்களை கற்றுக்கொடுக்கும்படி செய்வது நலம். ஸாதாரணமாய் நம்முடைய வேலைக்காரர்கள் சரியாய் மட்டும் சொல்லிக் கொடுக்கும் பக்ஷத்தில் எந்த தொழிலிலும் நல்ல வேலை செய்யக் கூடியவர்கள்தான். கண்ணாடி சாமான்கள் செய்வதை சாதாரணமாய் 6 மாதத்தில் கற்றுக்கொள்ளலாமாம். ஆகையால் இந்தத் தொழிலில் கெட்டிக்காரரான 4 ஐரோப்பியர்களை 6 மாதத்திற்கு வரவழைத்து 12 வேலைக்காரர்களை இங்கேயே தயார்செய்யப் போகிறார்களாம். இப்படித் தயாரானவர்கள் இன்னும் இதர கூலிகளுக்கு இந்தத் தொழிலை கற்றுக் கொடுக்கக்கூடும்.

நமது தேசத்து வெயிலும் கண்ணாடி உருக்குவதில் உண்டாகும் அதி உஷ்ணமும் வேலைக்காரர்களுக்கு மிகவும் சிரமத்தை உண்டு பண்ணும். ஆனால் தகுந்த யந்திரங்களால் வேலைகளை செய்து கொள்ளலாம். புட்டிகள் செய்ய நல்லயந்திரம் ஒன்று வந்திருப்பதாகத் தெரிகிறது. அதைப்பற்றித் தெரிந்துகொள்ள பிரியமுள்ளவர்கள் கல்கத்தாவில் "டைரெக்டர் ஆப் கம்மர்ஷியல் இன்டெலிஜென்ஸ்" என்று சொல்லப்பட்ட வியாபார ஸமாசாரங்களைத் தெரிவிக்கும் ஆபீஸருக்கு எழுதிக் கொள்ளலாம்.

பத்திராதிபர்.



## SINGLE PLANTING.

BY

B. L. DAVEY SINGH
*Mannargudi.*

## ஒற்றை அலகு நடுதல்.

நாலு வருஷத்துக்கு முன் ஒரு இங்கிலீஷ்ப் பத்திரிகையில் ஒற்றை அலகு நடுவதால் அதிக நன்மையுண்டென்று எழுதியிருந்ததைப் படித்ததுண்டு. பின்பு தஞ்சாவூர் வக்கீல் ஸ்ரீமத் ராவ் பகதூர் சீனிவாச பிள்ளையவர்கள் இவ்வூர்ப் பின்ட்லே காலேஜில் ஒற்றை அலகு நடுவதால் உண்டாகும் லாபத்தைப் பற்றித் தமது அநுபவத்தில் கண்டவைகளைப் பிரசங்கிக்கக்கேட்டு அந்தப்படி நடும்படி செய்யத் துணிந்தேன். இதையறிந்த மிராசுதாரர்களாகிய எனது நண்பர்கள் பலர் பள்ளத் தாக்குகளில் ஒற்றை அலகு நட்டால் பயனேயில்லையென்று தடுத்து விட்டார்கள். ஆயினும் ஒற்றை அலகு நடுவதால் உண்டாகும் லாபநஷ்டங்களை அறியவேண்டுமென்னும் ஆசை பின்னும் என்னைத் தூண்டினமையால் என் கிராமத்தில் பள்ளத்தாக்கிலும், மேட்டுப்பாங்கிலும், வண்டல் பாகத்திலும், உரமுள்ள நிலத்திலும், உரமில்லாத சாதாரணமான நிலத்திலும் பரீக்ஷார்த்தமாகச் சொற்ப நிலங்களில் ஒற்றை அலகு போட்டு நடும்படி செய்தேன். அவைகளுள் நல்ல உரமுள்ள நிலத்தில் 60, 64ம், மற்ற இடங்களில் சில 30-ம், சில 20, 22ம், சில நாலைந்தும் சில வைத்தது வைத்தபடிக்கும் கிளைத்துக் கதிர் பறியலாயின.

இதனால் நல்ல உரமுள்ள நிலத்தில் ஒற்றை அலகு நடுவதால் செலவு சுருக்கமாயும் விளைவு அதிகமாயும் காணப்பெறினும் உரமுள்ள நிலத்தில் நடுவதுபோலச் சாதாரணமான நிலங்களில் ஒற்றை அலகு நடுவதால் பெரும் பயனுண்டாகு மென்று துணியக் கூடவில்லை.

ஆனால் நிலவளத்துக்குத் தக்கபடி முதல்தரமான நிலத்தில் ஒரு அடிக்கு ஒரு அலகும், 2 வது தரமான நிலத்தில் ஒன்பது அங்குலத்துக்கு ஒருஅலகும், 3-வது தரமுள்ள நிலத்தில் ஆறு அங்குலத்துக்குஒரு அலகும், 4 வது தர நிலத்தில் நாலு அங்குலத்துக்கு ஒரு அலகும் போட்டு நட்டால் பழய வழக்கத்தை அநுசரித்து நடுவதால் ஆகும் கண்டுமுதல் நெல்லுக்குக் குறையாமல் விளையுமென்பதற்குத் தடையே யில்லை.

இந்தவிதமாக ஒருஅலகு போட்டு நடுவதற்கு நாற்றங்காலை நன்றாய் உரஞ்செய்து விதையிட்ட 25-நாள் அல்லது 30-நாளைக்குள் நாற்றைப் பறித்து நட்டுவிடவேண்டும். இப்படி நட்டால் தான் நட்டபின் தூருகட்டி அதிகமாகக் கிளைக்கும். 50 நாள் 60 நாள் கழித்துப் பறித்து நட்டால் ஒரு நெல்லில் இருந்து உண்டாகும் நாற்றைப் பிரித்தெடுத்து ஓரலகாக நடவேண்டியிருப்பதால் எவ்விதமான உரமுள்ள இடத்தில் நட்டாலும் அது 10, 15க்கு மேல் கிளைப்பதேயில்லை. ஆகையால் ஓரலகு போட்டு நடும் நடவுக்கு 30 நாளுக்குள் நாற்றைப் பறித்தால் தான் அதிக விளைவுக்கு இடமுண்டு.

பி. எல். தேவி ஸிங்.

## மாதர் மனோரஞ்சனி.

இந்த மாதாந்தரப் பத்திரிகைக்கு இப்பொழுது 11-வது வருடம் ஆரம்பம். இதில் பெண்களுக்குரிய விஷயங்களே வெளிவரும். இதன் வருட சந்தா ரூபா 2. வேண்டுவோர் ஸி. எஸ். இராமசுவாமி ஐயர், 12, தணிகாசல பிள்ளைத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை. என்று எழுதவும்.

## THE USES OF THE BAMBOO

BY

T. P. SUBBARAYA AIYAR.

## மூங்கிலின் பிரயோஜனங்கள்.

"ஒரு மூங்கிற் கொத்தும், ஒரு தென்னை மரமும், இரண்டு வாழைத்தூரும், ஒரு எருமை மாடும் இருக்கும் குடும்பத்திற்கு எவ்வித சிரமுமில்லை" யென்று பல முதியவர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

மூங்கில் நீர்வளம் நிறைந்த பூமிகளில் வெகு செழிப்பாய் வளரும். காலடி 50, 60 அடி உயரம் வளரும். மலையாளத்து மலைகளில் 70, 80 அடி நீளமும், 2, 2½ அடி சுற்று அளவும் உள்ளதாகப் பல்லாயிரம் மூங்கில்கள் உண்டாகின்றன. மூங்கில் மரம் கூரை, ஓடு, முதலிய வீடுகள் கட்ட மிகவும் உபயோகமுள்ளது. மூங்கில் மரங்களையுடைத்து (கீறி) பட்டைகளாகச் சீவி கூடி வீடுகளுக்கு வரிச்சலாகப்போட்டு, ஆணிகளை கொண்டு தைக்கவும், பார வண்டிகளுக்கு மேல்க்கூண்டுகள் கட்டவும், உதவும்; அவைகளையே நாரைப்போல் கிழித்து பெரிய பெரியவும், சிறிய சிறியவுமான பாய்களைப் பின்னிப் பலவிதமான காரியங்களுக்கு உபயோகிக்கிறார்கள். மாடு கட்டி ஓட்டும் வண்டிகள் சகலத்திற்கும் இம்மூங்கில்ப் பாய்கள் உபயோகமாகின்றன. மறைவு கட்டுவதில் கண்ணுக்குத் துப்பரவாக இருக்க வேண்டிய இடங்களுக்கும், முன்ஸிபால்ட்டியின் உபத்திரவம் உள்ள இடங்களில் மேல்க்கூரைக்கும், நாடகக்கொட்டகைகளுக்கும், தென்னையின் கீத்து அகப்படாத இடங்களில் கூரை கட்டுவதற்கும், நெல் முதலியவை காயப்போடுவதற்கும், அவைகளைச்சேராகக் கட்டுவதற்கும், இம்மூங்கில்ப்பாய்களே உதவுகின்றன. சில இடங்களில் மூங்கில் பிளாச்சுகளைக் ஏழைகள் வீட்டிற்குக் கதவாகவும் உபயோகப்படுத்திவருகிறார்கள். திருப்பதி முதலிய இடங்களில் இம்மூங்கிலின் கணுக்களை மூன்றிடங்களில் ஜாதிஅடி ஒன்று ஒன்றரை நீளம்விட்டு வெட்டி அதில் அதன் மெல்லிதானபட்டைகளைப் பின்னிப் படுக்கும் கட்டில்களாக்குகிறார்கள். அந்தக்கட்டில்கள் அங்கிருந்து பல இடங்களுக்கு ஏற்றி யனுப்பப்படுகின்றன. ஸன்னமாய்க் கிழித்து பலவிதமானகூடைகள் முடைந்து அனேக காரியங்களுக்கு உபயோகித்து வருகிறார்கள். ஸன்னமான மூங்கில்க்கழிகளை கொடிகட்டி வருகிறார்கள். தோணி, பரிசு முதலிய தண்ணீரைக் கடக்கும் சாதனங்களைத் தள்ளவும் ஆகின்றன. பெரிய சிறிய கோயில்களில் ஸ்வாமிகளைத் தூக்க வாஹனங்களாக்கப்படுவதும் உண்டு. பெரிய சண்டைகளில் இம்மரத்தின் கணுக்குறுகிய தடிக்கம்புகளே ஜயிக்கும். அம்புகளின் அடிக்கம்புகளும் இவைகளின் கம்புகளே. திருடர்களை ஓட்டுவதற்கும், துஷ்டஜந்துக்களை வெருட்டவும் இதன் தடிக்கம்புகளே பயன்படும். திருதெண்டிகளுக்கும், ஏகதெண்டிகளான சந்யாஸிகளுக்கும் இத்தடிகளே தேவை. புலன்களுக்கு வேலியடைப்பதற்கு இம்முள்ளால் செய்தப்படல்கள் இன்றியமையாதவை. சில கூத்தாடிகள் இம்மரத்தின் நீண்டது ஒன்றையே வைத்துக் கொண்டு, அதை நாட்டி அதின் உச்சியிலேறி ஆடுவார்கள். ஆறுகளில் வெள்ளம் புரண்டுவந்து இரு கரைகளையும் குத்தி உடைக்கும்போது அதைத் தடுக்க முடைசல் கட்டித்திருப்புவதற்கு மூங்கில்களும், அதன் முட்படல்களும் அத்தியாவசிய மானவைகள்.

பிரபுக்கள் உலாத்தப் போகும்போது இதன் சிறுபரிமாணமுள்ளவும், அடிக்கிமுங்கில் பல விதவேலை செய்துள்ளவுமான கம்புகளைப்பிடித்துக் கொண்டு போவதும் உண்டு. இதன் பருத்தவும், சிறுத்தவுமான குழல்களில் அநேகம் ஏழைகள் பல சாமான்களை வைத்துக் கொள்வதுமுண்டு. அடுப்பூதும் குழல்களும் இவைகளே. தூண்டில்க் குச்சிகளும், மாடு வெருட்டும்குச்சிகளும், இதனுடையவைகளே. மன்னர்களின் தலைக்குமேல் வளைந்து விளங்கும் பல்லக்குக் கொம்புகளும் இவைகளேயாகும். ஈசுவரன், பிரபுக்கள், அரசர்கள் தங்கப் போடும் பந்தல்கள், பாட்டைசாரிகள் தங்கக் கூடியதாய் இருக்கும் தண்ணீர்ப் பந்தல்கள், இவைகளுக்கும் இம்மூங்கில் இல்லாவிட்டால் சிறப்பிராது. மானிடர் இப்படிப்பட்டப்பயன்களை யனுபவித்துவிட்டு, மண், பெண், பொன்னாசைகளை விட்டு யமனுலகு செல்லும்போது அவர்களை வைத்துத்தூக்கிப் போவதற்கு இம்மரங்களே உதவும். இப்போது இம்மூங்கில் மரங்களை அரைத்துக்காகிதங்கள் செய்வதாகவும் சொல்லுகிறார்கள்.

இதன் முளையாகிய குருத்துகளை ஒரு அடி நீளுவதற்குள் ஒடித்துவந்து குறைமாதப் பிரசவ ஸ்திரீகளுக்கு மருந்தாக உபயோகிப்பதும் உண்டு. இன்னும் மனுஷியபுத்தியால் எவ்வளவு செய்யமுடியுமோ அவைகளுக்கும் உதவும் இம்மரத்தை வெகுவாய் அலக்ஷியஞ் செய்து வருகிறார்கள்.

இப்படிப்பட்ட இன்றியமையாச் சாதனத்தை அலக்ஷியம்செய்து விட்டு, சேலம் ஜில்லா மலைகளிலிருந்தும், மலையாளத்து மலைகளிலிருந்தும் பல செலவுகளுடன் கொண்டுவந்துவிற்கும் வியாபாரிகளிடத்தில் விசேஷ ஆதாயங்கொடுத்து வாங்கியே உபயோகிக்கின்றார்கள். இம்மடமைக்கு என் செய்யலாம்? 30 வருஷங்களுக்குப் பிறகு மூங்கில்கள் பூத்துவிடும். அம்மூங்கில்கள் வலுவுடையதாக இரா. தண்ணீரில்ப் போட்டு எடுத்து உபயோகிக்கினும், ஓர் விதப்பூச்சி(உளு) அதன் மதுர ருசிக்குச் சதா துளைத்து சாம்பலைப்போன்ற பொடிகளை வெளியே தள்ளும். அடிமுதல் நுனிவரையில் ஊசித் துவாரமாக அம்மரத்தைத் துளைத்து மரத்திற்கு பலக்குறைவை உண்டாக்கும். அப்பொழுது அந்தக் குத்துகளை ஜாடாவாய் வெட்டியே விடவேண்டும். வெட்டாமல் இருந்தாலும் அவைகளின் கீழ்முளைகள் முளையா. சில குத்துக்களை மட்டில் விதைக்காக விட்டு வைப்பது அவசியம்.

தி. பி. சுப்பராய அய்யர்.



## CULTIVATION OF SUGAR CANE.

## கரும்பு சாகுபடி.

மானாவாரிக் குளங்களிலும் கால் புரவுகளிலும் நன்செய்ப் பயிர் செய்யும்போது சில சமயங்களில் மழையின்மையால் தண்ணீர் தட்டுண்டாகிறது. 10, 15 நாட்கள் கழித்து தெய்வாதீனமாய் சிறுமழை பெய்து கொஞ்சம் தண்ணீர் பாய்ச்சலாதாரங்களுக்கு வருகிறது. இப்போது தொடர்ந்து பல வருஷங்களாய் இப்படி சம்பவித்துக்கொண்டிருக்கிறதென்று எல்லாருக்கும் நன்றாய்த் தெரிந்திருக்கும். இப்படித் தண்ணீர் தட்டுண்டாகும் காலங்களிலெல்லாம் நன்செய் நிலங்களில் நெல்பயிர் காய்ந்து, கருகித் தீவடைகின்றது. அல்லது மணி பிடியாகி விளைவு வெகுவாய்க் குறைந்து போகின்றது. இந்தப் பெருங்கேட்டை நிவர்த்திக்க அநேகர் வாழை, கரும்பு, முதலிய பயிர்களை அந்நிலத்தில் பயிரிட உத்தேசித்திருக்கிறார்கள். இப்பயிர்களில் கரும்பு விசேஷமானதாலும் தக்க லாபந்தரக்கூடிய பயிரானதாலும், அநேகர் அந்தப் பயிரையே சாகுபடி செய்யப் போவதாய்ச் சொல்லிக் கொண்டிருக்கின்றனர், சிலர் கிணற்று இறவையால் புன்

செய் நிலங்களிலும் கரும்பு சாகுபடி செய்ய உத்தேசிக்கிறார்கள். ஆனால் கரும்பு சாகுபடி செய்வதில் அதிக ஜாக்ரதையுடனிருந்து அதிக கவனத்தையும் செலுத்தவேண்டும்.

கரும்பு சாகுபடிக்கு அதிக களிப்பில்லாமல் மண்மணல் மிஸ்ரமாயிருக்கும் நிலமும் அடிமண் சரள் காலாயிருக்கும் நிலமும் நன்றாய் லாயக்கானது. தண்ணீர் பாய்ச்சினால் மண்ணின் வழியாய் கீழேவடியாமல் தேங்கி நிற்கும் நிலம் கரும்பு சாகுபடிசெய்யத் தகுந்ததில்லை. தற்காலத்தில் செய்யும்விதமாய் சமதளமான பாத்திகளிலும், பாத்திகளுக்குள் கேணிபிடித்தும் கரும்பு நடுவதால் ஜாஸ்தியான மாசூல் கிடையாமல் போவதுமன்றி அப்படி நடுவதற்கு விதைக்கரும்பு அதிகமாகவும் அவசியமாகவுமிருக்கும். அநேக இடங்களில் அடியில் விவரித்திருக்கும் பிரகாரம் நீண்ட கிடங்குகள் வெட்டி அவைகளில் கரும்பு நடுவதால் அதிக லாபம் கிடைத்திருக்கிறது.

கரும்புநட உத்தேசித்திருக்கும் காலத்திற்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்னேயே நிலத்தை ஒன்று அல்லது இரண்டுதரம் நன்றாய் இடைக்கட்டையின்றி உழுது போடவேண்டும். அதில் ஒரு அடி ஆழத்திலும் ஒரு அடி அகலத்திலும் நீண்ட கிடங்குகள் தோண்டவேண்டும். இப்படித் தோண்டும் ஒரு கிடங்குக்கும் மற்றொரு கிடங்குக்கும் இடையே மூன்று அடி காலி இடம் இருக்க வேண்டும். இப்படித் தோண்டியிருக்கும் கிடங்குகளில் மழைத்தண்ணீர் கட்டி நிற்காமல் வடிவதற்கு அக்கிடங்குகளின் கோடியில் பள்ளமான பக்கத்தில் ஒரு வடிகால், கிடங்கை விடச் சற்று ஆழமாகத் தோண்டிவைக்க வேண்டும்.

கரும்பு நடுவதற்காகத் தோண்டும் கிடங்குகளில் எடுக்கும் மண்ணை அவைகளுக்குஇடையே மூன்றுஅடி அகலம் விட்டிருக்கும் காலியிடத்தில் போடவேண்டும். இது நன்றாய்க் காய்ந்து உலர்ந்த உடனே மூன்று அல்லது நாலு அங்குல ஆழத்திற்கு இந்த மண்ணைக் கிடங்குகளில் தள்ளி சாம்பல் அல்லது நன்றாய் மக்கின தொழு எருவையும் போட்டுக் கலக்கவேண்டும். சாம்பலாவது எருவாவது ஏக்கர் ஒன்றுக்கு இருபதுவண்டி. வீதம் போடவேண்டும். அதன்பின் கிடங்குகளில் தண்ணீர்ப்பாய்ச்சி தொளியாக்கி விதைக்கரும்பை நடவேண்டும். நோய் நொடிகள் தாக்காத கரும்பிலிருந்து விதைக்கணுக்கள் தயாரிக்க வேண்டும். ஒரு விதைக்கணுவுக்கும் மற்றொரு விதைக்கணுவுக்கும் இடையே ஒரு அடி யிடம் விட்டு நடவேண்டும். இவ்விதம் கணுக்களை நடுவதில் அவைகள் மண்ணில்ஒரு அங்குலத்திற்கு அதிக ஆழத்தில்புதையாமல் பார்க்கவேண்டும். மேலும் கணுக்களிலுள்ள முளைகள் அடியில் புதைபடாமல் பக்கங்களிலிருக்கும்படியாய் நடவேண்டும். மண்ணின் இயற்கைக்குத் தக்கபடியும் ஈரங்காக்கும் சுபாவத்திற்குத் தக்கபடியும் மழை பெய்வதற்குத் தக்கபடியும் ஐந்து முதல் பத்துநாளைக்கொருதரம் கரும்புக்கால்களில் தண்ணீர் பாய்ச்சவேண்டும். கிடங்குகளில் கரும்பு நட்டவுடன் இடையிலுள்ள மூன்று அடி அகலமான காலிநிலத்தில் மழைபெய்த உடனாவது அல்லது தண்ணீர் விட்டு நனைத்தாவது சடம்பு என்னும் சணல் விதையை விதைத்து வைத்தால் ஆறுவாரம்அல்லது இரண்டு மாதத்தில் அந்தப் பயிர் வளர்ந்துவிடும். அதை வெட்டி கரும்புப்பயிருக்கு தழை எருவாக உபயோகிக்கலாம். எரு அகப்படாத இடங்களிலும் தூரத்திலிருந்து எருவைவண்டியில் ஏற்றிக்கொண்டு



வர வேண்டியிருக்கு மிடங்களிலும் இது முக்கியமாய் செய்யத் தக்கது. கரும்பு நட்ட ஒரு மாதத்தில் களை பரண்டிகளால் லேசாய்க் கிடங்குகளிலுள்ள மண்ணைப் பரண்டி, களைப் பூண்டுகளை பறித்தெறியவேண்டும். இதன் பின் புண்ணாக்காவது மீன் எருவாவது கக்கூஸ் எருவாவது தொழு எருவாவது கொண்டுவந்து முளைத்துவரும் கரும்புத் தூர்களைச் சுற்றிலும் கொஞ்சம் கொஞ்சம் போட்டு பக்கத்திலுள்ள மேட்டிலிருந்து கொஞ்சம் மண்ணையெடுத்து எருவை மூடவேண்டும். கரும்புநட்ட இரண்டு மாதத்தில் சின்ன களைக்கொட்டைக்கொண்டு களை வெட்டவேண்டும். மண் காய்ந்துவரும் போது இன்னுங் கொஞ்சம் எருவைப்போட்டு மறுபடியும் கொஞ்சம் மண்ணைவெட்டி எருவை மூடவேண்டும். இப்போது கிடங்குகள் சுமார் ஒன்பது அங்குல உயரத்திற்கு நிறைந்துவிடும். கரும்பு நட்ட மூன்று மாதத்தில் மறுபடியும் களை வெட்டி எருவிட்டு மேடுகளிலுள்ள மண்ணைவெட்டி கிடங்கை முழுவதும் நிறைத்துவிடவேண்டும். இதற்குப்பின் ஒருமாதம் கழித்து பயிர் வரிசைகளின் ஊடே முன் மேடாயிருந்த காலியிடத்தை வெட்டி தண்ணீர் பாயும் காலாக்கி மண்ணைக் கரும்புத்தூர்களில் அணைத்து வைக்க வேண்டும். இப்படிச் செய்யும் கால்கள், முன் கரும்பு நடப்பட்ட ஆழம் எதுவோ அந்த மட்டத்திலிருக்கவேண்டும், கரும்பு நடவேண்டிய காலம் இப்போது தான், சித்திரை மாதம் முடிவுக்குள் நட்டாலும் போதுமானது. ஏக்கர் ஒன்றுக்கு ஆறாயிரம் விதைக்கணுக்கள் நட வேண்டியதாயிருக்கும்.

கிருஷிகன்.

---

## BUSINESS TRAINING.

## வியாபாரப் பயிற்சி.

பண்டம் வாங்கலும் பண்டம் விற்றலும் வியாபாரம் என்று சொல்லப்படும். அநேக தேசங்களில் விளைகின்ற வஸ்துக்களை யெல்லாம் வியாபாரி கிரயத்திற்கு வாங்கி பிறருக்கு விற்கிறான். ஒரு மனிதன் நெற்பயிர் மட்டில் செய்து கொண்டே யிருப்பதாய் எண்ணிக் கொள்வோம். அந்த தானிய மாசூலைவிற்றே அவன் தன் குடும்பத்திற்கு வேண்டிய, ஆடையாபரணங்கள், இதர உணவுகள், இவைகளை வாங்குகிறான். ஆகவே நமக்கு வேண்டியதையெல்லாம் நாமே உற்பத்தி செய்து கொள்ள முடியாததலால், வியாபாரி, தான் லாபம் சம்பாதித்துக் கொள்ளுவதோடு, எங்கெங்கோ உற்பத்தியாகும் பண்டங்களை யெல்லாம், நமக்கு அதிக சுளுவில் சேகரித்துக் கொடுக்கிறான். வியாபாரிகள் தாமே எல்லாச்சரக்குகளையும் உற்பத்தி செய்யாவிட்டாலும் அநேக தேசத்து சரக்குகளை விற்று லாபம் சம்பாதிக்கிறார்கள். ஆதலால் ஒரு நல்ல வியாபாரி அதாவது வியாபாரத்தில் நல்ல லாபம் நியாய வழியில் சம்பாதிக்கப் பிரியமுள்ளவன், என்ன செய்யவேண்டு மென்பதை ஆலோசிப்போம். வியாபாரம் துவக்குகின்ற ஒவ்வொருவனும், தான் எடுத்துக்கொண்ட வியாபாரத்தின் உண்மைகளை யெல்லாந் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். சாதாரணமாய் இந்த அநுபோகத்தை யொட்டிய புத்தியை, வியாபாரத்தோது என்பார்கள். நல்ல வியாபாரி அடியிற் கண்ட மூன்று சங்கதிகளில் கண்ணுள்ளவனாயிருக்கவேண்டும்.

(1) வியாபாரத்தின் உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும். (2) வாடிக்கையாய்வாங்குபவர்களுக்கு அவசியமாய் வேண்டியசரக்கு

களைக் குறைவில்லாமல் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும். (3) வாடிக்கை யேற்படுத்திக் கொள்ளவேண்டும்.

முதலாவது, வியாபாரத்தோதைப்பற்றித் தெரிந்துகொள்ள, ஒருவன் செம்மையாய்ப் படித்திருக்கவேண்டும். பிறர் அநுபோகங்களைக் கேட்டுத்தெரிந்து கொண்டு அதன்படி நடக்க வேண்டும். அநேக வியாபாரிகளோடு கலந்து பேசி விஷயங்களை மனதில் வாங்கிக்கொண்டு ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேணும்.

வியாபாரம் செய்ய படிப்பு வேண்டியதில்லையென்று சிலர்எண்ணுகிறார்கள். இதைப்போல் தவறான அபிப்பிராயம் வேறொன்றில்லை. யாரோ ஒருவர் படிக்காதவரா யிருந்தும் பணம் சம்பாதித்திருக்கிறார் என்று சொல்லி, அந்தக் காரணம்பற்றி, படிக்காமலிருந்துவிடக்கூடாது. படிக்காதவர் ஒருவர் ஸம்பாதித்திருந்தால், அது ஏதோ அதிருஷ்டமேயொழிய வேறில்லை. அவர் படிக்காமலிருந்தாலும் சில நல்ல குணங்கள் அவசியம் அவரிடமிருந்திருக்கும். அவை இல்லா விட்டால் அவர் நஷ்டமே யடைந்திருப்பார்என்பதற்குச் சந்தேகம் இல்லை. படித்து அநுபோகத்தோடு செய்யும் வியாபாரத்தினால், படிக்காமலும் அநுபோகமில்லாமலும், செய்யப்பட்ட வியாபாரத்தை விட, அதிகலாபம் சம்பாதிக்கலாமென்று உறுதியாய்ச் சொல்லலாம்.

ஆனால் வியாபாரத்தைக் குறித்துச் சொல்லும் புஸ்தகங்கள் அதிகமில்லை யென்று சொல்லலாம். படிக்க அபேக்ஷை யுள்ளவர்களுக்கு புஸ்தகங்கள் அநேகம் தமிழில் இல்லாமல்போனாலும் இங்கிலீஷில் இருக்கின்றன. மேலும் புஸ்தகங்களைப் படித்த மாத்திரத்தில் வியாபார விஷயம் எல்லாம் உடனே தெரிந்துவிட்டதென்று எண்ணக்கூடாது. புஸ்தகங்களிலிருந்து நாம் தெரிந்து கொள்வதுமிகவும் சொற்பம். வியாபாரம் எப்படிச்செய்கிறதென்பதைப்பற்றி மட்டில் தெரிந்து கொண்டால் போதாது. வியாபாரத்தை நேரே செய்யப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். வியாபாரப்பழக்க வழக்கம் புஸ்தகத்தைப்படிப்பதால் வராது. நேரே ஒருவியாபாரியிடத்தில் அநேகநாள் பழகினாலன்றி, இந்தப் பழக்கம் தெரியவராது. யோசித்துப் பார்த்தால், பெரிய வியாபாரிகள் எல்லாரும் ஆதியில் ஏதாவது ஒரு கடையில் வேலைக்கு அமர்ந்தவர்களாகவே யிருப்பார்கள். அவர்கள் இப்படி யிருந்ததே பிற்காலத்தில் அதிக உபயோகமாய் நின்றிருக்கும்.

ஒரு பெரிய வியாபாரியை அடுத்து வேலை தெரிந்து கொள்ளுகிறகாலத்தில், நாம் முக்கியமாய்த் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் ஒன்று உண்டு. எந்தப்பொருளைப் பார்த்தாலும், அது என்ன பெறுமென்று சொல்லத் தெரிந்து கொள்ளவேண்டும். இந்த பழக்கத்திற்கு மதிப்பு இடுகிறது என்றுபெயர். மதிக்கத்தெரியாதவரை பிறரும் மதிக்க மாட்டார்கள். மதிப்பிடத் தெரியாதவன் தனது மூடத்தனத்தை ஏதாவது ஒரு நாளில் வெளியாக்கித் தன் வியாபாரத்தைக் கெடுத்துக் கொள்வான். அப்படிப் பட்டவன் பிறரை மோசஞ்செய்வதோடு தானும் மோசம்போவான். அவனுடைய பெருமையும் ஒரே தினத்தில் கெட்டுப் போய் நஷ்டம் வரும். சூக்ஷ்மபுத்தியுள்ள வேறொருவன் இந்தப் பழக்கக் குறைவை ஒரு நிமிஷத்தில் கண்டு கொள்வான். அப்படி கண்டுகொண்டால் இவனை ஏமாற்றாதுவிடான். அவ்விதம் ஏமாற்றப் பட்டவன் தான் ஏமாந்ததைதெரிந்து கொள்ளாமல் பிறருக்கு தான் வாங்கிய கெட்டசரக்கை உயர்ந்ததென்று ஸகஜமாய் விற்றாலும், அல்லது, அவன் மோசம் செய்கிறானென்று பிறர் கண்டுகொண்



டாலும், அந்த வியாபாரியின் வாடிக்கை அன்றே நின்றுவிடும். வயது சென்றவர்களுக்கு மதிப்பிடும் பழக்கம்வருவது கடினமாகும். வாலிபருக்கோ இந்தப் பழக்கம் சீக்கிரத்தில் வந்துவிடும். அதற்கு கண், முதலிய இந்திரியங்கள் அதிக கூர்மையாக இருக்க வேண்டும்.

முதன்முதல் இந்தப் பழக்கத்தைத்தெரிந்து கொள்ள ஏதாவது ஒரு பலசரக்குக் கடையில் அமர்ந்திருப்பது மிக்க உபயோகமாகும். பெரிய மளிகையில் அமர்ந்திருந்தால், மதிப்பு செய்யும் பழக்கம் அவ்வளவு சீக்கிரத்தில் தெரியவராது. ஏனெனில் பெரிய வியாபாரிகள் சரக்குகளை ஒப்பந்தத்தின் பேரில் வாங்குகிறார்கள். ஆதலால் அனேகமாய் விலையைப்பற்றி மட்டில் வாக்குவாதங்கள் நடக்குமேயன்றி, சரக்கைப் பற்றி ஒரு பேச்சும், மளிகையில் நடக்க நியாயமில்லை. சரக்கு இப்படி யிருக்க வேண்டுமென்று ஏற்கனவே தீர்மானித்திருப்பார்களாதலால் எந்தச் சரக்கை எவ்வளவு மதிப்பிடுகிறார்கள் என்று ஒரு வாலிபன் தெரிந்து கொள்ள முடியாது. பலசரக்குக் கடையில் இந்தப் பழக்கம் பிரதி நித்தியமும் தெரிந்து கொள்ளலாம். செட்டாய்க் குடித்தனம் செய்யும் குடும்பஸ்திரீ யொருத்தி கடைக்கு ஒரு சரக்கு வாங்க வருவாள். வாங்கும் சரக்கின் குணங்களை அவள் மனதில் வைத்துக்கொள்ள மாட்டாள். இது மணம் இல்லை, இது சொத்தையாயிருக்கிறது, இதில் பூச்சியதிகம், இது மிகவும் பழையவஸ்து, என்று ஒவ்வொரு சரக்கின் குணத்தை யெடுத்துப் பயமில்லாமல் சொல்வாள். கடைக்காரன் சொல்வதைச்சரியென்று ஒத்துக் கொள்ளவும் மாட்டாள். இவைகளைப் பார்த்து மதிப்பிடும் பழக்கத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

பலசரக்குக் கடைக்குவரும் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு குற்றமாவது அல்லது நல்லவிஷயமாவது சொல்லாமற் போகமாட்டார்கள். மேலும் ஒவ்வொரு சரக்கும் வாங்கிய விலை தெரிந்தவனாதலால், அதை விற்பதில் லாபம் கிடைக்கிறதா, இல்லையா வென்பதை பிரத்யக்ஷமாய்த் தெரிந்துகொள்ளலாம். அப்படி நஷ்டம் வந்துவிடுகிற பக்ஷத்தில் அதற்குக் காரணங்களை வியாபாரிசொல்லும்போது அவற்றையுந் தெரிந்து கொள்ளலாம். இவ்விதமாக சரக்குகளை மதிப்பிடும் வழக்கத்தைக் கூடிய சீக்கிரத்திலேயே ஒரு சிறுவன் அறிந்து கொள்ளலாம்.

கணக்கு எழுதி வைத்தல், கடிதங்கள் எழுதல், இவைகள், அவசியம் தெரியவேண்டும். கணக்கெழுதுவதில், பத்துவரவு, பார்த்தவுடன் தெரியும்படி எழுதிவைப்பதால் அநேக அநுகூலங்கள் உண்டு.

கடிதங்கள் எழுத அதிகப் பழக்கமும் புத்திசாலித்தனமும் வேண்டும். வியாபார விஷயமாய் எழுதும் கடிதத்தை மிகவும் சிறந்த நடையில் எழுதக்கூடாது. நமது கருத்தைப் பிறர் அறிய வேண்டும். ஆதலால், அதைத் தெளிவாயும் சுருக்கமாகவும் சொல்லவேண்டியது அவசியம். சொன்ன விஷயத்தையே திருப்பித்திருப்பிச் சொல்லக்கூடாது. அல்லது அதிக சுருக்கமாக எழுத ஆசைகொண்டு விஷயந்தெரியாமல் இருக்கவுங்கூடாது. மேலும் எழுதும் விஷயத்தில் எந்த வியாபாரத்திற்கு எந்தப் பதங்கள் ஸகஜமோ அவைகளையே உபயோகிக்கவேண்டும்.

ஏதாவது ஒரு வியாபாரத்தைப்பற்றி யெல்லாவற்றையுந் தெரிந்து கொள்வதற்காகவே, வியாபாரம் செய்யப்போகிறவர்கள் முதலில் வேறொருவரிடத்தில் வேலைக்கு அமருகிறார்கள். ஒரு சரக்கு எங்கே உற்பத்தியாகிறது,

எங்கே விலைசகாயம், எங்கே அதிகவிலை என்ற பல விஷயங்கள் தெரியாதவன் வியாபாரத்திற்கு உதவமாட்டான். அரிசி வியாபாரம் செய்பவனுக்குக் கம்பு, கேழ்வரகு முதலிய சரக்குகளைப்பற்றியுந் தெரிந்திருக்க வேண்டும். அகவிலையின் போக்கும், நாட்டின் வளப்பமும், சரக்குகள் விசேஷமாய் விற்கத் தகுந்த இடம், காலம், மனிதர், முதலிய யாவுந்தெரிந்திருக்க வேண்டும். இதெல்லாந்தெரிந்துகொண்டவன் சொந்த வியாபாரம் செய்ய நினைக்கும்போது, வியாபாரத்திற்கு முக்கியமாய் எவ்வளவு முதல் வேண்டு மென்பதைப் பற்றி யோசிக்கவேண்டும்.

## BANKU PADDY.
## பாங்கு நெல்.

இது சிலவருஷங்களுக்கு முன்னால் மத்திய மாகாணங்களி லிருந்து நமதுராஜதானிக்கு நூதனமாய்க் கொண்டுவரப்பட்ட ஒரு தினுசு நெல். அதன் அரிசி வெண்மையாயும் நீளமாயும்நேர்த்தியாயும் மெல்லியதாயும் இருக்கும். ஆகையால், அது நாகரிகம் மிகுந்த ஜனங்களின் போஜனத்துக்கு ஏற்ற அரிசியாகும். ஆனால், பாங்கு நெல் அரிசியானது நீளமாயிருப்பதனால், அதைக்குத்தி அரிசியாக்கும்போது மற்ற உருண்டை அரிசியுள்ள தினுசுகளில் உண்டாவதைப் பார்க்கிலும் அதிகமான குறுநொய் உண்டாகிறது. புழுங்கல் அரிசி குத்திச்சாப்பிடும் ஜனங்களுக்கோ இதனால் பாதகமில்லை. ஏனெனில் நெல்லை அவித்துக் குத்தும்போது அரிசி அதிகமாய் உடைந்து குறுநொய் ஆவதில்லை. கார்போகத்தில் சாதாரணமாய்ப் பயிரிடும் மற்றத் தினுசுகளைப் பார்க்கிலும்பாங்கு நெல் மெத்தச் சிறந்தது. மேலும் அதில் கிடைக்கும் மேனியும் அதிகம். அது பக்கம் வைத்துக் கிளைத்து மூடுகட்டும் சுபாவம் அதிகமாயுள்ளது. ஒற்றைமுதலாய் நட்டாலும், கலப்பாய் விதைத்தாலும் சிலாக்கியமான மாசூல் தரத்தக்கது காரில் சாகுபடி செய்தால் இது விளைவாக 4 முதல் 4½ மாதம் வரையில் செல்லும். வடமலையாளம் ஜில்லாவில் முதல் போகம்நெல் சாதாரணமாய் செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் அறுவடையாகும். அங்கே இந்த தினுசு விளைவுக்கு வர 5 மாதம் சென்றபோதிலும், விசேஷித்த பலனைக் கொடுக்கிறது. சம்பா சாகுபடி காலத்தில் (அதாவது திருநெல்வேலியில் பிசானம் மேல் கரையில் இரண்டாம் போகம்) இந்த தினுசு 4 முதல் 4½ மாதத்தில் விளைவுக்கு வரும். இந்தக் காலத்தில் தண்ணீர்த்தட்டு சம்பவிக்கக்கூடிய இடங்களிலும், ஆறுமாதப் பயிருக்குத் தண்ணீர் இறைப்பதில் நேரிடும் செலவுமட்டுக்கு மிஞ்சினதாயிருக்கும் இடங்களிலும், இந்தத்தினுசு நெல் சாகுபடி செய்யலாயக்குள்ளது. மற்ற சாதாரண தினுசு நெல் பயிரைவிட இந்தப்பாங்கு நெல்பயிர், தண்ணீர்த்தட்டு அதிகமாய்த் தாங்குவதுமன்றி, அந்தந்த காலத்துக்குத் தக்கபடி மற்ற தினுசுகளைப் பார்க்கிலும் சிலாக்கியமான மேனி தரும். ஆனால் பாய்ச்சல் ஆதாரங்களில் ஆறுமாதப் பயிருக்குப் போதுமான தண்ணீர் இருக்கும் பக்ஷத்தில், இதைவிட சம்பா நெல்லையே பயிரிடுவது உசிதமாகும். சிறுபாத்திகளில் இந்த தினுசு நெல்லை சாகுபடி செய்து கேழ்வரகுப் பயிருக்குத் தண்ணீர் இறைப்பது போல் ஐந்து நாளைக்கொருவிசை தண்ணீர் இறைத்து கேழ்வரகு பயிருக்குச் செய்வது போலவே பருவம் செய்து வந்ததில் சிலாக்கியமான மாசூல் கிடைத்தது. இதனால், இந்தத் தினுசுக்கும், நஞ்சையில் சாகுபடியாகும் மற்றதினுசுகளுக்கும், தண்ணீர்த் தட்டைத் தாங்கும்



இயற்கையில் எவ்வளவு பேதமிருக்கிற தென்பது நன்றாய் வெளியாகும். ஜனவரி முதல் மேமீ வரையுள்ள வேனிற்காலத்தில் இது சாகுபடி செய்யத் தக்கதல்ல. ஏனென்றால் அம்மாதங்களில் சாகுபடி செய்தால் அது விளைவுக்குவர, ஜுன் ஜுலை மாதங்களில் சாகுபடி செய்யும் பயிர் அறுவடையாகும் காலம் வரையில் செல்லும்.

பாங்குநெல் விதை வேண்டியவர்கள் தென்னார்க்காடு ஜில்லா, பாலூர் சர்க்கார் விவசாயப் பண்ணையின் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். அங்கே ரூபா 1க்கு 9பட்டணம்படி விதை விற்கிறார்கள். திருநெல்வேலி ஜில்லா சிவகிரி ஜமீன் பண்ணை மானேஜரவர்களுக்கும் எழுதினால் பாங்கு நெல்விதை யனுப்புவார்கள். இந்த இரண்டு பண்ணைகளிலும் வயல்களில் விளைவாயிருந்த பயிரில் கதிர்களைப் பொறுக்கி யெடுத்து விதை சேகரித்து வைத்திருக்கிறார்கள். ஆகையால் அது சிலாக்கிய மாயிருக்கும்.

வைகாசி மாதத்தில் பாங்குநெல் விதைக்க வேண்டியது. அல்லது நாற்றுவிட வேண்டியது. விதைக்கும் பக்ஷத்தில் வயல்களை இப்போதே உழுது பருவஞ்செய்யவேண்டும். நாற்றுவிடும் பக்ஷத்தில் நாற்றங்கால்களை உழுது எருவிட்டுப் பருவம் செய்ய வேண்டும்.

1317, 1318 பஸலிகளில் பாங்கு நெல் மதுரை விவசாயசங்கத்தாரின் பண்ணையில் பயிர் செய்யப்பட்டது. முதல் சொல்லிய வருஷத்தில் பயிரைக் கோடை காலத்தில் போட்டு ஸாதாரணமாய் நெல்வயல்களுக்கு பாய்வது போல் தண்ணீர் விடாமல் இறைப்புப்பாய்ச்சப்பட்டது. பயிர் 5 அடிக்குமேல் வளர்ந்தது. முற்ற 6 மாதம் சென்றது. ஏகருக்கு 864 பட்டணம் படி கண்டது. வைக்கோல் அபரிமிதமாய்க் கிடைத்ததாம்.

1318 பஸலியில் அடுத்த வயலில் ஸாகுபடி செய்யப்பட்டது. இந்தத்தடவை 6 அங்குலம் முதல் 9 அங்குலம்வரையில் தூரம் விட்டு ஒற்றை அலகாய் நடப்பட்டது. 15 முதல் 40 வரையில் கிளைகள் உண்டாயின. பயிர் மூன்று அடிக்கு மேல் வளரவில்லை. ஏகருக்கு பட்டணம் படியால் 1,008 படி கண்டு முதலாயிற்றாம்.

## PROVINCIAL GOVERNMENTS.
## மாகாண கவரன்மெண்டுகள்.

இந்தியா கவரன்மெண்டாருடைய அதிகாரத்துக்கு உட்பட்டு அங்கங்கே மாகாண கவரன்மெண்டுகள் இருக்கின்றனவென்று மார்ச்சு மாஸத்து ஸஞ்சிகையில் சொல்லப்பட்டது. இப்படிக்கு இந்தியா முழுவதிலும் பதின்மூன்று மாகாண கவரன்மெண்டுகள் இருக்கின்றன. அவைகளில் எட்டு பெரிது, ஐந்து சிறிது. ஒவ்வொரு மாகாண கவரன்மெண்டுக்கும் லோகல் கவரன்மெண்டு என்றும் சொல்வது உண்டு. பெரிய எட்டு மாகாணங்களாவன:—(1) சென்னை ராஜதானி, (2) பம்பாய் ராஜதானி, (3) வங்காள மாகாணம், (4) ஆக்ராவும் அயோத்தியும் சேர்ந்த ஐக்கிய மாகாணங்கள், (5) பஞ்சாப் மாகாணம், (6) பர்மா மாகாணம், (7) கிழக்கு வங்காளமும் அஸ்ஸாமும் சேர்ந்த மாகாணம், (8) மத்திய மாகாணங்கள்.

ஐந்து சிறிய மாகாணங்களாவன:—

(9) வடமேற்கு எல்லை நாடு.
(10) பிரிடிஷ் பெலுஜிஸ்டான்.
(11) குடகு.
(12) ஆஜ்மீர் மிர்வாரா.
(13) அந்தமான் தீவுகள்.

மேலேகண்ட பதின்மூன்று மாகாணங்களில் மதராஸ் ராஜதானியும் பம்பாய் ராஜதானி

யும் தனித்தனியே ஒரு கவர்னர் ஆளுகைக்கு உட்பட்டிருக்கின்றன. மூன்று முதல் ஏழுவரையில் எண்ணிடப்பட்ட ஐந்து மாகாணங்கள் தனித்தனியே ஒரு லெப்டினெண்டு கவர்னர் ஆளுகையிலும் மற்றவை சீப் கமிஷனர் வகையராவுடைய ஆளுகையிலும் இருக்கின்றன.

கவர்னர் உத்தியோகத்திற்கு ஒருவித மேன்மையும் மரியாதையும் உண்டு. கவர்னர் வேலைக்கு இங்கிலாண்டில் அனுபோகமும் அந்தஸ்துமுள்ளவர்களை அரசனே நேரில் நியமித்து அனுப்புவார். இவர் 5 வருஷம் கவர்னர் வேலை பார்க்கவேண்டியது. கவர்னருக்கு யோசனை சொல்ல இரண்டு மெம்பர்களுள்ள ஒரு கவுன்ஸில் அதாவது நிர்வாக ஸபை உண்டு. இந்த இரண்டு மெம்பர்களும் ராஜாவாலேயே நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் கலெக்டரைப் போன்ற இந்தியன் ஸிவில் ஸர்விஸில் சேர்ந்தவர்களாயும் இந்தியாவில் பன்னிரண்டு வருஷங்களுக்குக் குறையாமல் வேலைபார்த்தவர்களாயுமிருக்கவேண்டும். கவர்னரும் அவருடைய நிர்வாக ஸபையிலுள்ள இரண்டு மெம்பர்களும்சேர்ந்து மாகாணத்தைப் பரிபாலித்து வரவேண்டியது. சாதாரணமாய் கவுன்ஸில் மெம்பர்கள் அபிப்பிராயத்தை அனுசரித்தே கவர்னர் நடந்து வரவேண்டியது. ஆனாலும் அவஸர ஸமயங்களில் கவுன்ஸில் மெம்பர்களுடைய அபிப்பிராயத்தை நிராகரித்துவிட கவர்னருக்கு அதிகாரம் உண்டு. சில வருஷங்களுக்குமுன் ஒவ்வொரு மாகாணத்துக்கும் பிரத்தியேக ராணுவங்களிருந்தபோது கவர்னருக்கு ராணுவ அதிகார சம்பந்தம் இருந்தது. 1895-ம் வருஷம் முதல் இந்தியாமுழுவதற்கும் ராணுவம் ஒன்றாகிவிட்டபடியால் மாகாண கவர்னர்களுக்கு ராணுவ சம்பந்தமான அதிகாரம் நீங்கிவிட்டது. சீமையிலுள்ள ஸெக்ரெடெரி ஆப் ஸ்டேட்டுக்கு நேரில் எழுதி வருகிற ஸ்வதந்தரமும், கவர்னர் ஜனரலுடைய சபை தன் மாகாணத்தில்கூடுமானால் அதில் ஒரு சிறப்பு மெம்பராகச் சேரும் கௌரவமும் கவர்னருக்கு உண்டு. தவிர, கவர்னர்ஜனரலைப்போல் கவர்னரும் மாக்ஷிமைதங்கிய என்பதற்குப்பிரதி பதமாகிய "யுவர் எக்ஸலன்ஸி" என்ற மரியாதை வார்த்தையுடன் அழைக்கப்பட வேண்டியவர். கவர்னருக்கு "பாடிகார்டு" என்ற மெய்க்காவலர் உண்டு. அவருக்கு பார்லிமெண்டு ஆக்டுப்படி வருஷம் ஒன்றுக்கு ரூ. 1,20,000 சம்பளம். கவுன்ஸில் மெம்பருக்கு 64,000 ரூசம்பளம்.

மதராஸ், பம்பாய் ராஜதானிகளைத் தவிர மற்ற மாகாணங்கள் லெப்டெனண்டு கவர்னர், சீப் கமிஷனர், இவர்களுடைய ஆளுகையின் கீழ் இருப்பதாக மேலே சொன்னோம். லெப்டினெண்டு கவர்னர் உத்தியோகம் பார்லிமெண்டு ஆக்டுப்படிஏற்பட்டது. சீப் கமிஷனர் உத்தியோகம் அப்படியல்ல. லெப்டினெண்டு கவர்னர்வேலைக்கு நியமிக்கப்படுகிறவர் இந்தியாவில் 10 வருஷங்களுக்குக் குறையாமல் வேலை பார்த்து அனுபோகமுள்ள வராயிருக்கவேணும். இவரை அரசனுடைய சாங்கிஷனுக்குட்பட்டு கவர்னர் ஜனரல் நியமிக்கலாம். ஸெக்ரெடெரி ஆப்ஸ்டேட் சாங்கிஷனைப் பெற்று லெப்டெனெண்டு கவர்னருக்குள்ள அதிகாரங்களை கவர்னர் ஜனரல் அதிகப்படுத்தவும் குறைக்கவும் செய்யலாம். லெப்டெனெண்டு கவர்னருக்கு வருஷம் ஒன்றுக்கு லக்ஷம் ரூபாய்சம்பளம்.

சீப் கமிஷனர்கள் லெப்டெனெண்டு கவர்னர் அந்தஸ்துக்குக் கீழ்ப்பட்டவர்கள். இவர்கள் நியமனம் பார்லிமெண்டு ஆக்டை அனுசரித்ததல்ல. கவர்னர் ஆளுகையிலாவது லெப்டெனெண்டு கவர்னர் ஆளுகையிலாவது இல்லாத அனேகம் சிறு மாகாணங்கள் கவர்னர் ஜனரலுடைய பார்வையில் இருக்கின்றன. இவைகளை நேரில் சரிவரப்பார்த்துவர தனக்கு சாவகாசம் இல்லாததால் அங்கங்கே தன்னுடைய ஏஜண்டுகளாக தன் வருதிப்படி நடக்க சில அதிகாரங்களைக்கொடுத்து சீப் கமிஷனர் என்னும் சில உத்தியோகஸ்தர்களை கவர்னர் ஜனரல் நியமித்திருக்கிறார். சீப் கமிஷனருக்கு வருஷம் ஒன்றுக்கு ஐம்பதினாயிரம் ரூ. சம்பளம். ஆனால் மத்திய மாகாணங்கள் பிரார் மாகாணம் சேர்ந்து பெரிய மாகாணமாகிவிட்டபடியால் அவ்விடத்திலுள்ள சீப் கமிஷனருக்கு மாத்திரம் அறுபத்தீராயிரம் ரூ. சம்பளம்.

---



# AGRICULTURAL NOTES.
# விவசாயக் குறிப்புகள்.

---

### WELL SINKING IN MADURA.

**மதுரையில் கிணறு வெட்டுதல்.**—கிணறு வெட்டுவதற்குமுன் ஜலம் அகப்படும்அகப்படாது என்று அறிந்துகொள்ள பூமியில் தொளை போட்டுப்பார்க்க தமிர் போன்ற ஒருவித கருவி உண்டு. இது மதுரை விவஸாய சங்கத்தாரிடத்தில் இருக்கிறது. அவர்கள் கேட்பவர்களுக்கு வாடகையில்லாமல் இரவலாகக் கொடுத்து ஒரு மேஸ்திரியையும் அனுப்பி அவன் சம்பளத்தையும் ஆட்கூலியையும் சில்லரை ரிபேர் செய்தால் உள்ளூர்க் கொல்லக் கூலியையும் மட்டும் வசூல்செய்து வந்தார்கள். இதுவரையில் யந்திரத்திற்கு பெரிய ரிபேர்கள் ஏற்பட்டால் சங்கத்தின் செலவிலேயே நடந்து வந்தது. இந்தக் கருவியின் உபயோகம் ஜனங்களுக்கு தெரிந்து அநேகர் அதை உபயோகத்திற்கு வேண்டுவதால் இனிமேல் இனாமாகக் கொடுக்காமல் சொல்ப வாடகை வாங்குவார்களாம்.

### FIXING THE AGE.

**வயது சொல்லுதல்.**—மாட்டின் பல்லைப் பார்த்து வயது சொல்லுவதுண்டு. இரண்டு வருஷத்தில் பெரிய பல் இரண்டிருக்கும். வருஷத்தில் இரண்டு சேரும். 5 வது வருஷத்தில் வாய் கூடும். எட்டுப்பல் சேருவதற்கு 6 வருஷம் செல்லும். பின்னும் கொம்பின் கட்டுகளைப் பார்த்து வயது சொல்லலாம். இரண்டாவது வருஷத்தில் முதல் கட்டு. பிறகு வருஷத்திற்கு ஒன்று. நன்றாய் போஷிக்கப் படாத மாடுகளுக்கு அந்தந்த வயதில் பொய்க் கட்டு உண்டாகும்.

### FARMING TO ADVANTAGE.

**சுளுவாய்ப் பயிர் செய்யும் வழி.**—பயிர்செய்து விசேஷலாபம் சம்பாதிக்க சிலவழிகள் உண்டு. விலை வாசிகள் அதிகரிப்பதால் மட்டில் லாபம் அதிகமாகாது. அதிக செலவில்லாமல் பயிர் செய்து சாகுபடி உற்பத்திசெய்தால் அல்லாமல் லாபம் அதிகரிக்கமாட்டாது. மைசூரில் இருக்கும் எலியட் என்ற ஒருவர், சுளுவாய் பயிர் செய்யும் வகைகளை எடுத்துச் சொல்லுகையில், ஆடுமாடுகளுக்குத் தீனி அதிகச்செலவில்லாமல் புல்லே போதுமென்றும், பூமிக்கு வேண்டிய சுளுவான எரு, வேர்கள் அதிக ஆழம்போய் நின்ற மண்ணென்றும் சொல்லுகிறார். அப்படிப் பட்ட வேர் ஊன்றிய மண்ணைப் போட்டு பயிர் செய்வோமானால் நிலத்தில் ஈரம் நிற்கவும், செழிப்புக்கும் காரணமாகுமாம். அப்படிப்பட்ட மண்ணும் சுளுவாக கிடைக்கக் கூடியது

### GROUND-NUT.

**மணிலாக்கோட்டை.**— மலையாளம் ஜில்லாவிலுள்ள விவஸாய சங்கத்தார் கேட்டுக்கொண்டபடி அங்காடிபுரம் கிராமத்தில் ஒருவர் தன்னுடைய 1 ஏக்கரேட்டுள்ள சாதாரண புஞ்சையிலும், 2 ஏக்கரேட்டுள்ள தென்னந் தோட்டத்திலும் மணிலாக்கொட்டையை சாகுபடிசெய்து பார்த்தாராம். இரண்டு நிலத்திலுமாக ஏகர் 1க்கு 1,700 ராத்தல் கடலை கிடைத்ததாம். மணிலாக் கொட்டைக்குப் பேர் போன தென் ஆர்க்காடு ஜில்லாவில் தண்ணீர் பாயாத புஞ்சையில் ஏகர் ஒன்றுக்கு 1,500 ராத்தல் கடலைதான் கிடைக்கிறது. ஆகையால் மலையாளம் ஜில்லாவில் மணிலாக்கொட்டை சாகுபடி செய்வதில் லாபமிருக்கிறதென்று விளங்குகிறதோடுகூட தென்னந்தோப்பு இடைவெளிகளில் கடலையை சாகுபடி செய்யலாமென்று ஊகிக்கலாம்.

### FENCING.

**வேலி போடுதல்.**—இந்த ராஜதானியில் நன்றாய் சாகுபடி செய்யும் அனேகம் இடங்களில் வேலி அல்லது அடப்புப் போடுவது வழக்கமாயிருக்கிறது. இதனால் பிறர் நிலத்திற்குள் பிரவேசிக்கக்கூடாமல் இருப்பதோடு கண்டபடி ஆடு மாடு மேயாது. கண்டபடி ஆடு மாடு மேய்வதனாலேயே இந்த தேசத்தில் அனேகம் மேய்ச்சல் ஸ்தலம் கெட்டுப்போய் இருக்கின்றன. செவ்வல் புஞ்சைகளில் விசேஷமாய் கிளுவை வளர்கிறது. இதன் கிளைகளை வெட்டி பதியன் நடலாம். இப்படியே திருகு கள்ளியையும் சதுரக்கள்ளியையும் வேலியாகப் போடலம். சப்பாத்துக் கள்ளியை உபயோகிக்க வேண்டாம். அது சீக்கிரத்தில் நிலத்தில் பரவிவிடும். அதை வெட்டி சுத்தப்படுத்த செலவு அதிகமாகும்.

# TRADE NOTES.

# வியாபாரக் குறிப்புகள்.

COMBINATION IN TRADE.

**வியாபாரக் கட்டுப்பாடு.**—எந்த விஷயத்திலும் ஒற்றுமை இருப்பது நலந்தான். அனால் ஒன்றுசேர்ந்து பிறருக்கு அநியாயம் செய்யவாவது தொந்தரை கொடுக்கவாவது கூடாது.

அமெரிக்காவில் புகையிலை வியாபாரக் கட்டுப்பாடு ஒன்று இருந்தது. இதற்குட்பட்டவர்கள் அந்த தேசமுழுவதிலும் வியாபாரம் செய்தார்கள். ஒவ்வொரு வியாபாரிக்கு ஒவ்வொரு இடத்தைக் குறித்தார்கள். வாங்கும் விஷயத்தில் ஒரு வியாபாரி தனக்குக் குறித்த இடங்களைவிட்டு வேறு இடத்துக்குப் போய் புகையிலை வாங்கக்கூடாது. இந்த நிர்ப்பந்தம் வெகு முடுக்காய் இருந்தது. போட்டி இல்லாமையால் வியாபாரிகள் குறித்த விலையே விலை. அவர்கள் குறித்த விலைக்குக் கொடுப்பதில்லையென்றால் மறுபடியும் அச்சரக்கைக் கேட்பதில்லை. குடித்தனக்காரன் தானே கொண்டுபோனால் விலை குறைத்துக் கொடுப்பார்கள். இவ்வாறு மட்டச் சரக்குக்கு ராத்தல் ஒன்றுக்கு $1\frac{1}{2}$ அணாவாகவும் உயர்ந்ததற்கு 4 அணாவாகவும் கொடுத்தார்கள். இதனால் குடித்தனக்காரர்களுக்கு லாபம் குறைந்தது. பாடுபடும் கூலிக்குக் கூடக்கட்டாமல் போய் விட்டது. அதிகமான கடன் தலைமேல் ஏறிற்று. அனேகர் நாட்டை விட்டுப்போனார்கள்.

COMBINATION AMONG AGRICULTURISTS.

**விவசாயிகளுக்குள் கட்டுப்பாடு.**—சில குடித்தனக்காரர்கள் இவ்வாறு இருந்தால் பிழைப்பது எப்படியென்று அவர்கள் ஒரு சங்கம் ஏற்படுத்தினார்கள். புகையிலை முழுவதையும் இச்சங்கத்தினிடத்தில் ஒப்பித்தார்கள். ஆகையால் விற்கிறவர் ஒருவர் தவிர வேறு இல்லை. வியாபாரிகளுக்கு வாங்க இடமில்லை. சங்கத்தார் குறைத்து விற்கமாட்டார்கள். வியாபாரிகள் திகைத்தார்கள். விலையை கிரமமாய் ஏற்றினார்கள். $1\frac{1}{2}$ அணாவுக்கு விற்றவகை $3\frac{1}{2}$ அணா விற்றது. 4 அணா விற்றவகை $7\frac{1}{2}$ அணாவுக்கு விற்றது. ஒரு வருஷத்தில் வியாபாரிகள் குடித்தனத்தாருக்கு அடங்கினார்கள்.

THE TRADE IN GOLD.

**தங்க வியாபாரம்.**—இந்தியாவில் 1908--1909 வருஷத்தில் சுமார் ரூபாய் 8,40,42,310 பெறுமான 13,34,107 அவுன்ஸ் தங்கம் இறக்குமதியாயிற்று. இதில் ரூபாய் 6,58,73,494 பெறுமான 10,26,109 அவுன்ஸ், தங்க கட்டி; ரூபாய் 1,61,87,235 பெறுமான 2,73,917 அவுன்ஸ், ஸவரனும் இதர ஆங்கிலேய நாணயமும்; ரூபாய் 19,81,581 பெறுமான 34,081 அவுன்ஸ், பலவித தங்க நாணயங்கள்; இதற்கு, சுமார் ரூபாய் 4,04,87,653 பெறுமான 7,08,769 அவுன்ஸ் தங்கம் பிறதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இதில், ரூபாய் 3,35,06,633 பெறுமான 5,91,161 அவுன்ஸ், தங்கக்கட்டி; ரூபாய் 68,12,716 பெறுமான 1,14,875 அவுன்ஸ், ஸவரனும் இதர ஆங்கிலேய நாணயமும்; ரூபாய் 1,71,304 பெறுமான 2,733 அவுன்ஸ் பலவித நாணயங்கள். சென்ற மூன்று வருஷங்களில் இந்தியாவுக்கு அயனாக வந்த தங்கத்தின் பெறுமானம், 1906-07 வருஷத்தில் $1,485\frac{1}{2}$ லக்ஷம், 1907-08 வருஷத்தில் $1,736\frac{3}{4}$ லக்ஷம், 1908-09 வருஷத்தில் $435\frac{1}{2}$ லக்ஷம். அதாவது முன் வருஷங்களைவிட தங்கம் வரத்துக் குறைந்தது. ஆகையால்தான் பவுன் விலை ஜாஸ்தியாயிற்று என்று ஊகிக்கவேண்டியதாயிருக்கிறது.

COMMERCIAL ENQUIRIES.

**வியாபார விசாரணைகள்.**—சிட்டகாங் பட்டணத்தில் உள்ள ஒரு வியாபாரிக்கு மாக்கல் வியாபாரிகளின் விலாஸம் தேவையாம்.

ஜப்பான் தேசத்தில் கோப் என்னும் பட்டணத்தில் உள்ள ஒரு வியாபாரி, கண்ணாடி ஸாமான்கள், அரக்குவேலை ஸாமான்கள், பியானோ போன்ற வாத்தியப்பெட்டிகள், பீங்கான்கள், திரைகள், ஷர்டுகள், விளையாட்டு ஸாமான்கள், பற்பொடி, கைகுட்டைகள், ஸோப்புகள் முதலிய ஸாமான்களில் வியாபாரம் செய்பவர்களோடு பத்து வரவு செய்ய பிரியப்படுகிறாராம்.

கல்கத்தாவில் உள்ள ஒரு வியாபாரிக்குகாசிப் பட்டுநூல் வேண்டுமென்றவர்களுடைய விலாஸம் தேவையாம்.

மேலே சொல்லியவைகளைப்பற்றி வேறு விவரங்கள் வேண்டுமானால் கல்கத்தாவில் க்ளைவ் தெருவில் 5 நம்பர் இடத்தில் 'டைரெக்டர் அப் கமர்ஷியல் இன்டெலிஜென்ஸ—'க்கு எழுதிக்கொள்ளலாம்.



# INDUSTRIAL NOTES.

# கைத்தொழில் குறிப்புகள்.

A DEPARTMENT OF INDUSTRY FOR MADRAS.

**சென்னைராஜதானிக்கு ஒரு கைத்தொழில் இலாகா.**—சென்னை கவரன்மெண்டார் இந்தியா கவரன்மெண்டாரை சென்னை ராஜதானிக்கு ஓர் கைத்தொழில் இலாகா ஏற்படுத்த உத்தரவு கொடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டிருக்கிறார்களாம். உத்தரவு வந்தால் இந்த டிபார்ட்மெண்டே இப்பொழுது படிப்பு இலாகாக்காரர்கள் பார்த்துவரும் தொழிற்கல்விச்சாலைகளைப் பார்வையிட்டு வருவார்கள். கைத்தொழிலைப்பற்றி வேண்டிய விஷயங்களைத் தெரிவிக்க ஒரு சாலையும், கைத்தொழில் பொருட்காட்சி சாலை ஒன்றும் ஏற்படுத்த உத்தேசித்திருப்பதாகவும் தெரிகிறது.

SCHOLARSHIP FOR LEARNING SOAP MAKING.

**ஸோப்பு செய்வதை கற்க ஸகாயச்சம்பளம்.**—1903ம் வருஷம் முதல் அந்நியதேசங்களுக்குப் போய் தொழில் கற்றுவருவதற்காக சில சிறுவர்களைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு ஸர்க்காரில் ஸகாயச்சம்பளம் கொடுத்து வருகிறார்கள். இப்படிக்கு 1906ம் வருஷத்தில் நெசவு தொழிலைக்கற்று வருவதற்காக ஜி. என். தேவல் என்பவருக்கும், 1907ம் வருஷத்தில் தோல் தொழிலைக்கற்க எம். எ. ராமுண்ணிபணிக்கர் என்பவருக்கும், 1908ம் வருஷத்தில் துணிகளுக்குச் சாயம் போடுதல், அச்சடித்தல் முதலியவைகளை கற்றுவருவதற்காக வி. கோவிந்த நாயர் என்பவருக்கும் ஸகாயச்சம்பளம் கொடுத்திருக்கிறார்கள். இதேமாதிரியாக இந்த வருஷம் நம்முடைய தேசத்தில் உள்ள எண்ணெயை உபயோகிக்கும் வழிகளையும் ஸோப்புசெய்யும் விதத்தையும் கற்றுவர வருஷமொன்றுக்கு 150 பவுன் வீதம் இரண்டு வருஷத்திற்கு ஸகாயச்சம்பளம் கொடுக்கப்போகிறார்கள். இதற்கு பீ. எ. பரீக்ஷையில் ரஸாயன சாஸ்திரத்தில் படித்துத் தேறினவர்களாய் இருக்கவேண்டும்.

EGG POWDER.

**கோழிமுட்டைப் பொடி.**—கோழி முட்டைகளைப் புதிதாய் வாங்கி அப்போதப்போது சாப்பிட்டு வருவது அநேகருக்குப் பழக்கமாயிருந்தாலும் அப்படிக் கிடைக்காத காலத்தில் புதிதாய் வாங்கி சாப்பிடும் பலனையே கொடுக்கத் தக்கதாயும் கெடாமல் வைத்துக்கொள்ளத் தக்கதாயுமுள்ள கோழி முட்டைப் பொடியென்று ஒரு வஸ்து புறப்பட்டிருக்கிறது.

ஆஸ்திரேலியா தேசத்தில் மெல்போரன் என்ற நகரத்தில் இத்தொழிலை நடத்த ஒரு கம்பெனி ஏற்பட்டிருக்கிறதாம். அந்தக் கம்பெனியில் ஏராளமாய்க் கோழி முட்டைகளைவாங்கி வைக்கிறார்கள். பிறகு அந்தக்கோழி முட்டைகள் யந்திரங்களால் ஓட்டப்படும் ஒரு பெரிய இரும்புக்குழாயால் நசுக்கப் படுகின்றன. அப்படி நசுக்கப்பட்ட முட்டையின் கருவெல்லாம் பசைபோல அந்த இரும்புக்குழாய்கள் மேல் ஒட்டிக்கொள்ளுகிறதாம். பிறகு அதிக உஷ்ணம் பிறப்பிக்கக் கூடியதான சுவாலையின் மேலாக இந்தக் குழாய்கள் சுழன்றுவரும்படி செய்வதால் அவைகளில் ஒட்டிக்கொண்டிருக்கும் முட்டைப் பசை உலர்ந்து போகிறது.

இப்படி உலர்ந்த பிறகு செம்மையாய்ச் சொரண்டினால் முட்டைத்தூள் உதிருமாம். இந்தத் தூளை டப்பிகளில் சேர்த்து ஸீல்செய்து விடுகிறார்களாம். இப்படியே பால் பொடியும் செய்கிறார்களாம்.

TRADE MARK REGISTRATION.

**வியாபார முத்திரை.**—சரக்கு இன்னாது என்று வாங்குகிறவர்கள் சுலபமாய் அறிந்து கொள்ளும் பொருட்டு இங்கிலாந்தில் வியாபாரிகள் சரக்குகளுக்கு ஒவ்வொருவரும் பிரத்தியேக முத்திரைகள் போடுவது வழக்கம். அதே மாதிரியாய் இந்தியாவிலும் சரக்குகளின்மேல் சரக்குக்காரர்கள் அடையாளம் போடவேண்டுமென்று இங்கிலாந்து வியாபாரக் கமிட்டியார், இந்தியா காரியதரிசிக்கு எழுதிக் கொண்டதன்மேல் இந்தியா கவரன்மெண்டார் இந்திய வர்த்தக சங்கத்தார் அபிப்பிராயத்தை கேட்டிருக்கிறார்களாம். துணி ஸாமான்களில் அநேக விதம் இருப்பதால் அவைகளைமாத்திரம் விலக்கி அபிப்பிராயம் கேட்டிருக்கிறார்கள்.

## ECONOMICS.
## பொருளாதாரம்.

PROTECTIVE IRRIGATION WORKS.

**தாங்கல், அணை முதலியவைகள்.**—வருஷாவருஷம் தாங்கல் அணை முதலியவைகளைக் கட்டுவதற்காக ரூபாய் எழுபத்தைந்து லக்ஷம் வரையில் இந்திய கவர்ன்மெண்டார் செலவழித்து வந்தார்கள். இப்போது இந்தியா முழுமைக்கும் இந்தத்தொகை போதாதென்று எண்ணி இந்திய ஸெக்ரடரி ஆப்ஸ்டேட் துரையவர்கள் ஷை தொகைக்கு மேல் இருபத்தைந்து லக்ஷம் அதாவது நூறுலக்ஷம் ரூபாய் வருஷந்தோறும் செலவழிக்கும்படி உத்தரவு செய்திருக்கிறார். இப்படிப் பாசன சௌகரியங்கள் ஏற்படுத்துவதற்காகவும், ரயில் போடுவதற்காகவும் 1909-10 ம் வருஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் இருநூற்றன்பது லக்ஷம் ரூபாய் கடன் வாங்குவார்களாம்.

AIM AT PROFIT.

**லாபத்தை நாடு.**—"பிழைக்கும்வழி" என்பது பொருள் உண்டாக்கும் வழியாகும். எந்தக்காரியம் செய்தாலும் ஏதாவது பொருள் உண்டாகலாம். அதிகமாய்ப் பொருள் கிடைப்பதே லாபம் எனப்படும். ஒருவன் வைத்த மூலதனத்துக்கும் அவன் படும் பாட்டுக்கும் ஈடு செய்யக்கூடிய பொருள் கிடைப்பது "வேலைக்குத்தகுந்த கூலி" ஆகும். அது லாபம் ஆகாது. ஒவ்வொருவரும் கூலிக்கு அதிகமான லாபத்தைத் தேடவேண்டியது அவசியம். நோய் நொடிகள் வந்து வேலை செய்யாதிருக்கும் காலத்திற்கும் வேறுகாரணங்களினால் வேலைசெய்து சம்பாதிக்காத காலத்திற்கும் உதவும்பொருட்டு நாம் லாபத்தைத் தேடவேண்டும்.

RUBBER PLANTING IN COCHIN.

**கோச்சி சமஸ்தானத்தில் ரப்பர் சாகுபடி.**—கொச்சி சமஸ்தானத்தில் ரப்பர் நன்றாய்ப் பயிராவதாக அறிந்து கொண்டு கொச்சி சமஸ்தானத்தார் மறுபடியும் வருகிற ஜூன்மாதம் 14உ தங்கள் காடுகளில் 5,500 ஏகர் நிலம் குத்தகைக்கு விடுவார்களாம். 500 ஏகர் ஒரு துண்டாக ஏலம் கூறப்படும். இதற்கு சர்க்கார் மதிப்பு 12,500 ரூபாய்.

THE UNTOUCHABLES.

**பஞ்சமர்கள்.**—சென்ஸஸ் கணக்குப் பிரகாரம் ஹிந்துக்களில் நாலில் ஒருபாகம், பஞ்சமர்களாயிருக்கிறார்கள். இவர்கள் படிப்பிலும் நாகரிகத்திலும் தாழ்ந்தே இருக்கிறார்கள். நமது கவர்ன்மெண்டார் இவர்களிடத்தில் பச்சாதாபப் பட்டு பப்ளிக் பள்ளிக்கூடங்களிலாவது காலேஜ்களிலாவது ஜாதி வித்தியாஸம் பாராட்டி பஞ்சமப் பையன்களை சேர்க்காமல் இருக்கக் கூடாது என்று 1884ம் வருஷமே உத்தரவு செய்திருக்கிறார்கள். பாதிரிமார்களும் பல இடங்களில் பள்ளிக்கூடங்களை வைத்து பஞ்சமர்கள் விஷயத்தில் வேண்டிய சிரத்தை எடுத்து வருகிறார்கள். இவைகளெல்லாம் வெகுகாலமாய் நடந்து வருகின்றன.

இப்போது இந்தியாவில் ஆசாரவிவகாரங்களை சீர்திருத்தவேணும் என்று ஆவலுள்ள சிலர் இந்த விஷயத்தில் சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பம்பாயில் 'டிப்ரெஸ்டு கிளாஸ்ஸ் மிஷன்' என்பதாக தாழ்ந்த ஜாதியார்களுக்கு உதவி செய்ய ஒரு சங்கம் உண்டாகி இருக்கிறது. இதற்கு பம்பாயில் ஹைகோர்ட் ஜட்ஜியாகிய கனம். சந்திரவர்கர் பிரமுகர். பஞ்சமர்களின் படிப்பை விருத்தி செய்வதும், அவர்களுக்கு பிழைக்கும் வழிகளைக் காட்டுவதும், அவர்கள் ஜாதிவித்தியாஸ மில்லாமல் மற்றவர்களோடுகலந்து பழகச் செய்வதும், ஸர்வஜன சம்மதமான மதாசாரத்தையும், பிரஜாலக்ஷணத்தையும் அவர்களுக்கு போதிப்பதும் இச்சபையின் முக்கிய கருத்துக்களாம். இதேவித நோக்கங்களுடன் சென்னப்பட்டணத்திலும் ஒரு சங்கம் ஏற்பட்டிருக்கிறது.

THE ABLE AND THE DISABLE

**சக்தர்களும் அசக்தர்களும்.**—"பிழைக்கும் வழி" இல்லாதவர்கள் பித்தர், அறிவீனர், அசக்தர் ஆகிய இவர்களே. சிறு குழந்தைகளும் முதிர்ந்த கிழவர்களும் தீர்க்க ரோகங்களினால் பலவீனப் பட்டவர்களும் அசக்தர்கள் எனத்தக்கவர். மற்றவர்களெல்லாரும் பிழைக்கும் வழிதேடி உழைக்கவேண்டியவர்களே.

---



## THE TEXTILE INDUSTRY.
## நெசவு தொழில்.

THE INDIAN WEAVING INDUSTRY.

**இந்தியாவின் நெசவு தொழில்.**—பம்பாய் பட்டணத்திலுள்ள பஞ்சு ஆலைகளின் சொந்தக்காரர்களுடைய சங்கத்து வருஷாந்தர மீட்டிங்கு ஒன்று ஏப்ரல் மீ 7உ நடந்தது. அதில் பசுல்பாய் கரீம்பாய் இப்ராஹீம் என்பவர் அக்கிராசனம் வகித்து நமது தேசத்து நெசவுத் தொழிலைப்பற்றி விஸ்தாரமாய்ப்பேசினார். இந்தியாவில் நெசவு தொழிலே முக்கியமான தொழில். 1878-ம் ஹூத்தில் இந்தியாவில் 58 பஞ்சாலைகள்தான் இருந்தன. 1898ம் ஹூ மார்ச்சுமீ 31உயில் 224 ஆலைகள் ஆகிவிட்டன. அவைகளில் 67,920 தறிகளும், 57,64,346 கதிர்களும் வேலை செய்தன. இவைகளில் கதிர்களில் நூற்றுக்கு எழுபத்திரண்டும், தறிகளில் நூற்றுக்கு எண்பதும் பம்பாய் நகரத்திலேயே இருக்கின்றன. இந்திய பஞ்சு ஆலைகள் முழுவதில் 1892-1893ம்ஹூத்தில் ஒருகோடி இருபதினாயிரம் ஜனங்கள் வேலை செய்ய, 1907-08ம்ஹூதில் கிட்டத்தட்ட $2\frac{1}{4}$ கோடி ஜனங்கள் வேலைசெய்து வந்தார்கள். இவர்களைத் தவிர, லக்ஷம் ஜனங்கள் பருத்தியில் இருந்து கொட்டை எடுப்பதிலும், பேல் கட்டுவதிலும் தொழில் செய்து வந்தார்கள். பருத்தி நூல் நூற்பதற்கும் நெய்வதற்குமாக ஏற்பட்ட ஆலைகளின் முதல் $17\frac{1}{4}$ கோடி ஆகும். இதுவரையில் அநேகமாய் மட்டதுணிகளே நெய்யப்பட்டுவந்தன. கொஞ்சகாலமாய் 20 நெ. நூலுக்கு மேல்பட்ட உயர்ந்த துணிகளும் நெய்யப்பட்டு வருகின்றன. இப்படிக்கெல்லாமிருந்தும் ஸராஸரியில் வருஷமொன்றுக்கு 26கோடி ரூபாய் பெறுமான பருத்தி இதர தேசங்களுக்கு ஏற்றுமதி ஆகிறது. 48 கோடி ரூபாய் பெறுமான துணிகள் இறக்குமதி ஆகின்றன. ஆகையால் இன்னும் நெசவு தொழிலை விர்த்தி செய்ய எவ்வளவோ இடமிருக்கிறதென்று நன்றாய் ஏற்படுகின்றது. கொஞ்சகாலமாய் உலகம் முழுவதிலுமே துணிவியாபாரம் மட்டுக்கட்டியிருப்பதாகத்தெரிகிறது. இந்திய மில்களின் துணிகளும், சென்றவருஷத்தில் மட்டாய்த்தான் செலவாயின. இதற்குக் காரணம் அநேக ஜில்லாக்களில் விளைவு சரிவர இல்லாமையும், உயர்ந்த அகவிலையும், கலியாணங்கள் விசேஷமாய் நடக்காமையுமே. இப்படிக்கெல்லாமிருந்தும் துணிநெய்வதை இந்தியாவிலும் சீமையிலும் குறைக்காமல் சரக்குகள் ஜாஸ்திப்பட்டு விட்டபடியால் அவைகளுக்கு விலையும் குறைந்து விட்டது.

THE NELLIKUPPAM SWADESI SPINNING AND WEAVING CO., LTD.

**நெல்லிக்குப்பச் சுதேசிய நூற்பு, நெசவு தொழிற்சாலை, லிமிடெட்.**—தென் ஆற்காடு ஜில்லா நெல்லிக்குப்பத்தில் பங்குகளாகப் போட்டு ஐம்பதினாயிரம் ரூபாய் முதல் வைத்து ஒரு நெசவு தொழிற்சாலை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்த கம்பெனிக்கு ஐகோர்டு வக்கீல் எஸ். பாண்டுரங்க முதலியாரவர்களும், புதுச்சேரியில் துபாஷாயிருக்கும். எல். வி. ஞானப்பிரகாச முதலியாரவர்களும் அக்கிராசனாதிபதிகள். எம். நாராயணசாமி நாயடு அவர்களும் அவருடைய குமாரரும் காரியதரிசிகள். இந்த கம்பெனியில் நூற்றுக்கு இருபத்திநான்கு வீதம் லாபம் கிடைக்குமென்று சொல்லப்படுகிறது. ஆனால் இந்தலாபம் எப்படி கணக்கிடப் பட்டிருக்கிறதென்று நமக்குத் தெரியாது.

COTTON WASTE IN GERMANY.

**பருத்தி சேதாரங்களை உபயோகப்படுத்துவது.**—ஜெர்மனி தேசத்தில் எந்தப் பதார்த்தத்தையும் வீணாக்குவதில்லை. பருத்தி நெசவு ஆலைகளில் துணியானது போக பாக்கியிருக்கும் சேதாரங்களைக் கொண்டுபோய் முரட்டுதுண்டுகள், துவாலைகள், ஜமக்காளங்கள், ட்வைன்கயிறு, சாடு, முதலியவைகளாய்ச் செய்துவிடுகிறார்கள். பிறதேசங்களிலிருந்து சேதாரங்களை வரவழைத்து, கம்பளிச்சேதாரங்களோடு பருத்திச் சேதாரங்களையும் பல அளவில் சேர்த்து கம்பளி போன்ற உடைகளாகவும், சரஸமான ஆடைகளாகவும் செய்கிறார்கள். ஆனால் இந்தச் சேதாரங்களை உபயோகிக்கும் வழிகளை மட்டில் வெளியிடாமல், வியாபார ரகஸியமாய் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

## THE GROCERY TRADE.
## பலசரக்கு வியாபாரம்.

THE TRIPLICANE CO-OPERATIVE STORES.

**திருவல்லிக்கேணி கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ்.**—சென்னப் பட்டணத்தில் திருவல்லிக் கேணியில் "கோவாபரெடிவ் ஸ்டோர்ஸ்" என்று ஒரு பலசரக்குக்கடை நடந்து வருகிறது. கடை என்றால் எல்லாரும் போய் சாமான்கள் வாங்கமுடியாது. அதை ஏற்படுத்த பெரிய உத்தியோகஸ்தர்களும், எம். ஏ., பி. ஏ., பி. எல்., பரிசை கொடுத்தவர்களும் எல்லாருமாகச் சேர்ந்து ஐந்து ரூபாய் வீதம் பங்கு வைத்து தங்கள் சவுகரியத்திற்கு வேண்டிய சாமான்களை வரவழைத்து அப்படிப்பங்கு போட்டிருக்கிறவர்களுக்கு மாத்திரமே விற்பனை செய்து செலவு போக பாக்கி இருக்கும் லாபத்தை வருஷத்தில் ஒவ்வொருபங்குக்காரர் சாமான்வாங்கியிருக்கும் வீதமாய் லாபத்தை பிரித்துக் கொள்ளுகிறார்கள். இந்த ஸ்டோர் உபாய ஸ்திதியிலிருந்து பெரிதாகி, திருவல்லிக்கேணியிலேயே மூன்று கிளைகள் ஏற்பட்டும், அவைகள் தவிர, எழும்பூர், மைலாப்பூர், சைதாப்பேட்டை, ஜார்ஜ்டவுன் இந்த இடங்களில் கிளைகள் வைக்கப்பட்டும் ஏரான வியாபாரம் நடந்து வருகிறது. இதனை மேன்பார்வையிட்டு வருகிறவர்களெல்லாம் சம்பளமில்லாமல் கௌரவத்திற்காகவும் பல ஜனங்களை ஒன்றாய் சேர்த்து அவர்களில் ஒவ்வொருவரும் பிறர் நன்மை தேடும் நற்குணம் உண்டாவதற்காகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். அவரவர்களுக்கு வேண்டிய வீட்டு சாமான்களை நல்லதாயும் மலிவாயும் வாங்கும்படியே ஸ்டோர் ஏற்பட்டது.

THE SECOND CO-OPERATOR'S DAY.

**ஐக்கிய சங்கத்தாரின் இரண்டாவது வருஷ உற்சவம்.**—மேலே சொல்லிய கோவாபெரெடிவ் ஸ்டோரை ஏற்படுத்தியவர்கள் வருஷம் ஒரு தடவை கூடி வருகிறார்கள். இப்படிக்கு இரண்டாவது கூட்டம் ஸமீபத்தில்நடந்தது. இதற்கு டி. கெ. ஹநுமந்த ராவ் என்பவர் அக்கிராஸனாதிபதியாய் இருந்தார். இவர் சென்னப்பட்டணம் பிரெஸிடென்ஸி காலேஜில் ஒரு உபாத்தியாயரா்ய் இருந்து கும்பகோணத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறார். கோவாபெரெடிவ் சங்கத்திற்காக இவ்வளவு என்று சொல்ல முடியாத அளவு உழைத்திருக்கிறார். எவரைக்கண்டாலும் சரி, எங்கே பேச இடமிருந்தாலும் சரி, ஸதா, கோவாபெரெடிவ் ஸொஸைடியைப்பற்றியே பேசுவது அவர் ஸ்வபாவம். இவர் இல்லாவிட்டால் திருவல்லிக்கேணி கோவாபெரெடிவ் சங்கம் இவ்வளவு பிரபலமாயிருப்பது சந்தேகம் என்றே சொல்லிவிடலாம்.

MR. HANUMANTHA RAO'S ADVICE.

**மிஸ்டர் அனுமந்தறவ் சொன்ன புத்திமதி.**—கோவாபரேடிவ் சொஸைடியார் கீழ் வரும் நான்கு விஷயங்களை கவனிக்க வேண்டுமென்றும், அவைகள் நாலும் ஸொஸைடியைத் தாங்கி நிற்கும் நான்கு தூண்கள்போலிருக்கின்றனவென்றும் அனுமந்த ராவ் சொன்னார். அவையாவன.—

(1) ரொக்கத்திற்கே சரக்குகளை விற்க வேண்டும். எவ்விதத்தினாலும் இதினின்று தவறக் கூடாது.

(2) வாங்கின விலைக்கு விற்காமல், வழக்கமாக சில்லரையில் எப்படி விற்கிறதோ அந்த விலைப்படியே விற்று லாபத்தைத்தேடவேண்டும்.

(3) மெம்பர்களுக்கு லாபம் கணக்கிட்டுக் கொடுப்பது அவர்கள் போட்ட சொற்ப முதலின்மேல் கொடுக்காமல், அவர்கள் ஸாமான்கள் வாங்கும் தொகைக்குத் தகுந்தபடி கணக்கிட்டுக் கொடுக்க வேண்டும்.

(4) பொது நன்மை, முதலிய விஷயங்களுக்கு லாபத்தில் ஒரு பாகம் கொடுக்கவேண்டும்.

A LECTURE ON MILK, BUTTER AND GHEE.

**பால், வெண்ணை, நெய், இவைகளைப்பற்றி உபந்யாசம்.**—சில தினங்களுக்கு முன் திருவனந்தபுரத்தில் எஸ். பாதராயணாசாரியார் அவர்களால் மேற்சொன்ன விஷயங்களைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்யப்பட்டது. உபந்யாசம் செய்தது மன்றி, திருவனந்தபுரம் டவுனில் விலைக்குக்கிடைக்கும் பால், வெண்ணெய், நெய் இவைகளைப் பரிசோதனையும் செய்தாராம். பாலில் தண்ணீரும், சில மாதிரிகளில் கஞ்சிப்பசையும் கலந்திருப்பதாய், கண்டு பிடித்தாராம். தவிர, வெண்ணெயில் கஞ்சிப்பசையும், உப்பும் கலந்திருப்பதாகவும் கண்டுபிடித்தாராம். நெய் பெரும்பாலும் செட்டி என்னும் ஒரு ஜாதியாரால் விற்கப்படுகிறது. நெய்யைப் பரிசோதனைசெய்து பார்த்ததில் ஆட்டுக் கொழுப்பு கலந்திருப்பதாகத் தெரிந்ததாம்.



## REVENUE NOTES.
## ரெவெனியூக் குறிப்புகள்.

—:o:—

SETTLEMENT APPEALS.

**ஸெட்டில்மெண்டு அப்பீல்கள்.**—லாண்டு ரிவினியூ செட்டில்மெண்டு அப்பீல் விஷயமாய் ரிவினியூ போர்டார் நெம்பர் 256 உள்ள 1908ஹு ஆகஸ்டுமீ 19வ தீர்மானம்.

ரிவினியூ செட்டில்மெண்டு சம்பந்தமான மனுக்கள் எவ்வளவு காலத்துக்குள் கொடுக்கப்படலாம் என்பதைப்பற்றி சிலநாளைக்கு முன் விவகரிக்கப்பட்டதன் மேல் சரியாக யோஜனைசெய்து அடியில் கண்டபடி போர்டாரவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள்.

(a) புதுத்தீர்வை தாக்கல் செய்து காயம் பட்டா கொடுக்கப்படும் முன்னமே செட்டில்மெண்டு ஆபீசரிடத்தில் பட்டாதார்கள் தங்கள் தாவாக்களையும் தங்களுக்கு வேண்டியவைகளையும் தெரிவித்துக் கொள்ளுவதற்காக சாவகாசம் கொடுக்கப்படும். இப்படி பட்டாதார்கள் செய்துகொள்ளும் ஆக்ஷேபணைவகையறாக்களை விசாரிக்க ஒவ்வொரு கிராமத்திற்கும் ஸௌகரியமான வாயிதாவும் இடமும் குறிக்கப்படும். 10 நாளைக்கு முன்னதாகவே ஷை வாயிதாவும் இடமும் இன்னதென்று தெரியும்படியாக நோட்டீஸ் தாலூகா கச்சேரியில் ஒட்டப்படுவதோடு கிராமத்தில் தண்டோரா மூலமாயும் பிரசித்தம் செய்யப்படும். தவிர, அந்தந்தப்பட்டாதார்களிடம் பட்டுவாடா செய்வதற்கு கணக்கரிடம் கொடுக்கப்படுகிற பொய்ப்பட்டாக்களிலும் தெரிவிக்கப்படும்.

பொய்ப் பட்டாக்களை அந்தந்தப் பட்டாதார்களிடம் ஜரூராய் பட்டுவாடாசெய்வதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படும். ஊரில் குடியில்லாமலும் ஆஜரில்லாமலுமிருக்கிற பட்டாதார்கள் கணக்கர் இடத்திலிருந்து தங்கள் பொய்ப்பட்டாக்களை பெற்றுக் கொள்ள தாங்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டியது.

மேற்கண்ட வாயிதாவுக்கு மேல் தீர்வை ரேட்டு விஷயமாய் எவ்வித ஆக்ஷேபணைகளும் செட்டில்மெண்டு ஆபீசரால் கால தாமதத்திற்கு திருப்திகரமான காரணமின்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

செட்டில் மெண்டு ஆபீசருடைய உத்தரவின் பேரில் ஷை உத்தரவு பிறந்த மூன்று மாஸத்துக்கு மேல்படாமல் (உத்தரவுக்கு நகல் வாங்கும் காலம் நீக்கி) ரிவினியூ செட்டில் மெண்டு கமிஷனரிடம் அப்பீல் செய்துகொள்ளலாம்.

செட்டில் மெண்டு ஆபீசரிடம் கொடுக்கப்படும் மனுவுக்கும் அப்பீல் விண்ணப்பத்திற்கும் ஸ்டாம்பு தேவை இல்லை.

(b) சர்வே நம்பர், விஸ்தீரணம், பட்டாதார்களின் பெயர்கள், புஞ்சை, நஞ்சை, சர்க்கார், இனாம், புறம்போக்கு ஆகிய நிலவிவரம் இன்னும் இவைபோன்ற மற்றவைகளில் உள்ள தவறுதல்களை திருத்திக் கொள்ள ரயத்துகள் எக்காலத்திலும் தெரிவித்துக் கொள்ளலாம்.

INSPECTION OF CERTAIN VILLAGE ACCOUNTS.

**சிலகிராம கணக்குகளைப் பார்வையிடல்.**—கர்ணிகர்களிடத்திலுள்ள 10, 13, 14, 16, நெ. கிராமக் கணக்குகளை பிரதி ரயத்தும் தாராளமாய் கட்டணங்களில்லாமல் பார்வையிட்டு தன்மட்டுக்கும் சம்பந்தப்பட்ட அல்லது பாத்தியப்பட்ட நிலத்தைப்பற்றி மாத்திரம் அந்த கணக்குகளில் தாக்கல் செய்யப்பட்டிருக்கப்பட்டவைகளை குறித்துக் கொள்ளலாமென்று கவரன்மெண்டார் 1907ஹு டிசம்பர்மீ 12வ தியுள்ள 3052. நெ உத்தரவில் நினைக்கிறார்கள். இந்த உத்தரவு தயவாக கொடுக்கப் பட்டதென்று ஸ்பஷ்டமாய் அறியவேண்டும். அவசியமாகத் தோற்றும் பொழுது அதை கவரன்மெண்டார் இஷ்டப்படி நிறுத்தி விடுவார்களாம். இந்த கணக்குகளை பார்வையிடும் காலங்களில் அனுசரிக்கவேண்டிய பத்ததியைப் பற்றி விதிகள் ஏற்பாடு செய்வது அனாவசியமென்று கவரன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

STAMPS.

**ஸ்டாம்புகள்.**—கெட்டு அல்லது உபயோகப்படாத கோர்ட்டுபீ அல்லாத ஸ்டாம்புகளை வைத்திருப்பவர்கள் அவைகளை புதுப்பித்துக் கொள்ளவோ அல்லது அவைகளின்கிரயத்தை வாப்ஸ் வாங்கவோ சட்டப்படி விதிக்கப் பட்டிருக்கிற காலத்துக்குள் மனுச்செய்துக் கொள்ள துர் எண்ணமில்லாமல், விலக்கக் கூடாத காரணங்களினால் தவறிப்போனாலும், ஸ்டாம்பு அப்படி கெட்டு அல்லது உபயோகமற்றுப்போன தேதி முதலாவது அல்லது அந்த ஸ்டாம்புகள் வாங்கப்பட்ட தேதி முதலாவது இரண்டு வருஷத்திற்குள்ளாக மனுச்செய்து கொண்டால் வேறு ஸ்டாம்புகளையாவது அல்லது அவைகளின் கிரயத்தையாவது கொடுக்கலாம் என்ற அதிகாரத்தை ரிவினியூ போர்டாரவர்களுக்கும் ஜில்லா கலெக்டர்களுக்கும் கவரன்மெண்டார் கொடுத்திருக்கிறார்கள்.

## LEGAL NOTES.
## சட்டக் குறிப்புகள்.

MINORS.

**மைனர்கள்.**—ஏ. என்பவருக்கு சில பிள்ளைகள் இருந்தார்கள். இவர்கள் மைனர்கள். பி. என்பவருக்கு தன்னுடைய ஸ்தாவரசொத்தில் சிலவற்றை கிரயம் செய்து கொடுப்பதாக ஏ. என்பவர் ஒரு எக்ரிமெண்டு எழுதிக்கொடுத்து அட்வான்ஸ-வாங்கிக் கொண்டார். கிரயபத்திரம் எழுதி முடிவதற்கு முன்னால் ஏ. என்பவர் இறந்து போய்விட்டார். தகப்பன் எழுதிக்கொடுத்த எக்ரிமெண்டுப்படி மைனர்கள் கிரயம்செய்து கொடுக்க கட்டுப்பட்டவர்களா என்பதுதாவா. தகப்பன் சாஸனம் செய்ய வேண்டியதின் காரணம் பிள்ளைகளைக்கட்டுப் படுத்தாததாயிருந்தது. ஆகையால் மைனர்கள் தகப்பன் பி. என்பவரிடம் வாங்கி இருக்கும் அட்வான்ஸ் தொகையை வாபஸ் செய்து பூரா சொத்தையும் அடையவேண்டியது என்று மதராஸ் ஹைகோர்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.—5 மதராஸ். லா. டைம்ஸ் 163ம் பக்கம்.

RIGHT TO TREES IN ZEMINDARIES.

**ஜமீன்கிராமங்களில் மர பாத்தியம்.**—ஜமீன்கிராமங்களில் சில இடங்களில் குடிகளுக்கே நிலத்தில் அநுபவபாத்தியம் உண்டு. இப்படிப்பட்ட நிலங்களில் உள்ள மரங்கள் குடிகளுக்கு பாத்தியமே ஒழிய ஜமீந்தார்களுக்கு பாத்தியமில்லை. அப்படிக்கு இல்லாமல் ஜமீந்தார்களுக்கே ஸொந்தம் என்றால் அந்த வழக்கத்தை ஜமீன்தார்கள் ருஜு-வாக்க வேண்டும். —5 மதராஸ், லா. டைம்ஸ் 210ம் பக்கம்.

ATTESTATION.

**சாக்ஷி கையெழுத்து.**—பத்திரம் எழுதுகிற ஒருவன் தான் எழுதினபிறகு பத்திரம் எழுதிக்கொடுப்பவர் கையெழுத்துப் போட்டதன் கீழ் பத்திரம் எழுதினதற்கு அத்தாக்ஷியாக செட்டெழுத்துப் போடவேண்டியது. இப்படிக் கில்லாமல் பத்திரம் எழுதிக்கொடுக்கிறவர் கையெழுத்துக்கு முன்னால் செட்டெழுத்துப் போட்டு விட்டால் இந்தியன் எவிடன்ஸ் ஆக்ட்டு 68 வது ஸெக்ஷன்படி செட்டெழுத்துப் போட்டவன் சரியான சாக்ஷியாகமாட்டான் என்று நாகப்பூரில் தீர்மானமாகி இருக்கிறது. —5 நாகப்பூர் லா ரிபோர்ட் 36 பக்கம்,

NOTICE.

**நோட்டீஸ்.**—தஞ்சாவூர் கலெக்டர் அண்டு டிஸ்டிரிக்டு மாஜிஸ்திரேட்டவர்களால் கொடுக்கப்பட்ட நோட்டீஸ்.

"இந்த ஜில்லாவில் ஆற்றங்கரைகளுக்கு பக்கங்களில் நிலங்களின் சொந்தக்காரர்களுக்கும் அவைகளை பயிர்ச்செலவு செய்பவர்களுக்கும் இதனாலறிவிக்கப்படுகிறதென்னவென்றால்—வாழை சாகுபடியல்லது வேறு எதற்காகவாவது ஆற்றங்கரைக்கு அதிகசமீபத்தில் பள்ளம், கால்வாய்கள் தோண்டுவதினால் அந்தக்கரைகளின் கீழாக ஜாஸ்தி ஊற்றம் உண்டாகி அவைகளுக்கு அபாயம் நேரிடக்கூடியதாயிருக்கிறது. அதனால் அடிக்கடி உடைப்பு ஆகிறதுமுண்டு. ஆகையால் அப்படிப்பட்ட பள்ளங்கள் வகையரு ஆற்றங்கரைக்கு ஐந்தடிக்குள்ளாக இருக்கும் பக்ஷத்தில் அப்படித்தோண்டுவதினால் அவர்கள் பீனல்கோட் 290-வது பிரிவுப்படி தண்டனைக்குள்ளாவார்களென்று அறியவும்."

TRADE MONOPOLY.

**வியாபாரத்தை ஒருவன் கைப்பற்றுதல்.**—பாட்னா என்ற பட்டணத்தில் சீப்பு செய்பவர்கள் 30 பேர்களில் 29 பேர்கள் ஏ. என்பவன் ஒருவனைத் தவிர வேறுயாருக்கும் சீப்பைவிற்பதில்லை என்று பி. என்னும் ஒருவனிடம் ஒப்பந்தம் செய்து கொடுத்தார்கள். ஏ. என்பவன் அந்த உடன்படிக்கைச் சீட்டுக்கு கையெழுத்துப் போடவில்லை. பாட்னா முதலிய விடங்களில் சரியானபடி சீப்பு வியாபாரம் நடவாத பக்ஷத்தில் சீப்புகளை பி. என்பவன் வாங்க வேண்டிய கட்டாயம் இல்லையென்றும் ஒப்பந்தத்தில் இருந்தது.

இந்தஸ்திதியில் மேலேகண்ட ஒப்பந்தம் சரியானதா என்பது விவகாரம். இந்த ஒப்பந்தம் வியாபார போட்டி ஏற்பட்டு விருத்தியாக நிர்ப்பந்தமாயிருப்பதால் இது செல்லாது என்றும், தவிர, இரண்டு கக்ஷிக்காரர்களும் பரஸ்பரம் ஒப்பந்தத்தில் கட்டுப்பட வில்லை என்றும், வியாபாரத்தில் போட்டி உண்டாகாதபடி முழுவதையும் தன்வசப்படுத்திக் கொள்ள சரக்குக்காரர்களிடம் ஒருவன் ஒப்பந்தம் செய்வது நியாயவிரோதம் என்றும் ஆகையால் ஷை ஒப்பந்தம் செல்லாது என்று கல்கத்தா ஹைகோர்டார் பைசல் செய்திருக்கிறார்கள்.—9 கல்கத்தா. லா ஜர்னல் 216ம் பக்கம்.



**Oakes & Co., Ltd.,**

9, Broadway, MADRAS.

——(o)——

அடியில்கண்ட சாமான்கள் எங்களிடத்தில் அகப்படும்.

(1) விவசாயத்திற்கு வேண்டிய யந்திரங்கள்,

(2) மனிதர்களாலும், மாடுகளாலும் வேலை செய்யக்கூடிய தண்ணீர்ப் பாய்ச்சும் பம்புகள்,

(3) நீராவியாலும் வேறு எந்த சக்தியாலும் வேலை செய்யக்கூடிய எல்லாவித தொழிலுக்கும் வேண்டிய யந்திரங்கள்,

(4) தச்சு வேலைக்கு வேண்டிய உளி, வாச்சி முதலிய சாமான்கள்,

(5) பலவித பெயிண்டுகள், எண்ணெய்கள், வார்னீஷுகள், புருஷுகள்,

(6) வியாபாரிகளுக்கு வேண்டிய நிறுக்கும் யந்திரங்கள், ஸேப்கள், பணம் வைக்க இரும்புப் பெட்டிகள், பூட்டுகள்,

(7) விவசாயிகளும், குடித்தனக்காரர்களும் உடைக்கவும், அரைக்கவும் வேண்டிய யந்திரங்கள்,

(8) கம்பி வேலிகள், இரும்பு மாடிப்படிகள், வீடு கட்டுவதற்கு வேண்டிய இரும்பு சாமான்கள்,

இன்னும் எது வேணுமானாலும் எழுதியனுப்பினால் அனுப்பத் தயாராய் இருக்கிறோம். காட்டலாக் அனுப்பப்படும்.

ஓக்ஸ் அண்டு கம்பெனி,

9, பிராட்வே, சென்னப்பட்டணம்.

# EDUCATIONAL NOTES.
## வித்தியாவிஷயக் குறிப்புகள்

A VILLAGE SCHOOL IN JAPAN.

**ஜப்பானில் ஒரு கிராமப் பள்ளிக்கூடம்.**—எஸ். ஆர். மல்லடி என்ற ஒருவர் தான்சென்ற ஜனவரி௴ 15௳ ஹமமாட்ஸு என்ற ஊரிலிருந்து அடுத்த இரண்டுமைல் தூரத்திலுள்ள டென்னமூரா என்ற கிராமத்திற்குப்போய் ஒரு பாலபோதனைப் பள்ளிக்கூடத்தைப் பார்த்தாராம். பள்ளிக்கூட கட்டிடத்தையும், வஸ்து சோதனைச் சாலையையும், பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் பிள்ளைகளுக்கு போதிக்கும் விதத்தையும் பற்றி தான் பார்த்தமட்டில் எழுதியிருக்கிறார். அதில் ஒரு விசேஷசங்கதியும் சொல்லியிருக்கிறார். ஒருநாள் சாயங்காலம் ஹெட்மாஸ்டர் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குப் போகையில் எதிரே தூரத்தில் தன்னிடம் முன்படித்த ஒருவன் கலப்பையைத் தோளில் வைத்துக்கொண்டு வருவதைக்கண்டார். அந்தப்பையனும் வாத்தியார் வருவதை தெரிந்து கொண்டு நேரேவாராமல் வேறு வழியாக விலகிப்போய் விட்டான். இப்படி இன்னம் சிலர் செய்துவருவதை ஹெட்மாஸ்டர் கவனித்து வந்தார், விவசாயத்தொழிலைச் செய்வது அகௌரவம் என்று நினைத்து இவர்கள் தன் எதிரே வர வெட்கப் பட்டுக்கொண்டு போய் விட்டார்கள் என்று தெரிந்து கொண்டு அந்த ஹெட்மாஸ்டர் ஒரு தோட்டத்தை வாங்கி தன் மாணாக்கர்களையும் கூடவைத்துக்கொண்டு அடிக்கடி தோட்டத்தைத் தானே உழுது கலப்பையை தன் தோளிலேயே தூக்கிவந்தார். இதனால் பையன்களுக்கு அதிலிருந்த இகழ்ச்சி எண்ணம் விலகிப்போய்விட்டது. படிப்புச் சொல்லிக்கொடுப்பது சிரமமல்ல. அதை அனுஷ்டான பூர்வமாய் தானேசெய்து காட்டுவதல்லவோ மேன்மை என்று எழுதி இருக்கிறார்.

RECENT ENDOWMENTS.

**ஸமீபத்து நன்கொடைகள்.** கல்கத்தாவில் உள்ள ஒரு கைத்தொழில் கல்விச் சாலைக்கு காஸிம்பஸார் ஜமீன்தார் ஆகிய மகாராஜா மாணிக்கிர சந்திர நந்தி என்பவர் வருஷமொன்றுக்கு லக்ஷம் ரூபாய் வரும் படியான சொத்து வைக்கப் போகிறாராம். இது விஷயமாய் சில ஏற்பாடு செய்ய கவர்ன்மெண்டாரோடு பேசிக் கொண்டிருக்கிறாராம். தவிர, கல்கத்தாவில் உள்ள ஹிந்துக்களுக்கு சம்பளம் அன்னியில் படிக்க ஒரு ஸ்கூல் ஏற்படுத்துவதற்காகவும் இன்னும் சில தர்மங்களுக்காகவும் காலஞ் சென்ற பாபு கோவிந்த சண்ட்ஹுர் என்பவர் நாலு லக்ஷம் உயில் செய்து வைத்திருக்கிறார். இதே மாதிரியாக பஞ்சாப் மாகாணத்தில் ஜில்லா ஜட்ஜியாக இருந்து பென்ஷன் பெற்ற ஸர்தார் பல்வன்ட்ஸிங் என்பவர் இங்கிலாந்து போன்ற அந்நியதேசங்களுக்குப் போய் விவசாயம், சாஸ்திர ஆராய்ச்சி முதலியவைகளைக் கற்பவருக்கு ஸகாயச்சம்பளம் கொடுப்பதற்காக லக்ஷம் ரூபாய் மூலதனமாக கொடுத்திருப்பதாகவும் தெரிய வருகிறது. பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த அமிருத சரஸிலுள்ள காலேஜில் சீக்கியப் பிள்ளைகளே அதிகமாய் வாசிக்கிறார்கள். அந்த காலேஜுக்குக் கஜேந்திர சிங்க் மஜீதியா என்ற சீக்கிய கனவான் ஒருகோடியே 50 லட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறார். இந்தியா முன்னுக்கு வர இப்படிப்பட்ட தர்ம சிந்தையுள்ளவர்கள் அனேகர் தேவை.

THE CASSANOVA INSTITUTION.

**காசநோவா தொழிற்பள்ளிக்கூடம்.**—ஐரோப்பாக் கண்டத்திலுள்ள இட்டலிதேசத்துத் தலைநகரமான நேபிள்ஸ் என்னும் ஊரில் கைத்தொழில் கற்றுக் கொடுக்க "கசநோவா தொழிற் பள்ளிக்கூடம்" என்று ஒன்று இருக்கிறது. இங்கே பிள்ளைகள் ஒவ்வொருவருடைய பட்டடையில் கற்றுக்குட்டிகளாய் அமர்கிறார்கள். இந்தப்பட்டடைகள் ஸர்க்காருக்குச் சேர்ந்தவைகளல்ல. கற்றுக்குட்டிகள் செய்யும் வேலையினால் பட்டடையின் சொந்தக்காரனை தொழிலாளிக்குப் பிரயோஜனமாயிருக்கிறதென்று கண்டால் அவன் அவர்களுக்குக் கூலிகொடுக்கிறான். பட்டடைவைத்துக் கொள்வதற்கு வாடகையில்லாமல் இடம் கொடுத்திருப்பதற்காகவும் தொழிலில் தேர்ந்த நிபுணர்கள் அப்போதைக்கப்போது வந்து பார்த்து அவனுக்கு வேண்டிய புத்திமதிகளைச் சொல்லி வேலையைச் சிறப்பிப்பதற்காகவும் அந்தப் பட்டடைக்காரன் ஸர்க்காருடைய அநேக நிர்ப்பந்தங்களுக்கு உடன் படுகிறான். இந்த நிர்ப்பந்தங்கள் வேலைகற்கும் சிறுவர்களின் நடக்கையைச் சீர்திருத்தும் உத்தேசத்துடன் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேல் விசாரணை செய்வதற்கு அநுகூலமாயிருக்கும்பொருட்டு அநேக தொழிலாளிகள் ஒரே கட்டிடவரிசையில் வேறு வேறு பாகங்களில் பட்டடைவைத்துக் கொள்ளும்படி செய்திருக்கிறார்கள். இந்தத்தொழிற் பள்ளிக்கூடத்தில் தேர்ந்தவர்கள் அநேகர் நல்லவேலைக்காரரென்றும், புத்திசாலிகளென்றும், உழைப்பாளிகளென்றும் பெயரெடுத்திருக்கிறார்கள். இந்தமாதிரியாகப் பிள்ளைகளுக்குத் தொழில் கற்றுக்கொடுப்பது நல்ல ஏற்பாடென்பது அதனால் தோன்றுகிறது.



THE PRESIDENCY MANURE WORKS, LIMITED, RANIPET.
Managing Agents—PARRY & Co., MADRAS.
ராஜதானி ரஸாயந உரக்கிடங்கு, ராணிப்பேட்டை.

எங்கள் ராணிப்பேட்டை உரக்கிடங்கில் இந்நாட்டு எல்லாப் பயிர்களுக்கும் ரஸாயந சாஸ்திர முறைப்படி உரங்கள் தயாரித்து விற்பனையாகின்றன. இவ்வுரங்களில் சேர்க்கப்படுகிற ஒவ்வொரு சாமானையும் எங்கள் **ரஸாயந சோதனை சாலை** (Chemical laboratory) யில் பரிசோதித்து அந்தந்தப் பயிருக்குத்தக்க அளவு **நைட்ரஜன்** (Nitrogen) **பாஸ்பாரிக் ஆஸிட்** (Phosphoric acid) **பொடாஷ்** (Potash) இவைகளைக் கணக்கிட்டுச் சேர்க்கிறோம். ரஸாயந உரங்களின் சத்துக்கள் பெரும்பான்மையும் தண்ணீரில் கரையக்கூடியனவாகையால், போட்டவுடன் பயிருணவாகி குணத்தைக்காட்டும். இந்த உரங்களை பரீக்ஷிக்கும்பொருட்டு **பரீக்ஷை பண்ணை** (Experimental Farm) க்காகவும், இந்திய விவசாயிகளுக்கு இந்த உரங்களின் குணத்தை நிரூபிக்கும் பொருட்டு **நிரூபணைப் பண்ணை** (Demonstration Farm) க்காகவும் சுமார் 25 ஏகரா நிலம் கிடங்குக்குள்ளாகவே சாகுபடி செய்யப்படுகிறது. இந்த கிடங்குத் தோட்டத்தில் இந்த நாட்டுப்பயிர்களே பெரும்பான்மையும் ரஸாயந உரங்களைப்போட்டு சாகுபடிசெய்யப் படுகின்றன. இவ்விதம் ரஸாயந உரம்போட்ட பயிர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொருட்டு, தொழு எரு முதலிய நாட்டு உரங்கள் போட்டும் பயிர் செய்திருக்கிறோம். இதைப்பார்த்தவர்களுக்கு ரஸாயந உரங்களே மேலானவைகளென்று எளிதில் தெரியும். நிலத்தின்மாதிரிக்கு மண் அனுப்பினால் அம்மண்ணுகளை பரிசோதித்து தக்க உரம் கொடுக்கப்படும். பின்வரும் பயிர்களுக்கு எங்கள் கிடங்கில் **பூரா உரங்கள்** (Complete fertilisers) தயாராயிருக்கின்றன. வேறு எந்த பயிருக்கானாலும், உடனே உரம் தயார்செய்து கொடுக்கப்படும். விலை முதலிய விபரங்களுக்கு மதராஸ் பாரி அண்டு கம்பெனியாருக்கு எழுதி தெரிந்துகொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| நெல் | குசும்பா | தென்னை |
| கேழ்வரகு | புகையிலை | தேயிலை |
| சோளம் | பருத்தி | காப்பிச்செடி |
| மக்காச்சோளம் | சர்க்கரைவள்ளிக்கிழங்கு | வாழை |
| கம்பு, தினை, சாமை | உருளைக்கிழங்கு | சவுக்கு |
| கரும்பு | மஞ்சள் | மா |
| மணிலாக்கொட்டை | இஞ்சி | பழவர்க்கச் செடிகள் |
| கொள்ளுமுதலிய நவ தானியங்கள் | வெங்காயம் | பூந்தோட்டம் |
| | மிளகாய் | காய்கரி தோட்டம் |
| அவுரி | கத்திரி | கிழங்குப்பயிர் |
| எள்ளு | வெற்றிலை | புல், பசுந்தாள் பயிர் |
| முத்துக்கொட்டை | மிளகு | |

மானேஜிங் ஏஜண்டு—பாரி அண்டு கம்பெனி, மதராஸ்.

# SCIENTIFIC NOTES.

## சாஸ்திரீயக் குறிப்புகள்.

---

RAIN RECORDING STATIONS.

**பருவ நிலையைத் தெரிவிக்கும் ஸ்டேஷன்கள்.**—இந்த ஊரில் இன்றைக்கு இவ்வளவு மழை பெய்த தென்று இந்தியா கவர்ன்மெண்ட் காலநிலைச் சோதனை இலாகாவுக்கு ரிபோர்ட் அனுப்பும் ஸ்டேஷன்கள் இந்நாட்டில் 166 இருக்கின்றன. அவற்றில் 122 ஸ்டேஷன்களில் சென்ற ஜனவரிமாதம் முதல் பெய்யவேண்டிய அளவு மழை பெய்திருக்கவில்லை. மற்ற 44 ஸ்டேஷன்களிலும் சராசரி அளவுக்கு அதிகமான மழை பெய்திருக்கிறது. மிகவும் குறைவாய் மழை பெய்திருக்கும் இடம் சில்கார் எனப்படுகிறது. இது கீழ்வங்காள நாட்டிலுள்ளது. அவ்வூரில் போன ஜனவரிமாதம் முதல் இதுவரையில் 19 அங்குல மழை பெய்திருக்க வேண்டுமாம். அதற்கு 6 அங்குல மழைதான் பெய்திருக்கிறதாம்.

INDUSTRIES FOR RESEARCH.

**சோதித்துப் பார்க்கத்தக்க தொழில்கள்.**—எந்தெந்தத் தொழில்களில் அதிக வரும்படி உண்டாக்குவதற்கு வகை தேடலாம், அவைகளை என்ன விதமாய் அபிவிருத்தி செய்யலாம், எந்தக் கருவிகளைச் சீராக்கி நல்லவேலை செய்யலாம் என்று கவர்ன்மெண்டார் ஆலோசித்துப் பார்த்துச் சில கைத்தொழில்களை முதலில் பரீக்ஷித்துப் பார்க்கத் தீர்மானித்திருக்கிறார்கள். சில வருஷங்களுக்குமுன் ஏற்பட்ட 'இண்டஸ்ட்ரியல் கமிஷன்' என்று சொல்லப்பட்ட கைத்தொழிற் கல்விக் கமிட்டியார் சிபார்சு செய்திருக்கிற தொழில்களையும் அவைகளைப் பரீக்ஷித்துப் பார்க்கக்கூடிய இடங்களையும் இதன் அடியில் காணலாம்:—

(1) பம்பாயில் பருத்தி நெசவு, பட்டு நெசவு.

(2) சென்னைப்பட்டணத்தில் லோஹவேலை.

(3) பஞ்சாப் மாகாணத்தில் குயவேலை, பீங்கான் வேலை.

(4) வடமேற்கு மாகாணங்களில் கண்ணாடிவேலை.

(5) மத்தியமாகாணங்களிலும் பர்மாவிலும் பட்டு உற்பத்திசெய்தல்.

SCIENCE IN PLOUGHING.

**உழுவதில் சாஸ்திரம்.**—நிலமானது எண்ணிறந்த நுண்ணிய மண்ணணுக்கள் சேர்ந்துள்ளது. எல்லாவித நிலங்களிலும் இப்படிச் சேர்ந்திருக்கும் மண் அணுக்கள் நடுவில் கண்ணுக்குத் தெரியாத அவ்வளவு நுட்பமான அளவற்ற சிறு தண்ணீர்க்குழாய்கள் வரிசைவரிசையாய் அமைந்திருக்கின்றன இக்குழாய்களின் வழியாய் தண்ணீர் வெகு சீக்கிரமாய் மேல் நோக்கிச் செல்லும். குழாய்களின் பருமன் எவ்வளவுக்கெவ்வளவு சிறியதாயிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதிசீக்கிரத்தில் ஜலம் அவைகளின் வழியாய் ஏறும். ஒரு பீங்கான் தட்டில் சுமார் ஒரு அங்குல ஆழத்திற்கு தண்ணீரை ஊற்றி, ஒருச்சாண் உயரமுள்ள மண் கட்டியை வைத்தால் அம்மண்கட்டியின் அடிப்புறத்தில் ஒரு அங்குல உயரம் மட்டும் தண்ணீர் தொட்டிருந்தபோதிலும், கொஞ்சநேரத்திற்குள் கட்டி முழுவதிலும் தண்ணீர் ஊறி, கட்டி கறுப்படையக் காண்கிறோம். இப்படி மண் கட்டி முழுவதிலும் தண்ணீர் வியாபித்ததானது (பரவியது) அக்கட்டியில் கண்ணுக்குத் தெரியாமல் அமைந்திருக்கும் அநேக ஆயிரம் சிறு நுட்பமான குழாய்களின் வழியாய்த்தான். உறைந்து கெட்டியான தரையில் இக்குழாய்கள் அடிமுதல் நுனிவரையில் ஒரே தொடர்ச்சியாய் மத்தியில் முறிவுபடாமல் இருக்கும். ஆகையால் இச்சிறுகுழாய்களின் வழியாய் அடிமண்ணிலிருந்து மேல் மண்ணுக்கு இடைவிடாமல் ஏறிக்கொண்டிருக்கும் தண்ணீரானது, சூரியவெப்பத்தால் ஆவியாய்ப் பறந்துபோகும். இக்காரணத்தால் மேல்மண் ஈரமற்று உலர்ந்து கெட்டியடைகிறது. ஆனால் மேல்மண்ணைக் கொத்திக் கிளறுவதால், அடிமுதல் நுனிவரையில் ஒரே நீளமாயிருக்கும் இச்சிறு குழாய்களின் தொடர்ச்சியை முறித்து சேதப்படுத்திவிடுகிறோம். அப்படிச் செய்வதனால் கீழ்மண்ணிலிருக்கும் ஈரம் மேல்மண்ணுக்கு எளிதில் செல்ல இடமில்லாமல் தடைபடும். அதனால் நிலத்தில் ஈரம் அதிகநாளைக்குத் தங்கியிருக்கும். ஆகவே நிலத்தின் மேல் பரப்பைக் கிளறுவதின் முக்கியக்கருத்து, அதிலிருக்கும் தண்ணீர் ஆவியாய் பறந்துபோகாமல் தடுப்பதுதான்.




V. KALYANARAM IYER & Co., *Booksellers, Esplanade, MADRAS.*

—(o)—

நன்றாய்ப் பார்வையிட்டு நல்லகாகிதத்தில் தெளிவாய் அச்சிட்ட சிறந்த பதிப்பு.

**மூவர் தேவாரம்-பண்முறை—1044 பக்கம், ரூபாய் 3—0—0.**

இப்பதிப்பில் (1) சம்பந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவர்களின் சரித்திரக் குறிப்பும், (2) தேவார வரலாறும், (3) தேவாரப்பண் அட்டவணையும், (4) தேவாரப் பாடல்பெற்ற ஸ்தல அகராதியும், (5) தேவார ஸ்தலங்களுள்ள நாடுகளின் விபரமும், (6) அட்டவீரட்டானங்களைக்குறிப்பிக்கும் செய்யுளும், (7) தேவாரப் பொதுப்பாடல்களின் பக்க அட்டவணையும், (8) தேவார வைப்பு ஸ்தல அட்டவணையும், (9) காரைக்காலம்மையார் அருளிச் செய்த மூத்த திருப்பதிகமும் நூதனமாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன.

**நாலாயிர திவ்யப்பிரபந்தம்—640 பக்கம் ரூபாய் 3—0—0.**

இப்பதிப்பு (1) ஆழ்வார்களின் காலவைபவக் குறிப்பும், (2) ஆழ்வார்கள் அருளிச்செய்த பிரபந்தங்களின் அட்டவணையும், (3) ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திவ்விய தேசங்களின் அட்டவணையும், (4) அந்த தேசங்களின் வைபவக்குறிப்புகளும் சேர்த்து பல பிரதிகளுடன் ஒத்திட்டுப்பார்த்து, நன்றாய் அச்சிடப்பெற்றுளது.

**வேதாந்த விஷயமான புஸ்தகங்கள்.**

| | ரூ. அ. | | ரூ. அ. |
|---|---|---|---|
| வள்ளலார் சாஸ்திரம் .. .. | 1 8 | ஜன்மாந்திரம் (அல்லது இராமதாசர் உபதேசம்) .. .. .. | 0 2 |
| வாசுதேவ மனனம் .. .. | 1 0 | நாஞ சீவவாதக்கட்டளை .. .. | 0 1 |
| வேதாந்த போதினி .. .. | 0 8 | மகாராஜா துறவு.. .. .. | 0 6 |
| சிவபோகசாரம் & சிவஞானவிளக்கம் .. | 0 2 | தாயுமானவர் பாடல் (காலிகோ பயிண்டிங்) | 0 12 |
| சுகர் கைவல்லியம் .. .. | 0 2 | பட்டணத்தார் பாடல் .. .. | 0 2 |
| வைராக்கிய சதகம் .. .. | 0 2 | | |

**புதிய நாவல்களும் நாடகங்களும்.**

| | | | |
|---|---|---|---|
| போஜ சரித்திரம் .. .. .. | 1 8 | மனோகரன் .. .. .. | 0 12 |
| சுந்தரி மனோகரன் .. .. | 0 12 | கள்வர்தலைவன் .. .. .. | 0 8 |
| காமாக்ஷி .. .. | 0 8 | சாரங்கதரன் .. .. .. | 0 8 |
| சந்திரசேகரன் .. .. .. | 0 8 | யயாதி.. .. .. .. | 0 8 |
| ஆநந்தமடம் .. .. | 0 8 | வசந்திகா .. .. .. | 0 8 |
| லீலாவதி சுலோசனை .. .. | 0 12 | கிரிஸில்டா, அல்லது பொருமையுள்ள மனைவி | 0 2 |
| இரண்டு நண்பர்கள் .. .. | 0 12 | காலவரிஷி .. .. .. | 0 8 |
| சத்ருஜித் .. .. .. | 0 12 | வேதாள உலகம் .. .. .. | 0 8 |

**வேறு புஸ்தகங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| ஸ்திரி புருஷ சாமுத்ரிகாலக்ஷணம .. | 1 0 | **மனுதர்ம சாஸ்திரம்** 2647 கிரந்த சுலோகங்களும் | |
| குறள் (மூலம்) .. .. .. | 0 4 | அவைகளின் தமிழ் மொழிபெயர்ப்பும்—560 | |
| பஞ்சதந்திரம் .. .. .. | 0 4 | பக்கம் .. .. .. | 2 4 |

**வியவசாய போதினி.**—நிலம், எரு, விதை, பயிரிடும்வகை முதலிய சகல விவசாய விஷயங்களையும் பற்றியது. மிராசுதாரர்களுக்கும் மற்றவர்களுக்கும் இன்றியமையாதது. தஞ்சாவூர் ஜில்லா, நீடாமங்கலம் அ. சேது ராமய்யர் இபற்றியது. 400 பக்கம், 80 படங்கள். ரூ. 1 4 0

**மானிட மர்மசாஸ்திரம்,**—அல்லது "சிசு உற்பத்தி சிந்தாமணி." இது யாவரும் படித்து அறியவேண்டிய அடியிற்கண்ட அரிய பெரிய விஷயங்களடங்கியது. 500 பக்கம், 190 சித்திர படங்களடங்கியது. ரூ. 5 0 0

**அடங்கிய விஷயங்கள்.**—மானிட ஜீவியத்தில் பலபருவங்கள்—இல்லற இன்பரகசியம்—ஜனனேந்திரியங்களின் அமைப்பும் அற்புதங்களும்—மாதாவின் மாக்ஷிமை—சிசு உற்பத்தி—கர்ப்பகால சுகாதாரவிதிகள்—கர்ப்பக்கால நோய்களும் பரிகாரங்களும்—மருத்துவ சாஸ்திரம்—சிசுபரிபாலனம்—மலட்டிற்கு நிவாரணம்—ஆண்மையினழிவும் அதன் மீட்சியும்—சமயோசித சஞ்சீவி.

**வி. கல்யாணராமய்யர் அண்டு கோ.,**

புக்ஸெல்லர்ஸ், எஸ்பௌநேட், மதராஸ்.

## MEDICAL NOTES.

## வைத்தியக் குறிப்புகள்.

REMEDY FOR RHEUMATISM.

**கீல்வாயுவுக்கு மருந்து.**—அமெரிகாதேசத்து நியூயார்க் பட்டணத்தில் கொடிய கீல்வாயு நோயினல் ஒருவர் மிக அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தாராம். அனேகம் டாக்டர்கள் தங்களால் இயன்றமட்டும் பார்த்தும் அந்த வியாதியை குணப்படுத்தமுடியவில்லை. கடைசியாக தேனீக்களைக் கொண்டுவந்து வியாதியஸ்தன்பேரில் நன்ருய்க்கொட்டும்படி செய்தார்கள். வியாதி நிவர்த்தியாகி விட்டதாம். சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் ஐரோப்பா கண்டத்தின்கீழ்பாகங்களில் கீல்வாயுவுக்கு தேனீக்களை விட்டுக்கொட்டச் செய்வது வழக்கமாயிருந்தது. இதேமாதிரியாக சுமார் 4 வருஷத்துக்கு முன் நீடித்த கீல்வாயுவால் அவஸ்தையடைந்து வந்த ஒரு குடியானவனுக்கு தேனீக்கள் கொட்டி வியாதி குணப்பட்டதாம்.

MEDICINAL VALUE OF PINE-APPLE.

**அன்னசிப் பழத்தின் வைத்திய உபயோகம்.**—அன்னசிப்பழத்திற்கு ஜீரணம்செய்யக் கூடிய சக்தி இருக்கிறதாக ஹவாயீ என்னும் தீவிலுள்ள வைத்தியர்கள் கண்டுபிடித் திருக்கிறார்கள். அஜீரணம், அக்கினி மாந்தம் முதலான வியாதிகளை சொஸ்தப்படுத்துவதில் கைகண்டமருந்து. பால்ஜெரிக்காமல் வயிறு மந்தமாயிருந்தால் அன்னசிப்பழம் சாப்பிட்டால் ஜீரணமாகுமாம். இப்பழத்தின் இரண்டு துண்டுகளுக்கு மத்தியில் ஒரு துண்டு மாமிசத்தை வைத்து, கொஞ்சநாழிகழித்து எடுத்துப்பார்த்தால் அம்மாமிசத்தின் குணம் மாறுபட்டிருக்கும். தொண்டைநோய், முதலான வியாதிகளை உடனேசொஸ்தப்படுத்தும் குணமும் அதற்கு உண்டு.

A COFFEE SUBSTITUTE.

**காப்பிக்கு பதில்.**—காப்பிக்கொட்டைக்குப் பதிலாக ஊசித்தகர விதையை உபயோகிக்கலாம் என்று ஒருவர் சொல்லுகிறார். அதில் காப்பியின் ஸாராம்சம் இருப்பதோடுகூட தேயிலையின் நல்லமணமும் இருக்கிறதாம். தவிர ஊசித்தகரவிதைக்கு மலவிரேசன சக்தியும் ரத்தசுத்திகுணமும் உண்டாம்.

TEA DRINKING.

**டீ குடிப்பது.**—டீ சாப்பிடுவது சரீரத்திற்கு உற்சாகத்தையும் சுகத்தையும் கொடுத்தபோதிலும் அதிகாலையில் டீ சாப்பிடுவது கூடாது என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆகாரமின்றி அதாவது வயிற்றில் ஒன்றுமில்லாதபோது டீ சாப்பிட்டால் கெடுதலை உண்டாக்கும். பாலுடன் சேர்த்துசாப்பிடுவதால் கெடுதலில்லை. அதிகாலையில் டீ சாப்பிடக் கூடாதெனச்சொல்லுவதற்குக் காரணம், அநேகர் பல் விளக்குவதற்கு முந்தியே டீ குடிக்கும் வழக்கத்தை அனுசரித்து வருகிறார்கள். அதனால், வாயிலுள்ள ஊத்தை முதலான விஷநீர் வயிற்றுக்குள் சென்று கெடுதலையும், அசௌக்கியத்தையும் உண்டுபண்ணலாம். சாப்பிடுவதற்குமுன் வாயையும் பல்லையும் சுத்தப்படுத்த வேண்டியதே நியாயம். சூடான ஆகாரமாவது, பானமாவது செய்வதற்கு முன் அவசியம் வாயைச் சுத்தப்படுத்த வேண்டும்.

CURE FOR SEA SICKNESS.

**கப்பலின் அசைவால் உண்டாகும் மயக்கத்திற்கு சிகிச்சை.**—கப்பலில் பிரயாணம் செய்பவர்களுக்கு அக்கப்பல் ஆடுவதால் மயக்கமும் வாந்தியும் உண்டாகிறதல்லவா? இதற்குக்காரணம் தேகத்திற்குள் உள்ள அவயவங்கள் அசைவதனால் தான் என்று சொல்லப்படுகிறது. இதற்குச் சரியான மருந்து இது வரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. அடிவயிற்றை ஒரு துணியினல் சுற்றிக்கட்டி வைத்திருந்தால், சரீரத்தின் உள்ளே இருக்கும் அவயவங்கள் அதிகமாக அசையாமல் இருக்கும். ஒரு கண்ணை மூடிக்கொண்டிருப்பதும் ஒரு நல்ல முறையாம். இவ்விரு முறைகளும் அவைகளை அனுஷ்டித்த அநேகருடைய விஷயத்தில் பலித்திருக்கின்றன.

AN EXCELLENT SLEEP INDUCER.

**தூக்கம் வருவதற்கு ஓர் நல்ல முறை.**—ஜனங்கள் தூக்கம் வரவேண்டுமென்று கண்ணை மூடிக்கொண்டிருப்பதற்குப் பதிலாகக் கண்ணை விழித்துக் கொண்டே படுத்திருந்தால் வெகு சீக்கிரத்தில் நித்திரை வந்து விடுமாம். நித்திரை செய்யும் அறையில் மங்கலான வெளிச்சமிருக்க வேண்டுமாம். தூக்கமில்லை என்று வந்தவர்களுக்கு மேலே சொல்லியபடி செய்யச் சொல்லி டாக்டர் ஹோரேஸ் டோபெல் என்பவர் அநேகரைத் தூங்கச்செய்திருக்கிறாராம்.



P. S. Sastri Artist and Photogrpher,
CARNATIC STUDIO, Mount Road, Madras.

SPECIALITIES. { SCHOOL GROUPS. FAMILY GROUPS. BROMIDE ENLARGEMENTS.

பொட்டகிராப் படங்கள்.

பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளையும் குடும்பங்களையும் பொட்டகிராப் படம் பிடிப்பதிலும் சிரியபடங்களை பெரிதாக்கிக்சொடுப்பதிலும் நிபுணர்.

பி. எஸ். சாஸ்திரி,
பொட்டகிராப் பிடிப்பவர், கர்நாடிக் ஸ்டூடியோ,
மவுண்ட் ரோட், மதராஸ்.



S. MUNNAJEE RAO.
Watch & Clock Dealer & Repairer,
ESPLANADE, MADRAS.

நாங்கள் மற்ற ஷாப்புகளைக் காட்டிலும் விலை சரசமாயும், சொத்துக்களின் பெறுமானப்படியும் கொடுக்கிறோமென்கிறதற்கு உத்தரவாதம்.

விலையில் சரசமான கைக்கெடியாரங்கள்.

| | | |
|---|---|---|
| கெ. 175. ஒரு பக்கம் மூடியில்லாதது. ... ... ... ... | ரூ. | 6—0—0 |
| ஷை ஏ. ஷை வெள்ளியில் ... ... ... | ரூ | 10—0—0 |
| ,, 247. ஒருபக்கம் திறந்தது. சாவியில்லாதது, வெள்ளியிற் செய்யப்பட்டது. | ரூ. | 6—0—0 |
| ,, ,, பி. ஒரு பக்கம் திறந்தது. ஆனல் நல்லமாதிரி. 6 கெம்புகளையுடையது. | ரூ. | 8—0—0 |
| ,, 248. ஒருபக்கம் திறந்தது. சாவியில்லாதது. ஜெர்மன் வெள்ளியினல் செய்யப்பட்டது. | ரூ. | 5—0—0 |
| ,, 249. ஆக்ஸிடைஸ்ட் ஜர்மன் வெள்ளியினல் செய்யப்பட்டது ... | ரூ. | 6—8—0 |

கெடியாரச் சங்கிலிகளில் பலவித மிருக்கின்றன. தங்க கிலிட்டுகொடுத்த சங்கிலி. விலை ரூ. 5 லிருந்து 10 ரூ. வரையிலிருக்கிறது.

எஸ். மன்னஜி ராவ், கெடியார ஷாப்பு, எஸ்பிளநேட், மதராஸ்

# PAGE FOR GIRLS.
# பெண்களுக்கான பக்கம்.

DIET OF NURSING WOMEN.

**தாதிகளுக்குத் தகுந்த ஆகாரம்.**—நம்தேசத்தில் அநேக தாய்மார்கள் தாங்கள் பெற்ற குழந்தைகளுக்கு முலைப்பால் போதுமான அளவு தங்களிடமில்லாமையால், தாதி என்று சொல்லப்படுகிற பால்காரிகளைவைத்துப் பால் கொடுக்கிறார்கள். சுத்தமானதாயும், அதிகமாகவும் பால் சுரப்பதற்குத் தகுந்த சில ஆகாரங்கள் இருக்கின்றன. தாதிகளின் ஆகாரத்தில் மாக்கறிசத்து அதிகமாகவும், மாமிச சத்து குறைவாகவும் இருக்கவேண்டுமாம். எண்ணெய் வர்க்கங்கள் இன்னும் நல்லவைகள். கடலை, பட்டாணி, பீன்ஸ், முதலிய கறிகளையும், பருத்திக்கொட்டைப்பிண்ணாக்கையும் சாப்பிட்டால் பால் அதிகமாக உண்டாகுமாம். "காட்லிவாயில்" என்னும் எண்ணெய், வெண்ணெய், பால், இவைகளுக்கும் பாலை அதிகமாகச் செய்யும் குணமுண்டாம்.

A GIRLS' ASSOCIATION.

**பெண்கள் சபை.**-ஸ்பெயின் தேசத்து ராஜதானியாகிய மட்ரீட் பட்டணத்தில் வாலிபப்பெண்களும் கைம்பெண்களும் கல்யாணஞ்செய்யாத பெண்களும் கூடி ஓர் சபை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அச்சபைக்கு தலைவர் ஸ்பெயின் அரசரின் தாயோடு பிறந்த மாமனும். அச்சபையைச்சேர்ந்த பெண்ணை விவாகஞ்செய்யப்பிரியமுள்ள புருஷன் எந்த லாகிரி வஸ்துவையும் குடிக்கக்கூடாது, சூதும் விளையாடக்கூடாது. இந்த நிபந்தனைகளை மீறிச் செய்வார்களேயானால், கல்யாண ஏற்பாடு தள்ளப்பட்டுப்போகிறதல்லாமல், புருஷனுக்குள்ள சொத்தில் நான்கில் ஒருபாகம் பெண்ணுக்குக் கொடுத்துவிடவேண்டுமாம்.

LADY GRADUATES.

**பீ. ஏ., பட்டம்பெற்ற பெண்கள்.**—இந்த வருஷம் 4 பெண்கள் பீ. ஏ. பரீக்ஷையில்தேறி, சென்னை சர்வகலாசாலையில் பட்டம் பெற்றார்கள். இவர்களில் இருவர் சுதேச கிறிஸ்தவர்கள். ஒருத்தி யூரேஷியப்பெண், மற்றொருத்தி மைசூரைச்சேர்ந்த பிராமணப்பெண்.

TO REMOVE SPLINTER.

**சிலாகையை எடுக்க.**—பெண்கள் சமையல் அடுப்புக்கு விறகு எடுக்கும்போது தற்செயலாய் கையில் சிலாகை ஏறுவது உண்டு, அந்தச்சிலாகை தைத்த இடத்தை ஊசியால் குத்திக்கிளறி, சிலாம்பை எடுப்பது வழக்கம். சில சமயங்களில் சிலாகை ஆழமாகவும் தைத்துவிடும். இதை எடுக்க ஊசியால் குத்துவதில் அதிக வலியைப் பொறுக்கமாட்டாமல் சிலர் கத்துவார்கள். ஊசியால் எடுக்க முடியாத சமயங்களில் பின்சொல்லிய விதமாகச் செய்தால் சிலாகைத்தானாகவே வந்து விடுமாம்.

பனஞ்சிலாகை, சிராய் முதலியவை சதையில் தைத்து விட்டால் நீராவியினால் வெகு சுலபமாக எடுத்து விடலாம். வாய்அகலமான ஒரு கிண்ணத்தில் ஆவிவரும்படியான வெந்நீரை ஊற்றி, சிராய் தைத்த பாகத்தை அப்பாத்திரத்தின்வாயில் வைத்து அமிழ்த்திக் கொண்டிருந்தால், சிறிது நேரத்திற்கெல்லாம், சிராய் வெளிப்படுவதுடன், வீக்கம் வலி முதலியவைகளும் நீங்கிவிடும்.

A LADY PANDIT.

**ஒரு பெண் பண்டிதை.**—மைசூர் சமஸ்தானத்தார் பண்டிதர் என்ற வித்வத் பட்டம் கொடுப்பதற்காக நடத்திய ஸமஸ்கிருத பரீட்சையில் சுந்தரம்மாள் என்ற ஸ்திரீ அவளுடன் பரீட்சிக்கப்பட்ட புருஷர்களிலும் முதன்மையாய்த் தேறினாள். இந்த அம்மாள்தான் அந்த சமஸ்தானத்து பண்டித பரீக்ஷையில் தேறிய முதல் ஸ்திரீ.

A FEMALE FARMING COMMUNITY.

**வேளாண்மைத் தொழில் செய்யும் பெண்கள்.**—தென் ஆபிரிகாவிலுள்ள கேப் காலொனியில் ஸட்டர்ஹீம் என்ற பள்ளத்தாக்கில் உள்ளதோட்டங்களை பெண்பிள்ளைகளே உழுது கொத்திப் பயிர் செய்து பரிபாலனம் செய்து வருகிறார்கள். சாமான்களை கடைகளிலும், சந்தைகளிலும் கொண்டுபோய் விற்பதும் இவர்களே.

இவர்கள் ஜர்மன்தேசத்தார். கிருமியா யுத்தத்துக்குப் பிறகு அவ்விடத்தில் குடியேறினவர்கள். வீட்டுப் புருஷர்கள் பட்டணக்கரைகளில் தங்கள் அலுவல்களைப்பார்த்து வருகிறார்கள்.



SCREENS AND WALL MATS OF OUR OWN INVENTION.

ORNAMENTS FOR HOUSES—ADVERTISEMENTS FOR MERCHANTS—OBJECT-LESSONS FOR SCHOOLS.



எங்களால் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டு, செய்யப்பட்டு வருகிற ஸ்கிரீன்கள் அல்லது தட்டிகள்.

வீடுகளை அலங்கரிக்கவும், வர்த்தகர் தங்கள் பெயர், வியாபாரம் முதலியன இவைகளின் பேரில் எழுதி பிரசுரஞ்செய்யவும், மிருகங்கள் முதலியவை பெயின்ட்செய்த ஸ்கிரீன்கள் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குக் காண்பிக்கவும் உதவும். 48"×12" தட்டி 1க்கு விலை. ரூ. 0 10 0.

1 முறை 12 தட்டி வாங்குபவர்களுக்கு தட்டி 1க்கு 0 8 0.

கதவு, சன்னல் முதலியவைகளுக்குப் பெரிய தட்டிகள் ஆர்டரின் பேரில் செய்யப்படும்.

இன்டியன் பைன் ஆர்ட்ஸ் கம்பெனி,
ஆபீஸ்—22, வெங்கடாசல முதலி வீதி, புரசை, மதிராஸ்.
ஓர்க்ஷாப்—105, அர்மீனியன் வீதி, ஜார்ஜடவுன், மதிராஸ்.

THE BENGAL CHEMICAL AND PHARMACEUTICAL WORKS, LTD.,
*91, Upper Circular Road, Calcutta.*

எங்கள் பரிமளக் கூந்தல் எண்ணெயில் அநேக மலர்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. மகா சுத்தமானது. வேறுவிதமான வர்ணங்களைச் சேர்த்து பகட்டப்படாதது.

இதில் எத்தனையோ ஆயிரக்கணக்கான ரோஜா, மல்லிகை, தாமரை முதலிய புஷ்பவாஸனைகள் வீசும்.

வேண்டியவர்கள் அடியில் கண்ட ஏஜண்டுகளிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பி. ரெங்கய்ய செட்டி அண்டு ஸன்ஸ், எஸ்பிளநேட், மதராஸ்.

ஸ்வதேசி வேர் அவுஸ், தம்புசெட்டித் தெரு, மதராஸ்.

நாஷனல் டிரேடிங் கம்பெனி, எஸ்பிளநேட், மதராஸ்.

கே. வி. பிராமய்யா அண்டு ஸன்ஸ், மதராஸ் அல்லது ராஜமஹேந்திரம்.

என். ஆர். பகடி அண்டு கம்பெனி, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

பங்காள ரஸாயன ஔஷதசாலை,
91. அப்பர் ஸர்கிலர் ரோட்,
கல்கத்தா.

T. E. C. SWAMINATHA CHETTIAR,
14, Luckmoodas Street, Madras.
*Head Office*:—KUMBAKONAM.

சுதேச ஜவுளி! சரசமான விலை!

1905-ஹு பனாரஸ் பொருள் காக்ஷியில் ஜவுளிகளுக்கு வெள்ளி மெடல் கிடைத்திருக்கிறது.

1. கும்பகோணம் வெள்ளை சிகப்பு ஜவுளி தினுசு.

2. துகிலி, கொரநாடு, ஆடுதுரை ஜவுளி.

3. கல்கத்தா, பனாரஸ்பட்டு பீதாம்பரங்கள் நார்மடிகள், புதுச்சேரி, கொள்ளேகாலம் உருமாலைகள்.

4. காஞ்சீபுரம், சேலம், மதுரை, கோயம்புத்தூர், ஆரணி, புல்லம்பேட்டை, நெல்லூர் முதலிய இடங்களின் ஜவுளி தினுசுகள் மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்கப்படும்.

தா. யி. சி. சாமினாத செட்டியார்,
14, லக்குமதாஸ் தெரு, சென்னை.
ஹெட் ஆபீஸ் :—கும்பகோணம்.

# PAGE FOR BOYS.
## சிறுவர்களுக்கான பக்கம்.

---

SOCIAL SERVICE.

**பிறருக்கு உதவி செய்தல்.**—லாகூர், பார்மன் கிறிஸ்டியன் காலேஜில் படிக்கும் பிள்ளைகளுக்கு சில நல்ல போதனைகளும் வழக்கங்களும் சொல்லிக் கொடுக்கப்பட்டு வருகின்றன. அவைகளை எல்லா உபாத்தியாயர்களும் மாணுக்கர்களும் கவனித்து அப்படியே செய்தால் நமது தேசம் வெகுசீக்கிரத்தில் முன்னுக்கு வந்து விடும் என்பதற்குச் சந்தேகமில்லை. சிறுவர்கள் ஒவ்வொருவரும் கஸரத் பழக வேண்டியது அவசியமாம். தவிர, பிறருக்கு உதவி செய்யவேண்டும் என்று எப்பொழுதும் போதிக்கப்படுகிறார்களாம். அடியில் கண்ட வேலைகளை மாணுக்கர்கள் செய்து வருகிறார்களாம். அவைகளாவன. (1) ஊர்களை சுத்தமாகவைத்துக் கொள்ள வேண்டுமென்பதைப் பற்றி கிராமத்தார்களுக்கு எடுத்துப் போதித்தல் (2) கோர்ட்டுவழக்குகள் வியாச்சியங்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் விட்டொழிக்கச் சொல்லல் (3) பள்ளிக்கூடமில்லாத கிராமங்களில் பள்ளிக்கூடம் ஏற்படுத்தல் (4) ஸ்திரீகளுக்குக் குடும்பவிஷயமான கல்வி கற்பித்தல் (5) நல்ல விஷயமான புஸ்தகங்களைக் கல்லாதவர்களுக்கு படித்துக் காண்பித்தல்.

SHORT TEMPER.

**முன்கோபம்.**—எல்லோரும் அதிகவேலை, வேலையில் உண்டாகும் மனத்தளர்ச்சி, வியோகதுக்கம், திடீரென்று உண்டாகும் விஷயங்களால் ஏற்படும் பிரமை ஆகிய இவைகள் முன்கோபத்திற்கு காரணம் என்று எண்ணுவது ஸகஜம். ஆனால் ஒரு சிறந்த வைத்தியர் இவைகளால் எவ்வளவுதான் முன்கோபம் விருத்தி அடைவதாக இருந்தபோதிலும், இவைகள் அதற்குக் காரணமாகமாட்டா என்று அபிப்பிராயப்படுகிறார். மனம்போன போக்கிலும் கெட்ட வழிகளிலும் இளம்பிராயத்தில் நடப்பதே முன்கோபத்திற்குக் காரணம் என்று அவர் சொல்லுகிறார். இதை சிறுவர்கள் நன்றாய் அறிந்து சிறுவயதிலேயே மனம் போனபடி விடாமல் தடுக்க முயலவேண்டும்.

PUNISHMENT FOR CIGARETTE SMOKING.

**சிகரெட் குடித்தால் தண்டனை.**—மிர்மூர் ராஜா பின்வருமாறு சட்டமேற்படுத்தியிருக்கிறார்.

"பதினெட்டு வயதிற்குள்பட்ட யாராவது, சிகரெட், சுருட்டு, அபின் முதலியவைகளையாவது, சாராயம், கள் முதலிய லாகிரி பானங்களையாவது, டாக்டர்களுடைய உத்தரவின்றி உபயோகப்படுத்தினால், மிர்மூரில் அனுசரிக்கப்படும் கிரிமினல் புரோசீஜர் கோடின்படி, மிர்மூர் ராஜாவால் நியமிக்கப்பட்டிருக்கும் மாஜிஸ்ட்ரேட்டால், பின்வரும் தண்டனையிலொன்று விதிக்கப்படுவார்கள்."

(1) 10ரூபாய்க்கு மேல்படாமல் அபராதம்.
(2) 15 நாளுக்கு மேல்படாமல் வெறுங்காவல்.
(3) 12அடிக்கு மேல்போகாமல் சவுக்கடி.

இவைகளில் ஒன்றாவது அல்லது இரண்டாவது மாஜிஸ்ட்ரேட் இஷ்டப்படி விதிக்கலாம். அபராதம் கொடுக்கமுடியாவிட்டால் 15 நாள் வெறுங்காவல் விதிக்கப்படும்.

THE BIGGEST IN THE WORLD.

**பூமியிலுள்ளவைகளில் பெரிது.**— மனிதரால் செய்யப்பட்டிருப்பவைகளில் ஆச்சரியத்தைக் கொடுப்பது பெரிய பிரமிட் என்ற கோபுரம். இது உலகத்தின் ஏழு அதிசயங்களில் ஒன்று. சியோப்பா என்ற அரசனால் தனக்குக் கல்லறையாக கட்டப்பட்டதாம். இதில் உபயோகப் பட்டிருக்கும் கற்களில் 30 அடி நீளத்திற்குக் குறைந்தவைகள் ஒன்றும் இல்லை. இவைகள் மிகவும் தூரமான இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்டனவாம். இந்தச் சுரங்கத்திற்கும் கட்டிடம் நடந்த இடத்திற்கும் இடையில் கல் பாவிய ரஸ்தா ஒன்று போடப்பட்டிருந்ததாம். இந்த ரஸ்தாபோடுவதற்குமாத்திரம் 10 வருஷம் சென்றதாம். லக்ஷம்பேர் வேலை செய்து பிரமிடைக்கட்டி முடிக்க 20வருஷ சென்றதாம். இக்கட்டிடத்தின் அடிப்பாகம் 4 ஏகராவுக்கு மேலானது. இது 768 அடி சமசதுரம் உள்ளது. இதன் உயரம் 450 அடி.

SUGAR AS FOOD.

**சர்க்கரை ஆகாரம்.**—மலைகளில் ஏறிப்போகிற ஜனங்களுக்கு ஏற ஏற சர்க்கரையிலும் தித்திப்பான ஆகாரத்திலும் ஜாஸ்தி பிரியம் உண்டாகும். வீட்டில் சர்க்கரையையே ஒரு போதும் தொடுகிற வாடிக்கையே இல்லாதவர்களும் மலை ஏறி வழி நடந்தால் ஜாஸ்தியாக சர்க்கரையைத்தின்பார்கள். இட்டலிதேசத்து ஆல்ப்ஸ் என்னும் மலைகளில் பிரயாணம் செய்கிறவர்களுக்கு இது அநுபோகத்தில் நன்றாய்த்தெரிந்த விஷயம். இதனால் சர்க்கரையானது சதை, நரம்புக்கு அனுகுணமாகி புஷ்டியையும் பலத்தையும் கொடுக்கிறதென்றும் அது சரியான உணவு பதார்த்தமென்றும் சொல்லலாம்.




DOYAL & SONS,

137, H. Amherst Street, *Calcutta.*



"ஜோதி புளுட் ஹார்மோனியம்."

இது மெஸ்ஸர்ஸ் டயால் அண்டு ஸன்ஸ் அவர்களால் விசேஷ மாதிரியாக செய்து விற்கப்பட்டுவருகிறது. அழகும் இனிமையான ஸ்வரமும், வேலைப்பாடும் அமைந்தது. நூதன ஆயுதங்களைக்கொண்டு உறுதியாக செய்யப்பட்டிருக்கிறது.

அளவு—பார்வைக்கு லக்ஷணமாயும் அடக்கமாயுமிருக்கும்.

3 Octaves 3 stops C to C (one set reed), Rs. 20, 22, 23.
" 4 stops " (2 sets of reeds), Rs. 30, 35.
" 5 stops " " Rs. 40, 45.

(1) இரண்டு வருஷத்துக்கு ஜாமீன்.
(2) விவரமான படங்கள் அடங்கிய காட்லாக்கு தேவையானவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.
(3) ஏஜண்டுகள் தேவை. மனுவின்பேரில் நிபந்தனைகள் தெரிவிக்கப்படும்.
(4) இந்த வாத்தியத்தை வாங்க விரும்புகிறவர்கள் ஒவ்வொரு ஆர்டருடன் 5-ரூபாய் முன்பணம் அனுப்பவேண்டும்.

டயால் அண்டு ஸன்ஸ்,
137, எச். அம்ஹெர்ஸ்டு தெரு,
கல்கத்தா.

MAITRA & Co., Tarak Chatterjea's Lane,
*Hatkhola P. O., Calcutta.*

க்ஷவரக்கத்தி தேவையில்லை.

"மயித்திரர்வின் ஹேர்டெபிலேடரி" என்னும் கேசநாசனியை வாங்கி உபயோகியுங்கள். உடனே மயிர் உதிர்ந்துவிடும். வலி, எரிச்சல், அரிப்பு இவைகள் ஒன்றும் இராது. மற்ற கேசநாசனி மருந்துகளைப்போல் இதில் தேகத்தைக் கெடுதி செய்யும் படியான மூலிகைகள் சேரவில்லை. ஆகையால் இதை அச்சமின்றி உபயோகிக்கலாம். இவ்விஷயத்துக்கு இதுவே சிறந்த மருந்து.

புட்டி ஒன்றுக்கு விலை அணு 6.
தபாற்கூலியுள்பட விலை அணு 10.
3. புட்டிகளின் விலை ரூ. 1.
தபாற்கூலியுள்பட விலை ரூ. 1-4-0.

வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

புலாராணி.

இந்த பரிமள கூந்தல் தைலம் எல்லாவற்றிலும் சிறந்தது. இதில் இந்தியா தேசத்திலுள்ளவாஸனை மலர்கள் சேர்ந்திருக்கின்றன. மணம் மாறாது. சந்துஷ்டியை உண்டாக்கும். மூளையை குளிரச்செய்யும். மயிர்களை உதிராமல் வளரச்செய்யும். ஒரு புட்டி உபயோகித்துப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும்.

ஒரு புட்டியின் விலை அணு 12.
மூன்று புட்டிகளின் விலை ரூ. 2.
ஒரு டஸன் ரூ. 7.
தபாற்கூலி பிரத்தியேகம்.

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

மயித்திரா அண்டு கம்பெனி,
தாரக் சட்டர்ஜி தெரு,
ஹாட்கோலா தபாலாபீஸ்,
கல்கத்தா.

# INDIAN NEWS.

## இந்தியநாட்டு சமாசாரங்கள்.

---

INDUSTRIAL AND SCIENTIFIC EDUCATION.

**கைத்தொழில் சாஸ்திரீயப்படிப்பு.**—இந்தியாவில் சாஸ்திரீயமான படிப்பையும் கைத்தொழில் வித்தையையும் விருத்தி செய்ய, கல்கத்தாவில் ஒரு சங்கம் ஏற்பட்டிருக்கிறது. இதன் ஸம்வத்ஸரக் கூட்டம் ஏப்ரல் மீ 12உ நடந்தேறியது. இதில் நொரேந்தர நாத் ஸென் என்பவர் அக்கிராஸனம் வகித்து நமது தேசத்தார் கைத்தொழில் அபிவிருத்தி விஷயத்தில் அதிகசிரத்தை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று பலவாறுய்ச் சொன்னார். அந்தக் கூட்டத்தில் அனேகம் தீர்மானங்கள் செய்யப்பட்டன. தொழிற்சாலைகளை ஸ்தாபிக்க கொஞ்சம் பொருளுதவிசெய்துவரவேணுமாய் கவர்ன்மெண்டாரைக்கேட்டுக் கொண்டார்கள். இந்துக்களில் ஐவேஜியுள்ள பிரபுக்கள் தொழிற்சாலைகளை ஸ்தாபித்து அதில் இந்தியர்களையே வேலைக்கு நியமித்துக் கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். அதிக பணக்காரராகவும் அதிக ஏழைகளாகவும் இல்லாமல் நடுநிலைமையில் இருக்கப்பட்டவர்கள் பயிர்த்தொழிலைச் செய்வது சிலாக்கியம் என்று வெளியிட்டார்கள். பள்ளிக்கூடங்களில் விவஸாயிகளுக்கு முக்கியமாயுள்ள சர்வே சம்பந்தமானபடிப்புச் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்று கவர்ன்மெண்டாருக்கும் ஸர்வகலாசாலையாருக்கும் தெரிவித்துக் கொண்டார்கள். வயல்களில் வேலையில்லாத காலங்களில் விவஸாயிகள் சாதாரணமாய் நூல் நூற்கவும் துணி நெய்யவும் கற்றுக்கொள்ளும்படி எற்பாடுகள் செய்யப்படவேணும் என்று தீர்மானித்தார்கள். இந்தியாவில் உள்ள முதலாளிகள் தீக்குச்சி, பென்ஸல், சுருட்டு, சர்க்கரை, மேஜோடு, ஸோப்பு, வாஸனைத்திரவியங்கள், கடுதாசி, கண்ணாடி, குடை, பிஸ்கோத்து, அச்சுமசி முதலான ஸாமான்களைச் செய்விக்க ஆரம்பிக்கவேண்டியது அவசியம் என்றும் இது விஷயத்தில்தேர்ந்த நிபுணர்களைக் கொண்டு சரியான வழிகளை கற்பிக்க சங்கத்தார் தயாராக இருப்பதாகவும் சொன்னார்கள். இந்தியாவில் தச்சுவேலையிலும், ஜோடுதைப்பதிலும் தேர்ந்தவர்களில்லாமல் சீனதேசத்து தொழிலாளிகள் இந்தியாவில் அதிகமாய் வியாபித்துக் கொண்டிருக்கிறார்கள். இதை நிவர்த்திசெய்ய கவர்ன்மெண்டார் இந்தியர்களில் சிலருக்கு மேற்படி தொழில்களைப் பயிற்றுவிக்க வேண்டும் என்றும் தெரிவித்துக்கொண்டார்கள்.

நாளது வருஷத்தில் அன்னிய நாடுகளுக்குச் சென்று சாஸ்திரயுக்தமாயும், கைத்தொழில் சம்பந்தமாயும் உள்ள படிப்புகளை கற்றுவர நூறு மாணாக்கர்கள் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்களில் 25 பேர் இங்கிலாந்துக்கும், 17 பேர் ஜப்பானுக்கும், 3 பேர் ஜர்மனிக்கும், ஸ்வீடனுக்கு ஒருவரும், கன்னடாவுக்கு ஒருவரும், அமெரிகாவுக்கு 4 பேரும், மற்ற இடங்களுக்கு 40 பேரும் போவார்களாம்

THE U. P. INDUSTRIAL CONFERENCE.

**ஐக்கியமாகாண கைத்தொழிற் கூட்டம்.**—இந்தக் கூட்டம் ஏப்ரல் மீ 13உ ஆக்ராவில் கூடிற்று. இதில் யூஸப் ஆலி என்பவர் சபாநாயகராக இருந்தார். இதில், கைத்தொழில் அபிவிருத்திக்காக ஐக்கியத்தை உண்டுபண்ண ஜனங்கள் கூட்டுறவுச் சங்கங்களைப் பெருகச் செய்யவேண்டு மென்றும், முதலாளிகள் நெசவு தொழில், சர்க்கரை செய்தல், தோல் பதனிடல், எண்ணெய் ஆட்டுதல் முதலான கைத்தொழில்களை முன்னுக்குக் கொண்டுவர முயலவேண்டும் என்றும் பிரேரபணை செய்யப்பட்டது. ரயில்வே டிபார்ட்மெண்டார் ஸாமான்களின் மேல் அதிக தீர்வை போடுவதாயும் இதை கவர்ன்மெண்டார் விசாரித்து வியாபாரம் கெட்டுப்போகாதபடி கூடுமானவரையில் தீர்வையைக்குறைக்க வேண்டும் என்றும் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்துக்கொண்டார்கள். ரயில் மார்க்கமாய் அனுப்பப்படும் ஸாமான்களை தாமதமில்லாமல் பட்டுவாடா செய்ய தகுந்த ஏற்பாடு பண்ணவேண்டுமாய் ரயில்வே டிபார்ட்மெண்டாருக்கு அறிவித்துக் கொண்டார்கள்.

EXHIBITION IN LAHORE.

**லாகூரில் பொருட்காட்சி.**—லாகூரில் வருகிற டிஸம்பர் மாதக் கடைசியில் காங்கிரெஸ் மகாசபை நடக்கப்போகிறது. அந்த சமயத்தில் பொருட்காட்சியொன்றும் நடக்கும். அப்பொருட்காட்சிக் கமிட்டிக்கு ஸர். பி. ஸி. சாட்டர்ஜி சேர்மன். ஆனரெபில் லாலா ஹரிகிருஷ்ணலால் காரியதரிசி. பஞ்சாப் மாகாண லெப்டினண்ட் கவர்னராகிய ஸர் லூயி டேன் அக்காட்சி நடத்தப்படப்போகிறதை அங்கீகரித்திருப்பதுமன்றி அக்காட்சிக்கு வேண்டிய உதவியைச் செய்வதாகவும் வாக்களித்திருக்கிறார்.



ஸ்வதேசாபிமானமே ஸ்வர்கத்தினின்றும் மாணிடருக்கு மேன்மையானது.
தேசகைத்தொழில்களை விருத்திசெய்வதே தேசாபிமானத்திற்கு அடையாளம்.

வேத நாணயம்! வேத நயம்!!

**காலத்திற்கு ஒத்தது. இன்றியமையாதது**

1. மேலான சுத்தவெள்ளை, பல அளவுள்ள ட்வில் ஷர்டுகள் டஜன் 1க்கு ரூ 9-12-0, 10-8-0, 11-4-0, 12-0-0.
2. உயர்ந்த கெட்டிச்சாயம், கருப்பு, சிகப்பு, நீலம் கோடுகளுள்ள ட்வில் ஷர்டுகள் டஜன் 1க்கு ரூ. 10-8-0, 12-0-0.
3. நிகரற்ற சாயம் கெட்டி, நெருங்கிய கருப்பு, சிகப்புக் கோடுள்ள ஷர்டுகள் டஜன் 1க்கு ரூ. 9-0-0.
4. வெகு நாணயமான, கெடிதமான லாங்கிளாத்து ஷர்டுகள் டஜன் 1க்கு ரூ. 14-0-0.
5. சிறந்த லாங்கிளாத்தில் கருப்புக் கோடுள்ள ஷர்டுகள் டஜன் 1க்கு ரூ. 12-0-0.
6. நேர்த்தியான வெய்யில் கால பனியன்கள் கெட்டி, சன்னம் டஜன் 1க்கு ரூ. 4-0-0, 4-8-0, 6-8-0, 7-8-0,

**ஸ்வதேசவஸ்து வர்த்தகசாலை,**
199. தங்கசாலைத்தெருவு,
சென்னப்பட்டணம்.

---

THE MORN HOUSE, MADRAS.

மன்மதகாந்தன் கதை.

---

முதற்பாகம்.—கதைக்குள் கதையாய் 1, 10, 100 ஆகத் தொடர்ந்து அமைந்து, நாவிற்கு நயமும், காதிற்கு இன்பமும் கொடுத்து மதியை விளக்கும். 80 புத்தகங்கள்தான் இருக்கின்றன. விலை அணா 8. தபாற்கூலி வேறு. ஷை கதையின் இரண்டாம்பாகம் கூடிய சீக்கிரம் வெளிவரும்.

மாரன் அவுஸ்,
மண்ணடி, மதராஸ்.

THE NEW WORK BY PROFESSOR EBBARD.

Price 6s. Postage 4d.

**"HYGIENE AND SELF-CURE".**

**A PRACTICAL GUIDE** for the Self-Treatment of Diseases and Chronic Complaints based upon modern methods of **NATURAL TREATMENT WITHOUT PHYSIC.**

*Publishers' Announcement:*

The purpose of "Hygiene and Self-Cure" is to supply the need of an authoritative work of reference on the correct methods to be used to combat disease and the many chronic complaints, so prevalent at the present time, without having recourse to drugs or physic.

The Author of "Will Power," "Life-Giving Energy," "Bedrock of Health," may be truthfully described as a Pioneer of Modern Natural Methods of Curative Treatment. We possess thousands of testimonials from grateful men and women who, having failed to obtain relief of their sufferings from other sources, received enduring benefit from Professor Ebbard's teaching and treatment.

Under the heading of the Disorder or Ailment will be found the exact means the inquirer should employ for the Self-Cure of any specific ill.

*Prospectus Post Free:*

**MODERN MEDICAL PUBLISHING CO.**
Department 1,
12 & 13 Henrietta Street, London, W.C.

CLASSIFIED COMMERCIAL DIRECTORY.

**வியாபார பகுதி விலாசங்கள்,**

COLOUR PENCIL MANUFACTURER.
கலர் பென்சில் செய்கிறவர்கள்.
K. P. RAMASWAMY IYER,
15, Solayappa Mudali Street,
*KUMBAKONAM.*

SILK MERCHANTS.
பட்டு வியாபாரிகள்.
பட்டு பீதாம்பர கம்பெனி,
காசி (பனாரிஸ்.)

BRUSH MANUFACTURE.
புருஷ் செய்தல்.
B. V. K. CHETTY & CO.,
No, 22. Broadway, Madras.

## FOREIGN NEWS.

## அந்நிய நாட்டு சமாசாரங்கள்.

AGRICULTURAL CO-OPERATION IN GREAT BRITAIN.

**இங்கிலாந்தில் விவசாய ஐக்கியம்.**—இங்கிலாண்டில் விவசாயிகளுக்குள் ஐக்கியத்தை உண்டு பண்ணவும் விருத்தி செய்யவும் "அக்ரிகல்சரல் ஆர்கனைஸேஷன் ஸொஸைடி" என்று சொல்லப்பட்ட விவஸாயிகளுக்கு வேண்டிய உதவிகளைச்செய்வதற்காக ஒரு சங்கமிருக்கிறது. இங்கிலாண்டுதேசத்திலுள்ள விவசாய போர்டார் வருஷம் ஒன்றுக்கு பதினெண்ணாயிரம் ரூபாய் வீதம் இந்த சங்கத்தின் செலவுக்காக மூன்று வருஷத்துக்கு கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பணத்தைக் கொண்டு, கூட்டுறவுச் சங்கங்களினால் விவஸாயிகளுக்கு அதிக நன்மையுண்டு என்பதை எடுத்துச் சொல்லுவதும், கூட்டுறவுச் சங்கங்களாகச் சேர்ந்து கிராமாந்தரஜனங்களுக்கு உபயோகப்படத்தக்க தொழில்களை ஆரம்பிக்க வேண்டியது என்பதை போதிப்பதும், கூட்டுறவுச் சங்கங்களையும், அவைகளால் ஆரம்பிக்கப்பட்ட தொழில்களையும், நடத்தும் வழிகளை எடுத்துக்காட்டி அது விஷயங்களில் வேண்டிய உதவியைச் செய்வதும், மேற்சொன்ன "அக்ரிகல்சரல் ஆர்கனைஸேஷன் ஸொஸைடி"யினுடைய வேலைகளாகும். கொஞ்சமாக நிலமுள்ளவர்களை சாகுபடி செய்ய வேண்டிய விஷயத்தில் சிறுசங்கங்களாகச் சேர்த்து ஐக்கியத்தை உண்டு பண்ண மூன்றுபேர்களை ஷை ஸொஸைடி நியமிக்கவேண்டும். அம்மூவரில் ஒருவர் கோழிகளை வளர்த்து, கோழிகளையும் முட்டைகளையும் விற்கும் தொழில்களை நடத்த கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட வேண்டியதைப்பற்றி விவகரிக்கக் கூடியவராய் இருக்கவேண்டுமாம்.

INDIAN IMMIGRANTS IN BRITISH GUIANA.

**இந்தியாவிலிருந்து பிரிடிஷ் அதாவது ஆங்கிலேய கயானாவில் குடியேறி யிருப்பவர்கள்.**—தென்அமெரிகா கண்டத்தில் ஆங்கிலேய அரசாட்சிக்குட்பட்டு பிரிடிஷ் கயானா என்று ஒரு மாகாண மிருக்கிறது. அதில் 132,850 இந்தியர்கள் இருப்பதாகத் தெரிய வருகிறது. இவர்களில் 9,784 பேர்கள் ஒப்பந்தத்தின்மேல் போயிருப்பவர்கள். 69,149 பேர்கள் தோட்டங்களில் வேலை செய்கிறார்களாம். அந்த தேசத்தில் நெல்லும் கரும்பும் விசேஷமாக சாகுபடி ஆகின்றன. அநேகமாய் வருஷம் முழுவதும் வேலை அகப்படுமாம். நெல் அறுவடையாகும் காலமும் கரும்பு ஆலையாடும் காலமும் ஒரேகாலமாயிருப்பதால் அந்தக்காலங்களில் கூலிகள் அகப்படுவது கஷ்டமாக இருக்கிறதாம். இங்கிருந்துபோய் குடியேறியிருப்பவர்கள் கிராமங்களிலிருந்து கொண்டே நெற்பயிரை விளைவிக்கப் பிரியப்படுகிறார்கள். அப்படிச் செய்வதால் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்வதைவிட ஜாஸ்தி கூலி கிடைக்கிறதாம்.

THE CHARACTER OF THE IMMIGRANTS.

**குடியேறி யிருக்கிறவர்களின் குணங்கள்.**—இவர்கள் ஆதியில் தோட்டங்களுக்கு ஒப்பந்தத்தின் மேல் போய் அம்மாகாணம் முழுமையும் இப்பொழுது வியாபித்திருக்கிறார்கள். இவர்கள் தரிசாய் கிடக்கும் நிலங்களை உழுது சாகுபடி செய்கிறார்கள். செட்டாயும் ஓயாமல் வேலைசெய்யப் பிரியமுள்ளவர்களாயும், ஜலம் இருந்தாலும் இல்லாமல் போனாலும் கொஞ்சம் கூட பயப்படாதவர்களாயு மிருப்பதால் அந்த தேசத்திற்கு தகுந்த குடிகள் என்று சொல்லப்படுகிறது. ஆகையால் இவர்களில் அநேகர் இந்தியாவுக்கு திரும்பிவந்து விடுவதைப்பற்றி அங்குள்ள ஒரு அதிகாரி வருத்தப்படுகிறார். இவர்களை அங்கேயே இருக்கச்சொல்லும்படி செய்ய ஏதாவது ஆசைகாட்டி வைத்துக் கொள்ள முயல்வதாகவும் தெரிகிறது.

WHEAT EXPERT.

**கோதுமைப் பயிர் செய்வதில் நிபுணர்.**—அமெரிக்காவில் இந்தியானா என்னும் மாகாணத்தில் பிராங்கிலின் என்னும் ஊரில் உள்ள ஜெ. பி. க்ளோர் என்ற ஒருவர் கோதுமை ஸாகுபடி செய்வதில் மகா நிபுணர். இவர் பயிர் செய்த கோதுமைக்கு 2000 பவுன்வரையில் அநேக ஊர்களில் நடந்த காக்ஷிகளில் இனம் வாங்கி இருக்கிறார். இவரைத் தங்களுடைய தேசத்தில் கோதுமை ஸாகுபடிசெய்யும் உன்னதமான முறைகளை கிருஷிகர்களுக்குக் கற்றுக் கொடுக்கும்படி ருஷியா கவான்மெண்டார் நியமித்திருக்கிறார்களாம்.




## ஆண், பெண், பாலர்கள் படிக்கத்தகுந்த தமிழ்ப் புத்தகங்கள்

**அத்துவைத தீபிகை பாராபரக்கண்ணி** அணா 4.

**சநாதநதர்மம்.**—3-ம் பிரிவு. இது ஹைகோர்ட்டு வக்கீலும் மதுரை பிரஹ்மஞான சபை பிரஸிடெண்டுமாகிய ப. நாராயண ஐயரால் மொழி பெயர்க்கப்பட்டது. விலை ரூ 1.

**விவசாய போதினி,** விலை ரூபா 1 4 0.

**மஹா மஹோபாத்தியாய வே. சாமிநாதையரவர்கள் பதிப்பித்தவை.**

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிலப்பதிகாரம் ... ... | 5 | 8 |
| புறப்பொருள் வெண்பா மாலை... | 1 | 8 |
| திருவால வாயுடையார் திருவிளையாடற் புராணம் ... ... | 2 | 0 |
| திருக்காளத்தி நாதருலா ... | 0 | 6 |
| திருப்பூவ நாதருலா ... ... | 0 | 4 |
| சூரைமா நகர்ப்புராணம் ... | 0 | 8 |
| தியாகராஜ லீலை ... ... | 0 | 12 |
| திருவாடு துறைகோவை ... | 0 | 8 |
| மணிமேகலை மூலமும் பதவுரையும். | 5 | 0 |
| புறநானூறு மூலமும் உரையும். | 4 | 0 |
| திருப்பெருந்துறைப் புராணம்... | 1 | 0 |
| வீரவனப்புராணம் ... ... | 0 | 12 |
| ஐங்குறுநூறும் பழையவுரையும். | 1 | 8 |
| பதிற்றுப்பத்து மூலமும் ,, ... | 1 | 8 |
| பத்துப்பாட்டு ... ... | 3 | 0 |
| புத்த சரித்திரம் ... ... | 0 | 12 |
| சீர்காழிக்கோவை ... ... | 0 | 8 |

### பண்டிதர் நடேச சாஸ்திரியாரால் இயற்றப்பட்ட வால்மீகராமாயண வசனம்.

| | | | |
|---|---|---|---|
| பாலகாண்டம் | ரூ. | 0 | 12 |
| அயோத்தியாகாண்டம் | ,, | 3 | 0 |
| ஆரண்ணியகாண்டம் | ,, | 1 | 12 |
| கிஷ்கிந்தியாகாண்டம் | ,, | 1 | 12 |

**நடேச சாஸ்திரியார் கதைகள்.**

| | | | |
|---|---|---|---|
| மதி கெட்ட மனைவி | ,, | 1 | 0 |
| ஸ்ரீ மாமி கொலுவிருக்கை | ,, | 0 | 8 |
| தலையணை மந்திரோபதேசம் | ,, | 0 | 8 |
| வேணீ ஸம்ஹாரம் | ,, | 0 | 3 |
| முத்திரா ராக்ஷஸம் | ,, | 0 | 4 |
| மிருச்சகடி. ... | ,, | 0 | 4 |
| ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள் | ,, | 0 | 6 |

**வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் இயற்றியது.**

**கலாவதி.**—ஏழங்கமுள்ள ஒரு புதிய தமிழ் நாடகம். சுதந்திர யூகமுங் கற்பனைத்திறனும் வாய்ந்தது. ராப்பர் ரூ 1-8. காலிகோ ரூ 1-12.

**பாவலர் விருந்து.**—முதனூல். ஆங்காங்குச்சில புதிய கருத்துக்களடங்கிய இனிமையும், புதுமையும், வாய்ந்த பதினேரு சிறிய செய்யுநூல்கள் கொண்டது விலை அணா 8.

**நாடகவியல்.**—இது 272 சூத்திரங்களடங்கிய நாடகத்தமிழிலக்கண நூல். விலை அணா 8.

**ஸ்ரீ மணியசிவனார் சரித்திரம்.**—சைவமதத்தின் உண்மை பல தெரிவிப்பது. அணா 2

**நுபாவதி அல்லது காணமற்போன மகள்**—கதையின்மூலமாய்ச் சிறந்தநீதிகள் பலகற்பிப்பது. ராப்பர் ரூபா 1. காலிகோ ரூ. 1-4-0

### ப. சம்பந்த முதலியாரா லியற்றப் பட்ட தமிழ் நாடகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| இரண்டு நண்பர்கள் ... ... | 0 | 12 | 0 |
| இரண்டு சகோதரிகள் ... | 0 | 12 | 0 |
| வேதாள உலகம் ... ... | 0 | 8 | 0 |
| கள்வர் தலைவன் ... ... | 0 | 8 | 0 |
| சாரங்கதரன் ... ... | 0 | 8 | 0 |
| காலவரிஷி ... ... | 0 | 8 | 0 |
| யயாதி ... ... ... | 0 | 8 | 0 |
| மனோகரன் ... ... | 0 | 12 | 0 |
| சத்ருஜித்... ... ... | 0 | 12 | 0 |
| அமலாதித்யன் ... ... | 1 | 0 | 0 |

### இனிய தமிழ் நாவல்கள்.

| | | | |
|---|---|---|---|
| இராஜாம்பாள் ... ... | 0 | 12 | 0 |
| லலிதாங்கி ... ... | 0 | 8 | 0 |
| ஸுஜாதா ... ... | 0 | 8 | 0 |
| மகாஜன மண்டலி ... ... | 0 | 10 | 0 |
| ஓர் உழவன் மகள் ... ... | 0 | 8 | 0 |
| ஜோதி மாலை . ... ... | 0 | 8 | 0 |
| கமலாம்பாள் ... ... | 1 | 4 | 0 |
| குணமாலிகை ... ... | 0 | 6 | 0 |
| காதலின் வெற்றி ... ... | 0 | 9 | 0 |

### இதர புத்தகங்கள்.

**போஜ சரித்திரம்.** பதினாறு சித்திரப்படங்களடங்கிய ஒரு புதிய தமிழ் நாடகம். விலை ரூபா 1—8—0.

**தேகதத்துவ சாஸ்திரம்,** விலை ரூபா 2—8—0.

ஜி. ஏ. நடேசன் அண்டு கம்பெனி, எஸ்பிளநேட், சென்னை.
G. A. NATESAN & CO., Esplanade, Madras, E.

## SEASON, CROPS AND PRICES.

## காலஸ்திதி, பயிர்கள், அகவிலே.

**Sugar Imports.**

**சர்க்கரை இறக்குமதி.—**

ஏங்கேயிருந்து வந்தது.

| வார முடிவு. | சென்னப் பட்டணத்தில். | ரங்கூனில். |
|---|---|---|
| | அந்தர். | அந்தர். |
| மார்ச்சுமீ 27உ | | |
| இங்கிலாந்து | 9 | 25 |
| ஆஸ்திரியா, ஹங்கெரி | 5600 | 4,200 |
| ஜாவா | | 5,997 |
| வேறு ஐரோப்பா அல்லாத தேசங்கள் | | 2,976 |
| ஏப்பிரல்மீ 3உ | | |
| இங்கிலாந்து | 1 | 73 |
| ஜாவா | | 3,467 |
| ஏப்பிரல்மீ 10உ | | |
| ஜாவா | | 13,057 |
| ஏப்பிரல் 17உ | | |
| இங்கிலாந்து | | 39 |
| ஆஸ்ட்ரியா ஹங்கெரி | 8 | |
| வேறு ஐரோப்பா அல்லாததேசங்கள் ... | | 1,132 |
| ஏப்பிரல் 24உ | | |
| இங்கிலாந்து ... | 10 | 34 |
| ஆஸ்ட்ரியா ஹங்கெரி ... | | 5,000 |
| வேறுஐரோப்பா அல்லாத தேசங்கள் ... | | 1 |
| ஆகமொத்தம் .. | 5628 | 36,001 |

**Cotton goods.**

**துணி ஸாமான்கள்.**—இதர தேசங்களிலிருந்து சென்னப்பட்டணத்திலும், ரங்கூனிலும் இறக்குமதி விவரங்கள்.

நூலும் முறுக்கு நூலும்.

| வார முடிவு. | சென்னப்பட்டணத்தில். |
|---|---|
| | ராத்தல். |
| மார்ச்சுமீ 27உ | 42,900 |
| ஏப்பிரல்மீ 3உ | 178,250 |
| ,, 10உ | 17,000 |
| ,, 17உ | 10,000 |
| ,, 24உ | 1,36,096 |
| ஆகமொத்தம் .. | 3,84,246 |

காரிகத் துணிகள்.

| வார முடிவு. | சென்னப் பட்டணத்தில் | ரங்கூனில். |
|---|---|---|
| | கஜம். | கஜம். |
| மார்ச்சுமீ 27உ | 938,284 | 2,79,2[illegible]9 |
| ஏப்பிரல்மீ 3உ | 2,693,493 | 2,46,643 |
| ,, 10உ | 1,57,075 | 7,46,917 |
| ,, 17உ | 8,977 | 4,04,[illegible]7 |
| ,, 24உ | 1,68,717 | 2,66,736 |
| ஆகமொத்தம் ... | 39,66,546 | 19,44,092 |

சலவைத் துணிகள்.

| வார முடிவு. | சென்னப் பட்டணத்தில். | ரங்கூனில். |
|---|---|---|
| | கஜம். | கஜம். |
| மார்ச்சுமீ 27உ | 222,682 | 7,20,922 |
| ஏப்பிரல்மீ 3உ | 3,65,856 | 9,95,583 |
| ,, 10உ | 3,617 | 10,28,622 |
| ,, 17உ | 9,780 | 6,36,963 |
| ,, 24உ | 31,300 | 3,47,016 |
| ஆகமொத்தம் .. | 6,33,235 | 37,29,106 |

இதர துணிகள்.

| வார முடிவு. | சென்னப் பட்டணத்தில். | ரங்கூனில். |
|---|---|---|
| | கஜம். | கஜம். |
| மார்ச்சுமீ 27உ | 5,10,252 | 5,79,774 |
| ஏப்பிரலமீ 3உ | 75,275 | 11,01,619 |
| ,, 10உ | 352,280 | 8,69,065 |
| ,, 17உ | 191,671 | 9,96,189 |
| ,, 24உ | 47,028 | 4,56,943 |
| ஆகமொத்தம் .. | 11,76,506 | 40,03,590 |

**Piece goods and yarn.**

சென்னப்பட்டணத்தில் சீமைச் சரக்குகளின் விலே பதினேந்து நாளாய் பிகுவாகிக்கொண்டுவருகிறது. சீமைவிலேயும் பிகுவாகவே இருப்பதாகத் தெரிகிறது. இதனுலும், வெவ் ஜில்லாக்களில் கொஞ்சம் மழைபெய்து சுபிக்ஷம் போலிருப்பதாலும் சரக்குகளைப்பற்றி விசாரணே ஜாஸ்தியாக இருக்கிறது. அதோடு சில ரகங்களில் விற்பனேயாகி இருப்பதாகவும் தெரிகிறது. கையிருப்புச் சரக்குகளும் செலவழிந்துகொண்டு வருகின்றன. கடைகளிலும் விலேகள் முடுக்காகவே இருக்கிறதாம்.

30 JUN 1909 MADRAS

பிழைக்கும்வழிக்கு அனுபந்தம்.

Supplement to "Practical Life."



LORD MORLEY

*His Majesty's Secretary of State for India.*

நமது அரசனின் இந்திய காரியதரிசியாகிய மார்லி பிரபு.


# பிழைக்கும் வழி

## PRACTICAL LIFE

ஜி. எ. வைத்தியராமன், பி.எ.
பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B.A.
EDITOR.

புஸ்தகம் I. Vol. I. | ஸௌமிய(வரு) வைகாசிமீ—MAY 1909. | ஸஞ்சிகை 5. No. 5.


### பிழைக்கும் வழி.

### PRACTICAL LIFE.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், பிராஜாலக்ஷணம், வித்தியா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான ஒரு மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

**தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.**

| | உள் நாடு. | | அந்நிய நாடு. | |
|---|---|---|---|---|
| வருஷம் 1க்கு | 4 | 0 | 6 | 0 |
| 6 மாதத்திற்கு | 2 | 0 | 3 | 0 |
| 3 மாதத்திற்கு | 1 | 0 | 1 | 8 |
| தனிப்பிரதி | 0 | 6 | 0 | 8 |

A popular Tamil monthly magazine of general information and instruction devoted mainly to agriculture, trade, industry, citizenship, and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. | A. | P. | Foreign. Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | 6 | 0 | 0 |
| „ half year ... | 2 | 0 | 0 | 3 | 0 | 0 |
| „ quarter ... | 1 | 0 | 0 | 1 | 8 | 0 |
| Single copy ... | 0 | 6 | 0 | 0 | 8 | 0 |

Rates of advertisement and other particulars on application to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 10, Esplanade, Madras.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
10, எஸ்பிளனேட், மதராஸ்.

## THE SALT TRADE


BY
DIWAN BAHADUR A. KRISHNASWAMI IYENGAR, B.A.,
*Deputy Commissioner of Salt Revenue.*


### உப்பு வியாபாரம்.

"உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்னும் பழமொழி, நாம் உண்ணும் பதார்த்தங்களுக்கு ருசியைக் கொடுக்க, உப்பு எவ்வளவு அவசியம் என்பதை நன்ருய் விளக்குகிறது. தின்பண்டங்களுக்குச் சுவையூட்டுவதைத் தவிர, சரீர சௌக்கியத்துக்கே உப்பு அவசியமானதென்பதும், போதுமான அளவு சேருமானல் சில நோய்களை விலக்குமென்பதும், வைத்திய சாஸ்திரத் துணிவு. ஆடு, மாடு, குதிரைகள் முதலிய பிராணிகளுக்கும் இவ்விதமாகவே உப்பு அவசியமானது. ஆனல் பெரும்பாலும் அவைகளுடைய இயற்கை உணவுகளிலேயே உப்பு அமைந்திருக்கிறது. இவ்வளவு முக்கியப் பொருளான உப்பு, தென் இந்தியாவில், கடல் நீரிலிருந்தும், கடலோரங்களில் வெட்டப்படும் உப்புக்குழி நீரிலிருந்தும், சூரிய வெப்பத்தின் உதவியினல் பெரும்

பாலும் உற்பத்தி செய்யப்படுகிறது. "ஏருமில்லாமல் கலப்பையுமில்லாமல் ஏழுநாளில் வெள்ளாமை" என்னும் குழந்தைகளுக்குள் வழங்கும் விடுகதை, உப்பு சாகுபடியைக் குறிக்கும். கடற்கரையூர்கள் பலவற்றில் நடந்து வரும் உப்பு வெள்ளாமை, ஸர்க்கார்த் தரப்பில் சில இடங்களிலும், ஸர்க்கார் உத்தியோகஸ்தர் மேல்பார்வைக்கு உட்பட்டு குடிகள் சொந்தத்தில் சில இடங்களிலும் செய்யப்படுகிறது. இப்படி கடற்கரைப் பக்கங்களில் சில ஊர்களில் மட்டும், உப்பளங்களில் செய்யப்படும் உப்பை, நாடெங்கும் பரவச்செய்ய வியாபாரிகள் வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். இந்த வியாபாரிகள் கொள்கிரயத்தையும் ஸர்க்கார்த்தீர்வையையும்கொடுத்து உப்பை வாங்குகிறார்கள். ஸர்க்கார் அளங்களில், கொள்கிரயம் தீர்வையுடன் ஸர்க்கார் கஜானாவில் செலுத்தப்படும். குடிகளுக்குச் சொந்தமான அளங்களிலோ, கொள்கிரயம் உப்புக்குச் சொந்தக்காரனிடத்திலும், தீர்வை, ஸெஸ் என்னும் சில்லறை வரி, ஆக இந்த இரண்டும் ஸர்க்கார் கஜானாவிலும் செலுத்தப்படும். ஸெஸ் என்பது, குடிகள் அளத்தில் சாகுபடி அம்சத்திற்காகமாத்திரம் ஸர்க்காரால் செலவிடப்பட்ட முதலின் வட்டியை எளிதில் வசூல் செய்ய ஏற்படும் ஒரு சிறிய வரி. கொள்கிரயமும் 'ஸெஸ்' வரியுமாகக்கூடி, ஸர்க்கார்த் தீர்வையில் ஒரு சிறு பாகமாகவே இருக்கும்; இப்பொழுது சராசரி நாலில் ஒரு பாகமென்று சொல்லலாம். ஆகவே, வியாபாரி உப்பை வாங்கச் செலுத்தும் பணத்தின் பெரும்பாகம் உப்புத் தீர்வையாகின்றது. ராஜ்ய பரிபாலனச் செலவுகளுக்காக ஏற்படுத்தப்பட்ட வரிகளில் இது ஒன்று. முப்பது வருஷங்களுக்கு முன், 3,200 ரூ. எடையுள்ள இந்தியா மணங்குஒன்றுக்கு தீர்வை ரூ. 2-8-0 ஆக இருந்தது. உப்பானது தொண்டைமான் முதல் தோட்டி வரையிலும் எல்லாருக்கும் அவசியமான பொருளாதலால், ஏழைகள் உப்பு வரியினால் வருந்துவதற்கு இரங்கி, கவர்ன்மெண்டார் படிப்படியாய் உப்பு வரியைத் தணித்துவிட்டார்கள். இப்பொழுது மணங்கு ஒன்றுக்கு வரி ரூபாய் ஒன்றே. நாடு செழித்து ஸர்க்கார் வரும்படி அதிகரித்தால், உப்பு வரியை இன்னும் இறக்கிவிடவேண்டு மென்பது தேசாபிமானிகள் கோரிக்கை.

மேற்கூறிய கொள்கிரயத்தையும், குடிகளுக்குச் சொந்தமான அளங்களில் "ஸெஸ்" வரியையும், வியாபாரி ரொக்கப் பணமாக கொடுக்கவேண்டும். ஆனால் பெரும்பாகமான ஸர்க்கார்த் தீர்வையை, அந்தப்படி ரொக்கமாகச் செலுத்தாமல், அதற்காக ஈடு கொடுத்து உப்பை பெற்றுக் கொள்ளலாம். அவ்வித ஏற்பாட்டுக்கு "ஈட்டு வியாபாரம்" என்று பெயர். அந்த வியாபார முறையையும், அதனால் உண்டாகும் விசேஷ லாபங்களையும் ஸௌகரியங்களையும் பற்றி இனி சொல்லப்படும்.

ஒரு வியாபாரி வாங்க விரும்பும் உப்புக்கு, மணங்கு ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் ஏற்பட்ட தீர்வைத் தொகையை ரொக்கமாய்ச் செலுத்தாமல், அதற்குப் பதிலாக "கவர்ன்மெண்டு பிராமிசரி" நோட்டுகளையாவது அல்லது வேறு சில விதமான குறித்த ஜாமீன் வஸ்துக்களையாவது, அதற்காக அதிகாரம் பெற்ற ஸர்க்கார் உத்தியோகஸ்தரிடம் ஈடாக வைக்கலாம். அப்படி ஈடாக வைக்கப்பட்ட பிராமிஸரி நோட்டுகளின் நடப்புக் கிரயத்திலிருந்து நூற்றுக்கு ஆறு வீதம் கழிப்பது வழக்கம். இப்படிக் கழிப்பதற்குக் காரணம் என்னவென்றால் ஈடுகாலமாகிய ஆறு மாதம் கழிவதற்குள்ளாக கவர்ன்மெண்டு பிராமிஸரி



நோட்டுகளின் விலை குறைந்தால் ஸர்க்காருக்கு நஷ்டம் நேரிடாதபடிக்குத்தான். மேலே சொல்லியபடி பிராமிஸரி நோட்டுகளின் மொத்தத் தொகையில் 100க்கு 6 மேனி கழித்து மிஞ்சிய தொகைக்கு ஒரு பற்றுவழி அல்லது ஈட்டுச் சீட்டு [செக்கைப் போன்ற ஒரு உத்தரவு] கொடுக்கப்படும். அந்தச் சீட்டை அதில் குறிப்பிட்ட அளத்து உத்தியோகஸ்தரிடம் தாக்கல் செய்தால், அவர், அந்தச்சீட்டில் கண்டதொகை அளவுக்கு உப்பு கொடுக்கும்படி உத்தரவு செய்வார். ஈட்டுச் சீட்டின் மேல் பிடிக்கும் உப்பின் தீர்வையை அந்தச் சீட்டுப் பிறந்த தேதி முதல் ஆறுமாதக் கடைசியில் செலுத்த வேண்டும். இந்த ஏற்பாடானது ஸர்க்காரிலிருந்து ஆறு மாதத்திற்கு வட்டியில்லாமல் கடன் வாங்கி, அப்படி வாங்கின பணத்தை நாம் வட்டிக்கு விடுவதைத் தவிர வேறல்ல.

இந்த ஏற்பாட்டினால் வர்த்தகர்களுக்கு உண்டாகும் பெருத்தலாபம் என்னவென்றால், ஈடுகாலம் கழிவதற்குள் அனேக தடவை முதலை புரட்டும்படியான சுகமும், ஈடு கட்டிவைக்கும் கவர்ன்மெண்டு பிராமிஸரி நோட்டுத் தொகையின்மேல் வரும் வட்டியினால் உண்டாகும் விசேஷ லாபமுந்தான். கீழே குறிப்பிட்ட உதாரணத்தினால் இது நன்றாய் விளங்கும். 100-க்கு $3\frac{1}{2}$ மேனி வட்டியுள்ள கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டுகளில் ரூ. 5,000 பெறுமான நோட்டுகளை ஒரு வர்த்தகன் ஈடு கட்டுவதாக வைத்துக் கொள்வோம். இதற்கு பதில் ஆறு மாதக் கடனாக ரூ. 4,700 (அதாவது ஈடுகாலம் கழிவதற்குள்ளாக கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டுகளின் பெறுமானம் குறையும் பட்சத்தில் நஷ்டம் நேரிடாதபடி 100-க்கு 6 மேனி ரூ. 5,000த்தில் கழித்து மிஞ்சிய தொகை) பெறுமான உப்பு அடைகிறான். இந்த உப்பையெடுத்து குறைந்தது ரூ. 4,700 யுடன் அதினால் உண்டாகும் செலவுகளையும் சேர்த்து விற்பனைசெய்கிறான். இந்தச்செலவுகள் எந்தவிதத்திலும் வர்த்தகனுக்கு வந்துவிடப்போவதால் அதைக் கணக்கில் வைக்க வேண்டியதில்லை. பிறகு, வர்த்தகன் பிடித்த உப்பை விற்பனை செய்ததினால் உண்டான ரூ. 4,700உடன் தன் முதல் பணத்தில் ரூ. 300 சேர்த்து (பிராமிசரி நோட்டுகள் 100-க்கு 100 ஆகவே விற்கும் பட்சத்தில்) 100-க்கு $3\frac{1}{2}$ வட்டியுள்ள நோட்டுகள் ரூ. 5,000-க்கு வாங்கி டிபாசிட்டுகட்டி மேற்சொன்னவிதமாக செய்து கொண்டே வருகிறான். தன் முதல் பணத்தை இவ்விதமாய் மாசத்துக்கு ஒரு தடவை புரட்டிக்கொண்டு வருவானாகில் இரண்டாம் மாதத்தின் கடைசியில் உப்பள இலாகாதாரிடத்தில் ரூ. 10,000 பெறுமான கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டுகளை சேர்ப்பது தவிர, அந்த மாதத்தில் உப்பு விக்கிரயஞ்செய்ததனால் உண்டான ரூ. 4,700 கையிலிருக்கும். இந்தப் பயனை அடைவதற்கு வர்த்தகன் செலவழித்திருக்கும் ரூ. 5,300 தான். இந்த மாதிரியாக ஆறு மாசத்தின் கடைசியில் மேற்சொன்ன இலாகாதாரிடத்தில் ரூ. $6\times5{,}000=30{,}000$ பெறும்படியான கவர்ன்மெண்டு பிராமிசரி நோட்டுகளைச் சேர்த்து வைப்பான். ஆனால் தன் கையிலிருந்து செலவழித்ததொகையோ ரூ. 6,500 தான். 100-க்கு 12 மேனிக்கு இந்தத் தொகையை வட்டிக்குப் போட்டால் ரூ. 780 தான் வரும். ஆனால் ஆறு மாதக் கடைசியில் வர்த்தகனால் டிபாசிட்டு சேர்த்துவைக்கப்பட்ட குறைந்த தொகை ரூ. 30,000-க்கு 100-க்கு $3\frac{1}{2}$ மேனிவட்டி ரூ. 1050 ஆகிறது. வாங்கின தேதிமுதல் மாதத்துக்கு ஒரு தடவையைக் காட்டிலும்

இன்னும் துரிதமாய் விற்றுப்போட்டால், வர்த்தகனுக்கு லாபம் இன்னும் அதிகமாகும். அப்படி துரிதத்தில் விற்கவேண்டுமானால் வர்த்தகர்கள் வாங்கின விலையைக்காட்டிலும் கம்மியான விலைக்கு விற்கக்கூடும். ஆறு மாதத்துக்குக் கடைசியில் கழிவாகும் எக்ஸிரிமெண்டினால் தனக்குக்கிடைத்த உப்பின் கிரயத்தை யெல்லாம் கொடுத்துவிட்டு மறு ஆறு மாதத்திற்கு மறுபடியும் எக்ஸிரிமெண்டுசெய்து உப்புக்கு நூதன ஆர்டர்வாங்கி அதை விற்று தொகையை இரண்டாந்தரம் செய்த எக்ஸிரிமெண்டுக்காகக் கொடுத்து விடுகிறான். அதேமாதிரி செய்துகொண்டே போகலாம்.

இந்த ஏற்பாடு முதல் முதல் 1856ம் வருஷத்தில் பரீக்ஷார்த்தமாக மதிராஸ் டவுனில் ஏற்பட்டு, பிறகு 1863-ம் வருஷத்தில் இந்த ராஜதானி முழுவதிலும் அனுஷ்டானத்தில் கொண்டுவரப்பட்டது. 1878-79 ம் வருஷம் முதல் இந்த ஏற்பாட்டின்படி விற்ற உப்பின் அளவு அடியில்குறிக்கப்பட்டிருக்கிறது:—

| வருஷம். | மொத்தம் விற்பனை இ. மணங்கு. | ஈட்டின்பேரில் விற்பனை இ. மணங்கு. | 100க்கு வீதம். |
|---|---|---|---|
| 1878–79 | 52,75,813 | 13,34,823 | 25 |
| 1888–89 | 66,28,175 | 35,33,491 | 53 |
| 1898–99 | 72,07,975 | 47,80,255 | 66 |
| 1907–08 | 95,88,709 | 87,81,975 | 92 |

இதைப் பார்த்தால் சென்ற 30 வருஷங்களில் இந்த ஏற்பாட்டின்படிசெய்த வியாபாரம் மிகவும் அதிகரித்திருக்கிறது என்பது நன்றாய் விளங்குகிறது. இதுவே இந்த வியாபாரம் நல்ல லாபகரமானது என்பதற்குச் சாக்ஷி.

ஈட்டுச்சீட்டுகளை உப்பு வியாபாரிகள் தாங்களே நேராகவே வாங்கிக் கொள்ளுகிறதும் உண்டு; அல்லது ஈட்டுச்சீட்டுகள் வாங்கி மற்றவர்களுக்கு விலைக்கு விற்பதை ஒருவியாபாரமாக வைத்திருக்கிறவர்களிடத்தில் வாங்கிக்கொள்வதும் உண்டு. தற்காலத்தில், ஜாஸ்தியாக, சென்னபட்டணத்தில் உள்ள கம்பெனிக்காரர்களும், முதலாளிகளும் ஈட்டுச்சீட்டுகள் வாங்குகிறார்கள். இதற்குக் காரணம் பிராமிசரி நோட்டுகளை வாங்குவதற்கும் விற்பதற்கும், வெளியூர்களைவிட சென்னப்பட்டணத்தில் மிக்க ஸௌகரியங்கள் இருப்பது தான்.

பின்னொரு வியாசத்தில், விவசாயம், கைத்தொழில், மீன்பாடம் முதலியதுறைகளில் உப்பினது உபயோகத்தையும், இத்துறைகளில் செலவாகும் உப்பின் விஷயமாக ராஜாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கும் சௌகரியங்களையும் பற்றி விவரித்து எழுதப்படும்.

ஏ. கிருஷ்ணஸாமி ஐயங்கார்.

---

## THE TOMATO.

BY

C. T. PARTHASARADHI MUDALIAR, B.A., L.T.

*Head Master, Board High School, Chittoor.*

## சீமைத் தக்காளி.

சீமைத் தக்காளிப் பழத்தை இந்தப்பத்திரிகையை வாசிப்பவர்களில் அநேகர் பார்த்திருக்கக்கூடும். இதற்குச் சீமையில் "டோமேட்டோ" என்றும் "லவ் ஆப்ல்" என்றும் பெயர். இந்தப் பழங்களில் சில ஜாதி சிவந்தும் சிலஜாதி மஞ்சளாகவும் இருக்கும். உருவத்தில் பூசணிக்காயை ஒத்தும் பருமனில் கத்திரிக்காய்க்கு ஸமனாயும் சற்றுப்பெரியதும் சிறியதுமாயிருக்கும். இது கத்திரிக்காயினும் ருசியும் உபயோகமும் உள்ள பதார்த்தம்.



இந்தக்காயின் உபயோகம் தென் இந்தியாவில் விசேஷமாய்த் தெரிந்திருப்பதாகத் தோன்றவில்லை. சீமைத் தக்காளியென்றால் வெள்ளைக்காரர் சாப்பிடுகிற நீசமான ஏதோ ஒரு பதார்த்தமென்று பலர் நினைக்கின்றார்கள். அது பிசகு. இந்தச்செடி குளிர் நாடாகிய இங்கிலாந்துக்கு ஆதியில் உரியதல்ல. தென் அமெரிக்காவில் உஷ்ணப் பிரதேசங்களில் ஜெனித்தது. தென் அமெரிக்காவுக்குப் போன ஐரோப்பியர் இந்தப் பழத்தின் உபயோகத்தை அறிந்து சுமார் 300 வருஷங்களுக்கு முன் ஐரோப்பாவிற்குக் கொண்டுவந்தார்கள். இது தற்காலம் ஐரோப்பாவில் பிரசித்தமான பயிராயிருக்கிறது. இந்தச்செடி இந்தியாவிலும் சுலபமாய்ப் பயிராகி வருகிறது. கொஞ்சம் பிரயாசை எடுத்துக்கொண்டால் இதில் விசேஷ பலனுண்டாகும் என்பதற்குச் சந்தேகமில்லை.

நமது நாட்டில் இந்தப்பயிர் விருத்தி ஆகாமைக்குக் காரணம் இப்பதார்த்தத்தின் குணவிசேஷம் தெரியாமையே. (1) இந்தக்காய் கத்திரிக்காயைவிட ருசியுள்ளது. (2) கத்திரிக்காய் பிஞ்சுப் பக்குவத்தில் மாத்திரம் உபயோகப்படும். முற்றினால் உதவாது. சீமைத்தக்காளியோ பிஞ்சுமுதல் பழம்வரையில் சமையலுக்கு உதவும். (3) சீமைத் தக்காளியைத் தனியாயும் சமைத்துக்கொள்ளலாம்; பருப்பு, மாமிசம்முதலியவற்றோடுசேர்த்தும் சமைக்கலாம். (4) அதை வறுக்கலாம், பொறிக்கலாம், குழம்பிடலாம், சூப் அல்லது ரஸம்செய்யலாம், பஜ்ஜி, கூட்டு, பச்சடி முதலியவகைகளும் செய்யலாம். (5) தேறின பழங்களைத் தேனில் ஊறவைத்துப் புசிக்கலாம். பச்சையாகவும் தின்னலாம். ஊறுகாயும்போடலாம். (6) சொற்பப் பிரயாசைக்குக் காய்கள் ஏராளமாய் உண்டாகும். (7) கத்திரிக்காயைப் போலவே இதுவும் ஏறக்குறைய வருஷம் முழுவதும் கிடைக்கக்கூடிய பதார்த்தம். (8) இது பித்த ரோகங்களுக்கும், அஜீரணத்திற்கும், அதிஸாரபேதிக்கும் ஓர் நல்ல மருந்தென்று நினைக்கிறார்கள். அன்றியும், ஆங்கிலேயர் இது புருஷ வீரியத்தை விருத்திசெய்கிறதென்று நம்பி இப்பழத்துக்கு "லவ் ஆப்ல்" அல்லது "காம இலந்தை" என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

"ஆம், இதைப் பயிரிட்டால் விற்பனை உண்டாகுமா?" என்னும் கேள்வி பிறக்கலாம். முதலில் விற்பனை குறைவாய் இருக்கக்கூடும். ஆனால் ஜனங்களுக்கு இந்தக்காயின் ருசியும், குணமும், உபயோகமும் தெரியத்தெரிய விசேஷமாய் வாங்கி அனுபவித்து வருவார்கள். கெரோஸின் எண்ணெய் முதலில் நமது நாட்டிற்கு வந்தபோது ஜனங்கள் அது என்னமோ என்று சந்தேகித்தார்கள். இப்போது அந்த எண்ணெயில்லாத வீடும், அதினால் பெறாத லாபமும் உண்டா? காய்கறிகளிலும் இப்படி அநேகம் உண்டு. உருளைக்கிழங்கு, சீமை நிலக்கடலை, ஆகிய இரண்டு உதாரணங்களே போதும். அல்லாமலும் சீமைத்தக்காளி சுலபத்தில் பயிராகக் கூடியதாகையால் அதை மலிவாக விற்கலாம். ஏழைகளும் வாங்குவார்கள். ஆகையால் வேண்டியது என்னவெனில் முயற்சி. காலத்துக்குத் தகுந்தபடி புதியவழக்கங்களையும் புதிய பொருள்களையும் குணங்கள் உள்ளனவாயிருந்தால் கைக்கொள்வதே அறிவு. புதிய காரியங்களும் முயற்சியுடையார்க்குச் சாதனமாகும். 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.'

தற்காலம் சீமைத்தக்காளி சென்னை, பெங்களூர் முதலிய சில இடங்களில் தவிர மற்ற ஊர்

களில் கடைத்தெருவுக்கு வருவதில்லை. விஷயந்தெரிந்த சில கல்விமான்களும் தனவான்களும்மாத்திரம் தம் தம் தோட்டங்களில் சொற்பமாய்ப் பயிரிட்டுத் தங்கள் வீட்டு உபயோகத்துக்கு வைத்துக்கொள்வதைப் பார்த்திருக்கிறேன். நானும் எனது தோட்டத்தில் பயிரிட்டிருக்கிறேன். அதைப்பயிரிடும் விதம் கீழ் வரும்.

சீமைத்தக்காளி உஷ்ணப் பிரதேசங்களில் விளையும் பயிர். ஆகையால் இந்தியா அதற்குத் தகுந்த இடம். இதற்குக் களிப்பான பூமி கூடாது. சற்று மணற் பாங்காய் இருத்தல் வேண்டும். இதைச் சாகுபடிசெய்யும்விதம் கத்திரியைப்போலவேதான். இதற்கு மாட்டுச் சாணமும் சாம்பலும் நல்ல எருவாகும். பெருமழைக்காலம் தவிர மற்றக்காலங்களில் எல்லாம் நாற்றுவிடலாம். நாற்றுக்கள் மூன்று நான்கு அங்குலம் வளர்ந்த பின் வரிசை வரிசையாக அவற்றை நடவேண்டும். வரிசைகளை ஒன்றுக்குஒன்று மூன்றுஅடி தூரத்தில் அமைக்க வேண்டும். பிரதி வரிசையிலும் ஒரு அடிக்கு ஒரு செடி நடவேண்டும். வரண்டகாலத்தில்வாரத்திற்கு இருமுறை ஜலம் ஏராளமாய்ப் பாய்ச்சவேண்டும். செடிகள் கொஞ்சம் வளர்ந்த பின்பு கொம்புகளையாவது படல்களையாவது நிறுத்தி அவற்றின்மேல் செடிகளைப் படரவிடவேண்டும். இரண்டொரு இடங்களில் கொடிகளைப்படல்களுடன்சேர்த்துமிருதுவாய்க்கட்டவேண்டும். படல்களின் நிழல் ஒன்றின்மேல் ஒன்று விழாதபடி கிழக்கு மேற்காய் நிறுத்த வேண்டும். பூமியிலேயே படரவிடுவதால் காய்கள் சிறுத்தும், வெளுத்தும், தரை உஷ்ணத்தால் வெம்பியும், சொத்தையாயும் போகின்றன.

சீமை விதைகளை வாங்கி நடுவது அவ்வளவு சிலாக்கியமல்ல. ஏனெனில் அவை நமது பூமியில் அத்தனை பலன் தருவதில்லை. நம்மூரில் இறங்கிய விதைகளை நடுவதே சிலாக்கியம். அப்படிப்பட்ட விதைகள் பெங்களூரிலும், சேலத்திலும், சென்னையிலும் கிடைக்கும். ஒரு விசை நாம் செடிகளை உண்டாக்கின பிறகு அவற்றின் பெரிய கனிகளிலிருந்து முதல்தரமான விதைகளைப்பொறுக்கி நாம் எடுத்து வைத்துக்கொள்ளலாம். முதலில் அற்ப செலவுக்குப் பின்வாங்கி, கண்டவிதைகளை யெல்லாம் நட்டு, பிறகு சீமைத்தக்காளி இவ்வூரில் பயிராகாதென்று சாக்குச் சொல்வது தகுதியல்ல. இந்தப் பயிர் சாகுபடி செய்வதற்குச் செலவு என்ன? சாகுபடி செய்தால் வரவு என்ன ? என்று கேட்டால் செலவு கத்திரிசாகுபடிக்கு மிஞ்சாது. தற்காலம் ஜனங்களுக்கு சீமைத்தக்காளியின் உபயோகம் தெரியாதாகையால் விற்பனை மட்டாகத்தான் இருக்கும். ஆனால் இந்தப் பதார்த்தத்தின் உபயோகம் தெரியத்தெரிய விற்பனை விருத்தியாகி லாபம் கத்திரி சாகுபடிக்கு மேலாகுமே யொழிய குறைவுபடாது என்பதற்குச் சந்தேகம் இல்லை. ஒரு ஏகர் சீமைத் தக்காளி சாகுபடி செய்ய விதை, பூமித்திருத்தம், எரு, களை பிடுங்குதல், நீர்ப்பாய்ச்சுதல், முதலிய எல்லாம் உள்பட சுமார் 60 ரூபாய் பிடிக்கும். ஒரு சாகுபடியில் அநேக அறுப்புக்கள் உண்டு. சகல அறுப்புக்களும் சேர்ந்து சுமார் 1,600 வீசை காய் அறுக்கலாம். வீசை $1\frac{1}{2}$ அணு விழுக்காடு 1,600 வீசைக்கும் 150 ரூபாய் கிடைக்கும். அதில் செலவு ரூபா 60 போக நிற்கும் லாபம் ரூபாய் 90. வேறு எந்தப் பயிரிலும் இதற்கு மிஞ்சிய லாபம் கிடைப்பது அரிது.

வி. டி. பார்த்தஸாரதி முதலியார்.



## THE USES OF THE GROUND NUT

BY T. D. S. MURTHI.

## மணிலாக்கொட்டையின் உபயோகங்கள்.

மணிலாக்கொட்டை ஆதியில் ஒருவன ஓஷதியாக இருந்து பிரான்ஸ் தேசத்திய தாவர சாஸ்திரியால் இதின் எண்ணெய் சாப்பிடக்கூடிய தென்றும், புஷ்டியென்றும் கண்டுபிடிக்கப்பட்டு, அங்கிருந்து தேவைக்குத் தகுந்தவாறு தயார்செய்ய வேண்டி பல பிரஞ்சுநாடுகளில் பயிரிடப்பட்டு, கடைசியில் "மனில்லா" என்னும் ஊரிலிருந்து தென்னார்க்காடு ஜில்லாவில் முதலில் பயிரிடப்பட்டது. அதினால் இதற்கு அப்போது "மணிலாக்கொட்டை" என்று பெயரிடப்பட்டது. பிறகு, ஷை வித்து இந்த பூமியில் நாளாக நாளாக பலன் தாராமல், மோரீச்தீவிலிருந்து வித்து நான்கு வருஷத்துக்கு முன் கொண்டுவரப்பட்டது. இப்போது இதற்கு "மோரீசு கொட்டை" யென்று பெயர். பழைய வித்துக்கு நாட்டுக் கொட்டை என்றும் பெயர்.

இது இந்த ராஜதானிக்கு 1851–52வது வருஷங்களில் முதல் முதல் வந்தது. 1840வது வருஷத்துக்கு முன்ஐரோப்பாவில் இவ்வித்தினுடைய பிரஸ்தாபமே கிடையாது. ஆகையால் இதின் உபயோகம் தெரிந்த 10,12 வருஷங்களுக்குள் வெகு தேசங்களில் பயிரிடப்பட்டதென்பது தெரிகிறது. இது பற்பல உபயோகங்களுக்கு உதவுவதால் சீனு, ஆபிரிக்கா, அமெரிக்கா முதலிய தேசத்தாரும் இதைப்பயிரிட்டு ஸ்வதேசத்தில் உபயோகிப்பதோடு, இதர தேசங்களுக்கு ஏற்றுமதி மூலமாயும் அனுப்பி வருகிறார்கள். இக்கொட்டையின் ஒவ்வொரு உபயோகத்தையும் விவரித்து எழுதினால் விரிவாகும். ஆகையால் அவைகளைச் சுருக்கிச் சொல்வோம்,

நம் நாட்டில் உபயோகிக்கும் விதம்.—மேல் உமி நீக்காமல் உப்பிட்டு இதை வேகவைத்து பிறகு உமி நீக்கித் தின்பதுண்டு. மேல் உமி நீக்கிய கொட்டையை மேற்கண்ட விதமாயாவது, வெல்லம் சேர்த்தாவது வேகவைத்துண்பதும் உண்டு. ஷை உமி நீக்கிய விதையை வருத்துத்தின்பதும் உண்டு. உமி நீக்காமல் மேற்கண்ட விதம் செய்வதுண்டு. வருத்துச் சர்க்கரைப் பாகு செய்து அதில் சேர்த்துப் பணியாரமாகச் செய்து உபயோகிப்பதும் உண்டு. வித்திலிருந்து எண்ணெய் எடுத்து, தீவட்டி, விளக்கு முதலிய வெளிச்சங்களுக்கும் சமையலில் பக்ஷியம் பலகாரம் செய்வதற்கும் உபயோகப் படுத்துகிறார்கள். எண்ணெய் எடுத்த பிறகு பாக்கியுள்ள பிண்ணாக்கை மாட்டுக்குத் தீனியாகவும், வாழை முதலியதற்கும், நெல் வகையறுவுக்கும் எருவாகவும் உபயோகிக்கிறார்கள். ஷை செடியைக் காயவைத்து மாடுகளுக்கு வைக்கோலுக்கு பதிலாக தீவனமாக உபயோகப்படுத்துகிறதுமுண்டு.

இதர தேசங்களில் உபயோகப் படுத்தும் முறை.—எண்ணெயைத் தெளிய வைத்து ஷை தெளிவின் கனத்துக்குத் தக்கவாறும் நிறத்துக்குத் தக்கவாறும் பலவித எண்ணெய்களுக்கு பதிலாக இதையே விற்றுவிடுகிறார்கள். மிகவும் லேசான பாகத்துடன் ஔன்சு ஒன்றுக்கு "ப்ரஸ்ஸிக் ஆஸிட்" என்னும் ஓர் வித திராவகத்தில் 10 துளி வீதம் சேர்த்தால் வாதுமை எண்ணெய் வாசனை உண்டாகிவிடுகிறது. அதை வாதுமை எண்ணெய் என்று விற்றுவிடுகிறார்கள். அதிலும் கொஞ்சம் கதிப்பாக உள்ளதை 'ஆலிவ்' எண்ணெய் என்று சொல்லப்பட்ட அவுத்தி எண்ணெய்க்கு பதிலாக ஷை பெயரையே வைத்து விற்றுவிடுகிறார்கள் ; ஏனெனில் நிறம், குணம்,

முதலியவைகள் தெளியவைப்பதில் அவுத்தி எண்ணெயினுடையதுகளையே ஒத்திருக்கின்றன. 'ஸாலெட்' எண்ணெய் செய்வதில் இதை அதிகமாக உபயோகிக்கிறார்கள். ஒருவித சோப்பும், மட்டமெழுக்கு வத்தியும், யந்திரங்களுக்கு போடக்கூடிய பசையும், உற்பத்தி செய்கிறார்கள். மர சாமான்கள் கெட்டுப்போகாமல் போடும் வார்னீஸ் எண்ணெய் பூசுவதற்குமுன் இந்த எண்ணெயைத் தடவி, பிறகு வார்னீஸ் பூசுவதும் உண்டு. ஷை வார்னீஸ் எண்ணெய் செய்வதிலும் சேர்ப்பதுண்டு ஷை பிண்ணாக்கை எருவாகவும் உபயோகிக்கிறார்கள். ஷை பிண்ணாக்குடன் பசைக்காக கொஞ்சம் சோளமாவாவது, கோதுமை மாவாவது சேர்த்தும், சர்க்கரை, கோழி முட்டை வெள்ளைக்கரு, வாசனைக்காக பன்னீர் முதலியவைகளைச் சேர்த்தும், மாவைத் தயாரித்து, அதற்காக ஏற்பட்டுள்ள அச்சுகளில் போட்டு அடுப்பில் வைத்து ஒப்புசம் கொடுத்ததும் எடுத்துக்கொள்ளவும், இது ஒருவகை பிஸ்கோத்தாகிறது. சன்னமான வண்டல் பிண்ணாக்கை சுத்திசெய்து அத்துடன் சாம்பிராணி, மாஞ்சி, கருவாப்பட்டை, கிராம்பு, ஜாதிக்காய் முதலிய வாசனை வஸ்துக்களைச் சேர்த்து மட்பாத்திரத்தில் கொதி தண்ணீரில் சிலநேரம் வைத்துப் பக்குவ பதத்தில் இறக்கி, காற்றுப் போகாமல் பாக் செய்து "போமேட்" என்னும் தலைக்கு தடவி சீவிக்கொள்ளும், வாசனையுள்ள கெட்டித் தைலமாக்குகிறார்கள்.

இதின் ஔஷத குணங்கள்.—ஆங்கிலேய, பண்டித, ஹகீம், வைத்தியர்களாலும், சொஸ்தம் செய்யக்கூடாத க்ஷயரோகத்துக்கு டாக்டர் பிரீலர் என்பவர் இது ஒரு நல்ல ஔஷதமென்று அனுபவத்தில் கண்டுபிடித்திருக்கிறார். அவர் உபயோகித்த மாதிரியாவது:—காடியின் புகையை சுவாசிப்பதும், வேர்க்கடலை உண்பதும் தான். ஜீர்ண உறுப்புகளின் சக்தி கெடாதபடி எவ்வளவு உட்கொள்ளக் கூடுமோ அவ்வளவை மட்டும் நோயாளியை தின்பித்தார்; இப்படி ஒரு வருஷம் உபயோகித்து வந்ததில், இரண்டு ஸ்திரீகள் ஷை வியாதிக்காக அனேக வயித்தியர்களிடம் சென்று சொஸ்தமாகாமல் வியாதி அதிகரித்துத் தேகம் மெலிந்து தன்னிடம் வைத்தியத்திற்கு வந்திருந்தும் தேகபுஷ்டியுண்டாகி இருமல் நின்று, வியாதி சொஸ்தமாயிற்று என்கிறார். தேக ஊட்டத்திற்கும், புஷ்டிக்கும், வெளிநாட்டில் உபயோகிக்கும், மீன் எண்ணெய் போன்ற பலவித ஆபாஸ மருந்து எண்ணெய்களைக் காட்டிலும், இது மிகவும் உயர்ந்தது என்கிறார். வயிற்றில் உண்டாகும் குன்மவலியையும், ஆஜீர்ணவலியையும், ஆஜீர்ணத்தையும் போக்கக்கூடிய சக்தி இதற்குண்டு. ஷை கடலையை நெய்யில் வறுத்து உப்பு, அல்லது மிளகு தூளுடன் கலந்து உண்பதுண்டு. ஷை வித்தை வருத்துத் தூள் செய்து காபி வித்துக்கு பதிலாக உபயோகிக்கிறார்கள். மேல் நாட்டில் சூப்பு செய்தும் உபயோகிப்பார்கள்.

ஷை உபயோகங்களை நாம் அறிந்து கொள்வதால் பயன் என்னை என்று சிலர் சந்தேகிக்கலாம். அதினால் உள்ள பலன் பின்வருமாறு:—இப்போது இரண்டு வருஷகாலமாக ஏற்றுமதிவியாபாரம் குறைந்த காரணம் பற்றி இப்பயிரினால் அதிக லாபமில்லையல்லவா? இதன் உபயோகம் தெரியாமல் பயிரிட்டு வந்தபடியால் அல்லவா ஏற்றுமதிக்குக் குறைவுண்டானதும் ஷை பயிரை விட்டு விட எத்தனிக்கிறார்கள். ஷை உபயோகங்களை அறிந்திருந்தால் ஏற்றுமதி வியாபாரத்தையே நம்பாமல் உள் நாட்டிலேயே மதியூகிகளாயுள்ளவர்கள் ஷை வஸ்துக்களையே தயாரித்து அனுப்பி அதினால் தாங்கள் லாபமடைவதுடன் அப்பயிருக்கும் தூண்டுதலுண்டாகி அதிகமாய்ப் பயிரிடுவார்கள்.

கி. தே. எஸ். மூர்த்தி.



## SINGLE PLANTING.

BY

A FARMER.

## ஒற்றைஅலகு நடுதல்.

'**ஒரு தாள் உண்டான இடத்தில் இரண்டுதாள் உண்டாகச்செய்பவன் யதார்த்தத்தில் லோகோபகாரி**" என்பது பழமொழி. சாதாரணமாய் நெல்லை இரண்டுவிதமாய் சாகுபடி செய்கிறார்கள். வயலில் நெல்லை விதைத்து, சாகுபடி செய்வது ஒருவகை. நாற்றங்காலில் விதையைவிட்டு, நாற்றுப் பருவமடைந்ததும், அதைப்பிடுங்கி, வயல்களில் நட்டு, பயிர் செய்வது மற்றொரு விதம். இரண்டிலும் முதல் சொன்னவிதம் பயிர்செய்வது சுலபமானது; புலத்தை உழுது பருவமாக்கி, புழுதியிலாவது, தொழியிலாவது விதையை விதைத்தலே போதுமானது. பொதுவாய்க் குடிப்பிரியம் இல்லாத இடத்திலும், நட்டுப்பயிர் செய்ய முதலில் ஏற்படும் செலவைப் பெரிதாகக்கருதும் குடிகளுள்ள இடத்திலும், கேவலம் சோம்பேரிகள் அல்லது நட்டுப் பயிர் செய்யும் வழியால் ஏற்படும் அனுகூலங்களைத் தெரியாத குடிகள் உள்ள இடத்திலும், விதைத்துப் பயிர் செய்தலை அநேகமாய்க் காணலாம். இந்தியா விவஸாய இலாகாவுக்குத் தலைவராகிய **டாக்டர் மாலிஸன்துரை** இதுவிஷயமாய்ப் பேசும்பொழுது குடியானவர்களில் கேவலமானவர்களே நட்டுப்பயிர் செய்யாமல் விதைத்துப் பயிர் செய்கிறார்களென்று எழுதியிருக்கிறார். நாற்று நட்டுப் பயிர் செய்தலால் அனேக குணங்கள் ஏற்படுகின்றன. ஒரேவிதமாய்ப் பருவம் செய்யப்பட்ட நிலங்களில், நட்டுப் பயிர்செய்த நிலத்தில் சீக்கிரமாகவும், ஜாஸ்தியாகவும் மேனிகாண்பதும், விதைத்த புலன்களில், கொஞ்சம் தாமதமாகவும், குறைச்சலாகவும் மேனிகாண்பதும் யாவரும் அறிந்த விஷயம். நடுகை நிலங்களில் களை எடுப்பது சுலபம்; பயிர்கள் அனேகமாய் நோயால் கஷ்டப்படுவதில்லை. சாதாரணமாய் 5 மாதத்தில் விளையக்கூடிய நெல்விதைகள் ஒருமாதம் நாற்றங்காலில் நிற்பதாலும் நடவேண்டிய விஸ்தீரணத்தை உத்தேசித்து நாற்றங்கால் விஸ்தீரணம் சொற்பமாயிருப்பதாலும், முதல் மாதத்தில் ஜலம் குறைந்த அளவே செலவாகும். ஆதலால் நீர் வளப்பங்குறைந்து மானாமாரிக்குளங்களுள்ள விடத்தில் நடுகைப்பயிர் செய்வது லாபகரமாகும். ஆகவே, நடுகைப்பயிர் செய்வதால் உண்டாகும் அனுகுணங்கள் அளவிறந்தன.

2. நமது ராஜதானியில், விதைப்பு, அல்லது நடுகைப் பயிர்செய்வதில் ஒரு ஏகராவில் உபயோகிக்கும் விதைமுதல் ஒரே அளவாய் காணப்படவில்லை. சிலஜில்லாக்களில், விதைப்புப்பயிருக்கு ஜாஸ்தியாயும், மற்ற ஜில்லாக்களில், நடுகைப்பயிருக்கு ஜாஸ்தியாயும், விதைமுதல் உபயோகப்பட்டு வருகிறது. ஆனால் பொதுவாய் உபயோகிக்கப்படும் விதைமுதல் கீழ்குறிப்பிட்டபிரகாரம் இருக்கிறது என்பதை நமது 3-வது சஞ்சிகை 89-வது பக்கத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற ஸ்டேட்டுமெண்டைப் பார்த்த நேயர்கள் அறிவார்கள்.

<table>
<tr><th>ஜில்லாவின் பெயர்.</th><th>விதைமுதல்.</th></tr>
<tr><td>1. கோதாவரி ... ...</td><td rowspan="2">15</td></tr>
<tr><td>2. கர்னூல் ... ...</td></tr>
<tr><td>3. செங்கல்பட்டு ...</td><td rowspan="2">20</td></tr>
<tr><td>4. கோயமுத்தூர் ...</td></tr>
<tr><td>5. தென்னார்க்காடு ...</td><td rowspan="6">25</td></tr>
<tr><td>6. கடப்பை ... ...</td></tr>
<tr><td>7. நெல்லூர் ... ...</td></tr>
<tr><td>8. சேலம் ... ...</td></tr>
<tr><td>9. திருச்சினாப்பள்ளி ...</td></tr>
<tr><td>10. விசாகபட்டணம் ...</td></tr>
</table>

| ஜில்லாவின் பெயர். | | விதைமுதல். |
|---|---|---|
| 11. | தென்கன்னடம் ... | 30 |
| 12. | மதுரை .. ... | |
| 13. | அனந்தபூர் ... ... | 35 |
| 14. | கஞ்சம் ... ... | |
| 15. | குண்டூர் ... ... | |
| 16. | நீலகிரி ... ... | |
| 17. | கிருஷ்ணா ... ... | 40 |
| 18. | வடஆர்க்காடு ... | 50 |
| 19. | தஞ்சாவூர் .. ... | |
| 20. | திருநெல்வேலி ... | |
| 21. | பல்லாரி ... ... | 55 |
| 22. | மலையாளம் ... ... | |

இதனால், ராஜதானியில் ஒரு ஏகர் பயிர் செய்ய சராசரி ஐந்து ரூபாய் விலை பெறுமான 35 பட்டணம்படி. நெல்விதை உபயோகப்படுகிறதாய் ஏற்படுகிறது.

3. மேல் குறிப்பிட்ட ஸ்டேட்மெண்டிலிருந்து, 15 முதல் 55 பட்டணம்படிவரையில் நெல் விதை உபயோகிக்கப்படுகிறதென்றும், பக்க ஜில்லாக்களிலுங்கூட, ஒரேவழியை அனுசரிக்காமல், மிக்க ஏற்றத்தாழ்வாய் விதைமுதலைக் குடியானவர்கள் உபயோகப்படுத்துகிறார்களென்றும் ஏற்படுகின்றது. கர்னூல் ஜில்லாவாசி 15 பட்டணம்படி நெல்விதை உபயோகப்படுத்தி நல்லமாசூலை அடைவது திருப்திகரமாயிருக்க, பக்கத்திலுள்ள பல்லாரி ஜில்லாவாசி அதேமாசூலை அடைய, 55 பட்டணம்படி உபயோகிப்பது மிக்க பரிதாபமான விஷயம் ஆனால் இந்த விஷயம் ஆச்சரியப்படத்தக்கதல்ல. அயல் ஜில்லாக்களில் உள்ள வழக்கங்களையும், பருவங்களையும், கவனித்துத் தன் நிலைமையை விருத்திக்குக் கொண்டுவரக்கூடிய ஞேஷியங்கள், குடியானவனுக்கு இல்லை. மாறுத மன நிலைமையுடன் ஒரு வழக்கத்தை மாற்றி புதுக்கோட்பாட்டின் அனுகுணங்களைத் தான் நேரில் கண்டு அறிந்தாலன்றி கைக்கொள்ளாமல் மாமூல் யென்னும் தொன்றுதொட்டுவழங்கிய ஆசாரணையையே பிரதானமாய்க் கைக்கொண்ட சுபாவந்தான் குடியானவனுக்கு ஏற்பட்டிருக்கிறது. பல்லாரி அல்லது மலையாளம் ஜில்லாவாசியிடம் அவன் விதைமுதலாய் உபயோகப்படுத்தும் 55 பட்டணம்படி அனவசியமென்று சொன்னால் ஒருக்காலும் நம்பமாட்டான். ஏகராவுக்கு 15 பட்டணம் படியே, உபயோகிக்கும் கோதாவரி கர்னூல் ஜில்லாவாசியிடம் அவன் உபயோகிக்கும் விதைமுதல் அளவும் அனவசியமென்றும், ஒரு ஏகராவில் அவன் சாதாரணமாய் அடையும் மாசூலை, இரண்டுபடி அல்லது இப்போது அவன் உபயோகிக்கும் அளவிற்கு எட்டில் ஒரு பாகம் விதை உபயோகித்தே, அடையலாமென்றும் சொன்னால், இது கட்டுக்கதையென்றே சொல்வான். இப்படிக் குறைந்த அளவு விதைமுதல் விட்டு, லாபமடைய வேணுமானால் தற்காலம் ஏற்பட்டிருக்கிற நடுகை சாகுபடியில் சில சீர்திருத்தங்கள் அவசியமாயிருக்கின்றன.

4. நமது ராஜதானியில் அனேக இடங்களில் ஒரு ஏகரா சாகுபடிசெய்ய '15 முதல் 55 பட்டணம்படி. விதைமுதல் உபயோகிக்கப்படுகிறதென்று முன்னமே சொல்லியிருக்கிறோம். கிருஷ்ணா ஜில்லாவில், பெஜ்வாடாவுக்கு சமீபமாயுள்ள கங்கிபாட் யென்னும் இடத்திலும், வங்காளத்தில் மைமன்சிங் என்னுமிடத்திலும், தொன்றுதொட்டு, ஒவ்வொரு அலகாய் நாற்றை நட்டுப் பயிர் செய்யப்பட்டுவருகிறது; மற்ற இடங்களிலோ நாற்றை 3-15 'முதல்' சேர்த்துக் குத்துக் குத்தாய், நடுகிறவழக்கம் ஏற்பட்டிருக்கிறது. இவ்விதம் குத்துக் குத்தாயும் அதிக முதல் வைத்தும் நடுவதானது ஜில்லாவிற்கு ஜில்லா விதைமுதல் இவ்வளவு வித்தியாசம் ஏற்



பட்ட காரணங்களில் ஒன்று. வேறொரு காரணமும் சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம். நாற்றை நடுவதில் சில ஜில்லாக்களில் ஒரு அடிதூரத்துக்கு ஒரு நாற்றும், சில ஜில்லாக்களில் சாணுக்கு ஒரு நடுகையும், பின்னும் சில ஜில்லாக்களில் அதிக் நெருக்கமாயும் நடுகிறார்கள். கலக்கமாய் நடும் இடங்களில் விதைமுதல் குறைச்சலாயும், நெருக்கமாய் நடும் இடங்களில் விதை முதல் அதிகமாகவும் உபயோகப் படுத்துவதைக் காண்கிறோம். நெற்பயிர் செய்து நல்ல மாசூலையடையக் கருதினால் ஒரு 'முதல்' வைத்துக் கலக்கமாய் நடவேண்டியது அத்தியாவசியம்; இப்படிச்செய்வதினால் விதை முதல் லாபமும் நேர்த்தியான பயிரும் ஏற்படுகின்றன. அநேக விவசாயிகள் இரண்டுபடி நெல் வித்திலிருந்து உண்டாகிய நாற்று ஒரு ஏகராவில் ஒவ்வொன்றாய் நடக்காணுமோவென்று சந்தேகிக்கலாம். இந்தவழி சாத்தியமானதென்றும் லாபகரமானதென்றும் தானகவே தெரிந்து கொண்டு பின்பு விவசாய இலாகா கனம் செல்வரங்க ராஜு அவர்களுக்கு உபதேசித்த சிதம்பரம் தாலூகா வீரசோழன் கிராமத்திலுள்ள கனம் ஆபரணம் பிள்ளையவர்களுக்கு நெற்பயிர் விஷயமாய்க் கொஞ்சமாவது சம்பந்தமுடைய எல்லாதேசத்தாரும் நன்றியறிதலுள்ளவர்களா யிருக்கவேண்டும்.

5. இது நிற்க, ஆபரணம் பிள்ளையால் உபதேசிக்கப் பெற்று பின்பு மெயில் பத்திரிகையில் பகிரங்கமாய் வெளி வந்த விஷயம் நமது தேசத்துக்கு புதிதா? அல்லது ஆபரணம் பிள்ளைக்கும் அவர் போன்ற மற்றவர்களுக்கும் புதிதா? ஒரு 'முதல்' வைத்து நடுவது புராதனமாய்க் கிருஷ்ணா ஜில்லாவில் சில இடங்களிலும், வங்காளத்தில் சிலபாகங்களிலும் ஏற்பட்டிருக்கிறது. இவ்விடங்களில் உள்ள இந்தவழக்கத்தை நமது ராஜதானியில் யாவரும் அனுசரிக்கவேண்டிய வழியைத் தேடாமல், நின்று போன சைதாப்பேட்டை சர்க்கார் விவசாய காலேஜ் 30 வருஷங்களாய் என்னதான் செய்ததோ, அதுதான் ஆச்சரியம். கேவலம் அறியாமையால், மாமூல் என்னும் பேயின் வாயில் அகப்பட்டு, அது ஆட்டியபடி ஆடி கண்மூடித்தனமாய் விதைமுதலை வாரி இரைத்து நஷ்டமடைந்து போகும் பேதைகளாகிய நமது தேச கிருஷிகர்களுடைய கதி ஆச்சரியமல்ல. "பிழைக்கும் வழியை" வாசிக்கும் நேயர்களே! ஆபரணம் பிள்ளையின் கதையைக் கேட்ட பின்பாவது, விவசாய நிபுணர் எனப் பட்டம் வகித்தவர் மூலமாய் நாம் அடையக்கூடிய பலன்களைவிட, நமது தேசத்தில் ஆங்காங்கு புராதனமாய் ஏற்பட்டிருக்கும் மேம்பாடான வழக்கங்களை எல்லோரும் அறியச்செய்து வைப்பது மேன்மை என்று தோன்றுகிறது. இவ்வளவு தூரம் இது விஷயமாய்ச்சொல்ல வேண்டியது அவசியமா என்று அநேகருக்குத் தோன்றலாம். ஆனால் விவசாய நிபுணர்கள் இனியாகிலும் அவர்களுடைய புராதன வழக்கத்தை விட்டு, நம்முடையதேசத்தில் ஆங்காங்கு ஏற்பட்டிருக்கிற நல்லவழக்கங்கள் என்னவென்று தீரவிசாரித்தறிந்து ஆகாசப்பஞ்சாங்கம் பேசாமல் சுலபமாய் நமது கிருஷிகர்கள் அடையவேண்டிய வழிகளைப்போதிக்க முயலவேண்டும் என்பதுதான் நமது கோரிக்கை. இதுவிஷயமாய் நமக்கு நேரில் உண்டான ஒரு அனுபவத்தையும் சுருக்கிச் சொல்வோம்.

1905-ம் வருஷம் கடைசியில் கனம் செல்வரங்கராஜு அவர்களை நல்லமாதிரியும் நீர்த்தட்டான காலத்திலும் தாங்கக்கூடிய நெல்விதையைக்குறிப்பிடும்படி கேட்டபொழுது, 'பாங்கு' நெல் சிலாக்கியமானது என்றும், இரவை நஞ்சைகளிலும் கேப்பைப் பயிரைப்போலவே

4, 5 நாளுக்கு ஒரு தண்ணீர் விட்டுப் பயிர் செய்ய லாயக்கானதென்றும், மேட்டுப்பாங்கான புலன்களிலும், தண்ணீர்த் தட்டுண்டான காலத்திலும், சரியான மாசூலைத் தரத்தக்க குணங்களை உடையது என்றும் தெரிந்தோம். ஆனால் அந்த சமயம் ருஜா அவர்கள் சர்க்கியூட்டில் இருந்தபடியால் அவர் அனுமதி பெற்று சைதாப்பேட்டைக் காலேஜுக்குப் போய் ஒரு விவசாய நிபுணரிடம், "பாங்கு" என்னும் பெயரை மறந்ததினால், கேப்பைபோல் இரவையால் பயிரிடக்கூடிய நெல் வித்து காலேஜில் அகப்படுமென்று ருஜா அவர்கள் சொன்னார்கள்; அந்த வித்து கொஞ்சம் வேணுமென்று கேட்டதற்கு அப்பேர்ப்பட்ட வித்து எங்கும் கிடையாதென்று ஒரே சாதனை செய்து, வேணுமானால் இருக்கப்பட்ட வித்துக்களில் தேவையானதை நாங்களே தெரிந்து கொண்டால், தான் விலைக்குத்தருவதாய் உத்தரவளித்தார். ருஜா அவர்கள் சொல்லிய காலத்தில் உண்டான குதூகலம் முற்றும் இம்மறுமொழியைப்பார்த்ததும் பறந்தோடியது. அப்படியிருந்தும், ருஜா அவர்கள் மேல் நமக்கிருந்த நம்பிக்கையினால், காலேஜில் சேகரித்து வைத்திருந்த அனேக ஜாதி வித்துக்கள் அடங்கிய பானைகளை நாமே சோதித்து, 'பாங்கு', 'ஹல்வாகுடிகா', பின்னும் இரண்டு வகை நெல்வித்துக்கள் இவைகளை எடுத்து வந்து, பாங்குவை, திருநெல்வேலி ஜில்லா சேரன்மாதேவியிலும், ஸ்ரீவைகுண்டத்திலும், பயிரிட்டதில், ஸ்ரீவைகுண்டத்திலும் அதைச்சேர்ந்த இடங்களிலும் உள்ள குடியானவர்கள், பிரியப்படும்படியான மாசூலைத் தந்து கொண்டிருக்கின்றது. இது நிற்க.

6. ஒரு ஏகரா நிலம் 4840 சதுர கஜம் கொண்டது. அதில் 9 அங்குல தூரம் விட்டு ஒவ்வொரு நாற்றாய் நட $\frac{4840\times9\times144}{9\times9}$='77,440' 'முதல்' வேண்டியதாயிருக்கும். 2 பட்டணம் படி நெல்விதை கனத்துக்குத் தகுந்தபடி சுமார் லக்ஷத்திற்கு மேல் ஒன்றரை லக்ஷம் வரையில் இருப்பதாய் கணக்கிடப் பட்டிருக்கிறது. ஆகவே, முளைக்காத வித்துக்களைத் தள்ளிப்பார்த்தால், அனேகமாக இரண்டுபடி வித்திலிருந்துண்டாகும் நாற்று ஒரு ஏகரா பயிரிட தாராளமாய்ப் போதுமானதாகும்

7. புலன்களில் 3-15 'முதல்' வைத்து நெருக்கமாய் நட்டுப் பயிர் செய்து அடையும் பலனையே ஒவ்வொரு விதையிலிருந்து உண்டாகும் நாற்றை நட்டு அடையலாமா என்ற சந்தேகம் சாதாரணமாய் ஏற்படக்கூடியதுதான். ஆனால் 3-15 'முதல்' வைத்து நெருக்கமாய் நட்ட புலன்களில் உண்டாகும் மூடுகளையும், தனியாயும், கலக்கமாயும் நட்ட புலன்களில் காணும் மூடுகளையும் சற்று கவனித்துப் பார்த்தால் இது சாத்தியம் என்ற விஷயம் தெளிவாய் அறியலாம். நாம் சொந்தமாய்ச் செய்த பரீக்ஷையின் மூலமாய் ஒற்றை நாற்றுப் பயிர்கள் 40-100 மூடுகள் கட்டி, 50 வரையில் கதிர்கள் வரப்பெற்றிருக்க, குத்துக்குத்தாய் நட்ட பயிர்கள் 25 கதிருக்கு மேல் வரக்காணவில்லை. குத்து நடுகைப்பயிர்களிலும், குறைந்த முதல் உள்ளதும், கலக்கமாய் நடப்பட்டவுமான பயிர்கள், நெருக்கமாகவும், அதிக முதல் வைத்தும் நட்ட பயிர்களைவிட மேன்மையாயிருக்கின்றன. ஆகவே, நல்ல பலனை அடைய வேணுமென்றால் நாற்றை ஒரு முதலாகவும் கலக்கமாகவும் நடவேண்டுமென்றே ஏற்படுகிறது. எவ்வளவு கலக்கமாய் நடலாம் என்ற விஷயம் கொஞ்சகாலமாய் அனேக இடங்களில் பரிசோதனையிலிருந்து தற்காலம் திருநெல்வேலி ஜில்லா சிவகிரிஜமீன் பண்ணை மானேஜராயிருக்கும் கனம் ராமராவ் அவர்கள் 9 அங்குல தூரம் நட்டுப்பயிர் செய்வதே



சிலாக்கியமான பலனைத்தருவதாய்ச் சொல்லுகிறார்.

8. தேர்ந்த விவசாய நிபுணர்களும் சில வித்துக்கள்தான் ஜாஸ்தியான மூடு கட்டுமென்றும், நீடித்தகாலம் புலன்களில் பயிராகி வரும் பெரும் வித்துக்களைத்தான் ஒரு 'முதல்' வைத்து கலக்கமாய் நடலாமென்றும், சிறு வித்துக்களை அதேமாதிரி பயிர் செய்தால், நஷ்டம் ஏற்படுமென்றும், கொஞ்ச காலம் அபிப்பிராயம் கொண்டிருந்தார்கள். சரியானபடி பருவஞ்செய்யப்பட்டால், எல்லாவித்துக்களும் அதனதன் சுபாவத்துக்கு ஏற்றபடி ஒரே விதமான மாசூலைத்தராதிருக்கக் காரணமில்லை. பரீக்ஷை செய்ததில் திருநெல்வேலி சம்பா, ஈர்க்குச் சம்பா, ஹல்வா குடிகா, பாங்கு, ஆனைக்கொம்பன், மட்டவெள்ளை, அமெரிக்கா தேசத்திய கரோலினா முதலான வித்துக்கள் ஜாஸ்தியான மூடுகட்டி நல்ல விளைச்சலைத் தந்திருக்கின்றன.

இது விஷயமாய் ஒரு சூக்ஷ்மம் அறிய வேண்டியது. தலைமுறை தத்துவமாய்க் குத்து நடுகையாய் நடப்பட்ட பயிர்களிலிருந்து உண்டான விதை முதலை, ஒரு 'முதல்' நடுகையாக உபயோகித்த முதல் வருஷத்திலேயே யதார்த்தத்தில் கிடைக்க வேண்டிய பூர்ண பலனை நாம் அடைகிறதில்லை; ஆனால், அதே விதையைக் குத்துக்குத்தாய் நட்ட புலன்களில் ஏற்பட்ட பயிர் அல்லது மாசூலை விட தாழ்மையா யடைவதுமில்லை; முதல் வருஷத்திலேயே சரியான பலனையும் தந்து அதிலிருந்து உண்டாகும் விதை முதலை உபயோகிப்பதனால், பரம்பரையாய் ஏற்படுத்திய மூடு கட்டாத துர்க்குணம் மாறி ஜாஸ்தி மூடுகட்டுதல் என்ற இயற்கை சுபாவத்தைக் கொண்டு நாளடைவில் மேன்மையான மாசூலையும் தருகின்றது.

9 அனுபவத்தையே மேற்கொண்ட கிருஷிகர்களில் தேர்ந்த சிலர், ஒரு விதையிலிருந்து உண்டாகும் நாற்றை எல்லாப் புலன்களிலும் ஏக காலத்திலும் தனியாய் நடலாமா என்றும், தனி முதலாய் நட்டநாற்று மழையினால் அழுகி, காற்றினால் அடிபட்டுப்போகாதா என்றும், மழை காற்று ஏற்பட்ட காலங்களில் குத்தாய் நட்டநாற்றுக்களில் சில தப்பிப்பிழைத்து குடியானவனுக்கு உபகாரமாயிருக்கும் என்ற சந்தேகம் கொள்கிறார்கள். ஆனால் இவ்விதம் சந்தேகமடையக் காரணமில்லை. நாற்றங்காலை சரியானபடி பருவஞ்செய்து நட்டால் மழையாலாவது, காற்றினாலாவது, குத்து நடுகைப்பயிர்களுக்கு உண்டாகும் கெடுதல்களைவிட, 'ஒற்றை' நடுகைப்பயிர்களுக்கு உண்டாகும் தீங்கு ஜாஸ்தியில்லை. இனி நாற்றங்காலை சரியானபடி பருவம் செய்யும்வழி என்னவென்று விசாரிப்போம்.

10. அலகு தற்காலத்தில் நடவேண்டிய புலன் விஸ்தீரணம் எவ்வளவோ அதில் ஆறில் ஒன்று முதல் இருபதில் ஒன்று வரையில் நாற்றங்கால் விஸ்தீரணம் ஏற்பட்டிருக்கிறது. இது விஷயத்திலும் பலவிடங்களில் பலவிதந்தான். ஆனால் பொதுவாய் விதை முதலை நாற்றங்காலில் **நெருக்க விட்டுப்** பயிர் செய்யும் வழக்கம் எங்கும் சகஜமாயிருக்கிறது. நாற்றுப் பருவம் அடைந்ததாய் எண்ணப்பட்ட காலங்களில் நாம் போய்ப்பார்த்தால் ஒவ்வொரு விதையிலிருந்து உண்டான ஒவ்வொரு நாற்றும் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு, மெலிந்ததாயும், வெளிரின தோற்றத்தையுங் கொண்டிருக்கிறதேயன்றி திரப்பாயும், கண்ணைக்கவரக்கூடிய கார்மேகம் போன்ற நிறத்தையும் ஒரு நாளும் அடைவதில்லை. ஆனால், நாற்றங்காலில் கலக்கமாய் ஒவ்

வொரு விதைக்கும்அரை அல்லது ஒரு அங்குல தூரம்இருக்கும்படிவிதை விட்டால் நாற்று சீக்கிரமாய்ப் பருவமடைவதுடன், கண்ணுக்கு நல்ல பார்வையையும் தந்து, திரப்பாயும், பக்கக் கவர்களோடு கூடினதாயும் இருக்கும். கலக்கமாய் நாற்றுவிட்டதில் திருநெல்வேலிச் சம்பா, ஈர்க்குச் சம்பா, ஆனைக்கொம்பன், சிறுமணி, ஹல்வாகுடிகா, பாங்கு முதலான விதைகளில், நாற்றங்கால் பருவமடைந்த காலத்தில், ஒவ்வொரு விதையிலிருந்தும் உண்டான நாற்றில் 5 முதல் 10 வரையில் பக்கக் கவர்கள் ஏற்பட்டன. ஒரு விதையிலிருந்து உண்டான பக்கக் கவரோடு கூடின ஒரு நாற்றையெடுத்துப் பரிசோதனை செய்தால், நெருக்கமாய் நாற்று விட்டு உண்டாக்கப்பட்ட பத்துப்பதினைந்து நாற்றை விட பலமுள்ளதாக இருக்கும். இந்தக் குணத்தினுல்தான் சரியாய்ப் பருவமடைந்த நாற்றங்காலில் உண்டான நாற்றை ஒற்றையாய் நடுவதால் மழை, காற்று விஷயமாய் ஏற்பட்ட பயங்கள் இல்லை. நட்ட ஒருமாசம் கழித்ததும் புலத்திற்குப் போய்ப் பரிக்ஷை செய்ததில் சாதாரணமாய் 15 ‘முதல்’ வைத்துக் குத்துப்பயிர் செய்யப்பட்ட புலத்தில் மூடுகளைச் சுலபமாய்ப் பிடுங்க முடிந்தது. ஆனுல் ஒற்றை ‘முதல்’ வைத்துப் பயிரான வயலில் உள்ள மூடுகளைப்பிடுங்க அதிகச் சிரமமாயிருந்தது. இதற்குக் காரணம் நாமே இலேசாய்த் தெரிந்து கொள்ளலாம். கால்படி அரிசியைக் கொண்டு ஜீவனம் செய்யும் ஒருவன் தைரியசாலியாக இருப்பது நியாயம். அதே கால்படி அரிசியைத் தின்று நாலுபேர் தைரியமாயிருக்கவேண்டு மென்றுல் முடியுமா? ஒருக்காலும் முடியாது. அதுபோலவே, நாற்றங்காலில் நெருக்கமாய் நெல் விதையை விட்டால் விதைகளிலிருந்து உண்டாகும் நாற்றுகள் போதுமான ஆகாரமில்லாமல் மெலினமாயிருக்கின்றன. நாற்றங்காலில் மேற்சொன்ன பிரகாரம் கலக்கமாய் விதை விட்டால் ஒவ்வொரு நாற்றும் தனக்கு வேண்டிய பூர்ண ஆகாரத்தைஉட்கொண்டு செழித்து வளர்கின்றது. புலங்களில் ஒவ்வொன்றுய் பின் நடப்பட்டபோதும், பத்துப்பதினைந்து பேராய், நெருங்கியிருந்து, கஷ்டப்பட்டு, உடல் வற்றும்படி உட்கொண்ட ஆகாரத்தைத் தனியே சாப்பிட்டு, பரிவாரங்களாகிய பக்கக் கவர்களை விசேஷமாய் விருத்திசெய்து தன்னை வயிருரச் சாப்பிடும்படி தனியேவிட்ட யஜமானன் மனங்குளிரும்படி அறுவடை காலத்தில் மேன்மையான மாசூலையுந்தருகின்றது. பார்த்தீர்களா ‘பிழைக்கும் வழியை’ அறிந்த நேயர்களே! இதுதான் உத்தமர்களுடைய குணம். இதுதான் புதுமாதிரியாய் நெற்பயிரை நடுவதின் பிரயோஜனம்.

11. இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னெரு விசேஷத்தையும் நாம் கவனிக்கவேண்டும். குத்து நாற்றுய் நட்ட புலங்களில் உள்ள மூடுகள் ஒரே விதமாய்ச் செழிப்படைவதில்லை. ஒவ்வொரு மூட்டிலும், சில கதிர்கள் திரப்பாயும் சில மெலினமாயுமே காண்கின்றன. ஆகவே, அறுவடையான காலத்தில், சில நெல் மணிகள் பருத்தும், சில கேவலமாயுந் தோன்றும். ஒற்றை ‘முதல்’ நட்டுப் பயிர்செய்த வயல்களில் உள்ள மூடுகள் ஒரே விதமாய் வளர்ந்து திரப்பான மணிகள் பொருந்திய கதிர்களையேந்தி சிறந்த மாசூலையும் தருகின்றன. ஒத்தை நடுகையான பயிர்களில் விசேஷமாய் நோய் அணுகுவதில்லை. நோய் ஏற்பட்ட காலத்திலும் பயிர்கள் சீக்கிரம்தேர்ந்து விடுகின்றன.

12. இவைமட்டுமல்ல. நமது அனுபவத்தில் ஏற்பட்ட இன்னெரு முக்கிய விஷயம் உண்டு. ஒரே நாற்றங்காலில் உண்டான நாற்றை ஒரே



புலத்தின் ஒரு புறத்தில் குத்து நடுகையாயும், மற்றெரு பக்கத்தில் தனி ‘முதல்’ நடுகையும் செய்ததில், முதல் வருஷத்தில் மாசூல் பட்டணம்படிக் கணக்கில் சமமாய் ஏற்பட்டபோதிலும் நிறையில் வித்தியாசம் இருந்தது. ஒரு ‘முதல்’ நடுகைப்புலனில் இருந்து உண்டான ஒரு பட்டணம் படி நெல், குத்து நடுகைப் பயிர் செய்யப்பட்ட நிலத்தில் உண்டான ஒரு படி நெல்லைவிட கனம் ஜாஸ்தியாயிருந்தது. இதனுல் ஒத்தை நடுகைப்பயிர் செய்வதால் ஒவ்வொரு நெல்லுக்கும் சாதாரணமாய் ஏற்பட்ட சத்து அதிகமாகிறதென்று தெரிகிறது. இது விஷயமாய் விவசாய இலாகா நிபுணர்கள் தீரவிசாரித்து தம்தம் அபிப்பிராயங்களை வெளியிட்டால் ஜனங்களுக்கு மிக்க அனுகூல முண்டு.

13. முன்சொல்லிய விஷயங்களால் தற்காலம் நமது கிருஷிகர்கள் உபயோகிக்கும் விதை முதல் அதிகமென்றும் புதுமாதிரியான நடுகைக்கு இரண்டுபடிதான் தேவையிருப்பதால் விதை முதலுக்காக இப்பொழுது நமது ராஜதானியில் வருஷா வருஷம் செலவாகும் 5 கோடி ரூபாய் ஆதாயமாகும் என்றும் இந்த ஆதாயத்தைக்கொண்டே கிருஷிகர்கள் தங்கள் புலன்களுக்கு செவ்வையாய் உரம் முதலானவைகள்போட்டுமேன்மேலும்மாசூலைவிருத்தி செய்யலாமென்றும் ஏற்படுகின்றது. இவைகளையெல்லாம் நமது கிருஷிகர்கள் எக்காலத்தில், யார் மூலமாய் அறிந்து சுகமடைவார்களோ அதுதான் நமக்குக் கவலை. இதுநிற்க.

14. இப்பொழுது ஏற்பட்ட வழக்கத்தினுல் கிருஷிகர்கள் தங்களுக்கு வேண்டிய விதை முதலை அறுவடையானதும் தயார் செய்து வைக்கிறுர்களேயொழிய, ஏகராவுக்கு 15 படி முதல் 55 படி வரையில் விதை தேவையாயிருப்பதால் சுத்தமானதாயும் நல்ல மணியாயுமுள்ள விதைகளைப் பொறுக்கி எடுத்து வைத்துக்கொள்ளக் கூடவில்லை. புதுமாதிரியாய் ஒற்றைநடுகைப்பயிர் செய்தால் கிருஷிகனுக்கு ஏகரா ஒன்றுக்கு இரண்டுபடியே செலவாகும். இந்த இரண்டு படியையும் அவன் தன் வயலில் அறுவடையாகுமுன் நேரில் போய் ஜாஸ்தியாய் மூடுகட்டி, சாவிக்கதிர்கள் இல்லாததும், பருமணிகள் நிரம்பியதுமான கதிர்களை வேறுய்ப் பிரித்து இலேசாய் எடுத்துக் கொள்வான். அல்லது விதைக்காகக் கொஞ்சம் புலத்தைத் தயார் செய்து விதையைத் தனியாய்ப் பயிர் செய்யவுங் கூடும். இவ்விதம் பொறுக்கி எடுத்த விதையை உபயோகிப்பதால் நெல் கலப்பில்லாமல் இருப்பதுடன் நல்ல மாசூலும் ஏற்படுமென்ற விஷயம் யாவரும்அறிந்ததுதான். பெரிய நிலஸ்வான்களுக்கு இப்பொழுது நல்ல விதை சேகரித்துக்கொள்ள ஏற்படும் கஷ்டங்களுமிரா. ஏனெனில் நூறு ஏகரா பூமியையுடைய நிலஸ்வானுக்கு புதுமாதிரி நட 200 பட்டணம்படி விதைதான் தேவை. இதை 15 ஸெண்டு நிலத்தில் தனிப் பயிர் செய்து எளிதிலடையலாம்.

15. பழைய ஏற்பாட்டின்படி நாற்றங்காலில் நெருக்கமாய் விதையை விடுவது சரியல்லவென்றும், கலக்கமாய் விதையை விட்டால்தான் நாற்றுத் திறமாயும் சிலாக்கியமாயும் இருக்குமென்றும் முன்னே சொன்னேம். இதைப் பார்த்ததும் பேதையர் சிலர் புதிய ஏற்பாட்டின்படி ஒரு ஏகரா சாகுபடி செய்ய முன்னினும் ஜாஸ்தியான நாற்றங்கால் வேண்டியதாய் ஏற்படும் என்றும், அதனுல் நஷ்டமுண்டாகுமென்றும், நினைக்கலாம். இது தவறு. 100 பட்டணம்படி விதையைப் பாவ, பழைய வழியாய் ஏற்பட்டிருக்கும் நாற்றங்கால் விஸ்தீரணத்தைப் பார்க்கிலும், அதே விதை

முதலே புதுமாதிரி கலக்கமாய்விட குறைந்தது இரண்டு பங்கு நாற்றங்கால் விஸ்தீரணமாவது இருக்கவேண்டுமென்பதுதான் கருத்து. இப்பொழுதோ ஒரு ஏகரா பயிர் செய்ய 5 முதல் 15 ஸெண்டு வரையில் நாற்றங்கால் ஏற்பட்டிருக்கிறது. அநேக ஜில்லாக்களில் தற்காலம் 15 முதல் 55 பட்டணம் படி விதை முதல் உபயோகிப்பதே இந்த வேறுபாட்டிற்கும் முக்கிய காரணம். புது மாதிரியை அநுசரித்தால் ஒரு ஏகராவிற்கு வேண்டிய விதைமுதலான இரண்டு படியை அரை அங்குலம் அல்லது ஒரு அங்குல தூரம் வித்துக்கும் வித்துக்கும் இருக்கும்படி நாற்று விட்டாலும் மூன்று ஸெண்டுக்கு மேல் நாற்றங்கால் தேவையிராது. இந்த விஷயத்திலும் புது மாதிரி நடுகையை அநுஷ்டிப்பதால் குடியானவன் லாபமடைகிறான்.

16. சில கிருஷிகர்கள் ஒற்றை நாற்று வைத்து நடுவதால் வைக்கோல் குறையுமென்று நினைக்கிறார்கள் அநுபவத்தில் யாதொரு குறைவும் இருப்பதாய்க்காணோம்.

17. வேறு சிலர் ஒரு அலகாய்ப்பிரித்து நட அதிக ஆட்கள் வேண்டியதாயிருக்கும் என்றும் அதினால் செலவு அதிகப்படும் என்றும் பயப்படுகிறார்கள். அநுபவத்தில் மாமூல்படி ஒரு ஏகரா நட தென்ஜில்லாக்களில் 12 ஆட்கள் வேண்டியிருக்கிறது. அதே விஸ்தீரணத்தை புதுமாதிரி சொற்ப நாற்றைக் கொண்டு ஒரு அலகாய் நட 5 முதல் 10 ஆட்கள்தான் தேவையாயிருக்கிறதே தவிர வேறில்லை. ஆனால் ஆரம்பத்தில் வேலையாட்களின் புராதன கைப்பழக்கம் மாற கொஞ்சம் சிரமப்படுகிறது.

18. சுருக்கிச்சொல்வோமானால் நெல் பயிர் ஒரு விஷயத்தில்மட்டும் குத்து நடுகைப் பயிர் செய்கிற துர்வழக்கம் ஏற்பட்டிருக்கிறதே யொழிய வேறொரு தானியப்பயிரையும் அவ்விதம் நடுவதில்லை. தற்காலத்தில் ஏற்பட்ட நெல் பயிர் விஷயமான வழக்கங்களையும் அதைச் சீர்திருத்த வேண்டிய ஏற்பாடுகளையும், அதனால் நமது கிருஷிகர்களுக்கு உண்டாகும் லாபத்தையும் பற்றிச் சொன்னோம். இனி எந்த விதமாய் நமது கிருஷிகர்கள் இவ்விஷயங்களை அறிந்துகொண்டு மேன்மை அடையலாம் என்ற விஷயத்தைப்பற்றிப் பின்னால் சொல்வோம்.

ஓர் கிருஷி.

---

**தேசாபிமானி.**—நம் தேசத்தவர் க்ஷேமத்தையடைவதற்கு தொழிலபிவிர்த்தி முக்கியமான விஷயமானதாலும், மனமிருந்தும் போதனைக் குறைவினால் அபிவிர்த்திக்கு ஏது குறைந்திருப்பதினாலும், அதற்குவேண்டிய போதனையைத் தரத்தக்க பத்திரிகை நமக்கு அத்தியாவசியமாக இருக்கிறது. இதுவரையில் "பிழைக்கும் வழியைப்" போல பத்திரிகை நம் ராஜதானியில் கிடையாது. சகலரும் படித்தறியுமாறு வியாசங்கள் அதிக எளியநடையில் எழுதப் பட்டிருக்கின்றன. சந்தாவிலேயும் வருஷத்துக்கு 4. ரூபாய்தான். ஆகையால் சகலரும் அதைத் தருவித்துப் படித்து அதினால் தாங்கள் பயனடைவதுடன் தேச க்ஷேமத்தையு முண்டாக்கு வார்களென்று நம்புகிறோம்.

"பிழைக்கும் வழி" ப்பத்திரிகையைப்பற்றி தஞ்சாவூர் ஜில்லா ஏரவாஞ்சேரி போஸ்டைச் சேர்ந்த தெடியூர் கிராமத்திலிருந்து டி. எஸ். நீலகண்ட அய்யர் என்பவர் அடியில் கண்டவாறு எழுதியிருக்கிறார்.

"தாங்கள் அனுப்பிய மாதிரி சஞ்சிகையை முழுதும் பார்வையிட்டேன். எனக்கு ஓர் ஆனந்தத்தை விளைவித்தது. ஏனென்றால் இதுவரையில் இம்மாதிரியான ஸஞ்சிகை ஒருவரும் வெளியிட்டதில்லை. எனக்கு வியாபார, விவசாய, விஷயங்களில் தங்கள் ஸஞ்சிகை (பிழைக்கும் வழி) யின் மூலமாய் சந்தேகங்களைத் தெரிந்துகொள்ளலாமென்று தீர்மானித்துக் கொண்டேன். இந்தச் சஞ்சிகையைப் படிப்பதனாலேயே ஜனங்களுக்குப் பிழைப்பதற்கு ஓர் வழியுண்டாகிறது. ஜனவரி மாதத்து சஞ்சிகை முதல் எல்லா சஞ்சிகைகளும் எனக்குத் தேவையாயிருக்கிறது."

---



## AGRICULTURAL NOTES.
## விவசாயக் குறிப்புகள்.

SENEGAL GROUND NUT.

**ஸினிகல் மணிலாக் கொட்டை.**—இது ஒருவித புது மணிலாப்பயிர். ஆப்பிரிக்காவிலுள்ள ஸினிகல் காம்பியா என்னும் இருநதிகளின் மத்தியில் இருக்கும் ஸினிகாம்பியா என்னும் தேசத்தில் விளையும் மணிலாப்பயிருக்கு ஸினிகல் கொட்டை என்று பெயர். இது நீட்டுப்போக்காயும், தோல் மெல்லியதாயும், சாம்பல் நிறமுள்ளதாயும் உள்ளது. தென்னாற்காடு ஜில்லா மணிலாப் பயிர் பிரபல வர்த்தகஸ்தானமாகிய வளவனூரில் பரீக்ஷார்த்தமாகப் பயிர் செய்யப்பட்டது. புதுச்சேரியிலுள்ள மெஸ்ஸர்ஸ் ராலிபிரதர்ஸ் கம்பெனியார் இந்தக்கொட்டையைத் தருவித்து வளவனூரில் உள்ள வியாபாரிகளுக்கு விதைக்கக் கொடுத்தார்கள். நல்ல எருவுடன் நீர் வசதியும் இருந்தால் நல்ல ராசி காணுகிறது. மோரீசு மணிலாப்பயிர் எண்ணெய் காணுவதுபோல் இது காணுவதில்லையாம். இதுவும் நான்கு மாதத்துப்பயிரேயாம்.

CHOLUM STALKS.

**சோளத்தாள்.**—கடப்பை ஜில்லாவில் உள்ள மதனப்பள்ளி என்னும் பட்டணத்தில் ஒரு எருமை மாடு சோளக்கொல்லையில் புகுந்து சோளத்தாளைத் தின்றதாம், கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அது மூச்சு விட முடியாமல் இறந்துபோய் விடும்போல் கீழே விழுந்துவிட்டது. இதை அறிந்து, மாட்டின் சொந்தக்காரன் வேப்பெண்ணெயில் துணியை நனைத்து கொம்புகள் இரண்டிலும் சுற்றி நெருப்பு வைத்தான். எரிய எரிய வேப்பெண்ணெயை ஊற்றிக்கொண்டே வந்தான். கொம்புகள் அடியிலிருந்து ஆறு அங்குலம் எரிந்தவுடன் மாட்டுக்கு சொரணை உண்டாகி அது சரியானஸ்திதிக்கு வந்தது. சோளத்தாளில் ஒருவித புழு இருக்கிறதாம். தாள் கொண்டை வாங்குவதற்கு முன் அதை மாடு தின்றால் அந்தப் புழு தொண்டையில் சிக்கிக்கொண்டு மூச்சை அடைக்குமாம். இப்படிக்கு நேர்ந்தால் கொம்புகளைக் கொளுத்துவதைத் தவிர வேறு பரிஹாரம் இல்லையாம்.

PADDY CULTIVATION.

**நெல் சாகுபடி.**—நெல் விதையை சரியாய்த்தேர்ந்தெடுத்து விதைத்தால் நல்ல மகசூல் கிடைக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் விவஸாய இலாகாவுக்குத் தலைவராகிய குஞ்சன் பிள்ளை என்பவர் இது விஷயத்தில் மிகவும் சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார். இப்பொழுது அந்த ஸமஸ்தானத்தில் உபயோகிக்கப்படும் ஒவ்வொருவித நெல் விதையின் மாதிரியும் சேகரித்து, அவைகளின் பெயர் என்ன, எந்த நிலங்களில் சாகுபடி செய்யப்படுகின்றன, எப்படி சாகுபடி செய்கிறது, எந்த காலத்தில் விதை விடுகிறது, எப்பொழுது அறுவடை செய்கிறது, என்ன மேனி காணுகிறது, என்னும் பலவித சமாசாரங்களையும் அறிய முயன்று வருகின்றார். இப்படிப்பட்ட ஆராய்ச்சிகள் செய்து விவசாயம் செய்தாலொழிய விவசாயத்தில் சரியான லாபம் கிடைக்காது.

WATERING COCOANUT TREES.

**தென்னை மரங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுதல்.**—தென்னை மரத் தோப்புகளில் எப்பொழுதும் ஈரம் இருப்பது நலம். இல்லாவிட்டால் மரம் செத்துப்போய்விடாது. ஆனால் அதன் பலன் குறைந்துவிடும். இதை அறிந்தே சென்னப்பட்டணத்திலுள்ள கள்ளுக்கட்டும் தென்னந்தோப்புகளுக்கு கோடைகாலத்தில் ஜலம் இறைக்கிறார்கள். தஞ்சாவூர்ப் பக்கங்களில் இப்படிக்கு ஜலம் இறைக்காமல் தை மாஸம் முதலில் தோப்புகளை கொத்திவிடுவது வழக்கம். இப்படிக் கொத்திவிடுவதால் முந்திய ஐப்பசி கார்த்திகை மாஸங்களில் பெய்த மழை ஜலம் கோடையில் நீராவியாய்ப் போய்விடாமல் நிலத்தில் தங்கி மரங்களுக்கு ஈரத்தைக் கொடுத்துக் கொண்டே வரும். தஞ்சாவூர் ஜில்லா நீர்வளமுள்ள பூமியாதலால் இப்படிச் செய்வது ஒருக்கால் போதும்.

AUTOMATIC WATER-FINDER.

**தானாய் நீர் ஊற்றை அறிவிக்கும் கருவி.**—இதைப் பற்றி மாசி, பங்குனி மாஸத்து ஸஞ்சிகைகளில் எழுதியிருக்கிறோம். இந்தக்கருவியைக் கண்டுபிடித்த மான்ஸ்பீல்ட் கம்பெனியார் அதன் உபயோகத்தை நிதரிசனமாய் நமது நாட்டில் உள்ளவர்களுக்குக் காண்பிக்கும் பொருட்டு ஒரு ஏஜெண்டை அனுப்பவதாக எழுதியிருக்கிறார்கள்.

## TRADE NOTES.

## வியாபாரக் குறிப்புகள்.

THE WORLD'S TRADE IN 1908.

**1908ம் வருஷத்தில் உலகத்தின் வியாபாரம்.**—கொஞ்சகாலமாக, ஸ்வதேசத் துணிவர்த்தகராயிருந்தாலும் சரி, பிறதேசத்துணி வர்த்தகராயிருந்தாலும் சரி, இரும்பு முதலிய உலோகங்களில் வர்த்தகராயிருந்தாலும்சரி, எவ்வித வர்த்தகராயிருந்தாலும் பெரிய வியாபாரியோ, சில்லரை வியாபாரியோ, எவரைக்கேட்டாலும் வியாபாரம் மிகவும் "ஜப்பாய்" (மட்டாய்) இருப்பதாக வருத்தப்பட்டுச் சொல்லுகிறார்கள். இந்தச் செப்தி நமது இந்தியாதேசத்தில் மட்டும் அல்ல. உலகத்திலுள்ள ஒவ்வொரு பெரிய வர்த்தக தேசத்திலும் இதே அழுகைதான். இதன் உண்மை அடியில் கண்ட, அந்தந்ததேசத்து ஏற்றுமதி இறக்குமதி இரண்டும் சேர்ந்த மொத்த வியாபாரத்தைப்பார்த்து அறிந்துகொள்ளலாம். 1908ம் வருஷத்தில் இங்கிலாந்தின் ஏற்றுமதியும் இறக்குமதியுமாகச்சேர்ந்து 1575 கோடி 3 லக்ஷமாயிற்று. இந்தத்தொகையானது 1907-ம் வருஷத்து வியாபாரத்தைவிட 170 கோடி 64 லக்ஷம் குறைவு. அமெரிக்காவில் ஐக்கியமாகாணங்களின் வியாபாரம் 889 கோடி 23 லக்ஷம்; அதாவது 1907-ம் வருஷத்தைவிட 147 கோடி 81 லக்ஷம் கம்மி. இதேமாதிரியாய் ஜர்மனிதேசத்தில் கம்மி 37 கோடி 35 லக்ஷம்; ஆஸ்திரியாஹங்கெரியில் கம்மி 6 கோடி 36 லக்ஷம்; பிரான்ஸ் தேசத்தில் கம்மி 27 கோடி சொச்சம்; பெல்ஜியம் தேசத்தில் கம்மி 6 கோடி சொச்சம்.

நமது இந்தியாவின் ஏற்றுமதியும் இறக்குமதியுமாகச் சேர்ந்து மொத்த வியாபாரம் 302 கோடி 75 லக்ஷம். இதானது 1907-ம் வருஷத்து வியாபாரத்தைவிட 42 கோடி 65 லக்ஷம் கம்மி. இப்படிக்கு வியாபாரம் மட்டாயிருப்பதற்குக் காரணம், சரக்குகள் அழியக்கூடிய அளவுக்கு மிதமிஞ்சிப்போனதே தான்.

SPECIAL CAUSES FOR INDIA.

**இந்தியாவில் விசேஷ காரணங்கள்.**—நமது தேசத்து வியாபாரக் குறைவுக்கு இன்னும் ஒரு காரணம் உண்டு. அது என்னவென்றால், போதுமான அளவில் மழை பெய்யாததும், பெய்த மழை சரிவர காலாகாலங்களில் பெய்யாததுமே. இதனால், நமது தேசத்து விளை பொருள்கள் குறைவுபட்டன. 1906-07-ம் வருஷத்தைவிட 1907-08-ம் வருஷத்தில் அறுவடையான மாசூல்களில் முக்கியமாய் அரிசி நூற்றுக்கு பத்துவீதமும், பருத்தி நூற்றுக்கு பதினொரைவீதமும், கோதுமை நூற்றுக்கு இருபத்தேழு வீதமும் கம்மியாய் விளைந்ததாக கணக்கிடப் பட்டிருக்கிறது.

PRICES.

**விலைகள்.**—விளைவு குறைந்தால் விலை ஏறியிருக்கிறதே. அதனால் மொத்தவியாபாரத்தின் தொகை குறையக்காரணம் இல்லை என்று சொல்லலாம்: அரிசி, பருத்தி முதலிய முக்கியமான பத்து விளை பொருள்களுடைய ஏற்றுமதி விலைகளை இரண்டு வருஷங்களுக்கு எடுத்து ஒத்திட்டுப் பார்த்தால் மூன்றாவது வருஷத்து விலைகளைவிட போன வருஷத்து ஏற்றுமதி விலைகள் விளைவு குறைந்த அளவுக்கு ஏறாமல் கம்மியாகவே இருந்ததாகத் தெரியவருகிறது. ஆகையால் விளைவுக்குறைவினால் ஏற்பட்ட நஷ்டம், விலை வாசியில் பூராய் ஈடாயிருக்குமென்று சொல்ல முடியவில்லை.

EXPORTS OF BONE-MEAL.

**எலும்புத்தூள் ஏற்றுமதி.**—எலும்பின் தூள் அநேக காரியங்களுக்கு உபயோகப்படும். நிலத்திற்கு எருவாகவும், சர்க்கரை சுத்தம்செய்வதற்கும், பிரயோஜனமாயிருப்பதால், இந்தியாவில் எலும்பைச் சேகரித்துத்தூள் செய்ய ஏழு கம்பெனிகள் இருக்கின்றன. நான்கு கம்பெனிகள் பம்பாயிலும், இரண்டு வங்காளத்திலும், ஒன்று விந்து மர்கர்ணத்திலும் உண்டு. வெளிநாடுகளில் ஜெர்மனி விசேஷமாய் ஏற்றுமதி செய்துகொள்ளுகிறது.

EXPORTATION OF PALMYRA.

**பனைநார் ஏற்றுமதி.**—1906-07, 1907-08-ல் சுமார் 32,000ம் பாரம் பனைநார் சென்னையிலிருந்து ஜெர்மனி, பெல்ஜியம், இங்கிலாந்து முதலிய தேசங்களுக்கு ஏற்றுமதியாயிருக்கிறது. இவற்றில் ஜெர்மனி அதிகமாய் வாங்கியிருக்கிறது. இதே காலத்தில் பம்பாய் வங்காளத்திலிருந்து ஏற்றுமதி யில்லை. பனைநாரைக் கொண்டு 'புருஷ்'களும், வாருகோல்களும் செய்யப்படுகின்றன.



## INDUSTRIAL NOTES.

## கைத்தொழில் குறிப்புகள்.

MACHINE-MADE SANDAL PASTE.

**யந்திரத்தால் அறைத்த சந்தனம்.**—தஞ்சாவூரிலிருக்கும் எஸ். பி. கம்பெனியார் சந்தனம்தயார்செய்வதற்கு நூதனமாக ஓர் யந்திரம் கண்டுபிடித்து அதன் மூலமாய் சந்தனமறைத்து வருகிறார்களாம். கலியாணகாலத்திலும், உற்சவகாலத்திலும், சந்தனக்காப்பு முதலிய பக்தி மங்களகர முதலிய விசேஷ தினங்களிலும் ஏராளமான பொருளைச் செலவிட்டுத் திரேக பிரயாசைப்பட்டு 4, 5 தினங்களுக்கு முந்தியே ஆட்களைக்கொண்டு மண்ணைக் கலந்து அறைத்தும் போதுமான சந்தனங் கிடைக்காமல் புளிப்புநாற்றமுண்டாகி சுகமில்லாமல் சேதப்படுகிறதை நாம் அறிந்திருக்கிறோம். இப்போது எஸ். பி. கம்பெனியார் தயார் செய்யும் சந்தனமோ அப்படிக்கின்றி பல தேசங்களிலிருந்து உயர்ந்த சந்தனக்கட்டைகளை வரவழைத்து எஞ்சின்மூலமாய்த் தயார்செய்வதில் ஷை சந்தனம் நைஸாகவும் சுயமாகவும் விலை சரசமாகவும், வாசனையாகவும், ஏககாலத்தில் வேண்டிய அளவு கொடுக்கக்கூடியதாயுமிருக்கிறதாம். வியாபாரிகளுக்கு மாதிரிக்காகவேண்டியதிருந்தால் போஸ்டு சார்ஜ் அன்னியில் அனுப்பப்படுமாம்.

TRANSFER OF LOCOMOTIVE WORKSHOPS.

**ரெயில் வண்டி யந்திரசாலைகளின் மாற்றம்.**—இப்போது நாகப்பட்டணத்தில் தென் இந்தியா ரெயில்வே கம்பெனியாருக்குச் சொந்தமான யந்திரங்கள் செய்யப்படும் தொழிற்சாலை இருக்கின்றது. இதில் 'மீடர்கேஜ்' என்று சொல்லப்படும் சிறு அளவைக் கொண்ட பாதையில் ஓடும் வண்டிகள் மட்டும் செய்யப்படுகின்றன. இந்த தொழிற்சாலையை நாகப்பட்டணத்திலிருந்து திருச்சினாப்பள்ளிக்கு மாற்றிவிட ஷை கம்பெனியார் உத்தேசித்துக் கூடிய சீக்கிரத்தில் நிறைவேற்றியும் விடுவார்கள். 'ப்ராட் கேஜ்' என்கிற அகல அளவைக்கொண்ட பாதையில் ஓடும் வண்டிகள் செய்வதற்காக தனி யந்திரசாலையொன்று ஏற்படுத்துவதும், அதைபோத்தனூரில் வைப்பதும் ஆகிய இவ்விரண்டு விஷயமும் இன்னும் ஆலோசனையிலிருப்பதாக தெரியவருகிறது.

CASUARINA BARK.

**சவுக்குமரப் பட்டை.**—இந்த மரத்தின் பட்டை சாயம் எடுக்கும் பொருளாகும். இம்மரம் கடற்கறையோரங்களில் மணற் பிராந்தியங்களில் செழித்து வளர்வதால், அக்கடலோரங்களிலுள்ள வலைஞர்கள் இப்பட்டையை ஊறப்போட்டு சாயத்தை எடுத்து தம் மீன்பிடிக்கும் வலைகளை உறுதிபண்ணுவதற்காகவும் கெட்டுப்போகாதிருக்கவும் தடவுகிறார்கள். இம்மரப்பட்டைகளின் உபயோகம் பெரிதும் நம்மிந்தியர் வாசிகள் அறியாமையாலே இப்பட்டைகள் ஏராளமாய் வேற்று நாட்டிற்கு அனுப்பப்பட்டு "காகிடிரில்" என்னும் துணியில் காகி நிறமேற்றுவதற்குப் பெரிதும் உபயோகப்படுகின்றதாம். நம் நாட்டு பொருள் நம் நாட்டிலேயே இவ்வாறான சாயமெடுக்க உபயோகிக்கப்படக்கூடாதா?

SUGAR MAKING.

**சர்க்கரை செய்தல்.**—ஐக்கிய மாகாணத்தில் விவசாய இலாகாவைச் சேர்ந்த ஹாடி என்பவர் வெள்ளைச் சர்க்கரையைப் புதுமாதிரியாகச் செய்கிறார். இதைக்கற்றுக்கொள்ள கோயமுத்தூரிலிருந்து நாலு பேர்கள் சென்ற வருஷத்தில் மீரட் என்னும் நகரத்திற்கு போனார்கள். இந்த நாலுபேர்களில் ஒருவர் உடுமல்பேட்டை தாலூகா கொழுமம் கிராமத்தில் பெரிய மிராசுதாராகிய பெரியசாமி அய்யரால் அனுப்பப்பட்டார். இவர் கரும்பு சாகுபடி விசேஷமாய்ச் செய்கிறாராம். இவர் அனுப்பிய மனிதன் புதுமாதிரியைக் கற்றுக்கொண்டு வந்து சர்க்கரை செய்வதானது மிகவும் திருப்திகரமாக இருக்கிறதாம். பிரியமுள்ளவர்கள் போய் பார்க்கலாம்.

A NEW MATERIAL.

**ஒரு புதுசாமான்.**—ஜர்மனி தேசத்து இரண்டு நிபுணர்கள் இரும்பு, எஃகு, அலூமினியம் இவைகள் பல வேலைகளுக்கு உபயோகமாவதைக்காட்டிலும் அதிக நயமாக உபயோகப்படக்கூடிய ஒரு வித பொருளைக் கண்டுபிடித்திருக்கிறார்களாம். இது கடுதாசி, சணல்நூல்துணி, மற்றத்துணிகள் முதலியவற்றைச்சேர்த்து செய்யப்படுகிறதாம். இது அலூமினியத்தைவிட லேசாகவும் எஃகை விட உறுதியாகவும் இருக்கிறதாம்.

## ECONOMICS.
## பொருளாதாரம்.

VILLAGE FAIRS.

**கிராமச் சந்தைகள்.**—கிராமச் சந்தைகள் நமது தேசத்தில் தொன்று தொட்டு வழங்கி வருகின்றன. தோப்பு, அல்லது சாவடி முதலிய இடங்களில் குறிப்பிட்ட தேதிகளில் சந்தை வைப்பதால் பண்டம் வாங்குதல் சௌகரியமாயிருக்கிறது. அந்தந்த கிராமத்தில் கிடைக்கக்கூடிய வஸ்துக்கள் எல்லாம் கொண்டுவரப்படுமாதலால், ஒரு கிராமத்தின் வளத்தை அங்கே சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம். தவிர, இன்னொருவனைவிட நாம் நல்லமாதிரியாய் வேலை செய்யவேணும் என்ற ஊக்கம், தன் சரக்கைவிட தரமாய்க்கொண்டுவந்து வைத்த மற்றவனைப் பார்க்கும்போது, ஒருவனுக்கு உண்டாகுமாதலால், இப்படிப்பட்ட சந்தைகளைப் பரிபாலிப்பது லோகோபகாரமாகும். அனேக கிராமங்களில் சில வஸ்துக்கள் நன்றாயும் சகாயமாயும் செய்யப்படுகின்றன. ஆனால் இவைகளை விற்பனை செய்வதுதான் கஷ்டம். அங்கங்கே சந்தைகள் ஏற்பட்டு இன்னின்ன சந்தைகளில் இன்னின்ன சாமான்கள் வருகின்றனவென்று தெரிந்துவிட்டால் பலவிடங்களிலிருந்து வியாபாரிகள் வந்து அவரவர்களுக்குவேண்டிய சரக்குகளைப் பொறுக்கி வாங்கிக்கொண்டு போவார்கள். பண்டங்களைச் செய்த பல தொழிலாளிகளும், அந்தப்பண்டங்களை வாங்கவந்த பல வியாபாரிகளும், ஒரே இடத்தில் சேர்வதால் ஒருவருக்கு ஒருவர் போட்டி உண்டாகி வாங்குகிறவர்களுக்கும் விற்பனை செய்பவர்களுக்கும் கிரமமான விலை எப்பொழுதும் கிடைக்கும். மேலும், பட்டணங்களில் இருந்து சந்தைகளுக்கு சரக்குப்பிடிக்க வரும் வியாபாரிகள் வெறுமைவராமல் கிராம வாஸிகளுக்கு பிரயோசனமுள்ள சரக்குகளைக்கொண்டு வந்து சகாய விலைக்கு விற்பார்கள். கிராம வாஸிகள் பட்டணங்களில் வஸித்து அப்படிக்கு வஸிப்பவர்களுக்குண்டான கொசுகு, சாக்கடை முதலிய அசௌகரியங்களை அனுபவிக்காமல், பட்டண நாகரிக விஷயங்களைத் தெரிந்துகொள்ள சந்தைகள் மிகவும் உபயோகமாயிருக்கும். ஒவ்வொரு தேசத்திலும் விவஸாயம், கைத்தொழில் முதலியவைகளில் ஜனங்களை முன்னுக்குக்கொண்டு வரவேண்டும் என்ற நோக்கத்துடன், கவர்ன்மெண்டாரும் கனவான்களும் வெகு பணம் செலவிட்டுப் பொருட்காட்சி வைக்கிறார்கள். இப்படிக்கு இந்த வருஷம் கடைசியில் லாகூரில் நடக்கப்போகிற காட்சிக்கு பஞ்சாப் கவர்ன்மெண்டார் லக்ஷம் ரூபாய் கொடுக்கப்போகிறதாகக் கேள்வி. இதனால், பொருட்காட்சிகளால் நன்மையுண்டானால் ஒழிய இப்படிக் கெல்லாம் பணச்செலவு செய்யமாட்டார்கள் என்று நன்றாய் ஏற்படுகிறது. சந்தை யென்பது கிராமங்களின் பொருட்காட்சியல்லவா? ஆகையால் அங்கங்கே உள்ள கனவான்கள் இது விஷயமாய் முயற்சிசெய்து கூடிய மட்டில் சந்தைகளை ஏற்படுத்தி அவைகளை விருத்திசெய்தால் பேருபகாரமாகும்.

A MEETING IN IYAMPET.

**ஐயம்பேட்டையில் ஒரு மீட்டிங்.**—திவான் பகதூர் ரகுநாதராவ் அவர்கள் அக்கிராஸனம் வகித்து ஒரு கூட்டம் ஐயம்பேட்டையில் ஸமீபத்தில் நடந்தது. அதற்கு அநேக கிராமங்களிலிருந்து ஜனங்கள் விசேஷமாய் வந்திருந்தார்கள். வந்தவர்கள் குடித்தனக்காரர்கள். ஆனதால் விவஸாய சம்பந்தமான நாற்று பிடுங்கி நடுதல், ஜலாதாரம் முதலியவைகளைப்பற்றி சாதுர்யமாய்ப் பேசினார்கள். கடைசியில் அவர்களுக்குள்ள குறைகளை நீக்கிக் கொள்ளும் மார்க்கத்தை அக்கிராஸனாதிபதி தெரிவிக்கும்போது கவனமாய்க் கேட்டுக்கொண்டார்கள். சுமார் 4100 ஜனத்தொகையுள்ள ஒரு கிராமத்திற்கு மணியமாயிருந்த ஒரு மகமதியர் தன்னுடைய கிராமத்தில் குடிகள் கோர்ட்டுகளுக்குப் போகாமல் தங்களுக்குள்ளேயே பஞ்சாயத்து பேசி, விவகாரங்களைத் தீர்த்துக்கொள்ளுகிறார்களென்றும், சுகாதாரம், வீதிக்கு விளக்கு முதலிய விஷயங்களைத் தாங்களே பார்த்துக்கொள்வதாகவும் தெரிவித்தார். வேறொரு கிராமத்தில் பி. ஏ. பரீக்ஷை கொடுத்த பணியகாரர் ஒருவர் கூட்டத்திற்கு வந்திருந்தார். இப்படிக்குப் படித்தவர்கள், கிராம நிர்வாகிகளாயிருந்து, கிராமத்தார்களும் ஒன்று கூடி, ஸமுதாய வரும்படிகளைக் கிரமமாய் வசூலித்துச் செலவு செய்து, சாகுபடி செய்யும் காலங்களில் ஒருவன் வயலை வடியப்போட அண்டைவயல்காரன் ஜலம் கட்ட வாய்க்காலைத் திறக்காமல், எல்லாரும் ஏகோபித்துச் சாகுபடி செய்தால், ஒருவரும் நஷ்டப்படாமல் ஸகலரும் க்ஷேமத்தை அடையலாம்.



## THE TEXTILE INDUSTRY.
## நெசவு தொழில்.

MR. L. K. TULASI RAM.

**எல். கே. துளஸி ராமய்யர்.**—ஐரோப்பாவின் கைத்தொழில் யந்திர அபிவிர்த்தி விஷயங்கள் என்ன, தென்னிந்தியாவில் உள்ள நமது ஸௌராஷ்டிர வகுப்பாருக்கும் மற்ற கைத்தொழிலாளிகளுக்கும் உபயோகமாகும்படியான யந்திரங்கள் என்ன, லாபகரமான சிறுதொழில்கள் என்ன, ஆங்கிலேயர், பிராஞ்சியர், ஜெர்மானியர்முதலிய தேசத்தார்கள் மேன்மேலும் முன்னுக்கு வர, நம்மிந்தியர் ஒரே ஸ்திதியில் இருக்கும்படி நேர்ந்த காரணங்கள் என்ன, என்கிற இவைகளை எல்லாம் அறியவேண்டுமென்ற நோக்கத்துடன் ஸௌராஷ்டிர வகுப்பில் பிரமுகரான எல். கெ. துளஸிராம் என்பவர் இங்கிலாந்துக்கு புறப்பட்டுப்போயிருக்கிறார். கைத்தறிகளை வைத்துக்கொண்டு 'பவர் லூம்' என்று சொல்லப்பட்ட விசைத்தறிகளுடன் போட்டிக்குப் போக நினைப்பது, பழைய மாட்டுவண்டியானது, ரயில் வண்டியைப் போல வேகமாய் ஓட முயற்சிப்பது போலாகும். கைத்தறியில் பலவிதமான சித்திரவேலைப்பாடு அமைந்த சேலைகள், பட்டு ஆடைகள், ரவிக்கைகள், படுதாக்கள், மேசைவிரிப்புகள், கைக்குட்டைகள் முதலியவைகளை இலகுவாய்ச் செய்யும்படியான "ஜாக்கார்டு" தறிகள் என்றும், "டாப்பித்" தறிகள் என்றும் பெயருள்ள தறிகள் முக்கியமாய் இங்கிலாந்தில் பிராட்போர்ட், லீட்ஸ் முதலிய பட்டணங்களில் இருக்கின்றனவாம். அவைகளில் சீமை ஜரிகை, நாட்டு ஜரிகை முதலியவைகள் போட்டுக் கொடி, செடிகள், அன்னம், மயில், மீன், யானை, சிங்கம், மான் முதலிய உருவங்கள், அஷ்டகோணம், ருத்திராக்ஷக்கரை முதலிய வேலையினங்கள் செய்து, நாணயமான நூறு, நூற்றைம்பது, இருநூறு முதலிய உயர்ந்த நம்பர் நூல்களில், ஜரிகை துப்பட்டாக்கள், சேலைகள் முதலியவைகளைத் தயாரித்து, ஐரோப்பிய வர்த்தகர்களுக்கு ஏற்றுமதி செய்யவேண்டுமென்பதே அவருடைய நோக்கங்களில் முதலாவது.

இரண்டாவது, 20 நம்பர், 30 நம்பர் முதலிய சாதாரண நூல்களையும், 40 நம்பர் முதல் 200 நம்பர் வரையில் நாணய நூல்களையும், வெளுத்தல், மெருகேற்றல், சாயமேற்றல், நாணயப்படுத்தல், சிவப்பு, மஞ்சள், பழுக்கா, நீலம் முதலிய சாயங்களைப் போடுவதற்காக, நேர்த்தியான யந்திரங்களை வரவழைத்து, நூதனமான ஆலைகளை அமைத்து சாயம்போடுதல், ஜவுளிகளில் சீட்டுத் துணிகளைப் போல அச்சிடுதல் முதலியதொழில்களைத் தென்னிந்தியாவில் ஏற்படுத்துவது.

மூன்றாவது, பிரான்சு தேசத்திலிருந்து ஏராளமாய்ச் சென்னைக்கு வந்து இறக்குமதியாகின்ற சீமை ஜரிகைகளை இந்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்காக ஜரிகை வேலைச்சாலைகளை வைத்து நடத்துவது.

THE MADURA INDUSTRIAL ASSOCIATION.

**மதுரை கைத்தொழில் ஸங்கம்.**—இந்த சங்கத்தாரின் நன்முயற்சியால் கைத்தறி நெசவுத்தொழிலை விருத்தி செய்வதற்காக மதுரையில் ஒரு நெசவு தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நவீனமாய்ச் சீர்திருத்தம் பெற்ற நெசவுத்தொழில் கருவிகளும் கைத்தறிகளும் இத்தொழிற் சாலையில் அமைக்கப்பட்டிருக்கின்றனவாம். நெசவுதொழிலைக் கற்றுக் கொள்வதற்காக வாலிபர்கள் எந்த ஜாதியாகவாவது எந்த மதமாகவாவது இருந்தபோதிலும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இந்த சங்கத்தின் மூலதனம் 20,000 ரூ. பங்கு ஒன்றுக்குப் பத்து ரூ வீதம் 2000 பங்குகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது.

A NEW LOOM.

**ஒரு புதுத்தறி.**—ஹர்டியாணவிலிருக்கும் அக்பர் ஆலி என்ற ஓர் மகமதியர் ஓர் புதிதான நெசவுத்தறியைக் கண்டுபிடித்திருக்கிறார். அதில் சில பாகங்கள் ஆட்டுரோமங்களினாலும், சில பாகங்கள் இரும்பினாலும் செய்யப் பட்டிருக்கின்றன. அந்தத் தறி 14-வயதுச் சிறுமி கூட ஒருநாள் முழுதும் கொஞ்சமேனும் களைப்பின்றி வேலைசெய்யக் கூடியபடி அவ்வளவு சுலபமாயிருக்கிறதாம்.

ALUM.

**படிக்காரம்.**—படிக்காரம் சாயம் போடுவதில் மஞ்சளோடு சேர்ந்து விசேஷமாய் உபயோகப்படுகிறது.

## THE GROCERY TRADE.

## பலசரக்கு வியாபாரம்.

---

GHEE.

**நெய்.**—கொஞ்சகாலமாய் நெய் விலை தூக்கிவிற்பது ஸகலருக்கும் தெரிந்த விஷயம். இதற்கு ஜனங்கள் என்ன செய்யலாம், ஸர்க்கார் என்ன செய்யலாம், என்று யோசிக்க இந்த வருஷக் கடைசியில் லக்னோவில் ஒரு கூட்டம் கூடப்போகிறதென்று மார்ச்சிமாத ஸஞ்சிகையில் சொல்லியிருக்கிறோம். நெய் விலை ஏறினதால் ‘அப்படம்’ (சுத்தமான) நெய்யோடு பலவிதக் கொழுப்புகளை வியாபாரிகள் கலந்து விற்பனை செய்கிறார்கள். நல்ல நெய் என்பதே இப்பொழுது கிடைப்பது அரிதாயிருக்கிறது. நெய்யின் நாற்றத்துக்குப் பயந்து அநேகர் எண்ணெயை உபயோகித்து வருகிறார்கள். நெய், எண்ணெய், போன்ற பசை வஸ்துக்கள் ஆகாரத்தில் சேரவேண்டியது அவசியம். ஆனால் சிலருக்கு எண்ணெய் பிடிக்காது. ஆகையால் இப்பொழுது உபயோகப்படும் நல்லெண்ணெய் தேங்காயெண்ணெய் இவைகளைப்போல் அவ்வளவு வாசனை, தூக்கல் இல்லாமல் உடம்புக்கும் சாப்பாட்டுக்கும் ஸௌகரியமான எண்ணெய் ஏற்பட்டால் அது நன்றாய் எங்கும் பரவி வாங்கப்படும் என்பதில் சந்தேகமில்லை.

COTTON SEED OIL.

**பருத்திக் கொட்டை நெய்.**—மேலேசொல்லிய குணங்களை உடைய எண்ணெய் பருத்திக் கொட்டையில் இருந்து எடுக்கப்படுகிறது. இதைப் பருத்திக் கொட்டை நெய் என்று சொல்லுகிறார்கள். இது அமெரிக்கா தேசத்தில் விசேஷமாய் சமையலுக்கு உபயோகப்படுவதோடுகூட, ஸோப்பு செய்யவும் உபயோகப்பட்டுவருகிறது. ஆகையால் இந்த நெய்யில் நல்ல லாபம் கிடைக்கும் என்று எண்ணி யம்பாயில் சில முதலாளிகள் ஒரு ஆலை வைத்து பருத்திக்கொட்டை நெய் உற்பத்தி செய்யப்போகிறார்களாம்.

A COTTON SEED OIL DEPOT IN MADRAS.

**மதராஸில் ஒரு பருத்திக்கொட்டை நெய் டிப்போ.**—இந்தப்பருத்திக்கொட்டை நெய் சென்னப்பட்டணம் முத்தியாலுபேட்டை மண்ணடி வீதி 66-வது நெம்பர் கட்டிடத்தில் கா. மாணிக்க முதலியார் கம்பெனியார் ஸ்தாபித்திருக்கும் டிப்போவில் விற்கப்படுகிறது. இதுவுமல்லாமல், ஜனங்களின் சௌகரியத்திற்காக வண்டிகளில் போட்டு ஆட்கள் மூலமாய்த் தெருக்களிலும் விற்கப்படுகிறது.

SOAP SELLING.

**ஸோப்பு விற்பனை.**—மார்ச்சு மாதத்து ஸஞ்சிகையில் வியாபாரக் குறிப்புகளில் ஸோப்பு வியாபாரத்தைப்பற்றி எழுதும்போது ஸன்லைட் ஸோப்பு செய்யும் லீவர் பிரதர்ஸ் கம்பெனியார் தங்கள் ஸோப்பை பிரபலப்படுத்த அஞ்சாமல் பல பிரசாரங்கள் செய்தார்கள் என்று சொல்லியிருக்கிறோம். இந்தக் கம்பெனியார் இங்கிலாந்தில் பிளாக்பரன் ஜில்லாவில் சில பேர்களை நியமித்து வீடுவீடாய்ப் போய் தங்கள் ஸோப்புகளை விற்கும்படி செய்திருக்கிறார்களாம். இப்படிக்குச் செய்தால் அவர்களுடைய ஸோப்பு விற்பனையாவதற்குக் கேட்பானேன்?

GROCERS' ASSOCIATION.

**பலசரக்கு வியாபாரிகள் சங்கம்.**—மேலே சொல்லிய பிளாக்பரன் ஜில்லாவில் பலசரக்கு வியாபாரிகளின் சங்கம் ஒன்று இருக்கிறது. ஸோப்பை வீடுவீடாய்க் கொண்டுபோய் உற்பத்தி செய்பவர்களே விற்றால், அவர்களிடத்தில் வாங்கி விற்கும் சில்லரை வியாபாரிகள் வியாபாரம் போய்விடும் என்று ஷை சங்கத்தார்கள் கூடி ஒரு கடிதம் லீவர் பிரதர்ஸ் கம்பெனிக்கு எழுதினார்களாம். அதற்குத் தங்கள் ஸோப்புகள் பிரபலமானதும் சில்லரை வியாபாரத்தை விட்டுவிடுவதாக லீவர் பிரதர்ஸ் பதில் எழுதினார்கள். இதை பலசரக்கு வியாபார சங்கத்தார் ஒப்பவில்லை. ஆகையால் லீவர் பிரதர்ஸ் வீடுவீடாய்ப் போய் விற்பதை நிறுத்திவிடுவார்கள் என்று சொல்லப்படுகிறது. இப்படிக்கு நிறுத்திவிடும் பட்சத்தில் அது பலசரக்கு வியாபாரிகள் சங்கமாகச் சேர்ந்து செய்த முயற்சியினால் என்றே சொல்லவேண்டும். இதனால் வியாபார சங்கங்கள் ஏற்படுத்தி வியாபார விஷயமாய் நேரிடும் தொந்தரைகளை நிவர்த்தித்துக்கொள்வது எல்லாருக்கும் லாபமாகும் என்று தெரிகிறது. இது விஷயமாய் ஜனவரி மாதத்து ஸஞ்சிகையில் விவரித்து எழுதியிருக்கிறோம்.

---



## REVENUE NOTES.

## ரெவெனியூக் குறிப்புகள்.

---

REFUND OF EXCESS COLLECTIONS.

**அதிக வசூலை ரீபண்டு செய்தல்.**—திருப்பிக்கொடுக்கமுடியாதவும் அடுத்த வாயிதாவுக்குத் தண்டல் வைத்துக்கொள்ள முடியாதவுமாயிருக்கிற அதிக வசூல் பணத்தை ரீபண்டு கிடைக்கவேண்டியவர்களுக்கு போஸ்டல் மணி ஆர்டர் மூலியமாயும், போஸ்டு கார்டு மூலியமாய் நோட்டீஸ் அனுப்பியும், ரீபண்டு செய்யவேணும் என்கிற ஏற்பாட்டை குறிப்பிட்ட சில இடங்களில் பரீக்ஷார்த்தமாக அனுஷ்டித்து வருவதற்காக ரிவினியூ போர்டார் அவர்களால் செய்யப்பட்ட ஆலோசனை காரியத்தை கவர்ன்மெண்டார் அவர்கள் 1908௵ மார்ச்சு௴ 9௳யில் 670 ந. உத்தரவில் அங்கீகாரம் செய்திருக்கிறார்கள். தஞ்சாவூர் ஜில்லா சம்பந்தப்பட்டவரையில் இந்த ஏற்பாடானது ஒரு வருஷத்திற்குப் பரீக்ஷார்த்தமாக, கும்பகோணம், நாகப்பட்டணம் தாலூகாக்களில் அனுஷ்டிக்கப்படும். இந்த ஏற்பாடு நீடித்திருப்பதும் இந்த ஜில்லாவின் மைத்த பாகங்களில் அதை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதும், இந்த ஒருவருஷத்திற்குள் ஏற்படும் அதன் பிரயோஜனத்தைப் பொருத்ததாக இருக்குமாம்.

ASSISTANT KARNAMS.

**அசிஸ்டாண்டு கர்ணன்கள்.**—ப்ரொப்ரைட்டரி எஸ்டேட்டுகளில் உள்ள அசிஸ்டாண்டு கர்ணன்கள் கிராம அக்கவுண்டாண்டுகள் என்றும், ஆனதால் 1894௵ II-வது ஆக்டு 2-வது பிரிவில் கண்ட உத்தியோகஸ்தர்களுடைய வகுப்பில் சேர்ந்தவர்கள் என்றும், ரிவினியூ போர்டார் அவர்கள் அபிப்பிராயப்பட்டபடி கவர்ன்மெண்டார் அவர்களும் 1909௵ பிப்ரவரி௴ 25௳யுள்ள ந. 529-ரிவினியூ மிஸிலேனியஸ் உத்தரவில் தீர்மானித்திருக்கிறார்கள். ஆனதால் ஷை ஆக்டின் நிபந்தனைகள் இவர்களுக்கும் உபயோகிக்கப்படும்.

2. ப்ரொப்ரைட்டரி எஸ்டேட்டுகளில் ஒன்றாக சேர்க்கப்பட்டிருக்கும் கிராமங்களின், அல்லது 1894௵ II-வது ஆக்டு 15 (I)-வது பிரிவுப்படி பிரிக்கப்பட்டிருக்கும் கிராமத்து அக்கவுண்டாண்டுகளின் உத்தியோகங்கள் வார்சு பாத்தியமுள்ளவையாகுமானால் ஷை எஸ்டேட்டுகளில் அசிஸ்டாண்டு கர்ணனுடைய உத்தியோகமும் வார்சு பாத்தியமுள்ளதாகும்.

15 (I) வது பிரிவின் கீழ் சேராத கேசுகளில் அசிஸ்டாண்டு கர்ணன் உத்தியோகம் புதிய வேலையாகும்; ஆனதால் வார்சு பாத்தியம் விதி இதற்கு உபயோகப்படுத்தக்கூடாது.

MISSING THEODOLITE STONES.

**காணமற்போன தியாட்லைட் கற்கள்.**—காணமற்போன “தியாட்லைட்” கற்களை முதல் முதலில் கர்ணன் தன்னுடைய பீல்டுமெஷர்மெண்டு புஸ்தகத்தில் தாகல் செய்திருக்கிற அளவுகளைக்கொண்டு புதைக்கவேண்டும். அப்படி புதைக்கப்பட்ட கல் கேதுக்கல்லாகவும் இருக்கலாம்; அல்லது ஒரு குண்டான்கல்லாகவும் இருக்கலாம். ஆனால் புதைக்கப்பட்ட அந்த கல்லைப்பார்த்தால் சர்வே கல்லாகப் புதைக்கப்பட்டதென்று தோன்றவேண்டும். பீல்டு புஸ்தகத்தில் தாகல் செய்திருக்கிற அளவுகளைக் கொண்டு கண்டுபிடித்த அந்த தியாட்லைட் ஸ்டேஷனுடைய இடத்தின் அருகாமையில் காணமற்போன கல் புதைக்கப்பட்ட அடையாளமிருக்குமாகில், தற்காலத்திற்காக கர்ணனால் மேலேகுறித்தபடி புதைக்கப்பட்ட கல்லை அந்தப் பழைய தியாட்லைட் கல்லின் அடையாள இடத்திலேயே புதைக்கவேண்டும். அப்படி புதைத்த பிறகு அந்த இடத்திற்கு சமீபத்தில் பூமியில் ஆஜருள்ள ஏதாவது நான்கு சர்வே கேதுக் கற்களிலிருந்து அளவுகள் அளக்கவேண்டும். அப்படிக்கு எடுத்த நான்கு அளவுகளையும் கர்ணன் ஒரு ஸ்கெச்சில் தாகல் செய்து லாண்டு ரிகார்டு இன்ஸ்பெக்டருக்கு அனுப்பவேண்டும் இதைத்தவிர மேலே கண்டபிரகாரம் புதைக்கப்பட்ட கல்லுக்கும் அந்த கல்லுக்கு இருபுறமும்உள்ள தியாட்லைட் கற்களுக்கும் போகும் லயன்களை சப்பாத்தி முதலான ஒருவித இடஞ்சல்களன்னியில் சுத்தம் செய்து வைக்கவேண்டும். அப்படி இடஞ்சல்கள் இராமல் சுத்தம் செய்தால்தான் லாண்டுரிகார்டு இன்ஸ்பெக்டர் அல்லது லாண்டுரிகார்டு தாசில்தார், கோணத்தின் அளவை கண்டுபிடிக்கவும் சங்கிலியால் அளக்கவும் சௌகரியமாக இருக்கும்.

# LEGAL NOTES.

## சட்டக் குறிப்புகள்.

GIFT TO A SISTER.

**ஸகோதரிக்குக் கொடுத்த ஆஸ்தி.**—ஏழையாயிருக்கும் தன் உடன் பிறந்தாளுக்கு பிதுரார்ஜித ஆஸ்தியிலிருந்து சில நிலம் தானமாய் உடன் பிறந்தான் கொடுக்கலாம் என்றும், அந்தத் தானத்தைப் பற்றி தானம் கொடுத்தவனாவது அவனுடைய குமாரனாவது பிற்பாடு ஆக்ஷேபம் செய்யக்கூடாதென்றும் மதராஸ் ஹைகோர்ட்டார் கடந்த நவம்பர் மாசத்தில் ஒரு தீர்ப்பு செய்திருக்கிறார்கள்.

UNSTAMPED MEASURES.

**முத்திரை போடாத படிகள்.**—தயிர் விற்றவன் ஒருவன் முத்திரை போடாத படியால் விற்றான்; இது குற்றமா? முத்திரை யில்லாவிட்டாலும் அளவு சரியாயிருந்தால் குற்றமில்லையென்றும், சரியாயில்லாவிட்டால் குற்றமென்றும் மதராஸ் ஹைகோர்ட்டார் ஒரு உத்தரவு செய்திருக்கிறார்கள்.

A VALUE-PAYABLE CASE.

**ஒரு வி. பி. கேஸ்.**—இந்தியாவில் சில சாமான்களை தபாலாபீஸ் வி. பி. மூலமாக விற்பனைசெய்யலாம் என்று ஒரு ரூல் ஏற்பட்டிருக்கிறது. விலாஸதார் தபாலாபீஸில் தொகையைச் செலுத்தி வியாபாரி அனுப்பிய சாமானைப்பெற்றுக்கொள்ள வேண்டியது, என்பது வி. பி. யின் கருத்து. வியாபாரி வி. பி. அனுப்பும்போது "நான் அனுப்பும் சாமான் சரியான உத்தரவு அல்லது வேண்டு கோளின் படியே அனுப்புகிறேன்" என்று சொல்லி ஒரு அச்சிட்ட பாரத்தில் கையெழுத்துப்போட்டு ஸாமான் ஸஹிதம் தபாலாபீஸில் கொடுத்துவிட்டால் தபாலாபீஸ்காரர்கள் விலாசதாரருக்கு ஸாமானை அனுப்பி அவரிடம் தொகையை வசூலித்துக்கொண்டு ஸாமானை கொடுத்துவிடுவார்கள். இப்படி வசூலான பணத்தையும் ஸாமான் அனுப்பினவரிடம் சேர்ப்பித்து விடுவார்கள்.

ஐக்கியமாகாணங்களில் நைநிடால் என்ற ஊரிலிருந்த ஒரு ஸ்திரீ பாரிலி என்ற ஊரிலிருந்த தையல்காரன் ஒருவனுக்கு நாற்பது ரூபாய்க்கு சில உடுப்புகள் அனுப்பும்படி எழுதினாள். அவள் உத்தரவுப்படி உடுப்புகளைத் தைத்து அவைகளை தையல்காரன் வி. பி. மூலமாய் அனுப்பினான். அந்த ஸ்திரீ அவைகளைத் தான் வி. பி. மார்க்கமாய் அனுப்பச் சொல்லவில்லை என்று தபால் ஆபீஸுக்குஎழுதினாள். அதின்மேல் தபாலாபீஸ்காரர் தபாலாபீஸ் ஆக்டுப்படி ஸாமானை அனுப்பின தையல்காரன்மேல் கேஸ் நடத்தினார்கள். மாஜிஸ்திரேட்டார் தையல்காரனைக் குற்றவாளியாய்த் தீர்மானித்து அவனுக்கு அபராதம் விதித்தார். இதன்மேல் அப்பீல் நடந்தது. வி. பி. மூலமாய் அனுப்பச் சொல்லி அந்த ஸ்திரீ உத்தரவு செய்யவில்லை. ஆகையால் ஸாமான் அனுப்பும்போது தையல்காரன் போஸ்டாபீஸில் உறுதி மொழி செய்தது அசத்தியமாகும் என்பது வாதி தரப்புவாதம். இதற்கு டிபென்ஸாக, தையல்காரன், தான் எழுதிவைத்தது பொய் அல்லவென்றும், முதலில் நம்பி ஸாமானை அனுப்பி பின்னால் பணம் பெற்றுக் கொள்வதும், அல்லது, வி. பி. மூலமாய் அனுப்பி பணத்தை வசூல்செய்துகொள்வதும் தன் இஷ்டத்தைப் பொறுத்ததென்றும், ஆகையால் தன் இஷ்டப்படி வி. பி. அனுப்பினது தவறுதல் இல்லையென்றும் சொன்னான். தையல்காரன் செய்தது குற்றமாகமாட்டாது என்று அலஹபாத் ஹைகோர்ட்டார் தீர்மானித்து அபராதத்தை ரத்து செய்திருக்கிறார்கள். இந்தக் கேஸை முக்கியமாய் வியாபாரிகள் கவனிக்கவேணும்.

CHIT FUND CONTRACT.

**கூட்டுச் சீட்டு உடன்படிக்கை.**-கூட்டுச் சீட்டுப்போடும்விஷயத்தில் ஒரு விவகாரம் சென்னை ஹைகோர்ட்டுக்கு வந்து சமீபத்தில் தீர்ப்பாயிற்று. இரண்டு பேர்முன்னின்று வேலைசெய்து தங்கள் இருவர் உத்திரவாதத்தின்பேரில் கூட்டுச் சீட்டு போட்டார்கள். அவர்களுள் ஒருவர் கொஞ்சநாளைக்குப் பிறகு தனக்குக் கூட்டுச் சீட்டு விஷயமாயுள்ள சகல பாத்தியதைகளையும் தன் கூட்டாளிக்குக் கொடுத்துவிட்டேனென்றும், தான் விட்ட தேதி முதல் கூட்டுச்சீட்டு விஷயமாய் ஏற்படும் லாப நஷ்டங்களுக்கு பாத்தியப்படமாட்டேன் என்றும், மற்ற சீட்டுக்காரர்களுக்குத் தெரிவித்து விட்டார். அப்படி தெரிவித்தவுடன் இதர சீட்டுக்காரர்கள் இரண்டுபேரிருந்த இடத்தில் தனியே ஒருவன் மாத்திரம் போடும் சீட்டில் முன்போல பணம் போட இஷ்டமிருந்தால் போடலாமென்றும், இல்லாவிட்டால் தங்கள் சீட்டை ரத்து செய்து கொள்ளலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது.—19 மதராஸ் லா ஜர்னல் 28-ம் பக்கம்.




**Oakes & Co., Ltd.,**

9, Broadway, MADRAS.

—(o)—

அடியில்கண்ட சாமான்கள் எங்களிடத்தில் அகப்படும்.

(1) விவசாயத்திற்கு வேண்டிய யந்திரங்கள்,

(2) மனிதர்களாலும், மாடுகளாலும் வேலை செய்யக்கூடிய தண்ணீர் பாய்ச்சும் பம்புகள்,

(3) நீராவியாலும் வேறு எந்த சக்தியாலும் வேலை செய்யக்கூடிய எல்லாவித தொழிலுக்கும் வேண்டிய யந்திரங்கள்,

(4) தச்சு வேலைக்கு வேண்டிய உளி, வாச்சி முதலிய சாமான்கள்,

(5) பலவித பெயிண்டுகள், எண்ணெய்கள், வார்னீஷுகள், புருஷுகள்,

(6) வியாபாரிகளுக்கு வேண்டிய நிறுக்கும் யந்திரங்கள், ஸேப்கள், பணம் வைக்க இரும்புப் பெட்டிகள், பூட்டுகள்,

(7) விவசாயிகளும், குடித்தனக்காரர்களும் உடைக்கவும், அரைக்கவும் வேண்டிய யந்திரங்கள்,

(8) கம்பி வேலிகள், இரும்பு மாடிப்படிகள், வீடு கட்டுவதற்கு வேண்டிய இரும்புச் சாமான்கள்,

இன்னும் எது வேணுமானாலும் எழுதியனுப்பினால் அனுப்பத் தயாராய் இருக்கிறோம். காட்டலாக் அனுப்பப்படும்.

ஒக்ஸ் அண்டு கம்பெனி,

9, பிராட்வே, சென்னப்பட்டணம்.

## EDUCATIONAL NOTES.
## வித்தியாவிஷயக் குறிப்புகள்.

A Free Institution.

**சம்பளம் இல்லாத பள்ளிக்கூடம்.**—சென்ற ஏப்ரல் மாதத்து ஸஞ்சிகையில் பஞ்சமர்களின் நிலைமையை சீர்திருத்த வேணும் என்ற நோக்கத்துடன் பம்பாயில் ஒரு சங்கம் ஏற்பட்டிருப்பதாகச் சொன்னோம். அதைப்போலவே சென்னப்பட்டணம் ஜார்ஜ் டவுன் சைவமுத்தைய முதலி தெரு 15 நெ. வீட்டில் பஞ்சமர்களுக்கு இனமாக படிப்பு சொல்லிக் கொடுப்பதற்காக ஒரு பள்ளிக்கூடம் ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பள்ளிக்கூடத்தில் வாரத்திற்கு ஒரு நாள் விடுமுறை. மற்ற நாட்களில் காலை 6 மணிமுதல் 8 மணி வரையிலும், ஸாயந்திரம் 6 மணிமுதல் 9 மணிவரையிலும், படிப்பு சொல்லிக்கொடுக்கிறார்கள். இந்தப் பள்ளிக்கூடம் சென்ற பிப்ரவரிமாதம் முதல்தேதி ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது சுமார் 42 பிள்ளைகளும் 17 பெண்களும் படிக்கிறார்கள்.

இந்த ஸ்கூலில் படிப்பு சொல்லிக் கொடுக்கும் உபாத்தியாயர்கள் எல்லாரும் சம்பளம் அன்னியில் பொதுநன்மைக்கே உழைத்துவருகிறார்கள். படிக்கும் பிள்ளைகளும் பெண்களும் தாழ்ந்த ஜாதியானவர்கள். ஆதலால், அவர்கள் துணிகள் கேவலமாயும் அழுக்காயும் இருப்பதால், அவர்களுக்கு நல்லதுணிகள் கொடுக்கவும் அழுக்கில்லாமல் அவைகளை தோய்க்கவும் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் பண உதவிதேவை. தர்மசிந்தையுள்ள கனவான்கள் ஏதேனும் பணம்அனுப்புவதானால் சென்னபட்டணம் ஸ்டாம்பு ஆபீஸில் உத்தியோகமாயிருக்கும் எல். முத்து சுப்பா சாஸ்திரிகள், பி. ஏ., அவர்களுக்கு அனுப்பினால் அவர் வந்தனத்துடன் பெற்றுக் கொண்டு ரசீது கொடுப்பார்.

Travelling Allowances.

**பிரயாணப்படி.**—சென்னை ராஜதானியிலுள்ள எலிமெண்டெரி ஸ்கூல்களின் ஸூபர்வைஸர்களுக்குப் பின்வருமாறு சாசுவதமான மாதாந்தப் பிரயாணப்படி கொடுக்கும்படி இந்தியா கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள் :—'வடஸர்க்காரைச் சேர்ந்த மலைப்பிராந்தியங்களிலிருக்கும் எலிமெண்டெரி ஸ்கூல் ஸூபர்வைஸர்களுக்கு ரூ. 25. (2) மலையாளம், தென்கன்னடம், வட கோயம்புத்தூர் ஆகிய இந்த ஜில்லாக்களில் இருக்கும் ஸூபர்வைஸர்களுக்கு ரூ. 18-12-0 (3) மேற்சொன்ன ஜில்லாக்கள் அல்லாத ராஜதானியின் மற்ற விடங்களிலிருக்கும் ஸூபர்வைஸர்களுக்கு ரூ 12-8-0.

The Cocanada College.

**காகிநாடா காலேஜ்.**—கோதாவரி ஜில்லாவில் காகிநாடா பட்டணத்தில் உள்ள காலேஜுக்கு பித்தாபுரம் ஜமீன்தார் அவர்கள் இரண்டு லக்ஷம்ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறார். இந்த நன்கொடைக்காக மே மாஸம் 2 தேதி அந்த ஊர்க்காரர்கள் எல்லாரும் மீட்டிங் கூடி ஜமீன்தார் அவர்களுக்கு வந்தனம் அளித்தார்கள்.

A Liberal Donation.

**ஓர் உதார நன்கொடை.**—"ஈவது விலக்கேல்" என்ற முதுமொழியைக் கனவிலும் மறவாத ஸர் ஜேகப் ஸஸ்ஸூன் டேவிட் என்னும் பம்பாய்த் தனிகர் ஒருவர், அந்தப்பட்டணத்தில் ஸ்தாபிப்பதாயிருக்கும் வியாபாரக் கலாசாலைக்கு இரண்டு லக்ஷ ரூபாய் நன்கொடை கொடுத்திருப்பதாய்த் தெரியவருகிறது.

Instruction in Government Factories, &c.

**ஸர்க்கார் பட்டடைகளிற் பழகுவது.**—கவர்ன்மெண்டார் மட்டில் ஜனங்களுக்கு பிழைக்கும் வழிகளைக்கற்றுக் கொடுக்கவேண்டும் என்று மனசுவைத்தால் அதை எவ்வளவோ விதமாய் ஜாஸ்தி செலவன்னியில் செய்யலாம். கைத்தொழில்கள் கற்றுக்கொள்கிறவர்களுக்கு ரெயில்வே வர்க்ஷாப்புக்களும், ஸர்க்கார் விசாரணையிலிருக்கிற கப்பல் துறைகளும், குதிரைச்சேணிகள் செய்யும் பட்டடைகளும், அச்சாபீசுகளும், கன்காரேஜ் பாக்டரிகளும் (பீரங்கிவண்டிகள் முதலியன செய்யும் பட்டடைகளும்), இன்னும் இருக்கிற ஸர்க்கார் பட்டடைகளும் நல்ல இடங்கள். அந்தந்தப் பட்டடையின் தலைவருக்கு எழுதி அவரவர்கள் தங்களுடைய பட்டடையில் எத்தனை கற்றுக்குட்டிகளுக்கு வேலை பழக்கக் கூடுமென்பதை கவர்ன்மெண்டார் தெரிந்து கொண்டு அங்கங்கே ஆள்களையனுப்பி அவர்களுக்கு வேலை கற்றுக்கொடுக்கலாம். இப்படி கற்றுக்கொள்கிறவர்களை அந்தந்தத் தொழிலில் கவர்ன்மெண்டு பரீக்ஷைகளுக்குச் சித்தப்படுத்த வேண்டுமென்று பட்டடைத்தலைவருக்குப் பொறுப்புக்கட்டலாம்.



**THE PRESIDENCY MANURE WORKS, LIMITED, RANIPET.**

**Managing Agents—PARRY & CO., MADRAS.**

**ராஜதானி ரஸாயந உரக்கிடங்கு,**

**ராணிப்பேட்டை.**

பயிர்களும் பிராணிகளைப்போலவே உணவால் ஜீவிக்கின்றன. நல்ல சத்துள்ள ஆகாரங்களினால் பிராணிகள் புஷ்டியாய் வளர்வதுபோலவே, பயிர்களும் நல்ல சத்துள்ள உரங்களால் செழிப்பாய் வளர்கின்றன. இப்பயிருணவு சத்துக்கள் பெரும்பான்மையும் மண்ணிலிருந்தே கிரகிக்கப்படுகின்றன. ஓயாமல் பயிர் செய்து வருவதினால் நிலவளம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது. சத்துக் குறையக்குறைய பயிர் நன்றாய் வளருவதில்லை. நிலத்தின் மண்ணை ஓர் பயிர் செய்வதற்கு முந்தியும் பிந்தியும் ரஸாயன முறைப்படி பரிசோதித்துப் பார்த்தால் இவ்வளவு சத்து எடுபடுகிறதென்று தெரிகிறது. இவ்வாறு எடுபடுகிற பயிருணவு சத்துக்களில் **நைட்ரஜன்** (Nitrogen), **பாஸ்பாரிக் ஆஸிட்** (Phosphoric acid), **பொடாஷ்** (Potash), இம்மூன்றுந்தான் முக்கியமானவைகளென்று வியவஸாய ரஸாயன சாஸ்திர நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆதலால் மேற்கூறிய மூன்றுந்தான் பயிரிடுவதற்காக போடுகிற உரங்களிலிருக்கவேண்டிய முக்கிய சத்துக்கள். சில பயிர்களுக்கு நிலத்தில் **சுண்ணாம்பு** (Lime) ம் அவசியம். சுமாரான நெல் சாகுபடியால் ஒரு ஏகரா நிலத்திலிருந்து 40 ராத்தல் நைட்ரஜனும், 25 ராத்தல் பாஸ்பாரிக் ஆஸிட்டும், 46 ராத்தல் பொடாஷூம் எடுபடுகிறதாக ஒருவர் கணக்கிட்டிருக்கிறார். மேற்கூறிய சத்துக்களின் அளவு பயிருக்குத் தக்கபடி வித்தியாசப்படுகிறது. அதாவது சில பயிர்களுக்கு நைட்ரஜன் அதிகமாகவும், சில பயிர்களுக்கு பாஸ்பாரிக் ஆஸிட் அதிகமாகவும் வேறுசில பயிர்களுக்கு பொடாஷ் அதிகமாகவும் தேவையாயிருக்கிறது. பயிர்களாலெடுபடுகிறது தவிர நிலத்திலுண்டாகிற புல் பூண்டு முதலியவைகளாலும், நீர்ப் பெருக்கினாலும் சேதமாகிற சத்துகளும் அதிகம். இவைகளுக்கெல்லாம் தக்கபடி போதுமான அளவு சத்துள்ள உரங்களை உபயோகித்தால்தான் சாகுபடி லாபகரமாயிருக்கும். எங்கள் பூரா உரங்கள் நிலத்திற்கு செழுமை கொடுக்க போதுமான சத்துள்ளவைகளென்றும், ஒவ்வொரு அறுவடையிலும் நிலத்திற்கு உண்டாகிற பயிருணவு நஷ்டத்தை நிவர்த்திப்பதற்கு பிரயோஜனமானவைகளென்றும் வியவஸாய சாஸ்திரிகளாலும் அதில் திடமான அனுபோகமுள்ளவர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

மானேஜிங் ஏஜண்டு:—

பாரி அண்டு கம்பெனி,

மதராஸ்.

## SCIENTIFIC NOTES.
## சாஸ்திரீயக் குறிப்புகள்.

MEMORY OF HENS.

**பெட்டைக் கோழிகளின் ஞாபகசக்தி.**—ஜெர்மனி தேசத்தில் இரண்டு மனோதத்துவ சாஸ்திரிகள் பெட்டைக்கோழிகளின் ஞாபக சக்தியைப் பரீக்ஷித்தறிய விரும்பினார்கள். ஒரு அட்டையில் இருபது அரிசியைக் கோந்தினால் ஒட்டிவைத்துவிட்டுப் பிறகு பத்து கோதுமையை அதன் இடையே தூவினார்கள். பெட்டைக் கோழிகளிடம் அந்த அட்டையைத்தள்ளவும், அவைகள் முதலில் அரிசி கோதுமை இரண்டையும் வித்தியாசமில்லாமல் கொத்திக் கொத்திப்பார்த்தன. இப்படி மூன்று நான்கு தடவை ஆகாரம் போட்ட பிறகு தான் அரிசிவாதென்றுதெரிந்து அதைவிட்டுவிட்டுக் கோதுமையை மாத்திரம் பொறுக்கினவாம்.

இடைவிடாமல் அட்டைகளைக்கொடுத்துக் கொண்டேவந்ததில் ஆறு தடவைக்கு பிறகுதான் அரிசி இன்னதென்றும் கோதுமை இன்னதென்றும் அவை அறிந்து கொண்டனவாம். ஒவ்வொருமணி நேரம் சாவகாசம் கொடுத்து பிறகு அட்டையைக் காட்டினால் அவைகள் மூன்றாவது தடவையானதும் தெரிந்து கொண்டு விட்டனவாம்.

இதைப்பார்த்ததும் பெட்டைக்கோழிகள் எத்தனை எண்வரையில் கூட்டக்கூடுமென்று சோதிக்க எத்தனித்தார்கள். ஒரு சட்டத்தில் கோதுமையை ஒன்று விட்டு ஒன்று கோந்தினால் ஒட்டிவைத்துக் கோழிகளைத் தின்னவிட்டால், அவைகள் ஒட்டப்பட்டிருக்கும் கோதுமையைச் சீக்கிரந் தெரிந்துகொண்டு ஒன்று விட்டொரு மணியையே தின்றன. இதே மாதிரி 2 தானியத்தை ஒட்டிவைத்து மூன்றாவது கோதுமையை மட்டில் ஒட்டாமல் வைத்தால், இரண்டையும் விட்டு விட்டு மூன்றாவதை மட்டில் கொத்த கொஞ்சம் கஷ்டப்பட்டன. மூன்று தானியங்களை வரிசையாய் ஒட்டிவைத்தால் அவைகளுக்கு நாலாவது மணியைத் தின்னத் தெரியவில்லை. ஆகவே ஒன்று, இரண்டு, மூன்றுவரையில் தான் பெட்டைக்கோழிகளுக்கு எண்ணுகிற சக்தியுண்டென்று தெரிந்தது.

குழந்தைகளைப் பரீக்ஷித்துப் பார்த்ததில் அவைகளுக்கு மூன்றுவயதாகிறவரையில் எண்ணிக்கை சரியாய்த் தெரியவில்லையாம். ஆகவே, மூன்றுவயது குழந்தைகளுக்குள்ள அறிவு பெட்டைக்கோழிகளுக்கு உண்டென்று தெரிந்துகொண்டார்கள்.

SUBDUING THE WAVES.

**அலையை அடக்கும் விதம்.**—அலைகள் அதிகமாக இருந்த ஆற்றில் அஸ்திவாரம் தோண்டிக் கொண்டிருக்கையில் ஓர் அதிகாரி தம் அருகாமையிலிருந்த காற்றுப்பெட்டியில் அடைக்கப்பட்டிருந்த நெருக்கப்பட்ட காற்றானது ஓர் சிறு ஓட்டை வழியாய் மெதுவாக வெளியே வந்ததால், அதன் அருகாமையிலிருந்த தண்ணீரில் அலை குறைந்திருந்ததைக் கண்டார். உடனே அவர் ஓர் ஸமுத்திரக்கரைக்குப் போய் அங்கு ஜலத்து ஓரத்திலிருந்து சுவர்கள் அருகாமையில் சிறு ஓட்டைகள் நிறைந்த குழாய்களை வைத்து, அவைகளுள் நெருக்கமான காற்றைப் போகவிட்டார். அது ஸமுத்திர ஜலத்துள் கொப்பளித்து வர அலை அந்த இடத்தில் குறைந்ததை அவர் கண்டார். இப்பொழுது அவர் ஸமுத்திரத்தில் ஓடும் கப்பல்கள் ஒவ்வொன்றிற்கும் தண்ணீர் மட்டத்திற்குக் கொஞ்சம் கீழே முற்கூறியவாறு ஓட்டைகள் நிறைந்த நெருக்கமான காற்றுகள் உடைய குழாய்கள் தயார் செய்து கொண்டிருக்கிறாராம். இவர் காரியம் வித்தியானால், பெரிய புயல் அடிக்கும் காலங்களில்கூடக் கப்பல்கள் தங்கள் அருகாமையிலுள்ள அலைகளை அடக்கிக்கொண்டு நிர்ப்பயமாக ஸமுத்திரங்களில் போகமுடியும்.

RADIOTHOR.

**ரேடியோதர்.**—சென்ற மார்ச்சு மாதம் ஸஞ்சிகையில் ரேடியம் என்று சொல்லப்பட்ட உலோகத்தைப்பற்றி சில விஷயங்கள் சொல்லப்பட்டன. இப்பொழுது சிக்காகோ நகரத்தில் உள்ள டாக்டர் ஸ்கில்மன் பெய்லி என்பவர் ரேடியம் போன்ற ஒருவஸ்து கண்டுபிடித்திருக்கிறாராம். ரேடியத்தை விட விலை குறைச்சலாயும், அதைப்போல் அவ்வளவு தீங்கில்லாததாயுமிருக்கிறதாம். எல்லா வியாதியையும் சொஸ்தப்படுத்துகிறது மன்றி, ஆயுளையும் விருத்திசெய்யக் கூடியதாயுமிருக்கிறதாம். இதுவும் பிட்ச்ப்ளெண்டியிலிருந்தே எடுக்கப்படுகிறதாம். இதற்கு ரேடியோதர் என்று பெயர்.




# காதர் அண்டு யூசப் பிரதர்ஸ்.

இந்தியா, பர்மா, சிலோன் முழுமையும் பெயர் பெற்று



யாவராலும் அங்கீகரிக்கப்பட்ட கம்பெனி.

கெடியார வர்த்தகர்கள், இந்திய ரெயில்வேக்களுக்கும், கவரன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கும் கெடியாரம் சப்ளை செய்கிறவர்கள்.

நெம்பர் 42, P. L. சென்னை.

8-நாள் சாவி 12-அங்குலம் இனுமல் டயல் நல்ல சப்தத்துடன் மணி அடிக்கக் கூடியது. பெயர்போன அமெரிக்கன் ஸெத்தாமஸ் கம்பெனியாரால் செய்யப்பட்ட "ஆபீஸ் கிளாக்" முதல்தரம் ரூபா 16-0-0. மேற்படி மாதிரி அலாரம் அல்லது தேதி யுள்ளது ரூபா 17-0-0.

8-நாள் சாவி 10-அங்குலம் இனுமல் டயல் நல்ல சப்தத்துடன் மணி அடிக்கக் கூடியது. பெயர்போன ஸெத்தாமஸ் கம்பெனியாரால் செய்யப்பட்டது. "ஆபீஸ் கிளாக்" ரூபா 15-0-0. ஷை மாதிரி அலாரம் அல்லது பொத்தான் உள்ளது ரூபா 16-8-0.

தினசாவி. 3-அங்குலம் டயல் பெயர்போன அமெரிக்கன் செத்தாமஸ் கம்பெனியாரால் செய்யப்பட்டுள்ள முன் சிறுத்தும் பின் பெருத்தும் முன் பக்கத்தில்நேர்த்தியான ஸ்டாண்ட் உடையது. அமெரிக்கன் "ஸ்டீல் லீவர்" டைம்பீஸ் ரூபா 4—0—0.

ஷை மாதிரி அலாரம் உள்ளது ரூபா 5.

கடியாரங்களும், டைம்பீசுகளும் ஆர்டர் செய்யும்போது முறையே 4-ரூபாயும் ஒரு ரூபாயும் அட்வான்சும் அனுப்பவேண்டும்.

## MEDICAL NOTES.
## வைத்தியக் குறிப்புகள்

### Camphor and Borax.

**கற்பூரமும் வெங்காரமும்.**—கற்பூரம், வெங்காரம் இவைகளைப் பொடி பண்ணி சுடு தண்ணீரில் போட்டு, அந்த ஜலத்தை எடுத்துக் கண்களைத் துடைத்துக்கொண்டால் கண்களிலுள்ள சிவப்பும் அதிகப் பார்வையினால் உண்டாகும் வலியும் போய்விடும்.

### Medicinal Value of Honey.

**தேனின் மருந்துக்குணம்.**—தேனுக்கு அஜீரணம், க்ஷயம், பாண்டுரோகம், வாதநோய், தூக்கம் இன்மை—இவைகளையும் குழந்தைகள் வியாதிகளையும் நிவர்த்தி செய்யும் குணம் உண்டென்று ஒரு வைத்தியர் சொல்லுகிறார்.

### Cure for Corpulency.

**ஸ்தூல சரீரத்துக்குச் சிகிச்சை.**—தேகம் சாதாரணமாய் இருப்பதற்குமேல் ஸ்தூலித்துப் போகுமானால் நடமாடவும் சௌகரியமாய் வேண்டிய காரியங்களைச் செய்யவும் கஷ்டமாகிப்போம். அப்படி ஸ்தூலித்தபிறகு இளைக்கவேண்டுமென்று மருந்து சாப்பிடுவது அனாவசியமென்று தன்னுடைய அநுபோகத்திற் கண்ட ஒருவர் தெரிவிக்கிறார். ஸ்தூலம் இளைக்க மருந்து ஒன்றும் சாப்பிடவேண்டியதில்லை. ஆகார விஷயத்தில் பத்தியமாயிருந்தாற் போதுமானதென்று சொல்லுகிறார். சாராயம் சாப்பிடும் வழக்கத்தினால் தேகத்தில் உள்ள அசுத்தங்களும் அனாவசியமான வஸ்துக்களும் தாமாகவெளியே வந்துவிடாமல் தேகத்திலேயே யிருந்துகொண்டு அதை ஸ்தூலிக்கப்பண்ணுகின்றன. ஆகவே, முதன் முதல் சாராயம் சாப்பிடும் வழக்கத்தை நிறுத்தவேண்டும். பிறகு எப்போதும் சாப்பிடும் ஆகாரத் திட்டத்தில் கால்வாசி குறைத்தல் நலமாகுமாம். உணவுவகைகளில், பதார்த்தங்கள் வேண்டுமானால் பழங்கள், செடி கொடிகளில் முளைக்கும் காய்வகைகள் உபயோகிக்கவேண்டும். பூமிக்குக்கீழே முளைக்கும்கிழங்குவகைகளை, அடியோடே நிறுத்திவிடவேண்டும். பிற ஆகாரவகைகள் எப்போதும் போல இருக்கலாம். ரொட்டி சாப்பிடுகிறவர்கள் ரொட்டியை மெல்லிய துணுக்குகளாய் நறுக்கிப் பிறகு செம்மையாய் நெருப்பில் காய்ச்சிச் சாப்பிடவேண்டியது அவசியமென்றும், இப்படி ஆகார விஷயத்தில் பத்தியமாய் இருந்தால் ஸ்தூலம் மாறி, தேகம் சௌகரியப்பட்டு, சோம்பல் நீங்கி, புத்தியும் தெளியும் என்றும், தமது அநுபோகத்தை ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

### Cholera Cure.

**விஷபேதிக்கு மருந்து.**—குழந்தைகளுக்கு இருமல் வந்தால் செப்புத்தகட்டில் நாய் போல் உருவம் அடித்து அந்தத் தகட்டை குழந்தைகளுக்குக் கட்டுவது உண்டு. இப்படிக்குச் செய்வதைத் தவிர, அதற்குக் காரணம் கேட்டால் அநேகருக்குத் தெரியாது. இப்பொழுது இந்த செப்புத்தகட்டை வட்டமாக நறுக்கி தொப்புளில் படும்படி கழுத்திலிருந்து தொங்கப் போட்டுக்கொண்டிருந்தால் விஷபேதிவராதென்று சொல்லப்படுகிறது. செப்புச் சுரங்கங்களில் வேலை செய்யும் கூலிகளுக்கு பேதிவருவதில்லையாம். தவிர, ருஷியா தேசத்தில் பேதிவாராமல்படிக்கு செப்புத்தகடுகளை மேலே சொல்லியபடி உபயோகிக்கிறார்களாம். அப்படி உபயோகிக்கும் ஜில்லாக்களில் பேதி என்றபேச்சே கிடையாதாம். தேகத்தின் உஷ்ணமும் வியர்வையும் தொப்புளுக்குமேல் உள்ள தகட்டில் பட்டு அணு அளவாக செம்பு உள்ளே சென்று விஷபேதி வாராமல் செய்வதாக ஊகிக்கப்படுகிறது. தகடு ஒன்றுக்கு சுமார் ஒரு அணு விலை. பேதிகாலங்களில் இப்படிச் செய்வது நலமாகும்.

### Nutmeg Poisoning.

**ஜாதிக்காய் விஷம்.**—ஒருவன் ஜாதிக்காய் சேர்த்துசெய்யப்பட்ட பலகாரத்தைச் சாப்பிட்ட சிறிது நேரத்துக் கெல்லாம் தேக அசௌக்கியமாய்த் தோற்றுவதைக் கண்டான். அவனுக்கு முகம் பளபளப்பாயானதுடன், உடம்பெங்கும் நமுச்சலெடுத்ததாம். உடனே தன் படுக்கை யறைக்குப்போய்ப் படுத்துக்கொண்டானும். சற்று நேரத்துக் கெல்லாம், ஆகாரத்தை வாந்தியெடுக்க, பிறகு மூக்கிலிருந்து இரத்தம் வர ஆரம்பித்ததாம். அரைமணிநேரத்துக் கெல்லாம் பிரக்ஞை தப்பி முகத்தைக் கவிழ்த்து கொண்டு படுத்துறங்கினான். டாக்டர் வந்து சிகிச்சை செய்ய, மறுநாள் மயக்கம் தீர்ந்ததாம். பாக்கு, வெற்றிலை போட்டுக் கொள்ளுவதில் ஜாதிக்காயை நாம் சேர்ப்பதுண்டு. மிதமாய்ச் சேர்க்கவேணுமென்று நாம் சொல்லாமலே அறியலாம்.




V. KALYANARAM IYER & Co., *Booksellers, Esplanade, MADRAS.*

———(o)———

நன்றாய்ப் பார்வையிட்டு நல்லகாகிதத்தில் தெளிவாய் அச்சிட்ட சிறந்த பதிப்பு.

**மூவர் தேவாரம்-பண்முறை—1044 பக்கம், ரூபாய் 3—0—0.**

இப்பதிப்பில் (1) சம்பந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவர்களின் சரித்திரக் குறிப்பும், (2) தேவார வரலாறும், (3) தேவாரப்பண் அட்டவணையும், (4) தேவாரப் பாடல்பெற்ற ஸ்தல அகராதியும், (5) தேவார ஸ்தலங்களுள்ள நாடுகளின் விபரமும், (6) அட்டவீரட்டானங்களைக்குறிப்பிக்கும் செய்யுளும், (7) தேவாரப் பொதுப்பாடல்களின் பக்க அட்டவணையும், (8) தேவார வைப்பு ஸ்தல அட்டவணையும், (9) காரைக்காலம்மையார் அருளிச் செய்த மூத்த திருப்பதிகமும் நூதனமாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன.

**நாலாயிர திவ்யப்பிரபந்தம்—640 பக்கம் ரூபாய் 3—0—0.**

இப்பதிப்பு (1) ஆழ்வார்களின் காலவைபவக் குறிப்பும், (2) ஆழ்வார்கள் அருளிச்செய்த பிரபந்தங்களின் அட்டவணையும், (3) ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திவ்விய தேசங்களின் அட்டவணையும், (4) அந்த தேசங்களின் வைபவக்குறிப்புகளும் சேர்த்து பல பிரதிகளுடன் ஒத்திட்டுப்பார்த்து, நன்றாய் அச்சிடப்பெற்றுளது.

**வேதாந்த விஷயமான புஸ்தகங்கள்.**

| | ரூ. அ. | | ரூ. அ. |
|---|---|---|---|
| வள்ளாலார் சாஸ்திரம் .. .. | 1 8 | ஜன்மாந்திரம் (அல்லது இராமதாசர் உபதேசம்) .. .. .. | 0 2 |
| வாசுதேவ மனனம் .. .. | 1 0 | நாலு சீவவாதக்கட்டளை .. .. | 0 1 |
| வேதாந்த போதினி .. .. | 0 8 | மகாராஜா துறவு.. .. .. | 0 6 |
| சிவபோகசாரம் & சிவஞானவிளக்கம் .. | 0 2 | தாயுமானவர் பாடல் (காலிகோ பயிண்டிங்) | 0 12 |
| சுகர் கைவல்லியம் .. .. | 0 2 | பட்டணத்தார் பாடல் .. .. | 0 2 |
| வைராக்கிய சதகம் .. .. | 0 2 | | |

**புதிய நாவல்களும் நாடகங்களும்.**

| | | | |
|---|---|---|---|
| போஜ சரித்திரம் .. .. .. | 1 8 | மனோகரன் .. .. .. | 0 12 |
| சுந்தரி மனோகரன் .. .. | 0 12 | கள்வர் தலைவன் .. .. .. | 0 8 |
| காமாக்ஷி .. .. .. | 0 8 | சாரங்கதரன் .. .. .. | 0 8 |
| சந்திரசேகரன் ... .. .. | 0 8 | யயாதி .. .. .. | 0 8 |
| ஆநந்தமடம் .. .. .. | 0 8 | வசந்திகா .. .. .. | 0 8 |
| லீலாவதி சுலோசனை .. .. | 0 12 | கிரிஸில்டா, அல்லது பொருமையுள்ள மனைவி | 0 2 |
| இரண்டு நண்பர்கள் .. .. | 0 12 | காலவரிஷி .. .. .. | 0 8 |
| சத்ருஜித் .. .. .. | 0 12 | வேதாள உலகம் .. .. .. | 0 8 |

**வேறு புஸ்தகங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| ஸ்திரி புருஷ சாமுத்ரிகாலக்ஷணம .. | 1 0 | **மனுதர்ம சாஸ்திரம்** 2647 கிரந்த சுலோகங்களும் அவைகளின் தமிழ் மொழிபெயர்ப்பும்— 560 பக்கம் .. .. .. | 2 4 |
| குறள் (மூலம்) .. .. .. | 0 4 | | |
| பஞ்சதந்திரம் .. .. .. | 0 4 | | |

**வியவசாய போதினி.**—நிலம், எரு, விதை, பயிரிடும்வகை முதலிய சகல விவசாய விஷயங்களையும் பற்றியது. மிராசுதாரர்களுக்கும் மற்றவர்களுக்கும் இன்றி யமையாதது. தஞ்சாவூர் ஜில்லா, நீடாமங்கலம் அ. சேது ராமய்யர் இயற்றியது. 400 பக்கம், 80 படங்கள். ரூ. 1 4 0

**மானிட மர்மசாஸ்திரம்,**—அல்லது "சிசு உற்பத்தி சிந்தாமணி." இது யாவரும் படித்து அறியவேண்டிய அடியிற்கண்ட அரிய பெரிய விஷயங்களடங்கியது. 500 பக்கம், 190 சித்திர படங்களடங்கியது. ரூ. 5 0 0

**அடங்கிய விஷயங்கள்.**—மானிட ஜீவியத்தில் பலபருவங்கள்—இல்லற இன்பரகசியம்—ஜனனேந்திரியங்களின் அமைப்பும் அற்புதங்களும்—மாதாவின் மாக்ஷிமை—சிசு உற்பத்தி—கர்ப்பகால சுகாதாரவிதிகள்—கர்ப்பகால நோய்களும் பரிகாரங்களும்—மருத்துவ சாஸ்திரம்—சிசுபரிபாலனம்—மலட்டிற்குநிவாரணம் ஆண்மையினழிவும் அதன் மீட்சியும்—சமயோசித சஞ்சீவி.

**வி. கல்யாணராமய்யர் அண்டு கோ.,**
புக்ஸெல்லர்ஸ், எஸ்பௌநேட், மதராஸ்.

## PAGE FOR GIRLS.

## பெண்களுக்கான பக்கம்.

COCOANUT OIL.

**தேங்காயெண்ணெய்.**—புதிதாய் ஆட்டின எண்ணெய் கெடாமல் நெடுநாளைக்கு இருக்கவேணுமாஞல் எண்ணெயைக் காய்ச்சி வடிகட்டி பாத்திரத்தில் நிரம்பக் கொட்டிக் காற்றுப்பூராமல் மூடி வைக்க வேணுமாம்.

THUMB SUCKING.

**கட்டைவிரலை சப்புதல்.**—சில குழந்தைகள் சதா கட்டைவிரலைச் சப்பிக்கொண்டேயிருக்கும். அப்படிச்செய்வது பிசகென்று தாயாருக்குத் தெரிந்திருந்தும் சிலவேளைகளில் கண்டிப்பதும், வேறு சில வேளைகளில் அது வழக்கமாய்விட்டதென்று சொல்லிப் பேசாமல் இருந்துவிடுவதும் உண்டு. விரலைச் சப்புவதஞல் அநேக கஷ்டங்கள் உண்டாகின்றன. பற்கள் நீண்டு வெளியே தெரியும். பிறகு பல்விழுந்து முளைத்தாலும் சரியாய் வாராது. சதா சப்புவதால், கீழ் உதட்டின்பேரில் கைபட்டு அது பெரிதாய்த் தொங்கிப்போகும். மேல் அண்ணத்தில் விரல் படுவதால் சிலவேளைகளில் மூக்குக்குக்கூட ஏதாவது தொந்தரவு வரக்கூடும். தாடையெலும்பு பெரிதாய் விகாரமாய்க்கூடக் காட்டும். ஆகவே, இந்த துர் அப்பியாஸத்தை விலக்க ஒவ்வொரு தாயாரும் முயற்சிக்க வேண்டியது அவசியம். சிலவேளைகளில் தாக்ஷணியமில்லாமல் கண்டித்து கையை வாயில் வைக்கும்போதெல்லாம் பார்த்துக்கொண்டேயிருந்து விலக்க வேண்டும். இல்லாவிட்டால் கையைச்சுற்றித் துணியைக் கெட்டியாய்ச் சுற்றிவைத்தால் இந்த துர்வழக்கம் சீக்கிரத்தில் நின்றுபோம்.

PROVISION FOR UNMARRIED WOMAN.

**கல்யாணமாகாத ஸ்திரீகளுக்கு உதவி.**—நமது இந்தியாவில் ஸ்திரீகளுக்கு அதிக பாலியத்திலேயே கல்யாணம் ஆகிவிடுகிறது. இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய மேனாட்டில் விசேஷமாய் 20 வயதுவரையில் ஸ்திரீகள் விவாஹம் செய்துகொள்வதில்லை. சிலர் ஆயுள் பரியந்தம் விவாஹமில்லாமலே யிருந்து விடுகிறார்கள். அமெரிக்காவில் போஸ்டன் என்ற நகரத்தில் அநேகர்கள் கூடி கல்யாணமாகாத ஸ்திரீகளுக்கு ஏதாவது ஜீவனத்திற்கு உபாயம் காண்பிக்கவேண்டியது அவசியமென்று தீர்மானித்தார்கள். கல்யாணமாகாத ஸ்திரீகளுக்குத் தலைக்குக் கொஞ்சம் நிலம்கொடுத்து அவர்கள் ஜீவ திசைவரையில் சாகுபடி செய்து சாப்பிட்டுவர ஏற்பாடுசெய்ய உத்தேசித்திருக்கிறார்கள். மெயின் என்ற வேறொரு இடத்தில் 25 வயதுக்கு மேல்பட்டு 45 வயதுக்குள்ளாக இருக்கும் விவாஹமில்லாத புருஷர்களுக்கு வருஷம் ஒன்றுக்கு 2 பவுன் வீதமும், விவாஹமாய் ஸ்திரீயை யிழந்து பிறகு விவாஹமில்லாத புருஷர்களுக்கு தலைக்கு 5 பவுன் வீதமும் வரிபோட்டு வரும்பணத்தை கல்யாணமாகாத ஸ்திரீகளுக்கு பென்ஷன்போல் கொடுக்க உத்தேசித்திருப்பதாய்க் கேள்விப்படுகிறோம்.

MATERNAL NURSING.

**தாய் பால்கொடுத்தல்.**—மோரோ என்ற ஒருவர் தாய்ப்பாலின் விசேஷ குணங்களை அறிய சில பரிசோதனைகள் செய்து பார்த்தார். ஒரு பன்றி குட்டி போட்டது முதல் குட்டிகளுக்கு தாய்ப்பால் அல்லாத ஆகாரங்களைப் போட்டி வந்ததில் நூற்றுக்கு எண்பது குட்டிகள் இறந்து போயின. பிறந்து ஒரு நாளைக்கு மட்டும் தாய்ப்பாலை கொடுத்து பிறகு இதர பாலைகொடுத்ததில் நூற்றுக்கு நாற்பது குட்டிகள் இறந்து போயின. பிறந்த இரண்டு மூன்று நாள் வரையில் தாய்ப்பாலைக் கொடுத்து பிற்பாடு வேறு ஆகாரங்களை கொடுத்ததில் நூற்றுக்கு பத்து மட்டும் இறந்து போயின. இந்த பரீக்ஷையால் பிறந்த குழந்தைகளுக்கு தாய்ப்பாலே கொடுப்பது சிலாக்கியமென்று ஊகிக்க வேண்டியதாயிருக்கிறது.

SUCCESSFUL LADY EDUCATIONISTS.

**படித்துத்தேறின பெண்மணிகள்.**—புதிதாய் ஏற்படுத்தப்பட்ட விதிகளை அனுஸரித்து ஸமீபத்தில் நடந்தேறின கல்கத்தா ஸர்வகலா ஸபையைச் சேர்ந்த சாஸ்திரீயப் பரீக்ஷைக்குப்படித்த பெண்மணிகள் ஐந்து பேரும் தேறி விட்டார்கள். வைத்திய சாஸ்திரம் என்றால் இந்தியமாதர்களுக்கு எப்போதுமே ப்ரீதி. இவர்களுள் எம். பி. பரீக்ஷையில் திறமையாய்த் தேறிய முதலிருவரும் வங்காள ஸ்திரீகள்; வித்தியாபட்டமும் பெற்றவர்கள். இவர்களுக்கு மிஸ் சந்திரமுகிபோஸ் என்றும், மிஸஸ் கடம்பேனி கங்கூலி என்றும் பெயர்.




# P. S. Sastri Artist and Photogrpher,

## CARNATIC STUDIO, Mount Road, Madras.

SPECIALITIES. { SCHOOL GROUPS. FAMILY GROUPS. BROMIDE ENLARGEMENTS.

## பொட்டகிராப் படங்கள்.

பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளையும் குடும்பங்களையும் பொட்டகிராப் படம் பிடிப்பதிலும் சிறியபடங்களை பெரிதாக்கிக்கொடுப்பதிலும் நிபுணர்.

பி. எஸ். சாஸ்திரி,
பொட்டகிராப் பிடிப்பவர், கர்நாடிக் ஸ்டுடியோ,
மவுண்ட் ரோட், மதராஸ்.

SCREENS AND WALL MATS OF OUR OWN INVENTION.

ORNAMENTS FOR HOUSES—ADVERTISEMENTS FOR MERCHANTS—OBJECT-LESSONS FOR SCHOOLS.



எங்களால் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டு, செய்யப்பட்டு வருகிற ஸ்கிரீன்கள் அல்லது தட்டிகள்.

வீடுகளை அலங்கரிக்கவும், வர்த்தகர் தங்கள் பெயர், வியாபாரம் முதலியன இவைகளின் பேரில் எழுதி பிரசுரஞ்செய்யவும், மிருகங்கள் முதலியவை பெயின்ட்செய்த ஸ்கிரீன்கள் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குக் காண்பிக்கவும் உதவும். 48" × 12" தட்டி 1க்கு விலை. ரூ. 0 10 0.
1 முறை 12 தட்டி வாங்குபவர்களுக்கு தட்டி 1க்கு 0 8 0.
கதவு, சன்னல் முதலியவைகளுக்குப் பெரிய தட்டிகள் ஆர்டரின் பேரில் செய்யப்படும்.

இண்டியன் பைன் ஆர்ட்ஸ் கம்பெனி,
ஆபீஸ்—22, வெங்கடாசல முதலி வீதி, புரசை, மதிராஸ்.

THE INDIAN CHRISTIAN FINE ARTS CO.,
22, Venkatachala Mudali Street, *Purusawakam*, *Madras*,

## PAGE FOR BOYS.
## சிறுவர்களுக்கான பக்கம்.

ALCOHOL AND THE HUMAN BODY.

**மதுசாரமும் மனுஷ்ய சரீரமும்.**—மதுபானம் செய்வதனால் உண்டாகும் தீமைகளை அனேகர் உணர்ந்து அதைக் குடிப்பவர்களைத் தடுக்கும் வழிகளில் பிரயத்தனித்து வருகிறார்கள். இப்படிப்பட்ட நன்முயற்சி செய்வோரைக்கண்டால் மதுபானிகள் பரிகசிப்பதும் கொக்கரிப்பதும் ஸகஜமாயிருந்துவருகிறது. ஆனாலும், குடிப்பது தேகஸௌக்கியத்திற்குக் கெடுதியை விளைவிப்பது நிச்சயம். இதன் உண்மையை ஸெப்டர் லைப் அஸோஸியேஷன் என்கிற ஸபையின் வருஷாந்தர ரிப்போர்ட்டுகளைப்பார்த்தால் தெரியும். இந்த ஸபையார் அவர்களிடத்தில் இன்ஷியூர் செய்திருக்கிறவர்களைப் பொதுப்பிரிவு என்றும், மதுவிலக்குப் பிரிவு என்றும் இரண்டு விதமாகப் பிரித்திருக்கிறார்கள். சாதாரணமாய் குடிப்பவர்கள் பொதுப் பிரிவைச் சேர்ந்தவர்கள். குடி இல்லாதவர்கள் மதுவிலக்குப் பிரிவைச்சேர்ந்தவர்கள். இந்த இரண்டுவகுப்பார்களுக்கும் உள்ள தாரதம்மியத்தை இந்த ஸொஸைடியார் சென்ற 25 வருஷங்களுக்கு கணக்கெடுத்துக் காட்டியிருக்கிறார்கள்:—

பொதுப்பிரிவு:—

| காலம். | எதிர்பார்க்கப்பட்ட சாவுகள். | உண்மையில் நேர்ந்த சாவுகள். | நூற்றுக்கு. எவ்வளவு |
|---|---|---|---|
| 5 வருஷம் 1884-1888 | 466 | 368 | 79·00 |
| 5 வருஷம் 1889-1893 | 564 | 466 | 82·62 |
| 5 வருஷம் 1894-1898 | 628 | 498 | 79·30 |
| 5 வருஷம் 1899-1903 | 712 | 548 | 76·97 |
| 5 வருஷம் 1904-1908 | 709 | 573 | 80·82 |
| மொத்தம் 25 ௵ | 3,079 | 2,453 | 79·67. |

மதுவிலக்குப் பிரிவு:—

| காலம். | எதிர்பார்க்கப்பட்ட சாவுகள். | உண்மையில் நேர்ந்த சாவுகள். | நூற்றுக்கு எவ்வளவு. |
|---|---|---|---|
| 5 வருஷம் 1884-88 | 195 | 110 | 56·41 |
| 5 வருஷம் 1889-93 | 312 | 184 | 58·97 |
| 5 வருஷம் 1894-98 | 419 | 228 | 54·42 |
| 5 வருஷம் 1899-03 | 514 | 270 | 52·53 |
| 5 வருஷம் 1904-08 | 607 | 294 | 48·43 |
| மொத்தம் 25 ௵ | 2,047 | 1,086 | 53·05. |

அதாவது, குடியுள்ளவர்களில் சராசரி நூற்றுக்கு 80 பெயர்கள் இறந்துபோக, குடியில்லாதவர்களில் நூற்றுக்கு 53 பெயர்கள்தான் இறந்துபோகிறார்கள். ஆகையால், குடியால் நூற்றுக்கு 27 பேர்கள் அதிகமாய் இறந்து போகிறார்கள் என்று ஏற்படுகிறது.

THE SONS AND DAUGHTERS OF INDIA.

**இந்திய புத்திரர் புத்திரிகளின் சங்கம்.**—இப்பெயருள்ள சங்கம் காசிநகரத்தில் மாதுஸ்ரீ அன்னி பெசெண்ட் அம்மாளால் 1908௵ அக்டோபர் மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் முக்கியக்கருத்துக்கள் என்னவென்றால்:—இந்தியாவில் உள்ள பல ஜாதியார்களுக்குள்ளும், பல மதஸ்தர்களுக்குள்ளும் ஐக்கியபாவத்தையும், சிநேகபாவத்தையும், அபிவிருத்தி செய்தல், ஜனசமூக வாழ்க்கைக்கு அவசியமான லோகோபகாரங்களை அறிந்து செய்தல், நன்மையுள்ள எந்தக் காரியத்தைச் செய்தாலும், தர்மமுறையாயும், சட்டநீதி முறைவிலகாமலும் செய்யவேண்டுமென்பதேயாம். மதவேற்றுமையால் ஏற்படும் துவேஷ புத்தியை நீக்கவேண்டும் என்பதும், அவரவர் தம்மால் இயன்றமட்டும் பொருட்செல்வம், கல்விச்செல்வத்தின் உதவியால் ஜனசமூகத்தின் க்ஷேமத்திற்குறிய நற்காரியங்களைச் செய்து முடித்தல் வேண்டும் என்பதும், இச்சபையின் கருத்துக்கள்.




DOYAL & SONS,

137, H. Amherst Street, *Calcutta.*



"ஜோதி புளுட் ஹார்மோனியம்."

இது மெஸ்ஸர்ஸ் டயால் அண்டு ஸன்ஸ் அவர்களால் விசேஷ மாதிரியாகச் செய்து விற்கப்பட்டுவருகிறது. அழகும் இனிமையான ஸ்வரமும், வேலைப்பாடும் அமைந்தது. நூதன ஆயுதங்களைக்கொண்டு உறுதியாக செய்யப்பட்டிருக்கிறது.

அளவு—பார்வைக்கு லக்ஷணமாயும் அடக்கமாயுமிருக்கும்.

3 Octaves 3 stops C to C (one set reed), Rs. 20, 22, 23.
„ 4 stops „ (2 sets of reeds), Rs. 30, 35.
„ 5 stops „ „ Rs. 40, 45.

(1) இரண்டு வருஷத்துக்கு ஜாமீன்.

(2) விவரமான படங்கள் அடங்கிய காட்லாக்கு தேவையானவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

(3) ஏஜண்டுகள் தேவை. மனுவின்பேரில் நிபந்தனைகள் தெரிவிக்கப்படும்.

(4) இந்த வாத்தியத்தை வாங்க விரும்புகிறவர்கள் ஒவ்வொரு ஆர்டருடன் 5-ரூபாய் முன்பணம் அனுப்பவேண்டும்.

டயால் அண்டு ஸன்ஸ்,
137, எச். அம்ஹெர்ஸ்டு தெரு,
கல்கத்தா.

T. E. C. SWAMINATHA CHETTIAR,
14, Luckmoodas Street, Madras.
*Head Office*:—KUMBAKONAM.

சுதேச ஜவுளி! சரசமான விலை!

1905-௵ பனாரஸ் பொருள் காக்ஷியில் ஜவுளிகளுக்கு வெள்ளி மெடல் கிடைத்திருக்கிறது.

1. கும்பகோணம் வெள்ளை சிகப்பு ஜவுளி தினுசு.
2. துகிலி, கொரநாடு, ஆடுதுறை ஜவுளி.
3. கல்கத்தா, பனாரஸ்பட்டு பீதாம்பரங்கள் நார்மடிகள், புதுச்சேரி, கொள்ளேகாலம் உருமாலைகள்.
4. காஞ்சீபுரம், சேலம், மதுரை, கோயம்புத்தூர், ஆரணி, புல்லம்பேட்டை, நெல்லூர் முதலிய இடங்களின் ஜவுளி தினுசுகள் மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்கப்படும்.

தா. யி. சி. சாமினாத செட்டியார்,
14, லக்குமதாஸ் தெரு, சென்னை.
ஹெட் ஆபீஸ்:—கும்பகோணம்.

THE BENGAL CHEMICAL AND PHARMACEUTICAL WORKS, LTD.,
*91, Upper Circular Road, Calcutta.*

எங்கள் பரிமளக் கூந்தல் எண்ணெயில் அநேக மலர்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. மகா சுத்தமானது. வேறுவிதமான வர்ணங்களைச் சேர்த்து பகட்டப்படாதது.

இதில் எத்தனையோ ஆயிரக்கணக்கான ரோஜா, மல்லிகை, தாமரை முதலிய புஷ்பவாஸனைகள் வீசும்.

வேண்டியவர்கள் அடியில் கண்ட ஏஜண்டுகளிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பி. ரெங்கய்ய செட்டி அண்டு ஸன்ஸ், எஸ்பிளனேட், மதராஸ்.

ஸ்வதேசி வேர் அவுஸ், தம்புசெட்டித் தெரு, மதராஸ்.

நாஷனல் டிரேடிங் கம்பெனி, எஸ்பிளநேட், மதராஸ்.

கே. வி. பிராமய்யா அண்டு ஸன்ஸ், மதராஸ் அல்லது ராஜமஹேந்திரம்.

என். ஆர். பகடி அண்டு கம்பெனி, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

பங்காள ரஸாயன ஔஷதசாலை,
91. அப்பர் ஸர்கிலர் ரோட்,
கல்கத்தா.

## INDIAN NEWS.
## இந்தியநாட்டு ஸமாசாரங்கள்.

### Half-Anna Nickel Coin.

**அரை அணா நிக்கல் நாணயம்.**—சிலகாலமாய் ஒரு அணா நிக்கல் நாணயம் உபயோகப்பட்டு வருகிறது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இந்த நாணயம் ஜனங்களால் ஆக்ஷேபனையன்னியில் எடுக்கப் படுகிறதா என்றும், இப்போது அரை அணா நிக்கல் நாணயம் போடுவதில் அபிப்பிராயம் என்ன என்றும் மதராஸ் கவர்ன்மெண்டார் சென்னை வியாபார சபையாரைக் கேட்டார்கள். இது விஷயமாய் மதராஸ் பாங்கிக்காரர்கள் எழுதியிருப்பதையும் கவர்ன்மெண்டார் இந்தச் சபையாருடைய தகவலுக்கு அனுப்பினார்கள். இதையும் பார்த்து யோஜனை செய்து "ஒரு அணா நிக்கல் நாணயம் சென்னை ராஜதானியில் ஸர்வஜன சம்மதமானதாய் இல்லாவிட்டாலும், பெரிய ஊர்களில் அந்த நாணயம் ஏற்றுக் கொள்ளப்படுமென்று தோன்றுவதாயும், அரை அணா நிக்கல் நாணயம் ஒன்று போடலாமென்றும், ஆனால் கொஞ்ச காலம்வரையில் இதை உபயோகிக்கும்படி ஜனங்களைக் கட்டாயப்படுத்தக் கூடாதென்றும், நிக்கல் நாணயத்துக்கு பதிலாக செம்பு நாணயங்களை விரும்புகிறவர்களுக்கு உடனே அதைக் கொடுக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டியது என்றும்", மதராஸ் பாங்கியார் எழுதியதை அனுசரித்தே மதராஸ் வியாபாரசபையாரும் கவர்ன்மெண்டாருக்கு எழுதியிருக்கிறார்கள்.

### Strike in the M.S.M.Ry.

**மதராஸ் தென்மராட்டா ரெயில் வேலை நிறுத்தல்**—மதராஸ் தென்மராட்டா ரெயிலை ஓட்டும் வேலைக்காரர்கள் சில நாளைக்கு முன் அவர்களுக்கும் அவர்கள் எஜமானர்களுக்கும் உள்ள மனஸ்தாபத்தால் வேலையை திடீரென்று நிறுத்தி விட்டார்கள். அதனால் ரெயில் கம்பெனியாருக்கும் வியாபாரிகளுக்கும் வெகு நஷ்டம் நேர்ந்திருக்கிறது. கலியாண காலத்தில் ரெயில் போவது நின்று விட்டதனால் அனேக ஜனங்களுக்கு அசௌகரியமும் நஷ்டமும் விளைந்தது. வெங்காயம் போன்ற சரக்குகள் ரெயிலில் தங்கினதால் அழுகிப்போயின. சில வியாபாரிகள் சரக்கை ரெயிலில் இருந்து இறக்கவேயில்லை.

### The Spirit of Swadeshi.

**சுதேசிய உணர்ச்சி.**—சுவதேச வஸ்துக்களை உபயோகிக்க வேண்டுமென்ற ஆவல் பல இந்தியமன்னர் நாடுகளில் அதிகரிப்பதாய்த் தெரிய வருகிறது. இந்த உணர்ச்சி காரணமாக, காஸ்மீரத்தில் பட்டு வியாபாராம் அதிகரித்து விசேஷ லாபத்தைத் தருகிறது. பரோடாதேசத்தை யாளும் அரசர் உதவியால் அநேக கைத்தொழில்கள் விருத்தியடைந்து வருகின்றன. இவ்வரசர் அமெரிக்கா தேசத்திய இஞ்சினீர் ஒருவரை, முக்கியமாய்ப் பொருளாதாரவழிகளைப்பற்றிய விஷயங்களைப் பரிசோதிக்கும்படி நியமித்திருக்கிறார். தோல்பதம் செய்யும் வகைகள் யாவையும் அமெரிக்காவில் போய்க்கற்று வந்து பம்பாய், சென்னை, கான்பூர், முதலிய இடங்களில் தோல் வியாபார விஷயங்களை நேரில் பார்த்துக்கற்ற ஒருபுத்திமான், பரோடாவில் ஒரு க்ரோம் தோல் கைத்தொழிற்சாலை ஏற்படுத்தப் போகிறாராம். மாவு அரைத்தல், குடைகள் செய்தல், நார் எடுத்தல், பருத்திக்கொட்டை யெண்ணெய் உற்பத்தி செய்தல், முதலிய தொழில்களுக்கெல்லாம் ஆலைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அரிசி ஆலை, மரத்தைவாளால் துண்டிக்கும் ஆலை, முதலியவைகளும் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளில் அநேக ஆலைகளில் ஸர்க்கார் பணம் போட்டிருக்கிறார்கள். சில ஆலைகளில் ஸர்க்காரிடமிருந்து குறைந்த வட்டிக்குக்கடன் வாங்கி வேலை செய்யப்பட்டுவருகிறது. தொழிற் கலாசாலைகளும் விருத்தியாகின்றன.

குவாலியர் என்ற சுதேச மன்னர் நாட்டில் கண்ணாடி, பூட்ஸ், செருப்பு, ஸோடா, முதலிய வஸ்துக்கள் எல்லாம் செய்யப் படுகின்றன. தோல் வியாபாரம், பாத்திரவியாபாரம், கடுதாசி வியாபாரம், ஜமக்காளம், ரத்னகம்பளி முதலிய வியாபாரங்களில் எல்லாம் உள்ளூரிலேயே சரக்குகள் உற்பத்திசெய்யப்பட்டுவருகின்றன. இவைகளுக்கெல்லாம் ஸர்க்கார் உதவி விசேஷமாய்ச் செய்கிறார்களாம்.

மேலும் ஸர்க்காரில் ஒரு தொழிற் கலாசாலை நியமித்து, அதில் வண்டிசெய்யும்வகை, தச்சுவேலை, இரும்புப் பெட்டி செய்யும் விதம், மட்பாண்டம் செய்யும் வகை, தட்டாரவேலை முதலியவைகளைக் கற்றுக் கொடுக்கிறார்களாம்.



SWADESA VASTHU VARTHAKA SALA,
199, Mint Street, Madras.

**வெகு நயம்! வெகு நேர்த்தி!! வெகு உருதி!!!**

1. எவ்விதமான தலைநோய், ஜலதோஷம் முதலியதை உடனே எடுக்கக்கூடிய சுதேசி மென்தால் 1 புட்டி ரூ. 0-4-0.
2. ஈர்வீக்கம், பல்நோவு, இரத்தம் வருதல்-இவற்றை நீக்கக்கூடிய ரோஸ் கார்பாலிக் பற்பொடி 1 டின் 0-2-0.
3. ஸம்பங்கித் தைலம் என்னும் கூந்தல் வளரும் சுவாசனைத் தைலம் மேலானது 1 புட்டி 0-4-0.
4. மேலானது. எவ்வித கெடுதலையும் நீக்கக்கூடிய யோகியின் பல்பொடி 2 மாதத்திற்கு 1 புட்டி 0-2-6.
5. சுதேசி ருசியுள்ள பப்பர்மெண்டுகள் பலவிதமானவை. ருசிகரமானவை. பவுன் 1க்கு 0-5-0.
6. கெட்டிசாயம் சுதேசி சீட்டிகள் பாவாடை ரவிக்கை சொக்காய் முதலியவைகளுக்கு கஜம் 1க்கு 0-5-0.
7. வெகு நேர்த்தியான சுத்தவெள்ளை ட்வில் ஷர்டுகள் எந்த அளவிற்கும் 1க்கு 0-13-0, 0-14-0, 0-15-0, 1-0-0.

வியாபாரிகளுக்கு வெகு சரசமாய் கொடுக்கப்படும்.

**ஸ்வதேசவஸ்து வர்த்தகசாலை,**
199. தங்கசாலைத்தெருவு,
சென்னப்பட்டணம்.

RAMNARAYAN SURYANARAYAN,
Silkmerchants, 160, Harrison Road,
*Bara Bazaar, Calcutta.*

**ஒருபட்டு ஷீட் இனாம்.**

**தகுந்த சகாயம் முந்துங்கள்**

எங்களிடத்திலிருக்கும் ரூபா 5-8-0 விலையுள்ள ராஸ்கோப் விஸ்டம் வாச்சை வாங்குவோர் ஒவ்வொருவருக்கும் 3 முழம் 45 அங்குலமுள்ள ஒரு பட்டு சாதர் இனாமாகக் கொடுக்கப்படும். தபாற்கூலி அணா 6. பத்து வருஷம் உத்தரவாதம். 3 வாச்சு வாங்குகிறவர்களுக்கு தபாற்கூலி இலவசமாவதோடு ஒரு பட்டு சாதரும் இலவசமாய்க் கொடுக்கப்படும்.

**ராம்நாராயன் சூரியநாராயன்.**
பட்டு வியாபாரிகள்,
160, ஹாரிஸன் ரோட்,
பாரா பஸார், கல்கத்தா.

THE NEW WORK BY PROFESSOR EBBARD.

Price 6s. Postage 4d.

**"HYGIENE AND SELF-CURE"**

**A PRACTICAL GUIDE** for the Self-Treatment of Diseases and Chronic Complaints based upon modern methods of **NATURAL TREATMENT WITHOUT PHYSIC.**

*Publishers' Announcement:*

The purpose of "Hygiene and Self-Cure" is to supply the need of an authoritative work of reference on the correct methods to be used to combat disease and the many chronic complaints, so prevalent at the present time, without having recourse to drugs or physic.

The Author of "Will Power," "Life-Giving Energy," "Bedrock of Health," may be truthfully described as a Pioneer of Modern Natural Methods of Curative Treatment. We possess thousands of testimonials from grateful men and women who, having failed to obtain relief of their sufferings from other sources, received enduring benefit from Professor Ebbard's teaching and treatment.

Under the heading of the Disorder or Ailment will be found the exact means the inquirer should employ for the Self-Cure of any specific ill.

*Prospectus Post Free:*

**MODERN MEDICAL PUBLISHING CO.**
Department 1,
12 & 13 Henrietta Street, London, W.C.

CLASSIFIED COMMERCIAL DIRECTORY.

**வியாபார பகுதி விலாசங்கள்.**

COLOUR PENCIL MANUFACTURER.
கலர் பென்சில் செய்கிறவர்கள்.
K. P. RAMASWAMY IYER,
15, Solayappa Mudali Street,
*KUMBAKONAM.*

SILK MERCHANTS.
பட்டு வியாபாரிகள்.
பட்டு பீதாம்பர கம்பெனி,
காசி (பனாரிஸ்.)

BRUSH MANUFACTURE.
புருஷ் செய்தல்.
B. V. K. CHETTY & CO.,
No. 22, Broadway, Madras.

## FOREIGN NEWS.

## அந்நிய நாட்டு ஸமாசாரங்கள்

INDIAN AGRICULTURE.

**இந்திய விவசாயம்.**—*பிரிட்டிஷ் கீழ் ஆப்பிரிக்கா எனப்படும் தேசத்தில் டைரெக்டர் ஆப் அக்ரிகல்சர் என்று சொல்லப்பட்ட விவஸாய இலாகாவில் முக்கிய உத்தியோகஸ்தர் இந்திய விவஸாய முறைகளைத் தெரிந்துகொள்வதற்காக இந்த வருஷக் கடைசியில் இந்த தேசத்தைச் சுற்றிப் பார்க்கப் போகிறாராம்.*

A COMMERCIAL MUSEUM IN SERVIA.

**சேர்வியாவில் ஒரு வியாபாரப்பொருட் காக்ஷி.**—*ஐரோப்பாவிலுள்ள செர்வியா என்னும் தேசத்து வியாபாரத்தை விருத்தி செய்வதற்காக வியாபாரச் சரக்குகளை யெல்லாம் சேர்த்து ஒரு பொருட்காக்ஷி ஏற்படுத்தியிருக்கிறார்களாம். இதில் செர்வியாவிலிருந்து இதர தேசங்களுக்கு ஏற்றுமதியாகும் சரக்குகளின் மாதிரிகளும் அந்நிய தேசங்களிலிருந்து செர்வியாவில் இறக்குமதியாகும் சரக்குகளின் மாதிரிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. முதலாளிகள் செர்வியாவில் வந்து தொழில்களை ஏற்படுத்த இஷ்டப்பட்டால் அவர்களுக்கு வேண்டிய உதவிகளும் செய்யப்படும். விவசாயிகளுக்கு உபயோகப்படக்கூடிய யந்திரங்கள், கருவிகள், முதலியவைகளின் மாதிரிகள் யாராவது அனுப்பினால் அந்தப் பொருட் காக்ஷியில் வைத்து அங்குள்ளவர்களுக்கு காண்பிப்பார்களாம்.*

BOOT LEATHER.

**பூட்ஸ் தோல்.**—*ஆஸ்டிரேலியா கண்டத்தில் கொஞ்ச காலத்துக்குமுன் வெள்ளை முயல்களின் தொந்தரையால் விவஸாயிகளுக்கு மிகவும் கஷ்டமாயிருந்தது. சில வருஷங்களாய் இந்தத் தொந்தரை நீங்கிவிட்டது. முயல்களைக்கொன்று அவைகளின் தோலை யெடுத்து பதனிட்டு பூட்ஸ்கள் தைத்து ஏராளமாக வியாபாரம் நடத்தப்படுகிறதாம். இந்தத் தொழிலைச் செய்யும் ஒரு கம்பெனியார் தங்கள் தொழிலால் முயல்களின் தொந்தரை குறைந்துவிட்டபடியால் அவர்களுக்கு சர்க்காரில் கொஞ்சம் நன்கொடை கொடுக்கவேண்டுமென்று மனுசெய்து கொண்டிருப்பதாயும், அதைப்பற்றி ஆஸ்திரேலியா கவான்மெண்டார் யோசித்துக் கொண்டிருப்பதாயும், தெரியவருகிறது.*

TARRED PAPER AS ROOFING MATERIAL.

**தார் அடித்த கடுதாசி வீட்டுக்கூரை யாவது.**—*ஜப்பான் தேசத்தில் வீடுகளுக்குக் கூரை போடுவதற்கு வேண்டிய சாமான்கள் தேவையில்லையாம். ஆகையால் அப்படிப்பட்ட சாமான்களை விசேஷச் செலவிட்டு வெளி தேசங்களிலிருந்து வர்த்தகர்கள் வரவழைப்பதில்லை. ஜனங்கள் சாதாரணமாய் கடுதாசிகளுக்குத் தாரை அடித்து அவைகளை வீட்டின் மேல் பரப்பி ஓடுகளைப்போட்டு மூடிவிடுகிறார்கள். இப்படிச் செய்தால் அதிக மழை பெய்தாலும் ஒழுகுவதில்லை. கோடைகாலங்களிலும் ஸௌக்கியமயிருக்கிறதாம்.*

PETROLEUM OUTPUT IN THE U. S. A.

**அமெரிக்கா ஐக்கியமாகாணத்து பெட்ரோல் எண்ணெய் உற்பத்தி.**—*அமெரிக்காவில் ஐக்கியமாகாணத்தில் ஜியலாஜிகல் சர்வே என்ற பூமி சாஸ்திரத்தை யனுசரித்த சர்வே டிபார்டுமெண்டில் வேலை பார்த்து வரும் டேவிட்-டி-டே என்பவர் சென்ற 1908-ம் வருஷத்தில் ஷை அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில் எவ்வளவு கெரோஸின் எண்ணெய் மொத்தம் உற்பத்தியாயிருக்கிறதென்று கணக்கு பார்த்தாராம். அப்படிப்பார்த்ததில் சுமார் 1750 அல்லது 1800 லக்ஷம் பார்ரெல் எண்ணெய் சென்ற வருஷத்தில் மட்டில் உற்பத்தியாயிருக்கிறதாய்த் தெரிந்ததாம்.*

THE INDO-CEYLON RAILWAY.

**இந்தியாவுக்கும் இலங்கைக்கும் ரயில்.**—*பாம்பன் கால்வாய்மேல் ஒரு வாராவதி கட்டி, தென்னிந்தியா ரயில்வேயை தனுஷ்கோடி வரையில் கொண்டுபோய், தனுஷ்கோடிக்கும் மன்னாருக்கும் ஸ்டீம் படகு போட்டு, மன்னாரில் இருந்து ரெயில் போட்டு இலங்கை ரெயிலோடு சேர்த்துவிடப்போகிறார்களாம்.*

CATS FOR JAPAN.

**ஜப்பானுக்கு பூனைகள்.**—*அமெரிக்காவிலிருந்து ஜப்பானுக்குப் பூனைகளனுப்பப்படுகின்றன. இவ்விதம் பூனை இறக்குமதி செய்வது அங்குள்ள எலிகளைக் கொன்று பிளேக் நோயை அங்கு உண்டாகாது தடுப்பதற்காகவாம்.*

—:o:—



DAS & Co.'s *PATENT* LOCKS, SAFES, & CO.,

*are approved and largely used by H. M's. Indian Government.*

கல்கத்தாவில் காஸ்ஸிப்பூர் ரோடில் 15 நெ. வீடு தாஸ் அண்டு கம்பெனியாரால் செய்யப்பட்ட பூட்டுகளும், இரும்பு பெட்டிகளும் கவரன்மெண்டாரால் உபயோகிக்கப்படுகின்றன.

During the Viceroyalty of **Lord Curzon** Das and Co.'s Locks were supplied for Government Houses at Simla & Calcutta, and thus reported from Simla:—

"* * Were found to be excellently finished and no way inferior in quality to those of European Manufacture. They are giving every satisfaction."

Awards from the late **Chicago Exhibition** 1893–94.

Thacker's Medal with following Certificate:—

"The Locks are of good design and largely heavy pattern having 12 Tumblers. They are made chiefly from good castings well fitted and finished by Machinery."

Please Address:—

**DAS & CO.,**

Chitpur Lock and Safe Works,

THE "ABBH" M'f'y.

*15, Cossipur Road,*

*CALCUTTA.*

TELEGRAMS:—

"Safe Guard," Calcutta.

# பிழைக்கும் வழி.

## PRACTICAL LIFE.

### PRESS OPINIONS.

**THE HINDU.**—We have much pleasure in welcoming to the ranks of Indian Vernacular Periodical Literature, this new, interesting and very originally designed and excellently executed Tamil monthly, edited and published by G. A. Vaidya Raman, B.A. Mr. Vaidya Raman possesses rare qualifications for the educative work which he has undertaken to do by means of this novel magazine. The "Practical Life" is amply justified by the assortment of matters in the very opening number which is before us, and there need not be the slightest doubt, that the original aim and object in view will be lost sight of in the succeeding numbers. It is to be devoted mainly to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education. Popular interest in agricultural, industrial, commercial and economic matters is next to nothing. If it is so among the English educated classes, how much more is it among the masses? It is such an interest that the magazine apparently aims at creating and developing.

**THE INDIAN TRADE JOURNAL** published by the Government of India says.—We have received the first number of a new Tamil monthly entitled *Practical Life*, published in Madras. A good portion of it is devoted to trade, industry and agriculture and in this respect it is the only magazine of its kind in the Southern Presidency.

**UNITED INDIA AND NATIVE STATES.**—*Practical life*, which is the name of the new Journal, edited by Mr. G. A. Vaidyaraman, is meant as a guide and help to breadwinners. Even a cursory perusal of the first number shows that the new venture is by no means a superfluous addition. There is no other periodical designed on these lines. The fare provided will satisfy any man's technical and industrial appetite.

### பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்.

**கோயமுத்தூர் கலாநிதி.** *நல்ல கடிதத்தில் நல்ல பதிப்பாகப் பதிப்பித்த இவ்வளவு உபயோகமான பத்திரிகையின் வருஷ சந்தா ரூபாய் நான்காகையால், அதிக லோபத்துவ முள்ளவர்களும் வாங்கி வாசிக்கக் கூடியதாகவும், இருக்கிறது.*

**சத்தியவேத பாதுகாவலன், யாழ்ப்பாணம்.**—*சென்னையில் பிரசுரமாகத் தொடங்கி யிருக்கும் "**பிழைக்கும் வழி**" என்பது ஒரு மாதாந்தரப் பத்திரிகை. இதன் பெயர் காட்டுகிறபடி சீவனோபாயத்தைச்சேர்ந்த விஷயங்களையே எடுத்துப்பேசுகின்ற ஒரு பத்திரிகை யாதலால் எல்லா வகுப்பாருக்கும் பிரயோசனமானது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. முதற்சஞ்சிகை பொருளமைவாலும் அச்சியற்றிய சிறப்பாலும் மிக விசேஷ முள்ளதாயிருக்கக்காண்கிறோம். இது தமிழிலே முதன் முதலாக வந்த எடுப்பு என்றெண்ணுகிறோம். இந்த நிரையிலே வேறு பத்திரிகைகள் இதுவரையிலே தோன்றியில்லை என்பதே எமது அபிப்பிராயம்.*

**சுதேசமித்திரன்.**—*அநேக முக்கியமான விஷயங்கள் புதுமாதிரியாக நன்கு யெழுதப் பட்டிருக்கும் "பிழைக்கும் வழி" யின் இச்சஞ்சிகைபோல் மற்ற சஞ்சிகைகளும் இவ்வளவு சிறப்புடன் இனிமேலும் நடத்தப்பட்டு வருமெனக்கோருகிறோம்,*

## SEASON, CROPS AND PRICES.
## காலஸ்திதி, பயிர்கள், அகவிலை.

YELLOW METAL SHEETS.

**பித்தளைத்தகடுகள் :**—இவைகளில் விலை ஒரே விதமாக பாரம் ஒன்றுக்கு 202 அல்லது 203 ரூபாய் இருக்கிறது.

COTTON GOODS.

**துணி ஸாமான்கள்.**—இதர தேசங்களிலிருந்து சென்னப்பட்டணத்திலும், ரங்கூனிலும் இறக்குமதி விவரங்கள்.

நூலும் முறுக்கு நூலும்.

| வார முடிவு. | சென்னப்பட்டணத்தில். |
|---|---|
| | ராத்தல். |
| மேமீ 1உ | 97,568 |
| ,, 8உ | 35,215 |
| ,, 15உ | 50,600 |
| ,, 22உ | 60,930 |
| ,, 29உ | 71,035 |
| ஆகமொத்தம் .. | 315,348 |

காரிகத் துணிகள்.

| வார முடிவு. | சென்னப் பட்டணத்தில். | ரங்கூனில். |
|---|---|---|
| | கஜம். | கஜம். |
| மேமீ 1உ | 2,820,965 | 380,832 |
| ,, 8உ | 1,883,789 | 276,510 |
| ,, 15உ | 795,229 | 313,304 |
| ,, 22உ | 2,771,911 | 147,720 |
| ,, 29உ | 1,457,552 | 313,184 |
| ஆகமொத்தம் .. | 9,729,446 | 14,31,550 |

சலவைத் துணிகள்.

| வார முடிவு. | சென்னப் பட்டணத்தில். | ரங்கூனில். |
|---|---|---|
| | கஜம். | கஜம். |
| மேமீ 1உ | 687,211 | 521,779 |
| ,, 8உ | 415,084 | 568,092 |
| ,, 15உ | 247,452 | 904,452 |
| ,, 22உ | 652,830 | 257,648 |
| ,, 29உ | 461,600 | 516,933 |
| ஆகமொத்தம். . | 2,464,177 | 27,68,904 |

இதர துணிகள்.

| வார முடிவு | சென்னப் பட்டணத்தில். | ரங்கூனில். |
|---|---|---|
| மேமீ 1உ | 1,008,482 | 855,170 |
| ,, 8உ | 897,037 | 549,113 |
| ,, 15உ | 212,881 | 1,058,016 |
| ,, 22உ | 1,096,124 | 236,720 |
| ,, 29உ | 414,425 | 968,196 |
| ஆகமொத்தம் .. | 36,28,949 | 36,67,215 |

ரெயிலில் அனுப்பப்பட்ட துணிகள்.

சென்னப்பட்டணத்திலிருந்து ரெயில் வழியாய் அனுப்பப்பட்ட ஸ்வதேச பிறதேச துணி ஸாமான்கள். ஒரு அந்தர் என்பது 112 ராத்தல்.

| வார முடிவு. | அந்தர். |
|---|---|
| மேமீ 1உ | 6,416 |
| ,, 8உ | 5,746 |
| ,, 15உ | 5,256 |
| ,, 22உ | 5,597 |
| ,, 29உ | 3,495 |
| ஆகமொத்தம் .. | 26,510 |

PIECE GOODS AND YARN.

**துணிகளும் நூலும்.**--சென்ற பதினைந்து நாளாய் துணியிலும் நூலிலும் வியாபாரம் சொற்பமாயிருந்ததாம். சென்னப்பட்டணத்திலும் வெளி ஜில்லாக்களிலும் வியாபாரத்திற்கு அனுகூலங்கள் இருந்தும் மதராஸ் தென்மராட்டா ரெயில் வேலை நின்று விட்டதால் சரக்குப்போக்குக்கு இடமில்லாமல் வியாபாரம் உபாயமாகிவிட்டதாம். இப்பொழுது சரக்குகள் கொஞ்சம் எடுபடுவதாயும் விலைகள் ஒரேவிதமாக இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. சீமை விலைகள் முடுக்காகவே இருக்கின்றனவாம்.

IMPORT OF SUGAR.

**சர்க்கரை இறக்குமதி.**—ஏப்ரல் மீ 24 தேதி முதல் மேமீ 29 தேதி வரையில் இங்கிலாந்திலிருந்து 52 அந்தரும், ஜர்மனியில் இருந்து 4,500 அந்தரும், ஆஸ்ட்ரியா ஹங்கெரியில் இருந்து 19,473 அந்தரும் சென்னப்பட்டணத்தில் இறக்குமதியாயின. இதே காலத்தில் ரங்கூனில் இறக்குமதியான சர்க்கரை இங்கிலாந்திலிருந்து 50 அந்தர், ஆஸ்ட்ரியா ஹங்கெரியில் இருந்து 2,000 அந்தர், ஐரோப்பா அல்லாத தேசங்களில் இருந்து 850 அந்தர்.

11 AUG 1909 MADRAS.

பிழைக்கும்வழிக்கு அனுபந்தம்.

Supplement to "Practical Life."



THE MAHARAJAH OF BARODA.

பரோடா மகாராஜா.


# பிழைக்கும் வழி

# PRACTICAL LIFE

ஜி. ஏ. வைத்தியராமன், பி.ஏ. பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B.A. EDITOR.

புஸ்தகம் I. Vol. I. | ஸௌமிய௵ ஆனி௴—JUNE 1909. | ஸஞ்சிகை 6. No. 6.


## பிழைக்கும் வழி.

## PRACTICAL LIFE.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், பிராஜாலக்ஷணம், வித்தியா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

**தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.**

| | உள் நாடு. | அந்நிய நாடு. |
|---|---|---|
| வருஷம் 1க்கு | 4 0 | 6 0 |
| 6 மாதத்திற்கு | 2 0 | 3 0 |
| தனிப்பிரதி | 0 6 | 0 8 |

A popular Tamil monthly magazine of general information and instruction devoted mainly to agriculture, trade, industry, citizenship, and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | Foreign. Rs. A. P. |
|---|---|---|
| Per annum ... | 4 0 0 | 6 0 0 |
| ,, half year ... | 2 0 0 | 3 0 0 |
| Single copy ... | 0 6 0 | 0 8 0 |

Rates of advertisement and other particulars on application to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 10, Esplanade, Madras.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
10, எஸ்பிளனேட், மதராஸ்.

## SOME ADVANTAGES OF LIVING ON THE FARM.


BY

RAO SAHIB. T. RAGAVIAH, B.A.,
*Revenue Officer, Madras Corporation.*


## பண்ணை நிலத்தில் வசிப்பதால் உண்டாகும் சில பலன்கள்.

சென்ற பங்குனி மாஸத்து ஸஞ்சிகையில் தென்னிந்தியா கீழ்பாகத்து ஜில்லாக்களுக்கும், மேற்கு ஜில்லாக்களில் முக்கியமாய் தென் கன்னட ஜில்லாவுக்கும், விவஸாயமுறைகளில் உள்ள வித்தியாஸங்களை எடுத்துச் சொன்னேன்.

இந்த விவசாய முறைகளில் உள்ள வித்தியாசங்களைப் பொருத்து இவ்விரு நாட்டு பெண்களுக்குள்ள வித்தியாசங்களைப்பற்றி இப்பொழுது சொல்லுகிறேன்.

நம் நாட்டில் கேவலம் கூலிவேலை செய்யும் ஏழைக் குடியானவன்வீட்டு பெண்பிள்ளைகள் நாள் தோறும் தங்கள் நிலங்களிலேயே தாங்கள் உழைப்பதால் விவசாயத்தின் தன்மையை கொஞ்சம் அறிந்திருக்கலாம். அவர்களை விட

சற்று மேலான அந்தஸ்திலுள்ள பெண்பிள்ளைகளுக்கோ விவசாய ஞானம் சிறிதும் கிடையாது. பணக்காரன் வீட்டுப்பெண்ணைக் கேட்டால் நெல் காச்சிமரம் உண்டென்று சொல்வாள் என்னும் வசனம் நம்நாட்டில் சாதாரணமாய் வழங்குகிறதல்லவா? அதினாலேயே நான் சொல்வது உண்மையென விளங்கும். பூஸ்திதியுள்ள புருஷன் இறந்தால் பெண்பிள்ளை இந்நாட்டில் இன்னது செய்யவேணும் என்று தெரியாமல் தவிப்பாள். தென்கன்னட நாட்டிலோ விவசாயப்பயிற்சி யில்லாத பெண்பிள்ளையைக் காண்பது அரிது. புருஷர்களைவிட திறமையுடன் தம் வயல்களைப்பயிரிடும் கண்ணிய ஸ்திரீகள் அநேகரை நான் அந்நாட்டில்பார்த்திருக்கிறேன். இதற்குக் காரணம் அந்நாட்டுப் பெண்கள் தங்களுக்குரிய வயல்களிலேயே பிறந்து வளருவதே. ஆகவே, அவர்களுக்கு உழுங்காலம், விதைக்கும் காலம், அறுக்குங்காலம், முதலான விவசாய விஷயங்கள், செம்மையாய்த் தெரியும். இன்ன விஸ்தீரணமுள்ள வயலுக்கு இவ்வளவு விதை விதைக்கவேண்டும், அதை உழவோ, களை எடுக்கவோ, அறுக்கவோ இத்தனை ஆள் விடவேண்டும், என்பதும் நன்றாய்த் தெரியும். விதையைத் தயார் செய்கிறவிதமும், புகையிலையைப் பக்குவஞ் செய்யும் விதமும், தானியங்களை பாதுகாக்கும் வழியும், மழைகாலத்தில் வெள்ளரிக்காய் அழுகிப்போகாமல் தொங்கவிடும் பக்குவமும், அவர்கள் அறிவார்கள். தம் பசுமாடுகளுக்குத் தகுந்த தீவனங் கொடுக்கவும், பால் கரக்கவும், நோய் வந்தால் சொஸ்தப்படுத்தவும், மற்ற காலங்களில் அவைகளை மேய்க்கவும், அவர்கள் அறிவார்கள். தம் வயல்களுக்கு வேண்டிய எரு முதலியவைகளைத் தயார் செய்யவும், அவைகள் வீணாகாதபடி பாதுகாக்கவும் அவர்கள் அறிவார்கள். தம் குடியிருப்புக்கு மேலுள்ள மலைச்சரிவுகளில் வளர்ந்து நிற்கும் மரங்களை விறகுக்காக மாறி மாறி வெட்டவும், அவைகளிலுள்ளத் தழைகளை சேர்த்து எருவாக்கவும், அவர்களுக்குத் தெரியும். இதுவும் தவிர, தம் வயல்களில் காய்க்கும் கமுகங்கனிகளை விற்பனைக்காகத் தயார் செய்யவும், தென்னங்கனிகளுக்குத் தகுந்த விலை வரப்பற்றவும், அவர்கள் அறிந்தவர்கள். சுருக்கிச்சொல்லின், தென்கன்னட ஜில்லாவிலுள்ள புருஷர்களுக்குத்தெரிந்த விவசாய விஷயங்களில் அந்நாட்டுப் பெண்பிள்ளைகளுக்குத்தெரியாதது ஒன்றுமில்லை. இந்நாட்டுப் பெண்பிள்ளைகள் விஷயத்தில் மேலே சொன்னவைகளையெல்லாம் அந்நாட்டுச் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் அன்வயித்துக்கொள்ளலாம்.

நம்நாட்டில் பலவருஷகாலமாக ஒழுக்க சீர்திருத்த சபையார் படும் பிரயாசைக்கும் அடங்காமல் செழித்திருக்கும் சில துர்அபிப்பிராயங்களும், துர்வழக்கங்களும், மேல்நாட்டில் குடியானவன் தன் நிலத்திலேயே வசிக்கும் வழக்கத்தால் அற்றுப்போய் அந்நாடு இவ்விஷயங்களில் சீர்ப்பட்டிருக்கிறது. அவையாவன

(1) பிராமணன் தன்கையால் விவசாயம் முதலான கிருஷிகள் செய்ய ஒண்ணாது என்பது.

(2) பெண்பிள்ளைகள் அதிக விலையுயர்ந்த ஆபரணங்கள் தரித்துக்கொள்ளவேணும் என்னும் ஆவல்.

பிராமணன் கையில் நெருப்பிருக்கிறது, அவன் தொட்டதெல்லாம் எரிந்து போம், என்ற நம்பிக்கையொன்று நம் நாட்டில் குடிகொண்டு நிலபல முள்ள பிராமணாளை தங்கள் கைகளால் கிருஷி செய்ய ஒட்டாமல் அவர்களை சோம்பேரிகளாக்கிக்கொண்டிருக்கிறது. மேல்நாட்டிலோ இந்த நம்பிக்கை சிறிதுமில்லை.



தென்கன்னட ஜில்லாவில், முக்கியமாய் மலையடிவாரங்களில், தங்கள் கைகளால் நிலங்களை வெட்டித்திருத்தி, உழுது, தண்ணீர்க்கால்களை துரஸ்துசெய்து, விவசாயம் செய்யும் பிராமணனை காண்பது மிக்க சாதாரணம். அந்நாட்டில் பிராமணப்பெண்கள் தழையறுத்து எருவாக்குவார்கள். அவ்வெருவைத் தங்கள் தலைகளில் சுமந்து போய் பாக்கு தென்னை முதலான மரங்களுக்கு இடுவார்கள். இவ்வண்ணம் கிருஷி செய்யும் பிராமணாளில் முக்கியமானவர்கள் உறவிக்கர் என்னும் ஓர் ஜாதியார். அடிக்கை (பாக்கு) தோட்டம் வைப்பதற்கு உறவிக்கனால்தான் முடியும் என்னும் வசனம் அந்நீட்டில் சாதாரணமாய் வழங்குவதின் காரணம் அத்தோட்டங்கள் அநேகம் அந்த ஜாதியாரால் வைத்து விருத்தி செய்யப்படுவதின் பொருட்டேயாம். கமுகந்தோட்டங்கள் உண்டாக்குவதற்காகவே இந்த ஜாதியாரை சுமார் 700 வருஷங்களுக்குமுன் கோதாவரி தீரத்திலுள்ள உறவிக்க க்ஷேத்திரம் என்னும் நாட்டிலிருந்து தென்கன்னட நாட்டிற்குக் கொண்டு போய் ஓரரசன் குடி யேற்றினான் என்னும் ஒரு ஐதிகம் இந்நாட்டிலுண்டு. இந்நாட்டில் பிராமணன் தன் சோம்பலையும் தன் ஜாதிக்குரிய வீண்பெருமையையும் விட்டு தன் கையால் கிருஷிசெய்து பிழைப்பதற்கு முக்கிய காரணம், தன்னிலத்தில் தான் குடியிருப்பதேயென எனக்குத் தோன்றுகிறது. அவரவர்கள் தங்கள் தங்கள் நிலங்களில் வசிப்பதினால் ஊராரெல்லாம் ஒருங்குகூடி வீண்காலம் போக்காமல் தம் மனைவி மக்களின் உதவியால் தங்கள் தங்கள் நிலத்திற்கு வேண்டிய கிருஷி செய்யும் கவலையே அவர்கள் மனதில் மிகுந்து நிற்கும்.

விலையுயர்ந்த ஆபரணங்கள் அணியும் ஆசை நம் நாட்டிலுள்ள ஸ்திரீகள் மனதில் குடிகொண்டிருப்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். இந்த ஆசைக்கு அளவில்லை. அதிலும் சிலவருஷகாலமாய் விலை யுயர்ந்த தென் ஆப்பிரிக்காதேசத்து வைரங்கள் தலைப்பட்டதால் இந்த வைரங்கள் பதித்த நகைகள் அணியும் பொருட்டு நம்மவர் செலவிடும் பணத்திற்கும் படும் கடனுக்கும் அளவில்லை. ஆபரணங்களின் பொருட்டு செலவிடும் பணத்திற்கும் மண்ணில் புதைக்கும் பணத்திற்கும் என்ன வித்தியாசம்? அந்தப் பணத்தினால் யாருக்கும் பிரதிப்பிரயோசனம் கிடையாதல்லவா? ஆபரணங்களில் செலவிடும் திரவியத்தை வேறு கைத்தொழில் அபிவிருத்தி முதலிய பிரயோசனகரமான வழிகளில் செலவிட்டால் எவ்வளவு நலமாயிருக்கும்? அதுவும் தவிர, ஆபரணங்களில் போகும் பணம் தீங்கையும் விளையச்செய்யும். நம் நாட்டில் நடக்கும் களவுகள், கொள்ளைகள், வழிப்பறிகள் முதலான குற்றங்களுக்கெல்லாம் இவையே காரணமாகின்றன. அவைகளை இழந்து விடுவோம் என்ற பயத்தினால் ஜனங்கள் தங்கள் சுகத்திற்கு விரோதமாய் குடிபடைகளில் ஒருமிக்க வசிக்க காரணமுமாகின்றது. தென்கன்னட நாட்டில் ஜனங்கள் தங்கள் தங்கள் வயல்களில் தனித்து வசிப்பதால் விலையுயர்ந்த ஆபரணங்களைத் தேடாதவழக்கம் அவர்களுக்கு வந்துவிட்டது. அந்த தேசத்தில் பெருத்த பணக்காரன் பெண்ஜாதிக்கும், 500ரூபாய்க்கு மேல் விலைபெறும் ஆபரணங்கள் இருப்பது அருமை. நம் நாட்டிலோ 5000 ரூபாய் பெறுமான நகைகள் ஒருஸ்திரீக்கு இருந்தாலும் அதை அவள் ஒரு பெரிதாக நினைப்பதில்லை. தனியாக வசிக்கும் ஓர் காரணத்தைப்பற்றி தென்கன்னட நாட்டிலுள்ள ஜனங்கள் ஆதியில் நகை நாணயங்களை கையில் அதிகமாக வைத்துக்கொள்ளாமல் இருந்தார்கள். அதேவழக்

கம் இக்காலத்தில் அவர்களுக்குள் வேர்ஊன்றி விட்டது. ஆகவே நெருங்கிய பஸ்திகளில் அவர்கள் வசிக்கும்படி நேரிட்டாலும், ஆபரணங்களில் அந்த நாட்டார் அதிக செலவிடுவதில்லை. கையில் பணம் மிகுதியானால் அந்நாட்டார் முக்கியமாய் அதைக்கொண்டு தம்பூஸ்திதியை விருத்தி செய்வார்கள். தம் வயலை அடுத்துள்ள மலைச்சரிவை வெட்டித்திருத்தி, தம் வயலின் விஸ்தீர்ணத்தை அதிகரிப்பதிலோ, காட்டு ஓடைகளின் இருகரைகளையும் செப்பனிட்டு கமுகந்தோட்டம் விளைவிப்பதிலோ, அக்காட்டோடைகளின் குறுக்கே அணைகள் போட்டு, ஓடைகளின் ஊடே கேணிகள் உண்டாக்கி, ஜலத்தைத்திருப்பி தம் வயல்களுக்கும் தோட்டங்களுக்கும் பாய்ச்சுவதிலோ, அவர்கள் தம் திரவியத்தை முக்கியமாய் செலவிடுவார்கள். இக்காரியங்களை கவனித்தபிறகுதான் ஆடையாபரணங்களை அவர்கள் நினைப்பார்கள். இந்தவழக்கம் அந்நாட்டுப் பெண்களிடத்தும் நிலை நின்றதனால் அவர்கள் எவ்வளவு தனிகராயிருந்தாலும் இரண்டு ரூபாய்க்கு மேல் பெறாத ஆடைகளையும் சில அற்பமான நகைகளையுமே உபயோகிப்பதில் சந்துஷ்டி அடைவார்கள். அந்த நாட்டு ஸ்திரீகளிடத்தில் விலையுயர்ந்த ஆபரணங்களிருந்தால் குழந்தைகள் பிறந்தவுடன் அவைகளை விற்று அந்த குழந்தைகளுக்குப் பிற்காலத்தில் உதவும் பொருட்டு விற்ற ஐவேசை நிலபுலம் வாங்கியோ மற்றெவ்விதத்திலோ சேகரித்து வைப்பார்கள். இப்படிச் செய்வதும் அவர்களுக்கு ஒரு வழக்கமாய் விட்டது. ஆகவே இந்த வழக்கத்தினால் உண்டாகும் நன்மைக்கு அளவுண்டா?

டி. ராகவையா.

---

## WEAVING FACTORIES

BY

T. SUNDARAM,

*A Student of Weaving.*

## நெசவுச் சாலைகள்.

1. நம்முடைய தேசத்தில் வெகுகாலமாய் ஜனங்களுக்கு ஜீவனாதாரமாய் இருந்துகொண்டுவரும் தொழில்கள் முக்கியமாய் இரண்டே என்று சொல்லலாம். அவையாவன, விவசாயம், நெசவு. இவை இரண்டில் நெசவுத் தொழிலில் எனக்குக் கொஞ்சம் அநுபோகம் இருக்கிறதினால் அதைப்பற்றி சில விஷயங்களை தங்கள் பத்திரிகை மூலமாய் தெரிவிக்கிறேன். சுமார் 2, 3 வருஷங்களாய் நெசவுத் தொழிலையும் நெசவுக்காரர்களையும் விர்த்தி செய்யும் பொருட்டு அநேக ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. தறிப்பந்தயங்களென்ன, நெசவுச் சாலைகளென்ன, நெசவுப் பள்ளிக்கூடங்களென்ன, இனாங்களென்ன, ஸ்காலர்ஷிப் என்ன, இன்னும் இம்மாதிரியான ஏற்பாடுகள் அநேகம் செய்யப்பட்டு வருகின்றன. பரீக்ஷை செய்து பார்த்ததில் விசை நாடாத்தறியானது கைத்தறியைக் காட்டிலும் ஏறக்குறைய 2 மடங்கு வேலை அதிகம் செய்யக்கூடியதென்றும், அதை நெசவுக்காரர்கள் உபயோகப்படுத்தினால் அதிகமாய் சம்பாதிக்கக் கூடுமென்றும் நிதர்சனமாய் தெரியவருகிறது. இது பொருட்டே, அநேகம் சிறுவர்கள் சர்க்கார் உத்தியோகத்தில் 10, 15 ரூபாய் சம்பளத்தில் அவஸ்தைப்படுகிறதைக் காட்டிலும் சுயேச்சையாய் ஒரு காரியத்தை செய்ய வேண்டுமென்று நெசவுச் சாலைகளை ஏற்படுத்திக்கொண்டு வருகிறார்கள். எனக்குத் தெரிந்த வரைக்கும் இந்த சாலைகள் அநேகமாய் விர்த்திக்கு வந்ததில்லை. ஒன்று இரண்டுதவிர மற்றவைகளெல்லாம் ஓங்கிவளரவில்லை. இதற்குக் காரணம் என்னவென்று சற்று யோசித்துப் பார்ப்போம். அநேகம் சிறுவர்கள் தங்களுக்கும் வேலை செய்கிறவர்களுக்கும் க்ஷேமம் உண்டாகும் என்று நினைத்து தங்கள் கையிலிருக்கும் சொல்ப முதலை இந்தத் தொழிலில் போட்டுவிட்டு பிற்பாடு விழிக்கிறார்கள். இவர்கள் ஸ்திதி மிகவும் பரிதாபமாயிருக்கிறது. இவர்கள் இனிமேலாவது ஜாக்கிரதையாய் இருக்கவேண்டுமென்கிற எண்ணத்துடன் இவர்கள்நடத்தும் தொழில் ஏன் விர்த்திக்கு வருகிறதில்லையென்பதைப்பற்றி சில காரணங்களைச் சொல்லுகிறேன். இதுவும் தவிர, தொழிலை நஷ்டம் வராமல் நடத்தும் பொருட்டுச் செய்ய வேண்டிய சில சாதனங்களையும் இதில் எடுத்துக் காண்பிக்கிறேன்.



2. முதலாவது ஒரு தொழிலை நடத்துபவனுக்கு அந்தத்தொழிலின் ரகசியங்களெல்லாம் நன்றாய்த் தெரிந்திருக்க வேண்டும். இது தெரியாமல் வேலை நடத்துவது மிகவும் அசாத்தியம். இப்பொழுது நடத்தப்பட்டு வரும் நெசவுச் சாலைகளில் அநேகம் பேருக்கு அதில் அநுபோகமே கிடையாது. அநுபோகம் இல்லாததினால் கூலிக்காரர்கள் சொல்வதை நம்பவேண்டியதாயிருக்கும். அநேகமாய் கூலிக்காரர்கள் தங்கள் சொந்த லாபத்தில் நோக்கம் வைத்துக்கொண்டு பேசுவார்கள். இப்படிச் சொந்த சாமர்த்தியமும் அநுபோகமும் இல்லாமல் ஒருவர் வார்த்தையைக் கேட்டு வேலை நடத்திக்கொண்டு வந்தால் கடைசியில் தொழிலுக்கு நஷ்டம் வந்துசேரும். ஆகையினால் ஒருவர் ஒரு நெசவுச்சாலை ஏற்படுத்தி தனக்கும் தன் வேலைக்காரர்களுக்கும் க்ஷேமத்தை உண்டாக்க வேண்டுமானால் தானே அந்தத் தொழிலை நன்றாய் கற்றுக் கொள்ள வேண்டும். அதாவது, ஒரு நெசவுப் பள்ளிக்கூடத்தில் போய் படித்து தனக்கு பூரா அநுபோகமும் ஒரு நெசவுச்சாலையை சமாளிக்கும் சாமர்த்தியமும் வருகிற வரைக்கும் கற்றுக்கொள்ளவேண்டும். இதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன். சித்தூர் ஜில்லாவிலிருக்கும் நாராயணவனத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஹனுமான் நெசவுச்சாலையை நடத்துபவர் மிகவும் அநுபோகப்பட்டவர். அவர் நம் இந்தியாவிலுள்ள நெசவுச்சாலைகளுக்கெல்லாம் போய் அங்கங்கே கொஞ்சநாள் இருந்து வேலையைக் கற்றுக்கொண்ட பிற்பாடு இப்பொழுது சொந்தமாய் ஒரு தொழிலை நடத்திக் கொண்டு வருகிறார். தொழிலும் நன்றாய் விர்த்திக்கு வந்து கொண்டிருக்கிறது.

3. ஒரு தொழிலை ஸ்தாபிக்க வேண்டுமானால் சரியான இடத்தை தெரிந்தெடுக்க வேண்டும். கண்ட இடத்தில் போய் ஒரு தொழிலை வைக்கக்கூடாது. பட்டணவாசங்களில் ஒரு தொழிலை வைத்து நடத்துவது மிகவும் அசாத்தியம். அநேக கஷ்டங்கள் வந்து சேரும். துணிகளுக்குப் பேர்போன இடங்களில் நெசவுச்சாலைகளை வைக்கக்கூடாது. அதாவது காஞ்சீபுரம், மதுரை, சேலம், தஞ்சாவூர், துயிலி, பரமக்குடி இப்பேர்ப்பட்ட இடங்களில் தொழிலை நடத்தினால் கூலிகளில் சங்கடங்கள் வந்துசேரும். வேலைக்காரர்களுக்கு ஏற்கனவே இப்பேர்ப்பட்ட இடங்களில் சாதாரணமாய் பிழைப்புக்கு வழி இருக்கிறது. இவர்களை ஜவுளி வியாபாரிகள் அட்வான்ஸும் கடனும் கொடுத்து வேறே எங்கேயும் போகவொட்டாமல் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தவிர, புடவைகள், துப்பட்டாக்கள் இப்பேர்ப்பட்ட வஸ்திரங்கள் நெய்கிறவர்களுக்கு கூலி அதிகமாய் கொடுத்தால்தான் ஒரு நெசவுச் சாலையில் வேலைக்கு வருவார்கள். அதுவும் தவிர, அவர்களுக்கு அட்வான்ஸ் கொடுக்க

வேண்டியதாய் வரும். இப்படி கொடுக்கும் பக்ஷத்தில் சொல்ப முதலைக்கொண்டு வேலை நடத்துகிறவர்களுக்கு கட்டிவராது. சாதாரணமாய் நெய்கிறவர்களுக்கு அட்வான்ஸாக கொடுக்கிற பணம் மறுபடியும் கைக்கு திரும்பி வராதென்கிறது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆகையினால், கிராமாந்தரங்களுக்குப் போய் அங்கிருக்கும் கூலி நிதானத்தைப் பார்த்து சரியான கட்டிடம் கட்டி வேலையை நடத்த வேண்டும். அதுவும் தவிர, வீட்டுவரி, வருமான வரி, இந்த தொந்தரவுகளெல்லாம் கிராமங்களில் கிடையாது. ஆகையினால், கிராமங்களில் நெசவுச்சாலைகளை ஸ்தாபித்தால் அநேக விஷயங்களில் அனுகூலம் உண்டாகும்.

4. விசை நாடாத்தறியானது கைத்தறியைக் காட்டிலும் 2 மடங்கு வேலை அதிகம் செய்யக்கூடியதானாலும், ஏககாலத்தில் இந்த தறிகளை செய்து போட்டுவிடக்கூடாது. சாதாரணமாய் நெசவுக்காரர்களுக்கு கைத்தறியில் அதிகப் பழக்கம். அவர்களை திடீரென்று விசைநாடாத்தறியில் வேலை செய்யச் சொன்னால் கொஞ்சம் கஷ்டப்படுவார்கள். ஆகையினால், ஒரு நெசவுச்சாலையை ஏற்படுத்தும் பொழுதே பாதித் தறிகள் கைத்தறிகளும், மீதி விசைநாடாத் தறிகளுமாக வைத்து வேலையை நடத்த வேண்டும். பக்கத்திலேயே இரண்டுவித தறிகளும் வேலைசெய்து கொண்டு வந்தால் விசைநாடாத்தறியிலிருக்கும் சூக்ஷமங்களை யெல்லாம் நன்றாய் தெரிந்து கொள்ளக் கூடும். வரவர கைத்தறிகளையெல்லாம் எடுத்து விட்டு விசைநாடாத்தறிகளை பர்த்தி பண்ணிக் கொள்ளலாம். இப்படிச் செய்தால் தொழில் முதலில் நஷ்டம் அடையாமல் தன்னை காப்பாற்றிக் கொள்ளும்.

5. கூலி விஷயத்தில் வேலைக்காரர்களுக்கும் எஜமானனுக்கும் அடிக்கடி அநேக தொந்தரவுகள் நேரிடும். சிலசமயங்களில் வேலைக்காரர்கள் கட்டுப்பாடாய் வேலைக்கு வராமல் நின்று விடுவார்கள். கூலியை ஜாஸ்திப்படுத்தினாலொழிய வேலைக்கு வரமாட்டோமென்று பயமுறுத்துவார்கள். சரியாய் ஒவ்வொரு நாளும் வேலைக்கு வரமாட்டார்கள். இது தவிர, அட்வான்ஸ் பணம் கேட்பார்கள். இப்படி அவர்கள் வேலைக்குவராமல் அடிக்கடி நின்று கொண்டிருந்தால் தொழிலுக்கு சீக்கிரத்தில் நஷ்டம் உண்டாகும். ஆகையினால், கூலிக்காரர்கள் ஒவ்வொரு நாளும் வேலைக்கு தவறாமல் வரும்படிக்கும், கூலி விஷயத்தில் தகரார் பண்ணாத படிக்கும் ஒரு ஏற்பாடு செய்யவேண்டும். அதாவது, ஒரு மாசத்திற்கு இத்தனை நாள் வரவேண்டியதென்றும், மாசத்திற்கு நூல் நம்பருக்குத் தகுந்தபடி இவ்வளவு கெஜம் கொடுக்க வேண்டியதென்றும், நெய்யப்பட்ட துணியானது எடையில் குறையாமலிருக்க வேண்டுமென்றும், ஏற்பாடு செய்துவிட்டால் கொஞ்சம் சிரத்தையாய் வேலை செய்வார்கள். புதிதாய் விசைநாடாத்தறி வேலை கற்றுக்கொள்பவனுக்கு முதல் மாசத்தில் சம்பளம் கொடுத்து விடவேண்டியது. இரண்டாவது மாசம் முதற்கொண்டு இத்தனை நாள் வரவேண்டியதென்றும், இத்தனை கெஜம் கொடுக்க வேண்டியதென்றும், துணி எடையில் குறையாமலிருக்க வேண்டுமென்றும் ஏற்பாடு செய்து விடவேண்டியது. பெரிய காஞ்சீபுரம் நெசவுக்காரச் சங்கத்தில் இதே மாதிரி தொந்தரவுகள் அடிக்கடி வந்து கொண்டிருந்தன. பிற்பாடு ஒரு ஏற்பாடு செய்யப்பட்டது. முதலாவது, 40 நம்பரில் 3 முழ அகலத்தில் மாசம் 1-க்கு 100 கெஜத்திற்கு குறையாமல் நெய்யவேண்டும். மாசத்தில் 26 நாள் கட்டாயம் வேலை செய்யவேண்டும். துணி எடையில் குறையாமலிருக்க



வேண்டும். இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு வேலை செய்து வந்தால் இந்த 100 கெஜத்திற்கும் கெஜம் 1-க்கு 0-1-0 வீதம் கூலி கொடுக்கிறதும் தவிர, 3 ரூபாய் இனாமாக கொடுக்கப் படும். சரியாய் வேலை செய்கிறவனுக்கு மொத்தத்தில் கெஜம் 1-க்கு 0-1-6 வீதம் கட்டிவரும். சரியாய்வேலைக்கு வராமல் கெஜக்கணக்கு மாத்திரம் கொடுத்தால் கெஜம் 1-க்கு 0-1-0 வீதம் தான்கொடுக்கப்படும். 60 நம்பருக்கு மாசம் 1-க்கு 80 கெஜம் நெய்யவேண்டும். இப்படி நெய்தால் கெஜம் 1-க்கு 0-1-6 வீதம் கொடுத்து 3 ரூபாய் இனாமாக கொடுக்கிறார்கள். மொத்தத்தில் 60 நம்பர் துணி கெஜம் 1-க்கு 0-2-0 க்கு மேல் ஆகிறது. இந்த ஏற்பாட்டில் சரியாய் நாள் தவறாமல் வேலை செய்கிறவனுக்குத் தான் சரியான கூலி கொடுக்கப்படுகிறது. மற்றவர்களுக்கு இனாமாக கொடுக்கப்படும் பணம் வருகிறதில்லை. இது தவிர, இவர்கள் சம்பாதிக்கிற பணத்தில் ரூபாய் 1-க்கு 0-1-0 வீதம் பிடித்துக் கொண்டு இவர்கள் கடைசியில் நெசவுச்சாலையை விட்டுபோகும்போது இதையெல்லாம் மொத்தமாய்ச்சேர்த்து வட்டி கட்டிகொடுத்தால் நம்மிடத்தில் பிடிப்பும் விசுவாசமும் ஜாஸ்தியாய் உண்டாகும். நம்முடைய தொழிலும் யாதொரு நஷ்டத்தை அடையாமல் வளர்ந்து கொண்டிருக்கும்.

6. இந்த கஷ்டங்களையெல்லாம் தாண்டின பிறகு கூட, இன்னொரு கஷ்டம் இருக்கிறது. அதாவது, நெசவுச்சாலையில் நெய்யப்பட்ட துணிகளை விற்பனை செய்தல். சாதாரணமாய் ஜவுளி வர்த்தகர்கள் சரக்கைக் கடனுக்கு கொடுக்கிறார்கள். வருஷக்கணக்காக பாக்கி தங்கிவிடுகிறது. கடைசியில் தண்டல் வசூல் பண்ணுகிறதற்கு குமாஸ்தாக்களை படிச்செலவு கொடுத்து அனுப்புகிறார்கள். சொல்ப முதல் வைத்து வேலை செய்கிறவர்களுக்கு இம்மாதிரி கடன் கொடுத்து வந்தால் தொழில் மேல் மேல் விர்த்தி அடையாது. ஆகையினால் இவர்கள் எப்பொழுதும் ரொக்கம் வருகிற பாபத்துகளில் பிரவேசிக்க வேண்டும். சாதாரணமாய் வெள்ளை தினுசுகள் நெய்யும் பக்ஷத்தில் சரக்கை கடனுக்குகொடுக்க வேண்டியதாய் நேரிடும். ஒப்பந்தமாய் ரொக்கத்திற்கு ஆசாமிகள் அகப்படுகிறது ரொம்பவும் கஷ்டம். ஆனால், ரொக்கம் வரக்கூடிய தினுசுகள் அநேகம் இருக்கின்றன. இவைகளில் பிரவேசித்தால் அப்போதைக்கப்போது பணம் புரண்டுகொண்டே இருக்கும். தொழிலும் மேல் மேல் விர்த்தி அடையும். இதை நோக்கித்தான் தொண்டையார் பேட்டையிலிருக்கும் தியாகராஜ செட்டியார் நெசவுச்சாலையில் "மதராஸ் ஆண்டு கர்ச்சிப்" என்று சொல்லப்படுகிற பட்டை மார்க் துணிகளை ஏராளமாய் நெய்து வருகிறார்கள். இந்த சரக்குகளை நெய்தால் கைக்கு பணம் வந்துவிடுகிறது. எவ்வளவு சரக்குகள் இருந்த போதிலும் ரொக்கத்திற்கு வாங்குகிறவர்கள் அநேகம் பேர் இருக்கிறார்கள். அதே மாதிரி கைலி தினுசுகளை ஏராளமாய் ரொக்கத்திற்கு வாங்குகிறவர்கள் அநேகம் பேர் இருக்கிறார்கள். இதை நோக்கித்தான் தொண்டையார் பேட்டையிலேயே நாட்டுகோட்டைசெட்டியார் ஒருவர் தன்னுடைய பட்ரையில் கைலி தினுசுகளைத் தவிர வேறொன்றும் நெய்கிறதில்லை. இந்த இரண்டு தினுசுகளும் வெகு அகலக்கட்டை. வெகு சுலபமாய் விசைநாடாத்தறியில் நெய்யலாம். இந்த தினுசுகளில் கொஞ்சம் லாபம் கூட இருக்கிறது. ஆகையினால், கண்ட தினுசுகளை நெய்து ரொக்கத்திற்கு பணம் வராமல் அவஸ்தைப் படுகிறதைக் காட்டிலும் இந்த மாதிரி 2, 3 தினுசுகளில் ரொக்கத்திற்கு பாடுபடுவது அநேக விஷயங்களில் அனுகூலத்தை உண்டாக்கும். மேலே சொல்லப்பட்டிருக்கிற 5, 6 குறிப்புகளை இந்த தொழிலில் பிரவேசித்திருக்கும் சிறுவர்கள் நன்றாய் கவனிப்பார்களென்று பூராவாய் நம்புகிறேன்.

டி. சுந்தரம்.

# EXPERIMENTS IN PADDY CULTIVATION.

BY
S. SUBRAMANIA AIYAR.,
*Manager, Palur Farm.*

## நெல் சாகுபடியில் பரீக்ஷைகள்.

தென் ஆற்காடு ஜில்லா நெல்லிக்குப்பம் ஸ்டேஷனுக்கு அடுத்த பாலூரில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சர்க்கார் விவசாயப் பண்ணையில் நெல் விருத்தியைக்குறித்துச் செய்த பரீட்சைகளின் சில அனுபவங்களையும் நெல் விதையைப் பொறுக்கியெடுத்துப் பயிர் செய்ததால் அது எவ்வளவு விருத்திக்குக் கொண்டுவரப்பட்டதென்பதையும் நான்சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

பாலூர் சுற்றிலுமுள்ள சம்சாரிகள் தங்களுடைய இருபோக நன்செயில் முதல் போகத்துக்காக சுவர்ணவாரி என்னும் நெல்லையும், இரண்டாம் போகத்துக்காக கருடன் சம்பா (சிறுமணி) என்னும் நெல்லையும் பயிரிட்டு வருகிறார்கள். முதல் போகத்தில் சுவர்ணவாரியை நாற்று விட்டு நடாமல் விதைப்பு நடந்து வருகிறது. ஏகரா ஒன்றுக்கு 22 முதல் 30 பட்டணம் படி விதை வைகாசியில் விதைக்கிறார்கள். இந்த காலத்தில் வாய்க்கால்களில் அதிக ஜலம் கிடையாது. அநேக நிலங்கள் ஜலம் எட்டாமல் தரிசாய்க் கிடக்கும். ஜலம் அதிகம் வேண்டாததாயும், ஜாஸ்தியாய் கிளைக்கக்கூடியதாயுமுள்ள பாங்கு என்னும் ஒரு வகை நெல் மேற்படி பாலூர் பாரம் பண்ணையில் ஏகராவுக்கு 7½ படி விதை வீதம் தெளிவாக நாற்றுவிட்டு 30நாளுக்குள் நாற்றுகளைப் பிடுங்கி ஒவ்வொரு நாற்றாக இரண்டு ஏகராவில் நடப்பட்டது. ஆனால், ¼ ஏகராவில் 4 அங்குலத்துக்கு ஒரு நாற்றும், ¼ ஏகராவில் 6 அங்குலத்துக்கு ஒரு நாற்றும், மற்றவைகளில் 8 அங்குலத்துக்கு ஒற்றை நாற்றும், மற்றொரு துண்டில் சாலையிலும், ¼ ஏகராவில் சுவர்ணவாரியும், இப்படி பல விதமாக நடப்பட்டது. (சாலை நடவைப்பற்றிக் கீழே கொஞ்சம் விவரமாய்ச் சொல்லுகிறேன்.) ஒற்றை நாற்று நட்டபோதிலும், ஒவ்வொன்றும் 10 முதல் 20, 30 வரையில் கிளைப்புவிட்டு செடிகள் நன்றாய் வளர்ந்து நல்ல கதிர்களுடன் பார்த்தவர்கள் ஆச்சரியிக்கும்படி விளைந்தது. அறுவடை செய்து இரண்டு ஏகராவுக்கும் கணக்கு எடுத்துப் பார்த்ததில் சராசரி ஏகராவுக்கு 1077¾ படி வீதம் கிடைத்தது. சாலையில் நட்ட நடவு எல்லாவற்றிலும் ஜாஸ்தி கண்டு முதலைத்தந்தது. செய்நேர்த்தி முதலியவைகள் எல்லாம் பக்கத்து சம்சாரிகள் செய்வது போலவேதான் செய்ததேயல்லாமல் வேறல்ல.

இதுநிற்க, இரண்டாம் போகமாகிய சம்பாப் பயிரையும் விருத்திக்குக் கொண்டுவரக் கருதி அவ்விடங்களில் ஏராளமாய்ப் பயிரிடப்படும் கருடன் சம்பா வென்னும் நெல்லை வாங்கி நாற்றங்காலில் ஏகராவுக்கு 6 பட்டணம்படிவீதம் தெளிவாய் நாற்றுவிட்டு சென்ற 1907-ம் வருஷத்தில் ஒற்றை நாற்றாக நட்டோம். நாற்றுகள் நட்ட 30 நாளுக்குள் தூறுவெடித்துக் கிளம்பிப் பூமியை மூடிக்கொண்டன. இந்த காலத்தில் நடும்பொழுது பார்க்காதவர்கள் ஒற்றை நாற்று நடவு என்று சொல்லமுடியாது. பக்கத்துச் சம்சாரிகள் வழக்கப்படி நட்ட நடவுகள் கொஞ்சம் வெளுத்திருக்க, ஒற்றை நாற்று நடப்பட்ட பயிர்கள் பசுமையாயிருந்தன. இரண்டு மாத காலத்தில் ஒற்றை நாற்று ஒவ்வொரு தூரிலும் 10 முதல் 20 கிளைகள் வெடித்து நன்றாய் வளர்ந்தன. சம்சாரிகள் பயிரில், சராசரி 3 அல்லது 4 தூருக்கு மேல் இல்லை; சம்சாரிகளுக்குக் கிடைத்த மாசூலைவிட பாரத்து மாசூல் கொஞ்சம் ஜாஸ்தியாகவே யிருந்தது. தங்கள் பயிர் செழிப்பாயும் கதிர்கள் நன்றாயும் வராமலிருந்தபோதிலும் குடியானவர்கள் தங்கள் தங்களுக்கு மறு வருஷத்துக்கு வேண்டிய நெல் விதையைத் தங்கள் மாசூலிலிருந்து வழக்கப்பிரகாரம் எடுத்து வைத்துக்கொண்டார்கள். ஆனால் பாலூர் சர்க்கார் பாரத்திலோ ஒவ்வொரு வயலுக்கும் போய் ஜாஸ்தி கிளைத்த செடிகளில் செழிப்பான கதிர்கள் வேறாகவும் மணிநெருங்கின கதிர்கள் வேறாகவும் பொறுக்கி எடுத்து விதைக்காகத் தனித்தனியே வைத்துக்கொள்ளப்பட்டன; இப்படி ஒற்றை நாற்றிலிருந்து ஒன்றாய்க்கிளைத்து நீண்ட கதிர்களில் பொறுக்கி யெடுத்த விதைநெல் 1908-ம் வருஷத்தில் சம்பா நடவுகாலத்தில் நாற்றங்காலில் ஒரு செண்டு நிலத்தில் ஒரு பட்டணம்ப்படி விதையாக ஒரு ஏகராநட 6 பட்டணம்ப்படி வீதம் நாற்று விடப்பட்டது. இப்படி விதையை நாற்றங்காலில் தெளிவாக விட்டதால் நாற்றுகள் (கேழ்வரகு) கேப்பைபோல பட்டை உரப்பாயும் செழிப்பாயும் வந்தன. இந்த நாற்று சுமார் 36-வது நாளிலிருந்து 40 நாளுக்குள் 6 அங்குலத்துக்கு ஒரு நாற்றாக நடப்பட்டது. இப்படிப் பொறுக்கி எடுத்த விதை தெளிவாக நாற்றுவிட்டு 40 நாளுக்குள் ஒற்றை நாற்றாக நட, இந்த நாற்றானது அதற்கு முந்திய வருஷம்போல் அல்லாமல் ஒவ்வொரு தூரிலும் சராசரி 20 முதல் 40 வரையில் கிளைகட்டி ஏகரா 1 க்கு சுமார் 1200 படி வரையில் கண்டு முதல் கிடைத்தது. அக்கப்பக்கத்திலிருந்த சம்சாரிகளுக்கு ஏகராவுக்குச் சராசரி 600 படி கிடைத்தது. முதல் வருஷத்தில் பாரத்தில் ஒற்றை நாற்று நட்டுப் பயிர் செய்து பலன் தந்ததை அறிந்தும் பூமிக்கு ஜாஸ்தி உரம்போட்டதனால் சர்க்கார் பாரத்தில் ஜாஸ்தி விளைந்தது என்று சொல்லிக்கொண்டு பாரத்து உத்தியோகஸ்தர் சொல்லை நம்பாமல் சம்சாரிகள் மோசம் போனார்கள். அதற்காகச் சென்ற வருஷம் உரம்போடும் போதெல்லாம் அந்த காலத்தில் எதிர்ப்படும் ஒரு சம்சாரியையோ அல்லது சம்சாரிகளையோ வைத்துக்கொண்டு வயல்களுக்கு எருவிட்டோம். பாரத்தில் எருவிடுவதெல்லாம் அவ்விடத்தில் சம்சாரிகள் செய்வது போலவேதான். அவ்விடத்தில் நன்செய்க்குப் பலர் பலவித எருக்கள் உபயோகப்படுத்துகிறார்கள். அவர்கள் நன்செய்க்கு இடும் எருக்களில் எது சிலாக்கியம் என்று அறியும் பொருட்டு ஒவ்வொரு எருவும் கால் கால் ஏகராவில் பரிசோதனை செய்யப்பட்டது.

அந்த எருக்களாவன :—

1. முத்துக்கொட்டைப் பிண்ணாக்கு ஒரு ஏகராவுக்கு ஒரு பாரம் வீதம்.
2. மணிலாக்கொட்டை பிண்ணாக்கு.
3. அவுரிச்சக்கை.
4. மாட்டுச்சாணி.
5. மணிலாக்கொட்டைக் கொடி.
6. எருக்கந்தழை.
7. பூவரசு முதலான இதர தழைகள்.

மேல்சொன்ன எருக்களின் தாரதம்மியங்களையும் கண்டுபிடிக்க எருவில்லாமலும் கால் ஏகராவில் சாகுபடி செய்யப்பட்டது.

இதில் அவுரிச்சக்கையில் ஏகராவுக்கு 1144 படி; எருக்கந்தழை போட்டதில் 1072 படி; எருவிடாத பயிரில் சராசரி 764 படி.

இந்த எரு பரிசோதனைகள் இரண்டு வருஷகாலமாய் நடந்துவருகின்றன. அதாவது, எருவிடாத நிலத்தில் இரண்டுவருஷகாலமாய் எருவில்லை. அப்படி எருவில்லாமல் போனபோதிலும், எருவிட்டு சம்சாரிகள் செய்த பயிரிலி

ருந்து வந்த மாசூலைவிட விதையைப் பொறுக்கி எடுத்து நாற்றங்காலில் விசாலமாக நாற்றுவிட்டு ஒற்றை நாற்றாக நடப்பட்ட பயிரிலிருந்து கிடைத்த மாசூல் ஜாஸ்தி.

ஆனால் ஒற்றை நாற்று நட்டு இவ்வளவு கண்டு முதலிருக்க, இரண்டு நாற்று சேர்த்துப் போட்டால் ஒருவேளை கண்டு முதல் இரண்டு மடங்கு ஆகாமல்போனாலும், கொஞ்சமேனும் ஜாஸ்தி கிடைத்தாலும், அப்படி நடுவது நலமல்லவா என்று சிலபேர் கேட்கக்கூடும். அப்படி இரண்டு நாற்று சேர்த்தும், 3 நாற்று சேர்த்தும், சர்க்கார் பண்ணையிலேயே சம்சாரிகள் பயிரிடுவது மாதிரி 6 அல்லது 8 நாற்று சேர்த்தும் போடப்பட்டது. இப்பொழுது அறுவடையான வருஷத்திலும் பரிசோதித்தோம். இரண்டு மூன்று சேர்த்து நட்ட நடுகையிலிருந்து சராசரி 1 ஏகராவுக்கு 900 படிக்கு மேல் கிடைக்கவில்லை.

மேலும், ஒரு நாற்றானது தனிமையாகக் காற்றோட்டமாய் இருக்குமேயானால் அது பெரிய கொத்தாகி அதிகம் கிளைத்து நல்ல கதிர்களுடன் வருகிறது. அதை அனுசரித்து காற்றோட்டம் கொடுக்க நெல்பயிர் சாலைசாலையாய் நடப்பட்டது. இதிலும், கால் ஏகராவில் நெருங்கிய சாலையும் (அதாவது 8 அங்குலத்துக்கு ஒரு சாலையும்) மற்றொரு கால் ஏகராவில் ஒரு அடிக்கு ஒரு சாலையும் நாற்று நடப்பட்டது. ஆனால், சாலையில் நெற்பயிர் இரண்டு அல்லது மூன்று அங்குலத்துக்கு ஒரு பயிர் நடப்பட்டது. இது எல்லாவற்றிலும் அரை அடி உயரமாய் வளர்ந்து நீண்ட கதிர்களுடன் வந்தது. இதில் களை எடுப்பது மிகவும் சுலபம். இதிலிருந்து ஏகராவுக்கு 1,200 படிக்கு மேல் கிடைத்தது.

இவ்வாறு நாற்றுகளை அதிகப்படுத்தி நடுவதினால் ஏன் தூருகட்டுகிறது குறைகிறது என்று யோசிப்போம். ஒவ்வொரு செடியும் தனது வேரைத்தன்னைச்சுற்றிலும் பரவவிட்டு ஆகாரத்தை எடுத்துக்கொள்ளுகிறது. நிலத்திலுள்ள ஆகாரத்துக்குத் தக்கபடியும், ஒரு செடிக்கும் மற்றொரு செடிக்கும் உள்ள இடைவெளிக்குத்தகுந்தபடியும் செடி கிளைத்துத் தூரு கட்டுகிறது. ஒரே இடத்தில் இரண்டு நாற்று சேர்த்து நடும்பட்சத்தில் இந்த இடத்திலுள்ள ஆகாரத்தை அந்த இரண்டு நாற்றுகளும் பாகம் செய்துகொள்கின்றன. இதே மாதிரி நாற்று அதிகப்பட அதிகப்பட ஒவ்வொரு செடிக்கும் கிடைக்கும் ஆகாரம் குறைகிறது. ஆகாரம் தகுந்தபடி கிடைக்காததால் செடிகிளைக்கிறதில்லை. தவிரவும், ஒவ்வொரு செடிக்கும் தகுந்த காற்றோட்டம் இருந்தால் தான் அதன் வேர் பரவும். அடர்த்தியாய் நட்ட முடியின் மத்தியில் காற்று செல்லுவதற்கு வழியில்லை. ஆகையால், ஜாஸ்தி நாற்று சேர்த்து நட்டவிடத்தில் கிளைப்பு குறைந்து செடியும் மெலிந்து இருக்கும். ஆகையால், அதிக நாற்று சேர்த்தும் அடர்த்தியாயும் நாற்று நடுவதில் பலன் இல்லையெனத் தெரிந்து கொள்ளலாம்.

இப்படி ஒற்றை நாற்று நடுவதில் மாசூல் லாபம் என்று தெரியவருவதால் மற்றுமுள்ள குணதோஷங்களையும் ஆராய்ந்துபார்ப்போம். ஒரு ஏகராவில் ஒற்றை நாற்று நட எத்தனை படி நெல் வேண்டியதெனக் கவனிப்போம்; ஒரு ஏகராவில் ஒரு அடிக்கு ஒரு நாற்று நட 4840×9=43560, அதாவது, 45000 நாற்று. அரை அடிக்கு ஒன்று நட 45000×4=1,80,000 நாற்று வேண்டியது. ஒன்று தப்பாமல் முளைப்பதாயிருந்தால் 1,80,000 நெல் வேண்டும்; ஒருபடி கருடன் சம்பா நெல்லை எண்ணிப் பார்த்ததில் 54,400 நெல் இருக்கிறது. 6 அங்குலத்துக்கு ஒரு நாற்று நட



வேண்டுமானால் $3\frac{1}{2}$ படி நெல் விதை போதுமானது. இதற்குமேல் அவரவர்கள் நெல் விதையைப் பொறுத்தும், சில தேசங்களை உத்தேசித்தும், 6 படி விதைவரையில் ஒரு ஏகராவுக்குப் போடலாம். நெல் சிறியதானால் $3\frac{1}{2}$ படியும் வேண்டியதில்லை. ஆகையால், ஒற்றை நாற்று நடுவதினால் அந்தந்த ஊர் வழக்கத்துக்குத் தக்கபடி விதை லாபம் இருக்கிறது; அதாவது, ஏகராவுக்கு 36-40 படி விதையில் விதை எப்பொழுது குறைகிறதோ விதைகளைப் பொறுக்கி யெடுக்கவும் நன்றாய் காயவைத்துக்கொள்ளவும், இடமும் காலமும் கிடைக்கும். விதைகளைப் பொறுக்கி வைப்பதிலுள்ள குணகுணங்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. ஆனபோதிலும் அதில் சம்சாரிகள் கொஞ்சமேனும் கவனம் செலுத்தாததனால் பலவகைகளிலும் நஷ்டம் அடைகிறார்கள்.

ஆகையால், நல்லசெடியைத்தெரிந்து எடுத்து அதில் நல்ல திறமான கதிர்களிலிருந்து விதையை எடுத்து வைத்துக்கொள்ளவேண்டும். ஒற்றை நாற்று நடுவதற்கு முடிகள் குறையும். ஆகையால் நாற்றுப் பிடுங்குவதிலும் லாபமுண்டு. நாற்றுப்பட்டை உரப்பாயிருப்பதால் கேப்பை நடவுமாதிரி ஒவ்வொரு நாற்றாய் நடுவதில் பிரயாசமில்லை. ஆகையால், ஒவ்வொரு நாற்றாய் நட்டுப் பயிர் செய்வதில் அநுகூலமேயொழிய பிரதிகூலம் கிடையாது.

எவ்வளவு தூரத்துக்கு ஒரு நாற்று நடவேண்டு மென்ற சங்கதி பூமி சாரம் முதலான அநேக காரணங்களைப் பொறுத்திருப்பதால் தங்கள் தங்கள் பூமியில் நாற்றை கிட்டவும் எட்டவும் நட்டு தீர்மானித்துக்கொள்ள வேண்டியது.

தற்காலம் நாட்டு நடவுமாதிரி நடுவதினாலேயே எனக்கு ஏகராவுக்கு 1,200 படி கண்டு முதல் கிடைக்கிறது, நான் ஏன் ஒற்றை நாற்று நட வேண்டுமென்று சில பேர் கேட்கலாம். விளைவு பூமிசாரத்தைப் பொருத்தது. பாலூரில் சம்சாரிகளுக்கு ஏகராவுக்கு 700 அல்லது 800 படி கிடைப்பதால் ஒற்றை நாற்று நடுவதில் கண்டுமுதல் அதிகப்பட்டிருக்கிறது. பூமி சாரத்தினால் நாட்டு நடவினாலே 1000 படி கிடைக்கக்கூடுமானால் ஒற்றை நாற்று அந்தப் பூமியில் நட்டால் கண்டு முதல் அதிகப்படும் என்பதற்குச் சந்தேகமுண்டோ?

தவிரவும், கருடன் சம்பா ஒற்றை நாற்றாகப் பயிரிட்டோம் என்று சொன்னேன். அது மாத்திரமல்ல; மிளகு சம்பா, சின்னச்சம்பா, முத்துச்சம்பா, மல்லிகைச்சம்பா, சீரகச்சம்பா, வெள்ளைச்சம்பா, வெள்ளைச் சிறுமணி, ஆனைக்கொம்பன், பூம்பாளை, கோணமணி, சடச்சம்பா, சின்ன குசுமா, முதலான 15 நெல் தினுசுகளை அநேக ஊர்களிலிருந்து தருவித்து 9 அங்குலத்துக்கு ஒரு நாற்றாக நட்டுப் பயிர் செய்ததில் விதை பொறுக்கி யெடுக்காமலிருந்த போதிலும், நல்ல நாற்றுகளை மாத்திரம் நட்டதால் நல்ல பலனே கிடைத்திருக்கிறது. இந்தத் தினுசுகளிலும் சம்சாரிகளுக்கு விதைக்காகக்கொடுக்க நெல் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. பாங்கு நெல் புதிதானபடியால் தபால் சார்ஜ் உள்பட ஒரு ரூபாய் நெல் சம்சாரிகளுக்குக் கிரயமில்லாமல் கொடுக்கும்படிக்கு டிபார்ட்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள். ஒற்றை நாற்றுப்போட்டு அனுபவமில்லாத சம்சாரிகள் எல்லோரும் தங்களுடைய பூமியில் விஸ்தீரணத்துக்குத் தகுந்தது போல் பொறுக்கி எடுத்த விதையை கலக்க நாற்றங்காலில் விதைத்து கார் நெல்லானால் 18-20 நாளுக்குள்ளும், சம்பாவானால் 35-40 நாளுக்குள்ளும் கொஞ்ச பூமியில் ஒற்றை நாற்றாக நட்டு முதலில் பரிசோதனை செய்தால் அதன் அநுகூலம் தெரிந்து அபிவிருத்தியடைவார்களென நம்புகிறேன்.

எஸ். சுப்பிரமணிய ஐயர்.

## HOW TO PREVENT EMIGRATION OF FARM LABOURERS.

BY
A. SETHURAMA AIYAR, D.A.

## பண்ணை ஆட்கள் அக்கரைச் சீமைக்குப் போகாமலிருக்க ஒரு உபாயம்.

சாகுபடி விஷயத்தில், கால் நடைகளுக்குப் பிற்பாடு, கூலியாட்கள் அத்தியாவசியம். கூலியாட்கள் சாசுவதக் கூலி அல்லது பண்ணை ஆட்களென்றும், அத்தக்கூலி அல்லது அன்றாடும் கூலி யென்றும், இரண்டு வகைப்படும். ஒவ்வொரு சாகுபடி விஷயத்துக்கும் இந்த இரண்டு விதமான கூலிகளில்லாமல் காரியம் நிறைவேறாது. தஞ்சாவூர் ஜில்லா நன்செய் சாகுபடியில் ஒரு ஏர் மாடு, அதாவது, 5 ஏகர் சாகுபடிக்கு, ஒரு ஆளும், ஒரு பள்ளத்தியும், ஒரு அரை ஆளும் பண்ணை ஆட்களாய் அமைகிறார்கள். அமையும் போது அட்வான்சு பணம் அல்லது சுவந்தையாக ரூபாய் 20-க்குக் குறையாமல் வாங்கிக்கொண்டு, வேலை செய்கிற வரையில் வட்டியன்னியிலும், பண்ணையை விட்டு நீங்கினால் வட்டியுடனும் கொடுப்பதாக பத்திரம் எழுதிக்கொடுப்பதோடு பண்ணையை விட்டு நீங்கும் போது சுவந்தைப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டு வேறு இடத்துக்கு போகிறோம் என்கிற நிபந்தனைக்கும் கட்டுப் படுகிறார்கள். இப்படி பண்ணை ஆட்களாய் வருகிறவர்களுடைய கூலி விகிதங்களை விசாரிப்போம்.

ஆற்றில் ஜலம் வந்து நாற்றங்காலில் தண்ணீர் விட்டநாள் முதல் நடவு முடிகிற வரையில், அதாவது, ஆனி 15௳ முதல் ஐப்பசி முதல்தேதி வரையில் சுமார் $3\frac{1}{2}$ மாதகாலத்துக்கு ஆள் தினம் 1க்கு 1 பட்டணம் படி முதல் $1\frac{1}{2}$ பட்டணம் படி நெல்லும், பள்ளத்தி ஒரு பட்டணம் படி நெல்லும், அரை ஆள் $\frac{1}{2}$ பட்டணம் படி நெல்லுமாக கூலியை தானியமாகவே யடைகிறார்கள். இதன்றி, விதை தெளிப்பில் 10ல் ஒரு பாகம் சுவதந்திரமாகவே கொண்டுபோய் விடுகிறார்கள். பண்ணை ஆட்களுக்கு இந்த $3\frac{1}{2}$ மாத காலத்தில் அநேகமாய் எல்லா நாட்களிலும் வேலையிருக்கும். ஆகையால் இந்த $3\frac{1}{2}$ மாத காலத்தில் அவர்கள் சோற்றுக்கு கஷ்டப்பட வேண்டிய நியாயமில்லை.

ஐப்பசி முதல் தை௴ 15௳ வரையில் இவர்களுக்கு தொடர்ந்தால் போல் வேலை கிடையாது. அங்கும் இங்கும் தினம் 1க்கு 2 பட்டணம்படி கூலிக்கு, சில்லரை வேலைகள் செய்தும், பரிவைத்து மீன் பிடித்தும், 24 பட்டணம் படி நெல்லுக்கு 4 மாத காலத்துக்கு 6 பட்டணம் படியுடன் வட்டி கொடுப்பதாய் கடன் வாங்கியும் வயிற்றைக் கழுவுகிறார்கள்.

தை௴ 15௳ முதல் பங்குனி 15௳ வரையில் அறுப்புக்காலமாகையால் ஜாஸ்திக் கூலி கிடைப்பதால் மிதமிஞ்சி செலவிடுகிறார்கள். 24 பட்டணம் படி நெல் அறுவடை செய்தால், 1 பட்டணம் படி கூலி கிடைக்கும். இதன்னியில் மொத்த வரும்படி 100-க்கு (சாட்டுவாய் களவடியென்று) 8 வீதம் கொண்டுபோய்விடுவார்கள். இதைத்தவிர, ஒரு ஏர்மாட்டுக்கு சிறுவாடென்று 60 குழிநிலத்தில் (20 செண்டு) உள்ள மாகூலை தாங்கள் எடுத்துக் கொள்ளுவார்கள். இது சுமார் 96 பட்டணம் படி நெல்லுக்குக்குறையாது. இக்காலத்தில் கள்ளுக்கடையில் தங்கள் வரும்படிகளைக் கொட்டுகிறார்கள். கள்ளுக்கடைதவிர அங்காடி என்கிற இன்னுமொருவிஷயம் இவர்கள் வரும்படிக்கு அதிக செலவு வைக்கிறது. அங்காடியாவது அறுப்புக்காலத்துக்கு முன்னமே ஒரு பறைத் தெரு அல்லது பள்ளத் தெருவில் அல்லது களத்தில் அட்வான்சாக தொகை முன் கொடுத்து, பின், அந்தந்தவிடங்களில் வெற்றிலை, புகையிலை, சுண்டல், பழம், உப்பு, அவித்த கிழங்கு முதலிய சில்லரைச்சாமான் தங்கள் மனம் தோன்றின விலைக்கு விற்கிறதுதான். ஒரு தெருவுக்கு அட்வான்சு வாங்கிவிட்டால் அந்த தெருவிலுள்ள ஏழைகள் அந்த அங்காடிக் கடைதவிர வேறு ஓரிடத்திலும் வாங்கக் கூடாது என்று நிபந்தனைபண்ணிக் கொள்ளுகிறார்கள். அங்காடி விற்பவர் சிறிய அளவுகளை வைத்துக் கொண்டும், கிராக்கியாயும் ஏழை அறியாத்தன்மையுள்ள ஜனங்களிடம் தானியத்திலேயே விலையை வசூலித்து விடுகிறார்கள். இந்த அறுப்புக் காலங்களில் அங்காடிகளிடம் நினைத்த போதெல்லாம் ஒன்றுக்கு இரண்டாக நெல்லைக் கொடுத்து வாங்கித்தின்கிற வழக்கத்தினாலும், கள்ளுக்கடையில் மிதமிஞ்சி நெல்லைக் கொட்டிக் குடிப்பதனாலும், கார்த்திகை மார்கழி மாதங்களில் ஜாஸ்தி வாசி வட்டிக்கு வாங்கியிருந்த கடன்களை கொஞ்சம் தீர்ப்பதனாலும், அறுப்பு முடிந்தவுடன் மறுபடியும் பட்டினி கிடக்கிறார்கள்.

பங்குனி௴ 15௳ முதல் ஆனி௴ 15௳ வரையில் தொடர்ந்தால் போல் வேலைகிடையாது. போர் அடித்தாலும் வயல் செய்நேர்த்திக்காக எரு அடித்தாலும்தான் வேலை.

இப்படி ஒரு வருஷகாலத்தில் பண்ணை ஆட்கள் சுமார் 9௴ வேலையாயும், பாக்கி சுமார் 3௴ வேலையன்னியிலும் இருக்கிறார்கள்.

ஒரு ஏர்மாடு அல்லது 5 ஏகர் நிலம் சாகுபடி செய்கிற ஒரு ஆள், ஒரு பள்ளத்தி, ஒரு அரை ஆளுக்கு, வருஷம் சுமார் 35 கலம் நெல் அதாவது சுமார் ரூபாய் 90 கிடைக்கும். இது புராதன சம்பிரதாயப் பிரகாரம் கிராமத்தில் ஏற்பட்டிருக்கும் தர்மமான கூலி விகிதம்.

இந்த 90 ரூபாயைக்கொண்டும், மீன் உணவாலும் (குளம், குட்டை, ஆறு, வாய்க்கால், வயல்களில் இலவசமாய் கிடைக்கும் உணவு பதார்த்தம்) இன்னும் சில்லரைக்கூலி வேலைகளைக் கொண்டும் பண்ணை ஆட்கள், கள்ளுக்கடைக்கு போகாமலும், அங்காடியில் சாமான்கள் வாங்காமலுமிருந்தால் சுகஜீவனம் செய்யலாம்.

ஆனால் அப்படி சுகஜீவனம் செய்வதில்லை. கள்ளுக்கடையில் கூலியை கொட்டி விடுவதாலும், சாப்பாட்டுக்கு இல்லாத காலத்தில் அதிக வட்டிக்கு கடன் வாங்கி சாப்பிடுவதாலும், அங்காடியில் மோசம் போய் விடுவதாலும், அவர்கள் அடிக்கடி பட்டினி கிடக்க வேண்டியிருக்கிறது.

இப்படி அறுப்புக் காலமானவுடன் பட்டினி கிடக்கையில், ஆட்கங்காணிகள் அதாவது அக்கரைச்சீமைக்கு கூலியாட்கள் பிடிக்கும் தரகன்கள் வீண் ஆசைகள் காட்டி, பினாங்கு, சிங்கப்பூர், நேடால், மோரீச், முதலிய இடங்களில் ஏதேஷ்டமாய் கூலி கிடைக்குமென்றும், அங்கு போனால் ஏதேஷ்டமாய் சம்பாதித்துத் திரும்பலாமென்றும், கள் முதலியவைகள் வாங்கிக்கொடுத்து, அடிக்கடி தூண்டி, பண்ணை ஆட்களைக் கப்பலேற்றி விடுகிறார்கள். இப்படி இப்போது அடிக்கடி பண்ணை ஆட்கள் அக்கரை சீமைக்குப் போய் விடுவதால், மிராசுதார் அல்லது குடிகளுக்கு சாகுபடி செய்ய நிரம்ப இடஞ்சல் உண்டாகிறது. அக்கரைச்சீமைக்குப் போகும் போது தங்கள் அட்வான்சு சுவந்தைப்பணத்தைத் திருப்பிக்கொடுக்கிறதில்லை. இப்படி கூலிகள் அக்கரைச் சீமைக்குப் போய்விடுவதால் மிராசுதார்களுக்கு சாகுபடி செய்ய கஷ்டமாயிருக்

கிறது. வெள்ளைக்கார தோட்டக்காரர்களுக்கு சட்டபூர்வமாய் கூலி விஷயங்களில் அநுகூலங்கள் செய்திருப்பது போல எங்களுக்கு செய்து கொடுக்காவிட்டாலும், எங்கள் அட்வான்சு பணத்தையாவது திருப்பிக்கொடுத்து விட்டுப் போக தாசில்தாரிடமாவது அல்லது துறைமுகத்து கூலிகள் ஏற்றும் உத்தியோகஸ்தரிடமாவது சுவந்தை பணத்தை திருப்பிக்கொடுத்தாய் விட்டதென்று ஒரு சர்டிபிகேட்டு வாங்கிக்கொடுத்தால் போதுமென்று கவரன்மெண்டை கேட்டும், நாங்கள் கூலிகள் சுயேச்சைச் சுதந்தரங்களில் பிரவேசிக்க மாட்டோம், வேண்டுமானால் கோர்ட்டுக்கு போய் பிராது கொடுத்து பணத்தை வசூல் செய்யுங்கள் என்கிறார்கள்.

கோர்ட்டுக்கு போக மிராசுதார்களுக்கு பைத்தியமா? கூலிகள் பாப்பர்கள். கொடுத்த கடனோடு கோர்ட்டுக்கு போய் இன்னும் வீண் செலவா? தலையெழுத்து என்று சும்மாயிருந்து விடுவார்கள். பண்ணை ஆள் அக்கரைச் சீமை போனவுடன் அவன் பெண்டாட்டி, பிள்ளைகளை மிராசுதார்கள்தான் சம்ரட்சிக்கிறார்கள். அமயம், ஸமயம், கலியாணம், இழவு முதலிய சகல ஸமயங்களிலும் மிராசுதார்கள் கூலிகளுக்குக் கொடுத்து ஒத்தாசை செய்தும், அவர்கள் கங்காணிகள் பெரும் தூண்டுதலினாலேயே அக்கரைச் சீமைக்குப் போய் விடுகிறார்கள். போய் திரும்பி வந்தவர்கள் இங்கே விட அங்கே சுகப்பட்டதாகவும் சொல்லக் காணோம். இந்தக் கூலிக் கஷ்டநிவர்த்திக்கு இனிமேல் கவரன்மெண்டை பார்த்துக் கொண்டிருக்கிறதில் பிரயோசனமில்லை. கூலிகளுக்கு எவ்வளவு தூரம் சௌகரியம் செய்து கொடுக்க வேணுமோ, அவ்வளவையும், மிராசுதார்களே செய்துகொடுக்க கடமைப் பட்டிருக்கிறார்கள். கூலிகளுக்காக ஒவ்வொரு கிராமத்திலும், பறைச்சேரி, பள்ளத் தெருவில் ஒரு தானிய பாங்கியும், ஒரு ஸ்டோர், அல்லது பலசரக்குக் கடையும், ஏற்படுத்தவேண்டும். தானிய பாங்கி ஏற்படுத்தினால் கூலிகள் ஜாஸ்திவட்டிக்கு கடன் வாங்குவது நின்று க்ஷேமப்படுவார்கள். உதாரணமாக, வேலை யில்லாத மார்கழி மாதத்தில் ஒரு கூலி சாப்பாட்டுக்கு நெல் 24 பட்டணம் படிக்கு 6 பட்டணம் படி வாசி கொடுப்பதாக மட்டமான நெல்லை கடன் வாங்கி தை மாசி அறுப்பில் வட்டியோடு நல்ல நெல்லாய் அளக்கிறான். ஒரு தானிய பாங்கியிருந்து மிராசுதார்களே ஜாமினாயிருந்து வேலையில்லாத காலத்தில் சொற்ப வட்டிக்கு (பாட்டு வாசியை உளவடைக்க மாத்திரம்) ஷை 24 பட்டணம் படிக்கு 2 பட்டணம் படி நெல் வாசியாக அளப்பதென்று வாங்கினால், அறுப்புக்காலத்தில் மிராசுதார்களே ஷை கடனை கூலிகள் மொத்தவரும்படியிலிருந்து கொடுத்து விடலாம். இப்படி வட்டியில் லாபம் இருப்பதால் கூலிகள் கொஞ்சம் க்ஷேமப்படலாம். ஒவ்வொரு கிராமத்து பறைச்சேரிக்கும், பள்ளித்தெருவுக்கும் ஒரு பல சரக்குக்கடை மிராசுதார்களே ஏற்படுத்தினால், அக்கடை நடக்கவேண்டிய செலவுக்கு மாத்திரம் லாபத்தைச் சேர்த்து நல்ல சரக்காய் விற்றால், கூலிகள் நிரம்ப லாபமடைந்து க்ஷேமப்படுவார்கள். தானிய பாங்கியிலேயும் ஸ்டோரிலேயும், கூலிகள் மெம்பர்களாய் சேர்ந்து ஒத்துழைப்புடன் லாபமிருக்கிறதென்று கண்டுகொண்டுவிட்டால், இவர்கள் கள் குடியைக் கூட நாளாவர்த்தியில் நீக்கி விடலாம். அதாவது குடிக்கிறவன் முதலிய துர்மார்க்கஸ்தர்கள் இவ்வளவு சௌகரிய மடையக் கூடிய தானியபாங்கி, ஸ்டோர்ஸ்களைச் சேரக் கூடாதென்று ஒரு விலக்கு ஏற்படுத்தினால், நாளாவர்த்தியில் இவர்கள் இந்த கெட்டவழக்கத்தை போக்கடிக்கவும் கூடும்.

சென்னைஐக்கியநாணயச் சங்க ரிஜிஸ்திரார் இன்னும் ஒரு தானிய பாங்கி கூட இந்த இராஜதானியில் பரீட்சார்த்தமாய் ஏற்படுத்தாதது நிரம்ப விசனிக்கத்தக்கதாயிருக்கிறது. சீக்கிரம் இதைப்பற்றி கவனமெடுத்துக் கொண்டு பரீட்சார்த்தமாகவாவது நல்ல இடத்தில் ஒரு கிராம தானியபாங்கி ஏற்படுத்துவாரென்று நம்புகிறோம்.

மிராசுதார்கள் கூலிகளை சகோதரபாவமாய் நினைத்து பட்சமாய் நடத்த வேண்டும். அவர்கள் கீழ்ஜாதி யென்று அவர்களை துர்பாஷையாய் வையாமலும், நல்ல புத்தி சொல்லியும், அவர்கள் முன்னேற்றத்தில் எப்போதும் குறி வைத்தும், ஈஸ்வர சிருஷ்டியில் எல்லாரும் சகோதர பான்மையுள்ளவர்கள், கவரன்மெண்டார் நம்மிடம் ஜாஸ்திவ்ரி வாங்கி நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள், ஆகையால் பெரிய மீன் சின்ன மீனைத்தின்பது போல நாமும் குடிகளை அடித்து மோசம் பண்ணி அவர்கள் கூலிகளை அடித்து பிடித்து தின்னவேணுமென்கிற துர் எண்ண மில்லாமல் அவர்கள் நன்றாயிருந்தால் நாமும் க்ஷேமப்படுவோம், அவர்கள் கெட்டால் நாமும் அழிவோம் என்று எண்ணி, கூலிகளுக்கு வேண்டிய சௌகரியங்களை நாம் செய்து கொடுத்தால் அவர்கள் அக்கரை சீமைக்குப் போகாமலிருக்கக் கூடும். அவைகளாவன, கிராம தானிய பாங்கி, கிராம பலசரக்கு கடை, சகோதரபாவமாய் அவர்களை நடத்துதல் தான்.

எ. சேதுராமய்யர்.



---

## THE SECRETARY OF STATE FOR INDIA.

## இந்தியா காரியதரிசி.

இந்தியாவில் அரசாட்சி ஆங்கிலேய அரசன் பேரால் அவ்வரசன் மந்திரிகளில் ஒருவராகிய இந்தியா காரியதரிசியால் நடத்தப்பட்டு வருகிறது. இந்தியாவைப் பற்றிய சகல நடவடிக்கைகளிலும் இந்த காரியதரிசியுடைய அபிப்பிராயமே முக்கியம். அரசாட்சி, வரி விசாரணை, சம்பளம் கொடுத்தல், உத்தியோகம் கொடுத்தல், வெகுமதியளித்தல் முதலிய சகல நடவடிக்கைகளும் இவர் உத்தரவுப்படியே நடக்க வேண்டும். கவர்னர் ஜனரல் முதல் எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் இவருக்கு உண்டு. அரசாட்சியைப்பற்றி, இந்தியாவுக்கு, இங்கிலாந்திலிருந்து வரும் ஒவ்வொரு தபாலும் இவர் கையெழுத்துடன் வரவேண்டும். இவரில்லாத சமயத்தில் இங்கிலாந்து அரசருடைய பிறமந்திரிகளில் ஒருவர் கையெழுத்து செய்வார். இந்தியாவிலிருந்து போகும் ஒவ்வொரு தபாலும் இவர் விலாசத்திற்கே அனுப்பப்படும். இவருக்கு விசேஷ அதிகாரமும் செல்வாக்கும் உண்டு. சில காரியங்களை இவர் தம் உத்திரவாதத்திலேயே நடத்திவிடலாம். மற்ற விவகாரங்களை நடத்துவதில் இவருக்கு உதவிக்காக ஏற்பட்டிருக்கும் ஆலோசனை சபையில் உள்ள மெம்பர்களைக் கலந்து செய்வார்.

இந்தியா காரியதரிசியின் ஆலோசனை சபையில் பத்துக்குக் குறையாமலும் பதினைந்துக்கு மேற்படாமலும் மெம்பர்கள் இருப்பார்கள். ஒரு மெம்பர் இடம் காலியாகும் போது அதற்குவேறொருவரை இவரே நியமித்துக்கொள்ளலாம். இந்தியாவில் பத்து வருஷம் ஸர்க்கார் உத்தியோகத்திலாவது வேறு அலுவலிலாவது இருந்தபேர்களையே இநதச் சபையில் வேலைக்கு அமர்த்திக்கொள்வார்கள். ஏககாலத்தில் ஒன்பது மெம்பர்கள் மேற்குறித்தபடி சபையில் இல்லாவிட்டால், காலி நேர்ந்த சமயத்தில் அவ்விதம் இந்தியாவில் இருந்தவர்களையே தேர்ந்தெடுக்க வேண்டும். ஒவ்வொரு மெம்பரும் பத்து வருஷம் வேலை பார்த்துப் பிறகு விட்டு விடுவார். இப்படிப் பத்து வருஷம் இருந்தவர்களில் ஏதாவது முக்கிய காரணங்களால் யாதாயினும் ஒரு மெம்பரின் உதவி வேண்டியிருந்தால் இந்தியா காரியதரிசி அவரை இன்னும் ஐந்து வருஷங்களுக்கு நியமித்துக்கொள்ளலாம். அப்படிச் செய்தால் காரணத்துடன் செய்து அந்த காரணங்களை பார்லிமெண்டுக்கு தெரிவிக்கவேண்டும். வேறு கியாதி பெற்ற நிபுணர்களையும் இந்திய காரியதரிசி தன் ஆலோசனை சபையில் வேண்டிய காலத்திற்கு அமர்த்திக்கொள்ளலாம். அப்படிச் செய்தால் காரணங்களை பார்லிமெண்டுக்குக் குறிப்பிக்கவேண்டும். அவ்விதம் வேலை பார்த்தவர் பத்து வருஷத்திற்குப் பிறகு ராஜீநாமா கொடுப்பாரானால் இந்திய வரும்படியிலிருந்து அவருக்கு வருஷம் ஒன்றுக்கு 500 பவுன் அதாவது 7,500 ரூபாய் வீதம், அரசன் பென்ஷன் கொடுக்கலாம்.

ஆலோசனை சபையைக் கலந்து சில உத்திரவுகளையும், கலக்காமல் தாமே சில உத்தரவுகளையும் இந்திய காரியதரிசி பிறப்பிக்கலாமென்று மேலே சொன்னோம் அன்னிய தேசத்தோடு போர் செய்தல், சமாதானம் செய்து கொள்ளுதல், சுதேச அரசர்களுடன் உள்ள ஒப்புரவு முதலிய நடவடிக்கைகள், ‘ரகஸியமான தபால்’ என்று சொல்லப்படும். ஆதலால் அப்படிப்பட்ட விவகாரங்களைக் காரியதரிசி தாமே சபையை ஆலோசிக்காமல் கவனிப்பார், அல்லது, அதிக அவஸர

மான நடவடிக்கைகளாயிருந்தால் சபையைக் கேட்காமலே உத்தரவு பிறப்பித்து விட்டு, பிறகு அவஸர விஷயம் என்று எழுதி அதற்குத் தகுந்த காரணங்களைத் தெரிவிக்க வேண்டியது அரசாட்சி விவகாரங்களில் சபையை ஆலோசிக்காமல் செய்யக் கூடாதென்று ஏற்பட்டவைகளை **அவஸரம்** என்றுவது **ரகசியம்** என்றுவது இந்திய காரிய தரிசி பாராட்டக் கூடாது. மற்ற சாதாரண விவகாரங்களில் சபையை முன்னடி கேட்கவேண்டியது அவ்வளவு அவசியமாகாது. இந்தியா வருமானத்திலிருந்து இந்தியாவிலேயோ, வேறு இடங்களிலேயோ, ஏதாவது செலவழிக்க வேண்டியிருந்தால், சபையை ஆலோசித்தே செய்ய வேண்டும். ஆனால், வழக்கத்தில் மாதம் 250 ரூபாய்க்கு மேற்படாத ஒரு புதிய உத்தியோகத்தை உண்டு பண்ணிக்கொள்ள இந்தியா கவர்ன்மெண்டுக்கு சுவாதீனங் கொடுக்கப்பட்டிருக்கிறது. தவிர, ஏற்கனவே இருக்கும் உத்தியோகங்களைச் சீர்படுத்த செலவு அதிகமாகுமானுல் வருஷத்தில் ரூபாய் 25,000-க்கு மேற்படாமல் செலவு செய்ய இந்தியா கவரன்மெண்டார் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள்.

இந்தியா காரியதரிசிக்குள்ள ஆலோசனை சபை வாரம் ஒரு முறையாவது கூடும் அப்படிக்கூடிய மீட்டிங்கில் குறைந்தது ஐந்து பேராவது மெம்பர்கள் இருக்கவேணும். இந்தச் சபைக்கு அக்கிராசனுதிபதி இந்தியா காரியதரிசியே. அவருக்கு சுதாவில் ஒரு 'வோட்டும்', இரண்டு பக்கத்திலும் 'வோட்டு' சரியாயிருந்தால், இன்னும் ஒரு 'வோட்டும்', உண்டு. தான் இல்லாத சமயத்தில் தனக்குப்பிரதியாக தன் அதிகாரங்களை வகிக்க ஒரு உப அக்கிராசனுதிபதியை அவர் நியமித்துக் கொள்ளலாம். ஆனால், அவர் இல்லாமல் நடந்த செய்கைகளையெல்லாம் அவர் எழுத்து மூலமாய் ஏற்றுக்கொண்டாலொழிய நடவடிக்கைக்கு வர மாட்டா. இந்தியாவுக்கு என்று ஏற்பட்டுள்ள தபால் ஒவ்வொன்றும் 'அவஸரம்' அல்லது 'ரகசியம்' என்று இல்லாவிட்டால், மெம்பர்கள் மீடிங்கில் அவர்கள் பார்வைக்கு வரவேண்டும். இல்லாவிடில் தபாலில் போடுவதற்கு முன் ஒருவாரம் வரையில் மெம்பர்கள் தாராளமாய் எடுத்துப் பார்க்கும்படி மேஜையின் மேல் வைக்கப்பட வேண்டும். அதேமாதிரி இந்தியாவிலிருந்து வரும் ரகசியமல்லாத ஒவ்வொரு இராஜாங்க தபாலையும் மெம்பர்கள் பார்க்கலாம். சாதாரணமாய் அடியிற்குறித்த விவகாரங்களில் மெம்பர்களை ஆலோசித்தே தீர வேண்டும்.

அவையாவன :—

1. இந்திய வரும்படியிலிருந்து செலவு செய்தல்,
2. பணத்துக்கு பத்திரங்கள் கொடுத்தல்,
3. சொத்தை விக்கிரயம் செய்தல் ; அல்லது அடமானம் வைத்தல்,
4. ஒப்பந்தங்கள்,
5. சம்பள விஷயங்களை சீர் படுத்துதல் அல்லது மாற்றுதல்,
6. லீவு கொடுக்க ரூல்கள் ஏற்படுத்துதல்,
7. இந்தியாவில் உத்தியோகத்துக்கு நியமித்தல்,
8. இந்தியன் ஸிவில் ஸெர்விஸ் என்ற பரிக்ஷை கொடுத்தவர்களே பார்க்க வேணுமென்று உள்ள உத்தியோகங்களை சுதேசிகளுக்கு கொடுத்தல்,
9. கவர்னர் ஜனரல் நிர்வாக சபைக்கு தற்காலத்திற்கு என்று உத்தியோக நியமனம் செய்தல்.

வேலைகளை சரிவர நடத்திவர சௌகரியத்தை உத்தேசித்து இந்தியா காரியதரிசி தமது ஆலோசனை சபையில் உள்ள மெம்பர்களை இன்ன இன்ன இலாகாவிஷயங்களைப் பார்க்க இன்னர் என்று தீர்மானித்து ஏற்பாடு செய்து கொள்ளலாம். அப்படி ஏற்பட்டுள்ள இலாகாக்கள் இப்பொழுது ஏழு உண்டு. அவையாவன, கஜானு, ராஜரீகம், ராணுவம், வரிவசூல், சட்டவிஷயம், பொது சமாசாரம், பொது ஜனநன்மைக்காக ஜலாதாரம், ரோட்டு, பாலம் முதலியவைகளை கவனிக்கும் இஞ்சினீர் இலாகா, இந்தியா கவரன்மெண்டுக்கு வேண்டிய ஸாமான்களை சேகரித்துக் கொடுக்கும் இலாகா.

இந்தியா காரிய தரிசிக்கு வருஷம் ஒன்றுக்கு 75,000 ரூபாய் சம்பளம். அவருடைய ஆலோசனை சபை மெம்பருக்கு வருஷம் ஒன்றுக்கு 18,000 ரூபாய் சம்பளம்.

---



# AGRICULTURAL NOTES.
# விவசாயக் குறிப்புகள்.

THE BEST RICE CROP.

**அதிகமான நெல் விளைவு.**—அநேக இடங்களில் நெல் விதையை விதைத்து நாற்றைப் பிடுங்கி வயல்களில் நடுகிறதில்லை. இதற்குக் காரணம் அநேகமாய் வேலைசெய்ய ஆட்கள் இல்லாமை என்று சொல்லலாம். நாற்றங்கால்களில் நெல்லை விதைத்து நாற்றுகள் கொஞ்சம் வளர்ந்ததும் அவைகளைப் பிடுங்கி வயல்களில் நடுவதினுல் எப்பொழுதும் தவருமல் நெல் விளைவு நன்றுயிருக்கிறதென்று இந்தியாவிலும் லங்கையிலும் பலவிடங்களில் பரீக்ஷை செய்து பார்த்ததில் ஏற்பட்டிருக்கிறது. தென் அமெரிக்காவிலுள்ள பிரிடிஷ் கயானுவில் இப்படியே செய்கிறார்கள். ஒரு பள்ளத்தில் இரண்டு மூன்று நாற்றுகளைப் பிடிப்பிடியாய் நடுவதைவிட ஒவ்வொரு நாற்றையும் தனித்தனியே நடுவதனுல் விளைவு அதிகமாயும் நன்றுயும் இருக்கிறதென்று பரீக்ஷித்துப் பார்த்திருக்கிறார்கள்.

A DESIRABLE KIND OF PADDY.

**ஒரு விரும்பத்தக்க தினுசு நெல்.**—பி. என். மகமத்மீரான் கிருஷிகன் பத்திரிகையில் பின்வருமாறு எழுதியிருக்கிறார். "நான் இராதாபுரத்தில் டிப்டி தாசில்தாராயிருந்தகாலத்தில் அந்த பிராந்தியங்களில் பயிராகும் நெல்தினிசுகளைப்பற்றி விசாரித்ததில் **மாப்பிள்ளை சம்பா** 3 மாதத்துக்குள் விளையக்கூடியதும், ஆனைக்கொம்பன் நெல்லுக்கு அநேகமாய் சமானமானதென்று சொல்லக்கூடியதும், போஜனத்துக்கு யோக்கியமானதும், உயர்ந்த விலைக்கு விற்கக்கூடியதுமான தினிசு என்றுதெரிய வந்ததின்பேரில், அந்த வித்தைத்திருநெல்வேலி தாலூகாவில் மல்லகுளம் என்னும் கிராமத்தில் என்னுடைய நிலங்களில் பயிரிட்டுப்பார்த்ததில் மேற்கண்ட குணங்கள் வாஸ்தவத்தில் அந்த தினிசு நெல்லுக்கிருப்பதாய் அநுபோகத்தில் கண்டறிந்தேன். இந்த தினிசுக்கு "சின்ன சித்திரைக்காலி" என்றும், "வெள்ளைச் சம்பா" வென்றும், "ஸ்வர்ணவாரி" யென்றும், "சிறு வெள்ளை" யென்றும், திருநெல்வேலிஜில்லாவில் பற்பல விடங்களில் பற்பல பேர்கள் வழங்கி வருகின்றன. இதைப் போன்ற தட்டை வெள்ளை யென்ற ஒரு தினிசு மதுரையில் சாகுபடி செய்யப்படுகிறது.

மாப்பிள்ளைச் சம்பா சாகுபடி செய்வதற்கு ஒரு காலநிர்ணயமில்லை. இதை ஒரு வருஷத்தில் ஒரே இடத்தில் 3 போகம் சாகுபடி செய்யலாம். இராதாபுரம் முதலியவிடங்களில் இந்தத்தினிசு ஏக்கர் ஒன்றுக்கு 2000 பக்காவுக்கு அதிகமான மேனி விளைவதை நான் கண்டிருக்கிறேன். பச்சையாகக் குத்தினுலும் புழுங்கலாகக்குத்தினுலும் ஆனைக்கொம்பன் அரிசியைப்போல் ருசியுள்ளது. குருவைகளையான், புழுதிபிறட்டி, கல்மணல்வாரி, இந்தத்தினிசுகள் ஜலம் குறைந்தகாலத்தில் விளையக்கூடியவைகளாயினும், அவைகள் போஜனத்துக்கு யோக்கிய மற்றவைகள். மானுவாரிக்குளங்களில் மேற்கண்ட தினிசுகளை சாகுபடி செய்வதற்கு பதிலாய், மாப்பிள்ளைச் சம்பாவைத் தக்க உரம்வைத்து சாகுபடி செய்தால் கிருஷிகன் அதிகமான லாபத்தை அடையலாம்.

இதன் சாகுபடியில் முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயங்களாவன :—

(1) நிலத்தை நன்றுய் உழுது தண்ணீர்கட்டி 15 நாள்களுக்கு சேர் அழுகவேண்டும். அந்தக் காலத்தில் நிலத்தை அடிக்கடி உழவேண்டும்.

(2) உழுமுன் நிலத்தில் ஆட்டுமந்தை மறித்தாவது ஆட்டு உரம் வைத்தாவது தண்ணீர் கட்ட வேண்டும்.

(3) கொளுஞ்சி முதலான தழையை அதிகமாய்ப்போட்டு மிதிக்க வேண்டும்.

(4) சேற்றில் விதைப்பது உத்தமம். நடுவதாயிருந்தால் நாற்றுவிட்டு 25 நாள்களில் நடவேண்டும். மானுவாரிக்குளங்களில் பிசானத்தில் பாங்குநெல்லும், காரில் மாப்பிள்ளைச் சம்பாவும் சாகுபடி செய்தால் நலம். ஆற்றுக்கால் பாய்ச்சலுள்ள நன்செய்களில் பிசானத்தில் ஆனைக்கொம்பனும் காரில் பாங்கு நெல்லும் சாகுபடி செய்யலாம்.

MANURE FOR TOBACCO.

**புகையிலைக்கு எரு.**—பம்பாய் விவஸாய இலாகாக்காரர்கள் புகையிலைக்கு எது நல்ல எரு என்று கண்டு பிடிக்க பலவாருய் முயன்று வந்தார்கள். மூன்று வருஷம் பரீக்ஷித்துப் பார்த்து ஆமணக்குப் பிண்ணுக்கு நல்ல எரு என்று சொல்லுகிறார்கள்.

# TRADE NOTES.
# வியாபாரக் குறிப்புகள்.

SEA-BORNE TRADE OF MADRAS, 1908-09.

**1908-09-ம் வருஷத்து சென்னப்பட்டணத்து ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம்.**—சென்னை ராஜதானியில் கப்பல்கள் மூலமாய் நடக்கும் வியாபாரம் மூன்று விதம். நமது ராஜதானிக்கும் மற்ற தேசங்களுக்கும் நடக்கும் வியாபாரம் ஒன்று. நமது ராஜதானிக்கும் இந்தியாவில் உள்ள மற்ற ராஜதானிகளுக்கும் கப்பல் மூலமாய் நடக்கும் வியாபாரம் ஒன்று. நமது ராஜதானியிலேயே உள்ள ஒரு துறைமுகத்திற்கும் மற்றொரு துறைமுகத்திற்கும் நடக்கும் வியாபாரம் ஒன்று. ஆக கப்பல்வியாபாரம் மூன்று விதம். 1908-09 ம் வருஷத்தில் இந்த மூன்று விதமாய் செய்யப்பட்ட வியாபாரத்தின் ஏற்றுமதி இறக்குமதி இரண்டின் மொத்தம் 4501 லக்ஷம் ரூபாய். இது 1907-08-ம் வருஷத்து வியாபாரத்தை விட சுமார் 131 லக்ஷம் ஜாஸ்தி. தவிர, இவ்வளவு வியாபாரம் சென்ற முப்பது வருஷமாக நடந்ததேயில்லை.

சென்ற வைகாசிமாஸத்து ஸஞ்சிகையில் பல தேசங்களில் 1908-ம் வருஷத்தில் வியாபாரம் மட்டாயிருந்ததென்று எடுத்துக்காட்டினோம். சென்னை ராஜதானியில் மட்டும் வியாபாரம் ஜாஸ்தியாக நடந்திருக்கிறதே, அதனால் நமது ராஜதானி சுபிக்ஷமாயிருந்ததா என்று கேட்கலாம். சுபிக்ஷமில்லை. சென்ற வருஷத்தில் வர்த்தகர்கள் துராசை கொண்டு லாபம் வாரிக்கொட்டிவிடவேணும் என்று மித மிஞ்சி துணிகளை வரவழைத்ததாலும், தான்ய விளைவுக் குறைவால் இதர இடங்களிலிருந்து தான்யங்கள் இறக்குமதியானதாலும் வியாபாரம் மொத்தம் ஜாஸ்திப்பட்டது.

INDIAN RAILWAY EARNINGS IN 1908.

**1908-ம் ௵த்தில் இந்தியரெயில்களின் வரும்படி.**—1908-ம் ௵த்தில் உலகம் முழுவதும் வியாபாரம் குறைந்ததாகவே இருந்ததென்றும், இந்தியாவிலும் மற்ற இடங்களைப்போலவே குறைச்சல்தானென்றும் நமது பத்திரிகையின் வைகாசி மாதத்து சஞ்சிகையில் வியாபாரக் குறிப்புகளின் கீழ் சொன்னோம். வியாபாரம் நன்றாய் நடந்தால்தான் ரெயில் கம்பெனிகளுக்கு வரும்படி வருமென்று சொல்லாமலே அறிந்துகொள்ளலாம். ஆகையால், 1908-ம் வருஷத்தில் ரெயில் வரும்படி என்னமாயிருந்ததென்று விசாரிப்போம். 1907-வருஷத்தில் இந்தியாவிலுள்ள ரெயில்களுக்கெல்லாம் வந்த வரும்படி 4,730$\frac{1}{2}$ லக்ஷம். 1908-ம் வருஷத்தில் 4482 லக்ஷம் 69,000 ரூபாய் தான் வந்தது. செலவுபோக 1907-ம் ௵த்தில் 2,298 லக்ஷம், 18,000 ரூபாய் அயனாக கிடைத்தது. 1908-ம் ௵த்திலே இதற்கு சுமார் 515$\frac{3}{4}$ லக்ஷம் குறைந்துவிட்டது.

A HAY PRESS.

**வைக்கோல் கட்ட ஒரு யந்திரம்.**—கொஞ்சகாலத்திற்குமுன் வைக்கோல் சென்னப்பட்டணத்தில் மிகவும் கிராக்கியாகி ரெயில் மார்க்கமாக அநேக வெளி ஊர்களிலிருந்து வைக்கோல் வந்தது. பீச்ஸ்டேஷனில் வந்த வைக்கோல் கட்டுகளால் வெகு இடம் அடைந்து ஸ்டேஷனில் குப்பையும் ஜாஸ்தியாய்விட்டது. இப்படிக்கான கொஞ்ச நாள்பிறகு வெளி ஊரிலிருந்து வைக்கோல் தருவிப்பதற்காக பீச்ஸ்டேஷன் கூட்ஸ் ரைடர் ஒருவரிடம் சென்று, குறிப்பிட்ட ஊரிலிருந்து சென்னப்பட்டணத்திற்கு வைக்கோல் கொண்டுவர என்ன சார்ஜ் ஆகுமென்று ஒருவர் கேட்டார். கேட்டதும் கூட்ஸ் ரைடர் திடுக்கிட்டாற்போல், ஏனய்யா? வைக்கோல் வரவழைக்கப் போகிறீர்களோ? என்றார்.

இப்படிக் கேட்டதின் தாத்பரியம் வைக்கோலை ரயில்மார்க்கமாய் அனுப்புவது ரயில் காரர்களுக்கு கஷ்டமாயிருக்கிறதென்பதே. ரெயில் கம்பெனிகள் ட்ராக்குக்கு இவ்வளவு சார்ஜ் என்று வாங்குகிறார்கள். ஆகையால் அந்த ட்ராக்கில் எவ்வளவுக் கெவ்வளவு பாரம் ஏறுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு சரக்கு அனுப்புகிறவர்களுக்கு லாபம். தற்காலத்தில் எவ்வளவு அமிழ்த்திக் கட்டினாலும் வைக்கோல் கட்டு அதிகமாகவே இடத்தை அடைக்கிறது. ஆகையால் கூடியமட்டில் சிறு கட்டுகளாக அமிழ்த்தக் கூடிய யந்திரங்கள் ஏற்பட்டால் வைக்கோல் வியாபாரத்திற்கு ஒரு பெரும் சாதனமாகும்.

இப்படிப்பட்ட யந்திரம் ஒன்று செகன்டிராபாத்துக்கு அடுத்த பொலாரம் பட்டணத்திலுள்ள இராணுவ பண்ணையில் மானேஜராயிருக்கும் எப். வி. சாண்லர் என்பவர் கண்டுபிடித்திருக்கிறாராம். இந்த யந்திரம், 80 ராத்தல் நிறையுள்ள வைக்கோலை, 22 அங்குலம் நீளம், 16 அங்குலம் அகலம், 14 அங்குலம் உயரம் உள்ள சிறு கட்டுகளாக 3$\frac{1}{2}$ நிமிஷத்தில் கட்டி விடுகிறதாம். இந்த யந்திரத்தை பங்களூர், ராவல்பிண்டி, இந்த ஊர்களில் இராணுவ அதிகாரிகள் வாங்கி உபயோகித்து வருகிறார்கள். இந்த யந்திரம் பம்பாயில் மக்பத் பிரதர்ஸ் அண்டு கம்பெனியாரால் செய்யப்பட்டுவருகிறது.



# INDUSTRIAL NOTES.
# கைத்தொழில் குறிப்புகள்.

LIME INDUSTRY.

**எலுமிச்சம் பழத்தைப் பற்றிய தொழில்.**—நமது "பிழைக்கும் வழி" பத்திரிகை முதல் ஸஞ்சிகையில், ஸிஸிலித்தீவில் நேர்ந்த பூகம்பத்தால் மெஸினா என்னும் பட்டணம் நாசமாய்ப் போய் விட்டதென்று சொன்னோம். ஸிஸிலித் தீவில் எலுமிச்சை சாகுபடி வெகு ஜாஸ்தி. அங்கே உள்ளவர்கள் இந்தப்பழத்திலிருந்து, ரசம் பிழிந்து, இங்கிலாந்து முதலிய தேசங்களுக்கு ஏராளமாக அனுப்புவது வழக்கம் இப்படி 1907-ம் வருஷத்தில் அனுப்பிய ரசத்தின் பெறுமானம் சுமார் 3$\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய். தவிர, எலுமிச்சம் பழ ரசத்தைக் காய்ச்சி, சமையலுக்கும், ரசாயன முறைகளுக்கும் உபயோகப்படும்படியான ஒருவித உப்பு செய்யப்படுகிறது. இப்படிக்குச் செய்த உப்பில், இங்கிலாந்துக்கு மட்டும், 1907-ம் வருஷத்தில் சுமார் 30,000 பாரம் அனுப்பப்பட்டது. இவைகளோடுகூட எலுமிச்சம் பழத்தோலிலிருந்து ஒரு வித வாசனை எண்ணெயும் இறக்கப்படுகிறது. இதன் விலை அவுன்ஸ் 1-க்கு சுமார் அணா 5 ஆகும். இப்படிக்கெல்லாம் உபயோகித்த பிறகு, தள்ளுபடி செய்யப்பட்ட தோலி மசியலை எருவாகவோ அல்லது ஆடுமாடுகளுக்கு பிண்ணாக்கைப்போலவோ போட்டுவிடுகிறார்கள்.

மேலே சொல்லிய தொழில்களெல்லாம், ஸிஸிலித் தீவில்நேர்ந்த பூகம்பத்தால் ஒழிந்துபோய் விட்டன. நாம் எலுமிச்சம் பழத்திலிருந்து ரஸத்தைப் பிழிந்துகொண்டு தோலை எறிந்து விடுகிறோம். அல்லது பழத்தை ஊர்காய் போடுகிறோம். இந்த இரண்டு விதத்தைத் தவிர, வேறுவிதமாக எலுமிச்சம் பழத்தை விசேஷமாய் உபயோகிப்பதில்லை. சென்னப்பட்டணம் போன்ற பெரிய பட்டணங்களில் புட்டிகளில் அடைத்து எலுமிச்சம் பழ ரஸம் விற்கப்படுகிறது. இதை வாங்கி ஐரோப்பியர்களும் இன்னும் மற்றவர்களும் தண்ணீரோடு கலந்து சர்க்கரை சேர்த்து கோடை காலங்களில் சாப்பிடுவார்கள். நமது தேசத்தில் எங்கும் எலுமிச்சை சுலபமாய் பயிர் செய்யக்கூடியது. இதைப் பயிர் செய்யும் முறை மாசி மாசத்து ஸஞ்சிகையின் 54ம் பக்கத்தில் வெளியிட்டிருக்கிறோம். பழங்களை அப்போதைக்கப்போது அகப்பட்ட விலைக்கு விற்றுவிடாமல் மேலே சொல்லிய விதமாய்ச் செய்தால் நல்ல லாபம் கிடைக்குமென்று தோன்றுகிறது. ஸிஸிலித்தீவில், சாதாரணமாய் ஒரு ஏக்கர் நிலத்திற்கு 23 ரூபாய் வரும்படி வருமாம். இப்படிப்பட்ட நிலங்களில் எலுமிச்சை சாகுபடி செய்து அவைகளை மேலே சொல்லியபடி தயாரித்து விற்பனை செய்தால் ஏகரா ஒன்றுக்கு 1,500 ரூபாய் லாபம் கிடைக்கிறதாம். எலுமிச்சை எல்லா தேசங்களிலும் பயிராகாது. ஆகையால் மேல் சொல்லிய தொழில்களுக்கு அநேகமாக இதர தேசங்களிலிருந்து போட்டி ஏற்படாது. அவைகளுக்கு விசேஷ பணமும் வேண்டியதில்லை. முறைகளை மட்டும் நன்றாய்த் தெரிந்துகொண்டு செய்யவேண்டும்.

SUGAR MANUFACTURE.

**சர்க்கரை செய்தல்.**—இந்தியாவில் சர்க்கரை செய்வதற்கு அநேக சாதகங்களிருந்தும் தகுந்த முறைகளையும் யந்திரங்களையும் உபயோகிக்காததினால், சர்க்கரை செய்யும் தொழில் முன்னுக்கு வாராமல் இதரதேசங்களிலிருந்து ஏராளமாக சர்க்கரை இறக்குமதியாகிறது. இந்தத் தொழில் விஷயமாய் பல பேர்கள் பலவித முயற்சிகள் செய்து வருகிறார்கள். இவர்களில் கான் பஹதூர், எஸ், எம். ஹாதி என்பவர் ஒருவர். இவர் ஐக்கியமாகாணத்தில், விவசாய இலாகாவில் ஒரு பெரிய உத்தியோகஸ்தர். இவர் தூண்டுகோலின் பேரில் கரும்பிலிருந்தே சர்க்கரை எடுக்க அநேக யந்திரங்கள் வரவழைக்கப்பட்டு ஐக்கியமாகாணத்தில் உபயோகப்பட்டு வருகின்றன. கரும்பிலிருந்தே நேரில் சர்க்கரை செய்வதற்கும், யந்திரங்களுக்கு எப்பொழுதும் வேலை கொடுப்பதற்கும், கரும்பு ஏராளமாக வேண்டும். இதற்கு யந்திரங்களிருக்கும் இடத்திற்கு சமீபத்தில் ஏராளமாக கரும்பு சாகுபடி செய்தாலொழிய ஸௌகரியப்படாது. இப்படிப்பட்ட ஸௌகரியங்களோடு கூடி, "பில்பிட்" என்னும் ஊரில், ராவ் பஹதூர் ஸாஹு லலித பிரஸாத், ஸாஹு ஹீர பிரஸாத், என்னும் இரண்டு பெரிய மனிதர்கள் ஒரு பாக்டரி (ஆலை) வைக்கப்போகிறார்களாம். தினந்தோறும் சுமார் 15 பாரம் சர்க்கரை செய்யப்படுமாம். இதில் எலும்பு முதலிய அநாசார வஸ்துக்கள் உபயோகிக்கப்படமாட்டா.

# ECONOMICS.
# பொருளாதாரம்.

OBSTACLES TO IMPROVING AGRICULTURE.

**விவசாய விருத்திக்குத் தடங்கல்கள்.**—நமது தேசத்து விவசாயிகள், ஒரு புது முறையால் லாபம் உண்டு என்று அறிந்து கொண்டுவிட்டால், அதைத் தொடங்கி விடுவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால், நல்லலாபம் கிடைக்கும் என்பதை நிதரிசனமாய் அவர்களுக்கு ரூபிக்க வேண்டும். இல்லாவிட்டால் அது விஷயத்தில் எவ்வளவு சொன்னாலும் கேட்கமாட்டார்கள். இதற்குக் காரணம் பல உண்டு. வழக்கமான வழியை விட்டு புது வழியில் போக அநேகமாய் ஒருவனும் சம்மதிக்கமாட்டான். இது மனுஷ்ய ஸ்வபாவம். இரண்டாவது, நமது விவஸாயிகள் ஏழைகள். ஆகையால், புது வழிகளில் நஷ்டம்வருமோ என்று பயந்து பிரவேசிக்க மாட்டார்கள். இந்த இரண்டு தடைகளையும் மீறி நிலக்காரன் ஒரு புது விவசாயமுறையை அனுஷ்டிக்கத் தொடங்கினால், குடியானவன் சம்மதிப்பதில்லை. இது விஷயமாய் என் அனுபவத்தில் நேர்ந்த ஒரு விஷயத்தைச் சொல்லுகிறேன். பரீக்ஷார்த்தமாய் சில எருக்களை பாரி கம்பெனியாரிடம் வாங்கி ஊருக்கு கொண்டு போய் நிலத்தில் தூவும்படி சொன்னேன். அப்போது, வாரத்திற்குப் பயிர் செய்யும் என்னுடைய குடியானவன், நான் அவனுக்குத் தெரியாத எருப்போடுவதாயும், அதனால் வயல் விளையாமல் போனால் அவனுக்கு வாரமில்லாமல் போகுமென்றும், ஆதலால், அந்தப்புது எருவை போடாமலிருந்தால் தனக்கு நலமென்றும் சொன்னான். அதற்கு நஷ்டம் நேர்ந்தால் நான் ஒத்துக் கொடுப்பதாகச் சொன்னதின்பேரில் எருவைப்போட அரைமனதோடு சம்மதித்தான். விவசாயத்தில் புதுமுறைகளை அனுஷ்டிக்க எத்தனிக்கும் மிராசுதாரர்களில் யெத்தனைபேர்கள் வாரக்காரன் நஷ்டத்தையும் ஒத்துக்கொடுக்க சம்மதிப்பார்கள்? தவிர, புதுமுறைகளைத் தொடங்குவதானால் பயிர் செய்யும் குடிகளுக்கும் கூலிகளுக்கும் கூடவிருந்து இப்படிச்செய், அப்படிச்செய், என்று சொல்லிக் கொடுத்தாலொழிய அவர்கள் செய்யவும் முடியாது, செய்யவும் மாட்டார்கள். ஆகையால், புதுவழிகளை பழக்கத்துக்கொண்டுவர வேண்டுமானால் பயிர் செய்யும் குடிகளுக்குத் தகுந்தபடி போதித்து அவர்களை முதலில் தயாரிக்க வேண்டும்.

EDUCATING LANDHOLDERS AND FARM LABOURERS.

**மிராசுதார்களையும் குடியானவர்களையும் பழக்குதல்.**—மிராசுதார்களையும் பயிர் செய்யும் குடிகளையும் புது முறைகளை அனுஷ்டிக்கும்படி பழக்க அநேக வழிகள் உண்டு. ஊர் ஊராய் விவஸாய நிபுணர்களை அனுப்பி பிரஸங்கங்கள் செய்யச் சொல்லலாம். நிரூபப் பண்ணைகள் வைத்து புது முறைப்படி சாகுபடி செய்து காட்டலாம். விவசாயப் பொருட்காட்சிகள் வைத்துக்காட்டலாம். விவசாயப் பள்ளிக்கூடங்கள் வைத்துச் சொல்லிக்கொடுக்கலாம். இவைகளோடு இன்னும் ஒரு வழியும் உண்டு.

FARM WORK FOR CRIMINALS.

**குற்றவாளிகளுக்கு விவசாய வேலை.**—பல ஜில்லாக்களில் குற்றவாளிகளை அடைப்பதற்காக பெரிய ஜெயில்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த ஜெயில்களை ஒட்டி நூதனமுறைகளைச் செய்ய சிறு விவசாயப்பண்ணைகளை கவர்ன்மெண்டார் ஏற்படுத்த வேண்டும். குற்றவாளிகளில் ஒவ்வொருவனையும் விசாரித்து, அவன் முன்னால் விவசாயத்தொழில் செய்தவனாயிருந்தால், அவனைத் தெரிந்தெடுத்து, ஜெயில்பண்ணையில் வேலை செய்யச் சொல்லவேண்டும். ஜெயில்களில் இப்பொழுது விவசாயவேலை நடந்துவருகிறது. ஜெயில் குற்றவாளிகளைக்கொண்டு கவர்ன்மெண்டார் காய்கறிகள் பயிர் செய்து வருகிறார்கள். நமது பார்வைக்கு அனுப்பப்பட்ட 1908-ம் வருஷத்து பர்மா ஜெயில் ரிபோர்ட்டை சோதித்ததில் தினம் ஒன்றுக்கு சராசரி 404 குற்றவாளிகள் ஜெயில்களைச்சேர்ந்த தோட்டங்களில் கறிகாய் போட்டு வேலை செய்ததாகவும், அதனால் ரூ 82,650, பெறுமான காய்கறிகள் உண்டானதாகவும் தெரிய வருகிறது. இவைகளோடு, மணிலாக்கொட்டை-யும் பயிர்செய்யப்பட்டதாம். இப்படிக் கெல்லாம் செய்வதில் கவர்ன்மெண்டார் நூதன முறைகளைச் செய்துகாட்டினால் அது அவர்கள் விவசாய அபிவிருத்திக்காகச் செய்யும் வழிகளில் ஒன்றாகும். குற்றவாளிகள் விடுதலையாகித்திரும்பி அவர்களுடைய ஊருக்குப்போய் யோக்கியமாய் ஜீவிக்கவும், அவர்கள் ஜெயிலில் கற்ற முறைகளை பயிர்செய்வதில் உபயோகித்து நல்ல முறைகள்தான் என்று பிறருக்கு ரூபிக்கவும் தகுந்த, ஸாதனமாகும்.



# THE TEXTILE INDUSTRY.
# நெசவுத் தொழில்.

CONTRACTION IN COTTON CLOTH.

**துணி சுருங்குதல்.**—கடையில் மூன்று முழம் அகலத்துணி வேணும் என்று கேட்டால், கடைக்காரன் எடுத்துக் கொடுக்கும் துணியை அளந்து பார்த்தால், அநேகமாய், சொன்னபடி, மூன்று முழம் அதாவது ஐம்பத்து நாலு அங்குலம் அகலம் இராது. சுமார் ஐம்பத்து இரண்டு அங்குலந்தான் இருக்கும். இப்படி அளந்து பார்த்துக் கண்டு பிடிப்பவர்கள் கடைக்காரன் மோசம் செய்கிறான் என்று சொல்லுவார்கள். அது கடைக்காரன் குற்றமல்ல. துணி நெய்யும் தறிகாரர்கள் குற்றமே. அவர்களும் தெரிந்து மோசம்செய்ய வேணும் என்ற எண்ணத்தோடு செய்கிறார்கள் என்பதும் சந்தேகம். தெரியாமையாலும் இருக்கலாம். இதில் வாஸ்தவம் என்னவென்றால் முப்பாத்தாறு அங்குல அகலத்துணி வேணுமானால் முப்பத்தெட்டு அங்குலம் பன்னையில் (அச்சில்) நெய்ய வேண்டும். ஐம்பத்து நாலு அங்குல அகலம் வேணுமானால் ஐம்பத்தாறு அங்குல அகல பன்னையில் (அச்சில்) நெய்ய வேண்டும். இதே மாதிரியாய் நீளத்திலும் இருபது கஜத்துக்கு ஒரு கஜம் சுருங்கும். இது குறுக்கு இழைக்கணக்கையும் நூலின் நம்பரையும் பொறுத்தது.

இதை அறிந்து தறிகாரர்கள் நெய்தால் வியாபாரிகளின் பேர்கெடாது. இது விஷயத்தில் வியாபாரிகளும் முயற்சி எடுத்துக் கொண்டு தறிகாரர்களுக்கும் அடிக்கடி சொல்ல வேண்டும்.

WOOLLEN MANUFACTURE.

**கம்பளி சாமான்கள் செய்தல்.**—இந்தியாவில் செய்யப்படும் கம்பளிப் போர்வைகள், சால்வைகள், இவைகளுக்கெல்லாம் நல்ல சாமான்களென்று பெயரிருந்தும், வேண்டிய அளவில் செய்யப்படாமையால் இதர தேசங்களிலிருந்து கம்பளி சாமான்கள் ஏராளமாய் இறக்குமதி செய்யப்படுகின்றன. இப்படிக்கு, 1908-09-ம் வருஷத்தில் இறக்குமதியான சாமான்களின் மதிப்பு 187 லக்ஷம் ரூபாய்.

கொஞ்சகாலமாய் துணி நெய்யும் ஆலைகளுக்கு லாபம் சொல்பமாயிருக்க, கம்பளி சாமான்கள் செய்யும் ஆலைகளுக்கு நல்ல லாபம் கிடைத்திருக்கிறதாகத்தெரியவருகிறது. சேலத்தில் கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தியிருக்கும் நெசவு தொழிற்சாலையில் போர்வைகளை செய்துப்பார்த்து, நல்ல லாபம் இருப்பதாய் அறிந்திருக்கிறார்கள். சேலத்திலுள்ள சில பெரிய வக்கீல்கள்கூடி பங்குகள் சேர்த்து கவர்ன்மெண்டாரிடமிருந்து போர்வைகள் நெய்வதற்காக உள்ள சகல தறிகளையும் கையிருப்பு சாமான்களையும் வாங்கிவிடுவதற்காக பிரயத்தினம் செய்தார்கள். ஆனால், அது முடிவு பெறவில்லையென்று அறிகிறோம்.

A NEW WOOLLEN MILL IN BOMBAY.

**பம்பாயில் கம்பளி சாமான்கள் செய்ய ஒரு புதிய ஆலை.**—கம்பளி நூலுக்கும், போர்வைகளுக்கும், பிளானல் போன்ற துணிகளுக்கும் இந்தியாவில் நல்ல கிராக்கி இருப்பதை உத்தேசித்து, பம்பாயில் "ஸ்டான்டர்ட் உல்ன்மில்ஸ் லிமிடெட்" என்ற பெயரோடு கம்பளித் துணிகள் செய்யும் ஆலை ஒன்று ஏற்படுத்தப் போகிறார்கள். இதற்கு முதல் 10 லக்ஷம் ரூபாய். ஒவ்வொன்றும் 100 ரூ. பெறுமான பதினாயிரம் பங்கு கொண்டது. பம்பாயில் ராமசந்திர மாதவராம் அண்டு கம்பெனியார் இந்தக் கம்பெனிக்குக் காரியதரிசிகள்.

COTTON MILLS.

**பருத்தி ஆலைகள்.**—சமீபத்தில் வங்காளத்தில் கூடிய வியாபார சங்கத்தில் ராதாசரன்பால் என்பவர் இந்தியா வியாபராம், கைத்தொழில் முதலியவற்றைப்பற்றி விஸ்தாரமாகப் பேசி, சுவதேசி என்கிற புதிய உணர்ச்சியால் உள் நாட்டுத் துணிவியாபாரம் பலத்து நிற்கின்றதென்று சொன்னார். ஆனால், பம்பாயில் சுமார் நூற்று நாற்பத்தேழு ஆலைகள் இருக்க, வங்காளத்தில் மட்டில் பத்தே ஆலைகள் இருக்கின்றனவென்றும், இதற்குக்காரணம் இயற்கையாகவே வங்காளத்தில் நல்ல பருத்தி சுலபமாய்க் கிடைக்காமையேயென்றுஞ் சொன்னார். இந்த அபிப்பிராயத்தை ஆராய்ந்தவேறொருவர், வங்காளத்தில் உற்பத்தியாகும் பருத்தி சிலாக்கியமான சொளையுள்ளதாக இருக்கிறதென்றும், கம்பளித்துணிகள் என்ன, துணிகள் என்ன, இவைகள் செய்வதற்கென்று மேல் நாட்டு வியாபாரிகள், இந்தப்பருத்தியை இங்கிலாந்துக்குக் கொண்டுபோகிறார்களென்றும் சொல்வதோடு, அப்படி இங்கிருந்து வாங்கி, நெடுந்தூரம் கொண்டுபோய், நூற்று, துணியாக்கி, மறுபடியும் இங்கேயே கொண்டு வந்து விற்று லாபம் சம்பாதிக்கக் கூடியதாயிருக்கும்போது, இங்கிருப்பவர்கள் தாமே முயற்சி செய்தால் பலிதமாவதுகடினமோ என்று கேட்கிறார்.

## THE GROCERY TRADE.
## பலசரக்கு வியாபாரம்.

TESTING WHEAT.

**கோதுமையை சோதித்தல்.**—கோதுமை நெல் முதலிய தானியங்கள் எவ்வளவுக் கெவ்வளவு காய்ந்திருக்கின்றனவோ, அவ்வளவுக் கவ்வளவு வியாபாரிகளுக்கு லாபமாகும். தானியங்கள் ஈரமாயிருந்தால், கொஞ்சநாளைக்கு வைத்திருக்கும் பக்ஷத்தில், மக்கிப்போகும். அல்லது காய்ந்து பாடுவரும். ஆகையால், தானியத்தில் எவ்வளவு ஈரம் இருக்கிறதென்று வியாபாரிகள் தெரிந்துகொள்வது அவசியம். இதுவரையில் இதைக்கண்டுபிடிக்க சுலபமான வழி கிடையாது. இப்பொழுது அமெரிக்கா தேசத்தில் ஐக்கிய மாகாணத்து விவசாய இலாகாகாரர்கள் ஈரத்தைக் காட்டும் ஒரு நூதன கருவியைக் கண்டுபிடித்திருக்கிறார்களாம். "இலக்ட்ரிஸிடி" என்னும் மின்ஸாரசக்தி தண்ணீரில் நன்றாய்ப் பாய்ந்து ஓடும். ஆகையால், ஒருவஸ்துவில் ஈரம் எவ்வளவுக் கெவ்வளவு ஜாஸ்தியாக இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அந்தப் பதார்த்தத்தின் வழியாய் மின்சாரசக்தி சுலபமாய் பாயும்.

ஈரம் குறையக்குறைய இந்தசக்தி பாய்தல் தடைபடும். இந்த உண்மையை அறிந்து கோதுமையின் வழியாய் மின்சார சக்தியைப் பாய்ச்சிப்பார்த்தால் ஈரம் இவ்வளவு இருக்கிறதென்று சுலபமாய் அறியலாமாம். இப்படி மூன்று நிமிஷத்தில் கோதுமையில் இவ்வளவுஈரம் இருக்கிறதென்று எளிதாய்க் கண்டுபிடித்திருக்கிறார்கள். நெல் போன்ற தானியங்களில் மேலே சொல்லிய கருவியைக் கொண்டு எவ்வளவு ஈரம் இருக்கிறதென்று கண்டுபிடிக்க முயன்றுவருகிறார்களாம்.

RICE.

**அரிசி.**—அரிசி சாப்பிடுகிறவர்களுக்கு தைமீ முதல் சித்திரைவைகாசி வரையில் வருஷந்தோறும் நாலைந்து மாதங்கள் கஷ்டமானகாலங்கள். இந்த மாதங்களில் புது அரிசி கிளம்பி பழைய அரிசியோடு பல அளவில் கலக்கப்பட்டு விற்பனைக்கு வந்துவிடுகிறது. அநேக ஜனங்களுக்கு இதைக்கண்டுபிடிக்க முடியாமல், மூட்டையை வாங்கிக்கொண்டுபோய் பின்பு சமைத்து சாப்பிடும் பொழுது வியாபாரி புதிய அரிசியைக்கொடுத்து விட்டானென்று திட்டுவார்கள்.

வியாபாரியும் புதிய் அரிசி யென்று சுலபமாய் கண்டு பிடிக்கமுடியாது. மிகப் புதிதாயிருந்தால், அரிசியின் பளபளப்பினாலும் தானியத்தின் மூக்கிலுள்ள வெண்மையாலும் புதிய அரிசி யென்று தெரிந்துகொள்ளலாம். கொஞ்சநாளாகிவிட்டால் இந்த இரண்டு குறிகளும் இருக்கமாட்டா. ஆனால் இந்த இரண்டு குறிகளுமில்லாத அரிசியெல்லாம் பழைய அரிசியென்று சொல்ல முடியாது. பழைய அரிசி ஒருவித வாசனையோடு கூடி கொஞ்சம் தவிடு பறந்ததாயிருக்கும். பழைய அரிசியாயிருந்தால், அவைகளின் மேல் கோடு கோடாயிருக்கு மென்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் இந்தக்குறிகளைக் கொண்டு எல்லாரும் அரிசியை பழையது புதிது என்று எளிதில் கண்டுபிடிக்க முடியாது. சமைத்துப்பார்த்தால் பழைய அரிசிக்கும் புதிய அரிசிக்கும் உள்ள வித்தியாசம் நன்றாய்த் தெரியவரும். மிகப் புதிதாயிருந்தால், சாதம் குழைந்துபோய், கஞ்சியும் ஜாஸ்திவடிந்து, சாதமும் காணாது. பழைய அரிசியாயிருந்தால் குழையாமலும் விசேஷகஞ்சி வடியாமலும், வெகுநாழிக்கொதிக்கும். சாதமும் ஜாஸ்திகாணும்.

இப்படிக்கு சமைத்து, அரிசி பழையது புதிது என்று அறிந்து கொள்வது சுலபமானாலும், அரிசி வாங்குவோர்களெல்லாம் முதலில் மாதிரிகொண்டுபோய் சமைத்துப்பார்த்து வாங்குவதில்லை. இப்படிக்குச் சிலர் செய்தாலும், திரும்பிவந்து மூட்டையாய் வாங்கும் பொழுது முன் மாதிரியாய்க்கொடுத்த அரிசியையே பின்னால் வியாபாரி கொடுப்பானென்பது நிச்சயமில்லை. ஆகையால், புதிய அரிசி கிளம்பி சிலமாசங்கள் வரையில், அரிசி சாப்பிடுகிறவர்கள் தங்கள் கையிலேயே பழைய நெல்லோ அரிசியோ கட்டிவைத்திருந்தாலொழிய கஷ்டப்பட்டே தீரவேண்டும்.

புதிய அரிசியில் ஈரம் ஜாஸ்தியாயிருக்கும். முன்குறிப்பில் சொல்லப்பட்ட கருவி கோதுமையின் ஈரத்தைக் காண்பிப்பதுபோல அரிசி முதலிய தானியங்களின் ஈரத்தையும் எடுத்துக் காண்பிக்குமானால் புதிய அரிசியை பழைய அரிசியென்று பித்தலாட்டம் செய்பவர்களின் வியாபாரம் ஒய்ந்துவிடும்.



## REVENUE NOTES.
## ரெவெனியூக் குறிப்புகள்.

LAND REVENUE.

**நிலவரி.**—இந்தியா மொத்தத்துக்கு 100க்கு 65 பேர்களும், நமது சென்னை ராஜதானியை மட்டும் எடுத்துப்பார்த்தால் 100-க்கு 68 பேர்களும், விவசாயத்தைச் சார்ந்தவர்களென்று ஏற்படுகிறது. தபாலாபீஸ், தந்தி, ரெயில், நீர் பாய்ச்சல், காடு, ரிஜிஸ்தர் செய்தல், சுதேசமன்னர்களின் கப்பம், அபினி இவைகளால் வரும் வரவைத்தள்ளி பார்த்தால் இதர அம்சங்களிலிருந்து கிடைக்கும் தீர்வை மொத்தம், இந்தியா முழுவதுக்கும் 60 கோடி ரூபாயாகிறது. இதில் கிட்டத்தட்ட பேர்பாதி 30 கோடி நிலவரி. நமது ராஜதானியில் வசூலாகும் நிலவரியும் மேலே சொல்லியபடி மொத்தவரியில் பாதிக்கு மேலேயே இருக்கிறது.

சர்க்காருக்கு வரும் வரும்படியில் நிலவரியே பெரும் பாகமாக விருப்பதாலும், நிலத்தைக் கொண்டே வெகு ஜனங்கள் ஜீவனத்துக்கு எதிர் பார்ப்பதாலும், சர்க்காருக்கு சேரவேண்டிய பாகத்தை மாசூலாகவே எடுத்துக் கொள்ளாமல், ரூபாயாக ஏற்படுத்தி வசூல் செய்வதாலும், அடிக்கடி செட்டில்மெண்ட் செய்வதாலும், கவர்ன்மெண்டார் வசூலிக்கும் நிலத்தீர்வையைப்பற்றி, எல்லாரும் கவலைப்படவேண்டிய தாயிருக்கிறது.

REMISSION OF ASSESSMENT.

**தீர்வை வஜா.**—நிலவரி விஷயமாய் ஜனங்கள் முறையிடுவதற்கு ஒரு முக்கிய காரணம் சரியானபடி தீர்வையை வஜா செய்து கொடுக்காதது. 1870-ம் வருஷத்துக்கு முந்தி மழையில்லாமையினாலாவது அல்லது வேறு காரணங்களாலாவது மாசூல் கிடைக்காவிட்டால் புஞ்சை நிலங்களுக்கு தீர்வைத் தள்ளிக்கொடுப்பது சாதாரணவழக்கமாயிருந்தது. அந்த வருஷமுதல் அத்தருதியாய் ஜலமில்லாமல் போனாலொழிய புஞ்சைத்தீர்வை தள்ளிக்கொடுப்பதில்லை. தவிர, கொஞ்சகாலமாய் நஞ்சைத்தீர்வை வஜாவும் சொல்பமாய் விட்டது. மிராசுதார்கள் பட்டாவில் ஏற்பட்ட நிலமுழுமையும் வருஷந்தோறும் சாகுபடி செய்வதில்லை. பட்டா நிலங்களில் சாகுபடியாகாமல் தரிசாய்க் கிடந்த நிலங்களின் அளவு சில வருஷங்களுக்கு கீழே குறிக்கப்பட்டிருக்கிறது.

| | நூற்றுக்கு. |
|---|---|
| 1896-97. | 20. |
| 1897-98. | 21. |
| 1898-99. | 20. |
| 1899-1900. | 26. |
| 1900-1901. | 21. |
| 1901-1902. | 19. |
| 1902-1903. | 19. |
| 1903-1904. | 20. |
| 1904-1905. | 25. |
| 1905-1906. | 22. |
| 1906-1907. | 20. |

அதாவது, சராசரியில் 100-க்கு 20 ஏக்ரா தரிசாயிருக்க, இந்த தரிசின்பேரிலும் தீர்வை வசூல் செய்யப்படுகிறது. இப்படித் தரிசான நிலங்கள் ஏழையான ஜனங்களின் புஞ்சை நிலங்களே. நிலத்தீர்வை மொத்தத்தில், சுமார் 50 லக்ஷம், அதாவது 100-க்கு சராசரி 9, தரிசி நிலங்களின் பேரில் வசூலிக்கப்பட்ட தீர்வை. நிலங்கள் தரிசாய்க்கிடப்பது அநேகமாய் பாசன சௌகரியங்கள் இல்லாமையாலும், அடிக்கடி தண்ணீர் தட்டு ஏற்படுவதாலுமே. இந்த நிலங்களுக்கும சாகுபடியான நிலங்களின் வரும்படியைக்கொண்டே தீர்வைகொடுக்க வேண்டியதாயிருப்பதால், நிலக்காரர்கள் கஷ்டப்படுகிறார்கள். தவிர, ஒரே நம்பராய் டிமார்க்கேஷன் செய்திருக்கும் ஒருவயல் பலபேர்களுக்கு சொந்தமாயிருக்கலாம். ரிமிஷன்ரூல்கள் பிரகாரம் பலபோகமாயுள்ள ஒரு நம்பர் வயலில், ஒரு பாகமட்டும் நடப்படாமல் போனால், அதற்கு தீர்வை வஜாசெய்து கொடுப்பதில்லை. இப்படிப்பட்ட கேசுகளில் தீர்வை வஜாவாகவேண்டுமானால் ஒவ்வொரு நிலக்காரனும் தன்னுடைய பாகத்தை பிரித்துக்கொண்டு டிமார்க்கேஷன் செய்துவைக்க வேண்டியது. ஆனால் அநேக இடங்களில் இப்படிச் செய்யாமையால் தரிசு நஞ்சை நிலங்களுக்கு வெகுதீர்வை வசூலிக்கப்பட்டு வருகிறது. இப்படி வசூலிப்பது இந்த ராஜதானியில் மட்டுந்தான். பர்மா, ஆஸாம், மாகாணங்களில் புஞ்சையில் விதை விதைக்காத பக்ஷத்தில் வரி வசூல்செய்வதில்லை. பஞ்சாப் மாகாணத்தில் நஞ்சை நிலங்களில் விளைவு மிகவும் குறைவாயிருந்தால் தகுந்தபடி தீர்வை தள்ளிக் கொடுப்பது உண்டு. இப்படிச் செய்யாமல் தீர்வையை நிர்த்தாக்ஷணியமாய் வசூல் செய்வதானது நியாயமல்லவென்று ஜனங்கள் சொல்வது கவர்ன்மெண்டார் கவனிக்க வேண்டிய விஷயம்.

## LEGAL NOTES.
## சட்டக் குறிப்புகள்.

**The Government's right in Natural Streams.**

**இயற்கையாய் ஓடும் ஆறுகளில் கவர்ன்மெண்டாருக்கு உள்ள பாத்தியதை.**—1904 ௵ 60-ம் நம்பர் "போரணை அணை அப்பீல்" கேஸில், சென்னபட்டணம் ஹைகோர்ட்டாரவர்கள் பின்வரும் முக்கியமான விஷயங்களை ஸ்தாபித்திருக்கிறார்கள்.

1. இயற்கையாய் ஓடும் ஆறுகளின் ஜலத்தையும், சிற்றாறுகளின் ஜலத்தையும், அப்படிப்பட்ட ஆறுகளுக்கு சேகரித்துக் கொண்டுவரப்பட்ட ஜலத்தையும், பொது நன்மையை குறித்து சர்க்கார் செலவில் நிலங்களின் பாய்ச்சலுக்காகக் கட்டப்பட்ட கட்டிட வேலைகளின் மூலியமாய் சேர்த்துத் தேக்கி பாய்ச்சலுக்கு சீராய்ப்பங்கிட்டு கொடுப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்ய கவர்ன்மெண்டாரவர்களுக்கு இந்திய தேசத்தின் வழக்கமான சட்டங்களின்படி அதிகாரம் உண்டு. ஆனால், இப்படிச்செய்வதினால் ஷை ஜலத்தில் பாத்தியமுள்ள மற்ற சொந்தக்காரர்களுக்கு பிரத்தியக்ஷ கெடுதியையாவது, அவர்கள் வழக்கமாய் உபயோகித்துக்கொண்டிருந்த ஜலத்தில் குறையையாவது கவர்ன்மெண்டாரவர்கள் உண்டாக்கக்கூடாது.

2. கவர்ன்மெண்டாரவர்களுக்கு இயற்கையாய் ஓடும் ஆற்றின் ஜலத்தை சீர்ப்படுத்துவதில் உள்ள பாத்தியத்திற்கும், அன்னியர்களுக்கு நீடித்த அனுபவ பாத்தியங்கள் உண்டாயிருக்கும் சுபாவமாயல்லாது மனிதர்களால் வெட்டப்பட்ட வாய்க்கால்களின் ஜலத்தில் பிரவேசிப்பதில் கவர்ன்மெண்டாருக்கு உள்ள பாத்தியத்திற்கும், வித்தியாசம் உண்டு. இயற்கையாயுள்ள ஒரு சிற்றாறில், கவர்ன்மெண்டாரவர்களால் கட்டப்பட்ட பாசன கட்டிட வேலைகள் சம்பந்தமாய், ஆற்றுஜல பாத்தியமுள்ள ஒருவருக்கு தாம் வழக்கமாய் உபயோகித்துக்கொண்டுவரும் ஜலத்துக்குக் குறைவுபட்டு அதனால் நஷ்டப்படாமலிருக்கவேண்டிய பாத்தியதையைத்தவிர கவர்ன்மெண்டாரவர்களுக்கு விரோதமாய், வேறு பாத்தியங்கள் இல்லை.

3. காயம் பைசல் எஸ்டேட்டுகளிலுள்ள ஆறுகளில் ஸ்வதந்திரபாத்தியம் கொடுப்பதானது, பாய்ச்சலுக்காக ஒரு ஆற்றின் ஜலத்தை சீர்ப்படுத்துவதில் கவர்ன்மெண்டாரவர்களுக்கு உள்ள விசேஷமான பாத்தியத்துக்கு உட்பட்டதாக பாவிக்கப்படவேண்டும். ஆனால், அப்படி சீர்படுத்துவதில், நஷ்டமொன்றும் நேரக்கூடாது என்ற நிபந்தனைக்கு உட்பட்டதாகும்.

4. இயற்கையாக ஓட்டமுள்ள ஆற்றில், யாதாமொருவன் அடைந்திருக்கும் ஸ்வாதீனத்தில் கவர்ன்மெண்டாரவர்கள் பிரவேசிக்காமலும், யாருக்கும் நஷ்டமுண்டாக்காமலும், ஷை ஆற்றின் ஜலத்தைக் கொண்டு பாய்ச்சல் விஷயமாக தேவையான ஏற்பாடுகள் செய்வதில் கவர்ன்மெண்டாரவர்களுக்கு உள்ள விசேஷமான பாத்தியதைக்கும், அவ்வாற்று உள்வாய்த்தரையின் உரிமைக்கும் ஸம்பந்தமில்லை. அதாவது, ஆற்றின் உள்வாய்த்தரையில் கவர்ன்மெண்டாருக்கு யாதொரு பாத்தியமும் இல்லாமல் இருந்தாலுங்கூட அந்த ஆற்றின் ஜலவிஷயமாய் வேண்டிய ஏற்பாடுகளை கவர்ன்மெண்டார் செய்யலாம் என்பதே தாத்பரியம். இந்த விஷயத்தில் ரயத்வார் குடிகளாய் இருந்தாலும் சரி, அல்லது சாசுவதபைசல் எஸ்டேட்டுகளின் சொந்தக்காரர்களாய் இருந்தாலும் சரி, யாதொரு வித்தியாசமும் இல்லை.

5. ஒருவர் தமக்கு ஆற்றிலுள்ள பாத்தியங்களுக்கு கவர்ன்மெண்டாரவர்களால் செய்யப்பட்ட யாதாமொரு வேலையினால் கெடுதி நேர்ந்ததென்று வழக்கு செய்தால், தமக்கு நஷ்டம் நேர்ந்ததாக ருஜுப்பிக்க வேண்டிய பொருப்பு ஷை வாதியுடையது.

6. ஆற்று ஜலத்திற்கு உரிமையுடைய ஒருவர் ஷை ஆற்றில் தாம் எவ்வளவு தண்ணீர் சேர்த்தாரோ, அவ்வளவு தண்ணீரை, அந்த தண்ணீர் இவருக்கு கீழாக ஷை ஆற்றின் ஜலத்திற்கு பாத்தியமுள்ளவருடைய பாகத்துக்குப்போய்ச் சேருவதற்கு முன்னாடி, மறித்துத் திருப்பிக்கொண்டு போகலாம். ஆனால் அப்படிச்செய்வதால் அவருக்கு கீழாக ஆற்று ஜலத்துக்கு பாத்தியமுள்ளவருக்குக் கெடுதி செய்யக்கூடாது.

---




# Oakes & Co., Ltd.,

## 9, Broadway, MADRAS.

—(o)—

### அடியில்கண்ட சாமான்கள் எங்களிடத்தில் அகப்படும்.

(1) விவசாயத்திற்கு வேண்டிய யந்திரங்கள்,

(2) மனிதர்களாலும், மாடுகளாலும் வேலை செய்யக்கூடிய தண்ணீர் பாய்ச்சும் பம்புகள்,

(3) நீராவியாலும் வேறு எந்த சக்தியாலும் வேலை செய்யக்கூடிய எல்லாவித தொழிலுக்கும் வேண்டிய யந்திரங்கள்,

(4) தச்சு வேலைக்கு வேண்டிய உளி, வாச்சி முதலிய சாமான்கள்,

(5) பலவித பெயிண்டுகள், எண்ணெய்கள், வார்னீஷுகள், புருஷுகள்,

(6) வியாபாரிகளுக்கு வேண்டிய நிறுக்கும் யந்திரங்கள், ஸேப்கள், பணம் வைக்க இரும்புப் பெட்டிகள், பூட்டுகள்,

(7) விவசாயிகளும், குடித்தனக்காரர்களும் உடைக்கவும், அரைக்கவும் வேண்டிய யந்திரங்கள்,

(8) கம்பி வேலிகள், இரும்பு மாடிப்படிகள், வீடு கட்டுவதற்கு வேண்டிய இரும்புச் சாமான்கள்,

இன்னும் எது வேணுமானாலும் எழுதியனுப்பினால் அனுப்பத் தயாராய் இருக்கிறோம். காட்டலாக் அனுப்பப்படும்.

**ஓக்ஸ் அண்டு கம்பெனி,**

9, பிராட்வே, சென்னப்பட்டணம்.

# EDUCATIONAL NOTES.

# வித்தியாவிஷயக் குறிப்புகள்.

AGRICULTURAL INSTRUCTION.

**விவஸாய போதனை.**—சமீபத்தில் அமெரிக்காவில் ஐக்கியமாகாணங்களைச் சேர்ந்த பென்ஸில்வேனியா என்னும் மாகாணத்து கவர்ன்மெண்டார் விவஸாயிகளுக்கு, சில பிரஸங்கங்கள் செய்ய ஒரு நூதன ஏற்பாடு செய்தார்களாம். ஆறு விவஸாய நிபுணர்களை நியமித்து ஒரு ஸ்பெஷல் ரெயில்வண்டியில் ஏற்றினார்கள். இந்த நிபுணர்கள் நடு நடுவே சில ஊர்களில் ரெயிலை நிறுத்திக் கொண்டு வந்திருந்த விவஸாயிகளுக்கு விவஸாயவிஷயமாய் பிரஸங்கங்கள் செய்தார்கள். இன்ன ஊரில் இன்ன தேதியில் பிரஸங்கம் செய்யப்படும் என்பதை முன்னமேயே ஜனங்களுக்குத் தெரிவித்து விட்டார்கள். ஆகையால், பல ஊர்களில் இருந்து ஒவ்வொரு பிரஸங்கம் நடக்கும் ஊருக்கும் விவஸாயிகள் வந்திருந்தார்களாம். இந்த மாதிரியாக 22 இடங்களில் நிறுத்தி சுமார் 3000 ஜனங்களுக்கு பிரஸங்கங்கள் நடந்தனவாம். இப்படிச்செய்ததை எல்லாரும் கொண்டாடி இதேமாதிரியாக பலதடவை செய்ய வேணும் என்று கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

AGRICULTURAL INSTRUCTORS IN CEYLON.

**சிலோனில் விவசாய போதகர்கள்.**—விவசாயத்தை அபிவிருத்திசெய்வதற்காக இலங்கையில் ஒரு சங்கம் ஏற்பட்டிருக்கிறது. இதில் சுமார் 1000 மெம்பர்கள் இருக்கிறார்கள். அதன் அக்கிராசனாதிபதி கனம் பொருந்திய இலங்கை கவர்னரவர்கள். இந்த சங்கத்தார் இங்கிலீஷ், தமிழ், சிங்களம், இந்த மூன்று பாஷைகளிலும் மாசாமாசம் விவசாயத்தைப்பற்றிப் பத்திரிகைகள் பிரசுரித்து வருகிறார்கள். இவைகளைத் தவிர, சென்ற வருஷத்தில், ஐந்து விவசாய நிபுணர்களை ஊர்ஊராய் அனுப்பி பிரசங்கங்கள் செய்யச்சொல்லியிருக்கிறார்கள். இவர்கள் விசேஷமாய் போக்குவரத்து இல்லாத ஊர்களுக்கெல்லாம் போய் அவைகளைப் பற்றிப் பலவித விஷயங்கள் அறிந்து கொண்டுவந்தார்களாம்.

AGRICULTURAL EDUCATION IN CEYLON.

**லங்கையில் விவஸாயிகளுக்கு போதனை.**—லங்கையில் உள்ள விவஸாயிகளுக்கு படிப்புச்சொல்லிக் கொடுத்து முன்னுக்குக்கொண்டு வர உபாயங்களை ஆராய்ச்சி செய்யும்படி ஒரு கமிட்டி சமீபத்தில் ஏற்பட்டது. இந்த கமிட்டியார் பள்ளிக்கூடங்களை ஒட்டி தோட்டங்களை அதிகமாக வைக்கவேண்டுமென்றும், உபாத்தியாயர்களுக்கு பொருள் ஞானத்தை உண்டுபண்ணக்கூடிய பிரசங்கங்கள் செய்யப்பட வேண்டுமென்றும், பள்ளிக்கூடங்களுக்கு உபயோகப்படும்படியான பொருள்பாட புஸ்தகங்களும், விவஸாய புஸ்தகங்களும், பிரசுரம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், விவஸாய விஷயமாக, ஊர் ஊராய்ப் போய் பிரசங்கங்கள் செய்வதற்காக போதகர்களைந் தயாரிக்க ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்த வேண்டுமென்றும், சில பள்ளிக்கூடங்களில் விவசாய விஷயங்கள் முக்கியமாய் போதிக்கப்பட வேண்டுமென்றும், இந்த விஷயங்களில் கிராமாதிகாரிகளையும் தயார் செய்யவேண்டு மென்றும், இலங்கை விவசாய சங்கத்துக்கு சிபார்சு செய்திருக்கிறார்களாம்.

GOVERNMENT AND AGRICULTURE.

**சர்க்காரும் விவசாயமும்.**—நமது தேசத்தில் கிராமாந்தரங்களிலுள்ள அநேக விவசாயிகளுக்கு எழுதப்படிக்கத் தெரியாது. இவர்களுக்கு நூதன விவசாய முறைகளை போதிக்க வேண்டுமானால் பத்திரிகை மூலமாய் எவ்வளவு எழுதினாலும் பிரயோஜனப்படாது. கடுதாசிச் செலவே தவிர, காரியத்தில் ஒன்று மாகாது. விவசாய விஷயங்கள் தெரிந்தவர்களை நியமித்து, ஊர் ஊராய்ப்போய் பிரசங்கங்கள் செய்வது தான், தற்காலத்தில் பயன்தரக் கூடிய வழி என்று தோன்றுகிறது. கவர்ன்மெண்டார் கோயம்பத்தூரில் ஏற்படுத்தியிருக்கும் விவசாய காலேஜூம், இன்னும் மற்ற இடங்களில் ஏற்படுத்தியிருக்கும் விவசாய பண்ணைகளும், நல்லவைகள் தான். ஆனால், இவைகளெல்லாம் விவசாயிகளுக்கு நேரில் போய் பிரசங்கங்கள் செய்தால் எவ்வளவு பயன்படுமோ, அவ்வளவு அளவில் பயன் படுமென்று தோன்ற வில்லை. அமெரிக்கா, இலங்கை இவ்விடங்களில் செய்வது போல், போதகர்கள் இருக்கிறவர்களைத் தெரிந்தெடுத்து கவர்ன்மெண்டார் ஊர் ஊராய் அனுப்பவேண்டும். போதகர்கள் இல்லை என்று சொல்வது வீண்பேச்சு. ஒருமிக்க நூறு ஆகாது. ஒன்று ஒன்றாகத்தான் நூறாகவேண்டும்.




**THE PRESIDENCY MANURE WORKS, LIMITED, RANIPET.**

**Managing Agents—PARRY & CO., MADRAS.**

**ராஜதானி ரஸாயந உரக்கிடங்கு,**

**ராணிப்பேட்டை.**

பயிர்களும் பிராணிகளைப்போலவே உணவால் ஜீவிக்கின்றன. நல்ல சத்துள்ள ஆகாரங்களினால் பிராணிகள் புஷ்டியாய் வளர்வதுபோலவே, பயிர்களும் நல்ல சத்துள்ள உரங்களால் செழிப்பாய் வளர்கின்றன. இப்பயிருணவு சத்துக்கள் பெரும்பான்மையும் மண்ணிலிருந்தே கிரகிக்கப்படுகின்றன. ஓயாமல் பயிர் செய்து வருவதினால் நிலவளம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது. சத்துக் குறையக்குறைய பயிர் நன்றாய் வளருவதில்லை. நிலத்தின் மண்ணை ஓர் பயிர் செய்வதற்கு முந்தியும் பிந்தியும் ரஸாயன முறைப்படி பரிசோதித்துப் பார்த்தால் இவ்வளவு சத்து எடுபடுகிறதென்று தெரிகிறது. இவ்வாறு எடுபடுகிற பயிருணவு சத்துக்களில் நைட்ரஜன் (Nitrogen), பாஸ்பாரிக் ஆஸிட் (Phosphoric acid), பொடாஷ் (Potash), இம்மூன்றுந்தான் முக்கியமானவைகளென்று வியவஸாய ரஸாயன சாஸ்திர நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆதலால் மேற்கூறிய மூன்றுந்தான் பயிரிடுவதற்காக போடுகிற உரங்களிலிருக்கவேண்டிய முக்கிய சத்துக்கள். சில பயிர்களுக்கு நிலத்தில் **சுண்ணாம்பு** (Lime) ம் அவசியம். சுமாரான நெல் சாகுபடியால் ஒரு ஏகரா நிலத்திலிருந்து 40 ராத்தல் நைட்ரஜனும், 25 ராத்தல் பாஸ்பாரிக் ஆஸிட்டும், 46 ராத்தல் பொடாஷும் எடுபடுகிறதாக ஒருவர் கணக்கிட்டிருக்கிறார். மேற்கூறிய சத்துக்களின் அளவு பயிருக்குத் தக்கபடி வித்தியாசப்படுகிறது. அதாவது சில பயிர்களுக்கு நைட்ரஜன் அதிகமாகவும், சில பயிர்களுக்கு பாஸ்பாரிக் ஆஸிட் அதிகமாகவும் வேறுசில பயிர்களுக்கு பொடாஷ் அதிகமாகவும் தேவையாயிருக்கிறது. பயிர்களாலெடு படுகிறது தவிர நிலத்திலுண்டாகிற புல் பூண்டு முதலியவைகளாலும், நீர்ப் பெருக்கினாலும் சேதமாகிற சத்துகளும் அதிகம். இவைகளுக்கெல்லாம் தக்கபடி போதுமான அளவு சத்துள்ள உரங்களை உபயோகித்தால்தான் சாகுபடி லாபகரமாயிருக்கும். எங்கள் பூரா உரங்கள் நிலத்திற்கு செழுமை கொடுக்க போதுமான சத்துள்ளவைகளென்றும், ஒவ்வொரு அறுவடையிலும் நிலத்திற்கு உண்டாகிற பயிருணவு நஷ்டத்தை நிவர்த்திப்பதற்கு பிரயோஜனமானவைகளென்றும் வியவஸாய சாஸ்திரிகளாலும் அதில் திடமான அனுபோகமுள்ளவர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

மானேஜிங் ஏஜண்டு:—

**பாரி அண்டு கம்பெனி,**

மதராஸ்.

## SCIENTIFIC NOTES.
## சாஸ்திரீயக் குறிப்புகள்

---

DEEP PLOUGHING.

**ஆழமாக உழுதல்.**—உழவு விஷயத்தில பலபேர்கள் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். சிலர் "அகல உழுவதை விட, ஆழ உழு" என்னும் பழமொழிப்படி, நிலங்களை ஆழமாக உழுது பயிர்செய்தால் நல்ல மாசூல் கிடைக்குமென்று சொல்லுகிறார்கள். மற்றுஞ் சிலர், ஆழமாக உழுதால் கீழ் மண்ணில் உள்ள உப்புமுதலியவைகள் மேலேவந்து பயிரைக் கெடுத்து விடுமென்று சொல்லுகிறார்கள். இந்த இரண்டு பேர்கள் சொல்வதிலும் வாஸ்தவமிருக்கிறது. பயிர்கள் நல்ல மாசூலைத்தர வேண்டுமானால், முக்கியமாய், நிலத்திலுள்ள உணவுகளை சாப்பிட்டுத்தான் கொடுக்கமுடியும். இதற்கு, மண்ணை அடிக்கடி கிளறிக் கொடுக்கவேண்டும். இப்படிக் கிளறிக்கொடுப்பதில் எவ்வளவுக் கெவ்வளவு ஆழமாகக் கிளறிக்கொடுக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு பயிருணவு ஜாஸ்தி ஆகிறது. ஆனால், ஆழ உழுவதை ஒரேதடவையாய்ச் செய்யாமல் வருஷத்துக்குக் கொஞ்சமாக, ஆழப்படுத்தி உழுதுகொண்டே போகவேண்டும். சாதாரணமாய், பயிர் வளருவதற்கு வேண்டிய சாதனங்கள், நிலத்தின் மேல்புறத்திலேயே யிருக்கின்றன. ஒரே தடவையில் ஆழ உழுது கீழ்மண் மேல்மண்ணாகிவிட்டால் உணவில்லாமல் பயிர்கள் வாடிப்போம். ஆகையால், ஆழ உழுவது நல்ல முறையானாலும், மிகச் சாக்கிரதையாயும் நாளாவர்த்தியிலும் செய்யப்பட்டாலொழிய, நல்ல பலன் தராது.

THE WATER OF THE GANGES.

**கங்கா தீர்த்தம்.**—இந்துக்கள் கங்கையின் தண்ணீரைக் கொண்டாடுவது யாவருக்கும் தெரியும். கங்கை, யமுனை, இந்த நதிகளின் தண்ணீரில் விஷபேதிக்குக் காரணமான கிருமிகளைக்கொல்லக்கூடிய ஒரு வஸ்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

SOIL MOISTURE.

**நிலத்தின் ஈரம்.**—ஈரம் காக்கும் நிலங்களே நல்ல மாசூல் கொடுக்கக்கூடியவைகள். அழுகிய இலை தழைகள் கூடி, நன்றாய் உழுது புழுதியாயிருந்து, கீழ்மண் கெட்டியாயும் மேல்மண் பொலபொலப்பாயும் இருக்கும் நிலங்கள் ஜாஸ்தி ஈரம் காக்கும். விவஸாய நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சினால், அந்தத் தண்ணீர், நிலத்தில் புகுந்து, ஒவ்வொரு மண் தூளியின் நாலு பக்கத்திலும் பூசினாற்போல் ஒட்டிக்கொள்ளுகிறது. ஆகையால், நிலத்தை எவ்வளவுக்கு எவ்வளவு உடைத்துப் புழுதி பண்ணுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு புழுதிதூளிகள் ஜாஸ்தியாகி ஜலமும் ஜாஸ்திகொள்ளும். மண் தூளிகளோடு அழுகிய இலை தழைகள் சேர்ந்திருந்தால், தண்ணீர் இன்னும் ஜாஸ்திகொள்ளும். இப்படிக்கி அழுகிய கந்த மூலங்கள் சேர்ந்த நிலத்திற்கு, மணலைவிட 7 பங்கு தண்ணீர் கொள்ளும் சக்தியிருப்பதாகவும், மணல் நிலத்திலிருந்து ஜலம் எவ்வளவு சீக்கிரம் நீராவியாய்ப் போகுமோ அதில், 4-ல் ஒரு பங்குதான் மேல்சொல்லிய நிலத்திலிருந்து நீராவியாய்ப் போகிறதென்றும், கணக்கிடப்பட்டிருக்கிறது. களிமண் பூமியாயிருந்தால், அழுகிய கந்தமூலம் கொள்ளும் ஜலத்தில் 4-ல் ஒன்றுதான் கொள்ளும். ஜலம் ஆவியாய் போவது, கந்தமூலங்கள் தங்கிய நிலத்தைப்போல் இரண்டு மடங்கு ஆகும்.

AGRICULTURAL RESEARCH IN AMERICA.

**அமெரிக்காவில் விவசாய ஆராய்ச்சி.**—விவசாய விஷயமாய் பரிசோதனைகள் செய்வதற்காக அமெரிக்காவில் உள்ள வாஷிங்டன் மாகாணத்தில் மாத்திரம் ஆயிரம் சாஸ்திரிகள் இருக்கிறார்களாம். அந்ததேசத்தில் விவசாய விசாரணைகளுக்காக ஏராளமான செலவு செய்யப்படுகிறதென்று டாக்டர் ஜே. வி. மேல் என்பவர் இந்தியாவிலுள்ள அவருடைய சிநேகிதர் ஒருவருக்கு எழுதியிருக்கிறார்.

HEADACHE.

**தலைவலி.**—புருவத்தை ஒருவன் கால்மணி நேரம் சுருக்கிக்கொண்டிருந்தால் தலையை வலிப்பதுபோல் காண்பிக்கும். இதனால் கண்ணில் கெடுதல்கள் ஏதாவது இருக்கும் பக்ஷத்தில் தலை வலிக்குமென்று சுலபமாய் ஊகிக்கலாம்.

---




V. KALYANARAM IYER & Co., *Booksellers, Esplanade, MADRAS.*

நன்றாய்ப் பார்வையிட்டு நல்லகாகிதத்தில் தெளிவாய் அச்சிட்ட சிறந்த பதிப்பு.

**மூவர் தேவாரம்-பண்முறை—1044 பக்கம், ரூபாய் 3—0—0.**

இப்பதிப்பில் (1) சம்பந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவர்களின் சரித்திரக் குறிப்பும், (2) தேவார வரலாறும், (3) தேவாரப்பண் அட்டவணையும், (4) தேவாரப் பாடல்பெற்ற ஸ்தல அகராதியும், (5) தேவார ஸ்தலங்களுள்ள நாடுகளின் விபரமும், (6) அட்டவீரட்டானங்களைக்குறிப்பிக்கும் செய்யுளும், (7) தேவாரப் பொதுப்பாடல்களின் பக்க அட்டவணையும், (8) தேவார வைப்பு ஸ்தல அட்டவணையும், (9) காரைக்காலம்மையார் அருளிச் செய்த மூத்த திருப்பதிகமும் நூதனமாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன.

**நாலாயிர திவ்யப்பிரபந்தம்—640 பக்கம் ரூபாய் 3—0—0.**

இப்பதிப்பு (1) ஆழ்வார்களின் காலவைபவக் குறிப்பும், (2) ஆழ்வார்கள் அருளிச்செய்த பிரபந்தங்களின் அட்டவணையும், (3) ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திவ்விய தேசங்களின் அட்டவணையும், (4) அந்த தேசங்களின் வைபவக்குறிப்புகளும் சேர்த்து பல பிரதிகளுடன் ஒத்திட்டுப்பார்த்து, நன்றாய் அச்சிடப்பெற்றுளது.

**வேதாந்த விஷயமான புஸ்தகங்கள்.**

| | ரூ. அ. | | ரூ. அ. |
|---|---|---|---|
| வள்ளலார் சாஸ்திரம் .. .. | 1 8 | ஜன்மாந்திரம் (அல்லது இராமதாசர் உபதேசம்) .. .. .. | 0 2 |
| வாசுதேவ மனனம் .. .. | 1 0 | நானா சீவவாதக்கட்டளை .. .. | 0 1 |
| வேதாந்த போதினி .. .. | 0 8 | மகாராஜா துறவு.. .. .. | 0 6 |
| சிவபோகசாரம் & சிவஞானவிளக்கம் .. | 0 2 | தாயுமானவர் பாடல் (காலிகோ பயிண்டிங்) | 0 12 |
| சுகர் கைவல்லியம் .. .. | 0 2 | பட்டணத்தார் பாடல் .. .. | 0 2 |
| வைராக்கிய சதகம் .. .. | 0 2 | | |

**புதிய நாவல்களும் நாடகங்களும்.**

| | | | |
|---|---|---|---|
| போஜ சரித்திரம் .. .. .. | 1 8 | மனோகரன் .. .. .. | 0 12 |
| சுந்தரி மனோகரன் .. .. | 0 12 | கள்வர் தலைவன் .. .. .. | 0 8 |
| காமாக்ஷி .. .. | 0 8 | சாரங்கதரன் .. .. .. | 0 8 |
| சந்திரசேகரன் .. .. .. | 0 8 | யயாதி.. .. .. .. | 0 8 |
| ஆநந்தமடம் .. .. .. | 0 8 | வசந்திகா .. .. .. | 0 8 |
| லீலாவதி சுலோசனா .. .. | 0 12 | கிரிஸில்டா, அல்லது பொருமையுள்ள மனைவி | 0 2 |
| இரண்டு நண்பர்கள் .. .. | 0 12 | காலவரிஷி .. .. .. | 0 8 |
| சத்ருஜித் .. .. .. | 0 12 | வேதாள உலகம் .. .. .. | 0 8 |

**வேறு புஸ்தகங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| ஸ்திரி புருஷ சாமுத்ரிகாலக்ஷணம .. | 1 0 | **மனுதர்ம சாஸ்திரம்** 2647 கிரந்த சுலோகங்களும் அவைகளின் தமிழ் மொழிபெயர்ப்பும்— | |
| குறள் (மூலம்) .. .. .. | 0 4 | | |
| பஞ்சதந்திரம் .. .. .. | 0 4 | 560 பக்கம் .. .. .. | 2 4 |

**வியவசாய போதினி.**—நிலம், எரு, விதை, பயிரிடும்வகை முதலிய சகல விவசாய விஷயங்களையும் பற்றியது. மிராசுதாரர்களுக்கும் மற்றவர்களுக்கும் இன்றி யமையாதது. தஞ்சாவூர் ஜில்லா, நீடாமங்கலம் அ. சேது ராமய்யர் இயற்றியது. 400 பக்கம், 80 படங்கள். ரூ. 1 4 0

**மானிட மர்மசாஸ்திரம்.**—அல்லது "சிசு உற்பத்தி சிந்தாமணி." இது யாவரும் படித்து அறியவேண்டிய அடியிற்கண்ட அரிய பெரிய விஷயங்களடங்கியது. 500 பக்கம், 190 சித்திர படங்களடங்கியது ரூ. 5 0 0

**அடங்கிய விஷயங்கள்.**—மானிட ஜீவியத்தில் பலபருவங்கள்—இல்லற இன்பரகசியம்—ஜனனேந்திரியங்களின் அமைப்பும் அற்புதங்களும்—மாதாவின் மாக்ஷிமை—சிசு உற்பத்தி—கர்ப்பகால சுகாதாரவிதிகள்—கர்ப்பகால நோய்களும் பரிகாரங்களும்—மருத்துவ சாஸ்திரம்—சிசுபரிபாலனம்—மலட்டிற்கு நிவாரணம்—ஆண்மையினழிவும் அதன் மீட்சியும்—சமயோசித சஞ்சீவி.

☞ ஆர்டர் அனுப்பும்போது இப்பத்திரிகையின் பெயரைக் குறிப்பிடுக.

**வி. கல்யாணராமய்யர் அண்டு கோ.,**

புக்ஸெல்லர்ஸ், எஸ்பிளனேட், மதராஸ்.

## MEDICAL NOTES.
## வைத்தியக் குறிப்புகள்

WEIGHT OF MEN.

**மனிதர்களின் கனம்.**—சாதாரணமாய் 40 வயதும் 5½ அடியும் உயரமுள்ள ஒருமனிதன், 150 ராத்தல் கனமிருக்கவேண்டும். உயரம் 1 அங்குலம் ஏறஏற, கனமும் நூற்றுக்கு 3 வீதம் அதிகமாக வேண்டும். குள்ள மனிதர்களின் கனம், 45 வயது வரைக்கும், ஜாஸ்தியாகிக் கொண்டேவரும்; சாதாரண உயரமுள்ளவர்களுக்கு, 50 வருஷம் வரையில் அதிகரித்துக் கொண்டுவரும்; நெட்டையானவர்களாயிருந்தால் 55 அல்லது 60 வரையில், பளு அதிகரிக்கும். மேலே சொல்லப்பட்ட பளுவுக்கு ஐந்தில் ஒரு வீதம் ஏறினுலாவது குறைந்தாலாவது, தேகசௌக்கியமும், ஆயிசு அளவும், குறையும். மேலே குறிப்பிட்ட சாதாரணபளுவையும் அதோடு 5-ல் ஒன்றையும் சேர்த்துக் கூட்டி யாகும் கனத்துக்குமேல் இருக்கும் ஜனங்கள், அதிகமாகவே இறந்து போகிறார்களாம். இப்படிப்பட்ட ஜனங்கள் 80 வயதுவரையில் இருப்பது இல்லை. அதிக ஸ்தூல தேகமுள்ளவர்களுக்கு, விசேஷமாய் மூளை, இருதயம், இரைப்பை இவைகளை யொட்டிய வியாதிகளும், நீரழிவும், வருமாம்.

HYGIENE AND LONGEVITY.

**சுகாதாரமும் தீர்க்காயுளும்.**—ஐரோப்பா கண்டத்தில் மாணக்கணக்கில் குறைவாய்க் காட்டுவது இரண்டு தேசங்களேயாம். அவை ஸ்வீடன் நார்வேயென்ற இரண்டு தேசங்கள். 1880-ம் வருஷத்தில் ஸ்வீடனில் இறந்த எண்ணிக்கைக்கு, 1906-ம் வருஷத்தில் வயதானவர்களுள்ளும் குழந்தைகளுள்ளும், முறையே, ஆயிரத்துக்கு 3ம், 30ம் குறைந்து இருக்கிறது. இதேகாலத்தில் நார்வேதேசத்தில் மோற்சொல்லியபடி மரணவீதம் 3ம், 26 மாய்குறைந்து காட்டுகிறது. இது சந்தோஷப்படத்தக்க ஸம்பவம். இப்படி முன்னிருந்ததைவிட ஜனங்கள் அதிகமாய் இறக்காமல் இருக்க, சில காரணங்கள் உண்டென்று ஷை கணக்குகளை சீர் தூக்கிப் பார்த்த டாக்டர் ஜூல்ஸ் கூர்மோன் என்பவர் சொல்லுகிறார். மேற்கண்ட இரண்டு தேசங்களிலும் ஜனங்கள் தங்கள் சுகாதார வழியைச் சரியாய்த்தெரிந்து கொண்டிருக்கிறார்களாம். ஸ்நானம் செய்வதற்குத் தக்க ஏற்பாடுகள் இருக்கின்றனவாம். தொத்து வியாதியால் பீடிக்கப்பட்டவர்களை பணக்காரராயிருந்தாலும் ஏழைகளாயிருந்தாலும் ஒரே மாதிரியாய் ஆஸ்பத்திரிகளில் நடத்துகிறார்களாம். மேலான உத்தியோகஸ்தருயிருந்தாலும், தாழ்ந்த கூலியாளாயிருந்தாலும், பொது நன்மையை நாடவேண்டுமென்று தெரிந்து கொண்டு, அதன்படி நடந்து கொள்ளுகிறார்கள். தடுக்கக்கூடிய வியாதியாயிருந்தால் அதைத்தடுக்க பல மார்க்கங்களையுந் தேடுவது தங்கள் கடமையென்று ஒவ்வொருவரும் எண்ணுகிறார்கள்.

NEW CURE FOR BOILS AND CARBUNCLES.

**கட்டிக்கும் ராஜப்பிளவைக்கும் புதுசிகிச்சை**—இங்கிலீஷில் ஸல்பூரிக்ஆஸிட் என்று சொல்லப்படும் கந்தகாமலத்தைத் தண்ணீருடன் கலந்து உள்ளுக்குக் குடிக்க கொடுப்பதனுல், ராஜப்பிளவைகளும், கட்டிகளும், இவைபோன்றவைகளும், சொஸ்தமாகுமென்று டாக்டர் ஜே. ரேநால்ட்ஸ் என்பவரும், டாக்ட்டர் ரஸ்ஸல் ஜே. ரேநால்ட்ஸ் என்பவரும், கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தமருந்து நன்ருய் வேலைசெய்ய வேண்டுமானுல், இருபது முப்பது சொட்டு ஸல்பூரிக் ஆஸிடைத் தண்ணீருடன் தாராளமாய்க்கலந்து நான்குமணிநேரத்திற்கு ஒரு முறைகொடுக்கவேண்டு மென்று அவர்கள் சொல்லுகிறார்கள். ராஜப்பிளவையுள்ளவனுக்கு இப்படிக்கொடுத்தால் பன்னிரண்டு அல்லது பதினெட்டு மணிநேரத்திற்குப் பிறகு, அந்தப்பிளவையுள்ள இடத்திற்கு வரம்பு ஏற்பட்டு, அது தெளிவாய்க்காணப்படுகிறது; புண் புரையோடுவதில்லை; பிளவைஇருக்கிற இடத்திலுள்ள சதை மெதுப்படுகிறது; சீழ்வடிகிறது; பிளவையின் அடிப்பக்கத்தில் சிறுமணிகளைப்போன்ற ஆரோக்கியக் குறிகள் உண்டாகின்றன; அது முதல் தடைபடாமல் மேன்மேலும் நல்லசதைவளர்ந்து வருகிறது. பிளவையை அறுக்கவேண்டியது அனுவசியம். வேறே எவ்விதத்திலும் அதைத்தொடவும் வேண்டாம்; மாம்ஸம் அழுகிப்போகாமல் பரிஹரிக்கத்தக்க லேபனம் கார்பொலைஸ்டு வாஸிலீன் போன்ற ஏதாவது தடவிக்கட்டுக் கட்டினுல் போதும். பிளவை ஆறிப்போனபிறகு, பதினைந்து நாள் வரையில், அந்தமருந்தைச் சாப்பிட்டுக் கொண்டே இருக்க வேண்டும். ஸல்பூரிக்ஆஸிட் அபாயமான வஸ்து. ஆதலால் மேலே சொல்லப்பட்ட சிகிச்சையை தகுந்த வைத்தியர் மூலமாய்ச்செய்து கொள்ளவேணும்.




# காதர் அண்டு யூசப் பிரதர்ஸ்.

இந்தியா, பர்மா, சிலோன், முழுமையும் பெயர்பெற்று யாவராலும் அங்கீகரிக்கப்பட்ட கம்பெனி.
கெடியார வர்த்தகர்கள், இந்திய ரெயில்வேக்களுக்கும், கவரன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கும் கெடியாரம் சப்ளை செய்கிறவர்கள்.
நெம்பர் 47, P. L. சென்னை.



நிக்கல் மேல் பார்வையில் மணிபார்க்கும்படியான இந்து தேசத்திற்கு தகுந்ததுமான பேடண்டு இந்தியா லீவர் கெடியாரம் ரூபா 10, Oxydised ரூபா 12, வெள்ளி ரூபா 15.

நிக்கல் மேல் பார்வையில மணி பார்க்கும்படியானதும் நடு அளவுள்ளதுமான பேடண்டு Life லீவர் கெடியாரம் ரூபா 12 வெள்ளி ரூபா 18.

நிக்கல் மேல் பார்வையில் மணிபார்க்கும்படியான கடியாரம் மேல் சாவி யுள்ளது ஸ்காந்த மல்லாத (Non magnetic) சர்தார் (Sardar) லீவர் ரூபாய் 12, வெள்ளி ரூபா 18 oxydised ரூபா 14.

வெள்ளி மேல்பார்வையில் மணிபார்க்கும்படி கடியாரம் மேல்சாவியுள்ளது. ஸ்காந்தமல்லாத (Non-magnetic) பஹதூர் (Bahadur) லீவர் ரூபாய் 14, வெள்ளி ரூபா 20.

நெ. 2. நிக்கல் மேல்பார்வையுள்ளதும் மேல்சாவியுள்ளதுமான ரெயில்வே ரெகுலேடர் கடியாரம். டயல்மேல் இஞ்சின் மார்க்கு நடு அளவுள்ளது ரூபா 4-8-0.

நெ. 102. ஷை மாதிரி லீவர் ராஸ்கோப் சிஸ்டம் பேடண்டு கெடியாரம் ரூபா 3-0-0.

ஒவ்வொரு கெடியாரத்துடன் நேர்த்தியான சங்கிலி, கண்ணுடி, ஸ்பிரிங், வில்வெட்டு பெட்டி அனுப்பப்படும்.

---

## SCREENS AND WALL MATS OF OUR OWN INVENTION.

ORNAMENTS FOR HOUSES—ADVERTISEMENTS FOR MERCHANTS—OBJECT-LESSONS FOR SCHOOLS.



### எங்களால் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டு, செய்யப்பட்டு வருகிற ஸ்கிரீன்கள் அல்லது தட்டிகள்.

வீடுகளை அலங்கரிக்கவும், வர்த்தகர் தங்கள் பெயர், வியாபாரம் முதலியன இவைகளின் பேரில் எழுதி பிரசுரஞ்செய்யவும், மிருகங்கள் முதலியவை பெயின்ட்செய்த ஸ்கிரீன்கள் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குக் காண்பிக்கவும் உதவும். 48"×12" தட்டி 1க்கு விலை. ரூ 0 10 0.
1 முறை 12 தட்டி வாங்குபவர்களுக்கு தட்டி 1க்கு 0 8 0.

கதவு, சன்னல் முதலியவைகளுக்குப் பெரிய தட்டிகள் ஆர்டரின் பேரில் செய்யப்படும்.

இன்டியன் பைன் ஆர்ட்ஸ் கம்பெனி,
ஆபீஸ்—22, வெங்கடாசல முதலி வீதி, புரசை, மதராஸ்.

THE INDIAN CHRISTIAN FINE ARTS CO.,
22, Venkatachala Mudali Street *Purusawakam, Madras.*

## PAGE FOR GIRLS.
## பெண்களுக்கான பக்கம்.

---

SUGAR.

**சர்க்கரை.**—சர்க்கரை கருப்பஞ் சாற்றிலிருந்தும், பனைப்பதனியிலிருந்தும், ஈச்சம் பழங்களிலிருந்தும், பீட்ரூட் முதலிய சிலகிழங்குகளிலிருந்தும் உண்டாக்கப்படுகிறது. இவைகளில் கருப்பஞ் சர்க்கரை சிறந்தது.

சுமார் நூறு வருஷங்களுக்குமுன் சர்க்கரையை விசேஷமாய் மருந்து பதார்த்தமாக உபயோகித்து வந்தார்கள். இப்போது அது முக்கியமான உணவு பதார்த்தங்களில் ஒன்ருய் இருக்கிறது. சர்க்கரை ஆரோக்கியமானதல்ல வென்றும், பல்லுக்கு கெடுதி என்றும் சிலர் நினைத்து குழந்தைகளுக்கு ஜாஸ்தி சர்க்கரை கொடுக்கிற தில்லை. இது பிசகு. சர்க்கரை பல்லுக்கு கெடுதி செய்யாது. ஜனங்கள் நினைக்கிறபடி சர்க்கரை பற்களில் புழுக்களை உண்டாக்காது.

சர்க்கரை சாப்பிடுவதனுல் நீரழிவு உண்டாகிறதென்று அநேகர் நினைக்கிருர்கள். இதுவும் பிசகு. அந்தவியாதி உண்டாவது ஒருவருடையமனக் கவலையையும், மூளையின் தன்மையையும், பொறுத்தது என்று வைத்தியத்தில் தேர்ந்த நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கிருர்கள்.

சர்க்கரை சேராததால் தேகத்தில் பலஹீனமுண்டாகி, உடம்பு மெலிந்து களைப்பும் உண்டாகிறது. சர்க்கரை சேர்வதினுல் ஜீரணசக்தி அதிகரித்து மேலே கண்ட துர்க்குணங்களுக்கு இடமில்லாமல் போகிறது. கரும்பு ஆலைகளில் கூலிவேலை செய்கிற ஏழைஜனங்கள் கரும்பைத் தின்பதினுலேயே பலமுடையவர்களாயிருக்கிருர்கள் என்று சொல்லப்படுகிறது. அரேபியர்கள், பிரசித்திபெற்ற மகாபலிஷ்டர்கள். அவர்கள் விசேஷமாய் தித்திப்பான பழங்களையும் மிட்டாய்களையுமே தின்கிருர்கள். தித்திப்பே இவர்கள் பலத்திற்குக் காரணம். மனித சரீரத்திற்கு தித்திப்புச் சேரவேண்டியது அவசியமாம். குழந்தைகள் குடிக்கும் தாய்ப்பால் பசுவின் பாலைவிட அதிக இனிப்பாக இருக்கிறது.

ECONOMY.

**செட்டு.**—செட்டு என்பது பணச்செலவில் மட்டும் காட்டக்கூடியதல்ல. ஒரு மனிதன் எந்த வஸ்துவை யுடையவனுயிருந்தாலும், எந்த ஏதுக்களால் நன்மை பெறக்கூடியவனுயிருந்தாலும், அந்த வஸ்துவையும் அந்த ஏதுக்களையும் வீண்போக்காமல் செட்டாய்ப் பிரயோகிப்பது அவசியம். லார்ட் ரோஸ்பரி, ஸ்காட்லாண்டு தேசத்து பட்டணங்களில் முனிசிபாலிடிகளால் அமைக்கப்படும் தண்ணீர் வசதிகளை ஜனங்கள் வீண் செலவு செய்வதை ஒரு உதாரணமாகச் சொன்னுர். சென்னபட்டணத்தில் குழாய்கள் வழியாய் ஜனங்கள் அனுபவிக்கும் ஜலத்தின் அளவு குறையற்றிருப்பதால், ஜனங்கள் அதை யோசனையில்லாமல் வீண் செலவு செய்தாலும் பாதகம் இல்லை. ஆயினும் மற்ற அநேக இடங்களில் ஜனங்கள் உபயோகத்துக்கு வேண்டிய ஜலம் போதும் போதாதுமாயிருக்கும்போது, அதை வீண் செலவு செய்வதால், நேரிடக்கூடிய கஷ்டத்தை நாம் ஊகிக்கலாம். வேண்டிய ஜலத்தை ஒரு பாத்திரத்தில் பிடித்து வைத்துக்கொண்டு செலவு செய்தால் ஜலம் வீண்போகாது. அப்படிக்கில்லாமல் குழாயைத்திறந்துவிட்டுக்கொண்டு பாத்திரங்களைத் தேய்ப்பதும், இன்னும் வேண்டிய காரியங்களைச் செய்வதும் அநேக ஸ்திரீகளுக்கு வழக்கமாயிருக்கிறது. ஜலம் வேண்டிய காரியங்களையெல்லாம் திறந்த குழாயின்கீழ் போய் செய்வதால் கால் விரல்களின் இடுக்குகள் வெந்துபோய் சென்னப்பட்டணத்தில் அவஸ்தைப்படும் ஸ்திரீகள் அநேகர். ஸ்நாநம் செய்வதற்கு வேண்டிய ஜலத்தைத் தவிர, மற்ற விஷயங்களுக்கு வேண்டிய ஜலத்தை பெரிய ஏனத்தில் பிடித்து வைத்துக்கொண்டு, முற்றத்தில் பத்துப் பாத்திரங்களைப் போட்டு மேலே கொரட்டில் நின்று கொண்டு அலம்பி எடுத்தால் ஜலமும் வீண்போகாது. கால் விறல் இடுக்குகளும் வெந்து போகாது.

THE KALYANI HOSPITAL.

**கலியாணி ஆஸ்பத்திரி.**—இது திவான்பஹதூர் என். சுப்பிரமணியம் அவர்களால் ஸ்திரீகளுக்கு தர்மத்திற்கு வைத்தியம் செய்து மருந்து கொடுத்து உதவிசெய்து வருவதற்காக அவருடைய காலஞ்சென்ற அருமைத்தாயாரின் பெயரால் மைலாப்பூரில் சமீபத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கு சீமையிலிருந்து வைத்திய பரிக்ஷையில் தேறிய மிஸ் வில்ஸன் என்ற மாது வரவழைக்கப்பட்டிருக்கிருர்கள். இதற்காக ஒருபெரிய விசாலமான கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது.




# P. S. Sastri Artist and Photographer,

CARNATIC STUDIO, Mount Road, Madras.

SPECIALITIES. { SCHOOL GROUPS. / FAMILY GROUPS. / BROMIDE ENLARGEMENTS.

## பொட்டகிராப் படங்கள்.

பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளையும் குடும்பங்களையும் பொட்டகிராப் படம் பிடிப்பதிலும் சிரியபடங்களை பெரிதாக்கிக்கொடுப்பதிலும் நிபுணர்.

**பி. எஸ். சாஸ்திரி,**

பொட்டகிராப் பிடிப்பவர், கர்நாடிக் ஸ்டுடியோ,

மவுண்ட் ரோட், மதராஸ்.

---

THE BENGAL CHEMICAL
AND PHARMACEUTICAL WORKS, LTD.,
*91, Upper Circular Road, Calcutta.*

எங்கள் பரிமளக் கூந்தல் எண்ணெயில் அநேக மலர்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. மகா சுத்தமானது. வேறுவிதமான வர்ணங்களைச் சேர்த்து பகட்டப்படாதது.

இதில் எத்தனையோ ஆயிரக்கணக்கான ரோஜா, மல்லிகை, தாமரை முதலிய புஷ்பவாஸனைகள் வீசும்.

வேண்டியவர்கள் அடியில் கண்ட ஏஜண்டுகளிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பி. ரெங்கய்ய செட்டி அண்டு ஸன்ஸ், எஸ்பிளநேட், மதராஸ்.

ஸ்வதேசி வேர் அவுஸ், தம்புசெட்டித் தெரு, மதராஸ்.

நாஷனல் டிரேடிங் கம்பெனி, எஸ்பிளநேட், மதராஸ்.

கே. வி. பிராமய்யா அண்டு ஸன்ஸ், மதராஸ் அல்லது ராஜமஹேந்திரம்.

என். ஆர். பகடி அண்டு கம்பெனி, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

**பங்காள ரஸாயன ஔஷதசாலை,**
91. அப்பர் ஸர்கிலர் ரோட்,
கல்கத்தா.

SWADESA VASTHU VARTHAKA SALA,
199, Mint Street, Madras.

**வெகு நயம்! வெகு நேர்த்தி!! வெகு உறுதி!!!**

1. எவ்விதமான தலைநோய், ஜலதோஷம் முதலியதை உடனே எடுக்கக்கூடிய சுதேசி மெந்தால் 1 புட்டி ரூ. 0-4-0.

2. ஈர்வீக்கம், பல்நோவு, இரத்தம் வருதல்-இவற்றை நீக்கக்கூடிய ரோஸ் கார்பாலிக் பற்பொடி 1 டின் 0-2-0.

3. ஸம்பங்கித் தைலம் என்னும் கூந்தல் வளரும் சுவாசனைத் தைலம் மேலானது 1 புட்டி 0-4-0.

4. மேலானது. எவ்வித கெடுதலையும் நீக்கக்கூடிய யோகியின் பல்பொடி 2 மாதத்திற்கு 1 புட்டி 0-2-6.

5. சுதேசி ருசியுள்ள பப்பர்மெண்டுகள் பலவிதமானவை. ருசிகரமானவை. பவுன் 1க்கு 0-5-0.

6. கெட்டிசாயம் சுதேசி சீட்டிகள் பாவாடை ரவிக்கை சொக்காய் முதலியவைகளுக்கு கஜம் 1க்கு 0-5-0.

7. வெகு நேர்த்தியான சுத்தவெள்ளை ட்வில் ஷர்டுகள் எந்த அளவிற்கும் 1க்கு 0-13-0, 0-14-0, 0-15-0, 1-0-0.

வியாபாரிகளுக்கு வெகு சரசமாய் கொடுக்கப்படும்.

**ஸ்வதேசவஸ்து வர்த்தகசாலை,**
199. தங்கசாலைத்தெருவு,
சென்னபட்டணம்.

## PAGE FOR BOYS.

## சிறுவர்களுக்கான பக்கம்.

THE DENIZENS OF THE DEEP SEA.

**கடலின் கீழ்ப் பாகத்தில் வசிப்பவை.**—கடலின் ஆழத்தில் என்ன பொருள் இருக்கிறதென்று ஆராய்வதற்காக அநேகர் பல தடவைகளில் மூழ்கி வருகிறார்கள். அப்படி மூழ்குவோர் பாதாளம் வரையில் போகிறார்களென்பதில்லை. ஏனென்றால், மேலேயிருந்து கீழே போகப்போக, மேலே நிற்கும் நீர் நிலையின் பளுவினால் மனுஷனுக்குக் கஷ்டம் சம்பவிக்கிறது. கொஞ்சதூரம் போகக்கூடுமே தவிர, நெடுந்தூரம் போக முடியாது.

EXPERIMENT.

**அந்தாட்சி.**—இப்படி நெடுந்தூரம் போக முடியாது என்பதையும், அப்படி போவதற்கு நீர் நிலையின் பளு தடையாயிருக்கிற தென்பதையுந் தெரிவிக்க, ஒரு பரீக்ஷை செய்தார்களாம். அதாவது உள்ளே ஒன்றுமில்லாத ஒரு கண்ணாடிக் குண்டை கயிற்றில் கட்டி நீளப் போகும்படி பளுவைக்கட்டி விட்டார்களாம். அந்த கண்ணாடி அரை அங்குல கனமுள்ளதாம். எப்படிப்பார்த்தாலும் கொஞ்சங் கூட பொத்தல் இல்லையாம். அப்படிக்கிருந்தும், கொஞ்சதூரம் போனவுடன், திரும்ப வெளியே யிழுத்துப்பார்த்ததில், அந்த குண்டுக்குள் தண்ணீர் நிரம்பியிருந்ததாம். நீர் நிலையின் பளு பொத்தல் இல்லாத குண்டுக்குள் தண்ணீரைச் செலுத்துமானால், மனிதன் நெடுந்தூரம் செல்ல எப்படி முடியும் என்று யோசிக்கிறார்கள்.

DEEP SEA FISH.

**கடலின் ஆழத்திலுள்ள மீன்கள்.**—ஆயினும் பாதாளத்தில் கடலில் சில மீன்கள் இருக்கின்றனவென்று கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்த மீன்கள் வெளியே முழுதேகத்துடன் கிடைக்காவிட்டாலும், துண்டு துண்டாய் கிடைக்கின்றனவாம். அப்படிக் கிடைக்கும் ஜந்துக்களைச் சேர்த்து படம் பிடித்து ஆராய்ச்சி செய்துவருகிறார்கள்.

இந்த மீன்களுக்குக் கண் மிகவும் சிறியதாயிருக்கின்றதாம். சில மீன்களுக்குக் கண்ணே கிடையாதாம். அப்படிப்பட்டவைகளுக்கு தேகத்தின் முதுகில் வரிசையாய் மின்மினிப்பூச்சி காந்திபோல பளபளப்புள்ள கோடுகள் இருக்கின்றனவாம். இந்த மீன்கள் காந்தியைக்கொண்டே கடலில் சஞ்சரிக்கின்றனவென்று தெரிகிறது. இவைகளுக்கு எலும்பு முதலியவைகள் இல்லை. தொட்டவுடன் பொடிப்பொடியாய்ப் போகும் தேகங்களையுடையவையா யிருக்கின்றனவாம்.

THEIR FOOD.

**ஆகாரம்.**—இவைகளுக்கு ஆகாரம் மீன் குஞ்சுகளே. சில மீன்களுக்கு வயிறு மட்டில், தேகத்தைவிட, நாலைந்து பங்கு அதிகமாய்க் காணப்படுகிறது. சிறிய மீன்களைத்தின்றே பெரியமீன்கள் ஜீவிக்கின்றன.

SHELLAC.

**அரக்கு**—இது ஒருவகைப் பூச்சியினாலுண்டாகும் செம்மெழுகு; எங்கும் கிடைக்கும்; காட்டுஜாதியார் பொறுக்கிச் சேர்க்கிறார்கள். சூடியா நாகப்பூர், ஆஸாம், மிர்ஸாபூர் என்னும் இடங்களிலிருந்து கல்கத்தாவுக்கு அனுப்பப்படுகின்றது; அங்கிருந்து வெளி தேசங்களுக்கு ஏற்றுமதியாகின்றது; இது சாயத்திற்கும் மெருகெண்ணெய் செய்வதற்கும் உபயோகப்படுகின்றது.

A CURIOUS WELL.

**ஒரு விநோதக் கிணறு.**—ஒஹியோவில் நியூபர்லிங்டன் என்னு மிடத்தில் ஒரு ஆச்சரியமான கிணறு இருக்கிறது. அதில் இரண்டு ஜலம் இறைக்கும் குழாய்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. முதல் குழாய் நீளம் 16 அடி. இதில் நல்லஜலம் வருகிறது. மற்றக் குழாய் நீளம் 35 அடி, அதாவது கிணற்றுக்குள் அதிக ஆழத்தில் போகிறது. இதில் உப்பு ஜலம் வருகிறது. நல்ல ஜலத்தை விட உப்புஜலம் கனமாயிருக்கிறதாம், இரண்டும் கலக்காம லிருக்கிறதாம்.

PLANTAIN SKIN TO POLISH BOOTS.

**வாழைப்பழத் தோலி பூட்ஸ் துடைக்க உதவும்.**—ஜோடு, பூட்ஸ். முதலிய வைகளைப் பளபள வென்று செய்வதற்கு வாழைப்பழத்தோல் உபயோகப்படுகிறது. இந்தத்தோலின் உள்புறத்தினால் ஜோட்டைத் தேய்க்கவேண்டும். நன்றாய்த் தேய்த்து விட்டு பின்பு ஒருகம்பளித் துணியினால் அழுத்தித் துடைத்து விட்டால் ஜோடு பளபளப்பாயும் பிரகாசமாயும் ஆகிவிடும்,




**DAS & Co'.s *PATENT* LOCKS, SAFES, BOXES, &c.,**

*are approved aud largely used by H. M's. Indian Government.*

கல்கத்தாவில் காஸ்ஸிப்பூர் ரோடில் 15 நெ. வீடு தாஸ் அண்டு கம்பெனியாரால் செய்யப்பட்ட பூட்டுகளும், இரும்பு பெட்டிகளும் கவரன்மெண்டாரால் உபயோகிக்கப்படுகின்றன.

During the Viceroyalty of **Lord Curzon** Das and Co.'s Locks were supplied for Government Houses at Simla & Calcutta, and thus reported from Simla:—

"* * Were found to be excellently finished and no way inferior in quality to those of European Manufacture. They are giving every satisfaction."

Awards from the late **Chicago Exhibition** 1893–94. THACKER'S MEDAL with following Certificate:—

"The Locks are of good design and large heavy pattern having 12 Tumblers. They are made chiefly from good castings well fitted and finished by Machinery."

Please Address:—
**DAS & CO.,**
Chitpur Lock and Safe Works,
THE "ABBA" M'f'y.
*15, Cossipur Road, CALCUTTA.*

TELEGRAMS:— "Safeguard," Calcutta.

**THE COMPLETE LETTER WRITER** 2nd Edition Revised and Enlarged.

**BY HARI CHARAN DAS.** Price Re. 1. *(Full cloth, Gilt.)*

A Universal Guide to the Art of letter writingfor all positions of Life.

*To be had of*—M. L. DAS & CO., *122, Baitakkana Road, Calcutta.*

CLASSIFIED COMMERCIAL DIRECTORY.

**வியாபார பகுதி**

**விலாசங்கள்.**

COLOUR PENCIL MANUFACTURER.

கலர் பென்சில் செய்கிறவர்கள்.

K. P. RAMASWAMY IYER,
15, Solayappa Mudali Street,
*KUMBAKONAM.*

SILK MERCHANTS.

பட்டு வியாபாரிகள்.

பட்டு பீதாம்பர கம்பெனி,
காசி (பனாரிஸ்.)

BRUSH MANUFACTURE.

புருஷ் செய்தல்.

B. V. K. CHETTY & CO.,
No. 22, Broadway, Madras.

RAMNARAYAN SURYANARAYAN,
Silkmerchants, 160, Harrison Road,
*Bara Bazaar, Calcutta.*

**ஒருபட்டு ஷீட் இனாம்.**

**தகுந்த சகாயம் முந்துங்கள்**

எங்களிடத்திலிருக்கும் ரூபா 5-8-0 விலையுள்ள ராஸ்கோப் ஸிஸ்டம் வாச்சை வாங்குவோர் ஒவ்வொருவருக்கும் 3 முழம் 45 அங்குலமுள்ள ஒரு பட்டு சாதர் இனாமாகக் கொடுக்கப்படும். தபாற்கூலி அணா 6. பத்து வருஷம் உத்தரவாதம். 3 வாச்சு வாங்குகிறவர்களுக்கு தபாற்கூலி இலவசமாவதோடு ஒரு பட்டு சாதரும் இலவசமாய்க் கொடுக்கப்படும்.

**ராம்நாராயன் சூரியநாராயன்.**
பட்டு வியாபாரிகள்,
160, ஹாரிஸன் ரோட்,
பாரா பஸார், கல்கத்தா.

## INDIAN NEWS.

## இந்தியநாட்டு ஸமாசாரங்கள்.

THE SOUTH INDIAN INDUSTRIAL CONFERENCE.

**தென்னிந்தியா கைத்தொழில் சங்கம்.**—பர்ஹாம்பூரில் ஜுன்மீ 16ௌ, மேற்குறித்த சங்கத்தின் மூன்ருவது கூட்டம் ம-ா-ா-ஸ்ரீ கே. பேர்ராஜுபந்துலு அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் விமரிசையாய் நடந்தது. ராஜு௳ அவர்கள் செய்த பிரசங்கத்தில் அடியில் கண்டவைகள் நமக்கு அத்தியாவசியமானவைகள் என்று சொன்ஞர்.

(1) ஒவ்வொரு ஜில்லாவிலும் விவஸாயத்தை நூதன அபிவிருத்திப் பிரகாரம் போதிக்க பாடசாலைகளும் அவைகளை ஒட்டி பண்ணைகளும் வேண்டும்.

(2) கிராமாந்திரப் பள்ளிக்கூடங்களில் கீழ்த்தரப்படிப்புடன் விவஸாயக் கல்வியும் கற்பிக்கப்படவேண்டும்.

(3) விவஸாயபோதகர்கள் ஊர் ஊராய்ச்சென்று விவஸாயிகளுக்கு விவஸாயக் கருவிகளைப் பற்றியும், எருக்களைப்பற்றியும், விளைபொருள்களின் உபயோகம், விலை, இவைகளைப்பற்றியும் பிரசங்கங்கள் செய்யவேண்டும்.

விவஸாயிகள் அபிவிருத்தி முகமே காட்டி வராதிருப்பதற்குக் காரணம் அவர்களின் பேதமையே. சென்னையில் விளையும் பருத்தி இங்கிலாந்தில் மிக்க சிலாக்கியமானதென்று கருதப்பட்டு 1 ராத்தல் 12, 14 அளவுக்கு விலைக்குக் கொள்ளப்படுகிற விஷயத்தை அறிந்த விவஸாயிகள் எத்தனை பெயர் இருக்கிருர்கள்? பலர், பொருள்களின் உபயோகத்தை அறியாத காரணத்தால் அவைகளை விரயம் செய்கிருர்கள். உதாரணமாக, தேங்காய் நாரானது அடுப்பெரிக்க உபயோகமாகிவருகிறது. யாராவது சொல்ப தொகைபோட்டு தேங்காய் நாரால் கயிறு திரிக்கும் வேலை செய்யலாம். இவைகளையெல்லாம் பற்றி பாமர ஜனங்களுக்கு அறிவிக்க ஸமாசார ஆபீஸ் ஒன்று இருந்தால், திரவிய விரயம் தடுக்கப்படுவதுடன், நூதனமான கைத்தொழில்கள் கிராமாந்தரங்களில் ஏற்படும். நம் ராஜதானியில் 1000 பேர்வழிகளில் படித்தவர்கள் 63 ஆசாமிகள். 5 வயதுக்கு மேற்பட்ட 1000 பேர்களில் படிப்பில்லாதவர்கள் 802 பேர். பல கைத்தொழில்கள் படியாதவர்கள் எல்லாம் படித்தாலன்றி அபிவிருத்தியடைய முடியாது. சர்க்கார், விவஸாயம் கைத்தொழில் விஷயமாகப் பிரசுரமாகும் பத்திரிகைகள் வெகு சிலராலேயே படிக்கப்படுகின்றன.

நாட்டின் செல்வத்தைஅபிவிருத்திசெய்வது நாட்டாருடையவும் சர்க்காருடையவும் கடமையாகும். சர்க்கார்க்கடமையை எதிர்பாராமலே நாம் நம் கடமையைச் செலுத்தவேண்டும். சுதேசிய முயற்சியின் மூலியமாக ஜனங்களெல்லாரும் சுதேசிய சாமான்கள் அந்நிய சாமான்களை விட விலை அதிகமாயிருந்தாலும், அவைகளையே வாங்கத் தூண்டப்படவேண்டும். இவ்விஷயமாக மில் முதலாளிகளுக்கும், மில்சாமான்களை வாங்குபவர்களுக்கும் அந்நியோந்நியம் இருக்கவேண்டும். மில் முதலாளிகள் அதிகலாபத்தை இச்சிக்காமல் சொல்ப லாபத்தையே கருதவேண்டும். ஜனங்கள் இந்த சாமான்களையே வாங்கி முதலாளிகளை உற்சாகப்படுத்தவேண்டும். இவைகளுக்கெல்லாம் முக்கியமாகிய படிப்பு விஷயத்தில் சர்க்கார் எவ்வளவு செய்யவேண்டுமோ அவ்வளவு செய்யவில்லையென்று வைத்துக்கொள்வோம். நாம் நம் கடமையை சரிவர செலுத்தினேமா? நம் கொள்கை தன்னுதவியாயிருக்க வேண்டும். இது ஒவ்வொருவரிடமும் இருக்குமாஞல், இதுவே ஜாதீய பலம்.

THE BERHAMPORE PROVINCIAL CONFERENCE.

**பர்ஹாம்பூரில் நடந்த மாகாண சபை.**—ஜுன்மீ 17, 18, 19 தேதிகளில் கஞ்சம் ஜில்லாவிலுள்ள பர்ஹாம்பூர் என்னும் பட்டணத்தில், 16-வது சென்னை மாகாணசபை கூடிற்று. அதற்கு ராவ். பஹதூர். எம் ஆதிநாராயணய்யா அக்கிராசனாதிபதியாயிருந்தார். இவர் செட்டில்மெண்ட் இலாகாவில் டிப்டி கமிஷனராயிருந்து பென்ஷன் பெற்றவர். இந்தியன் பாங்கி போன்ற பொது நன்மைக்காக ஏற்பட்டிருக்கும், பலவித முயற்சிகளில் பிரயாசப்பட்டு உழைத்து வருகிருர். இவர் நமது ராஜாங்கத்தில் செய்யவேண்டிய சீர்திருத்தங்களைப் பற்றியும், நிலவரியைப் பற்றியும், நீர்ப்பாய்ச்சலுக்கு வேண்டிய சாதனங்களைப் பற்றியும் உயர்ந்த அகவிலையைப்பற்றியும், படிப்பைப் பற்றியும், தரும சொத்துகளின் மானேஜ்மெண்டைப் பற்றியும், விஸ்தாரமாய்ப் பேசிஞர். நிலத்தீர்வை விஷயமாய் பேசிய ஸமாசாரங்களை, ரெவின்யூக் குறிப்புகளின் கீழ் எழுதியிருக்கிருேம்.



THE NEW WORK BY PROFESSOR EBBARD.

Price 6s. Postage 4d.

"HYGIENE AND SELF-CURE"

**A PRACTICAL GUIDE** for the Self-Treatment of Diseases and Chronic Complaints based upon modern methods of **NATURAL TREATMENT WITHOUT PHYSIC.**

*Publishers' Announcement:*

The purpose of "Hygiene and Self-Cure" is to supply the need of an authoritative work of reference on the correct methods to be used to combat disease and the many chronic complaints, so prevalent at the present time, without having recourse to drugs or physic.

The Author of "Will Power," "Life-Giving Energy," "Bedrock of Health," may be truthfully described as a Pioneer of Modern Natural Methods of Curative Treatment. We possess thousands of testimonials from grateful men and women who, having failed to obtain relief of their sufferings from other sources, received enduring benefit from Professor Ebbard's teaching and treatment. Under the heading of the Disorder or Ailment will be found the exact means the inquirer should employ for the Self-Cure of any specific ill.

*Prospectus Post Free:*

**MODERN MEDICAL PUBLISHING CO.**

Department 1,

12 & 13 Henrietta Street, London, W.C.

## OPINIONS ON "PRACTICAL LIFE."

**THE HINDU.**—We have much pleasure in welcoming to the ranks of Indian Vernacular Periodical Literature, this new, interesting and very originally designed and excellently executed Tamil monthly, edited and published by G. A. Vaidya Raman, B.A. Mr. Vaidya Raman possesses rare qualifications for the educative work which he has undertaken to do by means of this novel magazine. The "Practical Life" is amply justified by the assortment of matters in the very opening number which is before us, and there need not be the slightest doubt, that the original aim and object in view will be lost sight of in the succeeding numbers. It is to be devoted mainly to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education. Popular interest in agricultural, industrial, commercial and economic matters is next to nothing. If it is so among the English educated classes, how much more is it among the masses? It is such an interest that the magazine apparently aims at creating and developing.

**THE INDIAN TRADE JOURNAL** published by the Government of India says.—We have received the first number of a new Tamil monthly entitled *Practical Life*, published in Madras. A good portion of it is devoted to trade, industry and agriculture and in this respect it is the only magazine of its kind in the Southern Presidency.

**THE MADRAS MAIL.**—There is no other Tamil periodical in this Presidency which is designed on these lines and which makes the discussion of agricultural, industrial, commercial and economic topics its chief feature.

**UNITED INDIA AND NATIVE STATES.**—*Practical life*, which is the name of the new Journal, edited by Mr. G. A. Vaidyaraman, is meant as a guide and help to breadwinners. Even a cursory perusal of the first number shows that the new venture is by no means a superfluous addition. There is no other periodical designed on these lines. The fare provided will satisfy any man's technical and industrial appetite.

**THE MADRAS STANDARD.**—This journal is the first of the Series designed on the above lines and it makes the discussion of agricultural, industrial, commercial and economic topics its chief feature.

**THE MALABAR QUARTERLY REVIEW.**—We have much pleasure in commending to the Tamil world, this new magazine "devoted mainly to agriculture trade, industry, citizenship, and popular, scientific and technical education." The printing and get up of the magazine are good. This new venture in the field of Tamil Journalism, on the whole, deserves support and encouragement.

**THE HEADMASTER, L. F. SCHOOL, YEDAPALLI, WRITES.**—"The whole scheme of the Journal, when its contents are taken into consideration, is admirable. Teachers seeking books for teaching "General Knowledge," on important subject in every elementary school will find the journal very useful. To my mind the appearance of this journal is one of the most hopeful signs of the nation's future. To-day, I am applying to the authorities for the supply of this journal to all the Board Elementary Schools in the district."

**THE HEADMASTER OF THE SECONDARY SCHOOL, PARAMAKUDI, WRITES.**—"It decidedly supplies the great want felt by the mass, in the most useful matters, such as Industrial, Agricultural and Commercial. It deserves the name "*Practical Life*" in every way."

## FOREIGN NEWS.

## அந்நிய நாட்டு ஸமாசாரங்கள்.

Boots and Shoes.

**பூட்ஸ், ஜோடுகள்.**—உலகத்திலுள்ள எல்லா நாடுகளையும் விட அமெரிக்காவிலுள்ள ஐக்கிய மாகாணங்கள் பூட்ஸ்களையும் ஜோடுகளையும் அதிகமாய் உபயோகிப்பதுந் தவிர, இதர நாடுகளுக்கும் வருஷத்துக்கு வருஷம் ஏராளமாய் ஏற்றுமதி செய்து வருகின்றன. ஆரம்பத்தில் மஸசூசட்ஸ் என்ற மாகாணத்தில் பூட்ஸ்களும் ஜோடுகளும் செய்யும் கம்பனிகள் ஏற்பட்டன. சிலவருஷங்களுக்குள் நாடெங்கும் கம்பனிகள் பல கிளம்பி 1878-ம் வருஷத்தில், அந்த நாட்டில்செலவழிந்ததைத்தவிர, $3\frac{1}{2}$ லக்ஷம் ஜதைகள் இதரதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. 1908-ம் வருஷத்தில் அனுப்பப்பட்ட ஜதைகளோ 65 லக்ஷம். அவைகளின் பெறுமானம் 344 லக்ஷம் ரூபாய். இக்கணக்கின்படி பார்த்தால், இந்நாடே இந்தவர்த்தகத்தில் முதன்மையாயிருக்கிறதென்று தெரிகிறது. 'பிழைக்கும் வழி' நேயர்களே, சென்னபட்டணத்தில் இருந்து அமெரிக்காவுக்குப் போகும் தோல் என்னத்துக்காக என்று இப்பொழுது தெரிந்ததா?

A Brahmin Student in America.

**அமெரிக்காவில் ஒரு பிராமண மாணாக்கன்.**—ஒய். ஜே. பண்டிட் என்ற ஒரு பிராமண மாணாக்கன் இப்பொழுது அமெரிக்காவில் ஐக்கியமாகாணத்தில் சார்ல்ஸ்டௌன் பட்டணத்தில் பருத்திக்கொட்டை எண்ணெய் செய்யும் வழியை படித்துக் கொண்டிருக்கிறானாம். இவன் பரோடா ராஜ்யத்தைச் சேர்ந்தவன். அந்த ராஜாவின் உதவி பெற்று அங்கே போயிருப்பதாகவும், சில இந்திய முதலாளிகள் பருத்திக்கொட்டையில் இருந்து எண்ணெய் எடுக்க மூன்று ஆலைகள் எற்படுத்தப் போகிறதாகவும், அதற்காக தான் அங்கே வந்திருப்பதாகவும் சொல்லுகிறானாம். இந்தியாவிலிருந்து சென்ற வருஷத்தில் 132 லக்ஷம் ரூபாய் பெறுமான சுமார் பத்துலக்ஷம் பாரம் பருத்திக்கொட்டை இதர தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் அதை ஆட்டி எண்ணெய் எடுக்க ஆலைகள் வைத்தால் லாபம் கிடைக்கலாமென்று ஊகிக்கலாம்.

The British Empire.

**ஆங்கிலேய ராஜ்யம்.**—தற்காலத்தில் ஆங்கிலேய அரசாட்சிக்கு உள்பட்ட தேசங்களின் விஸ்தீரணம் ஒருகோடி பதின்மூன்று லக்ஷத்து முப்பத்தீராயிரம் சதுர மயில். இதில் உள்ள ஜனங்கள், சுமார் முப்பத்து எட்டரைக் கோடி, குதிரைகள், எண்பது லக்ஷம், மாடுகள், பத்துகோடிக்கு மேலேயே, ஆடுகள் இருபது கோடிக்கு மேலேயே. 1907-ம் வருஷ உற்பத்தியான வைரத்தின் பெறுமானம் ஆயிரத்தி முன்னூற்றைம்பது லக்ஷம் ரூபாய். வருஷந்தோறும் சுரங்கங்களில் இருந்து எடுக்கப்படும் தங்கத்தின் விலை ஏழாயிரத்து இருநூற்றைம்பது லக்ஷம் ரூபாய். வெள்ளியின் மதிப்பு நானூற்றைம்பது லக்ஷம் ரூபாய். இங்கிலாந்தில் உள்ள ஜனங்களின் வருஷ வருமானம் 2,400 கோடி ரூபாய். அவர்கள் வெளிதேசத்தார்களுக்குக் கடன் கொடுத்திருக்கிற தொகையின் மொத்தம் 4,500 கோடி ரூபாய்.

Lord Morley on India.

**இந்தியாவைப்பற்றி மார்லிப்பிரபு பேசியது.**—இந்தியாவின் காரியதரிசியாகிய மார்லிப்பிரபு இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டு என்னும் நகரத்தில் இந்தியாவைப்பற்றி பிரஸங்கம் செய்தார். ஆங்கிலேயர்கள் இந்தியா விஷயத்தில் கொஞ்சமேனும் சிரத்தையில்லாமல் தங்கள் நாட்டு விஷயங்களையே கவனித்து வருவது தனக்கு வெகு ஆச்சரியமாயிருப்பதாகவும், இந்தியா இல்லாவிட்டால் இங்கிலீஷ் ராஜ்யம் இருக்கிற இடம் தெரியாமல் போய் விடுமென்றும் சொன்னார். தவிர, இந்தியாவில் அஸிஸ்டெண்ட் கலெக்டர், சப் கலெக்டர், ஜில்லா கலெக்டர் முதலிய உத்தியோகங்களை வகிக்கும் ஆங்கிலேயர்கள், இந்தியாவிலுள்ள ஜனங்களோடு போக்குவரத்தாயும், சிநேகபாவத்தோடு ஸல்லிசாயும், இருக்க வேண்டுமென்றும், ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுக்கும் ஜனங்களுக்கும் ஏதேனும் மனவருத்தங்கள் ஏற்பட்டால் ஆங்கிலேய அரசாட்சிக்கு தீங்கு வருமென்றும் சொன்னார்.

Indian Agriculture.

**இந்திய விவசாயம்.**—பிரிட்டிஷ் கீழ் ஆப்பிரிக்காவின் டைரெக்டர் ஆப் அக்ரிகல்சர் என்று சொல்லப்பட்ட விவஸாய இலாகாவில் முக்கிய உத்தியோகஸ்தர் இந்திய விவஸாயமுறைகளை தெரிந்துகொள்வதற்காக இந்த வருஷக்கடைசியில் இந்ததேசத்தை சுற்றி பார்க்கப் போகிறாராம்.



## "பிழைக்கும் வழி" பத்திரிகையைப்பற்றி சில அபிப்பிராயங்கள்.

**தேசாபிமானி.**—நம் தேசத்தவர் க்ஷேமத்தையடைவதற்கு தொழிலபிவிர்த்தி முக்கியமான விஷயமானதாலும், மனமிருந்தும் போதனைக் குறைவினால் அபிவிர்த்திக்கு ஏது குறைந்திருப்பதினாலும், அதற்குவேண்டிய போதனையைத் தரத்தக்க பத்திரிகை நமக்கு அத்தியாவசியமாக இருக்கிறது. இதுவரையில் "பிழைக்கும் வழியைப்" போல பத்திரிகை நம் ராஜதானியில் கிடையாது. சகலரும் படித்தறியுமாறு வியாசங்கள் அதிக எளியநடையில் எழுதப் பட்டிருக்கின்றன. சந்தாவிலையும் வருஷத்துக்கு 4. ரூபாய்தான். ஆகையால் சகலரும் அதைத் தருவித்துப் படித்து அதினால் தாங்கள் பயனடைவதுடன் தேச க்ஷேமத்தைய முண்டாக்குவார்களென்று நம்புகிறோம்.

"**பிழைக்கும் வழி**" ப்பத்திரிகையைப்பற்றி தஞ்சாவூர் ஜில்லா எரவாஞ்சேரி போஸ்டைச் சேர்ந்த தேதியூர் கிராமத்திலிருந்து டி. எஸ். நீலகண்ட அய்யர் என்பவர் அடியில் கண்டவாறு எழுதியிருக்கிறார்.

"தாங்கள் அனுப்பிய மாதிரி சஞ்சிகையை முழுதும் பார்வையிட்டேன். எனக்கு ஓர் ஆனந்தத்தை விளைவித்தது. ஏனென்றால் இதுவரையில் இம்மாதிரியான ஸஞ்சிகை ஒருவரும் வெளியிட்டதில்லை. எனக்கு வியாபார, விவசாய, விஷயங்களில் தங்கள் ஸஞ்சிகை (பிழைக்கும் வழி) யின் மூலமாய் சந்தேகங்களைத் தெரிந்துகொள்ளலாமென்று தீர்மானித்துக் கொண்டேன். இந்தச் சஞ்சிகையைப் படிப்பதனாலேயே ஜனங்களுக்குப் பிழைப்பதற்கு ஓர் வழியுண்டாகிறது. ஜனவரி மாதத்து சஞ்சிகை முதல் எல்லா சஞ்சிகைகளும் எனக்குத் தேவையாயிருக்கிறது."

**சுதேசமித்திரன்.**—அநேக முக்கியமான விஷயங்கள் புதுமாதிரியாக நன்றா யெழுதப் பட்டிருக்கும் "பிழைக்கும் வழி" யின் இச்சஞ்சிகைபோல் மற்ற சஞ்சிகைகளும் இவ்வளவு சிறப்புடன் இனிமேலும் நடத்தப்பட்டு வருமெனக்கோருகிறோம்.

**கமலாலனி.**—"பிழைக்கும் வழி" இப்பெயருடன் பிரசுரமாகிற மாதாந்தப் பத்திரிகையின் ஒன்றிரண்டு இலக்கச் சஞ்சிகைகள் கிடைத்தன. இப்பெயர் கேட்டமாத்திரமே பத்திரிகையின் நோக்கத்தை நண்பர்களறியக்கூடும். பெயர் மாத்திரத்தாலன்றி விஷயத்திலும் அங்ஙனமே காணப்படுகிறது. பிழைப்பதற்கவசியமான விவசாயம், கைத்தொழில், வாணிபம் முதலிய விஷயங்களைக் குறித்து நன்றாய் எழுதப்படுகிறது. இந்தியர் ஜீவிப்பதற்கு முக்கியமாயுள்ள விஷயங்களைப் போதிக்கும்படியான ஒரு தனி தமிழ்ப் பத்திரிகையில்லாக் குறையையகற்றி நம்முன் வந்திருக்கும் இப்பத்திரிகையை தமிழ்நாட்டார் ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். திவான் பகதூர் இராஜரெத்தின முதலியாரவர்கள், ஸி.ஐ.இ., ராவ்பகதூர் ·யம். ரங்காசாரியாரவர்கள் முதலிய மேதாவிகள் நிரூபங்கள் எழுதிவருகிறார்கள். ஆசிரியரும் ஆங்கிலம் தமிழ் என்னும் இருபாஷா விற்பன்னராய் பி. ஏ. பட்டதாரியாய் விளங்குகிறார். ஆகலின் இப்பத்திரிகை நன்கு நடைபெறு மென்பதற்கு எட்டுணையுமையமின்று.

**ஜனானுகூலன்.**—"பிழைக்கும் வழி," பெயருக்குத் தக்கவாறு சங்கதிகளு மிருக்கின்றன. இதில் விவசாயம், வர்த்தகம், கைத்தொழில், கல்வி, சாஸ்திரம், வைத்தியம், சிறுவர்க்கான சமாசாரங்கள், இன்னும் பல தேச வர்த்தமானங்கள் அடங்கி யிருக்கின்றன. இப்படிப்பட்ட பத்திரிகையை யாவரும் வாசித்துவரில் பல நன்மைகளை அடையலாம்.

**கோயமுத்தூர் கலாநிதி.** நல்ல கடிதத்தில் நல்ல பதிப்பாகப் பதிப்பித்த இவ்வளவு உபயோகமான பத்திரிகையின் வருஷ சந்தா ரூபாய் நான்காகையால், அதிக லோபத்துவ முள்ளவர்களும் வாங்கி வாசிக்கக் கூடியதாகவும், இருக்கிறது.

**லோகோபகாரி.**—"பிழைக்கும் வழி" என்பது இச்சென்னையில் ஜி. ஏ. வைத்தியாராமன் கம்பெனியாரால் நடத்தப்பட்டுவரும் ஒரு மாதாந்தரப்பத்திரிகை. இப்பத்திரிகையானது தன் பெயரளவில் நில்லாது உண்மையிலேயே மனித சமூகத்தாரின் பிழைப்புக்கு ஏதுவாக விருக்கும் வியாபாரம், விவசாயம், கைத்தொழில் கல்வி, உலகவிவகாரம் முதலியவைகளை ஆரம்பித்துக்கல்வி பயின்ற சிறுவர் சிறுமிகளும் படித்தறியத்தக்க எளிய தமிழ் நடையில் விளக்கப்பட்டிருக்கின்றது. இதுவரையில் இது போன்ற பத்திரிகை வெளிவந்ததில்லை யென்றே சொல்லவேண்டும். இதற்கு வருஷசந்தா ரூபாய் நான்காக இருந்தபோதிலும், இப்பத்திரிகையில் அமைந்துள்ள விஷயங்களின் விசேஷமும் அபிவிருத்தியின் நோக்கமுமாக இசன் சொந்தக்காரர் காட்டும் அக்கரையும் பார்த்தறிபவர்களுக்கு அத்தொகை பெரிதாகமாட்டாது. இப்பத்திரிகை நம் தமிழ் நாட்டாரால் பெரும்பாலும் ஆதரித்து வரப்படும் என நம்புகிறோம்.

**சத்தியவேத பாதுகாவலன், யாழ்ப்பாணம்.**—சென்னையில் பிரசுரமாகத் தொடங்கி யிருக்கும் "**பிழைக்கும் வழி**" என்பது ஒரு மாதாந்தரப் பத்திரிகை இதன் பெயர் காட்டுகிறபடி சீவனோபாயத்தைச்சேர்ந்த விஷயங்களையே எடுத்துப்பேசுகின்ற ஒரு பத்திரிகை யாதலால் எல்லா வகுப்பாருக்கும் பிரயோசனமானது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இது தமிழிலே முதன் முதலாக வந்த எடுப்பு என்றெண்ணுகிறோம். இந்த நிரையிலே வேறு பத்திரிகைகள் இதுவரையிலே தோன்றியில்லை என்பதே எமது அபிப்பிராயம்.

# SEASON, CROPS AND PRICES.

# காலஸ்திதி, பயிர்கள், அகவிலை.

COTTON GOODS.

**துணி ஸாமான்கள்.**—இதர தேசங்களிலிருந்து சென்னப்பட்டணத்திலும், ரங்கூனிலும் இறக்குமதி விவரங்கள்.

நூலும் முறுக்கு நூலும்.

| வார முடிவு. | | சென்னப்பட்டணத்தில். |
|---|---|---|
| | | ராத்தல. |
| ஜுன்மீ 5உ | .. | 2,750 |
| ,, 12உ | .. | 64,320 |
| ,, 19உ | .. | 42,800 |
| ,, 26உ | .. | 164,152 |
| ஆகமொத்தம் | .. | 274,022 |

காரிகத் துணிகள்.

| வார முடிவு. | | சென்னப் பட்டணத்தில். | | ரங்கூனில். |
|---|---|---|---|---|
| | | கஜம். | | கஜம். |
| ஜுன்மீ 5உ | .. | 577,043 | .. | 287,869 |
| ,, 12உ | .. | 2,115,054 | .. | 216,383 |
| ,, 19உ | .. | 1,136,632 | .. | 153,951 |
| ,, 26உ | .. | 1,674,214 | .. | 347,669 |
| ஆகமொத்தம் | .. | 5,502,943 | | 1,005,872 |

சலவைத் துணிகள்.

| வார முடிவு. | | சென்னப் பட்டணத்தில். | | ரங்கூனில். |
|---|---|---|---|---|
| | | கஜம். | | கஜம். |
| ஜுன்மீ 5உ | .. | 79,467 | .. | 783,102 |
| ,, 12உ | .. | 736,623 | .. | 556,514 |
| ,, 19உ | .. | 296,219 | .. | 415,179 |
| ,, 26உ | .. | 616,321 | .. | 404,120 |
| ஆகமொத்தம் | .. | 1,728,630 | | 2,158,915 |

இதர துணிகள்.

| வார முடிவு | | சென்னப் பட்டணத்தில். | | ரங்கூனில். |
|---|---|---|---|---|
| ஜுன்மீ 5உ | .. | 301,435 | .. | 532,887 |
| ,, 12உ | .. | 720,593 | .. | 1,067,455 |
| ,, 19உ | .. | 445,561 | .. | 328,284 |
| ,, 26உ | .. | 612,172 | .. | 817,428 |
| ஆகமொத்தம் | .. | 20,79,761 | | 2,746,054 |

ரயிலில் அனுப்பப்பட்ட துணிகள்.

சென்னப்பட்டணத்திலிருந்து ரயில் வழியாய் அனுப்பப்பட்ட ஸ்வதேச பிறதேச துணி ஸாமான்கள். ஒரு அந்தர் என்பது 112 ராத்தல்.

| வார முடிவு. | | அந்தர். |
|---|---|---|
| ஜுன்மீ 5உ | .. | 4,822 |
| ,, 12உ | .. | 5,665 |
| ,, 19உ | .. | 5,535 |
| ,, 26உ | .. | 4,517 |
| ஆகமொத்தம் | .. | 20,539 |

IMPORT OF SUGAR.

**சக்கரை இறக்குமதி.**—மேமீ 29-ந்தேதி முதல் ஜுன்மீ 26உ வரையில் இங்கிலாந்தில் இருந்து 58 அந்தரும், ஜர்மனியில் இருந்து 5,500 அந்தரும், ஆஸ்டிரியா ஹங்கெரியில் இருந்து 1797 அந்தரும் சென்னப்பட்டணத்தில் இறக்குமதியாயின. இதே காலத்தில் ரங்கூனில் இறக்குமதியான சர்க்கரை, இங்கிலாந்திலிருந்து 104 அந்தர், இதரதேசங்களிலிருந்து 641 அந்தர்.

HIGH PRICES.

**உயர்ந்த அகவிலை.**—இது விஷயமாய் இந்தியா காரியதரிசியினிடத்திலிருந்து இந்தியா கவர்ன்மெண்டாருக்கு ஒரு கடிதம் வந்திருப்பதாகத்தெரிகிறது. அதன் விவரம் செம்மையாய்த் தெரியவில்லை. ஆனல் உயர்ந்த அகவிலையைப்பற்றி விசாரணை நடக்கப்போகிறதென்பதுமட்டும் நிச்சயம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 17 DEC 1909 MADRAS.

பிழைக்கும் வழிக்கு அனுபந்தம்.

SUPPLEMENT TO 'PRACTICAL LIFE'



THE TECHNO-CHEMICAL LABORATORY. THE MAIN BUILDING.

வஸ்து சோதனை சாலை, தாய்மனைக்கட்டிடம்.



MR. T. K. GAJJAR, M.A., B.SC., F.G.S.

டி. கெ. கஜ்ஜர், எம். ஏ.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி, 10, எஸ்பிளனேட், மதராஸ்.

G. A. VaidyaRaman & Co., 10, Esplanade, Madras.

பிழைக்கும் வழிக்கு அனுபந்தம்.

Supplement to 'Practical Life'

MADRAS



LECTURE ROOM AND LIBRARY.

கற்பிக்கும் இடமும் புஸ்தக சாலையும்.



A CORNER OF THE LABORATORY.

வஸ்து சோதனை சாலையின் ஒரு மூலை.

MADRAS.

# பிழைக்கும் வழி

# PRACTICAL LIFE

ஜி. எ. வைத்தியராமன், பி.எ. பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B.A. EDITOR.

புஸ்தகம் I. Vol. I. | ஸௌமிய௵ ஆவணிமீ—AUGUST 1909. | ஸஞ்சிகை 8. No. 8.

## பிழைக்கும் வழி.

## PRACTICAL LIFE.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், பிரஜாலக்ஷணம், வித்தியா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

**தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.**

| | உள் நாடு. | | அந்நிய நாடு. | |
|---|---|---|---|---|
| வருஷம் 1க்கு | 4 | 0 | 6 | 0 |
| 6 மாதத்திற்கு | 2 | 0 | 3 | 0 |
| தனிப்பிரதி | 0 | 6 | 0 | 8 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. சகலபணமும் எங்களுக்கு நேரில் அனுப்பப்படவேண்டும்.

**வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியது.**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க மரியாதை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸமும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒரு பாதியைவிட்டு மறுபாதியில் மட்டில் எழுதப்பட வேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

---

A popular Tamil monthly magazine of general information and instruction devoted mainly to agriculture, trade, industry, citizenship, and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. | A. | P. | Foreign. Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | 6 | 0 | 0 |
| " half year ... | 2 | 0 | 0 | 3 | 0 | 0 |
| Single copy ... | 0 | 6 | 0 | 0 | 8 | 0 |

No Money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 10, Esplanade, Madras.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
10, எஸ்பிளனேட், மதராஸ்.

## AGRICULTURAL IMPROVEMENT

BY

RAO BAHADUR, G. SRINIVASA RAO, B. A.
*Chairman, Municipal Council, Madura.*

## விவஸாய அபிவிருத்தி.

இந்தியா தேசத்தில் ஏறக்குறைய முக்கால் வாசி ஜனங்கள் விவசாயத்தையே நேராகவாவது, அல்லது, குடித்தனக்காரர்கள் மூலமாகவாவது, தங்கள் விர்த்தியாக அனாதிகால முதல் கைக்கொண்டவர்கள். 50 வருஷங்களுக்கு முன்பாக சாகுபடியான விஸ்தீரணத்தை விட இப்போது ஜாஸ்தி நிலம் பயிரிடப்படுகிறது என்பது எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. இப்படிக்கு இருந்த போதிலும் விளைவு முன் அதிகமாக இருந்தது, இப்போது அப்படி காணுகிறது இல்லை என்று எல்லாரும் முறையிடுகிறார்கள். என் பாட்டனார் காலத்தில், அதாவது, 40 வருஷங்களுக்கு முன்னதாக 20 கலம் கண்ட ஒரு நிலம் இப்போது 10 கலங்கூட காணுகிறது இல்லை என்று என்னுடைய காரியஸ்தர்கள் எழுதுகிறார்கள். காரணம் என்னவென்று கேட்டால் பட்டத்தில் மழை இல்லை, நிலம் எச்சுப்போய் விட்டது, இனி அப்படித் தான் இருக்கும், என்று சொல்லிவிடுகிறார்கள்.

இதை சரிதான் என்று நம்பி, நாம் மேற்கொண்டு விசாரிக்காமலும் நமது புத்தியை அதில் செலுத்தாமலும், வேறு உத்தியோகம் முதலான தொழில்களிலிருந்து கிடைக்கும் வரும்படிகளால் மெய் மறந்துபோய் காலங் கடத்தி வருகிறோம். இது மிகவும் பிசகு. ஜீவன விர்த்திகளிலெல்லாம் மேலானது விவசாயம். எந்த ராஜாங்கத்தார் ஆண்டாலும் யார் போனாலும், விவசாயம் எப்போதும் அழியாமல் நிலைநின்று இருக்கக்கூடியது. இதில் அசிரத்தையாய் நாம் இருப்பதற்கு எவ்வித நியாயமுமில்லை. இந்தியா அல்லாமல் மற்ற ஒவ்வொரு தேசத்திலும் ஏகர் ஒன்றுக்கு 300-ரூபாய்முதல் 700-ரூபாய்க்குமேல்பட்ட வரும்படி கிடைப்பதாக சொல்லும் காலத்தில் நமது தேசத்தில் மாத்திரம் 50-ரூபாய் முதல் 75-ரூபாய் அல்லது 100-ரூபாய்க்கு உள்பட்ட பலன்தான் கிடைப்பதாக இருப்பது மிகவும் விசனிக்கத்தக்கதாக இருக்கிறது. இங்கிலாந்து ஜப்பான்முதலான தேசங்களில் 10 ஏகரா நிலம் சேர்ந்தால்போல் இருக்கும் குடியானவர்கள் விசேஷமாய் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஜப்பானில் 1, 2 ஏகரா நிலம் இருந்தாலும் போதும். அதைக்கொண்டு தன் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக போதுமான மாசூல்களையும் உண்டுபண்ணி ஜாஸ்தியானதை விற்கக்கூடிய ஸ்திதியிலிருக்கிறார்கள். அவ்விடத்தில் ஒரு பொட்டு நிலங்கூட தரிசாக இல்லையாம். தன் வீட்டடி நிலம் போக பாக்கி பூரா விஸ்தீரணத்தையும் சாகுபடி செய்து இரண்டு அல்லது மூன்று போக பலன்களை தவறாமல் உண்டாக்குகிறார்கள். இது எப்படி சாத்தியம், இதன் உள் அந்தரம் என்ன என்று விசாரிக்கும் அளவில் அடியில் கண்ட காரணங்கள் வெளியாகின்றன. அவைகளில் சில நமக்கும் தெரிந்தவைகளாக இருந்தாலும் நாம் விவஸாயத்தில் சிரத்தை எடுத்துக்கொள்ளுகிறதில்லை. ஜப்பான் தேசத்தார்கள் அதே தொழிலாக வைத்துக்கொண்டு பிரதிதினமும்பாடுபட்டு சம்பாதிக்கிறார்கள். இதுதான் வித்தியாசம். நாமும் அவர்களைப்போலவே முயற்சிக்கும் பக்ஷத்தில் நமக்கும் அதேமாதிரியாக் பலன்கள் கிடைக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

ஜப்பானில் எவ்வளவு ஐசுவரியவந்தனாக இருந்தாலும் பிரதி தினமும் நிலத்தைக் கொத்தி உழுது பண்படுத்தாத பிராணியே இல்லை. வயது வித்தியாசமில்லாமல் ஆணும் பெண்ணும், வாலிபர்களும் விர்த்தாப்பியர்களும், நிலத்தை சீர் திருத்துவதை தங்கள் கடமையாக பாவித்து நாள்தோறும் வேலை செய்கிறார்கள். ஒரு கல்லு கட்டி இல்லாமல் மண்ணை மாவாகச் செய்து ஆழமாக வெட்டுகிறார்கள். நமது தேசத்தில் கொடிக்காலுக்கு எந்த விதமாக வாய்க்கால் பிடித்து வெற்றிலைக் கொடிகளை வைத்து மற்றப் பயிர்களையும் உண்டாக்குகிறோமோ அதே மாதிரியாக பல தானியங்களையும் எக்காலத்திலும் சாகுபடி செய்கிறார்கள். மண்ணை பரிசோதித்து அதில் எந்த இந்திரிய வஸ்து குறைவாக இருக்கிறதோ அதை பர்த்தி செய்து, வேண்டும் பயிரை உண்டாக்குகிறார்கள். சுவாமியினுடைய சிருஷ்டியில் ஒரு பதார்த்தமும் உபயோகமற்றது என்று தள்ளிப்போடக் கூடியதல்ல என்பதையும் ரசாயன முதலான சாஸ்திரப் படிப்பின் தேர்ச்சியினால் ஒரு பதார்த்தத்தை மற்றொன்றாக மாற்றிக்கொள்ளலாம் என்ற நிச்சயத்தையும் தெறிந்தவர்கள். அவர்களுடைய தேசத்தில் குதிரைகள் சொல்பமாக உண்டு. ஆடுமாடுகள் கிடையாது. இவைகளின் சாணிகுப்பையால் உண்டாகும் எருவே அவர்களுக்கு கிடையாது. மனுஷர்களுடைய மலஜலத்தின் அருமையையும் பிரயோஜனத்தையும் அவர்களைப்போல் அறிந்தவர்கள் ஒருவரும் இல்லை. இவைகளை தங்கமாக பாவிக்கும் சுபாவஸ்தர்கள். சென்னைராஜதானியில் தலைமைப் பட்டணமான மதுரை முனிசிபாலிடியில் போய்ப்பார்த்தால் அநேகம் வீடுகளுக்கு கொல்லையே கிடையாது. பொது கக்குசுகளுக்குப் போக ஜனங்கள் வருத்தப்படுகிறார்கள். முனிசிபாலிடி கக்குசுகளில் ஒரு நாளைக்கு எவ்வளவு அமேத்தியம் சேருமோ அதற்கு பத்து மடங்கு மதுரையில் உள்ள 18,000 வீடுகளில் கொல்லை உள்ள வீடுகளிலும், அதைவிட பத்து மடங்கு ஜாஸ்தியான அமேத்தியம் வீதி சந்து ரஸ்தாக்களில் எடுக்கக்கூடியதாகவிருக்கிறது. பட்டணத்தின் நன்மைக்கு எவ்விதமாக இருக்கவேணுமோ அதற்கு விரோதமாக தலைகீழாக இருக்கிறது. தெருக்களை கக்குசாக உபயோகப்படுத்தாமல் பிரதிவீட்டிலும்கொல்லை வைத்து அதை உபயோகப்படுத்துவதும், பொது சர்க்கார் கக்குசுகளில் எல்லாரும் மலஜலபாதைக்கு போக வேண்டியதும் தான் நியாயம். மூத்திரத்தின் அருமையை இவ்விடத்தில் கவனிக்கிறதே இல்லை. இவைகளை சரியாக ஆராய்ந்து தெரிந்துகொண்டால் ஒவ்வொரு பட்டணமும் மிகுந்த சுத்தமாகவும் அதில் வசிப்பவர்களுக்கு எவ்வித வியாதி இல்லாமலும் சௌக்கியமாய் இருக்கும். ஜப்பான் தேசத்தில் பிரதி வீட்டுக்காரர்கள் வீட்டிலிருந்தவாக்கிலும் வீதியில் வழிப்போக்கர்கள் ரஸ்தாவிலிருந்தே உபயோகப்படுத்தும்படியாகவும் கொல்லைகள் கட்டப்பட்டிருக்கின்றன. குப்பை வேண்டியவன் வீட்டுக்காரர்களுக்கு தலை ஒன்றுக்கு 2 அணா, கால் ரூபாய், என்று பேசி முன் பணமும் கொடுத்து கக்குசு குப்பையை அன்றாடமே எடுத்துக்கொண்டு போய்விடுகிறான். ஜலத்தையும் மலத்தையும் ஒன்றாக கூழாகச்சேர்த்து பெருத்த ஜாடிகளிலும் மிடாக்களிலும் பத்திரமாக சேர்த்துவைத்து அகப்பையால் எடுத்து 6 அல்லது 8 தடவையாக உபயோகிக்கிறான். நிலத்திற்கு உரம் ஏத்துகிறது என்கிற சித்தாந்தமே அவர்களுக்கு இல்லை. பயிருக்கும் அதின் வேர்களுக்கும் தான் உரம்வைக்கிறது. பூமியில் பண்பெறும் மண்ணானது உரத்தால் பலப் படுகிறதென்றும் உரத்தாழ்வால் பலஹீனபடுகிறதென்றும் அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறதில்லை. பூமியானது ஒரு ஸாதனக்கருவியே அல்லாமல் வேறல்லவென்று அவர்களுடைய கொள்கை. பயிர் உரத்தை நேராக அடைகிறது, நினைத்த பலனை உண்டாக்குகிறது என்கிறார்கள். நிலம் உழுவதற்கு முன்னால் இருந்த ஸ்திதியில்தான் சாகுபடி ஆகி பலன் கொடுத்தபிறகும் இருக்கிறது. அரிசி முதலான பக்குவமாகாத சாமான்களையும், உலையில் வைத்து சாப்பாட்டுக்கு யோக்கியமாக தயாரிக்கும் சாதம் முதலான பதார்த்தங்களையும், சாப்பிட்டு ஜீரணத்திற்கு வந்த பிற்பாடு உடலை விட்டு வெளியேறும் மலஜலங்களையும், ஒரு வஸ்துசோதனை சாலைக்குக் கொண்டுபோய், அவைகளில் என்ன இருக்கிறது என்று பிரித்துப் பார்த்தால் சற்றேறக்குறைய ஒரே இந்திரிய வஸ்துக்கள்தான் இருக்கும். ஒரு அளவாக உண்டாகவேண்டிய தானியத்திற்கும் மற்ற பயிருக்கும் இவைகளில் எது குறைவாக இருக்கிறதோ அதை உரத்தின் மூலமாக சேர்த்தும், எது வேண்டாததோ அதை விட்டுசமத்தாக வேண்டியபடி ஒரு சிலேட்டில் கணக்கு எழுதி எப்படி முடிவு காண்கிறார்களோ அப்படி நினைத்த பலனை நிஷ்கரிஷையாக உண்டாக்குகிறார்கள். கடலில் கிடைக்கும் மீனை ஏராளமாகப் பிடித்து சாப்பிடுவது மல்

லாமல் நிலத்திற்கு உரமாகவும் உபயோகப்படுத்துகிருர்கள். தெய்வமும் ஒரு வருஷத்தில் 10 மாதத்துக்கு குறையாத காலத்திற்கு மழைபெய்யச்செய்து நன்மையைச் செய்கிறது. மழை காலாகாலத்தில் பெய்கிறதில்லை என்கிற குறை நமக்கு இந்த நாட்டில் எப்போதும் உள்ளது. அதையும் நாம் சீர்திருத்திக்கொள்ள வழி உண்டு. வெட்டினுல் அடி ஊற்று இல்லாத இடம் ரொம்பவும் அரிது. குறிப்பிட்ட இடத்தில் வெட்டினுல் ஜலம் ஊரும் இல்லை என்பதையும், அடியில் போகப்போக தரையின் சுபாவத்தையும் காட்டக்கூடிய கிணறு வெட்டுவதில் சோதனைபோடும் யந்திரம் உண்டு. இதை மதுரை விவஸாய ஸபையார் தருவித்து வைத்திருக்கிருர்கள். கேட்பவர்களுக்கு இனுமாக கொடுக்கிருர்கள். அவைகளால் சோதனைபோட்டு தக்க கிணறுகளை அநேகங்களாக வெட்டிக்கொள்ளவேண்டியது. சாதாரணமான கபிலை முதலான ஏற்றங்களை விசேஷமாக உபயோகப்படுத்துவதுடன் அதிர்ஷ்ட வசத்தால் தக்க மடைகள் விழும் கிணறுகளுக்கு ஆயில் இன்ஜின்களை வைத்து தண்ணீர் இறைக்க வேண்டியது. ஆயில் இன்ஜின் வைத்து வேலை செய்வது கடினமே அல்ல. மேதகமான காட்டாள்கூட சொல்பபழக்கத்தால் அதை ஓட்ட எளிதாகத் தெரிந்துகொள்ளலாம். ஒவ்வொரு குடியானவனும் 1000, 2000 ரூபாய்பணம் போட்டு ஆயில் இன்ஜின் வாங்க முடியுமா என்று மலைக்கவேண்டாம். 10 பேர் கூடி ஒரு யந்திரத்தை பொதுவில் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம். தண்ணீர் மிகுந்திருக்கும் கிணற்றில் வைத்து தனக்கும் மற்றவர்களுக்குமாக உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும். தங்களுக்கும் கண்டு அதிகமான தண்ணீர் இருந்தால் அக்கம்பக்கத்து குடியானவர்களுக்கு விற்கலாம்.

திரவிய சகாயம் வேண்டுமானுலும் அதை அடைவது கஷ்டமில்லை. பொதுஜன சகாய ஐக்கிய நிதிகளை கவரன்மெண்டார் ஸ்தாபித்திருக்கிருர்கள். இதற்காக ஒரு சட்டமும் பிரத்தியேகமான அதிகாரிகளும் ஏற்படுத்தப்பட்டு எவ்விடத்தில் யார் உதவியை விரும்புகிருர்கள், அவர்களுக்கு உதவி செய்யலாம் என்று காத்துக்கொண்டிருக்கிருர்கள். ஸ்டாம்பு ரிஜிஸ்தர் முதலான ஒருவித செலவுகள் ஒன்றும் இல்லாமல், வேண்டும்போது, லேசில் கடன் வாங்கி, குறிப்பிட்ட காலத்திற்குள் கொஞ்சம் கொஞ்சமாக பணம் கிடைக்கக்கிடைக்க திருப்பிக் கொடுக்கலாம். இந்த மாதிரியாக விவஸாய அபிவிருத்திக்கு எடுத்த சாதனங்களை இன்னும் சொல்லிக்கொண்டே போகக்கூடும். இப்பொழுது சில முக்கியமான விஷயங்களை மாத்திரம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

நாம் ஒன்றுக்கும் உபயோகமில்லை என்று கவனியாமல் அசட்டையாய்த் தள்ளிவிடுகிற பதார்த்தங்களையே இதர தேசங்களில் ஜாக்கிரதையாய் சேகரித்து விவஸாயத்திற்காக உபயோகப்படுத்தி நன்மையை அடைகிருர்கள். அதுபோல நாமும் சிரமமில்லாமல் நன்மை அடையலாம்.

ஜி. ஸ்ரீனிவாஸராவ்.

---

ரங்கூன், மண்ட்கோமரி ரோட். பி. கே. ஈஸிம் சாரவுதர் பின்வருமாறு எழுதுகிருர். "தங்களால் பிரசுரிக்கப்படும் "**பிழைக்கும் வழி**" பத்திரிகையை முதல் ஸஞ்சிகை முதல் ஏழு ஸஞ்சிகை வரையிலும் பார்வையிட்டேன். அதில் பிழைக்கும் வழி என்னும் பெயருக்கு தக்கவாறு சர்வஜனங்களுக்கும் பிரயோஜனமாகும்படியான விஷயங்களடங்கியிருக்கிறது. பிழைக்கும் வழியை அறியாமல் வீண்காலம் போக்கிக்கொண்டு திரியும் பலருக்கு இப்பத்திரிகை ஒரு தீர்க்கதரிசியைப் போல் தற்போது பிரசன்னமானது நம் அதிர்ஷ்டமென்றே சொல்லலாம். இத்தகையப் பத்திரிகைப்போல் பிழைக்கும் வழிகளை போதிக்கும் பத்திரிகைகள் மேன்மேலும் பெருகவேண்டுமென்றும் சதா எம்பெருமானை தோத்திரம் செய்கின்றேன்."



## GOVERNMENT AND AGRICULTURE

BY

THE EDITOR.

## கவரன்மெண்டாரும் விவஸாயமும்.

---

போன மாஸத்து ஸஞ்சிகையில் விவஸாய விஷயமாய் இந்தியா கவரன்மெண்டார் செய்து வரும் ஏற்பாடுகளை பொதுவாய் எடுத்துச் சொல்லி, அவைகள் என்ன என்று விவரமாய்த் தெரிய வேண்டுமானுல் சென்னப்பட்டணம் கவரன்மெண்டார் செய்துவரும் ஏற்பாடுகளைக்கொண்டு சுலபமாய் அறிந்து கொள்ளலாம் என்று சொன்னேம். இந்த ஏற்பாடுகள் என்ன என்று இப்பொழுது விசாரிப்போம்.

முதலாவது, ஓரேவித விவசாய சாதனங்கள் உள்ள ஒவ்வொரு முக்கியப் பிரதேசத்திலும் சோதனைப் பண்ணைகள் ஏற்படுத்தப்படவேண்டு மென்பது இந்தியா கவரன்மெண்டாரின் அபிப்பிராயம். இந்த அபிப்பிராயத்தை அனுசரித்து, நமது ராஜதானியில் தற்காலத்தில் 8 பண்ணைகள் மதராஸ் கவரன் மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

அவைகளாவன :—

1. கோதாவரி ஜில்லாவில் சாமல்கோட்டை என்னும் ஊரில் கரும்பு சாகுபடியை பற்றி விசாரணை செய்ய ஒரு பண்ணை,
2. பல்லாரி ஜில்லாவில் பல்லாரிபட்டணத்தில் பருத்தி, சோளம், இந்தப்பயிர்களைப் பற்றி விசாரணை செய்ய ஒரு பண்ணை,
3. அதே ஜில்லாவில் பருத்தி சாகுபடிக்கு லாயக்கான கருவல் நிலங்களுக்கு நீர் பாய்ச்சுதலை ஆராய்ச்சி செய்ய ஒரு பண்ணை,
4. அனந்தப்பூர் ஜில்லா, ஹிந்துப்பூரில் கற்ருழை சாகுபடியைப்பற்றிய ஒருபண்ணை,
5. கர்நூல் ஜில்லாவில் நந்தியால் பட்டணத்தில் வடக்கத்துப் பருத்தியை சோதனை செய்ய ஒரு பண்ணை,
6. தென்னுற்காடு ஜில்லா நெல்லிக்குப்பத்துக்கடுத்த பாலூரில் மணிலாக்கொட்டைப் பயிரையும், கரும்புப்பயிரையும் சோதிக்க ஒரு பண்ணை,
7. திருநெல்வேலி ஜில்லாவில் கோயில் பட்டியில் பருத்தியைப்பற்றிய ஒரு பண்ணை,
8. மலையாளத்தில் தாலிப்பரம்பா என்னும் ஊரில் மிளகுக்கொடியைப் பற்றியபண்ணை.

இந்த 8 பண்ணைகளைத் தவிர, கோயம்புத்தூரில் விவசாய காலேஜ் ஹேட் உபாத்தியாயர் பார்வைக்குள்பட்டு ஒரு பெரும்பண்ணையும் இருக்கிறது.

இந்தப் பண்ணைகளில் வருஷந்தோறும் சாகுபடி செய்து ஆராய்ந்து அறிந்த விஷயங்களை ரிபோர்ட்டுகள் மூலமாக பிரசுரம் செய்து வருகிருர்கள்.

இரண்டாவது, ஒவ்வொரு மாகாணத்திலும் ஏற்படும் பண்ணைகளை மேல்பார்வை பார்த்து வர, சூபெரின்டெண்டுகளும் நியமிக்கப்படவேண்டும். இந்த சூபெரின்டெண்டுகளை 'டிப்டி டைரெக்டர்' என்றும் சொல்லலாம். இந்த ராஜதானியைஇரண்டாகப்பிரித்து வடபாகத்திற்கு, அதாவது, தெலுங்கு ஜில்லாக்களுக்கு ஒரு டிப்டி டைரெக்டரும், தென்பாகத்திற்கு, அதாவது, தமிழ் ஜில்லாக்களுக்கு, ஒரு டிப்டி டைரெக்டரும் நியமிக்கப்பட்டிருக்கிருர்கள். தற்காலத்தில் எச். ஸி. ஸாம்ஸன் என்பவர் தமிழ் ஜில்லாக்களின் டிப்டி டைரெக்டர். இவர் சம்பளம் 500 ரூபாயில் ஆரம்பித்து, 1000 ரூபாய் வரைக்கும் போகும். இவருடைய "ஹேட்க்வார்டர்," அதாவது, முக்கியஸ்தானம், திரிச்சினுப்பள்ளி. இதேமாதிரியாக, தெலுங்கு ஜில்லா டிப்டி டைரெக்டர் பல்லாரியில் இருக்கிருர்.

ஒவ்வொரு டிப்டி டைரெக்டரும் அவருக்கு ஏற்பட்ட நான்கு எல்லைக்குள் விவசாய விஷயத்தில் முக்கிய அதிகாரி. அவர் அவருடைய எல்லைக்குள் ஏற்பட்டிருக்கும் சோதனைப் பண்ணைகளையும், நிரூபப் பண்ணைகளையும், மேல்பார்வைபார்த்து வரவேண்டும். தவிர, அவர் அவருடைய எல்லைக்குள் இருக்கும் விவசாயிகளோடு நெருங்கிப்பழகி வரவேண்டும். அவர்கள் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்லவேண்டும். அவர்கள் புதிதான முறைகளை அனுஷ்டிக்கும்படி தைரியப்படுத்தவேண்டும். விவசாய சங்கங்கள் இருந்தால் அவைகளுக்கு ஆலோசனையும் சொல்லவேண்டும்.

மூன்றாவது, மேலே சொல்லிய ஏற்பாடுகளால் ஒவ்வொரு மாகாணத்திலும் விவசாய இலாகாவில் வேலை அதிகமாகுமென்பதை சொல்லாமலே அறிந்து கொள்ளலாம். இதை நிர்வகிக்க ஒவ்வொரு மாகாணத்திலும் பிரத்தியேகமாக டைரெக்டர் என்ற ஒரு மாகாணத் தலைவர் நியமிக்கப்பட வேண்டுமென்பது இந்தியா கவரன்மெண்டாரின் கருத்து.

நமது ராஜதானியில் 1906-ம் வருஷம் வரையில் ரெவினியூ போர்டு மெம்பரில் ஒருவரே விவசாயஇலாகாவின் டைரெக்டராக இருந்தார். அந்த வருஷத்தில் அந்த ஏற்பாட்டை நிறுத்தி, விவசாய இலாகர்வுக்கு மட்டும் ஒரு டைரெக்டர் ஏற்படுத்தப்பட்டார். இந்த டைரெக்டர் உத்தியோகத்தை தற்காலத்தில் எம். ஈ. கூச்மென் என்பவர் வகித்திருக்கிறார். விவசாய விஷயத்தில் இவர் அதிகாரம் சென்னை ராஜதானி முழுவதிலும் செல்லும்.

நாலாவது, விவஸாயத்தில் வேண்டியவைகளை அனுபோகஸித்தியாய் அறிந்துகொள்வதற்காக ஒரு பெரிய பாரமும் (பண்ணையும்), சாஸ்திரீய முறைகளாய் அறிந்து கொள்வதற்காக வஸ்து சோதனைசாலைகளும், இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளைச் செய்யக் கூடிய நிபுணர்களும், இப்படிக் கெல்லாம் செய்து அறிந்த விஷயங்களை விவஸாயிகளுக்கு போதிக்க ஒரு காலேஜும், ஒவ்வொரு மாகாணத்திலும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது இந்தியா கவரன் மெண்டாரின் விருப்பம். இதை அங்கீகரித்தே சென்னை கவரன்மெண்டார் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள்.

சென்னப் பட்டணத்துக்கு அடுத்த சைதாப்பேட்டையில் ஒரு விவசாய காலேஜ் நடந்து வந்ததாக முன்பு சொல்லியிருக்கிறோம். இந்த காலேஜில் சொல்லிக்கொடுத்த படிப்பானது, க்வைக்கு உதவாமல், அதில் படித்துத் தேறியவர்கள் விவசாயம் செய்யாமல் வேறு பிழைப்புகளைத் தேடிவந்தார்கள். தவிர, சைதாப்பேட்டையில் அந்த காலேஜைச் சுற்றிலுமுள்ள பூமியும் 'ரொம்ப பஞ்சை' நிலம். இவைகளையெல்லாம் உத்தேசித்து, மதராஸ் கவரன்மெண்டார், 1907 வருஷத்தில், சைதாப்பேட்டை காலேஜை நிறுத்தி, நமது ராஜதானியில் விவசாய அபிவிருத்திக்கு வேண்டிய சகலவித சாதனங்களையும் கோயம்புத்தூரில் அமைத்திருக்கிறார்கள். விவசாய விஷயத்தில் ப்யூசா பட்டணத்தில் இந்தியா கவரன்மெண்டார் என்ன வித ஏற்பாடுகள் செய்திருக்கிறார்களோ, அந்த மாதிரி ஏற்பாடுகளையே நமது மாகாண கவரன் மெண்டார் கோயம்புத்தூரில் செய்திருக்கிறார்கள். அதாவது, ஒரு விவசாய காலேஜும், அதை ஒட்டி ஒரு பாரமும் (பண்ணையும்), விவசாய சாஸ்திரிகள் ஆராய்ச்சி செய்வதற்கு வேண்டிய வஸ்து சோதனை சாலைகளும், ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இந்த காலேஜ் கட்டி முடிந்து சென்ற ஜுலை மாஸம் 14-ம் தேதி நமது கவர்னர் ஸர் ஆர்தர் லாலி அவர்களால் திறக்கப்பட்டது.



விவஸாய விஷயமாய் என்னென்ன சாஸ்திரிகள் நியமிக்கப்படவேண்டும் என்றும் இந்தியா கவரன்மெண்டார் சொல்லியிருக்கிறார்கள். மாகாணமுழுமைக்கும் ஒரு "அக்ரிகல்சரல் கெமிஸ்டு", அதாவது, விவசாய ரசாயனசாஸ்திரியும், ஒரு "பாடெனிஸ்ட்," அதாவது, ஸ்தாவரசாஸ்திரியும், ஒரு "மைகாலஜிஸ்ட்", அதாவது, பயிர்களை பாதிக்கும் காளான் முதலியவைகளில் நிபுணரான ஸ்தாவர சாஸ்திரியும், ஒரு "என்டமாலொஜிஸ்ட்", அதாவது, பூச்சி புழு முதலியவைகளில் நிபுணரான சிற்றுயிர் லக்ஷண சாஸ்திரியும், நியமிக்கப்படவேண்டும். ஆனால், தற்காலத்தில் நமதுராஜதானியில், ஒரு ரசாயனசாஸ்திரியும் ஸ்தாவர சாஸ்திரியும் மட்டில், நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களே வெளிவேலைகளோடு விவசாய காலேஜ் பிள்ளைகளுக்கும் படிப்பு சொல்லிக்கொடுத்து வருகிறார்கள். இவர்கள் கோயம்புத்தூரில் இருக்கவேண்டியது. அவசியமானால் சென்னை ராஜதானியில் எந்த இடத்தையும் போய் சுற்றிப்பார்க்கலாம்.

கோயம்புத்தூர் பெரிய பண்ணை 457½ ஏகரா விஸ்தீரணமுள்ளது. இதற்குள் காலேஜ் கட்டிடமும், குடியிருப்பதற்கு வேண்டிய கட்டிடங்களும், அக்கரிகல்சரல் கெமிஸ்ட், அதாவது, விவஸாய ரசாயனசாஸ்திரி, "பாடொனிஸ்ட்", அதாவது, ஸ்தாவர சாஸ்திரி, இவர்கள் ஆராய்ச்சி செய்வதற்கு வேண்டிய 'லாபொரெடரி' அதாவது, வஸ்து சோதனைசாலைகளும், அமைக்கப்பட்டிருக்கின்றன. நிலமும் கட்டிடமுமாகச் சேர்ந்து 8 லக்ஷம் ரூபாய்க்கு மேலாகும். இந்த காலேஜில் படித்துத் தேறி, திரும்பிப்போய், விவசாயம் செய்வார்களென்ற நம்பிக்கையுள்ள பிள்ளைகளையே தெரிந்தெடுத்து இந்த காலேஜில் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். இதில் சாதாரணமாய் 3 வருஷம் படிக்கவேண்டும். காலேஜ் சம்பளம் ஒன்றும் கொடுக்கவேண்டியதில்லை. ஆனால், அவரவர்கள் சாப்பாட்டுச் செலவுகளை அவரவர்களே செய்துகொள்ள வேண்டியது. இந்த காலேஜில் சேருவதற்கு முன்னால் ஏதாவது பரீக்ஷை பாஸ் செய்திருக்கவேணுமென்ற நிபந்தனையுமில்லை. விவசாயிகள் பிள்ளைகளாகப் பார்த்து பொறுக்கியெடுத்து வருஷந்தோறும் 20 பிள்ளைகளை மட்டும் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். இந்த காலேஜில் ப்ரின்ஸிபால், அதாவது, ஹெட்மாஸ்டரும், ஸ்தாவரசாஸ்திரியும், ரசாயனசாஸ்திரியும், ஆக மூன்று பேர்கள் சீமையிலிருந்து வந்தவர்கள். இவர்களைத்தவிர, 6 சுதேச உபாத்தியாயர்களும் இருக்கிறார்கள். இந்தப் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த பாரத்தை (பண்ணையை) இந்த காலேஜ் ப்ரின்ஸிபாலே, அதாவது, தலைமை உபாத்தியாயரே மேல்பார்வை பார்த்து வரவேண்டியது.

இப்படிக்கெல்லாம் சோதனைகள் செய்து போதிப்பதோடு விவசாயிகளுக்கு நல்ல வித்துக்கள் தயார் செய்து கொடுக்கவேண்டுமென்பதும் கவரன்மெண்டார் அபிப்பிராயம். கோயில்பட்டி பண்ணையிலிருந்து எடுத்த கருங்கண்ணி பருத்தி விதையை விவசாயிகளுக்கு கொடுத்து வருகிறார்கள். தவிர, ஒரே பயிரில் எந்த விதம் சிலாக்கியமென்று கண்டு அறிவதும் விவசாய இலாகாவின் நோக்கம். சாமல்கோட்டைப் பண்ணையில் செய்த பரீக்ஷைகளால் சர்க்கரை ஜாஸ்திகாணக் கூடியதும் நோய் விழுந்தால் தாங்கக்கூடியதுமான ஒரு வித கரும்பைத் தெரிந்தெடுத்து, அதை கோதாவரி ஜில்லாவிலும் தென்னாற்காடு ஜில்லாவிலும் கரும்பு சாகுபடி செய்யவேணுமென்கிறவர்களுக்குக் கொடுத்து வருகிறார்கள்.

இவைகளைத் தவிர, கூடியமட்டில் புது தினுசு பயிர்களையும் சாகுபடி செய்யும்படியாக விவசாயிகளுக்கு உதவிசெய்து வருகிறார்கள். உதாரணமாக, கர்நூல், கடப்பை, அனந்தப்பூர், மலையாளம், தென்கன்னடம், க்ருஷ்ணா கோயம்புத்தூர் ஜில்லாக்களில் சில பாகங்கள், இவைகளில் புதிதாய் மணிலாக் கொட்டை சாகுபடியாகி வருகிறது. இதே மாதிரியாக, ஜுட் அல்லது சணல் என்பது தஞ்சாவூர் முதலிய ஜில்லாக்களில் பயிராகுமா என்று சோதனைகள் நடத்தி வருகிறார்கள். லாபகரமான புது முறைகளையும், ஆயுதங்களையும், சர்க்கார்ப் பண்ணையில் உபயோகித்துக் காட்டி, அவைகளை அநுஷ்டிக்கும்படி விவசாயிகளுக்குச் சொல்லிவருகிறார்கள். உதாரணமாக, பருத்தி சாகுபடியில் தேர்ந்த சில வேலைக்காரர்களை பல்லாரியில் இருந்து கோயில்பட்டி பண்ணைக்கு அழைத்துக் கொண்டு போய் ஜனங்களுக்கு விதைக் கலப்பை முதலிய ஆயுதங்களை உபயோகப்படுத்தும் வழிகளைக்காட்டிவருகிறார்கள். கால் நடைகளுக்கு வியாதிகள் வந்தால் சிகிச்சை செய்ய போதுமான வைத்தியர்கள் தற்காலத்தில் இல்லை. இவர்களைத் தயாரிக்க சென்னபட்டணத்தில் ஒரு கால்நடை வைத்திய காலேஜ் ஏற்படுத்தி படிப்புச்சொல்லிக் கொடுத்துவருகிறார்கள். சில கால்நடை வைத்தியர்களை ஊரூராய் அனுப்பி வைத்தியம் செய்ய உத்தரவு பண்ணியிருக்கிறார்கள். சென்னை ராஜதானியில் கால்நடைகளுக்கு வைத்தியம் செய்வதற்காக, 90 ஆஸ்பத்திரிகளையும், ஊரூராய்போவதற்காக 30 வைத்தியர்களையும் நியமிப்பதாக எண்ணம்.

மேலே சொல்லிய சாஸ்வதமான ஏற்பாடுகளைத் தவிர, அப்போதைக்கப்போது, காலத்துக்குத் தகுந்த, ஏற்பாடுகளும் செய்யப்படும். அதாவது, விவசாயப் பொருள்காக்ஷிகளும், கால்நடைப் பொருள்காக்ஷிகளும், விவசாயச் சங்கங்களும் ஏற்படுத்துவதோடுகூட சுதேச பாஷைகளில் பத்திரிகைகளும், பிரசுரங்களும் செய்யப்படும்.

ஒருவன் எவ்வளவு கெட்டிக்காரனாயிருந்தாலும், விவசாயத்தில் எல்லாவற்றையும் அறிந்தவன் என்று சொல்வது அசாத்தியம். சில விஷயங்களில் அளவில்லாத ஞானமும் அனுபோகமும் தேவை. உதாரணமாக, பருத்தி, கோதுமை, கரும்பு, பழவகைகள், புகையிலை, இவைகளெல்லாம் சாகுபடி செய்து, நல்ல லாபம் எடுக்கவேண்டுமானால் ஒவ்வொன்றையும் பற்றிச்சொல்ல ஆயுள் முழுவதும் படித்து உழைத்த நிபுணர் வேண்டும். ஏக காலத்தில் இப்படிப்பட்ட நிபுணர்களை நியமித்தால் அசாத்தியச் செலவாகும். ஆகையால், அப்போதைக்கப்போது வேண்டியவர்களை நியமிப்பதாக இந்தியா கவரன்மெண்டாருக்கு அபிப்பிராயம் இருக்கிறது.

தற்காலத்தில் இந்தியாவிலேயே, விவசாயத்தில் சாஸ்திரீய நிபுணர்கள் இல்லாததால், விவசாய இலாகா பெரிய உத்தியோகஸ்தர்களெல்லாம், சீமையிலிருந்து வரவழைக்கப்பட்டிருக்கிறார்கள். ப்யூசா காலேஜில் சேரும் பிள்ளைகள் படித்துத்தேறி, நிபுணர்களானால், அவர்கள் விவசாய இலாகாவில், உயர்ந்த உத்தியோகங்களுக்கு நியமிக்கப்படுவார்கள்.

பத்திராதிபர்.

---

“பிழைக்கும் வழி” என்பது ஒரு மாதாந்தரப் பத்திரிகை. இதன் பெயர் காட்டுகிறபடி ஜீவனோபாயத்தைச்சேர்ந்த விஷயங்களையே எடுத்துப்பேசுகின்ற ஒரு பத்திரிகை யாதலால் எல்லா வகுப்பாருக்கும் பிரயோசனமானது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இது தமிழிலே முதன் முதலாக வந்த எடுப்பு என்றெண்ணுகிறோம். இந்த நிரையிலே வேறு பத்திரிகைகள் இதுவரையிலே தோன்றியில்லை என்பதே எமது அபிப்பிராயம்.—**சத்திய வேத பாதுகாவலன், யாழ்ப்பாணம்.**



## THE LABOURER AND THE CAPITALIST

BY

M. BALACHANDRAN.

## தொழிலாளியும் முதலாளியும்.

---

*அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்*
*கிவ்வுலக மில்லாகி யாங்கு.*

என்று திருவள்ளுவ நாயனார் சொல்லியபடி இகலோகத்தில் சுகமடைய விரும்புகிறவர்களுக்கு பொருளும், பரலோகத்தில் சுகமடைய விரும்புகிறவர்களுக்கு அருளும் அவசியம்வேண்டும். ஆனால் இந்தக் காலத்தில் நமது இந்து தேசத்தில் இருக்கும் பொருளின் நிலைமையையும், கைத்தொழிலாளிகள் படும் கஷ்டத்தையும் கவனிக்கும் போது பொருள்செல்வத்துடன் அருள்செல்வமும் இருந்தால் அல்லாமல் நமது நாட்டுத் தொழில்கள் விருத்தியடையவும், ஏழை ஜனங்களின் கஷ்டங்கள் நிவர்த்தியாகவும், வழியில்லை. இப்போது நமது நாட்டில் அங்கங்கே பொருளுடையவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பொருளை வட்டிக்கிட்டு விருத்திசெய்வதுடன் அது விஷயமாய் இடை விடாமல் கோர்ட்டுகளுக்குப் போய் கடன் பட்டவர்கள் குடும்பங்களை சின்னபின்னமாக்கி வருகிறார்கள். கஷ்டப்படும் ஜனங்களுக்கு கடன் கொடுத்து உதவுவதை விட்டு தொழில் கொடுத்து உதவுவது அநேகவிதத்தில் நலம் என்று யோசிக்கவேண்டும்.

நமது நாட்டில், ஆகாரத்துக்கு ஸாதகமான விவசாயத் தொழிலும், ஆடைகளுக்கு உபயோகமான நெசவுத் தொழிலும், அங்கங்கே அநாதி காலமாய் அமைந்திருக்கின்றன. விவசாயத்தையும், நெசவுத் தொழிலையும் ஆதாரமாகக் கொண்டு அநேக கோடி ஜனங்கள் பிழைத்து வருகிறார்கள். இந்தத் தொழில்கள் விஷயமாய் தக்க ஏற்பாடு செய்து முதலாளிகள் இந்த இரண்டு தொழில்களையும் முன்னுக்குக் கொண்டுவராவிட்டால் கோடிக்கணக்கான ஜனங்கள் மாண்டுபோகும். இப்போதே அடிக்கடி ஜீவனத்துக்கில்லாமல் லக்ஷக்கணக்கான ஜனங்கள் மாண்டுகொண்டு வருகிறார்கள். இப்படியிருந்தும் நமது நாட்டுச் செல்வர்கள் கருணை யென்பது கொஞ்ச மேனும் இல்லாமல், பொருளை தொழில்கள் மூலமாய் விருத்தி பண்ணாமல், வட்டிக்கிடுவதே காரியமாயிருந்து வருகிறார்கள்.

சென்ற நூறு வருஷங்களாக ஐரோப்பியர் நமது நாட்டிலிருந்து எல்லாக் கைத்தொழில்களையும் தங்கள் வசமாக்கிக்கொண்டு அதேகாரியமாய் இரவும் பகலும் சோம்பல் இல்லாமல் சாகசமான காரியங்களைச் செய்து வருவதை கண்முன் பார்த்திருந்தும், நமது செல்வர்கள் நமது நாட்டுத் தொழில் விர்த்தி காரியங்களை கவனிக்காமல் இருப்பது எவர்செய்த பாவமோ! அவர்களுக்கு ஏழைஜனங்கள் விஷயத்தில் ஏன் தயவு வரவில்லையோ! இனியாகிலும் வருமோ! சர்வஜீவ காருண்ய மூர்த்தி இவர்கள் மனதில் என்று புகுந்து இது காரியத்தில் சீர் திருத்துவாரோ தெரியாது.

நமது ஆரியநாட்டுச் செல்வர்களே! இதன் கீழ் எழுதப்படும் விஷயங்களைக் கவனித்து கருணைவைத்து நமது சகோதரர்கள் எல்லாரும் பிழைக்கும்படியான காரியங்களை நடத்துவீர்களென்று நம்புகிறோம்.

(1) நமது நாட்டிலுள்ள நாட்டுக்கோட்டை பிரபுக்கள் அனைவரும் சேர்ந்து ஒரு பெரிய நூலுண்டாக்கும் யந்திரசாலையை பாண்டிய நாட்டில் அமைக்கவேண்டும். அந்த யந்திரசாலையில் எப்போதும் நூல் உற்பத்தி செய்வதே காரியமாயிருக்கவேண்டும். அவ்வித உற்பத்தி செய்த நூலை நாடெங்கும் பரவச்செய்ய வேண்டும். நூல் செய்யும் யந்திரசாலைமட்டில் நமது

நாட்டில் அமைக்கலாமே யல்லது நெசவு யந்திரங்களை நமது நாட்டில் அமைக்கவே கூடாது. அமைத்தால் நெசவு செய்யும் ஜாதிகளுக்கு தொழிலில்லாமல் கஷ்டம் விளைந்து பஞ்சமுண்டாகி கோடிக்கணக்காய் மாண்டு போவார்கள்.

(2). ஆகையால், ஒவ்வொரு ஜில்லாவிலும், நெசவு செய்யும் தொழிலாளிகள் வசிக்கும் கிராமங்களுக்கு பொருளுடையவர்களும், உலக ஞானத்தையும், தற்கால ஸ்திதியையும் நன்றாகக் கற்றுணர்ந்தவர்களும், ஒன்று சேர்ந்து போய், இப்போது அந்தந்த கிராமங்களில் நெசவுத்தொழில் எப்படி நடந்தேறி வருகிறது என்று நன்றாய் அறிந்து, ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள முதாலாளிகளை தங்கள் வசப்படுத்திக்கொண்டு, ஒவ்வொரு கிராமத்திலும், ஒரு நெசவுசாலை ஏற்படுத்தி, அங்கே நாட்டுத் தறிகளையும், விசை நாடாத்தறிகளையும், அமைத்து, கிராமங்களில் உள்ள நெசவுக்காரர்களை கூலிக்கு தினமும் வேலை செய்யும்படி ஏற்பாடு செய்யவேண்டியது.

(3) வேலை செய்யும்போது கால நிலைமைக்குத் தக்கபடி உபயோகப்படும் வஸ்திரங்களே நெய்துவரும்படி திட்டம் செய்வதுடன், முதலாளிகள், தாங்களாவது அல்லது தக்கவர்களுடைய உதவியைக் கொண்டாவது, தற்காலத்தில் ஜனங்கள் உபயோகித்து வரும் வஸ்திரம், சீட்டி, முதலிய வஸ்துக்களை விசை நாடாத்தறிமூலமாய் வெளிநாட்டார் எவ்விதம் உற்பத்திசெய்கிறார்கள் என்பதை அப்போதப்போது கவனித்து வந்து, தறிகளில் புது ஏற்பாடுகள் செய்துகொண்டு வருவதுடன், தொழிலாளிகளையும் அந்த தினுசுகளை மாற்றி வரும்படி செய்யவேண்டும்.

(4) தொழிலாளிகள் காலந்தவறாமல் தொழில்களை சீராகச் செய்து முடிக்கும் விஷயத்தில் உற்சாகம் உள்ளவர்களா யிருக்கும்படி அவர்களுக்குத் தக்க கூலியும், சம்பளமும் ஏற்படுத்த வேண்டியது. இப்போது நெசவுகாரர்கள் ஒரு நாள் வேலைசெய்தால் ஒன்பது நாள் தூங்குவார்கள், அல்லது, துர்விஷயங்களில் பொழுது போக்குவார்கள். அவைகளுக்கு இடமில்லாமல் காலப்பிரமாணப்படி வேலை வாங்கவேண்டும்.

(5) அப்போதப்போது உற்பத்தியாகும் தினுசுகள் ஜனங்களுடைய உபயோகத்துக்குப் பெரும்பான்மையும் செலவாகக் கூடியதாக இருக்கவேண்டும். விலை சுலபமாயும், கிராமவாசிகளாகிப் பயிரிடும் குடித்தனக்காரர் முதலானவர்களுக்கு அடிக்கடி உபயோகப்படக் கூடியதாயும் இருந்தால் அந்த தினுசுகள் விசேஷமாய்ச் செலவாகும்.

(6) நமது முதலாளிகள் புதிதாய் ஒருவழியில் வேலை செய்யத் திரும்புவது அதிக கஷ்டமாயிருக்கும். ஒரு சமையத்தில் தங்கள் காரியங்கள் எப்படி முடியுமோ என்று திகிலடைவார்கள். இந்த காரியத்தில் தைரியமும் நன்னடக்கையும், காரிய நிர்வாக சாமர்த்தியமும் உள்ளவர்களைத் துணையாகக் கொண்டு வேலைகளை நடத்தவேண்டும்.

(7) வம்ச பரம்பரையில் நெசவுத்தொழிலில் தேறியவர்களையும், அவர்கள் இனத்தாரையும் வேலை செய்யச்சேர்ப்பது நல்லது. வாலிபமுள்ளவர்களுக்கு நன்னடக்கையும், விவேகமும், தொழில் முயற்சியும் உண்டாகும்படியான படிப்புக்களையும் தினம் கொஞ்சகாலம் போதித்து வரவேண்டும்.

(8) கைத்தொழில் உற்பத்தி மூலமாய் விருத்தியாகும் பொருள் வட்டிக்கிட்டு பெருகுவதை விட ஜாஸ்தியாகப் பெருகும். இந்த கைத்தறி தொழிலுக்கு விசேஷ முதல் வேண்டியது இல்லை. தினமும் 10 தறி வேலை செய்ய



வேண்டுமானால் 1000 ரூபாய் இருந்தால் போதும். இதனால் 10 குடும்பங்கள் ஜீவிப்பதுடன் முதலாளிக்கு தக்க லாபமும் கிடைக்கும். மாதம் ஒன்றுக்கு 100க்கு $3\frac{1}{2}$ அல்லது 5 ரூபாய் குறைந்தது முதலாளிக்கு லாபம் கிடைக்கும்.

(9) பட்டணவாசங்களில் வக்கீல் முதலிய உத்தியோகங்களால் விசேஷப் பொருள் சம்பாதித்தவர்களும், கையில் ரொக்கமாக பணம்வைத்துக் கொண்டிருப்பவர்களும் தங்கள் பொருள்களில் சில பாகத்தை கைத்தொழில் விருத்திக்கு முதலாக வைத்து, தங்கள் இனத்தார்களுக்கு தக்க ஜீவன உபாயங்களைத் தேடி வைக்கலாம். அதாவது, தங்கள் டவுனுக்கு சமீபத்தில் இருக்கும் கைக்கோளர், சாலியர், பட்டுநூல்காரர் முதலானவர்கள் வசிக்கும் கிர்மங்களுக்கு சுவல்ப முதலுடன் தங்கள் இனத்தாரை அனுப்பி, தொழில் சாலை ஏற்படுத்தி, பட்டு, நூல், தறி முதலிய சாதகங்களை அமைத்து, தினமும் வேலை நடத்தும்படி செய்து, உற்பத்தி தினுசுகளை பட்டணங்களுக்கும், விற்கக்கூடிய தூரநாடுகளுக்கும் அனுப்பச்செய்து தக்க லாபத்துக்கு விற்கலாம்.

(10) நமது சென்னையில் லக்ஷக்கணக்காகப் பொருள் சம்பாதித்த ஸ்ரீமான்களின் பணமெல்லாம் கால்வட்டிக்கும், அரைவட்டிக்கும் எங்கேயாவது முடங்கிக்கிடக்கிறது. அந்த பிரபுக்களெல்லாம் சபைகளில் நின்றுகொண்டு கைத்தொழில் விருத்தியைப் பற்றி உபந்நியாசம் செய்து தாம் நன்றாக பேசிவிட்டதாக சந்தோஷப்படுவார்கள். நமது சென்னையிலுள்ள தனிகர்கள் உள்நாட்டிலுள்ள தொழிலாளிகளின் கிராமங்களை முதல் மூலமாய் தங்கள் வசமாக்கிக் கொண்டு, கஷ்டப்படும் ஏழைகளுக்கு எப்போதும் வேலைகொடுத்துக் கொண்டு வரவேண்டும். பட்டணவாசத்து ஜனங்களுக்கு உள் நாட்டுக் கைத்தொழிலில் அக்கறை யுண்டானால், வெளிதேசத்து உற்பத்திப் பொருள்களை நாடி விரும்பமாட்டார்கள். மேலும் அந்தத்தொழிலை நாகரீகமான நிலைமைக்குக் கொண்டுவரப் பாடுபடுவார்கள்.

(11) பணமுடையவர்கள் ராஜஸமும், சோம்பலுமே தங்களுடைய தர்மங்கள் என்று நினைக்காமல் அக்கம்பக்கங்களில் கஷ்டப்படும் ஜனங்களை தங்கள் இனமென்று எண்ணி, ஐயோ! இந்த ஜனங்களை நாம் எந்த உபாயத்தினால் நல்லவழிக்குக் கொண்டு வரலாமென்ற சிந்தையுடன், தேச சஞ்சாரங்கள் செய்து, புதிதான விஷயங்களையும், ஜீவனோபாயங்களையும், கண்டுபிடித்து அனுஷ்டானத்துக்குக் கொண்டுவந்து ஏழை எளியவர்களை கைதூக்கி விடவேண்டும். எந்த விஷயத்தையும் அல்பமென்று நினைக்காமல் முயற்சி செய்யவேண்டும். செல்வர்களின் குமாரர்கள் தாம் ஜனித்த இடத்திலேயே சுற்றிச் சுற்றி உழன்றுகொண்டு இருக்காமல், வெளி நாடுகளுக்கு அடிக்கடி போய் அவ்விடங்களில் உள்ள தொழில் உபாயங்களை ஏன் கற்று வந்து அவைகளை நமது நாட்டில் பரவச் செய்யக் கூடாதோ! ஐரோப்பியரைப் பாருங்கள், எவ்வளவோ சாகஸமான காரியங்களைச் செய்கிறார்கள்.

> "செயர்கரிய செய்வார்பெரியர், சிறியர்
> செயர்கரிய செய்கலாதார்."

செய்வதற்கு அருமையான காரியங்களைச் செய்கிறவர்களே பெரியவர்கள். அப்படிச் செய்யமாட்டாதவர் அற்பராவர் என்று நாயனார் சொல்லி யிருக்கிறார்.

(12) மேலும் ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள தனிகர்களும் படித்தவர்களும் ஒன்று சேர்ந்து ஒரு சிறிய கம்பெனி ஏற்படுத்தி அதில் நன்னடக்கையும், சுறுசுறுப்புமுள்ள வாலிபர்களை மெம்பர்களாகச் சேர்த்து, அடிக்

கடி அயல் ஜில்லாக்களுக்கும், வெளி இராஜதானிகளுக்கும் சென்று அங்கங்கே உள்ள விளைபொருள்களின் விலைவாசிகளையும், கைத்தொழில் மூலமாய் உற்பத்தியாகும் வஸ்துக்களையும் கண்டறிந்து மாதம் ஒரு விசை ரிபோர்ட்டு செய்யும்படிக்கும், எங்கெந்த தொழிலாளிகள் எந்தெந்த இடங்களில் எங்கெந்த நிலைமையில் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கும்பொருட்டும், தக்க ஏற்பாடுசெய்து, தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் தக்க நம்பிக்கையும் ஒற்றுமையும் உண்டாகும்படி செய்யவேண்டும்.

(13) இப்போது அங்கங்கே நெசவுகாரர்களுக்கு நூல், பட்டு, ரொக்கம், இவைகளைக் கொடுத்து உதவுகிற முதலாளிகள் தாங்கள் நெசவுகாரர்களுக்குக் கொடுக்கும் வஸ்துக்களில் விசேஷ லாபத்தை வைத்துக் கொடுப்பதும், தினுசுகளை தொழிலாளிகளிடம் இருந்து வாங்கும் போது விலையைக் குறைத்து வாங்குவதும் விசேஷ வழக்கமாயிருக்கிறது. இதனால் தொழிலாளிகளுக்கு கூலிகூடக் கட்டுகிறதில்லை. உற்பத்தி செய்கிற வஸ்துக்களை சூதாகச் செய்கிறார்கள். அவ்வித தினுசுகள் 'மார்கெட்டில்' வரும்போது நம்பிக்கையுடன் விற்கிறதில்லை. இதனால் தொழிலும் வர்த்தகமும் நமது நாட்டில் சூதாட்டமாகவே யிருக்கிறது. நாணயத்திற்கு இடமில்லை.

(14) ஆகையால், முதலாளிகளே, பட்டு, நூல், தறி முதலிய உபகரணங்களை ஒரு இடத்தில் அமைத்து, அங்கே தொழிலாளிகளை வேலையின் அளவு, யோக்கியதை இவைகளின் பேரில் வேலை செய்யும்படி ஏற்படுத்தினால், தொழிலாளிகள் முதலாளிகளின் இஷ்டம் போல் நல்ல தினுசுகளை உண்டாக்குவார்கள். தக்க கீர்த்தியும், லாபமும் கிடைக்கும். உள் நாட்டு தினுசுகளில் ஜனங்களுக்கு நாளாவட்டத்தில் விசுவாசமுண்டாகும். மேலே எழுதிய விஷயங்களை நமது நாட்டு சகோதரர்கள் எல்லாரும் கவனித்து, இவைகளை எவ்விதமாகவாவது அனுஷ்டானத்துக்குக் கொண்டு வந்தால், முதலாளிகளுக்குத் தக்க லாபமும், தொழிலாளிகளுக்கு யுக்தமான ஜீவனமும் உண்டாகும். நாட்டில் பிச்சைக்காரர்கள் குறைவார்கள். அரைப்படிப்பு கால்படிப்பு படித்த முட்டாள் முதலானவர்களுக்கும் தொழில்கள் ஏற்படும், தொழில் சாலைகள் ஊரூராக ஏற்பட்டால் பஞ்சம் நாட்டைவிட்டு ஓடிப்போம். ஆனதால், இந்தக் காரியத்தை அனுஷ்டானத்திற்கு கொண்டுவருவதற்கு, முதன் முதல் சென்னப்பட்டணத்தில் உள்ள சில முதலாளிகள் ஒரு சபைகூடி அவ்விடத்திற்கு சமீபத்தில் உள்ள சிறு கிராமங்களில் இருக்கும் நாட்டு நெசவு தினுசுகளை, அதாவது, பயிரிடும் ஜாதியார் கட்டக்கூடிய ஆடைகளை, உற்பத்தி செய்து பார்க்கலாம். இதனால் ஒவ்வொரு வருஷத்திலும் சில சில கிராமங்களை தொழில் சாலைகளாக்கிக்கொண்டு போகலாம். கூட்டங்கள் கூடி வாய்ப்பந்தல் போடுவதைவிட காரியமாய்ச் செய்வது நல்லதென்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம்.

ஏற்கனவே லக்ஷக்கணக்காய் பொருள் சம்பாதித்த உத்தியோகஸ்தர்களும், வக்கீல்களும் பொதுநன்மை விஷயமாய் அடிக்கடி உபந்நியாசங்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களிடத்தில் நமது நாட்டு ஜனங்களுக்கு விசேஷ நம்பிக்கையும், விசுவாசமும் இருக்கிறபடியால், அவர்கள் தங்கள் தொழில்களை நிறுத்திவிட்டு "இனி நாம் உலகத்துக்காகப்பாடுபடுவோம் என்ற விருதத்துடன் "தொழில் ரக்ஷக சபை" யென்று ஒன்று ஏற்படுத்தி, அதின் மெம்பர்கள், முதலில் சென்னப்பட்டணத்துக்கு சமீபத்திலுள்ள கிராமங்களையும், பிறகு தூரத்திலுள்ள கிராமங்களையும், தொழிலில் சீர் திருத்தி அங்கங்கே ஜனங்களுக்கு ஜீவன உபாயங்களை கட்டுப்பாட்டுடன் நடக்கும்படி செய்து வந்தால் அல்லாமல், சாமானிய ஜனங்களுக்கு இந்த காரியத்தில் எவ்வித அக்கறையும் ஏற்படமாட்டாது. இந்தக் காரியம் பணமும், படிப்பும் உள்ளவர்களாலேயே நடக்கக் கூடியது. இந்தச் சபையார்களே நாளாவட்டத்தில் சாமானிய ஜனங்களுக்கு ராஜாங்கவிஷய ஞானத்தையும் நமது இந்தியா மந்திரியாகிய லார்ட் மார்லி என்பவரால் ஏற்பட்ட புதிய சீர்திருத்தங்களின் வழிகளையும் அனுபோக பூர்வகமாய் கற்பிக்கும் சபையார் ஆவார்கள் இதில் பொருள் லாபமும் உண்டு. ராஜகாரிய நிர்வாக லாபமும் உண்டு. நல்ல சமையம். பொருளுடையோருக்கு இது தான் யோக்கியமான காரியம்.

இங்கிலீஷ்க்காரர் நமது நாட்டை முதலில் வியாபார மூலமாய்க் கைப்பற்றி பிறகு இராஜாங்கத்தை நிலை நிறுத்தினார்கள். அது போலவே நமது நாட்டாரும் தொழில், வியாபாரம் இவைகளை சீர்திருத்தி, விருத்தி செய்துகொண்டு ராஜாங்க சுவதந்திரங்களை அடைய வேண்டும். இந்த வியாசத்தின் தலைப்பில் சொல்லியபடி, பொருளும் அருளுமாகிய இரண்டு செல்வங்களாலேயே இந்தியா நல்ல நிலைமைக்கு வரவேண்டும்.

எம். பாலசந்திரன்.

---

"பிழைக்கும் வழி," பெயருக்குத் தக்கவாறு சங்கதிகளு மிருக்கின்றன. இதில் விவசாயம், வர்த்தகம், கைத்தொழில், கல்வி, சாஸ்திரம், வைத்தியம், சிறுவர்க்கான சமாசாரங்கள், இன்னும் பல தேச வர்த்தமானங்கள் அடங்கி யிருக்கின்றன. இப்படிப்பட்ட பத்திரிகையை யாவரும் வாசித்துவரில் பல நன்மைகளை அடையலாம்.—ஜனானுகூலன்.



## DRY BED PADDY SEEDLINGS

BY
T. KUPPUSAMI AIYAR, *Mannargudi.*

## புழுதிக்கால் நெல் நாற்றுகள்

நெல் சாகுபடியில் ஒற்றை நாற்று நடுவதால் செலவு மிச்சமாவதோடு லாபம் மிகுதியாய் வரக்கூடுமென்று சொல்லப்படுகிறது. சாதாரணமாய் முடி முடியாய் நடுவதற்கு பதிலாக நாற்றை ஒவ்வொரு அலகாக நடுவதில் நாற்று விசேஷமாய் மிச்சப்படுவதால் சொல்ப விதையைக்கொண்டு நாற்று விட்டு சாகுபடியை முடித்து விடலாமென்று யாரும் நினைக்கக்கூடியதுதான். இந்த மன்னார்குடி தாலூகாவில் சில சுயம்பிரயாசி மிராசுதார்கள் 2-3 வருஷங்களுக்கு முந்தி ஒற்றை அலகு நடவை சொல்பமாய் பரீட்சைசெய்து அதின் பிரயோஜனத்தை நன்றாய்த் தெரிந்துகொண்டு இப்போது அவர்களின் நிலமுழுமையும் ஒற்றை ஒற்றை அலகாக நட்டு வருகிறார்கள்.

நான் இந்த வருஷத்தில் ஒற்றை நாற்று நடப்பட்ட சில நிலங்களைப்பார்த்து அதின் வரலாற்றையும் விசாரித்துத் தெரிந்துகொண்டேன். இந்த தாலூகாவில் மிகுதியாக ஒரு போகமே சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இரண்டு போகம் சாகுபடி செய்ய போதுமான இயற்கையான செழிப்பு பூமியிலில்லாத நிமித்தம் சம்பாபிசானம் ஒரு போகம்மட்டில் விசேஷமாய் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நான் பார்த்தகாலத்தில் மேல்சொல்லிய நிலங்களில் சம்பாபிசானம் ஒற்றை நாற்றாக நட்டு 4–5 தினம் ஆயிருக்கலாம். அந்த நிலங்கள் அப்போது ஒற்றை நாற்றாய் நட்டிருப்பதாய்த் தோன்றவில்லை. முடிமுடியாய் நட்டிருப்பதில் முடிகளில் கொஞ்சம் அலகுகளைக் குறைத்து நெருக்கமாய் நடப்பட்டி

ருட்பதாய்க் காணப்பட்டது. ஆனால் அவர்கள் அதெல்லாம் ஒற்றை நாற்று நடவென்று சொன்னார்கள். அதை எனக்குத் தெளிவாய்க்காண்பிக்க, நட்டிருக்கும் ஒரு முடியைப் பிடுங்கி கையில் எடுத்து, இவைகளெல்லாம் ஒரு நெல்லு விதையிலிருந்து முளைத்த கிளைகள் தான், இவைகளைப் பிரிக்காமல் அப்படியே நடுவதால் அது ஒற்றை நாற்று நடவென்று விவரித்தார்கள்.

சாதாரணமாய் சேற்றில் நெருக்கமாய் விடுகிற நாற்றில் ஒருவிதைக்கு ஒரு அலகாயிருக்கிறது. அந்த நாற்று பலமற்றதாயும் அதின் வேர் பலமாய் பூமிக்குள் பரவாமலும் இருக்கிறது. அந்த நாற்றை ஒற்றை அலகாக நட்டால் அது காய்ச்சல் பேய்ச்சலுக்கு ஈடுகொடுத்து வளர்ந்து ஓங்காமல் அநேகமாய் அழிந்துவிடுமென்று அவர்கள் தெரிவித்தார்கள்.

நாற்றங்காலில் நல்ல உரம்செய்து, கோடையில் 5-6 தடவை திருப்பித்திருப்பி உழுது நல்ல புழுதியாகச்செய்து, அந்தப்புழுதியில் விதையைக் குறைத்து ஒன்றோடு ஒன்று சேராமல் இடைவெளியுடன் விதைத்தால், அந்த விதைப்பில் ஒவ்வொரு நாற்றும் பலமான வேர்கள் பூமிக்குள் பரவி, கப்பும் கிளையுமாயும், பட்டை உரப்பாயும், ஒரு விதையிலிருந்து 7–8 கிளைகள் வெடித்து நாற்றங்கால் முழுமையும் நாற்றாய் பரவிப்போகிறது. சேற்றில் நெருக்கமாய் விடுகிற விதைகளில் விதையொன்றுக்கு ஒரு நாற்றுதான் உண்டாகிறது. மேல் சொல்லிய புழுதியில் ஒருவிதைக்கு 8 கிளைகள் உண்டாகிறது. ஆகையினாலே புழுதியில் விதைப்பதில் முக்காலே அரைக்கால் விதை அளவு மிச்சமாகிறது. அதாவது, 8 கோட்டை விதை சேற்றில் விதைக்கவேண்டுமானால் ஒரு கோட்டை புழுதிக்காலில் விதைப்பது போதுமானது. எவ்வளவுக்கு நாற்றங்காலில் கோடை உழவு உழுது நன்றாய் உரமும் கொடுக்கிறோமோ அவ்வளவுக்கு விதையையும் குறைத்துவிடலாம். கிளை ஜாஸ்தியாக வெடிப்பது பூசாரத்தின் பேரிலும் உரத்தின்பேரிலும் சார்ந்திருக்கிறது. குறைக்கும் விதைக்கு ஈடாக உரம் செய்ய வேண்டியிருப்பதால் அந்த இனத்தில் நமக்கு மிகுதியொன்றுமில்லை. ஆனால் நல்ல நாற்றுப்பயிராகி இரட்டிப்புப் பங்கு விளைவதால் அதில் லாபமிருக்கிறது. என்னுடைய கிராமத்தில் இந்த வருஷம் புதிதாய் மேல்சொல்லியபடி புழுதிக்காலில் நாற்று விட்டு ஒற்றை நாற்றாக நட்டுமிருக்கிறேன். நான் எதிர்பார்த்ததற்கு மேல் நாற்று செழிப்பாய் வளர்ந்தது. ஒற்றை நாற்றாய் நடுவதில் நடவு கூலி கொஞ்சம் ஜாஸ்தியாகிறது. நட்ட நடவு சீக்கிரத்தில் வேரூன்றி தரித்துவிட்டது. என்னுடைய வேலைக்காரர்களும் மற்றும் அக்கம் பக்கத்து மிராசுதாரர்களும் புழுதி நாற்று இந்த கிராமத்தில் பலிக்காது என்று ஆரம்பத்தில் அதைரியப்படுத்தினார்கள். அவர்களே நான் விட்ட புழுதிநாற்று வெகு செழிப்பாய் வளர்ந்து சீக்கிரத்தில் நடுவதற்கு பக்குவமாய் விட்டதைக் கண்டு இனி இவ்விதமாகவே புழுதி நாற்று விட்டு ஒற்றையாக நடவேண்டுமென்று உறுதியடைந்திருக்கிறார்கள்.

புழுதியில் நாற்றுவிட அடியில் சொல்லியபடி செய்யவேண்டும். நாற்றங்காலில் அறுப்பானதுமுதல் ஒவ்வொரு மழையிலும் உழும் பதத்தில் இரும்புக் கொழுவைத்த புஞ்சைக்கலப்பையால் இடைத்தரிசு விடாமல் உழவேண்டும். விதைவிடுவதற்கு முன்னால் நாற்றங்கால் 6 தடவைக்குக்குறையாமல் உழுதிருக்க வேண்டும். நெருங்கிய கிடையாக (மந்தையாக) ஆடுமாடு கிடை இரண்டு தடவைக்குக் குறையாமல் வைக்கவேணும் கடைசிக்கிடைவைத்த சொற்ப தினத்திற்குள் விதையை விதைத்து விடவேண்டும். கிடை வைத்தவுடன் மூத்திரமும் சாணமும் மண்ணுடன் கலந்து போகும்படி உடனே தவறாமல் உழுதுவிடவேணும். ஒரு ஏகர் நாற்றங்காலுக்கு நல்லமக்கினஎரு வண்டி 30க்கு குறையாமல் போட்டு அதை எங்கும் பரவ வாரி இறைத்து மண்ணோடு கலந்து போகும்படி உழுதுவிடவேண்டும். நாற்றங்கால் மட்டமாயிருக்கவேண்டும். இப்படித் தயாராயிருக்கும் நாற்றங்காலில் ஆற்றில் முதலில் ஜலம் வந்தவுடன் விதைகளை விதைத்து மட்டைகளால் மேலே மேடு பள்ளம் இல்லாமல் சமமாக்கி, தண்ணீரை அதில் உறிஞ்சிப்போகுமளவு பாய்ச்சி விடவேணும். முளைகள் சரியாய் வராத பட்சத்தில் 5 அல்லது 7 நாளில் இன்னும் ஒரு தண்ணீர் பாய்ச்சிவிடவேணும். இப்படி பாய்ச்சுவதில் பள்ளம் படுகுழிகளில் தண்ணீர் தங்காமல் சுத்தமாய் வடியவிடவேண்டும். பிறகு, 3 வாரம் வரையில் கொஞ்சமேனும் தண்ணீர் உள்ளே கொள்ளாமல் நாற்றங்காலை காய்ச்சலாக வைத்திருக்க வேண்டும். 3 வாரத்துக்கு பிறகு நடுவதற்கு 10 நாள் முந்தி தண்ணீர் பாய்ச்சி காயாமல் வைத்திருக்க வேண்டும். தண்ணீர் பாய்ந்த பத்து நாளில் ஒவ்வொரு நாளும் நாற்று சாகோபசாகையாய் வளர்ந்துவிடும் பத்தாவது நாளில் நாற்றைப் பிடுங்கி ஒவ்வொரு நாற்றையும் அதின் கிளைகளைப்பிரிக்காமல் அப்படியே ஓட்டைக்கு ஒன்றாய் நட்டுவிடவேண்டும் இவ்வாறு நாற்று விட்டு ஒற்றையாக நட்டால் மாசூல் இரட்டிப்புப் பங்கு ஜாஸ்தி கிடைக்கும். ஆகையால் ஒற்றை நாற்று நடவுக்கு சொல்லப்படும் மகிமை எல்லாம் அந்த நடவுக்கு தகுந்ததாய்த் தயார் செய்யப்படும் நாற்றுக்கே பொருந்தினதாகிறது.

டி. குப்புஸாமி ஐய்யர்.



## SCIENCE AND INDUSTRY.

## சாஸ்திரமும் கைத்தொழிலும்.

போனமாஸத்து ஸஞ்சிகையில் விவஸாய இலாகாவைப்பற்றி எழுதும்போது இந்தியாவில் விவஸாயத்தை விருத்தி செய்வதற்கு வேண்டியதெல்லாம் சாஸ்திர ஞானம் என்று டாக்டர் வோயல்கர் போன்ற பெரிய விவஸாய நிபுணர்களின் அபிப்பிராயம் என்று சொன்னோம். அதேமாதிரி கைத்தொழில்களிலும் பழைய கைத்தொழில்களை சீர்படுத்தவோ, புதிய கைத்தொழில்களை ஏற்படுத்தி நிலைநிறுத்தவோ, தொழிலுக்குத் தக்கபடி சாஸ்திர ஞானந்தான் தற்காலத்தில் வேண்டியிருக்கிறது. கைத்தொழில் விஷயமாய் யார் சாஸ்திரத்தைப் படித்து என்னத்தைப் புரட்டி விட்டார்கள் என்று சொல்லலாம். சாஸ்திரம் படித்த ஒரு புத்திமான் மட்டில் என்ன செய்திருக்கிறார் என்று விசாரிப்போம்.

இப்போது பம்பாயில் கஜ்ஜர் என்று ஒருவர் இருக்கிறார். இவர் ஆதியில் வடக்கே சூரத் நகரத்தில் ஒரு சாமான்ய தொழிலாளி குலத்தில் பிறந்தவர். தொழிலாளி பிள்ளையானதால் இவருக்கு எப்பொழுதும் தொழில்களைப்பற்றி விசாரணை செய்வதிலும் ஆராய்ச்சி செய்வதிலும் வெகு பிரியம். வயஸானதும் பம்பாய் சகலகலாசாலையில் படித்து, எம். ஏ. பரீக்ஷை கொடுத்து, பி. எஸ். ஸி. என்னும் ஒரு சாஸ்திரப் பரீக்ஷையிலும் முதல் வகுப்பில் தேறினார். சில வருஷங்களுக்கு முன் பம்பாயில் காலம்சென்ற விக்டோரியா மகாராணியின் கல்சிலை ஒன்றின்மேல் யாரோ சில துஷ்டர்கள் ஏதோ ஒருவித கரிப்பசையை தீத்திவிட்டார்கள். அதை என்ன பாடுபட்டும் ஒருவராலும் அழிக்க முடியவில்லை. இதை

கஜ்ஜர் தானாய் கண்டுபிடித்த ஒரு முறையால் அழித்து அதற்காக ஏற்பட்டிருந்த 2000 ரூ. இனாத்தையும்பெற்றார். இது முதல் அவருக்கு பேர் கிளம்பி வெகு கீர்த்தி உண்டாகி விட்டது. பரோடா மகாராஜா கஜ்ஜரைத் தருவித்து தன்னுடைய ராஜ்யத்தில் சாஸ்திர முறைப்படி கைத்தொழில் கற்பிக்க ஒரு ஸ்கூலை ஏற்படுத்தி பார்த்துவரச் சொன்னார். இப்படி இருக்கையில் அக்கரைச் சீமை ரங்குச்சாயம் நமது தேசத்தில் வரத்தலைப்பட்டு, நம்முடைய தேசத்தில் சாயத்தொழில் அழிந்து போய்விடும் போலாகி விட்டது. அந்த சமயத்தில் கஜ்ஜர் ஜர்மனி தேசத்தில் ரங்குச்சாயம் உற்பத்தி செய்பவர்களுக்கு எழுதி அந்த சாயத்தை உபயோகிக்கும் வழியை நம்முடைய தேசத்தில் சாயம்போடும் தொழிலாளிகளுக்குச் சொல்லிக்கொடுக்கும்படி செய்தார். இப்பொழுது மதுரையில் சாயவேலை பலமாயிருப்பது கஜ்ஜருடைய சிஷ்யன் ஒருவனுடைய முயற்சியினால் என்றே சொல்லவேண்டும். ஜனவரி மாஸத்து ஸஞ்சிகையில் ஜெ. என். டாடா என்பவரின் சரித்திரம் எழுதியிருக்கிறோம். இவர் தன்னுடைய பருத்தி ஆலையை ஒட்டி ஒரு சாயவேலைச் சாலையும் ஏற்படுத்தியிருக்கிறார். இந்த சாயவேலைச்சாலை கஜ்ஜராலும் அவருடைய சிஷ்யராலும் ஸ்தாபிக்கப்பட்டது. தவிர, எண்ணெய்கள் தயாரிக்கும் விதங்களைப் பற்றி பல பரிசோதனைகள் செய்தார். இவர் தூண்டுகோலின் மேல் ஆமதாபாத், ப்ரோச், பரோடா, சூரத், இந்த இடங்களிலெல்லாம் பெரிய எண்ணெய் ஆலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. கொஞ்ச நாள் கழித்து பரோடாவை விட்டு பம்பாயிக்கு வந்து சேர்ந்தார். இங்கே வந்ததும் பம்பாயில் உள்ள வில்ஸன் காலேஜில் ரஸாயன சாஸ்திரியாக வேலை ஆயிற்று. இங்கே இருந்து கொண்டு ரஸாயன சாஸ்திரத்தை பல மாணாக்கர்களுக்கு சொல்லிக் கொடுத்து அவர்களை பல தொழில்களில் அமைத்திருக்கிறார். இப்படிக்கு இவருடைய சிஷ்யர்களால் ஸோப்பு செய்தல், கண்ணாடி செய்தல், எண்ணெய் இறக்குதல், புட்டிப்பால் விற்பனைக்குத் தயாரித்தல், மருந்துகள், வாசனை திரவியங்கள் செய்தல், முதலான பல கைத்தொழில்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஒரு கைத்தொழில் பொருள் திறமாயும் மலிவாயும் லாபகரமாயும் இருக்கவேண்டுமானால், அதைப்பற்றி எல்லா விஷயங்களும் தெரியவேணும். அது மூலவஸ்துவா, அல்லது, செயற்கை வஸ்துவா, செயற்கை வஸ்துவானால் இயற்கையாகவே அப்படிக் கிடைக்குமா, அல்லது, அதை மூலவஸ்துக்களைக் கொண்டு தயாரிக்கவேண்டுமா, அப்படி தயாரிக்க முடியுமா, தயாரித்த செயற்கை வஸ்துவின் குணாகுணங்கள் என்ன, என்ற பலவித ஆராய்ச்சி செய்வதற்கு முக்கியமாய் ரஸாயன சாஸ்திர ஞானத்தோடு 'லாபொரெடரி', அதாவது, வஸ்து சோதனை சாலையும் அவசியம். இப்படிப்பட்ட ஒரு வஸ்து சோதனை சாலையை கஜ்ஜர் தன் சொந்தத்தில் முதன் முதல் 30 ரூ. போட்டு ஆரம்பித்தார். இப்பொழுது அது லக்ஷ ரூபாய் பெறுமாம். இதில் தன்னுடைய சிஷ்யர்களுக்கு சொல்லிக் கொடுப்பதோடு கூட, பொது ஜனங்கள் வேண்டிக் கொண்டால் அவர்களுடைய செலவில் வேண்டிய ஆராய்ச்சிகளை செய்து கொடுக்கிறார்.

---

கஜ்ஜரால் கண்டுபிடிக்கப்பட்ட சில உன்னதமான மருந்துகளைப்பற்றி 319-ம் பக்கத்தில் பார்க்கவும்—எஸ். வைத்தியா அண்டு கோ, 10, எஸ்பிளனேட், மதராஸ்.



# AGRICULTURAL NOTES.
# விவஸாயக் குறிப்புகள்.

### COWS AND FLIES.

**பசுக்களும் ஈக்களும்.**—ஈக்கள் மிருகங்களுக்கு மிக்க உபத்திரவத்தை உண்டாக்குகின்றன. முக்கியமாய் ஈக்கள் பசுமாடுகளின்மேல் உட்காருவதால், அவைகள் இளைத்தும் போகின்றன. பாலும் குறைந்து போகிறதாம். ஈக்கள் அதிகமாயிருக்கும் காலத்தில் பால் முந்தியிருந்த அளவில் பாதியோ முக்காலோ ஆகி விட்டதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ஈயை ஓட்டுவதற்கு பலவித ஆராய்ச்சிகள் செய்து பார்த்ததில் கீழே குறித்திருக்கும் மருந்துகள் மிக சிலாக்கியமானவைகளென்று தெரியவருகிறது.

1½ ராத்தல் பிசின், 2 துணி தோய்க்கும் சோப்புக் கட்டிகள், பட்டணம்படிபால் காலே அரைக்கால்படி மீன் எண்ணெய், இவைகளுடன் 3 காலன், அதாவது, பட்டணம்படிபால் 9 படி, ஆகும் வரையில் ஜலம் வார்த்துக் கலக்கவேண்டும். இந்தப்பசையை ப்ருஷ்ஷால் மாட்டின்மேல் தடவி விட்டால் ஈக்கள் தொந்திரவு செய்யாவாம். அல்லது, மேலே சொல்லிய ஜலத்தோடு பட்டணம் படியால் காலே அரைக்கால் படி கெரோஸின் எண்ணெயைச் சேர்த்து மாட்டின் மேல் தெளித்தும் விடலாம். இப்படி அநேக காலம் செய்யவேண்டுவதில்லை. வாரத்தில் இரண்டு மூன்று தடவை இப்படி செய்துவிட்டால் மயிர் முனைகளில் இந்தப்பசை நன்றாய் ஒட்டிக்கொள்வதால் ஈக்கள் வருகிறதேயில்லையாம். ஈக்களை போக்கடிக்க இன்னும் ஒரு முறையும் உண்டு. அரை ராத்தல் மஞ்சள் நிறமான ஸோப்புக்கட்டி, மூன்று பட்டணம் படி ஜலம், 6 பட்டணம் படி கெரோஸின் எண்ணெய், இவைகளைச் சேர்த்து கலக்கிக்கொண்டு இன்னும் 3 பட்டணம் படி ஜலம் விட்டு கையில் வைத்துக்கொள்ள வேணும். அதை எடுத்து ஒரு பங்குக்கு ஐந்து பங்கு ஜலம் சேர்த்து தினந்தோறும் மாடுகளின் மேல் மழை தூறுகிறது போல் ஒரு பம்பைக்கொண்டு அடிக்கவேணும். இப்படிக்கு ஒரு மாட்டுக்கு ஒரு தடவை அடிக்கவேண்டுமானால் தண்ணீர் விட்டு விளாவின பிறகு பட்டணம்படியில் அரைப்படி ஜலம் போதுமானது.

### JUTE CULTIVATION.

**சணல் பயிர்.**—ஜூட் என்பது ஒருவித சணல். இதில் இருந்து நார் எடுத்து கோணிசெய்யப்படுகிறது. இது ஏராளமாக வங்காள மாகாணத்தில் பயிர் செய்யப்படுகிறது. தஞ்சாவூரில் காவேரிப்பாய்ச்சல் பூமிகளிலும், மலையாளத்திலும் இதுபயிராகுமா என்று பரீக்ஷித்து வருகிறார்கள். மலையாளத்தில் உண்டாவது போல் பயிர் செழிப்பாய் தஞ்சாவூர் பூமியில் உண்டாகவில்லையாம். மலையாளத்தின் சீதோஷ்ண ஸ்திதி கீழ்வங்காளத்தைப் போலிருப்பதால் அங்கே பயிர் நன்றாய்வளர்கிறது. இரண்டு மாதகாலத்தில் பயிர் 9 அடி வளர்ந்ததாம். விவசாய டிபார்ட்மெண்டார் பயிராகும் சணல் அங்கேயே உபயோகமாகும்படி முயற்சி செய்து கொண்டிருக்கிறார்களாம்.

### COIMBATORE AGRICULTURAL ASSOCIATION.

**கோயம்புத்தூர் விவசாய சங்கம்.**—போன வருஷத்தில் இந்த சங்கத்தார் 1000 ரூபாய் போட்டு தண்ணீர் அகப்படும், அகப்படாது என்று கண்டு பிடிப்பதற்காக, ஒரு ஜோடி கருவிகள் வாங்கினார்கள். இவைகளை இரண்டுபேர்களுக்கு இரவல் கொடுத்து அவர்கள் இரண்டு பேர்களும் ஜலம் கண்டு கிணறுகள் வெட்டிக் கொண்டார்களென்று தெரிகிறது. இந்தக்கருவிகளை இரவல் கொடுப்பதைப் பற்றி சிலரூல்கள் ஏற்படுத்தியிருப்பதாகவும் அறிகிறோம்.

### HARVEST TIME.

**அறுக்கும் காலம்.**—கிருஷிகர் தற்காலத்தில் நெல் பயிர் சரியானபடி விளைந்த பிறகு கூட அறுவடை செய்யாமல் நிலத்தில் நெடுநாள் விட்டு வைக்கிறார்கள். இதனால் தானியத்தின் ருசி மிகவும் கெட்டுப்போவதுமன்றி வீணாக உமி அதிக கனமடைய நேரிடுகிறது. பயிர் முற்ற விளையும்போது கடைசியில் சில நாட்களில் தானியம் விருத்தியடைவதில்லை; உமியே அதிக கனமாகின்றது. ஆகையால் சில கதிர்கள் கொஞ்சம் பச்சையாயிருக்கும் போது அறுவடை செய்வதால் கெடுதியில்லை.

---

## TRADE NOTES.
## வியாபாரக் குறிப்புகள்.

**Trade in Gingelly Seed.**

**எள்ளு வியாபாரம்.**—ஐரோப்பாவில் பிரான்ஸ் தேசத்தில் மார்ஸெயில்ஸ் என்பதாக ஒரு பெரிய பட்டணமிருக்கிறது. இதில் வெளிதேசங்களிலிருந்து எண்ணெய் விதைகளை ஏராளமாக வரவழைத்து எண்ணெய் எடுத்து, சோப்பு முதலானவைகள் செய்து வருகிறார்கள். இந்த ஊருக்கு இந்தியா பர்மாவிலிருந்து, எள்ளும் மணிலாக்கொட்டையும், பம்பாய் மதராஸிலிருந்து ஆமணக்குக்கொட்டையும் ஏராளமாக அனுப்பப்படுகின்றன. எள்ளு மட்டும் சுமார் லக்ஷம் பாரம் இந்தியா பர்மாவிலிருந்து ஏற்றுமதியாகிறது. 1908-ம் வருஷத்தில் சீன தேசத்திலிருந்தும் சுமார் லக்ஷம் பாரம் மார்ஸெயில்ஸுக்கு அனுப்பப்பட்டது. இதுவரையில் இவ்வளவு எள்ளு சீன தேசத்திலிருந்து மார்ஸெயில்ஸுக்கு ஏற்றுமதியானதே கிடையாது. சாதாரணமாய் எள்ளு விலை தணிந்திருந்தால் சீன தேசத்தார்கள் மாசூலை தங்கள் உபயோகத்துக்கே வைத்துக்கொண்டு விடுகிறார்கள். போன வருஷத்தில் மார்ஸெயில்ஸில், விலை தூக்கியிருந்த படியால் அவ்விடத்திற்கு சீன தேசத்திலிருந்து ஜாஸ்தியான எள்ளு அனுப்பப்பட்டது. சீன தேசத்தில் எள்ளு ஜாஸ்தியாய் சாகுபடியாகிக்கொண்டே வருகிறதாகவும் ஏற்றுமதியாகும் சரக்கை நன்றாய் சுத்தப்படுத்தி அனுப்புவதாகவும் தெரியவருகிறது. மார்ஸெயில்ஸுக்கு எள்ளு ஏற்றுமதி செய்யும் வியாபாரிகள் மேலே சொல்லிய விஷயங்களை கவனிக்கவேண்டியது.

**Exports of Gingelly from Madras.**

**மதராஸிலிருந்து எள்ளு ஏற்றுமதி.**—1907-08-ம் ஷூத்தில் சுமார் 16¾ லக்ஷம் ரூபாய் பெறுமான 40,700 பாரம் எள்ளு இதர தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. 1908--09-ஷூத்திலோ 1¾ லக்ஷம் ரூபாய் பெறுமான 4,800 பாரம் எள்ளுத்தான் ஏற்றுமதியாயிற்று. இவ்வளவு குறைந்ததற்குக்காரணம் போன வருஷத்தில் மழை பெய்யாமல் விளைவு குறைந்துபோனதே. போன வருஷத்தில் ஏற்றுமதியான எள்ளும் அதற்கு முந்திய வருஷத்தில் மிகுந்திருந்த எள்ளேயாம்.

**To Preserve Fruits.**

**பழங்களைக் கெடாமல் வைக்க.**—பழங்களை தூர தேசங்களுக்கு அனுப்பும்பொழுது, போய்ச் சேர்வதற்கு முன், அநேகம் அழுகிப்போய் விடுகின்றன. இப்படிக்கு அழுகிப்போவதற்கு ஈரம் ஒரு காரணம். பழத்தை சூரியன் உச்சியிலிருக்கும் பொழுதே பறித்து ஈரமில்லாமல் துடைத்து, பெட்டியில் போட்டு நாலு பக்கமும் மணல் மணலாக இருக்கும் சர்க்கரையைப் போட்டு மூடி, பாக் செய்து அனுப்பினால் பழங்கள் கெடாவாம். இப்படிக்கு உபயோகிக்கும் சர்க்கரையில் கொஞ்சங் கூட ஈரமிருக்கக்கூடாது. பெட்டியும், சந்துபொந்துகளில்லாமல், காற்றுப் போக முடியாமல் இருக்க வேண்டும். சரியாய் மட்டும் செய்தால் பெட்டியையும் சர்க்கரையையும் திருப்பித்திருப்பி உபயோகிக்கலாம்.

**To Preserve Eggs.**

**முட்டைகளைக் கெடாமல் செய்தல்.**--முட்டையை ஈரமில்லாத உப்பிலாவது தவிட்டிலாவது போட்டு வைத்திருந்தால், இரண்டு மூன்று மாதத்திற்குக் கெடாமலிருக்குமாம். பிற்பாடு அதை எடுத்து ஆட்டினால் முட்டைக்குள் சல சல வென்று சத்தம் கேட்கும். அதினால் பாதகமில்லை. முட்டையை தாராளமாய்ச் சாப்பிடலாம்.

**Human Hair Trade.**

**தலை மயிர் வியாபாரம்.**—அமெரிக்காவில் ஐக்கிய நாடுகளின் முக்கிய பட்டணமாகிய நியூயார்க்குக்கு சில வருஷங்களாக சீனாவிலிருந்து தலைமயிர் விலைக்கு வாங்கப்பட்டு ஏற்றுமதியாகிறது. இவைகளுக்கு நியூயார்க்கில் நூதன சாயங்கள் ஏற்றி சுருள்மயிராகவும் இன்னும் பலவிதமாகவும் ஏராளமாய் விற்பனை செய்கிறார்கள். அமெரிக்கர்கள் இந்தத் தலைமயிர் தரித்துக் கொள்வதில் பிரமைகொண்டிருக்கிறார்களாம். இந்தத்தலைமயிரில் வியாபாரம் போனவருஷத்தில் அதிகமாகி மயிரை வாங்குவதற்காக அமெரிக்காவில் இருந்து சீனாவுக்கு நேரில் ஒரு வியாபாரியின் ஏஜெண்டு வந்தாராம். 1907-ம் வருஷத்தில் 56,133 ராத்தல் மயிரும், 1908-ம் வருஷத்தில் 207,414 ராத்தல் மயிரும் ஏற்றுமதி செய்யப்பட்டதாம். வல்லவனுக்குப்புல்லும் ஆயுதம். வியாபாரத்தில் சமர்த்தரான அமெரிக்கர்கள் மயிரைக்கூட விற்று விடுகிறார்கள்!



## INDUSTRIAL NOTES.
## கைத்தொழில் குறிப்புகள்.

**Paper Industry.**

**காகிதத் தொழில்.**—இந்தியாவில் காகிதம்செய்யும் சாலைகள் இருந்தாலுங்கூட வருஷத்துக்கு வருஷம் பிற தேசங்களிலிருந்து காகிதம் இறக்குமதியாவது அதிகரித்துக்கொண்டே வருகிறது. சென்ற ஐந்து வருஷங்களில் இறக்குமதியான காகிதத்தின் பெறுமானம் 52 லக்ஷத்திலிருந்து, அடுத்த வருஷத்தில் 64 லக்ஷம், அதற்கு அடுத்த வருஷத்தில் 70 லக்ஷம், அதற்கு அடுத்த வருஷத்தில் 80 லக்ஷம், அதற்கு அடுத்த வருஷத்தில் 99 லக்ஷம், என்று ஏறிக்கொண்டே வந்திருக்கிறது. இதற்குக் காரணம் காகிதம் செய்வதற்கு வேண்டிய பொருள் இந்தியாவில் ஏராளமாயும் விலை சரசமாயும் கிடைக்காமலிருப்பதே. ஆனால் ட்ரினிடாட் தீவில் கரும்புச் சக்கையிலிருந்து கடுதாசி செய்வதற்கு வேண்டிய மசியல் செய்யப்படுகிறதாம். அந்தத் தீவில் கரும்புச் சக்கையை முன்னால் அடுப்புக்கு போட்டு எறித்து வந்தார்கள். அப்பொழுது பாரம் ஒன்றுக்கு சுமார் ரூ. 1-4-0 க்கு விலைப்போகும். அதை காகித மசியலாக செய்தால் சுமார் ரூ 9 க்கு விற்கக்கூடியதாயிருக்கிறதாம். இப்படிக்கானால் கரும்பை சர்க்கரைக்கு என்று பயிரிடாமல் காகித மசியல் செய்வதற்கே பயிரிட்டு வரலாம். சர்க்கரை உபப்பொருளாகி விடும். இப்படிக்கு மட்டில் ஏற்படும் பட்சத்தில் நம்முடைய தேசத்தில் சர்க்கரை செய்யும் தொழிலுக்கு ஒரு பெரிய நல்ல காலமாகும். இது விஷயமாய் பஞ்சாப் மாகாண கவரன்மெண்டார் சில பரிசோதனைகள் செய்து வருகிறார்கள். அதன் முடிவை எல்லாரும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

**Match Factory.**

**தீக்குச்சி சாலை.**—வருஷா வருஷம் நம்முடைய நாட்டுக்கு 60,70 லக்ஷம் ரூக்கு தீப்பெட்டிகள் வருகின்றன. இது நல்ல வியாபாரமென்று தெரிந்துகொண்டு சில பணக்காரர்கள் தங்கள் கவனத்தை இதில் செலுத்தி வருகிறார்கள். பம்பாயில் ஒரு தீக்குச்சி சாலையும், கல்கத்தாவில் ஒரு தீக்குச்சி சாலையும் இருக்கிறது. இந்தியாவில் உண்டாகும் 30 அல்லது 35 மாதிரிகளை இந்தியா காட்டு இலாகாக்காரர்கள் ஐரோப்பாவுக்கு அனுப்பி அவைகள் தீப்பெட்டி, தீக்குச்சி செய்ய உபயோகமுள்ளவைகளா என்பதை ஆராய்ந்துகொண்டு வருகிறார்கள். இவர்கள் ஆராய்ச்சி பிரசுரமானதும், இந்த வியாபாரத்தில் அதிக ஊக்கம் நம்மவர்களுக்கு உண்டாகும் என்று நினைக்கப்படுகிறது.

**Match Splints.**

**தீக்குச்சிகள்.**—வடக்கே ஷோலாப்பூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஒரு தீக்குச்சி சாலையில் 'சுரியா' என்னும் ஒருவகைப் புல்லை தீக்குச்சிக்கு உபயோகப் படுத்துகிறார்கள்.

**A Sugar Factory in Tiruvidamarudur.**

**திருவிடைமருதூர் சர்க்கரை தொழிற்சாலை.**—கும்பகோணத்திற்கு அடுத்த திருவிடைமருதூரில் ஒரு சர்க்கரைத்தொழிற்சாலை ஏற்பட்டிருக்கிறது. 20-ஆயிரம் ரூபாய் முதலாகச் சேர்ப்பதாகவும், இதனால் உள்ளூரிலும் வெளியூரிலும் வெல்லம் வாங்கி சர்க்கரை செய்து விற்பனை செய்வதென்றும் முடிவாகி கம்பெனி சட்டப்படி ரிஜிஸ்தராகி யிருக்கிறதாம்.

**Sugar Manufacture in Mysore.**

**மைசூரில் சர்க்கரை செய்தல்.**—நம்முடைய நாட்டில் சாதாரணமாய் கருப்பஞ்சாற்றிலிருந்து வெல்லத்தையும், வெல்லத்திலிருந்து சர்க்கரையையும் எடுக்கிறார்கள். மைசூர் கவரன்மெண்டார் ஹெப்பாலில் ஸ்தாபித்திருக்கும் கவரன்மெண்ட் பரீக்ஷை பண்ணையில் ஜூன் மாதம் 3-ந்தேதி முதல் கருப்பஞ்சாற்றிலிருந்தே சர்க்கரை யெடுக்கும் முறையைச் செய்து காட்டி வருவதாகத் தெரியவருகிறது.

**Waste Tins.**

**தள்ளுபடி செய்யப்பட்ட தகரங்கள்.**--பழைய தகரப்பெட்டிகள், டப்பிகள் இவைகளை எல்லாம் நாம் எறிந்துவிடுகிறோம். இப்படி தகரங்களைத் தள்ளுபடி செய்யாமல் எல்லாவற்றையும் சேர்த்து அவைகளிலிருந்து ஐரோப்பாவிலும் அமெரிக்கா ஐக்கியநாடுகளிலும் புதுத்தகரம் எடுக்கிறார்கள். இந்த மாதிரியாக சுமார் ஏழேகால் லக்ஷம் பாரம் கழிபட்ட தகரங்களிலிருந்து பதினையாயிரம் பாரம் புதுத்தகரம் எடுக்கிறார்களாம்.

# ECONOMICS.

## பொருளாதாரம்.

Un-Employment

**வேலை இல்லாமை.**—அநேகர் தங்களுக்கு ஒரு வேலையுங்கிடைக்க வில்லை யென்று கஷ்டப்படுகிருர்கள். காரணம் அவர்களுக்கு ஒரு தொழிலும் சரியாய் வராமைதான். பள்ளிக் கூடத்தில் படிக்கும் பிள்ளைகளில் அநேகர் சிறுபிராயத்திலேயே பள்ளிக் கூடத்தைவிட்டு பிழைக்கவழி தெரியாமல் கணக்கு வழக்கு தெரிந்து உலகப்பழக்கம் முற்று முன்னமே போய்விடுகிருர்கள். ஆதலால் பிற்காலத்தில் ஒன்றுந் தெரியாமல் திகைக்கிருர்கள். எல்லாச்சிறு பிள்ளைகளுக்கும் முதன் முதல் படிக்குங் காலந் தொடங்கி ஏதாவது ஒரு தொழிலில் புத்தி செல்லும்படி போதித்து கற்பித்து வந்தால், அந்த வழக்கம் முற்றி அதில் தேர்ச்சியடைந்து சௌக்கியப்படுவார்கள்.

Nymphæa Lotus.

**அல்லி.**—இதை சென்னை ராஜதானியில் அநேகம் இடங்களில் காணலாம். கிருஷ்ணா ஜில்லாவிலுள்ள கொலேர் ஏரியில் இது அபரிமிதமா யிருக்கிறது. இதன் புஷ்பம் சில சிவப்பாயும், சில ரோஜாவர்ணமாயும், சில வெண்மையாயும் இருக்கும். கொலேர் ஏரியிலிருக்கிற புஷ்பங்கள் வெள்ளையாக இருக்கும். இதன் பழம் உருண்டையாகவும் கொஞ்சம் சிவந்ததாகவு மிருக்கும். அதைப் பறித்து மூன்று நாள் சாணியில் புதைத்து வைத்து பிறகு பழங்களைகுத்தி விதைகளை எடுக்கிருர்கள். அப்படி எடுத்தால் விதைகள் ராகியைப் போலிருக்கும். மாசடைந்த வெள்ளை நிறமாயுமிருக்கும். இந்தவிதைகளை அரிசியைப்போல சமைத்துச் சாப்பிடுகிருர்கள். மாவாகத் திரித்து பலகாரங்களும் செய்கிருர்கள். ஆனல் இவைகள் மிக ருசியாக இருந்தாலும், அரிசி, சோளம் இவைகளைப் போல புஷ்டியானதல்ல. இது பஞ்சகாலத்தில் விசேஷமாய் உபயோகப்படும். இதன் விதை பாரம் ஒன்றுக்கு 40 ரூ. வீதம் சில சமயங்களில் விற்கப்பட்டிருக்கிறது. அல்லி விதையால் செய்யப்பட்ட பலகாரங்கள் வியாதிக்காரர்களுக்கு மிகவும் நல்லது. கிழங்கை கறியாக வேக வைத்துத் தின்னலாம். ஜப்பானியர்கள் இந்தக் கிழங்கை சாப்பிடுவதாக சொல்லப்படுகிறது. கொலேர் ஏரிக்குச் சமீபமாயுள்ள சில ஏழை ஜனங்கள் இந்தக் கிழங்கை சாப்பிடுகிருர்கள். இது சாப்பிடக் கூடிய பதார்த்தம் என்று மற்ற இடங்களிலுள்ளவர்களுக்கு தெரியும் என்று தோன்றவில்லை.

Letting Houses.

**வீடுகளை குடிக்கூலிக்கு விடுதல்.**—ஜன நெருக்கமுள்ள சில பட்டணங்களில் சில வீட்டுக்காரர்கள் வீட்டில் குடியிருக்க இடம் இருக்கிறது என்று நோட்டீஸ் போட்டு, இடம் கேட்க வந்தால் கேட்பவர்களை நீங்கள் எத்தனை பேர் என்று விசாரிக்கிருர்கள். இப்படி விசாரித்து வீடு வாடகைக்கு கேட்கிறவர்கள் ஸம்ஸாரிகளாய் இருந்தால் வீடு கொடுக்கிறதில்லை என்று பதில் சொல்லிவிடுகிருர்கள். இது நம்முடைய தேசத்தில் மட்டும் அல்ல. ஸம்ஸாரிகளுக்கு வீடு கொடுக்கிறதில்லை என்பது பிரான்ஸ் தேசத்தில் அதிகமாகப்போய் விகாரமாகக்கூட. ஆகிவிட்டது. ஆகையால் குழந்தைகள் உள்ள குடித்தனக்காரர்களுக்கு வீடு கொடுக்கப்படமாட்டாது என்று சொல்வதாவது, அல்லது அப்படிப்பட்டவர்களை வீட்டைக் காலி செய்துவிடவேணும் என்று சொல்வதாவது தண்டிக்கத்தகுந்த குற்ற மாகும் என்று ஒரு சட்டம் ஏற்படுத்த மசோதா தயாராகியிருக்கிறதாம்.

The Bulletin of Co-operation.

**கூட்டுறவைப்பற்றிய பத்திரிகை.**—இப்பொழுது நம்முடைய ராஜதானியில் 150 ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கு மேல் இருக்கின்றன. கூட்டுறவு விஷயமாய் ஒரு சங்கம் செய்யும் விஷயங்கள் மற்றொரு சங்கத்துக்குத் தெரிவதற்கு ஹேது வில்லை. உதாரணமாக மதுரை ஜில்லாவில் ஒட்டக்கடையிலுள்ள ஐக்கிய நாணய சங்கத்தார் தங்களுடைய மெம்பர்கள் எல்லாருக்கும் வேண்டிய எருவை மொத்தமாக தணிந்த விலைக்கு வாங்கிப்பங்கிட்டுக் கொள்ளுகிருர்கள். இந்த சமாசாரம் மற்ற சங்கத்தார்களுக்கும் தெரிந்தால் அவர்களும் அப்படியே செய்யமாட்டார்களா? இப்படிப்பட்ட விஷயங்களெல்லாம் எல்லா சங்கங்களுக்கும் தெரியும்படிக்கு மூன்று மாசத்துக்கு ஒரு தடவை கூட்டுறவைப்பற்றி கவர்ன்மெண்டார் ஒரு பத்திரிகையைப் பிரசுரிக்கப் போகிருர்கள். இந்தப்பத்திரிகை இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு இந்த மூன்று பாஷைகளிலும் பிரசுரமாகும். அதற்கு வருஷசந்தா தபால் கூலி உள்பட ஒன்றரை ரூபாய். ஐக்கிய நாணய சங்கங்களெல்லாம் பத்திரிகை வேண்டுமானல் சந்தா செலுத்தித்தான் பெற்றுக்கொள்ள வேணும்.



162070

# THE TEXTILE INDUSTRY.

## நெசவுத் தொழில்.

English Cotton Goods.

**சீமைத்துணிகள்.**—வங்காளத்தில் மார்வாடிகள் விசேஷமாய் சீமையிலிருந்து துணிகளும் கம்பளிகளும் வரவழைக்கிருர்கள். இவர்களெல்லாரும் சேர்ந்து ஒருவர்த்தக சங்கம் ஏற்படுத்தியிருக்கிருர்கள். இது வரையில் சீமைத்துணி வரவழைப்பதற்காக செய்யும் ஒப்பந்தங்களில் சரக்குகள் கெடுப்படி வராவிட்டால் அதைப்பற்றி ஒப்பந்தத்தில் யாதொரு நிபந்தனையும் இல்லாமலிருந்தது. போனவருஷம் வரையிலிருந்த ஒப்பந்த ஷரத்துகளை மாற்றி, கெடுத்தவறி அனுப்பப்படும் சரக்குகளுக்கு, கால தாமதம் ஆகிற அளவுப்படிக்கு விலையில் தள்ளிக் கொடுக்க வேண்டு மென்பதாக ஒரு ஷரத்து போட்டுத்தான் ஒப்பந்தம் செய்வோமென்றும், அந்த ஷரத்தை ஒப்புக்கொள்ளா விட்டால் சரக்குகள் வாங்க ஒப்பந்தமே செய்யமாட்டோ மென்றும் மேற்சொல்லிய மார்வாடி வர்த்தக சங்கத்தார் சொல்லிவிட்டார்கள். ஆகையால் இந்தஷரத்தை ஒப்புக்கொண்டே சீமைத்துணி வியாபாரிகளின் பிரதிநிதிகள் ஒப்பந்தங்கள் செய்து வருகிருர்களாம். துணிகள்கெடுத்தவறி ஒருமாதத்திற்கு மேற்படாமல் வந்து விட்டால் ஒப்பந்த விலையில் 100-க்கு 1½ வீதம் தள்ளிக்கொடுக்கப்படும். கெடுத்தவறிஒருமாதத்திற்கு மேற்பட்டு இரண்டு மாதத்திற்கு மேற்படாமலிருந்தால் 100-க்கு 2½ வீதம் தள்ளிக்கொடுக்கப்படும். கெடுத்தவறி இரண்டு மாதத்திற்கு மேற்பட்டு 3 மாதத்திற்கு மேற்படாமலிருந்தால் 100-க்கு 3½ வீதம் தள்ளிக் கொடுக்கப்படும். கெடுத்தவறி மூன்றுமாதம் ஆய்விட்டால் 100-க்கு 7½ வீதம் தள்ளிக் கொடுக்கப்படும். புயலடித்து, நெருப்புப்பட்டு, யந்திரங்கள் ஒடிந்துபோய், ரெயில் உடைந்து, இன்னும் இது போன்ற மனிதனல் நீக்கமுடியாத காரணங்களால், சரக்கு அனுப்ப தவக்கப்பட்டு ஒருமாதத்திற்குள் சரக்கு வந்து விடும் பக்ஷத்தில் விலையில் யாதொரு தள்ளுபடியன்னியில் வாங்குகிறவன் சரக்கைப்பெற்றுக் கொள்ளவேண்டியது. ஒருமாதத்திற்குமேல் தவக்கப்படும் பட்சத்தில், வாங்குகிறவன் இஷ்டம் இருந்தால் சரக்கைப் பெற்றுக் கொள்ளலாம், இல்லாவிட்டால் ஒப்பந்தத்தை ரத்துசெய்து கொள்ளலாம். சரக்குகள் அனுப்ப தவக்கப்பட்டால் விற்பவன், வாங்குகிறவனுக்கு நோட்டீஸ் கொடுக்கவேணும். இந்த நோட்டீஸ் கிடைத்த இரண்டு நாளுக்குள் வாங்குகிறவன் மேலே சொல்லிய பிரகாரம் விலையில் தள்ளிக் கொண்டு சரக்கை எடுத்துக்கொள்கிறேன், இல்லை யென்று பதில் சொல்லிவிட வேண்டும். அப்படிக்குச் சொல்லாவிட்டால் ஒப்பந்தம் ரத்தாய் விட்டதாக எண்ணப்படும், ஒப்பந்தத்துக்காக, விற்பவன் வாங்குகிறவனுக்கு யாதொரு நஷ்டமும் கட்டிக் கொடுக்க வேண்டுவதில்லை.

A Cotton Exhibition.

**ஒரு பருத்திக் கண்காட்சி.**—1912 ஹூத்தில் இங்கிலாந்தில் லண்டன் நகரத்தில் சகல தேசத்தார்களும் கூடி பருத்தி, இன்னும் நார்ப்பொருள்கள் எல்லாவற்றையும் சேர்த்து ஒரு பெரிய கண்காக்ஷி வைக்கப்போகிருர்களாம். இந்தக்கண்காக்ஷியில் பருத்திக்கொட்டை முதல் பருத்தியால் செய்யப்படும் ஒவ்வொருபொருள்களும் வைக்கப்படும். தவிர, பருத்தியை பொறுக்குதல், கடைந்து கொட்டையெடுத்தல், பேல் கட்டுகளாக கட்டுதல், துணிமுதலியவைகள் செய்தல், இன்னும் இவை போன்ற பருத்தியைப்பற்றிய வேலைகளெல்லாம் நிதர்சனமாக செய்து காண்பிக்கப்படும். தவிர, இந்தக்காட்சி நடக்கும் சமயத்தில் பருத்தியைப்பற்றி சம்பந்தப்பட்டவர்களெல்லாரும் கூடி சகல விஷயங்களையும் கலந்து யோசித்து பேசுவார்களாம்.

Instructor in Textile Industry.

**நெசவு தொழில் போதகர்.**—பம்பாய் ராஜதானியில் பஞ்சு ஆலைகள் வெகு ஜாஸ்தி. ஆகையால் நெசவுதொழில் விஷயமாய் வேண்டியவைகளை கற்றுக் கொடுக்க ஒரு நிபுணரை நியமிக்கும்படி இந்தியா காரியதரிசி பம்பாய் கவர்ன்மெண்டாருக்கு உத்தரவு கொடுத்திருக்கிருர். இந்த நிபுணருக்கு மாஸம் ஒன்றுக்கு 1250 ரூபாய் சம்பளம். இவர் சீமையிலிருந்து வருவார்.

Cambolia Cotton.

**கம்போஜாப் பருத்தி.**—கம்போஜாப்பருத்தியென்பது கிழக்கே கம்போடியா தேசத்தில் பயிராவது. நம்முடைய தேசத்து பருத்தியைவிட அது உயர்ந்த பருத்தியாம். இந்தியாவில் சுலபமாய் பயிராகக் கூடியதாம். வேண்டிய விவரங்களை முனகாலா ஜமீன்தாரியில் சூபரிண்டெண்டாயிருக்கும் மிஸ்டர் பி. வெங்கய்யா என்பவருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

## THE GROCERY TRADE.
## பலசரக்கு வியாபாரம்.

---

**To test Coffee.**

**காபியை பரிசோதிக்க.**—நம்முடைய தேசத்தில் காபி சாப்பிடுகிறவர்கள் எல்லாம் காபிக்கொட்டையையே வாங்கி வீட்டில் வறுத்துப் பொடி பண்ணிக் கொள்ளுகிறார்கள். இந்த வேலை செய்ய முடியாத சில வீடுகளில் வறுத்துப் பொடிசெய்து தகர டப்பிகளில் விற்கப்படும் பொடிகளை வாங்கி உபயோகித்து விடுகிறார்கள். இப்படிக்கு விற்கப்படும் டப்பி காபிப்பொடிகளில் அஸல் காபிப் பொடியை அடைக்காமல் அதோடு வேறுவஸ்துக்களைக்கலந்து மோசம் செய்ய இடமுண்டு. இப்படிக்கு சேர்க்கப்படும் பொருள்களில் 'சிக்கரி' என்பது ஒன்று. இது கலந்திருக்கிறது என்று சந்தேகம் தோன்றினால் பின்னால் சொல்லுகிறபடி செய்து சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளலாம். ஒரு டம்ளரில் கொஞ்சம் பச்சைஜலம் எடுத்து அதில் சந்தேகமுள்ள காபிப்பொடியில் கொஞ்சம் எடுத்துத் தூவவேணும். தூவினதும் பொடிமுழுவதும் மேலேயே மிதந்தால் அசல் காபிப்பொடி என்றே தீர்மானித்துக் கொள்ளலாம். இப்படிக்கு இல்லாமல் பொடி டம்ளர் அடியில் போய்ப்படிந்து விட்டால் சிக்கரிப்பொடி கலப்பு என்று ஊகிக்க வேண்டும். தவிர, சிக்கரிப்பொடி கலந்திருந்தால் பொடிகீழே படியும் பொழுது ஜலத்தில் ஒருவர்ணம் ஏற்படும். காபியில் தைலம் இருப்பதால் ஜலத்தின் மேலேயே மிதக்கும். சிக்கரியில் தைலம் இல்லை. ஆகையால் கீழேபோய்ப் படிந்துவிடும்.

**Sugar.**

**சர்க்கரை.**—தற்காலத்தில் ஜாவா தீவிலிருந்து இந்தியா, ஜப்பான் முதலிய தேசங்களுக்கு ஏராளமாக சர்க்கரை அனுப்பப்படுகிறது. ஜப்பானைச் சேர்ந்த பார்மோஸா என்னும் தீவில் சர்க்கரை ஆலைகள் ஏற்பட்டு ஜாவா சர்க்கரை ஜப்பானில் வர வொட்டாது செய்யும் என்று சொல்லப்படுகிறது. இப்படிக்கு நேர்ந்தால் ஜாவாசர்க்கரை இந்தியாவுக்கு இன்னும் ஜாஸ்தியாகவரும்.

**To Preserve Sugar.**

**சர்க்கரை கெடாமலிருக்கும் வகை.**—இருப்பில் வைத்திருக்கும் சர்க்கரை அநேக இடங்களில் கெட்டுப்போகிறது. அதில் நுட்பமான பூச்சிகள் ஜனிப்பதனால் பெரும்பாலும் இப்படியாகிறது. ஆனாலும் பூச்சிகள் இல்லாமலே சிலவேளை சர்க்கரையின் குணம் மாறிப்போகிறது.

பூச்சி ஜனித்து அதனால் சர்க்கரை கெடுவதற்கு ஈரம் இருக்கவேண்டும். சர்க்கரையில் நூற்றுக்கு ஒரு பங்குக்கு அதிகமாய் ஈரமில்லையென்பது நிச்சயமானால் பூச்சியினால் வரும் கெடுதி மிகவும் குறைவு.

அமெரிக்காக் கண்டத்திற்கு மேற்புறத்தில் உள்ள ஹவை என்னும் தீவிலிருந்து வரும் சர்க்கரையில் நான்கு வேறு வேறு விதமான பூச்சிகள் இருக்கின்றன கெட்டுப்போகிற சர்க்கரையில் மேற் சொல்லிய நான்குவகைப் பூச்சிகளில் ஒருவகைப் பூச்சி பெரும்பாலும் இருக்க கண்டிருக்கிறார்கள்.

பலவகைச் சர்க்கரைகள் இருக்கின்றன. ஈரத்தை உட்கொள்ளும் சக்தி அவை ஒவ்வொன்றிலும் வித்தியாஸப்படும். சர்க்கரை கெடாமலிருப்பது ஈரத்தை இழுக்கும் சக்தி அதற்கு எவ்வளவு குறைந்து இருக்கிறதோ அதைப் பொறுத்தது. சர்க்கரையில் 'க்ளோரைட்' என்னும் உப்பு எவ்வளவு இருக்கிறதோ அதற்குத் தகுந்தபடி அந்த சர்க்கரை ஈரத்தை இழுத்துக்கொள்ளும் என்பதற்குச் சில அத்தாக்ஷிகள் இருக்கின்றன.

சர்க்கரையின் குணம் குறைந்து அது கெட்டுப்போகிற கிடங்குகளில் அந்தச்சர்க்கரை வைத்திருக்கும் பாத்திரங்களின் உட்புறத்தில் காகிதத்தை ஒட்டி அதன் மேல் சர்க்கரையைக் கொட்டிவைத்தால் சீதோஷ்ண ஸ்திதியின் வித்தியாஸங்களினால் சர்க்கரை கெடாதிருக்கும் என்று ஒரு பத்திரிகையில் எழுதியிருக்கிறது. இதன் விஷயத்தில் அனுபோகமுள்ளவர்கள், அது சரி, அல்லது, சரியில்லை என்று தெரிவிப்பார்களேயானால் எல்லாருக்கும் நன்மையுண்டு.

---



## REVENUE NOTES.
## ரெவெனியூக் குறிப்புகள்.

---

**Rounding pies into Anna.**

**பைசாக்களை அணாமட்டம் செய்தல்.**—கிராமக் கணக்குகளில் பைசாவை அணாமட்டம் பண்ணும் விஷயத்தைக்குறித்து, அடியில் கண்ட வினாக்கள் ஏற்பட்டன :—

(1) தண்ணீர் தீர்வை விஷயமாய் ஒவ்வொரு பட்டாதாரால் செலுத்தவேண்டிய மொத்தத் தொகை மட்டம் செய்யப்படவேண்டியதா, அல்லது, தீர்வை ஜாஸ்தி, பசலி ஜாஸ்தி, மிஸ்லேனியஸ் தண்ணீர்த் தீர்வை இனங்கள் தனித்தனியாய் மட்டம் செய்யப்படவேண்டியதா?

(2) ஸர்க்கார் நிலங்களை அனுபவித்ததற்காக ஏற்படுத்தப்பட்ட சகஜ தீர்வையையும், மடங்கு அபராதத்தையும் தனித்தனியாய் மட்டம் செய்யவேண்டியதா அல்லது மொத்தத்தொகையை மட்டம் செய்யவேண்டியதா?

(3) தண்ணீர் தீர்வை விஷயத்தைப்போலவே, ஒவ்வொரு பட்டாதாராலேயும், கொடுபடவேண்டிய மரவரியையும், ஜோடியையும், ரூபாய், அணா மட்டங்களாக செய்யலாமா?

2. <u>தண்ணீர் தீர்வை</u>.—அடியில் கண்ட பாபத்துகளில் ஒவ்வொன்றிற்கும், ஒவ்வொரு ஜலாதாரத்திற்கும் ஒவ்வொரு பட்டாதாரால் கொடுபடவேண்டிய தொகைக்கு, புது மானியூலில் உள்ள 6-ந. ஏ. கணக்கில், ரூபாய் அணாவாக தனித்தனி மொத்த தொகைகள் காட்டப்படவேண்டியதாயிருக்கிறது.

(ஏ) புஞ்சை நிலங்களுக்கு ஏற்பட்ட தீர்வை.

(பி) நஞ்சை நிலங்களுக்கு ஏற்பட்ட தீர்வை.

(சி) புகலினும் நிலங்களுக்கு ஏற்பட்ட தண்ணீர் தீர்வை.

(டி) புறம்போக்கு, தரிசு நிலங்களுக்கு ஏற்பட்ட தண்ணீர் தீர்வை.

சகஜத் தீர்வையும், மடங்கு அபராதமும் தனித்தனியாய் தாகல் செய்யப்படவேண்டியது. ஆகையினால் இந்த பாபத்துகள் ஒவ்வொன்றிற்கும் அணா மட்டம் தனித்தனியாய்செய்யப்படவேண்டியது. 1909-ஸ்ரீ பிப்பிரவரிமீ 22-ம் தேதியுள்ள போர்டாரவர்களுடைய ரெவினியூ செட்டில்மெண்டு 62-ம் ந. ப்ரொசீடிங்சில், 6-ம் ந. கணக்கில் உள்ள எல்லாபாபத்துகளும் 6-ம் ந. ஏ கணக்கில் தாகல் செய்யப்படவேண்டுமென்றும், பிந்திய கணக்கில் ஒவ்வொரு பட்டாதாருக்கும் அணாமட்டம் செய்யப்படவேண்டியதென்றும் உத்தரவாயிருக்கிறது. இதை செய்யவேண்டிய நிமித்தியமாயும், தனிக்கை செய்யவேண்டிய விஷயத்தில் சுலபமாயிருக்கும் பொருட்டும், 6-ம் ந. ஏ கணக்கில் ஒவ்வொரு இனத்திற்கும், பைசாவையும் காட்டக்கூடியதாக உள்ள ஒரு கலத்தை ஏற்படுத்திக்கொள்ளவும்; பிறகு, தொகைகளை காட்டவேண்டியது. தனிவரியில் மொத்தங்கள் ரூபாய் அணாவாக தாகல் செய்யப்படவேண்டியது.

3. <u>சர்க்கார் நிலங்களின் அனுபவத்திற்காக ஏற்படுத்தப்பட்ட தீர்வை</u>—லாண்டுஎன்கிரோச்மெண்டு சட்டத்தின் 3-வது பிரிவுப்பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட தரம் தீர்வை வேறு. ஷை சட்டத்தின் 5-வது பிரிவுப்படி ஏற்படுத்தப்பட்ட மடங்கு அபராதம் வேறு. இந்த இனங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூபாய் அணாவாக தனித்தனிதொகைகள் 7-ம் ந. பாரத்தில் தாகல் செய்யப்படவேண்டியதாயிருக்கிறது. ஆகையினால் அவைகளுக்கு தனித்தனியே அணா மட்டங்கள் ஏற்படுத்தப்படவேண்டியது.

4. <u>மரவரி</u>.—மரம் ஒன்றிற்கு $7\frac{1}{2}$ பைசா வரி ஏற்படுத்தப்பட்டுள்ள மரங்கள் இருக்கின்றன. தஞ்சாவூர் ஜில்லாவில், மரவரியை ரூபாய் அணாவாக மாத்திரம் மட்டப்படுத்துவது அனுஷ்டானத்திலிருந்து கொண்டிருக்கவில்லை. 12 ந. கணக்கில் மிஸ்லேனியஸ் ரெவினியூ 31-வது கலத்தின் தலைக்கட்டு ரூபாய், அணா, பைசாவை காட்டக்கூடியதாயிருப்பதால், 2 ந. சி, 7 ந. கணக்குகளில் பைசாவைக் காட்டவேண்டி ஒரு கலத்தை ஜாஸ்தியாய் சேர்த்துக்கொண்டுவரும் வழக்கமானது அனுஷ்டானத்தில் இருந்துவரவேண்டியது. ரூபாய், அணா பைசாவாக இனம் கமிஷனரால் ஏற்படுத்தப்பட்ட ஜோடி தீர்வைக்கும் அதேமாதிரியான ஏற்பாட்டை அனுஷ்டிக்கவேண்டியது.

**Village Officers.**

**கிராம உத்தியோகஸ்தர்கள்.**—கிராம உத்தியோகஸ்தர்கள் ஆப்காரி அபின்கடைகளை ஏலம் கேட்கவாவது, அல்லது, அவைகளில் ஏதாவது பாத்தியத்தை உடைத்தாயிருக்கவாவது கூடாதென்று ரெவினியூ போர்டார் 139/859 நம்பர் உள்ள 1909ஸ்ரீ ஜூன்மீ 16உ ஸர்க்கியுலர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

## LEGAL NOTES.

## சட்டக் குறிப்புகள்.

PARTNERSHIP.

**பங்காளி வியாபாரம்.**—ஒரு வியாபாரத்தை சில பங்காளிகள் சேர்ந்து செய்துவந்தார்கள். இந்த வியாபாரத்துக்கு ஒருவன் கடன் கொடுக்கவேண்டியதாயிருந்தது. வியாபாரத்திலுள்ள சில பங்காளிகள் கடன்காரனிடத்திலிருந்து கடன் ஒன்றும் வரவேண்டியதில்லை என்று சொன்னார்கள். மற்றொரு பங்காளி மேற்சொன்ன பங்காளிகளையும் கடன்காரனையும் பிரதிவாதிகளாகச் சேர்த்து கடனுக்காக பிரியாது செய்தான். பிரதிவாதி பங்காளிகளைப் பற்றிய மட்டில் இந்த வியாஜ்யம் செல்லுமா என்று விவாதம் நடந்தது. மேல்சொல்லிய கேசில் வியாஜ்யம் செல்லு மென்று சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். சாதாரணமாய் கூட்டு வியாபாரத்தில் ஏதாவது ஒரு பங்காளி வரவேண்டிய கடனைப் பெற்றுக்கொண்டு ரசீது கொடுத்தால் அந்த ரசீதை எல்லாப் பங்காளிகளும் ஒப்புக்கொள்ளவேண்டியதே. ஆனால் மோசம் செய்யவேண்டுமென்கிற எண்ணத்துடன் பங்காளிகளில் ஒருவன் கடன்காரனோடு சேர்ந்துகொண்டு கடன் செல்லாய்விட்டது அல்லது கடன் கொடுக்கவேண்டியதே இல்லை என்று சொன்னால் அது ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல.

RELIGIOUS ENDOWMENTS.

**கோவில் சொத்துக்கள்.**--கோவில் சொத்துக்களை அத்தியாவசியமாயிருந்தாலொழிய ஒரேதொகைக்கு சாஸ்வதமாய் குத்தகைக்கு விட்டுவிடக்கூடாது. அப்படிவிட்டால் செல்லாது. இப்படி குத்தகை வாங்கினவன் குத்தகை நிலத்தில் ஏதாவது கட்டிடம் கட்டி குத்தகை செல்லாததினால் நிலத்தை விட்டு நீக்கப்பட்டால் அப்போது கட்டிடத்தை இடித்து எடுத்துக்கொண்டு போகலாமேயொழிய வேறு எவ்வித நஷ்டத்துக்கும் பரிகாரம் கிடைக்காது.

ADOPTED SON.

**தத்துப்பிள்ளை.**—சில பேர்களுக்கு புருஷக் குழந்தைகளில்லாமல் பெண் குழந்தைகள் மட்டும் இருப்பதுண்டு. இப்படிப்பட்டவர்கள் சொத்துள்ளவர்களாயிருந்தால் ஸ்வீகாரம் செய்துகொண்டு ஸ்வீகாரப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் ஆஸ்தியைப் பிரித்துக்கொடுப்பதாக உத்தேசிக்கலாம். இப்படிச்செய்வதாயிருந்தால் பெண்ணுக்குள்ள சொத்தை ஸ்வீகாரம் செய்வதற்கு முன்னமேயே பிரித்துக்கொடுத்துவிடவேண்டும். ஏனென்றால், பிதுரார்ஜித சொத்தில் சொந்தப் பிள்ளையாயிருந்தால் என்னென்ன பாத்தியங்கள் உண்டோ அந்தப் பாத்தியங்களெல்லாம் ஸ்வீகாரம் செய்துகொண்டவுடனே ஸ்வீகாரப்பிள்ளைக்கு வந்து விடுகின்றன. ஆகையால் ஸ்வீகாரத்துக்குப் பிறகு பெண்ணுக்கு ஆஸ்தி கொடுப்பதாயிருந்தால் ஸ்வீகாரப்பிள்ளை சம்மதித்தாலொழிய முடியாது.

WITNESS.

**சாக்ஷி.**—சாக்ஷிகள் இருக்கவேண்டிய இடத்தில் இருக்கவேண்டியதென்று உத்தரவான பிறகு அந்த இடத்தை விட்டுக் கோர்ட்டுக்கு வந்து சாக்ஷியம் சொல்வதைக் கேட்டால் பினல் கோடு 228-வது செக்ஷன்படி குற்றம் அல்லவாம்.

BRIDE-GROOM AND BRIDE.

**மாப்பிள்ளையும் பெண்ணும்.**--விவாகமாகிறதற்கு முந்தி பிள்ளையும், பிள்ளையின் தகப்பனாரும், பெண் வீட்டாரும் ஒரு உடன்படிக்கைசெய்து கொண்டார்கள். இந்த உடன்படிக்கையில், எந்தக்காலத்திலும் சரி, எந்த சந்தர்ப்பத்திலும்சரி, பெண்ணை அவள் தாயார்வீட்டிலிருந்து மாப்பிள்ளை அழைத்துப்போகக்கூடாதென்று சொல்லப்பட்டிருந்தது. இந்த மாதிரி உடன்படிக்கை செய்துகொள்ளுவது பொது நன்மைக்கு விரோதமானபடியால் இந்த உடன்படிக்கை செலாமணியாகக் கூடியதல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. 28 கல்கத்தா 751-ம் பக்கம்.

CLEARING DEBTS.

**கடன் கட்டுதல்.**—இன்ன இடத்தில் தான் கடனைக் கட்டவேண்டுமென்று ஏற்படாத ஒவ்வொரு கேசிலும், ஆங்கிலேய சட்டத்தின் பிரகாரம் கடன் கொடுத்தவன் எந்த இடத்திலிருந்தபோதிலும் கடன்காரன் அவனைத்தேடிப்பிடித்து அந்த இடத்தில் தன் கடனைச் செலுத்தவேண்டியது. 4 பஞ்சாப் வாரரிபோர்டர், 285-ம் பக்கம்.

---



**Oakes & Co., Ltd.,**

**9, Broadway MADRAS.**

—(o)—

அடியில்கண்ட சாமான்கள் எங்களிடத்தில் அகப்படும்.

(1) விவசாயத்திற்கு வேண்டிய யந்திரங்கள்,

(2) மனிதர்களாலும், மாடுகளாலும் வேலை செய்யக்கூடிய தண்ணீர் பாய்ச்சும் பம்புகள்,

(3) நீராவியாலும் வேறு எந்த சக்தியாலும் வேலை செய்யக்கூடிய எல்லாவித தொழிலுக்கும் வேண்டிய யந்திரங்கள்,

(4) தச்சு வேலைக்கு வேண்டிய உளி, வாச்சி முதலிய சாமான்கள்,

(5) பலவித பெயிண்டுகள், எண்ணெய்கள், வார்னீஷுகள், புருஷுகள்,

(6) வியாபாரிகளுக்கு வேண்டிய நிறுக்கும் யந்திரங்கள், லைப்கள், பணம் வைக்க இரும்புப் பெட்டிகள், பூட்டுகள்,

(7) விவசாயிகளும், குடித்தனக்காரர்களும் உடைக்கவும், அரைக்கவும் வேண்டிய யந்திரங்கள்,

(8) கம்பி வேலிகள், இரும்பு மாடிப்படிகள், வீடு கட்டுவதற்கு வேண்டிய இரும்புச் சாமான்கள்,

இன்னும் எது வேணுமானாலும் எழுதியனுப்பினால் அனுப்பத் தயாராய் இருக்கிறோம். காட்டலாக் அனுப்பப்படும்.

ஓக்ஸ் அண்டு கம்பெனி,

9, பிராட்வே, சென்னப்பட்டணம்.

## EDUCATIONAL NOTES.
## வித்தியாவிஷயக் குறிப்புகள்.

INDUSTRIAL EDUCATION.

**கைத்தொழிற் கல்வி.**—இந்தியாவில் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும்பொருட்டு அவைகளின் ஸ்திதி கதிகளை நன்ருய் ஆராய்ந்து ரிப்போர்ட்டு செய்யும்படி கவர்ன்மெண்டார் நியமித்த கமிட்டியாரின் அபிப்பிராயத்தில் கைத்தொழில் விசாரணைக்காகத் தனியாய் ஒரு இலாகா ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். அங்கங்கேயுள்ள பட்டடைகளைப்போய் அப்போதைக்கப்போது பார்ப்பதற்கு இன்ஸ்பெக்டர்கள் வேண்டும். புதிய கைத்தொழில்களைப் பரீக்ஷித்துப்பார்ப்பதற்காகப் பட்டடைகள் வைத்து அவைகளை நடத்தத்தக்க தொழிலாளிகளை வேறு தேசங்களிலிருந்தாவது வரவழைத்துவைக்கவேண்டும். கைத்தொழில் கற்றுக்கொடுக்கும் உபாத்தியாயர்களைப் பழக்குவதற்கு அங்கங்கே பள்ளிக்கூடங்கள் வைக்கவேண்டும். இந்த ட்ரெயினிங் ஸ்கூல்களை, அதாவது, பழக்கும் பள்ளிக்கூடங்களை நடத்தத்தக்க வேலைக்காரர்களை பெரிய பட்டடைகளிலிருந்து எடுத்துக்கொள்ள வேண்டும். இவைகளையெல்லாம் ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஏற்படுத்தி ஒவ்வொரு தலைமை அதிகாரியை நியமிக்க வேண்டும். இவர் மேற்சொல்லியவர்களுக்கெல்லாம் எஜமானுய் இருந்து நடத்துவதல்லாமல், ப்ரைமரி அதாவது, கீழ்த்தர பாடசாலைகளுக்கும் கைத்தொழிற் பட்டடைகளுக்கும் சம்பந்தம் ஏற்படுத்துவதற்குப் பிரயத்தனப்படவேண்டும்; கைத்தொழில் பள்ளிக்கூடங்களையும் கற்றுக்குட்டிகள் பழகும் பட்டடைகளையும் இன்ஸ்பெக்டர்கள் பார்ப்பது தவிர, தாமும் அடிக்கடிபோய் பரீக்ஷிக்கவேண்டும். இவ்விதமாக ஏற்படும் மாகாணத்துத் தலைமையதிகாரிகளெல்லாருக்கும் மேலாக ஒரு பெரிய அதிகாரி இருக்கவேண்டும். இவர் இந்தியா முழுமைக்கும் கைத்தொழில் இலாகா பெரிய அதிகாரியாவர். இவ்வளவு பெரிய ஏற்பாடு செய்து, லாபம்வருமோ நஷ்டம் வருமோ என்று பாராமல, பத்து வருஷத்திற்கோ ஐந்துவருஷத்திற்கோ பரீக்ஷைசெய்தால் ஒழிய இந்தியக்கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யமுடியுமா முடியாதா என்று தெரிவது கஷ்டம் என்பது கைத்தொழிற் கமிட்டியாரின் தீர்மானமான அபிப்பிராயம்.

AGRICULTURE IN EASTERN BENGAL AND ASSAM.

**கீழ் வங்காள ஆசாம் மாகாணத்தில் விவசாயம்.**—இந்த மாகாணத்தில் விவசாய விஷயமாய் ஜனங்களுக்கு போதனைசெய்ய சர்க்கார்ப் பத்திரிகை ஒன்றும் இல்லை. ஆகையால் கவரன்மெண்டார் ப்ரைவேட், அதாவது, சர்க்காருக்கு சம்பந்தப் படாத, ஒரு பத்திராதிபருக்கு பண ஒத்தாசைசெய்து அவர் பத்திரிகை மூலமாய் வேண்டிய விஷயங்களை பிரசுரம் செய்யப் போகிருர்களாம்.

SCHOLARSHIP FOR LEARNING SOAP MAKING.

**சோப்பு செய்தலைக் கற்க சகாயச்சம்பளம்.**—சென்ற சித்திரை மாசத்துச் சஞ்சிகையில் கைத்தொழிற் குறிப்புகளின்கீழ் இந்த வருஷம் நம்முடைய தேசத்திலுள்ள எண்ணெய்களை உபயோகிக்கும் வழிகளையும், சோப்புசெய்யும் விதத்தையும் கற்றுவர வருஷம் ஒன்றுக்கு 150 பவுன் வீதம் இரண்டு வருஷங்களுக்கு ஒரு பி. எ. படித்த பிள்ளைக்கு கவரன்மெண்டார் சகாயச் சம்பளம் கொடுக்கப்போகிருர்களென்று சொன்னேம். இந்த சகாயச் சம்பளம் ஏ. கேசவமேனன் என்று சொல்லப்பட்ட ஒரு மலையாளத்து மாணுக்கனுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் சரியானபடி சீமையில் படிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் இந்தியா காரியதரிசி அவர்களால் செய்யப்படும் என்றும் தெரியவருகிறது.

## BOOKS RECEIVED.
## புஸ்தக வரவு.

**துரைத்தன விளக்கம்.**—டி. ஸ். சுப்ரமணிய அய்யர் எம். ஏ., எல்.டி., அவர்களால் எழுதப்பட்டது. விலை ரூபாய். 1-0-0.

**பூகோள சாஸ்திரம்.**—சென்னைராஜ்யம், கே. ஏ. வீரராகவா சாரியார். பி. எ. அவர்களால் எழுதப்பட்டது.

**வசீகரி என்னும் விநோதகதை.**—ஞா. ஞானப்பிரகாசம் பிள்ளை எழுதியது. விலை ரூபாய். 1-0-0.

**ஜன்ம பூமி.**—ஸ்வதேச கீதங்கள், ஸ்ரீ. சுப்பிரமணிய பாரதி பாடியது.

**திருமுருகாற்றுப்படை.**—ஆராய்ச்சி, வி. பி. வெங்கட்ராமய்யர், பி. எ. எழுதியது. விலை ரூபாய். 0-4-0

THE REVIVAL OF AGRICULTURE IN INDIA.

**இந்திய விவசாயத்தை உயிர்ப்பித்தல்.**—ஜான் கென்னி என்பவர்களால் எழுதப்பட்டது. சென்னப்பட்டணம் ஹிக்கின்பாதம் கம்பெனியில் கிடைக்கும்.

**ஸ்ரீவேங்கடாசலயாத்திரை.**—கேஸாசபல்லி செங்கய்யா, பி. ஏ. அவர்களால் எழுதப்பட்டது.

**தாவரநூல்.**—க. அரங்காசாரியரால் இயற்றப்பட்டது. சென்னப்பட்டணம் பி. ஆர். இராமய்யர் அண்டு கம்பெனியில் கிடைக்கும்.—விலை ரூ. 1-8-0.




# Paddy Cultivation.
# நெல் சாகுபடி.

நெல் இந்த தேசத்து பயிர்களுக்குள் முக்கியமானது. நெல் பயிருக்கு இந்திய வியவஸாயிகள் தொழு எரு, சாம்பல், தழை முதலியவைகளைப் போட்டு பயிரிடுகிருர்கள். ஆடுமாடுகளுக்கு புஷ்டியான ஆகாரம் கொடுத்து, அவைகளின் எருவை சரியானபடி சேகரிக்கும் பொழுதே, தொழு எருவில் நைட்ரோஜன், பாஸ்பாரிக் ஆஸிட், பொடாஷ் குறைவாய்த்தானிருக்கிறது. நைட்ரோஜனைக் காட்டிலும் பாஸ்பாரிக் ஆஸிட் பொடாஷ் ரொம்ப குறைவு. இந்தியாவிலோ ஆடு மாடுகளுக்கு நல்ல ஆகாரம் கொடுக்கிறதுமில்லை; அவைகளின் எருவை சரியானபடி சேகரிக்கிறதுமில்லை. தழையில் நைட்ரோஜனும், சாம்பலில் பொடாஷும் முக்கிய சத்துக்கள்; ஆனுலும் ரொம்ப குறைவு. இந்தநாட்டு உரங்களை வருஷாவருஷம் ஏராளமாய் போட்டு சாகுபடி செய்தபோதிலும், தழை சத்தாகிய நைட்ரோஜனும் தாள் சத்தாகிய பொடாஷும் அளவுக்கு மிஞ்சி அதிகமாயிருப்பதால் பயிர் நன்ருய் வளர்ந்து, தான்ய சத்தாகிய பாஸ்பாரிக் ஆஸிட்குறைவினுல் போதுமான அளவு தான்யம் உண்டாகாமல் போகிறது. பாஸ்பாரிக் ஆஸிட் அதிகமாயுள்ள நாட்டு உரம் ஒன்றுமில்லை. தான்யப்பயிர்களுக்கு பாஸ்பாரிக் ஆஸிட் அத்தியாவசியம். இதற்கு நிரூபணமாக, கடலூர் ஜில்லாவில் வெகுநாளாய் தொழு எரு சாம்பல் முதலிய நாட்டு உரங்கள் போட்டு பயிர் செய்த நிலங்களில் எங்கள் ஸூபர் பாஸ்பேட் மாத்திரம் ஏகருக்கு இரண்டு அந்தர் வீதம் ஏராளமான தான்யத்தை கொடுத்திருக்கிறது. ஆனுல் இவ்வாறு ஒரு சத்தை மாத்திரம் போட்டு பயிரிடுவது சாஸ்திரோக்த மல்ல. பூரா உரங்களை உபயோகிப்பதே நலம். எங்கள் கிடங்கில் நெல்லுக்கு பூரா உரங்கள் இரண்டு விதம். முதல் தரம் உரம் அதிக சத்துள்ளது. சத்தில்லாத நிலங்களுக்கு ரொம்ப சிலாக்கியம். நெடுநாளாய் நாட்டு உரம் போட்டு சாகுபடி செய்து வந்த நல்ல நிலங்களுக்கு இரண்டாம் தரம் உரம் போதுமானது. இவ்வுரங்களில் சேர்க்கிற சரக்குகள் ஒவ்வொன்றையும் எங்கள் ரஸாயநசோதனை சாலை (Chemical Laboratory)யில் பரிசோதித்து, அவைகளிலுள்ள நைட்ரோஜன், பாஸ்பாரிக் ஆஸிட், பொடாஷ் இவைகளை கணக்கிட்டு, நெற்பயிரின் விளைகாலத்திற்குள் பயிருணவாகக் கூடிய நிலைமையில் சேர்த்திருக்கிறேம். உரங்களில் சத்துக்கள் தண்ணீரில் கரைந்து பயிர்களின் நுட்பமான வேர்களால் உணவாக கிரகிக்கப்படுகிற படியால், எங்கள் உரங்களிலுள்ள சத்துக்களின் சிலபாகம் உடனே தண்ணீரில் கரைந்து உணவாகக் கூடியதாகவும் மற்ற பாகம் நாளடைவில் கரையக் கூடியதாகவும் சேர்க்கப் பட்டிருக்கின்றன. இவ்வாறு பயிருக்குத்தக்கபடி தயாரித்திருக்கிற உரங்கள் தவிர நிலத்தின் மாதிரிமண் அனுப்புகிறவர்களுக்கு, அம்மண்ணை எங்கள் ரஸாயந சோதனை சாலையில் பரிசோதித்து, நிலத்துக்குத் தக்கபடியும் உரம் தயாரித்துக் கொடுக்கிறேம். இவ்வுரங்களை உபயோகிப்பதில், மண்ணுடன் கலக்கும்படி போட்டு உழுத பின் பயிரிடுவது நலம். உரம் போட்ட நிலங்களிலிருந்து தண்ணீர் வெளியடாமலிருக்க வேண்டும். வளருகிற பயிருக்கு உரம் போடுவதில் பயிரின் விளை காலத்திற்கு மூன்றி லொன்றுக் கதிகரிக்காமலிருந்தால் நலமாயிருக்கும்.' அதாவது மூன்று மாதத்துப் பயிருக்கு ஒரு மாதத்திற்குள்ளும் ஆறு மாதத்துப் பயிருக்கு இரண்டு மாதத்திற்குள்ளும் உபயோகிப்பது நலம். களைகளும் சத்துக்களை கிரகிக்குமாகையால் உரம் போட்ட நிலங்களில் களைகளில்லாமலிருக்க வேண்டும்.

இன்னும் மற்ற சமாசாரங்களுக்கு மதராஸ் பாரிகம்பெனியாருக்கு எழுதி தெரிந்து கொள்ளலாம்.

**THE PRESIDENCY MANURE WORKS, LIMITED, RANIPET.**

**Managing Agents—PARRY & CO., MADRAS.**

ராஜதானி ரஸாயந உரக்கிடங்கு,
ராணிப்பேட்டை.

மானேஜிங் ஏஜண்டு:—
பாரி அண்டு கம்பெனி,
மதராஸ்.

## SCIENTIFIC NOTES.
## சாஸ்திரீயக் குறிப்புகள்

THE USE OF THE SPLEEN.

**மண்ணீரலின் பிரயோஜனம்.**—நமது உடம்புக்குள் மண்ணீரல் என்று சொல்லப்பட்ட ஒரு அவயவம் இருக்கிறது. வெகு நாளாய் தேக தர்ம சாஸ்திரிகளுக்கு அதன் உபயோகம் தெரிய வில்லை. அதை உடம்பிலிருந்து பிடுங்கி எடுத்துவிட்டால் ஜீவன் இறந்துபோவதில்லை. இந்த மண்ணீரலைப் பற்றி ஜர்மனி தேசத்து டாக்டர் ஒருவர் சில விஷயங்களைக் கண்டுபிடித்திருக்கிறாராம். மண்ணீரல் சாப்பாட்டில் இருக்கும் இரும்பைச் சேர்த்துவைத்து தேகத்துக்கு சௌக்கியத்தைக் கொடுக்கிறதாம். ஒரு நாய் ஸாதாரணமாய் இருக்கும்பொழுது எவ்வளவு இரும்பை மல மூத்திரங்களின் வழியாய்க் கழிக்கிறதோ அதைவிட இரண்டு பங்கு இரும்பை அதன் மண்ணீரலைப் பிடுங்கி எடுத்துவிட்டால் கழிக்கிறது. இதனால் மண்ணீரல் இரும்பைச் சேகரித்து வைக்கும் தன்மையுள்ளது என்று சொல்வது ஸரி என்று தோன்றுகிறது.

AGRICULTURAL RESEARCH IN AMERICA.

**அமெரிக்காவில் விவசாய ஆராய்ச்சி.**—விவசாய விஷயமாய் பரிசோதனைகள் செய்வதற்காக அமெரிக்காவில் உள்ள வாஷிங்டன் மாகாணத்தில் மாத்திரம் ஆயிரம் சாஸ்திரிகள் இருக்கிறார்களாம். அந்த தேசத்தில் விவசாய விசாரணைகளுக்காக ஏராளமான செலவு செய்யப்படுகிறதென்று டாக்டர் ஜே. வி. போல் என்பவர் இந்தியாவிலுள்ள அவருடைய சிநேகிதர் ஒருவருக்கு எழுதியிருக்கிறார்.

HEAD-ACHE.

**தலைவலி.**—புருவத்தை ஒருவன் கால்மணி நேரம் சுருக்கிக்கொண்டிருந்தால் தலையை வலிப்பதுபோல் காண்பிக்கும். இதனால் கண்ணில் கெடுதல்கள் ஏதாவது இருக்கும் பக்ஷத்தில் தலை வலிக்குமென்று சுலபமாய் ஊகிக்கலாம்.

GROWTH OF PLANTS BY ELECTRICITY.

**மின் சாரத்தால் பயிர் வளர்தல்.**—மின்சாரத்தால் செடிகளை வளரச்செய்யலாம் என்று சொல்வது உண்டு. ஆனால் செடியின் மேலேயே மின்சார ஓட்டத்தை விடக்கூடாது. அப்படி விட்டால் செடிகள் பட்டுப்போகும். மின்சார ஓட்டத்தை மண்ணில் கலக்கச்செய்தால் அது பூமியிலுள்ள உப்புவர்க்கமான தாதுப்பொருள்களை கரையச்செய்யும். இதனால் பயிர்கள் செழிக்கலாம், ஆனால் மின்சாரத்தை உற்பத்தி செய்யப் பிடிக்கும் செலவுக்குத் தகுந்த லாபம் இருக்குமா என்பது சந்தேகம்.

GROWTH.

**வளர்ச்சி.**—பரங்கி, பூசனி, வெள்ளரி, புடலை முதலிய காய்கறிகள் செடிகளிலிருந்து காய்த்துத் தொங்கும். இப்படித் தொங்குவதால் இந்தக்காய்களை எப்பொழுதும் செடி தூக்கிக்கொண்டிருக்க வேண்டியதாயிருக்கிறது. இதனால் செடியின் சக்தி கொஞ்சம் வீணாய்ப்போய்விடுகிறது. செடியிலிருந்து காய்களைத் தொங்கவிடாமல், ஒவ்வொரு காயையும், வீட்டில் எரும்பு வராமல் சர்க்கரை, நெய், முதலியவைகள் வைக்கும் பாத்திரங்களை வைப்பது போல், உரியாதிரி கட்டி தூக்குப்போட்டு வைத்தால் செடிக்கு பாரம் குறையும். அதனால் செடிக்கு சக்தி அதிகப்பட்டு காய்களை நன்றாய் வளரச்செய்யும்.

THE MANGO.

**மாங்காய்.**—பழம் பெரிதாயிருந்தால் கொட்டை சிறிதாயிருக்குமென்று சொல்லப்படுகிறது.

INSECTS AND DISEASES.

**பூச்சிகளும் வியாதிகளும்.**—ஆப்பிரிக்காகண்டத்தில் உள்ள பூச்சிகள் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும், பயிர்களுக்கும் என்னென்ன வியாதிகளை விளைவிக்கின்றனே என்று ஆராய்ச்சி செய்வதற்காக 21 சிற்றுயிர் லக்ஷணசாஸ்திரிகள் நியமிக்கப்பட்டு சீமையிலிருந்து அனுப்பப்பட்டிருக்கிறார்களாம்.

CHANGE OF CLIMATE.

**பருவ நிலை.**--நம்முடைய தேசத்தில் தற்காலத்தில் முன்போல் மழைபெய்கிறதில்லை யென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். இந்தப்பேச்சு ரொம்ப காலமாக இருக்கிறது. வடமேற்கு இந்தியாவிலும் இதேமாதிரியாக சொல்லப்பட; அதை மழை அளவு கணக்குகளைக் கொண்டு ஆராய்ச்சி செய்ததில், ஜனங்கள் சொல்வது சரியல்லவென்று ஏற்பட்டதாம்.

---




V. KALYANARAM IYER & Co., *Booksellers, Esplanade, MADRAS.*

நன்றாய்ப் பார்வையிட்டு நல்லகாகிதத்தில் தெளிவாய் அச்சிட்ட சிறந்த பதிப்பு.

**மூவர் தேவாரம்-பண்முறை—1044 பக்கம், ரூபாய் 3—0—0.**

இப்பதிப்பில் (1) சம்பந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவர்களின் சரித்திரக் குறிப்பும், (2) தேவார வரலாறும், (3) தேவாரப்பண் அட்டவணையும், (4) தேவாரப் பாடல்பெற்ற ஸ்தல அகராதியும், (5) தேவார ஸ்தலங்களுள்ள நாடுகளின் விபரமும், (6) அட்டவீரட்டானங்களைக்குறிப்பிக்கும் செய்யுளும், (7) தேவாரப் பொதுப்பாடல்களின் பக்க அட்டவணையும், (8) தேவார வைப்பு ஸ்தல அட்டவணையும், (9) காரைக்காலம்மையார் அருளிச் செய்த மூத்த திருப்பதிகமும் நூதனமாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன.

**நாலாயிர திவ்யப்பிரபந்தம்—640 பக்கம் ரூபாய் 3—0—0.**

இப்பதிப்பு (1) ஆழ்வார்களின் காலவைபவக் குறிப்பும், (2) ஆழ்வார்கள் அருளிச்செய்த பிரபந்தங்களின் அட்டவணையும், (3) ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திவ்விய தேசங்களின் அட்டவணையும், (4) அந்த தேசங்களின் வைபவக்குறிப்புகளும் சேர்த்து பல பிரதிகளுடன் ஒத்திட்டுப்பார்த்து, நன்றாய் அச்சிடப்பெற்றுளது.

**வேதாந்த விஷயமான புஸ்தகங்கள்.**

| | ரூ. அ. | | ரூ. அ. |
|---|---|---|---|
| வள்ளாலார் சாஸ்திரம் .. .. | 1 8 | ஜன்மாந்திரம் (அல்லது இராமதாசர் உபதேசம்) .. .. .. | 0 2 |
| வாசுதேவ் மனனம் .. .. | 1 0 | நாறு சீவவாதக்கட்டளை .. .. | 0 1 |
| வேதாந்த போதினி .. .. | 0 8 | மகாராஜா துறவு .. .. .. | 0 6 |
| சிவபோகசாரம் & சிவஞானவிளக்கம் .. | 0 2 | தாயுமானவர் பாடல் (காலிகோ பயிண்டிங்) | 0 12 |
| சுகர் கைவல்லியம் .. .. | 0 2 | பட்டணத்தார் பாடல் .. .. | 0 2 |
| வைராக்கிய சதகம் .. .. | 0 2 | | |

**புதிய நாவல்களும் நாடகங்களும்.**

| | | | |
|---|---|---|---|
| போஜ சரித்திரம் .. .. .. | 1 8 | மனோகரன் .. .. .. | 0 12 |
| சுந்தரி மனோகரன் .. .. | 0 12 | கள்வர் தலைவன் .. .. .. | 0 8 |
| காமாக்ஷி . .. .. | 0 8 | சாரங்கதரன் .. .. .. | 0 8 |
| சந்திரசேகரன் .. .. .. | 0 8 | யயாதி .. .. .. .. | 0 8 |
| ஆநந்தமடம் .. . .. | 0 8 | வசந்திகா .. .. .. | 0 8 |
| லீலாவதி சுலோசனா .. .. | 0 12 | கிரிஸில்டா, அல்லது பொருமையுள்ள மனைவி | 0 2 |
| இரண்டு நண்பர்கள் .. .. | 0 12 | காலவரிஷி .. .. .. | 0 8 |
| சத்ருஜித் .. .. .. | 0 12 | வேதாள உலகம் .. .. .. | 0 8 |

**வேறு புஸ்தகங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| ஸ்திரி புருஷ சாமுத்ரிகாலக்ஷணம் .. | 1 0 | **மனுதர்ம சாஸ்திரம்** 2647 கிரந்த சுலோகங்களும் | |
| குறள் (மூலம்) .. .. .. | 0 4 | அவைகளின் தமிழ் மொழிபெயர்ப்பும்— | |
| பஞ்சதந்திரம் .. .. .. | 0 4 | 560 பக்கம் .. .. .. | 2 4 |

**வியவசாய போதினி.**—நிலம், எரு, விதை, பயிரிடும்வகை முதலிய சகல விவசாய விஷயங்களையும் பற்றியது. மிராசுதாரர்களுக்கும் மற்றவர்களுக்கும் இன்றி யமையாதது. தஞ்சாவூர் ஜில்லா, நீடாமங்கலம் அ. சேது ராமய்யர் இயற்றியது. 400 பக்கம், 80 படங்கள். ரூ. 1 4 0

**மானிட மர்மசாஸ்திரம்.**—அல்லது "சிசு உற்பத்தி சிந்தாமணி." இது யாவரும் படித்து அறியவேண்டிய அடியிற்கண்ட அரிய பெரிய விஷயங்களடங்கியது. 500 பக்கம், 190 சித்திர படங்களடங்கியது. ரூ. 5 0 0

**அடங்கிய விஷயங்கள்.**—மானிட ஜீவியத்தில் பலபருவங்கள்—இல்லற இன்பரகசியம்—ஜனனேந்திரியங்களின் அமைப்பும் அற்புதங்களும்—மாதாவின் மாக்ஷிமை—சிசு உற்பத்தி—கர்ப்பகால சுகாதாரவிதிகள்—கர்ப்பகால நோய்களும் பரிகாரங்களும்—மருத்துவ சாஸ்திரம்—சிசுபரிபாலனம்—மலட்டிற்கு நிவாரணம்—ஆண்மையினழிவும் அதன் மீட்சியும்—சமயோசித சஞ்சீவி.

☞ ஆர்டர் அனுப்பும்போது இப்பத்திரிகையின் பெயரைக் குறிப்பிடுக.

**வி. கல்யாணராமய்யர் அண்டு கோ.,**

புக்ஸெல்லர்ஸ், எஸ்பௌநேட், மதராஸ்.

## MEDICAL NOTES.
## வைத்தியக் குறிப்புகள்.

---

PEDALIUM MUREX.

**ஆனை நெருஞ்சி.**—இதை பெருநெருஞ்சி என்றும் சொல்வதுண்டு. இது ஒரு விசேஷமான மருந்து மூலிகை. இதன் இலையையாவது, பழத்தையாவது, தண்டையாவது அல்லது செடியையாவது தண்ணீரில் போட்டு கலக்கினுல் தண்ணீர் பிசின்போல் ஆகிவிடும். இந்தத்தண்ணீர் நீரடைப்பு, மூத்திரக் கல்லடைப்பு இவைகளைப்போக்கும் தன்மையுள்ளது. தவிர, மேகவெட்டைக்கும், நீர்ச்சுருக்கு ரோகத்திற்கும் கைகண்ட ஔஷதம்.

DIET TO GAIN FLESH.

**தேகம் பெருக்க ஆகாரம்.**—ஒல்லியாயிருக்கிறவர்கள் தேகம் பெருக்க வேண்டுமென்று நெய்யையும் தயிரையும், இன்னும் காட்லிவர் ஆயில் என்று சொல்லப்பட்ட மீன் எண்ணெயையும் சாப்பிடுவது வழக்கம். இப்படிப்பட்டவர்கள் தினம் பகலில் பாலை கொஞ்சம் கொஞ்சமாக சீப்பி சாப்பிடவேண்டும். பால் சாப்பிடும் போது வேண்டுமாளுல் ஒரு பிஸ்கோத்தும் சாப்பிடலாம். அரிசி, கோதுமை, சோளம், போன்றதானியங்களையும், பாலடைக்கட்டியையும், உருளைக்கிழங்கு, பட்டாணிக்கடலை, பீன்ஸ், அவரை இவைகளைப் போன்ற காய்கறிகளையும் சாப்பிடலாம். முட்டை, மாமிசம் முதலியவைகளையும் சாப்பிடக்கூடியவர்கள் வேண்டிய அளவில் அவைகளை சாப்பிடலாம். எல்லாவிதமான பழங்களையும் தாராளமாய்த் தின்னலாம். மோர் ஒத்துக்கொள்ளுகிறவர்கள் அதைக்குடிக்கலாம். மேற்சொன்னபடி செய்து வந்தால் தேகம் பெருக்குமென்று சொல்லப்படுகிறது.

SMALL-POX.

**பெரியம்மை.**--பெரியம்மை ஒரு தொத்துவியாதியென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இதனுல் அம்மை போட்டியிருக்கும் வீட்டிற்கு அன்னியர் போகக்கூடாதென்று நாம் சொல்லிவருகிறோம். பெரியம்மை போட்டி, இறங்கினவுடன் அம்மையின் தோல் பொறுக்குகள் அங்குமிங்கும் உதிர்ந்து போகவிடுவதினுலேயே அம்மை பரவுவதற்கு ஒரு பெரிய காரணம் ஆகிறது. நம்முடைய முன்னோர்கள் இதை அறிந்தே உதிரும் பொறுக்குகளை சிதரவிடாமல் எல்லாவற்றையும் சேர்த்து நெருப்பில் போட்டு எரித்துவிட வேண்டும் என்று சொல்லியிருக்கிருர்கள்.

SMALL POX AND DIET.

**அம்மை போட்டியிருக்கும் போது பத்தியம்.**—அம்மை போட்டியிருக்கிறவர்களுக்கு ஜலமில்லாத கனபதார்த்தங்களைக் கொடுக்கக் கூடாது. பால் நிறையக் கொடுக்க வேண்டும்—கழுதைப் பால் வெகு சிலாக்கியமாம். தாகத்தை அடக்க குளிர்ந்த பானங்கள் கொடுக்கலாம். பழ வகைகளின் ரசங்களையும் கொடுக்கலாம்.

COLD-WATER COFFEE.

**குளிர்ந்த ஜலத்தால் செய்யப்படுகிறகாப்பி.**--சிலபேர்களுக்கு காப்பிசாப்பிட்டால் தூக்கம்வருவதில்லை. பசிதீபனம் சரியாக ஆகிறதில்லை. படபடப்பாயும் பேசுவார்கள். இந்த துர்க்குணங்களெல்லாம் காப்பியிலுள்ள "காபீன்" என்னும் ஒரு வஸ்துவினுலேயே இந்த காபீன் காப்பிப் பொடியை கொதிக்கும் வெந்நீரில் போட்டு எடுத்தால் ஜாஸ்தியாக இறங்கிவிடும். ஆகையால் காப்பிக்குள்ள துர்க்குணங்களை எடுப்பதற்கு காப்பிப் பொடியை பச்சை ஜலத்தில் போட்டு வடிக்கட்டிக் கொள்வது நலமென்று ஆர். அமொரி என்ற ஒருவைத்தியர் சொல்லுகிருர்.

இப்படிக்குச் செய்தால் கொதிக்கிற ஜலத்தில் எவ்வளவு 'காபீன்' இறங்குமோ அதில் ஒன்பதில் ஒரு பாகந்தான் பச்சை ஜலத்தில் இறங்குமாம். காப்பிப் பொடியை பச்சை ஜலத்தில் போட்டு கஷாயம் இறக்கி புட்டியில் கொட்டி நெட்டியடைத்து குளிர்ந்த இடத்தில் மட்டும் வைத்திருக்கும் பக்ஷத்தில் அதன் வாசனையும் நிறமும் வீரியமும் இரண்டு மூன்று வாரங்களுக்கு குறையாது. வேண்டிய போது ஜலத்தையோ பாலையோ காய்ச்சி சேர்த்துக் கொள்ளலாம். அப்படிச் செய்தால் காப்பி நன்ருயும் வாசனையாயும் இருக்குமாம்.

WART.

**பாலுண்ணி.**—ஒட்டகை மயிரால் செய்யப்பட்ட ஒரு ப்ருஷ்ஷை எடுத்து ஆமணக்கு எண்ணெயில் தோய்த்து பாலுண்ணியின்மேல் ஒவ்வொரு நாளும் அடிக்கடி வைக்கவேண்டும். இப்படிச்செய்து கொண்டே வந்தால் பாலுண்ணி விழுந்து விடுமாம். இது வெகு சுலபமானதாகையால் வேண்டியவர்கள் செய்து பார்க்கலாம்.




**P. S. Sastri** **Artist and Photographer,**

CARNATIC STUDIO, Mount Road, Madras.

SPECIALITIES. { SCHOOL GROUPS. FAMILY GROUPS. BROMIDE ENLARGEMENTS.

**பொட்டகிராப் படங்கள்.**

பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளையும் குடும்பங்களையும் பொட்டகிராப் படம் பிடிப்பதிலும் சிரியபடங்களை பெரிதாக்கிக்கொடுப்பதிலும் நிபுணர்.

பி. எஸ். சாஸ்திரி,

பொட்டகிராப் பிடிப்பவர், கர்நாடிக் ஸ்டுடியோ,

மவுண்ட் ரோட், மதராஸ்.

---

**காதர் அண்டு யூசப் பிரதர்ஸ்.**

இந்தியா, பர்மா, சிலோன், முழுமையும் பெயர்பெற்று யாவராலும் அங்கீகரிக்கப்பட்ட கம்பெனி.

கெடியார வர்த்தகர்கள், இந்திய ரெயில்வேகளுக்கும், கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கும் கெடியாரம் சப்ளை செய்கிறவர்கள்.

நெம்பர் 47, P. L. சென்னை.



நிக்கல் மேல்பார்வையில் மணிபார்க்கும்படியான இந்து தேசத்திற்கு தகுந்ததுமான பேடண்டு இந்தியா லீவர் கெடியாரம் ரூபா 10, Oxydised ரூபா 12, வெள்ளி ரூபா 15.

நிக்கல் மேல்பார்வையில் மணி பார்க்கும்படியானதும் நடு அளவுள்ளதுமான பேடண்டு Life லீவர் கெடியாரம் ரூபா 12, வெள்ளி ரூபா 18.

நிக்கல் மேல்பார்வையில் மணிபார்க்கும்படியான கடியாரம் மேல்சாவி யுள்ளது ஸ்காந்தமல்லாத (Non-magnetic) சர்தார் (Sardar) லீவர் ரூபா 12, வெள்ளி ரூபா 18 Oxydised ரூபா 14.

வெள்ளி மேல்பார்வையில் மணிபார்க்கும்படி கடியாரம் மேல்சாவி யுள்ளது. ஸ்காந்தமல்லாத (Non-magnetic) பஹதூர் (Bahadur) லீவர் ரூபா 14, வெள்ளி ரூபா 20.

நெ. 2. நிக்கல் மேல்பார்வையுள்ளதும் மேல்சாவியுள்ளதுமான ரெயில்வே ரெகுலேடர் கடியாரம். டயல்மேல் இஞ்சின் மார்க்கு நடு அளவுள்ளது ரூபா 4-8-0.

நெ. 102. ஷை மாதிரி லீவர் ராஸ்கோப் சிஸ்டம் பேடண்டு கெடியாரம் ரூபா 3-0-0.

ஒவ்வொரு கெடியாரத்துடன் நேர்த்தியான சங்கிலி, கண்ணாடி, ஸ்பிரிங், வில்வெட்டு பெட்டி அனுப்பப்படும்.

## PAGE FOR GIRLS.
## பெண்களுக்கான பக்கம்.

BREAST FEEDING.

**குழந்தைகளுக்கு முலைகொடுத்தால்.**—சில பெரிய மனுஷர்கள் வீட்டில் பிறக்கும் குழந்தைகளுக்கு தாயார் தானே பால்கொடுக்காமல் ஒரு பால் காரியை அமர்த்தி அவளைக் குழந்தைக்குப் பால் கொடுக்கும்படி செய்கிறார்கள். இபற்கையாய் தாயாருக்கு பால் இல்லாமல் போனாலாவது, அல்லது, குழந்தைக்கு போதுமான அளவு பால் இல்லாமல் குறைந்ததாகவிருந்தாலாவது, பால்காரியை வைத்துப் பால் கொடுக்கச் சொல்வது நியாயந்தான். இப்படிக்கு செய்தபோதிலும் தாயார் குழந்தைக்கு கூடிய மட்டில் முலைகொடுக்க முயல வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் மறுபடியும் பிறக்கும் குழந்தைகளுக்குப் பால் இல்லாமலே போய்விடும். ஆகையால் பால் ஊறவேண்டுமானால் குழந்தைகளுக்கு கூடிய மட்டில் முலை கொடுத்தே வரவேண்டும். இந்த விஷயத்தில் இன்னொன்றும் கவனிக்கவேண்டும். ஒரு ஸ்திரீக்குப் பிறக்கும் குழந்தை பெண்ணாக இருந்து அது தாய்ப்பாலில்லாமல் வளர்க்கப்பட்டால் அந்தப் பெண்பெரிதாகி அதற்குக் குழந்தைகள் பிறந்தால் அந்தப் பெண்ணுக்கும் பால் இல்லாமற் போவதற்கு ஹேதுவாகுமாம்.

AN EXHIBITION OF LADIES' WORK.

**பெண்கள் வேலைப் பொருட்காக்ஷி**—பம்பாய் ராஜதானியைச் சேர்ந்த ப்ரோச் என்னும் பட்டணத்தில் வருகிற ஜனவரி மாசத்தில் பெண்களால் செய்யப்படும் பலவிதப் பொருள்களைச் சேர்த்துவைத்து ஒரு கண்காக்ஷி ஏற்படப்போகிறது. இதில் சாதாரண தையல் வேலைகள், தங்கம், வெள்ளி சரிகைகளால் பூப்போடப்பட்ட வேலைகள், கம்பளி வேலைகள், துணி வேலைகள், துணி, பட்டு இவைகளை யந்திரங்களில் கொடுத்து செய்யப்பட்ட வேலைகள், முத்துக்கோர்த்த வேலைகள், இவைகளோடு ஊறுகாய்கள், சட்ணிகள், அப்பளாம் முதலானவைகள், சேவை, வடை போன்ற பலவித பலகாரங்கள் எல்லாம் சேர்க்கப்பட்டு காண்பிக்கப்படும். இந்தப்பொருட்காக்ஷிக்கு எந்த ஜாதி ஸ்திரீயாயிருந்தாலும் இஷ்டப்பட்ட சாமான்களை அனுப்பலாம். அப்படி அனுப்புவதாயிருந்தால் டிசம்பர்மீ முதல் தேதி முதல் 31-ம் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும். நல்ல சாமான்களுக்கு பதக்கங்களும் இனாங்களும் சர்டிபிகேட்டுகளும் கொடுக்கப்படுமாம்.

A SIMPLE WOMAN.

**ஒரு பரமார்த்த ஸ்திரீ.**—ஒரு ஸ்திரீ ஒரு தபால் ஆபீஸுக்குப்போய்த் தபால் அதிகாரியிடம் தன் புருஷன் விலாசத்துக்கு எதுவேனும் கடிதம் வந்திருந்தால் தரவேணுமென்று கேட்டுக் கொண்டாளாம். அந்த அதிகாரி விலாசம் என்ன என்று தெரிந்து கொண்டு தேடுவதற்காக அந்த அம்மாளை அவள் புருஷன் பெயர் என்ன என்று கேட்டாராம். அதற்கு அந்த அம்மாள் "ஸ்திரீகள் புருஷன் பேர் சொல்லக் கூடாது என்பது தெரியாதா, கடிதம் எடுத்துக் கொடுக்கச்சொன்னால் சொல்லாத வார்த்தையெல்லாம் சொல்லச் சொல்லி நிர்ப்பந்தப்படுத்துகிறது அதிகாரிகளுக்கு முறைமையோ" என்று சொல்லி கூச்சலிடத் தலைப்பட்டாள். இதன்மேல் அதிகாரி தனக்கு அந்த அம்மாள் புருஷன் பெயர் தெரியாதென்றும், தெரிந்தாலன்னியில் கடிதத்தைக் கண்டுபிடிக்க முடியாதென்றும் வெகு நேரமாய் எடுத்து சொன்னதின் பேரில் மனந்தேறி மெள்ள அவள் புருஷன் பெயரைச் சொன்னாளாம். தபால் அதிகாரி அப்பால் கடிதம் இருக்கிறதா என்று தேடிப்பார்த்தார். அந்த விலாசத்துக்கு ஒரு கடிதமும் இல்லை. இல்லையென்பதாக அம்மாளிடம் தெரிவித்தார். "இதற்காகத் தானா நீர் இத்தனை கேள்வி கேட்டது? சொல்லாததுஞ் சொல்லச்சொன்னீர், உத்தியோகஸ்தரின் அக்கிரமம் தலைகால் தெரிகிறதில்லை. காலங்கெட்டுப் போயிற்று." என்று இரைந்துவிட்டு, கண்டவர்களிடமெல்லாம் சொன்னாளாம்.

LADIES PATRIOTIC ASSOCIATION.

**சுதேசாபிமான ஸ்திரீகள் சங்கம்.**—இந்தப் பெயருள்ள ஸ்திரீகளின் சங்கம் ஜப்பான் தேசத்து முக்கியப்பட்டணமாகிய டொக்கியோவில் இருக்கிறது. சாதாரண காலத்தில் இதைச்சேர்ந்த ஸ்திரீகளெல்லாம் ஜனங்களுக்கு உபகாரமான வேலைகளைச் செய்து வருகிறார்கள். தங்கள் தேசத்துக்கும் இதர தேசங்களுக்கும் சண்டை நேர்ந்தால், தங்களுடைய தேசத்து சேனையாட்களுக்கு சட்டைகளோ, துணிகளோ, வேண்டியவைகளை இரவு, பகலென்று பார்க்காமல் வேலை செய்து, தயாரித்து அனுப்புவார்களாம். இந்தச் சங்கத்தைச் சேர்ந்த சில ஸ்திரீகள் சண்டை நடக்கும் இடத்துக்கே நேரில்போய் அங்கே அடிபட்டு விழும் ஆட்களுக்கு வேண்டிய வைத்தியத்தையும் உதவிகளையும் செய்வார்களாம்.




DAS & Co's PATENT LOCKS, SAFES, BOXES, &c.,

*are approved aud largely used by H. M's. Indian Government.*

கல்கத்தாவில் காஸ்ஸிப்பூர் ரோடில் 15 நெ. வீடு தாஸ் அண்டு கம்பெனியாரால் செய்யப்பட்ட பூட்டுகளும், இரும்பு பெட்டிகளும் கவரன்மெண்டாரால் உபயோகிக்கப்படுகின்றன.

During the Viceroyalty of,
**Lord Curzon**
Das and Co.'s Locks were supplied for Government Houses at Simla & Calcutta, and thus reported from Simla:—
"* * Were found to be excellently finished and no way inferior in quality to those of European Manufacture. They are giving every satisfaction."

Awards from the late
**Chicago Exhibition**
1893-94.
THACKER'S MEDAL
with following Certificate:—
"The Locks are cf good design and large heavy pattern having 12 Tumblers. They are made chiefly from good castings well fitted and finished by Machinery."

Please Address:—
**DAS & CO.,**
Chitpur Lock and Safe Works,
THE "ABBA" M'f'y.
*15, Cossipur Road, CALCUTTA.*
TELEGRAMS:—
"Safeguard," Calcutta.

**THE COMPLETE LETTER WRITER** 2nd Edition Revised and Enlarged.
**BY HARI CHARAN DAS.** Price Re. 1. *(Full Cloth, Gilt)*
A Universal Guide to the Art of Letter Writing for all positions of Life.
*To be had of*—M. L. DAS & CO., *122, Baitakkana Road, Calcutta.*

THE BENGAL CHEMICAL
AND PHARMACEUTICAL WORKS, LTD.,
*91, Upper Circular Road, Calcutta.*

எங்கள் பரிமளக் கூந்தல் எண்ணெயில் அநேக மலர்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. மகா சுத்தமானது. வேறுவிதமான வர்ணங்களைச் சேர்த்து பகட்டப்படாதது.

இதில் எத்தனையோ ஆயிரக்கணக்கான ரோஜா, மல்லிகை, தாமரை முதலிய புஷ்பவாஸனைகள் வீசும்.

வேண்டியவர்கள் அடியில் கண்ட ஏஜண்டுகளிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பி. ரெங்கய்ய செட்டி அண்டு ஸன்ஸ், எஸ்பிளநேட், மதராஸ்.

ஸ்வதேசி வேர் அவுஸ், தம்புசெட்டித் தெரு, மதராஸ்.

நாஷனல் டிரேடிங் கம்பெனி, எஸ்பிளநேட், மதராஸ்.

கே. வி. பிராமய்யா அண்டு ஸன்ஸ், மதராஸ் அல்லது ராஜமஹேந்திரம்.

என். ஆர். பகடி அண்டு கம்பெனி, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

**பங்காள ரஸாயன ஔஷதசாலை,**
91. அப்பர் ஸர்கிலர் ரோட்,
கல்கத்தா.

CLASSIFIED COMMERCIAL DIRECTORY.

**வியாபார பகுதி விலாசங்கள்.**

COLOUR PENCIL MANUFACTURER.
கலர் பென்சில் செய்கிறவர்கள்.
K. P. RAMASWAMY IYER,
15, Solayappa Mudali Street,
*KUMBAKONAM.*

SILK MERCHANTS.
பட்டு வியாபாரிகள்.
பட்டு பீதாம்பர கம்பெனி,
காசி (பனாரிஸ்.)

BRUSH MANUFACTURE.
புருஷ் செய்தல்.
B. V. K. CHETTY & CO.,
No. 22, Broadway, Madras.

## PAGE FOR BOYS.

## சிறுவர்களுக்கான பக்கம்.

FROGS.

**தவளைகள்.**-தண்ணீர் உள்ள இடங்களில் தவளைகள் இல்லாமல் இராது. ஐரோப்பாவில் பிரான்ஸ் தேசத்திலும், அமெரிக்காவில் ஐக்கியமாகாணங்களிலும் இவைகளை ஜனங்கள் தின்கிறார்களாம். ஆகையால் தவளைகளை இந்தியாவில் வளர்த்து மேலே சொல்லி தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்று ரஷீட் என்ற ஒருவர் சொல்லுகிறார். தவளைகளை வளர்ப்பது ரொம்ப சிரமம் அல்ல. 60 அடி நீளம் 20 அடி அகலம் ஒரு சின்னக்குட்டை வெட்டவேண்டியது. இதில் தவளைகள் குஞ்சு பொரிக்கும்படி செய்யவேண்டும். இந்தக் குஞ்சுகள் பெரிதாய்க் கொண்டிருக்கும் பொழுது மேலே சொல்லிய குட்டை போல் இன்னும் 3 குட்டைகள் வெட்டவேண்டும். தவளைகள் இரண்டு வருஷமானதும் அவைகளை வயதுப்பிரகாரம் பிரித்து தனித்தனிக் குட்டைகளில் போட்டுவிடவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் பெரிய தவளைகள் சிறு தவளைகளை விழுங்கிவிடும். பாம்புகள், நாரைகள், ஆந்தைகள் இன்னும் இவை போன்ற பக்ஷிகள் தவளைகளை விழுங்கவரும். இப்படிக்கு அவைகள் சேதம் செய்யாமலிருக்கும்படி மேலேயும் பக்கங்களிலும் தகுந்த அடைப்புப்போட்டு ஜாக்கிரதையாய்ப் பார்த்து வரவேண்டும். தவளைகள் 3 வருஷமானால் அவைகள் சாப்பிடுவதற்கு தகுந்தவைகளாய் விடுகின்றனவாம்.

DRIVING A NAIL.

**ஆணி அடித்தல்.**—மரவேலைகளில் ஆணி அடிப்பதாயிருந்தால் ஆணியை ஓங்கி அடிக்கக்கூடாது. அப்படி அடித்த ஆணி கொஞ்சம் பின் பாய்ந்து மரத்தின் உள்ளே கெட்டியாய் பிடித்துக்கொள்ளாது. ஆகையால், ஆணியை கொஞ்சமாக பல தடவைகளாய் தட்டி உள்ளே இறக்கவேண்டும். இப்படி செய்தால் ஆணி கெட்டியாய் பிடித்துக் கொள்ளும். வைரமரமாயிருந்து ஆணி உள்ளே இறங்காவிட்டால் அதின் நுனியில் கொஞ்சம் எண்ணெயையாவது கொழுப்பையாவது தடவி அடித்து இறக்கவேண்டும். இப்படிச்செய்வதால் பாதகமில்லை.

THE ELEPHANT.

**யானை.**—யானையானது மந்தமான மிருகமாகக் காணப்பட்டாலும், அதற்கு கோபத்தையாவது பயத்தையாவது கிளப்பிவிடும்போது மணியொன்றுக்கு 20 மைல் வீதம் நடக்குமென்று சொல்லப்படுகிறது. இதே மாதிரி அரைநாளைக்கு போகுமாம்.

A TRAP FOR MOSQUITOES.

**கொசுகுகளை பிடிக்க.**—சாதாரணமாய் கொசுகு பகலில் மனிதர்களை தொந்தரவு செய்கிறதில்லை. இரவில்தான் ஜனங்களைத் தூங்கவொட்டாமல், கடிக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், கொசுகுகள் சூரியன் வெளிச்சங்கண்டவுடன், வெளிச்சத்தை விட்டு ஓடி, வீட்டு அறைகளில் குளிர்ச்சியான இடத்தில் போய் மறைந்து கொள்ளும். இந்த ஸ்வபாவத்தை அறிந்து நமது இந்தியா கவரன்மென்டில் 'என்டமாலொஜிஸ்ட்', அதாவது, சிற்றுயிர் லக்ஷண சாஸ்திரியாயிருக்குப், மாக்ஸ்வெல், லீப்ராய் என்பவர் கொசுகுகளை பிடிக்க ஒரு சுலபமானவழி கண்டுபிடித்திருக்கிறார். ஒரு அடி நீளம் 9 அங்குலம் அகலமுள்ள ஒரு சிறிய பெட்டிக்கு கீல் வைத்து மேல்மூடி போடவேண்டும். இந்தப்பெட்டி மேல் மூடியில் ஒருசிறு துவாரம் செய்து அதை அஞ்சரைப்பெட்டி போல், இழுத்து மூடும்படியாய் ரொம்ப சிறிய சொருகுப்பலகை வைக்கவேண்டும். பெட்டியின் அடிப்புறத்தில் தகரம் போட்டு, பச்சைக் கம்பளி போட்டுவைக்கவேண்டும். இப்படிச் செய்த பெட்டியை, காலையில் எடுத்து, வீட்டு அறையில் குளிர்ச்சியான இடத்தில் மூடியைத்திறந்து வைத்துவிடவேண்டும். கொஞ்சநேரம் கழித்து மூடியை சாத்திவிடவேண்டும். பிறகு பென்ஸீன் என்று சொல்லப்பட்ட திராவகத்தில் கொஞ்சம் எடுத்து பெட்டி மூடியிலுள்ள சிறு துவாரத்தின் வழியாய் உள்ளே விட்டு சொருகுப்பலகையை இழுத்து மூடிவிடவேண்டும். இப்படி ஒரு மாதம் செய்ததில் 2300 கொசுகுகள் பிடிக்கப்பட்டனவாம். இப்படிச் செய்வதால் கொசுகுகள் தொந்தரவு முழுமையும் தீருமென்று தோன்றவில்லை. ஒருக்கால் கொஞ்சம் குறையலாம். மேலே சொல்லியபடி செய்வதில் காசு அதிகம் செலவாகாது. ஆகையால் அதைச் செய்து பார்க்கலாம்,



## "பிழைக்கும் வழி" பத்திரிகையைப்பற்றி சில அபிப்பிராயங்கள்.

**தேசாபிமானி.**—நம் தேசத்தவர் க்ஷேமத்தையடைவதற்கு தொழிலபிவிர்த்தி முக்கியமான விஷயமானதாலும், மனமிருந்தும் போதனைக் குறைவினால் அபிவிர்த்திக்கு ஏது குறைந்திருப்பதினாலும், அதற்குவேண்டிய போதனையைத் தரத்தக்க பத்திரிகை நமக்கு அத்தியாவசியமாக இருக்கிறது. இதுவரையில் "பிழைக்கும் வழியைப்" போல பத்திரிகை நம் ராஜதானியில் கிடையாது. சகலரும் படித்தறியுமாறு வியாசங்கள் அதிக எளியநடையில் எழுதப் பட்டிருக்கின்றன. சந்தாவிலேயும் வருஷத்துக்கு 4. ரூபாய்தான். ஆகையால் சகலரும் அதைத் தருவித்துப் படித்து அதினால் தாங்கள் பயனடைவதுடன் தேச க்ஷேமத்தையு முண்டாக்குவார்களென்று நம்புகிறோம்.

"**பிழைக்கும் வழி**" ப்பத்திரிகையைப்பற்றி தஞ்சாவூர் ஜில்லா எரவாஞ்சேரி போஸ்டைச் சேர்ந்த தேதியூர் கிராமத்திலிருந்து டி. எஸ். நீலகண்ட அய்யர் என்பவர் அடியில் கண்டவாறு எழுதியிருக்கிறார்.

" தாங்கள் அனுப்பிய மாதிரி சஞ்சிகையை முழுதும் பார்வையிட்டேன். எனக்கு ஓர் ஆனந்தத்தை விளைவித்தது. ஏனென்றால் இதுவரையில் இம்மாதிரியான ஸஞ்சிகை ஒருவரும் வெளியிட்டதில்லை. எனக்கு வியாபார, விவ்சாய, விஷயங்களில் தங்கள் ஸஞ்சிகை (பிழைக்கும் வழி) யின் மூலமாய் சந்தேகங்களைத் தெரிந்துகொள்ளலாமென்று தீர்மானித்துக் கொண்டேன். இந்தச் சஞ்சிகையைப் படிப்பதனாலேயே ஜனங்களுக்குப் பிழைப்பதற்கு ஓர் வழியுண்டாகிறது. ஜனவரி மாதத்து சஞ்சிகை முதல் எல்லா சஞ்சிகைகளும் எனக்குத் தேவையாயிருக்கிறது."

**சுதேசமித்திரன்.**—அநேக முக்கியமான விஷயங்கள் புதுமாதிரியாக நன்றா யெழுதப் பட்டிருக்கும் "பிழைக்கும் வழி" யின் இச்சஞ்சிகைபோல் மற்ற சஞ்சிகைகளும் இவ்வளவு சிறப்புடன் இனிமேலும் நடத்தப்பட்டு வருமெனக்கோருகிறோம்.

**கமலாலஸனி.**—"பிழைக்கும் வழி" இப்பெயருடன் பிரசுரமாகிற மாதாந்தப் பத்திரிகையின் ஒன்றிரண்டு இலக்கச் சஞ்சிகைகள் கிடைத்தன. இப்பெயர் கேட்டமாத்திரமே பத்திரிகையின் நோக்கத்தை நண்பர்களறியக்கூடும். பெயர் மாத்திரத்தாலன்றி விஷயத்திலும் அங்ஙனமே காணப்படுகிறது. பிழைப்பதற்கவசியமான விவசாயம், கைத்தொழில், வாணிபம் முதலிய விஷயங்களைக் குறித்து நன்றாய் எழுதப்படுகிறது. இந்தியர் ஜீவிப்பதற்கு முக்கியமாயுள்ள விஷயங்களைப் போதிக்கும்படியான ஒரு தனி தமிழ்ப் பத்திரிகையில்லாக் குறையையகற்றி நம்முன் வந்திருக்கும் இப்பத்திரிகையை தமிழ்நாட்டார் ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். திவான் பகதூர் இராஜரெத்தின முதலியாரவர்கள், ஸி.ஐ.இ., ராவ்பகதூர் யம். ரங்காசாரியாரவர்கள் முதலிய மேதாவிகள் நிரூபங்கள் எழுதிவருகிறார்கள். ஆசிரியரும் ஆங்கிலம் தமிழ் என்னும் இருபாஷா விற்பன்னராய் பி. எ. பட்டதாரியாய் விளங்குகிறார். ஆகலின் இப்பத்திரிகை நன்கு நடைபெறுமென்பதற்கு எட்டினையுமையமின்று.

**கோயமுத்தூர் கலாநிதி.** நல்ல கடிதத்தில் நல்ல பதிப்பாகப் பதிப்பித்த இவ்வளவு உபயோகமான பத்திரிகையின் வருஷ சந்தா ரூபாய் நான்காகையால், அதிக லோபத்துவ முள்ளவர்களும் வாங்கி வாசிக்கக் கூடியதாகவும், இருக்கிறது.

**லோகோபகாரி.**—"பிழைக்கும் வழி" என்பது இச்சென்னையில் ஜி. ஏ. வைத்தியராமன் கம்பெனியாரால் நடத்தப்பட்டுவரும் ஒரு மாதாந்தரப்பத்திரிகை. இப்பத்திரிகையானது தன் பெயரளவில் நில்லாது உண்மையிலேயே மனித சமூகத்தாரின் பிழைப்புக்கு ஏதுவாக விருக்கும் வியாபாரம், விவசாயம், கைத்தொழில் கல்வி, உலகவிவகாரம் முதலியவைகளை ஆரம்பித்துக்கல்வி பயின்ற சிறுவர் சிறுமிகளும் படித்தறியத்தக்க எளிய தமிழ் நடையில் விளக்கப்பட்டிருக்கின்றது. இதுவரையில் இது போன்ற பத்திரிகை வெளிவந்ததில்லை யென்றே சொல்லவேண்டும். இதற்கு வருஷசந்தா ரூபாய் நான்காக இருந்தபோதிலும், இப்பத்திரிகையில் அமைந்துள்ள விஷயங்களின் விசேஷமும் அபிவிருத்தியின் நோக்கமுமாக இதன் சொந்தக்காரர் காட்டும் அக்கரையும் பார்த்தறிபவர்களுக்கு அத்தொகை பெரிதாகமாட்டாது. இப்பத்திரிகை நம் தமிழ் நாட்டாரால் பெரும்பாலும் ஆதரித்து வரப்படும் என நம்புகிறோம்.

**ஜனானுகூலன்.**—"பிழைக்கும் வழி," பெயருக்குத் தக்கவாறு சங்கதிகளு மிருக்கின்றன. இதில் விவசாயம் வர்த்தகம், கைத்தொழில், கல்வி, சாஸ்திரம், வைத்தியம், சிறுவர்க்கான சமாசாரங்கள், இன்னும் பல தேசவர்த்தமானங்கள் அடங்கி யிருக்கின்றன. இப்படிப்பட்ட பத்திரிகையை யாவரும் வாசித்துவரில் பல நன்மைகளை அடையலாம்.

**சத்தியவேத பாதுகாவலன், யாழ்ப்பாணம்.**—"பிழைக்கும் வழி" என்பது ஒரு மாதாந்தரப் பத்திரிகை. இதன் பெயர் காட்டுகிறபடி ஜீவனோபாயத்தைச்சேர்ந்த விஷயங்களையே எடுத்துப்பேசுகின்ற ஒரு பத்திரிகை யாதலால் எல்லா வகுப்பாருக்கும் பிரயோசனமானது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இது தமிழிலே முதன் முதலாக வந்த எடுப்பு என்றெண்ணுகிறோம். இந்த நிரையிலே வேறு பத்திரிகைகள் இதுவரையிலே தோன்றியில்லை என்பதே எமது அபிப்பிராயம்.

## INDIAN NEWS.

## இந்தியநாட்டு ஸமாசாரங்கள்.

MILK IN CALCUTTA.

**கல்கத்தாவில் பால்.**—பால் சர்வ ஜாக்கிரதையாய் வைக்கப்படாமற் போனால் சீக்கிரத்தில் கெட்டுப்போய் அதைச்சாப்பிடுபவர்களுக்கு பல வியாதிகளை உண்டு பண்ணும். ஆகையால் நல்ல பால் சேகரித்துக் கொடுக்கும் பொருட்டு கல்கத்தா முனிசிபாலிடியாருக்கு ஒரு புதிய ஏற்பாடு செய்ய யோசனையிருப்பதாகத் தெரியவருகிறது. இவர்கள் 272 கறவை மாடுகள் கட்டக் கூடிய ஒரு இடம் ஏற்படுத்தப் போகிறார்கள். இதற்கு வேண்டிய நிலம் ரூ 28000 பிடிக்கும். கட்டிடங்கள் ரூ 35000 ஆகும். இந்த இடத்தில் இஷ்டமுள்ள பால்காரர்கள் தங்கள் மாட்டைக் கொண்டுபோய்க் கட்டலாம். அப்படிக் கட்டுவதற்கு பசு மாடு ஒன்றுக்கு $1\frac{1}{2}$ ரூபாயும் எருமை மாட்டுக்கு $1\frac{3}{4}$ ரூபாயும் கொடுக்க வேணும். இந்தமாடுகள் கட்டியிருக்கும் இடத்தை மேல் பார்வைபார்த்துவர ரூ. 60-ல் ஒரு சூபரிண்டெண்டும் 12, அல்லது 13 கொட்டில் கூட்டும் கூலிகளும் நியமிக்கப்படுவார்களாம். இப்படிக் கெல்லாம் செய்தால் வருஷம் ஒன்றுக்கு ரூ. 2400 செலவாகலாம். இதற்கு ரூ. 4800 வரும்படி வரலாம். ஆகவே செலவுபோக வரும்படியில் மிகுதியாகும் ரூ. 2400 போடும் முதல் பணத்தின் வட்டிக்கும் முதல் உளவு அடைவதற்கும் இருக்கும். இப்படிச் செய்வதால் மாடுகள் கட்டுவதற்கு நல்ல இடமும் இப்பொழுது அசங்கியமாய் இருக்கும் மாட்டுக் கொட்டில்களை எடுத்து விடவும் வேண்டியவர்களுக்கு நல்ல பால் அகப்படவும் பல விதமாக சௌக்கியம் ஆகும். இப்படிப்பட்ட வேலை பெரிய பட்டணங்கள் ஒவ்வொன்றிலும் பெரிய முதலாளிகள் செய்து லாபம் பெறலா மென்று தோன்றுகிறது.

TOBACCO EXPERT.

**புகையிலை நிபுணர்.**—இந்தியா தேசத்திலுள்ள புகையிலைகளையும் இன்னும் இதரதேசங்களிலுள்ள புகையிலைகளையும் பொறுக்கி எடுத்து சாகுபடி செய்து ப்யூசா விவசாய பண்ணையிலுள்ள பாடனிஸ்டு அதாவது ஸ்தாவரசாஸ்திரி அவைகளைப்பற்றி பெரிய ஆராய்ச்சி செய்துகொண்டு இருக்கிறாராம். இது விஷயமாய் சென்னை ராஜதானியில் புகையிலை எப்படி சாகுபடி செய்யப்படுகிறது, அதை எப்படி பாடம் (பதம்) செய்கிறார்கள், என்ற விஷயங்களை நேரில் அறிந்துகொள்ளுவதற்காக அந்த ஸ்தாவரசாஸ்திரி நம்முடைய ராஜதானியை சுற்றிப்பார்க்கப் போகிறாராம். ப்யூசாவில் புகையிலையைப் பாடம் செய்வதில் நிபுணரான ஒருவரை இந்த வருஷத்திற்கு மட்டும் கவரன்மெண்டார் நியமித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

THE INDIAN FACTORIES BILL.

**இந்தியா தொழில்சாலை மசோதா.**—இந்தியாவிலுள்ள 'பாக்டரிகளில்' அதாவது, தொழில்சாலைகளில் வேலை செய்யும் ஆட்களையும் பெண்பிள்ளைகளையும், சிறுவர்களையும் குறிப்பிட்டகால அளவுக்கு மேல் எஜமான்கள் வேலை வாங்காதிருப்பதற்காக இந்தியா கவரன்மெண்டில் ஒரு சட்டம் செய்யப் போகிறார்கள். இந்த சட்டம் எஜமானர்களுக்கு கொஞ்சம் பிரதிகூலமாயிருக்குமானாலும் வேலை ஆட்களின் தேகசௌக்கியத்தை உத்தேசித்து செய்யப்படுகிறது.

PONY BREEDING.

**குதிரை வளர்த்தல்.**—சில வருஷங்களாக மதராஸ் கவரன்மெண்டார் குதிரை வளப்பவர்களுக்கு பொலி குதிரைகள் கொடுத்து ஒத்தாசை செய்து வருகிறார்கள். இப்படிக்கு கோயம்புத்தூர் ஜில்லாவிலும் சேலம் ஜில்லா ஹோசூர்தாலூகாவிலும் கோதாவரி ஜில்லா ட்யூனிபிர்காவிலும் சேர்வராயமலையிலும் நீலகிரியில் உதகமண்டலத்திலும் நடந்து வந்தது. ஆனால் இப்படிச் செய்வதால் ரொம்ப பலன் உண்டானதாகத்தெரிய வில்லை. இருந்த போதிலும் இப்படிச் செய்வதானது இந்த இடங்களில் ஜட்காக் குதிரைகள் உற்பத்தியாவதற்கு ரொம்ப சாதகமாயிருந்தது. தற்காலத்தில் 12 பொலி குதிரைகள் இருக்கின்றன. அவைகளைப் பிரித்து ஆறு குதிரைகளைக் கோயம்புத்தூர் ஜில்லாவிலும் மூன்றை சேலம் ஜில்லாவிலும் பாக்கி மூன்றை மதுரை ஜில்லாவிலும் வைத்து இது விஷயத்தில் சிரத்தை எடுத்துக் கொள்ளும்படி மேலே சொல்லிய 3 ஜில்லா கலெக்டர்களிடத்திலும் கவரன்மெண்டார் பொறுப்புக் கட்டியிருக்கிறார்கள்.



## Press Opinions on Practical Life.

**THE HINDU.**—We have much pleasure in welcoming to the ranks of Indian Vernacular Periodical Literature, this new, interesting and very originally designed and excellently executed Tamil monthly, edited and published by G. A. Vaidya Raman, B.A. Mr. Vaidya Raman possesses rare qualifications for the educative work which he has undertaken to do by means of this novel magazine. The "Practical Life" is amply justified by the assortment of matters in the very opening number which is before us, and there need not be the slightest doubt, that the original aim and object in view will be lost sight of in the succeeding numbers. It is to be devoted mainly to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education. Popular interest in agricultural, industrial, commercial and economic matters is next to nothing. If it is so among the English educated classes, how much more is it among the masses? It is such an interest that the magazine apparently aims at creating and developing.

**THE INDIAN TRADE JOURNAL** published by the Government of India says.—We have received the first number of a new Tamil monthly entitled *Practical Life*, published in Madras. A good portion of it is devoted to trade, industry and agriculture and in this respect it is the only magazine of its kind in the Southern Presidency.

**THE HEADMASTER OF THE SECONDARY SCHOOL, PARAMAKUDI, WRITES.**—"It decidedly supplies the great want felt by the mass, in the most useful matters, such as Industrial, Agricultural and Commercial. It deserves the name "*Practical Life*' in every way."

**UNITED INDIA AND NATIVE STATES.**—*Practical life*, which is the name of the new Journal, edited by Mr. G. A. Vaidyaraman, is meant as a guide and help to breadwinners. Even a cursory perusal of the first number shows that the new venture is by no means a superfluous addition. There is no other periodical designed on these lines. The fare provided will satisfy any man's technical and industrial appetite.

**THE CHRISTIAN PATRIOT.**—*Practical Life*—This is another Tamil monthly magazine just started, and "devoted mainly to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education." We welcome it and wish it continued prosperity as of this kind there is no other Tamil periodical in this Presidency. If at the present moment there is an urgent need, in our part of the country for accurate knowledge on the subjects, the journal promises to furnish its readers with it.

**THE MADRAS MAIL.**—There is no other Tamil periodical in this Presidency which is designed on these lines and which makes the discussion of agricultural, industrial, commercial and economic topics its chief eeature.

**THE MADRAS STANDARD.**—This journal is the first of the Series designed on the above lines and it makes the discussion of agricultural, industrial, commercial and economic topics its chief feature.

**THE MALABAR QUARTERLY REVIEW.**—We have much pleasure in commending to the Tamil world, this new magazine "devoted mainly to agriculture trade, industry, citizenship, and popular, scientific and technical education." The printing and get up of the magazine are good. This new venture in the field of Tamil Journalism, on the whole, deserves support and encouragement.

**THE HEADMASTER, L. F. SCHOOL, YEDAPALLI, WRITES.**—"The whole scheme of the Journal, when its contents are taken into consideration, is admirable. Teachers seeking books for teaching "General Knowledge," on important subject in every elementary school will find the journal very useful. To my mind the appearance of this journal is one of the most hopeful signs of the nation's future. To-day, I am applying to the authorities for the supply of thi journal to all the Board Elementary Schools in the district."

**THE SOUTH INDIAN MAIL.**—The (Practical Life.) (பிழைக்கும் வழி) is a unique Tamil monthly which makes its design to discuss agricultural, industrial, economic and commercial topics. In welcoming our vernacular magazine, it is our pleasing duty to observe this is one of great educative value. Every article is written in simple and chaste language. To bring the benefit of the journal within the easy reach of the bulk of our countrymen, the annual subscription has been fixed at Rs. 4.

A. Anantha Narayana Aiyar, Karnam of Konur, Nangavelli P.O. Salem Dt. Writes:—"To-day a magazine of your "PRACTICAL LIFE" has been presented to me by my friend. I find it to be a valuable one. I request that you will be good enough to send by next V. P. Post all articles from January and enlist me as a subscriber of the same."

Mr. M. R. Govinda Rao Avergal, Deputy Collector, Melur, writes:—Your monthly journal "PRACTICAL LIFE" is very interesting and useful.

## FOREIGN NEWS.

## அந்நியநாட்டு ஸமாசாரங்கள்.

MILK RECORDS.

**பால் கணக்குகள்.**—இங்கிலாந்தில் ஒருவர் பல கறவை மாடுகள் வைத்திருக்கிறார். இவர் வாரத்திற்கு ஒருநாள் ஒவ்வொரு மாட்டிலிருந்து கறந்த பாலை அளந்து பதிந்துகொண்டே வந்திருக்கிறார். இதனால் அவருக்கு எந்த மாட்டிலிருந்து எவ்வளவு லாபம் கிடைத்திருக்கிறதென்று தெரிவதோடு எந்த மாட்டுக்கன்றுகளை மட்டும் அவர் வைத்துக்கொண்டு வளர்க்கவேண்டுமென்பதற்கு ஒரு பெரிய சாதகமாய் இருக்கிறது. இப்படிக்கு ஜாஸ்தி பால் கறக்கும் கன்றையே வளர்த்துக்கொண்டுவருகிறார். இப்படிக்கு பொறுக்கி எடுத்து வளர்த்துவரும் கிடாரிக் கன்றுகளுக்கு நன்றாய்க்கறக்கும் மாட்டுக்குப்பிறந்த காளைக்கன்றுகளையே தெரிந்தெடுத்து பொலிய விட்டு வந்தார். மேலே சொல்லிய பிரகாரம் பாடு பட்டதில் தற்காலத்தில் அவரிடத்தில் சில உயர்ந்த கறவை மாடுகள் இருக்கின்றன. அவைகளுக்கு வயது இரண்டரைதான் உண்டு. அவைகள் முதல் கன்று போட்டபிறகே 21 புட்டி அதாவது பட்டணம் பக்காவில் 10½ படி பால் கறக்கின்றனவாம். இப்படிப்பட்ட மாடுகள் சில வருஷங்களுக்கு முன் பதினைந்து, பதினாறு புட்டி பால்தான் கறந்தன. இதனால் மாடு வளர்த்து வியாபாரம் செய்கிறவர்கள் மேலே சொல்லிய பிரகாரம் கணக்கு வைத்திருந்தால் மாடுகளை விற்கும்போது நல்ல விலைக்கு விற்கலாமென்று எளிதில் அறிந்துகொள்ளலாம்.

THE MANGO IN AMERICA.

**அமெரிக்காவில் மாம்பழம்.**—1901-ஞு ஜூலை மாதத்தில் பெங்களூரிலிருந்து சந்தாஷா என்று சொல்லப்பட்ட ஒருவகை ஒட்டுமாஞ்செடி அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் ஒன்றாகிய ப்ளாரிடா என்னும் நாட்டில் மியாமி என்னும் ஊருக்கு அனுப்பப்பட்டது. அங்கே இந்த செடி நன்றாய்ப்பயிராகி இரண்டு வருஷங்களாக பழங்கள் தந்து வருகிறதாம். பழங்கள் ரொம்பபெரிதாயிருப்பதாகவும் கொட்டை ரொம்ப சிறிதாயிருப்பதாகவும் கதுப்பு ஜாஸ்தியாயிருப்பதாகவும் சாப்பிடுவதற்கு ரொம்ப நன்றாயிருப்பதாகவும் சொல்லப் படுகிறது. ஒவ்வொரு பழம் இரண்டு ராத்தல் கூட நிறை இருக்கிறதாம். இந்த தினுசு மரத்தை அந்த நாடுகளில் வெருசாய்ப் பயிர் செய்ய யோசித்திருக்கிறார்கள்.

AGRICULTURAL DEMONSTRATION.

**விவசாய நிரூபணை.**—அமெரிக்காவில் ஐக்கிய நாடுகளில் தென்பாகம் வடபாகத்தை விட விவசாய விஷயங்களில் கொஞ்சம் சப்பையானது. இதை சீர்திருத்துவதற்காக அந்த நாடுகளின் கவரன்மெண்டார் ஒரு புதிதான ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அக்டோபர் மாசத்தில் ஆரம்பித்து ஒவ்வொரு ஜில்லாவிலும் மீட்டிங்குகள் கூட்டி விவசாயத்தில் நவீன முறைகளைப்பற்றி பிரசங்கஞ் செய்கிறார்கள். சொல்லியபடி செய்வதாக ஒப்புக்கொள்ளும் சில விவசாயிகளை அவர்களுடைய நிலத்திலேயே குறிப்பிட்ட நவீன முறைகளின்படி சாகுபடி செய்து நிதர்சனமாக பக்கத்து ஜனங்களுக்கு அவைகளின் பயனை காண்பிக்கச் சொல்லுகிறார்கள். முக்கியமாய் பருத்தி, சோளம், புகையிலை இவைகள் மூன்றைப் பற்றியுமே தற்காலத்தில் வேலை யெல்லாம் நடந்து வருகிறது. நிரூபணப்பண்ணை வேலை செய்வதாக ஒப்புக்கொண்ட ஒவ்வொரு குடித்தனக்காரனுக்கும் பொதுவாய் எப்படி நன்றாய் சாகுபடி செய்கிறது என்பதைப்பற்றி முதலில் ஒரு சர்க்யூலர் அனுப்புகிறார்கள். தவிர மாசாமாசம் இன்ன இன்னவைகளைச் செய்யவேண்டும் என்றும் எழுதி அனுப்புகிறார்கள். எழுதியனுப்பினதில் தெரியாத விஷயங்களை நேரில் சொல்லிக்கொடுக்கும்படி மாசாமாசம் அந்தந்த ஊர்களுக்கு ஒரு ஏஜெண்டையும் அனுப்புகிறார்கள். இந்த ஏற்பாடுகளைத் தவிர நிரூபண வேலை செய்பவர்களை யெல்லாம் ஒரு பண்ணைக்கு வரச்சொல்லி அதில் பெரிய சர்க்கார் ஏஜெண்டு ஒருவர் பொதுவாய் மேற்படி பயிர்களை சாகுபடி செய்யும் விஷயத்தைப்பற்றி கலந்து பேசியும் வருகிறார்கள். ஒவ்வொரு விவசாயியும் குறிப்பிட்ட பயிர்களை நன்றாய் சாகுபடி செய்யும் வரைக்கும் இப்படிக்கே செய்கிறார்களாம்.

---



## Distinguished Contributors to "Practical Life."

## பிழைக்கும் வழிக்கு வியாஸம் எழுதும் கனவான்கள்.

(1) திவான் பகதூர் பி. ராஜரத்ன முதலியார் அவர்கள் ஸி. ஐ. இ, ரிஜிஸ்தரேஷன் இலாகா மாஜி தலைவர்.

(2) ராவ் பகதூர் எம். ரங்காச்சாரியார் அவர்கள் எம். ஏ., ப்ரொபெசர், பிரசிடென்ஸி காலேஜ்.

(3) ராவ் சாஹிப் டி. ராகவையா அவர்கள் பி.ஏ., ரெவினியூ உத்தியோகஸ்தர், மதராஸ் முனிசிபாலிடி.

(4) ராவ் பகதூர் எம். ஆதிநாராயண ஐயா அவர்கள், ரெவினியூ செட்டில்மெண்டு மாஜி டிப்டி கமிஷனர்.

(5) ராவ் பகதூர் வி. கே. ராமானுஜாசாரியார் அவர்கள் பி.ஏ., ரெவினியூ போர்டு மாஜி காரியதரிசி

(6) திவான் பகதூர் ஏ. கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள் பி.ஏ., உப்பளம் டிப்டி கமிஷனர், திருச்சிராப்பள்ளி.

(7) திவான் பகதூர் எல். ஏ. கோவிந்தராகவ ஐயர் அவர்கள் பி. ஏ., பி. எல்.

(8) கனம் வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் பி. ஏ., பி. எல்.

(9) ராவ் பகதூர் ஜி. ஸ்ரீனிவாச ராவ் அவர்கள் பி. ஏ., சேர்மன் மதுரை முனிசிபாலிடி.

(10) திவான் பகதூர் ஆர். ரகுநாதராவ் அவர்கள் ஸி. எஸ். ஐ.

(1) Diwan Bahadur P. Rajaratna Mudaliar, C.I.E., Inspector-General of Registration (Retired).

(2) Rao Bahadur M. Rangachariar, M. A., Professor, Presidency College.

(3) Rao Sahib T. Raghaviah, B.A., Revenue Officer, Madras Corporation.

(4) Rao Bahadur M. Audinarayana Aiya, Deputy Commissioner of Revenue Settlement (Retired).

(5) Rao Bahadur V. K. Ramanujachariar, B.A., Secretary to the Board of Revenue (Retired).

(6) Diwan Bahadur A. Krishnasami Aiyengar, B. A., Deputy Commissioner of Salt Revenue, Trichinopoly.

(7) Diwan Bahadur L. A. Govinda Raghava Aiyar, B. A., B. L.

(8) The Hon. Mr. V. Krishnasami Aiyar, B. A., B. L.

(9) Rao Bahadur G. Srinivasa Row, B. A., Chairman, Municipal Council, Madura.

(10) Diwan Bahadur R. Raghunatha Rao, C. S. I.


## Prof. Gajjar's Ionic Pharmacy.

## கஜ்ஜாரின் உன்னதமான மருந்துகள்.

| | | ரூ. | அ. | | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| சாதாரண ஜுரத்துக்கு மருந்து | ... | 0 | 4 | மூலத்துக்கு மருந்து | | ... | 0 | 8 |
| | | | | அரைகடிக்கு | ,, | ... | 0 | 4 |
| மலை ஜுரத்துக்கு ,, | ... | 0 | 8 | தேள்கடிக்கு | ,, | ... | 0 | 4 |
| மேக வியாதிக்கு ,, | ... | 1 | 0 | பாம்புகடிக்கு | ,, | ... | 0 | 12 |
| பிளேக்குக்கு ,, | ... | 0 | 8 | காது வலிக்கு | ,, | ... | 0 | 4 |
| வாந்திபேதிக்கு ,, | ... | 0 | 8 | கண் வலிக்கு | ,, | ... | 0 | 4 |
| கரப்பானுக்கு ,, | ... | 0 | 8 | இருமலுக்கு | ,, | ... | 0 | 4 |

ஷை மருந்துகள் தென் இந்தியாவில் எங்களிடத்தில்மட்டும் கிடைக்கும்.

எஸ். வைத்தியா அண்டு கோ,

1, கொண்டி செட்டி வீதி, மதராஸ்.

ஒரே ஏஜெண்டுகள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 17 DEC 1909 MADRAS.

# SEASON, CROPS AND PRICES.

## காலஸ்திதி, பயிர்கள், விலைவாசி.

Cotton Goods.

**துணி ஸாமான்கள்.**—இதர தேசங்களிலிருந்து சென்னப்பட்டணத்திலும், ரங்கூனிலும் இறக்குமதி விவரங்கள்.

நூலும் முறுக்கு நூலும்.

| வார முடிவு. | | சென்னப்பட்டணத்தில் |
|---|---|---|
| | | ராத்தல். |
| ஆகஸ்டு௴ 7௳ | .. | 260,515 |
| ,, 14௳ | .. | 2,760 |
| ,, 21௳ | .. | 193,145 |
| ,, 28௳ | .. | 147,085 |
| ஆகமொத்தம் | .. | 603,505 |

காரிகத் துணிகள்.

| வார முடிவு. | | சென்னப் பட்டணத்தில். | | ரங்கூனில். |
|---|---|---|---|---|
| | | கஜம். | | கஜம். |
| ஆகஸ்டு௴ 7௳ | .. | 404,858 | .. | 184,797 |
| ,, 14௳ | .. | 2,032,796 | .. | 321,145 |
| ,, 21௳ | .. | 1,835,617 | .. | 371,772 |
| ,, 28௳ | .. | 690,458 | .. | 304,074 |
| ஆகமொத்தம் | .. | 4,963,729 | | 1,181,788 |

சலவைத் துணிகள்.

| வார முடிவு. | | சென்னப் பட்டணத்தில். | | ரங்கூனில். |
|---|---|---|---|---|
| | | கஜம். | | கஜம். |
| ஆகஸ்டு௴ 7௳ | .. | 10,533 | .. | 879,767 |
| ,, 14௳ | .. | 533,821 | .. | 546,662 |
| ,, 21௳ | .. | 746,682 | .. | 539,470 |
| ,, 28௳ | .. | 152,881 | .. | 353,459 |
| ஆகமொத்தம் | .. | 1,443,917 | | 2,319,358 |

இதர துணிகள்.

| வார முடிவு | | சென்னப் பட்டணத்தில். | | ரங்கூனில். |
|---|---|---|---|---|
| ஆகஸ்டு௴ 7௳ | .. | 161,870 | .. | 1185,253 |
| ,, 14௳ | .. | 1257,600 | .. | 520,950 |
| ,, 21௳ | .. | 1088,112 | .. | 1344,455 |
| ,, 28௳ | .. | 694,557 | .. | 1205,028 |
| ஆகமொத்தம் | .. | 3,202,139 | | 4,255,686 |

ரெயிலில் அனுப்பப்பட்ட துணிகள்.

சென்னப்பட்டணத்திலிருந்து ரெயில் வழியாய் அனுப்பப்பட்ட ஸ்வதேச பிறதேச துணி ஸாமான்கள். ஒரு அந்தர் என்பது 112 ராத்தல்.

| வார முடிவு. | | அந்தர். |
|---|---|---|
| ஆகஸ்டு௴ 7௳ | .. | 4,790 |
| ,, 14௳ | .. | 8,100 |
| ,, 21௳ | .. | 6,383 |
| ,, 28௳ | .. | 4,048 |
| ஆகமொத்தம் | .. | 23,321 |

Import of Sugar.

**சர்க்கரை இறக்குமதி.**—ஆகஸ்டு௴ 1௳ முதல் 28௳ வரையில் இங்கிலாந்திலிருந்து மட்டும் 29 அந்தர் சென்னப்பட்டணத்தில் இறக்குமதியாயிற்று. அதாவது, ஆகஸ்டு மாஸத்தில் இதர தேசங்களிலிருந்து சர்க்கரையே சென்னப்பட்டணத்திற்கு வரவில்லை. இதேகாலத்தில் ரங்கூனில் இறக்குமதியான சர்க்கரை ஜாவாவிலிருந்து 55,362 அந்தர், இங்கிலாந்திலிருந்து 85 அந்தர், ஐரோப்பா அல்லாத இதரதேசங்களிலிருந்து 2,219 அந்தர்.

Gingelly Crop.

**எள்ளுப் பயிர்.**—சென்னை ராஜதானியில் சென்ற ஆகஸ்டு மாதம் வரையில் சுமார் 3,33,000 ஏகரில் எள்ளு சாகுபடியாயிருப்பதாகத் தெரியவருகிறது. இது 1908-ம் வருஷத்தை விட வெகு ஜாஸ்தி, இப்படி அதிகமாய் சாகுபடியானதற்கு காரணம் பட்டத்தில், அதாவது, தகுந்த காலத்தில் மழை பெய்ததே.

Supplement to 'Practical Life'

'பிழைக்கும் வழி' க்கு அனுபந்தம்.



DIWAN BAHADUR R. RAGOONATHA RAO, C. S. I.

திவான் பகதூர் ஆர். ரகுநாத ராவ், ஸி. எஸ். ஐ.

G. A. VaidyaRaman & Co., Publishers, 10, Esplanade, Madras.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி, 10, எஸ்பிளனேட், மதராஸ்.

OFFICE OF ... BOOKS REGISTERED 17 DEC 1909 MADRAS.

# பிழைக்கும் வழி

# PRACTICAL LIFE

ஜி. ஏ. வைத்தியராமன், பி.ஏ. பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B.A. Editor.

புஸ்தகம் I. Vol. I. } ஸௌமியஸு புரட்டாசிமீ—SEPTEMBER 1909. { ஸஞ்சிகை 9. No. 9.

## பிழைக்கும் வழி.

## PRACTICAL LIFE.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், பிரஜாலக்ஷணம், வித்தியா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

**தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.**

| | உள் நாடு. | | அந்நிய நாடு. | |
|---|---|---|---|---|
| வருஷம் 1க்கு | 4 | 0 | 6 | 0 |
| 6 மாதத்திற்கு | 2 | 0 | 3 | 0 |
| தனிப்பிரதி | 0 | 6 | 0 | 8 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. சகலபணமும் எங்களுக்கு நேரில் அனுப்பப்படவேண்டும்.

**வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியது.**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க மரியாதை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸமும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒரு பாதியைவிட்டு மறுபாதியில் மட்டில் எழுதப்பட வேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

A popular Tamil monthly magazine of general information and instruction devoted mainly to agriculture, trade, industry, citizenship, and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. | | | Foreign. | | |
|---|---|---|---|---|---|---|
| | Rs. | A. | P. | Rs. | A. | P. |
| Per annum ... | 4 | 0 | 0 | 6 | 0 | 0 |
| " half year ... | 2 | 0 | 0 | 3 | 0 | 0 |
| Single copy ... | 0 | 6 | 0 | 0 | 8 | 0 |

No Money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 10, Esplanade, Madras.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி, 10, எஸ்பிளனேட், மதராஸ்.

## AGRICULTURAL NEEDS

BY

DIWAN BAHADUR R. RAGUNATHA RAO, C.S.I.

## விவஸாயத்திற்கு வேண்டிய ஸாதனங்கள்.

சாப்பாட்டு தானியங்கள், பருத்தி, புளி, தேங்காய், பாக்கு, எலுமிச்சை, இவைகள் போன்ற ஆகாரத்திற்காக உதவுகிற பழங்களைக் கொடுக்கும் பயிர்களை உண்டு பண்ணுவதில் கவலை எவ்வளவு எடுத்துக்கொண்டாலும் போதாது, இவைகள் எவ்வளவு வேண்டுமானாலும் அவ்வளவையும் நம்முடைய தேசம் விளைவிக்கக்கூடியது. ஜலாசயங்களை உண்டுபண்ணுவதும், மரங்களை நடுவதும், ஹிந்து சாஸ்திரத்தினாலே விதிக்கப்பட்ட கடமைகள். நாம் இவைகளை மறந்துவிட்டோம். பொதுஜனங்களாவது சர்க்காராவது இப்பேர்ப்பட்ட காரியங்களுக்கு அதிக ஆதரவையும் கொடுக்கிறதில்லை.

தழை எருக்கள் நம்முடைய ஜனங்களுக்கு தெரிந்தவைகள். அநேக இடங்களிலிருந்து அவைகளை யாதொரு செலவுமில்லாமல் ஜனங்கள் அடைந்து வந்தார்கள். அவைகளெல்லாம் இப்பொழுது இல்லாமல் போய் விட்டன. ஆகையினாலே தழை எரு அபூர்வமாய் விட்டது.

விவசாயத்தை சீர்ப்படுத்துவதில் மத்திய மாகாணத்தின் கனம் பொருந்திய சீப் கமிஷனர் மிக சிரத்தை எடுத்துக்கொள்ளுகிறார். அது விஷயமாய் அனுஸரிக்கக்கூடிய அநேக ஏற்பாடுகளை செய்திருக்கிறார். அவைகளை மதராஸ் கவரன்மெண்டாரும் அனுசரிக்கலாம். அதினாலே மிகுந்த லாபம் கிடைக்கும். யோசித்திருக்கிற ஏற்பாடுகளை அங்கங்கேயுள்ள உத்தியோகஸ்தர்கள் எளிதாய் கிரகித்துக்கொள்ள அவைகளை அவர்களுடைய பாஷையிலேயே சொல்வது நலம். அவர்களுக்கு இங்கிலீஷ் பாஷைதான் நன்றாய்த் தெரியும். ஆகையினாலே மத்திய மாகாண கனம் சீப்கமிஷனர் இங்கிலீஷ் பாஷையிலுள்ள விவஸாய பத்திரிகைகளை ஆதரிக்க விரும்புகிறார். சென்னைராஜதானியில் இப்பேர்ப்பட்ட 24 பத்திரிகைகள் குறைந்த பக்ஷம் இருக்கவேண்டும். ஆனால் இப்பொழுது ஒன்றுதானிருக்கிறது. அதையும் கனம் பொருந்திய ரெவினியூபோர்டார் உபயோகமில்லையென்று நினைக்கிறார்கள்.

இதர தேசங்களில் என்னென்ன செய்திருக்கிறார்களோ அவைகளை மேல் மேல் வாசிப்பதினால் யாதொரு பிரயோஜனமுமில்லை. நம்முடைய தேசத்தின் நிலைமைக்கு எவைகள் பொருந்தினவைகளாயும் அனுகூலமானவைகளாயும் இருக்கின்றனவோ அவைகளை மட்டும் நாம் அனுசரிக்கவேண்டும். இந்த பிரபஞ்சம் முழுமைக்கும் வேண்டியதானியம் முதலான பயிர்களை நாம் உற்பத்தி செய்யலாம். ஆனால் நமக்கு மனிதர்கள், பணம், கல்விப்பயிற்சி, தொந்திரவின்மை, இவைகள் வேண்டும்.

விவஸாயத்தை சீர்ப்படுத்துவதானது நிலங்களின் பேரில் ஜாஸ்தித்தீர்வை போடுவதற்கு ஒரு உபாயம் என்று ஜனங்களின் மனதில் ஒரு பெரிய பயம் இருக்கிறது. ஆகையினாலே நிலங்களின் உற்பத்தியில் தங்களுடைய பாகம் இன்னதென்று ஏற்படுத்தி அதை தங்களுடைய முடிவான சட்டங்களினால் உறுதியாய் கவரன்மெண்டார் பிரசுரம் செய்தாலொழிய இப்பொழுது குடிகள் விவசாய விஷயத்தில் எடுத்துக்கொள்ளும் சிரத்தையைக்காட்டிலும் ஜாஸ்தியாக சிரத்தை எடுத்துக்கொள்ளமாட்டார்கள்.

கைத்தொழில்களை சீர்ப்படுத்துவதற்காக செலவழிப்பதற்கு குடிகளிடத்தில் முதலில்லை. சர்க்கார், ஜனங்களுக்கு கடன் கொடுத்து உதவி செய்ய ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள். அங்கங்கேயுள்ள உத்தியோகஸ்தர்கள்சர்க்காருடைய மிக உபயோகமான எண்ணங்களை நிறைவேற்றுவதில் அவ்வளவு கவலையுடையவர்களாகவாவது அல்லது சக்தியுடையவர்களாகவாவது காணப்படவில்லை. சர்க்காருடைய இஷ்டங்களை நிறைவேற்றுவதற்காக விசேஷமான கீழ் உத்தியோகஸ்தர்களை நியமித்ததானது அபேக்ஷித்த காரியத்தை உண்டாக்கவில்லை. சப்டிவிஷனல் ஆபிஸரைப்போல் அந்தஸ்துள்ள ஒரு பிரத்தியேக அதிகாரியை வேறே யாதொரு வேலையுமில்லாமல் இதற்காகவே நியமித்தால் மிகவும் உபயோகமாகவிருக்கும். கடன் கொடுப்பதற்காக ஏற்படுத்திய ரூல்களிலும்கூட மாறுபாடுகள் செய்யவேண்டும். சர்க்கார் உத்தியோகத்திலில்லாதவர்களை அவர்களிடமிருந்து தகுந்த ஜாமீன் வாங்கிக்கொண்டு அவர்களுக்கு கொஞ்சம் தரகு கொடுத்து இந்த வேலைசெய்ய நியமிக்கலாம்.

ஜமாபந்தியையும் அநேக சர்க்கார் டிபார்டுமெண்டு உத்தியோகஸ்தர்களால் தினந்தோறும் உண்டாகும் இதர தொந்திரவுகளையும் நிவர்த்தி செய்வது குடிகளுக்கு காரியபாகமான உதவியாகும்.

ஆர். ரகுநாதராவ்.



## THE PROPOSED NATIONAL FUND WEAVING FACTORY.

BY

N. SUBRAMANIA AIYAR, B.A.,

*Superintendent, Government Weaving Factory, Salem.*

## பொது ஜனபண்டு நெசவுசாலை.

சென்னப்பட்டணம் நாஷனல் பண்டு அண்டு இண்டஸ்ட்ரியல் அஸ்ஸோஸியேஷன் என்று சொல்லப்படும் பொது ஜனபண்டும் கைத்தொழில் சங்கத்தாரும் சென்னப்பட்டணத்தில் சில நெசவுகள் ஏற்படுத்தத் தீர்மானித்திருப்பதாய்க் கேள்வி. ஆனால், அது நெசவு சாலையா, அல்லது, நெசவுகற்றுக் கொடுக்கும் பள்ளிக்கூடமா, என்று எனக்கு விவரமாய்த் தெரியவில்லை. எப்படியாயிருந்தாலும் பூராவாக லாபநஷ்டத்தை கவனிக்காமல் செய்த ஏற்பாடல்ல என்று எண்ணி காரிய சித்திக்கு அவசியமான ஸாதனங்கள் எவைகளோ அவைகளைச்சொல்லி, அந்த ஸாதனங்கள் சென்னப்பட்டணத்தில் இருக்கின்றனவா என்று யோசிப்போம்.

காரிய சித்திக்கு முக்கியமாய் வேண்டிய விஷயங்கள் எவைகளென்றால்,

(1) நெசவுசாலை தறிகள் அடங்கிய ஊரில் ஏற்படவேண்டியது.

அந்த ஊரில் திறமான வேலையும் நயமான கூலியும் கிடைக்கக் கூடியதாயிருக்கவேணும்.

(2) நெசவுசாலை திறமையுள்ள சூபரிண்டெண்டினுடைய பார்வையில் இருக்கவேண்டியது.

(3) ஊர் தீர்மானமானதும் நெசவுசாலையை நெசவுகாரர்கள் வசிக்கும் இடத்திற்கு மத்தியிலாவது, அல்லது, அவர்கள் பக்கத்திலாவது ஸ்தாபிக்கவேண்டியது. அப்படி சாத்தியப்படாவிட்டால் நெசவுசாலை காம்பவுண்டுக்குள் தறிகாரர்கள் குடியிருக்க ஏற்பாடு செய்யவேண்டியது.

நெசவடங்கிய ஊரில் ஒரு நெசவுசாலை ஏற்பட்டதும் அந்த நெசவுசாலைக்கும், ஏற்கனவே இருக்கிற கைநாடாத்தறிக்கும் போட்டி ஏற்படுகிறது. கைநாடாவைவிட விசைநாடாவைக்கொண்டு ஜாஸ்தி துணி நெய்யலாமென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆனால், நெசவுசாலைக்கு வேண்டிய மேல்பார்வைக்கும் சிப்பந்தி வகையராவுக்கும் வேண்டிய அதிகச் செலவு மேற்சொல்லிய ஜாஸ்திவேலையால் உண்டாகும் லாபத்தை மட்டுக்கட்டிவிடுகிறது. ஆகையினாலே விசைநாடாத்தறிகளுள்ள நெசவு சாலை, லாபகரமாய் வேலைசெய்யவேணுமானால், நயமான கூலிக்காரர்கள் கிடைக்கவேணும். நயமான கூலியாட்கள் மட்டும் போதாது. கூலி யோக்கியமானவனாய் இருக்கவேண்டியது இன்னும் அவசியம். நான் சென்னப்பட்டணம் சிற்பகலாசாலையில் இருக்கும் பொழுது பலவிதமான தொழிலாளிகளுடைய நடவடிக்கை முதலியவைகளை நன்றாய் அறியும்படியாய் நேரிட்டது. என் அனுபவத்தில் எல்லாரையும் விட நெசவுகாரனைவைத்து சமாளிப்பது ரொம்பவும் சிரமம். அவன் குடிகாரன், சோம்பேறி, சொந்த லாப நஷ்டத்தை அறியாதவன், அயோக்கியனுங் கூட. அயோக்கியனென்று ஏன் சொல்லுகிறேன் என்றால் ஒரு இடத்தில் முன்பணம் வாங்குவதும், குறிப்பிட்ட நாள் வரையில் இருந்து வேலை செய்யாமல் இன்னொருவனிடத்தில் ஓடுவதும், அதே மாதிரியாய் அவனிடமிருந்து மற்றொருவனிடத்திற்கு தாவுவதும், நெசவுகாரனுடைய சர்வசாதாரணமான வழக்கம். அவன் ஐவேஜியில்லாதவனானதால் அவனுக்கு ஒரு பயமும் இல்லை. பணத்தை இழந்த எஜமானன் அவன்பேரில் வியாஜ்யம் பண்ணும் பட்சத்

தில் ஏற்கனவே நஷ்டம் அடைந்த பணத்தோடு இன்னும் நஷ்டம் அடைவதைத் தவிர வேறில்லை. கொஞ்ச வருஷங்களாய் அனேகம் பேர்கள் ஆவேசத்தில் நெசவுசாலைகள் ஏற்படுத்தி கஷ்டதிசைக்கு வந்திருக்கிறார்கள். அப்படி வந்ததற்குக்காரணம் வேலைக்காரனுடைய மோசமே. விசைநாடாவின் பிசகு என்று நினைப்பது ரொம்பவும் தப்பிதம். விசைநாடா உபயோகிப்பதற்கு கொஞ்சம் பழக்கம் வேண்டுமென்பதில் ஆட்சேபனையில்லை. விசை நாடாவில் பழகினவர்கள் கொஞ்சம். தேவையான ஆள்கள் கிடைக்கிறதில்லை. ஆகையினாலே விசைநாடாக்காரன் கர்வமடைகிறான். எவ்வளவுக்கு வேலை செய்வானோ அதற்கு அநேக மடங்கு அதிகமாய் சம்பளம் கேட்கிறான். சாதாரணமாய் நெசவுசாலையென்றால் தறிகாரன் வேலைக்கு வரப்பிரியப்படுகிறதில்லை. நெசவுசாலையில் வேலை செய்வதால் தன் ஸ்வதந்திரம் போய்விடும் என்பான். உண்மையான காரணம் என்னவென்றால், ஒழுங்காய் வேலை செய்வதை வெறுப்பதுதான். வீட்டிலோ அவனுக்கு அவன்தான் எஜமானன். பகலில் கதைபேசிக் காலம்கழிப்பான். இரவில் விளக்கு வைத்துக்கொண்டு மனம் போனபடி வேலை செய்வான். நெசவுகாரன் மேற் சொல்லிய குணங்களுடையவனாக இருப்பதால் நெசவுசாலையை நன்றாய் நடத்த திறமையான சூபரின்டென்டென்டு அவசியம் என்பதற்குக் கேட்பானேன். பிரயோஜனம் அற்றதும் துப்புக்கெட்டதுமான வழக்கத்தை இன்னும் கொண்டாடும் வயது சென்ற வேலைக்காரர்களைக்கொண்டு வேலை செய்வது இனி அதிகமாய் பிரயோஜனப்படாது. சிறுவர்களைத் தயார்செய்வதால் தொழில் விருத்திக்கு வரலாம். அவர்களுக்குள் கொஞ்சம் புத்திசாலியாயிருப்பவர்களை "தற்பித்து" செய்து நூதன யந்திரங்களால் உண்டாகும் லாபங்களை அவர்களும் அனுபவிக்கும்படி செய்வது சாத்தியம். இப்பேற்பட்ட வேலையெல்லாம் சூபரின்டென்டை சேர்ந்தது. அதி புத்திசாலியாயிருப்பதோடு, சூபரின்டென்டு பொறுமையும் விடாமுயற்சியும் உடையவராய் இருக்க வேணும். அதுவும் அல்லாமல், வியாபார முறைகளை நன்றாய் அறிந்தவராயிருக்கவேணும். எந்த சாமானுக்கு கிராக்கி இருக்கிறதோ அதை அறிந்துவேலை செய்விக்க வேணும். சரக்குகளை சீக்கிரம் விலையாக்குவதில்தான் கடைசியாய் நெசவுசாலையின் காரிய சித்தி அடங்கியிருக்கிறது.

நெசவுசாலையை சரியாய் நடத்திவந்து காரிய லாபத்தை அடையவேண்டியதற்கு உள்ள அவசியங்களை இது வரையில் எடுத்துச்சொன்னோம். இதற்கு மேல் நெசவுசாலை, சென்னப்பட்டணத்தில் ஏற்படவேணுமானால் மேற் சொல்லிய அவசியங்கள் அவ்விடத்தில் இருக்கின்றனவா என்று விசாரிப்போம். சேலம் நெசவுகாரனைவிட பட்டணத்து நெசவுகாரன், கட்டுப்பாட்டுக்குள்ளாவான். சென்னையில் வெகுகாலமாய் பாக்டரிகள், அதாவது, பல ஆட்கள் வேலை செய்யும் தொழில் சாலைகள், ஏற்பட்டிருக்கின்றன. பட்டணத்தில் இருக்கும் தொழிலாளிக்கு அவன் நடந்துகொள்ளவேண்டிய வழி நன்றாய்த் தெரியும். காலதாமசமும் ஒழுங்கு இல்லாமையும் சிக்ஷிக்கப்படுமென்பதை அவன் நன்றாய் அறிந்தவன். சேலத்தில் சுமார் 10,000 நெசவுகாரர்கள் இருக்கிறார்கள். ஆனால் நெசவுசாலையில் வந்து வேலை செய்ய சரியான ஆள்கள் அகப்படுவது துர்லபமாயிருக்கிறது. ஏதாயினும் அற்ப சாக்கு அகப்பட்டாலும் தறிகாரன் வேலையிலிருந்து நின்று விடுவான். தூரபந்து வீட்டில் கலியாணமென்றால் 20 நாளைக்கு



குறையாமல் லீவு வேணுமென்பான். கோவிலைச்சேர்ந்த ஊர்கோலம் என்றாலும் வேறு விதமான அற்ப தமாஷாவானாலும் அன்று முழுதும் அவனுக்கு வேலைவேண்டாம். ஆனால் சேலத்தில் ஒரு பெரிய அனுகூலம் உண்டு; அதாவது, கூலி நயமாய்கிடைக்கும். சென்னப்பட்டணத்திலோ நெசவுகாரனுக்கு நெசவு தொழில்தான் வேணும் என்பது இல்லை. வேறு பலவிதமானதொழில்கள் சிரமம் இல்லாமல் அகப்படும். அதினாலும், பட்டணத்தில் வசிப்பது மற்ற இடங்களைவிட அதிகச் செலவானதாலும் நயமான கூலிகிடைப்பது அரிது. அப்படி நயமில்லாவிட்டாலும் மேல் அதிகாரி கெட்டிக்காரனாயிருக்கும் பட்சத்தில் வேலைக்காரனிடம் கூலிக்குத் தகுந்த வேலை வாங்கக் கூடும். எப்படியிருந்தும் நயமான கூலி கிடைக்காதது பெரிய கஷ்டந்தான்.

சேலம் மதுரை போன்ற ஊர்களைப் போல் முதலாவது பட்டணத்தில் ஏராளமான தறிகாரர்கள் கிடையாது. அப்படி அதிகதறிகள் வேலை செய்யவோ சென்னப்பட்டணத்தில் ஆள் அகப்படுவது கஷ்டம். இந்தக்காரணங்களைக்கொண்டு சென்னப்பட்டணத்தில் நெசவு சாலை ஏற்படுத்தவேணும் என்கிற எண்ணத்தை நாஷனல் பண்டு அதிகாரிகள் விட்டுவிடுவது நலமென்பது என்னுடைய அபிப்பிராயம்.

ஒருக்கால் லாபநஷ்டத்தைப்பற்றி யோஜனையே இல்லாமல் சிறுவர்களுக்கு விசைநாடா வேலைகற்றுக்கொடுப்பதும் நெசவுசாலைகளை நடத்திவர திறமையுள்ளவர்களாய்ச் செய்வதுமே மட்டும் அவர்கள் அபிப்பிராயமென்றால், சிறுவர்களை ஏற்கனவே பிரசித்திபெற்ற நெசவு சாலைகளுக்கு அனுப்புவது உசிதமே ஒழிய தாங்களே புதிதாய் ஒரு பாடசாலை ஏற்படுத்துவது சரியல்ல. நூதனமாய் பள்ளிக்கூடம் வைப்பது ரொம்பவும் செலவானகாரியம். பள்ளிக்கூடம் என்றால் அதில் சகலவிதமான நூதன தறிகள் முதலியவைகள் போட்டு வைப்பதும் தவிர, பள்ளிக்கூடத்தை நடத்த சரியான அதிகாரிகள் நியமிக்கப்படவேணும். நெசவுசாலைக்கு வேண்டிய சிப்பந்திவகையராச் செலவைவிட பள்ளிக் கூடத்துக்கு வேண்டிய செலவு மட்டாகாது. பழக்குவதற்காக எடுக்கும் மாணாக்கர்களை மிகவும் ஜாக்கிரதையாய்ப் பொறுக்கவேணும் என்பது நன்றாய்த் தெரிய வருகிறது. கொஞ்ச நாளைக்குமுன் நாஷனல் பண்டு அதிகாரிகள் தலைக்கு 15 ரூபாய் உபகார்ச்சம்பளம் கொடுத்து சில மாணாக்கர்களை சேலம் சர்க்கார் நெசவுசாலைக்கு வேலைகற்றுக் கொள்ளும்படி அனுப்பியிருந்தார்கள். அப்படி அனுப்பப்பட்டவர்களில் கோயம்புத்தூரிலிருந்து வந்த, ஜாதியில் நெசவுகாரராகிய ஒருவரைத்தவிர மற்றவர்கள் அதிகமாய் உபயோகப்படுவார்களென்று என் புத்திக்கு தோன்றவில்லை. இவர்களில் ஒருவர் என்புத்திக்கு நெசவு வேலை சுமாராய்க்கற்றும் பொருப்புள்ள வேலைக்கு வேறு விதமாய் லாயக்கு இல்லாதவரும், மற்றொருவர் நெசவு வேலைநன்றாய் செய்வதற்கு வேண்டிய தேகபல மில்லாதவரும், இன்னும் ஒருவர் நெசவுசாலையில் கண்டிதம் அதிகமென்று புகார்செய்தவருமாயிருந்தார்கள். இப்படியிருக்க இவர்களுக்குள் நன்றாய் வேலை செய்து வந்த கோயம்புத்தூர் தேவாங்கர் மெட்ரிகுலேஷன் வரையில் வாசித்து சுமாராய் இங்கிலீஷ் தெரிந்தவர். நெசவு வேலையும் நாஷனல் பண்டு செலவில் ஆறுமாதம் நன்றாய் படித்து கற்றுக்கொண்டவர். அப்பேற்பட்டவருக்கு தகுந்த வேலை அகப்படாமல் ரயில்வேயில் மாதம் 8 ரூபாய் சொற்ப சம்பளத்தில் அமர்ந்து கொள்ளும்படியாயிற்று. இது ரொம்பவும் வருத்தப்படும்படியான சங்கதியல்லவா? இப்படியெல்லாம் இருக்க நாஷனல் பண்டார் சென்னப்பட்டணத்தில் ஒரு நெசவு பள்ளிக்கூடம் வைக்க உத்தேசித்திருக்கிறார்களென்று கேள்விப்பட்டு ஆச்சரியப்பட்டால் தப்பிதமா?

என். சுப்பிரமணிய அய்யர்.

## THE TEN COMMANDMENTS.

Specially translated for "Practical Life" from the Manuel Général De L' Instruction Primáiré General Manual of Primary Education, a weekly published in Paris.

BY
V. S. SWAMINADHA DIKSHITAR, B.A., L.T.,
*Professor of English, Colonial College, Pondicherry.*

## பத்துக் கற்பனைகள்.

சென்ற ஜூன் மாஸத்து ஸஞ்சிகையில் வைத்தியக்குறிப்புகளின் கீழ் ஐரோப்பாவில் ஸ்வீடன் தேசத்தில் ஜனங்கள் சாவது இதர தேசங்களைவிட குறைவு என்றும், அதற்குக் காரணம் அந்த தேசத்து ஜனங்கள் தங்கள் சுகாதார வழியை நன்றாய் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது விஷயமாய் ஸ்வீடன் தேசத்தில் உள்ள பள்ளிக்கூடங்களிலெல்லாம் ஒட்டப்பட்டிருக்கும் சுகாதாரத்தைப்பற்றிய பத்துக் கற்பனைகளை அடியில் மொழிபெயர்த்து எழுதியிருக்கிறேன். அவைகளாவன :—

1. சௌக்கியத்திற்கு முக்கிய ஆதாரமான நல்ல காற்றை இரவும் பகலும் சுவாசிப்பதே சுவாசாசயரோகங்களைத் தடுக்க சிரேஷ்டமான மருந்து.

2. தினந்தோறும் திறந்த வெளியில் நடந்தும் வேலை செய்தும் தேகப்பயிற்சி செய்ய வேண்டும். இதுவே ஒரே இடத்திலிருந்து வேலை செய்வதற்கு மாற்று.

3. சாப்பாடும் பானமும் மிதமாய் குருத்வமில்லாமல் இருக்கவேண்டும். சாராயத்தைவிட தண்ணீரையே மேலான பானமாகக்கொண்டு, பாலையும் பழங்களையும் உபயோகிப்பவன், தன் சௌக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்வதோடு வேலை செய்யும் திறமையையும் சுகத்தையும் அதிகப்படுத்திக் கொள்ளுகிறான்.

4. நாள்தோறும் குளிர்ந்த ஜலத்தால் கழுவி வாரத்திற்கு ஒருமுறை தவறாமல் வெந்நீரில் மூழ்குதல் தேகசௌக்கியத்தைக் கொடுப்பதோடு நீர்க்கொள்ளாமலும் தடுக்கும்.

5 உடுப்புகள் மிதமிஞ்சி உஷ்ணத்தைக் கொடுக்கக் கூடியவைகளாயும் இறுகலாயும் இருக்கக்கூடாது.

6. வீடு சூரியகிரணம் படக்கூடியதாயும், உலர்ந்ததாயும், விசாலமாயும், சுத்தமாயும், வெளிச்சமுள்ளதாயும், சௌகரியமாயும், இன்பம் தரத்தக்கதாயும் இருக்கவேண்டும்.

7. எல்லாவற்றிலும் அதிக சுத்தம் வேண்டும். காற்று, ஆகாரம், தண்ணீர், ரொட்டி, கம்பளித்துணிகள், உடுப்புகள், வீடு முதலியன சுத்தமாயிருப்பதோடு நல்லொழுக்கமும் வேண்டும். இதனால் வாந்திபேதி, ஹஸ்திஜ்ஜுரம் முதலிய வியாதிகள் வராமல் தடைபடும்.

8 ஒழுங்காயும் அதிகமாயும் வேலை செய்தல் தேகவியாதியையும் மனோவியாதியையும் வரவொட்டாமல் தடுக்கும். இன்பகாலத்திலும் துன்பகாலத்திலும் இதுவே பெரிய ஆறுதலாகும்.

9. வேலைசெய்த பிறகு இளைப்பாறவும் பொழுது போக்கவும், பெருவிருந்தும் களியாட்டும் நல்ல வழிகளல்ல. இரவு தூங்குவதற்கு ஏற்பட்ட காலம். வேலையில்லாத நேரத்தையும் தமாஷில் செலவழிக்கும் காலத்தையும் குடும்பத்திற்கும் ஆத்ம ரட்சணைக்கும் உபயோகிக்கவேண்டும்.

10. வேலையும், ஸத்கிருத்யங்களும், தீதற்ற களிப்பும் நிறைந்துள்ள வாழ்வே நல்ல தேக சௌக்கியத்திற்கு முதற்காரணம். குடும்பத்தில் நல்லவனாயும், தன் தொழிலில் கெட்டிக்காரனாயும், தன் தேசத்தில் அபிமானமுள்ளவனாயும் இருக்க வேண்டும் என்னும் ஆசை, ஒருவன் வாழ்நாளுக்கு அளவிடக்கூடாத மதிப்பை உண்டுபண்ணுகிறது.

வி. எஸ். ஸ்வாமிநாத தீக்ஷிதர்.



## LOCATION OF SHOP.

## கடைவைக்கும் இடம்.

கடை வைக்கத்தகுந்த இடம் நல்லதாய் அமைத்துக் கொள்ளவேண்டும். பல சரக்குக் கடை வைப்பதானால், அதேமாதிரி இன்னும் அநேககடைகள் இருக்கும் இடத்திலேயே புதிய கடையும் ஏற்படுத்தப்பட வேண்டும். பாத்திரம் விற்பவர் பாத்திரக் கடைக்குப் பக்கத்திலும், புஸ்தகம் விற்பவர் புஸ்தக ஷாப்புகளுக்குப்பக்கத்திலும் கடையை அமைத்துக் கொள்ளவேண்டும். அநேக கடைகள் ஒரே தினுசை விற்பதால், நமக்கு விற்பனை செவ்வையாய் ஆகாதென்று ஏதாவது ஒரு மூலையில் கொண்டுபோய் கடையை வைப்பது தெரியாத் தன்மை. நல்ல சரக்கை வாங்க வருகிறவர்கள் ஒரேசரக்கை விற்பனை செய்யும் பலகடைகள் இருக்கும் இடத்தையே தேடிவருவார்கள். எல்லாரும் சேர்ந்திருந்தால் ஒவ்வொருவருக்கும் வியாபாரம் நடக்கும். போட்டியோடு வியாபாரம் செய்தலே லாபத்தைத் தரும். வெளிக்குப் போட்டிபோல் காட்டி ரகசியமாய் சேர்ந்து வியாபாரம் செய்தால், கூட்டு வியாபாரத்தில் விசேஷ லாபம் கிடைக்கும். சென்னப்பட்டணத்தில் ஒரே முதலாளி, பக்கம் பக்கமாய் இரண்டு குடைக் கடைகளை வைத்து, அவைகள் ஒன்றுக்கு ஒன்று சம்பந்தம் இல்லைபோல் காட்டி நல்ல வியாபாரம் செய்து வருகிறான்.

புதிதாய் கடைவைக்கப் போகிறவன் தான் விற்க உத்தேசிக்கும் சரக்குகள் விற்கப்படும் பல கடைகள் உள்ள இடத்திலேயே தன் கடையையும் ஏற்படுத்த வேண்டுமென்பதற்கு இன்னும் ஒரு காரணம் உண்டு. சரக்குகளின் விலை எப்பொழுதும் ஒரேமாதிரியாய் இருக்காது. ஒருதடவை ஏறும், ஒருதடவை இறங்கும். சரக்கு விலை ஏறியிருக்கும் காலத்தில் தணிந்த விலைக்கு விற்றால் வியாபாரி நஷ்டப்படுவான். இறங்கி இருக்கும் பொழுது உயர்ந்த விலைக்கு விற்றால் வாங்கவருகிறவர்கள் வாங்கமாட்டார்கள். ஆகையால் காலகிரயப்படி சரக்குகளை விற்கவேண்டியது அவசியம். இந்த விலை தெரிந்து வியாபாரம் செய்து லாபம் சம்பாதிக்க தன்னைப் போலொத்த வியாபாரிகளுக்கு சமீபத்திலேயே இருக்க வேண்டும்.

மேலே சொல்லிய விஷயங்களுக்கு சில்லரைப் பல சரக்குவியாபாரம் ஒரு விலக்கு. இந்த தினுசு கடைகள் விசேஷ போட்டியில்லாமல் ஸாமான்கள் வாங்குகிறவர்களுக்கு எவ்வளவுக்கு எவ்வளவு சமீபத்தில் இருக்கின்றனவோ அவ்வளவுக்கு அவ்வளவு நல்ல லாபம் தரக்கூடியவைகள். இந்த கடைகளில் முக்கியமாய் அரிசி, பருப்பு, உப்பு, மிளகாய், நெய் எண்ணெய், இவைகளே வியாபாரமாகும். இவைகள் தினந்தோறும் அநேகமாய் ஒவ்வொரு குடித்தனத்துக்கும் வேண்டியவைகள்.

அரிசி மாதத்துக்கு ஒரேதடவையாய் வாங்கினாலும் வீட்டுக்கு தூரத்தில் உள்ள கடையிலிருந்து வாங்கிக் கொண்டுவந்தால் தூக்குக் கூலி ஜாஸ்தியாகி சமீபத்தில் உள்ள கடையின் விலையை விட அதிகமாகி விடும். ஆகையால், அரிசியை அநேகமாய் வீட்டுக்கு சமீபத்தில் உள்ள கடைகளிலேயே குடித்தனக்காரர்கள் எடுப்பார்கள். தவிர, நெய், எண்ணெய் இந்த ஸாமான்களை ஒரேமுட்டாய் வாங்கிப் போட்டால் அவைகள் கெட்டுப் போம். ஆகையால் அவைகளை குடித்தனக்காரர்கள் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் வாங்குவார்கள். இப்படிக்கு பலதடவை வாங்க வேண்டியிருப்பதால், வேலையற்றவனாயிருந்தாலொழிய, ஒரு குடித்தனக்காரன் அடிக்கடி தூரக்கடைகளுக்குப் போகமாட்டான். விலைகால் அணா கூட இருந்தாலும் அநேகமாய்

கிட்டத்துக்கடைகளிலேயே சாமான்களை வாங்கி விடுவார்கள். இந்த காரணங்களினால், சில்லரை பல சரக்குக் கடைகளை மட்டில் ஜன நெருக்கமான இடங்களில் வைப்பது லாபகரமாகும்.

மண்டிகள் சேர்ந்து இருப்பது போலவே, சில்லரை பல சரக்குக்கடைகளைத் தவிர, மற்ற சிறிய கடைகளெல்லாம் சேர்ந்தே இருக்க வேணும். கடைகள் பெரிய வீதிகளில் இருக்க வேண்டும். அப்படி வாடகைக்குப் பேசிக் கொண்டு ஒரு கடையில் அமர்ந்தால், அதை விட்டு வேறிடம் மாற்றாமல் எப்போதும் வியாபாரம் செய்யலாம். அடிக்கடி கடையை மாற்றினால் வாடிக்கைகள் குறைந்துபோகும்.

ஒரு கடை யென்றால் அது வெளிப்பார்வைக்குத் தோரணங்கள், கில்டு வேலைகள் செய்ததாய் அதிக ஆடம்பரத்துடன் காணப்பட வேண்டியது அவசியமில்லை. முக்கியமாய்க் கடைகளுக்கு வேண்டியது காற்று, வெளிச்சம், இடவிசாலம் இவைகள் தவிர மற்றவிஷயங்களில் செய்யும் செலவெல்லாம் வீண். மேலும் அதிக ஆடம்பரத்தோடு இருக்கும் கடைகளில் வியாபாரம் அதிகமாய் நடவாது. ஜனங்கள் அப்படிப்பட்ட கடைகளைப் பார்த்து இந்த 'டம்ப'ச் செலவெல்லாம் விலையிலேதானே கடைக்காரன் தூக்கிவைக்க வேணும், என்று சந்தேகித்து, அதிக ஆடம்பரமான கடைகளில் சாதாரண ஜனங்கள் நம்பிக்கை வைக்கமாட்டார்கள். வெளிச்சம் கடைக்கு அவசியமானது. இருள் மூடிய கடைக்கு ஜனங்கள் சாதாரணமாய் வரமாட்டார்கள். இங்கே யேதோ மோசம் இருக்கிறதென்று சிலர் நியாயமாய் சந்தேகிப்பார்கள். விளக்கு வெளிச்சத்தை விட செலவில்லாத சூரியவெளிச்சமே மேலானது. சரக்கு கெடாமலும், பார்ப்பதற்கு அழகாயும் புதியதாயும் இருக்கும். கணக்குப் பிள்ளை உட்கார்ந்து கணக்குபார்க்கும் இடம் நல்ல வெளிச்சமுள்ளதாயிருக்க வேண்டும். சூரியவெளிச்சத்தால் கடைக்கே ஒரு ரம்மியமான காட்சி தோன்றும். காற்று மிகவும் முக்கியமானது. காற்று அடைபட்டிருக்கிற அறையில் சரக்குகள் கெட்டுப்போம். பழையவாசனை வந்து விட்டால் சரக்குகளை ஒருவரும் வாங்கமாட்டார்கள். பண்டங்களில் தூசிபறந்து போம். சில சரக்குகள் காற்றில்லாவிட்டால் நிறங்குறைந்து நஷ்டம் விளைவிக்கும்.

கடையைச் சரியாய்வைப்பதில் அதிக கவனம் செலுத்தவேண்டும். பார்த்தவுடன் ஒரு கடையில் என்ன சரக்குகள் இருக்கின்றன என்று தெரிந்துகொள்ளும் படி, அவைகளைக் கிரமமாகவும் வரிசையாகவும் தினந்தோறும் தூசிதட்டி வைக்கவேண்டும். மூடி வைக்கும் பண்டங்களையும், டப்பிகளில் வைக்கப்படுவனவைகளையும், தெரிவிப்பதற்கு, மேலே கடுதாசியில் எழுதி ஒட்டிவைக்க வேண்டியது அவசியம். அப்போதைக்கப்போது தேடுவதாய் இருக்கக் கூடாது.

கடைக்கு மத்தியில் உயர்ந்தமேடை அல்லது பலகையின் பேரில் எல்லாவற்றையும் பார்க்கும்படியாக முதலாளி உட்கார்ந்து கொள்ளவேண்டும். மேலே சொல்லியவைகளெல்லாம் அற்பவிஷயங்கள் என்று அலட்சியம் செய்யக்கூடாது. அற்ப விஷயங்களே பயனைத்தரும்.


### மாதர் மனோரஞ்சனி.

இந்த மாதாந்தரப் பத்திரிகைக்கு இப்பொழுது 11-வது வருடம் ஆரம்பம் இதில் பெண்களுக்குரிய விஷயங்களே வெளிவரும். இதன் வருட சந்தா ரூபா. 2. வேண்டுவோர் வி. எஸ். இராமசுவாமி ஐயர், 12, தனிகாசல பிள்ளைத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை என்று எழுதவும்.




## LIVE-FENCE

BY

T. D. S. MURTHI.

## பச்சை வேலி.

நம்முடைய தேசத்தில் அநேக இடங்களில் அக்கம் பக்கம் வயல்காரர்கள் வரப்புமாற்றிப் போடுவதும், ஹத்து மீறி "பிறத்தியான்" நிலத்தை சேர்த்துக்கொள்வதும் வழக்கமாயிருக்கிறது. டிமார்க்கேஷன் கல்களைமாற்றி நடுவதும் இல்லாவிட்டால் இரண்டு முனையில் உள்ள கல்லுகளுக்கு இடையிலுள்ள வரப்பை வளைவாக இடித்துச் சேர்த்துக் கொள்வதும் உண்டு. இன்னும் அனேக காரணங்கள் இருந்தபோதிலும், முக்கியமாய் அக்கம்பக்கம் வயல்காரர்களுடன் வீண்சச்சரவு இல்லாமல் இருப்பதற்காவே நம்முடைய ஹத்துக்கு ஏற்பட்டிருக்கும் கல் ஒழுங்குப்படி வேலிபோட்டுக் கொள்வது அவசியமாக இருக்கின்றது.

அப்படி போடப்படும் வேலியானது மேற்சொன்ன ஹத்து மீறி நடப்பதைத்தடுக்க மாத்திரமல்ல. இன்னும் பலவித ஸாதகங்களையும் உண்டாக்குகின்றது. பயிர்களில் ஆடு மாடு முதலிய மிருகங்கள் பச்சையைக்கண்டு மேய வராமலும், திருடர்கள், அன்னியர்கள் உள்ளே பிரவேசித்து விளைச்சலுக்கும், பயிருக்கும், சேதம் உண்டுபண்ணாமலும், பயிர்களுக்கு ஆகாத காற்று முதலியவைகளை உள்ளே வரவொட்டாமலும், நெருங்கின வேலியானது தடுக்கக் கூடியது. ஆகையினாலே மேல் சீமையார் தாங்கள் எங்கேபோனாலும் தங்கள் ஹத்துக்கு வேலி போடாமல் உள்ளே நிலத்தில் ஒருவித ஏற்பாடும் முதலில் செய்கிறதில்லை. வேலிகளில் பச்சை வேலி என்றும், பச்சை அல்லாத வேலி என்றும் இரண்டு விதம். இவைகளில் இரண்டாவது சொல்லிய பச்சையல்லாத வேலியானது இரும்புக் கம்பிகளைக்கொண்டும், கல் சுண்ணாம்பினால் கட்டப்பட்ட சுவர்களைக்கொண்டும், முள்படல்கள், கழித்தட்டிகள், முதலியவைகளைக் கொண்டும் ஏற்படுத்துவது. செடி, கொடி விருக்ஷங்களை வளர்த்துப்பயிராக்குவது மற்றொரு விதம்.

பச்சை அல்லாத வேலி போட ஆகும் செலவையும், ஸாதகத்தையும் யோசித்துப்பார்த்தால் செலவே ஜாஸ்தியாகக்காணும். பச்சை வேலியை உற்பத்தி செய்வதில் அனேக வித ஸாதகமும் எப்போதும் விரயம் சொல்பமாயும், சாதகம் ஜாஸ்தியாயும் இருக்கிறது. பச்சை வேலியை உண்டாக்கும் போது கவனிக்க வேண்டியவைகளாவன. எந்த பூமியில் உண்டாக்குகிறோமோ அந்தப்பூமியின் இயற்கைக்கு ஒத்ததாயும், நோவு ஒன்றுமில்லாமல் சீக்கிரத்திலும், அதிக சிரமம், செலவு இல்லாமலும், ஒத்தாற்போலும், அதிக குளிர், வெப்பம் இவைகளால் கெட்டுப்போகாமல் வளரக் கூடியதாயும், ஆடுமாடுகள் சுலபமாய் தின்னக்கூடாததாயும், அதிகமான வேரோட்டத்தினால் வயலில்உள்ள பயிருக்கு கெடுதிசெய்யாததாயும், வெட்டினால் மறுபடி சிரமமில்லாமல் துளிர்க்ககூடியதாயும், நீடித்த ஆயுள் உள்ளதாயும், ஆடுமாடு ஆள்வகையரா நுழையாமல் தடுக்கக்கூடியதாயும், நாய்நரி முதலியவைகளும் அண்டக்கூடாத முட்களுடன் கூடியதாயும், இருத்தல் வேண்டுமென்பதே. இந்த மாதிரியான குணங்களுடன் கூடிய வேலிக்கான பயிர்கள் அனேகம் இருக்கின்றன. அவைகளில் எல்லாவற்றிலும் சிறந்தது கொருக்காப்புளி. இதை முதலில் வளர்க்கும்போது ஆடுகள் அண்டாமல் காப்பாற்றி விட்டால் மரமான பிறகு இதினால் வெகுலாபத்தை யடையலாம். இந்த மரம் குடியானவனுக்கு வேண்டிய சகலவிதமான சவுகரியத்தையும் கொடுக்கக் கூடியது. பெட்டிவண்டிக்கு பலகை, சக்கரங்களின் வட்டை, கலப்பைக்கு கட்டை, வேண்டிய அளவு விறகு. பசுந்தாள், எருவுக்குத் தழை முதலியவற்றை கொடுக்கின்றது. முட்களுடன் கூடியதால் நல்ல வேலியாகிறது. வயலுக்குச் சுற்றிலும் வேலியோரத்தில் கிடங்காக வெட்டிவைத்தால் வயலில் வேர் ஓடி பயிர்களை கெடுக்காமலிருக்கும். அப்படி வெட்டப்படும் கிடங்கானது அதிக ஈரத்தை இழுத்துக் கொள்ளும் வடிகாலாகவும் காய்ச்சலில் காற்றையும் ஈரத்தையும் கார்க்கக் கூடியதாகவும் இருக்கும். வேலியிலிருந்து $2\frac{1}{2}$ வருஷத்துக்

கெல்லாம் கிளைகளைக்கழித்து விறகுக்கு உபயோகிக்கலாம். அப்படி விறகு கிடைப்பதால் மாட்டுச்சாணத்தை பூராவும் எரிப்பதற்கு முட்டைதட்டி உபயோகிக்காமல் எருக்குழியில் சேர்ப்பித்து நல்ல மாட்டுக்கொட்டில் உரம் சேகரிக்க சாதகமாகிறது. இடைஇடையே இரண்டொரு கருவேலமரமும் உண்டாக்கலாம். இப்படி உபயோகமுள்ள பச்சைவேலிகளை விதைகளாலும், நாற்றுகளாலும் உண்டாக்கலாம். தரையில் நமது பூமியின் ஓரங்களில் 1 அடி ஆழம், 3 அடி அகலம், மண்ணைக்கொத்திவாங்கி தூளாக்கி வைத்து அதில் வெளிப்புறமும் உட்புறமும் ஒரு அடி தள்ளி நடுவில் 3 சமமான வரிசைகளாக விதையைத்தூவி ஜலம் வார்த்து வரவேண்டும். ஷை கொருக்காப்புளியை ஆடுமாடு மேய்ந்துவிடுமாகையால் ஓரக்காலில் மருதாணிவிதையை ஒரு வரிசை தூவி அது 3 அடி உயரம் முளைத்த பிறகு அதை வேலியாக வைத்துக்கொண்டு பின்னால் கொருக்காப்புளியை விதைத்து உண்டாக்கவேண்டும். 10 அடி தூரத்துக்கு 10 கருவேலங்கொட்டையும், 20 அடிக்கு ஒரு நொச்சில் பதிவும் வளர்த்து வருவது ரொம்ப அனுகூலம். கொஞ்சம் ஷை விருக்ஷங்கள் உயர்ந்து வளர்ந்த பிறகு ஷை மருதாணிவேலியை அழித்து விட்டாலும் விடலாம். வேலி மேற்கண்ட விதம் போடுவதில் சாசுவதமான நன்மையையும், பலனையும் எண்ணவேண்டுமே. அல்லாமல் தற்கால பிரயோசனத்தை மட்டில் உத்தேசிக்கக்கூடாது. பின்னிட்டு மருதாணிச் செடிகளை எடுத்துவிட்டால்தான் பூச்சி பொட்டுகள் அதிகமாக அண்டாமலிருக்கும். வேலமரம் வண்டிப்பார்களுக்கும், ஏத்தத்திற்கும், எருவுக்கும், நொச்சி ஏர்க்கால், கழி, தட்டுமுட்டுக்கு சிம்புகளுக்கும், கோடாலி முதலியவைக்கு பிடி காம்புகளாகவும் உபயோகப்படும். அதிக நிழலுண்டாகாமல் வருஷாவருஷம் கிளைகளை கழிக்கலாம். அப்படி ஒரு மைல் தூரமுள்ள மேலே கண்ட வேலியை கழித்தால் 50 வண்டி விறகுக்கு குறையாமல் கிடைக்கும். இப்போது காட்டிலாகா சட்டத்தால் விறகு கிடைக்காமல் அவஸ்தைப்படும் குடியானவர்களுக்கு நல்ல சகாயமாகும்.

தி. தே. ஸ்ரீ. மூர்த்தி.

## RED GRAM.

## துவரை.

**முன்னுரை:**—இது நமது இந்தியாவில் உள்ளது நமது நாட்டில் நாலாபக்கங்களிலும் இது பயிர் செய்யப்படுகிறது. இது நமது நாட்டார்களாகிய பல ஜாதியார்களாலும் பெரும்பாலும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை ராஜதானியிலுள்ள குண்டூர், காக்கிநாடா, திருவண்ணாமலை, சேலம், தஞ்சாவூர் முதலிய இடங்களில் இது பயிர் செய்யப்படுகிறது. தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள வல்லத்தில் இது விசேஷமாய் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த இடத்தில் பயிர் செய்யப்படும் துவரை மிகவும் நல்லது. சீக்கிரத்தில் வெந்துபோகும் தன்மையுள்ளது. ருசியிலும் சிறந்த குணமுடையது. தஞ்சாவூர் ஜில்லா வாசிகளால் அதிகமாய் விரும்பப்படுகிறது. தஞ்சாவூர் தாலூகாவிலுள்ள தஞ்சாவூர், திருவையாறு, வல்லம், கும்பகோணம் தாலுகாவிலுள்ள முத்தியபுரம், சுவாமிமலை, திருப்பிரமியம், சீர்காழி தாலூகாவிலுள்ள வேட்டங்குடி முதலிய இடங்களிலும் இது பயிர் செய்யப்படுகிறது. இந்த இடங்களில் சாகுபடி செய்யும் விதத்தை அடியில் எழுதுகிறோம். இது ஏராளமாய் ஜனங்களால் உபயோகப்படுத்தப்பட்டுவருவதினால், தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள ஜனங்களுக்குப் போதுமான அளவு பயிரிடப்பட வில்லை. இந்தக் காரணத்தினாலேதான் குண்டூர், திருவண்ணாமலை முதலிய இடங்களிலிருந்து தஞ்சாவூர் ஜில்லாவுக்கு துவரை அபரிமிதமாய்க் கொண்டு வரப்படுகிறது. நெல்லைப்போல் இது சில ஈனஜாதியார்கள் தவிர மற்றயாவராலும் உபயோகப்படுத்தப்படுகிற படியால், இது பயிரிடத் தகுந்த இடங்களில் எல்லாம் ஏராளமாய்ப் பயிர் செய்யவேண்டும். பிற ஜில்லாக்களுக்கு ஏற்றுமதி செய்யாமல் போனாலும் நமது ஜனங்களுக்குப் போதுமான அளவாவது பயிரிடவேண்டும்.

**பூமி:**—மணற்பாங்காயும் சற்று களிமண் கலந்ததாயும் உள்ள புஞ்சை நிலங்களை இது பயிர் செய்வதற்கு நல்ல நிலங்கள். களிமண் கொஞ்சங்கூட இல்லாமல் மணல் பாங்காயுள்ள



இடத்திலும் பயிர் செய்யலாம். உவர்மண் சம்பந்தப் பட்டிருந்தால் அந்த நிலம் கூடாது. உவர்கலவாது சற்று கருமையான மணலான இடமாக விருந்தால் பொருத்த முடையது. மழைகாலத்தில் பெய்கிற மழையினால் தண்ணீர் குளம்குட்டைபோல் தேங்கி நிற்கும் இடங்களும் பயன்படா.

**நிலத்தை உழுது பண்படுத்தல்:**—மேலே சொல்லப்பட்ட இடவசதி யுள்ளதான நிலத்தைத் தெரிந்து எடுத்து பயிரிடுகிறதற்கு ஒரு மாதத்திற்கு முன்னமே ஓர் அடி ஆழம் நன்றாய் குறுக்கும் நெடுக்குமாக நாலு சால் உழுது புல் பூண்டு செடி கொடி முதலிய யாவற்றையும் நன்றாய்க்களைந்து எடுத்து அந்த நிலத்திலே காயவைத்து நன்றாய்க்காய்ந்த பிறகு நெருப்புப் போட்டுக்கொளுத்தி இதனால் உண்டாகும் சாம்பல் எருவாக உபயோகப்படும்படி செய்தல் அவசியம். பிறகு நிலத்தின் வரப்பைச்சுற்றிலும் பலவிதத்தாலும் சரிந்து கிடந்து நிலத்தை துத்துக்கிடக்கிற மண்ணையும் மண்வெட்டியினால் கொத்தி வரப்பின் பேரில் போடவேண்டும் இதற்கு அண்டை வெட்டுகிறது என்று பெயர் வழங்குகிறது. வரப்புக்கு ஓரத்தில் இரண்டு அடி அளவு நிலம் ஏர் உழுவதில் உழப்படாமல் தங்கும். இந்த நிலத்தையும் மண்வெட்டியைக் கொண்டு கொத்தி சீர் செய்தல் வேண்டும். நிலத்தில் உள்ள பள்ளம், படுகுழிகளை தூர்த்து சமமாக்க வேண்டும். பிறகு ஆடு, மாடு முதலியவைகளை கிடைகட்டுதல் முக்கியம். இதனால் இவைகளின் புழுக்கை, சாணம் முதலியவைகள் உரமாகப் பயன் படுவதல்லாமலும் மூத்திரமும் சிதறின வைக்கோலின் பேரில் படுத்து துவைப்பதினால் உண்டாகும் கூளம் முதலிய குப்பையும் நல்ல எருவாக உபயோகப்பட்டு நல்ல பலனைக்கொடுக்கும்படி செய்கின்றன. நமது நாட்டு குடியானவர்கள் இதன் தன்மையை அறியாமல் வழக்கத்தைமட்டும் அனுஷ்டித்து வருகிறார்கள். மக்கின ஆட்டெரு, மாட்டெரு, தழைஎரு, குளத்துவண்டல் முதலியவைகளை ஏகராவுக்கு முப்பது வண்டி வீதம் கொண்டு வந்து போடுகிறார்கள்.

**விதை விதைக்கும் காலம்:**—ஆடி ஆவணி முதலிய மாதங்களே மிகவும் தக்க பருவம். இந்தக்காலத்தில் பருவமழை பெய்யாததினால் விதைவிதைக்கும் காலமும் சற்று முன்பின்னாகவே இருக்கும். மழைபெய்து பூமி குளிர்ந்த பிறகு தான் விதை விதைக்க ஆரம்பிக்கவேண்டும்.

**விதைவிதைத்தல்:**—ஆடி ஆவணி முதலிய மாதங்களில் மழை பெய்து பூமி நன்றாய்க் குளிர்ந்தவுடன் முன்போல் நன்றாய் நிலத்தை உழுது புழுதி செய்யவேண்டும். முன்னமே நன்றாய் நிலத்தைப் பண்படுத்தியிருந்தால் இப்பொழுது அதிக வேலை கிடையாது. பழம் புழுதியானது விதைகளைச் சீக்கிரம் முளைக்கச் செய்யும். அல்லாமலும் வேர் தாராளமாய் இறங்குவதற்கும் ஹேது உண்டு. ஆதலால் பழம் புழுதி செய்வதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். இந்தமாதிரி சீர் திருத்தப்பட்ட நிலத்தில் காலை வேளையிலாவது அல்லது சாயந்திர வேளையிலாவது விதைவிதைக்க ஆரம்பம் செய்யவேண்டும். விதைவிதைக்கிறவர்கள் அனுபோகசாலிகளாகவே இருக்க வேண்டும். ஏனென்றால் விதைகள் நிலமுழுவதிலும் ஒரே மாதிரி விழும்படி விதைக்க வேண்டும். இப்படிக்கு இல்லாமல் ஒரு இடத்தில் கும்பலாயும், மற்றொரு இடத்தில் விதைகளுக்கு மத்தியில் அதிக இடவெளியுள்ளதாயும், வேறு ஒரு இடத்தில் விதையே விதைக்கப்படாமலும் இருக்கும்படி விடக்கூடாது. நிலத்திற்குத் தக்கபடி விதையை மரக்காலிலாவது அல்லது அதைப்போல் சிறியதாயும் வாய் அகண்டதாயும் உள்ள பாத்திரத்திலாவது இடது கையால் எடுத்துக் கொண்டு நிலத்தின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு நேராக விதையை வலதுகையால் ஒரு கைகொண்டபிடி அள்ளி நாலாபக்கத்திலும் பரவும்படி அந்தப்பாத்திரத்தின் மேல்புறத்தில் வீசிக்கொண்டே போகவேண்டும். மறுமுனை போய்சேர்ந்த உடன் மறுபடியும் திரும்பி இந்த மாதிரியே விதை விதைத்துக் கொண்டுவரவேண்டும். முன் போன இடத்திற்கும் பின் போன இடத்திற்கும் சுமார் 8 அடிக்குக் குறையாமலிருக்கவேண்டும். இவ்விதமாகவே நிலமுழுவதும் விதைத்தான உடனே, நிலமுழுவதையும் நன்றாக உழவேண்டும். அரை அடி ஆழத்திற்கு மேல் அதிக ஆழம் உழுதால் விதைகள் ஆழத்தில் போய் விடும். முளைக்க நாள் செல்லும்.

**விசிறி அடித்தல்:**—நஞ்சை நிலங்களுக்குப் பரம்பு அடிப்பதுபோல் புஞ்சை நிலங்களுக்கும் விசிறி அடித்தல் வழக்கம். அதாவது தழை உள்ள மிலாறுகள் ஐந்து அல்லது ஆறு வெட்டி இந்த மிலாறுகளின் அடிகளெல்லாம் ஒன்றாகச் சேரும்படிக்கும் நுனிகளெல்லாம் ஒருபுறம் படல் மாதிரி சேரும்படிக்கும் கட்டவேண்டும். இது முக்கோண வடிவமாக இருக்கும். இதற்குத்தான் விசிறி என்று பெயர். படல் மாதிரி தழை யுள்ள பக்கத்தின் மேல், அந்த விசிறியை இழுக்கத்தக்கபடி புல் பத்தையாவது அல்லது மரக்கட்டையையாவது அல்லது சிறு கருங்கல்லையாவது வைத்து, அடிகள் சேர்ந்து உள்ள இடத்தில் ஒரு கயிற்றைக் கட்டி இந்தக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு ஒரு ஆள் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு இழுக்கவேண்டும். மறுபடியும் திரும்பி இந்த விசிறி இழுபடாத இடத்தில் இழுத்துக் கொண்டு வரவேண்டும். இந்தமாதிரி நிலமுழுவதையும் விசிறியடிக்கவேண்டும். இவ்வாறு செய்வது படைசால்களை மறைப்பதும் அல்லாமல் நிலத்தின் ஈரத்தையும் காக்கும். இது அவசியம் செய்யவேண்டியது.

**சாகுபடிக்காக எடுத்துக்கொண்ட நிலத்தின் விஸ்தீர்ணம்:**—உதாரணமாக ஒரு ஏகரா நிலம் எடுத்துக்கொள்வோம்.

**விதையின் அளவு:**—இந்த ஒரு ஏகரா நிலத்திற்குப் பட்டணம்படி ஒன்றரைப்படி விதை போதுமானது. சிலர் மூன்றுபடி விதை விதைக்கிறார்கள். இது அவ்வளவு பொருத்தமுடையது அல்ல. அதிக விதை விதைப்பதினால் கெடுதிகள் பல. விதைகள் நெருக்கமாக முளைத்து தன் முழு அங்கத்துடன் கிளம்பாமல் ஒன்றையொன்று தொட்டுக்கொண்டு வெளுத்துப் பழுத்துப்போக காரணங்கள் உண்டு. செடிகள் பயிரான உடன் சூரியகிரணங்கள் தாராளமாய்ப்படும்படியாயும் காற்றோட்டமாயும் இருக்கும்படி விதைக்கவேண்டும். அதிக விதை விதைத்தல் அறிவீனமே.

**பயிராகுதல்:**—மூன்றாம் நாள் முளை மணலுக்குள் கிளம்பிவிடும். ஐந்தாம் நாள் நன்றாய் வெளிக்கிளம்பி இரண்டு இலைகள்விடும். அப்பால் சிறுகச்சிறுகப் பயிராகி செடிகளாகும். ஒருமாதத்திற்குள் இரண்டு அடி உயரம் வளரும். மூன்று மாதத்தில் சுமார் ஐந்து அடி உயரம் வளரும். இது நன்றாய் வளரும் தன்மையையுடையது. சில செடிகள் ஆறு அங்குலம் சுற்றளவு உள்ளதாய் பத்தடி உயரம் வளர்ந்திருக்கின்றன. மூன்று மாதத்தில் பூக்கும். நாலுமாதத்திற்குள் காய்க்க ஆரம்பித்துவிடும்.

**களை எடுத்தல்:**—துவரைப்பயிர் ஒரு மாதம் ஆனவுடன் களைக்கொட்டைக் கொண்டு களை வெட்டி புல் பூண்டு முதலிய பயன்படாச் செடிகளை நீக்கிவிட வேண்டும். களைக்கொட்டு என்பது சிறுமண்வெட்டி போலிருக்கும். சிறுமண்வெட்டியைக் கொண்டும் களைவெட்டலாம். துவரை பூக்க ஆரம்பம் செய்வதற்கு முன் இரண்டாந்தரம் களைவெட்ட வேண்டும். இந்த மாதிரி களை வெட்டுவதினால் மேல்மண் கீழேயும் கீழ்மண் மேலேயும் போவதல்லாமலும் செடிகளின் வேர்களில் காற்றும் படஹேது உண்டு. வேர்களில் காற்றுப்படுவது பயிர் நன்றாய்ச் செழித்தோங்கி வளர்கிறதற்கும் தக்க மகசூலைக் கொடுப்பதற்கும் ஆதாரமாய் உள்ளது. களை யெடுக்காமல் விட்டால் நிலத்தில் புல் பூண்டு முதலிய செடிகள் வளர்ந்து கெடுதி செய்வதல்லாமலும் பூமியின் சாரத்தையும் இழுத்துக் கொள்ளும். ஆனதினாலே தான் களையெடுத்தல் அவசியமென்று சொல்லுகிறது.

**தண்ணீர் பாய்ச்சுதல்:**—இதற்குத் தண்ணீர் முறையாகப் பாய்ச்சுதல் தேவையில்லை. புரட்டாசிமாதத்தில் மழைக்குறைவால் ஒரு வேளை காய்ந்து போகும். அந்தக்காலத்தில் ஒரு தண்ணீர் அல்லது இரண்டு தண்ணீர் இறைத்தால் மிக்க அனுகூலமாக இருக்கும். பயிர்கள் வாடின காலத்தில் இந்தமாதிரி செய்யாவிட்டால் செடிகளெல்லாம் சோர்ந்து தக்க பலனைக்கொடுக்க மாட்டா. ஆகையால் பொதுவாகவே அதிக வெயிலினால் பயிர்வாட ஆரம்பித்த காலத்தில் தண்ணீர் இறைத்துப் பயிரை செழிப்பாக வைத்தல் மிக அவசியம்.

**பூ:**—செடிகளெல்லாம் பூத்து இருக்கையில் மழை பெய்யுமானால் இந்த பூக்கள் எல்லாம் உதிர்ந்து போக ஹேது வுண்டு. ஆகையால் பூத்து செடியில் பிஞ்சு இறங்கும் வரையில் அதிக மழை கூடவே கூடாது.



**நெற்று:**—பிஞ்சு இறங்கின இரண்டு மூன்று மாதத்திற்குள் செடிகளில் உள்ள காய்களெல்லாம் முற்றி நெற்றாக ஆகிவிடும். சில முற்றாத காய்களும் இருக்கும். கடைகளில் விற்கும் துவரையில் பிஞ்சுத் துவரைகளும் கலந்து இருப்பதை காண்கிறோம். பெரும்பாலும் செடிகளில் உள்ள காய்கள் முற்றி நெற்றாக ஆன உடன் செடிகளை எல்லாம் வெட்டி களத்தில் வெயில் படும்படி போட்டுக் காயவைத்து நல்ல வெயில் நேரமான 12 மணி சுமாருக்குத் தடி கொண்டு நெற்றுக்களெல்லாம் கீழேவிழும்படி அடிக்க வேண்டும். களம் என்றால் மணல் சம்பந்த மில்லாமல் கெட்டியாய் உள்ள இடமே. மணல் சம்பந்தப்பட்டிருக்குமானால் துவரைகளெல்லாம் மணலில் புகுந்து சொருகிக்கொள்ளும். செடிகளில் உள்ள நெற்றுகள் முழுவதும் உதிர்ந்தவுடன் செடிகளை அப்புறப்படுத்திவிட்டு நெற்றுக்களைக் காயவைக்க வேண்டும். பிறகு மறுநாள் வெயிலில் காயவைத்து அன்றும் முந்தின நாளைப்போல் 12 மணிக்குத் தடியால் நெற்றுக்களை அடிக்க வேண்டும். இப்பொழுது துவரை வேறாகவும், தோல் வேறாகவும் பிரியும். பின்பு துவரையைத் தூசி முதலிய குப்பைகளும், தோல்களும் போகும்படி தூற்றவேண்டும். பிறகு கண்டு முதல் செய்யவேண்டும். தோல் என்று சொல்வது துவரை நீங்கிய நெற்றையே.

**தோல்:**—இது மாட்டுக்கு நல்ல தீனி. புஷ்டியைச் செய்யுந்தன்மையுள்ளது. இந்தக்காரணத்தினாலேதான் இளைத்த மாடுகளுக்கு இதைத் தீனியாக வைப்பது வழக்கம். சிலர் அடுப்பும் எரியவிடுகிறார்கள்.

**செடி:**—அடுப்பு எறியவிடுகிறதற்கும், வேலியடைப்பதற்கும் உபயோகப்படுகிறது.

**செலவு:**—இது பயிர் செய்வதற்கு எட்டு மாத காலம் போதுமானது. நிலத்தின் சொந்தக்காரர் செட்டாகவே செலவழித்தால் முப்பது ரூபாய்க்கு மேலாகாது. இதற்கு கொஞ்சம் கூடவும் குறையவும் செலவானாலும் ஆகும்.

**மகசூல்:**—இது நன்றாக விளைந்தால் 50 கலம் துவரை விளையும். இப்பொழுது கலம் ஒன்றுக்கு ரூ 3-க்குக் குறையாமல் விற்கிறது. மகசூலின் கிரயம் ரூ 150. செலவு போகபாக்கி ரூ 120 லாபம் கிடைக்கிறது. இதை உத்தேசித்தால் இது பயிரிடத்தகுந்த இடங்களில் பயிரிடல் வேண்டுமென்று நாம் சொல்ல வேண்டுமோ?

**குறிப்பு:**—சீர்காழிதாலூகா, வேட்டங்குடி கிராமத்தில் சின்னப்பா பிள்ளை வீட்டின் தொட்டிமுற்றத்துக்கருகாமையில் ஒரு செடி மரமாகவளர்ந்து மூன்று வருஷமிருந்து மாதம் இரண்டு பட்டணம் படி வீதம் துவரை கொடுத்துக்கொண்டிருந்தது. இது 10 அடி அகலம், 12 அடி நீளமுள்ள இடத்தைக் கவர்ந்து கொண்டும் இருந்தது. பிறகு தானே பட்டுப்போய் விட்டது.

---

## SEED SELECTION IN KAR PADDY.

## கார்நெல் தினுசுகளில் விதை பொறுக்கல்.

தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களின் அநேக பாகங்களில் கார்தினுசு நெல்பயிர் இப்போது அறுவடையாகிறகாலம். நமது கிருஷிகர் அறுவடைகாலத்துக்கு முன்னமே வயல்களிலுள்ள பயிரைச் சுற்றிப்பார்த்து, செழிப்பாய் வளர்ந்து நீண்டகதிர்களுடன் விளைவாயிருக்கும் வயலில் அறுவடையாகும் நெல்லை விதைக்காக வைத்துக்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்துக்கொள்ளுகிறார்கள். அப்படியே அந்த வயல் அறுப்பாகுந்தினத்தில் வேறு வயல்களில் அறுப்பான கதிர்கள் அவைகளுடன் கலக்காமல் வேறாய்ப் போர் அடித்துத் தூற்றி மறுவில்லாத நெல்லைக் களமேட்டில் வைத்தே நன்றாய் நாலைந்துநாள் காயப்போட்டுப் பின் மறுபடி வீசிப் பதர்பிறித்து வேறாக்கியபின் நெல் விதையைக் கட்டிக் குதிர்களில் சேகரித்து ஈரம் ஏறாமல் காப்பாற்றிவைப்பார்கள். ஆகையால் விதை பொறுக்குவதின் அனுகூலம் நமது கிருஷிகருக்குத் தெரியாமலிருக்கவில்லை. என்றாலும் அவர்கள் சரியானபடி

விதை பொறுக்குவதில்லை. விதை பொறுக்குவதில் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய பிரமாணங்கள் என்னவென்று அவர்கள் தெரிந்துகொள்ளச் சிரமப்படுவதில்லை. ஆகையால் இந்தத் தருணத்தில் கார்நெல் தினுசுகளின் விதை சேகரிக்கும்போது அவர்கள் அனுஷ்டிக்கவேண்டிய சில பிரமாணங்களை அவர்களுக்குத் தெரிவிப்பது முக்கியமென்று நினைத்து அவைகளைச் சுருக்கமாய் இங்கு வெளியிடுகிறோம்.

1. எந்த வயலின் பயிரிலிருந்து விதை பொறுக்கலாம் என்று பார்க்கும்போது, தண்ணீர்த் தட்டுக்கு உள்பட்டிருந்தும் அதை ஒரு பொருட்டாக்காமல் நன்றாய்க் கதிர்வாங்கி விளைந்திருக்கும் வயலைத் தெரிந்தெடுப்பது உத்தமம்.

2. நடுகை செய்யப்பட்ட பயிரில் சில வேளைகளில் அனேக தினுசுநெல் நாற்று கலந்து நடுகை செய்யப்பட்டிருக்கும். ஒவ்வொரு நடுகையிலுங் கூட பலவகையான நாற்றுகள் சேர்ந்து நடுகையாகியிருக்கலாம். ஒரு நடுகையிலுள்ள எல்லாக் கதிர்களிலும் சுத்தமாய் ஒரே தினுசு நெல்லே விளைவாயிருக்குமென்று சொல்ல முடியாது. ஆகையால் நெல்விதை பொறுக்குவதில் எந்தத் தினுசு நெல்விதை அவசியமோ அந்தத் தினுசுக் கதிர்களாய்ப் பார்த்து ஒவ்வொரு கதிராய்ப் பொறுக்கவேண்டும்.

3. அப்படி கதிர்களைத் தெரிந்தெடுப்பதில் மற்றவைகளை விட அதிக நீளமாயிருக்கிற கதிர்களில் நெருக்கமாய் நெல்மணிகள் அடுக்கிட்டிருக்கிற கதிர்களையே எடுக்கவேண்டும். அதாவது ஒரு வயலிலுள்ள கதிர்கள் பொதுவாக 8-அங்குல நீளமாயிருந்தால், அதைவிட அதிக நீளமான கதிர்களை எடுக்கவேண்டும். அப்படி எடுக்கும் கதிர்கள் 9 அங்குல நீளமாயிருந்ததென்று வைத்துக்கொள்வோம். 9 அங்குல நீளமுள்ள பல கதிர்களில் சாதாரணமாய் ஒவ்வொன்றிலும் 200 நெல்மணிகள் இருந்தனவென்று வைத்துக்கொள்ளுவோம். அவைகளில் ஒரு கதிரில் 230 அல்லது 240 நெல்மணிகள் இருந்தால் அந்தக்கதிரிலுள்ள நெல்லையே விதைக்காக வைத்துக் கொள்ளவேண்டும். இப்படிசெய்வதில் அதிகசிரமம் இருக்கிறதென்று விட்டுவிடக்கூடாது. ஏனென்றால் சிரமமில்லாமல் எந்தப் பெரிய காரியந்தான் கைகூடும்?

4. இப்படி செய்வதில் நோய் நொடிக்குட்படாத தாள்களைப் பார்த்துத் தெரிந்தெடுக்கவேண்டும்.

5. மேலும் ஒரே நாற்றிலிருந்து அநேக பக்கத்தாள்கள் கிளைத்து மூடுகட்டிக் கதிர்வாங்கியிருப்பவைகளில்மேற்சொன்னபடிசிறந்த கதிர்கள் வாய்த்தால் இன்னும் மேலாகும்.

6. கதிர்களிலுள்ள நெல் மணிகள் பருத்தும் திரட்சியாயும் மெல்லிய உமியுள்ளதாயுமிருக்கவேண்டும். இடையில் முற்றாத கருக்காய் உள்ள கதிர்களைப் பொறுக்கக்கூடாது.

7. பொறுக்கின கதிர்களை வேறாக அடித்து நெல் உதிர்த்துத் தூற்றிக் காயவைத்துக் குதிர்களில் போட்டுவைக்கவேண்டும்.

8. இப்படிச் சேகரித்த விதையின் அளவு வெகு கொஞ்சமாயிருந்தாலும் போதுமானது. அதை வேறே ஒரு நாற்றங்காலில் நாற்றுவிட்டு அந்த நாற்றைத் தனியே நட்டு அதிலிருந்து மறுவருஷம் மேற்சொன்னபடியே விதை பொறுக்கியெடுத்து இப்படியே வருஷாவருஷம் செய்துவந்தால், சில வருஷங்களில் சுத்தமானதும் கலப்பில்லாததும், சிறந்ததுமான ஒரு தினிசு நெல் ஏற்படும். அதில் கிடைக்கும்மாசூல் ஏராளமாயிருக்கும். அது தண்ணீர்த்தட்டைத்தாங்கும். ஆகையால் இத்தருணத்தில் கிருஷிகர் மேற்சொன்ன பிரமாணங்களைக் கூடியவரையில் கவனித்துப் பின்பற்றுவார்களென நம்புகிறோம்.

"கிருஷிகன்."



## SINGLE PLANTING OF PADDY

BY

H. C. SAMPSON.

*Deputy Director of Agriculture, Trichinopoly.*

## ஒற்றை அலகு நடுதல்.

கொஞ்சகாலமாக விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் விவசாயிகளை நெல் நாற்று நடுவதை ஒற்றை அலகாக நடும்படி சொல்லி வருகிறார்கள். கிருஷ்ணா நதிபாயுமிடங்களில் இந்த மாதிரியாக்வே வெகு காலமாக நெல் நடவாகி வருகிறது. இப்பொழுதும் அப்படியேதான் நடவாகிறது. அங்கே விளையும் விளைச்சலைப்போல் இந்த ராஜதானியில் வேறு எங்கேயும் காணமுடியாது. திருநெல்வேலி ஜில்லாவிலும் தஞ்சாவூர் ஜில்லாவில் ஆற்றுப்பாய்ச்சல் உள்ள இடங்களிலும் ஒற்றை அலகு நட ஆரம்பித்து விட்டார்கள். தற்காலத்தில் ஆயிரக்கணக்கான ஏகர்கள் இந்தமாதிரி சாகுபடி ஆகின்றன.

இந்த ராஜதானியில் தெற்கு ஜில்லாக்களில் போன வருஷத்தில் சம்பா பிசானம் சாகுபடி செய்யும் காலத்தில் 10 தினுசு நெல்லுகள் ஒற்றை அலகாக நடப்பட்டன. இதில் ஜீரகச் சம்பா ஒன்று. இது வெகு சன்னமான நெல்லு. ஆனால் ராசி (மேனி) காணுவதில்லை. ஆனால் சாப்பாட்டுக்கு வெகு நன்றாய் இருக்கும். இந்த ஜீரகச் சம்பாவைத் தவிர மற்ற ஒன்பது தினுசு நெல்லும் அக்கம்பக்கத்து நிலக்காரர்களால் வழக்கம் போல் சாகுபடி செய்யப்பட்ட சம்பா நெல்லைவிட அரைப் பங்கு ஜாஸ்தியாகவே நெல் கண்டது. ஒற்றை அலகு நட்ட நிலங்களுக்கு அக்கம்பக்கத்து நிலங்களைப்போலவேதான் செய்நேர்த்தி செய்யப்பட்டது.

ஒற்றை அலகு நடுவது ராசி காணுவதற்கு மட்டும் அல்ல. அனுபோகத்தில் ஒற்றை அலகு நடவு பயிர்களிலிருந்து எடுக்கப்பட்ட விதை கொத்துக்கொத்தாய் நட்ட பயிரிலிருந்து எடுக்கப்பட்ட விதையைவிட வெகு சிலாக்கியமாயிருக்கிறது. இதற்குக் காரணம், சுலபமாகவே அறிந்துகொள்ளலாம். 15, 20, நாற்றுள்ள இடத்தில் ஒரு நாற்றை நட்டால் அந்த 15, 20 நாற்றிற்கும் உள்ள இடமும், மண்ணும், எருவும், ஒற்றை நாற்றுக்கு மட்டும் உதவுகிறது. ஆகையால் அந்த ஒற்றை நாற்று நன்றாய் பருத்து, நல்ல திறமான தானியத்தை கொடுக்கிறது. ஒற்றை அலகு நடுவதில் இன்னும் ஒரு விசேஷம் ஏற்படுகிறது: ஒற்றை நாற்றாக நட்டு எடுக்கப்பட்ட விதையை உபயோகிக்கும் பக்ஷத்தில், பயிருக்கு தூரு (மூடு) கட்டும் குணம் வர வர, ஜாஸ்தியாகி நல்ல மாசூலையும் அது கொடுக்கும். இந்த விஷயம் பாலூர் விவசாய பண்ணையில் நடந்த சோதனையில் நன்றாய் வெளியாகிறது. 1907-08ம் வருஷத்தில் 16 தாக்கு (வயல்) களில் கருடன் சம்பா சாகுபடி செய்யப்பட்டது. சராசரி ஏகர் ஒன்றுக்கு 1952 ராத்தல் நெல் கிடைத்தது. 1908-09ம் வருஷத்தில் மேற்சொல்லிய 16 தாக்குகளும் முந்திய வருஷம் போலவே எருப்போட்டு பயிர் செய்யப்பட்டன. சராசரி ஏகர் 1க்கு 2264. ராத்தல் நெல் அறுவடை ஆயிற்று.

1908-09ம் வருஷத்தில், அதற்கு முந்திய வருஷம் ஒற்றை அலகாக நட்டு விளைந்த விதையை விதைத்ததைத் தவிர, மற்ற எல்லா விதத்திலும் மேற்சொல்லிய இரண்டு வருஷங்களிலும் சாகுபடி ஒரே விதமாகத்தான் நடந்தது. ஆகையால் 1908-09ம் வருஷத்தில் ஜாஸ்தியாகக்கண்ட 312 ராத்தல் நெல்லும் முந்திய வருஷத்தில் ஒற்றை அலகு நட்டு

விளைந்த விதையை உபயோகித்ததினாலுண்டான பலன் என்று ஏற்படுகிறது.

கார் நெல்லுகளை ஒற்றை அலகாக நட்டு வெகுசாய் பரீக்ஷைகள் செய்யவில்லை. அந்த நெல்லுகளைக்கொண்டு மலையாளப்பக்கத்தில் மட்டும் மூன்று வருஷங்களாக பரீக்ஷைகள் செய்யப்பட்டுவருகின்றன. முதல் வருஷத்தில் ஒற்றை நாற்றாக நட்டு விளைந்த நெல்லை இரண்டாவது வருஷத்து விதையாகவும், இரண்டாவது வருஷத்தில் நட்டு விளைந்த நெல்லை மூன்றாவது வருஷத்து விதையாகவும் உபயோகிக்கப்பட்டது. முதல் வருஷத்தில் ஒற்றை அலகாக நட்டதில் பயிர் ஒரு தூர் அல்லது தப்பினால் இரண்டு தூர்களுக்கு மேல் கட்டவில்லை. இரண்டாவது வருஷத்தில் அநேகம் பயிர்களுக்கு மூன்று தூர்கள் இருந்தன. மூன்றாவது வருஷத்தில் அநேகமாய் எல்லாப்பயிர்களுக்கும் மூன்று தூர்களும் சில பயிர்களுக்கு 5 தூர்களும் இருந்தன. இப்படிப்பட்ட பயிர்களிலிருந்து உண்டாகும் மாசூலானது தற்காலத்தில் நாலைந்து நாற்றாய் சேர்த்து நடப்பட்ட பயிர்களின் விளைச்சலைவிட குறைச்சல்தான். ஆனாலும் ஒற்றை நாற்றாய் நடப்பட்ட பயிர் திறமாகவே இருக்கிறது. இந்தப்பயிர்களுக்கு தூர் கட்டும் குணம், நாளடைவில் ஜாஸ்தி ஆக ஆக, கொத்துக்கொத்தாய் நடப்படும் பயிரிலிருந்து கிடைக்கும் மாசூலை விட ஜாஸ்தியாகவே மாசூல் கிடைக்கும்.

ஒற்றை நாற்று நடுவதாயிருந்தால் நாற்றங்காலில் அதிக விதை விடவேண்டியது அநாவசியம். 1 ஏகர் சாகுபடிக்கு 7 ஸெண்டு நிலத்தில், 7 பட்டணம் படி விதை விதைத்தால் எதேஷ்டம். முடியுமானால், சேற்று நாற்றாய் விடுவதை விட புழுதிக்கால் நாற்றாய் விடுவது நலம்.

நாற்றங்காலுக்கு நல்லதொழு எருவும் சாம்பலும் போடவேண்டும். பறித்து நடுவதற்கு முன், நாற்றை ரொம்ப வளர விடக் கூடாது பயிர் எத்தனைமாதமோ அத்தனை வாரம் மட்டும் நாற்றை வளரவிட்டால் போதுமானது. உதாரணமாக, 5 மாதத்துப் பயிரானால் 5×7. அதாவது 35 நாளைக்கெல்லாம் நாற்றைப் பறித்து விடவேண்டும்.

முதலில் கூலிகள் லேகுவில் ஒற்றை அலகாக நடமாட்டார்கள். ஆகையால், அவர்கள் அப்படிச் சரியாய் செய்கிறவரையில் கூடவிருந்து பார்க்கவேணும். மேற்சொல்லியபடி, நாற்றுத் தயாராயிருக்கும் பக்ஷத்தில் அவைகள் உறப்பாக விருக்கும். அவைகளை சுலபமாய் ஒவ்வொன்றாக பிரித்துஎடுத்து விடலாம்.

நடவு எவ்வளவு தூரத்தில் போடவேண்டுமென்பதைப்பற்றி அவரவர்கள் உசிதம்போல் செய்யவேண்டியது. ஏகர் 1-க்கு ஆயிரம் பட்டணம் படி விளையக்கூடிய நிலங்களில் ஒரு சாண் தூரமும், 750 பட்டணம் படிவிளையக்கூடிய நிலங்களில் ¾ சாண் தூரமும், 500 படிக்குக்குறைந்து விளையக் கூடிய நிலங்களில் ½ சாண் தூரமும் விட்டு நடுவது நலமாக விருக்கும். ஏகர் 1-க்கு சாதாரணமாய் 1500 பட்டணம்படி விளையும் நிலங்களில் இரண்டு சாண் விட்டாலும் விடலாம் ரொம்ப பஞ்சை நிலங்களில் ஒற்றை அலகு நடுவதாயிருந்தால் செலவு அசாத்தியமாகும்.

மேலே சொல்லியவைகளைத் தவிர, விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் ஜாஸ்தி சொல்லக்கூடிய ஸ்திதியில்இல்லை. நெல்லினுசின்பேரிலும், நாற்றின் குணத்தின் பேரிலும், விதை, ஒற்றை அலகு நட்டு விளைந்த நெல்லா அல்லவா என்பதின்பேரிலும் விளைவு ரொம்பபொருத்திருக்கிறது.

எச். வி. ஸாம்ஸன்.



# AGRICULTURAL NOTES.
# விவஸாயக் குறிப்புகள்.

A REMEDY FOR THE WEEVIL.

**அந்துப் பூச்சிக்கு ஒரு சிகிச்சை.**—நெல் போன்ற தானியங்களை வெகுநாளைக்கு வைத்திருந்தால் அவைகளை அந்து கொறித்துப் பதராக்கி நஷ்டம் விளைவிப்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். ஒரு நண்டைப்பிடித்து கயிற்றில் கட்டி நெல் போன்றதானியங்கள் கொட்டியிருக்கும் இடத்தில் தொங்கவிட்டிருந்தால் அந்துஅண்டாதாம். இதற்கு காரணம் தெரியவில்லை. ஆனாலும் மேலே சொல்லியபடி செய்வதில் யாதொரு சங்கடமும் இல்லாததினால் வேண்டியவர்கள் பரீக்ஷைசெய்து மேற்சொல்லிய விஷயம் சரி, பிசகு என்று அறிந்து கொள்ளலாம்.

CATTLE BREEDING.

**ஆடுமாடுகள் வளர்த்தல்.**—போன ஏப்பிரல் மாசத்தில் நெல்லூர் ஜில்லா ஒங்கோலில் நடந்த ஆடுமாடுகளின் காட்சியில் இதரதேசத்து கவர்ன்மெண்டார்கள் அநேக மாடுகளை வாங்கினார்கள். பிலிப்பைன் தீவு கவர்ன்மெண்டார் 12 மாடுகளும், ஜாவா முதலிய கீழ் இந்திய தீவுகளின் கவர்ன்மெண்டார் 256 மாடுகளும், ப்ரேஸீல் கவர்ன்மெண்டார் 314 மாடுகளும் வாங்கினார்களாம். இப்படிக்கு ரூ 60,000 க்கு மாடுகள் விற்று முதலாயிருக்கிறது. பிலிப்பைன் கவர்ன்மெண்டாருக்கு எருமை மாடுகள் தேவையாம். நல்ல ஜாதி மாடுகளை மட்டில் வளர்த்து வந்தால் மேலே சொல்லிய கவர்ன்மெண்டார்கள் வருஷந்தோறும் மாடுகள் வாங்குவார்களென்று தெரியவருகிறது. அரேபியாதேசத்துக் குதிரைகள் சிறந்தவைகள். அவைகளைவளர்க்கும் அரேபியர்கள் தங்கள் பெண் குதிரைகளை ஒரு நாளும் விற்பதில்லை. ஆதலால் அராபிக் குதிரை வியாபாரம் அரேபியர் கைவிட்டுப்போகாமல் அவர்களுக்கே நல்ல லாபத்தைக் கொடுத்துக் கொண்டு வருகிறது. ஆகையால் இதேமாதிரியாக மாடுகள் வளர்ப்பவர்கள் நல்ல கிடாரி மாடுகளையும் பொலிகாளைகளையும் என்ன உயர்ந்த விலை வந்தாலும்கொடுக்காமல் தாங்களே அவைகளை வைத்துக் கொண்டு அவைகளிலிருந்தே கன்றுகளை உண்டாக்கி விற்கவேண்டும்.



HORSE GRAM.

**கொள்ளு.**—மைசூரில் ஏகர் ஒன்றுக்கு 50 ராத்தல் கொள்ளு விதையாக விதைக்கிறார்களாம். இப்படி விதைத்தால் 1100 ராத்தல் கொள்ளு காணுகிறதாம். ஏகர் ஒன்றுக்கு செலவு உழவு, அறுவடை, காயப்போடுதல் இவைகளெல்லாம் சேர்ந்து ரூ. 4 ஆகும். தற்காலத்தில் 200 ராத்தல் மூட்டைக் கொள்ளு ரூ. 10 ஆக விற்கிறது. ஆகவே ஏகருக்கு ரூ. 55 கிடைக்கிறது. செலவு ரூபாய் 4 போனால் பாக்கி ரூ. 51 லாபமாகும்.

THE COCOANUT TREE.

**தென்னை மரம்.**—காற்று அதிகமாய் அடிக்கும் இடங்களில் தென்னை மரம் வெகு நன்றாய் வளரும். காற்றோட்டம் அதிகமில்லாமல் நான்கு பக்கங்களும் அடைபட்டிருக்கும் பள்ளத்தாக்குகளில் உள்ளமரம் பலஹீனமாயும் சீம்பியும் இருக்கக்கண்டிருக்கிறார்கள். ஆகையால் தென்னை நன்றாய் வளரவேண்டுமானால் முதலாவது, மரம் காற்றோட்டம் அதிகமாயுள்ள இடத்தில் இருக்கவேண்டும். இரண்டாவது, நல்ல சூரியவெளிச்சமும், விசாலமும் வேண்டும். மூன்றாவது, நிலம் அதிக சத்துள்ள பூசாரத்தோடு கூடியதாய் இருக்கவேண்டும். நான்காவது, ஜலம் யதேஷ்டமாய் இருக்கவேண்டியது.

CASTOR CAKE.

**கொட்டைமுத்துப் பிண்ணாக்கு.**--பிரான்ஸ் தேசத்தில் சில பாகங்களில் உருளைக்கிழங்கு, உள்ளிப்பூண்டு இவைகள் சாகுபடியாகும் நிலங்களுக்கு கொட்டைமுத்துப் பிண்ணாக்கை உரமாக ரொம்ப உபயோகிக்கிறார்களாம்.

CULTIVATION NEAR OLD STUMPS

**பழைய அடிக்கட்டைகளின் பக்கத்தில் சாகுபடி செய்தல்.**—சில பேர்கள் மரங்களை வெட்டிவிட்டு அடிக்கட்டையையும் வெட்டி எடுத்துவிடாமல் அவைகளை நிலத்திலேயே விட்டுவிடுகிறார்கள். இந்தக் கட்டைகள் நாளடைவில் அழுகி சுற்றுப்பக்கத்திலுள்ள செடிகளுக்கு தீங்கை விளைவிக்குமாம். ஆகையால் சாகுபடி நிலங்களில் அடிக்கட்டைகளை நிறுத்தி வைப்பது நல்லதல்ல.

SCIENTIFIC MANURING.

**சாஸ்திர முறைப்படி எருவிடுதல்.**—"சாஸ்திர முறைப்படி உரமும் உரமிடுதலும்" என்று தலைப்பெயருள்ள ஒரு புஸ்தகம் நமது பார்வைக்கு வந்திருக்கிறது. இது வேண்டியவர்கள் சென்னப்பட்டணம் **பாரி அண்டு கம்பெனி**யாருக்கு எழுதிக்கொண்டால் இனாமாகக்கிடைக்கும்.

## TRADE NOTES.
## வியாபாரக் குறிப்புகள்.

---

TRADE IN GROUNDNUT.

**மணிலாக்கோட்டை வியாபாரம்.**—ஐரோப்பாவில் பிரான்ஸ் தேசத்திலுள்ள மார்ஸெயில்ஸ் பட்டணத்தில் சாதாரணமாய் வருஷமொன்றுக்கு 9 லக்ஷம் பாரம் மணிலாக்கொட்டை செலவாகக் கூடியது. இதில் ஏறக்குறைய பாதி ஆப்பிரிக்கா கண்டத்தில் மேற்கு பாகத்திலுள்ள ஸெனிகல் மாகாணத்திலிருந்தும், பாக்கி பாதி இந்தியா முதலான பல இடங்களிலிருந்தும் அனுப்பப்படுகிறது. 1908-ம் வருஷத்தில் மார்ஸெயில்ஸில் பாரம் 1-க்கு சுமார் $33\frac{1}{4}$ ரூபாய் முதல் 40 ரூபாய் வரையில் விலையாயிருந்தது. இப்பொழுது மணிலாக்கொட்டை அறுவடையானதும் ஏககாலத்தில் எல்லாரும் விற்று விடுவதால் விலை மலிவாய்ப் போய்விடுகிறது. இப்படிக்குச்செய்யாமல் நாளாவர்த்தியில் விற்று வந்தால் நல்ல விலை கிடைக்கும். அறுவாகி கப்பலில்ஏற்றுகிற வரையில் கடலைக்காயை மழையில் அடிபடாமல் ஜாக்கிரதையாய் காப்பாற்றவேண்டும். இப்படிக்குச்செய்யாமல் ஏற்றுமதி செய்தால் வழியில் கெட்டுப்போகிறதாம். மார்ஸெயில்ஸில் உள்ள வர்த்தகர்கள் இது விஷயத்தில் கடலைக்காய் ஏற்றுமதி செய்கிறவர்கள் கவனம் செலுத்தவேண்டுமென்று சொல்லுகிறார்களாம்.

MADRAS GROUNDNUT TRADE.

**மதராஸ் மணிலாக்கோட்டை வியாபாரம்.**—1907--08-ஹுத்தில் தொண்ணூற்றாறே காலே அரைக்கால் லக்ஷம் பெறுமான சுமார் இரண்டு லக்ஷத்து எழுபத்து மூவாயிரம் பாரம் மணிலாக்கொட்டை சென்னை ராஜதானியிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது. அடுத்த 1908-09 ஹுத்திலும் ஒரு கோடியே பதினைந்தரை லக்ஷம் ரூபாய் பெறுமான சுமார் மூன்று லக்ஷத்து முப்பத்து மூவாயிரம் பாரம் ஏற்றுமதி செய்யப்பட்டது. முதல் ஒன்பது மாசத்தில் சரக்கு விசேஷமாய் ஏறவில்லை. புது மாசூலானதும் கடைசி மூன்று மாசத்தில் விசேஷ ஏற்றுமதி செய்யப்பட்டது. ஏற்றுமதியான ஒருகோடியே $15\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய் சரக்கில் பிரான்ஸ் தேசத்துக்கு மட்டும் ஒரு கோடியே $12\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய் சரக்கு போய்விட்டது. மேலே சொல்லிய ஏற்றுமதி தவிர புதுச்சேரியின் வழியாயும் மணிலாக்கொட்டை ஏற்றுமதியாயிருக்கிறது. அதன் மூன்று வருஷத்து விவரம் கீழே குறிக்கப்பட்டிருக்கிறது:—1906-07ஹு 1,93,320 பாரம், 1907-08ஹு 1,60,640 பாரம், 1908-09ஹு 2,43,758 பாரம்.

A CHAMBER OF COMMERCE.

**ஒரு வியாபார சங்கம்.**—நாளது செப்டம்பர்மீ 13உ ரங்கூனில் சுமார் இருநூறு இந்திய வர்த்தகர்கள் கூடி ஒரு வியாபார சங்கம் ஏற்படுத்தியிருப்பதாய் அறிகிறோம். இந்த சங்கத்தின் பெயர் "ரங்கூன் இந்திய வர்த்தக சங்கம்" என்பதே. இதேமாதிரி சென்னப்பட்டணத்திலும் ஒரு இந்திய வர்த்தக சங்கம் ஏற்பட்டிருக்கிறது.

TRADING UNDER EUROPEAN NAMES.

**ஐரோப்பியர் பெயரை வைத்து வியாபாரம் செய்தல்.**—நம்முடைய தேசத்தில் அனேக இந்திய வியாபாரிகள் தங்கள் கடைக்கு தங்களுடைய சொந்தப்பெயரைப் போடாமல் ஐரோப்பியர் பெயரைக்கொடுத்து வியாபாரம் செய்துவருகிறார்கள். இதனால் வாங்குகிறவர்கள் அந்தக்கடைக்கு முதலாளி ஐரோப்பியர் என்று எண்ண ஹேதுவாகிறது. தவிர, பாங்கிகளும், சீமையிலிருந்து சாமான் அனுப்புகிறவர்களும் மேலே சொல்லிய கடையின் உள் அந்தரங்கம் தெரியாமல் ஐரோப்பியர் கடை என்று எண்ணி மோசம் போகிறார்களாம். ஆதலால், இந்தியாவில் ஒவ்வொரு கடையும், அதன் முதலாளி இன்னாரின்னார் என்றும் பதியவைக்கக் கட்டாயப்படுத்த ஒரு சட்டம் ஏற்படவேண்மென்று சில ஆங்கிலேய வியாபார சங்கங்கள் முயற்சி செய்து வருகின்றன.

FIBRES.

**நார்கள்.**—1908-09ம் வருஷத்தில் சென்னை ராஜதானியிலிருந்து சுமார் பன்னிரண்டே அரைக்கால் லக்ஷம் ரூபாய் பெறுமான நார் தினுசுகள் இதர தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. பத்து வருஷங்களாக இவ்வளவு நார் ஏற்றுமதியானது இல்லை. இவைகளில் முக்கியம் பனை நார். இது கோதாவரி ஜில்லாவில் காகிநாடாவிலிருந்தும் திருநெல்வேலி ஜில்லாவில் தூத்துக்குடியிலிருந்தும் அனுப்பப்பட்டது.



## INDUSTRIAL NOTES.
## கைத்தொழில் குறிப்புகள்.

---

INDUSTRIAL DEVELOPMENT.

**கைத்தொழில் அபிவிருத்தி.**—இந்தியாவில் கொஞ்சகாலமாக சுதேசி யுணர்ச்சி மும்மரமாகி தேசத்தில் கைத்தொழில்களை விருத்தி செய்யவேண்டுமென்று பலவழியாய் பலதேசாபிமானிகள் முயற்சி செய்து வருகிறார்கள். இது வரைக்கும் நடந்திருக்கும் முயற்சிகளைப்பார்த்தால் கைத்தறி நெசவுகள் ஏற்படுத்துவதும் சுதேசி ஷாப்புகள் வைப்பதும் தான் எல்லா இடங்களிலும் செய்யப்பட்டிருக்கின்றன. தற்காலத்தில் இதர தேசங்களில் எல்லாம் கைத்தொழில்களும் வியாபாரமும் முன்னுக்கு வந்திருப்பதற்குக் காரணம், மனிதன் கையால்மட்டும் செய்யப்பட்ட சாமான்களை சில்லரையாய்விற்றதனால் அல்ல. நெசவுத்தொழில் ஒவ்வொரு தேசத்துக்கும் முக்கியமான தொழிலாயிருந்து செல்வத்தை விளைவிக்கக்கூடியதானாலும், நல்ல லாபந்தரத்தக்க கைத்தொழில்கள் எவ்வளவோ இருக்கின்றன. இவைகளெல்லாம் யந்திர சகாயத்தால் செய்யப்படுகின்றன. இப்படிச் செய்யப்படும் சரக்கு மனிதர்கள் சௌகரியத்துக்கு ஒத்ததாயும் மலிவாயும் இருப்பதால் உலகமெங்கும் பரவி நல்ல லாபத்தையும் தருகிறது.

OIL INDUSTRY.

**எண்ணெய் இரக்கும் கைத்தொழில்.**-நம்முடைய தேசத்தார்களால் கவனிக்கப்படாமல் இருக்கும் முக்கியமான கைத்தொழில்களில் எண்ணெய் இரக்குதல் ஒன்று. இந்தியாவிலிருந்து வருஷந்தோறும் இதர தேசங்களுக்கு ஏற்றுமதியாகும் எண்ணெய் வித்துக்களின் பரிமாணம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாது. சென்னை ராஜதானியிலிருந்துமட்டும் போன வருஷத்தில் எள்ளு, மணிலாக்கொட்டை, ஆமணக்குக்கொட்டை, பருத்திக்கொட்டை இவைகள் நான்கு மட்டும் சுமார் $1\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு இதர தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. பிறதேசங்களுக்கு வித்தாய் அனுப்பாமல் அதிலிருந்து எண்ணெய் ஆட்டினால் எண்ணெய்களை ஆதாரமாய்க் கொண்ட சோப்பு செய்தல், மெழுகுவர்த்தி செய்தல், இவைகளைப்போன்ற கைத்தொழில்கள் ஏற்படுவதற்கு ஒரு பெரிய சாதகமாகும். தவிர, எண்ணெய் ஆட்டின பிறகு உண்டாகும் பிண்ணாக்கை மாடுகளுக்குத் தீனியாகப்போட்டோ அல்லது நிலங்களுக்கு எருவாகப்போட்டோ விவசாயம் முன்னுக்கு வரவும் ஹேதுவாகும். தற்காலத்தில் எண்ணெய் வித்துக்களிலிருந்து எண்ணெய் எடுக்காமல் வித்தாயே இதர தேசங்களுக்கு அனுப்பிவிடுவது லாபகரமாக இருக்கலாம். அதற்குக் காரணம் நம்முடைய தேசத்தில் வித்துக்களிலிருந்து எவ்வளவு எண்ணெயை கழட்டிக்கொண்டு விடலாமோ அவ்வளவையும் கழட்டிக்கொள்வதற்கு நாம் உபயோகிக்கும் செக்குகளும், பிரஸ்ஸுகளும் தகுந்த கருவிகளல்லாமையாயிருப்பதே. சமீபத்தில் சென்னப்பட்டணத்தில் ரசாயனசாஸ்திர முறையால் பிண்ணாக்கிலிருந்து நிரம்ப எண்ணெய் எடுத்து ஒரு நிபுணர் காட்டினதை என்னுடைய சிநேகிதர் ஒருவர் நிதர்சனமாய்ப் பார்த்திருக்கிறார். தவிர நல்ல யந்திரங்களை உபயோகித்தால், இப்பொழுது செக்குகளையும் பிரஸ்ஸுகளையும் கொண்டு எடுக்கப்படும் எண்ணெயை விட, வெகு ஜாஸ்தியான எண்ணெய் எடுத்து நல்ல லாபம் பெறலாம்.

OOTACAMUND INDUSTRIAL CONFERENCE.

**உதகமண்டலம் கைத்தொழில் அபிவிருத்தி சங்கம்.**—புதியதாய் எண்ணெய் இரக்குவதற்காக நல்ல யந்திரம் கண்டு பிடிக்கிறவனுக்கு கவரன்மெண்டார் நல்ல வெகுமானம் கொடுக்கவேண்டும் என்றும், இருக்கிற எண்ணெய் யந்திரங்களில் நல்லவைகளை ஜனங்கள் உபயோகப்படுத்தும்படி வேண்டிய முயற்சிகள் கவரன்மெண்டார் செய்யவேண்டும் என்றும், போன வருஷத்தில் உதகமண்டலத்தில் கூடிய கைத்தொழில் அபிவிருத்தி சபையார் கவரன்மெண்டாருக்கு சிபார்சு செய்தார்கள். இந்த சிபார்சைப்பற்றி 'டைரெக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ்' என்று சொல்லப்பட்ட கைத்தொழில் இலாகா தலைவர் அவருடைய அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். புது யந்திரம் கண்டுபிடிக்கிறவனுக்கு இனாம் கொடுப்பது உசிதமல்லவாம். அதைவிட தற்காலத்தில் எண்ணெய் இரக்கும் யந்திரங்களில் என்னென்ன குற்றங்கள் இருக்கின்றன, அவைகளை எப்படி ஸரிப்படுத்தலாம், என்று எடுத்துக்காட்டி, அப்படிச் செய்தால் யந்திரங்கள் நன்றாய் விற்பனையாகலாம் என்பதையும் பிரசுரம் செய்யவேணுமாம். இப்படிச் செய்த பிறகு, இரண்டு வருஷங்கள் கழித்து எண்ணெய் இரக்கும் யந்திரங்களையெல்லாம் சேர்த்து கவரன்மெண்டார் ஒரு கண்காக்ஷி வைக்கவேணும். இந்தக் கண்காக்ஷியில் வரும் யந்திரங்கள் எல்லாம் வேலை செய்து காண்பிக்கப்பட வேண்டும். இப்படிக்காண்பிக்க கவரன்மெண்டார் தகுந்த உதவி செய்வதோடு நல்ல யந்திரங்கள் என்று ஏற்பட்டவைகளுக்கு விலை உயர்ந்த தங்கப்பதக்கங்களும் வெள்ளிப்பதக்கங்களும் கொடுக்கவேணும். இந்த அபிப்பிராயத்தை அங்கீகரித்து கவரன்மெண்டார் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை தங்களுக்கு எழுதியனுப்பும்படி டைரெக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸுக்கு உத்தரவு செய்திருக்கிறார்கள்.

# ECONOMICS.

# பொருளாதாரம்.

BORROWING BY THE RAIYAT.

**கடன் வாங்குதல்.**—விவசாயத்தையே சார்ந்திருக்கும் மிராசுதார்கள் ஏழைகளாயிருந்தாலும் சரி, அல்லது எவ்வளவு "தெம்பு" உள்ளவர்களாயிருந்தாலும் சரி, எப்போதாவது ஒருசமயமில்லாவிட்டால் மற்றொருசமயத்தில் கடன்வாங்க வேண்டியதாகவே ஏற்படும். சாகுபடிக்கு வேண்டிய விதைகள், மாடுகள் வாங்கவோ, அல்லது, மாசூலின் விலை ஏறுமென்று யோசித்து அதை விற்காமல் கட்டிவைப்பதினால் கையில் பணமில்லாமல் சர்க்கார் கிஸ்து செலுத்தவோ அல்லது திடீரென்று ஏற்படும் சுபாசுபங்களின் செலவுக்காகவோ கடன்வாங்க வேண்டியது அவசியமாகும். இப்படிக்கு கடன் வாங்குகிறவன் நிலத்தையே நம்பியிருக்கும் பக்ஷத்தில் தனக்கு ஜீவனத்திற்குக் கண்டு மிகுதியான ஐவேஜியைக்கொண்டுதான், கடன், அதன் வட்டி இரண்டையும் உளவடைக்கக்கூடும். வருஷாவருஷம் குடும்பச்செலவுபோக மீதமாகும் ஐவேஜி கடன் வாங்கின பணத்தின் வட்டிக்கு மட்டும் சரியாயிருக்கும் பக்ஷத்தில், வட்டி அடைபட்டு, கடன் கடனாகவே நிற்கும். மிகுந்திருக்கும் ஐவேஜி வட்டியைவிட ஜாஸ்தியாயிருக்கும் பக்ஷத்தில் அப்போதைக் கப்போது வட்டி செல்லாகிவிடுவதோடுகூட கடனையும் நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைத்து விடலாம். வருஷாவருஷம் மீதமாகும் ஐவேஜி, கொடுக்கவேண்டிய வட்டியை விட குறைந்ததாயிருக்கும் பக்ஷத்தில், வட்டி நாளாவர்த்தியில் மிராசுதாரை விழுங்கிவிடும். ஆகையால ஒரு மிராசுதார் கடன் வாங்குவதற்கு முன்னால் அந்தக் கடன் பணத்தைக் கொண்டு என்னலாபம் அடையலாமென்றும், அப்படிக்கடன் வாங்காமலிருந்தால் என்ன நஷ்டம் ஏற்படும் என்றும், தீரயோசித்துக் கணக்குப் பார்த்து லாபமாயிருக்கும் பக்ஷத்தில் கடன்வாங்க வேண்டுமே யொழிய வேறு ஒருக்காலும் கடன்வாங்கக் கூடாது. கடன் வாங்குவதற்கு முன்னால் எத்தனை மிராசுதார்கள் இந்தமாதிரி கணக்குப்பார்த்து கடன் வாங்குகிறார்கள்?

IMPRISONMENT FOR DEBT.

**கடனுக்கு ஜெயிலில் பிடித்துவைப்பது.**—இது விஷயமாய் இங்கிலாந்தில் ஒரு கமிட்டி சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டது. கடனை திருப்பிக்கொடுக்காதவனைப்பிடித்து, கொடுக்காததற்காக ஜெயிலில வைக்கலாமா, கூடாதா என்பதைப்பற்றி பல பேர்களை மேற்சொன்ன கமிட்டியார் விசாரித்தார்கள். கூலிவேலை செய்கிறவர்களே கடனைத்திருப்பிக்கொடுக்காமல் ஜெயிலுக்குப் போகிறார்களாம். கடன் கொடுக்கிறவர்கள் கடன் வாங்குகிறவனை ஜெயிலில் பிடித்து வைத்தால் அநேகமாய்ப் பணம் கொடுத்துவிடுவானென்று எண்ணியே ஏழையாயிருந்தாலும் ஒரு விதஜாமினும் இல்லாமல் பணத்தைக்கொடுத்து கடனை ஏற்றிவிடுகிறார்கள். கடனைவாங்கித் திருப்பிக்கொடுக்காதவனை ஜட்ஜிக்கு நியாயமென்று தோன்றினாலொழிய ஜெயிலுக்கு அனுப்புவதில்லையென்று சட்டம் ஏற்படுத்திவிட்டால் எத்தனை முதலாளிகள் ஏழை ஜனங்களுக்குக் கடன் கொடுக்கத் துணிவார்கள்? அநேகம் பேர்கள் கடன் கொடுக்கமாட்டார்களென்பது நிச்சயம். ஆகையால் ஏழைகளெல்லாம் கடன் வாங்குவதற்கும் ஹேது ஏற்படாது. இதையெல்லாம் உத்தேசித்து மேற்சொல்லிய கமிட்டியார் ஜட்ஜிக்கு இஷ்டமிருந்தாலொழிய கடனாளிகளை ஜெயிலுக்கு அனுப்பக்கூடாதென்பதாக ஒரு சட்டம் ஏற்படுத்தவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்களாம்.

A WAY OF EARNING LIVELIHOOD.

**ஒரு பிழைக்கும் வழி.**—இங்கிலாந்தில் "கிளஸ்டர்" என்பதாக ஒரு ஜில்லா இருக்கிறது. இதில் நத்தைகள் ஏராளமாகப் பிடிக்கப்பட்டு சாப்பாட்டுக்காக உபயோகப்படுத்தப்படுகின்றன. ஒரு சாக்கு நத்தையைப் பிடித்துச்சேர்த்தால் சுமார் ரூ. 12-க்கு விற்கலாமாம். நத்தையைப் பிடிப்பதற்கு இரண்டு பேர்களாக வேலைசெய்கிறார்களாம். இந்த நத்தைகள் கல்லடைந்த இடங்களிலும், சுவர் வெடிப்புகளிலும் அகப்படுகின்றன. ஒருவன் கல்லைப்புரட்டுவான். மற்றொருவன் இரும்புக் கொக்கியைக் கொண்டு நத்தைகளை இழுப்பான். இப்படிக்கு வேலைசெய்து ஒருமனிதனும் அவனுடைய 3 குழந்தைகளும் வாரம் ஒன்றுக்கு சுமார் ரூ 19 சம்பாதிக்கிறார்களாம். இந்தத் தொழில் மழைநாளில் வேலையில்லாத காலங்களில் மட்டில் செய்யப்பட்டு வந்தது. ஆனால் நத்தை தின்னும் வழக்கம் ஜாஸ்தியாகிக் கொண்டுவருவதால் நத்தை பிடிப்பதற்காகவே சில தொழிலாளிகள் ஏற்பட்டுவிட்டார்கள். நத்தை வியாபாரம் செய்கிறவர்கள் அவைகளைவேகவைத்து அணாவுக்கு 10 வீதம் விற்கிறார்களாம். நத்தை தின்னும் வழக்கம் ஆதியில் கண்ணாடி செய்கிறவர்களுக்குள் ஏற்பட்டது. இவர்களுடைய தொழிலில் மூச்சுப் பிடித்து ஊதவேண்டிய வேலை வெகு ஜாஸ்தி. ஆகையால் அவர்களுடைய சுவாசாசயம் முதலிய அவயவங்களுக்கு வியாதிகள் ஏற்படுவது சகஜம். இதற்காக கண்ணாடிசெய்சிறவர்கள் நத்தைகள் நல்லவையென்று அவைகளை ஏராளமாய் சாப்பிடுவார்களாம். ஒருவன் ஒரேதடவையில் 120 முதல் 150 நத்தைவரையில் சாப்பிட்டுவிடுவானாம்.



# THE TEXTILE INDUSTRY.

# நெசவுத் தொழில்

THE MADRAS WOOLLEN INDUSTRY.

**மதராஸ் கம்பளி நெசவுத் தொழில்.**—ஆட்டு மயிரினால் கம்பளிகள் நெய்யப்படுகின்றன என்பது தெரிந்த விஷயம். நல்ல கம்பளிரோமம் உள்ள ஆடுகள் சென்னைராஜதானி கோயமுத்தூரில் உள்ளவைகள்தான். சேலம் ஜில்லா நாமக்கல் தாலூகாவிலும் திருச்சினாப்பள்ளி ஜில்லா பெரம்பலூர் தாலூகாவிலும் நல்ல மயிருள்ள ஆடுகள் உண்டு. இந்த ஆடுகளின் ரோமம் வெள்ளை நிறம். மைசூர் வர்க்கமான ஆடுகளுக்கு கருப்பு மயிர். இந்தவகை ஆடுகள் பல்லாரி ஜில்லாவிலும் கர்நூல் ஜில்லாவில் சில இடங்களிலும் இருக்கின்றன. ஆனால் மைசூரிலுள்ள ஆட்டைப்போல் இந்த ஆடுகளுக்கு நல்ல ரோமம் வளருகிறதில்லை. சென்னப்பட்டணம், நெல்லூர்வர்க்கத்து ஆட்டுமயிர் நெசவுக்கு லாயக்கில்லை. சென்னைராஜதானியில் கம்பளி நெசவு செய்யும் ஆலையே கிடையாது. ஆனால் பெங்களூரில் "வுலன், காட்டன் அண்டு ஸில்க் மில்ஸ் கம்பனி, லிமிடெட்," என்று கம்பளி, பருத்தி, பட்டுத் துணிகள் முதலியவைகள் நெய்யும் ஆலை ஒன்று இருக்கிறது. இது 1888-ம் வருஷம் நவம்பர் மாசத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கு ஆறு லக்ஷம் ரூபாய் மூலதனம். மைசூர் கவர்ன்மெண்டாரும் இந்த கம்பனியில் பங்குகள் எடுத்திருக்கிறார்கள். பத்து வருஷத்திற்கு முன்னே கம்பளி நெசவுக்காக இதில் இருபத்து ஆறு தறிகளும் எழுநூற்று எண்பது ராட்டினங்களும் இருந்தன. இப்போது நாற்பத்து மூன்று தறிகளும் ஆயிரத்து நூற்று நாற்பது ராட்டினங்களும் இருக்கின்றன. போர்வைகள், குதிரை ஜூல்கள், பல தினுசு கம்பளிகள் இவ்விடத்தில் செய்யப்படுகின்றன. இந்த ஆலையில் சுமார் 350 பேர்கள் வேலை செய்கிறார்கள். சென்னைராஜதானியிலிருந்து இதர தேசங்களுக்கு 1907--08ம் வருஷத்தில் 2,06,000, ரூபாய் பெறுமான ஆட்டு மயிர் ஏற்றுமதி ஆயிற்று. அதற்கடுத்த 1908-09ம் வருஷத்தில் ஏற்றுமதி 62,658 ரூபாய் பெறுமானம். இவ்வளவு குறைந்ததற்குக் காரணம் இங்கிலாந்துக்கு வழக்கம் போல் வெள்ளாட்டு மயிர் அனுப்பப்படாததுதான்.

SILK-PRODUCING COUNTRIES.

**பட்டுத்தரும் பிரதேசங்கள்.**—உலகத்தில் அநேக இடங்களில் பட்டு அகப்படுகிறது; முக்கியமாய்ச் சீனாதேசத்திலும் ஜப்பான் தேசத்திலும் அதிகம். பட்டு விளைவில் சீனா முதலாவதாயும் ஜப்பான் இரண்டாவதாயும் இப்போதிருக்கின்றன. ஜப்பானியர் ஒவ்வொரு அம்சத்திலும் முன்னுக்கு வந்து கொண்டிருப்பது போல் பட்டு உற்பத்தி செய்வதிலும் முன்னடைந்திருக்கிறார்கள். 30 வருஷங்களுக்கு முன் ஜப்பான் தேசத்தில் உற்பத்தியானது ஏறக்குறைய 30 லக்ஷம் ராத்தல் பட்டு. இதில் சுமார் பாதிக்குமேல் ஏற்றுமதி செய்தார்கள்; ஏற்றுமதி செய்யப்பட்ட பட்டின் மதிப்பு 805,000 பவுனும். ஆனால் 1906-ம் ௵த்திலோ 181 லக்ஷம் ராத்தல் பட்டு ஜப்பானில் உற்பத்தியாக்கப்பட்டு, அதில் முக்கால் பாகம் ஏற்றுமதியாயிருக்கின்றது. அப்படி ஏற்றுமதியான பட்டின் மதிப்பு 1,12,70,000 பவுனும்.

WEAVING INDUSTRY.

**நெசவு தொழில்.**—வடக்கே பஞ்சாப் மாகாணத்தில் ஸியால்கோட் ஜில்லாவில் உள்ள திருட்டு ஜாதியார்களை நல்ல வழிக்கு கொண்டுவருவதற்காக "ஸ்ால்வேஷன் ஆர்மி" என்று சொல்லப்பட்ட ரட்சக சைனியத்தார் மூலமாய் நெசவுத்தொழில் சொல்லிக்கொடுக்கும்படி கவர்ன்மெண்டார்யோசித்துக் கொண்டிருக்கிறார்களாம்.

AN INSTRUCTOR.

**ஒரு போதகர்.**—வடக்கே ஐக்கியமாகாணங்களில் சகரன்பூர் ஜில்லாவில் ரூர்க்கி என்பதாக ஒரு பட்டணம் இருக்கிறது. இதில் இஞ்சினீர் படிப்பு சொல்லிக்கொடுப்பதற்காக ஒரு காலேஜ் இருக்கிறது. இந்த காலேஜை ஒட்டி கைத்தொழில் விஷயமாகவும் படிப்பு சொல்லிக்கொடுக்கப்படுகிறது. இந்தக்காலேஜில் பருத்தி நூல்நூற்றல், துணிநெய்தல் முதலிய யந்திரங்கள் விஷயமாய்ச் சொல்லிக்கொடுப்பதற்காக ஒரு நிபுணர் சீமையிலிருந்து தருவிக்கப்பட்டிருக்கிறார்.

## THE GROCERY TRADE.
## பலசரக்கு வியாபாரம்.

GROCERY TRADE.

**பலசரக்கு வியாபாரம்.**—சில்லரையில் பலசரக்கு வியாபாரம் செய்கிறவன் யோக்கியனாய் இருந்தால் மிகவும் ஸங்கடப்படுவான். ஸாமான்கள் வாங்கவருகிற பலபேர்கள் பலவிதமாய்ப் பேசுவார்கள். ஒருவர் நல்லெண்ணெய் பொங்குகிறதென்று புகார் சொல்லுவார். மற்றொருவர் அசல்பூராச்சர்க்கரை இதர கடைகளில் $6\frac{1}{2}$ அணாவுக்கு விற்க $6\frac{3}{4}$ அணாவுக்கு விற்பது உயர்ந்த விலை என்பார். இப்படிப் பலவிதமாக பல பேர்கள் முறையிடுவார்கள். சில்லரை வியாபாரம் செய்கிறவன் இவர்களுக்கெல்லாம் சரியான ஜவாப் சொல்லி அவர்களை சமாதானப்படுத்தும் சக்தியுள்ளவனாயிருக்கவேணும். ஒவ்வொரு பண்டத்தின் கொள் முதலையும், இதர கடைகளில் விற்கும் விலைகளையும் அறிந்துகொள்வதோடுகூட ஒவ்வொரு பண்டத்தின் குணாகுணங்களையும், அவைகளை விற்பதில் செய்யக்கூடிய மோசங்களையும், தெரிந்தவனாய் இருக்கவேணும்.

SWADESI SUGAR.

**சுவதேசி சர்க்கரை.**—வட இந்தியாவில் அநேகம் பேர்கள் இதர தேசத்து சர்க்கரையைத்தள்ளிவிட்டு, இந்தியாவில் செய்யப்படும் சர்க்கரையையே உபயோகிப்பதாக விரதம் செய்திருக்கிறார்கள். இப்படிப் பட்டவர்கள் கடைகளில் போய் ஸ்வதேசி சர்க்கரை வேண்டுமென்று கேட்டால் கடைக்காரர்கள் அந்நிய தேசத்து சர்க்கரையை கொஞ்சம் மாற்றி சுதேசி சர்க்கரையென்று விற்றுவிடுகிறார்களாம். அந்நிய நாட்டு அஷ்டகிராம் சர்க்கரையை நன்றாய்ப் பொடி பண்ணி, அதோடு கொஞ்சம் இந்தியாவில் உண்டாகும் சர்க்கரையைக் கலந்து, கறுப்பாக்கி, ஸ்வதேசி சர்க்கரை என்று சொல்லி, அந்நியநாட்டுச் சர்க்கரையை விட கால் பங்கு விலை தூக்கிவைத்து விற்று விடுகிறார்களாம். இதே மாதிரி கொஞ்சம் பம்பாயிலும் செய்வதாகத்தெரிகிறது.

RICE TRADE.

**அரிசி வியாபாரம்.**—சாதாரணமாய் நம்முடைய ராஜதானிக்கு வேண்டிய அரிசி நமது ராஜதானியிலேயே விளைந்துவிடுகிறது. இதர தேசங்களிலிருந்து விசேஷமாய் அரிசி இறக்குமதியாகிறதில்லை. போன 1908-09, ஹுத்தில் அரிசி ரொம்பவும் விலை தூக்கி விற்றதால் இதரதேசங்களிலிருந்து சுமார் 1,33,427 அந்தர் நிறையுள்ளவும் 7,35,000 ரூ. பெறுமானவுமான அரிசியும் நெல்லும் இதர தேசங்களிலிருந்தும் வந்தன. இதில் 7,22,000 ரூ. சரக்கு பினங்கு, மலாக்கா, சிங்கப்பூர் முதலிய தீவுகளிலிருந்து சென்னபட்டணத்தில் இறக்குமதியாயிற்று.

BERI-BERI.

**பேரி பேரி என்னும் வியாதி.**—அரிசி சாப்பிடுகிறவர்கள் எந்த தினுசு சாப்பிடுகிறவழக்கமோ அதை மாற்றாமல் அது என்ன விலையாயிருந்தாலும் அதையே வாங்கி சாப்பிடுவார்கள். இது நல்ல வழக்கமென்றே தோன்றுகின்றது. அரிசியை அடிக்கடி மாற்றுவதினால் அஜீரணம் முதலிய தொந்தரவுகள் ஏற்படும். மலே நாடுகளில் பெரி பெரி என்னும் ஒரு வியாதி அங்கேயுள்ள மனிதர்களை ரொம்பவும் தொந்தரவு செய்கிறது. இதனால் உடம்பு ஊதி ஒரு வித அசக்தியும் உண்டாகிறது. இந்த நாடுகளில் பர்மா அரிசியே விசேஷ வியாபாரம். இந்த அரிசியால் தான் மேலே சொல்லப்பட்ட வியாதி வருகிறதென்று ஊகித்து ப்ரேசர், ஸ்டான்டன் என்ற இரண்டு டாக்டர்கள் சில பரிசோதனைகள் செய்தார்கள். 493 கூலிகளை இரண்டுவகுப்பாகப் பிரித்து 220 பேர்களுக்கு பர்மா அரிசியையும் மற்ற 273 பேர்களுக்கு வேறொரு அரிசியையும் போட்டு மற்ற விஷயங்களில் ஒரே விதமாக நடத்தி வந்தார்கள். பர்மா அரிசி சாப்பிட்ட 220 கூலிகளில் மட்டும் 20 பேருக்கு பெரிபெரி வியாதி வந்தது. மற்ற 273 பேர்களில் ஒருவனுக்குக் கூட இந்த வியாதி வரவில்லை. தவிர, 87 நாளைக்கு பர்மா அரிசி சாப்பிட்ட ஒரு கூலிக்கு இந்த வியாதி வந்ததும் பர்மா அரிசியை நிறுத்தி வேறொருவித அரிசியைப் போட்டார்கள். உடனே அந்த வியாதி நின்று விட்டதாம். இப்படிப்போட்ட அரிசியெல்லாம் பச்சை அரிசியே. மேற்சொல்லிய விஷயங்களை யோசித்துப்பார்த்தால் கூடுமானால் பர்மா அதாவது ரங்கூன் அரிசி பச்சை அரிசியை சாப்பிடாதிருப்பது நலம் என்று தோன்றுகிறது.'



## REVENUE NOTES.
## ரெவெனியூக் குறிப்புகள்.

RIGHT TO TREES IN THE TANJORE DISTRICT.

**தஞ்சாவூர் ஜில்லாவில் மரங்களில் பாத்தியதை.** —1909 ஹு மேமீ 5உ உள்ள சர்க்கியுலர் ந. 9.

மரங்களுக்காக பிரத்தியேகமாய் மரப்பட்டா கொடுபட்டிருக்கும் கேசுகளிலும், அல்லது நிலத்துக்கு பட்டாகொடுக்கும் போது மரங்கள் பிரத்தியேகமாய் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் கேசுகளிலும் தவிர, தஞ்சாவூர் ஜில்லாவில் நிலம் உடையவர்களுக்கு,

(a) தங்களுடைய பட்டா அல்லது இனாம் நிலங்களிலுள்ள மரங்கள் சம்பந்தமாயும்,

(b) செட்டில்மெண்டில் நிலப்பட்டாக்களுடன் சேர்க்கப்பட்ட வயல்கரைகள் முதலிய "அசாமி" (சொந்த) புறம்போக்கிலுள்ள மரங்கள் சம்பந்தமாயும்,

(c) ஏற்பட்டிருக்கும் விதிகளை யனுசரித்து சட்டநியாயப்படி அனுபவித்துவரப்படும் காலிமனைகள், புழக்கடை (கொல்லை) கள் உள்பட ஜாரிமனைகளிலுள்ள மரங்கள் சம்பந்தமாயும் கவரன்மெண்டார் அவர்களுக்கு பாத்தியமன்னியில் ஷை நிலக்காரர்களுக்கு பூர்ணமான பாத்தியங்களுண்டு.

2. கவரன்மெண்டார் அவர்கள் இதனடியில் கண்ட மரக்கட்டைகளை தங்களுக்கு சொந்தமென்று பாத்தியம் கொண்டாடுகிறதில்லை:—

(a) மரப்பட்டாவுடன் குடிகளால் அனுபவிக்கப்படும் மரங்கள்.

(b) ஆற்றுக்கரைகளின் பேரிலும் வாய்க்கால் கரைகளின்பேரிலும் குடிகளால் நடப்பட்டு தீர்வைப் பட்டும் தீர்வைப்படாமலும் உள்ள மரங்கள்.

(c) படுகைகளிலும் நீரோடும் ஆற்று உள்வாயிலிருந்து 20 கஜதூரத்துக்குள்ளும் குடிகளால் நடப்பட்டு தீர்வைப்பட்டதும் தீர்வைப்படாததுமான மரங்கள்; ஆனால், படுகைகளில் மேலே சொல்லிய 20-கஜ அளவு வரையில் சாகுபடி செய்யக்கூடாதென்று 1864-ம் வருஷத்தில் தடை உத்தரவு பிறந்திருப்பதால் அந்த வருஷத்துக்கு முந்தி இந்த (c), உள்பிரிவில் சொல்லியிருக்கிற மரங்கள் பயிரிடப்பட்டிருக்கவேண்டும்.

மேலே (b), (c) உள்பிரிவுகளில்கண்ட மரங்களுக்கு குடிகள் பாத்தியம்கொண்டாடி டிவிஷனல் ஆபீஸர் அவர்கள் ஒப்புக்கொள்ளும்படி ஷை பாத்தியதையை ஸ்தாபித்துக்கொண்டால் ஒழிய ஷை மரங்களை வெட்டக்கூடாது. மரங்களைவெட்ட குடிகளுக்கு உள்ள பாத்தியத்தை ஒப்புக்கொண்டிருப்பதாக டிவிஷனல் ஆபீஸர் அவர்களுடைய உத்தரவு அன்னியில் மேலேகண்ட மரங்கள் யாதேனும் வெட்டப்பட்டால் அது விஷயமாய் உடனே மேலாவுக்கு ரிபோர்ட்டு செய்யவேண்டியது கிராம உத்தியோகஸ்தர்களுடைய கடமை

3. கைப்பற்றிலுள்ள சொந்த நிலங்களிலும் சர்க்கார் தரிசு அல்லது புறம்போக்கு நிலங்களிலும் உள்ள மரங்களின் பைசலைப்பற்றி ரெவினியூ போர்டார் அவர்களுடைய ந. 18 நிலையான உத்தரவில் பின் வருகிறபடி கண்டிருக்கிறது.

(a) நிலத்துக்கு ஏற்கனவே பட்டா பிறந்திருந்தால் அதிலுள்ள மரங்களுக்கு தனியாக பட்டாக்கள் கொடுக்கக்கூடாது. மரங்களுக்கு ஏற்கனவே தனியாக பட்டா பிறந்திருந்தால் அதை ரத்துசெய்து விட வேண்டியது; நிலபட்டாதாரனும் மரபட்டாதாரனும் வேறு வேறு நபராயிருந்தால் மரப்பட்டாதார் நிலப்பட்டாதாருடன் தம் சொந்த ஏற்பாடு செய்துகொள்ளும்படி விட்டுவிடவேண்டும்.

(b) நிலம் கைப்பற்றில் இல்லாவிட்டால்:

(i) நிலத்தை அடமானம் செய்வதில் ஆக்ஷேபனையில்லாதபக்ஷத்தில், அதிலுள்ள மரங்கள் உள்பட ஷை நிலத்தை தர்க்காஸ்து ரூல்களையனுசரித்து பைசல் செய்துவிடலாம். முதல் முதலில் மரங்களை வைத்துவளர்த்தவர் அல்லது வளர்த்தவர்களுடைய வார்சுகளுக்கு முந்திய அடமானபாத்தியம் கொடுபடவேண்டும். தரிசு நிலத்தில உள்ள, பட்டாவுடன் அனுபவித்துவரும், மரங்களின் கிரயத்தையும், மேலே 2-வது பாரா (b) (c) உள்பிரிவுகளில்கண்ட புறம்போக்குகளில்வைத்து விருத்திசெய்யப்பட்ட மரங்களின் கிரயத்தையும் வசூல் செய்யக்கூடாது.

(ii) நிலத்தை அடமானம் செய்வதில் ஆக்ஷேபனையிருக்குமாகில் மரங்களுக்கு மட்டில் பட்டா கொடுபடவேண்டும். கவரன்மெண்டார் அவர்கள் அப்படிப்பட்ட மரங்கள் சம்பந்தமாய் பாத்தியம் கொண்டாடுகிறதில்லை; இந்த விதியின்படி இப்போது அனுபவித்துவரும் அல்லது இனிமேல் பட்டா கொடுக்கப்படும் மரங்களுக்கு மரபட்டாதார்கள் சர்வ சுவதந்தரம் உள்ளவர்கள்.

## LEGAL NOTES.
## சட்டக் குறிப்புகள்.

---

TRADE-MARK.

**வியாபார மார்க்கு.**—வியாபாரிகள் தங்களால் மட்டும் விற்கப்படுகிறது, அல்லது, செய்யப்படுகிறது என்பதற்கு அடையாளமாக சரக்குகளின் மேல் ஒரு மார்க்கு அல்லது அடையாளம் போடுவது வழக்கம். உதாரணமாக நாம் பிடித்துக்கொள்ளும் குடைகளில் ஒரு வியாபாரி மான் மார்க்கு போட்டிருக்கிறான், மற்றொருவன் யாளிமார்க்குப் போட்டிருக்கிறான். இந்தமாதிரியே வேறு குடை வியாபாரிகள் மான் மார்க்கோ அல்லது யாளிமார்க்கோ போட்டு விற்கலாமா என்று கேட்டால், இப்படிப்பட்ட கேசுகளில் உபயோகிக்கப்படும் மார்க்கு துராகிருதம் துராகிருதமல்ல என்று தீர்மானிக்க பின் சொல்லுகிற மாதிரி பார்க்கவேணும். ஒருவன் தான் ரொம்ப நாளாய் உபயோகித்துவரும் தன்னுடைய மார்க்கை மற்றொருவன் துராகிருதமாக உபயோகிக்கிறான் என்று சொன்னால், அந்த மார்க்கினால் பொம்மை முதலியவைகளைப் பார்த்திராத ஒரு சாதாரண மனுஷன், வெகுநாளாய் வழங்கிவரும் நிஜமான மார்க்குள்ள சரக்கை வாங்குவதற்காக வந்து, அதில்லாமல் அதைப்போன்ற துராகிருதம் என்று சொல்லப்பட்ட மார்க்குள்ள சரக்கை வாங்கி, ஏமாந்து போகக் கூடுமா என்று பார்க்கவேண்டும். அப்படி ஏமாந்து போகக்கூடியதானால் அந்த மார்க்கு துராகிருதமான மார்க்குதான் இப்படி துராகிருதமான மார்க்கு என்று ஏற்பட்டால் அந்த மார்க்குள்ள சரக்கை விற்கக்கூடாது என்று கோர்ட்டார் சாச்வத இஞ்சங்ஷன், அதாவது, உத்தரவு கொடுத்து விடலாம். தவிர, நிஜமார்க்கின் சொந்தக்காரனுக்கு வாஸ்தவமாய் நஷ்டம் உண்டாயிற்று என்று ரூபிக்கப்பட்டால் அதையும் துராகிருதமான மார்க்கை உபயோகப்படுத்தினவனை கொடுக்கும்படிச் செய்யலாம்.

A GIRL AND HER PARENTS.

**ஒரு பெண்ணும் அவள் பெற்றோரும்.**—கல்கத்தா பிரஸிடென்ஸி மாஜிஸ்ரேட்டு கோர்ட்டில் ஒன்பது வயதுடைய ஒருபெண் தகப்பனுக்குச் சொந்தமா அல்லது தாய்க்குச் சொந்தமா வென்கிற விவாதம் உண்டாய் விட்டது. மிஸ்டர் டாம்ச்சன் என்கிற புருஷனும் அவர் பெண்ஜாதியும் பிரத்தியேகமாய் வசித்துவருகிறார்கள். பெண் பள்ளிக்கூடத்திலிருந்தது. இந்தப்பெண் தன் வசத்திலிருந்ததாகவும் அவளுக்கு சுரம் கண்டிருந்தபடியால் தான் அழைத்துக் கொண்டுபோய்விட்டதாகவும், புருஷன் கக்ஷி சொன்னார். பெண் தன் வசத்திலிருந்தாகவும், தான் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவித்திருந்ததாகவும், தன்னுடைய புருஷன் அக்கிரமமாய் அழைத்துக்கொண்டு போய்விட்டாரென்பதும் பெண்ஜாதியின் கக்ஷி. கோர்ட்டார் பெற்றோர்களை சாக்ஷிக் கூண்டில் நிறுத்திவைத்து பெண்ணை எதிரில் நிறுத்தினார்கள். பெண் தகப்பனைப்பார்த்து ஆவலுடன் போய் மடியின்பேரில் ஏறிக்கொண்டது. புருஷன் வசமே பெண் இருக்கவேண்டுமென்று கோர்ட்டார் தீர்ப்பு சொல்லிவிட்டார்களாம்.

ARBITRATION.

**மத்தியஸ்தம்.**—இரண்டுபேர்களுக்கு ஒரு நில விஷயமாய் கோர்ட்டில் வியாஜ்யம் நடந்தது. வியாஜ்யம் நடவடிக்கையிலிருக்கும் பொழுது இரண்டு காக்ஷிக்காரர்களும் ஒருவரைக்கூப்பிட்டு அவர் சொல்லுகிற தீர்மானப்படி மத்யஸ்தத்தை ஒப்புக் கொள்வதாகச் சொன்னார்கள். மத்யஸ்தம் செய்ய வந்தவர் தான் கேஸை விசாரிக்காமல் சீட்டுப்போட்டு நிலம் யாருக்கு விழுகிறதோ அவர் அதை எடுத்துக் கொள்ளலாமென்று சொன்னார். இதை இரண்டு கக்ஷிக்காரர்களும் ஒப்புக்கொண்டு சீட்டுப் போட்டதில் நிலம் பிரதிவாதிக்கு விழுந்தது. ஆகையால் பிரதிவாதிதான் நிலத்துக்கு பாத்யஸ்தன் என்று மத்யஸ்தர் சொன்னார். இந்த மத்யஸ்தர் தீர்மானத்தை ஒப்புக்கொண்டு கீழ்கோர்ட்டார் வியாஜ்யத்தை தள்ளிவிட்டார்கள். ஆனாலும் இந்த கேஸில் மத்யஸ்தர், சட்டப்படி மத்யஸ்தர் ஆகமாட்டார் என்றும், சீட்டுப்போட்டு விழுந்ததை மத்யஸ்தர் தீர்மானம் என்று ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல என்றும், இந்த வியாஜ்யத்தை சீட்டுப்போட்டு தீர்மானித்துக் கொள்வதென்பதே பொதுஜன நன்மைக்கு விரோதம், ஆதலால் ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல என்றும், நாகப்பூரில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.—5 நாகப்பூர் லாரிபோர்ட் 107ம் பக்கம்.

---




# Oakes & Co., Ltd.,

9, Broadway, MADRAS.

—(o)—

அடியில்கண்ட சாமான்கள் எங்களிடத்தில் அகப்படும்.

(1) விவசாயத்திற்கு வேண்டிய யந்திரங்கள்,

(2) மனிதர்களாலும், மாடுகளாலும் வேலை செய்யக்கூடிய தண்ணீர் பாய்ச்சும் பம்புகள்,

(3) நீராவியாலும் வேறு எந்த சக்தியாலும் வேலை செய்யக்கூடிய எல்லாவித தொழிலுக்கும் வேண்டிய யந்திரங்கள்,

(4) தச்சு வேலைக்கு வேண்டிய உளி, வாச்சி முதலிய சாமான்கள்,

(5) பலவித பெயிண்டுகள், எண்ணெய்கள், வார்னீஷுகள், புருஷுகள்,

(6) வியாபாரிகளுக்கு வேண்டிய நிறுக்கும் யந்திரங்கள், லேப்கள், பணம் வைக்க இரும்புப் பெட்டிகள், பூட்டுகள்,

(7) விவசாயிகளும், குடித்தனக்காரர்களும் உடைக்கவும், அரைக்கவும் வேண்டிய யந்திரங்கள்,

(8) கம்பி வேலிகள், இரும்பு மாடிப்படிகள், வீடு கட்டுவதற்கு வேண்டிய இரும்புச் சாமான்கள்,

இன்னும் எது வேணுமானாலும் எழுதியனுப்பினால் அனுப்பத் தயாராய் இருக்கிறோம். காட்டலாக் அனுப்பப்படும்.

ஓக்ஸ் அண்டு கம்பெனி,

9, பிராட்வே, சென்னப்பட்டணம்.

# EDUCATIONAL NOTES.

## வித்தியாவிஷயக் குறிப்புகள்.

NIGHT SCHOOLS.

**ராத்திரிப்பள்ளிக்கூடங்கள்.**—கைத்தொழில், கற்றுக் குட்டிகளிலும் வேலைக்காரர்களிலும் புத்தி சாலிகளாயும் உழைப்பாளிகளாயுமிருக்கிறவர்கள் மற்றவர்களை விட நல்ல ஸ்திதிக்கு விரும்பக் கூடுமாதலால் அவர்களுக்கு வேண்டிய அநுகூலங்களைச் செய்ய வேண்டும். பகல்பொழுதெல்லாம் அவர்கள் வேலையில் அமர்ந்திருக்கப் பட்டவர்கள். அவர்கள் அதிகமாய் ஏதாவது படித்துக்கொள்ள வேண்டுமானால் ஓய்வுவேளைகளில், அதாவது, சாயங்காலத்திலும் இரவிலும்படித்துக் கொள்ளவேண்டும். இப்படி அவர்களுக்கு ஓய்வு உள்ளகாலத்தில் படிப்பிக்கிறதற்குப் பள்ளிக் கூடங்கள் ஏற்படுத்தவேண்டும். இந்த ஓய்வு காலப்பள்ளிக்கூடங்களில் கற்பிக்க வேண்டிய விஷயங்களாவன :—1. ஒரு உருவைப் பார்த்துச் சித்திரமெழுதவும், மனதில் கொண்ட அபிப்பிராயத்திற்குத் தக்கபடி உருவம் கல்பித்துச் சித்திரமெழுதுவதும் (சித்திர மெழுதப்பழகி இருந்தால் சிலதொழில்களில் நன்றாய் முன்னுக்கு வரலாம்); 2. மேஸ்திரிகளாகவும் குட்டிமேஸ்திரிகளாகவும் ஆவதற்கு வேண்டிய கணக்கு, வழக்கு, படிப்பு முதலியன. இப்படியாக அதிகமாய்ப் படிக்க விரும்புகிறவர்களுக்காக அநேகம் பெரிய பட்டடைக்காரர்கள் தாங்களே பள்ளிக்கூடம் வைப்பதல்லாமல் அந்த வேலைக்காரர்களை சாயங்காலத்தில் சீக்கிரமாய் வேலையிலிருந்து விடவும் சித்தமாயிருப்பார்கள்.

AGRICULTURAL INFORMATION.

**விவசாய சமாசாரம்.**—இந்தியாவிலுள்ள விவசாய நிபுணர்களெல்லாம் வருஷத்துக்கு ஒருதரம் விவசாய விஷயமாய்க் கூடிப்பேசி இந்தியா கவரன்மெண்டாருக்கும் மாகாண கவரன்மெண்டார்களுக்கும் பலவித சிபார்சுகள் செய்துவருகிறார்கள். சமீபத்தில் நடந்த கூட்டத்தில் விவசாய இலாகாவைச் சேர்ந்தவர்கள் அந்தந்தமாகாணங்களிலுள்ள பெரிய பத்திரிகைகளுக்கு விவசாய விஷயமாய் சமாசாரங்கள் அனுப்பவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த விஷயத்தில் கவனம் செலுத்தும்படியாக மதராஸ் கவரன்மெண்டார் ரெவினியூ போர்டாருக்கு உத்தரவு செய்திருக்கிறார்கள்.

AGRICULTURAL SCHOLARSHIPS.

**விவசாயப் படிப்புக்கு உபகாரச்சம்பளம்.**—வடக்கே கான்பூர் நகரத்தில் விவசாயப்படிப்பு சொல்லிக்கொடுப்பதற்காக காலேஜு ஒன்று இருக்கிறது. இந்த காலேஜில் மூன்றாவது வருஷத்து படிப்புப் படிக்கும் பிள்ளைகளில் 10 பேர்களுக்கு மாசம் ஒன்றுக்கு 8 ரூபாய் வீதம் உபகாரச்சம்பளம் கொடுக்கும்படிக்கு ஐக்கியமாகாண கவரன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

A NEW APPOINTMENT.

**ஓர் புதிய நியமனம்.**—வங்காளத்திலுள்ள தொழிற்கல்விப் பாடசாலைகளுக்கும் கைத்தொழிற் பாடசாலைகளுக்கும் இன்ஸ்பெக்டராயும், கைத்தொழில் வேலைகளின் சூபரின்டெண்டாயும் வேலை பார்க்கும் நிமித்தம் ஒருவரை நியமிக்க இந்தியா மந்திரி உத்தரவு கொடுத்திருக்கிறார் என்று தெரிகிறது.

TECHNICAL EDUCATION.

**தொழிற்படிப்பு.**—கானிஷ்மாரிக் கணக்குகளைப் (சென்சஸ் ரிபோர்ட்) பரிசோதித்துப் பார்த்தால் நமது சென்னை ராஜதானியானது படிப்பு விஷயங்களில் பம்பாய்ராஜதானிக்கு குறைந்தது அல்லவென்று தெரியவரும். இப்படியிருந்தும் நமது ராஜதானி ஐஸ்வரியத்தில் பம்பாயைவிட அதிகக் குறைந்திருப்பானேன்? இதற்கு முக்கிய காரணம் நம்மவர்களில் படிப்பவர்களெல்லாம் ராஜாங்க உத்தியோகத்துக்காகவோ அல்லது வக்கீல் உத்தியோகத்துக்காகவோ மாத்திரம் படிப்பதுதான். இப்படி வருஷாவருஷம் அநேகர் பி. ஏ., எம். ஏ. என்னும் பட்டதாரிகள் ஆகிறார்களே யொழிய பொருள் விருத்திக்கு முக்கிய ஹேதுவான தொழில் படிப்பை கண்ணெடுத்து பார்ப்பதில்லை. ஆனால் பம்பாய் ராஜதானியிலோ அநேகர் கைத்தொழில், வியாபாரவர்த்தக விஷய சம்பந்தமான படிப்புகளையே படித்து வருகிறார்கள்.

THE NEW MADRAS FOREST COLLEGE.

**புதிய மதராஸ் காட்டுக் காலேஜ்.**—சென்னை ராஜதானியில் காடுவளர்ப்பது முதலான விஷயங்களைப்பற்றி மாணாக்கர்களுக்கு போதிப்பதற்காக ஒரு காலேஜ் ஏற்படப்போகிறது. இந்தக் காலேஜை கோயம்புத்தூரில் ஸ்தாபிப்பதாகத் தீர்மானம் செய்து அதற்கு வேண்டிய கட்டிடங்களெல்லாம் அங்கே கட்டப் பட்டு வருகின்றன. இந்தக்காட்டுக் காலேஜ் 1910 ஜூலை மாசத்தில் கட்டி முடிந்து பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க தயாராகி விடுமாம்.




# Paddy Cultivation.

## நெல் சாகுபடி.

நெல் இந்த தேசத்து பயிர்களுக்குள் முக்கியமானது. நெல் பயிருக்கு இந்திய விவஸாயிகள் தொழு, எரு, சாம்பல், தழை முதலியவைகளைப் போட்டு பயிரிடுகிறார்கள். ஆடுமாடுகளுக்கு புஷ்டியான ஆகாரம் கொடுத்து, அவைகளின் எருவை சரியானபடி சேகரிக்கும் பொழுதே, தொழு எருவில் நைட்ரோஜன், பாஸ்பாரிக் ஆஸிட், பொடாஷ் குறைவாய்த்தானிருக்கிறது. நைட்ரோஜனைக் காட்டிலும் பாஸ்பாரிக் ஆஸிட் பொடாஷ் ரொம்ப குறைவு. இந்தியாவிலோ ஆடு மாடுகளுக்கு நல்ல ஆகாரம் கொடுக்கிறதுமில்லை; அவைகளின் எருவை சரியானபடி சேகரிக்கிறதுமில்லை. தழையில் நைட்ரோஜனும், சாம்பலில் பொடாஷும் முக்கிய சத்துக்கள்; ஆனாலும் ரொம்ப குறைவு. இந்தநாட்டு உரங்களை வருஷாவருஷம் ஏராளமாய் போட்டு சாகுபடி செய்தபோதிலும், தழை சத்தாகிய நைட்ரோஜனும் தாள் சத்தாகிய பொடாஷும் அளவுக்கு மிஞ்சி அதிகமாயிருப்பதால் பயிர் நன்றாய் வளர்ந்து, தான்ய சத்தாகிய பாஸ்பாரிக் ஆஸிட்குறைவினால் போதுமான அளவு தான்யம் உண்டாகாமல் போகிறது. பாஸ்பாரிக் ஆஸிட் அதிகமாயுள்ள நாட்டு உரம் ஒன்றுமில்லை. தான்யப்பயிர்களுக்கு பாஸ்பாரிக் ஆஸிட் அத்தியாவசியம். இதற்கு நிரூபணமாக, கடலூர் ஜில்லாவில் வெகுநாளாய் தொழு எரு சாம்பல் முதலிய நாட்டு உரங்கள் போட்டு பயிர் செய்த நிலங்களில் எங்கள் ஸூபர் பாஸ்பேட் மாத்திரம் ஏகருக்கு இரண்டு அந்தர் வீதம் ஏராளமான தான்யத்தை கொடுத்திருக்கிறது. ஆனால் இவ்வாறு ஒரு சத்தை மாத்திரம் போட்டு பயிரிடுவது சாஸ்திரோக்த மல்ல. பூரா உரங்களை உபயோகிப்பதே நலம். எங்கள் கிடங்கில் நெல்லுக்கு பூரா உரங்கள் இரண்டு விதம். முதல் தரம் உரம் அதிக சத்துள்ளது. சத்தில்லாத நிலங்களுக்கு ரொம்ப சிலாக்கியம். நெடுநாளாய் நாட்டு உரம் போட்டு சாகுபடி செய்து வந்த நல்ல நிலங்களுக்கு இரண்டாம் தரம் உரம் போதுமானது. இவ்வுரங்களில் சேர்க்கிற சரக்குகள் ஒவ்வொன்றையும் எங்கள் ரஸாயநசோதனை சாலை (Chemical Laboratory)யில் பரிசோதித்து, அவைகளிலுள்ள நைட்ரோஜன், பாஸ்பாரிக் ஆஸிட், பொடாஷ் இவைகளை கணக்கிட்டு, நெற்பயிரின் விளைகாலத்திற்குள் பயிருணவாகக் கூடிய நிலமையில் சேர்த்திருக்கிறோம். உரங்களில் சத்துக்கள் தண்ணீரில் கரைந்து பயிர்களின் நுட்பமான வேர்களால் உணவாக கிரகிக்கப்படுகிற படியால், எங்கள் உரங்களிலுள்ள சத்துக்களின் சிலபாகம் உடனே தண்ணீரில் கரைந்து உணவாகக் கூடியதாகவும் மற்ற பாகம் நாளடைவில் கரையக் கூடியதாகவும் சேர்க்கப் பட்டிருக்கின்றன. இவ்வாறு பயிருக்குத்தக்கபடி தயாரித்திருக்கிற உரங்கள் தவிர நிலத்தின் மாதிரிமண் அனுப்புகிறவர்களுக்கு, அம்மண்ணை எங்கள் ரஸாயந சோதனை சாலையில் பரிசோதித்து, நிலத்துக்குத் தக்கபடியும் உரம் தயாரித்துக் கொடுக்கிறோம். இவ்வுரங்களை உபயோகிப்பதில், மண்ணுடன் கலக்கும்படி போட்டு உழுத பின் பயிரிடுவது நலம். உரம் போட்ட நிலங்களிலிருந்து தண்ணீர் வெளிபடாமலிருக்க வேண்டும். வளருகிற பயிருக்கு உரம் போடுவதில் பயிரின் விளை காலத்திற்கு மூன்றி லொன்றுக் கதிகரிக்காமலிருந்தால் நலமாயிருக்கும். அதாவது மூன்று மாதத்துப் பயிருக்கு ஒரு மாதத்திற்குள்ளும் ஆறு மாதத்துப் பயிருக்கு இரண்டு மாதத்திற்குள்ளும் உபயோகிப்பது நலம். களைகளும் சத்துக்களை கிரகிக்குமாகையால் உரம் போட்ட நிலங்களில் களைகளில்லாமலிருக்க வேண்டும்.

இன்னும் மற்ற சமாசாரங்களுக்கு மதராஸ் பாரிகம்பெனியாருக்கு எழுதி தெரிந்து கொள்ளலாம்.

**THE PRESIDENCY MANURE WORKS, LIMITED, RANIPET.**

**Managing Agents—PARRY &CO., MADRAS.**

ராஜதானி ரஸாயந உரக்கிடங்கு,
ராணிப்பேட்டை.

மானேஜிங் ஏஜண்டு:—
பாரி அண்டு கம்பெனி,
மதராஸ்.

## SCIENTIFIC NOTES.

## சாஸ்திரீயக் குறிப்புகள்.

THE MONTH.

**மாதம்.**—தமிழிலும் இன்னும் பிறபாஷைகளிலும் மாதம் என்ற கருத்தைக் குறிக்கும் பதம் சந்திரனைக் குறிக்கும் பதத்திலிருந்தே வருகிறது. திங்கள் என்ற பதத்திற்குச் சந்திரன் என்றுபெயர் இருப்பதோடு, மாதம் என்றும் அர்த்தம் உண்டு. சந்திரன் ஸ்திர கிரகம் அல்ல. அது பம்பரம் போல்தானே சுற்றுவதோடு கூட பூமியையும், பூமியோடு சூரியனையுஞ் சுற்றி வருகிறது. அப்படி ஒருதரம் பூமியைச்சுற்றி வர சந்திரனுக்கு இருபத்தெட்டு நாள் ஏழுமணி நாற்பத்துமூன்றுமினிட், பதினொரு செகண்டு பிடிக்கின்றது. தோராயமாக முப்பது நாள் என்று வைத்துக் கொண்டு நாம் முப்பதுநாள் கொண்டது ஒரு மாதம் என்று சொல்லுகிறோம்.

AIR SHIPS.

**ஆகாயக் கப்பல்கள்.**—புகைக் கூண்டுகளில் ஏறி ஆகாயத்தில் போகும் மனிதர்களை சிலர் கண்ணாலேயே பார்த்திருக்கலாம். அநேகர் அதைப்பற்றி கேட்டுமிருக்கலாம். நம்முடைய பழைய புராணங்களில் விமானங்களில் ஏறி கொண்டு போய் அநேகம் பேர்கள் சண்டை செய்ததாகவும், நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். தற்காலத்தில் ஒரு இடத்திலிருந்து ஆகாயமார்க்கமாய் மற்றொரு இடத்திற்கு போவதற்கு, சாதனமான விமானங்களை, அதாவது ஆகாயக் கப்பல்களை, சில பேர்கள் செய்து பரீக்ஷித்து வருகிறார்கள். இப்படிக்குச் செய்யப்பட்ட ஆகாய கப்பலுக்குள், பிரான்ஸ் தேசத்தில் ரீம்ஸ் என்னும் பட்டணத்தில் ஒரு பந்தயம் நடந்தது. இதுநிற்க ப்லேரியோ என்னும் ஒரு பிரான்சுக்காரரும் ஒரு ஆகாய கப்பல் கண்டுபிடித்திருக்கிறார். பிரான்ஸ் தேசத்தில் கலே என்று ஒரு பட்டணமும் இங்கிலாந்தில் டோவர் என்று ஒருபட்டணமும் இருக்கின்றன. இந்த இரண்டு பட்டணங்களுக்குமுள்ள தூரம் 22 மையில். இந்த தூரம் முழுமையும் சமுத்திரந்தான். ப்லேரியோ என்பவர் கலே பட்டணத்திலிருந்து தன்னுடைய ஆகாய கப்பலில் புறப்பட்டு, 37 நிமிஷத்தில் டோவர் போய் சேர்ந்து விட்டாராம். இதற்காக அவருக்கு 1000 பவுன் வெகுமானம் கொடுக்கப்பட்டது. ஆகாய கப்பல்கள் ஏற்படும் பக்ஷத்தில் தற்காலத்தில் அரசர்கள் சண்டை செய்யும் விதங்களை ஒருக்கால் மாற்ற வேண்டியதாகக் கூட ஏற்படும். ஆகையால் எல்லா அரசர்களும் சேனாதிபதிகளும் ஆகாயக் கப்பல் விஷயத்தில் ரொம்ப கவனம் செலுத்தி வருகிறார்கள்.

THE MAGNET AS AIR FILTER.

**காந்தத்தினால் வாயுவை வடிகட்டுதல்.**—இங்கிலாந்தில் பல இடங்களில் ஊசிசெய்வதற்காக தொழில் சாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த சாலைகளில் ஊசிகளை சாணை பிடிக்கும்போது சாணைக்கல்லுகளிலிருந்து எஃகுப் பொடிகள் கண்ணுக்குத் தெரியாத அவ்வளவு சிறியவைகளாய் வெளியே கிளம்பி ஆகாயமெங்கும் பரவுகின்றன. இந்த எஃகுப் பொடிகள் முதலில் கொஞ்ச காலத்திற்கு வேலை ஆட்களுக்கு ஒன்றும் செய்வதில்லை. நாளடைவில் ஸ்வாசாசயங்களைப் புண்ணாகச்செய்து அநேகம் வேலை ஆட்கள் நாற்பது வயதுக்கு முன்னமேயே இறந்து போய்விடுவது வழக்கமாக இருந்தது.

எஃகுப்பொடிகள் உள்ளே போகாமல் வாயையும் மூக்கையும் துணியைப்போட்டு என்ன இறுக்கிக் கட்டியும் பிரயோஜனப்படவில்லை. இப்பொழுது காந்தம் ஏற்றிய எஃகுக் கம்பியால் செய்யப்பட்ட ஒருவித மறைப்புகளைக் கட்டிக்கொண்டு ஆட்கள் வேலை செய்கிறார்களாம். இந்த மறைப்பு எஃகுப் பொடிகளை இழுத்துக் கொண்டு சுத்தமான காற்றை மட்டும் சுவாசிக்க விடுகிறது.

TEETH.

**பற்கள்.**—அநேகருக்கு அதிக சிறுவயதிலேயே பற்கள் விழுந்து விடுவதற்கு முக்கியகாரணம் அவர்கள் சிறு குழந்தை முதற்கொண்டு சர்க்கரையை அதிகமாக உபயோகப்படுத்துவதே என்று சொல்லப்படுகிறது. ஒரு பல்லை எடுத்து சர்க்கரையில் புதைத்திருந்தால் அது எத்தனை வருஷமானாலும் கெடாது. சர்க்கரையை ஜலத்தை விட்டுக்கரைத்து அதில் ஒரு பல்லைப்போட்டு கொஞ்சம் கொதிப்புண்டாக்கும்படி ஒரு மாஸம் வைத்திருந்து பிறகு அந்தப் பல்லை எடுத்து விரலால் அழுத்தினால் அது பொடியாய்ப் போகுமாம். இதேமாதிரியாக சர்க்கரையைத்தின்னும் பட்சத்தில் நம்முடைய வாயின் எச்சிலும் உஷ்ணமும் சேர்ந்து பற்களின்பலத்தை குறைக்கின்றனவாம். ஆகையால் தித்திப்பான பதார்த்தங்களைச்சாப்பிட்டால் வாயில் அவைகளை அதிக நேரம் அடக்கிக்கொண்டிருப்பது பிசகு என்று தெரியவருகிறது. தவிர தித்திப்பான பொருள்களை அடிக்கடி அதிகமாக சாப்பிடக் கூடாது என்றும் ஏற்படுகிறது.




V. KALYANARAM IYER & Co., *Booksellers, Esplanade, MADRAS*

நன்றாய்ப் பார்வையிட்டு நல்லகாகிதத்தில் தெளிவாய் அச்சிட்ட சிறந்த பதிப்பு

**மூவர் தேவாரம்-பண்முறை—1044 பக்கம், ரூபாய் 3—0—0.**

இப்பதிப்பில் (1) சம்பந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவர்களின் சரித்திரக் குறிப்பும், (2) தேவார வரலாறும், (3) தேவாரப்பண் அட்டவணையும், (4) தேவாரப் பாடல்பெற்ற ஸ்தல அகராதியும், (5) தேவார ஸ்தலங்களுள்ள நாடுகளின் விபரமும், (6) அட்டவீரட்டானங்களைக்குறிப்பிக்கும் செய்யுளும், (7) தேவாரப் பொதுப்பாடல்களின் பக்க அட்டவணையும், (8) தேவார வைப்பு ஸ்தல அட்டவணையும், (9) காரைக்காலம்மையார் அருளிச் செய்த மூத்த திருப்பதிகமும் நூதனமாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன.

**நாலாயிர திவ்யப்பிரபந்தம்—640 பக்கம் ரூபாய் 3—0—0.**

இப்பதிப்பு (1) ஆழ்வார்களின் காலவைபவக் குறிப்பும், (2) ஆழ்வார்கள் அருளிச்செய்த பிரபந்தங்களின் அட்டவணையும், (3) ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திவ்விய தேசங்களின் அட்டவணையும், (4) அந்த தேசங்களின் வைபவக்குறிப்புகளும் சேர்த்து பல பிரதிகளுடன் ஒத்திட்டுப்பார்த்து, நன்றாய் அச்சிடப்பெற்றுளது.

**வேதாந்த விஷயமான புஸ்தகங்கள்.**

| | ரூ. அ. | | ரூ. அ. |
|---|---|---|---|
| வள்ளாலார் சாஸ்திரம் .. .. | 1 8 | ஜன்மாந்திரம் (அல்லது இராமதாசர் உபதேசம்) .. .. .. | 0 2 |
| வாசுதேவ மனனம் .. .. | 1 0 | நாலு சிவவாதக்கட்டளை .. .. | 0 1 |
| வேதாந்த போதினி .. .. | 0 8 | மகாராஜா துறவு.. .. .. | 0 6 |
| சிவபோகசாரம் & சிவஞானவிளக்கம் .. | 0 2 | தாயுமானவர் பாடல் (காலிகோ பயிண்டிங்) | 0 12 |
| சுகர் கைவல்லியம் .. .. | 0 2 | பட்டணத்தார் பாடல் .. .. | 0 2 |
| வைராக்கிய சதகம் .. .. | 0 2 | | |

**புதிய நாவல்களும் நாடகங்களும்.**

| | | | |
|---|---|---|---|
| போஜ சரித்திரம் .. .. .. | 1 8 | மனோகரன் .. .. .. | 0 12 |
| சுந்தரி மனோகரன் .. .. | 0 12 | கள்வர்தலைவன் .. .. .. | 0 8 |
| காமாக்ஷி . .. .. | 0 8 | சாரங்கதரன் .. .. .. | 0 8 |
| சந்திரசேகரன் .. .. .. | 0 8 | யயாதி.. .. .. .. | 0 8 |
| ஆநந்தமடம் .. . .. | 0 8 | வசந்திகா .. .. .. | 0 8 |
| லீலாவதி சுலோசனா .. .. | 0 12 | கிரிஸில்டா, அல்லது பொறுமையுள்ள மனைவி | 0 2 |
| இரண்டு நண்பர்கள் .. .. | 0 12 | காலவரிஷி .. .. .. | 0 8 |
| சத்ருஜித் .. .. .. | 0 12 | வேதாள உலகம் .. .. .. | 0 8 |

**வேறு புஸ்தகங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| ஸ்திரி புருஷ சாமுத்ரிகாலக்ஷணம் .. | 1 0 | **மனுதர்ம சாஸ்திரம்** 2647 கிரந்த சுலோகங்களும் அவைகளின் தமிழ் மொழிபெயர்ப்பும்— 560 பக்கம் .. .. .. | 2 4 |
| குறள் (மூலம்) .. .. .. | 0 4 | | |
| பஞ்சதந்திரம் .. .. .. | 0 4 | | |

**வியவசாய போதினி.**—நிலம், எரு, விதை, பயிரிடும்வகை முதலிய சகல விவசாய விஷயங்களையும் பற்றியது. மிராசுதாரர்களுக்கும் மற்றவர்களுக்கும் இன்றியமையாதது. தஞ்சாவூர் ஜில்லா, நீடாமங்கலம் அ. சேது ராமய்யர் இயற்றியது. 400 பக்கம், 80 படங்கள். ரூ. 1 4 0

**மானிட மர்மசாஸ்திரம்.**—அல்லது "சிசு உற்பத்தி சிந்தாமணி." இது யாவரும் படித்து அறியவேண்டிய அடியிற்கண்ட அரிய பெரிய விஷயங்களடங்கியது. 500 பக்கம், 190 சித்திர படங்களடங்கியது ரூ. 5 0 0

**அடங்கிய விஷயங்கள்.**—மானிட ஜீவியத்தில் பலபருவங்கள்—இல்லற இன்பரகசியம்—ஜனனேந்திரியங்களின் அமைப்பும் அற்புதங்களும்—மாதாவின் மாக்ஷிமை—சிசு உற்பத்தி—கர்ப்பகால சுகாதாரவிதிகள்—கர்ப்பகால நோய்களும் பரிகாரங்களும்—மருத்துவ சாஸ்திரம்—சிசுபரிபாலனம்—மலட்டிற்கு நிவாரணம்—ஆண்மையினழிவும் அதன் மீட்சியும்—சமயோசித சஞ்சீவி.

☞ ஆர்டர் அனுப்பும்போது இப்பத்திரிகையின் பெயரைக் குறிப்பிடுக.

**வி. கல்யாணராமய்யர் அண்டு கோ.,**

புக்ஸெல்லர்ஸ், எஸ்பிளனேட், மதராஸ்.

# MEDICAL NOTES.
## வைத்தியக் குறிப்புகள்.

To Reduce Obesity.

**ஸ்தூலத்தைக் குறைக்க.**—ஸ்தூல சரீர முள்ளவர்களை ஸ்தூலத்தை குறைப்பதற்காக "பத்திய மாயிரு அல்லது ஏதாவது வேலையைச்செய்" என்று சொன்ஞல் அனேகம் பேர்கள் "அது முடியாத காரியம்" என்று சொல்லிவிடுவார்கள். இருந்த போதிலும் பின் சொல்லியபடி செய்தால் தேகத்தின் பருமன் குறையும். சாப்பிட்ட பிறகு அரை மணிநேரம் உபாயமாய் நடக்க வேண்டும். சாப்பிடும் பொழுது மத்தியில் தீர்த்தமே குடிக்கக்கூடாது. சாப்பிடுவதற்கு அரைமணிநேரம் முன்னமேயும் ஒரு மணிநேரம் பிற்பாடும் யதேஷ்டமாய்த்தீர்த்தத்தைச் சாப்பிடவேண்டும்.

To Test the Purity of Water.

**தண்ணீரைப் பரீக்ஷிக்க.**—அனேக இடங்களில் குடிக்கத்தகுந்த சுத்த ஜலம் அகப்படுவதில்லை. அதிக அசுத்தமான சாக்கடை ஜலங்களின் ஸாரம் சில கிணறுகள், குளங்கள், ஆறுகள் இவைகளின் ஜலத்தில் கலந்திருப்பது உண்டு. இந்தமாதிரி ஜலத்தைச் சாப்பிடுவது தேகத்துக்கு பல வியாதிகளை உண்டாக்கும். ஜலத்தில் சாக்கடை அசுத்தம் கலந்திருக்கிறதா என்று அறிவதற்கு கீழே சொல்லியிருக்கும் பரீக்ஷையை செய்து பார்க்கலாம். எந்த ஜலத்தை பரிசோதனை செய்ய வேண்டுமோ அதை ஒரு சுத்தமான வெள்ளை புட்டியில் நிறைய ஊற்ற வேண்டும். அந்த புட்டியில் கொஞ்சம் சர்க்கரையைச் சேர்த்து காற்றுப் போகாதபடி நன்ருய் நெட்டி அடைத்து மூடிவிடவேண்டும். இந்த புட்டியை வெயிலில் இரண்டு மூன்று நாள்களுக்கு வைக்க வேண்டும். புட்டியிலுள்ள ஜலம் சாதாரணஜலம் போல் இருந்தால் அசுத்தம் இல்லை. பால் போன்ற நிறமாகி விட்டால் அசுத்தம் கலப்பு என்று ஊகிக்க வேண்டியது.

Styes.

**கிருக்குக் கட்டிகள்.**—உஷ்ணத்தினுல் சிலபேர்களுக்கு கண்ணில் கிருக்குக்கட்டிகள் வெடிப்பதுண்டு. இந்தக் கிருக்குக்கட்டிகளினுல் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு பின்வரும் பரிகாரம் அனுகூலமாயிருக்கும். வெதுவெதுப்பான வெந்நீரினுலாவது அல்லது குளிர்ந்த ஜலத்தினுலாவது ஒருநாளைக்கு இரண்டு, மூன்றுதரம் கண்களை நன்ருய் அலம்பவேண்டியது. அலம்பியானதும் ஈரம் போகும்படி கண்களை நன்ருய்த்துடைத்து விடவேண்டும். அல்லது இன்னொருவிதமாகவும் செய்யலாம். ஒரு தடவை வெதுவெதுப்பான வெந்நீரையும் மறுதடவை குளிர்ந்த ஜலத்தையும் மாற்றி மாற்றி 5 அல்லது 6 தடவை கண்ணில் விட்டு அலம்ப வேண்டும். கடைசியாய்க் குளிர்ந்த ஜலம் கண்ணில் தங்காமல் துடைத்து விடவேண்டும்.

Dental Troubles.

**பல் வியாதிகள்.**—பல் வியாதி ஒருவன் அப்பாவுக்கிருந்தது, ஆகையால் பிள்ளைக்கும் வந்திருக்கிறது என்று சொல்லக் கூடியதல்ல. குழந்தை முதல், சாப்பிடுவதை ஒரே வாயாக விழுங்காமல் நன்ருய்க் கடித்து சாப்பிடும் வழக்கம் மாத்திரம் ஏற்படும் பக்ஷத்தில் பல்லையொட்டிய வியாதிகள் வாராவாம். இப்படிச்செய்யாததினுல் பல்லுகள் கெட்டியான பதார்த்தங்களைக்கடிக்க முடியாமலும் வரிசையாயில்லாமல் கோணல்மாணலாயும் முளைக்கின்றனவாம். ஆகையால் சிறு வயதுமுதற்கொண்டே குழந்தைகள் எதைச்சாப்பிட்டாலும் நன்ருய்க் கடித்துமென்று சாப்பிடும்படி வழக்கப்படுத்த வேண்டும்.

Bathing.

**ஸ்நானஞ் செய்தல்.**—தேகத்தில் வியர்வை அதிகமாய் வந்து கொண்டிருக்கும் பொழுது ஸ்நானஞ் செய்தால், தேகத்திலிருக்கும் அசுத்தங்களெல்லாம் வெளியே வராமல் உள்ளேயே தங்கிநின்றுவிடும் என்று அநேகர் கேள்விப்பட்டிருக்கலாம். ஆனுல் இது சில ஸமயங்களில் மாத்திரம் ஸரியே தவிர எப்பொழுதும் ஸரியான அபிப்பிராயமல்ல. தேகம் களைத்திருக்காத பக்ஷத்தில் வியர்வை வந்து கொண்டிருந்தாலும் ஸ்நானஞ் செய்தால், வியர்வை துவாரங்கள் அடைபடாமல் வியர்வை அதிகமாக வெளிக்கிளம்பி தேகத்திலுள்ள அசுத்தங்கள் ஜலத்தோடு ஜலமாய்ப் போய்விடும். நன்ருய்ச்சாப்பிட்ட பிறகு இரண்டுமணி நேரமாவதற்குள்ளாக ஒருபோதும் ஸ்நானம் செய்யவே கூடாது. வெந்நீரோ, பச்சைஜலமோ, எந்த ஜலமாயிருந்தாலும், சாப்பிட்டவுடனே ஸ்நானம் செய்தால், ஜீரணசக்தி மிகவும் குறைவுபட்டு, நாடி நரம்புகளின் பலமும் குறைந்து போகும். இந்த மாதிரி சாப்பிட்டவுடன் ஸ்நானஞ்செய்ததினுல் அநேகம் பேருக்கு வியாதிகள் கண்டிருக்கின்றன. சிலபேர்கள் வயிறு நிறைந்திருக்கும்போது ஸ்நானஞ்செய்ததினுல் இறந்தும் போயிருக்கிறுர்கள்.



P. S. Sastri Artist and Photographer,
CARNATIC STUDIO, Mount Road, Madras.

SPECIALITIES. { SCHOOL GROUPS. FAMILY GROUPS. BROMIDE ENLARGEMENTS.

பொட்டகிராப் படங்கள்.

பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளையும் குடும்பங்களையும் பொட்டகிராப் படம் பிடிப்பதிலும் சிறியபடங்களை பெரிதாக்கிக்கொடுப்பதிலும் நிபுணர்.

பி. எஸ். சாஸ்திரி,
பொட்டகிராப் பிடிப்பவர், கர்நாடிக் ஸ்டூடியோ,
மவுண்ட் ரோட், மதராஸ்.

EDWARD & Co.
*GERMAN SILVER AND ELECTROPLATED JEWELLERS.*
NO. 47, P. L. MADRAS, E.

எட்வர்ட் அண்டு கம்பெனி.
ஜர்மன் வெள்ளி எலக்டிரிக் தங்கநகை வியாபாரிகள்.
நெ. 47, பி. எல். சென்னை.

வெகுமதிகள் அதிகமென்று மோசம்போகாதீர்கள். விலை, மதிப்பு, சுத்தம் இவைகளைப் பாருங்கள்.

எம்பெரர் லிவர் கெடியாரம்.
**இந்தியா, பர்மா, ஸிலோன் இவ்விடங்களில் ஏராளமாய் விற்கப்படுகின்றது.**

முதல் விலை ரூபா 10. இப்பொழுது கீழ்சொன்ன வெகுமதிகளோடு 5-8-0 ஆக குறைத்து விற்கப்படுகின்றது. நாங்கள் கெடியாரம் செய்பவர்களிடமிருந்து நேராய் தருவிப்பதால் ஆச்சரியப்படும்படியான சொற்ப விலைக்கு விற்கின்ருேம்.

கெடியாரத்தின் விவரம்:—நிக்கல் வெள்ளி, மேல்சாவியும், மேல்பார்வையுமுள்ளது. பலத்த வேலைப்பாடும் கையால் முள் திருப்பக்கூடியது. சரியான காலத்தைக் காட்டுவதோடு, வெகுமதிக்கு லாயக்கானது. ஹேர்ஸ்ப்ரிங் பலமானது, பாலன் கணக்கோடு செய்யப்பட்டது. மேல் தகடு எனமல் வேலை செய்யப்பட்டது. முரட்டுத்தன்மையாய் உபயோகித்தாலும் கெடாது. உண்மையில் பலமானதும் வெகுநாளைக்கிருக்கக்கூடியதுமாகிய கெடியாரம்.

வெகுமதி விவரம்:—அழகிய இன்டிபெண்டென்ட் பேனு 1. ரோல்ட் கோல்ட் ஷர்ட் பொத்தான் ஸெட் 1. ரோல்ட் கோல்ட் கைபொத்தான் ஸெட் 1. கெடியாரக்கண்ணுடி 1. மெயின்ஸ்பிரிங் (வில்) 1. வெல்வெட் பெட்டி 1. வாசனை அடங்கிய அழகான சீசா 1. போஸ்ட் கார்ட்கள்.



ஒரே காலத்தில் 3. கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு ஷை இனுமல்லாமல் கால்பெல் என்னும் மணி அமைத்திருக்கும் அலாரம் டைம்பீஸ், ஒன்று உசிதமாய் கொடுக்கப்படும்.

## PAGE FOR GIRLS.

## பெண்களுக்கான பக்கம்.

---

MILKING COWS BY THE AID OF MUSIC.

**பாட்டுப்பாடி மாடு கறத்தல்.**—"ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக்கறக்கவேண்டும், பாடிக்கறக்கிற மாட்டைப் பாடிக்கறக்கவேண்டும்" என்னும் பழமொழியை அநேகர் கேட்டிருக்கலாம். ஆனாலும் அந்தப் பழமொழியின்படி நம்முடைய நாட்டில் எவரும் செய்வதாய்த் தோன்றவில்லை. இங்கிலாந்தில் வேளாண்மைத்தொழில் செய்யும் ஆடா எப்-ஹௌவ்வி என்னும் ஒரு துரை மகள், தான் செல்வமாக வளர்த்து வரும் பசுமாடுகளுக்கு தகுந்த பாட்டுகள் பாடி பால் அதிகமாகக் கறக்கிறாளாம். பாட்டு மனதுக்கு ஒருவிதமான சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் உண்டாக்குவதினால் மாடுகளுக்குஅதிகசத்துள்ளதும் சுத்தமுமான பால் ஏராளமாய்சுரக்கிறதாம். இப்படிச் செய்து வந்ததினால் அந்தத் துரைமகளுக்கு பால், வெண்ணெய் வியாபாரங்களில் அதிக லாபம் கிடைக்கிறதாம். இந்த விஷயம் நம்முடைய அனுபோகத்துக்கும் ஒத்ததாயிருக்கிறது. ஏனென்றால், இடி, மின்னல் இன்னும் பலவிதமான சத்தங்களினால் மாடுகள் திடீரென்று பயந்து கொண்டால் பாலே நன்றாய் சுரக்கிறதில்லை யென்பது நாம் எல்லாரும் அறிந்த விஷயமே. அப்படியில்லாமல் தப்பித்தவறி பால் கொஞ்சம் சுரந்த போதிலும் அந்தப்பால் ருசியிலும் ஸத்திலும் குறைந்திருப்பதை அநேகர் கண்டறிந்திருக்கிறார்கள். எப்படி, மாடுகள் சத்தங்களினால் ஒருவிதமான வெறுப்பையும் பயத்தையும் அடைந்தால் பாலானது அளவிலும், குணத்திலும், ஸத்திலும் குறைவுபடுகிறதோ அப்படியே அவைகளுக்கு பிரியமான தொனிகளால், அதாவது, பாட்டுகளால் மாடுகளை உற்சாகப்படுத்திவிட்டால் எல்லாவிதத்திலும் உயர்ந்த பாலை ஏராளமாய்க் கறந்துகொள்ளலாம் என்பது தெளிவாகிறது. மாடுகள் பாட்டுகளைக் கவனித்து உற்சாகமடைகின்றன வென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஏனென்றால் மாடு மேய்க்கிற பையன்கள் புல்லாங்குழல் வாசித்தால் மாடுகள் சமீபத்தில் வந்து உற்றுக்கேட்பதை அநேகர் பார்த்திருக்கலாம். சாதாரணமாக மாடுகளெல்லாம் சாந்தமும் அமைதியுமுள்ள பிராணிகள். ஆகையால் கர்ணகடோரமான சத்தங்கள் அவைகளுக்கு துன்பத்தை உண்டாக்குவதோடு அஜீரணத்தையும் உண்டாக்குவதாகச் சொல்லப்படுகிறது. மாடுகள் சாந்தமாயும் அமைதியாயும் படுத்துக்கொண்டு அசைப்போடுவதே அவைகளின் இயற்கையான குணத்தைக் காட்டுகிறது.

இந்த விஷயங்களையெல்லாம் நன்றாயறிந்த அந்தத் துரைமகள் ஒவ்வொரு மாட்டுக்கும் ஒவ்வொரு பாட்டுப் பாடிக்கொண்டே பால் கறக்கிறாளாம். இப்படிச்செய்துவந்ததினால் ஒரு மாடு முன் கறந்துகொண்டிருப்பதைவிட இப்பொழுது மூன்று மடங்கு அதிகமாகப் பால் கறக்கிறதாம்.

KEROSINE OIL.

**கெரோஸின் எண்ணெய்.**—பம்பாய் மாகாணத்தில் பூனா நகரத்துக்கு சமீபத்திலுள்ள கூலா என்னும் கிராமத்தில் சிலபேர்கள் ஒரு இராத்திரி தீவட்டி போட்டுக்கொண்டு குதித்துக்கொண்டிருந்தார்கள். ஒரு தீவட்டி அணைந்து போனதால் அதை நுனியில் நெருப்பு இருக்கும் பொழுது அவர்களில் ஒருவன் ஒரு கெரோஸின் எண்ணெய் தகரத்தில் தோய்த்தானாம். அது வெடித்து எண்ணெய் பற்றிக்கொண்டு பக்கத்தில் இருந்த ஐந்து பேர்கள் துணியில் பிடித்துக் கொண்டது. சில வீடுகளில் அஸ்தமிக்குமுன் விளக்குகளுக்கு எண்ணெயைப் போடாமல் இருட்டினபிறகு ஒரு விளக்கைகையில் வைத்துக்கொண்டு தகரத்திலிருந்து கிரோஸின் எண்ணெயை எடுத்து விளக்குகளுக்கு போடுவது வழக்கமாயிருக்கிறது. தப்பித்தவறி ஒரு பொறி எண்ணெய்த் தகரத்தில் விழுந்தால் மேலே சொல்லிய கதியாகும். ஆகையால் கிரோஸின் எண்ணெய் சமீபத்தில் நெருப்பை கொண்டு போகக்கூடாது.

A NEW MARRIAGE.

**ஓர் புதிய விவாகம்.**-மதராஸ் போலீஸ் டிபார்ட்மெண்டை சேர்ந்த மகா-ள-ள-ஸ்ரீ என். எஸ். துரைசாமி அய்யர் அவர்களுக்கும் தஞ்சாவூரில் பணக்காரராய் இருக்கும் மகா-ள-ள-ஸ்ரீ ப. நாராயணசாமி அய்யர் அவர்களுடைய குமாரத்தி சௌ. லக்ஷ்மி அம்மாளுக்கும் தஞ்சாவூரில் விவாகம் நடக்கப்போவதாய் அறிகிறோம். மாப்பிள்ளை வடமஜாதி. பெண் அஷ்டஸகஸ்ரம். இதுதான் இந்த விவாகத்தில் விசேஷம்,




**DAS & Co'.s *PATENT* LOCKS, SAFES, BOXES, &c.,**

*are approved and largely used by H. M's. Indian Government.*

கல்கத்தாவில் காஸ்ஸிப்பூர் ரோடில் 15 நெ. வீடு, தாஸ் அண்டு கம்பெனியாரால் செய்யப்பட்ட பூட்டுகளும், இரும்பு பெட்டிகளும் கவரன்மெண்டாரால் உபயோகிக்கப்படுகின்றன.

During the Viceroyalty of
**Lord Curzon**
Das and Co.'s Locks were supplied for Government Houses at Simla & Calcutta, and thus reported from Simla:—

"* * Were found to be excellently finished and in no way inferior in quality to those of European Manufacture. They are giving every satisfaction."

Awards from the late
**Chicago Exhibition**
1893-94.
THACKER'S MEDAL
with following Certificate:—

"The Locks are of good design and large heavy pattern having 12 Tumblers. They are made chiefly from good castings well fitted and finished by Machinery."

Please Address:—
**DAS & CO.,**
Chitpur Lock and Safe Works,
THE "ABBA" M'f'y.
*15, Cossipur Road,*
*CALCUTTA.*

TELEGRAMS:—
"Safeguard,"
Calcutta.

**THE COMPLETE LETTER WRITER** 2nd Edition Revised and Enlarged.

**BY HARI CHARAN DAS. Price Re. 1.** *(Full Cloth, Gilt.)*

A Universal Guide to the Art of Letter Writing for all positions of Life.

*To be had of*—M. L. DAS & CO., *122, Baitakkana Road, Calcutta.*

THE BENGAL CHEMICAL
AND PHARMACEUTICAL WORKS, LTD.,
*91, Upper Circular Road, Calcutta.*

எங்கள் பரிமளக் கூந்தல் எண்ணெயில் அநேக மலர்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. மகா சுத்தமானது. வேறுவிதமான வர்ணங்களைச் சேர்த்து பகட்டப்படாதது.

இதில் எத்தனையோ ஆயிரக்கணக்கான ரோஜா, மல்லிகை, தாமரை முதலிய புஷ்பவாஸனைகள் வீசும்.

வேண்டியவர்கள் அடியில் கண்ட ஏஜண்டுகளிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பி. ரெங்கப்ப செட்டி அண்டு ஸன்ஸ், எஸ்பிளநேட், மதராஸ்.

ஸ்வதேசி வேர் அவுஸ், தம்புசெட்டித் தெரு, மதராஸ்.

நாஷனல் டிரேடிங் கம்பெனி, எஸ்பிளநேட், மதராஸ்.

கே. வி. பிராமய்யா அண்டு ஸன்ஸ், மதராஸ் அல்லது ராஜமஹேந்திரம்.

என். ஆர். பகடி அண்டு கம்பெனி, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

**பங்காள ரஸாயன ஔஷதசாலை,**
91. அப்பர் ஸர்கிலர் ரோட்,
கல்கத்தா.

CLASSIFIED COMMERCIAL DIRECTORY.

**வியாபார பகுதி விலாசங்கள்.**

COLOUR PENCIL MANUFACTURER.
கலர் பென்சில் செய்கிறவர்கள்.
K. P. RAMASWAMY IYER,
15, Solayappa Mudali Street,
*KUMBAKONAM.*

SILK MERCHANTS.
பட்டு வியாபாரிகள்.
பட்டு பீதாம்பர கம்பெனி,
காசி (பனாரீஸ்.)

BRUSH MANUFACTURE.
புருஷ் செய்தல்.
B. V. K. CHETTY & CO.,
No. 22, Broadway, Madras.

## PAGE FOR BOYS.

## சிறுவர்களுக்கான பக்கம்.

BRONZE.

**வெண்கலம்.**—வெண்கலம் என்பது செம்பும் தகரமும் கலந்த உலோகம். இந்தக் காலத்து வெண்கலத்தில் துத்த நாகமும் கலந்திருக்கும்.

POLICE DOGS FOR NIGHT DUTY.

**இரவில் பாராக் கொடுக்க போலீஸ் நாய்கள்.**—நாய்கள் மிகவும் செவி நுட்பமும், மேன்மையான முகரும் சக்தியும், எஜமான விசுவாசமுமுள்ள பிராணிகள். ஆகையால் ராணுவங்களில் அன்னியர் வரவையறிந்து கூச்சலிடவும், பற்பல விடத்தில் காயம் பட்டு கிடக்கும் யுத்தவீரர்களை தேடிப்பிடிக்கவும், விசேஷமாக உபயோகப்படுகின்றன. முதலில் ஐரோப்பாவில் பெல்ஜியம் தேசத்தில் 'கெண்டு' பட்டணத்தில் ஏற்பட்டு, பின்பு அநேக ஐரோப்பிய பிரதான பட்டணங்களில் அவைகளின் உபயோகம் நாளாவர்த்தியில் பரவி இப்பொழுது முக்கியமாய் ஜெர்மனி தேசத்துப் பட்டணங்கள் ஒவ்வொன்றிலும் சுமார் 100 நாய்கள் வளர்க்கப்படுகின்றன. போலீசாருக்கு அவைகளுடைய உபயோகங்களைப் பற்றி கொஞ்சம் சொல்லுவோம். ஒரு சமயம் லெபின் என்பவர் பழகின நாய்களின் உதவியால் வெகு நாளாய் பதுங்கிவந்த 21 வழித் திருடர்களை கைப்பிடியாய்ப்பிடித்தாராம். சென்றவருஷந்தான் 170 குற்றவாளிகள் 'ஸ்டுட்கார்ட்' என்ற நகரிலே நாய்களின் உதவியால் பிடிபட்டார்கள். ஒரே நாய் வெவ்வேறு சமயங்களில் 100 பேர்களை பிடித்ததாகவும் சொல்லுகிறார்கள். ஹானோவரில் போலீசு வேலைக்காரர் ஒருவர் துஸ்சரிதையான ஒரு ஸ்திரீயைத் துரத்தும்பொழுது அனேக முரடர்களால் சூழப்பட்டார். தன்நாய் இல்லாவிட்டால் அன்றைய தினம் இறந்துபோயிருக்கவேண்டும் என்று தாமே பின்புசொன்னார். நம்முடைய தேசத்தில் பல கனவான்கள் வீடுகளில் நாய்களை வளர்த்து ராத்திரியில் அவைகளை அவிழ்த்துவிடுவது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. நம்முடைய நாட்டிலும் நாய்களை போலீசாருக்கு சகாயமாய் ஏன் பழக்கக் கூடாது.?

INDIGO.

**நீலச்சரக்கு.**—இது அவுரிச்செடியிலிருந்து எடுக்கப்படும் ஒரு சாயவஸ்து. இது நம்முடைய தேசத்தில் ஏராளமாய் செய்யப்பட்டு வந்தது. சொல்ப வருஷங்களுக்கு முன் வரையில் சுமார் 650 லக்ஷம் பெறுமான சரக்கு இதர தேசங்களுக்கு நம்முடைய தேசத்திலிருந்து அனுப்பப்பட்டு வந்தது. இந்த நீலச் சரக்கை தாங்களே தங்கள் தேசத்தில் ரஸாயன சாஸ்திர உதவியால் வேறுபொருள்களிலிருந்து தயார் செய்யக்கூடாதா என்று ஐரோப்பாவில் ஜெர்மனி தேசத்தில் சில ரசாயன ஸாஸ்திரிகள் பரிக்ஷை செய்ய ஆரம்பித்தார்கள். முதலில் நீல சரக்கில் என்னென்ன மூலவஸ்துக்கள் அடங்கியிருக்கின்றன என்று கண்டு பிடித்துக் கொண்டார்கள். பிறகு இந்த மூல வஸ்துக்களை எல்லாம் ஒன்றாகச்சேர்த்து ரஸாயன முறையால் நீலச்சரக்கை உண்டுபண்ணினார்கள். இவை இரண்டையும் செய்ய 15 வருஷம் பிடித்ததாம். பிறகு இந்தச்சரக்கை வியாபாரத்திற்கு வேண்டிய அளவில்செய்து மலிவாய் விற்க முயற்சி செய்தார்கள். இது 20 வருஷம் பிடித்தது. இப்படிக்கெல்லாம் செய்து 1903-ம் வருஷத்தில் ஜெர்மனி தேசத்திலிருந்து ஏற்றுமதியான செயற்கை நீலச்சரக்கின் பெறுமானம் $187\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய். இதனால் 1904-ம் வருஷத்தில் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் சரக்குக்குறைந்து போய் முன் இருந்ததில் மூன்றில் ஒருபாகமாய் விட்டது. இப்பொழுது நீலச்சரக்கு வியாபாரமே படுத்துப் போய்விட்டது. ஒருவன் படித்துச்செய்கிற காரியத்திற்கும், படிக்காமல் செய்யும் காரியத்திற்கும் இதனால் வித்தியாசம் நன்றாய் தெரிகிறதல்லவா?

MALARIAL FEVER.

**முறை ஜுரம்.**—முறை ஜுரம் என்றால் என்ன, அது எப்படி உண்டாகிறது, அது எப்படிப்பரவுகிறது, அதற்கு மருந்தாகிய கொயினாவை எப்படிச்சாப்பிடுகிறது, எவ்வளவு சாப்பிடுகிறது. குழந்தைகளுக்கு எவ்வளவு கொடுக்கிறது, பெரியவர்களுக்கு எவ்வளவு கொடுக்கிறது, கொயினா எங்கே அகப்படும், என்ற பலவிஷயங்களைக்கண்டு ஒரு துண்டு பத்திரிகை அச்சடித்து பஞ்சாப் மாகாணத்திலுள்ள ஸ்கூல் பிள்ளைகளுக்கெல்லாம் கொடுக்க அந்த மாகாணத்து கவரன்மெண்டார் வேண்டிய ஏற்பாடுகளை செய்வதாகத்தெரிய வருகிறது.



இந்தியாமுழுமையும் உபயோகித்து வரும் ஜர்மன் வெள்ளி கிலிட்டு நகைகள்.

ஐந்துசிரசுள்ள சிலங்கு கட்டிய ஜடைநாகம்.



இது எலக்டிரிக் கோல்டின் மேல் சுய தங்க கிலிட்டு கொடுத்து நகாஸ்வேலைசெய்த மனோ உல்லாசமான நாக சயன கிருஷ்ணவேணு கானத்துடன் 1,2,3, வரிசை சலங்கைகள் கட்டியிருக்கின்றன.

நெ. 1. விலை 3-0-0, நெ. 2. 2-8-0, நெ. 3. 2-0-0

| | | | |
|---|---|---|---|
| 7கல் கடுக்கன் ஜதை 1-க்கு | 4 | 0 | 0 |
| வலதுகை (கடகம்) கொத்துடன் | 2 | 12 | 0 |
| சாதா கைகாப்பு ஜதை 1-க்கு | 3 | 0 | 0 |
| இமிடேஷன் டைமன் பாலிஷ் கம்மல் ஜதை 1-க்கு | 4 | 0 | 0 |

வி. மாணிக்கம் பிரதர்ஸ்,
வண்ணாரப்பேட்டை போஸ்டு, மதராஸ்.

# HENKE'S TILE WORKS,
**10, Esplanade, MADRAS, E.**

எங்களால் நல்ல மங்களூர் ஓடுகளும், தள வரிசைக்கல்களும், வயல்களுக்கு தண்ணீர் மடைக்குழாய்களும் செய்யப்படுகின்றன. இவைகளெல்லாம், ஸர்க்கார் இஞ்சினீர் உத்தியோகஸ்தர்களாலும், ஜில்லா போர்ட்டுகள், முனிஸிபாலிடிகள், ஜமீன்தார்கள், ரெயில்வேகம்பெனிகள் முதலியவர்களாலும் ஏராளமாய் வாங்கப்பட்டு வருகின்றன. வீடு கட்டுகிறவர்களுக்கும் மிராசுதார்களுக்கும் வெகு உபயோகமானவைகள். வேண்டிய மற்ற விவரங்களுக்கு, அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதி தெரிந்துகொள்ளவும்.

ஹெங்கிஸ் ஓட்டு கம்பெனி,
நெ. 10, எஸ்பிளநேட்,
மதராஸ்.

## Distinguished Contributors to "Practical Life."
## பிழைக்கும் வழிக்கு வியாஸம் எழுதும் கனவான்கள்.

(1) திவான் பகதூர் பி. ராஜரத்ன முதலியார் அவர்கள் ஸி. ஐ. இ, ரிஜிஸ்தரேஷன் இலாகா மாஜி தலைவர்.

(2) ராவ் பகதூர் எம். ரங்காச்சாரியார் அவர்கள் எம். ஏ., ப்ரொபெசர், பிரசிடென்ஸி காலேஜ்.

(3) ராவ் சாஹிப் டி. ராகவையா அவர்கள் பி.ஏ., ரெவினியூஉத்தியோகஸ்தர், மதராஸ் முனிசிபாலிடி.

(4) ராவ் பகதூர் எம். ஆதிநாராயண ஐயா அவர்கள், ரெவினியூ செட்டில்மெண்டு மாஜி டிப்டி கமிஷனர்.

(5) ராவ் பகதூர் வி. கே. ராமானுஜாசாரியார் அவர்கள் பி.ஏ., ரெவினியூ போர்டு மாஜி காரியதரிசி.

(6) திவான் பகதூர் ஏ. கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள் பி.ஏ., உப்பளம் டிப்டி கமிஷனர், திருச்சினாப்பள்ளி.

(7) திவான் பகதூர் எல். ஏ. கோவிந்தராகவ ஐயர் அவர்கள் பி. ஏ., பி. எல்.

(8) கனம் வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் பி. ஏ., பி. எல்.

(9) ராவ் பகதூர் ஜி. ஸ்ரீனிவாச ராவ் அவர்கள் பி. ஏ., சேர்மன், மதுரை முனிசிபாலிடி.

(10) மஹாமஹோபாத்தியாய பண்டிதர் வெ. ஸ்வாமிநாதய்யர்.

(11) திவான் பகதூர் ஆர். ரகுநாதராவ் அவர்கள் சி. எஸ். ஐ.

(1) Diwan Bahadur P. Rajaratna Mudaliar, C.I.E., Inspector-General of Registration (Retired.)

(2) Rao Bahadur M. Rangachariar, M. A., Professor, Presidency College.

(3) Rao Sahib T. Raghaviah, B.A., Revenue Officer, Madras Corporation.

(4) Rao Bahadur M. Audinarayana Aiya, Deputy Commissioner of Revenue Settlement (Retired).

(5) Rao Bahadur V. K. Ramanujachariar, B.A., Secretary to the Board of Revenue (Retired).

(6) Diwan Bahadur A. Krishnasami Aiyengar, B. A., Deputy Commissioner of Salt Revenue, Trichinopoly.

(7) Diwan Bahadur L. A. Govinda Raghava Aiyar, B. A., B. L.

(8) The Hon. Mr. V. Krishnasami Aiyar, B. A., B. L. Judge, High Court.

(9) Rao Bahadur G. Srinivasa Row, B. A., Chairman, Municipal Council, Madura.

(10) Mahamahopadhyaya Pandit V. Swaminada Aiyar.

(11) Diwan Bahadur R. Raghunatha Rao, C. S. I.

## INDIAN NEWS.
## இந்தியநாட்டு ஸமாசாரங்கள்.

DAIRY CONFERENCE.

**பால் வெண்ணெய் முதலியவைகளைப்பற்றிய ஒரு ஸபை.**-ஐக்கியமாகாணத்தில் லக்னோ பட்டணத்தில் பால் வெண்ணெய் முதலியவைகள் கிராக்கியாயிருப்பதை விசாரணை செய்ய ஒரு கூட்டம் ஸமீபத்தில் கூடிற்று. அதில் கூடிப் பேசியவர்கள் அவைகள் விஷயமாய் கவரன்மெண்டாருக்கு சில சிபார்சுகள் செய்திருக்கிறார்கள். ஆடுமாடுகள் மேய்வதற்கு மேய்ச்சல் இடங்கள் இப்பொழுது இருப்பதை விட ஜாஸ்தியாக வேண்டுமென்றும், ஒவ்வொருகிராமத்திலும் மேய்ச்சல் ஸ்தலங்கள் கட்டாயமாய் ஏற்படும்படி சட்டம் செய்யவேண்டும் என்றும், கால்நடைகள் நிற்கக்கூடிய தோப்புகள் உண்டாக்குகிறவர்களுக்கு சகாயங்கள் செய்யவேணும் என்றும், ரெயில் மார்க்கமாய் ஒரு இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாடுகளைக்கொண்டு போவதற்கு ரெயில் சார்ஜ் அதிகமாயிருக்கிற தென்றும், ஆகையால் அதைக்குறைக்க வேண்டும் என்றும் சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது. தவிர, நெய் முதலியவைகளில் ரொம்பவும் கொழுப்பு முதலியவைகள் கலக்கப்படுகின்றன. இதை தண்டிக்க ஒரு தனி சட்டம் ஏற்படவேண்டும். இன்னும், கவரன்மெண்டாரும், முனிஸிபாலிடிகளும், விவஸாய ஸங்கங்களும் மாடுகள் வைத்து பால் நெய் வியாபாரம் செய்கிறவர்களுக்கு கூடியவரையில் ஒத்தாசைசெய்ய வேண்டும் என்றும், விற்பனைக்கு வரும் பால் சுத்தமானதென்று பரிசோதிக்கவும், அப்படிக்கில்லாவிட்டால் தண்டிக்கவும் சட்டங்கள் ஏற்படுத்தப் படவேண்டும் என்றும் சிபார்சு செய்திருப்பதாகக் கேள்வி.

EXHIBITION.

**ஒரு பொருட்காட்சி.**—வடக்கே அலகபாத் பட்டணத்தில் விவசாயப்பொருள்களைச் சேர்த்துவைத்து ஒரு பொருட்காட்சி நடக்கப்போகிறதாம். அதற்காக கூடிய மீட்டிங்கில் வந்திருந்தவர்கள் 1600 ரூபாய் வரையில் கொடுப்பதாக கையெழுத்து போட்டார்கள். இது தவிர, ஜில்லா போர்டுகள் முனிஸிபாலிடிகள், கவரன்மெண்டார், இவர்களெல்லாரும் சேர்ந்து, செலவுக்காக 3,000 ரூபாய் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

THE DECCAN AGRICULTURAL ASSOCIATION.

**தக்ஷிண விவஸாய ஸங்கம்.**—பம்பாயில் மகராஷ்ட்ர நாடுகள் முழுமைக்குமாக பூனா நகரத்தில் ஒரு விவஸாய ஸங்கம் ஏற்பாடாகியிருக்கிறது. இதற்கு பம்பாய் கவர்னர் ஸர் ஜார்ஜ் கிளார்க்கு அக்கிராஸநாதிபதி. இந்தஸபையில் அநேக ஸ்வதேச ராஜாக்களும் சேர்ந்திருக்கிறார்கள். ஸபை ஏற்பட்டதுமே நூறுபேர்கள் மெம்பர்களாகி விட்டார்களாம். இப்பேர்ப்பட்ட ஸபைகளின் மெம்பர்கள் விவஸாயத்தில் சிரத்தை எடுத்துக்கொண்டு வேலை செய்யும் பட்சத்தில் நம்முடைய தேசத்து விவஸாயம் முன்னுக்கு வரும் என்பதற்கு ஆட்சேபனை யில்லை. இவர்கள் புதியமுறைகளைத் தெரிந்துகொண்டு அவைகளை தாங்களே அனுஷ்டானத்தில் பரீக்ஷித்துப்பார்த்து, ஸரியாகத்தோன்றும் பட்சத்தில் தங்கள் ஊரார்களுக்கு எடுத்துச்சொல்லி அவர்களையும் அப்படியே செய்யும்படி சொல்லவும், விவஸாயிகளுக்கு மாஸ—லை தகுந்தபடி நல்ல விலைக்கு விற்றுக்கொடுக்கவும், இன்னும் விவஸாயிகளுக்கு பல் விதத்தில் ஒத்தாசை செய்யவும், கூடும்.

THE GANGES SUGAR WORKS CO.

**கங்கை சர்க்கரை சாலை.**—ஐக்கியமாகாணங்களில் சர்க்கரை சுத்திசெய்யும் கம்பெனிகளில் இது பெரிது. இதில் நாள் ஒன்றுக்கு 500 மணங்கு வெல்லத்தை சுத்திசெய்து சர்க்கரை செய்யப்படுகிறதாம். சர்க்கரை வெகு நன்றாய் இருப்பதாகவும், ஜனங்கள் மிகப்பிரியப்பட்டு வாங்கி வருவதால் வேண்டிய அளவில் சரக்கு செய்யமுடியவில்லை என்றும் சொல்லப்படுகிறது. சுத்தி செய்யப்பட்ட சர்க்கரை விசேஷமாய் நாகப்பூருக்குப் போய்விடுகிறது. பாக்கி உள்ளூரிலேயே செலவாகி விடுகிறதாம்.

INDIAN MANUFACTURES.

**இந்தியா கைத்தொழில் பொருள்கள்.**—நமது ராஜாங்கத்திற்கு ராஜாங்க விஷயமாய் அநேக சாமான்கள் தேவையாயிருக்கின்றன. இவைகளை இந்தியாவில் உள்ள வர்த்தகர்களில் யார்யாரிடத்தில் வாங்கலாமென்பதற்காக கவரன்மெண்டார் ஒரு பட்டி தயார் செய்யப்போகிறார்களாம்.



# Opinions of Educationists on Practical Life.

**THE SUB-ASST. INSPECTOR OF SCHOOLS, PATTUKKOTTAI RANGE,** writes:—"I have already recommended the supply of your Journal to the Board Schools of Pattukkotta Taluq which are 39 in number.

**THE HEADMASTER OF THE SECONDARY SCHOOL, PARAMAKUDI, WRITES.**—"It decidedly supplies the great want felt by the mass, in the most useful matters, such as Industrial, Agricultural and Commercial. It deserves the name "*Practical Life*" in every way."

**THE HEADMASTER, L. F. SCHOOL, YEDAPALLI, WRITES.**—"The whole scheme of the Journal, when its contents are taken into consideration, is admirable. Teachers seeking books for teaching "General Knowledge," on important subject in every elementary school will find the journal very useful. To my mind the appearance of this journal is one of the most hopeful signs of the nation's future. To-day, I am applying to the authorities for the supply of this journal to all the Board Elementary Schools in the district."

**THE HEADMASTER OF THE A. I. TRAINING SCHOOL, NAZARETH,** writes:—"I read through the magazine with great interest and found it extremely useful to the public and to the teachers of Elementary Schools in particular. The Journal provides the teachers and the taught with the means of obtaining real knowledge of the world and it is expected to be a good guide to beginners on account of its great educative value. At a time, when there is a loud outcry for Technical education and improved methods of agriculture, your valuable journal is a God-send. I shall recommend it to the teachers and pupils of elementary and secondary schools in these parts."

**THE SUB-ASST. INSPECTOR OF SCHOOLS, COIMBATORE,** in recommending the Journal to the Assistant Inspector for supply to the Municipal and Board Schools in the District, writes:—"I hope the perusal of the Journal will increase the capacity of the teachers, to impart practical and useful knowledge to the pupils."

## "பிழைக்கும் வழி" யைப்பற்றி சில பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்

**தேசாபிமானி.**—நம் தேசத்தவர் க்ஷேமத்தையடைவதற்கு தொழிலபிவிர்த்தி முக்கியமான விஷயமானதாலும், மனமிருந்தும் போதனைக் குறைவினுல் அபிவிர்த்திக்கு ஏது குறைந்திருப்பதினுலும், அதற்குவேண்டிய போதனையைத் தரத்தக்க பத்திரிகை நமக்கு அத்தியாவசியமாக இருக்கிறது. இதுவரையில் "பிழைக்கும் வழியைப்" போல பத்திரிகை நம் ராஜதானியில் கிடையாது. சகலரும் படித்தறியுமாறு வியாசங்கள் அதிக எளியநடையில் எழுதப் பட்டிருக்கின்றன. சந்தாவிலையும் வருஷத்துக்கு 4. ரூபாய்தான். ஆகையால் சகலரும் அதைத் தருவித்துப் படித்து அதினுல் தாங்கள் பயனடைவதுடன் தேச க்ஷேமத்தையு முண்டாக்குவார்களென்று நம்புகிறோம்.

**சுதேசமித்திரன்.**—அநேக முக்கியமான விஷயங்கள் புதுமாதிரியாக நன்று யெழுதப் பட்டிருக்கும் "பிழைக்கும் வழி" யின் இச்சஞ்சிகைபோல் மற்ற சஞ்சிகைகளும் இவ்வளவு சிறப்புடன் இனிமேலும் நடத்தப்பட்டு வருமெனக்கோருகிறோம்.

**லோகோபகாரி.**—"பிழைக்கும் வழி" என்பது இச்சென்னையில் ஜி. ஏ. வைத்தியராமன் கம்பெனியாரால் நடத்தப்பட்டுவரும் ஒரு மாதாந்தரப்பத்திரிகை. இப்பத்திரிகையானது தன் பெயரளவில் நில்லாது உண்மையிலேயே மனித சமூகத்தாரின் பிழைப்புக்கு ஏதுவாக விருக்கும் வியாபாரம், விவசாயம், கைத்தொழில் கல்வி, உலகவிவகாரம் முதலியவைகளை ஆரம்பித்துக்கல்வி பயின்ற சிறுவர் சிறுமிகளும் படித்தறியத்தக்க எளிய தமிழ் நடையில் விளக்கப்பட்டிருக்கின்றது. இதுவரையில் இது போன்ற பத்திரிகை வெளிவந்ததில்லை யென்றே சொல்லவேண்டும். இதற்கு வருஷசந்தா ரூபாய் நான்காக இருந்தபோதிலும், இப்பத்திரிகையில் அமைந்துள்ள விஷயங்களின் விசேஷமும் அபிவிருத்தியின் நோக்கமுமாக இதன் சொந்தக்காரர் காட்டும் அக்கரையும் பார்த்தறிபவர்களுக்கு அத்தொகை பெரிதாகமாட்டாது. இப்பத்திரிகை நம் தமிழ் நாட்டாரால் பெரும்பாலும் ஆதரித்து வரப்படும் என நம்புகிறோம்.

**ஜனாநுகூலன்.**—"பிழைக்கும் வழி," பெயருக்குத் தக்கவாறு சங்கதிகளு மிருக்கின்றன. இதில் விவசாயம் வர்த்தகம், கைத்தொழில், கல்வி, சாஸ்திரம், வைத்தியம், சிறுவர்க்கான சமாசாரங்கள், இன்னும் பல தேச வர்த்தமானங்கள் அடங்கி யிருக்கின்றன. இப்படிப்பட்ட பத்திரிகையை யாவரும் வாசித்துவரில் பல நன்மைகளை அடையலாம்.

## FOREIGN NEWS.

## அந்நிய நாட்டு ஸமாசாரங்கள்.

INDIAN SCHOOLS IN NATAL.

**நேடாலில் இந்தியர்களுந்துப் பள்ளிக்கூடங்கள்.**—நேடால் தேசத்திற்குப்போகும் இந்தியர்கள் கூலிக்குச்சேவிக்கவேண்டும் என்பதைத் தவிர உயர்ந்த பதவிக்கு வர ஒருவித சாதனங்களையும் அந்த கவரன்மெண்டார் செய்து கொடுப்பதில்லை. சர்க்கார் பள்ளிக்கூடங்களை நடத்துவதற்கு ஏற்பட்டிருக்கும் சில ரூல்களே மேலே சொல்லியதற்கு அத்தாக்ஷி. ஐரோப்பியரல்லாத நேடாலில் பிறந்தவர்கள், இந்தியர்கள், இன்னும் மற்ற கருப்பு மனுஷர்கள் ஆகிய இவர்களுடைய குழந்தைகளெல்லாம் தனியாக இவர்களுக்கென்றே ஏற்படுத்தப்பட்டிருக்கும் பள்ளிக்கூடங்களில் மட்டும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அந்தப்பள்ளிக்கூடங்களிலும் படிக்கிற பையனுக்கு 16வயதானதும் அவனைப் பள்ளிக்கூடத்திலிருந்து தள்ளிவிடுவார்கள். மேலே சொல்லிய பிள்ளைகளுக்கு சகாயச்சம்பளம் என்பதே கிடையாது. இந்தியர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்டு ஐரோப்பிய உபாத்தியாயர்கள் உள்ள பள்ளிக்கூடங்களில் கீழ்த்தரப்படிப்புக்கு ஏற்பட்ட விஷயங்களைத் தவிர வேறு ஒரு விஷயமும் மாணாக்கர்களுக்குச் சொல்லிக்கொடுக்கக் கூடாதாம்.

THE INDIAN SOUTH AFRICA LEAGUE.

**தென் ஆப்பிரிக்கா இந்தியர் ஸபை.**—சென்ற பிப்ரவரி மாஸத்து ஸஞ்சிகையில் நேடாலுக்கு கூலிகளாகப் போகும் ஜனங்கள் அங்கே படும் கஷ்டத்தைப்பற்றி சொல்லியிருக்கிறோம். நேட்டாலில் உள்ள கூலிகளின் கதியைப்போலவேதான் அடுத்த டிரான்ஸ்வால் முதலிய மற்ற தென் ஆப்பிரிக்கா மாகாணங்களில் உள்ள கூலிகளின்கதியும். இந்த மாதிரி கஷ்டப்படும் இந்தியர்களைப்பற்றி உண்மையான ஸமாசாரங்களை அறிவதற்காகவும், அப்படி அறிந்து அந்த கஷ்டங்களை நிவர்த்திசெய்ய இந்தியா கவரன்மெண்டாருக்கும், சீமையில் அரசனுக்கும், பார்லிமெண்டுக்கும் மனுக்கள் செய்யவும், இன்னும், கஷ்டப்படுகிறவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்வதற்கும், தென் ஆப்பிரிக்கா இந்தியர் [illegible] ஸபை என்ற பெயருடன் ஒரு ஸபை மதராஸில் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள ஜனங்களெல்லாம் ஒன்று கூடி நம்முடைய கவரன்மெண்டாருக்குச் சொல்லும் பக்ஷத்தில் தென் ஆப்பிரிக்காவிலுள்ள நம்முடைய சகோதரர்கள் கஷ்டம் விடியும் என்பதில் ஸந்தேகமே இல்லை.

A NOVEL EXPERIMENT IN INDUSTRIAL EDUCATION.

**கைத்தொழிற் படிப்பில் ஒருபுதிய ஏற்பாடு.**—அமெரிக்கா ஐக்கியநாடுகளில் ஒன்றாகிய மஸச்சூஸெட்ஸில் உள்ள பிட்ஸ்பர்க் என்னும் பட்டணத்தில் கைத்தொழிற் படிப்பில் ஒரு புதிய ஏற்பாடு செய்து பார்த்து வருகிறார்கள். மாணாக்கர்கள் ஒரு வாரத்தில் பள்ளிக்கூடத்தில் படிக்கிறார்கள். மறு வாரத்தில் ஏதாவது ஒரு தொழிற்சாலையில் வேலை செய்கிறார்கள். இப்படி மாற்றி மாற்றி படித்தும், தொழில் செய்தும் வருகிறார்கள். மாணாக்கர்களுக்கு செய்யும் வேலைக்குக் கூலி கொடுக்கப்படுகிறது. ஆகையினால் பள்ளிக்கூடச்செலவுக்கு அவர்களே சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள். இந்த விஷயத்தில் பள்ளிக்கூடத்து அதிகாரிகளோடு தொழிற்சாலைகள் வைத்திருக்கும் எஜமானர்களும் கலந்து வேண்டிய ஒத்தாசைசெய்து வருவதால் இந்த ஏற்பாடு விருத்தியடைந்து வருவதாகத்தெரியவருகிறது. இந்த மாதிரியான படிப்பு முறையை விட்டுப் போவதற்கு ஒரு மாணாக்கனுக்கும் சம்மதமில்லையாம்.

DOWNS FOR STUFFING PILLOWS.

**தலையணை அடைக்க பக்ஷிகளின் மயிர்.**—கோழி முதலிய பறவைகளின் மயிரை நமது நாட்டில் சேகரிப்பதில்லை. ஐரோப்பாவில் கோழி வாத்து முதலியவைகளின் மயிரைச்சேர்த்து தலையணைக்கு உபயோகிக்கிறார்கள். 2 ராத்தல் கொண்ட தலையணை $3\frac{3}{4}$ முதல் $5\frac{1}{4}$ ரூபாய் வரையில் விற்கிறது. குள்ள வாத்து, கூஸ்வாத்துக்களின் மயிர் மிகவும் உத்தமம். கோழியினுடைய மிருதுவான மயிர் மத்தியமம். வான்கோழி மயிர் அதமம். மயிரை எவ்வாறு பதம் செய்யவேண்டுமென்றால், அதை அடுப்பின் பேரில் வறுத்து ஒரு சாக்கில் போட்டு கருங்கல்லின் மேல் வெயிலில் காயவைக்க வேண்டும். கடினமான இறகுகளின் மத்திய நரம்பை எடுத்துவிட அதுவும் உபயோகமாகும். சிலர் கொதிக்கும் நீரில் பறவையை மூழ்கவைப்பார்கள். அந்த மயிரை உலர்த்தி அடுப்பில் வறுத்தால் மயிர் மிருதுபட்டு தலையணைக்கு உதவுகிறது.



# Public Opinion on Practical Life.

**MR. A. ANANTHA NARAYANA AIYAR, KARNAM OF KONUR,** Nangavelli P.O., Salem Dt., writes:—"To-day a magazine of your "PRACTICAL LIFE" has been presented to me by my friend. I find it to be a valuable one. I request that you will be good enough to send by next V. P. Post all articles from January and enlist me as a subscriber of the same."

**MR. G. ANNASAMI ROW OF JAKKASAMUDRAM,** writes:—"Your Journul is being admired by one and all here and I do not think, there is any other Tamil Journal so very useful as the "Practical Life."

**MR. A. K. YEGNANARAYANA AIYAR, M.A. AGRICULTURAL CHEMIST TO THE GOVERNMENT OF MYSORE,** writes:—"I have read your magazine with much interest, and I dare say, the particular class of people, for whom it is intended have found it equally so. I shall certainly send you a contribution or two now and then. I think all agricultural officers will welcome this new medium of communication with the cultivating classes."

**MR. M. R. GOVINDA RAO, DEPUTY COLLECTOR, MELUR,** writes:—Your monthly journal "PRACTICAL LIFE" is very interesting and useful.

# Press Opinions on Practical Life.

**THE HINDU.**—We have much pleasure in welcoming to the ranks of Indian Vernacular Periodical Literature, this new, interesting and very originally designed and excellently executed Tamil monthly, edited and published by G. A. Vaidya Raman, B.A. Mr. Vaidya Raman possesses rare qualifications for the educative work which he has undertaken to do by means of this novel magazine. The "Practical Life" is amply justified by the assortment of matters in the very opening number which is before us, and there need not be the slightest doubt, that the original aim and object in view will be lost sight of in the succeeding numbers. It is to be devoted mainly to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education. Popular interest in agricultural, industrial, commercial and economic matters is next to nothing. If it is so among the English educated classes, how much more is it among the masses? It is such an interest that the magazine apparently aims at creating and developing.

**THE MADRAS STANDARD.**—This journal is the first of the Series designed on the above lines and it makes the discussion of agricultural, industrial, commercial and economic topics its chief feature.

**THE MADRAS MAIL.**—There is no other Tamil periodical in this Presidency which is designed on these lines and which makes the discussion of agricultural, industrial, commercial and economic topics, its chief feature.

**UNITED INDIA AND NATIVE STATES.**—*Practical life*, which is the name of the new Journal, edited by Mr G. A. Vaidya Raman, is meant as a guide and help to breadwinners. Even a cursory perusal of the first number shows that the new venture is by no means a superfluous addition. There is no other periodical designed on these lines. The fare provided will satisfy any man's technical and industrial appetite.

**THE CHRISTIAN PATRIOT.**—*Practical Life*—This is another Tamil monthly magazine just started, and "devoted mainly to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education." We welcome it and wish it continued prosperity as of this kind there is no other Tamil periodical in this Presidency. If at the present moment there is an urgent need, in our part of the country for accurate knowledge on the subjects, the journal promises to furnish its readers with it.

**THE SOUTH INDIAN MAIL.**—The (Practical Life.) (பிழைக்கும் வழி) is a unique Tamil monthly which makes its design to discuss agricultural, industrial, economic and commercial topics. In welcoming our vernacular magazine, it is our pleasing duty to observe this is one of great educative value. Every article is written in simple and chaste language. To bring the benefit of the journal within the easy reach of the bulk of our countrymen, the annual subscription has been fixed at Rs. 4.

**THE MALABAR QUARTERLY REVIEW.**—We have much pleasure in commending to the Tamil world, this new magazine "devoted mainly to agriculture, trade, industry, citizenship, and popular, scientific and technical education." The printing and get up of the magazine are good. This new venture in the field of Tamil Journalism, on the whole, deserves support and encouragement.

**THE INDIAN TRADE JOURNAL** published by the Government of India says.—We have received the first number of a new Tamil monthly entitled *Practical Life*, published in Madras. A good portion of it is devoted to trade, industry and agriculture and in this respect it is the only magazine of its kind in the Southern Presidency.

## SEASON, CROPS AND PRICES.

## காலஸ்திதி, பயிர்கள், விலைவாசி.

COTTON GOODS.

**துணி ஸாமான்கள்.**—இதர தேசங்களிலிருந்து சென்னப்பட்டணத்திலும், ரங்கூனிலும் இறக்குமதி விவரங்கள்.

நூலும் முறுக்கு நூலும்.

| வார முடிவு. | | சென்னப்பட்டணத்தில். |
|---|---|---|
| | | ராத்தல். |
| செப்டம்பர்மீ 4வ | .. | 139,460 |
| ,, 11வ | .. | 90,700 |
| ,, 18வ | .. | 189,500 |
| ,, 25வ | .. | 229,900 |
| ஆகமொத்தம் | .. | 649,560 |

காரிகத் துணிகள்.

| வார முடிவு. | | சென்னப் பட்டணத்தில். | | ரங்கூனில். |
|---|---|---|---|---|
| | | கஜம். | | கஜம். |
| செப்டம்பர்மீ 4வ | .. | 1,535,798 | .. | 467,054 |
| ,, 11வ | .. | 274,993 | .. | 328,870 |
| ,, 18வ | .. | 1,808,430 | .. | 466,356 |
| ,, 25வ | .. | 640,068 | .. | 78,954 |
| ஆகமொத்தம் | .. | 4,259,289 | | 1,341,234 |

சலவைத் துணிகள்.

| வார முடிவு. | | சென்னப் பட்டணத்தில். | | ரங்கூனில். |
|---|---|---|---|---|
| | | கஜம். | | கஜம். |
| செப்டம்பர்மீ 4வ | .. | 496,683 | .. | 742,645 |
| ,, 11வ | .. | 60,254 | .. | 562,263 |
| ,, 18வ | .. | 640,319 | .. | 712,603 |
| ,, 25வ | .. | 317,901 | .. | 476,112 |
| ஆகமொத்தம் | .. | 1,515,157 | | 2,493,623 |

இதர துணிகள்.

| வார முடிவு | | சென்னப் பட்டணத்தில். | | ரங்கூனில். |
|---|---|---|---|---|
| செப்டம்பர்மீ 4வ | .. | 1,097,638 | .. | 1,435,070 |
| ,, 11வ | .. | 438,227 | .. | 662,287 |
| ,, 18வ | .. | 988,742 | .. | 1,473,308 |
| ,, 25வ | .. | 403,932 | .. | 1,098,245 |
| ஆகமொத்தம் | .. | 2,928,539 | | 4,668,910 |

ரெயிலில் அனுப்பப்பட்ட துணிகள்.

சென்னப்பட்டணத்திலிருந்து ரெயில் வழியாய் அனுப்பப்பட்ட ஸ்வதேச பிறதேச துணி ஸாமான்கள். ஒரு அந்தர் என்பது 112 ராத்தல்.

| வார முடிவு. | | அந்தர். |
|---|---|---|
| செப்டம்பர்மீ 4வ | .. | 4,688 |
| ,, 11வ | .. | 4,947 |
| ,, 18வ | .. | 4,983 |
| ,, 25வ | .. | 6,049 |
| ஆகமொத்தம் | .. | 20,667 |

IMPORT OF SUGAR.

**சர்க்கரை இறக்குமதி.**—ஆகஸ்டுமீ 28வ முதல் செப்டம்பர்மீ 25வ வரையில் சென்னப்பட்டணத்தில் இங்கிலாந்திலிருந்து 30 அந்தரும் ஜாவாவிலிருந்து 14,681 அந்தரும் சென்னப்பட்டணத்தில் இறக்குமதியாயின. இதேகாலத்தில் ரங்கூனில்இறக்குமதியான சர்க்கரையின் அளவு இங்கிலாந்திலிருந்து 126 அந்தர், ஜாவாவிலிருந்து 19,600 அந்தர், இதரதேசங்களிலிருந்து 3,503 அந்தர்.

SUGAR CANE CULTIVATION IN MADRAS.

**சென்னைராஜதானியில் கருப்பு சாகுபடி**—ஆகஸ்டு மாஸம் வரையில் சென்னைராஜதானியில் 37,400 ஏகராவில் கரும்பு சாகுபடியாயிருக்கிறதாம். இது போனவருஷத்தைவிட கிட்டத்தட்ட ஆறில் ஒரு பங்கு ஜாஸ்தி. கோதாவரி, பல்லாரி, தென்ஆர்க்காடு இந்த ஜில்லாக்களில்தான் சாகுபடி ஜாஸ்தி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 17 DEC 1909 MADRAS.

Supplement to ‘ Practical Life ’

“ பிழைக்கும் வழி ” க்கு அனுபந்தம்.



INDIAN EMPEROR LORD MINTO EMPRESS PRINCES

OUR PRESENT RULERS.

இப்போது நம்முடைய தலைவர்கள்.



INDIAN PRINCES.

இந்திய அரசர்கள்.

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி, 10, எஸ்பிளனேட், மதராஸ்.

G. A. VaidyaRaman & Co., 10, Esplanade, Madras.

RECEIVED 17 DEC 1909 OFFICE MADRAS


# பிழைக்கும் வழி

## PRACTICAL LIFE

ஜி. எ. வைத்தியராமன், பி.எ. பத்திராதிபர். — G. A. VaidyaRaman, B.A. Editor.

புஸ்தகம் I. Vol. I. | ஸௌமிய ஹு ஐப்பசி மீ —OCTOBER 1909. | ஸஞ்சிகை. 10. No. 10.


### பிழைக்கும் வழி.

PRACTICAL LIFE.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், பிரஜாலக்ஷணம், வித்தியா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

**தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.**

| | உள் நாடு. | | அந்நிய நாடு. | |
|---|---|---|---|---|
| வருஷம் 1க்கு | 4 | 0 | 6 | 0 |
| 6 மாதத்திற்கு | 2 | 0 | 3 | 0 |
| தனிப்பிரதி | 0 | 6 | 0 | 8 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. சகலபணமும் எங்களுக்கு நேரில் அனுப்பப்படவேண்டும்.

**வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியது.**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க மரியாதை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸமும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒரு பாதியைவிட்டு மறுபாதியில் மட்டில் எழுதப்பட வேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

A popular Tamil monthly magazine of general information and instruction devoted mainly to agriculture, trade, industry, citizenship, and popular, scientific and, technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. | A. | P. | Foreign. Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | 6 | 0 | 0 |
| „ half year ... | 2 | 0 | 0 | 3 | 0 | 0 |
| Single copy ... | 0 | 6 | 0 | 0 | 8 | 0 |

No Money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers Messrs. G. A. Vaidya Raman & Co., 10, Esplanade, Madras.

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
10, எஸ்பிளனேட், மதராஸ்.

### REMISSION OF ASSESSMENT

BY

DIWAN BAHADUR P. RAJARATNA MUDALIAR, C. I. E.,

*Inspector General of Registration (Retired.)*

### தீர்வை வஜா.

விவசாயிகள் தங்கள் நிலத்துக்காகச் செலுத்திவரும் தீர்வையை எந்தெந்த சந்தர்ப்பங்களில் சர்க்கார் வஜா செய்து கொடுப்பார்கள் என்பதை அறிந்துகொள்வது அவசியம். கவரன்மெண்டார் ரயத்துவாரிப்பட்டா நிலங்களுக்குச் செலுத்தவேண்டிய தீர்வையை மட்டும் வஜா செய்வார்களே ஒழிய ஜமீன்தார்கள் செலுத்திவரும் பேஷ்கஷ்ஷையாவது, சுரோத்திரியம்தார்கள் செலுத்திவரும் ஜோடியையாவது அல்லது இனும்தார்கள் செலுத்திவரும் குவிட்ரெண்டையாவது தள்ளிக்கொடுக்கமாட்டார்கள்.

நிலங்கள் புஞ்சையென்றும், நஞ்சையென்றும் வழங்குவது எல்லோருக்கும் தெரிந்தது. சாதாரணமாய் புஞ்சை நிலங்களுக்கு தீர்வையை வஜா செய்வதில்லை. எப்போதாவது பஞ்சம்நேரிட்டு எங்கும் பயிர்நஷ்டமாய்ப்போகும் பக்ஷத்தில் கவரன்மெண்டார் தனி உத்தரவின் பேரில் புஞ்சைத்தீர்வை வஜா செய்யப்படும். அந்தக்காலங்களில் கூட எங்கெங்கே அரை விளைச்சலுக்குக் குறைந்திருக்கிறதோ

அங்கங்கே மட்டும் அந்தந்த பிரதேசத்திற்குத் தக்கபடி "சேகடா" ரெமிஷன் கொடுக்கப்படும். சேகடாரெமிஷனுவது நூற்றுக்கு இவ்வளவென்று தள்ளிக்கொடுப்பது. அதெப்படி என்ருல், பல நஷ்டமான பிரதேசத்தில் சராசரி கண்டு முதல் சாதாரணமாய் விளையும் விளைச்சலில் ஆறிலொரு பாகத்திற்கு அதிகப்படாமலிருக்கும் பக்ஷத்தில் புஞ்சைத்தீர்வையில் முக்கால் முதல் பூரா தீர்வை வரையில் வஜா செய்யக்கூடும். சராசரி கண்டு முதல் ஆறிலொரு பாகத்திற்கு மேற்பட்டு மூன்றிலொரு பாகத்திற்கு அதிகப்படாமல் இருக்கும் பக்ஷத்தில் அந்தப் பிரதேசங்களுக்கு அரை முதல் முக்கால் தீர்வை வரையில் வஜா செய்யப்படும். கண்டு முதல் சாதாரண விளைச்சலில் மூன்றிலொரு பாகத்திற்கு மேற்பட்டும் அரை விளைச்சலுக்குக் குறைந்தும் இருந்தால் அந்தப்பிரதேசங்களுக்கு கால் தீர்வை முதல் முக்கால் தீர்வை வரையில் வஜா செய்யப்படும். இப்படித் தீர்வை வஜாசெய்யும் பொருட்டு அந்தந்த பிரதேசத்தில் உண்டான விளைச்சலையும், பல நஷ்டத்தையும் நிர்த்தாரணம் செய்வதில் அந்தந்த பிரதேசத்தில் கிணறு முதலிய சொந்த ஜலாதாரங்களுடைய நிலங்களும், தோப்புகளும், மாமூல் தரிசு நிலங்களும், நீக்குதல் செய்யப்படும். தவிரவும், பிரதி ஆஸாமிக்கும் ஏற்படும் நஷ்டத்தை உத்தேசித்து தீர்வை வஜா செய்யப்படமாட்டாது. அந்தந்தப் பிரதேசங்களில் அதாவது, ஒரு கிராமத்திற்கோ, அல்லது அதில் ஒரு பாகத்திற்கோ, ஏற்படும் வீதப்படிக்குத் தான் எல்லாருக்கும் தீர்வை வஜா செய்து கொடுக்கப்படும்.

நஞ்சை நிலங்களை திட்ட ஒருபோக நஞ்சை, திட்ட இருபோக நஞ்சை, இருபோகக் கம்பவுண்டு நஞ்சை, என்று மூன்று விதமாகப் பிரிக்கலாம். நஞ்சை நிலங்கள் பெரும்பாலும் ஒரு போக நிலங்களாகவே ஏற்பட்டிருக்கின்றன. இரு போக நஞ்சை என்பது இருபோகம் சாகுபடி செய்வதற்குத்தக்க ஜல ஆஸரா வாய்ந்த நஞ்சைநிலங்கள். இப்படி சர்க்கார் கணக்கில் பதியப்பட்ட நிலங்களுக்கு கவர்ன்மெண்டார் கூடியவரையில் இருபோகமும் சாகுபடி செய்வதற்கு வேண்டிய தண்ணீரை கொடுக்கவேண்டியது. இதில் திட்ட இருபோகமாகப் பதியப்பட்ட நஞ்சை நிலங்களுக்கு தீர்வை மொத்தம், முதல் போகத்தீர்வைக்கு மேல் அரைமடங்கு அதிகமாயிருக்கும். அதாவது, இரண்டுபோகங்களுஞ் சேர்ந்து ஒன்றரை மடங்கு தீர்வை ஆகும். கம்பவுண்டு நஞ்சை நிலங்களுக்கு அந்தந்த ஜலாதாரங்களின் பாசன சௌகரியங்களை உத்தேசித்து திட்ட ஒரு போகத் தீர்வைக்கு மேலாகவும் திட்ட இருபோகத்தீர்வைக்குக் குறைந்தும் பல ரேட்டுகளாகப் போடப்பட்டிருக்கும்.

ஒரு போக நஞ்சையாகப் பதியப்பட்ட நிலங்கள் ஜலக்குறைவிஞலாவது ப்ரவாகத்திஞலாவது சாகுபடி ஆகாமல் தரிசாய் இருந்தாலும், அல்லது, சாகுபடி செய்தபயிர்கள் நஷ்டமாய்ப் போய்விட்டாலும், ஒருபோக நஞ்சைத்தீர்வை முழுமையும் வஜா செய்யப்படும். இதேகாரணங்களால் திட்ட இருபோக நஞ்சை நிலங்களும் இருபோகக் கம்பவுண்டு நஞ்சை நிலங்களும் இரு போகத்திலும் தரிசாயிருந்தாலும் அல்லது பூர்த்தி பல நஷ்டமாஞலும் இருபோகத்தீர்வையும் வஜா செய்யப்படும். திட்ட இருபோக நிலங்களில் ஒரு போகம் மட்டில் செய்யப்பட்டு இன்னெரு போகம் ஜலமில்லாத காரணத்திஞலாவது அதிக ஜலம் உண்டான காரணத்திஞலாவது, பயிர் செய்யப்படாமல் போஞலும், செய்தபயிர் நட்டுப் பாழாய்ப்போஞலும் ஒருபோகத் தீர்வை மட்டும் வசூல் செய்யப்பட்டு இரண்டாம் போகத்தீர்வை வஜாசெய்யப்படும். கம்பவுண்டு நஞ்சைநிலங்களுக்கு ஒன்றரை தீர்வைக்குக் குறைந்து விதிக்கப்பட்டிருக்கிறபடியால் அந்த நிலங்களில் ஒரேபோகம் சாகுபடியாஞலும் இரண்டாவது போகத்தீர்வையை வஜாசெய்யாமல் இருபோகக்கம்பவுண்டு தீர்வை பூராவும் வசூல் செய்யப்படும்.

புஞ்சை நிலங்களுக்கு சர்க்கார் ஜலாதாரங்களிலிருந்து தண்ணீர் இறைக்கும் பக்ஷத்தில் சர்க்காருக்கு தண்ணீர்த் தீர்வை கொடுக்க வேண்டுமென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இப்படிப்பட்ட கேஸுகளிலும் பயிர் பாழாய்ப்போஞல் தண்ணீர்த்தீர்வை வஜா செய்யப்படும். இப்படித் தண்ணீர்த் தீர்வையை தள்ளிக்கொடுப்பது ரயத்துவாரிப் பட்டா புஞ்சை நிலங்களுக்கு மாத்திரமல்ல. ஜமீன்தாரி, சுரோத்திரியம், இஞம் புஞ்சை, எல்லா நிலங்களுக்குங்கூட தண்ணீர்த் தீர்வைமட்டும் மேலே சொல்லிய சந்தர்ப்பங்களில் தள்ளிக் கொடுக்கப்படும்.

மேற்கண்டபடி நஞ்சைநிலங்களுக்குத்தீர்வை வஜாசெய்யும் விஷயத்தில் சில விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளை விவசாயிகள் முக்கியமாய் கவனிக்க வேண்டியது. அப்படிக் கவனித்து நடக்காவிட்டால் தீர்வை வஜா கிடைக்கமாட்டாது

முதலாவது:—நஞ்சை நிலங்கள் சர்க்கார் கணக்கில் தனி நம்பராக அல்லது தனி சப்டிவிஷஞக தாக்கல் செய்யப் பட்டிருக்கும் முழு நம்பருக்கு மட்டும் ரெமிஷன் கொடுக்கப்படும். ஆகையால், ஜலக்குறைவிஞலாவது, ஜலம் அதிகப்பட்டதிஞலாவது நம்பர் முழுமையும் அல்லது சப்டிவிஷன் முழுமையும் பயிர் செய்ய சாத்திய மில்லாமல் ஜலத்திற்குத் தக்கப்படி ஒரு பாகம் மட்டும் பயிர் செய்து பலனுண்டாகி மற்ற பாகம் தரிசாயிருந்தாலும், பயிர் செய்து பல நஷ்டமாஞலும், அந்த நம்பருக்கு ரெமிஷன் கிடைக்கமாட்டாது. இந்த ஏற்பாட்டுக்குக் காரணம் என்னவெனில், தனி நம்பராயாவது அல்லது சப்டிவிஷஞயாவது சர்க்காரால் பிரிவினை செய்யப்பட்டு பிரத்தியேகமாய் டிமார்கேஷன் செய்யப்படாமலிருக்கும் புலங்களுக்கு ரெமிஷன் கொடுக்கும் பக்ஷத்தில், அநேக அக்கிரமங்கள் நேரிடுவதற்கு அவகாசம் உண்டாகு மென்கிற கருத்துதான். இதை ஒரு கடினமான விதி யென்று விவசாயிகள் நினைக்கக் கூடாது. ஏனெனில் சர்வே செட்டில்மெண்டில் அநேக ஏகர்களைச் சேர்த்து ஒரே நம்பராக டிமார்கேஷன் செய்திருக்கும் கேஸுகளில் அந்த நம்பர்கள் முழுவதும் வருஷா வருஷம் பூர்த்தியாய்ப் பயிர் செய்து பலனடைய அனுகூலப்படாதென்று உறுதியாய் தோன்றும் பக்ஷத்தில், அப்படிப்பட்ட பெரிய நம்பர்களை உடைத்து, நிலத்தின் வாட்டப்படிக்கு, ஒன்று அல்லது ஒன்றரை, இரண்டு ஏகராவாக சப்டிவிஷன் பண்ணி சாஸ்வதமாய் டிமார்கேஷன் செய்து வைத்துக்கொள்வதற்குத் தடையில்லை. இப்படிச் செய்வதற்கு அதிகாரிகளுக்குக்கொஞ்சகாலம் பிடிக்குமாதலால் அந்தந்த நிலக்காரர்கள் உடனே தாசில்தாரிடம் மனு செய்துகொள்ள வேண்டியது அவசியம். இப்படிச் செய்துகொள்ளுவதிஞல் குடிகளுக்கு ரெமிஷன் கிடைப்பது மிகவும் சுலபமாயிருக்கும்.

இரண்டாவது:—தீர்வை வஜா வேணுமென்ற ஒவ்வொரு நிலக்காரனும், ரெவினியூ இன்ஸ்பெக்டர், டிப்டி தாசில்தார், தாசீல்தார், டிவிஷனல் ஆபீஸர், இவர்களில் யாருக்காவது எழுத்து மூலமாய் மனு செய்து கொ

ள்ளவேணும். ஒவ்வொரு தாலூக்காவுக்கும் அறுப்புக்காலத்தை அனுசரித்து எந்தெந்தத் தேதிக்குள் ரெமிஷன் மனு செய்துகொள்ள வேணுமோ அந்தத்தேதியை அந்தந்த ஜில்லா கலெக்டர் பிரசுரம் செய்திருப்பார். குறிப்பிட்ட தேதிக்குள் மனு கொடுக்கவேண்டியது அவசியம். தவறினால் கலெக்டர் தன் இஷ்டப்பிரகாரம் ரெமிஷன் கொடாமல் நிராகரிக்கக்கூடும். மனுவுக்கு ஸ்டாம்பு அவசியமில்லை. மனுவை தனியாகவாவது அல்லது பல பேர்களோடு சேர்ந்தாவது ஒரே மனுவாகக் கொடுக்கலாம். அப்படி சேர்ந்து கொடுக்கும் பக்ஷத்தில் ஒவ்வொருவருடைய வயல்களின் நம்பரையும் விஸ்தீரணத்தையும் இன்னின்னவென்று மனுவில் தெளிவாய் கண்டு அதின் கீழே ஒவ்வொருவரும் கையெழுத்துப் போட்டு அனுப்பவேண்டும். இதுவுமல்லாமல் உலர்ந்து போன மாசூலை அறுக்காமலும், மாட்டை விட்டு மேய்க்காமலும், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பரிசோதனைக்கு வரும் வரையில் பாதுகாக்க வேண்டியது. அப்படிச் செய்யத் தவறினால், நிஜஸ்திதி தெரிந்துகொள்வதற்கு உண்டான முக்கியமான ருஜு இல்லாமற்போகுமாகையால் தணிக்கைக்கு முன் மாசூல் அறுக்கப்பட்டாவது மாடுகளைவிட்டு மேய்க்கப்பட்டாவது இருந்தால் தீர்வைவஜா செய்யப்படமாட்டாது.

ரெமிஷன் மனுக்கொடுத்து அதிகாரிகள் பரிசோதனைக்குவர காலதாமதம் ஆகும்பக்ஷத்தில் உடனே தகுந்த அதிகாரிகளுக்கு அதைப் பற்றி நிலக்காரர்கள் முறையிட்டுக்கொள்ள வேணும்.

*மூன்றாவது* :—ரெமிஷன் விஷயத்தில் அவசியமாய் கவனிக்கவேண்டியதென்று மேலே குறிப்பிட்ட அம்சங்களல்லாமல் இன்னொரு விஷயமிருக்கிறது. அதாவது, நஞ்சை நிலங்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஜலாதாரங்கள் கவரன்மெண்டாரைச் சேர்ந்தவைகளாயிருந்தாலும் அவைகளுக்கு அப்போதைக்கப்போது செய்ய வேண்டிய அநேக சில்லரை மராமத்துகளை, அதாவது, ஏரிக்கரையில் பள்ளங்கள் விழுந்தால் உடனே தூர்க்கிறதும், பாய் வாய்க்கால்களை துரஸ்து செய்வதும், ஏரிமுதலிய கரைகளில் உடைப்பு நேரிட்டால் அதின் வழியாய் ஜலமெல்லாம் போய்விடாமல் தடுக்கும் பொருட்டு உடனே அணைகள் போடுவதும், இப்படிப் பற்பல சில்லரை மராமத்துகளை தங்கள் சொந்த கிருஷியாலாவது கூலி ஆள்களை யனுப்பியாவது பண்டைக்காலம் முதல் அங்கங்குள்ள குடிகளே செய்வது வழக்கம். இதைக் குடிமராமத்து என்று சொல்லுவதுண்டு. இப்படி குடிகள் ஜலாதாரங்களுக்குச் செய்யவேண்டிய சில்லரை மராமத்துகளை வழக்கம்போல் செய்ததையும் செய்யாததையும் ஜமாபந்தி தருணத்தில் விசாரித்து, கூடிய வரையில் குடிகள் அஜாக்கிரதை செய்யவில்லை என்று நம்பிக்கை ஏற்பட்டால் தான் ரெமிஷன் கொடுப்பார்கள். ஆகையால் நஞ்சைத் தீர்வை வஜாவாகவேணுமானால் நிலக்காரர்கள் வழக்கம் போல் செய்யவேண்டிய சில்லரை மராமத்துக்களை சிரத்தையுடன் செய்து அவர்கள் பொறுப்பைக் கழித்துக் கொள்ளவேண்டியது அவசியம். காலவித்தியாசத்தினால் அநேக கிராமங்களில் பல கக்ஷிகள் ஏற்பட்டு ஜனங்களுக்குள் ஒற்றுமை இல்லாமல் பாசனங்களுக்கு சரிவர மராமத்துகள் முன்போல் செய்வது துர்லபமாயிருக்கிறது. இப்படிப்பட்ட கிராமங்களில் ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்தி ஒரு ஏகராவுக்கு இவ்வளவு தொகை என்றாவது அல்லது இவ்வளவு ஆள்கள் என்றாவது வரிவைத்து மராமத்துகளை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வது உத்தமம்.

பா. ராஜரத்தினம்.



## ADMINISTRATION OF INDIAN RAILWAYS

BY V. SRINIVASÂCHARIAR, B.A.,
*Formerly, Head Clerk, Railway Secretariat, Madras, now Dy. Tahr., Omalur.*

## இந்தியா ரயில்வே பரிபாலனம்.

இப்போது இந்தியாதேசத்தில் 30,576 மயில் இருப்புப்பாதை போடப்பட்டிருக்கிறது. சென்ற 1908ம்-வருஷத்தில் இந்த இருப்புப்பாதை மார்க்கமாய் பிரயாணம் செய்த ஜனங்களின் சங்கியை 32 கோடிக்கு மேலாகிறது. அல்லாமலும் 6 கோடி 23 லக்ஷம் டன் நிறையுள்ள சாமான்கள் பல இடங்களிலிருந்து மற்ற இடங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. 1908ம்-வருஷம் முடிவுவரையில் இந்த இருப்புப்பாதைகளுக்காக செலவாயிருக்கும் தொகை மொத்தம் 412 கோடி ரூபாய். சென்றவருஷத்தில் ரயில்வே பரிபாலனத்தில் சர்க்காருக்கு உண்டான நஷ்டம் 233½ லக்ஷம் ரூபாய். மேலேசொல்லிய சில அம்சங்களினால் இந்தியா தேசத்தில் இருப்புப்பாதை எவ்வளவு விஸ்தீர்ணமாய்ப் பரவியிருக்கிறதென்பதும், அதில் அளவில்லாத திரவியம் செலவழிக்கப்பட்டிருக்கிறதென்பதும், அது ஜனங்கள் பிரயாணத்துக்கும் வியாபார சரக்குகளை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு அனுப்புவதற்கும் இன்றியமையாததென்றும் நன்றாய் விளங்குகிறது. அல்லாமலும் இருப்புப்பாதை ராஜாங்கத்தை செம்மையாய் நடத்துவதற்கும் செல்வத்தை விருத்தி செய்வதற்கும் முக்கியமான கருவியாகும். இவ்வளவு மேன்மையானநாகரீக வளர்ச்சிக்கும் ஜனங்களின் நல்லிருப்புக்கும் முக்கிய சாதனமான இருப்புப்பாதையில் இந்த காலத்தில் பிரயாணம் செய்யாதவர்களின் சங்கியை ரொம்பவும் கொஞ்சம். அனேகம் பேர்கள் அடிக்கடி அதில் பிரயாணம் செய்தும் அதின் மூலமாய் வியாபாரச் சரக்குகளை யனுப்பியும் அதன் பலனையனுபவிக்கிறார்கள். அப்படி இருந்தும் ரயிலில் தினமும் பிரயாணம் செய்யும் கணக்கில்லாத ஜனங்களில் எத்தனை பேர் இந்த ரயில் யாரால் போடப்பட்டது, அதில் செலவிட்டிருக்கும் திரவியம் யாருடையது, அது எந்த மாதிரி பரிபாலனம் செய்யப்பட்டு வருகிறது, ரயில்வே கம்பெனியார் யார், அவர்களுக்கும் கவரன்மெண்டாருக்கும் என்ன சம்பந்தம், அதில் உண்டாகும் லாப நஷ்டம் யாரைச்சேர்ந்தது, என்று யோசித்தவர்கள் ? எனக்குத்தெரிந்த வரையில் இது விஷயங்களைக் குறித்து கொஞ்சமேனும் நம்முடைய தேசத்தவர்களில் பெரும்பான்மையோர் யோசித்தவர்களே அல்ல.

முதல் முதலில் இந்தியாவில் இருப்புப் பாதை ஏற்பட்டது லார்ட் டல்ஹவுஸி பிரபு கவர்னர் ஜனரலாயிருந்த காலத்தில், அதாவது 1853 வது வருஷத்தில். அந்த காலத்தில் ஆங்கிலேயர்கள் தங்கள் பணத்தை இந்தியாதேசத்தில் ரயில் போட செலவிட்டால் ஒரு காலத்தில் நஷ்டம் வந்துவிடுமென்று பயந்தார்கள். அவர்களுக்கு டல்ஹவுஸி பிரபு 100 க்கு ஐந்து விதம் வட்டி சர்க்காரில் கொடுப்பதாயும், ரயில் போடும் பாதைக்கு வேண்டிய நிலம் முதலியவைகள் கிரயம் இல்லாமல் கொடுப்பதோடு இன்னும் அநேகவித சகாயம் செய்வதாய் ஏற்பாடு செய்து மதிராஸ் ரயில்வே கம்பெனி, ஜி.ஐ.பி. ரயில்வே கம்பனியார்களை இந்தியாவில் ஆங்கிலேயருடைய தனத்தைக்கொண்டு இருப்புப் பாதை போடும்படி ஏற்பாடு செய்தார். அந்த கம்பெனியார்கள் தாங்கள் போடும் இருப்புப்பாதைகளை 50 வருஷகாலம் வரையில் அவர்களே பரிபாலனம் செய்யவேணுமென்றும் அந்தக்கால முடிவில் சர்க்காரார் அவைகளை தாங்கள் கிரயத்துக்கு எடுத்துக்கொள்ளுகிறதென்றும் முதலில் கம்பெனியாருக்கும் சர்க்காருக்கும் உடன்படிக்கை ஏற்பட்டது. அந்த மாதிரி உடன்படிக்கையின் பேரில் கட்டப்பட்ட இருப்புப்பாதைகள் அநேகம். அல்லாமலும் சர்க்காரார் தங்கள் சொந்தப்பணத்தைக் கொண்டு போட்ட இருப்புப்பாதைகளும் சில உண்டு. கவரன்மெண்டாரால் போடப்பட்ட இருப்புப்பாதைகளில் சில சர்க்காராலும் சில அவர்களுக்காக கம்பெனியாரால் குத்தகைக்கும் பரிபாலனம் செய்யப்பட்டு வந்தன. ஆனால் கம்பெனியாரால் போடப்பட்டு பரிபாலித்து வரப்பட்ட ரயில்களில் செலவாகக்கூடிய பணத்துக்கு எஸ்டிமேட்டு முன்னாடி கவரன்மெண்டாரால் ஒப்புக்கொள்ளப்பட்ட பின்புதான் கம்பெனியார் பணத்தை செலவிடக்கூடும். அல்லாமலும் எல்லா ரயிலிலும் சர்க்காரார் தங்களுடைய

அதிகாரத்தை பணச்செலவு விஷயங்களிலும், ஜனங்களின் சுகாசுகவிஷயங்களிலும், இருப்புப் பாதைகளையும் அதைச்சேர்ந்த வேலைகளையும் அடிக்கடி தணிக்கைசெய்து அதிகாரம் செலுத்தி வந்தார்கள். இந்த அதிகாரமெல்லாம் இந்தியா கவரன்மெண்டு பப்ளிக் ஒர்க்ஸ் அதாவது இஞ்சினீர் இலாகா மூலமாய் நடத்தப்பட்டு வந்தது. அந்த டிபார்ட்டுமெண்டில் ரயில்வே வேலைகளைப்பார்ப்பதற்கு ஒரு காரியதரிசியும் அவர் கீழே அநேக சிப்பந்திகளுமிருந்தார்கள். அதற்குக் கீழே ஒவ்வொரு ராஜதானியிலும் மற்ற காரியதரிசிகளைப் போல் ரயில்வே விஷயங்களைக்குறித்து அந்தந்த கவரன்மெண்டாருக்கு போதனை செய்து காரியங்களை நடத்துவதற்காக ஒரு காரியதரிசி இருந்தார். இவருக்கு கன்ஸல்டிங் எஞ்சினியர் என்று பெயர். இந்த அதிகாரத்தை வகித்தபோது அவர் தானாகவே ரூபா 5000 வரையில் ரயில்வே எஸ்டிமேட்டுகளை சாங்கிஷன் செய்வதுடன் இன்னும் அநேக விஷயங்களிலும் கம்பெனியாருக்குமேல் அதிகாரம் செலுத்தி வந்தார். அந்த கன்ஸல்டிங் எஞ்சினியரே கவரன்மெண்டு இன்ஸ்பெக்டர் என்று இன்னொரு ஹோதாவில் ரயில் ரோட்டுகளையும் கட்டிடம், பாலம், முதலிய வேலைகளையும் அடிக்கடி தணிக்கை செய்து அவைகளின் நிலைமையைப்பற்றி மாகாண கவரன்மெண்டாருக்கும் இந்தியா கவரன்மெண்டாருக்கும் ரிபோர்ட்டு செய்து வந்தார். இந்த ரிபோர்ட்டுகளில் கண்ட குறைகளை யெல்லாம் அப்போதைக்கப்போது கம்பெனியார்கள் கவனித்து சீர்திருத்தம் செய்யவேண்டியது அவர்கள் கடமையாயிருந்தது. ஆகவே 1905-ம் வருஷம் வரையில், ரயில்வே கம்பெனியார்களுக்குமேல் ரோட்டு விஷயங்களை தணிக்கை செய்ய ஒரு இன்ஸ்பெக்டரும், எஸ்டிமேட்டுகளை 5000 ரூபாய் வரையில் ஸாங்கிஷன் செய்யவும், அதற்குமேல் பட்ட எஸ்டிமேட்டுகளை பரிசீலனை செய்து அதில்கண்ட வேலைகளை அவசியமென்றும் இல்லையென்றும் மாகாண கவரன்மெண்டாருக்கு ஆலோசனை சொல்வதற்கு கன்ஸல்டிங் எஞ்சினியர் என்று சொல்லப்பட்ட ஒரு காரியதரிசியும், அதற்குமேல் ரூபா 25,000 வரையில் சாங்கிஷன் செய்ய அதிகாரம் பெற்ற மாகாண கவரன்மெண்டாரும், இவர்களெல்லாருக்கும் மேல்பட்டு இந்தியா கவரன்மெண்டாரும் அதிகாரம் செலுத்திவந்தார்கள்.

இந்த மாதிரி நடந்து வந்த ரயில்வே பரிபாலன விஷயத்தை ஆராய்ந்து ரிபோர்ட்டு செய்யும்படி இப்பொழுது இருக்கும் லார்டு மின்டோ கவர்னர் ஜெனரலுக்குமுன் கவர்னர் ஜெனரலாயிருந்த லார்டு கர்ஸன்பிரபு ஸர்தாமஸ் ராபர்ட்ஸன் என்று பேர்பெற்ற ஓர் ஆங்கிலேய நிபுணரை நியமனம் செய்தார். அவர் இந்தியா முழுவதும் சுற்றிப்பார்த்து அங்கங்கே ரயில்வேகாரரிடத்திலும் இன்னும் மற்றவர்களிடத்திலும் அபிப்பிராயங்களை யறிந்து ஒரு ரிபோர்ட்டு எழுதினார். அதில்கண்ட அபிப்பிராயமாவது: இந்தியா கவரன்மெண்டார் இதுவரையில் நடத்தி வந்த அதிகாரஸ்தானத்தில் ரயில்வே போர்டு என்று சொல்லப்பட்ட ரயில்வே அரசாக்ஷி, நன்றாய்த்தெரிந்த மூன்று நிபுணர்கள் நியமிக்கப்பட்டு அவர்களே ரயில்வே அரசாக்ஷியை நடத்த வேண்டு மென்பதுதான். முக்கியமானது. தவிர மாகாணகவரன்மெண்டாருக்கு ரயில்வே ஸமாசாரத்தில் இருந்த அதிகாரங்கள் நிவர்த்தி செய்யப்பட்டன. மாகாணராஜாங்கத்திலிருந்து வந்த ரயில்வே காரியதரிசியும் கன்சல்டிங்கு எஞ்சினியர் என்று சொல்லப்பட்ட உத்தியோகமும் எடுக்கப்பட்டன. ஆகவே 1905-ம் வருஷம் முதல் ரயில்வே சங்கதிகளெல்லாம் ரயில்வே போர்டு என்னும் ரயில்வே சபையாரால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகின்றன. 1907-ம் வருஷம் முதல் கன்ஸல்டிங்கு எஞ்சினியர்களையும் எடுத்து விட்டார்கள். முந்திய எஞ்சினியரும் மாகாணத்து கவரன்மெண்டும் செய்து வந்த தணிக்கை, எஸ்டிமேட்டு முதலியது சாங்கிஷன் செய்வது ஆகிய இவ்வித சகல அதிகாரமும் இருப்புப்பாதைகளை சர்க்காராரிடம் குத்தகைக்கு வாங்கி நடத்திவரும் கம்பெனியாருக்கே கொடுத்துவிட்டார்கள். இப்போது கம்பெனியாருக்கு மேல் ரயில்வே போர்டுதான் அதிகாரிகள். மாகாணகவரன்மெண்டாருக்கு ரயில்வே விஷயத்தில் எவ்வித சம்பந்தமும் கிடையாது. ஆனால் ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு கவரன்மெண்டு இன்ஸ்பெக்டர் இருக்கிறார். அவருடைய வேலை ஆறுமாசத்துக்கு ஒருதரம் ஒவ்வொரு பாதையையும் தணிக்கை



செய்து ரயில்வே போர்டுக்கு ரிபோர்ட்டு செய்வதுதான். அந்த இன்ஸ்பெக்டர் ஸமீபத்தில் கல்கத்தா மெயில் வண்டி அத்திப்பட்டு ஸ்டேஷனுக்குப்பக்கத்தில் விழுந்ததுபோல் எவ்வித ஆபத்துகள் நேர்ந்தபோதிலும் அங்கே போய் அது எப்படி நடந்ததென்று அதன் காரணங்களை விசாரித்துக் கண்டறிந்து ரயில்வே போர்டுக்கு ரிபோர்ட்டு செய்ய வேண்டியது.

இது வரையில் ஆதிமுதல் 1905ம் வருஷம் வரையில் ரயில்வே சங்கதிகள் எந்த மாதிரி பரிபாலனம் செய்யப்பட்டு வந்தன என்றும் அதற்குப்பின் ஏற்பட்ட சீர்பாடுகள் என்னவென்றும் சொன்னோம். இப்போது ரயில்வே கம்பெனியார்கள் யார்? அவர்களுக்கும் ஸர்க்காருக்கும் என்ன சம்பந்தம் என்ற விஷயங்களைச் சொல்லுவோம். மேலே சொல்லியபடி முதல் முதலில் ரயில்வே போடுவதற்கு வேண்டுமான பணம் சர்க்காரார் செலவிடக்கூடாததால் ஆங்கிலேய நாட்டு தனிகர்களைச் சேர்த்து அவர்கள் தனத்தைக் கொண்டு சில ரயில்கள் போடப்பட்டன. ஆங்கிலேய நாட்டில் இந்தமாதிரி அநேக கம்பெனிகளிருக்கின்றன. ஒவ்வொரு கம்பெனியாராலும் ஒவ்வொரு ரயில் போடப்பட்டது. அல்லாமல், கவரன்மெண்டாரால் ஜனங்களிடம் வசூல் செய்யும் வரியைக் கொண்டும் தாங்கள் கடன் வாங்கியும் சில ரயில்கள் போடப்பட்டன. கம்பெனியாரால் போடப்பட்ட ரயில்களெல்லாம் இப்போது சர்க்காராரால் வாங்கிக்கொள்ளப்பட்டன. ஆனாலும் அனேக இருப்புப்பாதைகளை இன்னும் கம்பெனியாரே ஸர்க்காரிடம் குத்தகைக்கு வாங்கி ஸர்க்கார் தணிக்கைக்கு உள்பட்டு பரிபாலித்து வருகிறார்கள். இந்த இருப்புப்பாதை விஷயமாய் இதுவரையில் உண்டான லாபநஷ்டமெல்லாம் சர்க்காரைச் சேர்ந்தது. அது எப்படியென்றால் 50 வருஷகாலம் வரையில் 100 க்கு 5 வீதம் வட்டி கட்டிக் கொடுப்பதாய் ஆங்கிலேய கம்பெனியார்களுக்கு வாக்குறுதி செய்திருந்ததில் ஒவ்வொரு ரயிலிலும் வரும்படியில் செலவுபோக பாக்கி இந்த 5 வட்டி கட்டாத பக்ஷத்தில் ஸர்க்கார் அதை கட்டிக்கொடுக்க வேண்டியிருந்தது. அந்தமாதிரி யெப்படி வட்டி கட்டிக் கொடுக்கப் பட்டதென்றால் ஜனங்களிடம் வசூல் செய்யும் நிலவரி முதலிய மற்றவரிப் பணத்திலிருந்துதான். இந்த மாதிரி கம்பெனியார்களுக்கு வட்டி கட்டிக் கொடுப்பதனாலும் சர்க்காரால் போடப்பட்ட ரயிலில் செலவிட்ட விஷயத்திலும் நமக்கு இது வரையில் உண்டாயிருக்கும் நஷ்டம் அநேக கோடி ரூபாய் இருக்கும். இப்போதைக்கு எட்டு வருஷம்வரையில் இருப்புப்பாதையால் சர்க்காருக்கு நஷ்டமே தவிர லாபமில்லை. சென்ற எட்டு வருஷகாலமாய் கொஞ்சம் லாபம் கிடைத்து வந்தது. மறுபடியும் 1908ம் வருஷத்தில் நஷ்டம் ஆரம்பித்து விட்டது. இனிமேல் அப்படிப்பட்ட நஷ்டம் வராதென்று நம்புகிறோம். இந்த லாப நஷ்டத்தை கவனிக்கும் ஸந்தர்ப்பத்தில் நாம் கவனிக்கவேண்டிய விஷயம் இன்னொன்று இருக்கிறது. இப்போது உள்ள இருப்புப்பாதைகளில் தாங்கள் போட்டதைத் தவிர மற்றவைகளையெல்லாம் கம்பெனியாரிடமிருந்து சர்க்காரார் வாங்கிவிட்டார்களென்று முன்னே சொன்னோம். அது எப்படி? அநேக வருஷங்களாய் ரயில்வே பரிபாலனத்தில் லாபம் கிடைக்கவில்லையென்று சொன்னோம். அப்படியானால் கம்பெனியார்களுடைய ரயில்களை கவரன்மெண்டார் எப்படி வாங்குகிறார்கள்? சர்க்கார் வரிகளிலிருந்து ராஜாங்கம் நடத்தி மிகுதியாகும் பணம் எல்லா ரயில்களையும் வாங்குவதற்குப் போதுமானதா? இல்லை. ஆனால் எப்படி யென்றால் ஆங்கிலேய நாட்டில் 100-க்கு 3 வட்டி வீதம் சர்க்காராருக்கு கடன் எளிதில் கிடைக்கிறது. ஆகையால் 3 வட்டிக்குக் கடன்வாங்கி தங்களிடம் 5 வட்டி பெற்றுக் கொண்டிருந்த கம்பெனியார்களுடைய ரயிலை யெல்லாம் ஸர்க்காரார் வாங்கிவிட்டார்கள். ஆகவே இப்போது ரயில்வே விஷயத்தில் போடப்பட்டிருக்கும் பணத்துக்கு 3 வட்டி கொடுக்கவேண்டியிருக்கிறது. இப்போது ரயில்வே கம்பெனியார்கள் பரிபாலித்து வரும் ரயில்களில் அவர்களுக்கு எதுவும் சொந்தமில்லை. அதில் வருஷாவருஷம் வரும் வரும்படிக்கும் செலவுக்கும் அவர்கள் கவரன்மெண்டாருக்குக் கணக்குக் கொடுத்து அதில் செலவும் முதலுக்கு வட்டியும் போக மீதிலாபத்தை ஸர்க்காரும் கம்பெனியாருமாய்ப்பிரித்துக் கொள்ளுகிறார்கள். இந்த

யானார்கள் என்று விசாரித்தால் மிகச்சொற்பமாகவே இருக்கும். காரணமென்ன? நம்முடைய கிருஷிகர்களிடம் நேரில்போய் புது வழக்கத்தை அனுசரிப்பதால் உண்டாகும் பயன்களை எடுத்துச் சொல்லுகிறவர்கள் யாருமில்லை. வேறென்ன காரணம் சொல்லக்கூடும்? இது விஷயமாய் சொஞ்ச காலம் வரையில் நமது ராஜதானி கவர்னரவர்களின் நிர்வாக ஸபையில் முதல் மெம்பராயிருந்து எப்பொழுதும் கிருஷிகர்கள் மேல் விசேஷ அபிமானத்தை வெளியிட்டு வந்து தற்காலம் பென்ஷன் வாங்கிக்கொண்டிருக்கும் ஸர் ஜார்ஜ் ஸ்டேவர்ட்டு பார்ப்ஸ் துரையிடம் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, ஒற்றை அலகு நடும் விஷயமாயுள்ள நமது அனுபவங்களை சமாசாரப்பத்திரிகைகளில் பிரசுரிக்கும்படி ஆக்ஞாபித்தார். ஆனால் பத்திரிகைகளாலும் விவசாய சங்கங்களாலும் இந்த விஷயம் நமது கிருஷிகர்களுக்கு எட்டாதென்றும் கவரன்மெண்டாரே இந்த விஷயங்களில் சிரத்தை எடுத்துக்கொண்டு ராஜதானியிலுள்ள ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள் மூலமாய் கிருஷிகர்களுக்கு உபதேசிக்க வேண்டுமென்றும், விவசாய இலாகாவில் அப்போதைக்கப்போது நூதனமாய்க் கண்டுகொள்ளும் விஷயங்களை ரெவினியு இன்ஸ்பெக்டர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் துரையவர்களுக்கு எழுதியிருந்தோம். பின்னொரு தட்வை துரையவர்களைப் பார்க்க நேர்ந்த பொழுது நாம் எழுதின விஷயங்களைச் சிந்தனைபண்ணுவதாயும் கவரன்மெண்டார் இது விஷயமாய் முயற்சி பண்ணுவதைவிட குடிகளில் முக்கியமான மிராசுதார்கள் தலையிட்டு பிரயத்தனம் பண்ணுவது சிலாக்கியமென்றும் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டு தன்னாலானதைச் செய்வதாயும் சொன்னார். அதனுடன் நாம் பருத்தி விஷயமாய் ஏதாவது பரிக்ஷைகள் செய்ததுண்டாவென்றும் கேட்டார்.

இது நிற்க, நமது ராஜதானியில் கவரன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள் சுமார் 700 பேர் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் அநேகமாய் படித்தவர்கள். தங்கள் தங்கள் இலாகாவில் அடிக்கடி ஸர்க்கியூட் சுற்றிவருவதால் கிருஷிகர்களிடம் சாதாரணமாய்க் கலந்து பேச இவர்களுக்கு அவகாசமுண்டு. ஆகவே இவர்கள் மூலமாய்த்தான் நம் கிருஷிகர்கள் மேன்மையடையலாமென்று தோன்றுகிறது. கவரன்மெண்டார் ஏன் ரெவினியூ இன்ஸ்பெக்டர்களை ஒற்றை அலகு நடுகை விஷயமாய் கிருஷிகர்களுக்கு உபதேசம் பண்ணச் சொல்லக்கூடாது? கவரன்மெண்டார் இப்படிச் செய்யாமலிருக்க யாதொரு காரணமுமில்லை. கிருஷிகர்களுக்கு உபதேசிப்பது இவர்கள் கடமைகளில் ஒன்றென்று வைப்பதுடன் வருஷந்தோறும் எத்தனை சிஷ்யர்கள் பலனடைந்தார்கள் என்று மேலதிகாரிகளுக்கு பிரத்தியேகமான ரிபோர்ட்டு செய்யவேணுமென்று ஏற்பாடாய்விட்டால் ஒற்றை அலகு நடுகை சீக்கிரம் ராஜதானிமுழுவதிலும் பரவிவிடும். அதினால் நமது கிருஷிகர்கள் மொத்தத்தில் ஐந்து கோடி ரூபாய் சுலபமாய் லாபமடையலாம். ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள் விவசாய நிபுணர்களல்லாததால் எவ்விதம் கிருஷிகர்களுக்கு உபதேசம் செய்யமுடியுமென்று சிலர் சந்தேகிக்கலாம். ஒற்றை அலகு நடுகை விஷயமாய் கிருஷிசாஸ்திரதத்துவ போதனையொன்றும் அவசியமில்லை. கிளிப்பிள்ளைமாதிரி தன்னெதிரில் வந்த கிருஷிகர்களிடம் இந்த இன்ஸ்பெக்டர்கள்,

**(1) நாற்றங்காலில் கலக்கமாய் விதை விடுங்கள்.**



**(2) நடும் வயல்களில் நாற்றை ஒற்றை அலகாய் கலக்கமாய் நடுங்கள்.**

என்ற இரண்டு மூலமந்திரங்களைத்தான் உபதேசிக்கவேண்டும். இந்த உபதேசம் செய்ய வேண்டிய குருவிற்கு விசேஷ கிருஷி சாஸ்திர ஞானம் வேண்டியதில்லை யென்பதை யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடியதே.

4. ஒவ்வொரு ஜில்லாக்களிலும் தற்காலத்தில் எந்தவிதமாய்ப்பயிர் செய்கிறார்கள் என்பதும், ஒற்றை அலகு நடுகை எந்தமட்டும் விருத்தியாய் வந்திருக்கிறதென்பதும் சுலபமாய்த்தெரிந்துகொள்ளக் கூடவில்லை. கொஞ்ச காலத்துக்குமுன் விவசாய இலாகா டைரெக்டர் கூச்மன் துரையவர்களுடைய வேண்டுகோளின்படி கனம் செல்வரங்கராஜு அவர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் ஒற்றை அலகு நடுகை விஷயமாய் ரிபோர்ட்டு செய்திருப்பதாய்த் தெரிகிறது. ராஜு அவர்களையே இந்த விஷயமாய் மற்ற ஜில்லாக்களிலும் போய் விசாரித்து எழுதச் சொன்னால் மிக்க நலமாயிருக்கும் என்பதற்கு கொஞ்சமும் சந்தேகமில்லை.

5. ஒற்றை அலகு நடுகை விஷயமாய் கவரன்மெண்டு விவசாய இலாகாவிலும் சிலபரிக்ஷைகள் அவசியம் செய்யவேண்டும். நமது ராஜதானியின் ஜில்லாக்களில் அங்கங்கே பயிராகிவரும் நல்ல ஜாதி நெல்வித்துக்களைப் பொருக்கியெடுத்து சர்க்கார் பண்ணைகளில் நூறு மாதிரி வித்துக்களைப் பயிர்செய்து அவைகளின் குணகுணங்களை, இனாமாகக் கொடுக்கப்படும் துண்டுப் பத்திரிகைகள் மூலமாய் வருஷாவருஷம் ரெவினியூ இன்ஸ்பெக்டர்களுக்கும் அவர்கள் மூலமாய் கிருஷிகர்களுக்கும் தெரிவித்து கிருஷிகர்களுக்கு பிரயோஜனமாகும்படி செய்ய வேண்டும். ஒருஜாதி வித்தை ஐந்து ஸெண்டு நிலத்தில் சோதனை செய்தாலும் நூறு ஜாதி வித்துக்களை பரிக்ஷை செய்ய ஐந்து ஏகரா போதுமானது. சோதனை செய்யுங்காலத்தில் ஒவ்வொரு ஸர்க்கார் விவசாய பண்ணையும் பின்சொல்லிய விஷயங்களைப் பற்றி எழுதவேண்டும் :—

(1) நெல்விதையின் பேரும், ஊரும்.

(2) நாற்றங்கால், நட்டபுலன் இவைகளின் விஸ்தீரணம்.

(3) நாற்றங்காலிலும் நட்டவயல்களிலும் தனித்தனியே பயிர் நிற்குங்காலம்.

(4) நாற்றங்காலில் விதைக்கப்பட்ட விதையின் தொகையும் (எண்ணம்) அளவும் (பட்டணம் படி).

(5) நாற்றங்காலில் ஒவ்வொரு விதையிலிருந்தும் உண்டான கவர்கள் (தூறுகள்) (உயர்ந்தது, குறைந்தது, சராசரி).

(6) நட்ட வயல்களில் ஒவ்வொரு விதையிலிருந்துண்டான கவர்களும் (தூறுகளும்) கதிர்களும் (உயர்ந்தது, குறைந்தது, சராசரி).

(7) மாசூலான நெல் அளவு (பட்டணம் படிக் கணக்கில்).

(8) வைக்கோலின் அளவு.

இந்த விஷயங்களில் சிரத்தையெடுத்துக் கொண்டு, விவசாய இலாகாக்காரர்கள் கிருஷிகர்களுக்கு உபகாரம் செய்ய முயற்சி செய்யாவிட்டால் அவர்கள் "**இருந்தென்னும் போயென்னும்**".

6. நமது ராஜதானியிலுள்ள ஜனங்களெல்லாம் சௌக்கியமடையவேண்டிய சங்கற்பமே மேற்கொண்ட "பிழைக்கும் வழியே" நீயாகிலும் ஏழைக் கிருஷிகர்கள் மேல் கருணை புரிந்து கவரன்மெண்டாரிடமும் விவசாய இலாகா அதிகாரிகளிடமும் மன்றாடி வேண்டியதைச்செய்யும்படி விண்ணப்பம் செய்து கொள்.

ஓர் கிருஷி.

## NEW METHODS IN PADDY CULTIVATION.

BY

B. S. KUMARASWAMI PILLAI.

## நெல் சாகுபடியில் புதிய முறைகள்.

நமது தென்னிந்தியாவில் வருஷத்திற்கு இரண்டு தடவை நெல்சாகுபடி செய்கிறார்கள். மூன்று நாலு மாதங்களில் விளைவைக் கொடுக்கக்கூடியவைகளை சித்திரை மாசத்திலும், நாலுமாசத்திற்கு மேற்படக்கூடியவைகளை புரட்டாசி மாதத்திலும் பயிர் செய்து வருகிறார்கள். சம்பா, பனங்குறுவை முதலிய விதைகள் சித்திரை மாசத்தில் புழுதியில் விதைக்கப்படுகின்றன. ஆனைக்கொம்பன், வாஸரமுண்டான் போன்றவைகளை புரட்டாசி மாசத்தில் சேற்றில் விதைக்கவோ நாற்றுப்பாவி நடவோ செய்கிறார்கள். நடவுகள் ஒன்றிற்கொன்று 6 அங்குல தூரமாவது இருக்கவேண்டும்.

சம்பா விதைப்பதில் "குழிவித்து" என்ற ஒரு பக்குவம் உண்டு. வழக்கம்போல் நிலத்தை உழுது, புழுதியாக்கி ஒரு சொற்ப மழை விழுந்தவுடன் நிலத்தில் ஒவ்வொரு சாலிலும் அதாவது வரிசையிலும் அனேகம் சிறுகுழிகள் எடுக்கவேண்டும். ஒவ்வொரு குழியும் ஒரு அப்பம் பதியுமட்டுள்ள அளவும், இரண்டு குழிகளுக்கு இடையில் 6 அங்குல தூரமும் இருக்கவேண்டும். இந்தக்குழிகளில் ஒவ்வொன்றிலும் ஒரு அவுன்ஸ், அதாவது, ஒரு ராத்தலில் பதினாறில் ஒரு பாகம், விதைகளையிட்டு பின்பு உரமும், தூசியானமண்ணும் கலந்து அவைகளை மூடவேண்டும். தென்னிந்தியாவில் அநேக இடங்களில் ஒரு ஏக்கர் நிலம் பயிர் செய்யப்பட்டு அறுப்பாகும் வரையில் 25ரூ. செலவாகிறது; அதாவது நிலத்தை உழுது சாகுபடி செய்து பயிர் விளைந்த பிறகு தானியத்தை அறுவடை செய்துகொண்டு வருகிற வரையிலும். ஆனால் மேல் சொல்லியபடி குழிவித்து வைப்பதற்கு அதிக விதையும் அதிக கூலியாட்களும் அவசியமானதால், ஒரு ஏக்கருக்கு 35 ரூபாய் செலவாகும். தென்னிந்தியாவில் பயிரை சரியானபடி உண்டாகாமல் தடுப்பவை ஊரை, களை, என்பவை. ஊரையென்பது பார்ப்பவர்களுக்கு நெல் பயிரைப் போலவே உண்டாகும். காய்த்து முதிர்ந்தபின், ஓர்வித நெல் வாலோடு, உள் அரிசி, ஊசி போல் நொறுங்கியிருக்கும். நெற்பயிரைத் தவிர, வேறு எந்தச் செடியோ, பயிரோ உண்டாகிறதாக விருந்தால் அது களை எனப்படும். 'குழிவித்து' ப்பக்குவத்தில் இந்தமாதிரி களையும் ஊரையும் அதிகமாக உண்டாகாது. பழய பக்குவப்படி ஒரு ஏக்கர் நிலத்தில் 10 கோட்டை (70 பக்காகொண்டது ஒரு கோட்டை) நெல் விளைகிறதானால், நமது புதிய முறைப்படி பக்குவம்செய்தால் 20 கோட்டையும் சரியாய் விளையும்.

சம்பாவை வழக்கப்படி பொடியில் விதைத்து இன்னும் ஒரு பக்குவமும் செய்துவருகிறார்கள். அதாவது தானியம் முளைத்து 30, 40 நாள் ஆனவுடன் இலைகளையும் தழைகளையும் போட்டு கோரிவைப்பது. வயல் நிரம்ப இலைகளையும் தழைகளையும் போட்டு அவற்றின் மேல் பயிராய் இருக்கிற நெற்பயிரை மண்வெட்டி கொண்டு பெயர்த்து ஷை தழைகளின் மேல் வைக்கவேண்டும். வயல் நிரம்பத் தண்ணீர் இரண்டு நாளைக்கு முன்னாலேயே விட்டிருக்க வேணடும். மேற்சொன்னபடி வயல் முழுமையும் ஒவ்வொரு தானியத்திலிருந்து உண்டகிய பயிரும் கோரி தழைகளின் மேல் வைக்கப்பட வேண்டும். இவ்விதம் கோரிவைத்து



15 நாளானவுடன் பயிர்கள் முன்னிலும் நான்கு மடங்காக வேர் போட்டுத் தழைக்கின்றன. ஆனால் இப்படி கோரிவைப்பதற்கு எல்லாராலும் ஆகாது. இதற்கென்று பழகிய சில பறையர், புலையர் உண்டு. ஒரு ஏக்கர் நிலத்திற்கு 15 ஆள் செல்லும்; நாலுவண்டித் தழையும் அவசியம். தழைகளில் கொழுஞ்சி, ஆவாரை, பூவரசு, இவைகளின் தழைகள் மிகச்சிறந்தவை. ஏனென்றால் இவைகள் சதுப்பு நிலத்தில் சீக்கிரம் அழுகிவிடும். வேம்பு, புங்கு, ஆல், அரசு இவைகளின் தழைகள் நன்றாய் அழுகுவதில்லையாகையால் சிலாக்கியமானவைகள் அல்ல. சாதாரணமாய் 10 கோட்டை விளையும் ஒரு ஏக்கர் பூமி இப்பக்குவத்தினால் 20 கோட்டை முதல் 25 கோட்டை வரையில் விளைகிறது. சாதாரணப் பக்குவத்தில் 25 ரூபாய் செலவாகிறது; இந்த பக்குவத்திற்கு 40 ரூபாய் வரையில் செல்லும்.

தொழியில் (சேற்றில்) விதைத்திருக்கும் வாஸரமுண்டானும் ஆனைக்கொம்பனும் சரியானபடி பயிர் விருத்தியாகாவிட்டால் அவைகளையும் இவ்விதம் கோரி வைக்கிறார்கள். ஆனால் ஒருவேளை பயிர்கள் அதிகமாக வளர்ந்து மடிந்து விடும். அப்போது தானியம் சரியானபடி கிடைக்காது. பயிர்கள் அதிகம் வளருமானால் அவைகளைத் தலையரிவாய் அரிந்துவிட வேண்டும். கோரி வைக்கும் பக்குவத்தில் அப்போதுள்ள பயிரை விருத்தியாக்குவதோடு அதற்கடுத்த பக்குவ காலத்திற்கும் உரமோ, தழையோ, அதிகம்போட வேண்டியது அவசியம் இல்லை.

வாஸரமுண்டானும் சம்பாவும் கலந்து விதைக்கும் இன்னும் ஒரு பக்குவம் உண்டு. புரட்டாசி பதினைந்தாந்தேதிக்குள் நிலத்தில் ஜலமிட்டு நன்றாய் உழுது, சதுப்பு நிலமாக்கி ஒரு ஏக்கருக்கு 4 வண்டித்தழையும் அரிந்து விரித்து, அத்தழைகளை 6 நாள் வரையில் சேற்றில் அழுக விடவேண்டும். தழை அரிந்து போட்டு 5 நாள் ஆனவுடன் இரண்டு பங்கு சம்பாவும் ஒரு பங்கு வாஸரமுண்டானும் கலந்து வைக்கோல் சுருணையில் கட்டி, சுருணைகளைத் தண்ணீருக்குள் அமிழ்த்திவிடவேண்டும். ஷை 6 ம் நாள் காலையில் எடுத்து சுருணையோடுதானே உலரவைத்து விடவேண்டும். 7ம் நாள் காலையில் விதையை வெளியே எடுத்து வயலில் கொண்டுபோய் விதைக்கவேண்டியது. நாலுமாதமானவுடன் சம்பா விளைந்து விடுகிறது. வாஸரமுண்டானும் அந்தமட்டும் விளைந்திருந்தாலும் முழுவதும் தானியம் காய்க்கும் பக்குவமுள்ளதாய் இராது. அப்போது சம்பாவை 'தலையரிவு' செய்ய வேண்டும். அதாவது, வைக்கோலை விட்டு நெல்லை மட்டும் கதிர்கதிராகக் கொய்து விடவேண்டியது 6 மாதமும் முடிந்தவுடன் வாஸரமுண்டானும் விளைந்துவிடுகிறது. அப்போது வழக்கம் போல் கதிர்களை வைக்கோலோடு அடியினின்றும் அறுத்து களங்களில் கொண்டுபோய் நெல் வேறு வைக்கோல் வேறாக அடித்தெடுக்கவேண்டும். இவ்விதம் பயிர் செய்வதற்கு 50 ரூபாய் வரையில் செல்லும். ஆனால் 50 ரூபாய் செலவு செய்த ஒரு ஏக்கர் பூமியில் 30 கோட்டை முதல் 40 கோட்டை வரையில் விளையும்.

64 வித தானியங்கள் உண்டு. இவைகள் விதைத்து, முதிர்ந்து விளைவதற்கு 50 நாள் முதல் 8 மாசகாலம் வரையில் செல்லுகிறது. நிலத்தில் இயற்கையாய் அமைந்திருக்கும் மண், சீதோஷ்ணம், நீர்வளம் இவைகளுக்குத்தகுந்தபடி தானியத்தை தெரிந்தெடுத்துப் பயிர் செய்ய வேண்டியது.

இப்போது நிலங்களுக்கு அனேகர் புண்ணாக்கு இடுகிறார்கள். புண்ணாக்கிட்டால் அப்

போது அந்தச் சமயத்துப் பயிர் நன்றாய் உண்டாகிறது. ஆனால் பின்னால் நிலம் முன்னிருந்த உரம் முழுவதையும் இழந்து விடுகிறது. நாங்கள் முன் எங்கள் நிலங்களுக்கு இட்டுவந்ததை இதையறிந்து இப்போது நிறுத்திவிட்டோம். தென்திருவிதாங்கூராகிய செழிப்புள்ள பாகத்தில் நாங்கள் இப்போது புண்ணாக்கை உரமாகக்கொள்வதே இல்லை. புண்ணாக்கிடாமல் இருப்பது மிகவும் உத்தமம்.

பி. எஸ். குமாரசாமி பிள்ளை.

---

## THE MERCHANTS' CLERK.

## வியாபாரிகளின் குமாஸ்தா

எல்லா வேலைகளையும் ஒருவரேபார்க்க முடியாது. சில சிப்பந்திகள் அவசியம் வேண்டியிருக்கும். ஆனால் நல்ல சிப்பந்தியைத் தேடி வைத்துக் கொள்ளாவிட்டால் அதிக கஷ்டம் நேரிடும். எவர்களை குமாஸ்தாவாக நியமித்துக் கொள்ளலாமென்று சொல்லமுடியாது. அவரவர்களுக்கே சமாதானமாகத் தோன்றுகிறவர்களை வைத்துக் கொள்ளுதல்தான் நல்லது. ஆனாலும் குமாஸ்தாவாக நியமிக்கப்படுபவரிடம் இரண்டு குணங்கள் இருக்கின்றனவா என்று பரீக்ஷித்தறியவேணும். நாணயமும் பணிவும் அவசியம் குமாஸ்தாவிடம் இருக்கவேண்டிய குணங்கள். நாணயம் எவரிடமிருக்கிறதென்று அறிந்து சொல்லமுடியாது. நல்ல குடியில் பிறந்த பிள்ளைகள் தெய்வபக்தியுள்ளவரா யிருப்பார்கள். அவர்கள் நல்ல நடத்தையுள்ளவர்களாகவும் இருப்பார்கள். நல்ல புத்தியும், தெளிவும், நல்ல நடத்தையும் உடையவரையே குமாஸ்தாவாக நியமித்துக் கொள்ளலாம். பணிவும், படபடப்பில்லாத பேச்சும், நல்ல நடத்தையைக் காட்டும். அதிக படபடப்பும், முன்கோபமும் உள்ளவனை வியாபாரி தன்னிடம் வைத்துக் கொள்ளக்கூடாது. அவன் கடைக்கு வருபவரை வராதபடி செய்வான். வியாபாரிக்கும், வியாபாரியின் குமாஸ்தாவுக்கும், சாந்தகுணம் இருக்கவேண்டும். கோபத்தை அடக்கமுடியாதவர்கள் வியாபாரத்தில் பிரவேசிக்கவே கூடாது. சரீர சௌக்கியம் இல்லாவிட்டால் கோபம் அதிகரிக்கும். அதிகமாய்ப் பெருக்கும் தன்மையுள்ளவர்கள், மந்தநடையா யிருப்பார்கள். அவர்களால் வேலை செய்யமுடியாது. ஒடிந்து விழுவது போல மெல்லிய தேகமுள்ளவர்கள் விடாமுயற்சியும் ஊக்கமும் உள்ளவர்களா யிருப்பார்கள். ஆயினும் அதிகமாய் தேக சிரமத்தைத்தாங்கமாட்டார்கள். இப்படிப்பட்டவர்களை வேலைக்குத் தக்கபடி அமர்த்திக் கொள்ளவேண்டும். நல்ல உழைப்பும், சாந்தகுணமும் எவரிடம் இருக்கிறதோ, அவர்களே வியாபாரத்திற்கு உபயோகமாகக்கூடியவர்களென்று தீர்மானிக்க வேண்டும். யாராவது துஷ்டத்தனமாயாவது, படபடப்பாயாவது இருந்தால், அவர்களை ஒரு தினம் கூட வைத்துக்கொள்ளக்கூடாது. எந்த வியாபாரத்திலும் கம்பெனியிலும், சாந்தகுணமில்லாமல் வேட்டைநாய் மனிதரூபம் எடுத்தால் போன்ற ஜெந்துக்களை அண்டவொட்டாமல் விலக்கிவைக்கவேண்டும்.

குமாஸ்தாக்கள் தங்கள் யஜமானனுடைய க்ஷேமத்தைக் கோருபவர்களாயிருக்கவேணும். யஜமானர்களும் குமாஸ்தாவின் சுகதுக்கங்களைப் பார்த்து அவருக்கு ஹிதமாய் நடந்து கொள்ளவேண்டும். குமாஸ்தாவாக அமர்ந்த மாத்திரத்தில் தன் மரியாதையெல்லாவற்றையும் விட்டுவிட்டு, அடிமைச்சீட்டெழுதிக் கொடுத்துவிட்டதாய் எண்ணிவிடக் கூடாது. சிலர் தங்கள் குமாஸ்தாக்கள் எப்போதும் ஏதாவது வேலை செய்து கொண்டேயிருக்கவேண்டு மென்று நிர்ப்பந்திப்பார்கள். இதுபிசகு. தேகம் அசக்தமாகி, உற்சாகம் இல்லாத சமயத்தில் செய்யும் வேலைபயன்படாது. குமாஸ்தாக்களும் தங்களுடைய குறிப்பிட்ட வேலையைச்செய்துவிட்டால் யஜமானனுக்குத் திருப்தியென்று எண்ணக் கூடாது. தங்களுடைய குறிப்பிட்டவேலை தவிர வேறு ஏதாவது வேலையிருந்தால், அதைச் செய்வதால் யஜமானனுக்கு லாபம்கிடைக்கும் போலிருந்தால் அதையும் அவசியம் செய்யவேண்டும். கணக்குமட்டில் எழுதும் குமாஸ்தாவிடத்தில் யாராவது வந்து அவருக்கு வேண்டிய ஒரு ஸாமான் இருக்கிறதா என்று கேட்டால் "எனக்குத் தெரியாது. என்வேலை கணக்குப்பார்ப்பதுதான்" என்று சொல்லி அனுப்பிவிடுவானானால் இவனிடத்தில் வியாபாரிக்கு திருப்தியுண்டாகுமா? உண்டாகாது. அல்லது தான்மட்டில் கடையில் இருக்குந் தருணத்தில் வருபவருக்கெல்லாம் விற்கும் குமாஸ்தா இங்கேயில்லை யென்று சொல்லிக் கொண்டிருக்கும் கணக்குப் பிள்ளை யஜமானனுக்கு விரோதியே யொழிய உண்மையான குமாஸ்தாவாக ஆகமாட்டான்.

தன் குமாஸ்தாக்கள் ஓழிந்த வேளைகளில் படிப்பதற்காக அநேக புஸ்தகங்களை யஜமானன் வாங்கிவைக்க வேண்டும். அவர்கள் படித்துத்தெரிந்து கொள்ளும் விஷயங்கள் எல்லாம் யஜமானனுக்கே உபயோகமாகும். அவர்களை அதிகமாய் வருத்தாமல், சமாதானத்தில் நடத்தி, தன்லாபத்தையே பாராமல் அவர் க்ஷேமலாபத்தையுங் கோரி வேலை வாங்கும் யஜமானனுக்கு மேன்மேலும் லாபம் கிடைக்கும். அப்படிக்கில்லாமல், சிப்பந்திகளை குரூரமாய் நடத்தினால் அவர்கள் வேலை சரியாய் செய்யமாட்டார்கள். அதனால் வியாபாரம் கெட்டுப்போகும்.

கடையில் வேலை செய்ய குமாஸ்தாக்களை நியமித்துக் கொண்டால் அவர்கள் கூடியவரையில் சௌகரியமான ஜீவனம் செய்வதற்குப் போதுமான சம்பளம் கொடுக்க வேண்டும். குமாஸ்தாக்களாக இருந்து பொருள் சம்பாதிப்பது அசாத்தியம். இந்த உண்மையைத் தெரிந்த வியாபாரிகள் தாங்கள் குமாஸ்தாக்களை கஷ்டப்படுத்தாமல் வேலைவாங்கிக் கொள்ளவேண்டும். அநேகர் வேலைக்கு அகப்படுகிறார்களென்று சம்பளத்தைக் குறைக்கக் கூடாது. அநேகர் வேலையை அபேக்ஷித்தால் தக்க மனிதனைத் தேர்ந்தெடுக்கலாமே தவிர அந்தக் காரணத்தினாலேயே சம்பளத்தைக் குறைப்பது தவறு. குமாஸ்தாக்கள் மனம் திருப்தியாயிருந்தால் தான் வியாபாரம் நன்றாய் நடக்க முடியும். முதலில் சம்பளம் குறைவாய்க் கொடுத்தாலும் கொஞ்சங்கொஞ்சமாய் சம்பளத்தை அதிகரித்துக் கொடுத்து வந்தால், குமாஸ்தாக்கள் உற்சாகமாய் வேலை செய்வார்கள்.

வியாபாரத்தில் நல்ல லாபங் கிடைத்த காலத்தில் அப்படிப்பட்ட லாபங்கிடைக்கும்படி உழைத்து வேலை செய்த குமாஸ்தாக்களை மறக்கக்கூடாது. வியாபாரி அதிக போகத்திலிருந்து கொண்டிருந்தால் தன் குமாஸ்தாவையும் கூடியவரையில் நல்ல அந்தஸ்தில் வைக்கவேண்டும். அப்படிச் செய்யாத வியாபாரியை நன்றியில்லாதவரென்று உலகம் உடனே எண்ணிவிடும். யஜமானர்களுக்கெல்லாம் யஜமானனாக ஈசுவரன் ஒருவன் இருப்பதை மனதில் எண்ணிக்கொண்டு, தனது குமாஸ்தாவை பக்ஷமாய் நடத்தும் வியாபாரியே க்ஷேமத்தை யடைவான்.

---

## NIGHT SOIL MANURE.

## மலஜலாதி எரு.

ஐப்பசி மாசத்திய "பிரபஞ்சம்" என்னும் தமிழ்ப்பத்திரிகையில் கோயம்புத்தூர் சி. ஆர். பத்மநாபையர் பின்வருமாறு எழுதுகிறார்:—

சென்ற ஆகஸ்டு மாசத்திய "பிழைக்கும்வழி" என்ற தமிழ்ச்சஞ்சிகை ஒன்று வரப்பெற்றோம். மேற்படி சஞ்சிகைத் தலைப்பில், ராவ் பகதூர் ஜி. ஸ்ரீனிவாஸராவ், பி. ஏ. அவர்களால் "விவஸாய அபிவிருத்தி" என்ற ஒரு வியாஸம் எழுதப்பட்டிருக்கிறது. இதைப் படித்து மெத்த மகிழ்ந்தோம். ஆனால், அவர்கள் சொல்லும் இரண்டொரு சங்கதிகள் மாத்திரம், எமது அநுபவத்திற்கு, ஒரு விதத்திலும் பொருந்துவதாகக் காணவில்லை. அவை யாவன:—1 மல ஜலாதிகளை வளமாக உபயோகப்படுத்துவது. 2. மீன்களையும் அவ்விதம் உபயோகப்படுத்துவது.

1. மலஜலாதிகளை, நமது தேசத்தில் எமது பார்வைக்கெட்டியமட்டில், தெக்ஷிண கர்னாடக ஜில்லா மங்களூரில் உபயோகப்படுத்தி வருகிறார்கள். அவ்விடம் முனிசிபாலிடியாரே, ஒரு தூரமாயுள்ள ஜாகாவில், ஒரு யந்திரம்வைத்து மலத்தைச் சுட்டுப், பின் அகழ்

வெட்டி, அதில் மேற்படி சாம்பலைப் போட்டு மூடிவைத்துக், கொஞ்சநாள் கழித்து மண்ணோடு கலந்து பக்குவப்படுத்தி விற்றுவருகிறார்கள். இம்மண்ணிற்கு அவ்விடம் "சுட்டமண்" என்று பெயர் வழங்குகிறது.

இது ராயர் அவர்கள் சொன்னமேரை, நிலத்திற்கு மிகுந்த வளத்தைக்கொடுத்து, பயிர்களைச் செழிக்கவைத்து, நல்லபலனையும் அளிக்கச்செய்கிறது. இந்தச் 'சுட்டமண்ணை' அதிகமாக உபயோகிப்பவர் கொங்கணிய கிறிஸ்துவர்கள். பலன்கள் பார்வைக்கு பளபளப்பாகவும், புஷ்டியாகவும் இருக்கிறதென்பதில் தடையில்லை. மேற்படி பலன்களை, மார்க்கட்டுகளில், பெரும்பான்மையோர் விரும்பி வாங்குவதில்லை. இதன் காரணம் என்ன என்றுகேட்டதில், மேற்படி பலன்கள் ருசியாய் இருக்கிறதில்லை என்கிறார்கள். ஆகையால், அவ்விடம் நாட்டுப்புறங்களிலிருந்து வரும் பலன்களையே, அதிகமாகப் பிரியப்பட்டுவாங்குகிறார்கள். ஆனால், மேற்படி "சுட்டமண்" போட்டு விளையும் காய்கறிவர்க்கங்களைப்போல, பார்வைக்குப்பக்குவ வைபவத்தை அதிசயிக்கக்கொடுப்பது வேறு எவ்வர்க்கமும் இல்லை. நாம் அவ்விடம் மூன்று வ்ருஷம் குடும்ப சமேதராகக் குடியிருந்து வந்திருக்கிறோம். அந்த காய்கறிகளைக்கொண்டு மத்தியானம் வைத்த பதார்த்தங்கள், ராத்திரிக்குக் கெட்டுப்போய் வெகு ருசிக்கேட்டைக் கொடுக்கின்றன. நமது ஜில்லாவில் உற்பத்தியாகும் காய்கறிகளாற் செய்யும் பதார்த்தங்களோ, மறுநாட் காலைவரை வைத்திருந்தாலும் கெடுவதில்லை. முதல் முதல் இதன் சூக்ஷமமறியாமல் ஏமாந்துபோனோம். பின்னால் அறிந்தமேல், மற்றவர்களைப்போலவே, நாட்டுப்புறத்துக் காய்கறிகளை உபயோகித்து வந்தோம். மேற்படி 'சுட்டமண்' ணானது அந்த தேசத்தில் கரும்பிற்கும் உபயோகப் படுத்தப்படுகிறது. இந்த கரும்பின் வெல்லமானது, இதர கரும்பின் வெல்லத்தைப்போல் ருசியும் இல்லை, கெட்டியுமில்லை; மழைகாலத்தில் மிகவும் கெட்டுப் புளித்துப்போகிறது. ஆகையினால், மலத்தைச்சுட்டுமண்ணோடு கலந்து பக்குவப்படுத்தி உபயோகிக்கையிலேயே, இவ்வித துர்க்குணங்கள் விளைபொருள்களுக்கு உண்டானால், ராயரவர்கள் சொல்லியிருக்கும் பச்சை முறையை, நாம் எமது நண்பர்களுக்கு, சிபார்சு செய்யக்கூடியதாக இல்லை.

மேற்கூறியது தவிர, மலஜலங்கள் மனிதருக்கு அமைந்திருப்பது, மற்ற மிருகபக்ஷியாதிகளுக்குள்ளன போல் அல்ல. ஒரு வாத தேகத்தின் மலக்குறியும் நீர்க்குறியும், பித்த சிலேஷ்ம தேகங்களின் குறியும், ரோகிகளின் குறியும், இன்னின்ன விதமென்று வாகடாசாரியர்கள் வைத்திய சாஸ்திரத்தில், செவ்வையாக வரையறுத்துள்ளார். ஆகையினால், ரோகிகளின் மலஜலமும், நானாவித த்வந்த தேகங்களின் மலஜலாதிகளும், ஒருமிக்கச்சேர்ந்த வளத்தில் வியாதிகளை உண்டாக்கக் கூடிய சத்துக்கள் இல்லாமலிரா. இந்த சத்துக்கள் எங்கேபோம்? நஞ்சுள்ள நாகம் அழகாயிருப்பதுபோல். இந்த சத்துக்கள் அமைந்த விளைவும் ஏற்படுகிறது. ஆகையால், எமது சிற்றறிவிற் கெட்டியவரை, மலஜலங்களைப் பயிர்க்கு வளமாக உபயோகப்படுத்துவது, கூடாதென்பது எமது அபிப்பிராயம்.

2. மீன்வளம்:—இது, தலைச்சேரியில், சமுத்திரக்கரையில் கருவாடு செய்யும் சர்க்கார் உப்பளத்திற்கு அருகில், தயார் செய்யப்படுகிறது. "சார்டின்" என்னும் ஓர் வகைச்சிறு மீன்களின் தலையைச்சேர்த்துப் பக்குவப்படுத்துகிறார்கள். இவற்றை வளமாக உபயோகப்படுத்துகிறார்கள். ஆனால், பயிர்கள் புஷ்டியாக விளைவைக்கொடுத்தாலும், அவைகளில் மீன் எண்ணெய் நாற்றம் பாகம் செய்து சாப்பிடுகையிலேயே காணக்கூடியதாக இருக்கிறது. மீன் தலைகளை, காஸர்கோடு தாலூகா சமுத்திரக்கரை வழியில், புகையிலைப் பயிர்க்கும் உபயோகிக்கிறார்கள். இப்புகையிலைக்குக் காரமே கிடையாது. நமது ஜில்லாப்புகையிலையைப் போல் சிலாக்கியமே இல்லை. இது எமக்கு அநுபவம். தவிர, அழுகிப்போன மாம்ச சத்துக்களை உபயோகிப்பதாலாகிற பயிர்களின் பலன், வைத்திய சாஸ்திர முறைப்படி விரும்பக்கூடியதல்லவென்பது எமது அபிப்பிராயம்.

மேற் சொன்னவைகளை வேண்டுமானால் உபயோகத்தால் நன்றாயறியலாம். ஜப்பானியரோ மற்றவரோ உபயோகிப்பதினாலேயே நாமும் அப்படிச் செய்யலாமென்பது எமக்கு அவ்வளவு சிலாக்கியமென்று தோன்றவில்லை.



# AGRICULTURAL NOTES.
## விவஸாயக் குறிப்புகள்.

GROUND-NUT.

**மணிலாக்கொட்டை.**—மணிலாக்கொட்டை சாகுபடி செய்கிறவர்கள் விதைக் கொட்டையைப் பற்றி பின் சொல்லப்பட்ட விஷயங்களை நன்றாய்க் கவனிக்க வேண்டும்.

முதலாவது, விதைக் கொட்டையானது அவர்களுடைய ஊரின் சீதோஷ்ண ஸ்திதிக்குப் பொருந்தியதா அல்லவா என்பதை கவனிக்கவேணும்.

இரண்டாவது, விதைக் கொட்டையின் கனத்தில் எவ்வளவு பங்கு பருப்பு, எவ்வளவு பங்கு மேல்தோல், இருக்கிறது என்று பார்க்கவேண்டும். மேல்தோல் குறைந்திருக்கும் மணிலாக் கொட்டையே சிலாக்கியமானது.

மூன்றாவது, குறிப்பிட்ட அளவு விதைக்கொட்டையில் எவ்வளவு எண்ணெய் இருக்கிறது என்பதையும் கவனிக்க வேண்டும். இந்த குணம் தின்பதற்கல்லாமல் எண்ணெய் ஆட்டுவதற்கு வாங்கப்படும் கொட்டையில் முக்கியமானது. நூறு ராத்தல் கொட்டைக்கு சுமார் ஐம்பது ராத்தல் எண்ணெய் இருந்தால் அது உயர்ந்த கொட்டை.

நான்காவது, சாகுபடி செய்யப் போகும் வித்து முந்திஒரு ஏகாராவுக்கு எவ்வளவு விளைந்திருக்கிறது என்னும் விஷயத்தையும்கவனிக்க வேண்டும். ஜாஸ்தியாக விளைவுகண்டிருக்கும் விதையையே பொருக்கியெடுக்க வேண்டியது.

IRRIGATION TURNS.

**தண்ணீர் முறைகள்.**

1. காவேரியிலும் வெண்ணாற்றிலும் ஜலம் முறையே 4 அடி 5 அங்குலத்துக்கும் 7 அடிக்கும் கீழே போகும்பொழுது, காவேரி வெண்ணாறு ரெகுலேடர்களில் முறை ஆரம்பிக்கிறது.

2. காவேரியிலும் வெண்ணாற்றிலும் ஜலம் முறையே 4 அடி 5 அங்குலத்துக்கும் 7 அடிக்கும் அதிகமாயிருக்கும்பொழுது, 'ஜலம் கொள்ளிடத்தில் திருப்பப்படுகிறது.

3. வெள்ளங்களில் ஜலத்தின் வேகம் மணி 1-க்கு சுமார் 2 மைலாக இருக்கிறது. முறை ஆரம்பித்த பிற்பாடு மணி 1-க்கு சுமார் ஒன்றே காலே அரைக்கால் மைலாக இருக்கிறது.

4. கல்லணைக்கு கீழே காவேரிக்கு வேறொரு அணைக்கட்டும் இல்லை.

5. ஜலத்தின் உயரம் காவேரியில் 7 அடி 5 அங்குலத்துக்கும் வெண்ணாற்றில் 9 அடிக்கும் அதிகமாக இருக்கும்பொழுது ஜலம் கரைபுரண்டோடும்.

6. ஜனவரி முதல் ஜூன் வரைக்கும் சாகுபடிக்கு ஜலம் சாதாரணமாக இருக்காது.

திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் காவேரியில் மாத்திரம் ஜலம் விடப்படுகிறது.

புதன், வியாழக்கிழமைகளில் வெண்ணாற்றில் மட்டும் ஜலம் விடப்படுகிறது.

வெள்ளி, சனி, ஞாயிறு இந்த மூன்று கிழமைகளிலும் இரண்டு ஆறுகளிலும் சமமாய் ஜலம் விடப்படுகிறது.

GREEN MANURING.

**பசுந்தாள் எரு விடுதல்.**

1. பசுந்தாள் எருவிடுவதால் நிலத்தில் ஈரம் காத்திருக்கும் ஜலமில்லாத காலங்களில் பயிர்கள் பிழைக்க ஹேதுவாகும்.

2. பயிர்களுக்கு நைட்ரோஜன் வாயு அவசியம் என்று ஆடிமாஸத்து ஸஞ்சிகையில் ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். பசுந்தாள் எரு இந்த நைட்ரோஜனை சேகரிக்க ஹேதுவாகிறது.

3. பசுந்தாள் எருப்போடுவதால் நிலத்திலுள்ள எரு ஸத்துக்கள் ஜலத்தோடு கலந்து வெளியே போய் விடாமல் தடுக்கப்படுகின்றன.

4. பசுந்தாள் எருப்போடுவதால் பயிர்கள் திறமாய் வளரும். நோய்கள் வந்தால் அவைகளைத்தாங்கும்.

5. மாசூல் நன்றாய்க்காணும்.

6. பயிர் ஜாஸ்திகாலம் ஜீவிக்கும். நிலமும் அதற்கு இடங்கொடுக்கும்.

7. களை பறிப்பது சொல்பமாகும். ஆகையால் ஸாகுபடி செய்வதில் செலவு குறைச்சலாகும்.

## TRADE NOTES.
## வியாபாரக் குறிப்புகள்.

SOUTHERN INDIA CHAMBER OF COMMERCE.

**தென்னிந்தியா வியாபார சங்கம்.**—போன தை மீ° த்து சஞ்சிகையில் வியாபாரக் குறிப்புகளின் கீழ் இந்திய வர்த்தகர்கள் ஒன்று கூடி அங்கங்கே வர்த்தக சங்கங்கள் ஏற்படுத்த வேண்டுமென்றும் அதனால் வியாபாரத்திற்கு பெரிய கௌரவம் ஏற்படுவதோடுகூட வியாபாரிகளுக்கு அநேக நன்மைகள் கிடைக்குமென்றும் சொன்னோம். இது விஷயமாய் சென்னப்பட்டணத்தில் அநேகபெரிய வியாபாரிகள் கூடி "தென்னிந்திய வியாபார சங்கம்" என்பதாக ஒருசங்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்த சங்கத்துக்கு கனம். பி. தியாகராஜ செட்டியார், அக்கிராசனாதிபதி. ராய்பகதூர் கோவிந்த தாஸ் சதுர்ப்புஜதாஸ் ஸாம், ஹாஜீ மகம்மது அப்துல் குதேஸ் பாஷா சாஹிபும் உப அக்கிராசனாதிபதிகள். இந்த சங்கத்தில் இப்பொழுது 100 வியாபாரிகளுக்கு மேல் மெம்பர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள். முக்கியமாய் இந்த ராஜதானி வியாபாரத்தையும் கைத்தொழில்களையும் விருத்தி செய்வதும், இந்த ராஜதானியிலுள்ள வியாபாரிகளின் பொது நன்மையைத் தேடுவதும் இந்தச் சங்கத்தின் நோக்கம். இந்த சங்கத்தார் வியாபார விஷயமாய் வேண்டிய புஸ்தகங்களைத் தருவித்து ஒரு புஸ்தகசாலை ஏற்படுத்துவதோடு, பலவித வியாபாரப் பொருள்களையும் சேர்த்து ஒரு சாசுவத மியூஸியம் அதாவது பொருட் காட்சியும் ஏற்படுத்துவார்களாம். தவிர, வியாபாரிகளுக்கு வேண்டிய சமாசாரங்களையும் இன்னும் பலவித சாதகங்களையும் தேடிக்கொடுப்பார்கள். இந்த சங்கத்து மெம்பர்கள் மாசம் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் வீதம் சந்தாக் கட்ட வேண்டும்.

FRUITS.

**பழங்கள்.**--ஐக்கிய மாகாணங்களிலுள்ள ஸஹரன்பூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து மட்டும் ஒரே பருவத்தில் சுமார் 5,500 பாரம் பழவகைகள் வெளியூர்களுக்கு அனுப்பப்பட்டனவாம். பணக்காரர்களில் அனேகர் சாப்பிட்ட உடனே பழம் சாப்பிடுவது வழக்கம் உண்டு. வழக்கமாய்ப்போனபடியாலும் தேகசௌக்கியத்தை உத்தேசித்தும் இவர்கள் என்ன விலையாயிருந்தாலும் பழங்களை வாங்கியே தீருவார்கள். இங்கிலாந்திலிருந்து சிறுவயதிலேயே உஷ்ணப்பிரதேசங்களுக்கு உத்தியோகமாய்ப் போய் பணம்சம்பாதித்து தங்கள் தேசத்துக்குத்திரும்பிப் போய் லண்டனில் வயது காலத்தைக் கழிக்கும் ஐரோப்பியர்கள் அனேகம் பேர்கள் இருக்கிறார்கள். இவர்கள் உத்தியோகமாகவோ அல்லது வியாபாரமாகவோ இருந்த தேசங்களில் உள்ள பழங்களைத் தின்று இவர்களுக்கு ஒரு வழக்கம் எற்பட்டுவிடுகிறது. இப்படிப்பட்டவர்கள் வாங்கித்தின்பதற்காக மட்டும் லண்டன் பட்டணத்தில் லெஸ்டர் தெருவில் ஒரு பழக்கடை ஏற்பட்டிருக்கிறதாம். இதில் பலதேசங்களில் உள்ள பழங்கள் தருவிக்கப்பட்டு விற்கப்படுகிறதாம். மேலே சொல்லப்பட்ட ஐரோப்பியர்கள் இந்தக் கடைக்கு வந்து வேண்டிய பழங்களை வாங்கித்தின்றுவிட்டு தங்கள் பெண்ஜாதி பிள்ளைகளுக்கும் வேண்டியதை வாங்கிக்கொண்டு போகிறார்களாம். இவைகளையெல்லாம் அறிந்துகொண்டு நல்ல பழமரங்களை வைத்துப் பயிர்செய்து பழ வியாபாரம் செய்வது பொருள் சம்பாதிக்க ஒரு நல்ல வழியாகும்.

BANKS IN INDIA.

**இந்தியாவில் பாங்கிகள்.**—மதராஸ், பம்பாய், வங்காளம் இந்த மூன்று ராஜதானிகளிலும் கவரன்மெண்டார் பணம் வைத்திருக்கும் 3 "ராஜதானி பாங்கிகள்" இருக்கின்றன. தவிர, இந்தியாவிலேயே மட்டும் லேவாதேவி செய்வதற்காக 14 பாங்கிகள் இருக்கின்றன. இவைகளைத் தவிர, இதர தேசங்களோடு லேவாதேவி செய்வதற்காக 10 பாங்கிகள் இருக்கின்றன. ராஜதானி பாங்கிகளில் எல்லாம் சர்க்கார் பணமும் ஜனங்களின் பணமுமாகச் சேர்ந்து முப்பத்து மூன்று கோடி ரூபாய் டிபாசிட்டு செய்யப்பட்டிருக்கிறது. இந்தியா வியாபாரத்துக்காக ஏற்பட்ட பாங்கிகளில் 12 கோடி ரூபாய் டிபாசிட் ஆயிருக்கிறது. தவிர, இதர தேசங்களோடு லேவாதேவி செய்யும் பாங்கிகளில் 18 கோடி ரூபாய் டிபாசிட் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தியாவில் பாங்கிகளில் டிபாசிட் செய்யப்பட்டிருக்கும் தொகை 63 கோடியாகிறது. இந்த 63 கோடி ரூபாயைக்கொண்டுதான் வியாபாரிகளுக்கு வேண்டிய தொகைகளை கொடுத்து வாங்கி பாங்கி வியாபாரம் நடந்து வருகிறது.



## INDUSTRIAL NOTES.
## கைத்தொழில் குறிப்புகள்.

DOWNS FOR STUFFING PILLOWS.

**தலையணை அடைக்க பக்ஷிகளின் மயிர்.**—கோழி முதலிய பறவைகளின் மயிரை நமது நாட்டில் சேகரிப்பதில்லை. ஐரோப்பாவில் கோழி, வாத்து, முதலியவைகளின் மயிரைச் சேர்த்து தலையணைக்கு உபயோகிக்கிறார்கள். 2 ராத்தல் கொண்ட தலையணை $3\frac{3}{4}$ முதல் $5\frac{1}{4}$ ரூபாய் வரையில் விற்கிறது. குள்ள வாத்து, கூஸ் வாத்துக்களின் மயிர் மிகவும் உத்தமம். கோழியினுடைய மிருதுவான மயிர் மத்தியமம். வான்கோழி மயிர் அதமம். மயிரை எவ்வாறு பதம் செய்யவேண்டுமென்றால் அதை அடுப்பின் மேல் வறுத்து ஒரு சாக்கில் போட்டு கருங்கல்லின் மேல் வெயிலில் காயவைக்கவேண்டும். கடினமான இறகுகளின் மத்திய நரம்பை எடுத்துவிட அதுவும் உபயோகமாகும். சிலர் கொதிக்கும் நீரில் பறவையை மூழ்க வைப்பார்கள். அந்த மயிரை உலர்த்தி அடுப்பில் வறுத்தால் மயிர் மிருதுபட்டு தலையணைக்கு உதவுகிறது.—தெ-வி.

MANUFACTURE OF CASTOR OIL.

**ஆமணக்கு எண்ணெய் எடுக்கும் விதம்.**—ஆமணக்கு எண்ணெயை இரண்டு விதமாக எடுப்பதுண்டு. முதலாவது: கொட்டைமுத்துக்களை இரண்டு உருளைக்கு இடுக்கில் கொடுத்து உடைக்கவேண்டும். இப்படிக்கு உடைத்தால் மேல் தோலி பிளந்து உள்ளே இருக்கும் வெள்ளைப்பருப்பு வெளிக்காணும். இவைகளை எடுத்து ஒரு சாக்கில்போட்டுக்கட்டி எண்ணெய் 'ப்ரெஸில்' (யந்திரத்தில்) கொடுத்து பலமாய் அழுத்தவேணும். அழுத்தினால் எண்ணெய் வெளியே ஓடிவரும். இந்த எண்ணெயை எடுத்து ஜலத்தோடு கலந்து காய்ச்சவேணும். காய்ச்சினால் தெளிவான எண்ணெய் மேலாகவும் மோது கீழாகவும் வந்து விடும். தெளிவு எண்ணெயை இறைத்து ஒரு பிளானல் துணியைப் போட்டு வடிக்கட்டி தகரமோ, பிப்பாயோ எந்த பாத்திரங்களில் வேணுமானாலும் வைத்துக்கொள்ளலாம். இப்படி எடுக்கப் பட்ட எண்ணெய்க்கு "கோல்டு ட்ரான்" அதாவது பச்சையாய் எடுக்கப்பட்ட எண்ணெய் என்று பெயர் வழங்குகிறது.

இன்னொரு விதம் என்னவென்றால் ஒரு மண் சட்டியிலோ வாணயிலோ கொட்டைமுத்தைப் போட்டு அடுப்பில்வைத்து வறுக்கவேணும். பிறகு வறுத்த கொட்டையை எடுத்து உரலில் போட்டு இடிக்கவேணும். இப்படி இடித்தால் கொட்டைகளின் தோல்கள்விடும். இந்த தோல்களை எடுத்துவிடுவது நலம். இடிபட்ட கொட்டையை துணியில் கட்டி முடிந்து, ஒரு பெரிய பானையில் நிறைய ஜலம் நிரப்பி அதில் அந்த முடிச்சைப்போட்டு கொதிக்கவிடவேணும். கொதிக்கவிட்டால் எண்ணெய் மேலே மிதந்துவரும். இதை இறைத்து பாத்திரத்தில் வைத்துக்கொள்ளலாம்.

PAPAYA JUICE.

**பப்பாய் ரஸம்.**—பப்பாய் (பப்பளி)ப்பழம் உடம்புக்கு நல்லது. ஜீரணசக்தியை அதிகப்படுத்தும். மாம்ஸத்தை பப்பளிமரத்து இலையில் சுற்றி கொஞ்சநேரம் வைத்திருந்தால் அந்த மாம்ஸம் மிருதுவாகிவிடும். பப்பளிக்காயிலிருந்து ஜீரணத்தை விருத்திசெய்வதற்காக ஒரு மருந்து தயார் செய்யப்படுகிறது. மரத்திலிருக்கும் காயை துளிகுத்தினால் அந்த குத்தின இடத்தின் வழியாய் ஸாரம் ஒழுகும். இந்த ஸாரத்தை ஒரு பீங்கான் பாத்திரத்தில் ஏந்த வேண்டும். இந்த ஸாரத்தை பித்தளை போன்ற வேறு ஒரு உலோக பாத்திரத்திலும் ஏந்தக்கூடாது. ஏனென்றால் அப்படிப்பட்ட பாத்திரங்களை இந்த ஸாரம் தின்று விடும். வேண்டிய ஸாரம் வடிந்தவுடனே, இன்னொரு ஆழமில்லாத பீங்கான் பாத்திரத்திலோ அல்லது கண்ணாடி பாத்திரத்திலோ கொட்டி ஜலம் காயும்படி உலரவைக்கவேண்டும். இப்படி உலரும் பொழுது ஒரு பக்கத்தில் ஜாஸ்தி உலர்ந்து இன்னொரு பக்கத்தில் உலராமல் போகாமல், ஒரே சமனாய் உலரும்படி பார்க்கவேணும். உலர்ந்ததும் வெள்ளையாய் மணல்மணலாய் விடும். இது எடுக்கப்பட்டு அமெரிக்காவிலுள்ள ஐக்கியமாகாணங்களுக்கு அனுப்பப்படுகிறது. அங்கே இது மறுபடியும் சுத்தி செய்யப்பட்டு ஜீரணக்குறைவுக்கு எடுத்த ஒரு மருந்தாக விற்கபடுகிறது. ஒரு பப்பளி மரம் 40 அல்லது 50 காய் காய்க்கும். இவைகளிலிருந்து கால் ராத்தல் மேலே சொல்லப்பட்ட மணல் மணலான பொடி கிடைக்கும். அமெரிக்கா தேசத்து ஐக்கிய நாடுகளில் இது ரூபாய் 3 முதல் $4\frac{1}{2}$ வரையில் விற்கிறதாம்.

# ECONOMICS.
# பொருளாதாரம்.

ECONOMIC PROGRESS AND MASS EDUCATION.

**பொருள் அபிவிருத்தியும் பொதுஜனப் படிப்பும்.** நம்முடைய தேசத்தில் கல்வியறிவுள்ள ஜனங்கள் மிகவும்சொல்பமென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். சராசரி நூற்றிற்குப்பதினைந்து பேருக்குத்தான் எழுதப்படிக்கத்தெரியும். பாக்கி எண்பத்தைந்து பேர்கள் தங்களுடைய பேர்கூட எழுதத் தெரியாதவர்களாய் இருக்கிறார்கள். இப்படிப்படிப்புக் குறைச்சலா யிருப்பதினால்தான் நம்முடைய தேசம் முன்னுக்கு வாராமலிருக்கிறது. படித்தவர்கள் படிக்காத தம்முடைய சகோதர சகோதரிகளையெல்லாம் படிக்கும்படி செய்ய வேண்டியது முக்கியமானகடமை. இதுவே நாம் முதல் முதல் நம்முடைய தேசத்தின் மேன்மைக்காக உழைக்கவேண்டும் வழிகளில் ஒன்று.

இது நிற்க, சென்ற ஒரு மாதகாலமாக சென்னப்பட்டணம் கிருஸ்டியன்காலேஜில் படிக்கும் பிள்ளைகளில் அநேகர் "சகோதரசங்கம்" என்பதாக ஒரு சபை ஏற்படுத்தி கூலிவேலை செய்து பிழைக்கும் ஏழைஜனங்களுக்கு படிப்புச்சொல்லிக் கொடுப்பதற்காக ராத்திரியில் பள்ளிக்கூடம் வைத்து நடத்திவருகிறார்கள். ஒவ்வொரு நாளும் ஸாயந்தரம் 6 மணி முதல் $7\frac{1}{4}$ மணிவரையில் பாடஞ் சொல்லிக்கொடுத்து வருகிறார்கள். இந்தப் பள்ளிக்கூடத்தில் புஸ்தகங்களும் ஸ்லேட்டுப் பலகைகளும் இனாமாகக் கொடுக்கிறார்கள். இதில் இப்பொழுது வாசிக்கும் பிள்ளைகள் 65. இப்படி கிருஸ்டியன் காலேஜ் சகோதர சங்கத்தார் காட்டிய வழியைப் பார்த்துக்கொண்டு ஒவ்வொரு சிறு பட்டணத்திலும் கிராமத்திலும் இருக்கிற தனவந்தர்களும் படித்தவர்களும் ஒன்று சேர்ந்து, இந்த மாதிரி ஏழை ஜனங்களுக்கு ராத்திரிப்பள்ளிக்கூடம் வைத்து இனாமாகப் படிப்புச் சொல்லிக்கொடுத்தால் நம்முடைய தேசம் சீக்கிரத்தில் முன்னுக்குவரும். பாமர ஜனங்களுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுத்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டியது மிகவும் அவசியம். நவீன நாகரிகமடைந்த இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய தேசங்களில் எழுதப்படிக்கத் தெரியாமலிருப்பவர்கள் மிகவும் சொல்பம். ஆகையினால்தான் அந்த நாடுகளெல்லாம் வளம் பொருந்தி யிருக்கின்றன. எந்த நாட்டில் பொது ஜனங்கள் படிப்பு குறைந்திருக்கிறதோ அந்தநாடு எல்லா விஷயங்களிலும் பின்னடையும் என்பதே சரித்திர ஆராய்ச்சியின் துணிவு. நமது தற்கால இந்தியாவே அதற்கு சாக்ஷி. நாம் நம்மில் ஒருவரையொருவர் சகோதர வாஞ்சையுடன் நேசித்து ஒவ்வொருவருடைய சுக துக்கங்களை, நம்முடைய சுக துக்கங்களாகக் கருதி, பொது ஜன நன்மையே நமது நன்மை என்று எண்ணி, தன் லாபத்தையே எண்ணும் எண்ணத்தை யொழித்துப் பொது நன்மைக்காக உழைக்கும் எண்ணம் உண்டாகும் அன்றைக்குத்தான் நமது தேசம் முன்னிலைக்கு வரும். அன்றைக்குத்தான் நம்முடைய வாழ்க்கையின் பயனைப்பெற்றதாகும். அன்றைக்குத்தான் நம்முடைய நாடும் நாடென்று பெயர் பெறும்.

THE RYOTS' DIFFICULTY.

**ரயத்துக்களின் கஷ்டம்.**—சில வருஷங்களுக்கு முன் 70 ரூபாய் கிஸ்தி செலுத்திவரும் ஒரு தஞ்சாவூர் ஜில்லா மிராசுதாரிடம் பேசிக்கொண்டிருந்தேன். அவர் சம்பா அறுப்பு அறுத்து 40 கலம் அதாவது 960 பட்டணம் பக்காப்படி குதிரில் போட்டிருந்தார். அந்த வருஷம் விளைவுக்குறைச்சல், ஆகையினாலே அவர் ஊரில் ஒருவரும் வயல்களுக்கு செய்நேர்த்தி செய்யவில்லை. இப்படி வயலுக்கு செய்நேர்த்தி செய்யாமலிருந்தால் அடுத்த வருஷம் என்ன விளையப்போகிறதென்று மேலே சொல்லிய மிராசுதாரைக் கேட்டேன். அதற்கு அவர் "ஆம், ஐயா, சொல்லுகிறது வாஸ்தவந்தான், செய்நேர்த்தி செய்தால் நன்றாய் விளையுந்தான், அதற்கு கையில் பசையில்லையே, கண்டது 40 கலம், இது ஒரு வருஷத்து சாப்பாட்டுக்கும் விதைக்கும் காணும் காணாததுமாயிருக்கிறது. கையிலிருக்கிறநெல்லைக்கொண்டு வேலை செய்து விட்டால் 6 மாஸம் கழித்து சோத்துக்குப்பறக்கவேணும். நீங்கள் வேணுமானால் நெல்லுக் கடன் கொடுங்கள், வயலில் நீங்கள் சொல்லுகிற வேலை செய்கிறேன். அடுத்த அறுப்பில் நீங்கள் கொடுத்த நெல்லையும் கலத்துக்குக் குருணி (அதாவது 2 பட்டணம் படி) வாசியும் நான் நெல்லை வீட்டுக்கு எடுத்துக்கொண்டு வருகிறதற்கு முன்னால் களத்திலேயே வாங்கிக்கொள்ளுங்கள்" என்று சொன்னார். இதைக்கேட்டதும் நான் சிறுவயதில் கேட்ட ஒரு வேடிக்கைப்பேச்சு என் ஞாபகத்தில் வந்தது. ஒரு ஏழை கிழவரை அவருடைய பேரக்குழந்தைகள் வாசலில் விற்கபடுவதை எல்லாம் நல்ல சாமான், நல்ல சாமான் என்று வாங்கச்சொல்லி தொந்திரவு செய்யுமாம். அதற்கு அந்தக்கிழவர் "ஆம் அப்பா, வாசலில் ஒரு பவுனுக்கு ஒன்பது பவுன் விற்கிறான். ஒரு பவுன் இல்லையே என்ன செய்கிறது." என்பாராம். வேலை செய்தால் வயல் விளையுந்தான். வேலை செய்வதற்கு பணம் மட்டும் விவஸாயிகளுக்கு இல்லை. விவஸாயத்தை முன்னேற்ற வேண்டுமானால் விவசாயிகளுக்கு சொல்ப வட்டிக்கு கடன் கிடைக்கக் கூடிய வழியைத்தேடிக்கொடுக்க வேண்டும். இந்த விஷயத்தைப்பற்றி மறுபடியும் எழுதுவோம்.



# THE TEXTILE INDUSTRY.
# நெசவுத் தொழில்.

THE BY-PRODUCTS OF THE COTTON INDUSTRY.

**பருத்தி கைத்தொழிலில் உண்டாகும் உபப்பொருள்கள்.**-அமெரிக்காவின் தென்பாகத்திலுள்ள நாடுகளில் அநேக வருஷங்களுக்கு பருத்திக்கொட்டையின் அருமையை அறியாமல் வீணாக எறிந்துகொண்டுவந்தார்கள். ஆனால் கொஞ்ச வருஷங்களாகப் பருத்திக்கொட்டையின் உபயோகத்தை அறிந்துகொண்டு இப்பொழுது பருத்திப்பயிரிலிருந்து வரும் வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்கு கொட்டையிலிருந்து மாத்திரமே எடுத்துவிடுகிறார்கள். முதலில் பருத்திக்கொட்டையை மக்கிப்போகும்படி செய்து நிலத்திற்கு எருவாக உபயோகப்படுத்திவந்தார்கள். பிறகு பருத்திக்கொட்டையை பலவிதமாகப் பக்குவப்படுத்தி அதிலிருந்து எண்ணெய் எடுக்க ஆரம்பித்தார்கள். பாக்கியிருக்கும் பிண்ணாக்கை கால்நடைகளுக்குத் தீனியாகவும், அந்தக்கால்நடைகளின் சாணத்தை பருத்திக்கு உரமாகவும் உபயோகப்படுத்த ஆரம்பித்தார்கள். 2,000ராத்தல் பருத்தியில் ஏறக்குறைய 665 ராத்தல் பஞ்சும், 1,335 ராத்தல் கொட்டையும் இருக்கும். ஆனால் சுமார் 18 ராத்தல் பஞ்சு கொட்டையிலே ஒட்டிக் கொண்டிருக்கும். இந்த 1,335 ராத்தல் கொட்டையிலிருந்து 186 ராத்தல் எண்ணெயும் 490 ராத்தல் பிண்ணாக்கும் 561 ராத்தல் மேல் ஓடும் அகப்படுகின்றன. பாக்கியிருக்கும் 80 ராத்தலும் உபயோகமில்லாத குப்பை, மணல் முதலியன. பருத்திக்கொட்டைப் பிண்ணாக்கை கால்நடைகளுக்குத் தீனியாகப் போடுவதில் யாதொரு நஷ்டமும் இல்லை. ஏனென்றால் அவைகளின் சாணம் பருத்திச்செடிக்கு மிகவும் உயர்ந்த எருவாகிறது. ஆகார சத்தின் பிரகாரம் கவனித்துப்பார்த்தால் 100 ராத்தல் பருத்திக் கொட்டையை ஓட்டோடு அரைத்துப் போடுவதும் 116 ராத்தல் சோளம் போடுவதும் சரி. ஓடு எடுத்த 100 ராத்தல் பருத்திக்கொட்டைப் பிண்ணாக்கு 175 ராத்தல் சோளத்துக்குச் சரியாம். மாடுகளுக்குத் தீனியாக உபயோகப்பட்டு வரும் பருத்திக்கொட்டையோடு இன்னும் எந்தத்தீனியைச் சேர்த்தால் அதிக சத்துள்ளதாகுமென்றுகண்டுபிடிக்க ஏற்பாடு செய்யவேண்டும். அதுவுமல்லாமல் பருத்திக்கொட்டை ஆகாரத்தில் தேக ஆரோக்கியத்துக்கும் போஷணைக்கும் முக்கியமாய் வேண்டிய பொருள்கள் இருப்பதினால் அதையே மனிதர்களும் ஆகாரமாக சிலவருஷங்களில் உபயோகிப்பார்கள் என்று ஊகிக்க இடமுண்டாகிறது.

பருத்திக் கொட்டையை ஏதாவது ஒருவிதத்தில் மறுபடியும் எருவாக பூமிக்கு உபயோகிக்காவிட்டால், அந்த பூமியில் விளைவுகுறைந்து பலனில்லாமல் போகும். 2,000 ராத்தல் பருத்திக்கொட்டையிலிருந்து 40 காலன் அதாவது 240 புட்டி எண்ணெய் எடுக்கலாம். ஆகையால் பருத்திக்கொட்டை அதிகமாய் அகப்படக் கூடிய ஒவ்வொரு இடத்திலும் ஒரு சிறு ஆலைவைத்து கொட்டையிலிருந்து எண்ணெய் எடுப்பது நலம். இப்படி எடுக்கப்பட்ட எண்ணெயைத்தெளியவைத்து வண்டல் ஸோப்பு செய்கிறவர்களுக்கு விற்கப்பட்டு மேல் எண்ணெய் பலவிதமாக உபயோகப்படுகிறது. தெளிவான எண்ணெயை சில வியாபாரிகள் சுத்தி செய்து வெண்ணெய்க்கு பதிலாகவும், சமையலில் உபயோகத்திற்காகவும் விற்று வருகிறார்கள். பருத்தி நெய்யின்குணத்தைப்பற்றி ஆடிமாஸத்து ஸஞ்சிகையில் 262 பக்கத்தில் விஸ்தாரமாய் எழுதியிருக்கிறோம்.

LACE INDUSTRY.

**ஜரிகைத் தொழில்.**—மதுரையில் சௌராஷ்டிர ஜாதியாரில் பிரமுகரான எல். கே. துளசிராம் அவர்களுடைய முயற்சியால் சில பெரிய சௌராஷ்டிரமார்கள் சேர்ந்து தங்கஜரிகையும் வெள்ளிஜரிகையும் செய்வதற்காக ஒரு பாக்டரி அதாவது தொழிற்சாலை ஏற்படுத்தப்போகிறார்கள். இந்தத்தொழிலுக்கு வேண்டிய யந்திரமும் சாமானும் ஐரோப்பாவில் பிரான்ஸ் தேசத்தில் லயன்ஸ் என்னும் பட்டணத்திலிருந்து வரப்போகிறது. இந்த வேலையைப்பார்த்து வருவதற்காக ப்ரடென் என்னும் ஒரு பிரான்ஸ்தேசத்து ஸ்திரீயும் இரண்டு இந்தியர்களும் நியமிக்கப்பட்டு அவர்களெல்லாரும் மதுரைக்கு வந்து விட்டார்கள்.

## THE GROCERY TRADE.
## பலசரக்கு வியாபாரம்.

**Ghee.**

**நெய்.**—கொஞ்ச வருஷங்களாக நல்ல நெய் என்பதே கிடைப்பதில்லை. தற்காலத்தில் சுத்த நெய்யோடு கொழுப்புக்கலக்கப்பட்டு விற்கபடுவது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். "அப்படம்" நெய்யாயிருந்தாலும் அதுவும் கொஞ்சம் நாள்பட்டால் நாற்றமடிக்கிறது. இதை நெய்க்காரனிடத்தில் சொன்னால் அவன் ஒப்புக்கொள்வதில்லை தான் சுத்தமான நெய்யே கொடுத்ததாக சத்தியம்செய்வான். அப்படியானால் யார்பேரில் பிசகு. நெய்காரன் சொல்வது பிசகா, அல்லது நெய் வாங்கி சாப்பிடுகிறவர்கள் சொல்லுவது பிசகா? இரண்டு பேர்கள் சொல்வதும் வாஸ்தவமே. நெய்யோடு யாதொரு மிச்ரமும் செய்யாமல் சுத்தவெண்ணெயிலிருந்து நெய் காய்ச்சினாலும் காய்ச்சி எடுக்கும் பதம் (பக்குவம்) தெரியாவிட்டால் நெய் நாறித்தான் போம். முதலாவது வெண்ணெயை ரொம்பநாளைக்குச்சேர்த்துச் சேர்த்து வைக்கக்கூடாது. வெண்ணெயைதயிர்த் துளிகள் இல்லாமல் நன்றாய் ஜலத்தில் அலசிவைக்கவேணும். வெண்ணெய்காய்ச்சுவதில் வெகுஜாக்கிரதையும் சாமர்த்தியமும் வேணும். எல்லாராலும் நெய் காய்ச்சிவிட முடியாது. ஜலம் சுண்டக்காயவேணும். பதத்தில் எடுக்காவிட்டால் நெய் முறுகல் வாசனை வந்து விடும். பதத்திற்கு முன் எடுத்து விட்டால் ஜலம் சுண்டாது. ஆகையால் அப்படிப்பட்ட நெய்யில் வாசனை இராது. அது ரொம்ப நாளைக்கும் தாங்காது. ரொம்பநாள் தங்கினால் நாற்றம் எடுத்துப்போம். அனேகமாய் விற்பனைக்கு வருகிற நெய்யெல்லாம் நன்றாய்க்காய்ச்சப்படுகிறதில்லை. ஏனென்றால் வெண்ணெயை நெய்யாக உருக்கும் பொழுது நாலில் ஒரு பங்கு நிறை குறையும். எவ்வளவுக் கெவ்வளவு காய்ச்சல் குறைச்சலோ அவ்வளவுக்கவ்வளவு நெய் நிறை ஜாஸ்தி. ஆகையால் ஜாஸ்தியாகக் காய்ச்சாமல் நெய்யை விற்பதே விற்கிறவர்களுக்கு லாபம். இப்படிக்கு இளம் உருக்கான நெய் சுத்தநெய்யானாலும் வாசனையாய் இராது. துளி நெய்யை கையில் எடுத்து நன்றாய்த்தேய்த்து முகர்ந்து பார்த்தால் வாசனை நன்றாய்வரும். இதை அறியாமல் பல ஜனங்கள் தேய்க்காமல் முகர்ந்து பார்த்து வாசனை இல்லை என்று நல்ல நெய்யாய் இருந்தாலும் வாங்குவதில்லை. இப்படி இளம் உருக்கான நெய்கள் சீக்கிரம் செலவழிந்து விட்டால் வியாபாரிக்கு நஷ்டம் வராது. அப்படிச் செலவழியாமல் தங்கிவிட்டால் ஜலம் போக காய்ச்சப்படாததால் நாற்றம் எடுத்து ஜனங்கள் வாங்கக்கூடாமல் போய்விடுகிறது. முக்கால்வாசி கேஸுகளில் நெய் நாறுவதற்குக்காரணம் நெய்காய்ச்ச தெரியாததோ அல்லது வேணுமென்று நிறைகுறையக் கூடாதென்று இளம்உருக்காய்க்காய்ச்சுவதோ தான்.

**Pepper.**

**மிளகு.**—மிளகில் வெள்ளை மிளகென்றும் கறுப்பு மிளகென்றும் இரண்டு வகையுண்டு. மிளகுக்குலைகள் சிவந்து பழுத்ததும் குலைகளைப்பறித்து காலினால் மிதித்தால் பழங்கள் குலைகளை விட்டு விழுந்துவிடும். இந்தப்பழங்களை கச்சந்தி முதலானபைகளில் போட்டுக்கட்டி ஒருவாரம் தண்ணீரில் ஊரப்போடவேண்டியது. தேங்கி நிற்கிற தண்ணீரைவிட ஓட்டமுள்ள தண்ணீரில் ஊரப்போடுவது சிலாக்கியம். ஏனென்றால் ஓடுகிற தண்ணீரில் உஷ்ணம் ஜாஸ்தியாய் இருப்பதால் இப்பழங்களின் தோல் சீக்கிரம் விட ஹேதுவாகும். இவ்விதமாய் ஊரப்போட்ட மிளகை எடுத்து ஒரு தொட்டியில் போட்டு நன்றாய் மிதித்தால் தோல்கள் கழன்றுவிடும். ஜாஸ்தி தண்ணீர் ஊற்றி தோலிகளை நன்றாய் கழுவிப்போகவிட்டு மீதமுள்ள சுத்தமான மணிகளை எடுத்து வெயிலில் காயப்போடவேண்டும். இப்படி பக்குவம் செய்யப்பட்ட மிளகுதான் வெள்ளை மிளகு.

நன்றாய் பழுப்பதற்கு முந்தியே பழுத்தது பழுக்காதது என்ற தாரதம்மியமில்லாமல் எல்லாக்குலைகளையும் பறித்து வெயிலில் காயப்போட்டு நன்றாய் கையினாலாவது துணியில் போட்டாவது பிசைந்து காற்றில் தூற்றினால் தூசிகள் பறந்துபோய் மிளகு தனியாய் நின்றுவிடும். இதுதான் கறுப்பு மிளகு. தண்ணீரில் கொஞ்சம் வேகவைத்து காயப்போடுவது சிலாக்கியம். இதில் தோல் கெட்டியாகி மிளகு ஒரே நிறமாக இருக்கும்.



## REVENUE NOTES.
## ரெவெனியூக் குறிப்புகள்.

**Right to Trees in the Tanjore District.**

**தஞ்சாவூர் ஜில்லாவில் மரங்களில் பாத்தியதை.**—போனமாஸத்து ஸஞ்சிகையில் 343ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட 1909ம் ஞு மேமீ 5ம் தேதி 9ம் நம்பர் ஸர்க்கியுலர் தொடர்ச்சி.

4. கைப்பற்றிலில்லாத நிலத்தில் உள்ள மரங்கள் கூட்டுப்பட்டாவின் பேரில் அனுபவிக்கப்பட்டால், ஷை நிலத்தை பட்டாவின் பேரில் அடமானம் செய்வதில் ஆக்ஷேபனை யில்லாதிருந்து, ஆனால் மரப்பட்டாதார்கள் ஒவ்வொருவருக்கும் மரங்களில் உள்ள வீதப்படி நிலத்தின் பாகத்திற்கும் அவரவர்கள் பேரால் தனிப்பட்டா பிறப்பிவிக்கும் பொருட்டு ஷை நிலத்தை சப்டிவிஷன் செய்து பிரிக்க முடியாவிட்டால், ஷை நிலத்துக்கு ஷை மரப்பட்டாதார்கள் சம்மதப்பட்டால் அவர்கள் பேரால் ஒரு கூட்டுப்பட்டா பிறப்பிவிக்கலாம். அவர்கள் எல்லாரும் நிலத்தின் கூட்டுப்பட்டா பெற சம்மதிக்காவிட்டால், பட்டா பெற்றுக்கொள்ள சம்மதிக்கிறவர்களுக்கு நிலத்தை அடமானம் செய்து விடலாம். அவர்களில் ஒருவரும் பட்டாபெற சம்மதிக்காவிட்டால், நிலத்தை வேறு நபர் அல்லது நபர்களுக்கு அடமானம் செய்துவிட வேண்டியது; கவர்ன்மெண்டார் அவர்கள் மரப்பட்டாதார்களிடமிருந்து தீர்வை வசூலிக்கும் பாத்தியத்தை இழந்து மரப்பட்டாதார்களை நிலப் பட்டாதார்களுடன் சொந்த ஏற்பாடுகள் செய்துகொள்ளும்படி விட்டுவிடுவார்கள்.

5. தஞ்சாவூர் ஜில்லா குடிகள் பின்வருமாறு மரத்தீர்வை செலுத்திக்கொண்டு, சர்க்கார் நிலத்தில் மரங்களை நட்டு பயிரிடலாம்.

மரம் ஒன்றுக்கு தீர்வை.

| | அணா. | பை. |
|---|---|---|
| 1. தென்னை .. .. .. | 1 | 3 |
| 2. பனை .. .. .. | 0 | $7\frac{1}{2}$ |
| 3. ஈச்சை .. .. | 0 | $7\frac{1}{2}$ |
| 4. புளி .. .. .. | 2 | 6 |
| 5. மா .. .. .. | 1 | 3 |
| 6. பலா .. .. .. | 5 | 0 |
| 7. இலுப்பை .. .. | 5 | 0 |
| 8. பின்னை .. .. | 0 | $7\frac{1}{2}$ |
| 9. விளா .. .. .. | 0 | $7\frac{1}{2}$ |
| 10. நெல்லி .. .. | 0 | $7\frac{1}{2}$ |
| 11. கொய்யா .. .. | 0 | $7\frac{1}{2}$ |
| 12. எலுமிச்சை, நார்த்தைவகை .. | 0 | $7\frac{1}{2}$ |
| 13. பாக்கு, (கமுகு) .. .. | 0 | $7\frac{1}{2}$ |
| 14. மாதளை .. .. | 0 | $7\frac{1}{2}$ |
| 15. நாகை .. .. .. | 0 | $7\frac{1}{2}$ |

1. புளி, 2. மா, 3. பலா, 4. இலுப்பை, 5. தென்னை, 6. பனை, 7. ஈச்சை.

பக்கத்தில்கண்டிருக்கும் ஏழுவகை மரங்களுக்கு மட்டில்தான் இனிமேல் மரப்பட்டா கொடுக்கப்பட வேண்டுமென்றும், ஆனால் மற்ற வகை மரங்களுக்கு இதுவரையிலுள்ள பட்டாக்கள் அப்படியே இருந்துவரலாமென்றும், ரிவினியூ போர்டார் அவர்கள் இப்போது உத்தரவு செய்திருக்கிறார்கள் (1908ஞு ஆகஸ்டுமீ 10உ புரொசீடிங்ஸ் ந 179).

6. சர்க்கார் நிலங்களில் ஆக்ஷேபனையன்னியில் பயிரிடக்கூடும் காய், பழம் போன்ற பலனைத்தரும் விருக்ஷங்களைவைத்து வளர்ப்பதற்காக யாதொரு நிலத்தீர்வையும் விதிக்கக்கூடாது. சர்க்கார் ஜலம் உபயோகிக்கப்பட்டால் தண்ணீர்த்தீர்வையும், மரங்கள் பலனைக்கொடுக்க ஆரம்பித்தால் மரத்தீர்வையும் வசூல் செய்யவேண்டும். ஆனால் மரங்களைவைத்து பயிராக்குவதில் ஆக்ஷேபனையிருக்கும் பக்ஷத்திலாவது, மரங்கள் உள்ள ஸ்தலத்தில் வேறு யாரும் பிரவேசிக்கவொட்டாமல் ஏகதேச அனுபவமாகும் படிக்காவது பொது ஜனங்களுக்கு இடஞ்சல் அல்லது அசவுக்கியம் உண்டுபண்ணும்படியாவது ஷை மரங்களை சுற்றி வேலிபோட்டு அடைப்பு அடைக்கப்பட்டிருந்தாலாவது, அதற்கு தீர்வை விதிக்கவேண்டும்; அல்லது, அவசியமானால், நில ஆக்கிரமிப்பு (லாண்டு என்குரோச்சுமெண்டு) சட்டப்படி நடவடிக்கை நடத்தவேண்டியது.

7. இந்த சர்க்கியுலரில்கண்ட விஷயமாய் இதற்கு முந்தி பிறப்பிவிக்கப்பட்டிருந்த எல்லா சர்க்கியுலர்களும் இதனால் ரத்தாகிவிட்டன.

## LEGAL NOTES.

## சட்டக் குறிப்புகள்.

OATH.

**பிரமாணம்.**—ஒரு வியாஜ்யத்தில் பிரதிவாதி கங்கா தீர்த்தத்தைக் கையில் வைத்துக்கொண்டு பிரமாணமாக என்ன சாக்ஷியம் சொல்லுகிறானோ அதை ஒப்புக்கொள்வதாக வாதி சொன்னான். வாதி சொன்னபடி பிரதிவாதி சத்தியம் பண்ணி தான் வாதிக்கு ஒன்றும் கொடுக்கவேண்டியதில்லையென்று சொன்னான். வாதி சொன்னபடி பிரதிவாதி சத்தியம் பண்ணி விட்டபடியால் கோர்ட்டார் கேசை தள்ளிவிட்டார்கள். 31 அலகபாத் 315-ம் பக்கம்.

PUNCHAYETS.

**பஞ்சாயித்துக்கள்.**—வடக்கே பஞ்சாப் மாகாண கவர்ன்மெண்டார் மாஜிஸ்ட்ரேட் விசாரணை விஷயமாய் சில சீர்திருத்தங்கள் செய்யப்போகிறார்களாம். அங்கங்கே பஞ்சாயித்துக்கள் ஏற்படுத்தி பஞ்சாயித்தார்களைக்கொண்டு சில்லரைக்குற்றங்களை விசாரிக்க ஒரு சட்டஞ்செய்யவேணுமென்று இந்தியா கவர்ன்மெண்டாருக்கு சிபார்சு செய்திருக்கிறார்களாம். தவிர, சில குற்றவாளிகளை மாஜிஸ்ட்ரேட்டுகள் விசாரித்து ஸெஷன் கோர்ட்டுகளுக்கு 'கமிட்' பண்ணுகிறார்கள். இப்படிக்குச் செய்யாமல், முதன் முதலிலேயே ஸெஷன் ஜட்ஜி சில அஸெஸர்களை வைத்துக்கொண்டு விசாரணைசெய்துவிடலாமென்பது பஞ்சாப் மாகாணகவர்மெண்டின் அபிப்பிராயம். இந்த சீர்திருத்தங்களோடு சில கிராமாதிகாரிகளையும் கிராமங்களில் பெரிய மனுஷர்களையுங் கொண்டு ஒரு 'பெஞ்சு' மாஜிஸ்ட்ரேட்கள் மாதிரி ஏற்படுத்தி குற்ற விசாரணைசெய்யக் கூடாதா என்பதைப் பற்றி பல ஜட்ஜி, கலெக்டர் போன்றவர்களின் அபிப்பிராயத்தை கேட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. நமக்கு எட்டுகிற மட்டில் மேலே சொல்லிய ஏற்பாடுகள் நல்லவைகளென்றே தோன்றுகிறது.

A RECEIPT.

**ஒரு ரசீது.**—பெந்தகப் பாத்தியதையை விட்டுவிடல் :—(a) ஒத்தி பெந்தகப் பாத்தியதையை விட்டுவிட்டதாக அதாவது அந்தப்பெந்தகத்தைத் திருப்பி விட்டதாக ரசீது ரூ. 100-க்கு அதிகமான தொகைக்கு ஏற்பட்டிருந்தால் அது ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டும். அப்படி ரிஜிஸ்டராகாவிட்டால் கோர்ட்டில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

WITNESS.

**சாக்ஷி.**—கோர்ட்டில் ஒரு சாக்ஷியை "உன்னிடம் ஆட்டை வாதி விட்டிருந்தானா இல்லையா?" என்று கேட்ட கேள்விக்கு "ஒரு மயிர்கூட இல்லை" யென்று பதில் சொன்னான். இந்தமாதிரி சொல்வது அற்பஜாதிகளுடைய லக்ஷணம் என்றும் இது பினல் கோடு 228-வது செக்ஷன்படி குற்றம் ஆகாது என்றும் மதராஸ் ஹைகோர்ட்டார் சொல்லியிருக்கிறார்கள்.

GIFT BY FATHER TO SON.

**தகப்பன் பிள்ளைக்கு இனாம் கொடுத்தது.**—ஒரு தகப்பன் ஒரு சொத்திலிருக்கும் தன்னுடைய பாத்தியதையை, அந்த சொத்தின்பேரில் யாதொரு கடனுமில்லாத காலத்தில் தன்னுடைய புத்திரனுக்குக் கொடுத்து விட்டால், இந்த பாரதீனத்தால் குடும்பச் சொத்து தகப்பனால் துர்வினியோகப் படுத்தப்படுவதிலிருந்து விலக்கப்பட்டுப் பாதுகாக்கப்படும் பயனை முடிவில் உடைத்தாயிருக்கிறதென்கிற காரணத்தை முன்னிட்டாவது அல்லது புத்திரன் அதற்கு யாதொரு கிரயம் கொடுக்காமல் அதை அடைந்திருக்கிறான் என்றாவது, அந்தப் பாரதீனம் மோசடியான பாரதீனம் என்று சொல்லமுடியாது என்று தீர்மானித்திருக்கிறார்கள். 23 பம்பாய், 146 பக்கம்-லாயர்.

MARRAIGE FOR MONEY.

**கலியாணம் செய்துகொடுப்பதற்காக பணம் வாங்குதல்.**—ஒரு தாயார் தன்னுடைய புத்திரியை பிரதிவாதிக்கு விவாகம்செய்து கொடுத்தாள். இதற்காக மாமியாருக்கு மாப்பிள்ளை சொற்பதொகை கொடுப்பதாகச் சொல்லி இருந்தான். இந்தத்தொகையைப் பெறுவதற்கு மாமியார் வியாஜ்யம் கொண்டு வந்தாள். பொது நன்மைக்கு விரோதமான உடன்படிக்கையை ஆதாரமாகக் கொண்டு இந்த வியாஜ்யம் கொண்டுவரப்பட்டிருக்கிறபடியால் இந்த வியாஜ்யம் செலாமணியாக மாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது. பக்கம் 23, அலகபாத், 495 பக்கம்.

---




# Oakes & Co., Ltd.,

## 9, Broadway, MADRAS.

(o)

அடியில்கண்ட சாமான்கள் எங்களிடத்தில் அகப்படும்.

(1) விவசாயத்திற்கு வேண்டிய யந்திரங்கள்,

(2) மனிதர்களாலும், மாடுகளாலும் வேலை செய்யக்கூடிய தண்ணீர் பாய்ச்சும் பம்புகள்,

(3) நீராவியாலும் வேறு எந்த சக்தியாலும் வேலை செய்யக்கூடிய எல்லாவித தொழிலுக்கும் வேண்டிய யந்திரங்கள்,

(4) தச்சு வேலைக்கு வேண்டிய உளி, வாச்சி முதலிய சாமான்கள்,

(5) பலவித பெயிண்டுகள், எண்ணெய்கள், வார்னீஷுகள், புருஷுகள்,

(6) வியாபாரிகளுக்கு வேண்டிய நிறுக்கும் யந்திரங்கள், ஸேப்கள், பணம் வைக்க இரும்புப் பெட்டிகள், பூட்டுகள்,

(7) விவசாயிகளும், குடித்தனக்காரர்களும் உடைக்கவும், அரைக்கவும் வேண்டிய யந்திரங்கள்,

(8) கம்பி வேலிகள், இரும்பு மாடிப்படிகள், வீடு கட்டுவதற்கு வேண்டிய இரும்புச் சாமான்கள்,

இன்னும் எது வேணுமானாலும் எழுதியனுப்பினால் அனுப்பத் தயாராய் இருக்கிறோம். காட்டலாக் அனுப்பப்படும்.

ஒக்ஸ் அண்டு கம்பெனி,

9, பிராட்வே, சென்னப்பட்டணம்.

## EDUCATIONAL NOTES.
## வித்தியாவிஷயக் குறிப்புகள்.

TECHNICAL EDUCATION.

**தொழில் படிப்பு.**—இது விஷயமாய் இந்தியாவில் உள்ள மாகாண கவரன்மெண்டார்களெல்லாம் அவரவர்கள் அபிப்பிராயத்தை இந்தியா கவரன்மெண்டாருக்கு எழுதியனுப்பிக்கொண்டு வருவதாகத் தெரியவருகிறது. எல்லாரிடத்திலிருந்து பதில் வந்ததும் இந்தியா கவரன்மெண்டார் தொழில் படிப்பு விஷயமாய் வேண்டிய உத்தரவுகளைச் செய்வார்கள்.

AGRICULTURAL INSTRUCTION IN PUDUKOTTA.

**புதுக்கோட்டையில் விவசாய போதனை.**—புதுக்கோட்டையில் ஒரு விவசாய சங்கம் இருக்கிறது. இந்த சங்கத்தார் மாசாமாசம் ஒரு துண்டு பத்திரிகை பிரசுரித்து வருகிறார்கள். இந்தப் பத்திரிகையை சர்க்கார் பள்ளிக் கூடங்களில் உத்தியோகமாயிருக்கும் உபாத்தியாயர்கள் அவரவர்கள் மாணுக்கர்களுக்கும் இன்னும் குடித்தனக்காரர்களுக்கும் வாசித்துக் காண்பிக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்படிக்கு நம்முடைய ராஜதானியிலுள்ள உபாத்தியார்களும் செய்யும்படிக்கு நமது ராஜாங்கத்தாரும் ஏற்பாடு செய்தால் ரொம்ப அனுகூலமாயிருக்கும்.

A TEXTILE SCHOOL.

**ஒரு நேசவு பாடசாலை.**—போன வருஷத்தில் உதகமண்டலத்தில் இந்த ராஜதானியின் கைத்தொழில்களின் அபிவிருத்தி விஷயமாய் ஒரு சபை கூடினது எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். இந்தச் சபையில் நெசவுத்தொழில் அதிகமாயுள்ள 6 பட்டணங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு நெசவுப் பள்ளிக்கூடம் கவரன்மெண்டார் ஏற்படுத்த வேண்டுமென்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. இந்த தீர்மானத்தை அனுசரித்து நம்முடைய கவரன்மெண்டார் மதுரையில் ஒரு பள்ளிக்கூடம் வைக்கப்போகிறார்களாம். இந்த பள்ளிக்கூடத்திற்கு ஜி. என். தேவல் என்பவர் சூபரின்டெண்டாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் இந்தியா கவரன்மெண்டாரிடமிருந்து உபகாரச் சம்பளம் வாங்கிக்கொண்டு சீமைக்குப் போய் நெசவுத் தொழிலைக் கற்றுக்கொண்டுவந்தவர். இவர் நவம்பர் மாசம் முதல் வேலையை ஆரம்பித்து விடுவாராம்.

AN EDUCATIONAL MUSEUM.

**கல்விக்கண்காக்ஷி.**—வித்தியா விஷயங்களுக்கு சம்பந்தமாயுள்ள அநேகவித பொருள்களைச் சேர்த்து மைசூர் ஸமஸ்தானத்தில் இரண்டு வருஷமாக ஒரு பொருள் காட்சி நடந்து வந்தது. இந்தக்கண்காக்ஷிக்கு இங்கிலாந்தில் அநேக பள்ளிக்கூடங்களிலிருந்து ஸாமான்கள் வந்தன. இப்படிப்பட்ட விலை உயர்ந்த ஸாமான்களை வருஷத்தில் சில நாளைக்கு மட்டில் துடைத்து எடுத்துவைத்தால் அந்த ஸாமான்களெல்லாம் வெகு நாளைக்கு நிற்கமாட்டா. தவிர, இந்த ஸாமான்களை கொலுவைக்கும் சில நாள்களுக்குள் ஸமஸ்தானத்திலுள்ள எத்தனை உபாத்தியாயர்கள் பார்த்து பலனை அடையக்கூடும்? இவைகளை எல்லாம் உத்தேசித்து மைசூர் கவரன்மெண்டார் மேலே சொல்லிய ஸாமான்களையெல்லாம் சேர்த்து ஒரு சாச்வத மியூஸியமாக பங்களூரில் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

THE SOURASHTRA HIGH SCHOOL, MADURA.

**மதுரை சௌராஷ்டிர ஹைஸ்கூல்.**—மதுரையில் சௌராஷ்டிரப்பிள்ளைகளுக்குமட்டும் படிப்பு சொல்லிக்கொடுப்பதற்காக ஒரு ஹைஸ்கூல் ஏற்பட்டிருக்கிறது. இதை சரிவர நடத்த 25,000 ரூபாய் சாச்வத பண்டு வேண்டியிருக்கிறதாம். இதை அந்த ஸ்கூல் கமிட்டியார் வசூல் செய்ய முயற்சி செய்து வருகிறார்கள். கிட்டத்தட்ட பாதி வசூலாகிவிட்டதாகவும் தெரிகிறது.

## BOOKS RECEIVED.
## புஸ்தக வரவு.

COMPENDIUM OF ENGLISH MEDICAL SCIENCE.

**இங்கிலீஷ் வைத்திய சங்கிரகம்.**—ஜகன்னாதம் அண்டு ஸன்ஸ், பாளையப்பன் தெருவு, சென்னப்பட்டணம். ரூபாய் 3-0-0.

**திருக்குறள் வசனம்.**—பு. து. ரத்தினம் பிள்ளையால் எழுதப்பட்டது. சென்னப்பட்டணம் ஜி. எ. நடேசன் அண்டு கம்பெனியில் கிடைக்கும். ரூபாய் 1-0-0.

**மனம் போல் வாழ்வு.**—ஸ்வாமி வள்ளிநாயகம், 63, கிருஷ்ணப்பநாயக்கன் குளத்துத்தெருவு, சென்னப்பட்டணம்.



# Paddy Cultivation.
# நெல் சாகுபடி.

நெல் இந்த தேசத்து பயிர்களுக்குள் முக்கியமானது. நெல் பயிருக்கு இந்திய வியவஸாயிகள் தொழு, எரு, சாம்பல், தழை முதலியவைகளைப் போட்டு பயிரிடுகிறார்கள். ஆடுமாடுகளுக்கு புஷ்டியான ஆகாரம் கொடுத்து, அவைகளின் எருவை சரியானபடி சேகரிக்கும் பொழுதே, தொழு எருவில் நைட்ரோஜன், பாஸ்பாரிக் ஆஸிட், பொடாஷ் குறைவாய்த்தானிருக்கிறது. நைட்ரோஜனைக் காட்டிலும் பாஸ்பாரிக் ஆஸிட் பொடாஷ் ரொம்ப குறைவு. இந்தியாவிலோ ஆடு மாடுகளுக்கு நல்ல ஆகாரம் கொடுக்கிறதுமில்லை; அவைகளின் எருவை சரியானபடி சேகரிக்கிறதுமில்லை. தழையில் நைட்ரோஜனும், சாம்பலில் பொடாஷும் முக்கிய சத்துக்கள்; ஆனாலும் ரொம்ப குறைவு. இந்தநாட்டு உரங்களை வருஷாவருஷம் ஏராளமாய் போட்டு சாகுபடி செய்தபோதிலும், தழை சத்தாகிய நைட்ரோஜனும் தாள் சத்தாகிய பொடாஷும் அளவுக்கு மிஞ்சி அதிகமாயிருப்பதால் பயிர் நன்றாய் வளர்ந்து, தான்ய சத்தாகிய பாஸ்பாரிக் ஆஸிட்குறைவினால் போதுமான அளவு தான்யம் உண்டாகாமல் போகிறது. பாஸ்பாரிக் ஆஸிட் அதிகமாயுள்ள நாட்டு உரம் ஒன்றுமில்லை. தான்யப்பயிர்களுக்கு பாஸ்பாரிக் ஆஸிட் அத்தியாவசியம். இதற்கு நிரூபணமாக, கடலூர் ஜில்லாவில் வெகுநாளாய் தொழு எரு சாம்பல் முதலிய நாட்டு உரங்கள் போட்டு பயிர் செய்த நிலங்களில் எங்கள் ஸூபர் பாஸ்பேட் மாத்திரம் ஏகருக்கு இரண்டு அந்தர் வீதம் ஏராளமான தான்யத்தை கொடுத்திருக்கிறது. ஆனால் இவ்வாறு ஒரு சத்தை மாத்திரம் போட்டு பயிரிடுவது சாஸ்திரோக்த மல்ல. பூரா உரங்களை உபயோகிப்பதே நலம். எங்கள் கிடங்கில் நெல்லுக்கு பூரா உரங்கள் இரண்டு விதம். முதல் தரம் உரம் அதிக சத்துள்ளது. சத்தில்லாத நிலங்களுக்கு ரொம்ப சிலாக்கியம். நெடுநாளாய் நாட்டு உரம் போட்டு சாகுபடி செய்து வந்த நல்ல நிலங்களுக்கு இரண்டாம் தரம் உரம் போதுமானது. இவ்வுரங்களில் சேர்க்கிற சரக்குகள் ஒவ்வொன்றையும் எங்கள் ரஸாயநசோதனை சாலை (Chemical Laboratory)யில் பரிசோதித்து, அவைகளிலுள்ள நைட்ரோஜன், பாஸ்பாரிக் ஆஸிட், பொடாஷ் இவைகளை கணக்கிட்டு, நெற்பயிரின் விளைகாலத்திற்குள் பயிருணவாகக் கூடிய நிலமையில் சேர்த்திருக்கிறோம். உரங்களில் சத்துக்கள் தண்ணீரில் கரைந்து பயிர்களின் நுட்பமான வேர்களால் உணவாக கிரகிக்கப்படுகிற படியால், எங்கள் உரங்களிலுள்ள சத்துக்களின் சிலபாகம் உடனே தண்ணீரில் கரைந்து உணவாகக் கூடியதாகவும் மற்ற பாகம் நாளடைவில் கரையக் கூடியதாகவும் சேர்க்கப் பட்டிருக்கின்றன. இவ்வாறு பயிருக்குத்தக்கபடி தயாரித்திருக்கிற உரங்கள் தவிர நிலத்தின் மாதிரிமண் அனுப்புகிறவர்களுக்கு, அம்மண்ணை எங்கள் ரஸாயந சோதனை சாலையில் பரிசோதித்து, நிலத்துக்குத் தக்கபடியும் உரம் தயாரித்துக் கொடுக்கிறோம். இவ்வுரங்களை உபயோகிப்பதில், மண்ணுடன் கலக்கும்படி போட்டு உழுத பின் பயிரிடுவது நலம். உரம் போட்ட நிலங்களிலிருந்து தண்ணீர் வெளிபடாமலிருக்க வேண்டும். வளருகிற பயிருக்கு உரம் போடுவதில் பயிரின் விளை காலத்திற்கு மூன்றி லொன்றுக் கதிகரிக்காமலிருந்தால் நலமாயிருக்கும். அதாவது மூன்று மாதத்துப் பயிருக்கு ஒரு மாதத்திற்குள்ளும் ஆறு மாதத்துப் பயிருக்கு இரண்டு மாதத்திற்குள்ளும் உபயோகிப்பது நலம். களைகளும் சத்துக்களை கிரகிக்குமாகையால் உரம் போட்ட நிலங்களில் களைகளில்லாமலிருக்க வேண்டும்.

இன்னும் மற்ற சமாசாரங்களுக்கு மதராஸ் பாரிகம்பெனியாருக்கு எழுதி தெரிந்து கொள்ளலாம்.

**THE PRESIDENCY MANURE WORKS, LIMITED, RANIPET.**

**Managing Agents—PARRY & CO., MADRAS.**

**ராஜதானி ரஸாயந உரக்கிடங்கு,**
**ராணிப்பேட்டை.**

மானேஜிங் ஏஜண்டு:—
**பாரி அண்டு கம்பெனி,**
மதராஸ்.

## SCIENTIFIC NOTES.
## சாஸ்திரீயக் குறிப்புகள்.

BACTERIA.

**பாக்டீரியா.**—இங்கிலீஷ் படித்த வைத்தியரை விஷபேதி என்னத்தினுல் உண்டாகிறது என்று கேட்டால் ஒருவித பாக்டீரியா அதாவது பூச்சியினுல் உண்டாகிறதென்பார். பால், தயிர் ஏன் நாள்பட்டால் புளித்துப்போகிறதென்று ஸாதாரண ஜனங்களைக்கேட்டால் அதற்கு என்ன காரணம் சொல்லுகிறதென்று பதில் சொல்லுவார்கள். இதே கேள்வியை ஒரு ரஸாயனசாஸ்திரிக்குப்போட்டால் அவர் பால், தயிர்களின் புளிப்பு ஒருவித பாக்டீரியாவால் உண்டாகிறதென்று சொல்வார். இப்படிப்பட்ட குணங்களையுடைய பாக்டீரியா என்பவைகள் என்ன? இவைகள் ஸ்தாவர வர்க்கத்தைச் சேர்ந்த வெகுநுட்பமான அணுப்போன்றவைகள். ஸ்தாவரவர்க்கத்தைச் சேர்ந்தவைகளாகுலும் பயிர்களுக்குள்ள பசுமை இல்லாதவைகள். உலகத்தில் இந்த பாக்டீரியா இல்லாத இடமில்லை. ஆகாயத்திலோ, தண்ணீரிலோ எங்கே பார்த்தாலும் எதோடாவது ஒட்டிக்கொண்டிருக்கும். இவைகளில் சிலவைகள் வியாதிகளை உண்டுபண்ணும் துர்க்குணமுள்ளவைகள். மற்றவைகள் ஒருவித தீங்கையும் செய்யமாட்டா. இவைகள் உயிருள்ள ஜந்துக்கள். பயிர்களிலிருந்தும், அழுகின இந்திரிய வஸ்துக்களிலிருந்தும் அவைகள் வேண்டிய ஆகாரங்களை கிரகிக்கின்றன. தகுந்த ஸௌகரியங்கள் மட்டும் வாய்த்து விட்டால், ஒரு பூச்சி ஒரு நாளில் சுமார் 170 லக்ஷம் பூச்சிகளாகி விடுமாம். இந்தப் பூச்சிகளுக்கு சூரிய வெளிச்சம், உஷ்ணம், இன்னும் சில வஸ்துக்கள், இவைகளெல்லாம் சத்துரு. இவைகள் பட்டால் பூச்சிகள் இறந்து போய்விடும். ஸாதாரணமாய் உலகத்தில் உள்ள வியாதிகளுக்கெல்லாம் காரணம் மேலே சொல்லிய பாக்டீரியாதான். ஆகையால் அவைகளைக்கொல்ல என்னென்ன வழிகள் உண்டோ அவைகளை எல்லாம் தேடவேணும். இதற்காகத்தான் படுக்கையை அடிக்கடி வெயிலில் போடவேணும் என்பது, ஜலத்தைக்காய்ச்சி ஆரவைத்து சாப்பிடவேணுமென்பது, கக்கூஸ் முதலான துர்நாற்றமுள்ள இடங்களில் 'பினைல்' போன்ற திராவகங்களை ஊற்றுவது. இப்படிக்கெல்லாம் செய்தால் பாக்டீரியாவால் உண்டாகும் வியாதிகளைத் தடுத்து சுகமாய் வாழலாம்.

PLANTS ARE LIVING CREATURES.

**செடிகள் உயிர்ஜந்துக்கள்.**—ஒரு தூங்கும் மனிதனையோ, மாட்டையோ பார்த்தால் மூச்சு இருப்பதைக்கொண்டு மனிதனுக்கும் மாட்டுக்கும் உயிர் இருக்கிறதென்று அறிந்து கொள்ளுகிறோம். அதாவது, அசையும் சக்தி இருப்பதைக்கொண்டு உயிரிருக்கிறது என்று ஊகிக்கிறோம். அதனுல் அசையும்சக்தி (அதாவது ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகரும்சக்தி) இல்லாததற்கெல்லாம் உயிர் இல்லை என்று சொல்லக்கூடுமோ? மரமும் செடியும் வைத்த இடத்திலேயே இருக்கின்றன. ஆகையால், நாம் சாதாரணமாய் அவைகளுக்கு உயிர் இருப்பதாக நடவடிக்கையில் பாவிக்கிறதில்லை. ஆனுல் சில ஸமயங்களில் வளரும் மரங்களை வெட்டும்பொழுது உயிர் மரத்தை வெட்டினதாய் பேசுகிறோம். குறிப்பிட்டு மரத்துக்கு உயிர் இருக்கிறதா இல்லையா என்று கேட்டால், மனுஷன், மிருகங்களைப்போல் உயிர் இல்லாவிட்டாலும் மரங்களும் ஜீவஜந்துக்கள்தான் என்று ஞானமுள்ளவர்கள் சொல்லுவார்கள். வைத்த இடத்திலேயே இருக்கும் ஒரு விஷயத்தைத்தவிர மற்ற எல்லா விஷயங்களிலும் மரம், செடிவகைகளெல்லாம் மாடு மனிதர்களைப் போலவேதான். மிருகங்கள், மனிதர்கள் பிறந்து, வளர்ந்து, இறப்பதுபோல, மரம் செடிகளும் பிறந்து, வளர்ந்து, இறப்பதுண்டு. மிருகங்கள், மனிதர்களுக்கு ஆகாரம் வேண்டுவது போல மரம், செடிகளுக்கும் ஆகாரம் வேண்டும். மிருகங்கள், மனிதர்கள் பிரஜை உத்பத்தி செய்வது போல மரம் செடிகளும் பிரஜை உத்பத்தி செய்கின்றன. மனிதனுக்கு நோய்நொடிகள்வருவது போல பயிர்களுக்கும் நோய்நொடிகள் உண்டு. மனிதனுக்கு சீக்கு வந்தால் வைத்தியம் செய்து வியாதியைப் போக்கடிப்பது போல பயிர்களுக்கும் வியாதிகள் வந்தால் சிகிச்சை செய்து வியாதிகளைப் போக்கடிக்கலாம். ஆகையால் பயிரிடுவது, குழந்தை வளர்ப்பது போலவேதான். பயிர் செய்து லாபம் சம்பாதிக்க வேணுமானுல் பயிர்களைப் பற்றிய ஸகல விஷயங்களும் விவஸாயிகளுக்குத் தெரிந்திருக்கவேணும். இந்த விஷயங்களெல்லாம் 'பாடெனி' அதாவது ஸ்தாவர சாஸ்திரத்தில் சொல்லப்படும். ஆகவே விவஸாயிகள் இந்த சாஸ்திர விஷயங்களை அறிந்து கொள்வது நலம்.




V. KALYANARAM IYER & Co., *Booksellers, Esplanade, MADRAS.*

நன்முய்ப் பார்வையிட்டு நல்லகாகிதத்தில் தெளிவாய் அச்சிட்ட சிறந்த பதிப்பு.

**மூவர் தேவாரம்-பண்முறை—1044 பக்கம், ரூபாய் 3—0—0.**

இப்பதிப்பில் (1) சம்பந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவர்களின் சரித்திரக் குறிப்பும், (2) தேவார வரலாறும், (3) தேவாரப்பண் அட்டவணையும், (4) தேவாரப் பாடல்பெற்ற ஸ்தல அகராதியும், (5) தேவார ஸ்தலங்களுள்ள நாடுகளின் விபரமும், (6) அட்டவீரட்டானங்களைக்குறிப்பிக்கும் செய்யுளும், (7) தேவாரப் பொதுப்பாடல்களின் பக்க அட்டவணையும், (8) தேவார வைப்பு ஸ்தல அட்டவணையும், (9) காரைக்காலம்மையார் அருளிச் செய்த மூத்த திருப்பதிகமும் நூதனமாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன.

**நாலாயிர திவ்யப்பிரபந்தம்—640 பக்கம் ரூபாய் 3—0—0.**

இப்பதிப்பு (1) ஆழ்வார்களின் காலவைபவக் குறிப்பும், (2) ஆழ்வார்கள் அருளிச்செய்த பிரபந்தங்களின் அட்டவணையும், (3) ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திவ்விய தேசங்களின் அட்டவணையும், (4) அந்த தேசங்களின் வைபவக்குறிப்புகளும் சேர்த்து பல பிரதிகளுடன் ஒத்திட்டுப்பார்த்து, நன்முய் அச்சிடப்பெற்றுளது.

**வேதாந்த விஷயமான புஸ்தகங்கள்.**

| | ரூ. அ. | | ரூ. அ. |
|---|---|---|---|
| வள்ளாலார் சாஸ்திரம் | 1 8 | ஜன்மாந்திரம் (அல்லது இராமதாசர் உபதேசம்) | 0 2 |
| வாசுதேவ மனனம் | 1 0 | நானு சீவவாதக்கட்டளை | 0 1 |
| வேதாந்த போதினி | 0 8 | மகாராஜா துறவு | 0 6 |
| சிவபோகசாரம் & சிவஞானவிளக்கம் | 0 2 | தாயுமானவர் பாடல் (காலிகோ பயிண்டிங்) | 0 12 |
| சுகர் கைவல்லியம் | 0 2 | பட்டணத்தார் பாடல் | 0 2 |
| வைராக்கிய சீதகம் | 0 2 | | |

**புதிய நாவல்களும் நாடகங்களும்.**

| | | | |
|---|---|---|---|
| போஜ சரித்திரம் | 1 8 | மனோகரன் | 0 12 |
| சுந்தரி மனோகரன் | 0 12 | கள்வர் தலைவன் | 0 8 |
| காமாக்ஷி | 0 8 | சாரங்கதரன் | 0 8 |
| சந்திரசேகரன் | 0 8 | யயாதி | 0 8 |
| ஆநந்தமடம் | 0 8 | வசந்திகா | 0 8 |
| லீலாவதி சுலோசனு | 0 12 | கிரிஸில்டா, அல்லது பொறுமையுள்ள மனைவி | 0 2 |
| இரண்டு நண்பர்கள் | 0 12 | காலவரிஷி | 0 8 |
| சத்ருஜித் | 0 12 | வேதாள உலகம் | 0 8 |

**வேறு புஸ்தகங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| ஸ்திரி புருஷ சாமுத்ரிகாலக்ஷணம் | 1 0 | **மனுதர்ம சாஸ்திரம்** 2647 கிரந்த சுலோகங்களும் அவைகளின் தமிழ் மொழிபெயர்ப்பும்— 560 பக்கம் | 2 4 |
| குறள் (மூலம்) | 0 4 | | |
| பஞ்சதந்திரம் | 0 4 | | |

**வியவசாய போதினி.**—நிலம், எரு, விதை, பயிரிடும்வகை முதலிய சகல விவசாய விஷயங்களையும் பற்றியது. மிராசுதாரர்களுக்கும் மற்றவர்களுக்கும் இன்றியமையாதது. தஞ்சாவூர் ஜில்லா, நீடாமங்கலம் அ. சேதுராமய்யர் இயற்றியது. 400 பக்கம், 80 படங்கள். ரூ. 1 4 0

**மானிட மர்மசாஸ்திரம்.**—அல்லது "சிசு உற்பத்தி சிந்தாமணி." இது யாவரும் படித்து அறியவேண்டிய அடியிற்கண்ட அரிய பெரிய விஷயங்களடங்கியது. 500 பக்கம், 190 சித்திர படங்களடங்கியது ரூ. 5 0 0

**அடங்கிய விஷயங்கள்.**—மானிட ஜீவியத்தில் பலபருவங்கள்—இல்லற இன்பரகசியம்—ஜனனேந்திரியங்களின் அமைப்பும் அற்புதங்களும்—மாதாவின் மாக்ஷிமை—சிசு உற்பத்தி—கர்ப்பகால சுகாதாரவிதிகள்—கர்ப்பகால நோய்களும் பரிகாரங்களும்—மருத்துவ சாஸ்திரம்—சிசுபரிபாலனம்—மலட்டிற்கு நிவாரணம்—ஆண்மையினழிவும் அதன் மீட்சியும்—சமயோசித சஞ்சீவி.

☞ ஆர்டர் அனுப்பும்போது இப்பத்திரிகையின் பெயரைக் குறிப்பிடுக.

**வி. கல்யாணராமய்யர் அண்டு கோ.,**

புக்ஸெல்லர்ஸ், எஸ்பௌநேட், மதராஸ்.

# MEDICAL NOTES.

## வைத்தியக் குறிப்புகள்.

---

PIPER BETLE.

**வெற்றிலே.**--வெற்றிலேயை ஜனங்கள் தங்களுடைய அந்தஸ்துக்கும் மௌஸுக்கும் தக்கபடி பாக்கு, சுண்ணும்பு, காசுக்கட்டி, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கிரும்பு, வால்மிளகு, ஏலக்காய் முதலான வாசனைத் திரவியங்களோடாவது, அல்லது பாக்கு, சுண்ணும்பு டனுவது போட்டுக்கொள்ளுகிருர்கள். இதனுல் தேகத்தில் ஒருவகை சுறுசுறுப்பும், மனதுக்கு ஒருவித சந்தோஷமும் உண்டாகிறது. வெற்றிலே போட்டுக்கொள்ளப் பழக்கப்பட்டவர்களுக்கு அது இல்லாவிட்டால் ஒருவித சோர்வு உண்டாகும். வெற்றிலே போட்டுக்கொள்வதனுல் வாய் நாற்றம் போகும். சாரீரம் குணப்படும். குழந்தைகளுக்கு சரியாக மலப்பிரவிர்த்தியாகாவிட்டால் வெற்றிலேக்காம்பில் எண்ணெயைத் தடவி குழந்தைகளின் அபானதுவாரத்தில் சொருகுவதுண்டு. இலேகளைத் தலேவலிக்கு வாட்டி கன்னப்பொறியில் போட்டுக்கொள்ளுவதுண்டு. சில வீக்கங்களுக்கும் பால்சுறப்பை நீக்கவும் இந்த இலேயை வாட்டிப் போடுவதுண்டு. வெற்றிலேச் சாற்றினுல் ஜீரணமுண்டாகும். வெற்றிலேயை எண்ணெயைத் தடவி வாட்டி மார்பில் போட்டால் ஜலதோஷம், தொண்டைக்கட்டு இவைகள் நிவர்த்தியாகும். வெற்றிலேச்சாற்றை சில சமயங்களில் கண்களில் போட்டுக்கொள்ளுவதுமுண்டு. மேலே சொல்லிய குணங்களெல்லாம் பச்சை வெற்றிலேக்கே ஒழிய வாடின வெற்றிலேக்கில்லே. வெற்றிலேக் கொடியின் வேரையும் மிளகையும் சேர்த்து அரைத்து ஸ்திரீகள் சாப்பிடுவார்களாளுல் கர்ப்பம் தரியாது என்று சொல்லப்படுகிறது.

BERI-BERI.

**பேரி பேரி என்னும் வியாதி.**—போன புரட்டாசி மாசத்துச் சஞ்சிகையில் பலசரக்கு வியாபாரம் என்ற தலேப்பெயரின் கீழ் ரங்கூன் அரிசி சாப்பிடுவதால் பெரிபெரி என்னும் வியாதி உண்டாகிறது என்று அனுமானிக்கக்கூடிய சில விஷயங்களேச் சொன்னேம். இந்த வியாதி கல்கத்தாவில் ரொம்ப தொந்தரவு செய்து வருகிறது. இது விஷயமாய் ஆராய்ந்து அறிந்துசொல்லும்படி கல்கத்தாவிலுள்ள ஒரு வைத்திய சங்கத்தார் ஒரு கமிட்டியை நியமித்தார்கள். அந்தக் கமிட்டியார் தங்கள் ரிபோர்ட்டில் இந்த வியாதி சாப்பாட்டுப் பதார்த்தங்களால் உண்டாகிறதென்றும், அங்கே உபயோகிக்கபபடும் "கலப்பட" மான கடுகெண்ணெய் தான் இந்த வியாதிக்குக் காரணமென்று ஊகிக்கவேண்டியதாயிருக்கிறதென்றும், ஆகையால் இந்த வியாதிவராமல் தடுக்க ஆகாரப்பொருள்களே, அவைகளில் முக்கியமாய் கடுகெண்ணெயை, சுத்தமாய்ப்பார்த்து எடுத்து உபயோகிக்க வேண்டுமென்றும் எழுதியிருக்கிருர்கள். கல்கத்தாவில் பர்மா அரிசி விசேஷமாக செலவாகிறது. அந்த அரிசியினுல் பெரிபெரி வியாதி உண்டாகக் கூடாதா என்பதை மேலே சொல்லிய கமிட்டியார் ஆலோசித்ததாகத் தெரியவில்லே. இதுவும் அவர்கள் கவனிக்கவேண்டிய விஷயம்.

USES OF HOT WATER.

**வெந்நீரின் உபயோகம்.**—இரத்தம் வருதல், தொண்டை வலி, ஜலதோஷம், இவைகளேச் சுகப்படுத்துவதற்கு வெந்நீர் மிகவும் உபயோகமானது. பாதத்திலும், பிடரியிலும் ஏககாலத்திலே வெந்நீரை ஊற்றிக்கொண்டு வந்தால் தலேநோய் மிகச்சடுதியில் நீங்கும். ஒரு சிறு கம்பளி வஸ்திரத்தை ஐந்தாறுமடிப்பாக மடித்து வெந்நீரில் நனேத்துப் பிழிந்து விட்டுக் கழுத்தில் சுற்றி அதன் மேல் ஒரு உலர்ந்த வஸ்திரத்தையும் சுற்றிவைத்திருந்தால் கபம், இருமல் இவைகள் வெகுஎளிதில் சொஸ்தமாகும். காலேயில் எழுந்தவுடன் ஒரு லோட்டா வெந்நீர் சாப்பிட்டால் சரியான ஜீரணத்தைக் கொடுப்பதுடன் தாராளமான மலவிருத்தியையும் உண்டாக்கும். நன்ருய்க்கொதிக்கும் வெந்நீரை காயம் முதலானது பட்டு இரத்தம் வரும் இடத்தில் மெதுவாக ஊற்றிக்கொண்டே வந்தால் இரத்தம் வராமல் நின்றுவிடும்.

ONIONS.

**வெங்காயம்.**—வெங்காயத்துக்கு மலத்தை இளக்கும் சக்தி உண்டு. அதை வேகவைக்கும்போது அதன் சாரமெல்லாம் ஜலத்தில் இறங்கிவிடுகிறது. ஆகையினுல் வெங்காயத்தின் குணம் போகாமலிருக்க வேண்டுமானுல் அதை வேகவைத்த ஜலத்தையும் உபயோகப்படுத்தவேண்டும்.




LONDON WATCH COMPANY,

Direct Importers, Madras.

"Medal"

Rascope

Rs. 2-8-0.



நெ. I. நயமான கெடியாரங்களில் இதைப்போல் மிக்க உருதியான கெடியாரம் இதர ஷாப்புகளில் கிடைக்கமாட்டாது. மிக்க அழகுடையதாயும், விலே சரசமாயும் உருதியாயும் சென்னே கவர்ன்மெண்ட் குண்டுக்குச் சரியான காலத்தைக் காட்டக்கூடிய ரயில்வே ரெகுலேடர். இக்கெடியாரமானது எளிதில் மணியடிக்கக்கூடியதும், கனத்த கண்ணுடியால் மூடி போட்டதும், மேல்சாவியுள்ளதும் நடுத்தர அளவுள்ளதும், அசல் ஜெர்மன் வெள்ளியினுல் செய்ததும் நெடுநேரம் வரையில் சாவி வாங்காமலே அதாவது ஒரு விசை சாவி கொடுத்தால் 36-மணி நேரம் வரையில் போகும்படியானதும், காலத்தைக்காட்டும் இலக்கமுள்ள தகடு பீங்கான் தாம்பிர பிளேட்டில் செய்ததும், பார்ப்பவர் அதிசயிக்கக்கூடியதும், 5-வருஷத்திய உத்திரவாத ஸ்டாம்பு காரண்டி பத்திரத்துடன் இக்கெடியாரத்தின் விலே ரூபா 5.

இதுவே மாதிரி இன்னும் நாணயமான வேலே செய்ததும் மேல் கேஸ் வெள்ளியினுல் செய்யப்பட்டது 7-வருஷத்திய உத்திரவாத ஸ்டாம்பு பத்திரத்துடன் கிரயம் ரூபா 9-0-0.

லண்டன் வாட்சு கம்பெனி, டைரெக்ட் இம்போர்டர்ஸ், மதராஸ்.

---

EDWARD & Co.

GERMAN SILVER AND ELECTROPLATED JEWELLERS.

NO. 47, P. L. MADRAS, E.

எட்வர்ட் அண்டு கம்பெனி.

ஜர்மன் வெள்ளி எலக்டிரிக் தங்கநகை வியாபாரிகள்.

நெ. 47, பி. எல். சென்னே.

வெகுமதிகள் அதிகமென்று மோசம்போகாதீர்கள். விலே, மதிப்பு, சுத்தம் இவைகளேப் பாருங்கள்.

எம்பெரர் லிவர் கெடியாரம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் இவ்விடங்களில் ஏராளமாய் விற்கப்படுகின்றது.



முதல் விலே ரூபா 10. இப்பொழுது கீழ்சொன்ன வெகுமதிகளோடு
5-8-0 ஆக குறைத்து விற்கப்படுகின்றது. நாங்கள் கெடியாரம் செய்பவர்க
ளிடமிருந்து நேராய் தருவிப்பதால் ஆச்சரியப்படும்படியான சொற்ப விலே
க்கு விற்கின்ருேம்.
கெடியாரத்தின் விவரம்:—நிக்கல் வெள்ளி, மேல்சாவியும், மேல்பார்
வையுமுள்ளது .பலத்த வேலேப்பாடும் கையால் முள் திருப்பக்கூடியது.
சரியான காலத்தைக் காட்டுவதோடு, வெகுமதிக்கு லாயக்கானது. ஹேர்ஸ்
ஸ்பிரிங் பலமானது, பாலன் கணக்கோடு செய்யப்பட்டது. மேல் தகடு எனு
மல் வேலே செய்யப்பட்டது. முரட்டுத்தன்மையாய் உபயோகித்தாலும்
கெடாது. உண்மையில் பலமானதும் வெகுநாளேக்கிருக்கக்கூடியதுமாகிய
கெடியாரம்.
வெகுமதி விவரம்:—அழகிய இன்டிபெண்டென்ட் பேனு I. ரோல்ட்
கோல்ட் ஷர்ட் பொத்தான் ஸெட் I. ரோல்ட் கோல்ட் கைபொத்தான்
ஸெட் I. கெடியாரக்கண்ணுடி I. மெயின்ஸ்பிரிங் (வில்) I. வெல்வெட்
பெட்டி I. வாசனே அடங்கிய அழகான சீசா I. போஸ்ட் கார்ட்கள்.
ஒரே காலத்தில் 3. கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு ஷெ இனுமல்லாமல் கால்பெல் என்னும்
லணி அமைத்திருக்கும் அலாரம் டைம்பீஸ் ஒன்று உசிதமாய் கொடுக்கப்படும்.

## PAGE FOR GIRLS.
## பெண்களுக்கான பக்கம்.

BRIDEGROOM PRICE.

**வரதக்ஷிணை.**—“வித்தியா விஹாரினி” என்னும் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகையில் ஸ்ரீமதி மீனாக்ஷியம்மாள் வரதக்ஷிணையைப்பற்றி ஒரு வியாஸம் எழுதியிருக்கிறாள். பிராம்மண ஜாதியில் வடமன், பிரஹசரணம், அஷ்டசஹஸ்ரம் என்று பல வகுப்புகள் இருக்கின்றன. இவைகளில் ஒரு வகுப்பார் மற்ற வகுப்பாரோடு “கொண்டு கொடுத்து” சம்பந்தம் செய்கிறதேயில்லை. இந்த மாதிரி பிராம்மண ஜாதியில் பல பிரிவுகள் உண்டாகி, ஒன்றோடொன்று விவாக சம்பந்தம் வைத்துக்கொள்ளாமலிருப்பதே வரதக்ஷிணைக்கு முக்கிய காரணமாகும். மாப்பிள்ளைக்கு வரதக்ஷிணை கொடுத்து வருஷாவருஷம் அநேக குடும்பத்தார்கள் ஏழையாகிறார்கள். இப்படி ஜாதிப்பிரிவுகளினால் உண்டாகும் கெடுதி வரதக்ஷிணை மாத்திரமல்ல. பால்ய விவாகத்துக்கும், பாலியத்தில் விதவைகள் ஆவதற்கும் இந்த ஜாதிப்பிரிவினையே காரணம். ஏனென்றால் சிறுவயதிலேயே கலியாணம் நடந்தால் வரதக்ஷிணை கேட்கமாட்டார்கள். இந்தமாதிரி வரதக்ஷிணைக்காகப் பயந்து சிறுவயதிலேயே கலியாணம் செய்வதினால்தான் பால்ய விதவைகள் உண்டாவதற்கு ஆஸ்பதம் ஆகிறது. சாஸ்திர ரீதியாய் ஆராய்ந்து பார்த்தால் பிராம்மணர்களுக்குள் ஜாதி பேதமே கிடையாது. இந்த ஜாதிபேதமில்லாமலிருந்தால் இப்பொழுதுள்ள மாதிரி மாப்பிள்ளைக் கிராக்கி ஏற்படாது. ஆகவே வரதக்ஷிணை முதலிய கெடுதிகளுக்கும் ஹேது இல்லை. ஆகையினாலே முதல் முதல் இந்த பிராம்மண ஜாதியின் பல வகுப்பாரும் “கொண்டு கொடுத்து” சம்பந்தம் செய்யவேண்டும். ஆனால் முதலில் ஒரே பாஷையைப் பேசிக்கொண்டிருக்கும் வகுப்பார்கள் ஒருவருக்கொருவர் விவாக சம்பந்தம் செய்துகொள்ள வேண்டும். அநேகமாய் தமிழ் பேசும் பிராம்மணர்களெல்லாம் ஆசாரம், நடை, உடை, பாவனை இவைகளில் ஒத்தவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் இவர்கள் விவாக சம்பந்தம் செய்வதில் யாதொரு சங்கடமும் இல்லை. மேலே சொன்ன மாதிரி பிராம்மண ஜாதிக்குள் இருக்கும் பல பிரிவுகளெல்லாம் போய் விட்டால், வரதக்ஷிணை முதலிய கெடுதிகள் எல்லாம் நீங்குமென்பதில் கொஞ்சமேனும் சந்தேகமில்லை.

EVERY CHILD ITS MOTHER'S PET.

**காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு.**—ஒரு கிராமத்தில் தாய்மார்கள் கூடி ஒரு கூட்டம் வைத்திருந்தார்கள். அதில் பிள்ளைகளை வளர்க்கும் விதங்களைப்பற்றியும், வீட்டுக்காரியங்களை நடத்தும் வகைகளைப் பற்றியும் இன்னும் அநேக விஷயங்களைப்பற்றியும் பேசிக்கொண்டு வருவார்கள். ஒரு நாள் எவளுடைய பிள்ளை அதிக அழகுடையது என்று கேள்வி பிறந்தது. அப்போது ஒவ்வொருத்தியும் தன்னுடைய குழந்தையே அதிக அழகு என்று ஆட்சேபனை செய்தாள். ஆகையால் சீட்டுப் போட்டுத் தெரிந்து கொள்ளுகிறதென்று தீர்மானிக்கப்பட்டது. அன்றைதினம் கூட்டம் முடிந்தபின் ஒருத்தி வீட்டுக்குத் திரும்பிவந்தபோது கூட்டத்தில் நடந்தவைகளைத் தன் புருஷனிடத்தில் சொன்னாள். அப்போது புருஷன் “அப்படியானால் எவள் கெலித்தாள்?” என்று கேட்டான். அதற்குப் பெண்சாதி “ஒருத்தியும் கெலிக்கவில்லை; ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு சீட்டு விழுந்தது” என்றாள். இதனால் அந்தந்தத் தாய் தன் குழந்தையையே போட்டுக் கொண்டாளென்று தெரியவந்தது.

A MEMORIAL SCHOOL.

**ஒரு ஞாபகச் சின்னமான பள்ளிக்கூடம்.**—திருநெல்வேலி முனிசிபாலிடி சேர்மன் ஆகிய கைலாசம் பிள்ளையவர்கள் தன்னுடைய காலஞ்சென்ற பெண்ஜாதியின் ஞாபகச்சின்னமாக ஒரு பெண் பள்ளிக் கூடம் ஏற்படுத்தியிருக்கிறார். இந்தப் பள்ளிக்கூடத்திற்கு நிலமும் ரொக்கப்பணமுமாக 8,000 ரூபாய் மூலதனம் வைத்திருக்கிறார். இந்தப் பள்ளிக்கூடமும் மூலதனமும் 14 பேர்கள் அடங்கிய ஒரு கமிட்டியால் பார்த்துவரப்படும்.

GOOD BUTTER.

**நல்ல வெண்ணெய்.**—சில வெண்ணெய்கள் கொஞ்ச நாளைக்கு வைத்திருந்தால் கெட்டுப் போய் விடுகின்றன. இதற்குக் காரணம் அந்த வெண்ணெய்களில் தயிர் துளிகள் தங்கியிருப்பதே. ஆகையால் வெண்ணெய் கெடாமலிருக்க வேண்டுமானால் கடைந்தெடுத்ததும் அதை பல தடவை தண்ணீரில் போட்டு அலசி வைக்கவேண்டும்.



DAS & Co.'s *PATENT* LOCKS, SAFES, BOXES, &c.,
*are approved and largely used by H. M's. Indian Government.*

கல்கத்தாவில் காஸ்ஸிப்பூர் ரோடில் 15 நெ. வீடு, தாஸ் அண்டு கம்பெனியாரால் செய்யப்பட்ட பூட்டுகளும், இரும்பு பெட்டிகளும் கவரன்மெண்டாரால் உபயோகிக்கப்படுகின்றன.

During the Viceroyalty of
**Lord Curzon**
Das and Co.'s Locks were supplied for Government Houses at Simla & Calcutta, and thus reported from Simla:—
“* * Were found to be excellently finished and in no way inferior in quality to those of European Manufacture. They are giving every satisfaction.”

Awards from the late
**Chicago Exhibition**
1893-94.
THACKER'S MEDAL
with following Certificate:—
“The Locks are of good design and large heavy pattern having 12 Tumblers. They are made chiefly from good castings well fitted and finished by Machinery.”

Please Address:—
**DAS & CO.,**
Chitpur Lock and Safe Works,
THE “ABBA” M'f'y.
*15, Cossipur Road, CALCUTTA.*
TELEGRAMS:—
“Safeguard,” Calcutta.

**THE COMPLETE LETTER WRITER** 2nd Edition Revised and Enlarged.
**BY HARI CHARAN DAS.** Price Re. 1. *(Full Cloth, Gilt.)*
A Universal Guide to the Art of Letter Writing for all positions of Life.
*To be had of*—M. L. DAS & CO., *122, Baitakkana Road, Calcutta.*

**P. S. Sastri** **Artist and Photographer,**
**CARNATIC STUDIO, Mount Road, Madras.**

SPECIALITIES.
- SCHOOL GROUPS.
- FAMILY GROUPS.
- BROMIDE ENLARGEMENTS.

**பொட்டகிராப் படங்கள்.**

பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளையும் குடும்பங்களையும் பொட்டகிராப் படம் பிடிப்பதிலும் சிறியபடங்களை பெரிதாக்கிக்கொடுப்பதிலும் நிபுணர்.

**பி. எஸ். சாஸ்திரி,**
பொட்டகிராப் பிடிப்பவர், கர்நாடிக் ஸ்டுடியோ,
மவுண்ட் ரோட், மதராஸ்.

## PAGE FOR BOYS.
## சிறுவர்களுக்கான பக்கம்.

**ஒரு பிராமண வாலிபரின் தொழில் முயற்சி.**—தஞ்சையிலிருக்கும் ஐக்கோர்ட் வக்கீல் மிஸ்டர் என். கே. இராமசாமி அய்யரவர்களின் குமாரர் மிஸ்டர் என். ஆர். சுப்பிரமணிய அய்யரவர்கள் தஞ்சை கலியாண சுந்தரம் ஐஸ்கூலில் மாணுக்கராயிருக்கும் காலத்தில் கைகால்களுக்கு சிரமமில்லாமல் கைப்பிடியைத் திருப்புவதிஞலேயே துணி நெய்யக்கூடிய ஓர் நாடாத்தறியைக் கண்டுபிடித்து தஞ்சையில் கடைசியாய் நடந்த விவசாய கைத்தொழில் கண்காக்ஷியில் ஷெயந்திரத்தை வேலைசெய்து காண்பித்ததில் அதில் பயிற்சியடைந்த ஐரோப்பியர்கள் நல்ல தறி என்று சொல்ல, ஷெ கண்காக்ஷி கமிட்டியார்கள் ஷெ அய்யருக்கு மெடல் அதாவது, பதக்கம் கொடுத்தார்கள். பிறகு சென்னைக்குப் போய் யந்திர விஷய சம்பந்தமாய் மெக்கானிக்கல் இஞ்சினீர் பரீக்ஷைகள் பாஸ்செய்து இப்போது தஞ்சை கோட்டைக்குள் வடக்கு வீதியில் நகரி மால் பங்களாவில் ஆபீஸ் ஏற்படுத்தியிருக்கிறுர். அய்யரவர்கள் சென்னையில் ஷெ பரீக்ஷைக்கு வாசிக்குங்காலத்தில் தொங்கும் மண்ணெண்ணெய் விளக்குகள் காற்றில் அணையாதிருக்க யந்திரம் கண்டுபிடித்து அதற்காகவும், ஷெ நாடாத்தறிக்காகவும் இந்தியா கவர்ன்மெண்டாருக்கு பேட்டண்டுக்காக எழுதியிருக்கிறுர். இன்னும் ஒரே சாமானில் நாற்காலியாகவும், மேஜைப்பலகை உள்பட ஈஸிச்சேராகவும். கொசுவலை கட்டக்கூடிய கட்டிலாகவும் சுலபமாய்க் கையில்கொண்டுபோகக் கூடிய ஒருசேர் பெட்ஸ்டெட்டை கண்டுபிடித்து அதற்காகவும் பேட்டெண்டுக்காக இந்தியா கவர்ன்மெண்டுக்கு எழுதியிருக்கிறுர்கள். ஷெ மூன்றுசாமான்களுக்கும் பேட்டெண்ட் கிடைத்தவுடன் ஷெ சாமான்கள் செய்து விலைக்கு விற்கப்படும்.

இப்பொழுது யந்திர விஷயங்களைப் பற்றிய எல்லா வேலைகளையும் செய்யத் தயாராயிருப்பதால் வேண்டியவர்கள் ஷெ ஆபீஸில் நேரிலாவது கடித மூலமாவது தெரிவித்து அறிந்துகொள்ளலாம்.—

ஜனனுகூலன்.

THE COCOANUT-TREE.

**தென்னை மரம்.**—ஒரு தென்னங்கன்று வைத்த 5 வருஷம் முதல் 10 வருஷத்துக்குள் காய்க்க ஆரம்பிக்கும். இது இடத்தையும் மரத்தின் ஸெளரட்சணையையும் பொறுத்தது. காய்க்க ஆரம்பித்து விட்டால் தென்னை மரங்கள் 70 அல்லது 80 வருஷத்துக்குக்காய்க்கும்.

GROWTH OF PALMS.

**பனை மரங்களின் வார்ச்சி.**—தென்னை, பனை முதலிய மரங்கள் மாஸத்துக்கு ஒரு மட்டைவைக்கும். ஆகையால் ஒரு வருஷத்தில் 12 மட்டைகள் விடும். இந்த 12 மட்டைகள் வைத்தால் மரம் ஒரு அடி உயரம் வளர்ந்திருக்கும்.

THE COW TREE.

**பால் மரம்.**—தென் அமெரிக்காவில் "பால் மரம்" என்று பெயர் பூண்ட மரமொன்றிருப்பதாயும், அந்த மரத்தின் பட்டையின்மேல் ஒரு துவாரஞ் செய்தால் அதில் இருந்து பாலைப்போல் ஒரு திரவ பதார்த்தம் வெளிப்படுவதாகவும், அதின் குணஞ் சாதாரணப் பாலுக்கு இருப்பதைப்போல் இருப்பதாகவும், அதை வெளியில் திறந்து வைத்திருந்தால் பால்கட்டியாக மாறுகிறதென்றும், அது தேகத்திற்குயாதொரு கெடுதியுஞ் செய்கிறதில்லை யென்றுந் தெரியவருகிறது.

A WONDERFUL TREE.

**ஒரு விநோத மரம்.**—பசுமந்தான் ஆற்றுக்கு அக்கரையில் ஜான்கின் என்னுங் கிராமத்தில் ஒன்றரை மாச வயதுடைய வாழை யொன்று பூத்திருக்கிறதாகவும் பர்மியர்கள் போய் வியப்பாகப் பார்த்து வருவதாகவும் வதந்தி.

THE TONGUE.

**நாக்கு.**—நாக்கின் ஒவ்வொரு பாகங்களும் ஒவ்வொரு ருசியை எடுத்துக் காட்டும். நுனி புளிப்பை எடுத்துக்காட்டும் நடுநாக்கு தித்திப்பையும் கசப்பையும் எடுத்துக்காட்டும், மாம்ஸம், வெண்ணெய், எண்ணெய் இவைகளின் ருசியை அடி நாக்கு எடுத்துக் காட்டும்.

GLUE.

**வஜ்ரம்.**—இரண்டு பலகைகளை சேர்க்க வேண்டுமாஞல் அவைகளுக்கு வஜ்ரத்தைத்தடவி காயவைத்திருந்தால் அவைகள் கெட்டியாய் பிடித்துக்கொள்ளும். சாதாரண வஜ்ரத்தோடு கொஞ்சம் "சாக்" அதாவது சீமைச்சுண்ணும்புக்கட்டியையும் பொடி பண்ணி வஜ்ரத்தோடு சேர்த்து விட்டால் இன்னும் கெட்டியாய் பிடித்துக் கொள்ளுமாம்.




## பாருங்கள், வாசித்து பாருங்கள் !
## பிறகு வாங்கி சந்தோஷப்படுங்கள் ! !



### 1. அய்யர்ஸ் அலக பிலாச தயிலம்

அல்லது கூந்தல் வளர்த்தயிலம். இதை தினம் உபயோகித்து வந்தால் தலை, மூளை, மயிர் சம்பந்தமான வியாதிகளை நீக்கி, குளிர்ச்சியைத் தந்து கூந்தலை கார்மேகம்போல் கருத்து வளரும்படிச் செய்யும்.

விலை புட்டி 1-க்கு ரூபாய் 0-10-0. மூன்று புட்டிகள் ரூபாய் 1-10-0.

### 2. பிருங்கராஜ தயிலம் அல்லது பரிமள ஸ்நாந தயிலம்.

இதை வாரம் இருமுறை தேய்த்து ஸ்நாநம் செய்தால் மண்டை வலி, மூளை குடைச்சல், கரப்பான், கண்வலி, கண்மங்கல் புகைச்சல், வெட்டை சூடு இவைகளை போக்கி தேகத்திற்கு குளிர்ச்சியைத்தரும்.

விலை புட்டி 1-க்கு ரூபாய் 1-4-0. மூன்று புட்டிகள் ரூபாய் 3-8-0.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3. | சௌகந்திகா அல்லது பரிமள ஸ்நாந பொடி விலை டப்பி 1க்கு | | | .. | .. | ரூபா | 0 4 0 |
| 4. | நாசிகா சூர்ணம் அல்லது சுகந்த மூக்குபொடி | ,, | ,, | .. | .. | ,, | 0 4 0 |
| 5. | தசன அல்லது அற்புத பற்பொடி | ,, | ,, | .. | .. | ,, | 0 3 0 |
| 6. | சிரசூலாந்தகம் அல்லது தலைவலி தயிலம் | ,, | ,, | .. | .. | ,, | 0 4 0 |

போஸ்டேஜ் வேறே பிரத்தியேகம்.

எஸ். எஸ். அய்யர் அண்டு கம்பெனி, 331, தம்புசெட்டி தெரு, சென்னை.

THE BENGAL CHEMICAL AND PHARMACEUTICAL WORKS, LTD.,
*91, Upper Circular Road, Calcutta.*

எங்கள் பரிமளக் கூந்தல் எண்ணெயில் அநேக மலர்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. மகா சுத்தமானது. வேறுவிதமான வர்ணங்களைச் சேர்த்து பகட்டப்படாதது.

இதில் எத்தனையோ ஆயிரக்கணக்கான ரோஜா, மல்லிகை, தாமரை முதலிய புஷ்பவாஸனைகள் வீசும்.

வேண்டியவர்கள் அடியில் கண்ட ஏஜண்டுகளிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பி. ரெங்கய்ய செட்டி அண்டு ஸன்ஸ், எஸ்பிளநேட், மதராஸ்.

ஸ்வதேசி வேர் அவுஸ், தம்புசெட்டித் தெரு, மதராஸ்.

நாஷனல் டிரேடிங் கம்பெனி, எஸ்பிளநேட், மதராஸ்.

கே. வி. பிராமய்யா அண்டு ஸன்ஸ், மதராஸ் அல்லது ராஜமஹேந்திரம்.

என். ஆர். பகடி அண்டு கம்பெனி, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

பங்காள ரஸாயன ஔஷதசாலை,
91, அப்பர் ஸர்கிலர் ரோட்,
கல்கத்தா.

## சீவகசிந்தாமணி.
### இரண்டாம் பதிப்பு.

பஞ்சகாவியங்களுள் ஒன்றுகிய சீவகசிந்தாமணி, நச்சிஞர்க்கினியருரை, இரண்டாம் பதிப்பு, பலவகை ஆராய்ச்சிக் குறிப்புக்களோடும், அரும்பதவுரை முதலியவற்ருேடும் இப்போது பதிப்பிக்கப்பட்டு நிறைவேறியது. 150-பாரங்கள் கொண்டது. விலை ரூபா 6-0-0. வி. பி. போஸ்டு மூலம் ரூபா 6-9-0 ஆகும். வேண்டியவர்கள் எனக்குத் தெரிவித்துப் பெற்றுக் கொள்ள விரும்புகிறேன்.

வே. சாமிநாதையர்,
Tamil Pandit, Presidency College,
*Madras.*

## INDIAN NEWS.
## இந்தியநாட்டு ஸமாசாரங்கள்.

BORING FOR WELLS.

**கிணறு வெட்ட சோதனைக்குழி.**—வடக்கே ஐக்கிய மாகாணங்களில் உள்ள விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் கிணறுகள் வெட்டும் விஷயத்தில் ரொம்ப சிரத்தை எடுத்துக்கொள்வதாகத் தெரிகிறது. எங்கெங்கே கிணறு வெட்டலாமென்பதை அறிந்து சொல்லுவதற்காக சில பிரத்தியேக உத்தியோகஸ்தர்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் செய்துவரும் வழியை கற்றுக்கொள்ளுவதற்காக வங்காள மாகாணத்திலிருந்தும் கீழ் வங்காள மாகாணத்திலிருந்தும் சில உத்தியோகஸ்தர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்களாம். ஐக்கிய மாகாணத்து உத்தியோகஸ்தர்கள் இப்படி வந்திருக்கிறவர்களுக்கு கிணறு வெட்டும் வழிகளை சொல்லிக்கொடுப்பதோடு அவைகளுக்கு வேண்டிய யந்திரங்களையும் தயார் செய்து கொடுக்கிறார்களாம். இந்த யந்திரங்கள் பம்பாய் ராஜதானிக்கும் போவதாகத் தெரியவருகிறது.

MILK IN CALCUTTA.

**கல்கத்தாவில் பால்.**—கல்கத்தா முனிஸிபாலிடி ஆக்ட்டு பிரகாரம் ஒருவன் கலப்படமான ஸாமானை கலப்படமில்லை என்று சொல்லி விற்றால் அவனை தண்டிக்கலாம். இந்தச் சட்டப்படி பாலில் ஜலம் கலந்து விற்பனை செய்த சில பால்காரர்களை முனிஸிபாலிடியார் அநேகம் தடவை மாஜிஸ்ட்ரேட் முன் சிக்ஷை பண்ணிவைத்தார்கள். இந்த தொந்திரவு பொறுக்காமல் சில பால்காரர்கள் தாங்கள் தண்ணீர் கலந்த பால்தான் விற்பதாக வெளிப்படையாய் நோட்டீஸ் எழுதி ஒட்டி வியாபாரம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்களாம். ஸ்வயப்பால் அல்ல என்று சொல்லிவிற்கும் பக்ஷத்தில் தண்டிக்க முடியாது.

THE BRIJ SUGAR COMPANY.

**பிர்ஜ் சர்க்கரை கம்பெனி.**—ஆக்ராப்பட்டணத்தில் "பிரிஜ் ஷுகர் கம்பெனி" என்று ஒரு கம்பெனி சர்க்கரை செய்வதற்காக ஏற்படப்போகிறதாம். இதற்கு 5 லக்ஷம் ரூபாய் மூலதனமாம். ஆக்ராப் பட்டணத்துக்கு 25 மயில் தூரத்திலுள்ள பார்க்கம் என்ற ஊரில் மேற்சொல்லிய சர்க்கரை வேலை செய்யப்படும். இக்கம்பெனியார் எலும்பு முதலிய ஆபாஸ வஸ்துக்களை உபயோகிக்காமல் கரும்பிலிருந்தே சர்க்கரை செய்யப்போகிறார்களாம்.

AGRICULTURAL MACHINERY.

**விவஸாய யந்திரங்கள்.**—பஞ்சாப் மாகாணத்தில், லயால்பூர் என்னும் பட்டணத்திலுள்ள விவசாய இலாகாகாரர்கள் விவசாயத்துக்கு வேண்டிய அறுக்கும் யந்திரங்கள், ஏர்க்கள், இன்னும் மற்ற யந்திரங்கள், இவைகளை வைத்திருக்கிறார்கள். அந்த மாகாணத்தில், மாட்டுச்சந்தைகள் கூடும் இடங்களிலெல்லாம் மேலே சொல்லிய யந்திரங்களைக்கொண்டு போய் நிதர்சனமாய் அவைகளின் உபயோகங்களைக் காண்பிக்கப்போகிறார்கள்.

SHEEP BREEDING.

**ஆடு வளர்த்தல்.**—ஐக்கிய மாகாணத்தில் நயினிடால் ஜில்லாவில் "ஹல்டுவானி" என்னும் ஊரில் சில ஐயோப்பியர்கள் வியாபாரத்திற்காக ஆடுகள் வளர்க்க ஆரம்பித்திருக்கிறார்கள். இவர்களுக்கு கவர்ன்மெண்டாரும் பல விதத்தில் கொஞ்சம் சகாயம் செய்திருக்கிறார்கள். அவர்கள் ஆடுகளை கொஞ்ச காலத்திற்கு ஒருவித வரியும் செலுத்தாமல் சர்க்கார் நிலத்தில் மேய்த்துக்கொள்ளும்படிக்கும் அனுமதி கொடுத்திருக்கிறார்களாம்.

AGRICULTURAL INSTRUCTION.

**விவசாய போதனை.**—ஆடு மாடு வளர்த்தல், கோழி வளர்த்தல், நெய், தயிர், முதலியவைகள் செய்தல், உழுவதற்கு வேண்டிய கருவிகள், விவசாய யந்திரங்கள், பழந்தரும் மரங்களை உண்டாக்குதல், பட்டுப்பூச்சி வளர்த்தல், ஆகிய இவை போன்ற விஷயங்களைப்பற்றி ப்பூசா, விவசாய காலேஜில், சிலபேர்களுக்கு, அதிக நாளோட்டாமல், எவ்வளவு அவசியமோ அவ்வளவு மட்டும் சொல்லிக்கொடுக்கப் போகிறார்களாம்.

MARKET GARDENING.

**கறிகாய்த் தோட்டம்.**—ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த குமாயுன்குன்றுமலைகளில் அந்த மாகாண கவர்ன்மெண்டார் கறிகாய்த் தோட்டம் போட்டு உற்பத்தியாகும் கறிகளையும் பழங்களையும் பொது ஜனங்களுக்கு விற்பனைசெய்யப் போகிறார்களாம். இதற்காக ஒரு ஐரோப்பிய தோட்டக்காரர் நியமிக்க உத்தரவாயிருக்கிறது.



## FOREIGN NEWS.
## அந்நிய நாட்டு ஸமாசாரங்கள்.

AGRICULTURAL EDUCATION.

**விவசாய போதனை.**—இங்கிலாந்தில் "லங்காஷைர்" என்பதாக ஒரு ஜில்லா இருக்கிறது. இந்த ஜில்லா போர்டார் அவர்கள் எல்லைக்குள் இருக்கும் விவசாயிகளின் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் இனாமாக அந்த ஜில்லாவைச்சேர்ந்த பிரஸ்டன் என்னும் பட்டணத்தில் படிப்புச்சொல்லிக்கொடுக்கிறார்கள். தவிர, வாடகைக்காகவும் சாப்பாட்டுச்செலவுக்காகவும் போக்குவரத்துச் செலவுக்காகவும் பணமும் கொடுக்கிறார்களாம். வருஷாவருஷம் செப்டம்பர் மாசம் கடைசிவாரந்தொடங்கி ஏப்பிரல் மாசம் 15 தேதி வரையில் படிப்பு சொல்லிக்கொடுக்கப்படுகிறது. வெண்ணெய் எடுத்தல், பால்கட்டி செய்தல், பால் கெடாமல் செய்தல், ரொட்டி பண்ணுதல், கோழி வளர்த்தல் இவைகளெல்லாம் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன: வெண்ணெயெடுத்தல், பால்கட்டி செய்தல் இவ்வகள் இரண்டும் ஜில்லாவில் எங்கே வேண்டுமானாலும் ஒரு செலவுமில்லாமலே சொல்லிக்கொடுக்கப்படுமாம். இவைகள் தவிர விவசாய விஷயமாயும் தோட்டப்பயிர் விஷயமாயும் கோழி வளர்க்கும் விஷயமாயும், ஆடுமாடுகளைப் பற்றிய வியாதிகள் விஷயமாயும், தேனீ வளர்த்தல் விஷயமாயும் பிரசங்கங்களும் செய்யப்படுகின்றனவாம். நம்முடைய ராஜதானியில் எந்த ஜில்லா போர்டார் இந்தமாதிரி செய்கிறார்கள்?

INDIAN HIDES.

**இந்தியாத் தோல்கள்.**-கசாப்புக்கடைகளில் அடிக்கப்படும் ஆடுமாடுகளின் தோல்களை சரியாக உரிக்கிறதில்லையென்றும், அதனால் அந்தத் தோல்களுக்கு சரியான விலைகிடைக்காமல் கசாப்புக்காரர்கள் நஷ்டம் அடைகிறார்கள் என்றும் இந்தியாவில் தோல் வியாபாரத்தில் உள்ளவர்கள் சொல்லக்கேட்டிருக்கலாம். சீமையிலும் இதே விதமாகத்தான் கசாப்புக்கடைக்காரர்கள் சரியாய்த் தோலை உரிப்பதில்லையாம். இது விஷயமாய் சீமையிலும் தோல் வாங்குகிறவர்கள் ஐம்பது வருஷமாக கசாப்புக் கடைக்காரர்களுக்கு என்ன சொல்லியும் கேட்பதில்லையாம்.

A NEW AGRICULTURAL SCHOOL.

**ஒரு புது விவசாய பாடசாலை.**—அமெரிக்கா கண்டத்தில் கானடா என்பதாக ஒரு மாகாணம் இருக்கிறது. இதில் ஜனங்கள் அதிகமாயில்லை. பிழைப்புக்குவேண்டிய நிலம் முதலிய சாதனங்கள் ரொம்ப இருக்கின்றன. ஆகையால் இதர தேசங்களிலிருந்து இந்த நாட்டில் வந்து ஜனங்கள் குடியேறுகிறார்கள். இப்படிப்பட்டவர்களில் இங்கிலாந்திலிருந்து போகிறவர்கள் வெகு ஜாஸ்தி. இப்படிப் போகிறவர்களை தாங்கள் பிறந்த தேசத்தில் பிழைக்கமாட்டாதவர்களென்று சொல்லுவது வழக்கமாம். இப்படிப்பட்டவர்கள் கானடா தேசத்தில் போய் குடியேறினால் அந்த தேசத்தார்களுக்கு அவமானமல்லவா? இந்த அவமானத்தை நிவர்த்திசெய்ய கானடாவில் ப்ராட்பீல்டு என்னும் ஊரில் க்ரே என்னும் ஒருவர் ஏராளமாக நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து அதில் ஒரு விவசாயப் பள்ளிக்கூடம் வைக்கப்போகிறாராம். பெரிய பள்ளிக்கூடங்களிலுள்ள பதினெட்டு, பத்தொன்பது வயதுள்ள பிள்ளைகளில் யார் யார் கான்டா தேசத்துக்கு வரப்பிரியப்படுகிறார்களோ அவர்களை பொறுக்கி அழைத்துக்கொண்டு போய் தானெடுத்திருக்கும் நிலத்தில் வேலை செய்யச் சொல்லப் போகிறாராம். அப்படிச்செய்யும் வேலைக்கு அவர்களுக்கு மாதம் மாதம் சம்பளமும் கொடுப்பாராம். இப்படிக்கு விவசாயத்தொழிலைக் கற்றுக் கொண்டு, வயதாகி பெரியவர்களானதும் அந்தப் பிள்ளைகள் தாங்களே சொந்தத்தில் நிலங்கள் எடுத்துப் பயிர்செய்து நல்ல பிரஜைகள் ஆகக்கூடும். இந்த எண்ணத்துடன் தான் மேலே சொல்லிய ஏற்பாடுகள் செய்யப்படுவதாகத் தெரியவருகிறது.

AGRICULTURE IN THE UNITED STATES.

**ஐக்கிய மாகாணங்களில் விவசாயம்.**—அமெரிக்கா தேசத்து ஐக்கியமாகாணங்களில் விவசாய அபிவிருத்திக்காக 1907-ம் வருஷத்தில் 303½ லக்ஷம் ரூபாய் செல்வு செய்யப்பட்டது. அடுத்த 1908-ம் வருஷத்தில் 366 லக்ஷம் செல்வு செய்யப்பட்டது. விவசாய விஷயமாய் ஆராய்ச்சி செய்வதற்காக 60 முக்கியமான சோதனைச்சாலைகளும் விவசாயப்படிப்பு சொல்லிக்கொடுப்பதற்காக 64 காலேஜுகளும் இருக்கின்றனவாம்.

## SEASON, CROPS AND PRICES.
## காலஸ்திதி, பயிர்கள், விலைவாசி.

COTTON GOODS.

**துணி ஸாமான்கள்.**—இதர தேசங்களிலிருந்து சென்னப்பட்டணத்திலும், ரங்கூனிலும் இறக்குமதி விவரங்கள்.

நூலும் முறுக்கு நூலும்.

| வார முடிவு. | | சென்னப்பட்டணத்தில். |
|---|---|---|
| | | ராத்தல். |
| அக்டோபர்மீ 2உ | .. | 129,400 |
| ,, 9உ | .. | 137,700 |
| ,, 16உ | .. | 234,505 |
| ,, 23உ | .. | 11,220 |
| ,, 30உ | .. | 232,825 |
| ஆகமொத்தம் | .. | 745,650 |

காரிகத் துணிகள்.

| வார முடிவு. | | சென்னப் பட்டணத்தில். | | ரங்கூனில். |
|---|---|---|---|---|
| | | கஜம். | | கஜம். |
| அக்டோபர்மீ 2உ | .. | 1,361,992 | .. | 383,124 |
| ,, 9உ | .. | 360,573 | .. | 389,472 |
| ,, 16உ | .. | 1,905,160 | .. | .. |
| ,, 23உ | .. | 650,626 | .. | 151,512 |
| ,, 30உ | .. | 1,550,294 | .. | 18,184 |
| ஆகமொத்தம் | .. | 6,838,645 | | 942,292 |

சலவைத் துணிகள்.

| வார முடிவு. | | சென்னப் பட்டணத்தில். | | ரங்கூனில். |
|---|---|---|---|---|
| | | கஜம். | | கஜம். |
| அக்டோபர்மீ 2உ | .. | 520,034 | .. | 505,299 |
| ,, 9உ | .. | 242,333 | .. | 734,904 |
| ,, 16உ | .. | 674,418 | .. | ... |
| ,, 23உ | .. | 184,760 | .. | 603,477 |
| ,, 30உ | .. | 488,252 | .. | 391,728 |
| ஆகமொத்தம் | .. | 2,109,797 | | 2,235,408 |

இதர துணிகள்.

| வார முடிவு | | சென்னப் பட்டணத்தில். | | ரங்கூனில். |
|---|---|---|---|---|
| | | கஜம். | | கஜம். |
| அக்டோபர்மீ 2உ | .. | 718,887 | .. | 1,,164,452 |
| ,, 9உ | .. | 408,263 | .. | 1,444,303 |
| ,, 16உ | .. | 1,271,433 | .. | .. |
| ,, 23உ | .. | 369,642 | .. | 815,283 |
| ,, 30உ | .. | 608,439 | .. | 922,824 |
| ஆகமொத்தம் | .. | 3,376,664 | | 4,346,862 |

ரெயிலில் அனுப்பப்பட்ட துணிகள்.

சென்னப்பட்டணத்திலிருந்து ரெயில் வழியாய் அனுப்பப்பட்ட ஸ்வதேச பிறதேச துணி ஸாமான்கள். ஒரு அந்தர் என்பது 112 ராத்தல்.

| வார முடிவு. | | அந்தர். |
|---|---|---|
| அட்டோபர்மீ 2உ | .. | 8,445 |
| ,, 9உ | .. | 6,927 |
| ,, 16உ | .. | 6,012 |
| ,, 23உ | .. | 8,313 |
| ,, 30உ | .. | 8,436 |
| ஆகமொத்தம் | .. | 38,133 |

IMPORT OF SUGAR.

**சர்க்கரை இறக்குமதி.**—செப்டம்பர்மீ 25உ முதல் அக்டோபர்மீ 30உ வரையில் சென்னப்பட்டணத்தில் இங்கிலாந்திலிருந்து 81 அந்தரும் ஜாவாவிலிருந்து 23,624 அந்தரும் இறக்குமதியாயின. இதே காலத்தில் ரங்கூனில் இங்கிலாந்திலிருந்து 305 அந்தரும், ஜாவாவிலிருந்து 60145 அந்தரும், இதர தேசங்களிலிருந்து 707 அந்தரும், இறக்குமதியாயின.

GINGELLY CROP.

**எள்ளுப் பயிர்.**—போன செப்டம்பர் மாசம் முடிய சென்னைராஜதானியில் சுமார் $4\frac{3}{4}$ லக்ஷம் ஏகர்களில் எள்ளு சாகுபடியாயிருப்பதாகத் தெரியவருகிறது. இந்த விஸ்தீர்ணம் போன 1908 ஹுத்தில் சாகுபடியான நிலத்தை விட கிட்டத்தட்ட மூன்றிலொன்று ஜாஸ்தி. வடஆற்காடு, செங்கல்பட்டு, மதுரை, கிருஷ்ணா, பல்லாரி இந்த ஜில்லாக்களில் சாகுபடி வெகுஜாஸ்தி. இதற்குக் காரணம் பட்டத்தில் பெய்த மழையே.




### மாதர் மனோரஞ்சனி.

இந்த மாதாந்தரப் பத்திரிகைக்கு இப்பொழுது 11-வது வருடம் ஆரம்பம். இதில் பெண்களுக்குரிய விஷயங்களே வெளிவரும். இதன் வருட சந்தா ரூபா 2. வேண்டுவோர் வி. எஸ். இராமசுவாமி ஐயர், 12, தனிகாசலபிள்ளைத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை என்று எழுதவும்.



CLASSIFIED COMMERCIAL DIRECTORY.

### வியாபார பகுதி விலாசங்கள்.

COLOUR PENCIL MANUFACTURER.

கலர் பென்சில் செய்கிறவர்கள்.

K. P. RAMASWAMY IYER,
15, Solayappa Mudali Street,
*KUMBAKONAM.*

SILK MERCHANTS.

பட்டு வியாபாரிகள்.

பட்டு பீதாம்பர கம்பெனி,
காசி (பனாரிஸ்.)

BRUSH MANUFACTURE.

புருஷ் செய்தல்.

B. V. K. CHETTY & CO.,
No. 22, Broadway, Madras.



## HENKE'S TILE WORKS,

**10, Esplanade, MADRAS, E.**

எங்களால் நல்ல மங்களூர் ஓடுகளும், தள வரிசைக்கல்களும், வயல்களுக்கு தண்ணீர் மடைக்குழாய்களும் செய்யப்படுகின்றன. இவைகளெல்லாம், ஸர்க்கார் இஞ்சினீர் உத்தியோகஸ்தர்களாலும், ஜில்லா போர்ட்டுகள், முனிஸிபாலிடிகள், ஜமீன்தார்கள், ரெயில்வேகம்பெனிகள் முதலியவர்களாலும் ஏராளமாய் வாங்கப்பட்டு வருகின்றன. வீடு கட்டுகிறவர்களுக்கும் மிராசுதார்களுக்கும் வெகு உபயோகமானவைகள். வேண்டிய மற்ற விவரங்களுக்கு, அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதி தெரிந்துகொள்ளவும்.

ஹெங்கிஸ் ஓட்டு கம்பெனி,
நெ. 10, எஸ்பிளநேட்,
**மதராஸ்.**

# Opinions of Educationists on Practical Life.

**THE SUB-ASST. INSPECTOR OF SCHOOLS, PATTUKKOTTAI RANGE,** writes:—"I have already recommended the supply of your Journal to the Board Schools of Pattukkotta Taluq which are 39 in number.

**THE HEADMASTER OF THE SECONDARY SCHOOL, PARAMAKUDI, WRITES.**—"It decidedly supplies the great want felt by the mass, in the most useful *matters*, such as Industrial, Agricultural and Commercial. It deserves the name "*Practical Life*" in every way."

**THE HEADMASTER, L. F. SCHOOL, YEDAPALLI, WRITES.**—"The whole scheme of the Journal, when its contents are taken into consideration, is admirable. Teachers seeking books for teaching "General Knowledge," on important subject in every Elementary School will find the journal very useful. To my mind the appearance of this journal is one of the most hopeful signs of the nation's future. To-day, I am applying to the authorities for the supply of this journal to all the Board Elementary Schools in the district."

**THE HEADMASTER OF THE A. I. TRAINING SCHOOL, NAZARETH,** writes:—"I read through the magazine with great interest and found it extremely useful to the public and to the teachers of Elementary Schools in particular. The Journal provides the teachers and the taught with the means of obtaining real knowledge of the world and it is expected to be a good guide to beginners on account of its great educative value. At a time, when there is a loud outcry for Technical Education and improved methods of agriculture, your valuable journal is a God-send. I shall recommend it to the teachers and pupils of Elementary and Secondary Schools in these parts."

**THE SUB-ASST. INSPECTOR OF SCHOOLS, COIMBATORE,** in recommending the Journal to the Assistant Inspector for supply to the Municipal and Board Schools in the District, writes:—"I hope the perusal of the Journal will increase the capacity of the teachers, to impart practical and useful knowledge to the pupils."

---


## விளம்பரம்.

**ஜோதீப். பிரகாச என்ணெயீ 1-புட்டி இனும்!**
**பரிமள ரோமசங்கரி ஸோப்.**

தேகத்தின் எந்தப்பாகத்திலும் இந்த ஸோப்பை உபயோகித்தால் யாதொரு கெடுதியுமின்றி ரோமங்களைச் சங்காரஞ்செய்துவிடும். 6-மீத்திற்கு உபயோகிக்கக்கூடிய கட்டி 1-க்கு விலை 6-அணா; டஜன் ரூ. 4, வி. பி. சார்ஜ் 1-முதல் 3-க்கு 4-அணா.

**பரிமள ரோமப் பிசின்.**

இப்பிசின் நரைத்த மயிரை இரண்டு நிமிஷத்துக்குள் பழையபடி கறுப்பாக்கிவிடும். கெடுதி செய்யக்கூடியது ஒன்றும் இதில் கிடையாது. 1-புட்டி 3-மீத்திற்குப் போதுமானது. டைரக்ஷன் மருந்துடன் அனுப்பப்படும். புட்டி 1-க்கு விலை 12-அணா; டஜன் 1க்கு ரூ. 8. 1-முதல் 3-புட்டிக்கு வி. பி. சார்ஜ் அணா 4.

☞ சுறுசுறுப்பும் பழக்கமுமுள்ள ஏஜண்டுகள் தேவை. தேவையுள்ளோர் ¼ அணா லேபிலுடன் அப்ளிக்கேஷன் அனுப்பவும்.

J. SUR & Co.,
No. 232/1, Upper Chitpore Road,
P. O. P. Bagh-bazaar, Calcutta.

ஜனானுகூலன்.—"பிழைக்கும் வழி," பெயருக்குத் தக்கவாறு சங்கதிகளுமிருக்கின்றன. இதில் விவசாயம் வர்த்தகம், கைத்தொழில், கல்வி, சாஸ்திரம், வைத்தியம், சிறுவர்க்கான சமாசாரங்கள், இன்னும் பல தேசவர்த்தமானங்கள் அடங்கியிருக்கின்றன. இப்படிப்பட்ட பத்திரிகையை யாவரும் வாசித்துவரில் பல நன்மைகளை அடையலாம்.

**பார்வைத்தோட்டம்**
**நல்ல செடிகள் வேண்டுமா!**
**புது விதைகள் வேண்டுமா!!**

சேலம் ஒட்டுமாங்கன்றுகள், அநேகஜாதி பழங்கை ஒட்டு செடிகள், புஷ்பம், காய்கறி விதைகளின் 1909-ம் வருஷத்திய புதியக் கேட்லாக் அரையணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

ச. கோ. இ. அப்துல் ரஹீமான் சாய்பு,
விதைகள், மாங்கன்று வியாபாரி, சேலம்.

**Dr. H. L. Batliwalla, Dadar, Bombay.**

| | |
|---|---|
| குளிர் ஜுரத்திற்கு மாத்திரைகள் | 1-0-0 |
| விஷபேதிக்கு | 1-0-0 |
| நரை மயிருக்கு | 3-0-0 |
| பலஹீனத்திற்கு மாத்திரைகள் | 1-8-0 |
| பல் பொடி | 0-4-0 |
| சயை ஒரே நாளில் சொஸ்தப்படுத்த புட்டி | 0-4-0 |

எங்கும் விற்கப்படுகிறது.


OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 5-FEB 1910 MADRAS.

SUPPLEMENT TO 'PRACTICAL LIFE'

'பிழைக்கும் வழி' க்கு அனுபந்தம்.



THE LATE MR. R. C. DUTT C. I. E.

காலஞ் சென்ற ஆர். ஸி. தத், ஸி. ஐ. இ.

G. A. Vaidya Raman & Co., Publishers, 10, Esplanade, Madras.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி, 10, எஸ்பிளனேட், மதராஸ்.


# பிழைக்கும் வழி

PRACTICAL LIFE

ஜி. ஏ. வைத்தியராமன், பி. ஏ.
பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B.A.
EDITOR.

புஸ்தகம் I. Vol. 1. } ஸௌம்ய௵ கார்த்திகைமீ—NOVEMBER 190[illegible] { ஸஞ்சிகை 11. No. 11.


## பிழைக்கும் வழி.

PRACTICAL LIFE.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், பிரஜாலக்ஷணம், வித்தியா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

**தபால்கூலி உள்பட சந்தா விவரம்.**

| | உள் நாடு. | | அந்நிய நாடு. | |
|---|---|---|---|---|
| வருஷம் 1க்கு .. | 4 | 0 .. | .. 6 | 0 |
| 6 மாதத்திற்கு .. | 2 | 0 .. | .. 3 | 0 |
| தனிப்பிரதி .. | 0 | 6 .. | .. 0 | 8 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. சகலபணமும் எங்களுக்கு நேரில் அனுப்பப்படவேண்டும்.

**வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியது.**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க மரியாதை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸமும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒரு பாதியைவிட்டு மறுபாதியில் மட்டில் எழுதப்பட வேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

---

A popular Tamil monthly magazine of general information and instruction devoted mainly to agriculture, trade, industry, citizenship, and popular, scientific and, technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. | A. | P. | | Foreign. Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| ,, half year ... | 2 | 0 | 0 | ... ... | 3 | 0 | 0 |
| Single copy ... | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |

No Money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers Messrs. G. A. Vaidya Raman & Co., 10, Esplanade, Madras.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
10, எஸ்பிளனேட், மதராஸ்.

## BEE-KEEPING.

BY

MR. V. NARASIMHA AIYANGAR, M.A., B. L.

## தேனீ வளர்த்தல்.

தேனீயினால் நமக்கு உண்டாகும் பலன் எல்லாருக்கும் தெரியும். அதனால், இனிமையான தேனும், ஜெபமாலை மெழுகுவர்த்தி முதலியவைகள் செய்வதற்கான மெழுகும், கிடைக்கின்றன. இந்தக்காரணங்கள் பற்றியே அனேகர் ஐரோப்பா, அமெரிக்கா தேசங்களில் தேனீ வளர்ப்பதை ஒரு பெருங் கைத்தொழிலாகக்கொண்டு, அதனால் மிகுந்த லாபமடைகிறார்கள். நம்முடைய தேசத்திலும் தேனீக்கள் அபரிமிதமாய் வசிக்கின்றன. ஆகையால், நாமும் அவைகளை ஏன் பலன்படுத்தி, பிழைப்பதற்கேற்ற ஒரு வழியைத் தேடிக்கொள்ளக்கூடாது? தேனீ வளர்ப்பது இந்தியாவில் கிராமாந்திரங்களில் வசிப்பவர்கள் மேற்கொண்டு எளிதாய் விருத்தி செய்வதற்குத்தகுந்த கைத்தொழிலாகும். ஆகவே, மேற்கு திசையார் பிரயோகிக்கும் விதங்களையும் சாதனங்களையும் நம்மவர்களும் கற்று இந்தக்கைத்தொழில் மேன்மேலும் விருத்தியடையும்படி செய்வது நம்மவருள் பணமும்

கல்வியுமுடையவர்கள் செய்யவேண்டியபெருங் கருமமாகும்.

தென்னிந்தியாவில், கஞ்சம் ஜில்லா முதல் கன்னியாகுமரிவரையில் பரவி நிற்கும் குன்றான பாகங்களில் தேனீக்கள் மிகுதியாய் வசிக்கின்றன. இப்போதும், கோதாவரி, கிருஷ்ணா, கர்நூல், கடப்பை, நீலகிரி முதலிய ஜில்லாக்களிலிருந்து தேனும் மெழுகும் காட்டு ஜனங்கள் நிறையச்சேர்த்து வெளியூர்களுக்கு அனுப்புகிறார்கள். இவ்விதமாகவே மலையாளம், திருவாங்கூர் இவைகளில் வெட்டர், கணிக்கர் முதலிய மலைவாசிகளும், தேனும் மெழுகுஞ் சேகரிக்கிறார்கள். இதுவுந் தவிர, கோயம்புத்தூர் ஜில்லாவின் காட்டுப்பிரதேசங்களிலுள்ள இருளர், மறவர் என்பவர்கள் ஒவ்வொரு வருஷமும் மிகுதியாகத் தேனும் மெழுகுஞ் சேர்த்து பட்டணங்களுக்கு அனுப்புகிறார்கள். சுயமாகத் தேனீயின் பிரயாசையாலுண்டாகும் தேனையும் மெழுகையும் ஒவ்வொரு சமயத்தில் சேர்க்கிறார்களே தவிர, தேனீ வளர்த்தலையே ஒரு பெருங்கைத்தொழிலாகக்கொண்டு, அதை முறைப்பட வளர்த்து தேனீயின் பிரயாசையுடன் தங்களுடைய முயற்சியையுஞ் சேர்த்து, இந்தத்தொழிலை விருத்திக்குக்கொண்டுவரும் விதங்கள், சாதனங்கள் ஒன்றும் அறியாதவர்களாயிருக்கிறார்கள். ஆனால் மேற்கு திசையாரோ, நெசவு செய்தல், தோல் பதனிடுதல் முதலிய கைத்தொழில்களை விருத்திக்குக்கொண்டு வந்திருப்பது போல்,தேனீ வளர்த்தலையும் ஒரு சிறந்த கைத்தொழிலின் நிலைமைக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதன் அபிவிருத்திக்கு சாதனமாக சிற்சில யந்திரங்களும் உபாயங்களும் கண்டுபிடித்து உபயோகப்படுத்துகிறார்கள். அவைகளை சட்டம் போட்ட கூடுகளென்றும், தாய்த் தேனீ வீடு என்றும், தேன் பிழியும் யந்திரம் என்றும், புகைப்போக்கி என்றுஞ் சொல்லுவார்கள். நம்மவர்களுக்குள் இந்தக்காலத்தில் தேனெடுப்பதற்காக வழங்கிவரும் உபாயமாவது:—தேனடையிருக்கும் இடத்தை முதலில் கண்டுகொண்டு, பிறகு எரியும் பெரும் நெருப்புப்பந்தம் ஒன்றை ஒருவன் கையில் பிடித்து, கைகள், முகம் முதலியவற்றை மூடிக்கொண்டு தேனடையின் பக்கத்தில் தீவட்டியைக்காட்ட, கூட்டிலிருக்கும் தேனீக்கள் பல ஓடவும், பல தீயில் இறக்கவும், சற்று நேரத்திற்கெல்லாம் தேனீக்கள் மறையும்; பிறகு கூட்டை எடுத்து தேனைப்பிழிந்தெடுப்பான். இப்படிச்செய்வதினால், பல தேனீக்கள் இறப்பதோடு, மற்றவைகள் அவ்விடத்தை விட்டு வேறிடம் ஓடிப்போகும். இந்த கர்நாடக வழக்கத்தை விட்டு, மேற்சொன்ன சாதனங்களை உபயோகிப்பார்களானால், தேனீக்கள் இருந்த இடத்திலேயே இருப்பதுடன் ஒவ்வொரு கூட்டிலுமிருக்கும் தேனீக்கள் குறையாமலிருக்கும். இதுவுமல்லாமல், நம்மவர்கள் தேனீயின் நடவடிக்கைகளை முழுதும் அறிந்தவர்களல்ல. அவைகளை வளர்த்து அவைகளால் பயன்பட விரும்புகிறவர்கள், அவைகள் குடியேறும் விதத்தையும், காலத்தையும், அவைகள் உண்ணும் உணவையும், அவைகள் விரும்பும் புஷ்பங்களையும், அவைகளின் எதிரிகளையும், இன்னும் அவைகளைப் பற்றிய விஷயங்கள் எல்லாவற்றையும் நன்றாயறிந்தால் அல்லாமல் அவைகளை பயன்பட வளர்த்தல் அசாத்தியம். ஐரோப்பியர் தாம் வளர்க்குந் தேனீக்கு இவைகள் நல்ல புஷ்பங்கள், இவைகள் கெட்ட புஷ்பங்கள் என்று பகுத்தறியுஞ் சக்தியை கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். இன்னும், தேனீ வளர்ப்பதற்கு வேண்டிய சாதனங்களையும் உபயோகிக்கும் விதங்களையும் அறிந்துகொள்ள வேண்டும்.



தேனீக்கள் பெருத்த சண்டை பிடிக்கும் குணமுள்ளவைகள். ஆகவே அவைகளை வளர்க்கும்போது ஒரு ஜாதி மற்றொரு ஜாதியோடு கலக்கவொட்டாமல் வெவ்வேறிடத்தில் வைத்து வளர்க்கவேண்டும். தேனீக்களை வெவ்வேறு கூண்டுகளுக்கு மாற்றி முன்னிருந்த கூண்டுகளைச்சுத்தி செய்யவேண்டும்.

தென்னிந்தியாவில் நீலகிரி, ஐதராபாத்து என்னும் சிற்சில இடங்களில் மாத்திரம், சில ஐரோப்பியர்கள் தேனீக்களை முறைப்பட வைத்து வளர்த்து வருகிறார்கள். ஆனால் இவர்களும், இந்தியாவிலுள்ள தேனீக்களை தள்ளி ஆங்கிலேயத்தேனீக்களையும், சைப்ரஸ் என்னும் தீவின் தேனீக்களையும் கொண்டுவந்து வளர்க்கிறார்கள். தென்னிந்தியாவிலேயே பற்பல தேனீவகைகளிருக்க, மேற்கு திசையிலிருந்து அவைகளை வரவழைப்பது அனாவசியம். ஆனால் இந்தியத்தேனீயை விட ஐரோப்பியத் தேனீயையே வளர்ப்பது எளிதென்று சொல்லுவார்கள். ஆனாலும், தக்க கவலையும் முயற்சியும் எடுத்துக்கொண்டால் இந்தியத்தேனீயும் வளர்ப்பதற்கு எளிதென்று தைரியமாய்ச் சொல்லலாம். தென்னிந்தியாவில் அகப்படும் தேனீக்கள் நான்கு வகை. அவையாவன: மேட்டுத்தேனீ, கொசுத்தேனீ, கொம்புத்தேனீ, நசிரித்தேனீயாம். கொசுத்தேனீயை நசிரித்தேனீயென்றும், நசிரித்தேனீயை கொசுத்தேனீ யென்றும் பேர்மாற்றி சொல்லுவதுமுண்டு. மேட்டுத்தேனீயானது குன்றுகளிலும் காடுகளிலும் வசிக்கிறது. காட்டு மரங்களின் கிளைகளின்மேல் கூடுகட்டும். இது ஓரிடம் விட்டு மற்றோரிடத்துக்குக் குடிப்போவதில்லை. கூட்டிலுள்ள தேன் முழுவதையும் எடுத்துக்கொண்டாலும் முன்னிருந்த இடத்தை விட்டு விலகுவதில்லை. அது சுபாவமாகவே கோபாவேசமுள்ளது. சிற்சில சமயங்களில் மனிதர்களையும் மற்றப் பிராணிகளையும் எதிர்த்துத் தொந்திரவு செய்யும். அது கட்டும் கூண்டானது பல அடி நீளமுள்ளதாயும் ஒரு அங்குலத்துக்கு மேற்பட்ட பருமனுள்ளதாயும் இருக்கும். அது மிகக் கோபங்கொண்டதாயிருந்தாலும் மலைவாசிகள் தக்க சமயத்தில் அதன் தேனை சேகரிக்கிறார்கள்.

கொசுத்தேனீயும் கொம்புத்தேனீயும் ஒரு இடம் விட்டு மற்றொரு இடம் குடியேறுஞ் சாதிகள். கொசுத்தேனீயானது நீலகிரி முதலிய இடங்களில் அகப்படும்; மரக்கிளைகளிலும் பொந்துகளிலும் கூடுகட்டும். கொம்புத்தேனீயானது வயநாடு என்னுமிடத்தில் மிகுதியாயுண்டு. நசிரித்தேனீயென்பது மிகவும் சிறியது. அது ஒரு இடம் விட்டு மற்றொரு இடம் போவதில்லை. இது வீட்டுச்சுவர்களிலும் பொந்துகளிலும் கூடுகட்டும். இவைகள் சேர்க்குந்தேனே மிகவும் சிறந்தது. இதன் கூட்டு மெழுகும் மிக வெண்மையாயும் நயமாயுமிருக்கும்.

தேனீக்கள் பல புஷ்பங்களிலிருந்து தேனை சேகரிக்கின்றன. ஆகவே புஷ்பங்கள் எங்கே மிகுதியாயிருக்கின்றனவோ அங்கேயே தேனீக்களும் மிகுதியாயிருக்கும். குடியேறுந்தேனீக்கள் தவிர மற்றவைகள் வருஷமுழுவதும் மாறிமாறி ஓரேயிடத்தில் கூடுகட்டும். மலைப்பிரதேசங்களில் காட்டு புஷ்பங்கள் அதிகமானதால் மலைத்தேனே மிகுதியாயுண்டாகும். பத்து அல்லது பதினைந்து கூட்டைப்பிழிந்தால் சுமார் 150 படி தேனும், 10 மணங்கு மெழுகும் அகப்படும். மேட்டுத் தேனீயின் கூடு ஒன்றுக்கு 1 படி தேனும், 2 ராத்தல் மெழுகும் அகப்படும். நசிரித்தேனீயின் கூடு ஒன்றுக்கு $\frac{1}{4}$ படி தேனும், $\frac{1}{2}$ ராத்தல் மெழுகுமே அகப்படும்.

தென்னிந்திய தேனீக்கள் அனேகமாய் இடமாறி வசிப்பதால் அவைகளை வளர்த்து தேன் சேகரிப்பது சுலபமான காரியமல்ல என்று சிலர் சொல்லலாம். அவைகள் அந்த

மாதிரி குடியேறுவதைத் தடுக்கலாம். அதெப்படி? ஒரு கூட்டிலுண்டாகும் பெண்தேனீயே குடியேற்றத்திற்கு காரணமாயிருக்கிறது. அது உண்டாகுங் கூட்டில் ஏற்கனவே கிழப்பெண் தேனீக்களிருப்பதால், அவைகளுக்குபயந்து புதிதாயுண்டான பெண் தேனீ ஓடும். கிழத்தேனீயும் பின்பு இறக்கக், கூடு அழிந்துபோம். ஆகவே புதிதாய் பெண் தேனீயுண்டானதும் அது வெளிப்போகாதபடி கூட்டிலுள்ள கிழத்தேனீக்களை அப்புறப்படுத்திவிடவேண்டும். புதிதாயுண்டானது கூட்டிலேயேதங்கி கூட்டைவிருத்தி செய்யும். இதுவுந் தவிர, தேனீவளர்த்தல் வெகு ஜாஸ்தியான இட்டலி தேசத்திலிருந்து பெண்தேனீக்களை வரவழைத்து நமது தேசத்துக் கூடுகளில்விட்டுவளர்த்தால், அதிகப்பலனைக் கொடுக்கும். ஏனென்றால், அப்படிச்செய்வதால் கூட்டில் தேன் அதிகமாக சேகரிக்கப்படுகிறது. வைத்து வளர்ப்பதற்கு நசிரித்தேனீயே மிகவும் சிறந்தது. ஏனென்றால் அவைகள் ஒரேயிடத்திலிருக்கின்றன. அவைகள் சேர்க்குந் தேன் மிக இனிப்பாயுஞ் சுத்தமாயும் இருக்கிறது.

முயற்சியுண்டானால், தேனீவளர்த்தல் மிகவும் பயன் கொடுக்கும் கைத்தொழிலாகும். தேன் தவிர மெழுகும் உண்டாகிறது. தேனீக்கூடுகள் மெழுகினாலேயே ஆனவைகள் அல்லவா? அதைச்சேகரிக்கும் விதமெப்படி? தேனைப் பிழிந்தெடுத்துவிட்டு கூட்டைக் குளிர்ந்த ஜலத்தில் கழுவுவார்கள். பிறகு அதை ஒரு பானையிலிட்டு, ஜலத்தோடு அடுப்பில் வைத்து கொதிக்கவிடுவார்கள்; மெழுகு உருகித்தண்ணீரின்மேல் மிதக்கும்; மிதக்கும் மெழுகைச்சேர்த்து உருண்டையுருண்டையாக உருட்டி எடுப்பார்கள். சில தேசங்களில் மெழுகு தயார் செய்யும்போது, அதற்குப் பொன்னிறமுண்டாகும்படி, அதோடு கொஞ்சம் மஞ்சளை சேர்ப்பார்கள். இந்தக் காலத்தில் தேனைப்பார்க்கிலும் மெழுகிலேயே அதிக வியாபாரம் நடக்கிறது. ஜாவா தீவிலும், பினங்கு, சிங்கப்பூர் முதலிய இடங்களிலும் தேன் மெழுகு மிகுதியாய் இறக்குமதியாகிறது. அதனால் வர்த்திகளும், ஜெபமாலைகளுஞ் செய்கிறார்கள். கொழுப்பினால் செய்யப்படும் வர்த்தியைவிட மெழுகினால் செய்யப்பட்டவைகள் அதிகப்பிரகாசமாய் எரியும். உயிர்நூலும் இன்னும் அதைச் சேர்ந்த மற்ற நூல்களும் கற்பிக்கப்படும் கலாசாலைகளில் தேன் மெழுகினால், பூ, பழம், பிராணிகளின் அவயவங்கள் முதலிய பொருள்கள் செய்யப்பட்டு, உபயோகப்படுகின்றன. ஆகவே இப்பேர்ப்பட்ட பிரயோஜனங்களை உத்தேசித்து தேனீ வளர்த்தலென்னுங் கைத்தொழில் நம்முடைய தேசத்தில் கையாளப்பட வேண்டியது அவசியம். கோயம்புத்தூரில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் விவசாய காலேஜில் இந்தத் தொழிலை கவரன்மெண்டார் அங்கே கற்கும் மாணாக்கர்களுக்கு கற்றுக் கொடுப்பார்களானால், விவசாயத் தொழில் ஒழிந்த வேளைகளில், இந்தத் தொழிலை கைக்கொண்டு விருத்தி செய்யக்கூடும். கொஞ்சம் பணமும் முயற்சியும் உண்டானால் இந்தத் தொழில் மேன்மேலும் அபிவிருத்திக்கு வருவதற்கு தடையொன்று மில்லை.

வெ. நரஸிம்மன்.

## MANURES AND THEIR PLANT FOOD CONTENTS.

BY

P. S. MINAKSHI SUNDARAM B. A, D. A.,
*Agricultural Chemist, Messrs. Parry & Co.*

## உரங்களும் அவைகளின் பயிருணவு ஸத்துக்களும்.

பயிர்களும் பிராணிகளைப்போலவே உணவால் ஜீவிக்கின்றன. ஸ்தாவர வர்க்கங்கள் யாவும் மண்ணில் பயிராகி வேர்களின் வழியாயாவது இலைகளின் வழியாயாவது கிரகிக்கும் வஸ்துக்களால் வளர்கின்றன. இலைகளின் வழியாய் உட்கொள்ளும் வஸ்துக்கள் காற்றிலிருந்தும், வேர்கள் வழியாய் உட்கொள்ளும் வஸ்துக்கள் நிலத்திலிருந்தும் கிரகிக்கப்படுகின்றன. இந்த வஸ்துக்களே பயிருணவுகள். காற்றிலிருந்து எடுபடும் வஸ்துக்களை விருத்தி செய்ய மனிதனாலாகாது. பயிரிடுகிற விவஸாயிகள் நிலத்திலிருந்து கிரகிக்கப்படும் பயிருணவுகளைத்தான் கவனிக்கவேண்டும்.

நிலவளம் இரண்டு விதம்:—1. ஸ்வபாவ வளம் அல்லது இயற்கை வளம். 2. ரஸாயன வளம்.



ஸ்வபாவ வளமாவது, ஒரு நிலத்தில் களிமண்ணும், மணலும், ஹ்யூமஸ் என்று சொல்லப்பட்ட மக்கின இந்திரிய வஸ்துக்களும் சரியான அளவில் கலந்திருப்பதே. இப்படிச் சரியான அளவில் கலந்திருக்கிற நிலத்தை 'லோம்' என்றும், பசளை மண் என்றும் சொல்லுகிறார்கள். களிப்பு நிலத்துக்கு மணலும், மணல்பாங்கான நிலத்துக்குக் களியும் சேர்ப்பது வழக்கத்திலிருக்கிறது. இந்த இயற்கை வளத்தினால் பயிர்களின் வேர்கள் நிலத்தில் தாராளமாய்ப் பரவவும், காற்று, தண்ணீர் நிலத்தில் பிரவேசிக்கவும் இடமாகிறது. மக்கின இந்திரியவஸ்து அதிகமாயுள்ள நிலங்களில் காற்றும், தண்ணீரும் தாராளமாய்ப் பிரவேசித்து தங்கியிருந்து, நாளடைவில் செடிகளுக்குக் கொஞ்சங் கொஞ்சமாய் உபயோகமாகின்றன. சுத்தமணல் நிலத்தில் தண்ணீர் தாராளமாய் பிரவேசித்தபோதிலும் தங்காமல் உடனே வடிந்துவிடும். களிமண்ணில் தண்ணீர் பிரவேசிக்கிறதே சிரமம். ஹ்யூமஸ், கலந்திருந்தால் தண்ணீர் தாராளமாய்ப் பிரவேசிப்பதுடன், உடனேவடிந்துவிடாமல் தங்கியிருந்து பயிருக்கு உதவுகிறது. நிலத்துக்கு ஹ்யூமஸின் அருமையைப்பற்றி இன்னொரு வியாஸத்தில் விவரிப்போம்.

ரஸாயனவளமாவது, நிலத்தில் பயிருக்கு வேண்டிய அளவு, பயிரின் விளைவுகாலத்திற்குள் உபயோகமாகக்கூடிய நிலமையில், பயிருணவு ஸத்துக்கள் நிறைந்திருப்பதே. இந்தப் பயிருணவு ஸத்துக்களெல்லாம் மண்ணிலிருந்து வேர்கள் மூலமாய் செடிகளுக்கு உணவாகின்றன. இயற்கைவளமும் ரஸாயனவளமும் பூராவாயுள்ள நிலங்களில் செடிகள் செழிப்பாய் வளர்ந்து பூரா மாசூலைக் கொடுக்கின்றன. ரஸாயனவளத்திற்கு இயற்கைவளம் ஆதாரமானது. அதாவது, இயற்கைவளமிருக்கிற நிலங்களில்தான், ரஸாயனவளம் பயனுள்ளதாகும்.

நிலத்தின் வளப்பம் விருத்தியாகும் பொருட்டு உபயோகிக்கும் வஸ்துக்கள் உரமென்று சொல்லப்படும். விவஸாயிகள் தாங்களே சேகரிக்கக்கூடிய ஆடு, மாடு முதலியவைகளின் சாணம், சாம்பல், குப்பை, தழை முதலியவைகளை எரு என்றும் சொல்லுகிறார்கள். இந்தமாதிரி உபயோகப்படுத்துகிற வஸ்துக்களெல்லாம் இயற்கைவளம், ரஸாயனவளம், இரண்டையும் விருத்தி செய்கின்றன. அதாவது, நிலத்துக்கு இந்திரிய வஸ்துக்களை சேர்ப்பதினால் இயற்கை வளத்தையும், பயிருணவு ஸத்துக்களைச் சேர்ப்பதினால் ரஸாயன வளத்தையும் விருத்திசெய்கின்றன. ஒரு நிலத்தில் ஓயாமல் சாகுபடி செய்வதினால், இயற்கை வளம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டும், ரஸாயனவளம் நாளடைவில் குறைந்து கொண்டும் வரும். ஒரு சாகுபடிக்கு முந்தி, உழுது, கொத்தி சீர்படுத்துவதாலும், சாகுபடி காலத்தில் களை கொத்துதல் முதலியவைகளாலும், சாகுபடிக்குப்பிந்தி மிச்சமாயிருக்கிற தூர் முதலிய சில பாகம் நிலத்தோடு சேர்வதாலும், நிலத்தின் இயற்கை வளம் விருத்தியாய்க்கொண்டேவருகிறது. ஒவ்வொரு சாகுபடியிலும், செடிகள் நிலத்திலிருந்து பயிருணவு ஸத்துக்களை கிரகிக்கிறபடியால், ரஸாயனவளம் குறைந்து கொண்டேவருகிறது. ஆதலால் விவசாயிகள் ஒவ்வொரு சாகுபடியிலும் உரம் போடுவதின் கருத்து பயிருணவு ஸத்துக்களை அதிகப்படுத்துவதற்காகத்தான் என்பது நிச்சயம்.

ஸ்தாவர வர்க்கங்கள் யாவும் பதினான்குமூலவஸ்துக்களடங்கியவைகள் என்று ரஸாயன சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவையாவன: கரி என்று சொல்லப்படும் 'கார்பன்', உயிர்வாயு என்றும் பிராணவாயு என்றும் சொல்லப்படும் 'ஆக்ஸிஜன்', ஜலவாயு என்று சொல்லப்படும் 'ஹைட்ரஜன்', வெடியுப்பு வாயு என்று சொல்லப்படும் 'நைட்ரஜன்', கந்தகம், பிரகாசிதம் என்று சொல்லப்படும் 'பாஸ்பரஸ்', 'பொட்டாஸியம்', 'மாக்னீஸியம்', சுண்ணாம்பின் மூலவஸ்துவான 'கால்ஸியம்', இரும்பு, நாம் சாப்பிடுகிற உப்பின் மூலப்பொருளான 'ஸோடியம்', மணலின் மூலப்பொருளான 'ஸிலிகன்', நாம் சாப்பிடுகிற உப்பிலுள்ள ஒரு வாயுவான 'க்ளோரீன்', 'மாங்கனீஸ்' என்ற ஓர் உலோகம். மேற்சொல்லிய 14 மூலவஸ்துக்களில் கார்பன் முழுவதும் காற்றிலிருந்தே கிரகிக்கப் படுகிறது; ஹைட்ரஜனும் ஆக்ஸிஜனும் தண்ணீரின் வாயுக்களாகையால், தண்ணீரிலிருந்து கிரகிக்கப்படுகின்றன. கந்தகமும், மாக்னீஸியம் என்ற உலோகமும், இரும்பும் ஸோடியமும், ஸிலி

கனும், க்ளோரீனும், மாங்கனீஸும் பயிர்களிலிருந்தபோதிலும் அவ்வளவு முக்கியமானவைகளல்ல. தவிரவும் இவைகள் எல்லாப் பூமிகளிலும் ஏராளமாயிருக்கின்றன. நைட்ரஜன், பாஸ்பரஸ், பொடாஷியம் ஆகிய இந்த மூன்றும் எல்லாப்பயிர்களுக்கும் முக்கியமானவைகள். செடி, கொடி, புல், பூண்டு, முதலியவைகள் நிலத்திலிருந்து இந்த மூன்று மூலவஸ்துக்களையும் வேர், கிழங்கு, தாள், தழை, பூ, காய், பழம், தானியம் முதலிய வெவ்வேறு பாகங்களின் வழியாய் ஏராளமாய் கிரகிக்கின்றன. ஒரு சாகுபடிக்கு முந்தியும் பிந்தியும் நிலத்தின் மண்ணை ரஸாயன முறைப்படி சோதித்துப் பார்த்தால், மற்றெல்லாவஸ்துக்களைப் பார்க்கிலும் நைட்ரஜன், பாஸ்பரஸ், பொடாஷியம் இந்தமூன்றுந்தான் அதிகமாய்ப் பயிரால் எடுபட்டு குறைவுபடைகிறதென்று தெரிகிறது. ஆதலால் பயிரிடுகிறவர்கள் பயிர்விருத்திக்காக உபயோகிக்கிற உரங்களில் இந்தமூன்று மூலவஸ்துக்களும் பூராவாயிருக்க வேண்டுமென்பது விவசாய ரஸாயன சாஸ்திரத்தின் கொள்கை. சுண்ணாம்பின் மூலப்பொருளான கால்ஷியமும் நிலத்திலிருக்க வேண்டியது அவசியம். இது நிலத்திலிருந்தால்தான் ரஸாயனவளம் பூராவாயிருக்கும். நிலத்திலுண்டாகிற ரஸாயன மாறுபாடுகளுக்குச்சுண்ணாம்பு முக்கியகாரணம். பயிர்களிலுள்ள 14 மூலவஸ்துக்களுக்குள், நைட்ரஜன், பாஸ்பரஸ், பொடாஷியம், கால்ஷியம் இந்த நான்கு மூலவஸ்துக்களையும் பயிரிடுகிறவர்கள் முக்கியமாய் கவனிக்கவேண்டும். இப்போது இந்த நான்கு மூலவஸ்துக்களில் ஒன்றாகிய நைட்ரஜனைப் பற்றி கொஞ்சம் விவரிப்போம்.

நைட்ரஜன்:—இதற்கு தமிழில் வெடியுப்பு வாயுவென்று சொல்லலாம். இது நாம் சுவாஸிக்கும் காற்றில் ஐந்தில் நாலுபங்கு இருக்கிறது. ஆனாலும் பயிர்களுக்கு வாயுவாக உணவாகிறதில்லை. நைட்ரஜன்வாயு பிராணவாயு என்ற ஆக்ஸிஜனோடும் சில உலோகங்களோடும் பல அளவில் கலந்து மாறி 'நைட்ரேட்' என்ற உப்பாக ஆகிறது. இந்த நைட்ரேட் தண்ணீரில் கரையக்கூடியது. இப்படி இந்த நைட்ரேட் தண்ணீரில் கரைந்திருந்தால்தான் பயிர்கள் நுட்பமான வேர்கள் மூலமாய் உணவாக கிரகிக்கக்கூடும். இந்த நைட்ரஜன் வாயு, ஜலவாயுவென்ற ஹைட்ரஜனோடு கலந்து, நவாச்சார வாயு வென்ற அம்மோனியாவாக மாறுகிறது. இந்த அம்மோனியா வெவ்வேறு திராவகங்களோடு கலந்து, வெவ்வேறு அம்மோனியா உப்புகளாக மாறுகிறது. அதாவது, அம்மோனியா வாயு கந்தகத்திராவகம் என்ற 'ஸல்ப்யூரிக் ஆஸிட்' உடன் சேர்ந்து ஸல்பேட் ஆப் அம்மோனியா என்ற உப்பாகவும், வெடியுப்பு திராவகம் என்றும் அக்கினிதிராவகம் என்றும் சொல்லப்பட்ட நைட்ரிக் ஆஸிட் உடன் சேர்ந்து 'அம்மோனியம் நைட்ரேட்' என்ற அம்மோனியா உப்பாகவும் மாறுகிறது. இந்த அம்மோனியா உப்புகள் தண்ணீரில் கரையக்கூடியவைகள்தான். ஆனாலும் நைட்ரேட்டாக மாறின பின்புதான் பயிருணவாகின்றன. அம்மோனியா உப்புகள் நிலத்தில் போட்ட கொஞ்ச நேரத்திற்கெல்லாம் நைட்ரேட்டாக மாறிவிடும். நைட்ரேட் உப்புகளும் அம்மோனியா உப்புகளுந்தான் தற்காலத்தில் நைட்ரஜனை உடனே பயிருணவாகக் கொடுக்கக்கூடிய ரஸாயன சரக்குகள். இந்த நைட்ரஜன், பிண்ணாக்குகளிலும், எலும்பிலும், ஜவ்வு, காய்ந்த ரத்தம், கசாப்புக்கடை, தோல் கிடங்கு முதலிய இடங்களில் தள்ளுபடியாகிற இதர பிராணி சம்பந்தமான வஸ்துக்களிலும், தொழு எருவிலுள்ள சாணம் குப்பையிலும், தழை, தாள் முதலிய ஸ்தாவர சம்பந்தமான உரங்களிலும் இருக்கிறது. பிராணி, ஸ்தாவர வர்க்கம் ஆகிய இந்த இரண்டின் சம்பந்தமான உரங்களிலுள்ள நைட்ரஜனுக்கு 'ஆர்கானிக் நைட்ரஜன்' என்று பெயர். பிராணி, ஸ்தாவரவர்க்கம் ஆகிய இவைகள் சம்பந்தமான வஸ்துக்களிலுள்ள நைட்ரஜன் அந்த வஸ்துக்கள் மக்கின காலத்தில் அம்மோனியாவாக மாறி, பிறகு நைட்ரேட்டாக மாறுகிறது. அப்பொழுது தான் பயிர்களுக்கு உணவாகும். மேலேசொல்லிய வஸ்துக்கள் மக்கின பின்பு அம்மோனியாவாகவும் நைட்ரேட்டாகவும் மாறுவதற்கு நிலத்தில் வேண்டிய அளவு சுண்ணாம்பு இருக்க வேண்டும்.

பசுந்தாள் உரமும் நைட்ரஜனை விருத்தி செய்கின்றது. 'லெக்யூமினோஸி' என்னும் ஸ்தாவரவர்க்கப் பயிர்கள் காற்றிலிருக்கிற



நைட்ரஜனை நிலத்திற்கு சேர்க்கக்கூடியவைகள் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். நம்தேசத்துப் பயிர்களில் இந்த வர்க்கத்தைச் சேர்ந்தவைகள் காராமணி, கொள்ளு, பச்சைப்பயறு முதலிய பயறுகள், உளுந்து, துவரை, கொத்துக்கடலை, நிலக்கடலை, மொச்சை, அவுரி, காட்டு அவுரி, அவரை, கொத்தவரை, வாளவரை, பட்டாணி முதலியவைகள். ஆவாரை, அகத்தி, கொன்னை, வாகை முதலிய மரங்களும் இந்த வர்க்கத்தைச் சேர்ந்தவைகள்தான். இந்தவர்க்கச் செடிகளின் வேர்களில் சிறு குண்டு வடிவமான முடிச்சுகள் சிதறியிருப்பதைப் பார்க்கலாம். இந்தமுடிச்சுகள் எண்ண முடியாத சிறு க்ருமிகளால் நிரம்பியிருக்கின்றன. இந்தச் சிறு க்ருமிகள் காற்றிலுள்ள நைட்ரஜனை கிரகித்து ஜீவிக்கின்றன. இந்த வர்க்கப் பயிர்களை சாகுபடி செய்வதால், மாசூலை யெடுத்துக்கொண்டபோதிலும், வேர்களிலிருக்கிற நைட்ரஜன் நிலத்திற்குச்சேரும். சில வேளைகளில் பயிரையே பூக்கிற காலத்தில் மடக்கி உழுகிறதும் உண்டு. இப்படிச் செய்வதில் தாள் தழைகளிலுள்ள நைட்ரஜனும் நிலத்துக்குக் கூடுதலாகிறது. இதுவும் ஆர்கானிக் நைட்ரஜன் தான்.

மேலே சொல்லிய உரங்களில் ஒவ்வொன்றிலும் எவ்வளவு நைட்ரஜன் இருக்கிறதென்பதையும், பயிர்களுக்கு நைட்ரஜனாலுண்டாகும் பயனையும் இன்னொரு ஸஞ்சிகையில் விசாரிப்போம்.

பி. எஸ். மீனாக்ஷிசுந்தர சாஸ்திரி.

---

## CREDIT BUSINESS.

## கடன் வியாபாரம்.

வியாபாரமென்பது பரோபகாரமான காரியம். தானே சகலபண்டங்களையும் உற்பத்தி செய்யாவிட்டாலும் வியாபாரியானவன் பிறர் பண்டங்களை யெல்லாம் வாங்கி வைத்துக்கொண்டு, எவரெவர் எது கேட்கிறார்களோ, அதை அவர்களுக்குச் சுளுவாக எடுத்துக் கொடுக்கிறான். இதுவே வைசிய தருமம்.

சரியான விலைக்கு விற்று அதிக லாபத்தையே உத்தேசித்து வஞ்சியாமல் உண்மையான மார்க்கத்தில் சேர்க்கப்படும் திரவியமே கெடாமல் நிற்கக் கூடியது. இப்படிச் செய்யும் வியாபாரத்திற்கு நமது முன்னோர்கள் "அறவாணிகம்" என்று பெயரிட்டு, இந்த நியாயவழியை சிலாகித்திருக்கிறார்கள்.

உண்மை பேசுவதையே வியாபாரி தன்னுடைய விரதமாகக்கொள்ள வேண்டும். பிறரிடத்திலும் உண்மையல்லாத பொய்யை ஒருபோதும் அங்கீகரிக்கக் கூடாது. ஒரு பைசாவானாலுங்கூட, பொருள் பெரிதல்ல. வியாபாரத்தில் ஒவ்வொரு பேச்சும் மதிப்புள்ளதாகையால், உண்மை தவறாதிருக்க வேண்டும்.

தன்னிடம் வாங்க வருகிறவர்களை வியாபாரி இரண்டு வகையினராய்ச் சற்று அநுபோகமானவுடன் பிரித்துவைத்துக்கொள்ள வேண்டும். என்ன நேரிட்டாலும் வார்த்தை தவறாமல் சொல்லியது சொல்லியபடி செய்பவர்களையே வியாபாரி எப்போதும் நம்பவேண்டும். சால்ஜாப்பு சொல்பவர்கள் வந்தால் "ஐயா, போனதடவை உங்களோடு வியாபாரம் வைத்துக்கொண்டதில் நீங்கள் வார்த்தைப்படி நடந்து கொள்ளத்தவறினீர்கள். ஆதலால் இனி உங்களை நம்ப எனக்கு மனமில்லை. மனஸ்தாபம் வேண்டாம்" என்று பக்குவமாகவும் கண்டிப்பாகவும் சொல்லிவிட வேண்டும்

அப்படிக்கில்லாமல் எவர் வந்து கேட்டபோதிலும் நாணயம் பிசகமாட்டார்களென்று நினைத்துக் கடனுப்பண்டங்களைக் கொடுத்துவிடக் கூடாது. இது பெரிய தவறு. ஆகாரவிஷயங்களுக்கு உபயோகமாகும் பண்டங்களை விற்பதில் இந்த கோட்பாடு மிகச்சிறந்தது. கடன் கொடுத்து வாங்கிக்கொள்வதென்பது நல்ல விஷயமே. ஆனால் அப்படிக் கடன் வாங்கிக் கொண்டு போகிறவர்களும் தங்கள் வார்த்தைப்படி நடந்துகொண்டு வந்தால் தான் இருதிறத்தாருக்கும் கஷ்டமில்லை.

ஒவ்வொருவனும் வியாபாரத்திற்குத்தனியாகத் தொடங்குவதற்கு முந்தியே, தன்னுடைய சொந்த திரவியம் கொஞ்சம் வைத்துக்கொள்வதே நல்ல வழக்கம். ஆனால் ஏழைக் குடித்தனக்காரனும், புதிதாய் வியாபாரம் செய்ய உத்தேசிப்பவனும், முதலில் கடன் வாங்கி விவசாயம், வியாபாரம், செய்ய ஆரம்பிப்பது சகஜமே. கடன் வாங்கிக்கொண்டால், வாங்கின இடத்தில் நாணயமாய் சொல் தவறாமல் கொடுத்துக்கொண்டே வந்தால், வியாபாரத்

தில் நாளுக்கு நாள் நாணயம் அதிகரிக்கும். வாங்கவாங்கக் கொடுத்துக் கொண்டேவரும் பக்ஷத்தில் இருதிறத்தாருக்கும் ஸல்லீசாய் இருக்கும். இப்படிக்கில்லாமல் கேட்ககேட்க கொடுத்துக் கொண்டேவந்தால் கடன் அதிகமாய்விடுமே யென்ற யோசனை கொஞ்சங்கூட இல்லாமல் எவரும் அதிகச்செலவு செய்து பிறகு கொடுக்க நிர்வாகமில்லாமல் வியாபாரியை நஷ்டத்திற்குள்ளாக்குவார்கள்.

கடன் சுலுவாய்க்கிடைக்குமென்றது தெரிந்தவுடன் எவரும் தம்முடைய வரும்படிக்கு மீறி அனாவசியமான செலவுகள் எல்லாம் வைத்துக்கொள்ள ஆரம்பிப்பார்கள்.

சாதாரண நாட்டு காடாவேஷ்டி கட்டசக்தியற்ற குடியானவன்கூட ஒரு ஜவுளிக்கடையில் கணக்கு வைத்துக்கொள்வானானால், அப்படி வைத்துக்கொண்டவுடன் அதிகவிலையுள்ள பட்டுக்கரை வேஷ்டிகளையும் வாங்கிவிடுவான். கடன் வாங்கிவிடுவது சுலபமாயிருக்கலாம், பிறகு நாணயம் பிசகாமல் திருப்பிக்கொடுப்பது முன்யோசனையில்லாமல் வாங்கின அநேகசெலவாளிகளுக்கு கஷ்டமாகும். கையில் பணம் கொடுத்தாலல்லாமல் சாமான் கொடுப்பதில்லை யென்று தெரிவித்துவிட்டால் இந்தக் கடன்வாங்கும் துர்வழக்கத்தை வியாபாரி மாற்றி விடலாம். ஆனால் சில வேளைகளில் கடன்கொடுப்பது தருமமாகத்தோன்றுகிறது. வெள்ளப்பாழாலும் மழை பெய்யாமையாலும், பயிர் சேதமாகி கஷ்டப்படுகிற குடியானவனுக்கும், சொற்ப சம்பளத்தில் இருந்துகொண்டு அடுத்தமாதம் கொடுத்துவிடக் கூடிய சிறு வேலைக்காரர்களுக்கும் இன்னம் பலவித சிரமதிசையில் இருப்பவர்களுக்கும் கொஞ்சகாலம் வரையில் மட்டும் கடனுக்குசாதாரண விலைக்கே சாமான் விற்கலாம். ஆனால் கடன் கொடுத்துக்கொண்டே வந்து பிறரை அளவுக்கு மீறிசெலவழிக்கவிடக்கூடாது.

வியாபாரியிடத்தில் ஒருவன் கடன் பெற்றுக்கொண்டால் பிறகு கடனைத்திருப்பிக் கொடுக்கமுடியாதகாலத்தில் வியாபாரியைத்திருப்தி செய்யும்பொருட்டு இன்னும் அவனிடம் கடன் வாங்கிக்கொள்ளுகிறான். வியாபாரியும் கேட்கும் கடனைக்கொடுப்பானானால் அவனை அதிகமாய்ச் செலவிடும்படி தூண்டி கடைசியில் தான் நஷ்டமடைவதின் பொறுப்பை வியாபாரியே ஏற்றுக்கொள்ள வேண்டியது. தனக்குமனம் பிடியாவிட்டாலும் உபயோகமல்லாத சரக்குகளையும் அதிகவிலைக்கு வாங்கும்படி நேரிடுகிறது. இப்படி நிர்ப்பந்தத்திற்காக வாங்கிவாங்கி கடன் அதிகமாகிறது. ஆகவே வியாபாரியின் செய்கையாலேயே கடன் வாங்குகிறவனும் மேன்மேலும் கடன் வாங்கத் தூண்டப்பட்டு கஷ்டத்திற்குள்ளாகிறான்.

ஆகவே, கடன் கொடுக்கிறதென்று ஏற்பட்டுவிட்டால் எவ்வளவுதான் வாங்குவது என்ற கணக்கில்லாமல் யாரும் தம்மளவுக்கு மீறி வாங்கிக்கொண்டேவருவார்கள். இப்படிக் கடன் கொடுப்பதினால்தான் சீமையிலும் இந்தியாவிலும் இன்னும் அநேக தேசங்களிலும் பெரிய பெரிய கம்பெனிகள் ‘திவாலாய்’ போகின்றன. காரணம் என்னவென்றால் “நமக்கென்ன, எவ்வளவுகேட்டாலும் கடன் கிடைத்து விடுகிறது, வியாபாரம் செய்வோம்” என்று தமக்குத் தோது புரியாத பல வியாபாரங்களில் தலையிட்டுக்கொண்டு பல இடங்களில் நஷ்டமடையுங்காலத்தில் மேன்மேலும் மனதைக்கட்டுப்படுத்திக் கணக்கை ஆராயாமல் கடன் வாங்கிக்கொண்டே வந்து கடைசியில் கடன் வாங்கினவர்கள் ஒன்றுந்தோன்றாமல் திகைப்பதே.

ஆகவே, கடன் கொடுத்தால் அப்போதைக்கப்போது நாணயமாய் வரக்கூடியதாயிருந்தாலல்லாமல் பிற இடங்களில் கொடுக்கக்கூடாது. வாங்குகிறவர்கள் நிலைமை, அவர்கள்சக்தி, இவைகளைத்தெரிந்து கொள்ளவேண்டும். தமக்கு என்ன தொந்தரை நேர்ந்தாலும் திருப்பிக்கொடுக்கவேண்டுமென்ற ஞாபகமுடையவருக்குக் கொடுப்பதில் தவறில்லை. வியாபார விஷயமாய்க்கடன் கொடுப்பதானால் வாங்குகிறவன் புகும் வியாபாரத்தின் தோது தெரிந்து, விருத்திக்கு வரக்கூடியவன்தானா என்று யோசித்து ஆராய்ந்து கடன் உதவி செய்யவேணும். எதையும் யோசித்துத் திருப்பிக்கொடுக்கும் காலத்திற்குத்தக்கபடி கிரயத்தையும் சரிவரக்கூட்டி, அதிகலாபத்திற்கு இச்சிக்காமலும், நஷ்டத்திற்கு உள்ளாக்கிக்கொள்ளாமலும் நாணயமான இடங்களில் வாணிகம் செய்வதில், பிரதிப்பிரயோஜனமும் சௌகரியமுமிருக்குமேயொழிய, குறைவு நேராது.



## CO-OPERATIVE CREDIT SOCIETIES.

BY
V. PANCHAPAGESA AIYAR,
*Secretary, Sengalipuram Co-operative Society.*

## ஐக்கிய நாணயச்சங்கங்கள்.

பிழைக்கும் வழியைத்தேடுகிறவர்கள் இந்தச் சங்கங்களைப் பற்றிய விவரங்களை அறிய வேண்டியது அவசியம். இந்தச்சங்கங்கள் அன்னிய தேசங்களில் வெகுகாலமாய் அனுஷ்டானத்திலிருந்து வருகின்றன. விவசாயிமுதலான ஏழைகளின் மேல் கருணையுள்ள லார்டு கர்ஸன், நம்முடைய தேசத்தில் ராஜப்பிரதிநிதியாயிருந்த காலத்தில் செய்த நன்மைகளில் இந்த சங்கங்களை ஏற்படுத்தியது ஒன்று. அவர் காலத்தில் 1904-௵த்து 10வது ஆக்டாகிய ஐக்கிய நாணயச்சங்க சட்டம் பாஸ் செய்யப்பட்டு, மாகாணங்கள் தோறும் அவைகளை ஏற்படுத்தி பரிபாலித்து வர ரிஜிஸ்ட்ரார்களும் அவர்களுக்கு உதவியான உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்பட்டார்கள். நம்முடைய சென்னை மாகாணம் சம்பந்தப்பட்டமட்டில் இவைகள் திருப்திகரமாய் விருத்தியடைந்து வந்திருக்கின்றன என்பது அடியில்கண்ட விவரங்களால் விளங்கும்.

| | சங்கங்கள் | மெம்பர்கள் | டிபாஸிட் உள்பட முதற் பணம் ரூ |
|---|---|---|---|
| 1905 ஏப்ரல் 1௳ | 10 | | 16,320 |
| 1906 ,, | 27 | 2773 | 142,094 |
| 1907 ஜூலை 1௳ | 63 | 6439 | 649,225 |
| 1908 ,, | 101 | 9537 | 11,12,641 |

இந்தக் கணக்கைப் பார்த்தால் நம்முடைய மாகாணத்தில் அவைகள் இன்னும் திருப்திகரமாய் விருத்தியடையுமென்று நம்ப ஹேது இருக்கிறது. சென்ற பிப்ரவரி ௴ 29௳யில் காஞ்சீபுரத்தில் கூடிய செங்கல்பட்டு ஜில்லா கோ-ஆபரேடிவ் கான்பரன்ஸுக்கு ரெவினியு போர்டு கமிஷனரான கனம். காவில் ஸ்டேவர்டு ஸ்டேவர்டு துரையவர்கள் எழுதிய கடிதத்தில் “சென்னையிலுள்ள நாம் நாளது வரையில் (அந்தச்சங்கங்கள்) அடைந்திருக்கும் விருத்தியைக் கண்டு வெட்கமடைய நியாயமில்லை” என்று சொல்லியிருக்கிறார். 1908-௵ ஜூன் ௴ கடைசியில் நம்முடைய ராஜதானியிலுள்ள மலையாளம், தென்கன்னடம், அன்ஜங்கோ, நீலகிரி, இந்த 4 ஜில்லாக்கள் நீங்கலாக மற்ற ஜில்லாக்களிலெல்லாம் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கவரன்மெண்டாரவர்கள் இந்தச் சங்கங்கள் விஷயமாக செய்திருக்கும் ஸ்டாம்புத் தீர்வையில்லாமை, ரெஜிஸ்ட்ரேஷன் சார்ஜ் இல்லாமை, சங்கத்தின் லாபத்தைக்குறித்தாவது சங்கத்தின் சந்தாதார்கள் பெற்றுக்கொள்ளும் ஈவுத்தொகை முதலியதொகைகளைக்குறித்தாவது செலுத்தத்தக்க வருமான வரி தள்ளுபடி, முதலிய பலசவுகரியங்களுடன் அந்தச்சங்கங்களின் மேல்விசாரணை, பரிசோதனை இவைகளுக்காக வருஷந்தோறும் ஏராளமான திரவியமும் செலவிட்டு வருகிறார்கள். சென்ற 1908-௵த்தில் மாத்திரம் நம்முடைய சென்னை கவரன்மெண்டில் செலவு செய்யப்பட்டிருக்கும் தொகை ரூ. 37,308. இந்தச் சங்கங்கள் எங்கும் ஏற்படுத்தப்பட்டு விருத்தியடைந்துவிடுமானால் ராஜ்ய ஸ்வதந்திரங்களுக்காக மன்றாடும் காங்கிரஸார், தேசத்தின் செல்வப்பெருக்குக்காகப்பாடுபடும் பெரியோர்கள் ஆகிய இவர்களுடைய நோக்கங்கள் வெகு சுலபமாய் கைகூடிவிடுமென்பதில் சந்தேகமில்லை.

இதன்மேல், இந்தச் சங்கங்களால் உண்டாகும் நன்மைகளையும் பிரயோஜனங்களையும் பற்றிக் கவனிப்போம். இவைகளையுண்டுபண்ணிய கவரன்மெண்டாரின் நோக்கம் “விவசாயக்கா

ர்களும் சுவல்ப வருமானமுள்ள கைத்தொழிலாளிகளும் மற்றவர்களும் சிக்கனமாய் செலவுசெய்து தங்களுக்குத்தாங்களே உதவி பண்ணி ஒற்றுமையோடு இருக்க அவர்களை உற்சாகப்படுத்துவது" என்று சட்டத்தில் காணப்படுகிறது. இந்த நோக்கங்கள் முழுமையும் சித்தியடைகின்றன என்பதை அந்தச்சங்கங்களில் அநுபவமுள்ளவர்கள் நன்றாய் அறிவார்கள். அவைகளை அடியில் சுருக்கமாய் விவரிப்போம்.

**சிக்கனம்.** பொருளை வீணில் செலவழிக்காமல் பிரயோஜனமான வழிகளில் உபயோகப்படுத்தி செட்டாயிருப்பதற்குச் சிக்கனம் என்று பெயர். இந்தச் சங்கங்களிலிருந்து இது சித்தியடைகிற விதத்தை பார்ப்போம். சாதாரணமாய் ஒரு விவசாயியோ, தொழிலாளியோ, வியாபாரியோ, தன்னுடைய உழைப்பிலிருந்து தகுந்த பலனையடையவிரும்பினால் ஆரம்பத்தில்முதல் வேண்டியது அவசியம். முதலிருந்தால்தான் மாடுகள், எரு, விதை, ஆயுதங்கள், தளவாடங்கள், வியாபாரத்துக்கு வேண்டிய சாமான்கள் முதலியவைகளை வாங்கி உழைப்பினால் பிழைக்கலாம். இல்லாவிட்டால் முடியாது. அதற்காக கடன் வாங்கவேணும். இந்த நிலைமையிலுள்ளவர்கள், ஐக்கிய நாணயச்சங்கங்களைத்தவிர, வேறு எந்த இடத்தில் கடன் வாங்கினாலும் அவர்கள் நிலைமை துக்கிக்கத்தக்கதாகிவிடும். கடன் வாங்குபவர்களின் சவுகரியப்படி கடனுக்குத்தவணையும், வட்டியும், மற்ற நிபந்தனைகளும் ஏற்படுத்திக்கொண்டு அவர்கள் முன்னுக்குவரவேணுமென்ற கவலையுடன் கடன் கொடுப்பவர்கள் நடந்து கொண்டாலல்லாமல் கடன் வாங்கியவர்கள் ஒருபோதும் நல்ல ஸ்திதியை அடையமாட்டார்களென்பது நிச்சயம். கடன் வாங்குகிறவர்கள், வாங்கும்போது, பிந்தி இந்த விதமான கஷ்டங்களில் சிக்கிக்கொள்ளப் போகிறோமென்பதை யோசியாமலே, எல்லா நிபந்தனைகளுக்கும் உட்பட்டுவிடுவார்கள். ஒரு கெடுவில் 60 ரூ. கொடுக்கவேண்டிய ஒருவன், கெடுத்தவறினால் ௴ 1க்கு ரூபா 1க்கு கால் ரூபாய் விதம் வட்டியும், பிரதி 6 ௴த்திலும் காம்பவுண்டு அதாவது, விசை வட்டியும் சேர்த்துக்கொடுப்பதாக ஒரு பத்திரம் எழுதிக்கொடுக்க, அது மூன்று வருஷத்துக்குள் ரூபா 12,000க்கு மேலாயிற்று. மூன்று கோர்ட்டு வரையில் இருகட்சிக்காரர்களும் வியாச்சியமாடி. கடைசியாக, வாதிக்குப் பிரதிவாதி அசல் தொகை ரூபா 60-ம் அதற்கு வருஷம் 1க்கு 100க்கு 24 வீதம் வட்டியும் கொடுக்கும்படி சென்னை ஹைகோர்ட்டில் சமீபத்தில் ஒரு தீர்மானமாகியிருப்பதாக பத்திரிகைகளில் வெளியாயிருந்தது. இருவர்களும் முன்னாலேயே பின்வரக்கூடிய ஸ்திதியை நினைத்து நடந்துகொண்டிருந்தால் மூன்று கோர்ட்டுகளிலும் இரண்டுபேர்களும் செலவு செய்த ஏராளமான பணத்தை நஷ்டப்படவேண்டிய அவசியம் இருந்திராதல்லவா? சாதாரணமுதலாளியிடம் கடன் வாங்குவதைப்பற்றி ராவ் பகதூர் எம். ஆதிநாராணய்யா அவர்கள், செங்கல்பட்டு கூட்டத்து அக்கிராசனப்பிரசங்கத்தில் சொல்லுகிறார். "விவசாயத்துக்குப் பண உதவி யெல்லாம் இப்பொழுது லேவாதேவி செய்யும் முதலாளிகளால் பண்ணப்படுகிறது. அனேகம் கேஸ்களில், அவர்களால் உண்மையான விவசாய முயற்சிக்கு பிரயோஜனமில்லையென்று சொல்லும்படியாய் அவர்களுடைய நிபந்தனைகள் அவ்வளவு அநியாயமாயும் கண்டிப்பாயுமிருக்கின்றன." லேவாதேவி செய்கிறவர்களிடம் கடன் வாங்குவதில் உள்ள கஷ்டங்கள் என்னவென்றால், அதிக வட்டியும், செலவும், இவைகளைக் காட்டிலும் வாங்குகிறவர்களுக்கு மிகுந்த கெடுதலை விளைவிப்பதும் நயமாயிருந்து அவர்களையடியோடு கெடுப்பதுமான கெடுநிபந்தனையுமே. கடன் வாங்கும்போது கடன் கொடுக்கிறவர்கள் ஒருதவணையைக் குறித்துக்கொண்டு அந்தத்தேதியில் முழுத்தொகையையும் திருப்பி கொடுக்க வேண்டுமென்று நிபந்தனை ஏற்படுத்திக் கொள்ளுவார்கள். கடன் தொகையை 2 தடவையாகத்திருப்பிப் பெற்றுக் கொள்வதற்குக்கூட லேவாதேவி செய்கிறவர்கள் சம்மதியார்கள். வாங்கின தொகையை சில்லரையாகச் செலுத்துவது கடன் பட்டவர்களுக்கு சவுகரியமென்றால், முதலாளிகள் அப்படி வாங்கிக்கொள்ளுவதில் தங்கள் முதல் கரைந்து உருவாகாமல் போய்விடுமென்று நினைக்கிறார்கள். கடன்வாங்கினவர்கள் கடனை ஒரு குறித்த தேதியில் ஒரே மொத்தமாகக் கொடுப்பதென்றால் அது ஒரு நாளும் சாத்தியமாகாத காரியம். இதனால் என்ன ஆகிறது? வாங்கின கடன் ஒரு போதும் ஈடாகிறதில்லை. கடன் வாங்கினவரிடம் அப்போதப்போது சேரும் தொகைக்கு ஏதாவது செலவு ஏற்பட்டுவிடும். அவர்களிடம் பணமிருந்தால் செலவுக்கா இடமில்லை? எப்படியாவது அனாவசியமானவழிகளில் செலவாகிவிடும். கடைசியில் கடன் தொகை தலைமட்டம் கொண்டு நிலத்தையும் இன்னும் மற்ற சொத்தையும் விழுங்கிவிட்டு ஆளையும் விழுங்கப்பார்க்கும்.



ஐக்கிய நாணயச்சங்கங்களின் விஷயத்திலோ அப்படியில்லை. இந்தச்சங்கங்களுக்கு எழுதிக் கொடுக்கப்படும் பத்திரங்களுக்கு ஸ்டாம்புக்கிரயம், ரிஜிஸ்ட்ரேஷன் பீஸ் முதலிய செலவுகள் இல்லை. கடன் வாங்குகிறவர்கள் கடனைத்திருப்பிக்கொடுக்க அவர்களுக்கு சவுகரியமானபடி ஒரு கெடுவை ஏற்படுத்திக்கொண்டு அந்தத்தவணைக்குள் எப்போதாவது சில்லரை சில்லரையாக தங்களிடம் சேரும்போதெல்லாம் தொகையைச்செலுத்தி கடனை தீர்த்துவிடலாம். கெடுவுக்குள் முழுத்தொகையும் செலுத்தமுடியாதவர்கள், அவர்கள் ஏற்படுத்திக்கொள்ளும் விதிகளையனுசரித்து, ஒவ்வொரு வருஷத்திலும் வட்டியையும் முதலில் ஒரு பாகத்தையும் செலுத்திவந்து சில வருஷங்களில் கடனைத் தீர்த்து விடலாம். கடன் வாங்கினவர்கள் வாங்கிய கடனையடைக்காமல் வீண்செலவு செய்யும்பட்சத்தில் அவர்களை நெருக்கி கடனைத்தீர்க்கும்படி கட்டாயப்படுத்தலாம். இப்படியாக இந்தச்சங்கமானது அதன் மெம்பர்கள் வீணில் கடன் படாமலும் வீண்செலவு செய்யாமலும், வீண்நஷ்டப்படாமலும் பாதுகாக்க ஒரு ரட்சகனாயிருக்கிறது. மிஸ்டர் கிளின் பார்லோ என்பவர் "இண்டஸ்ட்ரியல் இந்தியா" என்னும் புஸ்தகத்தில் எழுதுகிறார். "வறுமையடைந்த கிருஷிகனுக்கு பெந்தகப்பத்திரத்தைக் கையெழுத்து செய்யக்கொடுத்து அதில் ஏற்படுத்தியிருக்கும் அதிகவட்டியாலும், வஞ்சனையான ஷரத்துக்களாலும் அந்த கிருஷிகனுடைய நெல் வயல் சீக்கிரத்தில் தன்னுடைதாயிருக்குமென்று நினைத்துக்கொக்கரிக்கும் சாவுகார், பணம் சம்பாதிப்பதில் தேசாபிமானத்தோடு கூடினவனாக ஆகமாட்டான். அப்படிப்பணம் சம்பாதிப்பது சட்டத்துக்கு விரோதமில்லாமலிருந்தாலும் அது எல்லா விதத்திலும் வெறுக்கத்தக்கதாகவும், தேசாபிமானத்துக்கு விரோதமாகவுமிருக்கிறது." இந்த விதமாக சாதாரண முதலாளிகளிடம் கடன் வாங்குவதற்கும் ஐக்கிய நாணயச்சங்கங்களில் கடன் வாங்குவதற்குமுள்ள வித்தியாசத்தைக் கொண்டு சிக்கனம், அதாவது, செட்டு எப்படி யுண்டாக்கப்படுகிறது என்பதை அறிந்து கொள்ளலாம். மேலும், கடன் வாங்கவேண்

டிய அவசியமில்லாதவர்கள் தங்களிடம் அப்போதப்போது சேரும்பணத்தை வீணாக்காமல் இந்தச்சங்கங்களில் போட்டுவைத்து கவலையில்லாமலிருக்கலாம். இந்த மாதிரி சில்லரையாக சேகரித்து வைத்தபணம் வட்டியுடன் மொத்தமாகச் சேர்ந்து அவசியமுள்ள காலத்தில் கடன் வாங்காமல் உபயோகப்படுத்திக்கொள்ள உதவும்.

**சுய உதவி.**—எல்லாவழிகளிலும் இதரர்களுடைய உதவியையே தேடாமல் பரஸ்பரம் உதவி செய்துகொள்ளுவதற்கு சுய உதவி என்று பெயர். இந்தச்சங்கங்களின் ஏற்பாடும் நிர்வாகமும் இந்தநோக்கத்தையே முக்கியமாகக் கொண்டவைகள். மெம்பர்களெல்லாரும் ஒன்றாய்ச்சேர்ந்தால், இந்தச்சங்கம் ஏற்படுகிறது. மெம்பர்கள் சேர்ந்து தங்களால் கூடுமானமட்டில் முதல் ஏற்படுத்திக்கொள்ளுகிறார்கள். அவசியமான விதிகளை சந்தர்ப்பத்துக்குத் தகுந்தபடி தாங்களே ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். தங்களுக்குள் பணம் தேவையாயிருக்கும்போது வேண்டிய தொகையை கடனாக வாங்கிக்கொள்ளுகிறார்கள். வரும் லாபங்களை எல்லாரும் பங்கு வீதப்படி அடைகிறார்கள். தேவையாயிருக்கும் பணத்தை தங்களுக்குள்ளேயே பணமுள்ளவர்கள் உதவ, தேவையுள்ளவர்கள் வாங்கி உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். வெளியிலிருந்து கடன் வாங்கவேண்டிய அவசியம் நேரிட்டாலும் எல்லாருடைய பொறுப்பிலும் வாங்கி உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். இந்த மாதிரியாக இந்தச்சங்கங்களின் நடவடிக்கைகளெல்லாம் சுய உதவியை நாடினதாக இருக்கின்றன.

**ஒற்றுமை.**—தற்காலம் நம்முடைய தேசம் முன்னுக்குவர ஒற்றுமையும் பரஸ்பர நம்பிக்கையுமே முக்கிய சாதனங்களாக வேண்டியிருக்கின்றன. பரஸ்பர நம்பிக்கையில்லாமையே ஒற்றுமைக் குறைவுக்கு முக்கிய காரணம். இந்தச்சங்கங்கள் பரஸ்பர நம்பிக்கையில்லாமையைத் தொலைத்து ஒற்றுமையை விருத்தி செய்வதற்கு மிகுந்த அனுகூலமாக இருக்கின்றன. அநேகமாக எல்லாச் சங்கங்களிலும் ஒருமெம்பர் கடன் வாங்கவேணுமானால் அதற்கு மற்றொரு மெம்பர் ஜாமீனாக இருக்கவேண்டுமென்றவிதி அனுஷ்டானத்திலிருக்கிறது. புதிதாய் சங்கம் ஏற்படுத்தப்படும்போது இந்தமுறை சங்கத்தின் விருத்திக்கு இடைஞ்சலென்று நினைத்தவர்களெல்லாம் அதனால் பின்னிட்டு சவுகரியமுண்டாயிருப்பதை அனுபவத்தில் அறிந்து கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரி ஒருவருடைய கடனுக்கு மற்றொருவர் ஜாமீனாயிருப்பதென்கிற விதியை ஒவ்வோரிடத்திலும் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர ஆரம்பத்தில் கொஞ்சம் சிரமம் இருந்தாலும், அந்த மாதிரிதான் கடன் கொடுக்கப்படுமென்று கண்டிப்பாய் விதிசெய்து கொண்டு முதலில் ஒருவருக்கொருவர் ஜாமீனாயிருந்து கடன் வாங்கிக் கொள்ளும்படி செல்வாக்குள்ளவர்கள் தூண்டினால் உடனே நல்ல விருத்தியை யடையாவிட்டாலும் நாளாக நாளாக இந்த வழக்கம் சர்வ சாதாரணமாகிவிடும். இந்த அனுஷ்டானத்தால் விளையும் பயன் என்ன? ஒருவருக்கொருவர் பணத்தின் மூலமாய் பிணைக்கப்படுவதால் பரஸ்பரமிருந்த அசூயையும் நம்பிக்கையில்லாமையும் கண்டிப்பாய் விடுபட்டு ஒருவருடைய க்ஷேமலாபங்களில் மற்றவருக்கு சிரத்தையும் கவலையுமுண்டாகி விடுகின்றன. இன்னும் இந்தச்சங்கங்களின் நிர்வாகத்தில் எல்லா வழிகளிலும் நம்பிக்கையில்லாமையைக் களைந்து ஒற்றுமையை விருத்தி செய்யத் தகுந்த சாதனங்களிருக்கின்றன.

**விவசாய விருத்தி.**—நம்முடைய தேசத்திற்கு



விவசாயமே முக்கிய ஜீவாதாரம். பெரும்பான்மையானவர்கள் விவசாயம் வரவர க்ஷீணதிசையடைந்துவருவதையும் நிலத்தின் வளம் குறைந்து வருவதையும் நன்றாயுணர்ந்து, கவர்ன்மெண்டாரும் பல தேசாபிமானிகளும் அதை நிவர்த்திக்க முயற்சித்து வருகிறார்கள் என்பது 'பிழைக்கும் வழி' யைப் படிப்பவர்களுக்கு நன்றாய்த்தெரியும். முன்னே சென்னையிலிருந்தவரும், இப்போது ஜுநகாத் ஸமஸ்தானத்தில் விவசாய டைரெக்டராயிருப்பவருமான கென்னி யென்பவர் "இந்தியாவின் விவசாய உயிர்ப்பிப்பு" என்ற புஸ்தகத்தில் எழுதுகிறார்: "இந்தியாவின் ஊழியத்துக்காக தங்களுடைய ஆயுளைச்செலவிடுவதாக மெம்பர்கள் பிரதிக்ஞைசெய்து கொண்டு தேசம் முழுவதும் கிளைகளுடன் புனாவில் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லையா? அவர்கள் பிரதிக்ஞைசெய்து கொண்ட தேசத்துக்கு கிருஷிகர்களை கடன் பாரத்திலிருந்து நீக்கவும், அவர்கள் வயல்களுக்கு அத்தியாவசியமான எருக்களை வாங்கவும், மொத்தமாய்வாங்கி தங்கள் செலவுகளைக் குறைத்துக்கொள்ளுவதற்காகவும், தானியங்களைச் சேர்ந்து விற்று தங்கள் வரும்படிகளை அதிகப்படுத்திக் கொள்ளுவதற்காகவும், அவர்களை ஒன்றாய்ச்சேர உதவும்படிக்கும், கடைசியாக ஒவ்வொரு மெம்பருக்கும், முழுசமுகத்துக்கும் அளவற்ற பிரயோஜனப்படுகிற ஒரு பொதுக்காரியத்துக்காக அவர்களை ஒன்று சேரும்படி கற்பிக்கிறதுமான ஐக்கிய நாணயச்சங்கங்களை ஏற்படுத்துவதைக்காட்டிலும் வேறு பெரிய ஊழியமிருக்கக்கூடுமா' என்று கேட்கிறார். செங்கல்பட்டு' கூட்டத்தின் அக்கிராசனப்பிரசங்கத்தில் ராவ் பகதூர் ஆதிநாரணய்யா அவர்கள் விவசாயிகள் சாதாரணமாய் எங்கும் கடன்பட்டவர்களாக இருக்கிறார்களென்றும் நம்முடைய தேசத்தில் அவர்களின் நிலைமை மிகவும் கெடுதலாக இருக்கிறதென்றும் சொல்லுகிறார். சாதாரணமாய் கடன் கொடுத்து வாங்கும் முதலாளிகளிடமிருந்து விவசாயிகள் கடன் வாங்குவதற்கும், இந்தச் சங்கங்களிலிருந்து கடன் வாங்குவதற்கும் உள்ளதாரதம்மியத்தை மேலே சிக்கனமென்கிற தலைப்பில் விவரித்திருக்கிறதிலிருந்து சற்று நிதானித்தால் விவசாயத்தின் மேலே சொல்லிய நிலைமையை நிவர்த்தி செய்ய ஐக்கிய நாணயச்சங்கங்களைத் தவிர வேறு வழியில்லை யென்பது தெளிவாய் விளங்கும்.

**தொழில் விருத்தி.**—நம்முடைய தேசம் பூர்வீக நிலைமையிலிருந்து மாறி வறுமையடைந்திருப்பதற்கு அதின் பூர்வீகத்தொழில்கள் நசித்துப் போயிருப்பது முக்கியகாரணமென்றும், அது செல்வத்தோடு விளங்குவதற்கு மறைந்த தொழில்களை உயிர்ப்பித்து புதியவைகளை உண்டாக்கவேணுமென்றும் ஞானமுள்ளவர்கள் பாடுபட்டு வருகிறார்கள். முந்தி விவசாய விருத்தி என்ற தலைப்பில் சொல்லப்பட்டவைகளெல்லாம் தொழில் விருத்திக்கும் பிரயோகப்படுகின்றன. சமீபத்தில் பம்பாய் கவர்ன்மெண்டார் பிறப்பிவித்த ஒரு தீர்மானத்தில் அடியில் கண்டபடி சொல்லுகிறார்கள்: "ஐக்கிய நாணயச்சங்கங்களை ஏற்படுத்துவதால் நெசவுகாரர்களின் பொருளாதார நிலைமை விருத்தி அடையும். அதிலிருந்து வேலை செய்கிறவன் தன்னுடைய பயிற்சியாலும் உழைப்பாலும் சம்பாதிக்கக்கூடிய முழு லாபத்தையும் அடையவும் புது முறைகளையும் கருவிகளையும் உபயோகிக்கவும் வழி உண்டாகிறது."

**நிர்வாக சக்தி.**—ராஜ்ய விவகாரங்களில் தேசத்து ஜனங்களுக்கிருக்கும் ஸ்வதந்திரங்களை பரிபாலிப்பதற்கு தேசத்து ஜனங்களெல்லாருக்கும் பிரதிநிதி நியமனங்களில் பழக்கமில்லாமையும் அறிவில்லாமையும் காரணங்களாக சில சமயங்களில் சொல்லப்படுகிறது. ஸ்வதந்திரங்களை பரிபாலிப்பதற்கும் அடைவதற்கும் எல்லா ஜனங்களுக்கும் பழக்கமும் அறிவும் வேண்டியது அவசியமா என்கிற கேள்வி தனியாயிருக்கட்டும். அறிவும்

பழக்கமுமில்லையென்பதில் கொஞ்சம் உண்மையில்லாமல் போகவில்லை. இதை நிவர்த்தி செய்ய இந்தச் சங்கங்களால் முற்றிலும் சாத்தியமாகிறது. இந்தச்சங்கங்களில் அனுபவமில்லாத சாதாரண ஜனங்களுக்கு பிரதிநிதி அரசாட்சி இன்னதென்று சொன்னால் அவர்களுக்கு அர்த்தமாகிறதில்லை. இந்தச் சங்கங்களிருக்கும் இடங்களிலுள்ளவர்களுக்கு இவைகளை உதாரணமாகக் காட்டி ப்ரஜாதிபத்தியத்தைப் பற்றிச் சொன்னால் சீக்கிரத்தில் அறிந்து கொள்ளுகிறார்கள். இது ப்ரத்தியட்ச அனுபவம். பலபேர்கள் சேர்ந்து ஒரு சங்கம் ஏற்படுகிறது. அதற்கு வேண்டிய விதி முதலியவைகளை எல்லாரும் சேர்ந்து ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். அதை நிர்வகிக்க பஞ்சாயத்தார்களை தாங்களே நியமிக்கிறார்கள். அவர்கள் நிறைவேற்ற வேண்டிய காரியங்களை எல்லாரும் ஒன்றுகூடி கவனிக்கிறார்கள். அந்தப் பஞ்சாயத்தார்கள் இத்தனைகாலம் அலுவலிலிருக்க வேணுமென்று நிபந்தனை ஏற்படுத்தி அந்தந்த சமயத்துக்குத் தகுந்தபடி நியமனம் செய்கிறார்கள். இதில் அனுபவமும் பழக்கமுமுண்டாகவே எல்லாக்காரியங்களையும் இந்தமாதிரியே நிர்வகிப்பதில் சவுகரியமுண்டென்று அறிந்து கொள்ளுகிறார்கள். இந்த விதமாய் அனுபவமூலமான அறிவை உண்டுபண்ணுவதைக் காட்டிலும் சாதாரணமான போதனையாலும் கற்பனையாலும் உண்டு பண்ணப்படும் அறிவு சிலாகிக்கத்தக்கதாகாது. ஆகையால் இந்தச் சங்கங்களினால் சாதாரண ஜனங்களுக்கும் பொதுஸ்தாபனங்களை பிரதிநிதித்துவமாய் நிர்வகிக்க பழக்கமும் அறிவும் உண்டாகிறது.

இந்த மாதிரி பல வழிகளிலும் நன்மையைத்தருகிற இந்தச்சங்கங்கள் ஒவ்வொரு இடத்திலும் ஏற்படவேண்டியது அவசியம். கவரன்மெண்டாரும் உத்தியோகஸ்தர்களும் கொஞ்சங்கூட பின்வாங்காமலும் அல்பவிஷயங்களில் பிடிவாதம் காட்டாமலும் சமயத்துக்கும் இடத்துக்கும் தகுந்தபடி நடந்துகொள்வார்களானால் கவரன்மெண்டு, ஜனங்கள் ஆகிய இரண்டு பேர்கள் நிலைமையும் மேன்மேலும் விருத்தியடைந்து தேசமும் செல்வப்பெருக்கத்துடன்தழைத்தோங்கும்.

வா. பஞ்சாபகேசன்.

## AN EXPERIMENT IN BANKU PADDY.

BY

K. S. RAMACHANDRA AIYAR,

*Swamimalai.*

## பாங்கு நெல் சாகுபடியில் ஒரு பரீக்ஷை.

தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணத்துக்கு மேற்கே 4 மயில் தூரத்திலுள்ள என்னுடைய கிராமம் சுவாமிமலையில் நான் இந்த வருஷம் நெல் சாகுபடி செய்த விதத்தையும் அதனால் உண்டான மாசூலையும் கீழே எழுதுகிறேன்.

பாலூர் சர்க்கார்ப்பண்ணையிலிருந்து 7 பட்டணம் படி பாங்கு நெல் விதை தருவித்தேன். அதை முளைக்கவைக்காமல் வறள் விதையாக ஒரு நாற்றங்காலில் ஒருபாகத்தில் 15 குழி அதாவது 5 ஸென்டில் தெளித்தேன். அதோடு 7 பட்டணம்படி உள்ளூர் கார் நெல் விதையையும் அதே நாளில் அதே நாற்றங்காலில் இன்னொரு பாகத்தில் 5 ஸென்டில் பாங்கு நெல்லை விதைத்த மாதிரியே வறள் விதையாக விதைத்தேன். உண்டான நாற்றுகளை நாற்றங்காலிலிருந்து 27-வது நாள் பிடுங்கி 15 வண்டி சாணமும், 12 வண்டி தழையெருவும் எல்லா இடத்திலும் ஸமமாகப் போடப்பட்டிருந்த இரண்டு ஏகர் நிலத்தில் ஒரு ஏகரில் கார் நெல் நாற்றும் இன்னொரு ஏகரில் பாங்கு நெல் நாற்றுமாக இரண்டுவிதமான நாற்றையும் தனித்தனியாய் ஒற்றை அலகாக நட்டேன். கார் நெல் ஒரு ஏகராவுக்கு 36 கலம், அதாவது, 864 பட்டணம் படியும், பாங்கு நெல் ஒரு ஏகராவுக்கு 48 கலம் அதாவது 1152 பட்டணம் படியும் இந்த வருஷம் கண்டுமுதலாயிற்று. அதாவது, கார்நெல்லை விட பாங்கு நெல்லு மூன்றில் ஒன்று ஜாஸ்தியாகக் கண்டது. கார்நெல் பயிர் பாங்குநெல் பயிரைவிட சுமார் $\frac{3}{4}$ அடி



உயரம் அதிகமாக வளர்ந்தது. ஆனால் காரில் ஒவ்வொரு பயிரிலும் 5 முதல் 7 வரையில் கதிர்கள்காண, பாங்கு நெல்லில் ஒரு பயிரிலாவது 10 கதிர்களுக்குக் குறையவில்லை. அதுவுமல்லாமல் பாங்குப்பயிர் வைக்கோலும் அதிகமாகக் கொடுத்தது. ஆனால் கார்ப் பயிரைக் காட்டிலும் பாங்குப்பயிர் அறுப்புக்கு முற்ற சுமார் 15 நாள் அதிகமாகப் பிடித்தது. ஆகையால், மேலே சொல்லியபடி பாங்குநெல்லு மூன்றில் ஒன்று வீதம் ஜாஸ்திகண்டாலுங்கூட அறுப்பு பிந்துகிறபடியால், தாளடி சாகுபடி தாமதிப்பதுடன் அறுப்பும் மழையில் ஒருக்கால் அகப்பட்டு மாசூல் சேதப்படலாம். அதிகபுத்திசாலிகளாயுள்ள விவசாயிகள் பாங்கு நெல்லை தாளடி அதாவது, இரண்டாம்போகப்பயிராக பரிக்ஷைசெய்து பார்க்க வேணுமென்றும், அப்படிப்பார்த்து பாங்கு விதை சுமாராகத்தாளடிப்பட்டத்தில் விளையும் பக்ஷத்தில், இப்போது உபயோகப்பட்டு வரும் தாளடி விதைகளைவிட அது குறைந்த வயதுள்ள விதையாகத் தோன்றுவதால் அதை தாளடி விதையாக இருபோக நஞ்சை நிலங்களுக்கு உபயோகிக்க சிலாக்கியமாயிருக்கலாம் என்றும் நினைக்கிறார்கள்.

கே. எஸ். ராமச்சந்திர ஐயர்.

## AQUATIC WEEDS IN PADDY LANDS.

## நன்செய் நிலங்களில் உண்டாகும் வேப்பம்பாசி.

இவ்விராஜதானியின் தென் ஜில்லாக்களில் நன்செய் சாகுபடியில் அனுபோகமுள்ள ஒவ்வொருவருக்கும் **வேப்பம்பாசி** யென்பது எப்படிப்பட்டதென்று தெரியும். சில ஜில்லாக்களில் தண்ணீர் எளிதில் வடியாதவிடங்களில் இந்தப் பாசியுண்டாகிறது. திருநெல்வேலி ஜில்லாவில் தண்ணீர் வடிவு சரியாய் இயல்பிலேயே அமைந்திருக்கும் மணற்பாங்கான நன்செய்களிலுங்கூட இது உண்டாகிறது. நன்செய் நிலங்களில் தண்ணீர் அநேக நாட்களுக்கு அதிகமாய்க் கட்டிவைப்பதால் இது உண்டாகிறதென்பது அனேக நிபுணர்களுடைய அபிப்பிராயம். ஒருவயலில் கட்டிய தண்ணீரை அடிக்கடி வடித்துப் புதிதாய்த் தண்ணீர் கட்டிவரும் நிலங்களிலும் இது உண்டாகாமலிருக்கவில்லை. களர் நிலங்களில் இந்தப் பாசி விசேஷமாய் உண்டாகிறது. இது முதல் முதல் உண்டாவதற்குக் காரணம் இன்னதென்று தெளிவாய்த் தெரியாவிட்டாலும், அதனாலுண்டாகும் கெடுதிமட்டும் எல்லாருக்கும் நன்றாய்த் தெரியவரும். ஒரு வருஷத்தில் ஒரு நிலத்தில் இந்தப்பாசி எந்தக்காரணத்தையிட்டாவது உண்டாகிவிட்டால், அதை நாம் நிர்மூலமாக்கும் வரையிலும், வருஷாவருஷம் அது உண்டாகிப் பரவிக்கொண்டேயிருக்கும். அந்த வயலிலிருந்து தண்ணீர் வடியும் வயல்களிலும் இந்தப்பாசி யுண்டாவதுண்டு. அப்படிப் பக்கத்து வயல்களில் வேப்பம்பாசி படராமலிருக்கும்படி அவ்வயல்களில் அடிக்கடி களையெடுக்கச் செய்து அதிகமான உரம் போட்டு வருகிறார்கள்.

இதைச் சில விடங்களில் **சங்கிலிப்பாசி** யென்று சொல்லுவார்கள். சில விடங்களில் இது பச்சையாயும், சிலவிடங்களில் வேறு நிறமுடையதாகவும் வெவ்வேறு விதமாயிருக்கும். இது படர்ந்து விட்டால் எத்தனை முறை 'களை' யெடுத்தாலும் இதை நிர்மூலப்படுத்த முடியாது. அது மறுபடியும் மறுபடியும் உண்டாவது வெகு ஆச்சரியமாயிருக்கும். ஒரு வயல் ஐந்தாறு மாதங்களுக்குத் தரிசு கிடந்திருந்தாலுங்கூட அதில்சேறு கலக்கி நடும்போது எப்படியோ அது உண்டாகும். கோடை யுழவுசெய்து காய்ந்த நிலங்களிலும் இப்படியே இந்தப் பாசியுண்டாக நாம் கண்டிருக்கிறோம். அதன் நுண்ணிய விதைகள் கண்ணுக்குத் தெரியாமல் பூமியில் தங்கியிருந்து அவைகள் முளைப்பதற்கேற்ற சந்தர்ப்பமுண்டானவுடனே முளைக்கின்றன.

இந்தப்பாசி யுண்டான நிலத்தில் நெற்பயிர் சரியாய் உண்டாகாது. இதற்குக் காரணமென்னவெனில் பயிருக்குவேண்டிய மண்ணுணவை இந்தப் பாசியானது சாப்பிட்டு விடுகிறது. நிலத்தில் தண்ணீர் புகுந்து அடி மண்ணின் கீழிறங்கி வடியவொட்டாமல் பாசியானது நிலத்தின் மேல் மூடிக்கொள்ளுகிறது. அதேவிதமாக நிலத்தினுள்ளே காற்றும் புகவொட்டாமல் தடுத்து விடுகிறது. இந்த விதமாகப் பயிருக்கு எந்தெந்த வழியில் உணவு கிடைக்குமோ அந்தந்த வழிகளை யெல்லாம் அடைத்துவிடுகிறது. ஆகையால் அந்தப்பயிர் சரியாய் வளர்ந்து மேல்வராமல் அதில சரியான மாசூல் கிடைப்பதில்லை.

இந்தப் பாசிக்கு அனேக விடங்களில் அனேக விதமான பக்குவங்கள் செய்கிறார்கள். சில ஊர்களில் இந்தப் பாசியுண்டான உடனேயே வேப்பம் புண்ணாக்கை வாங்கிப்பொடித்து நிலத்தின் மேல் தெளித்துக் கொஞ்சமாய்த் தண்ணீர் கட்டிவைக்கிறார்கள். இந்தப் பக்குவத்தினால் இந்தப் பாசி அனேகமாகக் குறைவுபடுகிறது. இதனாலேயே இதற்கு **வேப்பம்பாசியென்று** பேருண்டாயிற்று போலும்.

சில ஜில்லாக்களில் வேப்பம்பாசியுண்டாவதற்குக் காரணம் அந்த நிலங்களுக்கு எருவாக வேப்பம் புண்ணாக்கை அதிகமாய்ப் போடுவது தான் என்று அனேகர் சொல்லுகிறார்கள். ஆனால் இது உண்மையான காரணமல்ல.

வேறு சில விடங்களில் தேங்காய் மேலிருக்கும் மட்டையை உறித்து அவைகளை இந்தப் பாசியுண்டான வயலில் பல விடங்களிலும் புதைத்துவைத்திருக்கிறார்கள். அந்த வயலுக்குத் தண்ணீர் பாயும் வாய் மடைத்தலையிலும் புதைத்துவைப்பார்கள். ஆனால் இதனால் பாசி அனேகமாய் விலகுவதில்லை.

சில ஜில்லாக்களில் பயிர் அறுவடையானவுடன் அறுதாள்களை அடிக்கடி கால் நடைகளைவிட்டு மேய்த்தால் இந்தப்பாசி எடுபட்டுப்போமென்று சொல்லுகிறார்கள். ஆனால் இது ஒரு மூட நம்பிக்கையே யொழிய வேறல்ல.

எல்லாவற்றிற்கும் சிலாக்யமான பக்குவம் எதுவென்றால் **ஆடாதோடை** என்னும் காட்டுச்செடியின் தழையை வெட்டிக்கொண்டு வந்து நடுகை செய்வதற்கு முன் நிலத்தில் போட்டு மிதித்துவிட்டால் இந்தப்பாசியுண்டாகாமலே தடுத்துவிடும். ஒருவேளை இப்படி முன் கூட்டிப் போடத்தவறிவிட்டால் பயிரின் ஊடேகளை யெடுக்கும்போது இந்தத்தழைகளைப்போட்டு மிதித்துவிட்டாலும் பாசி எடுபட்டுப் போகும். இது நாம் அனுபவ பூர்வமாய்க் கண்டறிந்த பக்குவம். இதைப் பரிக்ஷிக்கயாராவது விரும்பினால் ஒருதொட்டியில் தண்ணீர் விட்டு அதில் வேப்பம் பாசியையும் போட்டு ஆடாதோடைத்தழையை இடித்துச் சாறு பிழிந்து, அந்தப்பாசியில் கலந்தால் அது நிர்மூலமாவது தெரியும்.

இந்த ஆடாதோடைச் செடியை எல்லா விடங்களிலும் வேலிகளில் வைத்துண்டாக்கலாம். வேப்பம்பாசி யுண்டாகாத வயல்களுக்கும் இந்தத் தழை நல்ல தழையெருவாக உபயோகப்படும். சில ஜில்லாக்களில், உதாரணமாகத் தஞ்சாவூர் ஜில்லாப் பக்கங்களில், வயல்களுக்கு ஊடேயூடே அகலமான வரப்புகளைக் கட்டிவைக்கிறார்கள். இவைகளில் தற்காலத்தில் பூசுணி, கொத்தவரை முதலிய செடிகளைப்போட்டு வருகிறார்கள். அதிலிருந்து நிலச்சுவான் சரியான பலன் அடைவதுமில்லை. அந்த விடங்களில் இந்தச் செடிகளை நட்டுவைத்தால் அவைகள் நன்றாய் வளர்ந்திருக்கும். கிருஷிகருக்கு அவசியமான போது அந்தத் தழையை வெட்டி உபயோகிக்கலாம். இந்தச் செடிக்கு பூச்சி முதலிய நோய் நொடிகளைப்போக்கும் குணமிருக்கிறதென்று நமது கிருஷிகரில் சிலருக்குத் தெரிந்திருக்கிறது. இந்தக் காரணத்தினாலேயே கொடிக்கால்களைச் சுற்றிலும் ஆடாதோடைச் செடிகளை வைத்துண்டாக்கி வருகிறார்கள். இந்தச் செடிகளைக்கொண்டு வந்து நட்டு விர்த்தி செய்வது மிகவும் எளிது. அதன் கிளைகளை வெட்டி அந்தத் துண்டுகளை நிலத்தில் நட்டுக் கொஞ்சம் தண்ணீர்விட்டு வைத்தால் போதுமானது. மழை காலத்தில்இப்படி நட்டு விட்டால் வேறு பக்குவம் ஒன்று மில்லாமலே இது தானாய் உண்டாகும். ஆகையால் இம்முறையை எல்லாரும் கைக்கொண்டு பயனடைவார்களென நம்புகிறோம்.

கிருஷிகன்.



## AGRICULTURAL NOTES.
## விவஸாயக் குறிப்புகள்

MILKING A GOAT.

**ஆட்டுப்பால் கறப்பது.**—பால் கறப்பதில்கூட சாமர்த்தியமிருக்கிறது. சில ஆடுகளின் முலை கையில் பிடித்துக் கறப்பதற்கு சௌகரியமாயிருக்கும். சில கையில் பிடிக்கவராது. பாலை ஒவ்வொரு தடவையும் கறக்கும்பொழுது ஒட்டக்கறந்து விடுவது நலம். ஏனென்றால் பால் ஒருதடவை கொஞ்சம் தங்கி நின்றால் அடுத்த தடவை கறக்கும்பொழுது பாலின் அளவுகுறையும். இப்படி அடிக்கடி மடியில் பால் தங்கினால் சீக்கிரத்தில் ஆடு மறுத்துப்போம். பாலை இரண்டு கைகளாலும் மாற்றி மாற்றிக் கறக்கவேணும். கட்டை விரல் முதல் நுனிவிரல் வரையிலுள்ள ஒவ்வொரு விரலும் ஒன்றின் பின் ஒன்றாய் ஒரேவிதமாய் அதுக்கி கடைசியில் முலைக்காம்பை இழுத்து பாலைப்பீச்சவேணும். பால் நின்று விட்டால் மடியை கன்று முட்டுவதுபோல் கையால் தட்டி பாலைக் கறக்கவேண்டும். இப்படிச் செய்தால் சாதாரணமாய்க் கறப்பதைவிட கொஞ்சம் அதிகமாய் பால் அகப்படும்.

VARIETIES OF PADDY.

**நெல் தினுசுகள்.**—நெல் சாகுபடியில் கார், பிசானம் என்னும் இரண்டு பருவகாலங்கள் உண்டு. விதைத்தது முதல் அறுவடையாக 4-மாதங்களுக்கு மேற்செல்லும் தினுசுகளை "வல்வித்து" என்றும், அதற்குக் குறைந்தகாலத்தில் விளைவாகும் தினுசுகளை "இளவித்து" என்றும் பாவிக்கலாம். காலமழைகள் பெய்யும் பிசானத்தில் வல்வித்து தினுசுகளையும், சாரல் மழைபெய்யும் காரில் இளவித்துத் தினுசுகளையும் சாகுபடி செய்கிறார்கள்.

திருநெல்வேலி ஜில்லாவில் சாகுபடியாகும் முக்கியமான **வல்வித்து** நெல் தினுசுகளாவன :—

முத்துவெள்ளை 8-மாதம், குலைவாழை $7\frac{1}{2}$-மாதம், வெள்ளை 6-மாதம், சிறு கருடன் சம்பா 7-மாதம், அரிக்கிவெள்ளை (வாலிசுரமுண்டான்) $5\frac{1}{2}$-மாதம், மிளகு $5\frac{1}{2}$-மாதம், ஆனைக்கொம்பன் $5\frac{1}{2}$-மாதம், ஈர்க்குச்சம்பா $4\frac{1}{2}$-முதல் 5 மாதம், கார்த்திகைச்சம்பா $4\frac{1}{2}$-முதல் 5-மாதம், வீதி விடங்கன் $4\frac{1}{2}$-மாதம்.

**இளவித்து தினுசுகளாவன:**—கார்சம்பா 4-மாதம், மைக்குருவை $3\frac{1}{2}$-மாதம், மொட்டைக்குருவை $3\frac{1}{2}$-மாதம், குருவைக்களையான் $3\frac{1}{2}$-முதல் 4-மாதம், புழுதிபிரட்டி $3\frac{1}{2}$-முதல் 4-மாதம், மதுரை மணல் வாரி $3\frac{1}{2}$-மாதம், வால்குருவை 3-மாதம் 10-நாள், மாப்பிள்ளை சம்பா 80-நாள் முதல் 3-மாதம்.

கிருஷிகன்.

WATER REQUIRED FOR ONE ACRE.

**ஒரு ஏக்கருக்கு வேண்டிய ஜலம்.**—நஞ்சை நிலத்துக்கு ஒரு தடவை தண்ணீர் பாய்ச்ச ஸாதாரணமாய் மூன்று அங்குல ஜலம் வேண்டும். அதாவது 68,000 காலன். ஒரு காலன் என்பது ஆறு புட்டி, அதாவது பட்டணம் படியால் மூன்றுபடி.

RAISING COCOANUT SEEDLINGS.

**தென்னை நெற்று சாற்றுதல்.**—தென்னை நெற்றுகளை முளைக்கவிடவேண்டுமானால் காய்களை உலர்த்தி ஜலம் ஆடும் சமயத்தில் கிணற்றில் 3 மாதம் போட்டுவைக்க காய் ஈரம் கோத்து பதுவேறும். பிறகு இந்தக்காய்களை எடுத்துக் குவித்து ஈரம் காயாமல் மண்ணால் மூடிவைத்தால் முளை கிளம்பும். அப்புறம் பாத்திகளில் அடுக்கி ஜலம் விட்டுவந்தால் காய்கள் நாசமாகாமல் முளைக்கும். இந்தமாதிரி அனுசரிப்பதில் 3 மாதம் நீர் இறைப்பதும், கரையான் அரிப்பதும் இல்லாமல்போகும்.

POULTRY MANURE.

**கோழி எரு.**—ஒரு பெரிய கோழி வருஷா வருஷம் சுமார் 80 ராத்தலிலிருந்து 90 ராத்தல் வரைக்கும் எச்சமிடும். கோழிகள் வளரும் இடங்களை தினமும் பெருக்கி, அங்கேயுள்ள எச்சத்தையும் குப்பையையும் வாரி, ஆடுமாடுகளின் சாணம் முதலியவைகள் போட்டுவைக்கும் எருக்குழியில் கொட்டி வைக்கவேண்டும். இது பழமரங்களுக்கு நல்ல எரு. கோழிகள் இருந்தால் வருஷா வருஷம் 1 டன் எருக்கொடுக்கும்.

HARVESTING OF GROUND NUT.

**மணிலாபயிர் வெட்டுங்காலம்.**—மோரீசு மணிலாப்பயிரையும், ஸினிகல் பயிரையும் பூமியில் விதைத்து அவசரப்பட்ட பலபெயர்கள் இது நாலு மாதத்துப் பயிர்தானே யென்று நாலாவது மாதக்கடைசியில் வெட்டத் துவக்குவது பிசகென்பதும், அப்படி வெட்டுவதனால் பாதிபலன் சவளையாயும், பிஞ்சாயுமாகிப்போய்விடுமென்றும், பின்னும் இரண்டுமாதம் நீர்பாய்ச்சிப் பொறுத்து வெட்டினால் ராசி ஜாஸ்திகாணுமென்பது ஒரு மிகுந்த அநுபோகமுள்ள விவசாயியின் அபிப்பிராயம். இதை மணிலாப்பயிர் செய்யும் விவசாயிகள் கவனிக்கவேண்டும்.

## TRADE NOTES.
## வியாபாரக் குறிப்புகள்.

CIGARETTES.

**ஸிகரெட்டுகள்.**—சில வருஷங்களாக சிறு பையன்கள் முன்போல சரிவர நடக்காமல் சுருட்டுக்குடிப்பதும் பொடி போடுவதுமான துர்வழக்கங்களில் இறங்கி விட்டார்களென்று அனேகம் பெரியவர்கள் சொல்வதைக் கேட்டிருக்கலாம். இப்படிக் குடிக்கப் படுவது சுருட்டுப் போலிருந்தாலும் அதை பீடி என்றும், ஸிகரெட் என்றும் சொல்வார்கள். இந்தியா முழுமையும் 10 லக்ஷம் ஏகராவுக்குமேல் புகையிலை சாகுபடியாகிறது. உண்டாகும் இலையின் மதிப்பு 750 லக்ஷம் ரூபாய். இவ்வளவு உற்பத்தியாகியும் 1907-08ம் வருஷத்தில் நம்முடைய தேசத்திலேயே செய்யப்படும் சாக்குகளைத் தவிர, இதரதேசங்களிலிருந்து சுமார் 84 லக்ஷத்து 36 ஆயிரம் ரூபாய் பெறுமான புகையிலைச் சாக்குகள் இறக்குமதியாயின. ஆனால் போன வருஷத்தில் வந்தசாக்குகளின் பெறுமானம் 79 லக்ஷத்து 42 ஆயிரந்தான். இதில் 57 லக்ஷத்து 79 ஆயிரம் ரூபாய் பெறுமானம் பீடிகள். இவைகளின் மொத்த நிறை 29 லக்ஷத்து 96 ஆயிரம் ராத்தல். 1907-08 ம் வருஷத்தில் இறக்குமதியான பீடிகளின் மொத்தம் 36 லக்ஷத்து 34 ஆயிரம் ராத்தல். ஆகவே 1907-08, 1908-09 இந்த இரண்டு வருஷத்து இறக்குமதிகளையும் ஒத்திட்டுப்பார்த்தால், நிறையைப் பிடித்துப் பார்க்கும்பொழுது நூற்றுக்கு $17\frac{1}{2}$ வீதமும், விலையைப் பிடித்துப்பார்க்கும் பொழுது நூற்றுக்கு $5\frac{1}{2}$ வீதமும் குறைந்திருக்கிறது. இதனால் இதரதேசத்து மலிவுதினுசு பீடிகள் தான் குறைந்து வந்திருக்கின்றன என்று ஊகிக்கவேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட மலிவு தினுசுகள்தான் நம்முடைய தேசத்திலும் செய்யப்படுகின்றன. ஆகையால் அந்நியதேசத்து பீடிகள் குறைந்தது சுதேசி பீடி கைத்தொழிலுக்கு கொஞ்சம் அனுகூலமென்றே சொல்லவேணும்.

NEEM CAKE.

**வேப்பம் பிண்ணாக்கு.**—கோயம்புத்தூர் ஜில்லா ஈரோடு தாலூக்காவில் ஊத்துக்குளி ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து மட்டும் ஒருவருஷத்தில் 20,000 மூட்டை வேப்பம் பிண்ணாக்கு விலையாகின்றதாக கிருஷிகன் பத்திரிகை சொல்லுகிறது. 1 மூட்டை பிண்ணாக்கு 5 மணங்கு நிறையுள்ளது. சுமார் 90-மணங்கு கொண்டது 1-டன் நிறையாகும். 18-மூட்டைகள் 1-டன் நிறையாகிறது. ஆகவே வருஷத்தில் அந்த ஸ்டேஷனிலிருந்து சுமார் 1110-டன் நிறையுள்ள வேப்பம் பிண்ணாக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதன்விலை (டன் ஒன்றுக்கு ரூபாய் 25-வீதம்) சுமார் 27,750 ரூபாய் ஆகிறது. இவ்வளவுக்கு அந்த பிராந்தியத்திலுள்ள நிலங்கள் வருஷா வருஷம் நஷ்டமடைகின்றனவென்பதில் யாதொரு ஆக்ஷேபனையுமில்லை. இந்த ஊரிலும் அதைச்சுற்றிலும் நன்செய், புன்செய், தோட்டக்கால் நிலங்கள் எவ்வளவோ பயிர் செய்யப்படுகின்றன. அவைகளுக்கு இந்தப்பிண்ணாக்கு எருவாய் உபயோகப்படுத்தினால், அவைகளின் வளங்குறையாமலிருக்குமல்லவா?

GRASS SELLING.

**புல் விற்பனை.**—மத்திய மாகாணத்தில் அகோலா என்பதாக ஒரு பட்டணம் இருக்கிறது. இதில் அந்த மாகாணத்து விவசாய இலாகாக்காரர் ஒரு சோதனைப்பண்ணை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தப்பண்ணையில் புல் வளர்த்து லாபம் சம்பாதிக்கக் கூடாதா என்று பரிசோதித்துப் பார்ப்பதற்காக அந்த மாகாணத்து முதல் திறமான புல்லுகளை வளர்த்து வருகிறார்களாம். பட்டணங்களில் புல் எப்பொழுதும் கிராக்கியாகவே இருக்கும். ஆகையால் புல் வளர்த்து வியாபாரம் செய்வது லாபகரமாகவே இருக்கலாம். புல்லைவிற்று என்ன லாபம் வந்துவிடப் போகிறதென்று சிலபேர்கள் யோசிக்கலாம். சென்னப்பட்டணத்தில் "கிராஸ் பார்மிங் ஸிண்டிகேட்" என்ற பெயரோடு சில ஐரோப்பியர்கள் புல் வளர்த்து வியாபாரம் செய்துவருகிறார்கள். தினம் ஒன்றுக்கு 30 ராத்தல் கனமுள்ள புல்லுக்கட்டுக்கு மாஸம் ஒன்று 5 ரூபாய் வாங்குகிறார்கள். இவர்கள் லாபமில்லாமலா வேலை செய்து வருகிறார்கள்?

JAPANESE GOODS IN INDIA.

**இந்தியாவில் ஜப்பான் தேசத்து ஸாமான்கள்.**—ஜப்பான் தேசத்தில் உற்பத்தியாகும் ஸாமான்களை இந்தியாவிலுள்ள வர்த்தகர்களுக்கும் ஜனங்களுக்கும் தெரியப்படுத்தி விற்பனை செய்வதற்காக அந்த தேசத்துப்பிரதிநிதி கல்கத்தாவில் தன் ஆபீஸில் ஒரு பொருள்காட்சி ஏற்படுத்தியிருக்கிறார். இந்தக் காட்சியை யார் வேணுமானாலும் தினம் 11 மணி முதல் 4 மணி வரையில் போய் பார்க்கலாம்.



## INDUSTRIAL NOTES.
## கைத்தொழில் குறிப்புகள்.

SUGARCANE VINEGAR.

**கரும்புக் காடி.**—இது நெல்லூர் ஜில்லாவில் ஒங்கோல் பட்டணத்தில் நவைத்ரீஸ் என்று சொல்லப்பட்ட ஒரு ஜாதித் துருக்கர்களால் செய்யப்படுகிறதாம். இவர்கள் கரும்பிலிருந்து செய்யப்பட்ட வெல்லத்தை எடுத்து அதோடு ஏழு அல்லது எட்டுப்பங்கு ஜலத்தை விடுகிறார்கள். இதில் காடியின் மேல்ஆடையைக்கொஞ்சம் போடுகிறார்கள். இந்த மாதிரி ஆடையை காடி செய்யும் ஒவ்வொரு வீட்டிலும் எடுத்து வைத்திருக்கிறார்களாம். இப்படி உறை (பிறை) குத்தின வெல்லத்தண்ணீரை ஒரு பானையில் போட்டு வாயை இறுகக்கட்டி 40 நாளைக்குவெயிலில் வைத்துவிடுகிறார்களாம். இப்படிச்செய்தால் வெல்லத்தண்ணீர் காடியாகிவிடுகிறது.

CANNING OF FRUITS.

**பழங்களை டப்பி முதலிய பாத்திரங்களில் போட்டு வைத்தல்.**—ஐரோப்பா கண்டத்திலுள்ள இடலி தேசத்தில் வெஸுவியஸ் என்பதாக ஒரு எரிமலை இருக்கிறது. அது 1830-ம் வருஷத்துக்கு முந்தி ஒருதடவை வெடித்தது. அதனால் அதற்குப் பக்கத்திலுள்ள பாம்பீ என்னும் பட்டணம் நாசமாகி இடிந்து விழுந்து போய்விட்டது. சுமார் 100 வருஷங்களாக இடிந்து விழுந்த பட்டணத்தை அனேகம்பேர்கள் வெட்டிப்பார்த்து வருகிறார்கள். இப்படி ஒரு தடவை சில அமெரிக்கர்கள் வெட்டும்பொழுது ஒரு வீட்டில் ஒரு அறையில் சில ஜாடிகளில் அத்திப்பழங்களிருந்தன. ஜாடியைத் திறந்து பார்த்ததில் அதிலுள்ள பழங்கள் ஆரோக்கியமாயும் நன்றாயுமிருந்தனவாம். இதிலிருந்து சூட்சுமத்தை அறிந்துகொண்டு மறு வருஷம் முதல் அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் உள்ளவர்கள் பழங்களை டப்பி, ஜாடி முதலிய பாத்திரங்களில் போட்டு வெளி தேசங்களுக்கு அனுப்பி வியாபாரம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

COCHIN INDUSTRIES.

**கொச்சி கைத்தொழில்கள்.**—போன பிப்ரவரி மாஸத்தில் நடந்த பொருள் காட்சியில் கொச்சி மகாராஜா அவர்கள் தன்னுடைய ராஜ்யத்தில் உண்டாகும் எண்ணெய் விதைகள், பருத்தி, கொப்பரை, நார் தினுசுகள், வெல்லம் முதலிய சாமான்களெல்லாம் வெளியே அனுப்பப்பட்டு வருவதாயும், அங்கே செய்யப்படும் வேறு சாமான்கள் நன்றாய் செய்யப்படாமையால் அவைகளை ஜனங்கள் வாங்காமல் இதர தேசத்து ஸாமான்களையே வாங்குவதாயும் சொன்னார். இவைகளுக்கெல்லாம் முக்கிய காரணம் கைத்தொழில்களை ஞானமில்லாமல் செய்வதுதான். இருந்தாலும் எல்லாத்தொழிலாளிகளுக்கும் ஒரே காலத்தில் கைத்தொழில் படிப்பு சொல்லிக்கொடுத்துவிடலாம் என்பது அசாத்தியம். ஆகையால், எந்தெந்த கைத்தொழில்கள் எங்கெங்கே செய்யப்படுகின்றன, மறைந்து போன கைத்தொழில் ஏதாவது இருந்தால் அதை உயர்ப்பிக்கலாமா, இருக்கிற விளைபொருள்களைக்கொண்டு ஏதாவது புதுக்கைத்தொழில்கள் ஏற்படுத்தலாமா என்ற பல விஷயங்களை ஆராய்ந்தறிந்து ரிபோர்ட்டு செய்யும்படி வி. அச்சுத மேனன் என்ற ஒருவரை கொச்சி ராஜா நியமித்திருக்கிறார்.

THE FIBRE INDUSTRY.

**நார் வேலை.**—கொச்சைக்கயிறு வேலை திருவநந்தபுரத்தில் நடப்பது போல வேறிடங்களில் நடக்கவில்லை. அந்த நாட்டுக்கடுத்த செங்கோட்டை, குற்றாலம் முதலிய இடங்களில் நாள் 1க்கு 5 வண்டிக்குக்குறையாமல் உரிமட்டை அடுப்பெரிக்க விற்கப்படுகிறது. வண்டி 1க்கு 1000 மட்டைக்கு 8 அணாவுக்கு விற்கப்படுகிறது. அந்த மட்டைகளைக் கயிறாக்கினால் 10 ரூபாய்க்குக் குறையாமல் விற்கலாம். ஷை மட்டை நார்கள் எடுத்து அந்நிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டு அங்கே புருஷ், ரத்ன கம்பளங்கள், செய்யப்பட்டு வருகின்றன. இந்த மாதிரி தென்னை மரங்களுள்ள ஊர்தோறும் குடிகள் நஷ்டமடைந்து வருவதற்கு அறியாமை தான் காரணம். சில இடங்களில்தான் அவைகள் பயன்படுத்தப் படுகின்றன. இப்படிப் பல இடங்களில் முயன்றால் வீண்போம் பொருள்களைப் பொன்னாக்கிக் கொள்ளலாம்.

PROFIT IN TRIFLES.

**அற்பத்திலும் ஆதாயம்.**—எதையும் அற்பமென்று எண்ணக்கூடாது. அற்பபொருள்களிலுமிருந்து ஆதாயமடைய ஐரோப்பாவில் ஜெர்மனி தேசத்தார் கற்றுவருகிறார்கள். கலாசாலைகளிலும், ஆபீஸ்களிலும் எறிந்துவிடப்படுகிற பழைய ஸ்டீல் பேனாக்களை எல்லாம் கருத்தாய்ப் பொறுக்கி அவைகளினால் கத்திகள், கடிகாரவில்லுகள் முதலியவற்றைச்செய்து லாபமடைகிறார்களாம்.

## THE GROCERY TRADE.

## பலசரக்கு வியாபாரம்.

BUTTER AND GHEE.

**வெண்ணெய்யும் நெய்யும்.**—புது வெண்ணெயை இரண்டு மூன்று நாட்களுக்கு மேல் வைத்திருந்தால் அழுகிக்கெட்டுப்போவது எல்லாருக்குந் தெரிந்த விஷயம். ஆனால் வெண்ணெயை உருக்கி சரியான பதத்தில் எடுத்துவைத்திருந்தால் 200 வருஷமானாலும் கெடாமலிருக்குமென்று சொல்லப்படுகிறது. தயிரை நன்றாய்க் கடைந்து மிதந்துவரும் வெண்ணெயிலுள்ள ஜலத்துளிகளையும் சிறு தயிர்த்துளிகளையும் அப்புறப்படுத்திவிட வேண்டும். வெண்ணெயை உருக்கும்போது உஷ்ணத்தினால் நீர்த்துளிகளும் சிறு தயிர்க்கட்டிகளும் போய் விடுகின்றன. இவைகள் கொஞ்சம் நீங்கியும் நீங்காமலும் இருக்கும்போதே நெய்யை எடுத்துவைத்தால் அது சீக்கிரம் கெட்டுப்போகும். ஆகையால் இவைகள் முழுமையும் போகும்படி நன்றாய் காய்ச்சவேண்டும். வெண்ணெயானது நன்றாய் உருகி களங்கமற்ற தைலரூபமானதும் அதை வேறு பாத்திரத்தில் விட்டு ஆறும்படி வைக்கவேண்டும். ஆறினதும் நெய் மணல் மணலாக இருக்கும். ஐரோப்பாவில் பாழான கோட்டைகளில் இந்த மாதிரியான நெய் கெடாமலிருந்திருப்பதைச் சிலர் கண்டிருக்கிறார்கள். இருநூறு வருஷங்களுக்கு மேல் அந்த நெய் அப்படியே கெடாமல் இருந்திருக்கவேண்டும் என்றும் ஊகித்திருக்கிறார்கள். பொதுவாக இந்தியா முழுவதிலும் இரண்டு வருஷங்களுக்கு முன் இருந்ததை விட நெய் விலை இப்பொழுது $1\frac{1}{4}$ மடங்கு அதிகமாயிருக்கிறது. போன வருஷத்தில் இந்தியாவில் உண்டான நெய்யின் விலை மதிப்பு சுமார் 6 கோடி ரூபாய் பெறுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

BREAD.

**ரொட்டி.**—ரொட்டி கோதுமை மாவால் செய்யப்படுகிறது. இந்த மாவு கலப்பில்லாமலும் வெண்மையாயும் இருந்தால்தான் ரொட்டி நன்றாயும் வெண்மையாயும் இருக்கும். நல்ல மாவு விலை ஜாஸ்தியாயிருந்தாலாவது அல்லது மோசம் பண்ணவேணும் என்ற புத்தி தோன்றினாலாவது மட்ட மாவோடு கொஞ்சம் படிக்காரத்தைக் கலந்து ரொட்டியைச் செய்து விட்டால் அது வெண்மையாக இருக்கும். இப்படிக்கு படிக்காரம் கலந்திருக்கிறதென்று சந்தேகம் தோன்றினால் பின் சொல்லுகிற மாதிரி செய்துபார்க்க வேணும். ஒரு நாளுக்கு முந்தி வாங்கின ரொட்டியை எடுத்து அதை சுடச்சுடக் காய்ச்சின கத்தியால் குத்தவேணும். குத்தின கத்தியை எடுத்துப்பார்த்தால் படிக்காரத்தூள் கத்தியில் ஒட்டிக்கொண்டிருக்கும். தவிர, கத்தி ஒருவித வாசனையும் அடிக்கும்.

RICE IN UPPER BURMA.

**வட பர்மாவில் அரிசி.**—வட பர்மாவில் மியிட்கியானா என்பதாக ஒரு பட்டணம் இருக்கிறது. இதில் பட்டாளம் ஒன்று இருக்கிறது. இதைச் சேர்ந்தவர்களுக்கு வருஷம் ஒன்றுக்கு 32 பட்டணம் படி கொண்ட மூட்டையாக சுமார் 6250 மூட்டைக்குமேல் அரிசி வேண்டியிருக்கிறது. இந்தப் பட்டணத்தைச் சுற்றிலும் நெல் விளைகிறது. ஆனால் விளைகிற நெல்லெல்லாம் மாண்டலே பட்டணத்திற்கு அனுப்பப்பட்டு குத்தி வருகிறது. மியிட்கியானா பட்டணத்திலேயே ஒரு அரிசி மில் ஏற்படுத்தினால் ராணுவ அதிகாரிகள் மூன்று வருஷங்களுக்கு அரிசி வாங்குவதாக ஒப்பந்தம் செய்யத் தயாராயிருக்கிறார்கள். இந்த விஷயம் பர்மாவிலுள்ள நாட்டுக்கோட்டை செட்டிகள் கவனிக்கத்தக்கது.

TEA DRINKING.

**டீ குடித்தல்.**—நம்முடைய ராஜதானியில் விசேஷமாய் ஜனங்கள் காப்பி சாப்பிடுகிறார்களே ஒழிய டீ சாப்பிடுகிறதில்லை. வடக்கே வங்காளத்திலும் இன்னும் இதரதேசங்களிலும் டீ தான் அதிகமாகக் குடிக்கப்படுகிறது. ஆஸ்ட்ரலேஷியாவிலுள்ள ஒரு மனுஷனுக்கு சராசரி வருஷமொன்றுக்கு 7 ராத்தல் டீ செலவாகிறது. இங்கிலாந்தில் ஒருவனுக்கு 6 ராத்தலாகிறது. ஹாலெண்ட் தேசத்தில் சுமார் $1\frac{1}{2}$ ராத்தலும், அமெரிக்கா ஐக்கியமாகாணங்களில் $1\frac{3}{4}$ ராத்தலும், ருஷ்யாவில் $1\frac{1}{4}$ ராத்தலும், செலவாகின்றனவாம்.

---



## REVENUE NOTES.

## ரெவெனியூக் குறிப்புகள்.

VILLAGE OFFICERS.

**கிராம உத்தியோகஸ்தர்கள்.**—ஒன்றோடொன்று சேர்க்கப்பட்ட அல்லது ஒன்றைவிட்டொன்று பிரிக்கப்பட்ட கிராமங்களில் கிராம நவுக்கர்களை நியமகம் செய்ய தெரிந்தெடுக்கவேண்டிய விஷயத்தில் ஒழுங்குபடுத்துவதற்காக உண்டான 1894 ஹுத்திய 2-வது ஆக்ட்டின் 15-வது பிரிவின் விதிப்படி சில கேசுகளில் ப்ரொப்ரைடர்கள் கவனிக்காமல் அலட்சியம் செய்கிறார்களென்று தெரியவருகிறதாம். அந்த விஷயமாய், ஏற்பட்டிருக்கும் அடியில்கண்ட விதிகளை அவர்கள் கவனிக்கவேண்டியது. இரண்டு அல்லது அதற்கு மேல்பட்ட கிராமங்களின் பாகங்கள் புதிதாய் ஒரு தனி கிராமமாய் சேர்க்கப்பட்டாலும் அல்லது ஒரு கிராமம் இரண்டு மூன்று கிராமங்களாகப் பிரிக்கப்பட்டாலும் பழைய கிராம உத்தியோகங்கள் அமுலில் இல்லாமல் நின்றுவிடும். புதிதாய் ஏற்பட்ட உத்தியோகங்களுக்கு நியமிக்கவேண்டிய நபர்களை தெரிந்தெடுப்பதில், வேண்டியதில்லையென்று எடுத்துவிடப்பட்ட உத்தியோகங்களில் கடைசியாயிருந்தவர்களின் குடும்பத்தைச்சேர்ந்தவர்களில் லாயக்கான நபரை ப்ரொப்ரைடர் நியமித்து டிவிஷன் சார்ஜில் உள்ள ரெவெனியூ ஆபீசருக்கு தான் செய்ததைப்பற்றி ரிபோர்ட்டு செய்யவேண்டியது. ப்ரொப்ரைடர் ஒரு அன்னியரை நியமித்தாலும் அல்லது 15 (1) பிரிவில் சொல்லப்பட்டுவரும் சட்டத்தைக் கண்டிப்பாய் அனுசரித்து நடவடிக்கை நடத்தாவிட்டாலும், டிவிஷனல் ஆபிசர் சட்டப்படி தானே நியமகத்தை செய்ய 15 (3)-வது பிரிவின்படி நடவடிக்கைகள் நடத்தலாம். ஒரு "ட்ரையூன்" ஆபீசரை நியமிக்கவேண்டிய விஷயத்தில், புது கிராமத்தில் எந்த உத்தியோகத்தை அதாவது, ஒரு கிராமத்தலைவன் உத்தியோகத்தையா, அல்லது கர்ணம் உத்தியோகத்தையா, எதை ஏற்படுத்தவேண்டுமென்பதைப்பற்றி கலெக்டர் அவர்களுடைய உத்தரவை முதலில் வாங்கவேண்டியது. புது உத்தியோகத்திற்கு நியமகம் செய்யும் விஷயத்தில், அந்த வகுப்பில் தற்காலத்தில் உத்தியோகத்தை வகிப்பவரின் குடும்பத்தைச்சேர்ந்தவர்களில் ஒருவரை ப்ரொப்ரைடர் தெரிந்தெடுக்க வேண்டியது. முன் சொன்ன கேசில் கண்டதுபோலவே, கடைசியில் இருந்த உத்தியோகஸ்தரின் குடும்பத்தைச் சேர்ந்தவரும் வேலைக்கு லாயக்கான ஒரு நபர் இருக்கும்போது ப்ரொப்ரைட்டர் ஒரு அன்னியரை நியமிக்கக்கூடாது.

VILLAGE ACCOUNTS.

**கிராமக் கணக்குகள்.**—சித்திரை மாசத்து ஸஞ்சிகையில் ரெவினியூக் குறிப்புகளின் கீழ், சில கிராமக் கணக்குகளை மிராசுதார்கள் தங்களைப்பற்றிய மட்டில் பார்த்துக்கொள்ளவும் நகல் செய்து கொள்ளவும் கவர்ன்மெண்டார் உத்தரவு கொடுத்திருப்பதாகச் சொன்னோம். பம்பாய் மாகாணத்தில் இதைப் போல ஒரு உத்தரவு செய்திருக்கிறார்களாம். ஆனால், அங்கே வேண்டிய நகல்களைக் கணக்கர்களே தயாரித்து கொடுக்கவேண்டியது. இப்படிக்கு அவர்கள் செய்து கொடுக்கும் நகல்களுக்கு ஸர்க்காரே காபிஸ்டர் கூலிகொடுத்து விடுவார்களாம்.

JAMABANDI IN MADURA.

**மதுரையில் ஜமாபந்தி.**—1319-ம் பசலிக்கு இந்த ஜில்லாவிலுள்ள பற்பல தாலூகாக்களின் வருஷாந்திர ஜமாபந்தி (செட்டில்மெண்டு) பின்வருமாறு நடத்தப்படும்.

செட்டில்மெண்டு செய்யும் உத்தியோகஸ்தர்கள்:—

1. கலெக்ட்டர் துரையவர்கள்—மதுரை. 2. திண்டுக்கல் டிவிஷனல் ஆபீசர் அவர்கள்—திண்டுக்கல், பழனி. 3. மதுரை டிவிஷனல் ஆபீசர் அவர்கள்—திருமங்கலம், சாத்தூர். 4. மேலூர் டிவிஷனல் ஆபீசர் அவர்கள்—மேலூர், பெரியகுளம். 5. இராமநாதபுரம் டிவிஷனல் ஆபீசர் அவர்கள்—பரமக்குடி பிர்க்கா. 6. அடிஷனல் சப் கலெக்ட்டர் துரையவர்கள்—கொடைக்கானல்.

FREE WATER.

**தீர்வை இல்லாமல் ஜலம்.**—போனவருஷம் ஆக்ஸ்டு மாஸத்தில் கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர் ஜில்லாக்களில் முதல்போகமானதும் சவர் நிலங்களுக்குத் தண்ணீர் கட்டினாலும் அல்லது அறுத்த தாள் அழுகுவதற்குத் தண்ணீர்கட்டினாலும் தண்ணீர்த்தீர்வை விதிக்கப்படமாட்டாது என்பதாக ஒரு உத்தரவு பிறந்தது. இந்தமாதிரியே எல்லா ஜில்லாக்களிலும் தீர்வையன்னியில் செய்யலாம் என்பதாக சமீபத்தில் ஒரு உத்தரவு பிறந்திருக்கிறது.

## LEGAL NOTES.
## சட்டக் குறிப்புகள்.

A Hindu Wife's Rights.

**ஒரு ஹிந்து பெண்ஜாதியின் பாத்தியங்கள்.**—ஒரு ஹிந்துவின் பெண்ஜாதி துர்நடத்தையுள்ளவளாயிருந்தால் அவளுக்கு ஜீவனும்சங்கூட கொடுக்க வேண்டியதில்லை என்பதாக நடவடிக்கையில் இருந்து வருகிறது. ஆனால் இதற்கு விரோதமாக பம்பாயில் சமீபத்தில் ஒரு தீர்மானம் ஆயிருப்பதாகத் தெரியவருகிறது. ஒரு ஹிந்து தன் சொத்தையெல்லாம் உயில் மூலமாய் சில பேர்களுக்குக் கொடுத்து, தன் பெண்ஜாதிக்கு வருஷா வருஷம் ஜீவனும்சத்துக்காக இவ்வளவு ரூபாய் அவர்கள் கொடுக்கவேண்டுமென்பதையும் உயில் சாஸனத்திலேயே எழுதிவைத்துவிட்டு இறந்து போய்விட்டான். புருஷன் இறந்துபோன பிறகு பெண்ஜாதி துர்நடத்தை யுள்ளவளாயிருந்ததினால் ஜீவனும்சத்தைக் கொடுக்காமல் மேலே சொன்னவர்கள் நிறுத்திவிட்டார்கள். அவள் ஜீவனும்சத்துக்காகக் கோர்ட்டில் பிரியாது செய்தாள். அவள் பக்கமே கோர்ட்டில் தீர்ப்பாகிவிட்டது. ஹிந்துலாவின் பிரகாரம் ஒரு புருஷன் தன் பெண்ஜாதியை முழுவதும் தள்ளிவிட முடியாது. அவள் துர்நடத்தை யுள்ளவளாயிருந்தாலும், அவளுக்கு சோறும் துணியும் மட்டும் கொடுத்து அவளை அடக்கி வீட்டிலேயே இருக்கத்தகுந்த பந்தோபஸ்து செய்யவேண்டியது புருஷன் கடமை. சோறுக்கும் துணிக்கும் தவிர, வேறே ஒரு பாத்தியமும் அவளுக்கு இல்லை. ஆனால் அவள் தான் செய்ததெல்லாம் தப்பு என்று மனவருத்தப்பட்டு நல்லவழிக்குத் திரும்பி சாஸ்திர ரீதியாய் வேண்டிய ப்ராயச்சித்தங்களை யெல்லாம் செய்து கொண்டால், அவளை ஜாதியில் சேர்த்துக்கொண்டு புருஷன் தன்னிடத்தில் பழையபடி வைத்துக்கொள்ளலாம். ஆனால் ஈனஜாதி சம்பந்தம் ஏற்பட்டிருந்தால் அவளுக்கு குடியிருக்க இடத்திற்கும் சோற்றுக்கும் துணிக்குந்தான் பாத்தியம் உண்டு. ஹிந்துலாவின் பிரகாரம் விவாகத்தை ரத்து செய்ய முடியாது. ஏனென்றால் விவாகம் என்பது ஒரு ஸம்ஸ்காரம். அதன் பந்தம் புருஷன் இறந்து போனாலும் விடாது. இந்தக்காரணத்தினால்தான், பெண்ஜாதி துர்நடத்தையுள்ளவளாயிருந்தாலும் அவளுக்கு ஜீவனும்சம் கொடுக்க வேண்டுமென்று ஹிந்துலா சொல்லுகிறது. இந்தக் காரணங்களினால் முன் காலத்தில் ஹிந்து லாவை ஏற்படுத்தினவர்கள் அதிக காருண்யம் உள்ளவர்களென்றும் பின் காலத்தார்களின் ஜாதி வித்தியாசங்களினால்தான் இந்த சட்டங்களின் பிரகாரம் ஒன்றும் சரிவர நடக்கவில்லை யென்றும் ஏற்படுகிறது.

The Death of the Plaintiff.

**வாதி இறந்துபோனது.**—ஒரு சிவில் கேஸில் இரண்டு கக்ஷி சாக்ஷிகளையும் விசாரித்தான பிறகு, ஒவ்வொரு கக்ஷியின் வாதத்தையும் கேட்பதற்காக கேஸ் வேறு வாய்தாவுக்கு ஒத்திப்போடப்பட்டது. அந்த வாய்தா தேதிக்குள்ளாக வாதி இறந்து போய்விட்டான். பின்னால் வாதி சொத்தின் பாத்தியஸ்தர்களை கக்ஷிக்காரர்களாய்ச் சேர்க்காமலே கோர்ட்டில் வாதம் நடந்து வாதிபக்கம் தீர்ப்பாகிவிட்டது. பிரதிவாதி அப்பீல் செய்து பின்னால் என்ன காரணத்தாலோ அப்பீலை வேண்டாமென்று தள்ளிக்கொண்டு விட்டான். ஆனால் கோர்ட்டின் தீர்ப்பின் பிரகாரம் டிக்ரியை நிறைவேற்றப் போனபோது, டிக்ரி செல்லுபடியுள்ளது அல்லாததினால் டிக்ரியை நிறைவேற்றக்கூடாது என்று பிரதிவாதி சொன்னான். கோர்ட்டார் அதிகாரமில்லாமல் டிக்ரி செய்ததினால், டிக்ரி செல்லுபடியுள்ளதல்ல வென்றும் பிரதிவாதி அப்பீலைத் தள்ளிக்கொண்டது டிக்கிரியை ஸ்திரப்படுத்தாது என்றும் தீர்மானிக்கப்பட்டது. II பம்பாய் லா. ரி., 1076 பக்கம்.

Marriage expenses of a Hindu Girl.

**ஒரு ஹிந்து கன்னிகையின் விவாகச் செலவுகள்.**—ஒரு ஹிந்து கன்னிகையின் விவாகச் செலவுகள் அவளுடைய இறந்த தகப்பனார் எந்த குடும்பத்தில் பாகஸ்தராயிருக்கிறாரோ அந்த குடும்பப் பணத்திலிருந்து கொடுக்கப்பட வேண்டும். கன்னிகையின் சிறிய தகப்பன் இந்தச் செலவுகளைச் செய்ய மறுதளித்ததை முன்னிட்டு அந்தச் செலவுகளை தாயார் செய்திருந்தால் காண்ட்ருக்ட் ஆக்ட் 69-வது பிரிவின்படி கன்னிகையின் சிறிய தகப்பன்பேரில் வியாஜ்யம் கொண்டுவந்து பெற்றுக்கொள்ளலாம். இதற்காக தாயாரும் வியாஜ்யம் செய்யலாம். கன்னிகையும் வியாஜ்யம் செய்யலாம். 23 மதராஸ், 512 பக்கம்.




# Oakes & Co., Ltd.,

9, Broadway, MADRAS.

——(o)——

## அடியில்கண்ட சாமான்கள் எங்களிடத்தில் அகப்படும்.

(1) விவசாயத்திற்கு வேண்டிய யந்திரங்கள்,

(2) மனிதர்களாலும், மாடுகளாலும் வேலை செய்யக்கூடிய தண்ணீர் பாய்ச்சும் பம்புகள்,

(3) நீராவியாலும் வேறு எந்த சக்தியாலும் வேலை செய்யக்கூடிய எல்லாவித தொழிலுக்கும் வேண்டிய யந்திரங்கள்,

(4) தச்சு வேலைக்கு வேண்டிய உளி, வாச்சி முதலிய சாமான்கள்,

(5) பலவித பெயிண்டுகள், எண்ணெய்கள், வார்னீஷுகள் புருஷுகள்,

(6) வியாபாரிகளுக்கு வேண்டிய நிறுக்கும் யந்திரங்கள், ஸேப்கள், பணம் வைக்க இரும்புப் பெட்டிகள், பூட்டுகள்,

(7) விவசாயிகளும், குடித்தனக்காரர்களும் உடைக்கவும், அரைக்கவும் வேண்டிய யந்திரங்கள்,

(8) கம்பி வேலிகள், இரும்பு மாடிப்படிகள், வீடு கட்டுவதற்கு வேண்டிய இரும்புச் சாமான்கள்,

இன்னும் எது வேணுமானாலும் எழுதியனுப்பினால் அனுப்பத் தயாராய் இருக்கிறோம். காட்டலாக் அனுப்பப்படும்.

ஓக்ஸ் அண்டு கம்பெனி,

9, பிராட்வே, சென்னப்பட்டணம்.

# EDUCATIONAL NOTES.
## வித்தியாவிஷயக் குறிப்புகள்.

TRAINING OF FOREMEN.

**மேஸ்திரிகளைத் "தற்பித்து" செய்தல்.**-கொஞ்ச காலமாக கைத்தொழில்களில் அநேகவித யந்திரங்கள் விசேஷமாக உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த யந்திரங்களை சரிவரப்பார்த்து அவைகளைக்கொண்டு வேலைசெய்யக்கூடிய தகுந்த ஆட்கள் வெகு சொல்பம். தவிரவும் தண்ணீர் பாய்ச்சுவதற்காக அநேக இடங்களில் விவசாயிகள் ஆயில் எஞ்சின்களை ஓட்டுவதற்காக தகுந்த ட்ரைவர்களும் கிடைப்பதில்லை. ஆகையால் மேலே சொல்லிய வேலைக்காரர்களைத் "தற்பித்து" செய்வதற்காக கவரன்மெண்டார் சில ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். சென்னைப்பட்டணத்தில் பி. டி. செங்கல்வராய நாயக்கர் தர்ம சொத்தைக்கொண்டு தாய் தகப்பனில்லாத பையன்களுக்கு கொல்லுவேலை, தச்சுவேலை முதலிய கைத்தொழில்கள் சொல்லிக்கொடுப்பதற்காக ஒரு பள்ளிக்கூடம் ஏற்பட்டு நடந்து வருகிறது. இது பச்சையப்பன் தர்ம பரிபாலன கமிட்டியார் பார்வைக்கு உட்பட்டது. இந்தப் பள்ளிக்கூடத்துக்கு கொஞ்சம் பணவுதவி செய்து அந்தப்பள்ளிக்கூடத்தில், யந்திரங்களைப் பார்த்துவருவதற்கு வேண்டிய மேஸ்திரிகளையும் ஆட்களையும் "தற்பித்து" செய்யும்படிக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆயில் எஞ்சின்களை ஓட்டுவதற்கு வேண்டிய ட்ரைவர்களை கோயம்புத்தூர் விவசாய காலேஜில் "தற்பித்து" செய்யக்கூடாதா என்பதை டைரக்டர்ஆப் இண்டஸ்ட்ரீஸ் என்ற கைத்தொழில் இலாகா தலைவரோடு கலந்து யோசித்து ரிபோர்ட்டு செய்யும்படிக்கு ரெவினியூ போர்டாருக்கு உத்தரவாயிருக்கிறது.

WEAVING SCHOOLS.

**நெசவுப் பள்ளிக்கூடங்கள்.**—வடக்கே ஐக்கிய மாகாணங்களில் விவசாய இலாகா மேற்பார்வைக்கு உட்பட்டு சுமார் 6 நெசவு பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இவைகளில் இது வரைக்கும் 250 பிள்ளைகள் படித்து தேறியிருக்கிறார்கள். இப்படித்தேறினவர்கள் வேலைக்குக் கிடைப்பதால் கைத்தறி நெசவு சாலைகள் ஏற்படுத்த அனுகூலமாயிருக்கிறதாம்.

EDUCATION IN TRAVANCORE.

**திருவாங்கூர் ராஜ்யத்தில் படிப்பு.**—திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் வருகிற ஜனவரி மாஸம் முதல் ஆண்பிள்ளைகளுக்காக ஏற்பட்ட ஸ்கூல்களில் ஸ்வபாஷைக்கீழ்த்தரப்படிப்புக்காக பையன்களிடத்தில் சம்பளம் வாங்கக்கூடாது. இதேமாதிரியாய் பெண்பிள்ளைப் பள்ளிக்கூடங்களில் ஒன்றிலும் கீழ்ப்படிப்போ மேல்படிப்போ ஒன்றுக்கும் சம்பளம் வாங்கக்கூடாது. ராஜாங்கத்திலிருந்து கிராண்டு (பண உதவி) வேண்டுமானால் ஒவ்வொரு பள்ளிக்கூடமும் மேலே சொல்லியபடியே நடந்து தீரவேண்டும். இதனால் ஷை பள்ளிக்கூடங்களுக்கு நஷ்டம் நேரிடுமாதலால் அந்த நஷ்டத்தை ஸர்க்கார் ஈடு செய்வார்கள். இதனால் ஸர்க்காருக்கு வருஷந்தோறும் லக்ஷத்து இருபதினாயிரம் ரூபாய் அதிகச் செலவாகும். இதோடுகூட கீழ்த்தரப்படிப்பு சொல்லிக்கொடுக்கும் உபாத்தியாயர்களுக்கும் சம்பளம் உயர்த்த வேண்டாமா என்றும் யோசித்துக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

THE CHANNAPATNA INDUSTRIAL SCHOOL.

**சன்னப்பட்டண கைத்தொழில் பள்ளிக்கூடம்.**—மைசூர் ஸமஸ்தானத்தைச் சேர்ந்த பங்களூர் ஜில்லாவில் சன்னப்பட்டணம் என்பதாக ஒரு பட்டணமிருக்கிறது. இதில் பழுக்கா ஸாமான்கள், விளையாட்டுஸாமான்கள், வாத்தியங்களுக்குபோடக்கூடிய ஸன்ன எஃகுக் கம்பிகள், கண்ணாடி வளையல்கள் இவைகளெல்லாம் விசேஷமாக செய்யப்படுகின்றன. பழதினுஸுகளும், கறிகாய் தினுஸுகளும் வெகு நேர்த்தியாய் செய்யப்படுகின்றன. இப்பொழுது இவைகளை நன்றாய் செய்யக்கூடியவன் ஒருவனே ஒருவன் இருக்கிறானாம். அவனுக்குப்பிறகு இந்தக் கைத்தொழில் நசித்துப்போய் விடுமாம். இப்படிப்பட்ட கைத்தொழில் அழியாமலிருப்பதற்காக சன்னப்பட்ணத்து கைத்தொழில் பள்ளிக்கூடத்தில் இந்தத்தொழிலைக் கற்றுக்கொடுக்கும்படி மைசூர் கவரன்மெண்டார் மாஸம் 12 ரூபாய் சம்பளம் போட்டு அந்த நிபுணனை நியமித்திருக்கிறார்கள். இவன் அந்தப் பள்ளிக்கூடத்தில் தினம் பாதி நாள் தான்வந்து சொல்லிக்கொடுப்பானாம்.

BOOKS RECEIVED.

**புஸ்தக வரவு.**—ராஜம் அய்யர் சரிதை— ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மைலாப்பூர், மதராஸ்—விலை 0-8-0.

சந்திரகாந்தா, துப்பு அறியும் ஒரு இனிய தமிழ் நாவல்—ஜே. ஆர். ரங்கராஜு அவர்கள் இயற்றியது. இரண்டாம்பதிப்பு—விலை 0-12-0.




# Paddy Cultivation.
## நெல் சாகுபடி.

ராணிப்பேட்டை ரஸாயந உரக்கிடங்கில் எங்களால் தயாரிக்கப்படுகிற உரங்கள் சாஸ்திரோக்தமான
வைகள். அதாவது பயிர், பயிருணவு இவைகளின் சாஸ்திர முறைப்படி. பயிருணவு சத்துக்கள்
அதிகமாயுள்ளதும், அந்த சத்துக்கள் பயிர்களுக்கு உணவாகக்கூடிய நிலைமையிலுள்ளதுமான சரக்குகளைக்
கொண்டு அந்தந்த பயிர்களுக்குத் தக்கப்படி தயார் செய்யப்படுகின்றன. தற்காலத்தில் ஜர்மனி, இங்கிலாந்து,
அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங்களில் வியவஸாய ரஸாயந சாஸ்திர நிபுணர்களால் வியவஸாய சாஸ்
திர ஆராய்ச்சிகள் விசேஷமாய் செய்யப்பட்டு வருகின்றன. அந்த ஆராய்ச்சிகளை யனுசரித்ததும், இந்த
நாட்டு பயிர்களின் காலம், சீதோஷ்ண ஸ்திதி இவைகளுக்குத் தக்கபடியும் உரங்கள் செய்யப்படு
கின்றன. இப்படிதயாரிக்கப்பட்ட உரங்களை கிடங்கு தோட்டத்து நிலங்களில் அந்தந்த பயிர்களுக்குப்
போட்டு சாகுபடி செய்கிறோம். சென்ற வருஷம் 30 ஸெண்டுள்ள ஓர் நிலத்தில் எங்கள் நெல் உரம் இரண்
டாந்தரம் (B) 168 ராத்தல் உழுது சின்னசம்பா நாற்றை ஒற்றை அலகாக முக்காலடிக்கொன்று நட்டதில்
558 படி அல்லது 1843 ராத்தல் தானியம் கிடைத்திருக்கிறது. இது ஏகருக்கு 5812 ராத்தல் வீதம்
ஆகிறது. அதே உரத்தைப் போட்டு சாதாரணமாய் நட்டதில் ஏகருக்கு 3750 ராத்தல் முதல் 5000 ராத்
தல் வரை நெல்கண்டு முதலாயிருக்கிறது. இவ்வாறு ரஸாயந உரம்போட்ட நிலங்களோடு ஒப்பிட்டுப்
பார்க்கும்பொருட்டு நாட்டு உரங்களாகிய தொழு எரு, சாம்பல், தழை முதலியவைகள் போட்டு பயிர் செய்த
தில், ஏகருக்கு 2344 ராத்தல் முதல் 2625 ராத்தல் வரை நெல் கிடைத்திருக்கிறது. ரஸாயந உரம்
மூன்று சாகுபடிக்கொருதடவை உபயோகப்படுத்தப்படுகிறது. நாட்டு உரங்கள் சாகுபடிதோறும் உபயோ
கப்படுத்தப்படுகின்றன. உதாரணமாக, 32 ஸெண்டுள்ள ஓர் நிலத்தில் 180 ராத்தல் நெல் உரம் (B)
போட்டு பயிர் செய்ததில், முதல் போகம் சின்னசம்பா 1611 ராத்தல் நெல்லும், இரண்டாம் போகம்
வெள்ளைக்கார் 1467 ராத்தல் நெல்லும், மூன்றும் போகம் ஸ்வர்ணவாரி 1425 ராத்தலும் கிடைத்
தன. இது ஏக்கருக்கு முதல் போகத்தில் 5034 ராத்தல் வீதமும், இரண்டாம் போகம் 4584 ராத்தல்
வீதமும், மூன்றும் போகம் 4453 ராத்தல் வீதமும் ஆகிறது. நாட்டு உரங்கள் போட்டு சாகு
படி செய்துவந்த 25 ஸெண்டுள்ள ஓர் நிலத்தில் 56 ராத்தல் ஸூபர்பாஸ்பேட் மாத்திரம் நாலு மடங்கு
மணலுடன் கலந்து ஒரு மாதத்திய சின்னசம்பாப் பயிர் மேல் தெளித்ததில், அந்த போகத்தில் ஏகருக்கு
4875 ராத்தல் வீதமும், அடுத்த போகம் வெள்ளைக்கார் 4500 ராத்தல் வீதமும், அதற்கடுத்த போகம்
ஸ்வர்ணவாரி 4218 ராத்தல்வீதமும் கொடுத்திருக்கிறது. 32 ஸெண்டுள்ள ஓர் நிலத்தில் 56 ராத்தல் ஸூபர்
பாஸ்பேட் போட்டு உழுதும், 20 ஸெண்டுள்ள மற்றொரு நிலத்தில் ஒன்றும் போடாமல் உழுதும், இரண்டி
லும் சிறுமணி நாற்று நட்டு, நாகதாளி அழுகின தண்ணீர் பாய்ச்சினதில், பயிர் இரண்டிலும் மதாளித்து
வந்தது. அறுவடையில் முதல் தாக்கில் 1641 ராத்தல் நெல் முதல்தரமானதாக கிடைத்தது. இரண்டா
வது தாக்கில் சுத்த கசப்பான நெல் 225 ராத்தல் கிடைத்தது.

***The Presidency Manure Works, Ltd.,***
***Ranipet.***

***Managing Agents: Parry & Co., Madras.***

**ராஜதானி ரஸாயந உரக்கிடங்கு,**
**ராணிப்பேட்டை.**

மானேஜிங் ஏஜண்டு:—
**பாரி அண்டு கம்பெனி,**
**மதராஸ்.**

## SCIENTIFIC NOTES.
## சாஸ்திரீயக் குறிப்புகள்

COLOR AND GROWTH.

**நிறமும் வளர்ச்சியும்.**—ஐரோப்பாவில் பிரான்ஸ் தேசத்தில் மான்ட்பெல்லியர் என்பதாக ஒரு பட்டணமிருக்கிறது. இதில் பரீக்ஷார்த்தமாய் ஒரு திராக்ஷைத் தோட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தத்தோட்டக்காரர் ஒவ்வொரு கொடியைச் சுற்றிலும் கொஞ்சதூரம் இடத்தை விட்டுவிட்டு மற்ற தரையை எல்லாம் மெல்லியதாய் சிம்பிட்டியைப் போட்டு மூடினாராம். இப்படி மூடினாலும் ஜலம் போகவும் வரவுங்கூடுமாம். இப்படி சிம்பிட்டி தெளித்த தரையில் சில இடங்களில் வெள்ளையாயும், சில இடங்களில் கருப்பாயும், சில இடங்களில் சிவப்பாயும் வர்ணங்களைப்பூசினார். இந்தப்படி பூசிப்பார்த்ததில் வெள்ளை பூசின இடங்களைவிட சிவப்பும் கருப்பும் பூசின இடங்களிலுள்ள கொடிகள் இரண்டு மடங்கு தேட்டையாயிருந்தனவாம். சிவப்பு கருப்புப் பூச்சுகளுக்கு உள்பட்ட தரைகளின் உஷ்ணம் வெள்ளை பூசின தரையைவிட ஜாஸ்தியாகவே இருக்குமாம். ஆகையினாலேதான் பயிர் நன்றாய் வளர்கிறதாம்.

BIRDS AND AGRICULTURE.

**பக்ஷிகளும் விவசாயமும்.**—பக்ஷிகளுக்கும் விவசாயத்துக்கும் என்ன சம்பந்தமென்று சில பேர்கள் நினைக்கலாம். ஆனால் கொஞ்சம் யோசனை செய்து பார்த்தால், பக்ஷிகள் விவசாய விருத்திக்கு ஹேதுவாயிருக்கிற விஷயம் தெளிவாகும். பயிர்களை அழிக்கும் பூச்சிகளெல்லாம் பக்ஷிகளுக்கு ஆகாரமாகின்றன. பக்ஷிகள் இல்லாமற்போனால் ஆயிரக்கணக்கான பூச்சிகளை விவசாயிகளால் கொல்லமுடியவே முடியாது. பயிர்களெல்லாம் நாசமாய்ப் போய்விடும். சில பக்ஷிகள் தானியத்தை சாப்பிட்டபோதிலும் பூச்சிகள் முட்டையிட்டு குஞ்சுபொரித்து விருத்தியாகாதபடி அவைகளை நாசம் செய்யும். பக்ஷிகளை ஒரு இடத்திற்கு அதிகமாய் வரச்செய்ய ஒரு உபாயம் உண்டு. அதாவது அவைகள் குடிப்பதற்கும் குளிப்பதற்கும் தகுந்த ஜலத்தை ஒரு நல்ல இடத்தில் வைக்கவேண்டும். பக்ஷிகளுக்குப் பகையாகிய பூனை, நாய் முதலியவைகளின் தொந்திரவு இல்லாமலும் செய்யவேண்டும். பக்ஷிகளால் மேலே சொல்லிய ஒரு பிரயோசனம் மாத்திரம் அல்ல. அவைகளின் எச்சங்கள் பயிர்களுக்கு நல்ல எருவாகின்றன. மொத்தத்தில் பக்ஷிகளால் விவசாயத்துக்கு ஸாதகமே ஒழிய பாதகமில்லை.

BACTERIA.

**பாக்டீரியா.**—போனமாஸத்து ஸஞ்சிகையில் பாக்டீரியா என்பவைகளைப் பற்றி சில விஷயங்களை எடுத்துச்சொன்னோம். அவைகள் வெகு நுட்பமான பூச்சிகள். அவைகளின் குறுக்களவு ஒரு அங்குலத்தில் இருபத்தையாயிரத்தில் ஒரு பாகம். ஒருகன அங்குலத்திற்குள் பத்து லக்ஷம் கோடி பாக்டீரியா இருந்து வளரக்கூடியவைகள். இவைகள் நிலங்களில் ஒரு அடிக்குக் கீழே தான் வெகு ஜாஸ்தி. அதற்குக் கீழே போகப்போக ரொம்பக்குறைந்து போகின்றன. ஒன்பதடிக்குக் கீழும் பாக்டீரியா இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

GANGES WATER.

**கங்கா தீர்த்தம்.**—இ. எச். ஹான்கின் என்னும் ஆங்கில வைத்திய சாஸ்திரி, காலரா என்னும் வாந்திபேதியின் காரணங்களையும் அதைத் தடுக்கும் முறைகளையும்பற்றி ஒரு சிறு புத்தகம் எழுதி யிருந்தார். அதன் பிறகு அவர் கங்கா நதியின் ஜலத்தையும் யமுனா நதியின் ஜலத்தையும் பரீக்ஷித்துப் பார்த்து அவை இரண்டிலும் காலராவை யுண்டாக்கும் பாக்டீரியா, அதாவது, பூச்சிகள் இல்லை யென்றும், வியாதிகள் வராமல் தடுத்துப் பாதுகாக்கும் குணம் அவ்விரண்டு ஜலங்களுக்கும் இருக்கிறதென்றும், அந்த ஜலங்களுக்கு மாத்திரம் இந்த அருமையான யோக்கியதையும் மகிமையும் இருப்பதற்குக் காரணம் தெரியவில்லையென்றும் எழுதியிருக்கிறார்.

MADRAS AGRICULTURAL DEPARTMENT.

**மதராஸ் விவசாய இலாகா.**—இது வரையில் நமது இராஜதானியில் "மைகாலெஜிஸ்ட்" அதாவது, பயிர்களை பாதிக்கும் காளான் முதலியவைகளுக்கு சிகிச்சை சொல்லக்கூடிய நிபுணர் ஒருவரும் இருந்ததில்லை. அந்தக்குறை இப்பொழுது நீங்கிவிட்டது. ப்யூசா பண்ணையைச் சேர்ந்த மக்ரே என்பவர் ஒருவர் மேலே சொல்லிய விஷயங்களில் சிகிச்சை சொல்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

COTTON SEED.

**பருத்திக்கொட்டை.**—பருத்தி விதை பெரிதாயிருந்தால் செடி பருத்து வருகிறது. பருத்து வரும் செடி சீக்கிரம் காய்க்கிறது.

———




V. KALYANARAM IYER & Co., *Booksellers, Esplanade, MADRAS*

நன்றாய்ப் பார்வையிட்டு நல்லகாகிதத்தில் தெளிவாய் அச்சிட்ட சிறந்த பதிப்பு.

**மூவர் தேவாரம்-பண்முறை—1044 பக்கம், ரூபாய் 3—0—0.**

இப்பதிப்பில் (1) சம்பந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவர்களின் சரித்திரக் குறிப்பும், (2) தேவார வரலாறும், (3) தேவாரப்பண் அட்டவணையும், (4) தேவாரப் பாடல்பெற்ற ஸ்தல அகராதியும், (5) தேவார ஸ்தலங்களுள்ள நாடுகளின் விபரமும், (6) அட்டவீரட்டானங்களைக்குறிப்பிக்கும் செய்யுளும், (7) தேவாரப் பொதுப்பாடல்களின் பக்க அட்டவணையும், (8) தேவார வைப்பு ஸ்தல அட்டவணையும், (9) காரைக்காலம்மையார் அருளிச் செய்த மூத்த திருப்பதிகமும் நூதனமாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன.

**நாலாயிர திவ்யப்பிரபந்தம்—640 பக்கம் ரூபாய் 3—0—0.**

இப்பதிப்பு (1) ஆழ்வார்களின் காலவைபவக் குறிப்பும், (2) ஆழ்வார்கள் அருளிச்செய்த பிரபந்தங்களின் அட்டவணையும், (3) ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திவ்விய தேசங்களின் அட்டவணையும், (4) அந்த தேசங்களின் வைபவக்குறிப்புகளும் சேர்த்து பல பிரதிகளுடன் ஒத்திட்டுப்பார்த்து, நன்றாய் அச்சிடப்பெற்றுளது.

**வேதாந்த விஷயமான புஸ்தகங்கள்.**

| | ரூ. அ. | | ரூ. அ. |
|---|---|---|---|
| வள்ளாலார் சாஸ்திரம் | 1 8 | ஜன்மாந்திரம் (அல்லது இராமதாசர் உபதேசம்) | 0 2 |
| வாசுதேவ மனனம் | 1 0 | நாளை சிவவாதக்கட்டளை | 0 1 |
| வேதாந்த போதினி | 0 8 | மகாராஜா துறவு | 0 6 |
| சிவபோகசாரம் & சிவஞானவிளக்கம் | 0 2 | தாயுமானவர் பாடல் (காலிகோ பயிண்டிங்) | 0 12 |
| சுகர் கைவல்லியம் | 0 2 | பட்டணத்தார் பாடல் | 0 2 |
| வைராக்கிய சதகம் | 0 2 | | |

**புதிய நாவல்களும் நாடகங்களும்.**

| | | | |
|---|---|---|---|
| போஜ சரித்திரம் | 1 8 | மனோகரன் | 0 12 |
| சுந்தரி மனோகரன் | 0 12 | கள்வர் தலைவன் | 0 8 |
| காமாக்ஷி | 0 8 | சாரங்கதரன் | 0 8 |
| சந்திரசேகரன் | 0 8 | யயாதி | 0 8 |
| ஆநந்தமடம் | 0 8 | வசந்திகா | 0 8 |
| லீலாவதி சுலோசனா | 0 12 | கிரிஸில்டா, அல்லது பொறுமையுள்ள மனைவி | 0 2 |
| இரண்டு நண்பர்கள் | 0 12 | காலவரிஷி | 0 8 |
| சத்ருஜித் | 0 12 | வேதாள உலகம் | 0 8 |

**வேறு புஸ்தகங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| ஸ்திரி புருஷ சாமுத்ரிகாலக்ஷணம் | 1 0 | **மனுதர்ம சாஸ்திரம்** 2647 கிரந்த சுலோகங்களும் அவைகளின் தமிழ் மொழிபெயர்ப்பும்—560 பக்கம் | 2 4 |
| குறள் (மூலம்) | 0 4 | | |
| பஞ்சதந்திரம் | 0 4 | | |

**வியவசாய போதினி.**—நிலம், எரு, விதை, பயிரிடும்வகை முதலிய சகல விவசாய விஷயங்களையும் பற்றியது. மிராசுதாரர்களுக்கும் மற்றவர்களுக்கும் இன்றியமையாதது. தஞ்சாவூர் ஜில்லா, நீடாமங்கலம் அ. சேது ராமய்யர் இயற்றியது. 400 பக்கம், 80 படங்கள். ரூ. 1 4 0

**மானிட மர்மசாஸ்திரம்.**—அல்லது "சிசு உற்பத்தி சிந்தாமணி." இது யாவரும் படித்து அறியவேண்டிய அடியிற்கண்ட அரிய பெரிய விஷயங்களடங்கியது. 500 பக்கம், 190 சித்திர படங்களடங்கியது ரூ. 5 0 0

**அடங்கிய விஷயங்கள்.**—மானிட ஜீவியத்தில் பலபருவங்கள்—இல்லற இன்பரகசியம்—ஜனனேந்திரியங்களின் அமைப்பும் அற்புதங்களும்—மாதாவின் மாக்ஷிமை—சிசு உற்பத்தி—கர்ப்பகால சுகாதாரவிதிகள்—கர்ப்பகால நோய்களும் பரிகாரங்களும்—மருத்துவ சாஸ்திரம்—சிசுபரிபாலனம்—மலட்டிற்கு நிவாரணம்—ஆண்மையினழிவும் அதன் மீட்சியும்—சமயோசித சஞ்சீவி.

☞ ஆர்டர் அனுப்பும்போது இப்பத்திரிகையின் பெயரைக் குறிப்பிடுக.

**வி. கல்யாணராமய்யர் அண்டு கோ.,**

புக்ஸெல்லர்ஸ், எஸ்பௌநேட், மதராஸ்

## MEDICAL NOTES.
## வைத்தியக் குறிப்புகள்.

REMEDY FOR SNAKE BITE.

**பாம்புகடிக்குச் சிகிச்சை.**—பாம்பு கடித்தால், கடித்த இடத்துக்கு மேலே ஒரு கைக்குட்டையையோ, துண்டுக்கயிற்றையோ அல்லது சோமனிலிருந்து கிழித்த துணித்துண்டையோ முறுக்கி நன்ருய் இறுக ஒரு கட்டுக்கட்ட வேண்டியது முதல் காரியம். பாம்பின் பல்லுகள் பட்டு உண்டான பள்ளங்களில் தாராளமாய் அறுத்து பெர்மாங்கனேட் ஆப் பொடாஷ் என்னும் மருந்தில் இரண்டு மூன்று கட்டிகளை அதற்குள் செலுத்தி, அந்தக் கட்டிகளைக் கரைப்பதற்காக துளி ஜலத்தை (அல்லது ஜலம் கிடைக்காவிட்டால் கொஞ்சம் எச்சிலை) அவைகள் மேல் விடவேண்டும்; பிறகு அவைகளை, அறுத்த காயத்துக்குள் போகும்படி கறுத்துப்போய் விடுகிற வரையில் நன்ருய்த் தேய்க்கவேண்டும்.

இந்தக் காரியமவ்வளவையும் செய்வதற்கு 2 முதல் 3 நிமிஷம் மாத்திரமே செல்லும்; பெர்மாங்கனேட் என்னும் மருந்தானது மிகவும் அதிகமான பிராணுபாயத்தை யுண்டாக்கத்தக்க பாம்புகளின் விஷத்துக்கு முறிவாக எவ்வளவு எடை உபயோகிக்கப் படுகிறதோ அதற்கு அதிகமாகவே எடையுள்ள ஷை விஷத்தைக் கெடுதிசெய்யாமலிருக்கச் செய்கிறதென்று இது விஷயமாய்ச்செய்த சோதனைகளால் தெரியவந்திருக்கிறது. சாதாரண பாம்புகள் கடித்தால் அப்படிக்கடித்த 15 நிமிஷம் முதல் 30 நிமிஷத்துக்குள்ளாகவும், ரொம்ப பெரிய கட்டுவிரியன் அல்லது நாகப்பாம்பு கடித்தால்கூட கடித்தவுடனேயும், மேலே சொன்னபடி, பெர்மாங்கனேட் ஆப் பொடாஷ் என்னும் மருந்தைக் கொண்டு, கடித்த இடங்களிலேயே சிகிச்சை செய்யும்பட்சத்தில், அதனுல் உயிரைக் காப்பாற்றக்கூடுமென்று நிச்சயமாய் நம்பலாம்; இந்த பாம்புகடிக்காக என்றே ஸர் லாடர் ப்ரண்டன் என்ற ஒரு பெரிய வைத்தியர் அறுப்பதற்கு வேண்டிய ஆயுதமும் பெர்மாங்கனேட் ஆப் பொடாஷ் அடங்கிய லான்ஸெட் என்பதாக ஒரு கருவி கண்டு பிடித்திருக்கிருர். ஆகையால் இந்த லான்ஸெட் என்னும் சஸ்திரங்களிலே ஒன்றை வைத்துக்கொண்டு, பாம்பு கடித்தவுடனே அதை உபயோகிக்கும்பட்சத்தில், பாம்பு கடிக்கும் ஒவ்வொரு கேஸிலும் வெகுசாய்ப் பரிஹாரமுண்டாகும். இந்த லான்ஸெட்டின் விலை சுமார் 8 அணு.

SALT.

**உப்பு.**—உடம்பு ஊதி இருக்கும் சில ரோகங்களுக்கு உப்பில்லாப்பத்தியம் வைப்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். உடம்பு ஊதுவதற்குக் காரணம் தேகத்தில் நீர் தங்குவதே. உப்புக்கு நீரை இழுத்துப் பிடித்துக்கொள்ளும் சக்தியுண்டு. ஆகையால் ஆகாரத்தில் உப்புச்சேர்ந்தால் உடம்பு ஊதுவதற்கு இடமுண்டாகிறது. ஆகவே உடம்பு ஸ்தூலத்திருக்கிறவர்கள் உப்பை உபாயமாய்ச் சேர்த்துக்கொண்டு வந்தால் ஸ்தூலம் குறையும்.

MILK DIET.

**பால் பத்தியம்.**—உடம்பு வீங்கியிருந்தால் பால் பத்தியம் வைப்பதுண்டு. பாலில் உப்பு ரொம்பக் கொஞ்சம். ஆகையினுலே பால் பத்தியமும் உப்பில்லாத பத்தியந்தான். சில வைத்தியர்கள் வேறு ஒன்றும் சாப்பிடக்கூடாதென்று பாலை மட்டும் சாப்பிடச் சொல்லுவார்கள். இது எல்லாராலும் முடியாது. அப்படிப்பட்டவர்களுக்கு பாலல்லாமல் வேறு உப்பில்லாத பதார்த்தங்களையும் சாப்பிடச் சொல்லலாம். பால் போட்ட காப்பி, ஆட்டு மாம்ஸம், ரொட்டி, வெண்ணெய், உருளைக்கிழங்கு, பழங்கள் இவைகளை எல்லாம் வேறு உப்புப்போடாமல் சாப்பிட்டாலும் பாதகமில்லை. பால் பத்தியமிருந்தால் எவ்வளவு பலனுண்டோ அந்த பலன்களெல்லாம் மேலே சொன்ன பதார்த்தங்களைச் சாப்பிட்டால் உண்டாயிருக்கிறதாகத் தெரியவருகிறது.

RAT DESTRUCTION.

**எலியைக் கொல்லுதல்.**—ப்ளேக் வியாதி ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் பரவுவதற்கு எலிதான் காரணமென்பதாக பெரிய வைத்திய சாஸ்திரம் படித்தவர்களின் அபிப்பிராயம். ஆகையால் ப்ளேக் வராமல் தடுக்க எலிகளைக்கொல்ல அனேகம் முனிஸிபாலிடிகளில் ஏற்பாடு செய்து ஒரு எலிவால் கொண்டுவந்து கொடுக்கிறவர்களுக்கு கொஞ்சம் காசும் கொடுகிருர்கள். தவிர, பூனைகள் விசேஷமாய் உள்ள சில கிராமங்களில், ப்ளேக் வரவில்லை என்பதாகவும் கண்டு பிடித்திருக்கிருர்கள். இதற்குக் காரணம் பூனைகள் எலிகளைப் பிடித்துக் கொன்று விடுகின்றன. அதனுல் ப்ளேக் பரவுதற்கு இடமில்லாமல் போகிறது. இந்த சமாசாரத்தை அறிந்துகொண்டு மேற்கு ஆபிரிக்காவில், ஜெர்மெனியார்கள் குடியேறி இருக்கும் டோகோலாண்டில் ப்ளேக் வராமல் பூனைகளை வளர்க்கும்படி அந்த மாகாணத்து கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிருர்கள்.




# P. S. Sastri Artist and Photographer,

## CARNATIC STUDIO, Mount Road, Madras.

SPECIALITIES. { SCHOOL GROUPS. FAMILY GROUPS. BROMIDE ENLARGEMENTS.

## பொட்டகிராப் படங்கள்.

பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளையும் குடும்பங்களையும் பொட்டகிராப் படம் பிடிப்பதிலும் சிறியபடங்களை பெரிதாக்கிக்கொடுப்பதிலும் நிபுணர்.

பி. எஸ். சாஸ்திரி,

பொட்டகிராப் பிடிப்பவர், கர்நாடிக் ஸ்டுடியோ,

மவுண்ட் ரோட், மதராஸ்.

## காதர் அண்டு யூசப் பிரதர்ஸ்.

இந்தியா, பர்மா, சிலோன், முழுமையும் பெயர்பெற்று யாவராலும் அங்கீகரிக்கப்பட்ட கம்பெனி, கெடியார வர்த்தகர்கள், இந்திய ரெயில்வேகளுக்கும், கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கும் கெடியாரம் சப்ளை செய்கிறவர்கள்.

நெம்பர் 47, P. L. சென்னை.



சாவி யுள்ளது. ஸ்காந்தமல்லாத (Non-magnetic) சர்தார் (Sardar) லீவர். ரூபா 12, வெள்ளி ரூபா 18, Oxydised ரூபா 14.

வெள்ளி மேல்பார்வையில் மணிபார்க்கும்படி கடியாரம் மேல்சாவியுள்ளது. ஸ்காந்தமல்லாத (Non-magnetic) பஹதூர் (Bahadur) லீவர் ரூபா 14, வெள்ளி ரூபா 20.

நெ. 2. நிக்கல் மேல்பார்வையுள்ளதும் மேல்சாவியுள்ளதுமான ரெயில்வே ரெகுலேடர் கடியாரம். டயல்மேல் இஞ்சின் மார்க்கு, நடு அளவுள்ளது ரூபா 4-8-0.

நெ. 102. ஷை மாதிரி லீவர் ராஸ்கோப் ஸிஸ்டம் பேடண்டு கெடியாரம் ரூபா 3-0-0.

## PAGE FOR GIRLS.
## பெண்களுக்கான பக்கம்.

---

PREGNANT WOMEN.

**கர்ப்ப ஸ்திரீகள்.**—ஆயுர்வேத டாக்டராகிய பண்டித எம். துரைசாமி ஐயங்கார் ஸ்திரீகள் கர்ப்ப காலத்தில் நடந்துகொள்ளவேண்டிய முறைகளைப் பற்றி சமீபத்தில் சுதேசமித்திரனில் எழுதியிருக்கிறார். கர்ப்பிணி ஸ்திரீகள் அதிக வேலை செய்யாமலிருக்கவேண்டும். பாரமான சாமான்களைத் தூக்கக்கூடாது. பயப்பட்டு, திடுக்கிடும்படியான இடங்களுக்குப் போகக்கூடாது. கடுங்கோபங்கொள்ளவுங்கூடாது. வேகமாய் நடமாடவுங்கூடாது. நெருப்புக்கு சமீபத்தில் அடிக்கடி இருக்கக்கூடாது. உயரத்திலிருந்து ஆழமான இடங்களை பார்க்கக்கூடாது. இந்தமாதிரி தேகத்துக்கு ஆயாஸத்தையாவது மனதுக்கு பயத்தையாவது கொடுக்கக்கூடிய காரியங்களைச் செய்யக்கூடாது. மந்தம்தட்டாத புஷ்டியான ஆகாரத்தை சாப்பிடவேண்டும். சில கர்ப்பிணிகள் செய்வது போல் கண்டதையும் கேட்டதையும் சாப்பிடக்கூடாது. குடல்கள் அடைபட்டிருக்கக்கூடாது. மலபந்தம் உள்ள கர்ப்பிணிகள் அடிக்கடி கொஞ்சம் ஆமணக்கெண்ணெயை இரவில் படுக்கப்போகும்பொழுது பாலில் சேர்த்து சாப்பிடுவது நலம். பழங்கள் காய்கறிபதார்த்தங்கள் முதலியவைகளில் பக்குவமானவைகளை மிதமாக சாப்பிடவேண்டும். சக்தியுள்ள வரையில் கொஞ்சமாக வேலை செய்வது பலத்தைக்கொடுக்கும். விடியற்காலத்தில் படுக்கையை விட்டு எழுந்ததும் ஒரு சிறிய டம்ளர் அளவு சுத்தமான குளிர்ந்த ஜலத்தை சாப்பிட்டு வருவதும் நலமாகும். சில சமயங்களில் வாந்தியினால் ஆயாஸம் உண்டாகலாம். அதற்காக காபி போடுவது போல் கிராம்புக்கஷாயம் போட்டு கொஞ்சம் சாப்பிடவேண்டும். அப்போது வாந்தி நின்றுவிடும். பிரசவ வேதனை உண்டானால் ஜவ்வரிசிக்கஞ்சி போன்ற லேசான ஆகாரத்தை சாப்பிடவேண்டும். குளிர்ந்த பானங்களை குடிக்கவேண்டும். மல்லாந்தாவது ஒரு பக்கமாகவாவது படுத்திருக்கவேண்டும். கர்ப்பஸ்திரீகளுக்கு பிரசவத்தினால் உண்டாகும் கஷ்டங்களைப் பற்றி பேசி அவர்களுக்குத் திகில் உண்டாகும்படி செய்யக்கூடாது. சுத்தமான காற்றும் நல்ல தண்ணீரும் எப்பொழுதும் அவசியமானவைகள். கதவுகளை அடைத்துவைத்து காற்றுப் புகாத அறைகளில் இருக்கவிடாமல் சமுத்திரக்காற்றுப் படும்படி கடலோரங்களுக்கு அழைத்துப்போவதும் நலம். பிரசவகாலம் சமீபிக்க சமீபிக்க கர்ப்பிணிகள் வேலை ஒன்றும் செய்யக்கூடாது. கூடுமானால் வீட்டுச்சுற்றுப்புறங்களிலேயே கொஞ்சம் உலாவலாம்.

ROCKING THE CRADLE.

**தொட்டிலாட்டுதல்.**—குழந்தைகளை தூங்கப்பண்ணுவதற்காக தொட்டிலில் போட்டு ஆட்டுவது வழக்கம். அப்படி ஆட்டும்போது குழந்தையின் கால் பக்கத்தில் நின்று தொட்டிலை ஆட்டுவது நல்லதல்ல. குழந்தைகள் ஆட்டுகிறவர்களை பார்த்துக் கொண்டேயிருக்கும். சில வேளையில் குழந்தை அரைவிழித்தூக்கமாயிருக்கும்போது ஆட்டுகிறவர்கள் ஏதாவது ஒரு காரியத்திற்காக கொஞ்சம் தொட்டிலை விட்டுவிட்டுப் போக நேரிடலாம். அப்படி நேர்ந்தால் குழந்தை ஒருக்கால் விழித்துக்கொண்டு ஆட்டினவர்கள் நேரில் இல்லாததைப் பார்த்து அழும். அதனால் குழந்தைக்குத் தூக்கம் கலைந்துபோம். மறுபடியும் குழந்தையைத் தூங்கப்பண்ணுவது சிரமம். ஆகையால் கால்மாட்டில் நின்று தொட்டிலை ஆட்டி வழக்கம் பண்ணாமல், தலைமாட்டில் நின்று ஆட்டி, குழந்தை நன்றாய்த் தூங்கும் வரையில் ஆட்டிவிட்டு மறுவேலை செய்யவேணும்.

USE FOR A MARBLE.

**கோலிகுண்டின் பிரயோசனம்.**—காய்ந்து கொண்டிருக்கும் பாலிலாவது அல்லது ஏதாவது குழம்பு போன்ற திரவ பதார்த்தத்திலாவது ஒரு சுத்தமான கோலிகுண்டைப் போட்டால் அது அந்தப் பதார்த்தம் தீய்ந்து அடிப்பிடிக்காமலிருக்கும்படி செய்யும். ஏனென்றால் அந்தப் பதார்த்தத்தின் உஷ்ணமானது கோலியை சுற்றிச் சுற்றி உருளும்படி செய்கிறது. ஆகையினாலே பால் முதலான பதார்த்தங்களை இப்போது செய்கிறபடி அடிக்கடி கிளற வேண்டிய அவசியம் இல்லை.

BOILED POTATOES.

**வேகவைத்த உருளைக்கிழங்கு.**—உருளைக்கிழங்கை வேகவைத்து அழுக்குத் துணிகளுக்குத் தேய்த்தால் அழுக்குவிட்டுப்போம். பாரிஸ் பட்டணத்தில் வேகவைத்த உருளைக்கிழங்கை சோப்பாக உபயோகப்படுத்திவருகிறார்கள்,



**DAS & Co.'s *PATENT* LOCKS, SAFES, BOXES, &c.,**

*are approved aud largely used by H. M's. Indian Government.*

கல்கத்தாவில் காஸ்ஸிப்பூர் ரோடில் 15 நெ. வீடு, தாஸ் அண்டு கம்பெனியாரால் செய்யப்பட்ட பூட்டுகளும், இரும்பு பெட்டிகளும் கவர்ன்மெண்டாரால் உபயோகிக்கப்படுகின்றன.

During the Viceroyalty of
**Lord Curzon**
*Das and Co.'s Locks* were supplied for Government Houses at Simla & Calcutta, and thus reported from Simla:—

"* * Were found to be excellently finished and in no way *inferior in quality to those of* European Manufacture. They are giving every satisfaction."

Awards from the late
**Chicago Exhibition**
1893–94.
THACKER'S MEDAL
with following Certificate:—

"The Locks are of good design *and large* heavy pattern having 12 Tumblers. They are made chiefly from *good castings* well fitted and finished by Machinery."

Please Address:—
**DAS & CO.,**
Chitpur Lock and Safe Works,
THE "ABBA" M'f'y.
*15, Cossipur Road,*
*CALCUTTA.*

TELEGRAMS:—
"Safeguard,"
Calcutta.

**The Complete Letter Writer** 2nd Edition Revised and Enlarged.

**BY HARI CHARAN DAS.** Price Re. 1. *(Full Cloth, Gilt.)*

A Universal Guide to the Art of Letter Writing for all positions of Life.

*To be had of*—M. L. DAS & CO., *122, Baitakkana Road, Calcutta.*

THE BENGAL CHEMICAL
AND PHARMACEUTICAL WORKS, LTD.,
*91, Upper Circular Road, Calcutta.*

எங்கள் பரிமளக் கூந்தல் எண்ணெயில் அநேக மலர்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. மகா சுத்தமானது. வேறுவிதமான வர்ணங்களைச் சேர்த்து பகட்டப்படாதது.

இதில் எத்தனையோ ஆயிரக்கணக்கான ரோஜா, மல்லிகை, தாமரை முதலிய புஷ்பவாஸனைகள் வீசும்.

வேண்டியவர்கள் அடியில் கண்ட ஏஜண்டுகளிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பி. ரெங்கய்ய செட்டி அண்டு ஸன்ஸ், எஸ்பிளனேட், மதராஸ்.

ஸ்வதேசி வேர் அவுஸ், தம்புசெட்டித் தெரு, மதராஸ்.

நாஷனல் டிரேடிங் கம்பெனி, எஸ்பிளனேட், மதராஸ்.

கே. வி. பிராமய்யா அண்டு ஸன்ஸ், மதராஸ் அல்லது ராஜமஹேந்திரம்.

என். ஆர். பகடி அண்டு கம்பெனி, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

**பங்காள ரஸாயன ஔஷதசாலை,**
91, அப்பர் ஸர்கிலர் ரோட்,
கல்கத்தா.

## சீவகசிந்தாமணி.

இரண்டாம் பதிப்பு.

---

பஞ்சகாவியங்களுள் ஒன்றாகிய சீவகசிந்தாமணி, நச்சினார்க்கினியருரை, இரண்டாம் பதிப்பு, பலவகை ஆராய்ச்சிக் குறிப்புக்களோடும், அரும்பதவுரை முதலியவற்றோடும் இப்போது பதிப்பிக்கப்பட்டு நிறைவேறியது. 150-பக்கங்கள் கொண்டது. விலை ரூபா 6-0-0. வி. பி போஸ்டு மூலம் ரூபா 6-9-0 ஆகும். வேண்டியவர்கள் எனக்குத் தெரிவித்துப் பெற்றுக் கொள்ள விரும்புகிறேன்.

வே. சாமிநாதையர்,
Tamil Pandit, Presidency College,
*Madras.*

## PAGE FOR BOYS.

## சிறுவர்களுக்கான பக்கம்.

THE RAIN TREE.

**மழை மரம்.**—தென் அமெரிக்காவின் வறண்ட பாகங்களில் மழை மரம் என்று சொல்லப்படும் ஒரு வித மரம் இருக்கிறதாம். இந்த மரம் அறுபது அடி உயரம் வளர்கிறதாம். அதனுடைய இலைகளுக்கு ஆகாசத்திலிருக்கும் நீராவியை ஜலமாக மாற்றக் கூடிய குளிர்ந்த சக்தி இருக்கிறதாம். இந்த மரம் எப்பொழுதும் நீராவியை ஜலமாக மாற்றிக் கொண்டே யிருக்கிறதினால் அதற்கு சமீபத்தில் மழை பெய்கிறமாதிரி எப்பொழுதும் இலைகளிலிருந்தும் கிளைகளிலிருந்தும் நீர்த்துளிகள் விழுந்து கொண்டிருக்கின்றனவாம். இந்தக் காரணத்தினால் அந்த மரத்துக்குச் சமீபமெல்லாம் சேற்று நிலமாக இருக்கிறதாம். வறண்ட வனாந்தரமாக இருக்கும் இடங்கள்கூட இந்த மரத்தினால் செழிப்பா யிருப்பதாகத் தெரிய வருகிறது.

CAMEL FLESH.

**ஒட்டக மாமிசம்.**—பிரான்ஸ் தேசத்து முக்கிய பட்டணமாகிய பாரிஸ் நகரத்துக்கு போன வருஷத்தில் பரீக்ஷார்த்தமாக ஒருவன் ஒட்டக மாம்சம் விற்க வந்தான். அது நன்றாய் இருப்பதாகக் கண்டு வாரத்துக்கு ஒரு தடவை அந்த மாமிசத்தைக் கொண்டு வந்து சப்ளை செய்யும்படிக்கு பாரிஸ் நகரத்து இருபது கோடீஸ்வரர்கள் சொல்லி யிருக்கிறார்களாம். அதற்காக ஆப்பிரிக்காக் கண்டத்தில் ஒட்டகங்களை கொழுக்கச்செய்து அனுப்பும்படி அந்த வர்த்தகன் ஏற்பாடு செய்திருக்கிறான். மழை காலத்தில்தான் ஒட்டக மாமிசம் ரொம்ப மாதுர்யமாய் இருக்கிறதாம். ராத்தல் ஒன்றுக்கு 15 ரூபா விலையாம்.

A METHOD FOR CATCHING RATS.

**எலி பிடிக்க ஒரு வழி.**—பைசிகிலின் பழைய "ரப்பர்" குழாய் கிடைத்தால் அதை அறுத்து ஒரு பக்கத்தை எலி வளையில் வைத்து இன்னொருபக்கத்தை ஒரு பெரிய ஜாடியில் வைக்க எலி ரப்பர் குழாயின் வழியாகப்போய் ஜாடியில் விழுந்திருக்கும். ஜாடியினுள்ளே யிருந்து வெளியே வரமுடியாது. ஆகையால் இப்படி எலிகளை சுலபமாய்த் தொலைக்கலாம்.

THE BEE.

**தேனீ.**— குடகு தேசத்தில், பானைகளை துவாரமிட்டு லவங்கப்பட்டை வாசனை மெழுகு பூசி, சந்தடியில்லாத இடத்தில் வைத்துத் தேனீக்களை அடையப் பழக்கித் தேனெடுக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஒரு தேனீ ஒரு தேயிலைக்காண்டி கொள்ளும்படியான தேனை சேகரிக்கிறதாம்.

PLANTAIN TREES.

**வாழை மரங்கள்.**—தகுந்த இடத்தில் போடப்பட்டால் வாழை வைத்த பத்து அல்லது பன்னிரண்டு மாதங்களில் தார்போடும். இப்படித் தார்போடும் பொழுது இரண்டு மூன்று கன்றுகளும் விடும். தார்வெட்டின வாழையை அறுத்துக் கீழே தள்ளிவிடுவது வழக்கம். அப்படிச் செய்யாமல் போனாலும் அதன் காலமானபடியால் அது தானாகவே விழுந்து மடிந்துபோகும். ஒரு தாரில் (குலையில்) சராசரி சுமார் 140 காய்கள் இருக்கும். ஆனால் நல்ல செழிப்பான நிலமாயுமிருந்து கன்றும் முதலில்வைத்த கன்றாயிருந்தால் 300 முதல் 360 காய்கள்கூட. ஒரு தாரில் இருக்கலாம்.

BITS OF SOAP.

**சோப்புத் துண்டுகள்.**—ஸ்நானம் செய்யும்பொழுது அநேகம்பேர் சோப்பை உபயோகிக்கிறார்கள். ஒரு சோப்புக்கட்டி வாங்கி கொஞ்சநாள் உபயோகித்து வந்தால் அது கடைசியாக கைக்கு அகப்படாத சின்னத் துண்டாகி விடுகிறது. அநேகர் இதை வீணாய் எறிந்து விடுகிறார்கள். இந்த மாதிரி துண்டுகளை எறியாமல் சேகரித்து வைத்து, ஒரு பாத்திரத்தில் போட்டு கொதிக்கும் வெந்நீரை ஊற்றி வைக்கவேண்டும். சோப்புத் துண்டுகள் குழம்பாகக் கரைந்ததும் சிறு கிண்ணங்களில் ஊற்றி கொஞ்ச நாளைக்கு வைத்திருந்தால் அவைகள் உபயோகப்படுத்தக் கூடிய பெரிய கட்டிகளாய்விடும்.

PRESERVING COAL IN WATER.

**நிலக்கரியைத் தண்ணீரில் வைத்திருப்பது.**—நிலக்கரியை மூடாமல் காற்றுப் படும்படி போட்டு வைத்தால் அது கெட்டுப்போகும். பின்பு அடுப்பில் வைத்தால் அதற்கு உஷ்ணப்படுத்தும் சக்தி குறைந்துபோகிறது. நிலக்கரியை தண்ணீருக்குள்ளே போட்டு வைத்திருந்தால் இந்தமாதிரி அது கெட்டுப்போவதில்லை. நல்ல தண்ணீரைவிட உப்பு ஜலம் அல்லது ஸமுத்திர நீர் மிகச் சிறந்தது. தண்ணீரிலிருந்து எடுத்து 1½ நாள் வெயிலில் உலர்த்திவிட்டால் பின்பு இதை உபயோகிக்கலாம்.




## உடனே எழுதுங்கள் !

சென்னை கவர்னர் அவர்களின் பெருமாட்டியாகிய கௌரவமுள்ள லேடிலாலி அவர்களாலும், தென்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர் பண்டார சந்நிதி அவர்களாலும் நன்கு மதிக்கப்பட்டவர்கள், பல பொருட் காக்ஷி (Exhibition) சபையாரிட மிருந்து பொன் (Gold) வெள்ளிப் பதக்கம் பெற்றவர்கள்.

### யார்? ஸ்ரீகாசியில் பட்டு வர்த்தகர்களாகிய கே. எஸ் முத்தையா அண்டு கம்பெனியார்.

நவீனமான பட்டுப் புடவைகள், ரவிக்கைகள், பஸக்களுக்கள், சால்வைகள் கம்பிளி ரோமத்தால் செய்வித்த மடிதாவளிகள், தாரிவால் வுல்லன் போர்வைகள், காஷ்மீர் சால்வைகள், கழுத்து பட்டிகள், பல வித சயிஸ்களுள்ள ருத்திராக்ஷங்கள், கலப்பற்ற நயம் கஸ்தூரி, சுயம்பான காபூல் தேயத்து பால்காயம் முதலிய தினுசுகள் விற்பனைக்குச் சித்தமாக விருக்கின்றன. விலை ஜாப்தா (கேட்லாக்) விலை இன்றி அனுப்பப்படும். சென்னையில் தம்பு செட்டி தெரு முதலாவது நெ. வீட்டில் ஸ்தாபித்திருக்கும் சுதேசி வேர்ஹவுஸ் சொந்தக்காரர்களாகிய மெஸஸ் கோபாலாசாரியார், பாஷியமய்யங்கார் இவர்களைச் சோல் ஏஜண்டாக நியமித்திருக்கிறோம். அவ்விடத்திலுஞ் சகல சாமான்களுங் காசியின் விலைக்கே பெற்றுக்கொள்ளவுங் கூடும். நயம் கஸ்தூரி தோலா 1-க்கு ரூபா 35. சுயம்மான பால்காயம் 10 தோலா டப்பி 1-க்கு ரூபா. 1-0-0.

K. S. MUTHIAH & CO., BENARES CITY.



### 'நவீனவெண்பட்டாடை'

விசேஷமுள்ள சந்தோஷகாலங்களிலும், சாதாரணமுள்ள நித்திய தினங்களிலும் அணிந்துகொள்ள தகுதியானவை.

புருஷர்களுக்கும், ஸ்திரீகளுக்கும், குழந்தைகளுக்கும் பிரயோசனமுள்ளது.

ஏனென்றால்? மிருதுவும், அழகும் வாய்ந்தது.
ஏனென்றால்? கிழிந்தும், சுருங்கியும் போக மாட்டாது.
ஏனென்றால்? விலைகளில் நூல் வஸ்திரங்களை பார்க்கிலும் நயமானது.
ஏனென்றால்? சலவை செய்தும் உபயோகிக்க கூடியதன்மையையுடையது.
ஏனென்றால்? பணக்காரர்களும், ஏழைகளும் வாங்கி அணிந்து கொள்ள தகுதியானது.

(1) 3 முழம் 27 இஞ். (2) 4 முழம் 27 இஞ். (3) 5 முழம் 44 இஞ். (4) 6 முழம் 48 இஞ். (5) 7 முழம் 48 இஞ். (6) 8 முழம் 48 இஞ். (7) 10 முழம் 48, 50 இஞ். வேஷ்டிகளும், (8) 16 முழம் 44, 48, இஞ். புடவையும், (9) 18 இஞ் × 18 இஞ். கைலேஞ்சியும்.

விலை:—(1) ரூ. 3-0-0. (2) 4-0-0. (3) 5-0-0. (4) 7-0-0, 8-0-0 வரை. (5) 7-8-0 முதல் 9-0-0 வரை. (6) 9-0-0 முதல் 12-0-0 வரை. (7) 10-0-0 முதல் 13-0-0 வரை. (8) 15-0-0 முதல் 25-0-0 வரை. (9) 0-10-0 முதல் 1-0-0 வரை. நயம் கஸ்தூரி தோலா 1க்கு ரூ. 35. கேட்லாக் இனமாக அனுப்புவோம்.

**கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,**
பட்டு பீதாம்பர வர்த்தகம், ஸ்ரீ காசி.
BENARES CITY.



### DR. WAMAN GOPALS' IODIZED SARSAPARILLA.

டாக்டர் வாமன் கோபாலின் அய சம்பந்தமான ஸரஸபரில்லாவுக்கு பொன் பதக்கங்களும் வெள்ளிப் பதக்கங்களும் பரிசு கொடுக்கப் பட்டிருக்கின்றன.

ரத்த சுத்தி செய்வதில் இம்மருந்து முதல்தரமானதென்று பேரெடுத்திருப்பது. இந்த ஔஷதம் 50 வருஷங்களுக்கு அதிகமாகவே சோதனையிலிருந்து நாள்பட்ட முடக்குவாதம், சரீர சம்பந்தமான வியாதி, பாரிசவாயு, அசுத்த ரத்தத்தினால் உண்டாகும் வியாதிகள், முதலியவற்றைப் போக்கி தாதுக்கு வலிமையைக் கொடுக்கக்கூடியது. மேக ரோகத்தையுங் கண்டிக்கும்.

(ஒரு புட்டி விலை ரூபா 1-4-0. பாக்கிங்கும் தபாற் கூலியும் வேறு) 5 அணா.

கௌதம ராவ் கேசவ், தாகுர்த்தவார், பம்பாய்.

Dr. Gowtamrao Kesheo, Bombay. No. 2.

குறிப்பு:—ஆர்டர் செய்வோரெல்லோரும் இங்கிலீஷிலேயே எழுதவும்.



### MADHAV BOOK DEPOT,

*Gangaram Khatri's Vadi, BOMBAY. No. 2.*

Supply English or Sanskrit Books on Medicine, Law, History, General Literature, Novels of Standard Authors, Presentation Books, etc. Catalogue sent free.

# INDIAN NEWS.
## இந்தியநாட்டு ஸமாசாரங்கள்.

DEATH OF ROMESH CHUNDER DUTT C. I. E.

**காலஞ்சென்ற ரோமேஸ சந்திரதத் ஸி. ஐ. இ.**—நம்முடைய தேசாபிமானிகளில் பிரக்யாதி பெற்றவர்களில் ஒருவராகிய ரோமேஸ சந்திர தத் அவர்கள் போன நவம்பர் மீ 30-ம் தேதி பரோடாவில் காலஞ்சென்ருர். இவர் கொஞ்சகாலத்துக்கு முன் தான் பரோடா சமஸ்தானத்திற்கு திவாளுக நியமிக்கப்பட்டார். இறந்துபோகும்பெழுது இவருக்கு வயது 61. இவர் பி. எ. பரிக்ஷை தேறியதும் இங்கிலாந்துக்குப் போய் சிவில் சர்விஸ் பரீக்ஷைக்குப் படித்துத் தேறிஞர். இவர் வங்காளத்தில் கடைசியாக கலெக்டர் உத்தியோகத்தையும் விட பெரிய உத்தியோகமாகிய டிவிஷன் கமிஷனராக வேலை பார்த்து வந்தார். இவர் 1897-ம் வருஷத்தில் பென்ஷன் பெற்றுக்கொண்டார். இவர் ராஜாங்க விஷயத்திலேயே காலத்தைப்போக்காமல் இந்தியாவைப் பற்றி அநேக புஸ்தகங்கள் எழுதியிருக்கிருர். இவரைப்போல புத்திசாதுர்யமாய் எழுதக்கூடியவர்கள் வெகு சிலர் என்றே சொல்லலாம். இவர் புஸ்தகங்கள் எழுதி வெளியிட்டதிஞல் அதிக பணம் சம்பாதித்தார். இந்தியாவின் பூர்வகால சரித்திரத்தை இங்கிலீஷில் எழுதியிருக்கிருர். இந்தியாவின் தற்கால சரித்திரத்தையும், பொருளாதார நிலைமையையும் பற்றி புஸ்தகங்கள் எழுதியிருக்கிருர். இவர் அநேகமாய் இங்கிலீஷிலேயே புஸ்தகங்கள் எழுதியிருந்தாலும் தன் சுயபாஷையாகிய வங்காளபாஷையில் ரிக் வேதத்தை மொழிபெயர்த்திருக்கிருர். இவர் 1899-ம் வருஷத்தில் லக்னௌவில் நடந்த காங்கிரஸுக்கு அக்கிராஸனுதிபதியாயிருந்தார். இவர்படத்தை இந்த சஞ்சிகையில் பார்க்கலாம்.

OIL CAKES.

**பிண்ணுக்குகள்.**—பம்பாய் ராஜதானியில் விவஸாயிகள் வரவர பிண்ணுக்கையே எருவாக உபயோகித்துக்கொண்டு வருகிருர்களாம். அனேகமாய் இதையும் மீனையும் தவிர வேறு எருக்களையே உபயோகிக்கிறதில்லை என்று சொல்லலாம். ஆகையால் பிண்ணுக்குகளும் மீனும் அதிக விலையாக இருக்கிறதாம்.

TAPIOCA IN BOMBAY.

**பம்பாயில் மரவள்ளிக்கிழங்கு.**—மரவள்ளிக்கிழங்கு சுபிக்ஷகாலங்களில் விசேஷமாக செலவாகாவிட்டாலும் பஞ்சகாலங்களில் ஜனங்கள் சாப்பிடத்தகுந்த வஸ்து. ஆதலால் இதைப் பம்பாய் ராஜதானியில் பயிர் செய்யச்சொல்லி வேண்டிய உதவிகளையும் விவஸாய இலாகா உத்தியோகஸ்தர்கள் செய்து வருகிருர்களாம்.

MATCH FACTORIES IN BOMBAY.

**பம்பாயில் தீக்குச்சி சாலைகள்.**—சுதேசி உணர்ச்சியின் பயஞக பம்பாயில் நாலைந்து தீக்குச்சி சாலைகள் ஏற்படுத்தியிருக்கிருர்கள். அவைகளாவன:—

(1) பெல்காம் தீக்குச்சி சாலை யென்றதானது 30,000 ரூ. முதலுடையது.

(2) உக்கான் தீக்குச்சி சாலை.

(3) டார்வாரில் கர்ஞடக தீக்குச்சி சாலை

(4) மேற்கு இந்தியா தீக்குச்சி வேலைகளென்ற தொழிற்சாலை; லக்ஷம் ரூபாய் முதலுடனும் தக்க ரசாயன சாஸ்திரிகளின் மேல்பார்வையின் கீழும் இருக்கிறது.

(5) ஆமதாபாத்தில் குஜராத் இஸ்லாம் பாக்டெரி.

இந்த ஐந்து பாக்டெரிகளும் தக்க முதலுடனும் கைதேர்ந்த வேலையாட்களைக்கொண்டும் ஸ்தாபிக்கப்பெற்று நடந்து வருகின்றன.

A NEW AGRICULTURAL STATION.

**ஒரு புதிய விவசாயப் பண்ணை**—ஐக்கிய மாகாணங்களில் உள்ள பர்ட்டாப்கர் என்னும் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் அந்த மாகாணத்து கவரன்மெண்டார் ஒரு பண்ணை ஏற்படுத்தியிருக்கிருர்கள். இது 90 ஏகரா அடங்கியது. இதில் நெல், சோளம், கோதுமை, கரும்பு, இவைகளில் பலதினுசகளைப்பயிர்செய்து பரீக்ஷை பார்க்கப்போகிருர்களாம்.

POULTRY BREEDING.

**கோழிகள் வளர்த்தல்.**—ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த ராம்பூர் சமஸ்தானத்தார் கோழிவளர்ப்பவர்களுக்கு வேண்டிய திறமான கோழிகள் தயார் செய்ய ஏற்பாடுசெய்துகொண்டிருக்கிருர்கள். இந்த சமஸ்தானத்தாருக்கு ஐக்கிய மாகாண கவரன்மெண்டாரும் பணவுதவி செய்துகொண்டு வருகிருர்களாம்.



# FOREIGN NEWS.
## அந்நிய நாட்டு ஸமாசாரங்கள்.

COWS WITH EAR-RINGS.

**காதில் வளையம் போட்ட பசுமாடுகள்.**—ஒரு பசு நன்ருய்ப் பால் கறப்பதும் கறக்காததும் அதன் வர்க்கத்தைப் பொருத்ததென்று முன் சஞ்சிகைகளில் சொல்லி யிருக்கிறேம். ஆகையால் நல்ல பால் பசு வாங்கவேண்டியதாயிருந்தால் அதன் வர்க்கத்தைப் பார்த்தே வாங்கவேண்டும். வர்க்க வழியை எழுதி வைத்திருந்தாலொழிய வாங்கப்போகிற பசு நல்ல கறவைப் பசு என்று சொல்ல முடியாது. ஐரோப்பாவில் பெல்ஜியம் தேசத்தில் பசு வளர்ப்பவர்கள் அதன் வர்க்க வழியை அவசியம் எழுதி வைத்திருக்கவேண்டியது என்பது சட்டமாம். அப்படி எழுதி வைப்பதோடுகூட மூன்று மாசத்துக்கு மேற்பட்ட ஒவ்வொரு பசுவின் கன்றுக்குட்டி காதிலும் ஒரு வளையத்தைப்போட்டு ஒரு நம்பரும் அடித்திருக்கவேண்டுமென்று சமீபத்தில் உத்தரவு ஆயிருக்கிறதாம். இப்படி ஒவ்வொரு மாட்டுக்கும் நம்பர் போட்டிருப்பதாலும் அதைப்பற்றி வர்க்கவழி ஏற்பட்டிருப்பதாலும் உதவாதமாட்டை நல்லதென்று ஏமாற்றி விற்றுவிட முடியாது.

THE COTTON INDUSTRY.

**பருத்திக் கைத்தொழில்.**—பருத்தி விலை ஏறிப் போய்விட்டபடியாலும் கையிருப்பில் சரக்குகள் அதிகமாய்த் தங்கிவிட்டபடியாலும் உலகத்தில் உள்ள அநேக நூல் நூற்கும் சாலைகளில் வழக்கம் போல் முழுநாளும் வேலை செய்யாமல் முக்கால் நாளும் அரை நாளுமாக வேலை செய்து வருகிருர்களாம்.

NIGHT SOIL IN JAPAN.

**ஜப்பானில் மலஜலாதிகள்.**—ஜப்பான், சீனு தேசங்களில் எருவாக உபயோகப் படுத்துவதற்காக மலஜலாதிகளை ஒவ்வொரு வீட்டிலும் வெகு ஜாக்கிரதையாக பாதுகாத்து வருகிருர்கள். எந்த இடத்தில் கடைசியில் உபயோகிக்கவேணுமோ அந்த இடத்தில் ஒரு பெரிய தொட்டியைக் குழிதோண்டி வைத்து அதில் மலஜலாதிகளைக் கொண்டுபோய்ப் போட்டு ஒரு வருஷத்துக்கு வைக்கிருர்கள். இந்தத் தொட்டிகளில் மலஜலாதிகளைப் புதிதாய்ப் போடும் பொழுது நாற்றம் உண்டேதவிர மற்ற காலங்களில் நாற்றம் ஒன்றும் அடிப்பதில்லையாம். தொட்டி நிறைந்ததும் அதன்மேல் கூரை போட்டுவிடுகிருர்கள். வீடுகளிலும் பள்ளிக்கூடங்களிலும் மலபாதைக்குப் போகும்போது உட்காரும் இடத்திற்கு கீழ் தொட்டிகள் வைத்திருக்குமாம். அதில் விழும் மலங்கள் வாரத்துக்கு இரண்டுமூன்று தடவைதான் எடுக்கப்படுமாம். ஆகையால் கக்கூசு பக்கங்களில் ரொம்ப நாற்றமா யிருக்கும். வீட்டிலுள்ளவர்களுக்கு தலைக்கு இவ்வளவு என்று பணம் கொடுத்துவிட்டு அப்போதைக்கப்போது வாரிக்கொண்டுபோய் விடுவார்களாம். அதனுல் அந்ததேசங்களில் இவ்விடத்தில் போல கக்கூசு வாருவதற்காக தனி ஜாதியாரே கிடையாது.

BANKS IN U. S. A.

**ஐக்கிய நாடுகளில் பாங்கிகள்.**—அமெரிக்கா தேசத்து ஐக்கிய நாடுகளில் ஜூன் மாஸம் 23-ம் தேதி முதல் செப்டம்பர் மாஸம் முதல் தேதிக்குள் 51 பாங்கிகள் ஏற்படுத்தப்பட்டனவாம். அதாவது விடுமுறை நாள்களைத்தள்ளி கிட்டத்தட்ட தினம் ஒன்றுக்கு ஒரு பாங்கி ஆகிறது.

ALCOHOL FROM BANANAS.

**வாழைப்பழத்திலிருந்து சாராயம்**—அமெரிக்காவில் உள்ள காட்டிமாலா என்னும் பட்டணத்தில் ஒரு பெரிய வஸ்து சோதனை சாலையிருக்கிறது. இதில் அழுகிப் போய் எறிந்து விடும்படியான வாழைப்பழங்களிலிருந்து ஒரு சாராயம் இறக்குகிருர்களாம். இந்த சாராயத்தை ஐக்கிய நாட்டு விவசாய இலாக்காவில் பரிசோதித்து அவர்கள் நன்ருய் இருப்பதாகச் சொல்லி ஸெண்ட்லூயி என்னும் பட்டணத்தில் நடந்த பொருட்காக்ஷியில் அதற்காக ஒரு தங்கப்பதக்கமும் கொடுக்கப்பட்டதாம். ஒவ்வொரு தாரிலிருந்து ஒரு காலன் அதாவது 6 புட்டி சாராயம் கிடைக்குமாம். இந்தவிதமாக சாராயத்தை இறக்கி இரண்டு வருஷம் கணக்குப்பார்த்ததில் அதிஞல் லாபம் உண்டென்று தெரிகிறதாம்.

IMPORT OF HORSES INTO EAST AFRICA.

**கீழ் ஆப்பிரிக்காவுக்கு குதிரை ஏற்றுமதி**—சில இந்திய துறைமுகங்களிலிருந்து போர்ச்சுகல் தேசத்து அரசாட்சியைச்சேர்ந்த கீழ் ஆப்பிரிக்காவில் ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட குதிரைகளிலும் நாய்களிலும் சுரு, ரேபின் என்னும் வியாதிகள்இருப்பதாகக் காணப்படுவதால் மறு உத்திரவு வரையில் இந்தியாவிலிருந்து வரும் குதிரைகள், நாய்கள் இவைகளை இறக்குமதி செய்வதைத் தடுத்திருப்பதாக லோரேன்ஸோ மார்க்குயிஸ் என்னும் பட்டணத்திலுள்ள பிரிட்டன் தேசத்து சக்ரவர்த்தி அவர்களின் கான்ஸல் அவர்களிடமிருந்து சமாச்சாரம் வந்திருக்கிறது.

## SEASON, CROPS AND PRICES.

## காலஸ்திதி, பயிர்கள், விலைவாசி.

COTTON GOODS.

**துணி ஸாமான்கள்.**—இதர தேசங்களிலிருந்து சென்னப்பட்டணத்திலும், ரங்கூனிலும் இறக்குமதி விவரங்கள்.

நூலும் முறுக்கு நூலும்.

| வார முடிவு. | | சென்னப்பட்டணத்தில். |
|---|---|---|
| | | ராத்தல். |
| நவம்பர்மீ | 6உ .. | 225,400 |
| ,, | 13உ .. | 90,350 |
| ,, | 20உ .. | 171,500 |
| ,, | 27உ .. | 114,695 |
| ஆகமொத்தம் | .. | 601,945 |

காரிகத் துணிகள்.

| வார முடிவு. | | சென்னப் பட்டணத்தில். | ரங்கூனில். |
|---|---|---|---|
| | | கஜம். | கஜம். |
| நவம்பர்மீ | 6உ .. | 22,005 | .. 22,461 |
| ,, | 13உ .. | 2,342,936 | .. 374,306 |
| ,, | 20உ .. | 262,770 | .. 187,778 |
| ,, | 27உ .. | 1,813,725 | .. 202,009 |
| ஆகமொத்தம் | .. | 4,441,436 | 786,554 |

சலவைத் துணிகள்.

| வார முடிவு. | | சென்னப் பட்டணத்தில். | ரங்கூனில். |
|---|---|---|---|
| | | கஜம். | கஜம். |
| நவம்பர்மீ | 6உ .. | 38,311 | .. 99,376 |
| ,, | 13உ .. | 791,303 | .. 1,200,462 |
| ,, | 20உ .. | 77,096 | .. 571,798 |
| ,, | 27உ .. | 852,348 | .. 417,129 |
| ஆகமொத்தம் | .. | 1,759,058 | 2,288,765 |

இதர துணிகள்.

| வார முடிவு | | சென்னப் பட்டணத்தில். | ரங்கூனில். |
|---|---|---|---|
| | | கஜம். | கஜம். |
| நவம்பர்மீ | 6உ .. | 38,003 | .. 691,004 |
| ,, | 13உ .. | 1,100,151 | .. 1,711,849 |
| ,, | 20உ .. | 315,926 | .. 878,406 |
| ,, | 27உ .. | 908,296 | .. 1,092,874 |
| ஆகமொத்தம் | .. | 2,362,376 | 4,374,133 |

ரெயிலில் அனுப்பப்பட்ட துணிகள்.

சென்னப்பட்டணத்திலிருந்து ரெயில் வழியாய் அனுப்பப்பட்ட ஸ்வதேச பிறதேச துணி ஸாமான்கள். ஒரு அந்தர் என்பது 112 ராத்தல்.

| வார முடிவு. | | | அந்தர். |
|---|---|---|---|
| நவம்பர்மீ | 6உ | .. | 5,202 |
| ,, | 13உ | .. | 2,225 |
| ,, | 20உ | .. | 3,252 |
| ,, | 27உ | .. | 2,793 |
| ஆகமொத்தம் | | .. | 13,472 |

IMPORT OF SUGAR.

**சர்க்கரை இறக்குமதி.**—அக்டோபர்மீ 31உ முதல் நவம்பர்மீ 27உ வரையில் சென்னப்பட்டணத்தில் இங்கிலாந்திலிருந்து 87 அந்தரும், ஆஸ்திரியா ஹங்கேரியிலிருந்து 3000 அந்தரும், ஜாவாவிலிருந்து 13,456 அந்தரும் இறக்குமதியாயின. இதே காலத்தில் ரங்கூனில் இங்கிலாந்திலிருந்து 73 அந்தரும், ஜாவாவிலிருந்து 78,913 அந்தரும், இதர தேசங்களிலிருந்து 5787 அந்தரும், இறக்குமதியாயின.

GROUND-NUTS IN BURMA.

**பர்மாவில் மணிலாக் கொட்டை.**—பர்மாவில் மாண்டலே பட்டணத்தில் எல்லாவித மணிலாக் கொட்டை தினுசுகளை தருவித்து எதில் நோய் விழுவதில்லை, எதில் ஜாஸ்தி எண்ணெய் அகப்படும் என்ற விஷயங்களை சோதிப்பதற்காக அந்த கவர்ன்மெண்டு விவஸாய இலாகாவில் பயிரிட்டுவருகிறார்கள். தவிர அங்கேயுள்ள நிலக்காரர்களையும் மணிலாக்கொட்டை பயிர் செய்யச்சொல்லி, மாகூலை விற்றுக்கொடுப்பதாகவும் முதல் சில வருஷங்களுக்கு சாகுபடி ஆகும் நிலங்களுக்குத் தீர்வை வஜா செய்து கொடுப்பதாகவும் சொல்லி யிருக்கிறார்கள்.



**A VERY SECRET MUSICAL GUIDE JUST OUT.**

SANGEETHANUBAVA SARA SANGRAHAM IN TAMIL.

Every man having a little taste in Music can practice Harmonium on the very day he reads this book.

Part I. Contains Suravali Varnams, Keerthanams and notes, etc., with surams and design of English letters and also the science of Melakartha Jenya Ragams.

Part II. Contains :—

1 Mathematics of the Metronome called Thalams, *i. e.*, time in space.
2 Mathematics of the Thala Jethi.
3 Statement of 35, 108 Thalams, etc.
4 Scientific new ways of the Surams and Jethis for Keerthanams and Pallavi with Illustrations which can help every beginner in practising Music very easily.

PRICE VERY CHEAP.—Part I. Rs. 1-4; Part II. Rs. 2-4. For persons ordering for 2 parts at one time Rs. 3. Postage extra.

V. SREENIVASA IYANGAR,
Sangeetha Vidvan,
Perungalam,
Tinnevelly Dt.

**HENKE'S TILE WORKS,**

**10, Esplanade, MADRAS, E.**

எங்களால் நல்ல மங்களூர் ஓடுகளும், தள வரிசைக்கல்களும், வயல்களுக்கு தண்ணீர் மடைக்குழாய்களும் செய்யப்படுகின்றன. இவைகளெல்லாம் ஸர்க்கார் இஞ்சினீர் உத்தியோகஸ்தர்களாலும், ஜில்லா போர்ட்டுகள், முனிஸிபாலிடிகள், ஜமீன்தார்கள், ரெயில்வேகம்பெனிகள் முதலியவர்களாலும் ஏராளமாய் வாங்கப்பட்டு வருகின்றன. வீடு கட்டுகிறவர்களுக்கும் மிராசுதார்களுக்கும் வெகு உபயோகமானவைகள். வேண்டிய மற்ற விவரங்களுக்கு, அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதி தெரிந்துகொள்ளவும்.

ஹெங்கிஸ் ஓட்டு கம்பெனி,
நெ. 10, எஸ்பிளநேட்,
மதராஸ்.

மாதர் மனோரஞ்சனி.

இந்த மாதாந்தரப் பத்திரிகைக்கு இப்பொழுது 11-வது வருடம் ஆரம்பம். இதில் பெண்களுக்குரிய விஷயங்களே வெளிவரும். இதன் வருட சந்தா ரூபா 2. வேண்டுவோர் வி. எஸ். இராமசுவாமி ஐயர், 12, தணிகாசலபிள்ளைத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை என்று எழுதவும்.

CLASSIFIED COMMERCIAL DIRECTORY.

வியாபார பகுதி விலாசங்கள்.

COLOUR PENCIL MANUFACTURER.
கலர் பென்சில் செய்கிறவர்கள்.
K. P. RAMASWAMY IYER,
15, Solayappa Mudali Street,
*KUMBAKONAM.*

SILK MERCHANTS.
பட்டு வியாபாரிகள்.
பட்டு பீதாம்பர கம்பேனி,
காசி (பனாரிஸ்.)

BRUSH MANUFACTURE.
புருஷ் செய்தல்.
B. V. K. CHETTY & CO.,
No. 22, Broadway, Madras

விளம்பரம்.

**ஜோதிப் பிரகாச எண்ணெய் 1-புட்டி இனாம்!**
**பரிமள ரோமசங்கரி ஸோப்.**

தேகத்தின் எந்தப்பாகத்திலும் இந்த ஸோப்பை உபயோகித்தால் யாதொரு கெடுதியுமின்றி ரோமங்களைச் சங்காரஞ்செய்துவிடும். 6-மீத்திற்கு உபயோகிக்கக்கூடிய கட்டி 1-க்கு விலை 6-அணா; டஜன் ரூ. 4, வி. பி. சார்ஜ் 1-முதல் 3-க்கு 4-அணா.

**பரிமள ரோமப் பிசின்.**

இப்பிசின் நரைத்த மயிரை இரண்டு நிமிஷத்துக்குள் பழையபடி கறுப்பாக்கிவிடும் கெடுதி செய்யக்கூடியது ஒன்றும் இதில் கிடையாது. 1-புட்டி 3-மீத்திற்குப் போதுமானது. டைரக்ஷன் மருந்துடன் அனுப்பப்படும். புட்டி 1-க்கு விலை 12-அணா; டஜன் 1க்கு ரூ. 8. 1-முதல் 3-புட்டிக்கு வி. பி. சார்ஜ் அணா 4.

☞ சுறுசுறுப்பும் பழக்கமுமுள்ள ஏஜண்டுகள் தேவை. தேவையுள்ளோர் ¼ அணா லேபிலுடன் அப்ளிக்கேஷன் அனுப்பவும்.

J. SUR & Co.,
No. 232/1, Upper Chitpore Road,
P. O. P. Bagh-bazaar, Calcutta.

**லோகோபகாரி.**—"*பிழைக்கும் வழி*" என்பது இச்சென்னையில் ஜி. ஏ. வைத்தியராமன் கம்பெனியாரால் நடத்தப்பட்டுவரும் ஒரு மாதாந்தரப்பத்திரிகை. இப்பத்திரிகையானது தன் பெயரளவில்லாது உண்மையிலேயே மனித சமூகத்தாரின் பிழைப்புக்கு ஏதுவாக விருக்கும் வியாபாரம், வ்வசாயம், கைத்தொழில் கல்வி, உலகவிவகாரம் முதலியவைகளை ஆரம்பித்துக்கல்வி பயின்ற சிறுவர் சிறுமிகளும் படித்தறியத்தக்க எளிய தமிழ் நடையில் விளக்கப்பட்டிருக்கின்றது. இதுவரையில் இது போன்ற பத்திரிகை வெளிவந்ததில்லை யென்றே சொல்லவேண்டும். இதற்கு வருஷசந்தா ரூபாய் நான்காக இருந்தபோதிலும், இப்பத்திரிகையில் அமைந்துள்ள விஷயங்களின் விசேஷமும் அபிவிருத்தியின் நோக்கமுமாக இதன் சொந்தக்காரர் காட்டும் அக்கரையும் பார்த்தறிபவர்களுக்கு அத்தொகை பெரிதாகமாட்டாது. இப்பத்திரிகை நம் தமிழ் நாட்டாரால் பெரும்பாலும் ஆதரித்து வரப்படும் என நம்புகிறோம்.

**கோயமுத்தூர் கலாநிதி.** நல்ல கடிதத்தில் நல்ல பதிப்பாகப் பதிப்பித்த இவ்வளவு உபயோகமான பத்திரிகையின் வருஷ சந்தா ரூபாய் நான்காகையால், அதிக லோபத்துவ முள்ளவர்களும் வாங்கி வாசிக்கக் கூடியதாகவும், இருக்கிறது.

**ஜனானுகூலன்.**—"*பிழைக்கும் வழி,*" பெயருக்குத் தக்கவாறு சங்கதிகளு மிருக்கின்றன. இதில் விவசாயம் வர்த்தகம், கைத்தொழில், கல்வி, சாஸ்திரம், வைத்தியம், சிறுவர்க்கான சமாசாரங்கள், இன்னும் பல தேசவர்த்தமானங்கள் அடங்கி யிருக்கின்றன. இப்படிப்பட்ட பத்திரிகையை யாவரும் வாசித்துவரில் பல நன்மைகளை அடையலாம்.

பார்வைத்தோட்டம்.
**நல்ல செடிகள் வேண்டுமா!**
**புது விதைகள் வேண்டுமா!!**

சேலம் ஒட்டுமாங்கன்றுகள், அநேகஜாதி பழவகை ஒட்டு செடிகள், புஷ்பம், காய்கறி விதைகளின் 1909-ம் வருஷத்திய புதியக் கேட்லாக் அரையணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

ச. கோ. இ. அப்துல் ரஹிமான் சாயபு,
விதைகள், மாங்கன்று வியாபாரி, சேலம்.

**Dr. H. L. Batliwalla, Dadar, Bombay.**

| | |
|---|---|
| குளிர் ஜுரத்திற்கு மாத்திரைகள் .. | 1-0-0 |
| விஷபேதிக்கு .. .. .. | 1-0-0 |
| நரை மயிருக்கு .. .. .. | 3-0-0 |
| பலஹீனத்திற்கு மாத்திரைகள் .. | 1-8-0 |
| பல் பொடி .. .. .. | 0-4-0 |
| சயை ஒரே நாளில் சொஸ்தப்படுத்த புட்டி | 0-4-0 |

எங்கும் விற்கப்படுகிறது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
4-FEB 1910
MADRAS

Supplement to the "Practical Life"

"பிழைக்கும் வழி" க்கு அனுபந்தம்.



HIS HIGHNESS THE MAHARAJA OF DHARBANGA.

தர்பங்கா மகாராஜா.

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி, 10, எஸ்பிளனேட், மதராஸ்.

G. A. VaidyaRaman & Co., 10, Esplanade, Madras.

REGISTERED 5- FEB 1910


# பிழைக்கும் வழி

## PRACTICAL LIFE

ஜி. எ. வைத்தியராமன், பி. எ. பத்திராதிபர். — G. A. VaidyaRaman, B.A. EDITOR.

புஸ்தகம் I. Vol. I. — ஸௌமியஹூ மார்கழிமீ —DECEMBER 1909. — ஸஞ்சிகை 12. No. 12.


## பிழைக்கும் வழி.

### PRACTICAL LIFE.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், பிரஜாலக்ஷணம், வித்தியா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

**தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.**

| | உள் நாடு. | | அந்நிய நாடு. | |
|---|---|---|---|---|
| வருஷம் 1க்கு | 4 | 0 | 6 | 0 |
| 6 மாதத்திற்கு | 2 | 0 | 3 | 0 |
| தனிப்பிரதி | 0 | 6 | 0 | 8 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. சகலபணமும் எங்களுக்கு நேரில் அனுப்பப்படவேண்டும்.

**வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியது.**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும் எழுதினவர்களுக்குத் தக்க மரியாதை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸமும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒரு பாதியைவிட்டு மறுபாதியில் மட்டில் எழுதப்பட வேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

A popular Tamil monthly magazine of general information and instruction devoted mainly to agriculture, trade, industry, citizenship, and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. | A. | P. | Foreign. Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | 6 | 0 | 0 |
| ,, half year ... | 2 | 0 | 0 | 3 | 0 | 0 |
| Single copy ... | 0 | 6 | 0 | 0 | 8 | 0 |

No Money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers Messrs. G. A. Vaidya Raman & Co., 10, Esplanade, Madras.

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி, 10, எஸ்பிளனேட், மதராஸ்.

## AGRICULTURE.


BY

MAHAMAHOPADYAYA V. SWAMINADA AIYAR,

*Tamil Pandit, Presidency College, Madras.*


### விவஸாயம்.

ஜனங்கள் பொருள் ஸம்பாதித்துப் பிழைத்தற்குரிய வழிகள் பல. அவற்றுட் சிறந்தது விவஸாயமாகும். இக்கருத்துக்கொண்டே "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந், தொழுதுண்டு பின் செல்பவர்" என்றார் திருவள்ளுவரும். இத்தொழிலை ஒருவன் நன்றாகக் கவனித்துக் கண்ணும் கருத்துமாக இருந்து நடத்திவருவானானால் அவனுக்கு ஒருவிதமான குறைவும் உண்டாகாது. அவனுடைய தேகாரோக்கியத்தைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. இதனால், ஒருவன் தானும் திருப்தியை யடையலாம்; பிறருக்கும் திருப்தியை உண்டு பண்ணலாம். பிறருக்குத் துன்பம் உண்டாவதற்குச் சிறிதும் இடமில்லை. வர்த்தகம், கைத்தொழில் முதலிய பலவகைத் தொழில்களுக்கும் அடிப்படையாக உள்ளது விவஸாயமே. பெருஞ்செல்வமுள்ள இராஜா அடையக் கூடிய ஸந்தோஷத்தையும் பயிரிட்டு வாழ்வோன் அடைவான் என்பதில் ஸந்தேகமில்லை. "குடித்தனமோ துரைத்தனமோ" என்று வழங்கும் பழமொழியே இதனை நன்றாகத் தெரிவிக்கும்.

இத்தொழிலைச் செய்ய ஆரம்பித்தால் சோம்பலென்பது இருந்த இடம் தெரியாமற் பறந்துவிடும். சுறுசுறுப்பில்லாதவனுக்குக்கூட, சுறுசுறுப்பு உண்டாகும். வேறொன்றிலும் கவனத்தைச் செலுத்த அவனுக்கு மனம்வராது.

முற்காலத்தில், சோழதேசத்தில் அநேக மிராசுதார்கள் 4-மா, 5-மா (மா என்பது கிட்டத்தட்ட ஏகரில் மூன்றில் ஒன்று) நிலங்களை வைத்துக்கொண்டு நன்செய்களில் நெற்பயிரிட்டு அதனை ஆகாரத்துக்கும் புன்செய்களில், கேழ்வரகு, சோளம், கம்பு, துவரை, உழுந்து முதலிய தானியங்களையாவது, கிழங்குகள், காய்வர்க்கங்கள் முதலியவற்றையாவது, வாழை முதலிய பலவிருக்ஷங்களையாவது உண்டாக்கி அவற்றாற் கிடைக்கும் வரும்படிகளைத் தீர்வை செலுத்துவதற்கும், குடும்பச் செலவுகளுக்கும் உபயோகப்படுத்தி வந்ததோடு கல்யாணம் முதலிய விசேஷச்செலவுகளுக்கும் உபயோகமாகும்படி பணத்தை மிகுத்து வைத்துக்கொண்டு திருப்தியாகவேயிருந்து காலங்கழித்து வந்திருக்கிறார்கள். அவர்கள் பிறரிடம் சென்று யாசிப்பதில்லை. யாசிப்பவர்களைப் பார்த்துச் சோம்பேறிகளென்று அவர்கள் பழிப்பதுமுண்டு. அவர்களுக்கு ஒருவிதமான வருத்தமும் இருந்ததாகத் தெரியவில்லை. மிகவும் ஸுகசாலிகளாகவேயிருந்திருக்கிறார்கள். இரண்டு வேலி, மூன்று வேலி நிலங்களை வைத்துக்கொண்டு மேற்கூறியபடி பயிரிட்டுச் செட்டாகவும், ஜாக்கிரதையாகவும் இருந்து விருத்தி பண்ணிக்கொண்டு வந்து 100-வேலி, 200-வேலி, நிலங்களுக்குச் சொந்தக்காரர்களாகவும் சிலர் ஆகியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மிராசுதார்களைப்போல இக்காலத்திற் பார்க்கக்கிடைப்பது மிகவும் அருமை.

தினந்தோறும் வயல்களைச் சுற்றிப் பார்ப்பதும், உரிய காலங்களிற் செய்யவேண்டிய திருத்தங்களை அப்பொழுதப்பொழுது கவனித்துச் செய்து நிலங்களைப் பண்படுத்துவதும் மிராசுதார்களுடைய முக்கியமான கடமைகளாகும். அல்லாமலும் குடியானவர்களையும் பண்ணையாட்களையும் அன்புடன் ஆதரித்து வருவதோடு அவர்களுக்குத் தக்கபடி கூலியும் கொடுத்து வரவேண்டும். அப்படிச் செய்தால் அவர்கள் உண்மையாக உழைத்து சொந்தக்காரர்களுடைய நன்மையையும் லாபத்தையுமே நாடிக்கொண்டிருப்பார்கள். ஆபத்துக் காலங்களில் தாங்களாகவே வந்து மிகவும் உதவுவார்கள்.

அவர்களுடைய கூலியைக் குறைத்தால் மிராசுதார்களுடைய வரும்படிக்குக் குறைவு ஏற்படும். பெருத்த நிலக்காரர்கள் தங்கள் காரியஸ்தர்களுக்குத் தக்க சம்பளம் கொடுத்து வரவேண்டும். இல்லாவிட்டால் வரும்படி முழுவதும் சொந்தக்காரர்களுக்குக் கிடைப்பது அருமையாகப் போய்விடும். இது ஸம்பந்தமாகச் சில காலத்துக்கு முன் நடந்த விஷயமொன்று ஞாபகத்துக்கு வருகிறது. அது வருமாறு :—

"கௌரவமான குடும்பத்திற் பிறந்த ஒரு பெரிய மிராசுதார் தம்முடைய காரியஸ்தர்களில் ஒருவர் ஏதோ ஒரு ஸமயத்தில் 4-கலம் நெல் திருடி எடுத்துக்கொண்டதாகக் கேள்வியுற்றார். அதனுண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றுகருதி அவரை அழைப்பித்து 'நீர் 4-கலம் நெல் திருடியதாகக் கடிதம் இதோ வந்திருக்கிறது. உண்மையைச் சொல்லும்,' என்று கேட்கவே, காரியஸ்தர் "வாஸ்தவந்தான். நீங்கள் கொடுத்துவரும் 3-கலம் சம்பளம் என்னுடைய குடும்பச் செலவிற்குப் பற்றவில்லை. என்னுடைய காலம் முழுவதையும் உங்கள் காரியத்திலேயே செலவிடுகிறேன். வேறு வகையான வரும்படிக்கும் இடமில்லை. நான் என்னசெய்வேன். அவஸரமான செலவுள்ள ஸமயம் ஒன்று ஏற்பட்டதால் மறுபடியும் எப்படியாவது ஈடுபண்ணிக் கொள்ளலாம் என்று எடுத்துக்கொண்டுவிட்டேன். பொறுத்துக் கொள்ளவேண்டும்" என்றார். இதனையறிந்த அந்தக் கனவான் சிறிதும் கோபித்துக்கொள்ளாமல் அவருடைய சம்பளத்தை அதிகப்படுத்தியதோடு அவருடைய குடும்பத்தில் ஏற்படும் அதிகச் செலவுள்ள ஸமயங்களில் எல்லாம் வேண்டிய உதவியும் செய்து வந்தார். அந்தக் காரியஸ்தரும் முன்னிலும் பதின் மடங்கு அதிகமாக உழைத்து வந்து அந்த மிராசுதாருக்கு விசேஷமான வரும்படியை விளைவித்தனர்."

"கார்நடக்கும் படிநடக்குங் காராளர் தம்முடைய
ஏர்நடக்கு மெனிற்புகழ்சா லியலிசை நாடக நடக்கும்
சீர்நடக்குந் திறனடக்குந் திருவறத்தின் செயனடக்கும்
பார்நடக்கும் படைநடக்கும் பசிநடக்க மாட்டாதே".
—ஏரெழுபது.

வெ. சாமிநாதையன்.

---



## RICE MILLS AND CO-OPERATIVE SOCIETIES.

BY T. S. SUBRAMANIA AIYAR, M.A., L.T.,
*Presidency College, Madras.*

## அரிசி ஆலைகளும் கூட்டுறவுச் சங்கங்களும்.

வெகுகாலமாய் இந்த தேசத்தில் வேளாண்மையே பெரும்பாலும் மனிதர்களுக்கு ஜீவாதாரமாய் இருந்தபோதிலும், பற்பல கைத்தொழில்களும் இங்கே நடைபெற்று வந்திருக்கிறதாக அறிகிறோம். இப்போதும் நாகரிகம் ஜாஸ்தியாக ஜாஸ்தியாக அதற்குத்தகுந்தாற்போல் பலவகையான புதிய புதிய ஸாமான்களும் ஜாஸ்தி வேண்டியிருக்கின்றன. ஆகவே இவைகளைச் செய்ய புதிய புதிய தொழில்களும் உண்டாகின்றன. இந்தத் தொழில்களின் பெருக்கத்திற்கு பற்பல சௌகரியங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

இப்போது உலகத்திலுள்ள அமைதியாலும், அறிவின் பெருக்கத்தாலும், பற்பல தேசங்களின் கூட்டுறவு முறைகளாலும், புதிய புதிய கற்பனைகளாலும் தொழில்களும் அலுவல்களும் விருத்தியாகின்றன. ஆகையால் இந்தக் காலத்தில் ஒவ்வொருதேசத்தின் பெருமையும் அதில் நடக்கும் தொழில்களாலும் அதின் ஜனங்களின் ஊக்கத்தாலுமே வெளியாகின்றது.

இந்த விதத்தில் பெருமையும் புகழும் பெற்ற தேசங்களை பார்க்கும்பொழுது, கைத்தொழில்களோடு யந்திரமுறைகளும் சேர்ந்தே அங்கே உள்ளவர்களுக்கு நன்மை செய்திருப்பதை எளிதில் தெரிந்துகொள்ளலாம். நாகரிகக் கிளர்ச்சியுள்ள இந்தக் காலத்தில் யந்திரமுறைகளைத் தெரிந்து கொள்ளாமல் கைத்தொழில்களை மட்டும் செய்யவிரும்புகிறதானது முயலைப் பிடிக்க ஆமை ஓட்டமாய் ஓடுகிறது போலிருக்கிறது. இந்தக்காரணத்தைக் கொண்டே சில மாதங்களுக்குமுன் தொழிற்காட்சி மகாசபையில் பரோடா மகாராஜா அவர்கள் இந்த விஷயத்தைத் தெளிவாக எடுத்துச் சொன்னார். நாம் எவ்வளவு கைத்தொழில்களை விருத்தி செய்தபோதிலும், மற்ற தேசங்களிற் செய்வதுபோல் யந்திரங்களைத் தொழில்களுக்கு உதவியாகக் கைக்கொள்ளாத வரையில், வர்த்தகத்திலும் செல்வத்திலும் மற்ற நாட்டார்களோடு போட்டிபோட நம்மால் முடியாது என்பது நிச்சயமென்று தெளிவாய்க் காட்டினார்.

நெசவு, தையல் முதலிய வேலைகளில் யந்திரங்கள் வெகுவாய் ஏற்பட்டு வருகின்றன. இந்த மாதிரியே மற்ற தொழில்களிலும் வேளாண்மையிலும் யந்திர ஸகாயம் ஏற்பட்டால், வேலை செய்கிறவர்களுக்கும் முதலாளிகளுக்கும் லாபமுண்டாகுமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனபோதிலும் பெரிய பண்ணைகளில் மட்டும் யந்திர ஸகாயத்தால் பலனுண்டாகும். சிறிய பண்ணைகளுக்கு யந்திரங்களை வாங்கி வேலை செய்வது முடியாத விஷயம். தனித்தனியே வேளாண்மையில் யந்திரங்களை உபயோகிக்க சக்தி யில்லாதவர்களாயிருந்தாலும், சிறிய பண்ணைக்காரர்கள் ஒருவாறு ஒன்று சேர்ந்தால் சில முறைகளில் அவைகளைப்பற்றி நினைக்கலாம். பெரும்பாலும் பயிர்த் தொழிலையே ஜீவனோபாயமாய்க்கொண்ட இந்த நாட்டில் அரிசி வியாபாரம் எங்கும் நடக்கிறது. நெல்லைக்குற்றி அரிசியாக்கி வெளிதேசங்களுக்கும் உள்நாடுகளுக்கும் அனுப்புகிறார்கள். வலியனுக்கு விட்டு அரிசியை வாங்குவதைக் காட்டிலும் அரிசி ஆலைகளை ஏற்படுத்தி சீக்கிரத்தில் அரிசியாகச் செய்து வர்த்தகம் செய்வது நல்லது. வலியனுக்கு விடுகிறதாவது ஒருவன் தன்னுடைய வீட்டிலேயே நெல்லைக்குற்றச் சொல்லாமல் குற்றுகிறவனிடத்தில் நெல்லைக்கொடுத்து, அதை அவன் வீட்டுக்குக்கொண்டு போய் அதைக் குற்றி அரிசியை மட்டும் கொண்டு வந்து கொடுப்பது.

மேலும் அரிசி ஆலைகளை ஏற்படுத்துவது வெகு கஷ்டமல்ல. வெகு ஏராளமான முதல் வேண்டுமென்று நினைப்பது தவறு. ஸாதாரணமாக வேளாண்மையில் அமர்ந்துள்ள சில கிராமவாசிகள் சேர்ந்தே இந்தத்தொழிலை நடத்தலாம். இதற்கு வேண்டிய ஸாதனங்களையும் அமைக்கலாம். சற்றேறக்குறைய முப்பதினாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள யந்திரங்களைக்கொண்டே இந்தத்தொழிலை ஆரம்பிக்கலாம். அதிக பரிவாரங்களும் இடமும் வேண்டியதில்லை. குடியானவர்களே யந்திரங்களை நடத்தலாம். பெரிய அபாயங்களுக்கும் இடமில்லை. நம்மவர்களுக்குள் நற்குண நற்செய்

களால் பெரும் புகழையும் பெருமையையும் பெற்ற ஸர். எஸ். சுப்பிரமணிய அய்யரவர்கள் தஞ்சாவூர் ஜில்லாவில் நீடாமங்கலத்துக்கு ஸமீபத்தில் ஒரு அரிசி ஆலை ஏற்படுத்தியிருப்பதை பலபேர்கள் கேட்டிருக்கலாம். சிலர் பார்த்திருக்கலாம். இந்த ஆலையை முழுவதும் நிர்மாணம் செய்தவர், யுக்தி புத்தியுள்ள அவர் மகன். இவர் தம்முடைய ஊக்கத்தையும் புத்தி கூர்மையையும் இந்த வேலையில் நன்றாய் வெளியிட்டிருக்கிறார். நாற்பது அடி அகலமும் அறுபது அடி நீளமுமுள்ள ஒரு இடத்தில், தம்முடைய நிலங்களுக்கு நடுவிலே, யந்திரசாலையைக்கட்டி, குடியானவர்களைக்கொண்டே யந்திரங்களை நடத்திவருகிறார். நெல்லைக் குற்றுவதற்கும் கீழேயிருந்து மேலே தூக்குவதற்கும், புடைப்பதற்கும், தீட்டுவதற்கும் வேண்டிய யந்திர பாகங்கள் வெகு நன்றாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த மாதிரி செய்தும் ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு மேல் பணச்செலவு ஆகவில்லை. இந்தவிதத் தொழிற்சாலைகளே ஸாமான்ய மனிதர்களுக்கு லாபத்திற்கு புதிய மார்க்கங்களை காட்டுகின்றன.

வலியனுக்கு நெல்லை விட்டு அரிசியாக வாங்குவதைக்காட்டிலும் ஆலையில் கொடுத்து வாங்கிக்கொள்ளுவதில் அநேக சௌகர்யங்களிருக்கின்றன. முதலில் ஆலையில் அரிசியாகச் செய்து கொடுப்பதற்கு கூலி குறைவு. வலியனுக்கு 13½ மாகாணி நெல்லைக்கொடுத்தால் 6 மாகாணி அரிசி கிடைக்கும். இந்த விதம் கணக்கிட்டால் 195 ராத்தல் கனமுள்ள ஒரு மூட்டை அரிசிக்கு வலியன் கூலி 1½ ரூபாயாகும். ஆலையில் இதற்கு கூலி ஒரு ரூபாய்தான். மேலும் ஆலையில் குற்றுகிற அரிசி ஒரே நோட்டமாயிருக்கும். ஏராளமாக அரிசி வேண்டிய வியாபார முறையில் ஒரேமாதிரியான அரிசிதான் லாபகரமென்று சொல்லவேண்டும். தீட்டுவதற்கென்று ஏற்பட்ட யந்திர பாகத்தை ஒரே நிலையில் வைத்து நம்முடைய நோட்டத்திற்குச் சரியான அரிசியை வேண்டிய அளவு செய்து கொள்ளலாம். ஆனால் வலியனுக்கு விடப்படும் நெல்லோ பலபேரால் குற்றப்பட்டு பலவிதமாக தீட்டப்படுகிறது. இந்தக்காரணத்தினால் வியாபார முறைக்கு ஆலை அரிசி சிறந்ததாய்த் தோன்றுகிறது.

இந்த தேசத்தில் வேளாண்மையே ஜனங்களுக்கு உயிர்த்தொழிலாய் இருக்கின்றது. அரிசி வியாபாரமும் எங்கும் பரவியிருக்கிறது. யந்திர முறைகளால் லாபமுண்டாகுமென்பதும் எல்லாருக்கும் தெரிந்திருக்கின்றது. அப்படியிருந்தும் அரிசி குற்றுவதற்குக் கூட ஏராளமான யந்திரசாலைகள் ஏற்படாமலிருப்பது ஆச்சரியமல்லவா? கோதாவரி, கிருஷ்ணா, தஞ்சாவூர் முதலிய ஜில்லாக்களில் மட்டும் சில ஆலைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனபோதிலும் இந்த தேசத்தின் விஸ்தீர்ணத்திற்கும் வியாபாரத்திற்கும் தகுந்தபடி இந்த வழியில் பெருக்கத்தைக்காணோம். இதற்குக் காரணம் என்ன? சிலபேர்கள் மூலதனம் இல்லாததுதான் காரணம் என்று சொல்லலாம். இந்த தேசத்தில் எந்தக் குறைவுக்கும் காரணம் மூலதனத்தின் குறைவு என்று சொல்வது வழக்கத்தில் வந்து கொண்டிருக்கிறது. ஆனால் இதுவே எதற்கும் காரணமென்று சொல்லுவது தவறு.

ஏதாவது ஒரு தொழிலில் நிலையான லாபம் கிடைக்கிறது என்று தெரிந்து கொண்டால், அந்தத்தொழிலுக்கு அனுகுணமாக ஸாதனங்களை முதலாளிகள் தேடுவார்கள். அரிசி ஆலையைப் போன்ற யந்திரசாலையில் நிலையான லாபம் இரண்டு காரணங்களால் உண்டாகும். தங்கு தடையில்லாமல், வேண்டிய அளவு தானியம், பருத்தி, சணல் முதலிய விளைபொருள்கள் கிடைக்கவேண்டும். இவைகளைக் கொண்டு செய்யப்படும் ஸாமான்களும் சரக்குகளும் தங்கு தடையில்லாமல் கைமேல்காசுக்கு விற்கப்படவேண்டும். இந்த விதம் நடக்காவிட்டால் யந்திரசாலைக்கு எப்போதும் வேலை கிடைக்காது. யந்திரம் என்ற பிசாசுக்கு மேலே மேலே வேலை கொடுக்காவிட்டால், அது முதலாளியை விழுங்கி விடும். ஆகையால் விளைபொருள்களை ஸரஸமாய் வாங்கி, அவைகளை ஸமான்களாகவும் சரக்குகளாகவும் செய்து, அவைகளை நியாயமான விலைக்கு விற்று உடனே பணத்தை வாங்கி தொழில் முறையில் அதை மறுபடியும் உபயோகிப்பதே சிறந்த வழியாகும். அதாவது, கைமேல்காசுக்கு வாங்கி கைமேல்காசுக்கு விற்பதே யந்திரசாலைகளின் விருத்திக்குக் காரணமாகும்.



இது ஸாத்தியமா என்று சிலர் நினைக்கலாம். கடனுக்கு வாங்கி கடனுக்கு விற்பதே வியாபார முறையில் தொன்று தொட்டு வழக்கமாயிருந்திருக்கிறது. ஆகையால் இதுவே சரியான முறையென்றும் அநேகர் நினைக்கக்கூடும். ஆனால் யந்திரசாலைகள் நிலைப்பதற்கும், அங்குள்ளவர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கும், கைமேல் காசு வேண்டும். இல்லாவிட்டால் எவ்வளவு மூலதனத்தைப் போட்டு யந்திரபாகங்களை அமைத்தாலும் அவை லாபகரமாக ஆகமாட்டா. இப்பொழுதோ கடனுக்கு வியாபாரம் செய்வதும் அநேக தவணைகளில் பணத்தை வசூல் செய்வதும் எங்கும் பரவி, ஸாவகாரிகளுக்கு லாபத்தை உண்டாக்குவதேயொழிய, ஸாமானிய ஜனங்களுக்கு நஷ்டத்தையே விளைவிக்கிறது.

மேலே சொல்லிய காரணங்களை சிலர் அறிந்திருக்கிறார்கள். ஆகையால் ஜனங்களே மூலதனத்தை உபயோகித்துத் தங்களுக்கு வேண்டியவைகளை செய்துகொள்ளுவது நலமென்று உணர்ந்து, கூட்டுறவு முறைகளைத்தெரிந்து கொண்டு ஐக்கியநாணயச் சங்கங்களையும், கூட்டுறவு வியாபாரச்சங்கங்களையும் கிராமங்களிலும் பட்டணங்களிலும் ஏற்படுத்த முயலுகிறார்கள். இந்தச் சங்கங்களுக்கு துரைத்தனத்தாரும் வேண்டிய உதவிசெய்து வருகிறார்கள். ஆகையால் நாளடைவில் இந்தச் சங்கங்கள் பெருகி பலமடையுமென்றும் இவைகளால் ஜனங்களின் தரித்திரம் நீங்குமென்றும் எதிர்பார்க்கிறார்கள்.

இந்தச் சங்கங்களின் முறைகள் யந்திரசாலைகளின் பெருக்கத்திற்கு பலவிதமாக உதவக்கூடும். ஏனென்றால் கரார் விலைகளும், கைமேல் பணத்திற்கு வியாபாரம் செய்வதும் இந்தச் சங்கங்களின் முறைமை. மேலும் இவைகள் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு சரக்கும் இவ்வளவு இவ்வளவு வேண்டுமென்பதைத் தெளிவாய்க் காட்டும். ஆகையால ஒழுங்கற்ற வியாபாரத்தால் சோர்வடையும் அரிசி ஆலைகளும் மற்ற யந்திரசாலைகளும் இந்தச்சங்கங்களோடு வியாபாரம் செய்தால் அவைகளின் சரக்குகள் சீக்கிரம் விலைப்பட்டு, தொழில்களும் பலப்பட்டு ஜனங்களும் லாபமடைவார்கள்.

மேலே சொல்லிய சங்கங்கள் இருவகைப்படும். சில, நகரச்சங்கங்கள், பல கிராமச்சங்கங்கள். நகரச்சங்கங்கள், வியாபாரச் சங்கங்களாகவும், கிராமச்சங்கங்கள் நாணயச் சங்கங்களாகவும் இருக்கின்றன. ஏனென்றால் பட்டணங்களுக்கு ஏராளமான சரக்குகள் வேண்டும். கிராமங்களுக்கு வேண்டியது சுலப வட்டிக்குப் பணம். இந்த விதம் இருவகைப்பட்டு இருந்தபோதிலும், இவைமுடிவில் ஜனங்களுக்கே லாபத்தை உண்டாக்குகின்றன. பட்டணச் சங்கங்கள் ஏராளமாய் சரக்குகள் வாங்குவதால் யந்திரசாலைகளை பலப்படுத்துகின்றன. கிராமச்சங்கங்கள் சிறு வட்டிக்கு பெரும்தொகையை உதவுவதால், வேளாண்மைச் செலவை சிறிது குறைக்கின்றன. கடுமை வட்டிக்குப் பணம் வாங்கிப் பயிர் செய்தால் நல்ல வளமுள்ள நிலங்களைப் பயிர் செய்தல் மட்டும் லாபகரமாகும். சுலபவட்டிக்குப் பணம் பெற்று அதனை வேளாண்மையில் உபயோகித்தால் வெகு ஸாமான்ய நிலங்களைக் கூடப்பயிரிடுதல் கூடும். ஆகவே, பணம் மலிந்து நிலங்களும் விருத்தியாக, பயிர் செழித்து வேளாண்மைச் செலவும் குறையும்.

இந்தச் செலவு குறைய சரக்குகளின் விலையும் தாழ்ந்து இந்தச் சரக்குகளை உபயோகிக்கிற தொழில்களும் பலப்படும். இந்தமாதிரியே கிராமச்சங்கங்கள் கிராமத்திலுள்ள விளைபொருள்களை யந்திரசாலைகளுக்கு உதவி, யந்திரசாலைகள் அவைகளை சரக்குகளாகச் செய்து நகரச் சங்கங்களுக்கு விற்று வெகுவாய் லாபமடையலாம். இந்த விதமாய் நாளடைவில் அநேக கிராமச்சங்கங்கள் சேர்ந்து அரிசியாலைகள் முதலிய யந்திரஸாதனங்களை தாங்களே அமைத்துக் கொள்ளவும் கூடும். கூட்டுறவு முறைகளால் ஜனங்கள் அநேக லாபங்களை அடைவதுபோல், தொழில்களும் மேற்சொல்லிய விதத்தில் பலமடையக்கூடும். மேலும் வேளாண்மையே முக்கியமாயுள்ள இந்த நாட்டில் கூட்டுறவு முறைகளாலேயே ஜனங்கள் தங்களுக்கு வேண்டியவைகளைச் செய்துகொள்ள வேண்டும். துரைத்தனத்தாரின் உதவியாலும், ஜனங்களின் அறிவினாலும் காலக்கிரமத்தில் யந்திரமுறைகள் எங்கும் பரவி இந்த வளமுள்ள நாடு செழித்தோங்கி நிற்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

டி. எஸ். சுப்பிரமணியன்.

## NIGHT SOIL MANURE.

BY

B. L. DAVEY SINGH,

*Mannargudi.*

## மல ஜலாதி எரு.

---

விவசாயிகளெல்லாரும் தங்கள் நிலங்களுக்கு உரம்போடுவதாலுண்டாகும் பயன்களை நன்றாய் அறிவார்கள். அப்படி உரம்போட்டு நிலவளப்பத்தை விருத்திசெய்யப் பிரியப்படுகிறவர்கள் எந்த விதமான உரம் குறைந்த செலவில் அதிக விளைவைத்தருமென்பதையும் கவனிப்பது சகஜமே. நிலத்தை சாகுபடி செய்தே ஜீவனம் செய்யவேண்டுமென்று இல்லாமல், வேறுவிதமான சம்பாத்தியத்தையுடைய விவசாயிகள், செலவைக் கவனிக்காமல் விலையுயர்ந்த உரங்களாக இப்பொழுது நம்முடைய தேசத்தில் பல இடங்களில் சாஸ்திர முறைப்படி தயார் செய்யப்பட்டு விற்கப்படுகிறவைகளை வாங்கி உபயோகப்படுத்துகிறார்கள். இன்னும் சில விவசாயிகள் நிலக்கடலைப் பிண்ணாக்கு, வேப்பம்பிண்ணாக்கு, கொட்டைமுத்துப் பிண்ணாக்கு இவைகள் போன்ற உரங்களையும் வாங்கி உபயோகிக்கிறார்கள். அப்படிக்கிருந்த போதிலும் அனேகமாய்க் குறைந்த விலை எருவையே சாதாரணமான விவசாயிகள் தேடுவது வழக்கம். இப்படிப்பட்டவைகளில் மல ஜலாதி எருவே நம்முடைய தேசத்தில் ஆதிகாலந்தொடங்கி வெகு ஏராளமாக உபயோகப்படுத்தப்பட்டு வருவதை நாம் கண்டும் கேட்டும் இருக்கிறோம். இவைகளிலும் வௌவால் முதலிய பக்ஷிஜாதி மலம் அதிகக் காரமுடையதென்றும், பிறகு ஆட்டுவர்க்கங்களின் மலம், அதற்கு அடுத்தது குதிரைமலம், இதன்பின் பன்றிமலம், இதை யடுத்து மனிதர் மலம், கடைசியாக பசு, எருது, எருமை மாடுகளின் மலம் என்பதாக கிரமமாய்க்காரம் குறைந்தவைகளென்றும் ரசாயன சாஸ்திரத்தில் தேர்ந்தவர்கள் பரிசோதனை செய்து எழுதியிருக்கிறார்கள்.

ஆனால் மனிதர் மலத்தை உபயோகிப்பதில் மனதுக்கு ஒருவித அசங்கியத்தைக்கொண்டு மாத்திரம் அதிகமாக உபயோகப்படுத்துவதில்லையே ஒழிய, அதை முழுவதும் உபயோகமில்லாததென்றாவது அல்லது அதனால் விளையும் பொருள்களுக்கு ருசிக்குறைவோ, உபயோகிக்கிறவர்களுக்கு வியாதியோ, உண்டாகுமென்றாவது விலக்கவில்லை.

இதற்கு ஒரு பிரத்தியக்ஷ திருஷ்டாந்தம் உண்டு; அதாவது, நம்முடைய கிராமாந்தரங்களில் ஊரடி வயல்களிலேயே கிராமவாசிகள் தேகபாதை நிவர்த்திக்கு ஒதுங்கும் வழக்கத்தை நாமெல்லாரும் பார்த்துவருகிறோம். இந்த வயல்களின் சொந்தக்காரர்கள், "ஊரடி வயலுக்கு உரமேன் ?" என்னும் பழமொழிக்குச்சரியாக வேறுவிதமான உரம் ஒன்றும் இடாமலே பயிர்செய்து ஏராளமான மாசூலை அடைந்து, அவைகளை சாப்பாட்டுக்கும் உபயோகப்படுத்திவருகிறார்கள். இந்தக் காரணத்தினால் இந்த மாதிரி நிலங்களின் விலையும் அதிகக் கிராக்கியாகவே இருக்கிறது. இதைத் தவிர, முன்காலத்தில் பட்டணங்களிலும் வீட்டின் கொல்லைகளில் குழிவெட்டி, அதில் வீட்டைப்பெருக்கி எடுக்கும் குப்பை, ஆடுமாடுகள் இருந்தால் அவைகளின் மலம், கழிவு வைக்கோல், புல், முதலியவைகள், அடுப்புச்சாம்பல், கரி, இவைகளல்லாமல் வீட்டுவாசிகளின்மலம் ஆகிய இவைகளெல்லாம் சேகரிக்கப்பட்டு, வேண்டியபோது எடுத்து நிலங்களுக்கு உபயோகப்படுத்தப்பட்டுவந்தது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். ஆனால் இப்பொழுது வெகு வருஷங்களாக முனிசிபாலிடிகளும், யூனியன்களும் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளால் தினந்தினம் ஊரிலுள்ள மலம், குப்பை முதலானவைகளெல்லாம் ஊருக்குத் தூரமாயுள்ள ஒரு இடத்தில் சேகரிக்கப்பட்டு வருஷத்துக்கு ஒரு தரமோ, இரண்டுதரமோ, ஏலம் போடப்படுகின்றன. இதை அநேக விவசாயிகள் வாங்கி தங்கள் நிலங்களுக்கு எருவாக உபயோகப்படுத்துவதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் முனிசிபாலிடியார்கள் மலம், குப்பை முதலியவைகளை மழை, வெயில் படாமல் காப்பாற்றிவைப்பதில்லை. இதனால் எருவின் காரம் குறைந்துபோகிறது. முனிசிபாலிடியார்கள், ஒன்று அல்லது இரண்டு பெரிய குழிகள்வெட்டி, அவைகளின் அடியிலும் நான்குபக்கங்களிலும் கடப்பைக்கல்லுகளோ, சுட்டசெங்கல்களோ வைத்துக்கட்டி, ஜலவாட்டமுள்ளதாக மேலே நன்றாய்மூடி, வெயில், மழையை மறைக்க மேலே ஒரு கொட்டகையும் போடுவார்களானால் அனுகூலமாயிருக்கும்.

இன்னும் சென்னை, பங்களூர் போன்ற பெரிய பட்டணங்களில் இந்த மலஜலாதிகளும் வேறு சாக்கடை நீரும் ஒரே இடத்தில் ஒன்றாகச் சேகரிக்கப்படுகின்றன. அந்த இடத்தைச் சுற்றிலும் காய், கறி, புல் முதலிய தீவனங்களைப் பயிர்செய்து விற்கிறார்கள். இவைகளை ஆகாரமாக உபயோகப்படுத்திவரும் மனிதர்களுக்கு ருசிக்கேடாவது, வியாதிகளாவது உண்டாவதாகத் தெரியவில்லை.

மேலே சொன்ன விஷயங்களையெல்லாம் நன்றாய் அறிந்த என்னுடைய சிநேகிதர் மதுரை ராவ் பகதூர் ஜி. ஸ்ரீனிவாச ராயரவர்கள், சென்ற ஆகஸ்டு மாதத்திய "பிழைக்கும் வழி" யில் மலஜலாதி எருவின் பிரயோசனத்தை தெளிவாய் எழுதியிருக்கிறார். இப்படியிருக்க, "பிரபஞ்சம்" என்ற பத்திரிகையின் ஐப்பசி மாதத்திய சஞ்சிகையில் கோயம்புத்தூர் ஆர். பத்மநாப அய்யர் அவர்கள், இந்த எருவின் பிரயோஜனத்தை முழுவதும் மறுத்து, இந்த எருவை உபயோகப்படுத்துவதினால் விளையும் பொருள்களுக்கு ருசியில்லையென்றும், பலரோகங்களும் அவைகளால் உண்டாகுமென்றும் அவசரப்பட்டு எழுதியிருப்பதைப்பார்க்க நமக்கு மிகவும் கவலையுண்டாகிறது.

நம்முடைய ராஜதானியில் கடப்பை ஜில்லாவிலுள்ள நஞ்சை நிலங்களுக்கு வேறு எந்த எரு இட்டாலும் விளைவு குறைகிறதென்று கண்டு, அந்த ஜில்லா விவசாயிகள் மல ஜலாதி எருவையே வாங்கி ஏராளமாய் உபயோகப்படுத்துவதை நாம் நேரிலேயே பார்த்திருக்கிறோம். அதுவுந்தவிர, நம்முடைய சிநேகிதர் பென்ஷன் டிப்டி கலெக்டர் ஸயித் காதர் பாஷா ஸாஹேப் அவர்களும் இந்த எருவையே தம்முடைய நிலங்களுக்கு உபயோகப்படுத்தி வருவதை நாம் கேட்டிருக்கிறோம். இவைகளெல்லாவற்றையும் தவிர, வடக்கே பூனா, அலகபாத், நாகப்பூர், மீரத், கான்பூர் போன்ற இடங்களிலுள்ள கவரன்மெண்டு சோதனைப் பண்ணைகளில் மனிதர் மலத்தையே எருவாக உபயோகித்து சாகுபடி செய்து காட்டி வருகிறார்கள். மாடுகளின் எரு, மனிதர்மலத்தைக் காட்டிலும் வெகுவாய்க்குறைந்த சத்துள்ளதென்று ரசாயன சாஸ்திர நிபுணர்கள் ஆராய்ந்து பார்த்துக்கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்தக் காரணத்தைக்கொண்டே சாஸ்திர ஆராய்ச்சியில் விவேகிகளான ஜப்பானியர்கள் மலஜலாதி எருவையே அதிகமாக உபயோகிக்கிறார்கள். மேலும் ஆடுமாடுகளை வைத்துக்காப்பாற்றுவது பெருத்த பொருள் செலவு என்றும் அவைகளின் எருவும் மனிதர் மலத்தைப்போல அவ்வளவு சிலாக்கியமானது அல்ல என்றும் தெரிந்தே ஆடுமாடுகளைக் கட்டோடே ஒழித்து விட்டார்கள். இந்த விஷயத்தைப்பற்றி ஸர். எப். ஏ. நிகல்ஸன் அவர்கள் இங்கிலீஷில் எழுதியிருப்பதை அநேகர் கேட்டிருக்கலாம்.

இது வரையிலும் சாதாரணமாய் நாம் கண்டும் கேட்டும் இருந்த விஷயங்களைப்பற்றிச் சொன்னோம். இனிமேல் இதனடியில் நம்முடைய சொந்த அனுபவத்தைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுவோம்.

தஞ்சாவூர் ஜில்லா மன்னார்குடிக்குக் கிழக்கே கூடுதாங்கிச்சேரி என்ற கிராமத்தில் நமக்குச் சொந்தமான சுமார் 100 ஏகரா நஞ்சை நிலங்களும் நாம் இரண்டு வருஷங்களுக்கு முன் வாங்கினபோது சுத்த கேவலமான ஸ்திதியிலிருந்தன. நாம் வைத்தியத்துக்குப் படிக்கும்போது கற்றுக்கொண்ட ரஸாயன சாஸ்திர அறிவாலும், பிறகு எமது அநுபோகத்தாலும், அப்போதப்போது பல சாஸ்திர நிபுணர்கள் வெகுகால ஆராய்ச்சியின் பயனாய் எழுதியிருக்கும் நூல்களைப்படிப்பதாலும், அடையும் அறிவையும் பின்பற்றி எந்தெந்த நிலத்தின் வளப்பத்துக்கு என்னென்ன சத்துக்கள் குறையென்பதைச் சோதித்து அறிந்து, அந்த சத்துக்களைக் கொடுக்கக்கூடிய எந்த உரமானாலும் எவ்வளவு விலை அதிகமானாலும் கொடுத்து வாங்கிப்போட்டு ஒருவாறு அந்த நிலங்களைச் சீர்ப்படுத்தி நல்ல நிலைமைக்கு இப்பொழுது கொண்டுவந்திருப்பதை நம்மவர் எல்லாரும் அறிவார்கள். அந்த நிலங்களில் சிலவற்றில் மனிதர் மலத்தை நாம் பலவிதமாய்ப் போட்டுப் பயிர் செய்திருக்கிறோம். அவைகளிலுண்டான தானியங்களை நாம் மாத்திரமேயல்லாமல் நம்முடைய சிநேகிதர்களுக்

குங்கூட சாப்பிடக் கொடுத்திருக்கிறோம். அந்தத் தானியங்களிலாவது காய்கறிகளிலாவாது, ருசிக்குறைவோ, கெட்ட நாற்றமோ, அல்லது வேறு வியாதிகளோ ஒன்றும் உண்டாவதில்லையென்று நாம் நிச்சயமாய்ச் சொல்லுவோம். போனவருஷத்தில் நம்முடைய நஞ்சை நிலங்களில் அடுத்தடுத்த இரண்டு வயல்களில் ஒன்றில் நன்றாய்ப் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த மாட்டு எருவையும் மற்றொன்றில் மனிதர்மலத்தையும், வேறிரண்டு வயல்களில் ஒன்றில் மாட்டெருவோடு மனிதர் மலத்தைக் கலந்தும், மற்றொன்றில் சாதாரண மாட்டெருவை மாத்திரம் போட்டும் பார்த்தோம். தனியாக மனிதர் மலத்தைப் போட்ட வயலிலும், இதை மாட்டெருவோடு கலந்து போட்ட வயலிலும் பயிர் வெகு மேனியாயும் மாசூல் அதிகமாயும் கண்டிருக்கிறது. இப்படியே நாற்றங்கால்களிலும் மனிதர் மலமிட்டுப் பயிரான நாற்றுகள் மேன்மையாய் வந்திருக்கின்றன. இப்படி மனிதர் மலம் போட்ட நாற்றங்கால் நாற்றுகள், ஆட்டுக் கிடை வைத்தோ, மாட்டெருப் போட்டோ, அவுரி, கொளுஞ்சித் தழைகள் போட்டோ, அல்லது மேற்சொன்ன பிண்ணாக்குத் தினுசுகளைப் போட்டோ பயிர்செய்த நாற்றுகளைப் பார்க்கிலும் நேர்த்தியாய் வந்திருக்கின்றன. சில நாற்றங்கால்களில் இந்த நாற்றுகள் 28 நாட்களுக்குள் 30 அங்குல உயரம் வளர்ந்தும் மூடுகள் கனத்தும் இருந்தன. நம்முடைய வயல்களில் மனிதர் மலத்தை நான்கு விதங்களாக நாம் உபயோகப்படுத்தினோம். அவையாவன :—

1. முனிசிபாலிடியார் சென்ற பத்து வருஷங்களுக்கு முன் குழிகள் வெட்டி மூடிவைத்திருந்து சிறிதும் நாற்றமில்லாமலும் தோற்றமும் முழுவதும் மாறியிருந்த மனிதர்மலம்.

2. மேற்படியார் ஒரு வருஷத்துக்கு முன் குழிவெட்டி மூடியிருந்த மனிதர்மலம்.

3. உடனே சேகரித்து ஈரத்தோடேயே உபயோகித்த மனிதர் மலம்.

4. மற்ற எருக்களோடு கலந்து ஒரு வருஷம் வைக்கப்பட்டிருந்த மனிதர்மலம்.

இவைகளில் முதல் மாதிரியில் கொஞ்சமும் பிரயோசனமில்லை. நான்காவதிலும் பிரயோசனம் அவ்வளவு வெளிப்படையாகத் தெரியவில்லை. இரண்டாவது மூன்றாவது மாதிரியாக உபயோகித்ததில் மிக்க மேன்மையான பலனை அடைந்திருக்கிறோம். இவைகளில் நமக்குத் தோன்றுவதென்னவென்றால், மனிதர் மலத்தை அப்படியே எடுத்துக்கொண்டு போய் வயல்களில் குழிகள் வெட்டி அவைகளில் போட்டு மூன்றங்குலம் மண்போட்டு மூடி சாகுபடிசெய்ய ஆரம்பிக்கும் வரையில் வைத்திருந்து பிறகு உழும்போது அந்த உரம் அப்படியே நிலத்தோடு கலக்கும்படி செய்வது வெகு சிலாக்கியமான பலனைத்தரும் என்பதே. இப்படி மனிதர் மலமிட்ட வயல் பயிர்கள் எப்பொழுதும் தண்ணீரிலேயே கிடக்கவேண்டுமென்றும், தண்ணீர்த்தட்டு வந்தால் அவைகள் காய்ந்து, கரிந்து, சூறை விழுந்து சீக்கிரமாகக் கெட்டுப்போகுமென்றும் சிலர் சொல்லக்கேட்டிருக்கிறோம். இது முழுவதும் பிசகு. சென்ற வருஷத்தில் இவ்விடத்தில் முழுவதும் கால மழையில்லாமல் ஆறுகளிலும் தண்ணீர்த்தட்டு நேர்ந்து மற்ற அக்கம்பக்கம் பயிர்கள் அப்படியே பட்டுப்போய்விட, நாம் மனிதர் மலமிட்ட வயல் பயிர்கள் இந்தக் குறையைக் கொஞ்சமேனும் சட்டைசெய்யாமல் உள்ளீரத்தோடேயே விளைவு கொடுத்திருக்கின்றன.

இப்படி மனிதர் மலம் போட்ட வயல்களும் நாற்றங்கால்களும் அந்தந்த வருஷத்தில் மாத்திரம் விசேஷ பலன் கொடுத்ததோடு நின்றுவிடாமல், பின் வருஷத்திலும் நாம் வேறு உரம்போடாமல் அந்த வயல்களைப் பயிரிட்டிருப்பதில் முன் வருஷத்திய உரத்தின் பயனைக் கொண்டே இந்த வருஷமும் பயிர் வெகு மேனியாயிருக்கிறது. மற்றபடி போன வருஷத்தில் தழையும், பிண்ணாக்கும்போட்டிருந்த வயல்கள் அந்த வருஷத்துக்கு மாத்திரம் நல்ல பயனைக் கொடுத்து நாளது வருஷப்பயிருக்கு அவைகள் கொஞ்சங்கூட பயன்படவில்லை. இதுவே சர்வசாதாரணமாய் எல்லாரும் அறிந்துகொண்டிருப்பதும். இந்த விஷயத்தில் நாம் அனுபோகத்திலும் தெரிந்து கொண்டிருக்கிறோமாதலால், மனிதர் மலத்தை உரமிடுவது வெகு லாபகரமென்பதை எல்லாரும் கவனத்தில் வைப்பார்களென்று நம்புகின்றோம்.

பி. எல். தேவ்லிங்.

---



## VARIETIES OF PLANTAINS.

BY
T. C. V. RAMANA AIYAR.

## வாழை தினுசுகள்.

வாழையில் பலவகைகள் உண்டு. 1. செவ் வாழை, 2. கருவாழை, 3. பச்சை வாழை, 4. வெள் வாழை, 5. பூவன் வாழை, 6. நாடன் வாழை, 7. மொந்தன் வாழை, 8. ரஸ்தாளி, 9. பேயன், 10. பங்காளா, 11. நேந்திரன் வாழை, 12. அடுக்கு வாழை, 13. ஆனைக்கொம்பன், 14. விருபாக்ஷி, 15. துரை வாழை, 16. கூழை வாழை, 17. மலை வாழை, 18. மர வாழை, 19. இலை வாழை அல்லது கல் வாழை, 20. சுள்ளி வாழை முதலியவைகளிருக்கின்றன.

1. செவ்வாழை.—பழம் அதிக மதுரமும், சிரேஷ்டமுமானது. இந்த மரத்தின் மட்டைகள், இலைகள், இலைநரம்பு, பழம் முதலியவைகள் இளஞ்சிவப்பாயிருக்கும். முதிர்ந்த பழம் நல்ல சிவப்பாயிருப்பதுடன் பழத்தின் உள் பாகமும் இளஞ்சிவப்பாயிருக்கும். காய்களும் பழங்களும் நன்றாகப்பருத்து உருண்டு 7-8 அங்குல நீளமுள்ளவைகளாயிருக்கும். தோல் மெல்லியது. இது ஒரு குலைக்கு 150 காய் களுக்கு அதிகமிராது. இது நீலகிரி சுற்றுச் சருவல்களிலும், யானைமலையிலும், சேர்வராயன் மலையடிவாரங்களிலும் அதிகமாகவும், மற்ற இடங்களில் சொல்பமாகவும் கிடைக்கும். இதன் மதுரத்தை உத்தேசித்து பழம் ஒன்றுக்கு அரையணா வரையில் கொடுத்து வாங்குகிறார்கள். இதை அனேகம் பேர்கள் தோலை உரித்துவிட்டு வில்லைவில்லையாக அறுத்து தேனில் போட்டு வைத்துக்கொண்டு வாய் அரோசிகத்திற்கு ஏற்றதாகச் சாப்பிடுகிறார்கள்.

2. கருவாழை.—இதன் இலை, இலை நரம்பு, மட்டை முதலியவைகள் சற்றுக்கருப்பாயிருக்கும். காய்கள் ஐந்தங்குலத்திற்கு மேல் நீளமிராது. காய்கள் நன்றாய் உருண்டு ரணப்படாமல் சற்று நாற்பட்டையான ருட்சியுடையதாயிருக்கும். பழங்கள் கூடிய வரையில் ருசியுள்ளவைகளாயிருந்தாலும் செவ்வாழைப் பழங்களைப்போல் அவ்வளவு ருசியுள்ளவைகளல்ல. பழத்தின் தோலும் உள்பாகமும் அதிக கடினமானது. பழங்களை நீளத்தில் பிளந்தால் கருநிறமான சிறுவிதைகள் வரிசை வரிசையாகக் காணப்படும். காய்கள் சீக்கிரத்தில் வேகக்கூடியவைகளல்ல. பழத்திற்கு விலை அவ்வளவு அதிகமில்லை. குலைக்கு 200 பழங்களுக்கு அதிகமாயிருக்கும்.

3. பச்சை வாழை.—இதன் மரம், காய்; இலை முதலியவைகளில் அதிக வித்தியாசமில்லாதபோதிலும், பழங்கள், மற்ற வாழைப் பழங்களைப் போல் மஞ்சள் நிறமடைகிறதில்லை. இதைக்கொண்டே இதற்கு பச்சை வாழையென்று பெயரிட்டிருப்பதாக நினைக்க வேண்டியிருக்கிறது. காய்கள் உருட்சியில் பட்டைகளையுடையவைகளாயும் 5 அங்குல நீளமுள்ளவைகளாயுமிருக்கும். தோல் மந்தமானது. பழம் நல்ல ருசியுள்ளது. பழங்கள் அதிக நாள் வரையில் கெட்டுப்போகாமலிருக்கும் இந்த ஜாதிக்குலைகளில் காய்கள் 70, 80 க்கு அதிகமாகக்காண்பது அரிது.

4 வெள் வாழை.—இதன் மரம், மட்டை, இலை, நரம்புமுதலியவைகள் சுத்த வெள்ளையாயிருக்கும். தவிர இலைகளின் அடிப்புறத்தில் சாம்பல் போன்ற ஒரு பொடி யொட்டிக் கொண்டிருக்கும். சில சமயங்களில் காய்களின் பேரிலும் இந்த வெண்மையான பொடியைப் பார்க்கலாம். குலைக்கு 150 காய்கள் வரையிலிருக்கும். காய்கள் எவ்வளவு சதைப்பற்றுள்ளதாயிருந்தபோதிலும், நாற்கோணமாயும், முக்கோணமாயுமிருப்பதுடன் நீளத்தில்

வளைந்துமிருக்கும். தோல் மந்தமானது. பழத்தின் தோலை உரித்து விட்டால் மூன்றில் ஒரு பாகம் அளவு குறைந்து காணும். இதன் காய்கள் சமையலுக்கு மிகவும் ஏற்றவை. கோயம்புத்தூர், சேலம், திருச்சி, திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களில் மிகவும் அதிகம்.

5. பூவன் வாழை.—இந்த வாழை அதிக உயரமாய் வளர்வதில்லை. குலைக்கு 100-க்கு அதிகமான காய்களிருக்கும். பார்வைக்குக் காய்கள் செவ்வையாய் உருண்டு வெளிப்பட்டைக் கோடுகள் தோன்றாமல் ஆறு அங்குல நீளம் வரையில் நீண்டிருக்கும். பழங்களின் தோல் மெல்லியது. உள் சதை தோலிற்குள் அடங்கி நிற்காமல் பழம் வெடித்துப்போவதுமுண்டு. இந்த ஜாதிவாழைப்பழங்கள் சில இடங்களில் அதிக ருசியுள்ளவைகளாயும், சில இடங்களில் அவ்வளவு ருசியில்லாதவைகளாயுமிருக்கும். கோயம்புத்தூர் ஜில்லாவிலும் காவேரி நதிப்போக்குகளிலுமுள்ள ஊர்களிலும் இந்த வாழை விசேஷமாய்க் காணப்படுகிறது.

6. நாடன் வாழை.—இது அநேகமாய் வெள் வாழையை ஒத்திருக்கும். ஆனால் இலைகளின் மேலும், காய்களின் மேலும் வெண்மையான பொடியில்லை. காய்கள் நாற்கோணமாயும், முக்கோணமாயும், நீண்டு வளைந்திருக்கும். பழம் கூடியவரையில் ருசியுள்ளதாகவே இருக்கும். திருச்சி, சேலம், தென் ஆற்காடு, கோயம்புத்தூர் ஜில்லாக்களில் அதிகமாய்க் காணப்படுகிறது. இது நெல்லூர், கிருஷ்ணா ஜில்லாக்களிலும் மலையாளத்திலு முண்டாகிறது.

7. மொந்தன் வாழை.—இதை பொந்தன் என்றும் கூறுகிறார்கள். பெயருக்குத் தக்கபடி இதன் காய்கள் ஒன்பது அங்குலம் வரையில் நீண்டு அதற்குத்தக்கினபடி ஐந்தங்குல சுற்றளவுள்ளதாயுமிருக்கும். இந்த ஜாதி வாழைமரங்களும் மற்ற வாழைமரங்களை விட நன்றாகப் பருத்தும் உயர்ந்தும் வளரும். இந்தக் காய்கள் அதிக வளவளப்புள்ளவை. பழம் அதிக மதுரமுள்ளதல்ல. ஆயினும் இந்த ஜாதி வாழைப்பழங்களே இந்தத் தேசத்தின் ஒவ்வொரு மாகாணத்திலும் விசேஷமாகக் காணப்படுகின்றன. வடக்கே நாகப்பூர், ஐதிராபாத்து, அலாகாபாத்து, காசி, கல்கத்தா முதலிய விடங்களில் இந்த ஜாதி வாழைக் காய்களையும் பழங்களையும் விட இதர வாழைக் காய்களும் பழங்களும் காண்பதரிது. சென்னை ராஜதானியில் வாழை பயிராகிற ஒவ்வொரு ஜில்லாவிலும் இதைப் பயிர் செய்கிறவர்கள் அதிகம். இந்தப்பழங்களை சாப்பிட்டால் காமாலை, தாதுவைப்பற்றிய வறட்சி முதலிய வியாதிகள் நீங்கும். தோல் அதிக மந்தமானது. ஒரு அணுவிற்கு 4 பழமும், 6 காயும் சாதாரணமாய்க் கிடைக்கும்.

8. ரஸ்தாளி வாழை —இது முந்தி சொல்லப்பட்ட நாடன் ஜாதியைப்போலிருந்தாலும் பழம் அதிக மதுரமானது. இது சிற்சில இடங்களில் மட்டுமே பயிரிடப்படுகிறது. கோயம்புத்தூரை யடுத்த மேட்டுப்பாளையத்தில் இந்த ஜாதிப்பழங்கள் ஏராளமாய்க் கிடைக்கும். யானைமலையை யடுத்த ஊர்களிலும் மதுரை ஜில்லாவிலும் இந்த ஜாதிப் பழங்கள் ஏராளமாய் வாங்கலாம்.

9. பேயன் வாழை.—இந்த வாழை மிகவும் அரிது. பயிரிடுகிறவர்களும் குறைவு. யானை மலை, பழனி மலை, நீலகிரி மலை, பூனச்சி மலை, கொல்லி மலை, முதலிய மலைச்சருவல்களில் தான் இது அருமையாய்க் கிடைக்கும். இது கற்களின் இடுக்குகளில்தான் நன்றாய் வளரும். இது செவ்வையாய் எதிர் வெயில் படுகிற உஷ்ணமான விடத்தில் மாத்திரமே பயிராகுமென்று நம்பப்படுகிறது. காய்கள் அநேகமாய் செவ்வாழைக்காய்களைப் போல் பருத்து நீண்டிருந்தாலும், சிவப்பு நிறமட்டுமில்லை. ஆனால் காய்கள் கருத்த பச்சை நிறமாக விருக்கும். தோல் மெல்லியது. பழம்



அதிக மதுரமானது. காயும் பழமும் அதிக கெட்டியாயிருக்கும் இதன் பழங்களை சாப்பிட்டால் பலவித வியாதிகள் நீங்குமென்று சொல்லுகிறார்கள். நீலகிரியின் சுற்றுப்புறச் சருவல்களில் முள்ளுக்குரும்பர் என்ற மலைவாசிகள் வாசஞ்செய்கிற இடங்களில் இது பயிர் செய்யப்படுகிறது.

10. பங்காளா வாழை.—இது தென்னிந்தியாவில் விசேஷமாயில்லை. ஆயினும் இதை ஒரு வகை மொந்தன் ஜாதி என்றே எண்ணவேண்டியிருக்கிறது. வங்காளத்தில் விசேஷமாய்க் கிடைக்கிற வாழைக்காய்களும் பழங்களும் தென்னிந்தியாவில் கிடைக்கிற மொந்தன் என்கிற ஜாதியைப்போலவே யிருக்கிறபடியால், பங்காளா என்ற ஒரு தனி ஜாதி வாழை யில்லையென்றும், வங்காளம் அல்லது பங்காளம் என்ற பெயரைக்கொண்டு அந்த மாகாணத்தில் பயிரிடப்படும் வாழைக்கும் அந்தப் பெயர் வந்ததென்றும் எண்ணவேண்டியிருக்கிறது.

11. நேந்திரன் வாழை.—இது முக்கியமாய் மலையாளம், கொச்சி, திருவாங்கூர் முதலிய மேற்கு சமுத்திரத்தை யடுத்த நாடுகளில் பயிரிடப்படுகிறது. இது மொந்தன் ஜாதியைச் சேர்ந்ததானாலும் அவ்வளவு கனமுள்ளதல்ல. இதில் மொந்தன் காய்களைப் போல் பசையதிகம். பழம் அதிக மதுரமுள்ளதல்ல. இந்தக்காய்களையே மலையாள வாசிகள் உப்பேரி என்பதாக தேங்கா யெண்ணெயில் வறுத்து பல நாள் வரையில் வைத்துக்கொண்டு தின்கிறார்கள்.

12. அடுக்கு வாழை —இந்த ஜாதி வாழைக் குலைகளில் காய்கள் அதிக நெருக்கமாயும், ஒன்றுக்கொன்று பரிமாணத்தில் சற்றும் வித்தியாசமில்லாமலும் இடை வெளியின்றியும் அடுக்கிவைத்த மாதிரியாக வெகு நேர்த்தியாய்க் காணப்படும். பழங்கள் மூன்றங்குலத்திற்கு அதிக நீளமானவைகள் அல்ல. தோல் மெல்லியது. பழம் அதிக ருசியானது. ஒரு குலையில் 500 பழம் வரையிலிருக்கும். குலைகளில் பழங்கள் நல்ல மஞ்சள் நிறமாய் ஒன்றோடொன்று நெருங்கி இடைவெளி தோற்றாமல் ஒரு கஜம் உயரமுள்ளவைகளாக இருக்கும். இந்தக்குலைகளுக்கு ஒரு ரூபாய் முதல் இரண்டு ரூபாய் வரையில் விலையுண்டு இது செங்கற்பட்டு ஜில்லாவில் சில இடங்களிலும் கோயம்புத்தூர் ஜில்லாவிலும் விசேஷமாய் பயிர் செய்யப்படுகிறது. இந்த ஜாதி வாழையை நட்டுப் பயிர் செய்து விற்றுக் கைகண்டவர்கள் வேறு ஜாதி வாழைகளை பயிர் செய்ய விரும்பாரென்பது நிச்சயம்.

13 யானைக்கொம்பன் வாழை.—இதன் காய்களும் பழங்களும் யானையின் தந்தங்கள் போல் 9 அங்குல நீளமுள்ளவைகளாயும் மூன்றங்குல சுற்றளவுள்ளவைகளாயுமிருக்கும். காய்கள் நன்றாக முற்றிப்பழுத்த போதிலும் தோல் நல்ல மஞ்சள் நிறத்தையடைவதில்லை. தோலும் மெல்லியதல்ல. பழம் ருசியில் மத்திமமாயிருக்கும். இது முன் சொல்லப்பட்ட நேந்திரன் வாழை ஜாதியே யென்றாலும், காய்கள் அவ்வளவு பருமனுள்ளவைகளாய் ஆவதில்லை. ஒரு சீப்புக்கு 20 காய்கள் வரையில் பிடித்து குலைக்கு 7-8 சீப்புகள் வரையிலிருக்கும். இது அணுவுக்கு நான்கு முதல் ஆறு வரையில் கிடைக்கும். இது கோயம்புத்தூர், திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களில் கிடைக்கும்.

14. விருபாக்ஷி வாழை.—இது மதுரை ஜில்லாவிலுள்ள விருபாக்ஷி என்ற குன்றில் விசேஷமாய்ப் பயிர் செய்யப்படுகிறபடியால், இந்தப்பழத்திற்கு விருபாக்ஷிப் பழமென்றே சாதாரணமாய் பெயர் வழங்குகிறது. இது பார்வைக்கு முன்கூறிய நாடன் ஜாதிப்பழங்களை பல விதத்தில் ஒத்திருந்தாலும் நல்ல வாசனையும் அதிக மதுரமுமுள்ளது. இது பழநி என்ற சுப்பிரமண்ய ஸ்தலத்திற்கும், கோயம்புத்தூர் ஜில்லாவில் வியாழக்கிழமை தோறும் கூடுகிற பெரியசந்தை ஸ்தலமாகிய பொள்ளாச்சிக்கும், அதையடுத்த உடுமலைப்பேட்டை, தாராபுரம் முதலிய இடங்களுக்கும், மதுரை, திண்டுக்கல் முதலிய இடங்களுக்கும் வேண்டிய அளவு வருகிறது. தோல் மந்தமானது. நல்ல மஞ்சள் நிறமடைகிறதில்லை. பழம் அதிக நாளிருந்து மேல்தோல் வாடி, வறண்டு, கரிய நிறத்தை யடைந்தபோதிலும், உள்பாகம் அழுகிப்போவதில்லை. இந்த மாதிரியான பழங்கள் சேலம் ஜில்லா கொல்லி மலை யடிவாரங்களில் ஏராளமாய் பயிர் செய்யப்பட்டு அந்த மலையை யடுத்த தாலூகாக்களில் கொண்டுவந்து விற்கப்படுகின்றன, ரஸ்

தாளி என்ற ஜாதியும் இதற்கு சேர்ந்ததென்றே சொல்லலாம்.

15. துரை வாழை.—இதை 12-வதாகச் சொல்லப்பட்ட அடுக்கு வாழை என்றே சொல்லவேண்டும். இது நீலகிரி அடிவாரமாகிய மேட்டுப்பாளையத்திலிருந்து உதகமண்டலம், குன்னூர் முதலிய இடங்களுக்கு ஏராளமாய் வருகிறது. பழம் அதிக சிறியது. தோல் மெல்லியது. பழம் அதிக ருசியுள்ளது.

16. கூழை வாழை.—இது நான்கரையடியுயரத்திற்கு மேல் வளருவதில்லை. இலைகள் மற்ற வாழையிலைகளைவிட குறைந்த நீளமும் மிகுந்த அகலமுமானவைகள். இலைகளின் கனமுமதிகம். காய்களும் பழங்களும் விருபாக்ஷி, ரஸ்தாளி ஜாதிகளைப் போன்றன. இந்த ஜாதி வாழையை அநேகமாய் நீலகிரியில் பார்க்கலாம். ஐரோப்பியர்களுடைய காப்பித்தோட்டங்களிலும், பாளி சர்க்கார் தோட்டத்திலும், கோத்தகிரியை யடுத்த தோட்டங்களிலும் அதிகம். இந்தவாழை குலை போட்டு முதிரும் சமயத்தில் குலையின் காய்கள் தரையில் முட்டிக் கொண்டு நிற்கும். அந்த சமயத்தில் மரத்தின் அடியில் அதன் குலைகள் இறங்கும்படியாக குழிகள் தோண்டிவிடுவது முண்டு. இந்தக் குலைகளில் 150 முதல் 200 வரையில் காய்களிருக்கும்.

17. மலை வாழை.—இது யானைக்கத்தாழையைப் போல் இலைகள் மட்டும் நாலாபக்கங்களிலும் விட்டுக்கொண்டே வந்து கடைசியில் குலையும் விடுகிறது. காயாவது பழமாவது உபயோகப்படுவதில்லை. இலைகள் மட்டும் உபயோகப்படும். இதன் காய்களில் சுண்டைக்காயளவான கருநிறமான விதைகளுண்டு. இந்த வாழை அநேகமாய் மலைப்பிராந்தியங்களில் மட்டும் பயிராகிறது.

18. மர வாழை.—இது சிற்சில இடங்களில் ப டும் அரிதாய்க் காணப்படுகின்றது. தென் ரம் போல் இலைகள் விட்டுக் கொண்டு வ ிறது. இலைகள் எதிராக இருபுறத்தில் மட்டும் வரிசையாகக் காணப்படுகிறது. சென்னை பல பொருள் காக்ஷி சாலையின் முன்புறத்திலிருப்பதை அநேகர் பார்த்திருக்கலாம். இப்பேர்ப்பட்ட மரங்கள் வட இந்தியாவில் பல இடங்களில் காணப்படுகின்றன. வேறொருமாதிரி மர வாழை அமெரிக்காக் கண்டத்தை சேர்ந்தது. நீலகிரி ஜில்லா குன்னூரில் சிம்ஸ்பார்க்கு என்ற சர்க்கார் சிங்காரத் தோட்டத்திலிருக்கின்றது. இது தாழை மரத்தைப்போல் இடைக்கொம்புகள் விட்டுக் கொண்டு வளர்கிறது. இலைகள் மற்ற வாழையிலைகளை விட கனமாயிருப்பதைத் தவிர வேறு வித்தியாசம் காணப்படவில்லை. வாழைப் பூவின் உட்புறத்திலுள்ள புஷ்பங்களைப் போல் வேண்டிய அளவு புஷ்பங்கள் விட்டு ஒரு விதமான காய்களுமுண்டாகின்றன. ஆனால் காய்கள் மிக சிறியவையானபடியால் விதைகள் கிடைப்பதில்லை. இதன் சொரூபத்தைக் கொண்டு இதற்கு தாழை வாழை என்று பெயர் கொடுக்கலாமென்று நினைக்கிறோம்.

19. இலை வாழை.—இதற்கு கல் வாழை என்றும் சொல்லப்படுகிறது. இதன் மரம், இலை, காய், பூ முதலியவைகள் மற்ற வாழையைப் போலவே இருந்தாலும், காய்கள் மட்டும் முதிர்ந்து பழுக்காமல் வறண்டுபோய் கீழே விழுந்துவிடுகின்றன. காய்களைக் கொண்டுவந்து அழுத்து எவ்வளவு நேரம் வேகவைத்தாலும் மெதுவடைவதில்லை. ருசியுமில்லை. இந்த வாழை இலைக்காகவே பயிரிடப்படுகிறபடியால் இலைவாழை யென்றும், காய்கள் கல்போல் இருப்பதால் கல்வாழை யென்று மழைக்கப்படுகிறது.

20. சுள்ளி வாழை—இது பல இடங்களில் நான்கு ஐந்தடியுயரமும் வளர்ந்து புதர்களாயிருக்கும். ஹிந்துக்கள் இந்த வாழையை அநேகமாய் இலக்ஷியமாய்ப் பயிர் செய்வதில்லை. அப்படியிருந்த போதிலும் சில நந்தவனங்களில் புஷ்பங்களுக்காக இதை பயிர் செய்திருக்கிறார்கள். ஆனால் ஐரோப்பியர் தங்கள் வீட்டு முன் புறங்களில் இந்த வாழையை அலங்காரமாக வைத்து வளர்க்கிறார்கள். இந்த வாழையில், புஷ்பங்கள் சிவப்பு, மஞ்சள், வெள்ளை, மஞ்சளும் சிவப்பும் கலந்தது, முதலிய நிறங்களைக்கொண்ட ஆறுவிதமான ஜாதிகள் உண்டு, இதில் பட்டாணிக்கடலையளவுள்ள விதைகள் உண்டு. இதன் இலைகளை உண்கலமாக உபயோகிக்கலாம்.

டி வி. வி. ரமணையர்.



## THE GOVERNMENT OF ENGLAND.

## இங்கிலாந்து தேசத்தின் அரசியல்.

இங்கிலாந்து ராஜ்யமானது ஒரு அரசனும், ஹவுஸ் ஆப் லார்ட்ஸ் என்னும்பிரபுக்கள் சபை யும், ஹவுஸ் ஆப் காமன்ஸ் என்னும் ஜனப் பிரதிநிதிகள் சபையும் கூடிய பார்லிமெண்டு என்னும் மந்திராலோசனைச் சபையாரும் ஒன்று சேர்ந்து அவர்களால் ஆட்சி செய்யப் பட்டு வருகின்றது. இந்தக்காரணத்தினால் அந்த ராஜ்யம் ஒரே அரசனால் மனம்போன படி ஆளப்படுகிறது அல்ல; பிரபுக்கள் கூடி ஆளுகிற தேசமும் அல்ல; குடியரசு நாடும் அல்ல. ஆனால் இந்த மூன்று வித துரைத் தனமும் ஒருமிக்க அமைந்த நாடேயாகும். இந்த மாதிரியான அதிகாரத்தொகுதியினாலேதான் அந்த ராஜ்யம் பெரும்புகழும் வலிமையும் பெற்றிருக்கிறது. அந்த தேசத்திலுள்ள நானாவித வகுப்புப் பிரஜைகளுக்கும் பிரதிநிதிகளும், அந்த நாட்டுக்கு உரித்தான நன்மைகள் யாவையும் எடுத்துப் பேசுகிறவர்களும் அந்த அரசாட்சியில் ஒன்று கூடியிருக்கிறார்கள். நம்முடைய இந்தியாவிலுள்ள ஜமீன்தார்களுக்கு ஒப்பான மிகுந்த பூஸ்திதியுள்ள அந்த நாட்டுப்பிரபுக்களின் செல்வாக்கு ஹவுஸ் ஆப் லார்ட்ஸ் என்னும் சங்கத்தில் ஓங்குகிறது. மத்தியதர வகுப்பைச் சேர்ந்தவர்களும், நாட்டுக்குச் செல்வம் விளைவிக்கும் பொருட்டு அவர்களுடன் சேர்ந்து உழைக்கிற தொழிலாளி வகுப்பைச் சேர்ந்தவர்களும், ஆகிய இவர்களின் செல்வாக்கு ஹவுஸ் ஆப் காமன்ஸ் என்னும் சங்கத்திலேயே ஓங்குகிறது. பரம்பரையாய்த் தொன்றுதொட்டுவரும் சகல அதிகாரத்தின் மகிமையும் அரசர் அவர்களிடத்தில் அமைந்து விளங்குகிறது.

மேலே சொல்லிய இரண்டு சபைகளின் முதன்மையான காரியம் என்ன வென்றால்:— சட்டங்கள் ஏற்படுத்துவதும், தீர்வை விதிப்பதுமேயாம். சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம் அரசனுடையதானாலும் அது பேருக்குமாத்திரமே; வாஸ்தவத்தில் அது அரசன் பேரை வைத்து மந்திரிகளால் நடத்தப்படுகிறது. அந்த மந்திரிகள் யார் என்றால், பார்லிமெண்டு சபையாருள் தேர்ந்து எடுக்கப்பட்ட சில ஆலோசனைத்தலைவர்களாம். ராஜாங்க விஷயங்கள் முழுவதுக்கும் மந்திரிகளே பார்லிமெண்டு சபையாருக்கு உத்தரவாதிகள். அவர்களுக்கு இந்த மந்திரிகளிடத்தில் நம்பிக்கை குறைவுபட்டால், அந்த சமயத்தில் அரசன் வேறு மந்திரிகளை நியமித்தல் வேண்டும். பார்லிமெண்டு சபையே அதிகாரத்தில் மேன்மை பெற்றது. அந்த ராஜ்யத்து மகுடம் மாத்திரம் வம்ச பாரம்பரையாகவே வருவதாம். ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும் அதைத்தரிக்கலாம். ஆனால் அவர்கள் சர்ச்சு ஆப் இங்கிலாந்தைச் சேர்ந்த ப்ராடெஸ்டெண்டு என்னும் மதஸ்தராக இருக்கவேண்டும். சண்டையாவது சமாதானமாவது செய்வது அரசனுடையதே. அந்தமாதிரியே குற்றவாளியென்று தீர்மானித்து சிட்சை பெற்றவனை மன்னிக்கவும், பார்லிமெண்டு மகா சபையைச் சேர்க்கவும், சொற்பகாலம் நிறுத்திவைக்கவும், கலைத்துவிடவும், நாணயங்கள் முத்திரையிட்டு வழங்கவும், ஒருவருக்கு பட்டங்கள் கொடுக்கவும் வேண்டிய அதிகாரமும் ராஜனுடையதேயாம். புதிதாக சட்டங்கள் ஏற்படுத்தினால் அவைகளுக்கும் அரசன் சம்மதம் அவசியம். அரசனுக்கு உரிமையானவைகள் யாவும் முன் சொன்னபடி மந்திரிகளின் ஆலோசனையை அனுசரித்து அரசனாலாவது அல்லது அரசனுக்குப் பிரதிநிதியாய் அமைச்சர்களாலாவது நிறைவேற்றப்படுகின்றன.

வகையில் பயிர் முளைக்காமல் கெட்டுப்போய்க் காலி இடம் அதிகமாய்க் கிடக்கிறதென்றும் சொல்லுகிறார்கள். அனேகமாய்ச் சாதாரண வருஷங்களில் இரண்டுதரம் விதைத்த விதைகளும் முளைத்துப் பயிர் அடர்ந்து இளம்பயிரில் பார்க்கும்போது பயிர் கண்ணுக்கு அழகாயிருப்பதைப் பார்த்து அனேக கிருஷிகர் சந்தோஷப்படுகிறார்கள். "அடர்த்தியை அப்போது பார்; புழக்கத்தைப் பின்னாலே பார்" என்னும் பழமொழியைச் சற்றாவது கவனிக்காமல் பயிரை அடர்த்தியாய் விட்டுவிடுகிறார்கள். விவசாய விஷயங்களில் அனுபோகமுள்ள யாராவது பயிரைக் கொஞ்சம் கலைத்து விட்டால் அது நன்றாய்க் காய்த்து வெடிக்குமென்று சொன்னால், கிருஷிகர் "அட படுபாவி! நான் கலைக்கவே மாட்டேன், பிள்ளையை வளர்த்ததுபோல் வளர்த்து இப்போது பயிரைப் பிடுங்கச்சொல்லுகிறாயே! நீ என்ன பாவத்தில் போகமாட்டாய்!!" என்று சொல்லுகிறார்கள். இது தப்பு. ஏனென்றால் மேல்சொன்னபடி இரண்டுதரம் விதைத்த பயிர்களில்கூட அனே வருஷங்களில் ஜாஸ்தி மழையினாலோ, அல்லது மழையில்லாமையினாலோ, அல்லது பூச்சி புழுக்களின் கெடுதிகளினாலோ, பயிர் சரியாய் முளைக்காமல் கொஞ்சமாய் செடிகள் முளைக்கின்றன. அப்பால் காலியிடங்களில் விதைக்கும் விதைகள் சரியானபடி முளைத்து ஓங்குவதில்லை. முன் கூட்டியே கலக்க விதைத்த செடிகள் நன்றாய்க் கிளைத்து வீரியமாய் வளர்ந்து, காய்ந்து, சுளைகள் வெடித்து அதிகமாய்ப் பலன் தந்திருக்கிறதை ஒவ்வொரு கிருஷிகரும் ஒப்புக் கொள்ளுவார்கள். இது அவர்களுக்குத் தெரிந்திருந்தும் செடிகளைப் பிடுங்கி எறிந்தால் பாவமென்றுங் களைவெட்டும்போது அவைகள் தற்செயலாய் எடுபட்டுப் போனால் போகட்டுமென்றும் சொல்லுகிறார்கள். இந்தப்பயிர் கலைத்தல் சரியான காலத்தில் செய்யாமல் களைவெட்டும்வரை பயிர் நெருங்கியிருக்க விட்டுவைத்திருந்தால் அப்படி நெருங்கியிருக்கும் செடிகள் எல்லாம் நிலத்தின் மேலுள்ள ஈரப்பதத்தை வெகு சீக்கிரத்தில் கிரகித்து ஆவியாய் போக்கிவிடும். அதனால் குறிப்பிட்ட காலத்துக்கு முன்கூட்டியே பயிர் காய்த்து வெடித்து உலர்ந்துவிடும். இதனால் செடிகளின் வலிமை குறைந்து மாசூல் குறைவது மல்லாமல், பயிர் குறுகி கட்டை இழையுள்ள கேவலமான பருத்தியைக் கொடுக்கும். பின்மழைகள் சரியாய் பெய்தால் எல்லாச் செடிகளும் செழித்து வளர்ந்து அதிகமான மாசூலைத் தருமென்றும், சிலர் சொல்லுகிறார்கள். பயிர் கலைத்தல் பாவமென்று நினைக்கும் ஜில்லாக்களில் சோளம், கம்புப் பயிர்கள் சாகுபடி செய்யும் போது மாத்திரம், அவைகள் சுமார் இரண்டு அடி உயரம் வளரும் போது, ஒவ்வொரு செடிக்குச் சுற்றிலும் போதுமான இடமிருக்கவேண்டுமென்று உத்தேசித்துப் பயிர் வளர்ந்து வரும்போது அப்போதைக்கப்போது சிறிதாயிருக்கும் சோளச்செடிகளைப் பிடுங்கி அவர்கள் கால்நடைகளுக்குத் தீவனமாக உபயோகப் படுத்துகிறார்கள். இப்படிச் சோளப்பயிர், கம்புப்பயிர் பிடுங்குவது பாவமில்லை என்று நினைக்கும் கிருஷிகர் இந்தப் பருத்திப்பயிரைப் பிடுங்குவது மாத்திரம் பாவம் என்று நினைப்பது தப்பான காரியம்.

திருநெல்வேலி ஜில்லாவில் முக்கியமாய்ப் பருத்திப்பயிர் கார்த்திகை மாதம் 10உக்குள் விதைப்பாயிருக்கும். அப்படிப்பட்ட பயிர்களைக் கலைக்க இது நல்ல தருணம். [illegible]ணையில் விதைத்திருப்பவர்களுக்கு இதுதான் தருணம். ஆகையால் பருத்தி சாகுபடி செய்திருக்கும் ஒவ்வொருவரும் காலதாமதமின்றி சரியானபடி பருத்தியைக் கலைப்பித்து பலனடைவார்களென்று நம்புகிறோம்.

கிருஷிகன்.



# AGRICULTURAL NOTES.
# விவஸாயக் குறிப்புகள்.

JAGGERY FOR CATTLE.

**ஆடுமாடுகளுக்கு வெல்லம்.**—மாடு, குதிரை இவைகளுக்கு வெல்லம் கொடுத்தால் வயிற்றில் உண்டாகும் வாயு, மலச்சிக்கல், முதலிய தொந்திரவுகளை குறைக்கும். 100 ராத்தல் கனமுள்ள மிருகத்திற்கு 2 ராத்தல் வெல்லம் போதுமானது. இது ஜீரணத்தை விருத்திசெய்கிறதாம். பனை வெல்லத்தையும், வெல்லப்பாகையும் உபயோகிக்கலாம்.

COCOANUT PALMS.

**தென்னை மரங்கள்.**—தென்னைமரங்கள் ஸமுத்திரக்கரையோரங்களில் நன்றாய்வளருகின்றன. இவைகளுக்குக் கொஞ்சம் உப்புஸம்பந்தமான பூமிநல்லது. ஆகையால்தான் இப்படிக்கில்லாத இடங்களில் தென்னம் பிள்ளை வைக்க உத்தேசிக்கும் குழிகளில் கொஞ்சம் உப்பை எருவோடு கலந்து போடுகிறார்கள்.

PLANTAIN TREES.

**வாழை மரங்கள்.**—ஜாஸ்தி காற்றடிக்கும் இடத்தைவிட காற்று அடைப்பான இடங்களில் வாழை நன்றாய் வளரும்.

AN EFFECTIVE MANURE.

**ஒரு நல்ல எரு.**—இப்பொழுது மணிலாக்கொட்டையின் தாள்களையும் இலைகளையும் ஊர் ஆடுமாடுகள் தின்று வீணாக்குகின்றன. அப்படிக்கு விடாமல் இவைகளை நெல்பயிருக்கு எருவாக உபயோகிப்பது ரொம்ப நல்லது என்று தெரியவருகிறது.

SINGLE PLANTING.

**ஒற்றை அலகு நடுதல்.**—திருநெல்வேலி ஜில்லாவிலும் தஞ்சாவூர் ஜில்லாவில் ஆற்றுப்பாய்ச்சல் உள்ள இடங்களிலும் ஒற்றை அலகு நடுவதற்கு ஆரம்பித்துவிட்டதாயும் அப்படி நடுவதினால் பயிர் நன்றாய் விளைகிறதாயும் எச். ஸி. சாம்ப்ஸன் துரையவர்கள் சொல்லுகிறார். ஆனால் இரண்டு அலகுகள் நடுவதினால் பயிர்கள் நன்றாய் விளைகிறதென்று சிலர் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். தஞ்சாவூர் தாலூக்காவில் கோவிலடி கிராமத்திலுள்ள குடிகள் பாங்கு நெல்லை இரண்டு அலகாக நட்டு ஒற்றையைக் காட்டிலும் ஜாஸ்தி மகசூல்அடைந்திருப்பதாகத் திவான் பகதூர் ஆர். ரகுநாதராயர் அவர்கள் எழுதியிருக்கிறார்.

FERTILITY OF SOILS.

**நிலங்களின் வளப்பம்.**—பர்மாவில், விவஸாய ரஸாயன சாஸ்திரியாகிய எப். ஜே. வார்த் என்பவரும் ஸெட்டில்மெண்டு ஆபிஸராகிய டப்ள்யூ. ஜெ. கீத் என்பவருமாகச் சேர்ந்து ரஸாயன சாஸ்திர முறைகளல்லாமல் வேறு ஸாதாரண வழிகளாய் நிலங்களின் வளப்பத்தைக் கண்டுபிடிக்க முடியாதா என்பதைப் பரிசோதித்து வருகிறார்கள்.

MANURE FOR POTATOES.

**உருளைக்கிழங்குக்கு எரு.**—வடக்கே ஐக்கியமாகாணங்களிலுள்ள கான்பூர் பட்டணத்து விவசாயப் பண்ணையில் செய்து வந்த சோதனைகளால் வேப்பம் பிண்ணாக்கும் கழிவடைப் பருத்தியும் உருளைக் கிழங்குக்கு நல்ல எரு என்பதாக ஏற்படுகிறது. இந்த இரண்டு எருக்களில் வேப்பம் பிண்ணாக்கு சிலாக்கியமாம்.

THE AGRICULTURAL CALENDAR.

**விவஸாயப் பஞ்சாங்கம்.**—நம்முடைய ராஜதானி விவஸாய இலாகாவிலிருந்து 1910-ம் வருஷத்து விவஸாயப் பஞ்சாங்கம் என்பதாக ஒரு புஸ்தகம் நம்முடைய பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தப் பஞ்சாங்கம் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு ஆகிய மூன்று பாஷைகளிலும் பிரசுரமாகியிருக்கிறது. இதில் விவஸாயிகளுக்கு உபயோகமான பல வியாஸங்களிருப்பதோடு, திதி, வாரம், நக்ஷத்திரம் முதலிய விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. இந்தப் பஞ்சாங்கம் வேண்டியவர்கள் சென்னப்பட்டணத்தில் கவர்ன்மெண்டு அச்சாபீஸ் ஸூபரின்டெண்டுக்கும், திருச்சினாப்பள்ளியில் விவஸாய டிப்டி டைரெக்டருக்கும் எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

AGRICULTURAL MATTERS.

**விவசாய விஷயங்கள்.**—தமிழ் ஜில்லாக்களிலுள்ளவர்களுக்கு விவசாய விஷயமாய் ஏதாவது சமாசாரமோ உதவியோ வேண்டுமானால் திருச்சினாப்பள்ளியில் உள்ள விவசாயஇலாகா டிப்டி டைரெக்டருக்காவது அல்லது கோயம்புத்தூர் விவசாய காலேஜ் தலைமை உபாத்தியாயருக்காவது எழுதினால் அவர்கள் ஒரு செலவும் இல்லாமல் வேண்டிய உதவிகளைச் செய்வார்கள். பதிலுக்குத் தபால் ஸ்டாம்பு ஒன்றும் அனுப்பவேண்டியதில்லை.

# TRADE NOTES.
# வியாபாரக் குறிப்புகள்.

COMMERCIAL EDUCATION.

**வியாபாரப்படிப்பு.**—இனிமேல் அனேகம் ஸெகண்டெரிப் பள்ளிக்கூடங்களில் வியாபாரத்தைப்பற்றிய பாடங்களும் சொல்லிக் கொடுக்கவேண்டியதாக ஏற்படும். அதாவது, எந்தெந்த தேசத்தில் என்னென்ன வியாபாரப் பொருள்கள் அகப்படும், அவைகள் எங்கெங்கே அனுப்பப்படுகின்றன, கணக்கு எப்படி வைக்கிறது, பட்டிகள் தயாரிக்கிறது எப்படி என்ற பலவிஷயங்களும் பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்க வேண்டியதாயிருக்கும். இதற்குத்தகுந்த உபாத்தியாயர்கள் தேவை. அவர்கள் திடீரென்று வேண்டியபொழுது கிடைக்கமாட்டார்கள். ஆகையால் மேலேசொல்லிய பாடங்கள் ஏற்படுவதற்கு முன்னமேயே அவைகளைப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கக்கூடிய உபாத்தியாயர்களைத் தயாரிக்கவேண்டுமென்று எண்ணி தகுந்த ஏற்பாடுகள் ஆகிவிட்டன. கள்ளிக்கோட்டையில் வியாபார விஷயமான படிப்புகளைச் சொல்லிக்கொடுக்க ஒரு பள்ளிக்கூடம் வெகுகாலமாக நடந்து வருகிறது. அந்தப் பள்ளிக்கூடத்தில் 12 பீ.ஏ. தேறினவர்களையும், 12 எப். ஏ. தேறினவர்களையும், ஆகமொத்தம் 24 பேர்களுக்குமேல்படாமல் சிலபேர்களைப் பொறுக்கி எடுத்து வருகிற ஜனவரி மாஸம் முதல் ஒரு வருஷத்திற்கு வியாபாரப்படிப்பு சொல்லிக்கொடுத்து அவர்களை உபாத்தியாயர் வேலைக்குத்தயார் செய்யப் போகிறார்கள். பீ. ஏ. தேரினவர்களுக்கு மாஸம் ஒன்றுக்கு 25 ரூபாய் விழுக்காடும் எப். ஏ. தேரினவர்களுக்கு மாஸம் ஒன்றுக்கு 20 ரூபாய் விழுக்காடும் 'ஸ்காலர்ஷிப்' அதாவது உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும். மேலே சொல்லிய ஏற்பாடுகளால் கவர்ன்மெண்டுக்கு வருஷமொன்றுக்கு 7775 ரூபாய் செலவாகும். ஜர்மனி, அமெரிக்கா தேசத்து ஐக்கிய நாடுகள் இன்னும்சில தேசங்களில் வியாபாரப்படிப்புக்காக ஏராளமாய்ப் பணத்தைச் செலவிட்டு வருகிறார்கள். சொல்பமானாலும் நம்முடைய கவர்ன்மெண்டார் ஏதோ கொஞ்சம் செலவிட ஆரம்பித்ததற்காக வியாபாரத்தில் சிரத்தையுடையவர்களெல்லாரும் வந்தனத்தைச் செலுத்தவேணும்,

PLANTAINS.

**வாழை.**—ஸங்கராந்தி முதலான சமயங்களில் சில வேளைகளில் வாழைக்காயும் வாழைப்பழமும் ஏராளமாய் விற்பனைக்குவந்து விற்கமுடியாமல் காய்கள் பழுத்தும் பழங்கள் அழுகியும் போவதை நாம் பார்த்திருக்கிறோம். இப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களில் வியாபாரிகளுக்கு வெகு நஷ்டம் நேரிடுகிறது. இதரதேசத்து வாழைத்தோட்டக்காரர்கள் இப்படி நஷ்டம் வருமென்று தோன்றினால் நல்லகாய்களை மட்டில் விற்றுவிட்டு பாக்கி சின்னத்தார்களையும் அழுகிப்போகும் படியாயிருக்கும் பழங்களையும் பக்குவப்படுத்தி விற்று விடுகிறார்கள். காயாயிருந்தால் அதைப்பிளந்து காயப்போட்டு பொடியாய்ப்பண்ணி விற்று விடுகிறார்கள். பழுத்துப்போனால் தோலியை உறித்து காயப்போட்டு உலர்த்தி ஒரு டெஜன் இரண்டு டெஜனாக கடிதாசு அட்டைப்பெட்டிகளில் போட்டு நன்றாய் 'பாக்' செய்து நல்ல விலைக்கு விற்றுவிடுகிறார்கள். பழங்கள் தோலோடு 220 ராத்தல் நிறை இருந்தால் தோலி உறித்த பிறகு 143 ராத்தல்தான் இருக்குமாம். இவைகளை உலர்த்தினால் 42 ராத்தலாகிவிடுமாம். தூசிதும்புபடாமல் உலர்த்த யந்திரங்களும் ஏற்பட்டிருக்கின்றன. வாழைப்பழ வற்றல் வெகு நாளைக்கு நிற்குமாம். அதை சீமையில் பக்ஷணக்கடைக்காரர்கள் வாங்கி வைத்துக் கொள்ளுகிறார்களாம்.

S. I. R. CONTRACT.

**தென்னிந்தியா ரயில்வே ஒப்பந்தம்.**—போன அக்டோபர் மாஸத்து ஸஞ்சிகையில் இந்தியா ரெயில்வே பரிபாலனம் என்னும் தலைப்பெயருள்ள வியாசத்தில் ரெயில்கள் அனேகம் கம்பெனிகளால் போடப்பட்டபோதிலும் இப்பொழுது அவைகளெல்லாம் ஸர்க்காருக்குச் சொந்தமாகி விட்டன என்றும், ஆனாலும் அனேக இருப்புப்பாதைகளை இன்னும் கம்பெனியாரே ஸர்க்காரிடம் குத்தகைக்கு வாங்கி ஸர்க்கார்த் தணிக்கைக்கு உள்பட்டு பரிபாலித்து வருகிறார்களென்றும் சொன்னோம். தென்னிந்தியா ரெயில்வே கம்பெனி டைரெக்டர்களுக்கும் இந்தியா காரியதரிசிக்கும் சமீபத்தில் ஒருஒப்பந்தம் ஆகியிருப்பதாகத் தெரியவருகிறது. ஆனால் அதைப்பற்றிய விவரங்கள் நன்றாய்த் தெரியவில்லை. ஒப்பந்தம் 50 வருஷத்துக்கு என்பது மட்டும் தெரிகிறது.



# INDUSTRIAL NOTES.
# கைத்தொழில் குறிப்புகள்.

THE STRAW HAT.

**வைக்கோல் தொப்பி.**--வைக்கோல்களால் செய்த தொப்பிகளை சில வெள்ளைக்காரர்கள் போட்டுக்கொள்வதை அனேகம்பேர்கள் பார்த்திருக்கலாம். ஐரோப்பாவில் இடலி தேசத்தில் இப்படிப்பட்ட தொப்பிகள் செய்யப்படுகின்றன. தொப்பிகளுக்காக வேண்டிய வைக்கோலைத்தனியாய்ப் பயிர் செய்து வருகிறார்களாம். கோதுமையை நெருக்கமாய் விதைக்கிறார்கள். இப்படி விதைத்தால் உண்டாகும் பயிரானது தகுந்த ஆகாரமில்லாமல் சிம்பி மெல்லிய தண்டுள்ளதாயும் நுனியில் கடைசிக் கணுவுக்கு மேலுள்ள வைக்கோல் லேசாயும் நீளமாயும் வருகிறதாம். கதிர் பிடித்ததும் பிடிக்காததுமாய் இருக்கும் பொழுது பயிரைப் பிடுங்கிவிடுகிறார்கள். ஏனென்றால் அதற்குமேல் பயிரை நிறுத்தி வைத்தால் வைக்கோல் தொட்டால் முறிந்துபோகுமாம். சுமார் 60 அரிகளைச்சேர்த்து ஒரு கட்டுக்கட்டி அந்தக்கட்டை குதிருக்குள் கொஞ்சநாளைக்கு வைத்திருக்கிறார்கள். பிறகு அதை எடுத்து பனியில்காய்ந்து வெயிலில் உலர்ந்து நிறம் மாரும்படி உலர்த்துகிறார்கள். மறுபடி அந்த வைக்கோலை வெண்மைப்படுத்தி சின்னச்சின்ன கட்டுகளாக எடுத்து வெட்டி தாவாரியாய்ப் பிரித்து விடுகிறார்கள். கடைசியாக நுனிக்கணுவுக்குமேலே வெட்டி அறுபது அறுபது வைக்கோலாக ஒவ்வொரு கட்டாய்க்கட்டி வேலைசெய்து பிழைக்கும் ஸ்த்ரீகள் வீட்டிற்கு இத்தனையாகக் கொண்டுபோய்ப் போட்டு விடுகிறார்களாம்.

PUNALORE PAPER MILL.

**புனலூர் காகித சாலை.**—திருவாங்கூர் ஸமஸ்தானத்தைச்சேர்ந்த பட்டணாபுரம் தாலூகா புனலூரில் திருவாங்கூர் ஸமஸ்தான உதவியோடு 1884-ம் வருஷத்தில் ஒரு காகிதசாலை ஏற்படுத்தப்பட்டது. ஸமஸ்தான உதவியிருந்தும் ஏதோகாரணத்தால் அது முன்னுக்கு வரவில்லை. அந்தச் சாலையை ஸமஸ்தானத்தாரே வாங்கி 1903-ம் வருஷத்தில் பம்பாய் வர்த்தகர்களாகிய வல்லிபாய் காதர்பாய் கம்பெனியாருக்கு விற்றார்கள். அவர்களும் ஒரு வேலையும் செய்யாமல் ஒரு வருஷத்துக்கு முன்னால் சில நாட்டுக்கோட்டை செட்டிகளுக்கு விற்றார்கள். இந்த செட்டிகள் இந்த சாலைக்கு "லக்ஷ்மி காகித சாலை" என்று பேர் வைத்து, காகிதம் செய்வதில் இவ்விடத்து அனுபோகமும் ஐரோப்பா அனுபோகமும் உள்ள ஒரு நிபுணரை தருவித்திருக்கிறார்களாம். இந்தக் கம்பெனியாருக்கு காகிதம் செய்வதற்காக கந்தைத்துணிகள், கழிபட்ட காகிதங்கள், கோணிச்சாக்குகள் நாணல்கள் முதலியவைகள் தேவையாம்.

JAIL MANUFACTURES.

**ஜெயில்களில் செய்யப்படும் ஸாமான்கள்.**—ஜெயிலுக்குப் போகிறவர்களிடத்திலிருந்து கவர்ன்மெண்டார் பூராவேலை வாங்குவது எல்லாருக்குந் தெரிந்த விஷயம். தற்காலத்தில் குற்றவாளிகளைக் கொண்டு கவர்ன்மெண்டாரவர்கள் முக்கியமாய் ராஜாங்க விஷயமாய் வேண்டிய சாமான்களை மட்டும் செய்து வருகிறார்கள். குற்றவாளிகளைக் கொண்டு கைத்தொழில்கள் விஷயமாய் பரிசோதனைகள் செய்யக்கூடாதா என்று சமீபத்தில் கூடிய சட்ட நிரூபண சபையில் ஒரு கேள்வி பிறந்தது. ஜெயிலுக்குப் போகிறவர்களில் அநேகம்பேர்கள் விவசாயத் தொழில் மட்டும் செய்தவர்களாயிருக்கிறார்களாம். அவர்களைக் கொண்டு கைத்தொழில்களைச் செய்விப்பது கஷ்டமாயிருக்கிறதாம்.

POULTRY BREEDING IN RAMPUR STATE.

**ராம்பூர் ஸமஸ்தானத்தில் கோழி வளர்த்தல்.**—ஐக்கிய மாகாண கவர்ன்மெண்டாரின் பண உதவி பெற்று கொஞ்சகாலத்துக்கு முன்னால் ராம்பூர் ஸமஸ்த்தானத்தில் ஆரம்பிக்கப்பட்ட கோழி வளர்க்கும் தொழிலானது விருந்திபடைந்து வருவதாகத் தெரியவருகிறது. முதல் வருஷத்திலேயே ஜனங்களுக்கு வேண்டிய அளவு, முட்டைகளையும், வளர்ப்பதற்குத் தகுந்த உயர்ந்த ஜாதிக் கோழிகளையும் கொடுக்க முடியாமல் அவ்வளவு கிராக்கி ஏற்பட்டு விட்டது. இந்தக்காரணத்தினாலேயே ஜனங்கள் இந்தத்தொழிலில் கவனம் செலுத்தி கோழி வளர்ப்பதில் அதிக ஆவலுள்ளவர்களாயிருப்பதாகத்தெரியவருகிறது. இது விஷயத்தில் விவசாய இலாகா அதிகாரிகள் வேண்டிய ஆலோசனையும் ஒத்தாசையும் கொடுத்துவருகிறார்கள்.

## ECONOMICS.

## பொருளாதாரம்.

---

THE PROGRESS OF 50 YEARS.

**50 வருஷத்து அபிவிருத்தி.**—இந்தியாவில் இங்கிலீஷ் ராஜாங்கம் ஏற்பட்டு வேரூன்றி 50 வருஷமாகிறது என்று சொல்லலாம். இந்த 50 வருஷத்தில் நம்முடைய தேசம் எவ்வளவு தூரம் சீர்ப்பட்டிருக்கிறதென்பதைப் பற்றி இந்தியா காரியதரிசி ஒரு புஸ்தகம் பிரசுரித்திருக்கிறார். முதல் 30 வருஷத்தில் ஆப்கானிஸ்தான் தேசத்தோடும், பர்மா தேசத்தோடும் பெரிய சண்டைகள் போடவேண்டியதாயிருந்ததோடுகூட இன்னும் அநேக சில்லரைச் சண்டைகளும் போடவேண்டியிருந்தது. போன 20 வருஷத்தில் 1904-ம் வருஷத்தில் டிபெட் என்னும் தேசத்தோடு சண்டைபோட்டதைத் தவிர வேறுசண்டை என்பதே இல்லை. தேசம்முழுமையும் அமைதியாகவேயிருந்து வந்திருக்கிறது. முன் காலங்களில்போல் பஞ்சங்களும் அதிகமாக நேரிடவில்லை. முதல் முப்பது வருஷத்தில் 1860, 1866, 1869, 1874, 1877—78 ஆகிய இந்த ஐந்து வருஷங்களிலும் பெரிய பஞ்சங்கள் நேரிட்டன. போன இருபது வருஷத்தில் 1896-97, 1907 இந்த இரண்டு வருஷங்களில் மட்டும் பஞ்சம் இருந்தது. முதல் முதல் 1861-ம் வருஷத்தில் சட்ட நிரூபணசபை ஏற்படுத்தப்பட்டது. இதை 1892-ம் வருஷத்தில் சீர்திருத்தி, ஜனங்களைக் கொண்டு பிரதிநிதிகளை ஏற்படுத்தச் சொன்னார்கள். நாளது 1909-ம் வருஷத்தில் சட்ட நிரூபண சபையில் ஜனப்பிரதிநிதிகளை ஜாஸ்திப் படுத்தி ஜனங்களுக்கு அரசாட்சியில் ஏதோ செல்வாக்கு உள்ளது போல் செய்திருக்கிறார்கள். போன முப்பது வருஷத்தில் ஸர்க்காருக்கு செலவை விட வரும்படி ஜாஸ்தி. ஒன்பது வருஷத்தில் மட்டும் செலவு ஜாஸ்தியும் வரும்படி கட்டையுமாகப் போயிற்று. 1856-57-ம் வருஷத்தில் ஸர்க்காருக்குக் கிடைத்த வரும்படி 31 கோடியே 70 லக்ஷம் ரூபாய். 1906-07-ம் வருஷத்தில் கிடைத்த வரும்படி 108 கோடியே 40 லக்ஷம் ரூபாய். ஐம்பது வருஷத்திற்கு முன் ஸர்க்காருக்கு 31 கோடியே 80 லக்ஷம் ரூபாய் செலவாயிற்று. 1906-07-ம் வருஷத்தில் செலவான தொகை 107 கோடியே 20 லக்ஷம் ரூபாய்.

1857-ம் வருஷத்தில் இந்தியா முழுவதிலும் 300 மைலுக்குத் தான் ரெயில் போடப்பட்டிருந்தது. அதில் 20 லக்ஷம் பேர்கள் பிரயாணம் செய்தார்கள். அதில் அனுப்பப்பட்ட சாமான்களின் மொத்தம் சுமார் $11\frac{1}{2}$ லக்ஷம் பாரமாகும். நாளது 1909-ம் வருஷம் ஏப்பிரல் மாஸம் முதல் தேதி வரையில் போடப்பட்ட இருப்புப்பாதையின் அளவு 30,983 மைலாகும். இதில் 33 கோடி ஜனங்கள் பிரயாணஞ்செய்தார்கள். 28 கோடியே 80 லக்ஷம் பாரம் ஸாமான்கள் அனுப்பப்பட்டன. இந்த ரெயில் சௌகரியத்தால் விவஸாயிகள், வியாபாரிகள், பிரயாணிகள் ஆகிய இவர்கள் எல்லாருக்கும் வருஷாவருஷம் தற்காலத்தில் 150 கோடி ரூபாய் லாபமாகிறது. அதாவது மேலே சொல்லிய 33 கோடி ஜனங்களும் ரெயிலில் ஏறாமல் கால் நடையாய் நடந்து ஸாமான்களையும் வண்டிகளிலும் மாடுகளின் மேலும் கொண்டு போனால் 150 கோடி ரூபாய் செலவாகும். கொஞ்சகாலத்துக்கு முன்வரையில் ரெயில் கம்பெனிகளுக்கு போட்ட பணத்துக்கு 5 வட்டிக்குக் குறைந்தால் வட்டி கட்டிக்கொடுத்து அதற்குமேல் லாபம் வந்தால் பாதி லாபமும் கொடுக்கவேண்டியிருந்தது. இப்பொழுது ரெயில்களெல்லாவற்றையும் கவர்ன்மெண்டாரே வாங்கி விட்டார்கள். அதனால் போன நாலு வருஷத்தில் கிட்டத்தட்ட 3 கோடி ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது. இன்னும் வரவர லாபம் அதிகமாகும். 1858-ம் வருஷத்தில் இதர தேசங்களுக்கு ஏற்றுமதியான சரக்குகளின் பெறுமானம் $382\frac{1}{2}$ லக்ஷம் ரூபாயாகும். 1907—08ம் வருஷத்து ஏற்றுமதியின் பெறுமானம் $1732\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய். இதே மாதிரியாக இறக்குமதியாகும் ஸாமான்களின் பெறுமானம் $213\frac{3}{4}$ லக்ஷம் ரூபாயிலிருந்து $1297\frac{1}{2}$ லக்ஷம் ரூபாயாயிருக்கிறது. தவிர, பலவித கைத்தொழில்களும் ஏற்பட்டிருக்கின்றன.

---



## THE TEXTILE INDUSTRY.

## நெசவுத் தொழில்.

---

SAMPLES.

**மாதிரிகள்.**—உலகத்தில் முக்கியமான தேசங்கள் எல்லாவற்றிலும் இங்கிலீஷ் ராஜாங்கப்பிரதிநிதிகள் இருக்கிறார்கள். இவர்களுடைய வேலைகளில் ஒன்று என்னவென்றால் இங்கிலீஷ்காரர்கள் வியாபாரத் தைவிருத்தி செய்யத்தக்க வழிகளையெல்லாம் தேடு வது. அதற்காக அங்கங்கே இங்கிலீஷ்காரர்கள் சரக்குகளுக்குப் போட்டியாக ஏற்படும் சரக்குகளைப் பற்றியவிஷயங்களை யெல்லாம் தெரிவிப்பதோடுகூட போட்டிச் சரக்குகளின் மாதிரிகளும் வாங்கிஅனுப்ப வேணும். இப்படிக்கு ஆசியா கண்டத்தில் பல தே சங்களில் போட்டித் துணி, கம்பளி முதலியச் சரக் குகள் வாங்கப்பட்டு கல்கத்தாவிலுள்ள வியாபார ஸமாசார ஆபீஸுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இந்த மாதிரிகளை "டைரெக்டர் ஆப் கம்மர்ஷியல் இன்டெலிஜன்ஸ்" என்ற வியாபார ஸமாசார ஆபீஸ்த்தலைவர் இந்தியாவிலுள்ள வர்த்தக சங்க ளுக்கு அனுப்புவது வழக்கம். இந்த சங்கத்தார்கள் பார்த்து விட்டு அவைகளை மறுபடியும் வியாபார ஸமாசார ஆபீஸுக்கு அனுப்பிவிடுவார்கள். வர்த்தக சங்கத்தைச் சேர்ந்தவர்களெல்லாம் துணிகள், கம் பளித்துணிகள் முதலியவைகளை விற்கிறவர்களே ஒழிய அவைகளைச் செய்கிறவர்களல்ல. ஆகையால் அவர்கள் செய்யக்கூடியதெல்லாம் புது மாதிரிகளை த்தங்களுக்கு சரக்கு செய்து அனுப்புகிறவர்களைக் கொண்டுச் செய்யச் சொல்லவேண்டியதே. ஆகவே, மாதிரிகளைப்பார்க்க வேண்டியவர்கள் சீமையில் சரக்குகள் செய்கிறவர்கள். ஆகையால் கிடைக்கும் மாதிரிகளை எல்லாம் இந்தியாவிலுள்ள வியாபாரச் சங்கத்தார்கள் பார்த்தபிறகு சீமையில் அவைக ளைச் செய்யக்கூடியவர்களுக்கு அனுப்புவதாய் வியாபார ஸமாசார ஆபீஸ்த்தலைவர் தீர்மானித் திருப்பதாகத் தெரியவருகிறது.

DEARNESS OF COTTON.

**பருத்தியின் கிராக்கி.**—இங்கிலாந்தில் மாஞ்செஸ்டர் வர்த்தகர்களுக்கு வருகிறவருஷத்தில் பருத்தி மிகவும் குறைவாகத்தான் கிடைக்குமாம். ஏனென்றால் வருஷாவருஷம் ஈஜிப்ட் தேசத்திலிருந்து மாஞ்செஸ்டருக்கு ஏற்றுமதியாகும் பருத்தியில் இந்த வருஷம் 50,000 டன் குறையுமாம். அமெரிக்காவிலும் இந்த வருஷத்தில் பருத்தி சாகுபடி மிகவும் குறைவாம். மாஞ்செஸ்டர் இவைகளுக்கு ஈடாக்க இந்தியாவையே எதிர்பார்த்திருப்பதாகத் தெரிகின்றது.

CO-OPERATIVE WEAVING SOCIETIES.

**கூட்டுறவு நெசவுச் சங்கங்கள்.**—பம்பாய் ராஜதானியில் ஷோலாப்பூர், ரத்னகிரி, தார்வார், கெடக்கு இந்த பட்டணங்களிலெல்லாம் நெசவு வெகு ஜாஸ்தி. இவ்விடங்களிலுள்ள நெசவுகாரர்களெல்லாம் சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபித்து வேலை செய்யும்படி ஏற்பாடாயிருக்கிறது. அந்த ராஜதானியின் ஐக்கிய நாணயச்சங்கங்களின் ரிஜிஸ்திரார் அவர்கள் வேண்டிய உதவிகளைச் செய்வார்.

A GENEROUS COTTON MANUFACTURER.

**ஒரு உதார குணமுள்ள பருத்தித் தொழிலாளர்.**—இங்கிலாந்தில் லங்காஷைர் ஜில்லாவில் பிரெஸ்டன் என்னும் ஊரில் பெரிய பருத்தித் தொழிற் சாலைகளில் ஒன்றாகிய கால்வெர்ட் அண்டு ஸன்ஸ் என்னும் கம்பெனியைக் கடைசியாக விட்டுப்போகும் போது ஹென்றி கால்வெர்ட் என்பவர் அந்த தொழிற் சாலையில் வேலைசெய்யும் 3000 கூலியாட்களுக்கும் வெகுமதியாக 10,000 பவுன் கொடுத்தாரென்று தெரியவருகிறது.

COMBINATION AMONG SPINNERS.

**நூல் நூற்கிறவர்களில் ஐக்கியம்.**—நூலின் விலையை ஒருவருக்கொருவர் போட்டிபோட்டு குறைக்காமலிருப்பதற்காக இங்கிலாந்தில் நூல் நூற்கும் யந்திரசாலைகள் வைத்திருப்பவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு ஏற்பாடு செய்யப்போகிறார்களாம். இந்தக்கூட்டத்தில் சேர்ந்தவர்கள் ஒருவரும் சபையாரால் ஏற்படுத்தப்பட்ட விலைக்கு குறைந்து விற்கவில்லை என்பதை அறிவதற்காக சபையார் ஒரு கணக்கனை ஏற்படுத்தி அவனைக்கொண்டு விலை விகிதங்களைப் பரிசோதிப்பார்களாம்.

SREE RAM KRISHNA MILLS.

**ஸ்ரீராம் கிருஷ்ண மில்ஸ்.**—ஸ்ரீ ராம் கிருஷ்ண மில்ஸ் என்ற பெயருடன் ஒரு மில் ஆமதாபாத் என்ற இடத்தில் வங்காளிகளால் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிறது. அவர்கள் இந்த இடத்தில் அநேக சௌகரியங்களிருப்பதால் வங்காளத்தில் எவ்விடத்திலும் ஸ்தாபிக்காமல் இவ்விடத்தில் ஸ்தாபித்தார்கள். அவ்விடத்தில் இதைப்போல பல கம்பெனிகளிருக்கின்றன. மல்லுகள், வேஷ்டிகள் இன்னும் பல நெசவுப் பொருள்கள் நேர்த்தியாயிருப்பதால், விலை சரசமாய் போகிறதாம்.

## THE GROCERY TRADE.
## பலசரக்கு வியாபாரம்.

ASAFETIDA.

**பெருங்காயம்.**—இது நம்முடைய ராஜதானியில் அனேகம் வீடுகளில் சமையலில் உபயோகப்படுகிறது. ஆனல் சில பேர்களுக்கு இதன் வாசனை பிடிக்கவே பிடிக்காது. அதைப்பெருங்காய நாற்றம் என்று பழிப்பார்கள். அனேகம்பேர்கள் பெருங்காயம் 'கம்' என்று வாசனையடிக்கிறது என்று சொல்லுவார்கள். சில பேர்களுக்கு பெருங்காயம் பிடித்தபோதிலும், அது எருமை மாட்டுக்கு அரிப்புண்டானல் அது ஒருமரத்தில் உடம்பை உரைஞ்சுக் கொள்ளுகிறதென்றும், அப்படிச்செய்வதால் கழன்ற தோல்தான் பெருங்காயமென்றும் எண்ணங்கொண்டு அதை உபயோகிப்பதே இல்லை. சாமான்ய ஜனங்களுக்கு அனேக விஷயங்களிலுள்ள தப்பு அபிப்பிராயங்களில் இது ஒன்று. பெருங்காயம் ஒருவித செடியிலிருந்து உண்டாகிறது. இந்தச்செடி கீழ் பர்ஷியா தேசத்தில் தானகவே பயிர்செய்யாமல் வளருகிறது. இது இரண்டு அடி முதல் நாலு அடி வரையில் வளரும். இதன் வேரின் மேல்பாகத்தை குத்தினல் அதாவது காயப்படுத்தினல் அந்தக்காயத்திலிருந்து ஒருவித பிசின் வெளிப்படும். இந்த மாதிரி தினமுமோ அல்லது இரண்டு நாள் மூன்று நாளைக்கு ஒருதரமோ அந்த வேரைப் பிசின் ஒட்டிக்கொண்டிருக்கிறபடியே கொஞ்சங்கொஞ்சமாய் அறுத்துக்கொண்டே வரவேணும். கடைசியாய் பிசின் வராமல் அற்றுப்போன உடனே, பிசின் வேர் எல்லாவற்றையும் சேர்த்து எடுத்து ஒரு தோலில் மூட்டையாய்க் கட்டி விடுவார்கள். இதுதான் நாம் உபயோகிக்கிற பெருங்காயம். தோலில் கட்டி வருகிறபடியால்தான் பெருங்காயம் மாட்டின் தோலிலிருந்து உண்டாகிறதென்ற வதந்தி ஏற்பட்டிருக்கிறதென்று எண்ணவேண்டியிருக்கிறது.

DUST TEA.

**தூள்டீ.**—டீ சாப்பிடும் வழக்கம் ஏற்பட்டு கையில் பணமில்லாதவர்கள் "டஸ்ட் பௌடர்" முதலான சாமான்ய குறைச்சலான விலையுள்ள டீ தினுசுகளை வாங்கிச்சாப்பிடுவது வழக்கம். டீயை பல ரகங்களாகப்பிரித்து நல்ல இலைகளைப்பொறுக்கி எடுத்துவிட்டு பாக்கி இருக்கும் குப்பை முதலியவைகளை எல்லாம்சேர்த்து மலிவான விலைக்குவிற்று விடுவதுவழக்கம். இதைச்சிலபேர்கள் மொத்தமாகவாங்கி அதோடு கொஞ்சம் மணல் முதலியவைகளையும் சேர்த்து பாக்செய்து விற்று விடுவார்கள். டீயை வெந்நீரில் போட்டு கொஞ்சநேரம் வைத்திருந்து கஷாயத்தை வடிக்கட்டி சாப்பிடுவதால் மணல் கலந்திருப்பது அவ்வளவாகத்தெரியாது. ஆனலும் கையில் எடுத்துப் பார்த்தாலாவது அல்லது பூதக்கண்ணாடியைக் கொண்டு பார்த்தாலாவது மணல் கலந்த மோசம் நன்ருய்த்தெரியும். டீ, கண்ணுக்குத்தெரியாமல் 'பாகெட், பாகெட்டாக' விற்கப்படுவதால் உள்ளே என்ன விதமான சரக்கு இருக்கிறதென்று தெரியாமலே பேரை நம்பியே ஜனங்கள் வாங்கி விடுகிருர்கள். ஆகையால் மணல் கலந்திருப்பதைக் கண்டுபிடிக்க ஹேதுவே இல்லை.

TEA DUST IN CALCUTTA.

**கல்கத்தாவில் டீத்தூள்.**—1908-ம் வருஷத்தில் கல்கத்தாவிலிருந்து இங்கிலாந்துக்கு ஒரு வர்த்தகன் டீத்தூள் அனுப்பினன். லண்டனுக்குப் போனதும் அங்கேயுள்ள ஆயத்துறைக்காரர்கள் அதாவது, கப்பல் மார்க்கமாய் வரும் சரக்குகளின்மேல் சுங்கம் வசூல் செய்பவர்கள், அதைத்திறந்து பார்த்தார்கள். அதில் 'ஏகப்பட்ட' மணல் கலந்திருந்தது. ஆகையால் அந்த டீத்தூளை அங்கே இறக்கக்கூடாதென்று தடுத்து விட்டார்கள். ஆகவே அந்தத்தூள் மறுபடியும் கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தது. இந்த டீத்தூள் கல்கத்தாவுக்குத் திரும்பிவருகிற தென்ற சமாசாரம் கல்கத்தா துறைமுகச் சுங்க கலெக்டருக்கும் அறிவிக்கப்பட்டது. இவர் இந்த சமாசாரத்தை கல்கத்தா முனிஸிபாலிட்டியாருக்குச் சொன்ஞர். கல்கத்தா முனிஸிபாலிட்டி ஆக்டுப் பிரகாரம் ஆகார ஸாமான்களில் ஏதாவது கலப்படம் நடந்திருப்பதாக அந்த முனிஸிபாலிட்டி சுகாதார உத்தியோகஸ்தருக்குத் தோன்றினல் அவர் அந்த ஸாமானை பிடுங்கிக் கொண்டு விடலாம். ஆகையால் இனிமேல் மேலே சொல்லியமாதிரி இதரதேசங்களுக்கு அனுப்பப்பட்ட டீத்தூள் திரும்பிவந்தால் அது கல்கத்தா முனிஸிபாலிட்டியாரிடம் ஒப்புவிக்கப்படுமாம்.



## REVENUE NOTES.
## ரெவினியூக் குறிப்புகள்.

SURVEY AND SETTLEMENT.

**ஸர்வேயும் ஸெட்டில்மெண்டும்.**—நம்முடைய ராஜதானியிலுள்ள ஜில்லாக்களெல்லாம் சுமார். 50 வருஷகாலமாய் ஒன்றின் பின் ஒன்ருய் ஸர்வே செய்யப்பட்டு ஸெட்டில்மெண்டானது எல்லா நிலச்சுவான்களுக்கும் தெரியும். எல்லா ஜில்லாக்களிலும் முதல் தடவை ஸெட்டில்மெண்டு முடிந்து சில வருஷங்களாகி, இப்பொழுது திருச்சிஞப்பள்ளி, கோதாவரி, கிருஷ்ணு, குண்டூர், சேலம், நெல்லூர், ஆகிய இந்த ஜில்லாக்களில் மறு ஸெட்டில்மெண்டும் ஆகி முடிந்துவிட்டது. முதல் தடவை ஸெட்டில்மெண்டு செய்வதற்கு முன் எல்லா ஜில்லாக்களிலிருந்தும் ஸர்க்காருக்கு வந்த நிலத்தீர்வை 275 லக்ஷமாகும். ஸர்வே ஸெட்டில்மெண்டான பிறகு இந்தத்தீர்வை 1317-ம் பஸலிக்கணக்குப்படி $356\frac{1}{2}$ லக்ஷமாயிற்று. ஆகவேஸர்க்காருக்கு ஸர்வேஸெட்டில்மெண்டு செய்ததால் உண்டான லாபம் $81\frac{1}{2}$ லக்ஷம் ரூபாயாகிறது. இதற்கு, ஸர்வேக்காக $229\frac{1}{4}$ லக்ஷ ரூபாயும், ஸெட்டில்மெண்டுக்காக $135\frac{1}{2}$ லக்ஷமும் ஆக $364\frac{3}{4}$ லக்ஷம் ரூபாய் செலவாகி இருக்கிறது. இதேமாதிரி மேலே சொல்லிய 6 ஜில்லாக்களில் மறுஸெட்டில்மெண்டு செய்வதற்கு முன்ஞல் ஸர்க்காருக்கு 144 லக்ஷம் ரூபாய் வந்து கொண்டிருந்தது. மறு ஸெட்டில்மெண்டு செய்ததில் 174 லக்ஷம் ரூபாய் வருகிறது. ஆகவே மறு ஸெட்டில்மெண்டால் வரும்படி 30 லக்ஷம் ரூபாய். இதற்கு, சர்வேக்காக $21\frac{3}{4}$ லக்ஷமும் ஸெட்டில்மெண்டுக்காக $19\frac{1}{4}$ லக்ஷமும் ஆக மொத்தம் 41 லக்ஷம் ரூபாய் செலவாகியிருக்கிறது. தற்காலத்தில் திருநெல்வேலி, கர்நூல், கடப்பை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர், கஞ்சம், இந்த ஜில்லாக்களில் மறு ஸெட்டில்மெண்டு ஆகிவருகிறது.

WATER RATE.

**தண்ணீர்த் தீர்வை.**—1909-ம்ஹு பிப்ரவரிமீ 9உயுள்ள ரெவினியூ 342 நெ. கவர்ன்மெண்டு உத்திரவுப் பிரகாரம் நன்செயில் புஞ்சைப்பயிர் செய்யப்பட்டு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பயிர்களுக்கு நீர் பாய்ச்சப்பட்டால் பூராகேதின் புஞ்சை தீர்வையுடன் வாஸ்தவத்தில் நீர் பாய்ந்த விஸ்தீரணத்தின்பேரில் ஒவ்வொரு பயிருக்கும் ஏற்பட்ட நீர்க்கூலியை சார்ஜ் செய்ய வேண்டியது. ஆனல் இரண்டு சார்ஜூம் சேர்ந்து—

(1) கம்பவுண்டு நிலத்துக்கானல் கம்பவுண்டு தீர்வைக்கும்,

(2) இதர இருபோக நிலத்தில்—

(a) ஒருபோகத்துக்கு மட்டில் நீர் பாய்ச்சப்பட்டால் ஒருபோகத் தீர்வைக்கும்

(b) இரண்டுபோகத்துக்கும் ஜலம் பாய்ந்தால் இருபோகத் தீர்வைக்கும் ஜாஸ்திப்படக்கூடாது.

ஒரு நஞ்சை நிலத்தில் ஒரே காலத்தில் ஒரு நீர் பாய்ச்சப்பட்ட புஞ்சைப் பயிருக்குமேல் பற்பலபயிர்கள் சாகுபடி செய்தால் எந்தப்பயிர் ஜாஸ்தியான விஸ்தீரணத்தில் சாகுபடியாயிருக்கிறதோ அந்தப் பயிருக்குள்ள நீர்க் கூலியை பூரா விஸ்தீரணத்திற்கும் சார்ஜு செய்யவேண்டியது.

VALUE OF TREES.

**மரங்களின் கிரயம்.**—தர்க்காஸ்த்தில் விடப்பட்ட நிலங்களிலுள்ள மரங்களின் பெறுமானம் 50 ரூபாய்க்கு மேலில்லாவிட்டால் கலெக்டர் தனக்கு இஷ்டமிருக்கும் பட்சத்தில் டிப்டி தாசில்தாரே முடிவாய் மதிப்புப் பார்த்து விட்டு விடும்படி அதிகாரம் கொடுத்து விடலாமென்பதாக போன ஜூலை மாஸத்தில் கவர்ன்மெண்டு உத்தரவு ஆயிருக்கிறது.

EXEMPTION FROM ASSESSMENT.

**தீர்வை இல்லை.**—ஒருபோக நஞ்சை நிலங்களில் நெல் நாற்றுப் பிடுங்கி நடுவதற்கு முந்தி உரத்துக்காகவாவது அல்லது ஆடுமாடுகளின் இரைக்காகவாவது விளைவு செய்யப்படும் பயிர்களை விதை முற்றுவதற்குமுந்தி நன்ருய் உழுது விட்டாலாவது, அறுத்துவிட்டாலாவது அல்லது கால்நடைகளை விட்டு மேய்த்துவிட்டாலாவது யாதொரு தீர்வையும் விதிக்கக்கூடாதென்பது கவர்ன்மெண்டார் அவர்களுடைய அபிப்பிராயம்.

BIG LANDOWNERS.

**பெரிய நிலக்காரர்கள்.**—இந்த ராஜதானியில் தனிப்பட்டாவில் 1,000 ரூபாய்க்குமேல் ஸர்க்காருக்கு கிஸ்தி செலுத்துகிறவர்கள் 665 பேர்கள்தான். இவர்களில் பாதிப்பேர்கள் தஞ்சாவூர் ஜில்லாவிலும், கால்வாசிப்பேர்கள் மலையாளம் ஜில்லாவிலும் இருக்கிருர்கள்.

# LEGAL NOTES.

## சட்டக் குறிப்புகள்.

MARRIAGE CONTRACTS.

**விவாக ஒப்பந்தங்கள்.**—பணம் பெற்றுக்கொண்டு தன்னுடைய குழந்தையை விவாகம் செய்து கொடுப்பதாய் ஒரு தகப்பன் உடன்படிக்கை செய்து கொண்டால, அது பொது நன்மைக்கு விரோதமான உடன்படிக்கையானபடியால் செல்லுபடியுள்ளதல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. 22 பம்பாய் 658 பக்கம்.

CHEWING PAN IN COURT.

**கோர்ட்டார் முன்பு வெற்றிலை போட்டுக் கொள்ளுதல்.**—வங்காள மாகாணத்தைச் சேர்ந்த வில்ஹெட் பட்டணத்தில் சாட்சி சொல்ல வந்தவன் ஒருவன் மாஜிஸ்ட்ரேட் முன் வெற்றிலை பாக்குப்போட்டுக் கொண்டு மென்று கொண்டிருந்தான். அதற்காக மாஜிஸ்ட்ரேட் அவனைக்கன்னத்தில் அடிபோட்டுக் கொள்ளச்சொன்னார். சாட்சிக்காரன் மாட்டேன் என்று சொன்னபடியால் மாஜிஸ்ட்ரேட் இரண்டு சேவகர்களைக் கூப்பிட்டு அவன் கன்னத்தில் அடிக்கச்சொன்னார். இப்படிச் செய்ததற்காக அடிபட்ட சாட்சிக்காரன் டிப்டி கமிஷனரிடம் முறையிட்டு கம்ப்ளெயிண்டு கொடுத்தான். டிப்டி கமிஷனர் அந்தக் கம்ப்ளெயிண்டைத் தள்ளிவிட்டார். அதன் மேல், அடிபட்டவன் கல்கத்தா ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொண்டான். மாஜிஸ்ட்ரேட் முன்னால் வெற்றிலைபாக்குப் போட்டுக்கொண்டு மென்றது பிசகுதான் என்று சொல்லி அப்பீலைத் தள்ளி விட்டார்கள்.

RIGHT OF PRIVATE DEFENCE.

**தன்னுயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் பாத்யம்.**- இரண்டு கக்ஷிக்காரர்களுக்குள் ஒரு தடிஅடி சண்டை நேர்ந்தது. அதில் ஒரு கக்ஷிஆள் மற்றொரு கக்ஷி ஆளை அடிக்கவே, அவன் கீழே விழுந்து விட்டான். பிறகு கீழேவிழுந்தவன் எழுந்திருந்து தன்னை அடித்தவன் கக்ஷியில் ஒருவனை மண்டையைப் பார்த்து அடித்தான். அதனால் மண்டை உடைந்து கொஞ்சநேரத்துக்கெல்லாம் அடிபட்டவன் இறந்து போனான். இந்தக் கேஸில், தன்னுயிர்க்கே சேதம் வரும்படியிருந்ததினால் மண்டையைப்பார்த்து அடித்தது தன்னுயிரைக்காப்பாற்றிக் கொள்ளச் செய்யப்பட்டதென்றும் அதனால் அது குற்றமாகாதென்றும் தீர்மானிக்கப்பட்டது. 13 கல்கத்தா வாரக்குறிப்பு 1180 பக்கம்.

ADOPTION BY HINDU WOMEN.

**இந்திய ஸ்திரீகள் ஸ்வீகாரம் செய்துகொள்ளல்.**- ஒருஹிந்து ஸ்திரீக்கு, தனக்குப்புத்திரனாக ஒருவனை ஸ்வீகாரம் செய்துகொள்ள அதிகாரமில்லை. அப்படி ஸ்வீகாரம் செய்துகொள்ளப்பட்ட புத்திரனுக்கு வார்சு பாத்தியம் உண்டாகாது. 36 கல்கத்தா 824-ம் பக்கம்.

MORTGAGED PROPERTY.

**அடமான சொத்து.**—அடமானம் வைத்தவன் பணத்தைத்திருப்பிக் கொடுக்கவேண்டிய காலத்தில் கொடுக்காவிட்டால் மத்தியஸ்தர்கள் அந்த சொத்திற்கு என்ன விலை போடுகிறார்களோ அந்த விலைக்கு விற்றுப்போடுகிறதென்று அடமானம் வைத்தவனும் அடமானம் வாங்கினவனும் எக்ரிமெண்டு செய்துகொள்வது சொத்தை மீட்கும் நியாயத்திற்கு விரோதமாயிருக்கிறபடியால் இந்த எக்ரிமெண்டை ஊர்ஜிதப்படுத்த முடியாது. 21 மதராஸ் லா. ரி. 110-ம் பக்கம்.

SURETY BOND.

**ஜாமீன் பத்திரம்.**—1, 2, பிரதிவாதிகள், முதல் பிரதிவாதி ஒரு வர்த்தக கம்பெனியில் கஜான்ஜி வேலை பார்ப்பதற்காக ஜாமீன் பத்திரம் எழுதிக் கொடுத்திருந்தார்கள். இந்த ஜாமீன் பத்திரம் பிறந்தபிறகு இந்தக் கம்பெனியின் அமைப்பும்பெயரும் மாறுதலடைந்தது. முதலாவது பிரதிவாதி இதன் பிறகு சில தொகையை கையாடிவிட்டதாகவும், அந்தத் தொகையைப்பெறுவதற்காக, 1, 2, பிரதிவாதிகளின் பேரில், ஷை ஜாமீன் பத்திரத்தை ஆதாரமாகக்கொண்டு வியாஜ்யம் கொண்டுவந்தநில் ஷை கம்பெனி மாறுதலடையும்போது ஜாமீன் பத்திரம் ரத்து செய்யப்பட்டதாக நினைக்கப்படவேண்டுமென்றும், ஆகையால் இந்த வியாஜ்யத்திற்கு வியாஜ்ய மூலம் உண்டாகவில்லை என்றும் சொல்லி வியாஜ்யம் தள்ளுபடி செய்யப்பட்டது. 28 கல்கத்தா 597 பக்கம்—லாயர்.




# Oakes & Co., Ltd.,

9, Broadway, MADRAS.

—(o)—

அடியில்கண்ட சாமான்கள் எங்களிடத்தில் அகப்படும்.

(1) விவசாயத்திற்கு வேண்டிய யந்திரங்கள்,

(2) மனிதர்களாலும், மாடுகளாலும் வேலை செய்யக்கூடிய தண்ணீர் பாய்ச்சும் பம்புகள்,

(3) நீராவியாலும் வேறு எந்த சக்தியாலும் வேலை செய்யக்கூடிய எல்லாவித தொழிலுக்கும் வேண்டிய யந்திரங்கள்,

(4) தச்சு வேலைக்கு வேண்டிய உளி, வாச்சி முதலிய சாமான்கள்,

(5) பலவித பெயிண்டுகள், எண்ணெய்கள், வார்னீஷுகள், புருஷுகள்,

(6) வியாபாரிகளுக்கு வேண்டிய நிறுக்கும் யந்திரங்கள், வெயிட்டுகள், பணம் வைக்க இரும்புப் பெட்டிகள், பூட்டுகள்,

(7) விவசாயிகளும், குடித்தனக்காரர்களும் உடைக்கவும், அரைக்கவும் வேண்டிய யந்திரங்கள்,

(8) கம்பி வேலிகள், இரும்பு மாடிப்படிகள், வீடு கட்டுவதற்கு வேண்டிய இரும்புச் சாமான்கள்,

இன்னும் எது வேணுமானாலும் எழுதியனுப்பினால் அனுப்பத் தயாராய் இருக்கிறோம். காட்டலாக் அனுப்பப்படும்.

ஓக்ஸ் அண்டு கம்பெனி,

9, பிராட்வே, சென்னப்பட்டணம்.

## EDUCATIONAL NOTES.
## வித்தியாவிஷயக் குறிப்புகள்.

EDUCATION IN MYSORE.

**மைசூரில் படிப்பு.**—மைசூர் ஸமஸ்தானத்தில் இருபது வருஷகாலமாக படிப்பு விருத்திக்கு வந்து கொண்டிருக்கிறது. பிள்ளைகளுக்காக இருபது வருஷங்களுக்கு முன்னால் 1143 பிரைமரி ஸ்கூல்களும், 216 ஸெகண்டரி ஸ்கூல்களும் இருந்தன. இப்பொழுதோ பிரைமரி ஸ்கூல்களில் 1776-ம், ஸெகண்டரி ஸ்கூல்களில் 245-ம் இருக்கின்றன. தற்காலத்தில் பெண்களுக்கான பள்ளிக்கூடங்கள் 214 பிரைமரி ஸ்கூல்களும் 54 ஸெகண்டரி ஸ்கூல்களும் இருக்கின்றன. இருபது வருஷத்துக்குமுன் தொழில் படிப்பு பள்ளிக்கூடம் ஒன்றுதான் இருந்தது. இப்பொழுது 24 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. கொஞ்சகாலமாக கீழ்த்தரப்படிப்பு இனமாகவே சொலவிக்கொடுக்கப்படுகிறது. கிராமப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்களுக்கு 10 ரூபாய்க்கு குறைந்த சம்பளம் கிடையாது.

RURAL EDUCATION.

**விவசாயிகளுக்குப் படிப்பு.**—சமீபத்தில் பூனாவில் விவசாயத்தைப் பற்றி யோசிப்பதற்காக மகா சபை ஒன்று கூடிற்று. விவசாயிகள் படித்தவர்களாய் மாத்திரம் இருந்தால், விவசாயத்தில் பலவித நூதன முறைகளை வெகு சுலபமாய் பரவச்செய்து விடலாம் என்று பரோடா மகாராஜா அவர்களும் இன்னும் பல பெரியமனுஷர்களும் அந்த சபையில் சொன்னார்கள். சாதாரணமாக படிப்பு கவர்ன்மெண்டு உத்தியோகத்துக்கு சாதனமானதேயொழிய விவசாயம் முதலிய தொழில்களுக்குப் பிரயோஜனமில்லையென்று விவசாயிகள் நினைக்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் விவசாய பாடசாலைகள் ஏற்படுத்தி விவசாயிகளுக்கு கண்ணுக்கு நேராய் படிப்பின் பிரயோசனத்தை நிரூபித்துக்காட்டினால் தான் படிப்பின் பிரயோஜனத்தில் நம்பிக்கையுண்டாகும் என்றும் சொல்லப்பட்டது. விவசாய விஷயங்களைப்பற்றி ஒவ்வொரு கிராமப்பாடசாலையிலும் படிப்பு சொல்லித்தரவேண்டும். படிப்பேயில்லாத விவசாயி ஒருவனுக்கு அவனுடைய குமாரனால் அவனுக்கு அதில் கருத்து உண்டாகும்படி செய்ய வேண்டும். முதலில், பல தேசங்களிலுள்ள விவசாயிகள் என்ன செய்கிறார்கள், எந்த விதத்தில் தங்கள் தொழிலை நடத்துகிறார்கள், என்ற விஷயங்கள் அடங்கிய புஸ்தகங்கள் எழுதப்பட்டவேண்டும். பிள்ளைகளைக்கொண்டு அவர்கள் தகப்பனார்களுக்கு இந்த மாதிரி புஸ்தகங்களைப் படித்துக்காட்டச் சொல்ல வேண்டும். இந்தமாதிரி புஸ்தகங்கள் சுதேச பாஷைகளில் ஏற்பட்டு, கிராமங்கள் ஒவ்வொன்றிலும் பாடசாலையும் ஏற்பட்டு விட்டால் விவசாயம் வெகு சீக்கிரத்தில் அபிவிருத்தியடைந்து விடும்.

## BOOKS RECEIVED.
## புஸ்தக வரவு.

மிருச்சகடிகம் என்னும் நாடகம்:—எஸ். ஏ. பாலகிருஷ்ண ஐயர் பி. ஏ, பி. எல்., செய்த மொழி பெயர்ப்பும், உ. வே. திரு. ஸா. இராகவாசாரியார் இயற்றிய சுலோக மொழி பெயர்ப்புச் செய்யுட்களும். விலை. 1-8-0.

கண்ணம்மாள் அல்லது பஞ்சாயித்து நாடகம்: நாகப்பட்டணம் பெருமாள் கோவில் தெற்கு மடவளா 2 நெ. வீட்டு, உ. வே. திரு. ஸா. இராகவாசாரியார் இயற்றியது. விலை. 0-6-0.

கிண்டர் கார்டன் போதனு முறை:—சென்னப்பட்டணம் வேப்பேரி, 20, முத்தியால் நாயக்கன் தெருவு, பி. வி. துரைசாமி அய்யங்கார் இயற்றியது. விலை. 0-3-0.

1910-ம் வருஷத்து அலெக்ஸாண்ட்ரா பாகெட் டையரி நெ. 1:—கும்பகோணம் அலெக்ஸாண்ட்ரா ப்ரெஸ் ப்ரொப்ரைட்டர் தாயி. அ. மு. பாலசுந்தர செட்டியார் அனுப்பியது. இதில் தமிழ்ப் பஞ்சாங்கம், இன்னும் பல உபயோகமான சமாசாரங்களும் அடங்கி இருக்கின்றன.

1910-ம் வருஷத்து பாகெட் டையரி:—சென்னப்பட்டணம் தம்புசெட்டித் தெருவு எஸ். மூர்த்தி அண்டு கம்பெனியாரிடமிருந்து இதை வரப்பெற்றோம். இந்த டையரி பெரிதாய் பென்ஸலோடு நாடாப்போட்டுக்கட்டியது. இதில் பஞ்சாங்கம் தமிழிலும் தெலுங்கிலும் இருப்பதோடு, கோர்ட் பீஸ் விகிதங்கள், வட்டி விகிதங்கள், தந்தி, தபால் சமாசாரங்கள் இன்னும் பல விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. விலை. 0-6-0.




# Paddy Cultivation.
# நெல் சாகுபடி.

ராணிப்பேட்டை ரஸாயன உரக்கிடங்கில் எங்களால் தயாரிக்கப்படுகிற உரங்கள் சாஸ்திரோக்தமான
வைகள். அதாவது பயிர், பயிருணவு இவைகளின் சாஸ்திர முறைப்படி பயிருணவு சத்துக்கள்
அதிகமாயுள்ளதும், அந்த சத்துக்கள் பயிர்களுக்கு உணவாகக்கூடிய நிலமையிலுள்ளதுமான சரக்குகளைக்
கொண்டு அந்தந்த பயிர்களுக்குத் தக்கப்படி தயார் செய்யப்படுகின்றன. தற்காலத்தில் ஜர்மனி, இங்கிலாந்து,
அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங்களில் வியவஸாய ரஸாயந சாஸ்திர நிபுணர்களால் வியவஸாய சாஸ்
திர ஆராய்ச்சிகள் விசேஷமாய் செய்யப்பட்டு வருகின்றன. அந்த ஆராய்ச்சிகளை யனுசரித்ததும், இந்த
நாட்டு பயிர்களின் காலம், சீதோஷ்ண ஸ்திதி இவைகளுக்குத் தக்கபடியும் உரங்கள் செய்யப்படு
கின்றன. இப்படி தயாரிக்கப்பட்ட உரங்களை கிடங்கு தோட்டத்து நிலங்களில் அந்தந்த பயிர்களுக்குப்
போட்டு சாகுபடி செய்கிறோம். சென்ற வருஷம் 30 ஸெண்டுள்ள ஓர் நிலத்தில் எங்கள் நெல் உரம் இரண்
டாந்தரம் (B) 168 ராத்தல் உழுது சின்னசம்பா நாற்றை ஒற்றை அலகாக முக்காலடிக்கொன்று நட்டதில்
558 படி அல்லது 1843 ராத்தல் தானியம் கிடைத்திருக்கிறது. இது ஏகருக்கு 5812 ராத்தல் வீதம்
ஆகிறது. அதே உரத்தைப் போட்டு சாதாரணமாய் நட்டதில் ஏகருக்கு 3750 ராத்தல் முதல் 5000 ராத்
தல் வரை நெல்கண்டு முதலாயிருக்கிறது. இவ்வாறு ரஸாயந உரம்போட்ட நிலங்களோடு ஒப்பிட்டுப்
பார்க்கும் பொருட்டு நாட்டு உரங்களாகிய தொழு எரு, சாம்பல், தழை முதலியவைகள் போட்டு பயிர் செய்த
தில், ஏகருக்கு 2344 ராத்தல் முதல் 2625 ராத்தல் வரை நெல் கிடைத்திருக்கிறது. ரஸாயந உரம்
மூன்று சாகுபடிக்கொருதடவை உபயோகப்படுத்தப்படுகிறது. நாட்டு உரங்கள் சாகுபடிதோறும் உபயோ
கப்படுத்தப்படுகின்றன. உதாரணமாக, 32 ஸெண்டுள்ள ஓர் நிலத்தில் 180 ராத்தல் நெல் உரம் (B)
போட்டு பயிர் செய்ததில், முதல் போகம் சின்னசம்பா 1611 ராத்தல் நெல்லும், இரண்டாம் போகம்
வெள்ளைக்கார் 1467 ராத்தல் நெல்லும், மூன்றும் போகம் ஸ்வர்ணவாரி 1425 ராத்தலும் கிடைத்
தன. இது ஏக்கருக்கு முதல் போகத்தில் 5034 ராத்தல் வீதமும், இரண்டாம் போகம் 4584 ராத்தல்
வீதமும், மூன்றும் போகம் 4453 ராத்தல் வீதமும் ஆகிறது. நாட்டு உரங்கள் போட்டு சாகு
படி செய்துவந்த 25 ஸெண்டுள்ள ஓர் நிலத்தில் 56 ராத்தல் ஸுபர்பாஸ்பேட் மாத்திரம் நாலு மடங்கு
மணலுடன் கலந்து ஒரு மாதத்திய சின்னசம்பாப் பயிர் மேல் தெளித்ததில், அந்த போகத்தில் ஏகருக்கு
4875 ராத்தல் வீதமும், அடுத்த போகம் வெள்ளைக்கார் 4500 ராத்தல் வீதமும், அதற்கடுத்த போகம்
ஸ்வர்ணவாரி 4218 ராத்தல்வீதமும் கொடுத்திருக்கிறது. 32 ஸெண்டுள்ள ஓர் நிலத்தில் 56 ராத்தல் ஸுபர்
பாஸ்பேட் போட்டு உழுதும், 20 ஸெண்டுள்ள மற்றொரு நிலத்தில் ஒன்றும் போடாமல் உழுதும், இரண்டி
லும் சிறுமணி நாற்று நட்டு, நாகதாளி அழுகின தண்ணீர் பாய்ச்சினதில், பயிர் இரண்டிலும் மதாளித்து
வந்தது. அறுவடையில் முதல் தாக்கில் 1641 ராத்தல் நெல் முதல்தரமானதாக கிடைத்தது. இரண்டா
வது தாக்கில் சுத்த கசப்பான நெல் 225 ராத்தல் கிடைத்தது.

***The Presidency Manure Works, Ltd.,***
***Ranipet.***

***Managing Agents: Parry & Co., Madras.***

ராஜதானி ரஸாயந உரக்கிடங்கு,
ராணிப்பேட்டை.

மானேஜிங் ஏஜண்டு:—
பாரி அண்டு கம்பெனி,
மதராஸ்.

## SCIENTIFIC NOTES.

## சாஸ்திரீயக் குறிப்புகள்.

---

THE DEEP SEA.

**ஆழமான சமுத்திரம்.**—சமுத்திரத்தில் 3000 அடி ஆழத்திற்கு கீழே சூரிய வெளிச்சம் நுழைய முடியாது. அந்த ஆழத்திற்குக்கீழ் வசிக்கும் மீன்களுக்கு சூரிய வெளிச்சத்திற்கு பதிலாக அவைகளின் அவயவங்களிலேயே ஒரு ஜோதி இருக்கிறது. இந்த ஜோதியும் சாதாரணமாய் இருட்டு நாளில் சமுத்திரத்தில் தூரத்து அலைகளைக் கவனித்துப்பார்த்தால் அவைகளிலிருந்து பளிச்சுப் பளிச்சென்று புறப்படும் வெளிச்சமும் ஒன்றே. மேலே சொல்லிய ஆழத்தில், தண்ணீர் ஓட்டம் கிடையாது. அலையடிப்பதில்லை. காற்றடிப்பதில்லை. சூரிய ரஸ்மி இல்லாததால் ஸ்தாவரவர்க்கம் ஒன்றும் இருக்கமுடியாது. நிலமட்டத்திலுள்ள காற்று ஒவ்வொரு சதுர அங்குலத்தையும் 15 ராத்தல் பாரத்தோடு அழுத்துகிறது. சமுத்திரத்தில் 15,300 அடிக்குக்கீழே போய்விட்டால் அங்கே ஒவ்வொரு சதுர அங்குலத்திலும் $11\frac{1}{4}$ பாரம் கனம் வைத்தால் போலிருக்கும். ஆழத்திலுள்ள ஜலம் ரொம்பவும் குளிர்ச்சியாயிருக்கும்.

BRINGING BACK TO LIFE.

**பிணத்தை பிழைக்க வைப்பது.**—சில வருஷங்களுக்கு முன் அமெரிக்கா கண்டத்தில் ஒரு பெரிய வைத்தியர் ஜலத்தில் மூழ்கி இறந்துபோனவர்களை இறந்துபோன ஒருமணி நேரத்துக்குள் உடம்பு முழுவதையும் உப்பைப்போட்டு மூடி விட்டால் உயிர் வந்து விடுமென்று சொன்னார். ஈயையும் இன்னும் சில ஜந்துக்களையும் மூழ்கடித்துக் கொன்று மறுபடியும் உப்பைத் தடவி உயிர்ப்பித்திருக்கிறார்களாம். ஆனால் இந்த மாதிரி செய்து இறந்துபோன மனிதனை உயிர்ப்பித்ததாகத் தெரியவில்லை. இப்பொழுது ந்யூ யார்க் பட்டணத்தில் லூசி ரோபினேவிட்ச் என்னும் ஒரு வைத்திய ஸ்திரீ மின்ஸாரக் கருவி யொன்று கண்டுபிடித்திருக்கிறாளாம். இதைக்கொண்டு செத்துப்போனவைகளை உயிர்ப்பிக்கலாமென்று சொல்லுகிறாளாம். போன நவம்பர் 19-ம் தேதி எட்டிஸனுடைய வஸ்து சோதனை சாலையில் பல வைத்தியர்களும் சாஸ்திரிகளும் கூடினார்கள். அப்பொழுது ஒரு முயலை மின்சாரத்தை விட்டுப் பாய்ச்சிக் கொன்றார்கள். இந்த முயல் செத்துப்போய் விட்டது என்று அங்குஉள்ளவர்களெல்லாம் சொன்னபிறகு, மேலே சொல்லிய வைத்தியஸ்திரீ தன்னுடைய கருவியை முயலின் ரக்தாசயத்தின் மேலும் முதுகெலும்பின் அடியின் மேலும் வைத்து மின்சாரத்தை விட்டு விட்டுப் பாய்ச்சினாளாம். இப்படிப்பாய்ச்சினதும் மூன்று நிமிஷத்துக்கெல்லாம் அந்த முயல் மூச்சுவிட ஆரம்பித்ததாம். அரை மணிக்குள் எல்லாரும் கூடிப்பார்த்துக்கொண்டிருந்த அறையில் நடக்கவும் செய்ததாம். இந்த விதமாகச் செய்தால் இறந்த மனுஷர்களையும் பிழைக்கச்செய்யலாமென்று சொல்லுகிறாளாம்.

RESEARCHES IN INDIGO.

**நீலி விஷயமாய் ஆராய்ச்சி.**—இந்தச்சரக்கு வட்க்கே பீஹார் மாகாணத்திலுள்ள ஐரோப்பிய கிருஷிகர்களால் ஏராளமாய்ச் செய்யப்பட்டுவருகிறது. இவர்களெல்லாரும் சேர்ந்து ஒரு சங்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தச் சங்கத்தார் நீலிச்சரக்கைப்பற்றி பல வித ஆராய்ச்சிகள் செய்துவருகிறார்கள். இதற்காக போன 1908—09-ம் வருஷத்தில் கவரன்மெண்டாரும் ஐம்பதினாயிரம் ரூபாய் கொடுத்து ஒத்தாசை செய்தார்கள். இது விஷயமாய் இன்னும் எவ்வளவோ விஷயங்கள் கண்டுபிடிக்க வேண்டியிருக்கின்றன. அதற்காக மேலே சொல்லிய சங்கத்தார் வருஷம் ஒன்றுக்கு 10,000 ரூபாய் கொடுப்பதாயிருந்தால் கவரன்மெண்டார் வருஷம் ஒன்றுக்கு 32,000 ரூபாய் வீதம் 5வருஷத்துக்குக் கொடுப்பதாக சொன்னார்கள். இதை ஒப்புக்கொண்டு வேண்டிய ஆராய்ச்சிகளைச் செய்ய பர்க்கில் என்னும் ஒரு நிபுணரை மேலே சொல்லிய சங்கத்தார் நியமித்திருக்கிறார்கள்.

RAIN.

**மழை.**—மழை காலா காலத்தில் பேயாமலும் ஒரு இடத்தில் பேய்ந்தபடி இன்னொரு இடத்தில் பேயாமலும் இருக்கலாம். ஆனால் உலகம் முழுவதும் பேயும் மழையை வெகு காலத்துக்கு எடுத்துக் கணக்குப்பார்த்தால் அது அந்த காலத்தில் சூரிய வெப்பத்தால் எவ்வளவு ஜலம் நீராவியாய்ப் போயிருக்குமோ அதற்கு மேல்படாது என்று சொல்லப்படுகிறது.



V. KALYANARAM IYER & Co., *Booksellers, Esplanade, MADRAS.*

**நன்றாய்ப் பார்வையிட்டு நல்ல காகிதத்தில் தெளிவாய் அச்சிட்ட சிறந்த பதிப்பு.**

**மூவர் தேவாரம்-பண்முறை—1044 பக்கம், ரூபாய் 3—0—0.**

இப்பதிப்பில் (1) சம்பந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவர்களின் சரித்திரக் குறிப்பும், (2) தேவார வரலாறும், (3) தேவாரப்பண் அட்டவணையும், (4) தேவாரப் பாடல்பெற்ற ஸ்தல அகராதியும், (5) தேவார ஸ்தலங்களுள்ள நாடுகளின் விபரமும், (6) அட்டவீரட்டானங்களைக்குறிப்பிக்கும் செய்யுளும், (7) தேவாரப் பொதுப்பாடல்களின் பக்க அட்டவணையும், (8) தேவார வைப்பு ஸ்தல அட்டவணையும், (9) காரைக்காலம்மையார் அருளிச் செய்த மூத்த திருப்பதிகமும் நூதனமாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன.

**நாலாயிர திவ்யப்பிரபந்தம்—640 பக்கம், ரூபாய் 3—0—0.**

இப்பதிப்பு (1) ஆழ்வார்களின் காலவைபவக் குறிப்பும், (2) ஆழ்வார்கள் அருளிச்செய்த பிரபந்தங்களின் அட்டவணையும், (3) ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திவ்விய தேசங்களின் அட்டவணையும், (4) அந்த தேசங்களின் வைபவக்குறிப்புகளும் சேர்த்து பல பிரதிகளுடன் ஒத்திட்டுப்பார்த்து, நன்றாய் அச்சிடப்பெற்றுளது.

**வேதாந்த விஷயமான புஸ்தகங்கள்.**

| | ரூ. அ. | | ரூ. அ. |
|---|---|---|---|
| வள்ளாலார் சாஸ்திரம் | 1 8 | ஜன்மாந்திரம் (அல்லது இராமதாசர் உபதேசம்) | 0 2 |
| வாசுதேவ மனனம் | 1 0 | நானு சீவவாதக்கட்டளை | 0 1 |
| வேதாந்த போதினி | 0 8 | மகாராஜா துறவு | 0 6 |
| சிவபோகசாரம் & சிவஞானவிளக்கம் | 0 2 | தாயுமானவர் பாடல் (காலிகோ பயிண்டிங்) | 0 12 |
| சுகர் கைவல்லியம் | 0 2 | பட்டணத்தார் பாடல் | 0 2 |
| வைராக்கிய சதகம் | 0 2 | | |

**புதிய நாவல்களும் நாடகங்களும்.**

| | | | |
|---|---|---|---|
| போஜ சரித்திரம் | 1 8 | மனோகரன் | 0 12 |
| சுந்தரி மனோகரன் | 0 12 | கள்வர் தலைவன் | 0 8 |
| காமாக்ஷி | 0 8 | சாரங்கதரன் | 0 8 |
| சந்திரசேகரன் | 0 8 | யயாதி | 0 8 |
| ஆநந்தமடம் | 0 8 | வசந்திகா | 0 8 |
| லீலாவதி சுலோசனு | 0 12 | கிரிஸில்டா, அல்லது பொறுமையுள்ள மனைவி | 0 2 |
| இரண்டு நண்பர்கள் | 0 12 | காலவரிஷி | 0 8 |
| சத்ருஜித் | 0 12 | வேதாள உலகம் | 0 8 |

**வேறு புஸ்தகங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| ஸ்திரீ புருஷ சாமுத்ரிகா லக்ஷணம் | 1 0 | **மனுதர்ம சாஸ்திரம்** 2647 கிரந்த சுலோகங்களும் அவைகளின் தமிழ் மொழிபெயர்ப்பும்—560 பக்கம் | 2 4 |
| குறள் (மூலம்) | 0 4 | | |
| பஞ்சதந்திரம் | 0 4 | | |

**வியவசாய போதினி.**—நிலம், எரு, விதை, பயிரிடும் வகை முதலிய சகல விவசாய விஷயங்களையும் பற்றியது. மிராசுதாரர்களுக்கும் மற்றவர்களுக்கும் இன்றியமையாதது. தஞ்சாவூர் ஜில்லா, நீடாமங்கலம் அ. சேதுராமய்யர் இயற்றியது. 400 பக்கம், 80 படங்கள். ரூ. 1 4 0

**மானிட மர்ம சாஸ்திரம்.**— அல்லது "சிசு உற்பத்தி சிந்தாமணி." இது யாவரும் படித்து அறியவேண்டிய அடியிற்கண்ட அரிய பெரிய விஷயங்களடங்கியது. 500 பக்கம், 190 சித்திர படங்களடங்கியது ரூ. 5 0 0

**அடங்கிய விஷயங்கள்.**—மானிட ஜீவியத்தில் பலபருவங்கள்—இல்லற இன்ப ரகசியம்—ஜனனேந்திரியங்களின் அமைப்பும் அற்புதங்களும்—மாதாவின் மாக்ஷிமை—சிசு உற்பத்தி—கர்ப்பகால சுகாதாரவிதிகள்—கர்ப்பகால நோய்களும் பரிகாரங்களும்—மருத்துவ சாஸ்திரம்—சிசுபரிபாலனம்—மலட்டிற்கு நிவாரணம்—ஆண்மையினழிவும் அதன் மீட்சியும்—சமயோசித சஞ்சீவி.

☞ ஆர்டர் அனுப்பும்போது இப்பத்திரிகையின் பெயரைக் குறிப்பிடுக.

**வி. கல்யாணராமய்யர் அண்டு கோ.,**

புக்ஸெல்லர்ஸ், எஸ்பிளநேட், மதராஸ்.

## MEDICAL NOTES.

## வைத்தியக் குறிப்புகள்.

---

**CARCASSES OF ANIMALS.**

**செத்துப்போன மாடுகள்.**—மாடுகளுக்கு வெக்கை என்றும் அடப்பான் என்றும் வியாதிகள் வருவது விவசாயிகளுக்குத் தெரிந்த விஷயம்.

வெக்கைக்கு அழல்வெக்கை, சீதவெக்கை, ரெத்த வெக்கை, விஷசுரம், இரத்தசுரம், பெரிய நோவு, பிச்சை நோவு என்றும் சொல்வது உண்டு.

அடப்பானை மண்ணீரல் சன்னி அல்லது மண்ணீரல் அடப்பான், கருங்கால், தொண்டையடப்பான் அல்லது கொடும்புண்ணுள்ள தொண்டை, சந்தடப்பான், பிராக்சி அல்லது நீரடப்பான், அடப்பான் காய்ச்சல், படுவன், பிளவை, தெரிபன், குன்னல், சந்தடப்பான், குலைமுட்டி, குதிரை வலிப்பு என்றும் சொல்லுவார்கள்.

அடப்பான் முதலிய வியாதிகளால் இறந்துபோகும் மாடுகளின் உடலை அழிக்கும் தொழிலாளிகளுக்கு அனேக ஸமயங்களில் பலமான தொத்து நோய் நேரிட்டிருக்கிறது. சில ஸமயங்களில் அந்த வியாதியினாலே மரணமும் உண்டாயிருக்கிறது. இப்படி இந்த நோயினாலே மனுஷருக்கு மரணமுண்டாகிறதென்கிற சங்கதி பிரசித்தப்படுத்த வேண்டியது ரொம்பவும் அவசியம். யாருக்காவது கை முழுவதிலும் எங்கேயாவது சிராய்த்து காயம் சொல்பமாயிருந்தபோதிலும் அப்படிப்பட்டவர்கள் இந்த வியாதிகளால் செத்துப்போயாவது இந்த நோய் கண்டிருக்கையில் கொல்லப்பட்டாவதிருக்கிற பிராணிகளின் உடலை கொஞ்சங்கூடத் தொடக்கூடாது. அடப்பான் வியாதியினாலிறந்துபோகும் பிராணிகளின் உடலைத் தோலுரிக்காமலும் அழிக்காமலும் முழுசாய் பள்ளத்தில் போட்டு அதின்பேரில் சுண்ணாம்பு நீறு செவ்வையாய்ப்பரப்பி ஆறுஅடி ஆழத்திற்குக்குறையாமல் மண்ணைப்போட்டு மூடிப் புதைக்கவேண்டியது.

இதில் எவ்வளவேனுங் குறைவுபட நடந்தால் இந்தியன் பினல் கோடு 269-வது பிரிவுப்படி தண்டிக்கலாம்.

**THE USES OF HONEY.**

**தேனின் உபயோகங்கள்.**—நல்ல சுயமான தேனுடன் காடியைச் சேர்த்து வாயைக் கொப்பளித்து வந்தால், ஈறு கரைவது நின்று பலப்படும். பல்லுகள் உறுதியாகும். பல்லில் தேய்த்தால் ஊத்தை நீங்கும்.

ஒரு பலம் தேனுடன் சரியிடை ஜலத்தைச் சேர்த்து சாப்பிட்டுக்கொண்டு வந்தால் நீரடைப்பு நீங்கும். நீர்த்துவாரப்புண் ஆறும். தாகம் நீங்கும். ஒரு பலம் ரோஜாப்பூவை, நன்றாய்க் கொதித்த ஒரு ஆழாக்கு ஜலத்திலிட்டு அரைமணி நேரம் மூடிவைத்து பின்பு பிசைந்து வடிக்கட்டி திப்பி நீங்கின கஷாயம் ஒரு பங்கோடு கெட்டித்தேன் ஒரு பங்கு சேர்த்து மிஸ்ரமித்து இளஞ்சூட்டுடன் வாயை கொப்பளித்து வந்தால் ரஸம், ரஸகற்பூரம், வீரம் முதலிய துஷ்ட சரக்கு சம்பந்தத்தாலுண்டான வாய் வேக்காடு, வாய்ப்புண் முதலியவைகள் தீருமாம்.

இரண்டு பலம் தேனுடன், இரண்டு பலம் தண்ணீரை விட்டுக் கலக்கி குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால் வாய்குழறல், தெத்துவாய், குழகுழத்த பேச்சு நீங்கி நன்றாய்ப் பேசுவார்கள்.

தேனைத் தனியாகவாவது வெங்காயச் சாற்றுடன் கலந்தாவது கண்ணில் போட்டு வந்தால் கண்மங்கல் தீர்ந்து கண்பார்வை அதிகப்படும். கண் நமைச்சல், கண்சொறி, கண்ணீர்குத்து, கண்ணீர் வடிதல், கண் பூ, கண்ணில் நீரிறங்கல் முதலியவை தீரும்.

**TO GROW THINNER.**

**தேகம் இளைக்க.**—கிச்சிலிப்பழங்கள் சாப்பிட்டால் ஸ்தூலம் குறையுமாம். சாப்பிடும்பொழுது இரண்டு பழங்கள் சாப்பிடவேணும். அந்தப்பழங்கள் தித்திப்புப்பழங்களாயிருக்கக்கூடாது. சாப்பாட்டில் எலுமிச்சம்பழம் சேர்த்துவருவது நலம். பால், சர்க்கரை இல்லாமல் காபி சாப்பிடவேணும். கூடுமானால் காபியையே ஒழித்து விடுவது நல்லது. திராட்சை, வெள்ளரிக்காய் தினுசுகள், வாழைப்பழ வகைகள் இவைகளையெல்லாம் தள்ளுபடி செய்யவேணும். ஏனென்றால் அவைகள் தேகத்தை ஸ்தூலிக்கச்செய்யும். சாப்பிடும்பொழுது தண்ணீர் குடிக்கக்கூடாது. வெண்ணெய் எடுத்த பிறகு மிகுதியான மோரை யதேஷ்டமாய்க் குடிக்கவேணும். இப்படிச்செய்தால் சில வேளைகளில் தினம் ஒன்றுக்கு அரைராத்தல் வீதம் தேகத்தின் நிறைகுறையுமாம். குளிர்ந்த ஜலத்திலேயே ஸ்நானம் செய்யவேணும்.



**P. S. Sastri** **Artist and Photographer,**
CARNATIC STUDIO, Mount Road, Madras.

SPECIALITIES.
- SCHOOL GROUPS.
- FAMILY GROUPS.
- BROMIDE ENLARGEMENTS.

**பொட்டகிராப் படங்கள்.**

பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளையும் குடும்பங்களையும் பொட்டகிராப் படம் பிடிப்பதிலும் சிறியபடங்களை பெரிதாக்கிக்கொடுப்பதிலும் நிபுணர்.

பி. எஸ். சாஸ்திரி,
பொட்டகிராப் பிடிப்பவர், கர்நாடிக் ஸ்டூடியோ,
மவுண்ட் ரோட், மதராஸ்.

---

**EDWARD & Co.**
*GERMAN SILVER AND ELECTROPLATED JEWELLERS.*
NO. 47, P. L. MADRAS, E.

**எட்வர்ட் அண்டு கம்பெனி.**
ஜர்மன் வெள்ளி எலக்டிரிக் தங்க நகை வியாபாரிகள்.
நெ. 47, பி. எல். சென்னை.
வெகுமதிகள் அதிகமென்று மோசம்போகாதீர்கள். விலை, மதிப்பு, சத்தம் இவைகளைப் பாருங்கள்.
**எம்பெரர் லிவர் கெடியாரம்.**
**இந்தியா, பர்மா, ஸிலோன் இவ்விடங்களில் ஏராளமாய் விற்கப்படுகிறது.**

முதல் விலை ரூபா 10. இப்பொழுது கீழ்சொன்ன வெகுமதிகளோடு 5-8-0 ஆக குறைத்து விற்கப்படுகின்றது. நாங்கள் கெடியாரம் செய்பவர்களிடமிருந்து நேராய் தருவிப்பதால் ஆச்சரியப்படும்படியான சொற்ப விலைக்கு விற்கின்றோம்.

கெடியாரத்தின் விவரம்:—நிக்கல் வெள்ளி, மேல்சாவியும், மேல்பார்வையுமுள்ளது. பலத்த வேலைப்பாடும் கையால் முள் திருப்பக்கூடியது. சரியான காலத்தைக் காட்டுவதோடு, வெகுமதிக்கு லாயக்கானது. ஹேர்ஸ்ப்ரிங் பலமானது, பாலன் கணக்கோடு செய்யப்பட்டது. மேல் தகடு எனமல் வேலை செய்யப்பட்டது. முரட்டுத்தன்மையாய் உபயோகித்தாலும் கெடாது. உண்மையில் பலமானதும் வெகுநாளைக்கிருக்கக்கூடியதுமாகிய கெடியாரம்.



வெகுமதி விவரம்:—அழகிய இன்டிபெண்டென்ட் பேனா I. ரோல்ட் கோல்ட் ஷர்ட் பொத்தான் ஸெட் I. ரோல்ட் கோல்ட் கைபொத்தான் ஸெட் I. கெடியாரக்கண்ணாடி I. மெயின்ஸ்பிரிங் (வில்) I. வெல்வெட் பெட்டி I. வாசனை அடங்கிய அழகான சீசா I. போஸ்ட் கார்ட்கள்.

ஒரே காலத்தில் 3. கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு ஷை இனுமல்லாமல் கால்பெல் என்னும் மணி அமைத்திருக்கும் அலாரம் டைம்பீஸ் ஒன்று உசிதமாய் கொடுக்கப்படும்.

## PAGE FOR GIRLS.
## பெண்களுக்கான பக்கம்.

LIME PICKLE.

**எலுமிச்சங்காய் யூறுகாய்.**—ஒரு பெரிய பாத்திரத்தில் ஏழுபடி சுத்த ஜலம் விட்டு அடுப்பின்மேல் கொதிக்க வைத்துக் கொதித்துவரும் சமயத்தில் இறக்கிக்கொண்டு 100 பெரிய எலுமிச்சம்பழத்தை அதில் போடவேணும். ஒரு நிமிஷம் தாமதித்து பழங்களைக் கொதிநீரிலிருந்து எடுத்து வெள்ளைக் குட்டையால் ஒவ்வொன்றையும் துடைத்துவைத்துக் கொள்ளவேணும். கல், மண், இல்லாமல் சுத்தி செய்து வெயிலில் காயவைத்த ஒன்றரைப்படி உப்பையும், நல்லெண்ணெயில் தனித்தனியே வறுத்த நாலுபலம் மிளகாயையும் ஒரு பலம் சீரகத்தையும் பொடிசெய்து, ஐந்துபலம் இஞ்சி ரசத்தையும் பதினைந்து பலம் சிறிதாய் அரிந்த பச்சைமிளகாயையும், பத்துப் பலம் நல்லெண்ணெயிற் சேர்த்துப் பிசைந்து, மேற்படி எலுமிச்சம் பழங்கள் விட்டுப் போகாமல் நான்காகப்பிளந்து ஒவ்வொன்றிலும் அந்தச் சம்பாரத்தை நிரப்பிவைக்கவேண்டும். பின்பு ஒரு பெரிய பாத்திரத்தில் பத்துப் பலம் நல்லெண்ணெய் வார்த்து அதில் இரண்டு பலம் உரித்தவெள்ளைப்பூண்டும், வகையொன்றுக்கு அரைப்பலமாக சீரகம், வெந்தையங்களும் ஒரு பிடி கருவேப்பிலையும் போட்டு வறுத்துவரும்போது மேலே பக்குவப்படுத்திவைத்திருக்கும் பழங்களை ஒன்று சேரக்கொட்டிப் புகையடங்கியபின் வேறொரு ஜாடியில் எடுத்து வைத்து வாயைத் துணியால்மூடி இருபதுநாள் வெயிலில்வைத்து பிறகு உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

THE BEST PART OF COWS' MILK.

**பசும் பாலில் சிறந்த பாகம்.**—ஒரு பாத்திரத்தில் பாலைக்கலக்காமல் வைத்திருந்தால் அதிலுள்ள வெண்ணெய் அணுக்கள்மேலே வந்து மிதக்கும். சாதாரணமாய் பாலில் "**பாக்டீரியா.**" என்னும் வியாதியைப் பரவச்செய்யக்கூடிய சிறு பூச்சிகள் இருக்கின்றன. அவைகள் வெண்ணெய் அணுக்களோடு கலந்து மேலேயே அதிகமாக வந்து மிதக்கின்றனவாம். ஆகையால் அடிப்பாலில் அந்தப்பூச்சிகள் அதிகக் கம்மியாயும் மேல் பாலில் அதிக ஜாஸ்தியாயும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகையால் மேலாக இருக்கும் பாலை பெரியவர்களில் யாராவது உபயோகித்துக்கொண்டு அடிப்பாலையே குழந்தைகளுக்குக் கொடுக்கவேண்டும்.

SOME OPINIONS ABOUT WOMEN.

**ஸ்திரீகளைப்பற்றி சில அபிப்பிராயங்கள்.**—"குணவதியான பெண்ணுக்கு, உலகத்திலுள்ள இரத்தினங்கள் யாவற்றினும் மிகுதியான விலையுண்டு."
—பைபில்.

"நாணமில்லா மனைவி அவள் புருஷனுடைய பாவ பலமேயாவள்."—யங்க்.

"நாணமுடைய பெண்கள் பெரும்பாலும் வினயமுடையவர்களாகவும் குணவதிகளாகவு மிருப்பார்கள். நன்னெறி பயில குணவதிகளின் சம்சர்க்கத்தைக் காட்டிலும் மேலான பாடசாலை எது?"
—ஹியூம்.

"பூவுலகிலுள்ள நரகமும் சுவர்க்கமும் பெண்களில் அடங்கியிருக்கின்றன." —டெனிசன்.

"ஒரு பெண்ணை ஆள ஒருநாட்டை ஆளப்போதுமான சக்தியிலும் மிகுதியான சக்திவேண்டும்."
—பியூட்டு.

"எப்போதும் முணுமுணுக்கிற ஒரு பெண்ணோடு மாளிகையில் வசிப்பதைப் பார்க்கிலும் குணவதி ஒருத்தியோடு சிறு குடிசையில் வசிப்பது மேலானது."—பைபில்.

"பெண்கள் தேவாலயத்தில் ஞானிகளாகவும், வீட்டின் வெளியே தேவிகளாகவும், வீட்டினுள்ளே நீலிகளாகவும் இருக்கிறார்கள்."—ஜி. வில்க்கின்ஸ்.

"கட்டழகமைந்த ஒரு பெண் நகைக்கும்பொழுது அவளுடைய பணப்பெட்டி அழுகிறதெனக் கருதவேண்டும். பெண்களுக்கு அவர் விருப்பப்படி நகைக்கவும் அழவும் சக்தியுண்டு."—அடிசன்.

"பொன்னை நெருப்பைக் கொண்டும், பெண்ணைப் பொன்னைக்கொண்டும், மனிதனைப் பெண்ணைக்கொண்டும் சோதனை செய்யலாம்."
—பெஞ்சமின் பிராங்க்லின்.

"பெண்கள் நேசமாயிருக்கும்பொழுதும் பகையாயிருக்கும்பொழுதும் எதுவுஞ்செய்யப் பின்னடையார்கள்"—கூலிக்கிபர்.

"பெண்கள் மனதும் மாரிகாலக்காற்றும் எப்பொழுதும் மாறுதலடைந்து கொண்டேயிருக்கும்."
—போப்.

"பெண்களின் அன்பும் நம்பிக்கையும் மணல் மேலெழுத்தையொக்கும்."—ஸ்காட்டு.



THE BENGAL CHEMICAL
AND PHARMACEUTICAL WORKS, LTD.,
*91, Upper Circular Road, Calcutta.*

எங்கள் பரிமளக் கூந்தல் எண்ணெயில் அநேக மலர்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. மகா சுத்தமானது. வேறுவிதமான வர்ணங்களைச் சேர்த்து பகட்டப்படாதது.

இதில் எத்தனையோ ஆயிரக்கணக்கான ரோஜா, மல்லிகை, தாமரை முதலிய புஷ்பவாஸனைகள் வீசும்.

வேண்டியவர்கள் அடியில் கண்ட ஏஜண்டுகளிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பி. ரெங்கய்ய செட்டி அண்டு ஸன்ஸ், எஸ்பிளநேட், மதராஸ்.

ஸ்வதேசி வேர் அவுஸ், தம்பு செட்டித் தெரு, மதராஸ்.

நாஷனல் டிரேடிங் கம்பெனி, எஸ்பிளநேட், மதராஸ்.

கே. வி. பிராமய்யா அண்டு ஸன்ஸ், மதராஸ் அல்லது ராஜமஹேந்திரம்.

என். ஆர். புகடி அண்டு கம்பெனி, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

**பங்காள ரஸாயன ஔஷதசாலை,**
91, அப்பர் ஸர்கிலர் ரோட்,
கல்கத்தா.

DR. WAMAN GOPALS' IODIZED
SARSAPARILLA.

டாக்டர் வாமன் கோபாலின் அய சம்பந்தமான ஸரஸபரில்லாவுக்கு பொன் பதக்கங்களும் வெள்ளிப் பதக்கங்களும் பரிசு கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ரத்த சுத்தி செய்வதில் இம்மருந்து முதல்தரமானதென்று பேரெடுத்திருப்பது. இந்த ஔஷதம் 50 வருஷங்களுக்கு அதிகமாகவே சோதனையிலிருந்து நாள்பட்ட முடக்குவாதம், சரீர சம்பந்தமான வியாதி, பாரிசவாயு, அசுத்த ரத்தத்தினால் உண்டாகும் வியாதிகள், முதலியவற்றைப் போக்கி தாதுக்கு வலிமையைக் கொடுக்கக்கூடியது. மேக ரோகத்தையுங் கண்டிக்கும்.

(ஒரு புட்டி விலை ரூபா 1-4-0. பாக்கிங்கும் தபாற் கூலியும் வேறு) 5 அணா.

கௌதம ராவ் கேசவ், தாகுர்த்தவார், பம்பாய்.

Dr. Gowtamrao Kesheo, Bombay. No. 2.

குறிப்பு:—ஆர்டர் செய்வோரெல்லோரும் இங்கிலீஷிலேயே எழுதவும்.

MADHAV BOOK-DEPOT,

*Gangaram Khatri's Vadi, BOMBAY. No. 2.*

Supply English or Sanskrit Books on Medicine, Law History, General Literature, Novels of Standard Authors, Presentation Books, etc. Catalogue sent free.

## 'நாலு பலத்த காரணம்.'

ஏன், எங்கள் "வெண் பட்டாடை"களை வாங்கவேண்டும்?

ஏனென்றால்? சாதாரண நித்திய தினங்களிலும், சுபதினங்களிலும், வாலிபர்களும், வயோதியர்களும், நாகரீகமாக அணிந்து கொள்ளத் தகுதியுள்ளது.

ஏனென்றால்? மிருதுவும், அழகும் வாய்ந்தது. திரைந்தும், சுருங்கியும் போகமாட்டாது. சலவை செய்தும் அணிந்துகொள்ளகூடிய பல முள்ளது

ஏனென்றால்? ஏழைகளும், பணக்காரர்களும் வாங்கி அணிந்துகொள்ளத் தகுதியானது. மேல் நாட்டு (மல்) நூல் வஸ்திரங்களை தோற்கச் செய்யும்படியான நேர்த்தியும், சகாயமுமுள்ளது.

ஏனென்றால்? மதுரை, சேலம், துயிலி, கோயம்புத்தூர் முதலிய விடங்கலில் தயாரிக்கப்பட்ட நூல் வஸ்திரங்களில் போட்டுவருகிற கரைகள் மாதிரி நாணயமும் அழகுமுள்ள கரைகளோடு கூடியது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) | 4 முழம் நீளம் | 27 இஞ்சு அகலம் | விலை | ரூ. 4-0-0 |
| (2) | 5 ,, | ,, 44 | ,, ,, | ,, ரூ. 7-0-0 |
| (3) | 6 ,, | ,, 48 | ,, ,, | ,, ரூ. 8-0-0 |
| (4) | 7 ,, | ,, 48 | ,, ,, | ,, ரூ. 9-0-0 |
| (5) | 8 ,, | ,, 48 | ,, ,, | ,, ரூ. 11-0-0 |

ஜெனரல் கேட்லாக் (தமிழில்) சித்தமாகயிருக்கிறது. விலை இன்றி அனுப்புவோம்.

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,
பட்டு பீதாம்பர வர்த்தகம், ஸ்ரீ காசி.
Benares City.

## HENKE'S TILE WORKS,
**10, Esplanade, MADRAS, E.**

எங்களால் நல்ல மங்களூர் ஓடுகளும், தள வரிசைக்கல்களும், வயல்களுக்கு தண்ணீர் மடைக்குழாய்களும் செய்யப்படுகின்றன. இவைகளெல்லாம் ஸர்க்கார் இஞ்சினீர் உத்தியோகஸ்தர்களாலும், ஜில்லா போர்ட்டுகள், முனிஸிபாலிடிகள், ஜமீன்தார்கள், ரெயில்வேகம்பெனிகள் முதலியவர்களாலும் ஏராளமாய் வாங்கப்பட்டு வருகின்றன. வீடு கட்டுகிறவர்களுக்கும் மிராசுதார்களுக்கும் வெகு உபயோகமானவைகள். வேண்டிய மற்ற விவரங்களுக்கு, அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதி தெரிந்துகொள்ளவும்.

**ஹெங்கீஸ் ஓட்டு கம்பெனி,**
நெ. 10, எஸ்பிளநேட்,
**மதராஸ்.**

## PAGE FOR BOYS.
## சிறுவர்களுக்கான பக்கம்.

THE ELEPHANT.

**யானை.**—பசியதிகமாயிருக்கும்பொழுது சாப்பாடு கொஞ்சமாய்ப் போட்டாலாவது, அல்லது பசியடங்காத பதார்த்தங்களை சாப்பிடும்போதாவது சில பேர்கள் "என்ன, யானைப் பசிக்கு சோளப்பொரியைக் கொடுப்பது போலிருக்கிறதே" என்று சொல்வது வழக்கம். இதனால் யானைக்கு பசி அதிகம் என்று ஏற்படுகிறது. ஜீரண சக்தி மிகவும் அதிகமாயிருப்பதால் தினமும் ஒரு யானைக்கு குறைந்தபக்ஷம் 600 ராத்தல் ஆகாரம் வேண்டுமாம். யானை யதேச்சையாய்த் திரியும்பொழுது யாதொரு குறைவுமில்லாமல் பூர்ணமாய் சாப்பிடுகிறது. அது ராத்திரியில் காடுகளில் அதிகமாய்ச் சஞ்சரிக்கும் பிராணி. தனக்கு எந்த மரத்தின் இலை வேண்டுமோ அதை ஸ்பரிசத்தினாலும் வாசனையினாலுமே அது பொறுக்கி யெடுத்துக்கொள்ளுகிறது. ஆயிரம் கஜம் தூரத்திலிருந்தாலுங்கூட தனக்குப்பகையான பிராணி இருக்கிறதென்று தன் முகரும் சக்தியால் அறிந்து கொள்ளக் கூடியது. எவ்வளவு சிறிய பதார்த்தமாயிருந்தாலும் அது தன் நுண்ணிய ஸ்பரிச சக்தியுள்ள துதிக்கையால் கண்டு எடுத்துவிடும். யானை ஆகார விஷயத்தில் அதிக நாஜூக்கானது. ஒரு ஆகாரத்தை சாப்பிடவேண்டும் என்று பிரியமுண்டானால்தான் சாப்பிடும். அதற்கு ஒரு பொருளின் மேல் வெறுப்பாயிருக்கும்பொழுது நாம் என்ன தந்திரம் செய்தாலும் அதைச்சாப்பிடவே சாப்பிடாது. இதற்கு உதாரணமாக ஒருவர் ஒரு சிறு கதை யொன்று சொல்லுகிறார். ஒரு பழகின யானைக்கு அரிசியும் வாழை மட்டையுமே ஆகாரமாகக் கொடுத்து வந்தார்கள். ¾ ராத்தல் அரிசியைப்போட்டு வாழை மட்டையில் சுற்றி அதற்குக் கொடுப்பது வழக்கம். ஒரு நாள் ஒரு ஸ்திரீ அதற்கு தித்திப்பான சிறிய பிஸ்கோத்து ஒன்றைப் போட்டாள். யானை அதைத் துதிக்கையாலெடுத்து முகர்ந்து பார்த்துவிட்டு உடனே அதைக்கீழே எறிந்து விட்டது. மரியாதை யில்லாமல் அலக்ஷியமாய் யானை பிஸ்கோத்தை எறிந்து விட்டதென்று நினைந்து, யானைப்பாகன் அதை அரிசியின் மத்தியில் மறைத்து வாழை மட்டையோடு வழக்கம் போல் கொடுத்தான். அதைக் கொஞ்சம் மென்ற உடனே முழுவதையும் கீழே உமிழ்ந்துவிட்டது. கொஞ்ச நேரம் வரைக்கும் தன் நாக்கிலும் தொண்டையிலும் ஒட்டிக்கொண்டிருந்ததையெல்லாம் துதிக்கையால் எடுத்தெறியப் பிரயத்தனப் பட்டுக் கொண்டிருந்ததாம்.

WATERING HORSES.

**குதிரைக்குத் தண்ணீர் காட்டுதல்.**—தீனியைத் தின்பதற்கு முன்னாலேயே ஒரு குதிரைக்குத் தண்ணீர் வைக்கவேண்டும். தீனி தின்ற பிறகு ஒரு பொழுதும் அதிகத்தண்ணீர் குடிக்கும்படி குதிரையைவிடவே கூடாது. ஏனென்றால் இரைப்பையில் தீனி நன்றாய் ஜீரணமாகி ரக்தமாக மாறுவதற்குள் இரைப்பையைவிட்டு தீனியை ஜலம் தள்ளி விடுகிறது. இதைத்தவிர தீனி தின்றவுடன் குதிரைக்கு ஜலத்தைக்கொடுப்பதால் வயிற்றுவலியும் உண்டாகிறது. சவாரி செய்யப்பட்டு தேகம் வெதுவெதுப்பாய் இருக்கும்பொழுது குதிரைக்கு ஜலம் காட்டக்கூடாது என்று சொல்வதுண்டு. இதில் கொஞ்சம் உண்மை இருக்கிறது. ஆனபோதிலும் குதிரை எவ்வளவு வெதுவெதுப்பாயிருந்தாலும் 5 அல்லது 6 வாய் குடிக்கும்படி விடுவதில் பாதகமொன்றுமில்லை. எப்பொழுதும் குதிரையை அதிகமாக ஜலம் குடிக்கும்படிவிடுவது தான் பிசகு. அதிக வேலைசெய்து களைப்படைந்து பின்னால் தீனியும் தின்றானபிறகு அதிகமாக ஜலம் வைப்பது குதிரைக்குரொம்ப அபாயகரமானது.

THE RAT SKIN INDUSTRY.

**எலித்தோல் கைத்தொழில்.**—போன பங்குனி மாஸத்து ஸஞ்சிகையில் கைத்தொழில் குறிப்புகளின் கீழ் எலித்தோலைக் கொண்டு சீமையில் படங்களுக்குச் சட்டங்கள் செய்கிறார்களென்றும், புஸ்தகங்கள் பைண்டு செய்கிறார்களென்றும், தவிர பை முதலியவைகள் செய்கிறார்களென்றும் சொல்லியிருக்கிறோம். இந்த மாதிரி போன வருஷத்தில் செய்யப்பட்ட சாமான்கள் 7½ லக்ஷத்துக்கு, விற்கப்பட்டனவாம். கல்கத்தாவில் எலி அதிகமாக அகப்படுகிறதென்று எண்ணி சில ஐரோப்பியர்கள் சீமையிலிருந்து வந்து இந்த சாமான்களை கல்கத்தாவில் செய்யப் போகிறதாகத் தெரிய வருகிறது.



KUMBHAKONAM.
1-1-1910.

From

## *V. Doraswamy Aiyar Avergal,*

*RETIRED DEPUTY COLLECTOR.*

To

## *Messrs. G. A. VaidyaRaman & Co.,*

*10, ESPLANADE, MADRAS.*

I received some days back by post your Tamil Monthly Magazine "*பிழைக்கும் வழி*" **Practical Life,** No. 11, for November which I just perused. I find it *a most useful publication sowing broad-cast general information on topics of daily life most urgently needed* and regret that I have not applied to you for being enlisted as a subscriber to the magazine. I should therefore now ask you not only to send me all the back numbers from No. 1 to 10 but also No. 12, for December making the series complete for 1 year and continue sending me the future monthly issues commencing from the current month. I must ask you to send me the complete numbers by V. P. Post obviating the neccessity of remitting you by money order my subscription for the past and current year in advance.

I remain,
Dear Sir,
Yours truly,
(Sd.) V. DORASWAMI AIYAR.

## INDIAN NEWS.

## இந்தியநாட்டு ஸமாசாரங்கள்.

INDUSTRIAL PROGRESS.

**கைத்தொழில் அபிவிருத்தி.**—வட இந்தியாவில் ஐக்கியமாகாணங்களின் கைத்தொழில்களை விருத்தி செய்வதற்குவேண்டிய வழிகளை ஆலோசிக்க 1907-ம் வருஷத்தில் நைநிடால் பட்டணத்தில் ஒரு சபை கூடிற்று. அதன்பயனுக அந்த மாகாணங்களின் லெப்டினென்ட் கவர்னராகிய ஸர் ஜான் ஹ்யூவெட் என்பவர் இந்தியா காரியதரிசிக்கு சில சிபார்சுகள் செய்தார். இவைகளில் முக்கியமானது, கான்பூர் பட்டணத்தில் ஒரு பெரிய பலதொழில் கல்விச்சாலை ஒன்று ஏற்படுத்த வேணும் என்பதே. இதற்கு ஆரம்பத்தில் சுமார் 9 லக்ஷம் ரூபாயும் பிறகு வருஷாவருஷம் 2½ லக்ஷத்துக்கு மேலும் பிடிக்குமாம். இவ்வளவு பெரிய விஷயத்தில் இறங்குவதற்கு ரொம்ப யோசனை பண்ணிச்செய்ய வேண்டுமென்றும், ஆகையால் இதைத் தற்காலத்திற்கு நிறுத்திக்கொள்ள வேணுமென்றும் இந்தியா காரியதரிசி பதில் சொல்லிவிட்டார். இதைத்தவிர அடியில் கண்ட பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்த வேணுமென்று ஸர் ஜான் ஹ்யூவெட் உத்தரவுகேட்டார்.

1. கான்பூரிலும் கோரக்பூரிலும் இரண்டு கைத்தொழில் பள்ளிக்கூடங்கள். இவைகளுக்கு ஆரம்பத்தில் இரண்டு லக்ஷமும் பிற்பாடு வருஷாவருஷம் நாற்பதினுயிரமும் பிடிக்குமாம்.

2. லக்நோவிலுள்ள பள்ளிக்கூடத்தை பெரிது பண்ணுதல். இதற்கு ஆரம்பத்தில் அரை லக்ஷமும் பிற்பாடு வருஷாவருஷம் 2,500 ரூபாயும் பிடிக்கும்.

3. மேல்படி பட்டணத்தில் உருவங்கள் எழுதக் கற்றுக்கொடுக்க ஒரு பள்ளிக்கூடம். இதற்கு ஆரம்பத்தில் 1,45,000 ரூபாயும் பிறகு வருஷாவருஷம் 30,940 ரூபாயும் பிடிக்கும்.

4. காசியில் நெசவுத்தொழில் விஷயமாய் ஆராய்ச்சி செய்ய ஒரு சாலை. இதற்கு ஆரம்பத்தில் 73,500 ரூபாயும் பிறகு வருஷாவருஷம் 19,424 ரூபாயும் பிடிக்கும்.

5. க்ரோம் என்னும் முறையால் பதனிடப்பட்ட தோல்களால் ஜோடுகளும் பூட்ஸுகளும் செய்யச் சொல்லிக்கொடுப்பதற்காக ஒரு பள்ளிக்கூடம். இதற்கு ஆரம்பத்தில் 43,000 ரூபாயும் பிறகு வருஷாவருஷம் 12,528 ரூபாயும் பிடிக்கும்.

6. பரீலி என்னும் பட்டணத்தில் தச்சு வேலை சொல்லிக்கொடுக்க ஒரு பள்ளிக்கூடம். இதற்கு ஆரம்பத்தில் 33,000 ரூபாயும் பிறகு வருஷாவருஷம் 11,532 ரூபாயும் பிடிக்கும்.

7. லக்நோவில் பித்தான் செய்யச்சொல்லிக் கொடுப்பதற்காக இரண்டு வருஷத்திற்கு செலவு ரூபாய் 6,000. மேலே சொல்லிய பள்ளிக்கூடங்களெல்லாம் உபயோகமானவைகள்தான் என்றும் அவைகளை பணம் இருந்தால் ஏற்படுத்திக் கொள்ளலாமென்றும் இந்தியா காரியதரிசி உத்தரவு கொடுத்திருக்கிறாராம்.

THE INDIAN INDUSTRIAL CONFERENCE.

**இந்தியா கைத்தொழில் சபை.**—இந்த வருஷத்து கைத்தொழில் சபை லாகூரில் நாளது மாஸக்கடைசியில் நடந்து முடிந்தது. அதற்கு தர்பங்கா மகாராஜா அக்கிராஸனாதிபதியாயிருந்தார். அந்த சபையில் நடந்த பிரஸங்கங்களையும் தீர்மானங்களையும் பற்றி அடுத்த ஸஞ்சிகையில் விவரமாய் எழுதுவோம்.

AGRICULTURAL MACHINERY.

**விவஸாயக்கருவிகள்.**—வடக்கே ஐக்கிய மாகாணங்களில் கூலியாள்களின் சம்பளம் அதிகமாகி விட்டதாம். அதனால் விவஸாய வேலைகளுக்குக்கூலிகளை உபயோகிக்காமல் பெரிய நிலஸ்வான்கள் யந்திரங்களையும் கருவிகளையும் வாங்கி அவைகளைக் கொண்டு வேலை செய்ய ஆரம்பித்து விட்டார்களாம். இன்னும் கொஞ்சகாலத்தில் இந்த மாதிரிக்கருவிகள் ரொம்பப்பரவிப்போய் விடுமாம். அப்படியாகும்பக்ஷத்தில் வேண்டிய கருவிகளைச் செய்வதற்கென்றே சிலபேர்கள் ஏற்பட்டு அவர்கள் பிழைப்பதற்கு ஒரு நல்ல வழியாகும். தற்காலத்தில் செலவாகும் கருவிகள் முக்கியமாய் தண்ணீர் இறைப்பதற்கு பம்பு போன்றவைகள், உழுவதற்கான கருவிகள், சர்க்கரை செய்வதற்கு வேண்டிய யந்திரங்கள் இன்னும் இவைகள் போன்றவைகள்தானும்.

---



## FOREIGN NEWS.

## அந்நிய நாட்டு ஸமாசாரங்கள்.

RAVAGES BY RATS.

**எலிகளால் நேரிடும் நஷ்டங்கள்.**—குடியானவர்களுக்குப் பலவிதமான நஷ்டங்களை உண்டாக்கும் கோடிக்கணக்கான எலிகளை தேசத்திலிருந்து எந்தவிதமாய் அப்புறப்படுத்துகிறது என்னும் கவலையே அமெரிக்கா தேசத்து விவசாய இலாகா அதிகாரிகளுக்குப் பெருங்கவலையாயிருப்பதாகத் தெரியவருகிறது. ஐக்கிய நாடுகளில் இந்த எலிகளால் தானியங்களுக்கு நேரிடும் நஷ்டம் வருஷாவருஷம் சுமார் முப்பது கோடி ரூபாய் ஆகுமாம். ஆகாரத்துக்கு உதவும் பொருள்களைக் கடித்தும், கரைகளையும் கட்டிடங்களையும் தோண்டியும், மரங்களையும் கடுதாசிகளையும் கடித்து கொறித்தும், பலவிதமாக நாசம் செய்து நஷ்டத்தை விளைவிக்கின்றனவாம். இப்படி அதிக நாசம் செய்யும் எலிகளில் நார்வே எலி ஒன்று. இவைகள் கப்பல்கள் வழியாய் பல தேசங்களுக்கும் போயிருக்கின்றனவாம். ஒரு ஜதை எலிகள் மூன்று வருஷத்தில் இரண்டு கோடி எலிகளாகி விடக்கூடுமாம். ஆகையினாலே எலிகள் வாராதபடி கட்டிடங்கள் கட்டுவதற்கும், எலிகளுக்குப் பலவிதமான விஷங்களை வைத்துக்கொல்வதற்கும் அமெரிக்கா தேசத்து விவசாய இலாகா அதிகாரிகள் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

AN IMPERIAL AGRICULTURAL UNION.

**ஒரு ராஜாங்க விவசாய ஸங்கம்.**—தென் ஆப்பிரிக்கா விவசாய சங்கத்தார் ஒரு ராஜாங்க விவசாய ஸங்கம் ஏற்படுத்தும்பொருட்டு இங்கிலீஷ் ராஜாங்கத்தைச் சேர்ந்த எல்லா விவசாய சங்கத்தார்களுக்கும் எழுதப்போகிறார்கள்.

MILK POWDER.

**பால் பொடி.**—ஜெர்மெனியில் கோதன்பர்க்கிலிருக்கும் டாக்டர் எம். எகன்பர்க் என்பவர் பாலை மாவு போன்ற ஒருவிதப் பொடியாகச் செய்ய ஒரு யந்திரம் கண்டுபிடித்திருக்கிறார். இந்தப் பொடியில் ஜலம் தவிர பாலிற்கு இருக்கவேண்டிய குணங்களெல்லாம் இருக்கிறதாம். பாலை நாம் எந்தெந்த விதத்தில் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறோமோ அந்தக் காரியங்களுக்கெல்லாம் இந்தப்பொடியை ஜலத்தில் கரைத்து உபயோகப்படுத்திக்கொள்ளலாம். அநேக நாட்களுக்கு தகரப் பெட்டியில் போட்டு வைத்துக் கொண்டு எங்கே வேண்டுமானாலும் கொண்டுபோகலாம். ஏடெடுத்த பாலை இது வரையில் வீணாக்கி வந்ததைத்தவிர்த்து இந்தப்பொடி செய்ய உபயோகித்து வருகிறார்களாம்.

SALE OF MILK.

**பால் விற்றல்.**—ட்ரினிடாட் தீவில் போர்ட் ஆப் ஸ்பெயின் என்னும் பட்டணத்தில் பால்காரர்கள் நல்ல சுத்தமான பால் கொடுக்காததால் அங்கே உள்ள அதிகாரிகள் சில சட்டங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அங்கேயுள்ள பால் விற்பவர்களும் பசுமாடுகள் வைத்திருப்பவர்களும் ஒரு ரிஜிஸ்தரில் தாகலாக வேண்டும். அவர்கள் மாடுகள் கட்டும் இடங்களையும் மேயும் இடங்களையும் அதிகாரிகள் போய்ப்பார்த்து, அந்த இடங்கள் சுத்தமாக இல்லாவிட்டால் அவைகளை சுத்தமாக வைக்கும்படி மாட்டுக்காரர்களைக் கட்டாயப்படுத்தலாம். குறிப்பிட்ட இடங்களில்தான் பால் கறக்கவேணும், பால் கறக்கிற பாத்திரங்கள் சுத்தமாயிருக்கவேணும், பசுமாடுகள் வைத்துக் கொண்டிருக்கிறவர்களும் பால் விற்கிறவர்களும் லைஸென்ஸ் வாங்கிக்கொண்டு, பால் விற்கிறவன் என்பதற்கு அடையாளமாக ஒரு டவாலியும் போட்டுக்கொள்ளவேணும் என்றும் இப்படிக்கெல்லாம் நிபந்தனைகள் ஏற்பட்டிருக்கின்றனவாம்.

IMPORT OF BEES.

**வெளி நாட்டிலிருந்து வந்த தேனீக்கள்.**—உதகமண்டலத்தில் ஒக்ஸ் என்பவர் இட்டலி தேசத்திலிருந்து தேனீக்களை வரவழைத்துப் பார்த்தார். அவைகள் கொஞ்ச நாளில் ஒன்றின் பின் ஒன்றாய் இறந்து போய் விட்டன. குன்னூரில் செய்த பரீக்ஷையில் இதே மாதிரிதான் ஆச்சுது. ஆகையால் மிஸ்டர் ஒக்ஸ் இங்கிலீஷ் தேனீக்களைத் தருவித்தார். அவைகள் 36 ராத்தல் கனமுள்ள திவ்யமான அடை வைத்திருக்கின்றனவாம். அந்தத் தேனடையின் மாதிரிகளை அங்கேயுள்ள ஒக்ஸ் அண்டு கம்பெனியில் வைத்திருக்கிறார்களாம். இது விஷயமாய் நவம்பர் ௴ சஞ்சிகையில் "தேனீ வளர்த்தல்" என்னும் வியாஸத்தையும் படிக்கலாம்.

PLANTAIN GROVES.

**வாழைத்தோப்புகள்.**— நம்முடைய தேசத்தில், வைத்தது முதல் மூன்றாவதுவருஷத்தில் வாழையை அழித்து விடுகிறோம். க்வீன்ஸ்லாண்டில் பன்னிரண்டு, இருபது வருஷங்களுக்கு வாழைத்தோட்டங்களை அழிக்காமல் வைத்திருப்பது உண்டாம்.

## SEASON, CROPS AND PRICES.

## காலஸ்திதி, பயிர்கள், விலைவாசி.

COTTON GOODS.

**துணி ஸாமான்கள்.**—இதர தேசங்களிலிருந்து சென்னப்பட்டணத்திலும், ரங்கூனிலும் இறக்குமதி விவரங்கள்:—

நூலும் முறுக்கு நூலும்.

| வார முடிவு. | | சென்னப்பட்டணத்தில். |
|---|---|---|
| | | ராத்தல். |
| டிசம்பர்மீ | 4வ | 6,500 |
| ,, | 11வ | 287,738 |
| ,, | 18வ | 306,000 |
| ,, | 25வ | 73,862 |
| ஆகமொத்தம் | | 674,100 |

காரிகத் துணிகள்.

| வார முடிவு. | | சென்னப் பட்டணத்தில். | ரங்கூனில். |
|---|---|---|---|
| | | கஜம். | கஜம். |
| டிசம்பர்மீ | 4வ | 241,528 | 177,020 |
| ,, | 11வ | 1,063,905 | 234,526 |
| ,, | 18வ | 2,013,150 | 131,100 |
| ,, | 25வ | 1,373,201 | 82,855 |
| ஆகமொத்தம் | | 4,691,784 | 625,501 |

சலவைத் துணிகள்.

| வார முடிவு. | | சென்னப் பட்டணத்தில். | ரங்கூனில். |
|---|---|---|---|
| | | கஜம். | கஜம். |
| டிசம்பர்மீ | 4வ | 92,728 | 642,378 |
| ,, | 11வ | 697,560 | 756,302 |
| ,, | 18வ | 638,684 | 506,750 |
| ,, | 25வ | 824,897 | 417,904 |
| ஆகமொத்தம் | | 2,253,869 | 2,323,334 |

இதர துணிகள்.

| வார முடிவு. | | சென்னப் பட்டணத்தில். | ரங்கூனில். |
|---|---|---|---|
| | | கஜம். | கஜம். |
| டிசம்பர்மீ | 4வ | 606,406 | 993,123 |
| ,, | 11வ | 754,168 | 1,176,419 |
| ,, | 18வ | 1,589,145 | 569,144 |
| ,, | 25வ | 688,708 | 869,942 |
| ஆகமொத்தம் | | 3,638,427 | 3,608,628 |

ரெயிலில் அனுப்பப்பட்ட துணிகள்.

சென்னப்பட்டணத்திலிருந்து ரெயில் வழியாய் அனுப்பப்பட்ட ஸ்வதேச பிறதேச துணி ஸாமான்கள். ஒரு அந்தர் என்பது 112 ராத்தல்.

| வார முடிவு. | | அந்தர். |
|---|---|---|
| டிசம்பர்மீ | 4வ | 3,204 |
| ,, | 11வ | 3,665 |
| ,, | 18வ | 4,771 |
| ,, | 25வ | 5,335 |
| ஆகமொத்தம் | | 16,975 |

IMPORT OF SUGAR.

**சர்க்கரை இறக்குமதி.**—நவம்பர்மீ 28வ முதல் டிசம்பர்மீ 25வ வரையில் சென்னப்பட்டணத்தில் இங்கிலாந்திலிருந்து 66 அந்தரும், ஆஸ்திரியா ஹங்கேரியிலிருந்து 4,800 அந்தரும், ஜாவாவிலிருந்து 9,618 அந்தரும், இதரதேசங்களிலிருந்து 1 அந்தரும் இறக்குமதியாயின. இதேகாலத்தில் ரங்கூனில் இங்கிலாந்திலிருந்து 74 அந்தரும், இதர ஐரோப்பிய தேசங்களிலிருந்து 37 அந்தரும், ஜாவாவிலிருந்து 17,323 அந்தரும், ஐரோப்பிய தேசங்களல்லாத இதர தேசங்களிலிருந்து 3,152 அந்தரும் இறக்குமதியாயின.